இருட்கனி

இருட்கனி - 1

சூதரே, மாகதரே, கேளுங்கள்! இந்தப் புலரி மங்கலம் கொள்க! இந்த மரங்கள் தளிர்ச்செவிகோட்டி சொல்கூர்க! இந்தப் புள்ளினங்கள் அறிக! இந்தத் தெள்ளிய நீரோடை இச்சொற்களை சுமந்துசெல்க! இந்தக் காற்றில் நமது மூச்சு என்றென்றுமென நிலைகொள்க! ஆம், அவ்வாறே ஆகுக!

நான் வெயிலின் மைந்தனின் கதையை சொல்லவிருக்கிறேன். விழிநிறைத்து வெள்ளியுருக்கிப் பெருகும் வெயில் கதிரோனின் கைகளின் பெருக்கு. அவன் ஆடையின் அலை. கணம் கோடி கரிய மைந்தரைப் பெறுகிறான் வெய்யோன். கருமையே அவனுக்கு உகந்தது. தோழரே, இங்குள்ள ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு கரிய நிகர்வடிவை அவன் தனக்கென சமைத்துக்கொள்கிறான். அக்கரிய உலகில் ஒவ்வொன்றையும் தொட்டுத்தொட்டுத் தடவும் பல்லாயிரம்கோடி கைகளுடன் மகிழ்ந்திருக்கிறான்.

ஒளியுருவனின் கரிய மைந்தன். அவன் தொட்டுத்தொட்டு இங்கிருந்த அனைத்திலிருந்தும் தேடிச்சேர்த்த அழகனைத்தும் திரண்டவன். தந்தை தழுவித்தழுவி சலிப்புறா பெருந்தோள்கள் கொண்டவன். கண்படுமோ என தந்தை நேர்விழிகொண்டு நோக்க நாணி ஓரநோக்கால் தொட்டறியும் எழில்முகம் அமைந்தவன். அவனை வாழ்த்துக! இப்புவியில் தெய்வங்கள் நிகழ்த்தும் விந்தைகளில் பெரியது வீரம். அதனினும் பெரியது அன்பு. அதனினும் பெரிது துறவு. பாணரே, அறிக!

அம்மூன்றினும் அரியது அழகு. அம்மூன்றும் கனிந்தெழுந்த ஒளி அது.

பேரழகனை வணங்குக! பெண்ணழகு இனியது. பிள்ளையழகு அதனினும் தூயது. பெண்ணழகு ஆடவர் விழிகளால் நிறைவுறுகிறது. பிள்ளை அழகு அன்னையின் கனவால் துய்க்கப்படுகிறது. அனைத்தும் திகைந்த ஆணழகு தெய்வங்களால் மட்டுமே முற்றறியப்படுவது. அதை பெண்டிர் அஞ்சுகிறார்கள். ஆண்கள் அகல்கிறார்கள். அன்னையர்கூட குழவிப்பருவத்திற்கு அப்பால் காண்பதில்லை. எவரும் முழுதுற நோக்கா கருவறைக் கருஞ்சிலையிலேயே சிற்பியின் கலை முழுமையடைகிறது.

அன்றொருநாள் இது நிகழ்ந்தது. துவாரகையிலிருந்து இரு புரவிகளில் இளைய யாதவரும் இளைய பாண்டவரும் தெற்குநோக்கி சென்றனர். நர்மதை கருவெனத் தோன்றும் மலையடுக்குகளின் விலாவில் நாகமெனச் சுற்றிச்சுழன்று கிடந்த செம்மண் பாதையினூடாக அவர்கள் செல்கையில் எதிரே ஒரு முதிய பாணர் தன் துணைவியுடன் வந்தார். அவர் கையில் பூசணிக்கொப்பரையாலான சுதியாழ் இருந்தது. தோளில் கிணைப்பறை தொங்கியது. அவள் கையில் உண்கலங்களும் போர்வைகளும் கட்டி வைக்கப்பட்ட மரவுரிப்பொதி.

அவர்களைக் கண்டு வணங்கி "வீரரே, இது இந்த மலைக்கு அப்பாலிருக்கும் சாலஸ்தலி என்னும் சிற்றூர் செல்லும் பாதை அல்லவா?" என்றார் முதிய பாணர். "ஆம், இவ்வழியே. இன்னும் நான்கு நாழிகை நடந்தால் அங்கு செல்லலாம்" என்றார் அர்ஜுனன். "சுக குலத்தைச் சேர்ந்த பாணனாகிய என் பெயர் சாந்தன். இவள் என் துணைவி கலிகை. உங்களை சந்திக்கும்

பேறுபெற்றேன்" என்றார் முதுபாணர். "அஸ்தினபுரியின் பாண்டுவின் மைந்தனாகிய என் பெயர் அர்ஜுனன். இவர் என் தோழர் யாதவ கிருஷ்ணன்" என்றார் அர்ஜுனன்.

"அஸ்தினபுரியை கதைகளில் கேட்டுள்ளேன். அது வடக்கே இருக்கிறது. பெருவள்ளல் கர்ணனையும் அறிந்துள்ளேன்" என்றார் சாந்தன். "உங்கள் பயணம் சிறக்கட்டும்" என்றார் அர்ஜுனன். "நலம் சூழ்க! குலம் பொலிக!" என அவர்களை வாழ்த்தினார் பாணர். அவர்கள் முன்சென்றபோது அர்ஜுனன் அதுவரை இருந்த உள ஊக்கத்தை இழந்துவிட்டிருந்ததை இளைய யாதவர் உணர்ந்தார்.

அன்று மாலை அவர்கள் ஒரு பேராலமரத்தடியில் தங்கினர். சிற்றோடை ஒன்று ஓசையிட்டபடி வளைந்தோடிய அந்த இடத்தில் வணிகர்கள் சிலர் முன்னரே அமர்ந்திருந்தார்கள். துயில்கொள்வதற்கு உகந்த நீள்பட்டைக் கற்களை நிரையாக போட்டிருந்தனர். அருகே முக்கூட்டுக் கல்லில் கலம் அமைத்து விறகு எரித்து சமையல் செய்துகொண்டிருந்தார் ஒருவர். புரவிகளை நிறுத்தி அவர்கள் இறங்கிச்சென்றபோது வணிகர்கள் எழுந்து வாழ்த்து கூறினர்.

சங்கு குலத்து வணிகரான சக்ரர் "இவர்கள் என் தோழர்கள். நாங்கள் உத்கலத்திலிருந்து விஜயபுரிக்கு செல்பவர்கள். எங்களுடன் அமர்க! எங்கள் வழியுணவைக் கொள்க!" என்றார். அவர்கள் அமர்ந்து தங்கள் குலமுறையைச் சொன்னதும் சக்ரர் "ஆம், அஸ்தினபுரியை அறிவேன். பேரழகன் அல்லவா கர்ணன்!" என்றார். அர்ஜுனன் மறுமொழி சொல்லாமல் குனிந்து அமர்ந்திருந்தார். அவர்கள் "இன்னும் சற்றுபொழுதில் உணவு ஒருங்கிவிடும்" என்றனர்.

உணவருந்தி அவர்கள் அளித்த கற்பலகையில் படுத்திருக்கையில் அர்ஜுனன் மல்லாந்து விண்மீன்களை நோக்கி துயிலற்று இருப்பதை இளைய யாதவர் நோக்கினார். ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை. மறுநாள் புலரியில் அவர்கள் அங்கிருந்து கிளம்பி மீண்டும் தெற்குநோக்கி சென்றனர். வெயில் எழுந்து எரிபொழியத் தொடங்கியபோது அங்கே கற்பாறையில் வேரோடி எழுந்து நின்றிருந்த அரசமரத்தின் நிழலில் தங்கினர்.

வெயிலில் வியர்வையின் ஆவி எழ நான்கு சூதர்கள் அங்கே வந்தனர். தங்கள் இசைக்கலன்களை வைத்துவிட்டு வணங்கினர். அர்ஜுனன் தன்னை "ஒரு வடநாட்டு ஷத்ரியன். தென்திசைக்குச் செல்பவன்" என அறிமுகம் செய்துகொண்டார். யாதவர் "நான் யாதவன், பயணி" என்றார். சூதர்கள் அமர்ந்து இளைப்பாறத் தொடங்கியதும் இளைய யாதவர் புன்னகையுடன் "சூதரே, உங்களில் எவர் அஸ்தினபுரியை அறிவீர்கள்?" என்றார். அர்ஜுனன் அப்பால் அண்ணாந்து நோக்கி தலையில் கை அணைத்துப் படுத்திருந்தார். அவர் உடலே செவியாகும் மெய்ப்பு தோன்றியது.

"குருகுலம் பெருமைகொண்டது. மாவீரன் கர்ணனின் தோழர் துரியோதனரால் ஆளப்படுவது" என்றார் ஒருவர். "கர்ணன் ஆள்வது சம்பாபுரி. அது அஸ்தினபுரியின் இணைநாடு" என்றார் இன்னொருவர். "வசுஷேணர் கலிங்கத்தையும் வங்கத்தையும் வென்றார். அவருடைய புரவியை நிறுத்த வடக்கே எவருமில்லை" என்றார் மூன்றாமவர். "நீங்கள் அர்ஜுனனை அறிவீர்களா?" என்றார் இளைய யாதவர். "அர்ஜுனன் பாண்டவர்களில் ஒருவர் அல்லவா?" என்றார் ஒருவர். "வில்வீரர் என்கிறார்கள்" என்றார் இன்னொருவர். "ஐவரில்

இரண்டாமவர்” என ஒருவர் சொல்ல பிறிதொருவர் “இல்லை, மூன்றாமவர்” என்றார்.

அர்ஜுனரின் உடல் விதிர்ப்பதை நோக்காமலேயே இளைய யாதவர் உணர்ந்தார். அவர்கள் அங்கிருந்து கிளம்புகையில் அர்ஜுனரால் நடக்கவே இயலவில்லை. கையூன்றி புரவிமேல் ஏற இருமுறை முயன்றார். சற்று தொலைவில் சென்று நின்ற இளைய யாதவர் அவர் அப்பால் நின்றுவிட்டிருப்பதைக் கண்டு புரவியைத் திருப்பியபடி அணுகி வந்தார். “என்ன ஆயிற்று உனக்கு? உடல்நலமில்லையா? ஓய்வு கொள்ளவேண்டுமா என்ன?” என்றார். “இல்லை” என அர்ஜுனன் சொன்னார். “களைத்திருக்கிறாய். உடல் வியர்வை கொண்டிருக்கிறது. விழிகள் சோர்ந்து தசைதழைந்துள்ளன...” என்றார் இளைய யாதவர்.

“யாதவரே, நான் ஏன் துயருறுகிறேன் என நீங்கள் அறிவீர்கள்” என்றார் அர்ஜுனன். “நான் கேட்க விழைவதென்ன என்பதும் உங்களுக்கு நன்கு தெரியும்.” இளைய யாதவர் நகைத்து “மானுடனுக்கு வேண்டியதென்ன என்று தெய்வங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆயினும் வேண்டிக்கொள்பவர்களுக்கே அவை கனிகின்றன” என்றார். “நான் எண்ணுவதை சொல்லாக்கிக் காட்டவேண்டும், அவ்வாளவுதானே?” என சீற்றத்துடன் கேட்ட அர்ஜுனன் “நான் எவ்வகையில் அவனைவிட குறைவானவன்? அவன் கொண்டுள்ள இப்புகழுக்கு என்ன அடிப்படை?” என்றார்.

இளைய யாதவரை நோக்கி சீறும் மூச்சுடன் அவர் தொடர்ந்தார். “சொல்க! வீரத்தில் நான் அவனுக்கு நிகரானவன், ஒருநாள் அவனை வெல்லும் ஊழ்கொண்டவன். அவன் சூதன், நானோ பெருங்குலத்தில் பிறந்தவன். அவன் வெற்றிகள்

பிறிதொருவனுக்குப் பணிந்து பெற்றவை. நான் வில்கொண்டு திசைவென்றவன்." இளைய யாதவர் "மெய், ஆனால் எளிய மானுடர் பெரியோரை நினைவில்கொள்வது அப்பெரியோர் கொண்ட பெருமைகளின்பொருட்டு அல்ல. அப்பெருமையால் தாங்கள் அடைந்த நலன்களின் பொருட்டே. கடுவெளியை ஆளும் முழுமுதல் தெய்வங்களைக்கூட மானுடர் அவை தங்களுக்கு அளித்த அருளால்தான் அறிந்துகொள்கிறார்கள்" என்றார்.

"அவன் அவர்களுக்கு அளிக்கும் அந்நலன்தான் என்ன?" என்று அர்ஜுனன் உரத்த குரலில் சொன்னார். "சூதரும் மாகதரும் அணுகுகையில் அள்ளி வழங்கி அவர்களைக்கொண்டு தன்னை பாடச்செய்கிறான். அவர்கள் அவன் வீரத்தைப் பாடவில்லை. அவன் அழகையும் மெய்யாகவே பாடவில்லை. அவற்றை அவர்கள் செவிச்செய்தியாகவே அறிவர். அவர்கள் பாடுவது அவன் அளித்த செல்வத்தை பற்றித்தான். யாதவரே, விலைகொடுத்துப் பெறுவதா பெருமையும் புகழும்?"

"அல்ல, ஆனால் இவ்வுலகில் அரியவை இரண்டே. தவமும் கொடையும். இரண்டும் மானுட உள்ளம் செல்லும் இயல்பான திசைக்கு நேர் எதிர்த்திசை நோக்கி செல்பவை. கொடை ஒரு தவம். தவம் ஒரு பெருங்கொடை" என்று இளைய யாதவர் சொன்னார். "ஆகவேதான் முனிவரை வள்ளல் என்றனர். வள்ளல்களை முனிவர் என்பதும் தகும்." அர்ஜுனன் "அள்ளிக்கொடுப்பதில் என்ன உள்ளது? அளிக்க தன்னிடம் பொருள் உள்ளது என்னும் ஆணவத்தைத்தவிர?" என்றார். "அளிப்பவன் ஆணவம் கொண்டால் பெறுவது பொற்குவையே ஆனாலும் இரவலன் சீற்றமே கொள்கிறான். பொன்னுக்கும் பொருளுக்கும் அப்பால் நின்றிருக்கும் தெய்வமொன்று

ஒவ்வொரு மானுடனுக்கும் உள்ளே உறைகிறது. அது வணங்கிப் படைப்பனவற்றை மட்டுமே பெற்றுக்கொள்கிறது" என்றார் இளைய யாதவர்.

அர்ஜுனன் சலிப்புடன் தலையசைத்து அச்சொற்கள் தன்னுள்ளத்தில் புகுவதை தடுத்தார். "துறப்பதனூடாக அடைவது பெரிதென உணர்ந்தவர்களின் பாதை அது. பிறருக்கு அது எளிதெனத் தோன்றும். ஆற்றுகையில் முதல் காலடியிலேயே புவிமுழுதும் எடையென ஏறி தோளை அழுத்தும்." அர்ஜுனன் சீற்றத்துடன் "நானும் அளிக்கிறேன். அள்ளி அள்ளி இவர்களுக்கு கொடுக்கிறேன். இவர்களும் என்னைப் பாடும்படி செய்கிறேன். இந்திரப்பிரஸ்தத்தின் களஞ்சியம் நான் ஈட்டிய பொருளால் நிறைந்துள்ளது. அடிமைச்சிறுநாடாகிய அங்கம் ஆயிரம் கொடுத்தால் நான் பல்லாயிரம் கொடுக்கிறேன்" என்றார்.

இளைய யாதவர் புன்னகை செய்தார். அர்ஜுனன் அரற்றியபடியே உடன்வந்தார். "பெருஞ்செயலாற்றி புகழ்பெற்றவர்களின் காலம் திரேதாயுகத்துடன் முடிந்துவிட்டது போலும். இது பொருள்கொடுத்து புகழை விலைகொள்ளும் காலம். நானும் விலைகொடுக்கிறேன். வேறென்ன? புகழே இப்புவியில் ஷத்ரியன் ஈட்டுவது. அதற்கு வில் போதாது துலாக்கோல் தேவை என்றால் அவ்வண்ணமே ஆகுக!" இளைய யாதவர் ஒன்றும் சொல்லவில்லை. "இவ்வண்ணம்தான் நீங்களும் ஈட்டுகிறீர்களா புகழை?" என்று அர்ஜுனன் அவரை நோக்கி சீறினார். "நான் உலகனைத்திடமிருந்து பெற்றுக்கொள்பவனும்கூட" என அவர் சொன்னார்.

பேச்சின் அலைக்கழிவால் அவர்கள் வழிபிழைத்துவிட்டிருந்தனர். உயர்ந்த கற்றாழைகள் செறிந்த

வறண்ட காட்டை வந்தடைந்திருப்பதை தன் குரலின் எதிரொலி மாறிவிட்டிருப்பதன் வழியாக அர்ஜுனன் உணர்ந்தார். "இது எந்த இடம்?" என்று திகைப்புடன் கேட்டார். "இது புராணநர்மதை. முன்பு நர்மதை இந்த மாபெரும் மலைப்பிளவினூடாகவே நிலமிறங்கியது. அப்பால் ஒரு மலை பெயர்ந்து விழுந்து அதை வழிமாற்றியது. இது இன்று வெறும் மலைவாய்திறப்பு மட்டுமே" என்றார் இளைய யாதவர்.

"நாம் திரும்புவோம்" என்று அர்ஜுனன் சொன்னார். "நீ பார்க்கவேண்டிய ஒன்று இங்கே உள்ளது" என்று இளைய யாதவர் சொன்னார். அவர் தோளைத்தொட்டு "வருக!" என அழைத்துச்சென்றார். மலைப்பிளவிற்கு அப்பால் மஞ்சள் நிறமான ஒளி தெரிவதை அர்ஜுனன் கண்டார். "அங்கே வெயில் வண்ணம் மாறியிருக்கிறது" என்றார். "வருக!" என்றார் இளைய யாதவர். அவர்கள் புரவியை நிறுத்திவிட்டு நடந்து மலைவிளிம்பில் தொற்றி அப்பால் சென்றனர். அர்ஜுனன் தன் விழிகளை நிறைத்த மஞ்சள் ஒளியைக் கண்டு நின்றார்.

"இது கனககிரி என அழைக்கப்படுகிறது" என்றார் இளைய யாதவர். "இது தூய கிளிச்சிறைப் பசும்பொன். தண்டகப் பெருங்காட்டின் முனிவர்கள் தங்கள் மாணவர்களை இங்கே அனுப்பி இதன் நடுவே ஓராண்டு வாழச்செய்வார்கள். மீள்பவர் பொன்மேல் முற்றிலும் விழைவறுத்திருப்பார்கள். எஞ்சியோர் உளம்கலங்கி பித்தர்களாகி இங்கேயே சுற்றி அலைந்து உயிர்விடுவார்கள்."

தொலைவில் நின்று நோக்குகையில் அந்த நிலம் மலை சூடிய மாபெரும் பொன்னணி போலிருந்தது. அருகணையும்தோறும் பொன்தகடுகளை ஒன்றன்மேல் ஒன்றென அடுக்கியது போலிருந்தது. அதனருகே சென்றதும் அர்ஜுனன் திகைத்து

கால்கூசி நின்றார். அதன்மேல் இயல்பாக நடந்து சென்று நின்று திரும்பி நோக்கிய இளைய யாதவர் “ஏன் நின்றுவிட்டாய்? வருக!” என்றார்.

“திரு” என்றார் அர்ஜுனன். “ஆம், செந்திரு. கால்படலாகாது” என்ற இளைய யாதவர் “பாண்டவனே, இங்கே ஒரு தெய்வச்சொல் திகழ்கிறது. இப்பெருஞ்செல்வத்தை ஒருநாள் காலைமுதல் அந்திக்குள் அள்ளி பிறருக்குக் கொடையளித்து முடிப்பவர் தன்முன் விண்நிறைந்தோனின் நெஞ்சமர்ந்த திருமகள் தோன்றுவதை காண்பார்” என்றார்.

அர்ஜுனன் அவர் சொல்வதை புரிந்துகொண்டு “நான் அளிக்கிறேன். இதை நாளை அந்திக்குள் அளித்து முடிக்கிறேன்” என்றார். “அறிக, கொடை என்பது அள்ளிவீசுவது அல்ல. தகுதியறிந்து உகந்த கைகளுக்குச் செல்லும் பொருளே வேள்விக்குளத்தில் இடப்பட்ட அவிப்பொருள் என தெய்வங்களுக்கு உகந்ததாகிறது. செல்வத்தை வீணடிப்பவன் அவிப்பொருளை தூய்மை கெட விட்டவனுக்குரிய பழியை கொள்வான்” என்றார் இளைய யாதவர். “தகுதி அறிந்து அளிக்கிறேன்... என்னால் மானுடரை கணிக்கமுடியும்” என்றார் அர்ஜுனன்.

அன்றிரவு இளைய யாதவர் அங்கே மரநிழலில் தங்கினார். அர்ஜுனன் இரவெல்லாம் பணியாற்றி அப்பாலிருந்த பெருமலைப்பாதையில் இருந்து அந்தப் பொன்மலை வரை ஒரு பாதையை உருவாக்கினார். மலைப்பாதையின் அருகே இருந்த பாறையில் பெரிய எழுத்துக்களால் “இரவலர் வந்து பொன்கொண்டு செல்க... இல்லை எனாது அளிக்கப்படும்” என அறிவிப்பை எழுதிவைத்தார். பொன்மலையிலிருந்து

பொற்பாறைகளை வெட்டி எடுத்துக்கொண்டு வந்து ஓரிடத்தில் குவித்தார்.

பணிமுடிந்து நீராடி புலரியில் வந்து இளைய யாதவரை எழுப்பினார். "மையப்பாதையில் அறிவிப்பு உள்ளது. இன்று அந்திக்குள் இப்பொன்மலை ஒழிந்துவிடும்... நோக்குக!" என்றார். எழுந்து வந்து பொற்குவையை நோக்கிய இளைய யாதவர் "ஏன் இங்கு கொண்டுவந்துள்ளாய்?" என்றார். "தகுதியற்றோர் அப்பொன்மலையை பார்க்கலாகாது. அவர்களால் அது சூறையாடப்படும். இதை நான் எங்கிருந்து கொண்டுவருகிறேன் என இவ்விரவலர் அறியக்கூடாது" என்றார். இளைய யாதவர் புன்னகைத்தார்.

முதல்புலரொளிக்கு முன்னரே அங்கே இரவலர் வந்து நிறைந்துவிட்டிருந்தனர். பாணர்களும் சூதர்களும் நாடோடிகளும் காட்டுமானுடரும் மட்டுமல்லாமல் வணிகர்களும் வந்திருந்தனர். அர்ஜுனன் ஒவ்வொருவரும் வந்து தங்கள் தகுதியை அறிவிக்கும்படி கோரினார். ஆனால் வந்து வணங்கியவர்கள் தங்கள் தேவையையே அறிவித்தனர். வறுமையை, கடன்களை, குடிப்பொறுப்பை. அவர்களிடம் உசாவி மேலும் கூர்ந்துசாவித்தான் தகுதியை அறியமுடிந்தது.

அவர்கள் மெய்யான தகுதியை மறைத்தனர். அது தங்கள்மேல் இரக்கம் எழாமல் தடுக்குமென எண்ணினர். பொன்னின் முன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிறுமைகொண்டனர். தங்களை தாழ்த்திக்கொண்டனர் சிலர். தகுதிமீறி புகழ்த்திக்கொண்டு மேலும் சிறுமைகொண்டனர் சிலர். கொள்ளும்தோறும் மேலும் மேலுமென கேட்டுத் தவித்தனர். கொண்டவற்றை கொண்டுசென்று பதுக்கிவிட்டு உருமாற்றி மீண்டனர். தாங்கள் பெற்றவற்றை பிறர் பெற்றவற்றுடன்

ஒப்பிட்டு பூசலிட்டனர். தாங்கள் பெற்றவை எத்தனை பெரிதானாலும் தங்கள் தேவையும் தகுதியும் மேலும் பெரிது என எண்ணினர். தேவையையே தகுதி என எண்ணினர், ஆகவே பெற்றவற்றால் மகிழாதாயினர். முகம் மலர்ந்து கொடை பெற்று ஒருவரும் மீளவில்லை.

அவர்களின் மகிழ்ச்சியின்மை அர்ஜுனரையும் மகிழ்ச்சியற்றவராக்கியது. கொடை அளிக்கும் உளநிறைவை அடையாததனால் அவர் கொடுக்குந்தோறும் தளர்ச்சி அடைந்தார். உச்சிப்பொழுதில் கைகால் ஓய்ந்து அமர்ந்தார். அவரைச் சூழ்ந்து இரவலர் கூச்சலிட்டனர். "கொடுங்கள்... கொடுங்கள்" என கூவி அவரை தொட்டு உலுக்கினர். "இல்லையேல் சொல்க, இப்பொன் எங்குள்ளது? நாங்களே சென்று அதை எடுக்கிறோம்" என்று கூவினர். அர்ஜுனன் சினந்து "விலகிச் செல்க... உங்கள் சிறுமைக்கு முன் அதை நான் விட்டுத்தரப்போவதில்லை" என்று வில்லை எடுத்தார்.

அஞ்சி விலகி அவர்கள் கைநீட்டி வசையுமிழ்ந்தனர். "அள்ளக்குறையாத செல்வத்தை தனக்கென கரந்து வைத்திருக்கிறான். அதிலொரு துளியை நமக்கு அளித்து தெய்வங்களை மகிழவைக்க முயல்கிறான்" என்று ஒரு முதிய வணிகர் கூவினார். "இவன் வீரன் அல்ல, வணிகன். படைக்கலத்தால் வென்று பொருளீட்டுவதே வீரனுக்கு அழகு. இவன் தெய்வம் தனக்குக் காட்டியதை பிறரிடமிருந்து மறைக்க வில்லேந்தி நின்றிருக்கும் வீணன்!" மக்கள் கைகளை நீட்டியும் மண் அள்ளி வீசியும் அர்ஜுனரை தூற்றினர். "கொண்டது கரந்தவன் கொடுநரகுக்கே செல்வான். கீழ்மகன்! தனக்கு மிஞ்சியது அனைத்தும் பிறருக்குரியது என்று அறியும் தெளிவில்லாத பேதை!" என்று பழித்தனர்.

சீற்றம்கொண்டு வில்லை நாணொலித்தபடி அர்ஜுனன் அவர்களை கொல்ல எழுந்தார். "கொல்! எங்களுக்கும் உரியதென தெய்வங்கள் அளித்த செல்வத்தை உனக்கெனக் கரந்திருக்கும் பழிக்காக நீ இருளுலகுக்கே செல்வாய்! எங்களை கொன்ற பழியும் உடன் இணையட்டும்... கீழ்மகனே, பிறப்பால் பெருமையேதும் அடையாத இழிமகனே, உன் கைகளால் எங்களை கொல்! எங்களுக்கு தெய்வம் அளித்த செல்வத்தைக் கொண்டு உன் இயல்புக்குரிய கீழ்மையில் திளைத்து வாழ்..." என ஒரு முதியவர் நெஞ்சில் அறைந்து கண்ணீருடன் அலறினார். அங்கிருந்த அனைவரும் அழுதுகொண்டிருந்தனர். அர்ஜுனரை நோக்கி கைநீட்டி அவர் தந்தையையும் தாயையும் குலத்தையும் பழித்தனர். காறி உமிழ்ந்து மண்ணள்ளி வீசி தீச்சொல்லிட்டனர்.

"பொறுங்கள்... நான் அளிக்கிறேன். வசை ஒழிக! நான் அளிக்கிறேன்" என்றார் அர்ஜுனன். அள்ளி அள்ளி கொண்டுவந்து அவர்களுக்கு அளித்தார். அவர்கள் கோரக்கோர மேலும் அளித்தார். ஆனால் அவர்கள் மேலும் மேலும் வெறிகொண்டு கூச்சலிட்டார்கள். "போடு... இன்னும் போடு... இது என்ன உன் தந்தை ஈட்டிய செல்வமா? நீ வென்ற பொருளா? கொடுப்பதற்கு கைகுறுகிய கீழ்மகனே, கொடு கொடு" என கூவினர். "கொடு கொடு கொடு" என அவரைச்சுற்றி அவர்களின் கைகள் அலையடித்தன. அவர்களின் கூச்சல்களால் மலையடுக்குகள் முழக்கமிட்டன.

அந்தியிருள்கையில் அந்நிலத்தில் அர்ஜுனன் நோயுற்றவராக படுத்துவிட்டிருந்தார். இரவலர் அவர் எழுவார் எனக் காத்திருந்தனர். பின்னர் அவர்கள் ஒவ்வொருவராக தீச்சொல்லும் பழிச்சொல்லும் உதிர்த்தபடி கிளம்பிச் சென்றனர்.

அர்ஜுனரைத் தூக்கி புரவியிலிட்டபடி இளைய யாதவர் அகன்று சென்றார். இரவெல்லாம் புரவியில் படுத்தவராக அர்ஜுனன் ஓசையின்றி விழிநீர் விட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் சென்று ஒரு மலைப்பாறை மடிப்பில் அமர்ந்தனர். இளைய யாதவர் அருகிருந்த மரத்திலிருந்து கனிகளைப் பறித்து ஓடைநீருடன் கொண்டுசென்று கொடுத்தார். அர்ஜுனன் அதை வாங்கி உண்ணவில்லை. விண்மீன்கள் செறிந்த வானை வெறித்து நோக்கியபடி படுத்திருந்தார். அவ்வப்போது நீள்மூச்சு மட்டும் எழுந்துகொண்டிருந்தது.

அர்ஜுனன் இளைய யாதவரின் அருகே வந்து அமர்ந்தார். படுத்தபடியே விழிதிறந்து "சொல்க!" என்றார் இளைய யாதவர். "என்ன இதெல்லாம்? யாதவரே, நான் அஞ்சுகிறேன். கொடுங்கனவு கண்டு அஞ்சும் இளமைந்தன் போலிருக்கிறேன்" என்றார் அர்ஜுனன். இளைய யாதவர் "அவர்கள் மானுடர்கள் அல்லவா? மானுடருடன் பொன் விளையாடத்தொடங்கி பல யுகங்கள் ஆகின்றன" என்றார். "நான் அவர்களுக்கு அள்ளிக்கொடுத்தேன். அவர்கள் எண்ணியும் நோக்கமுடியாத செல்வம் அது. ஒருவர்கூட மகிழவில்லை. ஒருவர்கூட என்னை வாழ்த்தவுமில்லை" என்றார் அர்ஜுனன்.

"நீ மானுடரை அவர்களின் தகுதியால் மதிப்பிட்டாய். அவர்கள் தங்களை தங்கள் விழைவால் மதிப்பிட்டுக் கொள்கிறார்கள்" என்று இளைய யாதவர் நகைத்தார். "தன் தகுதிக்கு இவ்வளவு போதும் என மானுடர் நின்றுவிடுவதில்லை. தன் தகுதிக்குரியதே போதும் என எண்ணும் மானுடர் பல்லாயிரத்தில் ஒருவரே. ஆனால் அதை உணர்ந்த அக்கணமே அவர் இங்கிருந்து எதையுமே பெற்றுக்கொள்ளாதவர் ஆகிறார்.

துறந்துசென்று அமைந்து இங்கெலாம் நிறைந்துள்ள ஒன்றை மட்டும் பற்றிக்கொள்கிறார்.”

அர்ஜுனன் பெருமூச்சுவிட்டார். “என் பிழை எங்குள்ளது, யாதவரே?” என்று நிலம்நோக்கியபடி கேட்டார். “நான் எண்ணி எண்ணி ஏற்றவருக்குத்தானே அளித்தேன்? எனக்கென அதில் ஒரு துளியும் எடுத்துக்கொள்ளவில்லையே!” இளைய யாதவர் “அவர்களை மதிப்பிடும் இடத்தை உனக்கு எவர் அளித்தது?” என்றார். அர்ஜுனன் திடுக்கிட்டார். “அந்தப் பொன்மலையை நீ பார்த்தாய், எனவே அதை உரிமைகொண்டாய். அவ்வுரிமையால் அந்தத் தகுதியை அடைந்ததாக எண்ணிக்கொண்டாய்” என்றார் இளைய யாதவர். “இது வீண் சொல்... என்னை சிறுமைசெய்கிறீர்கள்” என்று கூவிய பின் அர்ஜுனன் எழுந்து சென்று அப்பால் அமர்ந்தார். இளைய யாதவர் புன்னகையுடன் கண்களை மூடிக்கொண்டார்.

புலரியில் அவர் எழுந்தபோது அர்ஜுனன் விடிவெள்ளியை நோக்கி நின்றிருப்பதை கண்டார். அவர் எழுந்ததைக் கண்டு திரும்பி நோக்கி “மெய்தான் யாதவரே, உங்கள் சொல்லை வந்தடைய எனக்கு ஓர் இரவு தேவைப்பட்டது” என்றார். யாதவர் புன்னகைத்து “நாம் கிளம்புவோம்” என்றார். “அவன் எவ்வாறு கொடுக்கிறான் என்று அறிய ஆவல்” என்று அர்ஜுனன் சொன்னார்.

அவர்கள் சாலைக்கு வந்தபோது அங்கே கர்ணன் தனியாக புரவியில் வருவதை கண்டனர். “அது அங்கன் அல்லவா?” என்று அர்ஜுனன் திகைப்புடன் கேட்டார். “ஆம், அவனும் நம்மைப்போல் நிலம்காண கிளம்பியிருக்கலாம்” என்றார் இளைய யாதவர். அருகணைந்த கர்ணன் அவர்களைக் கண்டு திகைத்து பின்னர் மகிழ்ந்து வணங்கி முகமன் உரைத்தார்.

“உம்மைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம், அங்கரே” என்றார் இளைய யாதவர்.

“சொல்க!” என்றார் கர்ணன். “இங்கே பொன்மலை ஒன்றுள்ளது. புலரி எழுந்து அந்தி சாயும் முன் அதை தகுதியுடையோருக்கு கொடையளித்து முடிப்போர் திருமகளை நேரில் காண்பார் என்கிறார்கள்” என்றார் இளைய யாதவர். “நான் இன்று மாலைக்குள் மலையிறங்கிவிடவேண்டும்” என்றார் கர்ணன். “இதை கொடையளித்துவிட்டுச் செல்க!” என்றார் இளைய யாதவர். “நாளை முதற்புலரி முதல் அந்திவரை எடுத்துக்கொள்க!”

“நாளை எதற்கு? இன்றே அளித்துவிடுவோம். கொடை தாழ்த்துவது நோய் தாழ்த்துவதை விடத் தீங்கானது” என்றார் கர்ணன். அவர்கள் அந்தப் பொன்மலையை சென்றடைந்தனர். கர்ணன் அந்தப் பொன்மலைமேல் காலூன்றி ஏறியபோது அர்ஜுனன் “பொன் என்பது திருவின் உரு. காலடியால் தூய்மை கெடுக்கிறீர்” என்றார். “அல்ல, இது வெறும் உலோகம். இதன் ஒளியே திரு. ஒளியை எவர் தூய்மையறச் செய்ய இயலும்?” என்றார் கர்ணன்.

“இதை உகந்தோருக்கு அளியுங்கள்” என்றார் இளைய யாதவர். கர்ணன் தன் புரவியில் ஏறி விரைந்து அகன்றார். சற்று நேரத்திலேயே மீண்டு வந்தார். அவருடன் ஒருவர் புரவியில் வந்தார். “இவர் அங்கே மலைச்சரிவில் அன்னவிடுதி நடத்தும் சந்திரர்” என்று கர்ணன் சொன்னார். “இன்று காலை இவருடைய விடுதியின் நல்லுணவை உண்ட பின்னரே கிளம்பினேன். மூன்று தலைமுறைகளாக இவர் குடி அங்கே அன்னம் அளிக்கிறது.” சந்திரர் “அது மாளவ அரசரின் கொடை. அடியேன் வெறும் கை மட்டுமே” என்றார்.

கர்ணன் “இதை நான் நோக்கியதனால், நான் அரசன் என்பதனால், இதன்மேல் உரிமைகொண்டவன் ஆகிறேன். இவ்வுரிமையை எதிர்க்கும் எவரையும் வெல்லும் ஆற்றலை கொண்டுள்ளேன். இதை காக்கும் படைத்திறனும் உண்டு எனக்கு. எனவே இதை அளிக்கும் உரிமையும் கொள்கிறேன். சந்திரரே, இதை கைக்கொண்டு என்னை வாழ்த்துக!” என்றார். சந்திரர் பொன்மலையை நோக்கிவிட்டு மகிழ்வுடன் “பெருஞ்செல்வம்” என்றார். “நூறு தலைமுறைக்கு வறியோர்க்கு உணவளிக்க இதுவே போதுமானது.” முகம் மலர்ந்து “எனக்குத் தெரிவது ஒரு வெண்சோற்று மலை...” என்றார்.

“இந்தப் பொன்மலையை கொள்க, சந்திரரே! உங்கள் கையில் உணவு ஒருபோதும் ஒழியாது திகழ்க! உங்கள் கொடிவழியினரிலும் அக்கொடைத்திறன் வளர்க!” என்று கர்ணன் சொன்னார். குனிந்து நிலத்தில் மண்டியிட்டமர்ந்து “இதை கொள்க! என் தலைதொட்டு என் குடிவிளங்க வாழ்த்துக!” என்றார். சந்திரர் “வாழ்த்தும் தகுதியுள்ளவன் அல்ல நான்” என்றார். “அன்னமிட்ட அந்தக் கைக்கு இவ்வுலகையே வாழ்த்தும் தூய்மை உள்ளது” என்று கர்ணன் சொன்னார். சூதர் தடுமாறிய குரலில் “வளர்க, வாழ்க!” என அவர் தலைதொட்டு வாழ்த்தினார்.

அவர்களை வணங்கி விடைபெற்று சந்திரர் சென்றதும் அர்ஜுனன் “அவர் இதை சூறையாடமாட்டார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அன்றன்று அன்னத்திற்குள்ள பொன்னை மட்டுமே எடுத்துக்கொள்வார். இப்பெருஞ்செல்வம் அதன் முழுப்பயனை அடையாது போகலாம்” என்றார். “பாண்டவரே, மண்ணில் முடிவிலாச் செல்வங்கள் உறைகின்றன. அனைத்தையும் எடுக்க எண்ணுபவர் அன்னையின் குருதி

உண்பவர். நம் பசியறிந்து அன்னை சுரந்து ஊட்டும் பால் மட்டுமே நமக்குரியது" என்றார் கர்ணன். "இப்புவியை மானுடர் வென்று தீர்க்கமுடியும், தின்று தீர்க்க இயலாது என்பது தொல்மொழி."

அவர்கள் திரும்பி நடக்கையில் அர்ஜுனன் "ஆம், இந்த மலை இங்கிருப்பதுதான் நன்று. வற்கடம் வருமென்றால் இது சேர்த்துவைத்த சோறென்று நின்று உதவும்" என்றார். பாதைக்கு அப்பால் ஒரு பிளிறலோசை கேட்டது. உடலெங்கும் செம்மண் படிந்து, சிறுவிதைகள் முளைத்து பசும்புல் மயிர்ப்பரப்பென எழுந்த முதுகுப்பரப்புடன், நீண்ட துதிக்கை அலைபாய பிடியானை ஒன்று எதிரே வந்தது. அதன் கால்களுக்குக் கீழே துதிக்கை நீளாத குட்டி தடுமாறிக்கொண்டிருந்தது. அதன் குலம் அப்பால் நின்று பெருங்குரலெடுத்து அவர்களை எச்சரித்தது. "அதோ உமது கொடைப்பயனாக திருமகள் எழுந்துள்ளாள். சென்று நீர் வேண்டுவதைக் கோருக!" என்றார் இளைய யாதவர்.

"ஆம், அனைத்து மங்கலங்களும் கொண்டது அந்தப் பிடியானை" என்று கூறிய கர்ணன் கைகூப்பியபடி அதை அணுகினார். யானை நின்று அவரை நோக்கி துதிக்கை நீட்டியது. கர்ணன் அதனருகே தாள்பணிந்து வணங்கினார். அது தன் பெருங்கையால் அவர் தலைதொட்டு வாழ்த்தியது. கர்ணன் எழுந்ததும் குட்டி முன்னால் பாய்ந்து அவரை முட்டி பின்னால் வீழ்த்தியது. சிரித்தபடி எழுந்து அதன் நெற்றியை கையால் தட்டியபின் கர்ணன் திரும்பி வந்தார்.

"என்ன நற்கொடை கேட்டீர்?" என்றார் இளைய யாதவர். "இனி ஒருபோதும் பசியால் இரப்பவரை நான் காணநேரலாகாது அன்னையே என்றேன். அவ்வாறே என அன்னை அருளினாள்" என்றார் கர்ணன். இளைய யாதவர் புன்னகைத்து "பசிப்பிணி

நீக்கி நற்பேறு கொள்ளும் வாய்ப்பை அல்லவா இழக்கிறீர்?" என்றார். கர்ணன் "பசியால் நலிந்த ஒருவரைக் காணும் துயருக்கு ஆயிரம் நற்பேறுகள் நிகரல்ல, யாதவரே" என்றார். "ஒவ்வொரு முறையும் பசித்த ஒருவருக்கு கொடையளிக்கையில் நான் அடைவதே என் வாழ்வின் பெருந்துன்பம். சம்பாபுரியில் பசியுடன் எவருமில்லை. ஆனால் பயணங்களில் என்னால் தவிர்க்கமுடிவதில்லை."

எண்ணியிராக் கணத்தில் அர்ஜுனன் கர்ணன் முன் விழுந்து மண்ணில் தலைபட வணங்கி "என்னை வாழ்த்துக, மூத்தவரே! என் தலைமேல் உங்கள் கால் அமைக! நான் கொண்ட ஆணவம் முற்றழிந்து விடுபடும்படி அருள்க!" என்றார். கர்ணன் பதறியபடி "என்ன இது... என்ன செய்கிறாய்!" என்றபடி குனிந்து அர்ஜுனரை அள்ளி தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டார். "என் உள்ளத்திற்கு இனியோன் அல்லவா நீ? உன்னை என் உள்ளத்தால் ஒவ்வொரு கணமும் வாழ்த்திக்கொண்டல்லவா இருக்கிறேன்" என்றார். அர்ஜுனன் அவர் தோள்களில் முகம்சேர்த்து விழிநீர் வடிய விம்மி அழுதார்.

சூதரே, மாகதரே, வாழ்த்துக துறந்தோன் பெயரை! வணங்குக வள்ளலின் நினைவை! இப்புவியில் கொடுத்தவர்போல் கொள்பவர் எவர்? இப்புவியனைத்தும் கொண்டவரை, விண்ணை அள்ளி விரிந்தவரை போற்றுக! ஆம், அவ்வாறே ஆகுக!

வெண்முரசு விவாதங்கள்

இருட்கனி - 2

குருக்ஷேத்ரத்தின் தெற்குக்காட்டில் அந்தி அணைந்த பின்னர் சிதைச்சடங்குகள் தொடங்குவதற்கான முரசொலி எழத்தொடங்கியதும் கௌரவப் படைகள் ஒலியடங்கின. குருதிமணம் கொண்ட காற்று மெல்லிய சுழல்களாக கடந்துசென்றது. புண்பட்டவர்களை மருத்துவநிலைகளுக்கு கொண்டு சென்று சேர்த்துவிட்டு திரும்பிச்சென்ற சகடங்களின் ஓசை ஓய்ந்தது. தெற்குக்காடு நோக்கி சென்றுகொண்டிருந்த சுடலைச்சகடங்களின் ஒலிகள் கேட்டுக்கொண்டிருந்தன. முரசு முழக்கமும் கொம்புக்கூவலும் இணைந்த ஓசை காற்றில் கிழிந்து பறந்தது. போரின் முதல்நாள் அவ்வொலி எழுந்தபோது அது என்ன என்று பெரும்பாலானவர்களுக்கு புரியவில்லை. அதை உண்டாட்டுக்கான அழைப்பு என்றோ, வேறேதோ ஆணை என்றோ எண்ணிக்கொண்டார்கள். தொடர்ந்து கொம்புகள் ஒலிக்கத் தொடங்கியபோதுதான் அதிலிருந்த வேறுபாடு அவர்களின் செவிகளுக்கு உறைத்தது. தாளமும் சுதியும் இறங்குகதியில் இருந்தன. அது இறப்புச்சடங்குகளுக்குரியது என உணர்ந்ததுமே அனைவரும் அமைதியாயினர்.

தெற்கு எல்லையில் பரவிய அந்த ஓசையின்மை உருகிய மெழுகு இறுகுவதுபோல படைகளை நிலைக்கச் செய்தது. சற்றுநேரத்தில் இருபக்கப் படைகளும் விழிகள் வெறிக்க, உதடுகள் நிலைக்க, கைகள் ஓய அவ்வோசையைக் கேட்டு அமர்ந்திருந்தார்கள். படைகளை முற்றாகத் தழுவி பரந்து அவர்களின் தலைக்குமேல் எழுந்து நின்றது அவ்வோசை. வேறு எவரை நோக்கியோ எவரோ கூவி அறிவிக்கும் செய்தி. அவர்கள் அனைவரையும் ஆளும் தெய்வமொன்றின் ஓசை. அது ஒரு மாபெரும் கரிய பறவை. அதன் சிறகோசையும் கூவலும். பின்னர் அவர்கள் நடுவே அமர்ந்து சூதன் அதை

“விண்ணிலிருந்து எழும் அழைப்பு. எப்போதும் அது ஒலித்துக்கொண்டிருக்கிறது. குருக்ஷேத்ரம் அதை நம் செவிக்குரியதாக்குகிறது” என்றான். “கேளுங்கள் வீரர்களே, அது நீத்தோருக்கு நாம் அளிக்கும் விடை. நீத்தோர் நம்மிடம் பேசும் சொற்களும் அதில் கலந்துள்ளன. ஒவ்வொரு முரசொலித்துடிப்பின் இடைவெளியிலும். ஒவ்வொரு கொம்புக்கேவலின் நடுவிலும். அதை செவிகூர்க!”

அந்த ஓசை விரைவில் நிலைக்கவேண்டும் என அவர்கள் விழைந்தனர். பின்னர் “போதும்! போதும்! போதும்!” என அகம் தவித்தனர். இதோ இதோ இதோ என எண்ணி காலத்தை எடையென உணர்ந்து சலித்தனர். ஓயாதா என ஏங்கினர். ஓய்க ஓய்க என தலையை பாறையில் அறைந்துகொள்வதுபோல அதன்மேல் மோதினர். இறுதியான கேவலோசையுடன் அது நின்றதும் இறுகிநின்ற தசைகள் தளர நாண் தொய்ந்த பாவைகள் என அமைந்தனர். அது மிகச்சிறு பொழுதே ஒலித்தது என அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் அப்போது ஒரு முழு வாழ்க்கையையே வாழ்ந்து மீண்டிருந்தனர். முழுப் படையும் விடுபட்டு மண்ணிலமைவது பெரும்நுரைப்பரப்பு குமிழியுடைந்து மறைவதுபோல ஒட்டுமொத்தமான அசைவெனத் தெரிந்தது.

முதல்நாள் அதை காவல்மாடம் மீது நின்று நோக்கிக்கொண்டிருந்த பூரிசிரவஸ் அருகே நின்றிருந்த காவலர்தலைவனிடம் “படை என்பது ஓர் உடல் என இப்போதே அறிந்தேன். ஒரு முழுப்படையும் ஒற்றை நீள்மூச்சை விடுவதைக் கண்டேன்” என்றான். காவலர்தலைவன் அவன் அதை தனக்கென்றே சொல்லிக்கொள்கிறான் என உணர்ந்து மறுமொழி உரைக்கவில்லை. அவன்

காவல்மாடத்திலிருந்து இறங்கிக்கொண்டிருந்தபோதே படைகள் மீளத்தொடங்கின. அழுத்தி வளைக்கப்பட்ட வில் நிமிர்வதுபோல அந்தத் தொய்வுநிலையிலிருந்து அவர்கள் தங்களை மீட்டுக்கொண்டார்கள். உரத்த குரலில் பேசிச்சிரித்தனர். கூச்சலிட்டனர். சிலர் எழுந்து கைதட்டி பாடி ஆடினர். உணவு பரிமாறுவதற்கான முரசொலி எழுந்ததும் மொத்தப் படையே பெருமுழக்கம் எழுப்பியது. வீரர்கள் அறியாது தங்களுக்கு உகந்தவர்களை நோக்கி செல்ல படைவிரிவு உருமாறியது. அந்த அசைவு ஒரு பறவை சிறகை விரித்தடுக்கிக்கொள்வது போலிருப்பதாக பூரிசிரவஸ் எண்ணினான்.

அவன் புரவியில் படைகள் நடுவே சென்றபோது எங்கும் சிரிப்பும் கொண்டாட்டமுமாக படைப்பெருக்கு கொந்தளித்துக்கொண்டிருந்தது. அவன் ஒவ்வொரு முகமாக நோக்கியபடி சென்றான். களித்துக் கூத்தாடுபவர்கள். கலங்களை எறிந்து பிடிப்பவர்கள். "சிரிப்பின் வழியாக அச்சத்தையும் ஐயத்தையும் துயரையும் அகற்றிவிடமுடியுமா என்ன? பேதைகள்!" என அவன் சொல்லிக்கொண்டான். ஒரு வீரன் வாளை மேலே தூக்கி வீசி அதன் கூர்முனையை வாயால் கவ்வினான். சூழ்ந்திருந்தோர் கூச்சலிட்டனர். "மிகப்பெரிய ஒன்றை நோக்கி அறைகூவுகிறார்கள். அதை எள்ளி நகையாடுகிறார்கள்" என்று பூரிசிரவஸ் சொல்லிக்கொண்டான். "அதை எவ்வகையிலும் சிறிதாக்கிவிட இயலாது என இவர்கள் அறிந்துமிருக்கிறார்கள். இது வெறும் நடிப்பு. இச்சிரிப்பு ஓர் அணித்திரை." ஆனால் துரியோதனனின் குடிலை சென்றடைந்தபோது அவன் எண்ணம் மாறிவிட்டிருந்தது. "ஆம், சிரிப்பு என்பது உள்ளிருக்கும் நீர்ப்பெருக்கொன்றின் நுரை. அந்த நீர் எதையும் கழுவிக்களைந்துவிடும். எதிலிருந்தும்

மீட்டுவிடும்” என்று சொல்லிக்கொண்டான். படையினர் அன்றுநிகழ்ந்த போரையே மறந்துவிட்டிருந்தனர். வலியை, இறப்பை ஆழத்திலும் எண்ணியிராதவர் போலிருந்தனர். அவர்கள் தங்களை அதற்கு முற்றளித்துவிட்டிருந்தனர்.

ஆனால் ஒவ்வொருநாளும் அந்த இடுநிலத்து முரசொலியின் எடையும் குளிரும் ஏறிக்கொண்டே இருந்தது. அதை ஒருமுறையேனும் கனவில் காணாதவர் அங்கில்லை. அணுக்கமானவர்கள் இறக்கநேர்ந்ததும் அது பன்மடங்கு இருள்கொண்டது. புண்பட்டு மருத்துவநிலையில் படுத்திருக்கையில் விண்ணின் எக்காளமாகவே ஒலித்தது. நாட்கள் செல்லச் செல்ல அது விண்ணிலிருந்து முகில்கள் கரும்பாறையென்றாகி அவர்கள்மேல் பொழிவதுபோல இறங்கியது. ஒவ்வொரு முறையும் அவர்கள் அவ்வொலியைக் கேட்டு ஓசையடங்கிச் சுருண்டனர். பின்னர் விடுபட்டு கூச்சலுடன் எழுந்தனர். அந்தத் தாளத்தை தங்கள் உணவுக்கலங்களில் எழுப்பினர். வாயால் கொம்போசையை உருவாக்கினர். களியாட்டுக்களில் அவர்கள் மீளமீள இறப்பை நடித்தனர். கள்மயக்கில் ஒருவன் நினைவழிந்தால் அவனை செத்த உடலென வைத்து வாயில் அரிசியிட்டு வெண்கூறை போர்த்தி விறகடுக்கிச் சிதையேற்றி விளையாடினர். அவன் எழுந்து சினந்தபோது அவனை பேயெனக் கருதி அஞ்சுவதாக நடித்து களிக்கூத்திட்டனர்.

ஆனால் சென்ற பதினாறு நாட்களில் இல்லாதபடி அன்று முரசொலி முழங்கி கொம்பொலி தேம்பி அமைந்த பின்னரும் அமைதி நீடித்தது. அன்று படைகள் மிகக்குறுகிவிட்டிருந்தன. அழிந்தவற்றிலிருந்து மீட்கப்பட்ட சிறியபடை ஒன்று குருக்ஷேத்ரத்தின் வடமேற்கு மூலையில்

தொகுக்கப்பட்டிருந்தது. . குருக்ஷேத்ரத்தின் புகையை அள்ளி காற்று அலையலையென விரித்தது. சென்று சுழன்று மீண்ட காற்றில் சுடலைத்தாளம் வலுத்து மீண்டும் தாழ்ந்தது.

குழந்தைபோல எழவிருக்கும் ஓசைக்காக செவிகளை முன்மடித்துக் காத்திருந்த இளைய யானை ஒன்று பொறுமையிழந்து "ர்ராங்?" என்று வினவியது. அதற்கு பிற யானைகள் மறுமொழி சொல்லவில்லை. தன் ஒலியை தானே உரக்கக் கேட்டு திகைப்படைந்து சுற்றிலும் நோக்கியபின் பிழைசெய்துவிட்டோமோ என எண்ணிய அந்த யானை அதை மறைக்கும்பொருட்டு அருகிலிருந்த மூத்த யானையின் பின்பக்கம் தன் கொம்புகளால் விளையாட்டாக குத்தியது. கொட்டிலின் தலைவியான முதிய பிடியானை முரசுத்தோலில் கோல் உரசிச்சென்றதுபோன்ற மெல்லிய ஒலியில் அதை அதட்ட துதிக்கையைச் சுருட்டியபடி பின்னடைந்து தன் முன் போடப்பட்டிருந்த உப்புநீர் தெளித்த வைக்கோலை அள்ளிச் சுருட்டி வாய்க்குள் திணித்து மெல்லத் தொடங்கியது. பிற யானைகள் அதை நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தமையால் அதன் அசைவுகள் செயற்கையாக இருந்தன. தலையை மிகையாக ஆட்டி கழுத்துமணியை ஒலிக்கவிட்டது.

தெற்குச் சுடலைக்காட்டை நோக்கி அரசக்கொடி பறக்கும் முதன்மைத்தேர் செல்ல அதைச் சூழ்ந்து வேலும் வில்லுமேந்திய காவலர்களின் புரவிகள் சென்றுகொண்டிருந்தன. அதை வெறித்த விழிகளுடன் கௌரவப் படைவீரர்கள் நோக்கினர். தேர்த்தட்டில் துரியோதனன் நின்றிருக்கக் கண்டும் எவரும் வாழ்த்துரைக்கவில்லை. துரியோதனன் கைகளை மார்பில் கட்டியபடி நிமிர்ந்த தலையுடன் நின்றிருந்தான். தேரின்

அசைவுகளுக்கேற்ப அவன் உடல் உலைவுகொள்ளவில்லை. காற்றில் ஒழுகிச்செல்வதுபோல் அவன் தெரிந்தான். வெண்ணிற மேலாடை மட்டும் அணிந்து தலையணியோ கவசங்களோ இன்றி தோன்றினான். எல்லைக்காவல்மாடமொன்றில் எரியத்தொடங்கியிருந்த பந்தவெளிச்சத்தை அவன் கடந்துசென்றபோது அவன் வெட்டுரு கூரிய மூக்கும் இறுக ஒட்டிய உதடுகளும் நிமிர்ந்த முகவாயுமாக அழகிய கருங்கல்சிலை எனத் தெரிந்தது. தலைக்குழல்களும் மீசையும் இமைமயிர்களும்கூட தெளிவாக துலங்கின. அவன் விழிகளில் அனல்துளி தெரிந்தணைவதுபோல தோன்றியது. அவன் நீள்நிழல் இப்பாலிருந்த காவலர்மாடத்தின் பலகைப்பரப்புமேல் விழுந்து சென்றது.

அவன் முன்பு எப்போதையும்விட அழகு கொண்டிருப்பதாக கௌரவ வீரர்கள் எண்ணினர். அவனுருவில் வேறேதோ தெய்வம் களமெழுந்துவிட்டதோ என்ற ஐயத்தை மீண்டும் கொண்டனர். சென்ற சிலநாட்களாகவே அந்த ஐயம் கௌரவப் படைகளில் இருந்தது. அது முதலில் மெல்லிய குரலில் உரையாடல்களில் சொல்லப்பட்டது, பின்னர் அதை சொல்வதை அவர்கள் அஞ்சி தவிர்த்தனர். ஆகவே அவர்களுக்குள் அது வளர்ந்தது. அவர்கள் அவனை கனவுகளில் கண்டனர். காகக்கொடியும் கரிய ஆடையும் அனலெரியும் விழியுமாக அவன் கழுதைமேல் அமர்ந்திருந்தான். அவனைச் சூழ்ந்திருந்த நிலத்தின் உருளைக்கற்களனைத்தும் தலையோடுகள். பற்கள் வெண்கற்களென பரவியிருந்தன. அவன் முன் நிழல்தொகைகள் என தெய்வங்கள் வந்து பணிந்துகொண்டிருந்தன. வானில் ஏழு முனிவர்களும் நடுங்கிக்கொண்டிருந்தனர்.

அவன் கடந்துசென்ற பின்னர் அவர்கள் நீள்மூச்செறிந்தனர். அவனுடைய தேர் படையெல்லை கடந்து தென்சுடலைக் காட்டுக்குள் மறைந்ததும் ஒவ்வொருவராக மீண்டும் நீள்மூச்செறிந்தனர்.

துரியோதனனின் தேர் வந்து நின்றதும் படைவீரர்கள் ஓடிவந்து அவனை சூழ்ந்துகொண்டார்கள். தலைமைக் காவலன் வாழ்த்துரை இன்றி பணிந்து "ஒருக்கங்கள் நிகழ்கின்றன" என்றான். துரியோதனன் தேரிலிருந்து இறங்கி வெற்றுவிழிகளால் அந்தச் சுடலைக்காட்டை சுற்றி நோக்கியபடி நடக்க வீரர்கள் படைக்கலங்கள் ஓசை எழுப்பாமலிருக்க அவற்றை உடலுடன் அழுத்திப்பற்றியபடி உடன் சென்றனர். அரசனுடன் அணுக்கக்காவலர் எழுவர் மட்டுமே வந்திருந்தார்கள். துரியோதனன் சீரான நடையுடன் செல்ல அவர்களின் நடையும் அறியாது அவ்வண்ணம் மாறிவிட்டிருந்தது. அச்சூழலில் அந்த நடை அச்சமூட்டும் விந்தைத்தன்மையை கொண்டிருந்தது. சுடலைக்காட்டுக்குள் பந்தங்கள் ஏற்றப்பட்டுவிட்டிருந்தன. ஆயினும் விழிதுலங்கும் வானொளியும் இருந்தது. அவர்களின் இரும்புக் குறடொலிகளை காட்டின் செறிவு எதிரொலித்தது.

சுடலைப்பணியாளர் பெரிய கூட்டுச்சிதைகளை ஒருக்கிக்கொண்டிருந்தார்கள். அவை மரங்களை அடுக்கிக் கட்டப்பட்ட வீடுகள் போலிருந்தன. விறகால் உருவாக்கப்பட்ட படிகளின் மேல் தொற்றி ஏறி மேலே சென்று அங்கே அரக்குப்பலகைகளை வைத்தனர். அடுக்கப்பட்டுக்கொண்டிருந்த சிதைகளின் மேல் நின்றிருந்தவர்கள் கீழிருந்து வீசப்பட்ட விறகுகளைப் பற்றி அதே விசையில் சுழற்றி வைக்க அவை

சீராக அடுக்குகொண்டன. வீசுபவர்கள் "இதோ" என மூச்சொலியுடன் சொல்ல "வருக!" என மேலே நின்றவர்கள் சொல்லி அதை பற்றினர். அந்த உரையாடல் அப்பகுதியின் அமைதியில் ஓங்கி ஒலித்தது. துரியோதனன் நின்று ஒரு பெருஞ்சிதையை பார்த்தான். அது நீள்சதுரமாக விறகுகள் ஒன்றுடன் ஒன்று படிந்து சீராக உருவாகிக்கொண்டிருந்தது. பல குருவிகள் சேர்ந்து கட்டும் பெரிய குருவிக்கூடு போலிருந்தது. பணியின் ஒழுங்கு உள்ளத்தை ஆட்கொண்டிருந்தமையால் அரசன் நோக்கி நிற்பதை அவர்கள் உணரவில்லை. துரியோதனன் மீண்டும் நடந்தான்.

அரக்கும் நெய்யும் குங்கிலியமும் தேவதாருப்பிசினும் இணைந்த மணம் நிறைந்திருந்த சிதையருகே அவன் சென்றதும் அங்கே வீரர்கள் சிலர் அவனைக் கண்டு உடல்மொழி மாறினர். ஆணையிட்டபடி நின்றிருந்த இளைய அமைச்சர் சுப்ரதர் அதைக் கண்டு விழிதிருப்பி அவனைக் கண்டு பதறி வணங்கியபடி ஓடி அருகே வந்தார். அங்கே வரவேற்போ வாழ்த்தோ ஒலிக்கலாகாது என நாவை நினைவு கட்டுப்படுத்த என்ன சொல்வது என தவித்து கைவீசி சிதையை சுட்டிக்காட்டி "இன்னும் சற்றுப்பொழுதில் முடிந்துவிடும்" என்று தணிந்த குரலில் சொன்னார். அவர் குரல் அவருக்கே அயலாக ஒலித்தது. துரியோதனனின் இமைகளில்கூட அசைவு ஏதும் தெரியவில்லை. அவன் சிதையை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தான். ஆனால் நோக்கை உளமறிவதை முகம் காட்டவில்லை. சுப்ரதர் தொண்டையைக் கனைத்து "இளவரசருக்கு செய்தி சென்றிருக்கிறது. இளவரசரும் அரசியும் இங்கு அருகே சிறுநகர் சிபிரத்தில்தான் இருக்கிறார்கள்" என்றார்.

“அரசர் இங்கே வந்ததும் இளவரசர் சம்பாபுரிக்குச் செல்வதாக இருந்தார். ஆனால் அந்நாளே அரசி அங்கே வந்துவிட்டார். அவருக்கு தீக்கனவு வந்து வருகுறி சொன்னது என்கிறார்கள். அவர்கள் அங்கிருப்பது நன்றாக ஆயிற்று. உடனே கிளம்பி இங்கு வர இயல்கிறது” என்று சுப்ரதர் தொடர்ந்தார். “சிவதருடன் இளவரசரும் அரசியும் கிளம்பிவிட்டதாக செய்தி வந்தது. அங்கிருந்து அவர்கள் வந்து சேர்வதற்கு இரவுப்பொழுது முழுதும் தேவையாகும்.” துரியோதனன் விழிப்பு கொண்டவனாக “நீர் யார்?” என்றான். சுப்ரதர் “நான் அங்கநாட்டின் சிற்றமைச்சனாகிய சுப்ரதன். விண்நிறைந்த அமைச்சர் உத்தானகரின் முதல் மைந்தன்” என்றார். துரியோதனன் அதை கேளாதவன்போல தலையசைத்தான். பின்னர் “ஹரிதர் வருகிறாரா?” என்றான். “இல்லை, அரசே. அவரே இப்போது சம்பாபுரியை ஆள்கிறார். சிவதருடன் அரசியும் இளவரசரும் வந்துகொண்டிருக்கிறார்கள்” என்றார். துரியோதனன் தலையசைத்தான். சிதையொருங்குவதை கைகளை நெஞ்சில் கட்டியபடி நோக்கி நின்றிருந்தான்.

அந்தத் தருணத்தின் இறுக்கம் சுப்ரதரை பதற்றம் கொள்ளச் செய்தது. அதை வெல்லும் பொருட்டு மீண்டும் பேசினார். “அறுசுவை அன்னங்களும் ஏழுவகை நறுமணங்களும் எட்டுவகை மங்கலங்களும் ஒன்பது அருமணிகளும் பத்துவகை மலர்களும் பன்னிருவகை விறகுகளும் பேரரசர்களின் சிதையில் வைக்கப்படவேண்டும் என்பது மரபு. நூல்களிலிருந்து ஆய்ந்து தேர்ந்து அனைத்தும் வந்தாகவேண்டும் என சிதையொருக்குபவர்களிடம் ஆணையிட்டேன். அவற்றில் பெரும்பாலானவை வந்துவிட்டன. எஞ்சியவை வந்துகொண்டிருக்கின்றன” என்றார். துரியோதனன் சிதையை இமையசையாது நோக்கியபடி நின்றதைக் கண்டபோது

அவனை அங்கிருந்து அகற்றிக் கொண்டுசெல்லவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதில் மானுடருக்கில்லாத ஓர் இயல்பு இருந்தது. மானுடரால் விளங்கிக்கொள்ள முடியாத எவ்வுணர்வும் அச்சமூட்டுவதே.

வெறுமனே பேசுவதற்காகவே அவர் தொடர்ந்து பேசினார். "விஷ்ணுகிராந்தி, அருகு, முயல்செவி, திருதாளி, செறுளை, நிலப்பனை, கைதோன்றி, பூவாம்குறுந்தல், மூக்குற்றி, உழிஞை என பத்து மலர்களை சொல்கிறார்கள். அவற்றை இவ்வேளையில் எங்கே தேடுவது என்று தெரியவில்லை. ஆனால் சிதைப்பணியாளன் கீர்த்திமான் அவற்றை வேதியர் சிலர் பறித்து நிழலில் உலரச்செய்து நீற்றில் இட்டு பாளையில் பொதிந்து பாதுகாத்து வைத்திருப்பதுண்டு என்றான். உடனே சென்று அவற்றை வாங்கிவரும்படி ஆணையிட்டேன். ஏழுபேர் சென்றிருக்கிறார்கள்" என்றார். "ஒன்பது அருமணிகளும் இங்கேயே இருந்தன. பன்னிரு விறகுகளும் இக்காட்டிலிருந்தே எடுக்கப்பட்டுவிட்டன." நெடுநேரமாக அவர் அங்கே பேசாமலேயே இருந்தார். பேசாதபோது சொற்கள் துளித்துளியாகத் தேங்கி அகம் எடைகொண்டுவிடுகிறது. அது சிறுநீர் கழிப்பதுபோலிருப்பதாக எண்ணி உளம் விலக்கிக்கொண்டார்.

அந்தப் பேச்சு விரிய விரிய அச்சூழல் அவருக்களித்த அனைத்து இறுக்கங்களிலிருந்தும் அவரை விடுவித்தது. தன் எண்ணங்கள் வெளியே சொற்களென வந்தபோது ஒழுங்கும் பொருளும் கொண்டிருந்ததை கண்டார். "எட்டு மங்கலங்கள் இடத்துக்கு இடம் வேறுபடுவன. அரண்மனை மங்கலங்கள் வேறு கான்மங்கலங்கள் வேறு. சுடலை மங்கலம் ஒன்று இருக்க இயலுமா? சுடலைக்கு ஏது மங்கலம்? ஆயினும்

மூதாதையர் எங்கும் இறைவனை கண்டவர்கள். அனைத்துமங்கலனாகிய இறை இல்லாத இடமில்லை எனத் தோன்றியது. ஆகவே மூத்த சுடலைப்பணியாளரை வரவழைத்து உசாவினேன். சிதைமங்கலங்கள் என எட்டு இருப்பது இப்போதுதான் தெரிந்தது. பேரரசர்களுக்கு மட்டுமே அவை வைக்கப்படுகின்றன" என்றார். "ருத்ரவிழிக்காய், சிதைச்சாம்பல், எருக்கமலர், புலித்தோல், மான்கொம்பு, மழு, உடுக்கை, திருவோட்டில் நன்னீர் என எட்டு என்பதை அறிந்தேன். அவை ஒருங்கிவிட்டன."

துரியோதனன் திரும்பி "அவர் உடல் எங்குள்ளது?" என்றான். அந்த நேரடி வினாவால் திகைத்த சுப்ரதர் "இங்கே... ஆனால் இங்கே இல்லை. அங்கே தெற்குமுனையில்... அங்கே சில சடங்குகள் எஞ்சியிருக்கின்றன" என்று பதறினார். "நான் அங்கே செல்லவேண்டும்" என்று துரியோதனன் சொன்னான். குரல் தணித்து, உடல் வளைத்து "அரசே, அங்கே மேலும் சில சடங்குகள் உள்ளன. அவை நிகழ்ந்துகொண்டிருக்கின்றன" என்று சுப்ரதர் சொன்னார். "பொதுவாக களம்பட்டவர்களை நீராட்டுவதும் புத்தாடை அணிவிப்பதும் வழக்கமில்லை. கவசங்களையும் படைக்கலங்களையும் மட்டுமே கழற்றுவார்கள். அணிகளின்றி படைக்கோலத்திலேயே அவர்கள் விண்ணேகுவார்கள். பேரரசர்களுக்கு மட்டுமே அணியாடைகளுடன் அரசகோலத்தில் சிதையேறும் முறை கடைபிடிக்கப்படுகிறது." துரியோதனன் "எங்கே?" என்றான். "வருக, காட்டுகிறேன்!" என்று சுப்ரதர் முன்னால் சென்றார்.

செல்லும்போதே "இவ்வண்ணம் முன்னரே அரசர் வந்து நோக்கும் முறைமை உண்டா எனத் தெரியவில்லை. வாழ்விலும் இறப்பிலும் அரசர்கள் முறைமைகளுக்கு

கட்டுப்பட்டவர்கள். ஓர் அரசர் பிறிதொருவரை சந்திப்பது எந்நிலையிலும் ஓர் அரசநிகழ்வு. நெறிநின்று இயற்றப்படவேண்டியது" என்றார். துரியோதனன் ஒன்றும் சொல்லாமல் நடக்க "இங்கே மூத்த அமைச்சர்கள் என எவருமில்லை. நான் மட்டுமே உள்ளேன். எனக்கு இத்தகைய தருணம் இதுவே முதல்முறை" என்றார். அதை கேளாதவனாக துரியோதனன் "அங்கா?" என கைசுட்டிக் காட்டினான். அங்கே குறுங்காட்டின் புதர்களுக்கு அப்பால் பந்தங்களின் வெளிச்சம் தெரிந்தது. புதர்களின் முட்கள் அந்தச் செவ்வொளியில் புதைந்தவைபோல் கூர்கொண்டு தெரிந்தன. "ஆம், அங்குதான்" என்றார் சுப்ரதர். "ஆனால் அங்கே தாங்கள் செல்ல முறைமை உண்டா எனத் தெரியவில்லை. நான் வேண்டுமென்றால் உசாவிவிட்டுச் சொல்கிறேன். அப்பால் அஸ்தினபுரியின் சிற்றமைச்சர் விகிர்தர் இருக்கிறார்."

அவர் சொற்களை செவிகொள்ளாமல் கனவிலென துரியோதனன் நடக்க அவர் பதறிய கால்களுடன் உடன் சென்றார். திரும்பி ஏவலனிடம் அரசர் அங்கே செல்வதை முன்னரே சென்று சொல்லும்படி கையசைவால் ஆணையிட்டார். ஒருங்கிக்கொண்டிருந்த சிதைகள் நடுவே சென்ற ஒற்றையடிப்பாதையில் துரியோதனன் நடந்தான். அத்திரிகளும் கழுதைகளும் சகடங்கள் ஒலிக்க மரக்கட்டை போட்டு உருவாக்கப்பட்ட பாதைகளினூடாக விறகுக்கட்டுகளைச் சுமந்து வந்துகொண்டிருந்தன. அப்பால் பெரிய பாதையில் வண்டிகளில் விறகும் அரக்குக்கட்டிகளும் வந்து இறங்கின. பணியாட்கள் எவரும் ஓசையெழுப்பவில்லை. ஆகவே அவர்களின் உடலசைவுகள் நிழலசைவுகளுடன் கலந்துவிட்டிருந்தன. அணுகும்போது அவர்களின் மூச்சுகளும் விலங்குகளின் இளைப்பாறல் ஓசைகளும் கலந்தொலித்தன.

கொய்தெடுக்கப்பட்ட தலைகளை பனையோலைகளில் கட்டி கொண்டுவருவதுபோல அரக்குப்பொதிகள் உளமயக்கு அளித்தன.

கால்தயங்கி துரியோதனன் நின்றான். அவன் மூச்சு இறுகுவதை உடலசைவாகவே காணமுடிந்தது. சுப்ரதர் "இங்குதான்..." என்றபின் அவன் நின்றுவிட்டதை அறிந்து தானும் நின்றார். அவன் அங்கேதான் நின்றான், ஆனால் பின்திரும்பிவிட்டவன்போல் உடலில் ஒரு நுண்ணசைவு வெளிப்பட்டது. "அரசே" என்றார் சுப்ரதர். அவன் அதை கேட்கவில்லை. அவர் "நான் சென்று பார்க்கிறேன். அணிசெய்யும் சடங்குகள் முழுமையடையவில்லை என்றால்..." என்றார். "தாங்கள் இப்போது சென்று பிறகு வரலாம். நான் செய்தியை அறிவிக்கிறேன்." ஆனால் துரியோதனன் மீண்டு அவரை பொருட்படுத்தாமல் முன்னால் சென்றான். "தாங்கள் சற்றே ஓய்வெடுத்தபின் வருவதற்குக்கூட பொழுதுள்ளது" என்றபடி சுப்ரதர் பின்னால் நடந்தார்.

குறுங்காட்டுக்குள் புதர்களை வெட்டி உருவாக்கப்பட்ட நீள்வடிவ முற்றத்தில் தரையில் மரவுரிமேல் வெண்பட்டு விரிக்கப்பட்டு அதில் கர்ணனின் உடல் படுக்கவைக்கப்பட்டிருந்தது. சுடலைப்பணியாளர் அவன் உடலை நறுமண நீரால் கழுவி அணிசெய்துகொண்டிருந்தார்கள். அவன் உடலில் பாய்ந்திருந்த அம்புகளைப் பிடுங்கி புண்களில் கஸ்தூரியும் கோரோசனையும் புனுகும் அரக்குடன் கலந்த பிசின் வைத்து மூடி வெண்பட்டுநாடாவால் கட்டி அதன்மேல் ஆடைகளை அணிவித்திருந்தனர். இருவர் இடையில் நீள்கச்சென சுற்றப்பட்ட பொன்னூல் பின்னிய வெண்பட்டாடையின்

முனைகளைப் பிடித்து அமைத்து பொன்னூசிகளைக் கொண்டு தைத்துக்கொண்டிருந்தனர். அவர்களின் கைத்தொடுகைக்கு அசைந்த அவன் உடலில் உயிர் இருப்பதுபோலத் தோன்றியது.

துரியோதனன் அவன் முகத்தை கூர்ந்து நோக்கிக்கொண்டு மெல்ல அருகணைந்தான். அவன் அருகே சென்றதும் சூழ அமர்ந்திருந்த அனைவரும் எழுந்தனர். நின்றிருந்தவர்களும் விலகினர். துரியோதனன் கர்ணனுடன் தனியாக என நின்றிருந்தான். பெரும்பாலும் கர்ணனுடன் தனித்திருக்கையில் அவன் உரையாடுவதில்லை. கர்ணன் மீசையை சுட்டுவிரலால் நீவி முறுக்கியபடி உடல்சரித்து கால்களை நீட்டி விழிசாய்த்து நிலம்நோக்கி அமர்ந்திருப்பான். கைகளை மார்பில் கட்டியபடி நேர்முன்னால் நோக்கியபடி அவன் சீர்நிலை கொண்ட உடலுடன் அமர்ந்திருப்பான். துச்சாதனன் அவர்களின் அமைதியை அறிவான். உள்ளே வந்ததும் தாழ்ந்த குரலில் "மூத்தவரே" என்பான். இருவரும் ஒரே கணம் இடம் மீள்வார்கள். "ஆம்" என்று துரியோதனன் சொல்வான். பின்னர் பேசத்தொடங்கும்போது இருவரும் ஒன்றையே எண்ணிக்கொண்டிருந்ததை அவன் உணர்வதுண்டு. சொல்லில்லா வெளியொன்றில் அவர்கள் பேசிக்கொண்டதைப்போல.

காற்றில் ஒளி அசைய கர்ணனின் முகம் உயிர்கொண்டு ஏதோ சொல்லெழுவதுபோல் உளம்திடுக்கிடச் செய்தது. விழிகள் மூடியிருந்தன என்றாலும் சற்றே விலகி வெண்பற்களின் கீழ்விளிம்புநிரையைக் காட்டிய உதடுகளில் புன்னகை இருப்பதாகத் தெரிந்தது. இறந்தவர்களின் உடல்களிலிருந்து உடனடியாக வெளியேறி உடலை வெறும் ஊன்பொதியாக மாற்றும் ஒன்று அவனிடம் தங்கிவிட்டதுபோலத் தோன்றியது.

அவன் இறந்த பின்னர் நாவிதர் அவன் முகத்தை மழித்திருந்தனர். பச்சைப்பாசி படர்ந்த கருங்கல் சிலை எனத் தெரிந்தன அவன் கன்னங்கள். பெருமல்லர்களுக்குரிய உறுதியான கழுத்திலும் விரிந்தகன்ற தோள்களிலும் வேர்நரம்பு கிளைவிரித்து இறங்கிய கைகளிலும் உயிரின் மிளிர்வு இருந்தது.

துரியோதனனால் விழிகளை விலக்க இயலவில்லை. என்ன கருமை என்னும் எண்ணம் எழுந்தது. மணிக்கருமை என அவனைப்பற்றி பாவலர் பாடுவதுண்டு. இருட்கனி என்றார் ஒரு தென்னகப் பாணர். அக்கருமையை அவன் எப்போதும் நோக்கி வியந்தது உண்டு. ஆனால் அப்போது மேலும் காரொளி கொண்டுவிட்டதுபோலிருந்தது அவன் உடல். கடுவெளியெங்கும் அணுவிடை விடாது நிறைந்திருக்கும் இருளின் வண்ணம் முழுத்துச் சொட்டிய துளி. இருள்வேழத்தின் விழி. அவன் சூதர்களின் சொற்களை தன்னுள் இருந்தென கேட்டுக்கொண்டிருந்தான். கர்ணன் சம்பாபுரியின் அரண்மனையில் அமர்ந்திருந்தான். "ஆரா அழகென்பது அமைந்த நீளுடல். அள்ளி வழங்கி வேள்விக் கனல்கொண்ட விரி கைகள்!" அவன் முன் அமர்ந்து பாணன் பாடிக்கொண்டிருந்தான். "பொன்னொளிர் நெஞ்சே உன் கவசமென்றாகியது" அவன் மெல்லிய விதிர்ப்பை உணர்ந்தான். கர்ணனின் மார்பில் அவன் அனல்பரப்பென சுடர்கொண்டிருந்த பொற்கவசத்தைக் கண்டான்.

வெண்முரசு விவாதங்கள்

இருட்கனி - 3

ஓசை கேட்டு துரியோதனன் திரும்பிப்பார்த்தான். அப்பால் மண்சாலையில் வந்துநின்ற அத்திரிகள் இழுத்த வண்டியிலிருந்து இறக்கி செவிவளையங்களுக்குள் மூங்கில் செருகி நான்கு பணியாளர்களால் தூக்கிவரப்பட்ட பெரிய மரப்பெட்டியில் அங்கநாட்டின் எழுகதிர் முத்திரை இருந்தது. சுப்ரதர் "நல்லவேளையாக அரசர் வரும்போதே தனது அணிகளை எல்லாம் கொண்டுவந்திருந்தார். இல்லையேல் அவற்றை சம்பாபுரியிலிருந்து கொண்டுவரவேண்டியிருந்திருக்கும்" என்றபின் அதிலிருந்த பொருந்தாமையை உணர்ந்து "ஆனால் அது இயல்வதல்ல. அரசரே கொண்டுவந்திருந்தமையால்..." என்றபின் அது மேலும் பொருத்தமல்லாமல் ஆவதை உணர்ந்து நிறுத்திக்கொண்டார். அந்த சொல்லாச்சொல்லின் தவிப்பு வெளிப்பட்ட உடலுடன் மேலாடையை சீரமைத்துக்கொண்டார்.

பெட்டியை இறக்கி வைத்ததும் பணியாளர் விலகி நின்றனர். உடன்வந்த காவலர்தலைவன் சுப்ரதரை நோக்கி வந்து தலைவணங்கினான். அவன் அளித்த தாழ்க்கோலை வாங்கிய சுப்ரதர் விழிகளை மூடிக்கொண்டு அதன் தண்டை கைகளால் வருடி அதன் முழைகளையும் புள்ளிப்பள்ளங்களையும் கொண்டு கணக்கிட்டு அதன் திறவுநெறியை உணர்ந்து விரலால் எண்ணி அதை கணக்கிட்டு தாழ்துளைக்குள் செலுத்தி முன்னும் பின்னும் என ஏழுமுறை வெவ்வேறு திசைகளில் சுழற்றி அதை திறந்தார். அதன் உட்புறம் செம்பட்டு வேய்ந்திருந்தது. மென்மரத்தாலான பகுப்புகளுக்குள் வெவ்வேறு பெட்டிகள் இருந்தன. உள்ளிருந்து தங்கத்தகடு வேய்ந்த அணிமூடியிட்ட வெள்ளிப்பெட்டிகளை வெளியே எடுத்து வைத்தார். அனைத்தும் அங்கநாட்டின் எழுகதிர்

முத்திரை கொண்டிருந்தன. ஒவ்வொன்றாக அவற்றின் மேல் இருந்த முழைகளையும் பள்ளங்களையும் தொட்டு எண்ணி அதன்படி தாழ் சுழற்றித் திறந்தார்.

உள்ளிருந்து அருமணிகள் பதிக்கப்பட்ட நகைகளை எடுத்து வெளியே விரிக்கப்பட்ட வெண்பட்டின்மேல் வைத்தார். செவ்வைரங்கள் பந்தச்செம்மையில் நிறமிலா விண்மீன்கள் எனவும் செங்குருதித்துளிகள் எனவும் மாறிமாறி விழிமாயம் காட்டின. அவை வைக்கப்பட்டபோது எழுந்த மெல்லிய குலுங்கல் ஒலி உலுக்கும் கூர் கொண்டிருந்தது. நாகக்குழவியின் நச்சுப்பல் என. அங்கிருந்த அனைவரின் விழிகளும் உணர்வுமாற்றம் கொண்டன. அது இடுகளம் என்பதை, சிதைகாத்துக்கிடப்பவன் அரசன் என்பதை, நோக்கி நிற்பவன் பேரரசன் என்பதை முற்றாக மறந்து பெருஞ்செல்வத்தில் குடிகொள்ளும் இருள்தெய்வங்களால் அவர்கள் முற்றாக ஆட்கொள்ளப்பட்டார்கள். வாய்க்குள் எண்ணியபடி அணிகளை எடுத்துவைத்துக்கொண்டிருந்த சுப்ரதர் தன்னைச் சூழ்ந்திருந்த நோக்குகளை உடலால் உணர்ந்து திடுக்கிட்டு மேலே நோக்கி ஏவலன் ஒருவனின் விழிகளை சந்தித்து திகைத்தார். விழிகளைச் சுழற்றி அத்தனை நோக்குகளையும் சந்தித்து அவையனைத்தும் ஒன்றுபோலிருப்பதை கண்டார். நூறு விழிகளுடன் கொடுந்தெய்வமொன்று எழுந்தருளியிருப்பதாக.

அச்சம் குளிர் என அவரை மெய்ப்புகொள்ளச் செய்தது. முதலில் அங்கிருந்து எழுந்து ஓடவே விழைந்தார். அதுவரை இயல்பாக தன் கைகளால் அந்த அருமணிகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்தவர் அவை விரல்களிலிருந்து நழுவுவதை, வியர்வைகொண்டு தன் கை நடுங்குவதை தாடை

இறுகி பற்கள் கிட்டித்திருப்பதை உணர்ந்தார். மூச்சை இழுத்து சீர்ப்படுத்தி விட்டார். நழுவிய மேலாடையை இழுத்துவிட்ட அசைவு அவரை நிலைமீளச் செய்தது. அங்கிருந்து எழுந்து விலகிவிட வேண்டும், மீளநோக்காமல் சென்றுவிடவேண்டும் என்று மட்டும்தான் அவருடைய உள்ளம் ஏங்கியது. பின்னர் மீண்டும் நிமிர்ந்து அவ்விழிகளை நோக்கினார். இம்முறை அச்சமும் தயக்கமும் இன்றி ஒவ்வொரு நோக்காக சந்தித்தார். அவர் நோக்குவதையே அவை அறியவில்லை. நாகநஞ்சு ஏற்று உயிர்பிரியும் கணத்தில் இருப்பவர்கள்போல விழி வெறித்து தசைகள் இழுபட்டு நகைப்பென ஓர் சுளிப்பு முகத்தில் தோன்ற நின்றிருந்தனர். அவர் நீள்மூச்சுடன் தன்னை எளிதாக்கிக் கொண்டார்.

நூற்றெட்டு ஒளிர்வைரங்கள் கொண்ட தோளிலையை எடுத்து வைத்தபோதுதான் அவர் ஒன்றை உணர்ந்தார். ஒருகணம்கூட அந்த அணிகள் தனக்கு எவ்வகையிலும் ஈர்ப்பை அளிக்கவில்லை. உள்ளத்தால்கூட அவர் அவற்றை அணிந்து நோக்கவில்லை. உறைகனவின் ஆழம்கூட அவற்றை உரிமைகொள்ளவில்லை. அவை அவர் நோக்கில் கல்லுக்கும் சோழிகளுக்கும் நிகரான வெற்றுப்பொருட்களாகவே தோன்றின. அவற்றை மீண்டும் எடுக்கையில் கூர்ந்து நோக்கினார். அவை அழகென்றும் தெரியவில்லை. மலர்களையும் இலைகளையும் அழகிய கூழாங்கற்களையும் வடிவமாற்று செய்யமுயன்றவைபோல, அவ்வழகை அடையாமல் நகைப்புக்குரியனவாகவே நின்றுவிட்டவைபோலத்தான் தோன்றின. இவர்கள் எதை காண்கிறார்கள்? நானறியா தெய்வமொன்றால் ஆட்கொள்ளப்பட்டுவிட்டார்களா? அந்த தெய்வத்திடமிருந்து என்னைக் காப்பது எது? என் முப்புரி நூலா? நான் பெற்ற மந்தண காயத்ரியா?

இளமையில் இணையகவை கொண்ட சிறுவர்கள் ஆற்றில் நீந்திவிளையாடி, வில்பயின்று கானாடி மகிழ்ந்திருக்கையில் சுவடிகளுடன் நூல்நவிலச் செல்லநேர்ந்ததை எண்ணி அவர் வருந்தியதுண்டு. ஆகவே உளமூன்றி கற்கவில்லை. கற்றவை உரியபோது நினைவில் மீளவுமில்லை. அவர் தன் ஆழுள்ளத்தில் சம்பாபுரியிலிருந்து தப்பி ஓடி ஒரு வணிகனாக அலைவதைப் பற்றி, ஷத்ரியனாக வில்லும் வேலும் பயின்று விளையாடி வாழ்வதைப் பற்றி கனவு கண்டார். தந்தை அவரை அரண்மனைப்பணிக்கு சேர்த்துவிட்டார். ஆனால் அவர் அமைச்சுத்தொழிலை விரும்பிச் செய்யவில்லை. சொற்கள் உரியவகையில் நாவிலெழவில்லை. ஆற்றவேண்டிய அனைத்தும் அரை மாத்திரை பிந்தியே நெஞ்சில் தோன்றின. ஆகவே அவர் முந்தைய முதன்மை அமைச்சரின் மைந்தராக இருந்தும் அவருக்கு உரிய இடம் அமையவுமில்லை. அரண்மனையிலும் அந்தணர் மன்றிலும் இளிவரலுக்குரியவராகவே அவர் எஞ்சினார்.

ஒருமுறை அவர் தந்தை நீராடச் செல்லும் வழியில் அவர் உள்ளத்தை உணர்ந்தவராக அணுக்கமுறப் பேசினார். "தன்னை யானை என்று உணர்வதே அந்தணர் அடையவேண்டிய முதல் புரிதல் என்று உணர்க!" என்றார். அவர் எண்ணியிராமல் பேசத்தொடங்கியமையால் சுப்ரதர் திகைத்து நோக்கினார். அவர் கூற வருவதென்ன என்று அவருக்கு புரியவில்லை. தந்தை "காட்டின் முதன்மை ஆற்றலை கொண்டிருந்தாலும் யானைக்கு எவரையும் கொன்றே வாழவேண்டும் என்னும் ஊழ் இல்லை. காட்டையே உண்ணமுடியும் என்பதனால் வேட்டையாடும் பொறுப்பும் அதற்கில்லை" என்றார். "பழிகொள்ளாது வாழ இயலுமென்னும் வாழ்வைப்போல் பிறவிக்கொடை ஏதுமில்லை, மைந்தா. சினமும் வஞ்சமும் விழைவும்

கொள்ளாது வாழும் வாய்ப்புள்ளவன் அந்தணன். ஆகவே அவற்றை அடையும் அந்தணன் பெரும்பழி சேர்த்துக்கொள்வான் என்று உணர்க!" அவர் "நான் அவ்வாறு..." என முனக தந்தை அவர் தலையைத் தொட்டு "நீ அவ்வாறு என நான் கூறவில்லை. நீ நினைவுகொள்வதற்கான சொல் இது. என்றேனும் உன் முன் இது முளைத்தெழுந்து நிற்கும்" என்றார்.

அவர் தந்தையின் தொடுகையால் மெய்ப்பு கொண்டார். அவரை தந்தை தொட்டுப்பேசிய அரிய தருணங்களில் ஒன்று அது. தொட்ட கணங்கள் எவற்றையும் அவர் மறக்கவில்லை. மறக்காதிருக்கும்பொருட்டே அவர் தொட்டார் போலும். "கேள் மைந்தா, விழைந்தும் அடைந்தும் வைசியரும் ஷத்ரியரும் வாழ்வை அறிகிறார்கள். துறந்தும் கடந்தும் அந்தணன் அறிகிறான். பத்து கைகளால் கைலாயத்தை வேர்கெல்லி தூக்கிய ராவணமகாப்பிரபுவே ஆனாலும் வாழ்நாளெல்லாம் வென்றெடுக்கக்கூடுவன சிறிதே. துறப்பவனோ ஒற்றைச் சொல்லால் இவ்வுலகையே அகற்றிவிடலாம். வெல்வதற்கு மிகமிக எளிய வழி இது. ஒருநாள் நீ அதை உணர்வாய்!" அருகிருந்து அக்கணத்தில் சொன்னதுபோல் அச்சொற்கள் நினைவிலெழ தந்தையை எண்ணி சுப்ரதர் உளம்பணிந்தார். "ஆம், அந்தணன் என பிறக்கும் நல்லூழ் எனக்கு அமைந்தது" என்று எண்ணியபடி எழுந்தபோது அவர் உடலும் முகமும் மாறிவிட்டிருந்தன. காவலர்தலைவனிடம் "அணியர் வந்துள்ளனரா?" என்றார். அவ்வினாவின் தன்மையால் அனைவரும் அறுபட்டு நிலம் மீண்டனர். இருள் கரிய திரையென அறுந்துவிழுந்தமைவதுபோல அங்கே எழுந்திருந்த தெய்வம் அகன்றது.

காவலர்தலைவன் புதிய பணிவுடன் “வந்துள்ளனர், அடிகளே. அங்கே காத்து நின்றிருக்கின்றனர்” என்றான். “அவர்களை வரச்சொல்க... அரசரை அவர்கள் அணிசெய்யட்டும். அவர் உயிருடன் அணிகொள்ளும்போது சொல்லப்படும் அனைத்து முறைச்சொற்களும் உரைக்கப்படவேண்டும். அனைத்து ஒப்புதல்களும் பெறப்படவேண்டும். அரியணையில் அவைக்கொலு கொண்டு அமர்ந்திருக்கும் முழுதணித் தோற்றம் அமையட்டும். வழக்கமாக கண்ணேறு தவிர்ப்பதற்காக வைக்கப்படும் அணிக்குறை தேவையில்லை. அணிமுழுமை நிகழ்க!” என்றார். அவர்கள் ஓசையின்றி தலைவணங்கி விலகினர். பிறர் அங்குள்ள பணிகளில் ஈடுபடலாயினர். சுப்ரதர் துரியோதனனிடம் “அரசே, நெறிகளின்படி இறந்தவர்களின் முகங்களை கூர்ந்து நோக்கலாகாது. அத்துடன் இங்கே அரசர் அணிசெய்துகொள்ளும்போது பிறர் உடனிருப்பதும் முறையல்ல. தாங்கள் உடனே இங்கிருந்து செல்லவேண்டும்” என்றார்.

அவருடைய குரலில் இருந்த ஆணை துரியோதனனை உளம்மாறச் செய்தது. “நான் இங்கிருக்க விழைகிறேன், அமைச்சரே... அங்கருடன் நானும் இருந்தாகவேண்டும்” என்றான். சுப்ரதர் “நீங்கள் இங்கே அரசர் என நோக்கி நிற்கலாகாது... அதற்கு என் ஒப்புதல் இல்லை” என்றார். துரியோதனன் மன்றாட்டாக “என்னால் இங்கிருந்து விலகிச்செல்ல இயலாது. நான் அங்கிருக்க இயலாதவனாக இங்கே வந்தேன்” என்றான். ஒருகணம் சுப்ரதர் தயங்கினார். துரியோதனன் மேலும் நெகிழ்ந்த குரலில் “உங்கள் அறிவின் கனிவைக் கொண்டு எனக்கு ஒரு வழிகாட்டுக, அந்தணரே!” என்றான். சுப்ரதர் சற்று விழிதாழ்த்தி எண்ணியபின் “ஆம்” என்றார். “அந்தணன் நெறிகளை உணர்வுகளால்

மதிப்பிடவேண்டியவன் என்பார் என் தந்தை" என்று சொல்லி அப்பால் நோக்கினார். அங்கே எவரையோ பார்ப்பவர்போல. பின்னர் "உங்கள் அரசக் கணையாழியை கழற்றி என்னிடம் அளித்துவிட்டு இங்கே அமர்க! ஏவலனாக அரசருக்கு நீங்களும் அணியும் ஆடையும் சூட்டுக! அது முறையே" என்றார். "ஆம், அவ்வாறே" என்று பரபரப்புடன் சொன்ன துரியோதனன் அரசக்கணையாழியை கழற்றி நீட்டினான்.

"அதை நிலத்தில் இடுக! நான் அதை பெற்றுக்கொள்ளலாகாது" என்றார் சுப்ரதர். துரியோதனன் அதை நிலத்தில் இட அவர் அதை எடுத்துக்கொண்டார். தன் இடைக்கச்சையில் அதை சுருட்டி இறுக்கிக் கட்டியபின் "செய்க!" என்றார். பின்னர் அப்பால் வந்துகொண்டிருந்த வண்டிகளை நோக்கி கைவீசி ஆணையிட்டபடி விலகிச் சென்றார்.

சுப்ரதர் திரும்பிச்சென்றதும் துரியோதனன் கைகால்கள் பதற கால்மடித்து அமர்ந்தான். "நான் என்ன செய்யவேண்டும், பணியாளர்தலைவரே?" என்றான். "அணியர்கள் வருகிறார்கள்" என்றார் பணியாளர் தலைவர். அப்பாலிருந்து ஏழு அணியர்கள் முதிய அணியர் தலைமையில் வந்து முதலில் கர்ணனை பணிந்தபின் துரியோதனனிடம் தலைவணங்கினர். "நான் அரசக்கணையாழி களைந்து அணியனாக இங்கு அமர்ந்துள்ளேன். நான் செய்யவேண்டுவதென்ன?" என்றான் துரியோதனன். முதிய அணியர் "அரசருக்குரிய அணிகளை நாங்கள் அணிவிக்கிறோம். அரசர் முன்னர் எவ்வண்ணம் அவற்றை அணிந்திருந்தாரோ அவ்வாறு. ஒவ்வொன்றும் எங்கனம் எங்கே இருக்கவேண்டும் என அவருக்கு எண்ணங்கள் இருந்தன, அதற்குரிய ஆணைகளும் எங்களுக்குண்டு" என்றார்.

துரியோதனன் தயங்க அணியர்தலைவர் "நீங்கள் விழைந்தவாறு அணிவியுங்கள். ஒவ்வாதன உண்டு என்றால் நாங்களே கூறுகிறோம்" என்றார்.

துரியோதனன் நடுங்கும் கையை நீட்டி ஒரு கங்கணத்தை எடுத்தான். கர்ணனின் கையை மெல்லப்பற்றி தூக்கி அதை அணிவிக்க முயன்றான். அவன் கையை துரியோதனன் தன் இரு கைகளாலும்தான் தூக்கமுடிந்தது. கர்ணனின் கை மிகப் பெரியதென அவன் அறிந்திருந்தான். எடையாலும் அளவாலும் அவன் பீமனைவிடவும் பெரியவன். ஆனால் அவனுடைய உயரம் அதை மறைத்துவிட்டிருந்தது. எப்போதேனும் கதையை தூக்கிச் சுழற்றும்போது மட்டும்தான் அவன் பேருடலன் என்பது நினைவை அறையும். இளம் அணியர்கள் இருவர் தங்கள் கைகளால் கர்ணனின் கையை தூக்கிக்கொள்ள துரியோதனன் அந்தக் கங்கணத்தை மணிக்கட்டைச் சுற்றி கட்டி அதன் ஆணியை திருகிச் செலுத்தி இறுக்கினான். கையை மீண்டும் நிலத்தில் வைத்தபோது அவன் உள்ளம் அது உடனே எழுந்து வந்து தன்னைத் தொடும் என அறியாமலேயே எதிர்பார்த்தது. பின்னர் அவன் நெஞ்சு உடையுமளவுக்கு ஏக்கம் கொண்டான். ஆனால் விழிகள் நீர்கொள்ளவில்லை. உடலில் எந்த மெய்ப்பாடும் எழவில்லை. உதடுகள் மட்டும் அழுந்தி இறுகியிருந்தன.

"அரசே" என்றான் அணியன். அவனிடமிருந்து அனல்துளி சூடிய கணையாழி ஒன்றை வாங்கியபின் துரியோதனன் கர்ணனை நோக்கிக்கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தான். தன் கையில் அக்கணையாழி நீட்டி நின்றிருப்பதை உணர்ந்து விழிப்புகொண்டு அதை அணிவிக்க நீட்டி பின் தழைத்துக்கொண்டான். அதை கர்ணனுக்கு அணிவிக்க

தன்னால் இயலாது என்று தோன்றியது. எழுந்து விலகிச்செல்லவேண்டும் என எண்ணினான். ஆனால் வேறெவரோ உள்ளிருந்து உந்தியதுபோல மீண்டும் கணையாழியை நீட்டி கர்ணனின் விரலில் அணிவித்தான். அவன் விரல்கள் உருண்டு நீண்டு கருநாகக் குழவிகள் போலிருந்தன. அவன் நோக்கை திருப்பிக்கொண்டு விரல்களில் அதை சுழற்றிச் செலுத்தினான். பெருமூச்சுடன் தளர்ந்து கைகள் நிலத்தில் விழுந்து நிலைகொள்ள அமர்ந்திருந்தான்.

அணியர்கள் "அரசே, கணையாழி" என்றும் "செம்மலர் கங்கணம், அரசே" என்றும் "சிறுபூ சுட்டி அணிவிக்கலாம் அல்லவா?" என்றும் கர்ணனிடம் வழக்கம்போல சொல்லாடியபடி அணிசெய்துகொண்டிருந்தார்கள். கர்ணனின் உடல் களமுற்றத்தில் வண்ணப்பொடிகளால் ஓவியம் உருவாகி வருவதுபோல் அணிதிரண்டுகொண்டிருந்தது. கால்களில் கழல். கால்விரல்களில் ஆழிகள். தொடைச்செறி. இடையில் சல்லடம். கச்சை. அதன்மேல் குறங்குசெறி. மார்பில் ஆரங்கள். மாலைகள். தோள்வளைகள். தோளிலைகள். கங்கணங்கள். வளைகள். கணையாழிகள். அவன் மீண்டும் கர்ணனின் முகத்தை பார்த்தான். எப்போதும் அவன் அவையில் அங்கிருப்பதுபோலவும் அகன்றுநிலைகொள்வதுபோலவும் அறிந்ததுபோலவும் ஆர்வமற்றதுபோலவும் காட்டி அமர்ந்திருக்கும் அதே முகம். அவன் பிறிதொரு கணையாழியை எடுத்தான். அதை அணிவிக்கையில் உள்ளூர மெல்லிய உவகை ஒன்று எழுந்தது. அவன் அவ்வாறு கர்ணனை தடையிலாது தொட்டதில்லை. தொடுக என்னும் ஆணையுடன் அவ்வுடல் அங்கே கிடந்தது.

அகவை முதிர்ந்த பின்னர் அவன் கர்ணனை இயல்பாக தொடுவதே இல்லை. அறியாமல் தொடும்போது அத்தொடுகையை சற்றே நீட்டிப்பது வழக்கம். அது இயல்பான நீட்டிப்பல்ல என இருவரும் அறிந்திருந்தார்கள். மீதூரும் உணர்ச்சிகளின்போது சிலமுறை பாய்ந்து தழுவிக்கொண்டதுண்டு. அவ்வண்ணம் களிப்போ துயரோ எல்லை கடக்கையில் அருகிருப்பவர்களில் கர்ணனை நோக்கியே அவன் எப்போதும் பாய்வான். தழுவி இறுக்கி கூச்சலிட்டுச் சிரித்து தோள்களில் அறைந்து கொண்டாடிக்கொண்டிருக்கையில் ஒருகணம் இருவரும் ஒருவரை ஒருவர் உணர்ந்து நாணுற்று விலகிக்கொள்வார்கள். பின்னர் ஒருவரை ஒருவர் நோக்குவதை, நேர்ச்சொல் எடுப்பதை தவிர்ப்பார்கள். அவர்கள் தொட்டுக்கொள்ளும் நாளில் தம்பியர் உவகைக்கூச்சலிடுவார்கள். அன்று முழுக்க அரண்மனையில் களிக்கொந்தளிப்பு நிறைந்திருக்கும்.

அவன் அன்று முழுமைக்கும் பிறிதொருவனாக இருப்பான். இரவில் மஞ்சத்தில் படுத்து துயிலுக்கு உடல் தளர்த்திக்கொள்ளும்போதுதான் தன் முகத்தசைகள் புன்னகையில் விரிந்து உதடுகள் நீண்டிருப்பதை உணர்வான். அகல்சுடர் அணைப்பதுபோல முகத்திலிருந்து அப்புன்னகையை அவிப்பான். அதன் ஒளி உள்ளத்தில் நிறைந்திருக்கும். துயில் வந்தமரும் இமைகளுக்கு அப்பால் அவ்வொளியை அவன் நோக்கிக்கொண்டிருப்பான். மறுநாள் ஆழத்திலிருந்து எழுந்து வரும் முதல் எண்ணமாக அந்தப் புன்னகையே இருப்பதை எண்ணி வியப்பான். அந்த நாளை சித்தத்தில் ஓட்டியபடி அவன் படுத்திருப்பான். பானுமதியை நாடாத நாட்களில் அவன் தம்பியருடன் துயில்வதே வழக்கம். அகவை கடந்த பின்னர் அவன் அகத்தளம் செல்வது மாதமொருமுறையே

என்றாயிற்று. அவன் எழுவதற்கு முன்னரே துச்சாதனன் எழுந்து அவனுக்கு அருகே காத்து நின்றிருப்பான். அருகே ஏவலர் நறுமணநீரும் வாய்மணமும் மரவுரிகளுமாக காத்திருப்பார்கள். துச்சாதனனின் முகத்தில் அவன் தன் புன்னகையை காண்பான். அவன் முகத்தை தன் ஆடிப்பாவை என்றே அவன் உணர்வதுண்டு.

கர்ணனுக்கு அவன் அணிவித்த அத்தனை நகைகளும் உரிய இடத்திலேயே சென்றமைந்தன. ஒருமுறைகூட அணியர் மாற்று சொல்லவில்லை. அவன் கர்ணனை முழுதணிக்கோலத்தில் சிலமுறையே நோக்கியிருந்தான். நோக்குகையில்கூட விழியூன்றியதில்லை. அது பிழையென எண்ணுபவன்போல ஒருகணம் நோக்கிவிட்டு திரும்பிக்கொள்வான். பானுமதி அவன் கையைப் பற்றி "நன்கு விழிநட்டு நோக்குங்கள். எவரும் குறைசொல்லப்போவதில்லை. மண்ணில் கதிரோன் எழுந்ததுபோல் பேரழகு கொண்டிருக்கிறார் அங்கர்" என்பாள். அவன் கையை விடுவித்துக்கொண்டு வேறுபக்கம் நோக்குவான். ஆனால் அவன் அணிகள் அனைத்தையும் உள்ளம் அறிந்திருக்கிறது. அவ்வண்ணம் அவனை விருஷாலிகூட நோக்கியிருப்பாளா?

தலையணிகள், குண்டலங்கள் என கர்ணன் அணிகொண்டபடியே இருந்தான். நோக்கியிருக்கவே அவன் விண்ணிலிருந்து இழிந்த தேவன் என மாறினான். துரியோதனன் எழுந்து விரல்களைக் கோட்டி முறித்தபடி கர்ணனை நோக்கினான். சற்றுமுன் அவன் கண்ட அந்த செம்பொற்கவசம் அந்த அணிகளால் மறைக்கப்பட்டிருக்கிறதா? அணிப்பெட்டியுடன் சகடம் வந்து நின்ற ஒலி கேட்டு அவன் சற்று விழிதிருப்பியதும் அது புதர்களினூடாக வந்து விழுந்த

செவ்வொளியாக மாறியது. அதை பார்த்தோமா விழிமயக்கா என அவன் திகைத்து நின்றிருந்தபோது அப்பால் சென்ற வண்டிகளால் ஒளி மறைக்கப்பட்டது. நோக்கின் சரடால் கட்டப்பட்டிருந்த விழிகள் விடுபட்டன. அவன் நீள்மூச்செறிந்தபடி தன் உடலை எளிதாக்கிக்கொண்டான். "இன்னும் சில அணிகள் உள்ளன, சுயோதனரே" என்றார் அணியர். துரியோதனன் தலையசைத்தான்.

சிறிய பவள மணி ஒன்றை எடுத்தபடி அணியர் "ஒப்புநோக்க சிறியவை இவ்வணிகள். பெரும்பாலும் இவற்றை எவரும் நோக்குவதில்லை. ஆகவே எளிய அணியர் இவற்றை உளம் கூராமல் ஒத்திசைவு கூடாமல் அணிவித்துவிடுவதுண்டு. அணியர்களாகிய நாங்கள் இன்னொரு அணியரின் கைத்திறன் நோக்குகையில் முதலில் இதைத்தான் பார்ப்போம்" என்றார். "விண்ணில் தேவர்களிலும் விழிக்கூர் கொண்ட அணியர்கள் இருக்கக் கூடும்" என்றார் இன்னொரு அணியர். முதிய அணியர் புன்னகை செய்து "அணியர்களின் தேவர்கள் அங்கிருப்பார்கள். முழுதணிக்கோலத்தில் எழுந்தருள்பவர்களை வரவேற்பதற்காக அவர்கள் வந்து நின்றிருப்பார்கள்" என்றார். "இங்கே கலை தகைந்து விண்புகுந்து தேவர்களான நம் முன்னோர்கள் அவர்கள்."

கர்ணனுக்கு வழக்கமாக அணிசெய்பவர்கள் அவர்கள். அவன் களம்பட்ட துயர்தான் அவர்கள் வரும்போது முகங்களில் நிறைந்திருந்தது. வழிதோறும் அழுதமையால் விழிகள் சிவந்து இமைகள் தடித்திருந்தன. முகம் வீங்கி உதடுகள் கருமைகொண்டு நோயுற்றவர்போல் தோன்றினர். முதலில் அணிகளை எடுத்து வைத்தபோது அவர்களின் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. ஆனால் அணிக்கலை வழியாக

அவர்கள் பிறிதொருவரானார்கள். அதன் முழுமையை அன்றி பிறிதெதையும் அவர்கள் அப்போது அறியவில்லை. "நாமும் விண்ணேகுவது உறுதி" என்றார் இளைய அணியர். "அணிசெய்வது எவருக்கும் ஆகும். அணிகள் சென்று பொருந்தும் பேரழகு கொண்ட உடலர் அமைவது அரிதினும் அரிது. அங்கர் தேவர்கள் மண்ணில் நிகழ்ந்த தோற்றம் கொண்டவர். ஒவ்வொரு அணியும் அதை யாத்தவர் எண்ணியதென்ன என்பதைக் காட்டுவது அவரில் அமைகையிலேயே."

"அணியோடு அணிசேர்ந்து ஒற்றை அணியென்றாவதே அணிமுழுமை. ஒவ்வொரு அணியிலும் பிறிதொரு அணி சென்றுசேரும் ஓர் இடம் உள்ளது. ஒவ்வொரு அணியும் பிறிதொன்றுடன் இணைந்து மேலும் பெரிய அணியொன்றை அமைக்கிறது. அமைவதற்குரிய இடம் ஒன்றே. அணிகளின் மாயம் என்னவென்றால் எங்கு அமைந்தாலும் அழகென்றே அவை காட்டும். உகந்த இடத்தில் அமைந்தாலொழிய முழுமைகொள்ளாது. சுயோதனரே, அணி என்பது முழுமைக்கு ஒரு அணுவிடை மட்டும் முன்னரே நின்றுவிட்ட அழகுப்பொருள்" என்றார் அணியர். "அணிமுழுமை என்பது பொருள்களினூடாக பொருளுக்கு அப்பாற்பட்ட ஒன்றைச் சென்று தொடுவது. பொருட்களனைத்தையும் அது பொருளல்லாமல் ஆக்கிவிடுவது. அது இங்கு நிகழும். ஆணழகின் முழுமைகொண்ட உடல். அவருக்கு குறை இன்றி அணிபூட்ட வாய்ப்பு. தெய்வங்களின் தருணம் இது."

அச்சொற்கள் துரியோதனனை ஆறுதல்படுத்தின. அவனே அதை விந்தையாக உணர்ந்தான். இறுதி ஆழி ஒன்றை எடுத்த அணியர் "தெய்வங்களே" என்றார். பின்னர் கண்களை மூடியபடி

கைநீட்டி அதை கைபோனபோக்கில் அணிவித்தார். "என்ன?" என்று துரியோதனன் கேட்டான். "ஓர் அணிகலனை அவ்வாறு கைபோனபடி கண்நோக்காது அணிவிக்கவேண்டும் என்பது நெறி. அதை தெய்வங்கள் ஆற்றவேண்டும். அதுவும் அணிப்பிழை இன்றி அமையவேண்டும்." அவர் கர்ணனை நோக்கிபடி சிலகணங்கள் விழிநிலைத்தபின் நீள்மூச்செறிந்து "ஆனால் அணிநிறைவு கொண்டது என்றால் அந்த ஆழி எங்கு சென்று அமைந்தாலும் அது உரிய இடமாகவே இருக்கும்" என்றார்.

"பிழையுண்டோ என நோக்குக!" என மூத்த அணியர் இளையோருக்கு ஆணையிட்டார். அவர்கள் பேசாமல் விழிநட்டு நின்றனர். "எஞ்சுவதென்ன?" என்று அவர் மீண்டும் கேட்டார். "நெட்டிமுறிப்பதற்குள் நோக்குவதே கணக்கு. தெய்வங்களிடம் ஒப்படைத்துவிட்டால் பின் இக்கலை நம்முடையதல்ல." அணியர் ஒன்றும் சொல்லவில்லை. "ஒன்றுமில்லையா?" என்றார் முதிய அணியர். மூச்சொலியுடன் கலைந்த இளையோன் ஒருவன் "எவரும் முழுதும் நோக்கவில்லை, ஆசிரியரே. ஒன்று நோக்க அதுவே விழிமுன் திகழ்கிறது. இவ்வழகை நோக்கி முடிக்க எவர் விழிக்கும் இயலாது" என்றான். "நான் ஒரு கணையாழியை மட்டுமே நோக்கினேன். அதுகொண்டிருக்கும் அக்குழைவுக்கு அப்பால் இனி இப்புவியில் நான் நோக்கி மகிழ வேறேதுமில்லை."

"அவ்வண்ணமென்றால் நிறைவுறுக!" என்றார் அணியர். கைகளைச் சேர்த்து நெட்டிமுறித்து "நிறைவுறுக! தெய்வங்கள் இவ்வழகை தான்கொள்க! மூத்தோர் மகிழ்க! தேவர்கள் மகிழ்க! இப்புவியில் அழகென எழுந்த அனைத்தும் மகிழ்க! ஆம் அவ்வாறே ஆகுக!" என்றார். அவர் விரல் எலும்புகளின் ஓசை

தெளிவாகக் கேட்டது. கைகளை கால்முட்டில் ஊன்றி மெல்ல எழுந்து "தெய்வங்களே" என்றார். பின்னர் தன் கையை மும்முறை விரித்துக்காட்டி "இது என் முழுமை. இனி இக்கலை என் கைகளுக்கு இல்லை. அறிக தெய்வங்கள்" என்றார். "ஆம்! ஆம்! ஆம்!" என்று அவர் மாணவர்கள் கூவினர். பின்னர் அவர்கள் அனைவருமே மும்முறை விரல்விரித்து தங்கள் கலையை கையொழிந்தனர்.

கர்ணனை நோக்கி நின்றிருந்த துரியோதனன் நீள்மூச்செறிந்தான். அங்கு படுத்திருப்பவன் அவன் அறிந்த கர்ணன் அல்ல. அவனாக உருக்கரந்து தன்னுடன் உறைந்தவன். அவன் ஆடை என அக்கரவுரு களைந்து மீண்டுவிட்டிருக்கிறான். அவன் அந்த அழகுருவையே நோக்கிக்கொண்டிருந்தான். விழிகள் தவித்துத் தவித்து அதன்மேல் அலைந்தன. மின்னும் அணிகள். வைர இமைப்புகள். பவளக்குருதி. மரகதத் தளிர். வைடூரியத் துளிகள். வடித்து பொருத்தி இழைத்து தொகுத்து செதுக்கி அமைத்தவை. மலர்களை தளிர்களை கொடிகளை விழிகளை இறகுகளை கூழாங்கற்களை நடிப்பவை. ஆனால் அவை இணைந்து மலரோ தளிரோ கொடியோ விழியோ இறகோ கூழாங்கல்லோ அல்லாமலாகிவிட்டிருந்தன.

அவன் உள்ளம் ஆழ்ந்த அமைதி கொண்டிருந்தது. முற்றிலும் துயரிலா நிலை. அதை அவன் நினைவறிந்த நாள் முதல் ஒருபோதும் உணர்ந்ததில்லை. அழகு கொந்தளிக்கச் செய்கிறது. எளிய அழகு உவகையால். பேரழகு துயரால். இறைமையின் அழகு இன்மையையே எஞ்சவிடுகிறது. அவன் உடல் மட்டும் மெய்ப்புகொண்டபடியே இருந்தது. முதிய அணியர் "நாம் முழுதணிக்கோலத்தை பார்ப்பதில்லை, சுயோதனரே. நாம்

அணியணியாக பார்த்தவர்கள். நம் உள்ளம் இன்னமும் இவ்வணிகளை தனித்தனியாகவே நோக்குகிறது. ஒன்றுடன் ஒன்று இணைத்து விளையாடிக்கொண்டிருக்கிறது. கணத்திற்கொரு காட்சி சமைத்துக்கொள்கிறோம்" என்றார்.

அணியர் தன் கையிலிருந்த வெண்கல மணியை முழக்கினார். அப்பால் விலகி நின்றிருந்த ஏவலர்கள் உடலசைந்தனர். சுப்ரதர் அங்கிருந்து "பணிநிறைவுற்றதல்லவா?" என்றபடி அருகணைந்தார். இயல்பாக அவர் நோக்கு நின்றிருந்த துரியோதனனையே நாடியது. பின்னர் கீழே தழைந்து கர்ணனை நோக்கியது. சுடர் திடுக்கிடுவதுபோல ஓர் அசைவெழ நிமிர்ந்து பேருரு ஒன்றை நோக்குபவர்போல் விழிதூக்கி "கதிரோன்!" என்று அவர் சொன்னார். கைகளைக் கூப்பியபடி மெல்லிய நடுக்குடன் "துறந்தோன். கடந்தமைந்தோன்" என்றார்.

வெண்முரசு விவாதங்கள்

இருட்கனி - 4

சகுனியின் தேர் குறுங்காட்டின் புதர்களுக்கு அப்பால் வந்து நின்றதும் ஏவலர் அதை நோக்கி ஓடினர். துரியோதனன் விழியுணராமல் திரும்பி நோக்கியபின் முன்பெனவே கர்ணனை பார்த்துக்கொண்டிருந்தான். சகுனி தேரிலிருந்து இறங்க கைகூப்பாமல் சுப்ரதர் அவரை அணுகினார். சகுனி "வணங்குகிறேன், உத்தமரே" என்றார். சுப்ரதர் அவரை வாழ்த்தும்முகமாக இடக்கை குவித்துக் காட்டி "அங்க நாட்டு அரசருக்குரிய சிதை ஒருங்கிக்கொண்டிருக்கிறது. அவரை

அணிசெய்து முடித்துவிட்டார்கள். அரசியும் இளவரசரும் வருவதற்காக காத்திருக்கிறோம்" என்றார். சகுனி "ஆம், அறிவேன்" என்றபடி புண்பட்ட காலை தூக்கி வைத்து மூச்சிரைக்க மெல்ல நடந்தார். அவர் களைத்திருந்தார். குருதியிழந்தவர்போல் வெளிறிய உடலும் தசைகருகி வளையங்களாகத் தொங்கிய கண்களும் கலைந்த தலையுமாக பித்தன் போலிருந்தார். ஒவ்வொரு அடிக்கும் சற்று நேரம் நின்றார்.

"அரசர் இங்குதான் இருக்கிறார்" என்று சுப்ரதர் சொன்னார். "சொன்னார்கள், அவரைப் பார்க்கவே வந்தேன்" என்றார் சகுனி. "அவர் இங்கிருப்பது உகந்தது அல்ல. இடுகாட்டில் எவரும் நெடும்பொழுது நின்றிருக்கலாகாது. இடுகாடு இறந்தவர்கள் விட்டுச்செல்லும் இறுதி எண்ணங்களால் நிறைந்தது. அதில் ஆற்றாமையும் வஞ்சினமும் வெறுமையுமே மிகுதி. அவை நம்மில் வந்து படியக்கூடும். நம்மை ஊர்தியெனக் கொள்ளவும் கூடும். சிதையேற்ற ஒரு நாழிகை, சித்தத்தில் மூன்று நாழிகை என்று நூல்கள் சொல்கின்றன" என்றார் சுப்ரதர். சகுனி தலையசைத்தபடி நடந்தார். சுப்ரதர் "திரும்பிநோக்காது செல்க, எஞ்சாது நீராடி இல்புகுக! மங்கலப்பொருட்களை நோக்குக! குலதெய்வங்களையும் குடிமூத்தாரையும் பணிந்து மீண்டு மைந்தரையும் மனையாட்டியையும் அருகழைத்து மகிழ்க என ஈமக்கடன் முடித்துத் திரும்பும் முறை பற்றி சொல்கின்றனர்."

சகுனி கசப்புடன் புன்னகைத்து "இங்கே நாம் மீண்டுசெல்வதும் ஒரு பெரும் சுடலைக்காட்டுக்கே. அங்கு மங்கலங்கள் என்பவை கொல்லும் படைக்கலங்களே" என்றார். சுப்ரதர் புன்னகை செய்து "ஆம், ஆனால் வெற்றிமகள் அங்கு தான் தோன்றும் அனைத்தையும் மங்கலமாக ஆக்கிவிடுகிறாள்"

என்றார். சகுனி "அவளைத்தான் வணங்கி எழுப்ப முயல்கிறோம்" என்றார். சுப்ரதர் நின்றுவிட சகுனி மெல்ல சென்று துரியோதனன் அருகே நின்றார். காலடியோசை கேட்டும் துரியோதனன் திரும்பி நோக்கவில்லை. "அங்கே அனைவரும் காத்திருக்கிறார்கள்" என்றார் சகுனி. அக்குரலை எதிர்பாராமல் கேட்டதுபோல துரியோதனன் திடுக்கிட்டு திரும்பி நோக்கினான். "அங்கே நாளைய போர்சூழ்கை என்ன என்று கேட்டு படைத்தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். சல்யரும் அஸ்வத்தாமனும் உன் வருகையை எதிர்நோக்கியிருக்கிறார்கள்" என்றார் சகுனி.

துரியோதனன் "ஆம்" என்றான். பின்னர் "அங்கன்" என கீழே கிடந்த கர்ணனை சுட்டிக்காட்டினான். சகுனி திரும்பி கர்ணனின் உடலை நோக்கினார். அங்கு வரும்போதே அவர் அவன் உடலை பார்த்திருந்தார். அது வெற்றுச் சடலமென்றே தோன்றியது. முதல்கணத்திற்குப் பின் அவரால் நோக்க முடியவில்லை. துரியோதனன் சுட்ட மீண்டும் நோக்கியபோதுதான் அவ்வுடல் கர்ணன் என்றாகியது. அஞ்சியவர்போல முகம் சுளித்து விழிகளை விலக்கிக்கொண்டார். "அழகர்..." என்றான் துரியோதனன். பின்னர் புன்னகைத்து "அவரை தயங்காது நேர்கொண்டு நோக்க இப்போது எந்தத் தடையும் இல்லை" என்றான். சகுனி அந்தப் புன்னகையால் மேலும் அச்சம் கொண்டார். கர்ணனை நோக்கி திரும்பிய விழிகளை உள்ளத்தால் பற்றி நிறுத்திக்கொண்டார். "தெய்வமாகிவிட்டார். தெய்வத்தின் அழகை மானுடர் எத்தடையும் இன்றி விழிநிறுத்தி நோக்கலாம்" என்றான் துரியோதனன்.

சகுனி அப்பேச்சை விலக்க விழைந்தார். “நான் போர்குறித்து பேசவே வந்தேன்” என்றார். “நாளை நாம் மீண்டும் போருக்குச் செல்லவேண்டும்.” “அங்கரின் கரிய நிறம் ஒளிவிடுகிறது. அனைத்து ஒளியையும் தன்னில் சூடி நின்றிருக்க கருமையால் மட்டுமே முடியும்” என்றான் துரியோதனன். “நாம் நாளை போருக்குச் செல்கிறோமா?” என்று சகுனி கேட்டார். அச்சொல் அவனை சீண்டுமென்றும் உளம்திருப்புமென்றும் எண்ணினார். “போர்முடிந்துவிட்டது, இனி படைத்தலைமைகொள்ள எவருமில்லை என்று நம் படைவீரர்கள் எண்ணுகிறார்கள்... சல்யரும் அஸ்வத்தாமனும்கூட அந்த ஐயம் கொண்டிருக்கிறார்கள்.” துரியோதனன் திரும்பாமல் விழிநட்டு நிற்கக்கண்டு “நீயும் அந்த எண்ணம் கொண்டிருக்கிறாயோ என்று...” என்றார். துரியோதனன் “அவரை நான் இவ்வண்ணம் நோக்கியதே இல்லை, மாதுலரே” என்றான்.

சகுனி எரிச்சலுற்று குரல் எழுப்பி “நாம் இங்கே நின்றிருப்பதில் பொருளில்லை” என்றார். “அங்கரின் அரசியும் மைந்தனும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கே வந்துசேர எப்பொழுதாகும் என இப்போது சொல்ல இயலாது. அவர்கள் வந்தபின்னரே எரியூட்டல் நிகழும். இங்கே உடல்நோக்கி நின்றிருப்பது வீண்பொழுது கழித்தல் மட்டுமே.” துரியோதனன் அச்செய்தியை உளம் வாங்கவில்லை. “அங்கரை நான் முதன்முதலில் கண்டதை நினைவுறுகிறேன். யாரிவன், கரிய முத்து போலிருக்கிறான் என்று எண்ணினேன். அதன் பின்னர் உணர்ந்தேன், அவரை தொலைவிலேயே கண்டிருந்தேன். அப்போது அர்ஜுனன் என அவரை மயங்கினேன்.” அவன் முகத்தில் மகிழ்ச்சி பரவியது. புன்னகை விரிய சகுனியை நோக்கி “அதை எண்ணியிருக்கிறீர்களா? அங்கரை எது அர்ஜுனனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது என்று? உடல்

பெரும்பாலும் ஒன்றே. ஆனால் எவரும் உணரும் ஒன்று மாறுபட்டிருந்தது" என்றான்.

சகுனி ஒன்றும் சொல்லவில்லை. "நான் ஒருமுறை அதை பூரிசிரவஸிடம் கேட்டேன். அவன் கூர்நோக்கு கொண்டவன். மலைமகன் ஆகையால் இங்குள்ள ஒவ்வொன்றையும் புதிதாக அளந்து மதிப்பிட்டாகவேண்டிய நிலையிலிருந்தது அவன் உள்ளம்." துரியோதனனிடம் நுரைகொண்டு எழுந்த உவகையைக் கண்டு சகுனி மேலும் உளப்பின்னடைவு கொண்டார். "அவன் சொன்னான், அர்ஜுனனிடம் நீங்காது ஒரு பெண்கூறு உள்ளது, கர்ணனோ ஆண்மை முழுத்தவர் என்று. அது உண்மை என உணர்ந்தேன். நான் அதை முன்னரே அறிந்திருந்தேன் என்றும். ஆனால் இன்று அதற்கப்பால் செல்ல முடிகிறது. மாதுலரே, அர்ஜுனன் பிறிதொருவரால் அன்றி நிரப்பமுடியாத ஆளுமை கொண்டவன். அதையே பெண்ணியல்பு என நாம் உணர்கிறோம். அங்கர் பிறர் ஒருதுளிகூடத் தேவையற்றபடி முழுமையடைந்தவர்... அதை ஆண்மை என எண்ணிக்கொள்கிறோம்."

சகுனி திரும்பி சுப்ரதரை பார்த்தார். மிக அப்பால் அவர் ஏவலருக்கு ஆணைகளிட்டுக்கொண்டிருந்தார். "அந்த முழுமையால்தான் அவரை பெண்கள் நெருங்க முடியவில்லை. கற்பாறைக்குள் நுழைய வாயில் தேடி முட்டிமுட்டித் தவிப்பவர்கள் போலிருந்தனர் அவர்கள். அவர் இரு துணைவியரும்... கலிங்கத்து அரசி நாகர்களுடன் சென்றபோது நான் வியப்படையவில்லை. அவளை மிக அணுக்கமாக நான் புரிந்துகொண்டிருந்தேன். மாதுலரே, அங்கரின் மனைவியரை நான் அறிந்த அளவுக்கு எவரும் அறிந்திருக்கமாட்டார்கள். அவர்கூட." துரியோதனன் உரக்க நகைத்து "நானும்

அங்கரைப்போல் நிமிர்வுகொண்டவன் என்பார்கள் சூதர். என் நிமிர்வு எந்தையைப்போல பெருந்தந்தையென்றாகி நான் அடைந்தது. பல்லாயிரம் பறவைகளை ஏந்தி நின்றிருக்கும் காட்டுமரம்போல...” என்றான்.

துரியோதனனின் குரல் உடைந்தது. உதடுகளை அழுத்தி சிலகணங்கள் தன்னை நிறுத்திக்கொண்டு திணறும் மூச்சுடன் தொடர்ந்தான். “தம்பியர் நூற்றுவர், மைந்தர் ஆயிரத்தவர், குடிகள், நண்பர், அணுக்கர்... நான் பல்லாயிரம் வாயில்கள் கொண்ட மாளிகை... அங்கரைப்போல அல்ல.” மீண்டும் கர்ணனை நோக்கி “எனினும் எனக்கு அங்கர் தேவைப்பட்டார். ஏன் என்று இங்கே நின்று எண்ணிக்கொள்கிறேன். இதுவரை இதை எண்ணிக்கொண்டதே இல்லை. உண்மையில் நீங்கள் வந்து இவ்வண்ணம் என்னருகே நின்றிருக்கையில் உங்களிடம் நான் பேசத்தொடங்கிய பின்னரே இதை கேட்டுக்கொள்கிறேன். அங்கர் எனக்கு ஏன் தேவைப்பட்டார்? நீங்கள் எண்ணுவதென்ன?” என்றான்.

சகுனி “நாம் சென்று பாடிவீட்டில் அமர்ந்து பேசுவோம்... உனக்கு நல்ல மது தேவையாகிறது இப்போது” என்றார். “ஆம், மது தேவை. நெஞ்சு தவித்தபடியே இருக்கிறது” என துரியோதனன் திரும்பினான். ஆனால் அவன் மெய்யாக திரும்பவில்லை. எனில் அந்த உடலில் இருந்து அத்தகைய தோற்றம் எப்படி எழுந்தது என சகுனி வியந்தார். அவன் மீண்டும் கர்ணனை நோக்கினான். “மிகவும் தேவைப்பட்டிருக்கிறார் அங்கர். அவரை எண்ணாது ஒருநாள் சென்றதில்லை. ஒருநாள் என்ன ஒரு நாழிகை கடந்ததில்லை. என் அரசியும் இளையோரும் எள்ளிநகையாடுவதுண்டு... ஏன் தேவைப்பட்டார்?” மீண்டும் அவன் முகம் விரிந்தது. கண்களில் பித்தின் ஒளியெழுந்தது.

“எனக்கு அனைவருமே தேவைப்பட்டார்கள். ஒருவரைக்கூட என்னால் இழக்க முடியவில்லை. மாதுலரே, எனக்கு பாண்டவர்கள்கூட தேவைப்பட்டார்கள். அனைத்தையும் உதறிவிட்டு எழுந்து சென்று அவர்கள் ஐவரையும் தழுவி என்னுடன் இருங்கள் என்று கோரவேண்டுமென நூறுமுறையேனும் உளமெழுந்திருக்கிறேன். அவர்களின் சிறுவடிவாக அவர்களின் மைந்தர்களை கண்டேன். ஆகவேதான் அவர்களை என் தோள்களில் ஏற்றி வளர்த்தேன். அவர்கள் எவரும் களம்படவில்லை என்பதை ஒவ்வொரு நாளும் எண்ணி உவகை கொண்டேன். அபிமன்யு விழுந்த அன்றுதான் இப்போரை கைவிட்டுவிட்டு ஓடிவிடவேண்டுமென்று உளம்சோர்ந்தேன்.”

“எனக்கு எல்லாமே வேண்டியிருக்கிறது... நாடு, செல்வம், புகழ், சுற்றம். நாடும் செல்வமும் புகழும் தேடும் ஒருவனால் சுற்றமின்றி அமைய இயலாது...” என்றபோது துரியோதனன் மீண்டும் குரல் உடைந்தான். “அனைத்தையும் இழந்துகொண்டிருக்கிறேன், மாதுலரே. தன்மதிப்பு ஒன்றை மட்டுமேனும் தக்கவைத்துக்கொள்ளவே களம்நிற்கிறேன்.” சகுனி “இங்கு நின்று இவற்றைப் பேசுவதில் பொருளில்லை. இங்கு நின்று பேசும் எதுவும் பொய்யுணர்ச்சிகளால் ஆனதே. நாம் பாடிவீட்டுக்கு செல்வோம். அங்கே அமர்ந்து உளம் அமைந்து பேசுவோம்” என்றார். “ஆம், செல்லவேண்டியதுதான்” என்று துரியோதனன் சொன்னான். “இங்கே செய்வதற்கொன்றுமில்லை. அங்கர் இங்கில்லை. இது வெறும் உடல்...”

துரியோதனன் திரும்பியபோது கால் தளர்ந்ததுபோல சகுனியின் தோளை பற்றினான். அப்பால் நின்றிருந்த ஏவலன்

அருகணைய முற்பட்டு துரியோதனன் நிகர்நிலைகொண்டதைக் கண்டு நின்றான். சகுனி "நீ நன்னிலையில் இல்லை, அரசே" என்றார். "ஆம், என் உள்ளத்தில் துயரே இல்லை. எவ்வகையிலும் இழப்பை உணரவில்லை. அப்படியே என் அகம் முழுக்க உலர்ந்துவிட்டது போலிருக்கிறது. கல்லென்றாகிவிட்டதுபோல. எதையேனும் எண்ணி என்னை நெகிழச்செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். பழையனவற்றை எல்லாம் தொட்டுத் தொட்டு எடுக்கிறேன். நினைவுகள் என்னை மகிழத்தான் வைக்கின்றன" என்றான் துரியோதனன்.

முகம் மலர்ந்து "ஆம், இப்படி சொல்வேன். எனக்கு ஏன் அங்கர் தேவைப்பட்டார்? மாதுலரே, நான் எனைச் சார்ந்தவர் அனைவருக்கும் கொடுத்துக்கொண்டிருந்தேன். அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டுமிருந்தேன். மூச்சோட்டம்போல் அது நிகழ்ந்துகொண்டிருந்தது. எதையும் கொடுக்கவோ பெறவோ செய்யாமல் நிகழ்ந்த உறவு எனக்கும் அங்கருக்குமானது" என்றான். அவன் கைதூக்கி "ஆம், இதை தெய்வங்கள் அறியச் சொல்வேன். எதையும் நான் கொடுக்கவில்லை. எதையும் பெற்றுக்கொள்ளவுமில்லை. அவரும் அவ்வாறே. ஏனென்றால் எங்களுக்கு நடுவே அனைத்தும் பொதுவாகவே இருந்தன..." என்றான். அவன் திரும்பி கர்ணனை நோக்கி "ஆகவேதான் நானும் அவருக்கு தேவைப்பட்டேன் போலும்" என்றான். பற்கள் தெரிய நகைத்து "அங்கர் மாபெரும் வள்ளல். இங்கே அனைவரும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டவர்கள்தான். நான் அல்ல. வள்ளல் என்னும் அந்த மணிமுடியையும் கழற்றிவிட்டு இருக்கும் ஒரே இடம் என்னுடைய அருகமைவுதான் போலும்" என்றான்.

சகுனி அச்சொற்களின் முன்பின் தொடர்பற்ற அலைபாய்தலை தொடர முடியாமல் உளம்சலித்திருந்தார். "நாம் இங்கே நின்றிருப்பது உகந்தது அல்ல. அரசர்கள் இடுகாட்டில் நின்றிருக்கலாகாது" என்றார். "ஏன்?" என்றான் துரியோதனன். "மங்கலப்பொருட்களையும் தெய்வ உருக்களையும் இங்கு கொண்டுவருவதில்லை. அதைப்போன்றதே எனக் கொள்க!" என்றார் சகுனி. "இது மிருத்யூதேவியின் ஆலயம். இங்கே அவளுக்கு உகந்தவை மட்டுமே விளங்க முடியும். அவள் மட்டுமே தெய்வமென நின்றிருக்கவேண்டும்." துரியோதனன் பெருமூச்சுடன் "ஆம், பதினேழு நாட்களாக இந்நிலத்தில் அவளே முழுமுதல்தெய்வம். மூவரும் அவள் ஏவலர்கள்" என்றான். சகுனி "நாம் கிளம்புவோம். இங்கு நாம் நின்றிருப்பதனால் ஆகவேண்டியது ஏதுமில்லை" என்றார். "ஆம், கிளம்பவேண்டியதுதான்..." என்ற துரியோதனன் "ஆனால் அங்கர் இங்கே தனிமையில் கிடப்பார்" என்றான்.

"அவர் தெய்வமாகிவிட்டார்" என்று சகுனி சொன்னார். "தெய்வங்கள் தனிமையில் இருக்கின்றன." துரியோதனன் "ஆம்" என்றான். சகுனி திரும்பிப்பார்க்க சுப்ரதர் அருகே வந்து நின்றார். "சிதையேற்றம் எப்போது நிகழும் என்றனர்?" என்று சகுனி கேட்டார். "சற்று முன்புதான் நிமித்திகரிடம் பேசினேன். கதிர்மைந்தரை இரவில் எரியூட்டக்கூடாது என்றனர். அரசியும் மைந்தரும் இருளிலேயே வரக்கூடும். அவர் தந்தை விடிந்த பின்னரே எழுவார். தன் மைந்தனை நோக்கவும் தொடவும் அவர் விழையக்கூடும். முதற்கதிர் வந்து அங்கரைத் தொட்டபின்னர்தான் சிதையேற்றவேண்டும்" என்றார். "ஆம், அவர் கதிரொளியிலேயே விண்ணுக்கு எழவேண்டும்" என்றான் துரியோதனன். சகுனி "எனில் இந்த முழு இரவும் இங்குதான்

அங்கரின் உடல் இருக்கும் அல்லவா?" என்றார். "ஆம், இரவு கடந்தாகவேண்டும்" என்றார் சுப்ரதர்.

"நாம் புலரியில் இங்கு வருவோம். அவர் விண்ணேகுகையில் வணங்குவோம்" என்றார் சகுனி. "ஆம்" என்று நீள்மூச்செறிந்த துரியோதனன் மீண்டும் திரும்பி கர்ணனை நோக்கி "அணிகளால் பொலிந்திருக்கிறார். அங்கரை நான் முதல்முறையாக முழுதணிக்கோலத்தில் பார்த்தது அவர் அங்கநாட்டு மணிமுடியைச் சூடி அரியணை அமர்ந்த பெருவிழவின்போது. நான் சம்பாபுரிக்குச் சென்றிருந்தேன். தம்பியர் அனைவரும் உடனிருந்தனர்" என்றான். சகுனி "ஆம், நானும் உடனிருந்தேன்" என்றார். "நம் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் அன்று பொறாமைகொண்டு உளம்குமுறிவிட்டனர். அஸ்தினபுரியில் நாமே அணியாத அருமணிகளை அணிந்திருக்கிறார். அணிநூல்கள் வகுத்த நகைகள் அனைத்தையுமே சூடியிருக்கிறார். மும்முடி கொண்ட பேரரசர் போலிருக்கிறார் என்றார் கனகர். இளையோன் துச்சாதனன் சொன்னான், அவர் புலித்தோலும் கல்மணிமாலையும் அணிந்து காட்டுப்பாறையில் அமர்ந்திருந்தால்கூட அவ்வண்ணமே தோன்றுவார் என." துரியோதனன் நகைத்து "எப்போதுமே அங்கரைப்பற்றி மிக உகந்த சொற்களை இளையோன்தான் சொல்லியிருக்கிறான். மூடனாக தன்னை காட்டிக்கொண்டு அதைச் சொல்பவன் அவன்" என்றான்.

"நாம் கிளம்புவோம்" என்றார் சகுனி. கர்ணனை மீண்டும் உற்று நோக்கி நீள்மூச்சுடன் "என்றேனும் நாங்கள் மீண்டும் காண்போம்" என்று துரியோதனன் சொன்னான். "ஆம், எவரும் எப்போதுமென பிரிவதில்லை. நீத்தோர் உலகென்பது இங்கே

அகன்ற சரடுகள் அனைத்தும் இணைந்துகொள்ளும் முடிச்சு என்பார்கள்" என்றார் சுப்ரதர். துரியோதனன் "நீத்தோர் விண்ணில் என்ன பேசிக்கொள்வார்கள் என நான் சூதன் ஒருவனிடம் முன்னர் கேட்டேன். இப்புவியில் மானுடர் நூறு சொல்லெடுத்து ஒன்றையே பேசிக்கொள்கிறார்கள். எஞ்சிய அனைத்தையும் விண்ணிலேயே பகிர்ந்துகொள்வார்கள் என்றான்" என்றான். பின்னர் மீண்டும் உதடுவளையச் சிரித்து "நான் அங்கரிடம் ஆயிரம் சொல்லுக்கு ஒன்றையே பேசியிருக்கிறேன், மாதுலரே" என்றான். சகுனி "அனைவரும் அமர்ந்து சொல்லாடும் வெளி ஒன்று உண்டு அங்கே" என்றார். துரியோதனனின் கையைப் பற்றி "செல்வோம்" என்றார்.

அவர்கள் குறுங்காட்டின் விளிம்பை அடைந்தபோது அங்கே சூதர்கள் கூடி நிற்பதை கண்டனர். "சூதர்கள் இங்கே வருவதுண்டா?" என்று துரியோதனன் கேட்டான். சுப்ரதர் "சிதை காத்துக் கிடக்கும் உடல் ஒருகணமும் ஒழியாமல் புகழ்மொழிகளையும் துயர்மொழிகளையும் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்பது முறை. இரவெல்லாம் அங்கரின் புகழைப்பாட இவர்களை வரச்சொன்னேன்" என்றார். துரியோதனன் அவர்களை சிலகணங்கள் நோக்கி நின்றான். பின்னர் மீண்டும் நகைத்து "ஓரிரவில் பாடி முடிக்கக் கூடுவதா என்ன அவர் புகழ்?" என்றான். முதிய சூதர் "நாங்கள் இவ்விரவில் பாடத்தொடங்குகிறோம், அரசே" என்றார்.

துரியோதனன் இகழ்ச்சி எனத் தோன்றிய புன்னகையுடன் "எத்தனை காலம் பாடுவீர்கள்?" என்றான். "முடிவிலி வரை. நாங்கள் பிறந்து பிறந்து எழுந்து பல்லாயிரம் நாவுகளெனப் பெருகி சொல்கூட்டுவோம்" என்றார் இன்னொரு சூதர். "ஏனென்றால் அவர் புகழ் வளரும். மேலும் மேலுமெனப்

பெருகும். இனி இந்த பாரதவர்ஷத்தில் உளம்கனிந்து கொடுத்தவர், கனிந்ததை எண்ணி மேலும் கனிந்தவர் அனைவரின் வாழ்வும் அவர் வாழ்வென்று வந்து இணையும். சினம்கொண்ட களிறென எதிர்வரும் ஊழ்முன் ஒருகணமும் அஞ்சாமல் தருக்கி நின்ற பெரியோரின் கதையெல்லாம் அவருடையதென்றாகும். ஒருபோதும் சொல்லிமுடியாது அக்கதை" என்றார். துரியோதனன் அவரை சிவந்த நீர்பரவிய விழிகளால் நோக்கியபடி நின்றான். பின்னர் கைகூப்பி "உடனிருக்கட்டும் என் பெயரும். நான் அங்கரின் தோழன். அவரை உளம்சூழ்ந்து இப்புவியில் வாழ்ந்த எளியோன்" என்றான்.

சூதர்கள் ஒன்றும் சொல்லாமல் தலைவணங்கினர். சகுனி "பாடுக..." என்று சூதர்களிடம் சொல்லி "நம் தேர்கள் காத்து நின்றிருக்கின்றன" என்றார். துரியோதனன் எடைமிக்கக் காலடிகளைத் தூக்கி வைத்து மெல்ல நடந்தான். சூதர்கள் அவன் செல்வதை ஒற்றைநோக்காக விழிகள் உறுத்து நோக்கிநின்றனர். அவர்கள் நடந்துசென்று தேர்களை அடைந்து ஏறிக்கொண்டனர். துரியோதனன் இறுதியாகத் திரும்பி நோக்கி கைசுட்டி ஏதோ சொன்னான். சகுனி அவன் தோளைத் தொட்டு தேரில் ஏற்றினார். சகட ஓசையுடன் தேர்கள் கடந்துசென்றன.

சுப்ரதர் அருகணைந்து "அங்கர் ஒருங்கி காத்திருக்கிறார். வருக சூதர்களே, வெய்யோன் புகழ் சொல்லில் எழட்டும்!" என்றார். முதிய சூதர் "வாழ்வோரைப் புகழ்வது எங்கள் வாழ்வு. நீத்தோரைப் புகழ்வது எங்களுக்கு தெய்வங்கள் இட்ட ஆணை" என்றார். "ஆயின் இது தெய்வங்கள் மட்டுமே செவிகொள்ளவேண்டிய பாடல். மானுடர் எவரும் உடனிருக்கலாகாது. எவர் செவியிலும் ஒரு சொல்லும்

சென்றடையலாகாது.” சுப்ரதர் “ஆம், அதை ஆணை எனக் கொள்வோம்” என்றார். அவர் கைகாட்ட ஏவலரும் காவலர்களும் விலகினர். அவரும் தலைவணங்கி அப்பால் சென்று மறைந்தார்.

சூதர்கள் நிரையாகச் சென்று கர்ணன் கிடந்த பட்டுவிரிப்பை அடைந்தனர். கர்ணனின் உடலை நோக்கி கைகூப்பியபடி விழிதிகைத்து நின்றனர். “சுடரோன் மைந்தர்...” என்று முதுசூதர் சொன்னார். அவர்கள் பெருமூச்சுவிட்டனர். முதுசூதர் சென்று குனிந்து கர்ணனின் கால்களைத் தொட்டு சென்னிசூடினார். பிறரும் கர்ணனை கால்தொட்டு வணங்கி வட்டமிட்டு நின்றனர். இளைய சூதன் ஒருவன் தன்னிடமிருந்த பாளைப்பொதியில் இருந்து வெண்சுண்ணப்பொடியை எடுத்து வீசி வீசி கர்ணனைச் சுற்றி பெரிய வட்டம் ஒன்றை வரைந்தான்.

முதுசூதர் தன் கையிலிருந்த ராசிவட்டத்தை மண்ணில் வைத்து அதன்மேல் திசைதேர்மானியை வைத்தார். கிழக்கை வகுத்து மறுநாள் கதிரெழும் இடத்தை கணக்கிட்டார். பின்னர் பன்னிரு ராசிகளுக்குரிய இடங்கள் ஒவ்வொன்றையும் வகுத்து அதில் வெண்சுண்ணக் கட்டியால் அடையாளப்படுத்தி இளைய சூதனிடம் அளித்தார். அவன் அதை நோக்கி அந்த வட்டத்தை பன்னிரு பகுதிகளாக பகுத்தான். ஒவ்வொரு சூதரும் தங்கள் பிறவிமீனுக்குரிய ராசிக்களத்தை நோக்கி சென்றனர். தங்கள் இசைக்கலங்களுடன் அவர்கள் அமர்ந்துகொள்ள அவர்களின் மாணவர் இடப்பக்கம் துணை இசைக்கலங்களுடன் அமர்ந்துகொண்டனர்.

ஆடுஅமைகளத்தின் வலது மூலையில் செந்நிறக் கூழாங்கல்லாக செவ்வாயையும் மறுமூலையில்

செம்மாணிக்கமாக முதல்தெய்வமாகிய முருகனையும் நிறுவினார். காளைக் களத்தில் நீலநிறக் கூழாங்கல்லாக சுக்கிரனையும் செந்தாமரை வடிவில் திருமகளையும் அமைத்தார் சூதர். இணையரின் களத்தில் வெண்கல்லாக புதனும் வெண்சங்கு வடிவில் திருமாலும் அமைந்தனர். நண்டுக்குரிய களத்தில் தாழம்பூ வடிவில் நிலவனும் குங்குமச்சிமிழ் வடிவில் அம்பிகையும் நிலைகொண்டனர். சிம்மக்களத்தில் வெண்கல்லாக சூரியனும் உருத்திரவிழி மணியாக சிவனும் நிறுத்தப்பட்டனர்.

கன்னி நிலையில் வெண்கல்லாக புதனும் பொற்கலத்தில் நீர் வடிவில் நாராயணனும் அமர்ந்தனர். துலா நிலையில் நீலக்கல்லாக சுக்கிரனும் கரிய உருளைக்கல்லாக கரித்திருவும் நிறுவப்பட்டனர். தேள் களத்தில் செம்மணிக்கல்லாக செவ்வாயும் மயிலிறகாக அறுமுகனும் நிலைகொண்டனர். வில் களத்தில் எழுத்தாணி வடிவில் குருவும் வெண்தாமரையாக பிரம்மனும் நிறுத்தப்பட்டனர். முதலைக் களத்தில் கரிய கல்லாக சனியும் சாணியுருளைமேல் அருகம்புல் என யானைமுகனும் பதிட்டை செய்யப்பட்டனர். குட நிலையில் கரிய கல்லென சனியும் செந்நிறக் கல் என அனுமனும் இருந்தனர். மீன் களத்தில் கரிய கல்லாக குருவும் வெண்மலர் என பிரம்மனும் அமர்ந்தருளினர்.

சூதர்கள் தங்கள் இசைக்கலங்களை அமைத்ததும் ஒவ்வொருவரும் அச்சடங்கில் தங்களுக்குரிய பெயர்களை அக்களங்களுக்கு பொருந்துமாறு சூடிக்கொண்டனர். முதுசூதர் அஜர் தன் ஒற்றைக்கம்பி யாழை சுட்டுவிரலால் மீட்டினார். அந்த இசை வண்டு முரல்வதுபோல அப்பகுதியை நிறைத்தது. அதனுடன் இணைந்து அவருடைய குரல் சுழன்று

பறப்பதுபோல் ஒலித்தது. பிற சூதர்களும் தங்கள் இசைக்கலங்களை மீட்டத்தொடங்கினர். யாழும் குடமுழவும் நந்துனியும் இணைந்த மெல்லிய இசை சுழன்று சுழன்று அங்கேயே நின்றது. அவர்களின் குரல்கள் அதில் கலந்து உடன் சுழன்றன.

அஜரின் குரல் எழுந்த்து. "வெய்யோனை வணங்குக! காலத்தின் விழியென்றானவன். கடுவெளி தன் மார்பில் சூடிய அருமணி. கோடி இதழ்கொண்டு ஓயாது மலரும் மாமலர். அதை விழைந்து பெண்ணென்று உருக்கொண்டு பெருவெளியின் இருளை குழலென்றாக்கி சூடிக் களிக்கிறது பிரம்மம். அது வாழ்க!" சூழ்ந்திருந்த சூதர்கள் "வெய்யோனை வணங்குக! வெயிலருள்வோனை வணங்குக! சுடரோனை வணங்குக! சூரியனை வணங்குக!" என ஏற்றிசை எழுப்பினர். "கதிரோன் மைந்தனை வணங்குக! கரிய பேரழகனை வணங்குக! அவன் புகழ் விண்மீன்கள் எனப் பெருகுக! அவன் பெயர் மலைகளைப்போல் நிலைகொள்க! ஆம், அவ்வாறே ஆகுக!" என்றார் சூதர். "ஆம்! ஆம்! ஆம்!" என உடனிருந்த சூதர் உடன்குரலெழுப்பினர்.

அஜர் தன் யாழை மீட்டியபடி உரையிடைப்பட்ட பாட்டில் சொல்லத் தொடங்கினார். சூதரே, தோழரே, கேளுங்கள். இது முன்பொருநாள் மண்மேல் வளைந்து தெய்வங்களின் பாதை எனக் கிடக்கும் விண்ணில் நிகழ்ந்தது. திசை சமைக்கும் கதிரவன் அன்று விண்ணிலூர்கையில் கீழே துயர்கொண்டு நின்றிருக்கும் ஒரு நீலத்தாமரை மலரை கண்டான். முகம்விரிந்து மகிழ்வுகொள்ளாத மலரை அவன் கண்டதே இல்லை. திகைப்புடன் குனிந்து நோக்கி மென்கதிரால் அவள்

மலர்ப்பரப்பை வருடி கேட்டான். "இனியவளே, சொல்க! நீ துயர்கொள்வது எதற்காக?"

நீலமலர் சொன்னாள். "என் விழிநீர்மணிகளைத் தொட்டு மறையச் செய்கிறீர்கள். என் இதழ்களுக்கு ஒளியாகிறீர்கள். என் பூம்பொடியில் நறுமணம் நிறைக்கிறீர்கள். என் அகக்குமிழில் தேன் என கனிகிறீர்கள். என் அரசே, நான் உங்களிடமிருந்து பெற்றுக்கொண்டே இருக்கிறேன். இங்குள்ள மலர்களனைத்தும், செடிகளும் கொடிகளும் மரங்களும் எல்லாம். இப்புவியின் உயிர்கள் முழுக்க உங்கள் அருளை பெற்றுக் களிக்கின்றன. உங்களிடமிருந்தே தங்கள் உயிரை அடைகின்றன. ஆனால் இங்கிருந்து எதையும் நீங்கள் பெற்றுக்கொள்வதில்லை. என் வண்ணமும் மணமும் இனிமையும் உங்களை வந்தடைவதில்லை. இறைவனே, இங்கிருந்து வேதச்சொல்லில் உறையும் நாதமன்றி எதுவுமே உங்களை எட்டுவதில்லை. அதை எண்ணியே துயருறுகிறேன்."

"ஆம், நான் உருளும் இப்பாதை காலமற்றது. முதல்முடிவிலாதது. சொல்லுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டது" என்று விண்சுடரோன் சொன்னான். "அறிக, காலத்தில் திகழ்வது புவி! தோன்றி மறைவன அங்குள்ள அனைத்தும். வடிவுகொண்டவை, சொல்லும் உணர்வும் சென்று தொடுபவை அனைத்தும் முதல்முடிவு கொண்டவை என்று அறிக! அவை இக்கடுவெளிக்கு வந்துசேரவியலாது. விண்ணாக மாறாத எதுவும் விண்ணை அடையமுடியாது." நீலமலர் துயருற்று விழிநீர் கோத்தாள். "ஆம், அதை அறிவேன். ஆனால் அத்துயரால் ஒளியிழக்கிறேன். எடைமிகுந்து நீரில் மூழ்கிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அத்துயருடன் மீண்டும் மீண்டும் மலர்ந்தெழுவேன்."

அவளுடைய துயர்கண்டு கதிரோன் உளமழிந்தான். அவளுக்கு இரங்கி குரல்கனிந்து சொன்னான். "உன் துயர்நீக்க நான் என்னில் ஒரு துளியை மண்ணுக்கு அனுப்புகிறேன். மானுட வடிவுகொண்டவன். என் உருவும் ஆனவன். அங்கு வந்து இதுவரை புவியிலுள்ளோர் அனைவரும் எனக்கு அளிக்க விழைந்த அனைத்தையும் கொள்வான். அவர்களின் துயரனைத்தையும் அகற்றி மீள்வான்." அவள் முகம் மலர்ந்து "தொழுகிறேன், அரசே. விண்ணின் விரிவு மண்ணுக்கு முடிவிலாது கனியும்பொருட்டே என்று நானும் அறிந்திருந்தேன்" என்றாள்.

தோழரே, சூதரே, அறிக! இக்கதையை நான் கேட்டேன். அவ்வண்ணம் இப்புவியில் பிறந்தவர் கதிர்மைந்தன் கர்ணன். கருநீர் யமுனையில் நீலத்தாமரை ஒன்றின் மைந்தன் எனத் தோன்றினான். விண்ணூர்வோனின் குதிரைகளால் கண்டெடுக்கப்பட்டான். தேரோட்டியின் மைந்தன் என்றானான். விரிதோளும் சுடர்விழியும் கொண்டு இளைஞனென்றானான். வில்தேர்ந்து நிகரிலாதவனாக களம்நின்றான். அங்கநாட்டுக்கு அரசனென்றானான். புகழ்சேர்த்துக் களம்பட்டான். விழிநீர் வார வீரர்கள் வாழ்த்தி நிற்க, சூதர்கள் புகழ்பாடி நிற்க விண்புகுந்தான்.

அவனை வான்வீதியில் எதிர்கொண்டான் தந்தை. "மைந்தா, மானுடர் அளித்த அனைத்தையும் பெற்றுக்கொண்டாய் அல்லவா? அவற்றை காட்டுக!" என்றான். இரு வெறுங்கைகளையும் விரித்து அவன் சொன்னான் "இல்லை, தந்தையே. எதையும் பெற்றுக்கொள்ளத் தோன்றவில்லை எனக்கு. அப்புவியில் நான் ஏற்குமளவுக்கு ஏதுமில்லை. நான் அளித்துக்கொண்டிருந்தேன். அனைத்துமளித்து மீண்டேன்."

புன்னகையுடன் செஞ்சுடரோன் தன் மைந்தனை அள்ளி நெஞ்சோடணைத்தான். “ஆம், நீ என் மைந்தன். பிறிதொன்று உன்னில் எழாது” என்றான்.

அஜர் இரு விரல்களால் கிணையை மீட்டி குரலோங்கி பாடினார். “பாடுக பெரியோனை! அவன் அளித்த பெருங்கொடைகளை. ஈட்டியோர் இழந்துவிட்டு மீள்வர் என்று பாடுக! தோழரே, அளித்தோர் அடைந்து எழுவர் என்று பாடுக! வள்ளல்களால் வாழ்கிறது இப்புவி என்று பாடுக! இது என்றும் அவ்வண்ணமே வாழ்க என்று பாடுக! ஆம், பாடுக! ஆம், பாடுக!”

இருட்கனி - 5

அஜர் சொன்னார்: சூதரே, தோழரே, கேளுங்கள் இக்கதையை. நெடுங்காலத்துக்கு முன் இது நடந்தது. அங்க நாட்டின் தெற்கெல்லையில் அளகம் என்னும் சிற்றூரில் அதிபலன் என்னும் வேளாண் பெருங்குடியினன் வாழ்ந்துவந்தான். விழி தொட இயலா வயல் விரிவும், இருளொழியாது பசுமை செறிந்த தோப்புகளும், கதிரொளி சென்று தொட இயலா ஆழம் கொண்ட களஞ்சியங்களும் அவனுக்கு உரிமையாக இருந்தன. அவன் நிலம் தேடி நீர் வந்தது. அவன் வயல்தேடி கிளிக்கூட்டம் வந்தது. அவன் இல்லம் தேடி ஒவ்வொரு நாளும் இரவலர் அணைந்தனர். அவன் இல்லக் கதவு இரவும் பகலும் திறந்தே இருந்தது. எண்ணம் கொள்ளாமலேயே அள்ளி வழங்கும் இயல்பு கொண்டிருந்தன அவன் கைகள். இன்மொழி மட்டுமே திகழ்வதாக இருந்தது அவன் நா. அவனைப் போன்றவர்களால் வாழ்கிறது சூதரின் சொல். அவன் பெயர் வாழ்க!

பசித்தவர், மறுவழி அறியாதவர் முதல் எண்ணங்கொள்ளும் பெயரென இருந்தது அவன் ஊர். அவனுடைய குடி அவ்வூரில் பெருகி நிறைந்திருந்தது. ஆயினும் யானை சரியும்போது அதனுடலில் வாழும் உண்ணிகளும் உயிர் இழப்பதுபோல் அரசன் லோமபாதனை அந்தணர் தீச்சொல்லிட்டு ஒழிய அங்க நாட்டில் வற்கடம் பரவியபோது அதிபலனும் வறுமையுற்றான். அவன் கருவூலங்களில் இருள் மண்டியது. களஞ்சியங்களில் காற்று நிறைந்தது. அடுமனைக் கலங்களும் ஒழிந்த பின்னரும் அதிபலன் கைகள் அள்ளிக்கொடுப்பதை நிறுத்தவில்லை. அவன் மனையாட்டியோ "கொள்க!" என்னும் சொல்லுக்கு பழகியிருந்தாள். விழுந்த விலங்கை பசித்த விலங்குகள் கிழித்து உண்பதைப்போல் அவனை தின்று அழித்தனர் இரவலர். தன் என்பும் பிறர்க்கென அவன் அங்கே திகழ்ந்தான்.

ஏழுநாள் உணவில்லாத் துயருக்குப் பின் அவன் மனையாட்டி முள்காய்ந்து மூங்கில்பூத்த காட்டுக்குள் ஏழு காதம் சென்று மூங்கில்மணிகளை பொறுக்கிக் கொண்டுவந்து துணியில் கட்டி நீரிலிட்டுக் கொதிக்கவைத்து கஞ்சியாக்கி அவனுக்கும் மைந்தருக்கும் அளித்தாள். மைந்தரும் மனையாட்டியும் அருந்தினரா என்று நோக்கிய பின் அவன் தன் முன் மண்தாலத்தில் அக்கஞ்சியை வைத்து உண்ண அமர்ந்தபோது வாயிலில் வயிறொட்டி எலும்பெழுந்து விழிகுழிந்து குரலும் எழாதபடி நொய்ந்திருந்த இரவலன் ஒருவன் வந்து தன் திருவோட்டை திண்ணைக்கல்லில் தட்டி இரந்தான். அவ்வொலியிலேயே அவன் பசியை உணர்ந்து எழுந்த அதிபலன் அக்கஞ்சியை கொண்டு வந்து அவ்விரவலனின் திருவோட்டிலிட்டு "உண்ணுக, உயிரோம்புக, நலம் சூழ்க!" என்று வாழ்த்தினான்.

இரவலனின் சொல்லில்லா புன்னகையையே வாழ்த்தெனப் பெற்று கைகூப்பி திரும்பி தன் மஞ்சத்திற்கு வந்து இடக்கை மடித்துப் படுத்து அவ்வண்ணமே உயிர் நீத்தான். ஒளிவடிவென விண்ணிலெழுந்து இப்புவியை மும்முறை வாழ்த்தி உம்பர் உலகுக்கு சென்றான். அங்கு விண் முதல்வனின் வலப்புறம் ஒளியுடல் கொண்டு அமர்ந்தான். அங்கே அவனுக்கு வலப்பக்கம் அமர்திருந்த மாமன்னர் சிபி எழுந்து வந்து அவனை தழுவிக்கொண்டார். ததீசி முனிவர் வந்து அவனை தலைதொட்டு வாழ்த்தினார். மண் தோன்றிய நாள் முதல் இங்கே பிறந்த வள்ளல்கள் அனைவரும் அவனைத் தேடி வந்துகொண்டே இருந்தார்கள். அவர்கள் வாழ்த்தி முடிப்பதற்கே மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின.

பசுமையே எஞ்சாது பாழ்நிலமென அளகம் மாறியபோது அதிபலனின் இல்லத்தாள் தன் ஊரை துறக்க முடிவுசெய்தாள். தன் ஏழு மைந்தரிடமும் "எழுக, இனி இவ்வூர் நமக்குரியதல்ல! எண்திசையும் தேர்க! ஆனால் என்றேனும் ஒருநாள் இவ்வூருக்கு திரும்பி வருக! எங்கு சென்றேனும் உயிர் ஓம்புக! எங்கு வாழ்ந்தாலும் எவரென்று நினைவில்கொள்க!" என்று வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினாள். அவள் கால்தொட்டு வணங்கி அவர்கள் ஏழு திசையிலாக பிரிந்து அகன்றனர். தன் கொழுநன் படுத்து உயிர் நீத்த அம்மஞ்சத்தின் அருகில் அமர்ந்து அவளும் உயிர் விடுத்தாள். விண்ணில் எழுந்து கணவனின் அருகில் அமர்ந்தாள்.

அளகத்தை கைவிட்டு அகன்ற அதிபலனின் மைந்தர்களில் இளையோனாகிய தீர்க்கபலன் அங்க நாட்டின் மேற்கெல்லையில் கங்கைக்கரையில் இருந்த சிறு துறைமுகமாகிய சுபத்ரத்திற்கு வந்து அங்கிருந்த உத்கலத்து

வணிகனாகிய கஜமுகனுக்கு தன்னை அடிமையென விற்றுக்கொண்டான். அவனுடன் உத்கலம் சென்று அவனது கலத்தில் துழாவு பணியாளனாகவும், பண்டநிலையில் ஏவலனாகவும், வயல்களில் அடிமையாகவும் உழைத்தான். பிறிதொரு அடிமைப் பெண்ணை மணம் புரிந்துகொண்டான். கஜமுகனின் உளமறிந்த, அவன் சொல்பேணும் ஏவலனாகத் திகழ்ந்தான். அவன் மைந்தன் சுபலன் கஜமுகனின் மைந்தன் காமிகனுக்கு ஏவலனாக இருந்தான். சுபலனின் மைந்தன் உபலன் காமிகனின் மைந்தன் காரூஷனுக்கு ஏவலனானான். உபலனின் மைந்தன் மகாபலன் காரூஷனின் மைந்தன் ஊர்வரனுக்கு ஏவலனானான்.

ஊர்வரன் நோயுற்று இறப்புமஞ்சத்தில் இருக்கையில் தன் மைந்தருக்கு உடைமைகளை பகிர்ந்தளிக்க முடிவுசெய்தான். தன் அணுக்கனாகிய மகாபலனுக்கு விடுதலையை பரிசிலென அளித்து நூறுபொன் நாணயங்களை அவன் முன்னோரும் அவனும் ஈட்டிச் சேர்த்த செல்வமெனக் கொடுத்தான். "செல்க, எவராயினும் தன் நிலத்தில் வாழ்ந்து நிறைவதே வீடுபேறு! உன்னுள் குருதியிலேயே அங்கம் வாழ்கிறதென்று அறிவேன். அங்கு செல்க! உன் மைந்தர் நீர்க்கடன் அளிக்கையில் ஒரு பெயரென என் குடியும் ஒலிப்பதாக!" என்றான் ஊர்வரன். "ஆணை" என அவன் தாள்பணிந்து தன் மூன்று மைந்தருடன் நூறு பொற்காசுகளுடன் உத்கலத்திலிருந்து மகாபலன் அங்க நாடு நோக்கி சென்றான்.

லோமபாதனின் முயற்சியால் கசியபகுலத்து விபாண்டக முனிவரின் மைந்தர் ரிஷ்யசிருங்கர் அவைப்பரத்தையாகிய வைசாலியால் அழைத்துவரப்பட்டு விண்கனியச் செய்து வளம் பெருக வைக்கப்பட்டது. அரசரின் மகள் சாந்தையை

மணம்கொண்ட ரிஷ்யசிருங்கர் ஒரு மைந்தனை பெற்றபின் காடுமீண்டார். முனிவரின் மைந்தனாகிய சதுரங்கரின் ஆட்சியில் அங்க நாடு மீண்டும் உயிர்கொண்டு செழித்தது. சதுரங்கரின் கொடிவழியினராகிய சத்யகாமர் அப்போது அங்கத்தை ஆட்சிசெய்தார். தந்தைவழிச் சொல்லினூடாக மகாபலன் அறிந்த நாடாகத் தெரியவில்லை அங்கம். அங்கே படித்துறைகளில் அயல்கலங்கள் நிறைந்திருந்தன. சாலைகளில் சகடங்கள் நிறைந்தோடின. வயல்களில் பசுமை அலையடித்தது. சிற்றூர்களுக்கு மேல் அடுமனைப்புகை நறுமணத்துடன் நிறைந்திருந்தது.

மரக்கலத்தில் வந்து ஷிப்ரம் எனும் சிறுபடித்துறையில் இறங்கிய மகாபலன் தன் துணைவியுடனும் மைந்தருடனும் அளகம் என்னும் சிற்றூரை வழி உசாவி தேடிச் சென்றான். உத்கலத்தில் அரசனின் அசையாக் கோல் நின்றமையால் களவும் சூதும் அவன் அறிந்ததாக இருக்கவில்லை. எனவே அனைத்துச் செலவுக்கும் மடிச்சீலையை அவிழ்த்து பலர் நோக்க நூறு பொற்காசுகளையும் எண்ணி நோக்கினான். அன்று அங்கத்தை ஆண்ட சத்யகாமர் தன் நலம் நோக்கி தொல்நெறிகளை மீறத் தயங்காதவராக இருந்தார். இவ்வுலக இன்பங்களை நாடி அரசப்பொறுப்பை தவிர்ப்பவராகவும் சொல்கேட்டு நினைவில்கொள்ளாதவராகவும் திகழ்ந்தார். சினத்தால் தண்டித்தார், விழைவால் வரியிட்டார், பற்றால் உறவுகொண்டார்.

முன்னேரின் பிழை நாடெங்கும் நூறு மேனி ஆயிரம் மேனியெனப் பெருகியிருந்தது. சிற்றூரில் திருடர்கள் கரந்துலவினர். நெடுஞ்சாலைகளில் கொள்ளையர் காத்திருந்தனர். கண் முன் வளம்பெருகி விரிந்திருந்த அங்க

நாட்டைக் கண்டு களி உவகை கொண்ட மகாபலன் அங்கே கரந்திருந்த தீமையை உணரவில்லை. செல்லும் வழியில் ஓர் ஆலமரத்தடியில் அவர்கள் தங்கினார்கள். அவனிடம் பொன் இருப்பதை உணர்ந்த உடன்போக்கன் ஒருவன் உளவு சொல்ல பின்னிரவில் ஏழு கொள்ளையர் படைக்கலங்களுடன் அவனை வளைத்துக்கொண்டனர். அவர்களை வரவேற்று தன் உணவை பகிர முயன்ற மகாபலன் அவர்களால் தலை வெட்டுண்டு இறந்தான். அவன் மைந்தர்கள் இருவரும் அங்கேயே கொல்லப்பட்டனர்.

அவன் துணைவி கிருதை முலையருந்தும் நிலையிலிருந்த மைந்தனை நெஞ்சோடணைத்துக்கொண்டு இருளில் தப்பி ஓடி புதர்களுக்குள் சென்று மறைந்துகொண்டாள். மகாபலனின் ஆடையைக் களைந்து அவன் உடலில் சுற்றிக்கட்டி வைத்திருந்த பொன் நாணயங்களை எடுத்துக்கொண்டபின் அவன் குடலுக்குள் ஏதேனும் பொருள் கரந்துள்ளதா என்று அறிய வாளால் வயிற்றைப் போழ்ந்துகொண்டிருந்தமையால் கள்வர்கள் அவளை சற்று நேரம் விழியொழிந்தனர். பின்னர் அவர்கள் அவளைத் தேடியபோது குழவி மயங்கிவிட்டிருந்தமையால் அவள் தப்பினாள். குருதிமணம் கேட்டு குறுங்காட்டிலிருந்து வந்த நரிகளைக் கண்டு அஞ்சி கள்வர் அங்கிருந்து அகன்றனர்.

புலரி வரை புதர்களுக்குள் ஒளிந்திருந்த கிருதை ஒளியெழுந்ததும் கதறியபடி சாலையில் வந்து நின்று ஊராரை உதவிக்கழைத்தாள். அவள் குரலை கேட்டு அயல் சிற்றூர்களிலிருந்து வந்த மக்கள் அவள் பொருட்டு துயரம் கொண்டனர். அவ்வுடல்களை கொண்டு சென்று இடுகாட்டில் எரித்தனர். அவளுக்கு உணவும் உறைவிடமும் நற்சொல்லும்

அளித்தனர். அவர்கள் அவளிடம் அவ்வூரிலேயே குடில் ஒன்று அமைத்து தங்கிவிடும்படி கோரினர். ஆனால் அவள் அரசனிடம் முறை கேட்கச் செல்வதாக சொன்னாள். "முறைமையைச் செவிகொள்ளும் அரசனல்ல இன்று அரியணை அமர்ந்திருப்பவன். உளவெறுமை கொண்டவன். தன்னிலிருந்து தொடங்குபவன். குடிகளின் குரல்களுக்கு அப்பால் விண்ணில் மிதப்பதுபோல் தன் அரண்மனையில் வாழ்கிறான்" என்றனர் ஊர்முதியோர்.

அவள் உளம் அடங்கவில்லை. "இந்நிலத்தை நாடி வந்தவர் என் கொழுநர். இந்நிலத்தில் அறம் வளர்த்த குலத்தைச் சார்ந்தவர். அறம் குடிகாக்கும் என்பது உண்மையாயின் அவர் பொருட்டு தெய்வங்கள் விண்ணிலிருந்து இறங்கி வந்தாகவேண்டும். என் சொல்லை அவர்கள் செவி கொண்டாகவேண்டும். அரசனுக்கு தெய்வங்களின் ஆணை எழுந்தாகவேண்டும்" என்றாள். தன் மைந்தனை ஆடையால் உடலுடன் சேர்த்துக்கட்டியபடி அங்க நாட்டின் தலைநகராகிய சம்பாபுரி நோக்கி தனித்து நடந்து சென்றாள். உலருணவு கட்டி அவளுக்கு அளித்து "நலம் நிகழ்க!" என வாழ்த்தி அனுப்பினர் ஊரார். "எங்கு நீ தனியள் என்று உணரினும் இங்கு வருக, அன்னையே! இங்கே உன் சுற்றம் உள்ளதென்றே கொள்க!" என்றார் ஊர்த்தலைவர்.

சம்பாபுரியின் கதிரோன் எழும் பெருவிழவு எழுந்த நாள் அது. கிருதை பன்னிரு நாட்கள் மலைப்பாதையினூடாக நடந்து பெரும்பாதையை அடைந்து அங்கு சம்பாபுரி நோக்கி சென்றுகொண்டிருந்த திரளுடன் தானும் கலந்து கொண்டாள். விழவுக்குச் சென்றவர்கள் இசையில் ஆடியும் கள்ளருந்தி கூச்சலிட்டும் கட்டில்லாமை கொண்டிருந்தனர். அவள் ஒருத்தி

மட்டும் துயர் மிக்க முகத்துடன், நெஞ்சோடு அணைத்த மகவுடன், உறுதியான காலடிகளுடன் சென்றுகொண்டிருந்தாள். தனக்கு அளிக்கப்பட்ட கள்ளையும் மலர்மாலைகளையும் வண்ணப்பூச்சுகளையும் மறுத்தாள். தான் எவளென்றும் தன் இலக்கு எதுவென்றும் அவர்களிடம் அவள் சொல்லவில்லை. “கதிரோன் ஆற்றலின் அரசன். எழும் காமத்தின் இறைவன். அவன் முன் உன் முகம் மலரட்டும். உனக்கு மைந்தர்கள் மேலும் பிறப்பார்கள்” என்றாள் முதுமகள் ஒருத்தி.

சம்பாபுரியை அவர்கள் அடைந்தபோது மழைவெள்ளம் பெருகி வந்து நிறைந்த ஏரிபோல் அந்நகர் எல்லைகளை முட்டி அலையடித்து சுழித்துக்கொண்டிருந்தது. எங்கு நோக்கினும் மக்கள்திரள். கள்ளும் இன்னுணவும் தெருதோறும் மலிந்திருந்தன. சாலைகளில் மலர்மாலைகளைக் கொண்டு மாறி மாறி அறைந்தும் வண்ணப்பொடிகளை அள்ளி வீசியும் வண்ண ஆடைகளை வானில் சுழற்றி வீசியும் மக்கள் களிவெறி கொண்டு கொந்தளித்தனர். பரத்தையர் கள்வெறியும் காமமுமாகச் சிவந்த விழிகளுடன் சிரித்துக்கொண்டும் இளைஞர்களை எள்ளிநகையாடியபடியும் சிறு திரள்களாக சுற்றிக்கொண்டிருந்தனர். இருள்மயங்கும் இடங்களெங்கும் காமம் திகழ்ந்தது. வெறிமின்னும் விழிகள், சிரிப்பில் விரிந்த முகங்கள், களிக்கூச்சலில் நடுங்கும் உடல்கள் மட்டும் எங்கும் தெரிந்தன. சம்பாபுரியின் சூரியனார் கோயில் பெருவிழவே பாரதவர்ஷத்தின் விழவுகளில் தொன்மையானது என்றனர். சூரியவிழவைக் கண்டே இந்திரவிழவு எழுந்தது. இந்திரவிழவே காமன்விழவென்று உருமாறியது.

கிருதை அரசனை நெருங்குவது எப்படி என்று மட்டுமே பார்த்தாள். அங்கு எவரும் எண்ணிய எவ்விடத்திற்கும் செல்ல

இயலவில்லை ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் முட்டி மோதிக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவரையும் பெருந்திரளே கொண்டுசென்றது. சுழித்து அலைக்கழித்து அவர்கள் எண்ணியிராத எங்கோ கொண்டு சேர்த்தது. அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. எங்கிருந்தாலும் ஒன்றே என எண்ணி களி கொண்டிருந்தனர். நகரெங்கும் தன் மைந்தனை நெஞ்சோடணைத்தபடி அவள் சுழன்று தடுமாறிக்கொண்டிருந்தாள். அரசன் அணிக்கோலத்தில் வெங்கதிரோன் ஆலயத்தின் படிகளில் தோன்றுவதை மிகத் தொலைவிலென அங்கு நின்று கண்டாள். அவன் அணித்தேரில் ஏறி நகர்த்தெருக்களினூடாக செல்லும்போது மிக அப்பால் பெரிய மாளிகையொன்றின் தூணுடன் சேர்த்து முழுத்திரளாலும் அழுத்தப்பட்டிருந்தாள்.

விபாண்டக முனிவரின் மைந்தர் ரிஷ்யசிருங்கரை கவர்ந்துவர இளம் பரத்தையை லோமபாதர் அனுப்பிய கதையை கூத்தர் நடித்த மேடையை வெறித்து நோக்கியபடி அப்பால் ஒரு மாளிகையின் திண்ணை முகப்பில் சுவரோடு ஒட்டி நின்றிருந்தாள். அரசன் தேர் நிலை சேர்ந்ததும் எவ்வண்ணமேனும் அவன் முன் சென்றுவிட வேண்டுமென்று எண்ணி உடல்களின் ஊடாக ஊசி என ஊடுருவிச் சென்றாள். மறுபுறத்திலிருந்து பேரலையென வந்தறைந்த திரளால் அள்ளி பின்னுக்கு கொண்டுசெல்லப்பட்டாள். அவர்கள் நடுவினூடாக அணிப்பரத்தையர் ஏறிய தேர்கள் சென்றன. அத்தேர்களை நோக்கி மக்கள் மலர்ப்பந்துகளையும் வண்ணப்பொடியுருளைகளையும் தூக்கி வீசி கூச்சலிட்டு நகைத்தனர்.

தேர் செலுத்திய இளைஞன் ஒருவனை அவள் அருகிலெனக் கண்டாள். கரிய பெருந்தோள்கள். நீள் உடலால் இளைஞனென்றும், முகத்தால் சிறுவன் என்றும் தோன்றினான். அவன் தேருக்கு முன் முதியவன் ஒருவன் நிலையழிந்து விழப்போக, தசை புடைத்து நரம்புகள் இறுகிய கைகளால் கடிவாளத்தை இழுத்து ஏழு புரவிகளையும் நிறுத்தி தேரை ஒதுக்கி அவன் உயிரைக் காத்தான். ஒருகணம் திகைத்து சொல்லழிந்த கூட்டம் வெடித்தெழுந்து வாழ்த்தொலி கூவியது. அவனை நோக்கி பெண்கள் தங்கள் மேலாடைகளை எடுத்துச் சுருட்டி வீசியெறிந்தனர். மலர் மாலைகளும் செண்டுகளும் அவன் மேல் பொழிந்தன. நாணி உடல் குறுக்கியவனாக அவன் அத்தேரில் அமர்ந்திருந்தான். வண்ணங்களில் புதைந்து அது விழிக்கு மறைந்தது.

கிருதை தன் இடத்திலிருந்து சற்றேனும் அசைய முய ன்றாள். மேலும் மேலும் மானுட உடல்கள் வந்து அவளை அசைவிலாது நிறுத்தியிருந்தன. குழவி பசித்து அழத்தொடங்கியதும் அவள் பின்னடையும் வழி நோக்கி நடந்தாள். கூட்டத்திலிருந்து விடுபட்டு சிறு சந்துகளுக்குள் செல்வது எளிதாக இருந்தது. அதற்கு திரளின் விசையே உதவி செய்தது. இரு கட்டடங்களின் இடைவெளியினூடாக அப்பால் சென்றாள். நிழலில் அமர்ந்து அங்கு ஒரு முதுமகள் அளித்த இன்கூழை வாங்கி தானும் அருந்தி குழவிக்கும் அளித்தாள். குழவியை மடியில் அமர்த்தியபடி உளம் ஏங்கி அமர்ந்திருந்தாள்.

அரசனை சென்று கண்டு ஒரு சொல்லேனும் அவன் செவியில் உரைப்பதற்கு தனக்கு வாய்ப்பில்லை என்று நன்கறிந்தாள். இயல்வது ஒன்றே, அங்கிருந்து மீண்டும் அங்க நாட்டின்

வேளாண் சிற்றூர்களுக்கு மீள்வது. எங்கேனும் தன்னையும் தன் மைந்தனையும் வயல் பணியாளர்களாக அளித்துக்கொள்வது. வெயில் பொழியும் நிலத்தில் தோல்கறுக்க உழைப்பது. உண்டு உடல்வளர்த்து, மணந்து மைந்தர் பெருகி, அவன் குடிவளர்வதைக்கண்டு முதுமையேறி மறைவது. அவன் குடியில் மீண்டும் பெருமை வந்தமையக்கூடுமென்றும், ஈகையறத்தின் கொடை உறுத்து வந்து உறையுமென்றும் நம்பி உயிர்விடுவது. பிறிதொன்றும் செய்வதற்கில்லை என உணர உணர அவள் உளமழியலானாள்.

மைந்தனை நெஞ்சோடணைத்தபடி சம்பாபுரியின் சிறு வழிகளினூடாக மாளிகைகளின் இடுக்குகளினூடாக கிருதை நடந்தாள். அந்தியில் அவள் கங்கைக் கரையை சென்றடைந்தாள். அங்கு நீராட்டுப் படித்துறைகளிலும் படகுத்துறைகளிலும் மக்கள் குழுமி ஓசையிட்டுக்கொண்டிருந்தனர். அவள் புரவிகளை நீராட்டும் துறையருகே ஒரு கல்லில் தன் மைந்தனை மடியிலமர்த்தி ஒழுகும் ஆற்றுநீரைப் பார்த்தபடி அமர்ந்தாள். அவள் இயற்றுவதற்கு ஒன்றே எஞ்சியிருக்கிறதென்று தோன்றியது. எழுந்து மகவை உடலுடன் ஆடையால் கட்டியபடி கைகளையும் கால்களையும் மேலாடையால் சுற்றிக்கட்டிக்கொண்டு நீர்ப்பரப்பில் பாய்ந்து மூழ்குவது. அன்னையின் குளிர்ந்த அணைப்பின் ஆழத்திற்குள் சென்றுவிடுவது. அறியாக் கடற்பரப்பைச் சென்றடைந்து அதிலொரு துகளென கரைந்தழிவது.

உகந்த இறப்புதான் அது. உடல் நலிகையில் அவள் குடியினர் அவ்வாறு உயிர்நீப்பதுண்டு. அறம் நின்று வாழ இயலாதாகுகையில், ஆராச் சிறுமை வந்து கூடுமென்றால்

அவ்வண்ணமே செய்யவேண்டுமென்று அவளுக்கு அன்னையர் அறிவுறுத்தியிருந்தனர். அவள் நீர்ப்பெருக்கையே நோக்கிக்கொண்டிருந்தாள். இக்கணம் எழுந்து நான் இந்நீர்ப்பெருக்கில் குதித்து மறைந்தால் என் கொழுநனும் அவன் மூதாதையரும் இயற்றிய பேரறம் எழுந்து வந்து என்னை காக்குமா? காக்காதொழியுமெனில் தலைகாக்கும் அறமென்று நூலோர் கூறியதனைத்தும் பொய்யென்றாகும். அறம் அறத்தைக் காக்கும், அறம் அறத்தைப் பெருக்கும் என்று மூதாதையர் சொல்லி மைந்தர் நம்பி வாழ்ந்த யுகம் முடிவுற்றதா என்ன?

துவாபரம் முடிகிறது கலி எழவிருக்கிறது என்று இளமையில் அவள் கற்றிருந்தாள். அறம் தெய்வமென எழுவது இனி நிகழப்போவதில்லையா? அவ்வண்ணம் ஒரு காலம் வந்துவிட்டதெனில் அதன் பின் இங்கு இவ்வண்ணம் உயிர் வாழ்ந்து என்ன பயன்? ஆம், இயற்றக்கூடுவது ஒன்றே. எழுந்து கங்கைக் குளிர்நீரில் பாய்ந்து உயிர்விட வேண்டும், அறம் எழுந்து காக்குமெனில் நான் வாழ்வதற்கு பொருளுண்டு. காக்காதெனில் நான் வாழத் தகுந்ததல்ல இந்த யுகம். அவள் மைந்தனை தட்டி எழுப்பினாள். அரைத்துயிலில் இருந்து அவன் விழி திறந்து அன்னையை நோக்கி நகைத்தான். “மைந்தா, இந்நீர்ப்பெருக்கில் நாம் இறங்குவோமா?” என்று அவள் கேட்டாள். “நீர்! நீர்!” என்று சொல்லி மேல் ஈறில் முளைத்த இரு சிறு பால்பற்களைக் காட்டி மைந்தன் துள்ளினான்.

அந்நிலையிலும் அச்சிரிப்பால் அவள் உளம்நெகிழ்ந்தாள். “அன்னை இதில் குதிக்கவிருக்கிறேன். அன்னையுடன் நீயும் வருகிறாயல்லவா?” என்றாள். “நீர்! நீர்!” என்று அவன் இரு கால்களையும் உதைத்து கைகளை வீசிக் குதித்தான்.

குழிவிழுந்த அவன் கன்னங்களில் தட்டி புன்மயிர்த் தலையை முத்தமிட்டு "அன்னையுடன் எழுக, என் இறையே!" என்று அவள் சொன்னாள். அவனை எடுத்து தன் உடலுடன் ஆடையால் கட்ட முற்பட்டபோது காலடி ஓசை எழக்கேட்டு திரும்பிப் பார்த்தாள். முன்பு பரத்தையரின் அணித்தேரை ஓட்டிய அந்தப் பேருடல் சிறுவன் எடைமிக்க காலடிகளை வைத்து நிமிர்ந்த உடலுடன் நீண்ட கைகளை வீசி நடந்துவருவதை கண்டாள். அவன் நீராட்டிய புரவிகள் களைத்து உடன் வந்தன.

அவன் அவள் அருகே வந்து புன்னகையுடன் குனிந்து மைந்தனை பார்த்தான். "இவன் பெயரென்ன?" என்றான். அஸ்வன் என்று அவள் சொன்னாள். "நீளாயுளுடன் இருப்பான்" என்று வாழ்த்தியபின் தன் இடையிலிருந்து கணையாழி ஒன்றை எடுத்து மைந்தனின் கையில் வைத்தான். அவள் திகைப்புடன் நோக்க புன்னகையுடன் மைந்தன் தலைதொட்டு வாழ்த்திவிட்டு நடந்துசென்றான். அவள் அவனை பின்பக்கம் நோக்கி நின்றாள். பின்னர் விம்மி அழுதபடி மைந்தனை நெஞ்சோடணைத்துக்கொண்டாள்.

சூதரே, தோழரே, அவள் மைந்தனை எடுத்துக்கொண்டு அக்கணையாழியை கையிலேந்தியபடி சம்பாபுரியிலிருந்து கிளம்பிச்சென்றாள். அவள் நடந்து செல்கையில் கலிங்க வணிகன் ஒருவன் அவளை கண்டான். "எங்கு செல்கிறாய்?" என்று கேட்டான். "என் மைந்தன் வாழ்வதற்கு உகந்த ஊர் ஒன்றை தேடிச்செல்கிறேன். இவன் என் மைந்தன். இக்கணையாழிக்கு உரியவன்" என்று அவள் அதை காட்டினாள். அந்த வண்டியிலிருந்த ஏழு வணிகர்களும் இறங்கி அவளுக்கு தலைவணங்கினர். "அன்னையே, உன் மைந்தன் எங்களுடன்

இணைந்துகொள்ளட்டும். இக்கணையாழியையே அவன் தன் இடுசெல்வமாக அளிக்கட்டும்" என்றார் வணிகர்.

அவளை அவர்கள் தங்களுடன் அழைத்துச்சென்றனர். அக்கணையாழி அவ்வணிகர் குழுவிற்கு எங்கும் வழி தெளிப்பதாயிற்று. பிற வணிகர் குழுக்களிலிருந்து அவர்களை ஒருபடி மேலேற்றியது. அக்கணையாழியால் அஸ்வன் அவ்வணிகர் குழுவின் வழிகாட்டியும் தலைவனும் ஆனான். அவன் சென்றவிடமெல்லாம் பொற்குவைகள் காத்திருந்தன. ஈட்டிய பெருஞ்செல்வத்துடன் அளகத்திற்கே மீண்டுவந்தான். அங்கே விழிதொடும் எல்லைவரை நிலம் பெற்று பெருநிலக்கிழாரானான். அவன் குடி பெருகியது. தன் மைந்தன் கை பெருகி உணவளித்து இரவலரைப் போற்றுவதை, அவன் பெயர் எட்டுத் திசையிலும் துயருற்றோர் நாவுகளில் ஒலிப்பதைக் கேட்டு உளம் நிறைந்து கிருதை உயிர் நீத்தாள்.

இருட்கனி - 6

ஒவ்வொருநாளும் மூன்றுவேளையும் உணவுண்பதற்கு முன் தன் இல்லத்தின் நான்கு வெளிவாயில்களிலும் வந்து நின்று "எவரேனும் பசித்துளீரா? உலகீரே, பசித்தோர் எவரும் உள்ளீரா?" என்று ஏழுமுறை கேட்டு எவருமில்லை என்பதை உறுதி செய்தபின் "தெய்வங்களே, அவ்வாறே ஆகுக!" என்னும் மொழியுடன் தன் அகம் புக்கு அன்னமேடையில் அமர்வது அஸ்வரின் வழக்கம். அன்று காலைப்பொழுதில் இல்லம் தேடி வந்த அனைவருக்கும் உணவிட்டு, பொருள்தேடி வந்த அனைவரும் உளம்நிறைய அளித்துவிட்டு புறவாயிலில் வந்து நின்று "எவரேனும் பசித்துளீரா? உலகீரே, பசித்தோர் எவரும்

உள்ளீரா?" என அவர் வினவியபோது "ஆம்" என்னும் ஓசை எழுந்தது.

அவர் "எவர் அது?" என்று சூழ நோக்கினார். எவரையும் காணாது திகைத்தபின் மீண்டும் கேட்டார். மீண்டும் அம்மறுமொழி எழுந்தது. "எவர்?" என்றார். இல்லத்தைச்சுற்றி நடந்து நோக்கி எவரையும் காணாதான பின் மீண்டும் கேட்டார். "ஆம்" என்ற மொழியை எழுப்பியது அங்கே மரக்கிளையில் அமர்ந்த காகம் எனக் கண்டார். முதிர்ந்து சிறகுதிர்ந்து நலிந்த காகம் கிளையில் அமர்ந்து "ஆம்" என்றது. "இப்பறவைக்கு உணவு கொண்டுவருக!" என அவர் ஆணையிட்டார். உணவை கொண்டுசென்று அதன் கீழ் வைத்தார். காகம் கீழிறங்கி வரவில்லை. பலமுறை கைதட்டி அளித்தும் பலமுறை வேறு உணவை வைத்தும் அது கீழிறங்கவில்லை. அது கீழிறங்க அஞ்சுகிறதுபோலும் என எண்ணி கிளையொன்றில் உணவை ஏந்தி அதனருகே நீட்டியு1ம் அது உணவுகொள்ளவில்லை.

"என்ன எண்ணுகிறது அது?" என்று அஸ்வர் நிமித்திகரிடம் கேட்டார். "அது தனக்காக உணவுகோரி வரவில்லை" என்று நிமித்திகர் சொன்னார். "நீங்கள் பயணத்திற்குரிய முறையில் ஆடையும் புரவியுமாக அதன் கீழே சென்று நில்லுங்கள்... அது வழிகாட்டி அழைத்துச்செல்லக்கூடும்." அவர் அவ்வண்ணம் புரவியில் வந்து நின்றபோது காகம் எழுந்து பறந்தது. அவர் தன் ஏவலருடன், மரக்குடுவையில் இன்னுணவுடன் அதற்குக்கீழே சென்றார். மரங்களில் மாறி மாறி அமர்ந்து அது அவரை இட்டுச்சென்றது. அங்கநாட்டு எல்லையைக் கடந்து மச்சநிலத்தில் குறுங்காட்டுக்குள் நுழைந்தனர்.

அது நச்சுமரங்களாலான காடு. நிலமும் உப்பரித்து நஞ்சு பரவியிருந்தது. கங்கையில் நீரெழும்போது சதுப்பாகி

கோடையில் பாறையென இறுகும் அந்த மண்ணில் பாதிபுதைந்த விலங்குகளின் எலும்புக்கூடுகளும் கொம்புகளும் நின்றிருந்தன. புரவிகள் செல்ல முடியாதான பின்னர் அவர்கள் கூர்முட்களை வகிர்ந்தும், உளைசேற்றுக் குழிகளைத் தவிர்த்தும் முன்சென்றனர். மேலே எரிந்த கதிரவனின் வெம்மையில் அவர்களின் தசையுருகுவதுபோல வியர்வை எழுந்தது. ஏவலர் ஒவ்வொருவராக தளர்ந்து விழுந்தபின்னரும் அஸ்வர் சென்றுகொண்டிருந்தார். அங்கே வெயில் பழுத்துக்கிடந்த வெளியில் அவர் வெண்ணிற ஆடை அணிந்த ஒரு பெண்மணி கிடப்பதை கண்டார்.

ஓடிச்சென்று அவளைத் தூக்கி அமரச்செய்தார். அவள் பெருவிடாய் கொண்டிருப்பதை உணர்ந்து தன்னிடமிருந்த இன்னீரை அளித்தார். அவள் ஒரு மிடறு விழுங்கியபின் விழிப்புகொண்டு அடுத்த மிடறை மறுத்தாள். "என் பல்லக்கைத் தூக்கியவர்களும், என் வழிகாட்டிக் காவலரும் அப்பால் கிடக்கிறார்கள். அவர்களுக்கு நீரும் உணவும் அளித்த பின்னர் எனக்கு அளியுங்கள்" என்றாள். அஸ்வர் எழுந்து சென்று நோக்க அப்பால் நச்சு முள் பரவிய காட்டில் ஒரு பல்லக்கு சரிந்துகிடப்பதை கண்டார். அருகே கிடந்த போகிகளில் இருவர் உயிரிழந்துவிட்டிருந்தனர். வழிகாட்டிக் காவலர் மூவரில் ஒருவரே உயிருடனிருந்தார். கையிலிருந்த நீரையும் உணவையும் அவர்களுக்கு பகிர்ந்தளித்தபின் இன்னீரை அம்முதுமகளுக்கு அளித்தார்.

அவர்களை அவர் மீட்டு மறுபக்கம் கொண்டுசென்றார். அங்கே இளைப்பாறியபின் அனைவரும் நடந்து அந்திப்போதில் ஊருக்கு மீண்டனர். நோயுற்றிருந்த முதுமகளும் உடன்வந்தோரும் நலம்பெற இரண்டு நாள் ஆகியது. அவள் தன்னை வடபுலத்து

வேளாண்குடி ஒன்றின் மூத்தோள் என்றாள். அவள் மைந்தர் பொருள்தேடி கானேகி, செய்தியற்றோராகி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன. அவர்கள் அங்கே ஒரு காட்டில் இருக்கக்கூடும் என்னும் செய்தியை அவள் பெற்றாள். அதை உறுதிசெய்த பின்னர் செல்வதற்குரிய பொறுமை அவளுக்கு இருக்கவில்லை. தான் தங்கிய நகர்ப்புறத்து அரண்மனையிலிருந்து இரவிலேயே ஒரு பல்லக்கில் மூன்று காவலருடன் கிளம்பினாள்.

அறியாக் காடு இடர்மிக்கது. அவர்கள் கங்கையினூடாக வந்து இறங்கிய காட்டில் உண்ணும் பொருளென ஏதுமில்லை. நான்கு நாட்கள் அவர்கள் நீர் மட்டும் அருந்தியபடி கதிரவனை மட்டுமே அடையாளமாகக் கொண்டு நடந்தனர். பின்னர் நீரும் இல்லாமலாயிற்று. நிலம் நஞ்சென்று மாறியது. மரங்களும் செடிகளும் முட்களேந்தி மறித்தன. பல்லக்குத்தூக்கிகளில் ஒருவன் சென்றுகொண்டிருக்கையிலேயே நஞ்சு உடலில் ஏறி இறந்துவிழுந்தான். அவள் பல்லக்குடன் சரிந்து விழுந்து நோயுற்றாள். அவர்கள் வந்து காப்பாற்றவில்லை என்றால் உயிரிழந்திருப்பாள்.

அவள் அவர்களுடன் சில நாட்கள் தங்கினாள். அவள் தான் எவரென்று சொல்லவில்லை. அவள் எவரென்று அறிய அஸ்வர் முயலவுமில்லை. அச்சிற்றூர் அரசுகளின் போர்களுக்கும் வணிகர்களின் வலைகளுக்கும் அப்பால் காலமில்லாத ஒன்றெனத் தனித்திருந்தது. அந்த விலக்கம் அவளுக்கும் தேவையாக இருந்தது. அவள் ஊர்ப்பெண்களுடன் கன்றுமேய்க்கவும் வயல்பணிகளுக்கும் விறகுசேர்க்கவும் சென்றாள். மாவிடிக்கவும் நீர்சேந்தவும் உடனிருந்தாள். எளிய முதுமகளாக மாறுந்தோறும் விடுபட்டுக்கொண்டே இருந்தாள்.

புன்னகை எப்போதைக்குமென மறைந்ததோ எனத் தோன்றிய அவள் முகத்தில் சிரிப்பு எழுந்ததை அவர்கள் கண்டனர். நோய்முனகலின் ஒலி கொண்டிருந்த அவள் குரல் எழுந்தது. குழவியருடன் ஓடிக்களிக்கவும் தன்னோரன்ன முதுமகள்களுடன் பூசலிட்டு நகைக்கவும் இளமகளிரை ஆணையிட்டு நடத்தவும் அவளால் இயன்றது.

ஆயினும் அவளில் ஒரு பகுதி அயலென்றே இருந்தது. அவள் இரவுகளில் துயிலாது தனித்திருப்பதாக அஸ்வரின் குலமகள் ஆரதி சொன்னாள். பின்னிரவுகளில் புறவீட்டுத் திண்ணையில் பனிபெய்யும் முற்றத்தை நோக்கியபடி அவள் விழிகள் மின்ன அமர்ந்திருப்பதை, நீள்மூச்சுடன் காலத்தை உணர்ந்து மூட்டுக்கள் ஒலிக்க கையூன்றி எழுந்து மீள்வதை அவள் பலமுறை கண்டிருந்தாள். அஸ்வர் ஒருநாள் அவ்வண்ணம் அவள் அமர்ந்திருக்கையில் மெல்ல சென்று அருகே அமர்ந்தார். அவள் அவர் வருகையை நோக்கி திடுக்கிட்டு எழ முயல "அன்னையே, நான் உங்கள் அடிபணியும் மைந்தன் எனக் கொள்க! உங்கள் துயர் எதுவென என்னிடம் சொல்லுங்கள். அதை நீக்கும்பொருட்டு என் செல்வம், என் உயிர், என் குடி அனைத்தையும் அளிப்பேன். என் வீடுபேறே ஆயினும் அளிக்கவும் தயங்கமாட்டேன். அறிக தெய்வங்கள்!" என்றார்.

முகம் கனிந்து அவரை நோக்கி கைநீட்டி தொட்டு "நீ வள்ளல், மைந்தா... நான் அதில் ஐயுறவில்லை. நீ இங்கு ஆலமரமெனத் தழைக்கவேண்டும். உன் குடி ஆயிரம் தலைமுறைக்காலம் இங்கு வாழவேண்டும்" என்றாள் முதுமகள். "நான் எவரென்று உனக்கு சொன்னதில்லை. இப்போதும் சொல்லப்போவதில்லை. நான் சொல்வது மெய்யின் ஒரு பகுதியே எனக் கொள்க!" அவர் ஆம் என தலையசைத்தார். "நான் ஐவரைப் பெற்ற அன்னை

என்று மட்டுமே உலகோர் அறிவர். நான் அறுவரைப் பெற்ற அன்னை. என் முதல் மைந்தனைப்பற்றி நான் மட்டுமே அறிவேன். அம்மைந்தனும் அறிவான்" என்றாள். அஸ்வர் "நான் அதை எண்ணினேன். பிழையுணர்வாலும் மந்தணம் சுமப்பதனாலும்தான் மானுடர் உளம்நலிவுறுகிறார்கள்" என்றார்.

முதுமகள் தொடர்ந்தாள். நான் இன்று அறிகிறேன், அன்னை சேற்றுநிலம். மைந்தர்கள் அங்கேதான் வேர்கொண்டு முளைக்கிறார்கள். அன்னையின் தீமையும் நன்மையும் மைந்தர்களிலும் குருதியென உறைகின்றன. என் முதல் மைந்தன் என்னுள் திரண்ட ஆணவத்தில் எழுந்தவன். என் உளம்கொண்ட அளியால் கனிந்தவன். என் அகமுணர்ந்த அறத்தால் இரண்டாமவனை பெற்றேன். அவனிடம் என் அச்சமும் குடிகொண்டது. அலைக்கழிந்த என் அகம் சென்றடைந்த வீம்பும் தருக்கும் என் மூன்றாம் மைந்தனாயின. என் மைந்தர் மேல் நான்கொண்ட குருதிப்பற்று அவன் நல்லியல்பாகியது.

என் உளம்தேடிய வினாக்களின் தவிப்பில் எழுந்தவன் நான்காமவன். என் கூர்மையனைத்தும் அவனில் கூடின. பின்னர் நான் என்மேல் சலிப்புற்றேன். என்னை உதறி பிறிதொரு உடலில் திகழ்ந்து இருவரைப் பெற்றேன். என் கட்டற்ற இளமைக்காலத்திலிருந்து ஒருவன். என் அழகிய அறியாமையிலிருந்து இன்னொருவன். முதுமகள் அத்துயரிலும் மைந்தரை எண்ணி முகம் மலர்ந்தாள். நெடுநேரம் அவர்களின் முகங்களையும் உடல்களையும் கண்முன் தீட்டிக்கொண்டு தன்மகிழ்வுடன் அமர்ந்திருந்தாள். அவளை நோக்கியபடி அன்னையெனும் பேதைமையும் அன்னை எனும் பேரறிவும்

ஒன்றாகி அமர்ந்திருக்கும் விந்தையை எண்ணியபடி அஸ்வர் அமர்ந்திருந்தார்.

நான் என் முதிரா இளமையில் விழைந்தது எதை? இன்று அறிகிறேன், அனைவருமே முதிரா இளமையில் கனவுகாண்பது தங்கள் வாழும்தகவுகளையே. நான் பேரரசியென்றானேன். நிலம்வென்று அறம் செய்து வேள்விகளை பெருக்கி அழியாப் புகழ்பெற்றேன். மறுகணமே அனைத்தையும் துறந்து தவச்செல்வியாக மலைமுடிக்குகையில் வாழ்ந்தேன். நான் நான் என்று என் உள்ளம் எழுந்துகொண்டிருந்தது. என்னையன்றி பிறிதெதையும் நான் எண்ணவில்லை. நான் விழைந்த தெய்வமும் என் வடிவிலேயே என் முன் தோன்றியிருக்கக் கூடும். முதிரா இளமை நாற்புறமும் தேக்கப்பட்ட பெருநீர். அணைகளை ஆற்றலுடன் மோதிக்கொண்டிருக்கும் அடங்கா விசை.

எனக்கு ஒரு வழி கிடைத்ததும் அதனூடாக எழுந்தேன். எல்லை கடந்தேன். அது அவ்வழி என்றல்ல எவ்வழியாக இருப்பினும் அதனூடாக எழுந்திருப்பேன். நான் காமத்தை அறிந்தேன். எனக்கு ஒரு மைந்தன் பிறந்தான். அவன் என்னுள் கருக்கொண்டபோதுதான் என் பொறுப்பை உணர்ந்தேன். அன்னையின் ஊழை அவள் குழவி மீளமுடியாதபடி வகுத்துவிடும் என்னும் உண்மையே என்னை அச்சுறுத்தியது. நான் எண்ணி எண்ணி மகிழ்ந்த விரிந்துபரவும் முடிவிலா வழிகளேதும் எனக்கு இனி இல்லை. நான் கொள்ளும் ஆயிரம்பல்லாயிரம் வெற்றிகள் இல்லை. விரிந்து விரிந்து நான் இனி எழப்போவதில்லை. நான் மீண்டும் என் ஊனுடலில், என் குடியில், நான் வளர்ந்த நிலத்தில் வந்தமைந்தேன். என் எல்லைகள் அனைத்தையும் எட்டுப்புறமும் காணலானேன்.

எண்ணுந்தோறும் நான் ஏமாற்றமும் சீற்றமும் கொண்டேன். குழவி அன்னையின் கனவுகளை உறிஞ்சி உண்டு வளர்கிறது. கருவுற்ற பெண் இழப்பதென்ன என்று அவள் அறிவதில்லை. கருவென்னும் கனவில் ஆழ்த்தி அவளை அதை அறியாமல் கொண்டுசெல்கிறது இயற்கை. குழவியென்னும் கனவில் மீண்டும் பல்லாண்டுகாலம் மூழ்கடித்து வைத்திருக்கிறது. அக்கனவிலிருந்து அவள் விழித்தெழுகையில் அவள் அகவை கடந்து நெடுந்தொலைவிலென அப்பால் சென்றுவிட்டிருக்கும். தன் கன்னிக்காலகட்டத்துக் கனவுகளை எண்ணி அவள் ஏங்கி ஏங்கி விழிநீர் வடிப்பாள். அதை குழவியை அடைகையிலேயே உணரும் பெண் ஒருபோதும் அதை ஏற்கமாட்டாள். நான் என் மைந்தனைத் துறந்தது அதனாலேயே.

நான் அறிந்து அவனை துறக்கவில்லை. அவ்வாறு ஆயிரம்முறை சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் என் கையிலிருந்து வழுவி நீர்ப்பெருக்கில் அகன்றபோது ஒருகணம் நான் அடைந்தது விடுதலையை. அதுவே சான்று நான் அகமறிந்தே அவனை துறந்தேன் என்பதற்கு. அவன் எங்கோ நலமாக இருக்கிறான் என எண்ணிக்கொண்டேன். அவனை மெல்ல மறக்கவும் முடிந்தது. என் கனவுகளை தேடிச்சென்றேன். என்னை மேலும் மேலுமென வளர்த்துக்கொண்டேன். என் குருதியில் மைந்தர் பிறந்தார்கள். என் கனவின் ஐந்துவடிவங்கள். இப்புவியை நான் அள்ளியெடுக்க விரித்த ஐந்து விரல்கள். என் தேரின் ஐந்து புரவிகள்.

அவள் துயருடன் விழிநீர் சிந்தினாள். “அவர்களை நான் இன்று இழந்துள்ளேன். எங்குள்ளனர் என்று அறியேன். உள்ளனரா என்றும் ஐயுறுகிறேன். என் கனவில் தீக்குறிகள் எழுகின்றன.

இரவுகளில் திடுக்கிட்டு எழுந்துகொள்கிறேன். இருத்தலுக்குரிய அடிப்படைகளை இழந்தவள் போலிருக்கிறேன். மீள்தலுக்குரிய வழிகள் மறைந்துள்ளன. வெறுமையை எண்ணி எண்ணி தவிக்கிறேன்" என்றாள். அஸ்வர் அவளருகே மேலும் அணுகி அமர்ந்து "சொல்க, அன்னையே! நீங்கள் வெறுமனே இவ்வாறு ஐயுறமாட்டீர்கள். இத்துயருக்கு பிறிதொரு அடிப்படையும் இருந்தாகவேண்டும்" என்றார். "இல்லை, அவ்வாறு ஏதுமில்லை" என்றாள் அன்னை.

"இல்லை, நீங்கள் எண்ணித் துயருறுவது மைந்தரின் ஊழை. அதையே சொன்னீர்கள். ஆனால் சொல்லாதது ஒன்றுண்டு. மானுடரின் துயர்களில் நிகழும் துயர்கள் எவையாயினும் அவை சிறியவையே. நிகழுமென எண்ணிக்கொள்ளும் துயர்களே பெரியவை. நிகழ்வன நிகழும் அக்கணமே உச்சமடைந்து விடுகின்றன. முழுதும் வெளிப்படுத்திவிடுகின்றன. எனவே நிகழ்ந்த கணம் முதல் அவை குறையத்தொடங்குகின்றன. அவை குறைவதே ஆறுதலை அளிக்கிறது. அவை அழிந்து நாம் விடுதலைபெறும் இடம் அப்பாலென்றாலும் அறியக்கூடுவதாக உள்ளது. ஆயின் நிகழவிருப்பவை என நாம் அஞ்சும் பெருந்துயர்கள் கணம்தோறும் வளர்பவை. மறுகரை அறியாதவை" என்றார் அஸ்வர்.

"விந்தையானதோர் தெய்வ ஆணையால் துயர்களை பெருக்கிக்கொள்ளும் இயல்பு மானுடருக்கு உள்ளது" என அஸ்வர் தொடர்ந்தார். "ஊனுண்ண விலங்குகள் தங்கள் புண்களை நக்கிப்பெரிதாக்கி அச்சுவையில் திளைத்து அவ்வலியையும் சுவையென்றே மயங்கி உயிர்விடுகின்றன. நீங்கள் எண்ணி எண்ணி துயர்பெருக்குகிறீர்கள். அங்கே அந்த நச்சுக்காட்டில்

நீங்கள் கிடந்த கோலத்தை நினைவுறுகிறேன். உயிருக்கென தவித்தது உங்கள் உடல். உங்களுக்குள் ஓர் எண்ணம் அந்நிலையை உவந்து ஏற்றுக்கொண்டது." "என்ன சொல்கிறாய்?" என்று அன்னை சீற்றத்துடன் கேட்டாள்.

அவளை அமைதிப்படுத்தும் புன்னகையுடன் "ஒரு தருணத்தில் மானுடர் எப்படி வெளிப்படுகிறார்கள் என்பதிலிருந்து அவர்களின் அகத்தை அறியமுடியும், அன்னையே" என்றார் அஸ்வர். "அச்சூழலையும் பொழுதையும் அவர்கள் முன்னரே அறிந்திருக்கவில்லை என்றால், அதில் அவர்களின் அகம் முற்றாகவே ஈடுபடவில்லை என்றால் அவர்கள் நிலைகுலைவார்கள். பொருத்தமில்லாப் பதற்றமாக, பொருளில்லாச் சொற்களாகவே வெளிப்படுவார்கள். அவர்கள் அமர்ந்திருப்பதும் விழுந்திருப்பதும்கூட பிழையாக இருக்கும். பயிலா நடிகனின் கூத்தென நம்மில் ஒவ்வாமையையே அளிக்கும். அத்தருணத்தை எங்கோ விரும்பி எவ்வண்ணமோ முன்னர் நிகழ்த்திக்கொண்டிருப்பவர்கள் அப்போது முழுதுறப் பொருந்துவார்கள். பிழையிலாது வெளிப்படுவார்கள்."

"நீங்கள் அந்த நச்சுமுள்காட்டில் தேர்ந்த ஓவியன் வரைந்த ஓவியம்போல் கிடந்தீர்கள்" என்று அஸ்வர் சொன்னார். அன்னை அமைதியிழந்து உடலை அசைத்தாள். அதை பொருட்படுத்தாமல் அஸ்வர் தொடர்ந்தார். "அப்போதே ஐயம்கொண்டேன். அத்தருணத்தில் நீங்கள் பேசிய ஒவ்வொரு சொல்லும் துயரில் நனைந்திருந்தன. உங்கள் குடிப்பெருமைக்கு உகந்தவையாக அமைந்தன. அதை நீங்கள் சுவைத்து ஆற்றுகிறீர்கள் என எண்ணியதும் உங்கள்மேல் பேரன்பு கொண்டேன். துயரை விரும்பி அணியென சூடிக்கொள்வதே இப்புவியில் மானுடர் அடையும் நிலைகளில் கீழானது.

அவர்களுக்கு இன்பங்கள் இல்லை. ஏனென்றால் இன்பங்களை அவர்கள் நாடுவதில்லை. இன்பம் வந்தடைந்தால்கூட அதில் இயைய அவர்களால் இயல்வதில்லை. துயரை மீட்டி மீட்டி இன்பத்தை அறியும் உணர்வை இழந்துவிட்டிருப்பார்கள். இன்பத்தில் திகழும் பயிற்சியும் அற்றிருப்பார்கள். இன்பங்களையும் துன்பமென மாற்றியே அவர்களால் எடுத்துக்கொள்ள இயலும்."

"ஆம்" என்றாள் அவ்வன்னை. அஸ்வர் மேலும் கனிந்த குரலில் சொன்னார் "அன்னையே, நான் இந்தச் சிற்றூரிலிருந்து வெளியே செல்வதில்லை. நான் ஈட்டிய பொருள் இங்கே பத்துமேனியெனப் பெருகுவதனால் அளிப்பதன்றி எதையும் செய்வதில்லை. என் கையிலிருப்பது என்றோ எவரோ பெருங்கொடைத்தேவனின் வடிவென்று இறங்கிவந்து அளித்த ஒரு கணையாழி. வந்தவர் கதிரவனேதான் என்று என் அன்னை நம்பினார். அந்தக் கணையாழியில் கதிர்வடிவம் உள்ளது. அது எனக்கு அனைத்து வாயில்களையும் திறக்க வைத்தது. தொட்டதெல்லாம் பெருகச்செய்தது. கொடுக்கக்கொடுக்க களஞ்சியம் நிறையவைத்தது. நான் அறிந்ததெல்லாம் கொடுப்பதனூடாக கற்றுக்கொண்டதே. இப்பொழுதும் உங்களுக்காக என் முழுதுள்ளத்தையும் அளிக்கிறேன். உங்கள் அருகணைந்து உள்ளத்தை நோக்குகிறேன்" என்றார் அஸ்வர்.

"உங்கள் உள்ளத்துயரை அணுவணுவென அறிகிறேன், அன்னையே" என அஸ்வர் தொடர்ந்தார். "துயரை பெருக்கிக்கொள்பவர்கள் பேரச்சம் கொண்டவர்கள். எல்லா துயருக்கும் அடியிலிருப்பது அச்சமே. இறப்பச்சம், நோயச்சம், பிரிவச்சம், நிலையாமை எனும் அச்சம். அறியமுடியாதவை

அளிக்கும் அச்சங்களும் அறியமுடியாதவை. ஆனால் அவை மானுடருக்கு எளியவை. ஏனென்றால் அவற்றை தெய்வங்களுக்கு முன் கொண்டுசென்று படைத்துவிடமுடியும். நாம் அறிந்த அச்சங்கள் நம்மால் இயற்றப்பட்ட செயலின் விளைவுகள். அச்செயலை நாம் அறிவோம் என்பதனால் அவற்றின் விளைவான அச்சத்தையும் அறிந்திருக்கிறோம். துலாவின் இத்தட்டால் அத்தட்டை அளக்கிறோம். அந்த அச்சத்தை நாம் எந்தத் தெய்வத்திடமும் சென்று ஒப்படைக்க இயலாது. நாம் அவற்றை எதிர்கொண்டாகவேண்டும்."

"நாம் நம்மை பெருக்கிக்கொள்பவர்கள். எண்ணி எண்ணி. தொட்டுத் தொட்டு. சொல்லிச் சொல்லி. நாம் பெருகுகையில் நம் நிழல் மும்மடங்கு, முந்நூறு மடங்கு பெருகுகிறது. நம் அச்சங்களையும் ஐயங்களையும் பெருக்கிக்கொள்கிறோம். நம் துயரை பெருக்கிக்கொள்கிறோம். அன்னையே, நம் எதிரியை பெருக்கிக்கொள்கையில் நம் ஆணவம் அகத்திருந்து நிறைவடைகிறது அல்லவா? ஆணவம் நாம் பெறுவனவற்றை சிறிதாக்கிக் காட்டுகிறது, அளிப்பவற்றை பெருக்கிக் காட்டுகிறது. நம் இன்பங்களை சுருக்குகிறது, துன்பங்களை பெருக்குகிறது" என்றார் அஸ்வர். அன்னை "ஆம், மெய்" என்றாள்.

"அன்னையே, நீங்கள் அஞ்சுவது ஒன்றை. அது நீங்கள் இயற்றிய பிழையின் நிகர்" என்று அஸ்வர் சொன்னார். அத்தனை சொற்கள் வழியாக அவர் எண்ணிய இடத்தை சென்றடைந்தார். "மெய்" என்றாள் அன்னை. "நான் அஞ்சுவது அவனை." அஸ்வர் "அன்னை தன் மைந்தனை ஏன் அஞ்சவேண்டும்?" என்றார். "நான் அவனுக்கு தீங்கிழைத்தேன். அவனை கைவிட்டேன். அவன் குலமிலியாக சிறுவாழ்வு வாழச்செய்தேன்" என்றாள். "அவர் எங்கிருக்கிறார் என

அறிவீர்களா?" என்றார் அஸ்வர். "அறிவேன்" என்று அன்னை சொன்னாள். "அவர் வஞ்சம் கொண்டிருக்கிறாரா? உங்கள் மைந்தருக்கு தீங்கிழைப்பார் என அஞ்சுகிறீர்களா?" என்றார் அஸ்வர்.

"வஞ்சம்கொண்டிருந்தால், தீங்கிழைத்தால் அது முற்றிலும் சரியே என்று எண்ணுகிறேன்" என்று அன்னை சொன்னாள். "நான் இழைத்த பிழை எழுந்து வந்து கண்முன் நின்றிருக்கிறதோ என்று ஐயம் கொள்கிறேன். அவன் வஞ்சம் கொள்ளாவிடிலும் என்ன? அவனை ஆளும் தெய்வங்கள் அவ்வஞ்சத்தை கொள்ளக்கூடுமல்லவா? அறத்தெய்வம் வஞ்சம் மறப்பதே இல்லை என்பார்கள். அது என்மேல் முனிந்திருக்கும் என்றே உணர்கிறேன்" என்று அன்னை சொன்னாள். பின்னர் நெஞ்சுலைந்து அழத்தொடங்கினாள். "என் மைந்தர்கள் உணவின்றி அலைகிறார்கள். எதிரிகளால் சூழப்பட்டிருக்கிறார்கள். அனைத்தையும் அவர்களுக்கு அளித்தவள் நானே" என புலம்பினாள்.

அஸ்வர் சொன்னார் "அன்னையே, அந்த நீர்ப்பெருக்கில் உங்கள் கையிலிருந்து அக்குழவி நழுவிய தருணத்தை நினைவுகூர்க!" அன்னை "நான் அதை நினைக்காத நாளே இல்லை" என்றாள். "நினைக்கையில் எல்லாம் அது நிகழ்ந்த அந்தச் சூழலை நீங்கள் அப்பொழுது இருந்த இடத்திலிருந்து அக்கோணத்திலேயே மீண்டும் நிகழ்த்திக்கொள்வீர்கள். அதற்கு நேர் எதிர்ப்புறம் இருந்து பிறிதொருவராக அக்காட்சியை காண்பதுபோல் எண்ணிக்கொள்ளுங்கள். அறியாதன சில தெரியவரலாகும்" என்றார் அஸ்வர். "அது எங்ஙனம்?" என எண்ணிய முதுமகள் நீள்மூச்செறிந்து "ஆம், அதுவும்

இயல்வதே. நான் அவளை பார்க்கிறேன். அவள் குழவியையும்" என்றாள்.

"எங்ஙனம் அது கைவிட்டுச்சென்றது? எண்ணுக!" என்று அஸ்வர் சொன்னார். "ஒவ்வொரு அசைவையும் ஒவ்வொரு நீர்த்துளியையும் நினைவில் எடுத்தடுக்குக... நுணுகி நோக்குக!" அவள் "அந்தச் சிறுபடகு அலைகளில் அசைந்தாடியது. அதனுள் மைந்தன் கால்களை உதைத்து எம்பி எழமுயன்றுகொண்டிருந்தான். ஒழிந்த படகென்பதனால் அது நீர்ப்பரப்பின்மேல் சற்றே தொட்டுக்கொண்டிருந்தது. சிற்றலைகளிலேயே அது அலைவு கொண்டது. அவள் அதன் மூலையை பற்றியபடி நீந்திக்கொண்டிருந்தாள். அவள் ஆடைகள் கால்களிலும் கைகளிலும் சுற்றியமையால் அவளால் விரைந்து நீந்த முடியவில்லை. மூழ்கி எழுந்து மூச்சிளைத்து வாயில் மொண்ட நீரை உமிழ்ந்தாள். கால்களால் உதைத்தும் ஒற்றைக்கையால் நீரை உந்தியும் பின்னால் திரும்பி நோக்கி அவளை துரத்திவந்தவர்களின் தொலைவை கணக்கிட்டும் நீந்தினாள். அப்போது அவள் கையிலிருந்து அந்தப் படகு நழுவியது" என்றாள்.

"ஏன்?" என்று அஸ்வர் கேட்டார். "அந்தப் படகு அலைகளில் ததும்பிக்கொண்டிருந்தது. சுழல்களில் நிலைமாறியது" என்றாள். "அவள் கிளம்பியபோதே அது அலைகளில்தானே இருந்தது?" என்றார் அஸ்வர். "ஆம், அங்கே ஒரு சுழி இருந்திருக்கலாம். அலைகள் ஒன்றுடன் ஒன்று மோதி பிரிந்திருக்கலாம்" என்றாள் அன்னை. "நன்கு எண்ணுக! நன்கு நோக்குக!" என்று அஸ்வர் சொன்னார். "அக்குழவி தன் காலால் படகின் ஒரு பகுதியை மிதித்தது. திடுக்கிட்டதுபோல் படகு சற்றே திரும்பியது. அக்கணம் அவள் மூழ்கி எழுந்தாள். மூச்சுவாங்கும்பொருட்டு

வாய் திறந்தாள். கையிலிருந்து படகின் விளிம்பு நழுவியது. அவள் அறிந்தே அதை விடுவதாக அப்போது உணர்ந்தாள். அறியாது விட்டதாக பின்னர் மயங்கினாள். எஞ்சிய வாழ்நாளெல்லாம் அறிந்தே விட்டேன் என துயருற்றாள். அறியாது விட்டேன் என மீண்டுவந்தாள். இரு நிலையும் மெய்யே."

"இரு அலைகளில் ஏறி இறங்கி அப்பால் அகன்றது அப்படகு. அவள் எழுந்து நோக்கிநின்றிருக்க மேலும் மேலும் அலைகளில் ஏறிச்சென்றது. நீரின் உள்ளோட்டத்தில் பொருந்தி விசைகொண்டது. அவள் நெஞ்சுலைய நோக்கி நின்றபின் நீரில் மூழ்கி மறுகரை நோக்கி சென்றாள். அங்கே எழுந்துநின்று நோக்கியபோது அவள் விழிகளிலிருந்து மறைந்துவிட்டிருந்தது. அதன் இறுதித்தோற்றத்தை அவள் அருமணி என விழிகளுக்குள் பொத்தி தன்னுடன் எடுத்துக்கொண்டாள். முலைப்பாலும் விழிநீரும் சோர அங்கிருந்து சென்றாள். பெருகும் நதிநீரை நோக்கியபடி நின்று ஏங்கி அழுதாள். நீள்மூச்செறிந்து மீண்டாள். மீண்டும் உளமுலைந்து அழுதாள். அவள் அந்நாளிலிருந்து மீளவேயில்லை."

"அக்குழவி உதைத்திருக்கிறது" என்றார் அஸ்வர். அன்னை திகைப்புடன் நோக்கி அவர் சொல்வதை புரிந்துகொண்டு "ஆனால் அது உளம் உருவாகாத குழவி" என்றாள். "மானுடர் தங்களுக்குரிய தெய்வங்களுடன் பிறக்கிறார்கள். அத்தெய்வங்களே அனைத்தையும் ஆற்றுகின்றன" என்றார் அஸ்வர். "அவன் எனக்கு அளித்த கொடையா அது?" என்றாள் அன்னை. "ஆம், அவர் பெருவள்ளல். தன் அன்னைக்கு முதற்கொடையை அளித்தார். பிறிதொரு அன்னைக்கும் தந்தைக்கும் அடுத்த கொடைகளை அளித்தார்" என்றார்

அஸ்வர். அன்னை நீர்பரவிய சிவந்த விழிகளுடன் நோக்கிக்கொண்டிருந்தாள். "வள்ளல்கள் அளிப்பதற்காகவே பிறக்கிறார்கள், அன்னையே" என்றார் அஸ்வர்.

அன்னை "ஆம்" என்றாள். பின்னர் சீறலோசையுடன் அழத்தொடங்கினாள். அவள் அழுவதை அஸ்வர் நோக்கி அமர்ந்திருந்தார். ஒரு சொல்லும் அப்போது அவளை சென்று சேராதென்று அறிந்திருந்தார். மெல்ல மெல்ல அவள் அடங்கினாள். விம்மலோசையுடன் உடலை குலுக்கினாள். "நீங்கள் அவரை எவ்வண்ணமும் அஞ்சவேண்டியதில்லை, அன்னையே. வள்ளல்களின் உள்ளத்தில் வஞ்சம் நிலைகொள்வதில்லை" என்று அஸ்வர் சொன்னார். "அவர் அளித்த கொடை உங்கள் வாழ்வும் மைந்தரும். தன் கொடை பெருகவேண்டும் என்றுதான் எந்தக் கொடையாளரும் விழைவார். என்றும் அவர் அருள் உங்களுக்கு உண்டு என்று தெளிவுறுக! உங்கள் குடிக்கு முதற்காவல்தெய்வம் வேலும் வில்லும் ஏந்தி வாயிலில் நின்றிருக்கிறது என்று நிறைவுறுக!"

"ஆம்" என்றாள் அன்னை. பின்னர் விழிநீரைத் துடைத்தபடி புன்னகை செய்தாள். "அவனை நினைத்துக்கொள்கிறேன். இப்புவியை வெல்லும் திறன்கொண்டவன். அவன் முன் முப்பெருந்தெய்வங்களும் பணிந்தாகவேண்டும்." அஸ்வர் "இப்புவியிலேயே நல்லூழ் கொண்ட அன்னை நீங்களே. ஒரு துளி முலைப்பாலும் உளம்கனிந்து நீங்கள் அவருக்கு அளிக்கவில்லை. முழுதுலகையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள்" என்றார். அன்னை நகைத்தபோது இமைகளில் நீரும் இருந்தது. "ஆம், மெய்" என்றாள். "அவன் என் மடியில் வளராததே நன்று. அன்னையர் தன் மைந்தரை கைக்குழவி என எண்ணும் பிழையிலிருந்து மீளமுடியாது.

இவனை ஒருபோதும் நான் குழவியென நோக்கப்போவதில்லை. என்மேல் கிளை தழைத்துப் படர்ந்திருக்கும் நிழல்மரம். நான் இறுதிநீர்த்துளி கொள்கையில் நினைவுகூரப்போகும் தெய்வமுகம்" என்றாள்.

அவள் மறுநாள் கிளம்பிச்சென்றாள். அவ்வூரையும் அஸ்வரையும் அங்குள்ள பெண்டிரையும் இளமைந்தரையும் வாழ்த்தி ஊர்த்தெய்வங்களை வணங்கி விடைகொண்டு பல்லக்கில் ஏறிக்கொண்டாள். அப்போது அவள் முகம் தெளிவுகொண்டிருந்தது.

இருட்கனி - 7

குருக்ஷேத்ரத்தின் சூரியகளத்தில் அமர்ந்து அஜர் சொன்னார். அழிவில்லாதனவற்றை பாடுக! அழிவுள்ளவற்றை பாடலினூடாக அழிவற்றவை என்றாக்குக! அறியவொண்ணாமையை பாடுக! பாட்டினூடாக அவற்றை அறிபடுபொருளென்றாக்குக! தோழரே, பாடல் வாழ்வின் பொருள்மட்டுமே பிரிந்து நின்றிருப்பது. வேரில் கசந்து தண்டில் இறுகி இலையில் விரிந்து மலரில் ஒளிர்ந்து கனியில் இனிப்பது மட்டுமே திரண்டு நின்றிருப்பதையே பாடல் என்கின்றனர். இங்குள்ள ஒவ்வொன்றும் மறையும், அவை உருமாற்றி பாடலில் சென்றமையும். இங்குள்ள ஒவ்வொன்றும் மீண்டும் இவ்வண்ணமே பாடலில் இருந்து எழும். அவை தங்கள் சுவையாலேயே அறியப்படும். பாடல்களில் வாழ்கின்றன தெய்வங்கள். அறிக, பாடலுக்கு வெளியே தெய்வங்களே இல்லை!

துரோணரின் படைக்கலப் பயிற்சி நிலையிலிருந்து இழுத்த நாண் என உடல் அதிர்ந்துகொண்டிருக்க வெதும்பும் விழிகளும் விம்மும் நெஞ்சுமாக கர்ணன் தென்திசை நோக்கி சென்றபோது வழிகாட்டியவர்கள் ஏழு சூதர்கள். பிருஹத்சிலை என்னும் சிற்றூருக்கு வெளியே ஓர் ஆலமரத்தடியில் துயின்றுகொண்டிருந்த முதுசூதரான ஆவகர் தன்னருகே வந்தமர்ந்த இளைஞனின் உடலில் இருந்து அதிர்வு அக்கல்பாறையில் பரவுவதை உணர்ந்தார். எழுந்தமர்ந்து அவனை நோக்கினார். "ஓம் என்று உரை" என்றார். அவன் திகைப்புடன் அவரை பார்த்தான். அவன் விழிகளிலிருந்து நீர் வழியுமென்று தோன்றியது. அது நீரல்ல குருதி என்றும் தோன்றியது. "ஓம் என்று உரை" என்றார் ஆவகர்.

அவன் பெருமூச்சுவிட்டான். "இளையவனே, ஓம் என்று சொல்லாவிடில் உன் நரம்புகள் அறுந்துவிடக்கூடும்" என்றார். அவன் "ஓம்" என்றான். "ஏழுமுறை சொல்" என்றார் ஆவகர். அவன் ஏழுமுறை ஓங்காரம் கூறியபின் முகம் தெளிந்து "ஆம், என் தசைகளும் நரம்புகளும் நெகிழ்கின்றன. என் மூச்சு சீரடைகிறது" என்றான். "ஓம் என்பது ஆம் எனும் சொல்லே. நமக்கே உரைக்கையில் ஆம். விண்ணுக்கும் மண்ணுக்கும் என உரைக்கையில் ஓம்" என்று ஆவகர் சொன்னார். "நீ ஆமென சொல்லியிருக்கிறாய். அனைத்தையும்." அவன் "என்னுள் திகழ்வன அனைத்தையுமா?" என்றான். "நதியில் ஓடும் கலங்கலும் சேறும் குப்பையும் அனைத்தும் விண்ணளித்தவையே" என்றார் ஆவகர்.

"முதுசூதரே, நான் சூதர்குலத்தான், என் ஆசிரியரின் குருநிலையிலிருந்து குலம் பழிக்கப்பட்டு துரத்தப்பட்டேன்" என்று கர்ணன் சொன்னான். "நீ சூதனல்ல" என்று அவர்

சொன்னார். "எஞ்சுவதை நான் சொல்லவிழையவில்லை. நீயே அதை சென்றடைவாய்." அவன் பெருமூச்சுடன் விழிதாழ்த்தினான். "சொல்க!" என்றார் ஆவகர். "என் உள்ளம் எரிந்துகொண்டிருக்கிறது. ஒருகணமேனும் துயில இயலவில்லை. சுவையறிந்து உண்ணவோ விடாயறிந்து அருந்தவோ கூடவில்லை. இவ்வுலகமென ஆனவை அனைத்தும் சுருங்கி இறுகி என்னை நெரிக்கின்றன. ஒற்றை எண்ணமன்றி எதையும் மீட்ட இயலாத உள்ளம் கொண்டிருக்கிறேன்" என்றான். "ஆம், அதுவே கொடுந்துயர்" என அவர் சொன்னார். "அதைத்தான் நான் ஆம் என்று சொல்லி ஏற்றிருக்கிறேனா?" என்றான் கர்ணன்.

"ஆம், அதைத்தான்" என்றார் ஆவகர். "ஆம் என ஏற்பதே முதல்படி. ஆம், இது நோய். ஆம், இது இறப்பு. ஆம், இது சிறுமை. ஆம், இது பிழையுணர்வு. ஆம், இது அச்சம். இளையவனே, ஆம் என்னும் சொல் கணம்கோடி என வளர்ந்துகொண்டிருக்கும் அனைத்தையும் அவ்வண்ணமே உறையச்செய்துவிடுகிறது. அதன்பின் நாம் ஒவ்வொன்றையும் நோக்க இயலும். ஒவ்வொரு அடுக்காகப் பிரித்து ஆராய முடியும். விடையென ஒன்று உண்டென்றால் சென்று சேரவும் இயலும். ஆம் என ஏற்றுக்கொள்க! ஆம் என நிலைகொள்க! ஆம் என விண்ணுக்குச் சொல்க! ஆமென்று வாழ்த்துவர் தேவர். ஆமென்று ஊழ் ஒலிக்கும். ஆம் என்று அறிவு எதிரொலிக்கும்."

"ஓம் ஓம் ஓம்" என்று கர்ணன் சொன்னான். சொல்லச்சொல்ல தெளிந்துவந்தான். "என் உள்ளம் நிலைகொள்வதை உணர்கிறேன்" என்றான். பின்னர் மெல்ல அந்தப் பாறையில் படுத்தான். "இன்கனி ஒன்றும் சுட்ட இன்கிழங்கும் உள்ளது.

உண்க!" என்றார் ஆவகர். அவன் நோக்க "உளம் சோர்கையில் இன்சுவை உணவை உண்க! அது ஒரு செய்தியென்றாவதை உணரமுடியும். விண்ணிலும் மண்ணிலும் தேவர்களும் பருப்பொருட்களும் நம் மீது கனிந்திருக்கிறார்கள். ஆகவேதான் இன்சுவை என ஒன்றை படைத்திருக்கிறார்கள். எத்துயரிலும் எவ்வெறுமையிலும் நாக்கு இனிமையை உணரத்தான் செய்கிறது. அது ஒரு சொல்லுறுதி. இங்கிருந்து எவ்வண்ணமும் மீண்டுவிடமுடியும் என்னும் நம்பிக்கை. உண்க!" என்றார்.

அவன் அந்த இனிய கனியையும் கிழங்கையும் சுவைத்து உண்டான். நீர் அருந்திவிட்டு படுத்து அக்கணமே விழிமூடி துயில்கொள்ளத் தொடங்கினான். மறுநாள் வெயிலொளி விழிமேல் பட விழித்தெழுந்தபோது அவன் உள்ளம் தெளிந்திருந்தது. தலைக்குமேல் ஆலமரத்தின் இலைத்தகடுகள் ஒளிகொண்டு அசைந்தன. வெயில் விழிகளை நிறைத்து உள்ளத்தையும் ஒளிரச்செய்தது. அருகே சூதர் அமர்ந்திருப்பதை உணர்ந்து எழுந்தமர்ந்தான். "நான் விடைகொள்கிறேன்" என்றார் முதியவர். "சூதரே, எனக்கென சொல் எதையேனும் விட்டுச்செல்க!" என்றான் கர்ணன். "எத்துயரும் அதைக் கடந்து நாம் வளர்கையிலேயே அகலும். வளர்க!" என்றார் சூதர். அவன் அவரை வணங்க, வாழ்த்துரைத்த பின் அவர் கிளம்பிச்சென்றார்.

மேலும் இரு நாட்கள் தான் வளர்வதெப்படி என்று எண்ணியபடி வழிநடந்தான் கர்ணன். கற்பதனூடாக மட்டுமே வளரலாகும் என்று கண்டடைந்தான். தனக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை கண்டடைய வேண்டும் என்று உறுதிகொண்டான். தென்திசை நோக்கி சென்றுகொண்டே இருக்கையில் இரண்டாவது சூதரான சம்வகரை கண்டடைந்தான். அவர்

சுனைக்கரையில் அமர்ந்து தூண்டிலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தார். அவன் அவர் அருகே சென்று வணங்கிவிட்டு சுனையை கலக்கலாகாது என அகன்று சென்று நீரை அள்ளி அருந்தினான். தூண்டிலை இழுத்து மீனை எடுத்த சம்வகர் மீனுடன் காட்டுக்குள் செல்வதை கண்டான். ஆர்வம் தோன்ற அவரைத் தொடர்ந்து சென்றான். அந்த மீனை அவர் அங்கே சிறிய மரப்பொந்து ஒன்றுக்குள் இறகுகள் உதிர்ந்து இறக்கும் நிலையிலிருந்த கொக்குக்கு கொடுத்தார். அது அந்த மீனை வாங்கி உண்டது.

அவனை நோக்கி திரும்பிய சம்வகர் "அதன் இறுதி விழைவு. அதை கடக்காவிடில் அது மீன் எனப் பிறக்கலாகும்" என்றார். அவரை வணங்கிய கர்ணன் "நான் என் ஆசிரியரை தேடிச்செல்கிறேன். எனக்குரிய ஆசிரியர் எவர்?" என்றான். "உன் முந்தைய ஆசிரியர் எவர் என்பதே வினா. அவரை வென்றவரோ வெல்லக்கூடுபவரோதான் உன் ஆசிரியர்" என்றார் சம்வகர். "நான் துரோணரின் மாணவன்" என்றான் கர்ணன். "எனில் உன் ஆசிரியர்கள் மூவர். பீஷ்மர், சரத்வான், பரசுராமர்" என்றார் சம்வகர். "சூதரே, நான் பரசுராமரை எங்கே சந்திப்பேன்?" என்றான் கர்ணன். "ஆசிரியரும் உன்னை சந்திக்க விழையவேண்டும். நீ சென்றுகொண்டே இரு. அவரை சென்றடையாமல் நிலைகொள்ளாதே" என்றார் சம்வகர்.

மூன்றாமவரான பிரவாகர் ஒரு சாலையோர விடுதியில் அந்தியிருளில் அனல்மூட்டி அருகமர்ந்து கள்மயக்கில் கிணைமீட்டி இளிவரல் பாடிக்கொண்டிருந்தார். வணிகர்கள் சூழ்ந்தமர்ந்து அவரை கேட்டுச் சிரித்து ஊக்கிக்கொண்டிருந்தனர். அவன் அருகமர்ந்து அப்பாடலை கேட்டான். பின்னிரவில் அவர்கள் ஒவ்வொருவராக விழுந்து

துயில்கொண்டனர். அவர் அவனிடம் "நீ துயில்கொள்ளவில்லையா?" என்றார். "நான் மது அருந்தவில்லை" என்று அவன் சொன்னான். "சொல், நீ விழைவது என்ன?" என்றார். "நான் பரசுராமரை காணச்செல்கிறேன்" என்றான். அவர் நகைத்து "எந்தப் பரசுராமர்?" என்றார். அவன் "அறியேன், பெயரை அன்றி பிறிதெதையும் கேள்விப்பட்டதில்லை" என்றான்.

பிரவாகர் பரசுராமரின் கதையை பாடினார். பிருகுகுலத்து ஜமதக்னியின் துணைவி ரேணுகையின் மைந்தன் எனப் பிறந்து அன்னை தலையறுத்து தந்தையிடம் வரம்பெற்று அவர் இறப்பற்றவரானார். கார்த்தவீரியனின் ஆயிரம் கைகளை அறுத்துக் கொன்றார். ஷத்ரியகுலத்தை ஏழுமுறை கருவறுத்து ஐந்து ஏரிகளை குருதியால் நிரப்பி தந்தைக்கு நீர்க்கடன் முடித்தார். "அவர் வாழும் அந்நிலம் தென்னகத்தில் அமைந்துள்ளது. திருவிடத்தின் முனையில் பார்க்கவராமனின் அன்னை ரேணுகையின் நாடு அது. அதை ரேணுபுரி என்பார்கள். பரசுராமர் அன்னையை அணுகியதுமில்லை. அன்னையை விட்டு நீங்கியதுமில்லை என்கின்றன நூல்கள்." அவரை வணங்கி கர்ணன் ரேணுபுரி நோக்கி சென்றான்.

தண்டகாரண்யத்தில் கர்ணன் சந்தித்த சூதரான உத்வகர் அவனுடன் ஒருநாள் வழித்துணைவராக வந்தார். பரசுராமரின் கதையை அவர் அவனுக்கு மேலும் விரித்துரைத்தார். "பார்க்கவ குருமரபின் பதிநான்காவது பரசுராமர் இப்போது இருப்பவர். பதின்மூன்றாவது பரசுராமர் தண்டகாரண்யத்தில் பஞ்சாப்ஸரஸ் என்ற இடத்தில் தவம் செய்தார். முதல் பரசுராமர் பாரதவர்ஷத்தை ஐந்தாகப் பிரித்து ஐந்து ஷத்ரிய குலங்களை அமைத்தார். அந்நிலங்களின் பழங்குடிகளில்

வேதமும் தர்ப்பையும் அளிக்கப்பட்டவர்கள் பிருகு குலத்து பிராமணர்களானார்கள். செங்கோலும் மணிமுடியும் அளிக்கப்பட்டவர்கள் அக்னிகுல ஷத்ரியர்களானார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பரசுராமர் அமைந்தார். கிழக்கு திசையை அத்துவரிய ராமனும் வடக்கை உதகாத ராமனும் மத்திய தேசத்தை ஆசியப ராமனும் ஆரிய வர்த்தத்தை உபதிரஷ்ட ராமனும் அதற்கு அப்பால் உள்ள திருவிடத்தை சதசிய ராமனும் வழிநடத்தினர்.”

“சதசியகுலத்தைச் சேர்ந்தவர் இன்றிருக்கும் பரசுராமர். படைக்கலத்திறனும் படைத்திறனும் நூல்திறனும் அரசுசூழ்திறனும் அமைந்தவர். அவரை நாடிச் செல்க! காடுகள் எழுந்த மலைகளையும் நீர் பெருகிய பேராறுகளையும் வெயிலில் வெந்துகிடந்த பாழ்நிலங்களையும் கடந்து அங்கே சென்றடைய உன் உள்ளத்து உறுதியே வழிகாட்டியாக அமைக!” என்றார் உத்வகர். விவகர் அவனை கோதையின் கரைவரை அழைத்துச்சென்றார். ரேணுநாட்டின் பிரதீபம் என்னும் காட்டுக்குள் பரசுராமரின் குருகுலம் இருப்பதாக அவர் சொன்னார். பரசுராமரிடமிருந்து மட்டும் விற்கலை பயிலும் நிலையில் இருக்கும் பெருவில்லவர்களே அங்கு சென்றடையமுடியும் என்றார். கர்ணன் ரேணுநாட்டை சென்றடைந்தபோது அவன் தாடி மார்பை எட்டியிருந்தது. நீள்குழல் சடைபிடித்து தோளில் விரிந்திருந்தது. அவன் விழிகள் மட்டும் தவமுனிவர்களுக்குரிய ஒளி கொண்டிருந்தன.

ரேணுநாட்டில் அவன் சந்தித்த பரிவகர் அவனை அடர்காட்டின் நடுவே கோதாவரி நதிக்கரை ஓரத்தில் அமைந்த பரசுராமரின் குருநிலையை காண அழைத்துச்சென்றார். “அவரிடம் நீர் ஷத்ரியர் என சொல்லவேண்டியதில்லை” என்றார். “நான்

ஷத்ரியன் அல்ல, சூதன்" என்று அவன் சொன்னான். "ஷத்ரிய இயல்பு உம்மிடம் கூடவேண்டியதில்லை என்றேன்" என்றார் பரிவகர். "ஷத்ரிய ஆற்றலை அழித்து அனல்குலத்து அரசர்களை நிறுவும் வேள்வியில் தொடர்கிறது பரசுராமர்களின் பெருமரபு. நீர் சூதர் என்பதே தகுதி என்று உணர்க! எது உம்மை தகுதியற்றவராக்கியதோ அதனாலேயே இங்கு தகுதி பெறுகிறீர்." கர்ணன் அவரை வணங்கி "அவ்வாறே ஆகுக!" என்றான்.

கர்ணனை பராவகர் என்னும் முதிய சூதரிடம் அழைத்துச்சென்றார் பரிவகர். "இவர் பரசுராமரின் குருநிலையின் பாடகர். பிருகுகுடியின் கொடிவழியை பாடுபவர். இவர் அடிபணிக, ஆணைபெற்று காட்டுக்குள் நுழைக!" என்றார். அடிபணிந்தபோது பராவகர் சொன்னார். "ஒவ்வொருவரும் தங்கள் உச்சமொன்றைச் சென்றடைந்து அதில் ஏறிநின்றிருக்கும் ஒரு தருணம் உண்டு. அத்தருணத்தால் அவர்கள் மண்ணில் தோல்வியடைவார்கள், விண்ணவர்க்கு இனியவரும் ஆவார்கள். உன் வெற்றி எங்கு என நீயே முடிவுசெய்க!" கர்ணன் "ஆம்" என்றான். "உன் தந்தை உன்னால் பெருமைகொள்க!" என்றார் பராவகர். பராவகரின் குடிலில் கர்ணன் ஏழு நாட்கள் தங்கினான். அவர் அவனை பரசுராமரின் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களுடன் காட்டுக்குள் அனுப்பினார்.

கர்ணன் பரசுராமரின் யானைத்தோல் கூடாரத்தின் முன் மாணவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு நிறுத்தப்பட்டான். அதிகாலையில் வேள்வியின் நெய்ப்புகை மரக்கிளைகளின் இலையடர்வுகளில் தங்கி மெல்ல பிரிந்துகொண்டிருந்த அவ்வேளையில் அவன் அதுவே தன் இடமென்னும் நிறைவை

அடைந்தான். கூடாரத்திற்குள் புலித்தோல் விரிக்கப்பட்ட யோகபீடத்தில் நீண்ட வெண்ணிறத் தாடியுடன் அமர்ந்திருந்த பரசுராமர் வலக்கையில் இருந்த எழுத்தாணியையும் இடக்கையில் இருந்த சுவடியையும் விலக்கி ஏறிட்டு நோக்கி "நீ ஷத்ரியனா?" என்றார். "இல்லை ஆசிரியரே, நான் சூதன்" என்றான் கர்ணன். அவனை கூர்ந்து நோக்கி "ஷத்ரியனுக்குரிய தோற்றத்துடன் இருக்கிறாய்" என்றார் பரசுராமர். "அங்கநாட்டுச் சூதனாகிய அதிரதனுக்கும் ராதைக்கும் மைந்தன் நான். அஸ்தினபுரியின் இளவரசராகிய துரியோதனரின் அணுக்கத்தவன்" என்று கர்ணன் சொன்னான்.

அவனை மேலும் கூர்ந்து நோக்கியபடி "அந்த அனலைத் தொட்டு ஆணையிடு. நீ ஷத்ரியன் அல்ல என்று" என்றார். அவன் அந்த அனல்மேல் கையை வைத்து "நான் சூதன். அறிக, அனல்!" என்றான். அவர் "நீ கோருவதென்ன?" என்றார். "நான் இயல்பிலேயே போரியல்பு கொண்டிருக்கிறேன். ஆகவே என்னால் சவுக்கேந்தி குதிரைக்காரனாக வாழ முடியவில்லை. துரோணரிடம் விற்கலை கற்றேன். குலத்தின் பொருட்டு அவரால் சிறுமையுண்டேன். என் தன்மதிப்பைக் காக்கும் விற்கலை எனக்குத் தேவை" என்றான். அவர் அவன் விழிகளை நோக்கி "மண்ணாள விழைகிறாயா?" என்றார். அவன் வெறுமனே நிற்க "விற்கலையில் இனி நீ அறிய ஏதுமில்லை என உன் விழிகளும் விரல்களும் சொல்கின்றன" என்றார்.

கர்ணன் "ஆம், ஆசிரியரே. என் ஆணவம் அரியணையின்றி அமையாது" என்றான். புன்னகையுடன் "பாரதவர்ஷம் முழுக்க புதிய ஷத்ரியர்களை உருவாக்குவதே என் முதலாசிரியரின் ஆணை. நீ இங்கிருக்கலாம். போர்க்கலை பயிலலாம். என்னிடமே அனல்சான்று பெற்று ஷத்ரியனாகுக! மண்ணை

வென்று புனல்சான்று பெற்று முடிசூடு. உனக்கு பார்க்கவர்களின் வாழ்த்துரை துணையிருக்கும்" என்றார். அவர் பாதங்களை வணங்கி அருகமர்ந்தான் கர்ணன். அவன் தலைமேல் கைவைத்து "பொன்றாப் புகழ்பெறுக, அனைத்து நலன்களையும் கொள்க! விண்ணவரருள் இலங்குக!" என பரசுராமர் வாழ்த்தினார். கர்ணன் "என் நல்லூழ்" என்றான்.

பதினெட்டுமாத காலம் கர்ணன் பரசுராமருடன் இருந்தான். அவர் காலடிகளில் பணிவிடை செய்தான். அவர் உளம்மகிழும் மைந்தனும் ஆனான். அவர் பெருமதிப்பு கொள்ளும் மாணவனாகவும் உயர்ந்தான். அவன் அணுகுந்தோறும் அவனை பரசுராமர் அறியலானார். அவனிடம் ஒரு குறையை அவர் உணர்ந்தார். "உன்னில் ஓர் அணுவிடை பிழை உள்ளது. அது என்னவென்று அறிய விழைகிறேன்" என்று அவனிடம் சொன்னார். "உங்கள் அருளால் அதை வென்று கடப்பேன், ஆசிரியரே" என்று அவன் சொன்னான். கோதையின் கரையில் ஒருநாள் அந்தியில் அவர்கள் இருவரும் மட்டும் ஆலமரத்து அடியில் அமர்ந்திருக்கையில் பரசுராமர் அவன் விழிகளை நோக்கினார். "உன்னில் பிறழ்வது என்ன என கண்டுகொண்டேன்" என்றார்.

கர்ணன் திகைப்புடன் நோக்கி நின்றான். "சற்றுமுன் ஒரு மான் வழியில் நின்றது. என்னைக் கண்டு அது பிறிதொரு விலங்கு என்றே எண்ணியது. உன்னை நோக்கியபோது அதன் விழிகளில் அச்சத்தை கண்டேன். அது பார்ப்பது பிறிதொருவனை. இங்கு நீ வருவதற்கு முன்னரே இருந்தவன் அவன்" என்றார் பரசுராமர். "நீ இங்கே அமையவேண்டுமென்றால் உன்னிடம் இருப்பன அனைத்தையும் விட்டுவிடவேண்டும்" என்றார். "வரும்

வழியிலேயே ஒவ்வொன்றாக உதறிவிட்டேன், ஆசிரியரே. என் நிலமும் குடியும் அப்பால் பிறவி முன்நினைவுகள் என மறைந்துவிட்டன" என்று கர்ணன் சொன்னான். "உன் விழிகளில் வஞ்சம் தெரிகிறது" என்று பரசுராமர் சொன்னார். "வஞ்சம் ஊசிமுனையால் தொட்டு எடுக்குமளவுக்குச் சிறிதாயினும் வளரும் நஞ்சு அது. அதை உதறுக!"

கர்ணன் விழிதழைத்து "உதற முயல்கிறேன்" என்றான். "வஞ்சத்தை உதறுவது எளிதல்ல. வஞ்சத்தின்மேல் கடமையை, கல்வியை, ஞானத்தை போட்டாலும் அது அவற்றை மீறியே எழும். கனிவு ஒன்றே வஞ்சத்தை அழிப்பது, அனலை நீர் என." கர்ணன் பேசாமலிருந்தான். "அவ்வஞ்சத்துடன் நீ எதை கற்க இயலும்? நீ கற்பவை ஒவ்வொன்றின் ஓரத்திலும் அவ்வஞ்சம் வந்தமையும். நீ பெறுபவை அனைத்தும் திரிபடைந்தவையென்றாகும்" என்றார் பரசுராமர். "நான் என்ன செய்யவேண்டும், ஆசிரியரே?" என்று கர்ணன் கேட்டான். "வஞ்சத்தைக் கடப்பதற்கு எளிய வழி கனிவது. அது நெடுந்தொலைவு சென்று சிலரால் எய்தப்படுகிறது. ஒருகணத்தில் திரும்பி சிலரால் ஈட்டப்படுகிறது. ஆனால் வஞ்சத்தை நிறைவேற்றுவது மேலும் எளிய வழி. போர்வீரனுக்கு அது ஒப்பப்படுவதும் கூட."

அவன் தலைமேல் கைவைத்து "உன் வஞ்சம் எவருடன் என்று சொல். உன் வஞ்சத்தை எவ்வண்ணம் நிகழ்த்தப்போகிறாய் எனக் கூறு. என் வில்லை உனக்களிக்கிறேன். அதை ஏந்தியபடி சென்று உன் வஞ்சத்தை முடித்து திரும்பி என்னிடம் வா" என்றார். கர்ணன் திகைப்புடன் கைகூப்பி நோக்கி நின்றான். "இப்புவியில் எவரும் என் வில்முன் நின்று பொருத இயலாது. அதன் நாணோசையே அனைவரையும் பணியச் செய்யும். உன்

எதிரி எவராயினும் என் எதிரியே. செல்க, கொன்றோ வென்றோ பழிநிகர் செய்து மீள்க!" கர்ணன் கூப்பிய கைகள் நடுங்க அவரை நோக்கிக்கொண்டிருந்தான்.

"செல், இப்போதே கிளம்பு. பழிநிகர் செய்தபின் உன் உள்ளம் முற்றடங்கும். அதன் பிறகும் உனக்குக் கற்பதற்கு ஏதேனும் உண்டென்று தோன்றினால், அக்கல்வியால் ஆற்றுவதுண்டென்று தோன்றினால் திரும்பி வா. இல்லையேல் என் வில் உன்னை பலிகொண்டு என்னிடமே திரும்பும்" என்றார் பரசுராமர். கர்ணன் நீள்மூச்செறிந்தான். பின்னர் விழிதாழ்த்தி நிலம் நோக்கியபடி "என்னிடம் வஞ்சம் உள்ளது, ஆசிரியரே. அது ஆறாப் புண் என எனக்கு நோய் அளிக்கிறது. என் வஞ்சம் எவரிடம் என்பதும் தெரிகிறது. இந்த வில்லுடன் எழுந்தால் என் வஞ்சத்தை முழுமையாக நான் தீர்த்துவிடவும் முடியும். ஆனால்..." என்றான். "சொல்க!" என்றார்.

கர்ணன் சிலகணங்களுக்குப் பின் "என்னால் இயலவில்லை" என்றான். "ஏன்?" என்றார் பரசுராமர். "இந்த வில்லை நான் அறிவேன். இது வஞ்சங்களை எச்சமில்லாது துடைத்து அழித்த வரலாறு கொண்டது." பரசுராமர் புன்னகைத்தார். "நான் அவ்வண்ணம் அழிக்க விழையவில்லை. என்னால் அது இயலாது" என்றான் கர்ணன். "நீ கொடையளிப்பவர்களுக்கு அதற்கான தகுதி உண்டா?" என்று பரசுராமர் கேட்டார். "நான் ஒருபோதும் அதை எண்ணுவதில்லை" என்றான் கர்ணன். பரசுராமர் அவனை சற்றுநேரம் நோக்கிய பின் புன்னகை செய்தார். "நீ எவர் என நான் அறிகிறேன், இவ்வாறே என முன்னுணர்ந்துமிருந்தேன்" என்றார்.

"ஆனால் நஞ்சென உடலில் எழுந்தவையும் நுழைந்தவையும் முற்றாகவே வெளியேறிவிடவேண்டும். ஒரு துளி

எஞ்சினாலும்கூட அது நோயென்றாகி அழிவை கொண்டுவரும்" என்று பரசுராமர் தொடர்ந்து சொன்னார். கர்ணன் "நான் பிறிதொன்றும் இயற்றுவதற்கில்லை" என்றான். அவர் புன்னகைத்து "இம்முடிவால் ஒருநாள் நீ உன் இறப்பை ஈட்டிக்கொள்வாய்" என்றார். "அறிவேன்" என்று அவன் சொன்னான். அவர் கைநீட்டி அவன் தலையைத் தொட்டு "உங்களைப் போன்றவர்கள் இம்மண்ணில் பிறந்துகொண்டே இருக்கிறீர்கள். பிற அனைத்தையும் சிறியவை என்றும் பொருளற்றவை என்றும் காட்டிவிட்டு விண்மீள்கிறீர்கள்" என்றார்.

கர்ணன் அவருடன் உறைந்து அவருடைய வில் அவரென்று அவனை எண்ணுமளவுக்கு விற்கலை பயின்றுதேர்ந்தான். அவன் வில்தேர்ந்து எழுந்தோறும் விண்ணில் இந்திரன் அமைதியிழக்கலானான். மண்ணளக்கும் தேவர்கள் வந்து அவனிடம் கர்ணன் அடைந்த ஆற்றல்களைப்பற்றி சொல்லிக்கொண்டே இருந்தனர். பரசுராமர் அவனுக்கு தானறிந்த அனைத்தையும் கற்பித்தார். கற்றவை அவனில் எவ்வண்ணம் சென்றமைகின்றன என்று நோக்கி மேலும் கற்பித்தார். எந்த ஆசிரியரையும்போல சிலவற்றை கரந்தார். ஆனால் அவன் தன்னைப் போலாகி தன்னை விஞ்சும்படி எழக்கண்டு உளமகிழ்ந்தார். ஆசிரியர்கள் மாணவர்களிடம் தோற்கிறார்கள், ஏனென்றால் மாணவனாக தான் அழிவின்மைகொள்வதை உணர்கிறார்கள். அறுதிவெற்றி என்பது தம்மின் பெருமைகொண்ட தன் மாணவனை அடைதலே என அவர்கள் அறிகிறார்கள். எஞ்சிய இறுதி அம்பையும் பரசுராமர் கர்ணனுக்கு அளித்தார். அவன் இயல்பாக அந்த இடத்தை வந்தடைந்து அவரை வென்று வணங்கினான்.

விண்ணுக்கு எழுந்து அமராவதியில் இந்திரனின் அவையை அடைந்த சுரதன் என்னும் தேவன் "இன்று காலை கர்ணன் தன் அம்பு ஒன்றினூடாக விற்கலையில் நிறைவுகொண்டு பரசுராமருக்கு நிகர் என்றானான். கலைநிறைவு நிகழுமிடத்தில் தோன்றும் விண்வில் வானில் எழுந்தது. பொன்னொளி காற்றில் நிறைந்திருந்தது. அதைக் கண்டு அங்கே சென்று நோக்கினோம். அந்த அம்பு இலக்கடைந்தபோது விண்குவையில் இருந்து ஆம் ஆம் ஆம் என்னும் ஓசை எழக் கேட்டோம். இப்புவியில் பிறிதொரு வில்லவன் அவன் முன் நின்றிருக்க இயலாதென்று நிறுவிக்கொண்டோம். அதை உரைக்கும்பொருட்டே இங்கு வந்தோம்" என்றான்.

அரியணையிலிருந்து எழுந்த இந்திரன் "என் மைந்தன் அர்ஜுனன் அவனுடன் போரிட்டு நின்றிருக்க முடியாதா? அவன் அடைந்த அரிய அம்புகளை நான் அறிவேன்" என்றான். சுரதன் "இன்றிருக்கும் நிலையில் அரைநாழிகைப்பொழுதில் அர்ஜுனனை கர்ணன் கொல்வான்" என்றான். அவையிலிருந்த பிருஹஸ்பதி முனிவர் "அவர்கள் இருவரும் களத்தில் எதிரெதிர் நின்றே ஆகவேண்டும். கதிரோனும் விண்முதல்வனும் மண்ணில் மைந்தர்களைப் பெறுவது அதன்பொருட்டே" என்றார். இந்திரன் நிலையழிந்தவனாக அவையில் சுற்றிவந்தான். "அவனை எப்படி என் மைந்தன் வெல்வான்? அவன் ஆற்றலை எப்படி நாம் மட்டுப்படுத்த இயலும்? அமைச்சர்களே, கூறுக!" என்றான் இந்திரன்.

பிருஹஸ்பதி "அதற்குரிய வழி ஒன்றே. அவன் கற்கும் கலை முழுமையுறலாகாது" என்றார். "எவ்வண்ணம்?" என்றான் இந்திரன். "அவன் கலை நிறைவுற்று ஆசிரியரிடம் நற்சொல் பெறக்கூடாது" என்றார். "ஆனால் அவர்

உளம்நிறைந்திருக்கிறார். இப்புவியில் எதுவும் இனி தனக்கு எஞ்சவில்லை என்று உணர்ந்து உளம் நெகிழ்ந்திருக்கிறார். மாணவனை மைந்தன் எனத் தழுவிக்கொண்டு கோதையின் கரைக்குச் சென்று துயில்கொள்ளவிருக்கிறார். நாளை அவர் அவனை வாழ்த்தி வழியனுப்பி வைப்பார்" என்று சுரதன் சொன்னான். "ஆம், எனில் இன்றொருநாள் பொழுதிருக்கிறது என்றே பொருள். அரசே, அவன் அவரிடம் மறைத்த ஒன்றுள்ளது. அவன் ஷத்ரியன். சூதனென்று சொல்லி அவர் அளியை பெற்றிருக்கிறான். அவனுடைய ஷத்ரியத்தன்மை வெளிப்படுமென்றால் ஆசிரியர் முனிவார்" என்றார் பிருஹஸ்பதி.

"அதை நான் நிகழ்த்துகிறேன்" என்ற இந்திரன் ஒரு கருவண்டென வடிவுகொண்டு விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்தான். பரசுராமர் தலையை தன் தொடைமேல் வைத்துப் படுத்திருக்க, கர்ணன் தொடையின் அடியில் ஏதோ கடிப்பதை உணர்ந்தான். தொடை துடித்து விலக ஆசிரியர் "ம்ம்" என்றார். கர்ணன் தொடையை அசைக்கவில்லை. வலி தசைகளில் இருந்து நரம்புகள் வழியாக உடலெங்கும் பரவுவதை உற்று நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தான். அவன் கிளம்பி பதினைந்தாண்டு காலம் ஆகியிருந்தது. அப்பதினைந்தாண்டு காலத்தின் ஒவ்வொரு கணமும் வலியாக மாறி அவன்முன் விரிந்து கிடந்தது. வலியில் திளைத்த அந்த அரைநாழிகை நேரம் அப்பதினைந்தாண்டுகளுக்கு நிகராக நீண்டிருப்பதை அறிந்தான். உள்ளே ஏதோ நரம்பில் அந்த வண்டின் கொடுக்கு மெல்ல தொட்டது.

பரசுராமர் விழித்தெழுந்தபோது அவர் உடல் குருதியால் நனைந்திருப்பதை உணர்ந்தார். அக்கணமே அவனை

அடையாளம் கண்டுகொண்டு வில்லுடன் எழுந்தார். "சொல்க, நீ யார்?" என்றார். அவன் வணங்கி தான் சூதனே என்றாலும் தன் உள்ளம் தன்னை ஷத்ரியன் என்றே உணர்கிறது என்றான். அவர் தன் வில்லின் நாணைத் தொட்டபடி உளம்கூர்ந்து அவனை அறிந்தார். "ஆம், நீ ஷத்ரியனே. உன் அகமும் அதை அறியும். அறிந்தே என்னை பொய்சொல்லி ஏமாற்றினாய்" என்று அவனை நோக்கி சீறினார். "நீ கற்றவை அனைத்தும் உரிய தருணத்தில் உன்னைவிட்டு அகல்வதாக!" என்று தீச்சொல்லிட்டார். பின்னர் உளம்நெகிழ்ந்து அவனை தோளுறத் தழுவி வாழ்த்தும் அளித்தார். அவரை வணங்கி விடைபெற்று அவன் காட்டிலிருந்து வெளியேறினான்.

கர்ணன் காட்டின் விளிம்பிலமைந்த பராவகரின் குடிலுக்குச் சென்று அவரை வணங்கி கல்விநிறைந்து விடைகொள்வதாகச் சொன்னான். அவர் முதுமையில் நோக்கு மங்கலாகி உடல் நைந்து திண்ணையில் தன் சிப்பியாழுடன் அமர்ந்திருந்தார். "குருதிமணம் வருகிறதே?" என்றார். "என் குருதி அது" என்று அவன் சொன்னான். "என் உடலில் ஒரு சிறுபுண் உள்ளது." அவர் பற்களைக் காட்டி புன்னகைத்து "குருதிமணக்கும் கல்வி" என்றார். கர்ணன் ஒன்றும் சொல்லவில்லை. "வீரனே, அது நீயே ஈட்டிக்கொண்ட புண் என அறிவாயா?" கர்ணன் "ஆம்" என்றான். "நீ அளித்த கொடை. அதன் விளைவாக உன்னில் எஞ்சிய வஞ்சம். அந்தப் புண் என்றும் உன்னில் வலிகொண்டிருக்கும்." கர்ணன் "ஆம், அதை அப்போதே ஆசிரியர் சொன்னார்" என்றான்.

பராவகர் "வலி நன்று. அதைப்போல் உற்றதோழன் பிறிதில்லை. அது உடனுறைகையில் உனக்கு ஒருபோதும் ஐயம் எழாது. உன் ஊழும் உனது கொடையால் அமைவதே"

என்றார். கர்ணன் அவரை மீண்டும் வணங்கி அங்கிருந்து வடக்கு நோக்கி கிளம்பினான்.

இருட்கனி - 8

சூரியவட்டத்தில் ஆடுஅமை களத்தில் தன் கிணைப்பறையை மீட்டியபடி முதல் சூதரான அஜர் பாடினார். தோழரே, விஜயத்துடன் களம் நின்று பொருதும்பொருட்டு புறப்படும்போது அங்கநாட்டரசர் கர்ணன் தன் அன்னையாகிய ராதையை பார்க்கும்பொருட்டு சென்றார். அவரது பெற்றோர் நகருக்கு வெளியே ஒதுங்கிய மாளிகையில் எவருடனும் இணையாமல் தனித்து வாழ்ந்தனர் அப்போது. சூதர்களல்லாதவர்கள் மேல் அவர்கள் வஞ்சம் கொண்டிருந்தனர். சூதர்களை அவர்கள் பொருட்டென எண்ணவில்லை.

கர்ணன் களம்செல்லப்போவதில்லை என்ற செய்தி அரண்மனையெங்கும் பரவி அங்கிருந்து அங்கநாட்டிலும் சூழ்ந்திருந்தது. ஷத்ரியர் தங்கள் அவையிலிருந்து அங்கரை வெளியேற்றினர் என்று சிலர் சொன்னார்கள். அவருக்குக் கீழே நின்று போரிட ஷத்ரியர் எவரும் ஒருக்கமில்லை என்றனர். அங்கர் சிறுமைகொண்டு திரும்பிவந்து தன் அறைக்குள் முடங்கிக்கொண்டு மதுவருந்தி நிலைமறந்த நிலையில் இருக்கிறார் என்றார்கள். அவர் படைமுகம்கொண்டு எழுந்தபோதுகூட அது போருக்கென எவரும் அறியவில்லை. சிபிரத்தின் அருகே காட்டுக்குள் வேட்டைக்குச் செல்வதாகவே எண்ணினார்கள்.

அஸ்தினபுரியில் அரசர் அவைச்சிறுமை செய்யப்படுவது கண்டு சீற்றம்கொண்ட அரசி சுப்ரியை அவருடைய அறைக்குச் சென்று "ஆணென்றால் எழுந்து சென்று உங்களை அவைமதிப்பு இழக்கச்செய்த அவ்வீணர்களை போருக்கு அழையுங்கள். அவர்களை வென்று எழுங்கள். அன்றி நின்று பொருதி உயிர்விடுங்கள். இரண்டும் உங்கள் குடிக்கும் என் குருதியில் பிறந்த மைந்தருக்கும் பெருமையே. இவ்வண்ணம் அறைக்குள் புகுந்து பாணருடனும் பாங்கருடனும் அமர்ந்து மதுவருந்தி களியாட்டமிடுகையில் நீங்கள் அவர்கள் உரைத்த அனைத்துப் பழிச்சொற்களையும் நூறெனப் பெருக்கி சூடிக்கொள்கிறீர்கள். விதைகளென உலகமெங்கும் பரப்புகிறீர்கள். எழுக... ஆணென்றால் எழுக! மெய்யாகவே நற்குடிக்குருதி உங்கள் உடலில் ஓடுகிறதென்றால் எழுக!" என்றாள்.

ஆனால் அங்கர் எழவில்லை. களிமயக்கில் நகைத்துக்கொண்டிருந்தார். அவள் அவர் முன் சென்று நின்று குறுவாளை தன் கழுத்தில் வைத்து "இக்கணமே எழுக! இல்லையேல் இங்கேயே சங்கறுத்துவிழுந்து உங்களுக்கு மேலும் பழியமைப்பேன்" என்று கூச்சலிட்டாள். அங்கர் அதை நோக்கியும் விழிக்கு அப்பால் எதையும் பெற்றுக்கொள்ளாதவராக அமர்ந்திருந்தார். "ஆணிலி என்றால், தோளில் இருக்கும் உரம் நெஞ்சில் இல்லை என்றால் கலிங்கத்திற்கு வந்து என்னை சிறைகொண்டது ஏன்? ஏன் என் வாழ்க்கையை சிறுமைசெய்தீர்கள்?" என்று அவள் அழுகையுடன் கேட்டாள். அங்கர் மறுமொழி சொல்லவில்லை. விழிதாழ்த்தி வெற்றுமுகத்துடன் அமர்ந்திருந்தார்.

அவள் அந்தக் குறுவாளை நிலத்தில் வீசி "கீழ்மகனே, உன்பொருட்டு உயிர்விடுவதும் கீழ்மை. உன்னுடன் நான்

இருந்த நாட்களில் ஊறிய குருதி ஒரு சொட்டும் எஞ்சாமல் என் உடலில் இருந்து அகலவேண்டும். உன்னை எண்ணிய என் நெஞ்சு முற்றழியவேண்டும். இனி நான் உன் துணைவியும் அல்ல, உன் மெய்யோ எண்ணமோ வந்து தொட்டவளும் அல்ல" என்றபின் இறங்கி வெளியேறினாள். நாகர்களுடன் சேர்ந்து நாகினியானாள். தவம்செய்து இமையா விழிகொண்டவளாக மாறினாள். தோலுரித்து அகற்றும் நாகங்களைப்போல் நாகினியரும் ஆண்டுக்கு இருமுறை உடலை உரித்து அகற்றுவர். தன் உடலில் இருந்து அவள் அகன்று அகன்று சென்றுகொண்டே இருந்தாள்.

கதைகளினூடாக அக்காட்சி விரிந்து ஒவ்வொருவரும் நின்றுநோக்கி உளம்நடித்த ஒன்றாக மாறியது. அங்கரின் தரப்பை எளியோரே எடுத்துப்பேசினர். "இந்நிலம் அஸ்தினபுரியின் நட்பிலிருப்பது. அரசர் அஸ்தினபுரியின் பேரரசரின் அணுக்கர். அஸ்தினபுரி கூட்டும் படையவையில் எழுந்து உட்போருக்கு அறைகூவுவதைப்போல் நட்புப்பிழை பிறிதென்ன?" என்றனர். "ஆம், என்றும் அவர் நட்புக்கு கட்டுப்பட்டவர்" என்றனர் பெண்கள். ஆனால் அங்கநாட்டின் தொல்குடி ஷத்ரியர் சினம்கொண்டிருந்தார்கள். "அவர் எவரேனும் ஆகுக! அனைத்து அரசர்களும் கூடிய அவையிலிருந்து குலமிலி என நம் அரசர் அகற்றப்படுகையில் சிறுமைகொள்வது அவர் மட்டும் அல்ல. நம் குடிகளும் முன்னோரும் அவர்கள் அடிபணிந்து ஏத்திய இவ்வரியணையும்தான்." அவர்களில் சிலர் குரல் தாழ்த்தி "அரியணை தன்பெருமையை மீட்க வழி ஒன்றே உள்ளது. அதன்மேல் ஏறிய மாசு களையப்படவேண்டும்" என்றனர்.

தொல்குடியினர் அமர்ந்த அவையில் ஒருவன் அவ்வாறு சொல்ல ரிஷபகுடித் தலைவர் விஸ்வகீர்த்தி சினந்தெழுந்தார். “எவர் அதை சொன்னது? எழுக, அரசருக்கு எதிராக அதை சொன்னவன் எவன்?” என்றார். “நான் அதை சொன்னேன்” என்றபடி இளைய குடித்தலைவன் ஒருவன் எழுந்தான். “நான் முந்தைய படைத்தலைவரான கருணகரின் மைந்தன் வஜ்ரபாதன். இந்த அங்கநாடு தொல்பெருமைகொண்டது. தீர்க்கதமஸின் குருதிவழியில் வந்தது இதன் அரசகுடி. இன்று கலிங்கமும் வங்கமும் சென்றமரும் அவையில் இருந்து அங்கம் எழுப்பப்படுகிறது என்றால் என்ன பொருள்? குடிப்பெருமை குன்றும். ஆனால் குடியழிந்தோர் மீண்டும் அவையேறிய நிகழ்வே இல்லை. விழுந்த விலங்கு அக்கணமே உண்ணப்படும் என்பதே காட்டின் நெறி” என்றான்.

மேழிகுலத்து அசங்கர் “அவர் சொல்வதிலும் மெய்யுள்ளது” என்றார். எவரும் மறுமொழி சொல்லவில்லை. அங்கிருந்த ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் அஞ்சியதனால் எவரும் தொடர்ந்து அங்கே இருக்கவும் விழையவில்லை. அவை அவ்வண்ணமே கலைந்தது. ஆனால் வஜ்ரபாதனின் சொல் பரவியது. அவனைச் சூழ்ந்து ஷத்ரியர்களின் ஒரு திரள் எப்போதும் இருந்தது. அவன் அவர்களுடன் எப்போதும் படைகளிடமிருந்து தனித்திருந்தான். அவன் தனக்கென தனிப்படை திரட்டக்கூடும் என ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. போருக்குப் பின் அங்கநாட்டு ஷத்ரியர் கிளம்பிச்சென்று வெல்பவரைப் பணிந்து அங்கநாட்டுக்கு ஷத்ரியநிலையைக் கோரக்கூடும். அதற்கு ஏன் அதுவரை பிந்தவேண்டும், இப்போதே கிளம்பிச்சென்றாலென்ன என்றனர் சிலர்.

“எவ்வாறாயினும் பாரதவர்ஷத்தில் போர் எழுகிறது. நமது படைகள் ஒருங்கியிருக்கவேண்டும்” என்று அமைச்சர் ஹரிதர் ஆணையிட்டார். படைகளை அணிபயிற்ற கர்ணனின் உடன்பிறந்தோரான துருமனும் வித்பலனும் விருத்ரதனும் சத்ருந்தபனும் வந்தபோது வீரர்கள் அனைவரிலும் இருந்த ஆர்வமின்மை துலங்கித்தெரிந்தது. “நம் ஆணை எழுந்த முதற்கணம் நாம் காண்பது ஓர் அமைதியை. அதன்பின் படையிலிருந்து ஓர் அசைவு எழுகிறது. அது படைமுழுக்க பரவுகிறது. அதுவே நம் ஆணையின் செயல்வடிவாகிறது. பயின்ற படை ஆணையேற்கக் காத்திருக்கும் வேட்டைநாய் போலிருக்கும் என்பார்கள்” என்று துருமன் இளையோனிடம் சொன்னான்.

இரண்டு நாட்கள் படைப்பயிற்சி முடிந்த பின்னர் வித்பலன் “இவர்கள் நம்மை எதிர்க்கிறார்கள்” என்றான். விருத்ரதன் “ஆம், அதை நானும் உணர்ந்தேன்” என்றான். துருமன் தலையசைத்தான். ஆணை ஒன்றை இட்ட மறுகணமே திரும்பி அவர்களில் ஒரு வீரனின் விழிகளை நோக்கினான். அங்கிருந்த மீறலைக் கண்டு அவனை தனியாக அழைத்தான். அவன் உணர்வதென்ன என்றான். “நம்முடன் ஷத்ரியர் போரிடப்போவதில்லை. நாம் சூதர்களாக வகுக்கப்பட்டுவிட்டோம்” என்று அவன் சொன்னான்.

துருமன் அதைக் கேட்டு கால்கள் நடுங்கினான். செல்க என கையை காட்டிவிட்டு பீடத்தில் அமர்ந்துவிட்டான். “அது இப்படையின் பொது எண்ணம். அவர்கள் தங்கள் குடியும் நாடும் சிறுமையடைந்துவிட்டதாக எண்ணுகிறார்கள்” என்றான். “நாம் செய்வதற்கொன்றுமில்லை, இனி அரசர் முடிவெடுக்கட்டும்” என்றான் துருமன். ஆனால் கர்ணன்

கள்மயக்கிலேயே இருந்தான். அவனை அணுகிப்பேச எவராலும் இயலவில்லை. "பேசிப்பயனில்லை. சொற்கள் அவருக்குள் நிலைகொள்ளவில்லை" என்றார் சிவதர்.

அங்கநாட்டின் அரசவையில் அரியணை ஒழிந்திருக்க அருகே போடப்பட்ட சிறிய அரியணையில் அமர்ந்து விருஷசேனன்தான் ஆட்சி செய்தான். முடிவுகளை ஹரிதர் எடுத்தார். சிவதரின் ஆணைப்படி துருமன் ஹரிதரிடம் சென்று செய்தியை சொன்னான். விருஷசேனன் தானே பொறுப்பேற்றுக்கொள்வதாக சொன்னான். "எச்சொற்களும் அவர்களை தேற்றப்போவதில்லை, இளவரசே. அவர்கள் போருக்கு உளமெழுந்துவிட்டவர்கள். போரன்றி எதனாலும் ஆறமாட்டார்கள்" என்றார் ஹரிதர். "நான் செய்யக்கூடுவதென்ன என்று சொல்லுங்கள்" என்று விருஷசேனன் கேட்டான். "அங்கநாட்டு அதிரதரின் பெயர்மைந்தராகச் சென்று அவர்கள்முன் நின்றால் அவர்களால் புறக்கணிக்கப்படுவீர்கள். கலிங்கப் பேரரசி சுப்ரியையின் மைந்தனாகச் சென்று நில்லுங்கள்... அவர்கள் குடிப்பெருமையை குருதிமரபை உணரட்டும்" என்றார் ஹரிதர்.

இளையவர்கள் சூழ விருஷசேனன் அன்று படையணிவகுப்பை பார்க்கும்பொருட்டு சென்றான். திவிபதனும் சத்ருஞ்சயனும் சத்யசேனனும் விருஷகேதுவும் சித்ரசேனனும் சுஷேணனும் உடன்சென்றனர். சிறுவனாகிய சுதமன் மட்டும் அரண்மனையிலேயே இருந்தான். தந்தைக்கு அணுக்கமானவனாகவும் அவர் சொல்வதை உணர்பவனாகவும் அவனே எஞ்சினான். படைவிரிவை நோக்கி மேடையில் எழுந்து நின்றபோது விருஷசேனன் உடல்நடுங்கினான். அவன் பொற்பூச்சுள்ள கவசம் அணிந்திருந்தான். அருமணிகள் சுடர்ந்த

முடிசூடியிருந்தான். அவன் குரலுக்காக அங்கநாட்டுப் பெரும்படை காத்திருந்தது. அவன் குரலை அள்ளிப்பெருக்கி படைப்பெருக்கின்மேல் உமிழும் நீள்கூம்புவடிவ மேடைக்கூரை அவன் பேசுவதற்காக காத்திருந்தது.

தன்னையறியாமலேயே தன்னிலெழுந்து ஒலித்த குரலை தெய்வமிறங்கக் கண்டதுபோல் விருஷசேனன் உணர்ந்தான். "படைவீரர்களே அறிக, நான் அங்கநாட்டரசர் கர்ணனின் மைந்தன்! கதிர்மைந்தரின் குருதி. வெல்லற்கரிய விறல்கொண்ட விஜயத்தை ஏந்திய வீரரின் வழிவந்தவன்." அவன் குரல் ஒலித்த ஒருகணம் படை நாகத்தின் மணம் ஏற்ற யானைபோல் திகைத்து உடல்விதிர்த்து நின்றது. பின்னர் "அங்கர் வாழ்க! கதிர்மைந்தர் வாழ்க! கொடைவள்ளல் வாழ்க! வெற்றிகொள் வீரர் வாழ்க! பரசுராமரின் படைக்கலம் கொண்டவர் வாழ்க!" என வாழ்த்தொலிகள் எழுந்து விண்ணை நிறைத்தன.

அச்செய்தியை அப்பால் அரண்மனை மேடையில் அமர்ந்து நோக்கிய சுதமன் விழிகளில் நீருடன் எழுந்தோடிச்சென்று தந்தையின் அறைக்கதவைத் திறந்து "தந்தையே" என வீறிட்டான். நிகழ்ந்ததை அழுகையும் விம்மலுமாகச் சொல்லி "நீங்கள் அங்கே வாழ்கிறீர்கள். இங்கில்லை, இவ்வுடலில் இல்லை, அங்கிருக்கிறீர்கள் நீங்கள்" என்றான். கர்ணன் தலை நடுங்கிக்கொண்டிருக்க அவனை நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் கண்களை மூடிக்கொண்டான். அவன் விழியோரங்களில் நீர் வழிந்தது. சுதமன் "எழுக, தந்தையே! புகழ்கொள்க! நீங்கள் எங்கு சிறுமைசெய்யப்பட்டாலும் இங்கு உங்கள் குடிகள் நடுவே பெருமையை மட்டுமே கொண்டிருக்கிறீர்கள்" என்றான். கர்ணன் நடுங்கும் கையை

நீட்டி "செல்க... செல்க!" என்று கூச்சலிட்டான். "அகல்க... என் முன் நில்லாதே..." என்று கூவியபடி எழுந்து மீண்டும் கால்தளர்ந்து பீடத்தில் அமர்ந்தான். "மதுகொண்டு வருக... மது எங்கே?" என கூச்சலிட்டான். சுதமன் மெல்ல பின்னடைந்து விழிநீருடன் திரும்பிச்சென்றான்.

ஆனால் மறுநாள் கர்ணன் படையெழும்படி ஆணையிட்டான். அவன் கனவில் அவனை ஆளும் மாநாகங்கள் வந்தன என்றார்கள் அணுக்கர். படைக்கலநிலைக்குச் சென்று விஜயத்தை கையிலெடுத்தான். அதில் முதல் அம்பை வைத்ததுமே பிறிதொருவனென்றானான். அவனில் நாகங்கள் எழுந்தன என்றனர் ஏவலர். அவன் நிழலில் மாநாகப் படங்கள் தோன்றின. அவன் நீர்ப்பாவை நாகமென்றே தெரிந்தது. அவன் துயில்கொண்ட அறைக்குள் நாகச்சீறல்கள் எழுந்தன. அவனைச் சூழ்ந்திருக்கும் தூண்களும் கட்டில்கால்களுமெல்லாம் நாகங்களாயின. அவன் போருக்கெழுந்துவிட்டான் என்னும் செய்தியே சம்பாபுரியை விசைகொள்ளச் செய்தது. படைகளில் களிவெறி பரவியது. இல்லங்கள் தோறும் குடித்தெய்வங்கள் படையல்கொண்டன.

கர்ணன் தன் மைந்தர்கள் விருஷசேனனும் விருஷகேதுவும் உடன்வர அதிரதனும் ராதையும் வாழ்ந்த இல்லத்தை அடைந்தபோது வாயிலிலேயே அதிரதன் அவனுக்காகக் காத்து நின்றிருந்தார். அவன் தேரிலிருந்து இறங்கியபோது அவர் விழிகள் விரிந்தன என்றாலும் மெய்ப்பாடு எதுவும் தோன்றவில்லை. வெறுமனே திறந்த வாயுடன் பழுத்த விழிகளால் நோக்கி நின்றார். கர்ணன் அருகணைந்து "வணங்குகிறேன், தந்தையே" என்று சொல்லி

அவர் கால்களைத் தொட்டு சென்னிசூடினான். அவர் “நீள்வாழ்வுகொள்க!” என வாழ்த்தினார். மைந்தரும் வணங்கியபின் அவர்கள் உள்ளே சென்றார்கள். “அன்னை எங்கே?” என்று கர்ணன் கேட்டான். “சற்றே நோயுற்றிருக்கிறாள்” என்றார் அதிரதர்.

“நோயுற்றிருக்கிறாரா? அச்செய்தியே என்னை அடையவில்லையே?” என்றான் கர்ணன். “சின்னாட்களாகவே அவ்வப்போது நோயுறுகிறாள். அவளை இயக்கிய விசைகள் அவிந்து வருகின்றன. முதுமையல்லவா?” என்றார் அதிரதன். “இப்போது சிலநாட்களாக அவளுக்கு நோய் முதிர்ந்து வருகிறது. இன்று காலை எழவே முடியவில்லை என்றாள்...” அவர்கள் உள்ளறைக்குச் சென்றனர். மூதரசிக்குரிய மஞ்சத்தறை வாயிலில் இரு சூதர்குடிச் சேடியர் நின்றிருந்தார்கள். ராதை தன் குடியில் தன் கைபட எழுந்து வளர்ந்த பெண்களையே சேடியர் என்றும் ஏவலர் என்றும் ஒப்பினாள். பிற அனைவர் விழிகளிலும் இளிவரல் இருப்பதாக அவள் கருதினாள்.

மூத்த சேடியிடம் “அன்னை எவ்வண்ணம் இருக்கிறார்?” என்று கர்ணன் கேட்டான். “நோயென ஏதுமில்லை என மருத்துவர் சொன்னார்கள். நல்லுணவும் துயிலுமே போதும் என்றனர். ஆனால் அன்னை துயில்வதே இல்லை. அவர் சொல்லிக்கொண்டிருப்பது என்னவென்று எங்களுக்கு புரியவுமில்லை” என்றாள் மூத்த சேடி. கர்ணன் மஞ்சத்தறைக்குள் நுழைந்தான். அங்கே சேடி ஒருத்தி காலடியில் நின்றுகொண்டிருக்க ராதை விழிமூடிக் கிடந்தாள். இமைகளுக்குள் கருவிழி ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது. அவன் வருவதை அவள் அறிந்திருந்தாள். அவன்

தேரோசையையும் பேச்சொலியையும் அணுகும் காலடிகளையும் கேட்டிருந்தாள். அதன் பின்னரே விழிமூடி துயில்நடிக்கிறாள் என நன்கு தெரிந்தது.

அருகமர்ந்த கர்ணன் அவள் மெலிந்த கைகளை தன் பெரிய கைகளால் பற்றி நெஞ்சில் அணைத்துக்கொண்டு அவள் முகம்மேல் குனிந்து "எவ்வண்ணம் இருக்கிறீர்கள், அன்னையே?" என்றான். அவள் விழிதிறந்து அவனை நோக்கினாள். ஒருகணம் அவ்விழிகளில் மின்னி மறைந்தது வஞ்சமா என விருஷசேனன் ஐயம் கொண்டான். அவன் நோக்கியபோது விருஷகேதுவின் விழிகளிலும் அச்சத்தை கண்டான். "அன்னையே, நான் ராதேயனாகிய கர்ணன். உங்களை சந்தித்து விடைகொள்ளும்பொருட்டு வந்தேன்" என்றான் கர்ணன். "ம்" என அவள் முனகினாள். கண்களை மூடிக்கொண்டு பூனையைப்போல் முனகத் தொடங்கினாள். "அன்னையே, என்னை பாருங்கள். உங்களுக்கு என்ன செய்கிறது?" என்றான் கர்ணன்.

"என்ன செய்கிறது? ஒன்றுமில்லை. சாக்காடு அணுகிக்கொண்டிருக்கிறது. நான் இறந்தால் இங்கே ஒவ்வொருவரும் நிறைவடைவார்கள். அவர்களுக்கு அதற்குமேல் பொறுப்பும் கடனும் இல்லை அல்லவா?" என்றாள் ராதை. "என்ன சொல்கிறீர்கள், அன்னையே... உங்கள் மைந்தர் அல்லவா இந்நாடு முழுக்க அடிபணியக் காத்து நின்றிருக்கிறார்கள்!" என்ற கர்ணன் நிமிந்து அதிரதனிடம் "துருமன் வருவதுண்டல்லவா?" என்றான். "அவர்கள் அனைவரும் நாளுக்கு இருமுறை வந்து பார்த்துச் செல்கிறார்கள். அவர்கள் வரும்போதுதான் நோய் மிகுதியாகிறது" என்றார் அதிரதன். கர்ணன் "மருத்துவர்

நோக்கிக்கொள்வார்கள். அன்னையே, நீங்கள் எழுந்து ஆற்றல்கொண்டு எங்களை வாழ்த்துவீர்கள்" என்றான்.

"எனக்கு வாழ்வதற்கு விழைவில்லை" என்று ராதை சொன்னாள். "நான் பறவைகள் பறந்துபோனபின் காற்றில் சிதைந்த கூடு போலிருக்கிறேன். எவருக்கும் என் மேல் அன்பில்லை. ஏனென்றால் நான் எவருக்கும் இனிமேல் தேவையில்லை. தனித்த நோயுற்ற முதுமகள் எவருக்கும் பெருந்தொல்லையே." கர்ணன் "இந்த உளச்சோர்வு உங்களுக்கு ஏன் வந்தது? நானோ இளையோரோ மைந்தரோ பிறரோ உங்களுக்கு ஏதேனும் பிழை ஆற்றியிருந்தால் அன்னையென அமைந்து பொறுத்தருள்க!" என்றான். "அன்னையென்றா? நான் எவருக்கு அன்னை? அந்த எண்ணம் எவருக்கு இருக்கிறது? நான் அறிவேன். உனக்கும் உன் மைந்தருக்கும் இன்று நானே இழிவனைத்திற்கும் அடையாளம். நான் இறந்தால் இப்படி ஒருத்தி இருந்ததையே அழித்துவிடுவீர்கள். எள்ளும் நீரும் எனக்கு எவரும் அளிக்கப்போவதில்லை."

"ஏனென்றால் நான் சூதப்பெண்... அறிவில்லாதவள். குதிரைச்சாணி நாறும் உடல்கொண்டவள். என் நாற்றத்தை நான் தொட்டு எடுத்து முலையூட்டி வளர்த்த உன் மேலும் உன் கொடிவழியினர் மேலும் சுமத்திச் செல்கிறேன்..." கர்ணன் அவள் கைகளை அசைத்து "ஏன் இந்த வீண் எண்ணங்கள், அன்னையே? உங்கள் மைந்தன் என்ற அடையாளத்துடன் அல்லவா எந்த அவையிலும் எழுந்து நின்றிருக்கிறேன்" என்றான். "என் குருதியில் ஒரு மைந்தன் பிறந்திருக்கலாம். அவன் எந்நிலையிலும் என்னை கைவிட்டிருக்க மாட்டான். எனக்கு அவன் அளிக்கும் அன்னமும் நீரும் வந்துசேர்ந்திருக்கும். நீ வந்ததும் நான் செருக்கினேன். உன்

அழகையும் திறனையும் கண்டு இனி ஒரு மைந்தனே வேண்டாம் என விம்மினேன். அதை தெய்வங்கள் கேட்டன. என் கருவறையை மூடின.”

கர்ணன் அவள் கைகளை சிறுகுழவிபோல அசைத்தான். ராதை “என் மீட்புக்கான வழிகளை நானே மூடிக்கொண்டேன். என் இருளை நானே தேடிக்கொண்டேன்” என்று விம்மி அழுதாள். “அன்னையே...” என கர்ணன் சொல்வதற்குள் வாயிலுக்கு அப்பால் நின்றிருந்த அதிரதன் கைநீட்டி கூச்சலிட்டபடி உள்ளே வந்தார். “நிறுத்து... பேதைச்சொல்லுக்கு ஓர் எல்லை உண்டு...” என்றார். “வேண்டுமென்றே சொல்கிறாள். இவளுடைய நோய் வெறும் நடிப்பு. இவள் விடும் கண்ணீர் ஏமாற்று. இறங்கிச்சென்றால் உடன்வந்து அணைத்து ஏற்றிக்கொள்வார்கள் என நம்பும் கீழ்மை இது. அறிவிலா முதுபெண்டிர் அனைவரும் செய்வது... அவர்கள் இரக்கத்தை நாடி இதை சொல்லத் தொடங்குகிறார்கள். நாம் இரங்கும்தோறும் கீழிறங்கிச் செல்வார்கள். எங்கே நிறுத்திக்கொள்வதென்றே அறியமாட்டார்கள். ஒரு தருணத்தில் இவர்கள் பிறருக்கு துன்பம் மட்டுமே அளிப்பவர்களாக மாறுவார்கள். பிறரை துன்புறுத்துவதின் உவகையில் திளைப்பார்கள். அத்துன்பத்தால் பிறர்கொள்ளும் ஒவ்வாமையை தன்மீதான வெறுப்பென எண்ணிக்கொண்டு மேலும் துயருறுவார்கள். தன்னை துன்புறுத்தி பிறரையும் துன்புறுத்தி துன்பத்தில் திளைத்து இன்பத்தையும் நலத்தையும் மறந்தே விடுவார்கள்... நீ இவள் சொற்களை செவிகொள்ளாதே. இவள் நாவிலெழுந்து பேசுவது இவ்வுலகின் நன்மைகள் எதையுமே பொறுத்துக்கொள்ளாத கீழ்மைநிறைந்த ஓர் இருள்தெய்வம்.”

கர்ணன் "தந்தையே!" என்று சொல்ல நாவெடுப்பதற்குள் விசையுடன் ராதை எழுந்து அமர்ந்தாள். வஞ்சமும் வெறுப்பும் நிறைந்த விழிகளால் அதிரதனை நோக்கி "எவரிடம் இருள்? நான் இருளில் தடுமாறிக்கொண்டிருக்கிறேன். என்னை இருளில் தள்ளியது நீங்கள். நீங்களும் உங்கள் எடுப்பு மைந்தனும். நன்றிகொன்றோர் இறந்தபின் செல்லும் இருள் ஒன்று உண்டு என்பார்கள். நன்றி மறக்கப்பட்டோர் வாழும்போதே சென்று சேரும் இருள் ஒன்று உண்டு. அதில் வாழ்பவள் நான்" என்றாள். அவளுடைய நீட்டிய கைகள் அதிர்ந்தன. தலை நடுங்கியது. கழுத்துத்தசைகள் இழுபட்டு விதிர்க்க வாய்கோணலாகி துடித்தது. விழிகளிலிருந்து நீர் வழிய "என் அன்பு சிறுமைசெய்யப்பட்டது. என் கொடைகள் அனைத்தும் வீணாயின. என் வாழ்க்கையே பொருளிழந்தது" என்றாள்.

"தந்தையே" என கர்ணன் எழுந்து தடுக்க முயல அதிரதன் அவன் கையை உதறி மூச்சிரைக்க கூச்சலிட்டபடி முன்னால் வந்தார். "எவர் நன்றிகொன்றது? எவருக்கு நீ என்ன கொடுத்தாய் நன்றி மறப்பதற்கு? நீ பேசிக்கொண்டிருப்பது என்னிடம். உன்னுடன் எழுபது ஆண்டுகள் வாழ்ந்தவனிடம். மலடியென்று எத்தனை குடிக்கூடல்களில் இருந்து நீ எழுப்பி வெளியேற்றப்பட்டிருக்கிறாய்! எத்தனை மங்கலநிகழ்வுகளில் வெளியே நின்று வெதும்பி அழுதிருக்கிறாய். உன் உடன்பிறந்த தங்கையின் மணநாளில் நீ வரவேண்டாம் என்று வந்து சொல்லிச்சென்றாள் உன் அன்னை. நீ மறந்தாலும் நான் மறப்பேனா? உன் தங்கையின் குழவியை நீ தொட்டுவிட்டாய் என்பதற்காக உன்னை பிடித்து தென்வாயிலினூடாக வெளியே தள்ளினர். கொட்டும் மழையில் நீ நின்று அழுதாய். உன் தங்கையும் அவள் இல்லத்தாரும் அந்த மகவுக்கு ஏழுவகை

புகையிட்டு கண்ணேறு கழித்தனர். குடித்தெய்வத்திற்கு கருஞ்சேவல் குருதிகொண்டு கொடைமுடித்தனர்.”

வெறிகொண்டு அதிரதன் கூவினார். “சொல்லவா? இன்னும் சொல்லவேண்டுமா உனக்கு? உன் தமக்கை மகள் கருவுற்றிருந்தபோது உன் விழிபட்டு அவள் கரு கலைந்தது என்று அவர்கள் சாணிகரைத்த கலத்தை உன் தலைமேல் கொட்டி சிறுமைசெய்யவில்லையா? அவள் தந்தை உன்னை அறைந்து வீழ்த்தினார். அவள் அன்னை துடைப்பத்தால் உன்னை அடித்து வசைச்சொல் கூவினாள். அன்று உன் குடியும் ஊரும் வெறுமனே நோக்கிநின்றன. நீ நெஞ்சிலறைந்து அழுதபோது ஒருவரும் ஒரு சொல் உரைக்கவில்லை. அனைவரும் வாயிலை மூடிக்கொண்டு உள்ளே சென்றனர். உன்னை நான் வந்து அணைத்து அழைத்துவந்தேன். நீ உயிர்நீக்க விழைந்தாய். நானும் உடன்வருவேன் என்றேன். அதைக் கேட்டு என்னை தழுவிக்கொண்டு அழுதாய்.”

“பன்னிரு நாட்கள் நாம் உணவும் நீரும் ஒழிந்து இருண்ட இல்லத்திற்குள் ஒடுங்கி அழுதுகொண்டிருந்தோம். அதன் பின்னர் இங்கே இருந்தால் துயர்பெருகும் என்று எண்ணியே ஊரை நீத்துச் சென்றோம். யமுனைக்கரையில் என் உறவினர் இல்லத்தில் ஒளிந்து என வாழ்ந்தோம். அன்று நம் கைக்கு வந்துசேர்ந்தான் இவன். கதிரொளி மிக்க மைந்தன். நீர்கொண்டு வந்த செல்வம் தெய்வக்கொடை என்பதனால் நீ ஈன்றதற்கு நிகரான அன்னையென்றானாய். உன் கலி அகன்றது. நீ பிறவிப்பயன் அடைந்தாய். அன்று இவனை நெஞ்சோடணைத்துக்கொண்டு நீ கதறியழுததைக் கண்டு நானும் அழுதேன். பன்னிரு நாட்கள் சிரிப்பும் அழுகையுமாக பிச்சி போலிருந்தாய். உன் உளம் பேதலித்துவிட்டதென்றே

எண்ணினேன். குடித்தெய்வங்களின் காலடியில் சென்று விழுந்தாய். தலையால் கல்பீடத்தை அறைந்து குருதி பெருக்கினாய். நள்ளிரவில் துயிலில் எழுந்து அமர்ந்து கூச்சலிட்டு நகைத்தாய். நெஞ்சிலறைந்து அழுதாய். உன்னைக் கண்டு நானும் பித்தனென்றே இருந்தேன்."

"அவனை நெஞ்சோடணைத்தபடி உன் தமக்கையின் இல்லத்தின் முன் சென்று நின்று அறைகூவினாய். வந்து பார், இதோ என் மைந்தன், அவன் அடிப்பொடியை உன் தலைமேல் சூடி பிறவிப்பழி தீர்த்துக்கொள் என்று கூவினாய். மைந்தனுடன் உன் குலத்தினரின் இல்லந்தோறும் சென்றாய். உன் சிறுமையை தீர்க்கவந்தவன் இவன். சிறுமைகொண்டவளே, நீ அவனுக்கு அளித்ததுதான் என்ன? முலைப்பாலா? அதை உன் நெஞ்சில் ஊற்றெடுக்கச் செய்தவனே அவன் அல்லவா? தெய்வங்கள் அவனுக்கு அளித்த அமுது அது. அவனுக்கு நீ ஊட்டிய கைப்பிடி அன்னத்தையா கணக்கெனச் சொல்கிறாய்? அவன் வந்தபின்னர் அல்லவா உன் அடுப்பில் அன்னம் ஒழியாமலாயிற்று? கீழ்மகளே, நீ கொண்டிருக்கும் அனைத்தும் அவன் உனக்கு அளித்தது..." அவர் மூச்சிரைக்க குரல் உடைய நடுங்கும் கைகளை நீட்டியபடி சொன்னார் "நீயும் நானும் அவனுக்கு அளித்தது ஒன்றுமில்லை. நாம் அவனிடம் இரந்துபெற்ற இரவலர் மட்டுமே."

"அவனுக்கு நாம் அளித்தது எல்லாம் குதிரைச்சூதன் என்னும் இழிவைத்தான். இதோ அரசர்கள் அமைந்த அவையிலிருந்து அவனை சிறுமைசெய்து எழுப்பி அனுப்பியிருக்கிறார்கள். என் மைந்தன் ஆண்மையும் ஆற்றலும் அழிந்து களிமகனாக அரண்மனையில் அமர்ந்திருக்கிறான் என்ற செய்தி கேட்டு நெஞ்சில் பந்தத்தால் சுட்டுக்கொண்டதைப்போல் உணர்ந்தேன்.

இம்மண்ணில் எவரும் என் மைந்தனுக்கு என்னைப்போல் தீங்கிழைக்கவில்லை. அவனால் அமைந்தது தந்தை எனும் நிலை எனக்கு. செல்வமும் மதிப்பும் அவன் அளித்தது. அவனால் பெருகியது என் குலம். மாற்றாக நான் அவனுக்கு அளித்தது இழிவை மட்டுமே...” என்று அதிரதன் விம்மியழுதார். கர்ணன் ஏதோ சொல்லப்போக விருஷசேனன் “வேண்டாம், தந்தையே” என மெல்லிய குரலில் அவனை நிறுத்தினான். “அவர்கள் சொல்லி முடிக்கட்டும்” என்றான்.

ராதை அயர்ந்துபோய் நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் கன்னங்களில் இமைமயிர் விழிநீர் உலர்ந்த பிசுக்கில் ஒட்டிக்கொண்டிருந்தது. அவர்கள் நடுவே வேறு எவரும் அப்போது இல்லை எனத் தோன்றியது. அவர் இருமலும் இளைப்புமாக இடைவெளி விட்டபோது அவள் தன் சீற்றத்தை திரட்டிக்கொண்டாள். “ஆம், நான் அவனிடமிருந்து பெற்றுக்கொண்டேன். ஆனால் அவனுக்கு தீங்கிழைக்கவில்லை. தீங்கிழைத்தது எவர்? அவன் சூதர்பெண்ணை மணம்புரிந்தாகவேண்டும் என வலியுறுத்தி உணவொழிந்தது நீங்கள். உங்கள் நிலைகண்டு அவனிடம் அதற்குரிய சொல்பெற்றுத் தந்தேன். விண்ணில் வாழும் உங்கள் மூதாதையருக்கு நீர்க்கடன் கிடைத்தது. எனக்கு என்ன கிடைத்தது? நான் எதையும் பெறவில்லை... எச்சில் இலை என இதோ வீசப்பட்டுவிட்டேன். இங்கேயே செத்து அழிகிறேன்.”

அதிரதன் தன்னை திரட்டிக்கொண்டார். “என்ன கிடைத்தது என்றா கேட்கிறாய்? உனக்கு அன்னையெனும் இடத்தை அளித்தான். தன்னைப் பெற்ற அன்னை என அவைநடுவே மதிப்பை அளித்தான். நீ அறிந்திருக்கவேண்டும். அவன் விலக்கியதனால் நான் இன்றுவரை சொன்னதில்லை. இவன்

எவர் என்று அறிவாயா? அஸ்தினபுரியின் பேரரசி குந்தியின் மைந்தன். அஸ்தினபுரிக்கும் இந்திரப்பிரஸ்தத்திற்கும் அரசனாக வேண்டியவன். நூற்றைந்து தம்பியர் சூழ அரியணை அமர்ந்து மும்முடி சூடி பாரதவர்ஷத்தை முழுதாளவேண்டியவன். இவன் இளமைந்தனாக இருக்கையில் இவன் தாய்மாமன் வசுதேவன் இங்கே வந்தார். இவன் தன்னுடன் வந்து அஸ்தினபுரியின் அவையில் எழுந்து தான் குந்தியின் மைந்தன் என்று அறிவிக்கவேண்டும் என்று சொன்னார். அவர் உடனிருந்து அதற்கு சான்று உரைப்பார் என்றார். குந்தியால் அதை மறுக்கவியலாது. மறுப்பாரென்றால் தன் கொழுநனின் பெயர்சொல்லி அனல்தொட்டு ஆணையிடும்படி கோரலாம் என்றார்."

"அன்று இதோ இந்த நகரில், புரவிகளை நீராட்டும் கங்கைப்படித்துறையில் அமர்ந்திருந்தோம். இவன் அகவை முதிரா இளைஞன். அவர் எவரென்றும் எதன்பொருட்டு தேடிவந்திருக்கிறார் என்றும் நான் அன்று அறிந்திருக்கவில்லை. அவர் என்ன சொன்னார் என்றும் இவன் என்ன மறுமொழி உரைத்தான் என்றும் நான் அறிந்தது மீண்டும் நாற்பதாண்டுகளுக்குப் பின் வசுதேவன் தன் நாவால் என்னிடம் உரைத்தபோதுதான். அன்று அவர்களை பேசவிட்டு நான் எழுந்து அப்பால் சென்றேன். அவர் அவனுக்கு ஏதோ புரவிப்பணியை அளிக்க வந்துள்ளார் என்றே எண்ணினேன். எவ்வகையிலேனும் அவன் இங்கிருந்து விட்டுச்சென்றால் நன்றே என எண்ணிக்கொண்டிருந்தேன்."

"ஏனென்றால் இங்கே அத்தனை ஷத்ரியர்களையும் தன் உயரத்தாலும் அழகாலும் பொறாமைகொள்ளச் செய்தான். அவர்களால் சிறுமைசெய்யப்பட்டான். அவர்களிடமிருந்து தப்ப

மையச்சாலைகளை ஒழிந்து சிறுபாதைகளினூடாக நடந்தான். புரவிக்கொட்டில்களில் சூதர்களுடனேயே இருந்தான். தேரோட்டவோ நீராடவோ பலர்முன் எழுந்ததே இல்லை. ஆயினும் தொடர்ந்து வந்தது இழிவு. விலகிப்போ புரவிச்சூதனே என அவனை நோக்கி கூவினர் அந்தணர். புரவிச்சாணி நாறுகிறதே இவனால்தானா என இளிவரல் கூறினர் காவலர். எழுந்த பேருடலைக் குறுக்கி விழிகளை நிலம்நோக்கித் தழைத்து அவன் நடப்பதைக் கண்டு நான் விழிநீர் வடித்திருக்கிறேன். இன்றுவரை என் மைந்தன் விழிசாய்த்து அமர்ந்திருக்கிறான் எனில் அது அன்று வந்த பழக்கம்."

"ஆனால் அவன் தன் தாய்வழி மாமனின் விழிகளை நோக்கி சொன்னான். 'அஸ்தினபுரியின் அரசியை நான் அன்னை எனச் சொன்னால் ராதேயன் அல்லாமல் ஆகிவிடுவேன் அல்லவா?' என்று. வசுதேவன் திகைப்புடன் 'ஆம், அவள் உன்னை வளர்த்த அன்னை மட்டுமே' என்றார். "நான் ராதையின் மைந்தன். வாழ்நாள் முழுமைக்கும் அவ்வாறே. மறைந்தபின் என் கொடிவழிக்கும் அவரே பேரன்னை. அவரை துறந்து நான் அடையும் அரசும் குடியும் உறவும் புகழும் ஏதுமில்லை. தெய்வங்களும் இல்லை' என்றான். அவர் அவன் கையைப்பற்றி 'மைந்தா, நான் சொல்வதென்ன என்று நீ முழுதுணரவில்லை. நான் உனக்களிப்பது பாரதவர்ஷத்தின் சக்ரவர்த்தியின் மணிமுடியை. வெல்லமுடியாத பெருங்குடியை' என்றார். 'என் அன்னையைவிட்டு ஒரு மறு எண்ணமில்லை. என் தந்தைக்கு மைந்தனாக அல்லாமல் நின்றிருக்கும் அவை என ஏதும் எனக்கில்லை' என்றபின் திரும்பிச்சென்றான். நான் அவன் பின்னால் சென்று 'அவருடன் செல்வதே உனக்கு நல்லது, மைந்தா' என்றேன். 'உங்களை விட்டு எங்கும்

செல்லப்போவதில்லை. நான் ராதேயனாகிய கர்ணன்' என்றான் என் மைந்தன்."

"அச்செய்தியை என்னிடம் வசுதேவர் மதுமயக்கில் சொன்ன அன்று நான் நெஞ்சை ஓங்கி அறைந்துகொண்டு அழுதேன். எழுந்தோடி குதிரைக்கொட்டிலுக்குள் சென்று புரவிகளின் மேல் முகம்புதைத்து கதறினேன். கீழ்மகளே, உன்னை விண்ணேற்றும் சொல் அது. உனக்கு தெய்வங்கள் அருளிய பேறு. உன் வாழ்வுக்குப் பொருளாகி வந்த வேதம். அதை உணரும் உளவிரிவு உனக்கில்லை. எனக்குமில்லை அந்த விரிவு. அன்று வில்தேர் களம் நடுவே சவுக்குடன் குதிரைச்சாணி நாறும் உடலுடன் சென்று நின்று வணங்கிய என்னை நெஞ்சோடணைத்து அவன் என் தந்தை என்றான். அக்கணமே நான் தேவர்களால் வாழ்த்தப்பட்டேன். அதை உணரவும் என் நெஞ்சில் ஒளியிருக்கவில்லை. இப்புவியில் அவன் அளித்த கொடையெதையும் எவருமே முழுதுற வாங்கிக்கொள்ளவில்லை. இரந்த கையும் நீட்டிய கலமும் நிறைந்து வழியவே அவன் அளித்திருக்கிறான். அவனுக்கு எவரும் எதையும் அளித்ததில்லை. எவரிடமும் கொள்ளும் நிலையில் அவன் இல்லை. விண்ணிலூரும் கதிரவனுக்குக் கொடையென எவரும் எதையும் அளிக்கவியலாது. நீ அளிக்கும் எதுவும் அவன் சுடரனல் வளையத்தைக் கடந்து சென்றணைவதில்லை."

அதிரதன் நெஞ்சைப் பற்றியபடி நின்றார். அவர் விழுந்துவிடுவார் என்று தோன்றியது. சுவரை பிடித்துக் கொண்டு இருமுறை இருமினார். பின்னர் திரும்பி நடந்து அகன்றார். ராதையின் உடலில் வலிப்பு வந்தது. வாய் இழுபட்டுக்கொள்ள அவள் உடல் விதிர்த்தது. கர்ணன் அவள்

கைகளை பற்றிக்கொண்டான். சேடி வந்து அகிபீனாப் புகையை அவள் மூக்கருகே காட்டினாள். "அவ்வப்போது இது எழுகிறது. அவர்களே இதை வரவழைத்துக்கொள்கிறார்கள் என்று மருத்துவர் சொல்கிறார்கள். ஒவ்வொரு முறை இது வந்து மீண்டதும் மேலும் நலிவடைகிறார்கள்" என்றாள். ராதை மெல்ல உடல்தளர்ந்தாள். முதிய முகம் தசை தொய்ந்து சரிய மூச்சொலி எழுந்தது. கர்ணன் பெருமூச்சுடன் எழுந்துகொண்டான்.

இருட்கனி - 9

அதிரதனின் இல்லத்திலிருந்து தன் அரண்மனை நோக்கி செல்கையில் தேரில் உடனிருந்த விருஷசேனனும் விருஷகேதுவும் கர்ணனிடமிருந்த ஆழ்ந்த அமைதியை அறிந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் விழிநோக்கிக் கொண்டார்கள். சம்பாபுரியின் தெருக்கள் உச்சிவெயிலுக்கு அடங்கி ஓயத்தொடங்கிவிட்டிருந்தன. கர்ணனின் தேர் செல்வதை மக்கள் அறிந்ததாகத் தெரியவில்லை. எந்த அணியுமில்லாத விரைவுத்தேர் அது. அதன் செம்பட்டுத் திரைச்சீலைகளை காணநேர்ந்த சிலர் உள்ளிருப்பவர் எவர் என நோக்கி அது கர்ணன் என அடையாளம் காண்பதற்குள் தேர் அவர்களை கடந்துசென்றது.

அரண்மனையை தேர் சென்றடைந்தபோது கர்ணன் பெருமூச்சுடன் ஒன்றும் சொல்லாமல் இறங்கி நடைவாயிலை நோக்கி சென்றான். விருஷகேதுவும் விருஷசேனனும் இறங்கி நிற்க அவர்களின் உடையின் வண்ண அசைவை வெண்பளிங்குச் சுவரில் கண்டு கர்ணன் திரும்பி நோக்கினான்.

அவர்களை எவர் என்பதுபோல விழிசுருக்கி பார்ப்பதாகத் தோன்றியது. பின்னர் கைவீசி அவர்களை தன்னைத் தொடரும்படி ஆணையிட்டுவிட்டு நடந்தான். மெய்யாகவே அவன் தன்னை தொடரும்படி ஆணையிட்டானா என்னும் ஐயத்துடன் மூத்தவனை விருஷகேது நோக்கினான். விருஷசேனன் "செல்க!" என்றபடி நடக்க அவனும் தொடர்ந்தான்.

கர்ணன் பட்டம் ஏற்றபின் கட்டிய பெரிய அரண்மனையின் நீண்ட இடைநாழி தேவதாரு மரத்தாலான தரைகொண்டது. மெழுகு தேய்க்கப்பட்ட அப்பரப்பின்மேல் கர்ணனின் வண்ண உடல்தோற்றம் நீண்டு சென்றது. விருஷகேது அதை நோக்கியபடி நடந்தான். யானைகளுக்குரிய நடை. ஆனால் உடல்தசைகளின் அசைவு சிம்மங்களுக்குரியது. தசைகள் இயல்பாக தளர்ந்திருப்பவை என்றும், பேராற்றல் கொண்டவை என்றும் ஒரே தருணத்தில் தோன்றச்செய்பவை. முன்னால் சென்ற விருஷசேனன் தந்தையின் இன்னொரு உருவம் எனத் தோன்ற விருஷகேது விழிதிகைத்தான். முதிய கர்ணனை இளைய கர்ணன் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான்.

அவன் தன் முகத்தை ஆடியில் நோக்க விழைந்தான். அவன் தன் அன்னையின் தோற்றத்தை கொண்டிருந்தான். கர்ணனின் உயரமும் கருநிறமும் அவனுக்கு அமையவில்லை. இளமையிலேயே அன்னையின் மடியிலிருந்து வளர்ந்தமையால் அவன் விற்கலையிலும் வாட்கலையிலும் பயிற்சி கொள்ளவில்லை. சேடியராலும் செவிலியராலும் அவன் வளர்க்கப்பட்டான். அரண்மனையின் குளிர்ந்து விரிந்த அமைதிநிறைந்த மாற்றமின்மையை, மீள மீள ஒன்றே நிகழும் வெறுமையை விரும்பினான். இளமையின் தனிமை அவனை

கற்பனைகளுக்கு கொண்டுசென்றது. மொழியை அவன் பற்றிக்கொண்டான். நூல்நவில்வதில் ஆர்வம் கொண்டிருந்தான்.

மூத்தவர்களின் எந்தக் களியாட்டிலும் அவன் கலந்துகொண்டதில்லை. கர்ணனைப்போலவே அணிகள் பூண்டு, அவனைப்போலவே சற்றே தாழ்ந்த விழிகளுடன் நீளுடலை சாய்த்து பீடத்தில் அமர்ந்திருக்கும் விருஷசேனனையும் அவனுடைய மாற்றுரு என்றே தோன்றும் பிற மூத்தவர்களையும் பார்க்கையில் அவர்களின் குருதி அல்ல தன்னுடையது என்று அவன் உணர்ந்தான். அவர்கள் முழங்கும் ஆழ்ந்த குரல் கொண்டிருந்தார்கள். இயல்பாக பேருடல் கொண்டவர்களிடமிருக்கும் தளர்வசைவுகள் கொண்டவர்களாகவும் பயிற்சி என்றும் விளையாட்டென்றும் போரென்றும் எழுகையில் நாண் இழுபட்ட வில் என நின்றிருப்பவர்களாகவும் இருந்தனர். அங்கர் நான்கு பக்கமும் சூழ்ந்த ஆடிகளில் தன்னை நோக்கிக்கொண்டார். மைந்தர்களெனப் பெருகிச்சூழ்ந்தார் என பாடினர் சூதர்.

பாண்டவ, கௌரவ மைந்தர்கள் எவருடனும் அவனுக்கு அணுக்கத் தொடர்பு இருக்கவில்லை. பாண்டவ மைந்தர்களும் கௌரவ மைந்தர்களும் இணைந்தே அஸ்தினபுரியிலும் பின்னர் துரோணரின் குருநிலையிலும் பயின்றனர். அவன் மூத்தாரும் அங்கே பயின்றனர். அஸ்தினபுரிக்கு உரிய அணிக்காட்டில் வேட்டையாடினர். கங்கையில் நீர்விளையாடினர். அவன் எப்போதும் அகன்றிருந்து நோக்குபவனாகவே இருந்தான். அதனால் அவர்களால் அவன் ஏளனம் செய்யப்பட்டான். ஆனால் அவன் உடன்பிறந்தார் அவனை எப்போதும் சிறுவன் என, அரியவன் என எண்ணிப் பேணினர். ஏளனம் இளிவரலாக ஒருபோதும் மாறியதில்லை. விருஷசேனன் அவனை தன்

மைந்தன் என்றே எண்ணினான். அவனைவிட இளையவரான சுசேஷணனும் சுதமனும் அவனை இளையவனாகவே நடத்தினர்.

அவர்களில் பிரதிவிந்தியனும் யௌதேயனும் மட்டுமே அவனுக்கு அணுக்கமானவர்கள். அவர்களும் விளையாட்டுக்களில் கலந்துகொள்வதில்லை. ஒதுங்கியிருந்து நோக்கி மகிழ்வார்கள். அவ்விளையாட்டுக்கள் பற்றிய கருத்துக்களை உருவாக்கிக் கொள்வார்கள். அவற்றையே சொல்லாடலாக ஆக்கிக்கொண்டு அதில் நெடுந்தொலைவு செல்வார்கள். சில தருணங்களில் அவர்கள் விளையாடி முடித்து மீண்டு வரும்போதுகூட அவர்களின் சொல்லாடல் முடிவுற்றிருக்காது. லக்ஷ்மணன் எப்போதுமே இளிவரலாடுவான். உடன் துருமசேனனும் சேர்ந்துகொள்வான். சுதசோமனும் சர்வதனும் மூத்தோருக்கு துணைநிற்பார்கள். பூசலின் எல்லைக்கோடு வரை சென்று சென்று மீளும் ஓர் ஆடலாக அது நிகழும்.

அறைவாயிலில் நின்று திரும்பி நோக்கிய கர்ணன் விருஷசேனனிடம் "பிற மைந்தரும் உடனே வரவேண்டும்... அவர்கள் இங்கிருக்கிறார்கள் அல்லவா?" என்றான். "ஆம், அனைவருமே அரண்மனையில்தான் உள்ளனர். இன்று படைப்புறப்பாடு இருக்கும் என்பதனால் இங்கேயே இருக்கவேண்டும் என நான் ஆணையிட்டேன்" என்றான் விருஷசேனன். "நன்று, அவர்கள் வரட்டும்" என்றபின் கர்ணன் உள்ளே சென்றான். விருஷசேனன் விருஷகேதுவிடம் "சென்று உடன்பிறந்தார் அனைவரையும் வரச்சொல். நான் அதுவரை அமைச்சரிடம் சொல்லாடிக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

அருகிருந்த அறையிலிருந்து சிவதர் வெளிவந்து விருஷசேனனை நோக்கி தலைவணங்கினார்.

விருஷகேது நேராக அமைச்சர்நிலைக்குச் சென்று அங்கிருந்த ஏவலர்களிடம் உடன்பிறந்தார் அனைவரையும் உடனே அரசரைப் பார்க்கவரும்படி ஆணையிட்டு அனுப்பினான். அவன் திரும்பி அங்கே சென்றபோது விருஷசேனன் சிவதரிடம் பேசிக்கொண்டிருந்தான். அவர்கள் சிரித்துக்கொண்டிருப்பதை தொலைவிலேயே அவன் கண்டான். அருகணையும்தோறும் அவன் நோக்கு கூர்கொள்ள நடை தளர்ந்தது. அவர்கள் பேசிக்கொள்வனவற்றில் காதில் விழும் முதல் சொல்லில் இருந்து அவ்வுரையாடலை உய்த்தறியவேண்டும் என அவன் முடிவு செய்தான். விருஷசேனன் "அவர்கள் அறிவதில்லை" என்று சொல்லி திரும்பி நோக்கி "வருகிறார்களா?" என்றான். "ஆம்" என்றான் விருஷகேது. அவனால் உரையாடலை உணர முடியவில்லை.

"அவர்கள் வந்தபின் பேசுவோம்" என்றார் சிவதர். ஆனால் அவர்கள் பேசிக்கொண்டது உடன்பிறந்தாரைப் பற்றி அல்ல என்று விருஷகேதுவுக்கு தோன்றியது. அவர்களைப் பற்றி அத்தனை சிரிப்புடன் பேச என்ன இருக்கிறது? அவர்கள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினர். திவிபதனும் சத்ருஞ்ஜயனும் பிரசேனனும் சேர்ந்து வந்தார்கள். தொடர்ந்து இன்னொரு சிறிய குழுவாக சத்யசேனனும் சித்ரசேனனும் சுசேஷணனும் வந்தனர். வாழ்த்துச் சொல் ஏதுமின்றி அவர்கள் விருஷசேனனை வணங்கி விருஷகேதுவை நோக்கி புன்னகை புரிந்தனர். சிவதர் எழுந்து அறைக்குள் போய் மீண்டுவந்து "அழைக்கிறார்" என்றார். அவர்கள் தங்கள் ஆடைகளை சீரமைத்து நீள்மூச்செறிந்தனர்.

விருஷசேனன் உள்ளே செல்ல பின்னர் பிறர் தொடர்ந்தனர். அறைக்குள் கர்ணன் மஞ்சத்தில் அமர்ந்திருந்தான். அவனுக்கு முன் நான்கு இருக்கைகளே இருந்தன. விருஷசேனன் மட்டும் தந்தையை வணங்கிவிட்டு ஒன்றில் அமர்ந்தான். மற்றவர்கள் வணங்கிவிட்டு கைகட்டி நின்றனர். விருஷகேது தந்தையை வணங்கிவிட்டு அவர்களுக்குப் பின்னால் நின்றான். அது எப்போதும் அவன் வழக்கம். அவன் கர்ணனின் விழிமுன் நிற்பது அரிது. அது பொறுப்புகளை ஏற்பதற்கான தயக்கத்தால்தான் என்று பிறர் கூறுவதுண்டு. அவன் அவ்வாறு சென்று நிற்கையில் நோக்கப்படுபவனாக உணர்ந்தான், நோக்குபவனாகவே நின்றிருக்க விழைந்தான்.

கர்ணன் "நான் இன்று மாலை கிளம்புகிறேன். வடபுலத்தில் உள்ள சிபிரம் என்னும் கோட்டைக்குச் சென்று அங்கே வேட்டையாடுவதாகக் காட்டி தங்கியிருக்க திட்டமிட்டிருக்கிறேன். எனக்கு போருக்கான அழைப்பு வரும். அப்போது நான் அகன்று இருக்கலாகாது. மேலும் இத்தருணத்தில் தொலைவிலிருப்பது என்னை தளர்த்துகிறது. எத்தனை அணுக்கமாக இருக்க இயலுமோ அத்தனை அணுக விழைகிறேன்" என்றான். விருஷசேனன் "ஆம், அது நன்று. அதை முன்னரே பேசிவிட்டோம்" என்றான். கர்ணன் "இதில் எவருக்கேனும் மாற்றுச் சொல் உள்ளதா?" என்றான். எவரும் ஒன்றும் சொல்லவில்லை. விருஷகேது அவர்களை மாறிமாறி நோக்கினான். பின்னர் மெல்ல உடலை அசைத்தான்.

அவனை நோக்கி கர்ணன் திரும்பினான். "தந்தையே, சேய்மையை உருவாக்கியவர்கள் அவர்கள். நாம் எத்தனை அணுகினாலும் அச்சேய்மை குறைவதில்லை. நீங்கள் ஒருபோதும் அணுவிடைகூட அகன்றவருமல்ல" என்றான்

விருஷகேது. கர்ணன் "ஆம், ஆனால் போர்க்களம் நாமறியா விசைகளின் ஆடுகளம். அங்கே என்ன நிகழுமென நம்மால் கணிக்க முடியாது. நான் அழைக்கப்படுவேன். அமைச்சர்களும் அதையே சொல்கிறார்கள். நிமித்திகர்கூற்றும் அதுவே" என்றான். விருஷசேனன் சிறு எரிச்சலுடன் விருஷகேதுவை நோக்கி திரும்பி "நாம் முடிவெடுத்துவிட்டோம், இளையோனே. நம் படைகள் கிளம்ப சித்தமாகவும் உள்ளன. இனி இதைப்பற்றி பேசவேண்டியதில்லை" என்றான்.

கர்ணன் புன்னகைத்து "அவன் எந்நிலையிலும் பேசவிழைபவன்..." என்றபின் விருஷசேனனை நோக்கி "இன்று நீ உடனிருந்தாய். தந்தை அன்னையிடம் சொன்னதை கேட்டாய்" என்றான். "ஆம்" என்றான் விருஷசேனன். "அச்செய்தியை முன்னரே அறிந்திருப்பாய்" என்று கர்ணன் சொன்னான். "அது உங்கள் இருவரிலும் எந்த விளைவையும் உருவாக்கவில்லை என்பதை கண்டேன்." விருஷசேனன் புன்னகைத்து "ஆம், முன்னரே அறிவோம். அரண்மனையில் சேடியர் நடுவே பூடகமாக பேசப்பட்டு வருவது இச்செய்தி. நாங்களனைவரும் சொல்லறியத் தொடங்குகையில் அறிவோம். புரியாமல் குழம்பி ஒருவாறாகத் தெளிந்து எண்ணி எண்ணி வியந்து பின்னர் அவ்வாறே என அமைவோம்" என்றான். விருஷகேது "இப்போதுதான் அதை நேர்ச்சொல்லாக்கி பிறர் செவிகேட்க முன்வைக்கலாமென்னும் எண்ணம் வந்தது" என்றான்.

கர்ணன் "அவர்கள் சொன்னது உண்மை என என்னிடமிருந்து ஓர் ஒப்புதல் வந்தது உங்களுக்கு" என்றான். "ஆம்" என்றான் விருஷசேனன். திவிபதன் "போருக்குச் செல்வதற்கு முன் எல்லாவற்றையும் பேசிவிடும் வழக்கம் உண்டு. தாதை

நெடுங்காலமாக உளமொதுக்கி வைத்திருந்ததாக அது இருக்கலாம்" என்றான். கர்ணன் "ஆம், அவரும் நிமித்தநூல் நோக்கியிருப்பார், நான் மீள்வேனா என்று" என்றான். விருஷசேனன் "எவ்வாறாயினும் சொல்லப்படவேண்டியவை சொல்லப்பட்டுவிட்டன" என்றான். "ஆம், அதுவும் நன்று என்றே உணர்கிறேன். ஆகவேதான் உங்களிடம் பேசத்துணிந்தேன்." அவன் சொல்வதற்காக அவர்கள் காத்துநின்றிருந்தனர்.

"ஒரு சூதர்கதை உண்டு. நம் அவையில் முன்பு ஒரு தென்னகச் சூதர் அணிச்சொல் என பாடியது. கதிரவன் எதையும் பெற்றுக்கொள்வதில்லை. மண்ணிலுள்ளவர்களின் வேண்டுதலுக்கு இணங்க தன் மைந்தனாகிய என்னை மானுடரிடமிருந்து பெற்றுக்கொள்க என ஆணையிட்டு இங்கே அனுப்பினான். ஆனால் இங்கு எவராலும் எனக்கு எதுவும் அளிக்க இயலவில்லை. நான் எதையும் பெற்றுக்கொள்ளாதவனாக விண்மீண்டேன்." கர்ணன் புன்னகைத்து "சூதர்களுக்கு எவரிடம் எதை பாடவேண்டும் என தெரியும். அவர்களின் தோற்றத்தையும் பழக்கத்தையும் கடந்து ஆழ்கனவிலிருந்து அவர்களுக்கு உகந்ததை கண்டெடுக்கிறார்கள். அதை அவர்கள் முன் பாடுகிறார்கள். மகிழ்விப்பதன் கலையை பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயின்றவர்கள்" என்றான்.

"அவர்களால் மானுடர் மண்ணில் நிலைநிறுத்தப்படுகிறார்கள்" என்று விருஷகேது சொன்னான். கர்ணன் அவனை நோக்கி "ஆம், இப்போது நானும் நீ எண்ணியதையேதான் எண்ணினேன். மானுடர் விழைவதை அவர்கள் எனச்சொல்லி நிலைநிறுத்துகிறார்கள் எனில் இவர்கள் இங்கே நிலைநிறுத்துவது எதை? மானுடர் காணும் கனவுகளைத்தானா?"

என்றபின் கைவீசி அவ்வெண்ணத்தைத் தவிர்த்து “விந்தைதான்” என்றான். “தந்தையே, கனவுகளையே மெய்யான மானுடர் என்று சொல்லவேண்டும். மானுடரின் தோற்றமும் நடத்தையும் சொற்களும் அவர்களின் கனவு என்னும் கடலின் அலையும் துளியும் துமியும் என்றே சொல்லவேண்டும்” என்றான் விருஷகேது.

கர்ணன் நிமிர்ந்து நோக்க “எது உண்மையான மானுடனோ அதை அவர்கள் நிலைநிறுத்துகிறார்கள். தந்தையே, பெரும்பாலான கனவுகள் வெறும் விழைவுகளோ அச்சங்களோதான். விழைவும் அச்சமும் அற்ற கனவே அம்மானுடன். இன்று பாரதவர்ஷத்தில் மும்முடி சூடிய பேரரசர்கள் பிறர் இருக்கலாம். தங்கள் கனவுகளில் அவர்கள் அதை மெய்யாகவே எய்தவில்லை. தாங்கள் எய்தியிருக்கிறீர்கள். ஆகவே சூதர் உங்களையே மும்முடிசூடிய பேரரசர் என்று சொல்வார்கள்” என்றான் விருஷகேது. கர்ணன் உரக்க நகைத்து “இசைச்சூதனின் நா கொண்டிருக்கிறான், நன்று” என்றான்.

பின்னர் விருஷசேனனிடம் “நான் அச்சூதரின் கதையையே என் உள்ளமெனக் கொண்டிருந்தேன் என்பதை சொல்லவந்தேன்” என்றான். “இங்கிருந்து எதையுமே பெற்றுக்கொள்ளலாகாது என நான் கருதினேன். எவர் எனக்கு எதையேனும் அளிக்க முற்பட்டாலும் அதை பெற்றுக்கொள்ளா தொலைவுக்கு அகன்றேன். எந்தையும் அன்னையும் அளித்த அன்பு என்னை வந்தடையாத இடத்தில் இருந்தேன். அஸ்தினபுரியின் அரசர் எனக்கு இந்நாட்டையும் குடியடையாளத்தையும் அளித்தபோது நூறுமடங்கென திருப்பிக்கொடுத்து அவரும் அணுகமுடியாதவனானேன். அதை ஆணவம் என்று

சொல்லலாம். ஆனால் ஒருவகை தன்னுணர்வு என்றே சொல்வேன்" என்றான்.

"வஞ்சத்தால், கசப்பால் அவ்வண்ணம் இருக்கிறேனா? அன்னை என்னை அகற்றியமையால் இனி எவரும் எனக்கு எதையும் அளிக்கவேண்டியதில்லை என முடிவெடுத்தேனா? நானே உழன்று உழன்று அதை வினவிக்கொண்ட காலம் உண்டு. அவ்வாறல்ல என இன்று நன்கறிவேன். மெய்யாகவே எனக்கு எவர்மேலும் சற்றும் வஞ்சம் இல்லை. என் அன்னையைக்கூட அவர் நின்ற இடத்திற்குச் சென்றே புரிந்துகொள்கிறேன். ஆகவேதான் அவருடைய தன்மதிப்பு எந்நிலையிலும் குலையலாகாது என எண்ணினேன். அன்னை பிழையுணர்வும் தனிமையும் கொண்டு உளம்குமைகிறார் என நான் அறிவேன். அவர் சற்று இடம்கொடுத்தால் சென்று அவரை அணைத்து ஆறுதல்சொல்லி அத்துயரிலிருந்து ஆற்றவேண்டும் என்றே உள்ளம் எழுகிறது."

"நான் எப்போதுமே துயரம்கொண்டவன், தனித்தவன். என்னுள் ஓர் ஆற்றாமை கொந்தளித்துக்கொண்டே இருக்கிறது. இந்நிலத்தை முழுதும் தழுவி எழுகிறது என் உள்ளம். உடனே தன்னுணர்வுகொண்டு சுருங்கி உள்ளொடுங்கிக் கொள்கிறது. இவ்விரு அலைக்கழிப்புகளிலிருந்து எனக்கு விடுதலை இல்லை" என்று கர்ணன் சொன்னான். "எரிந்துகொண்டே இருந்தாகவேண்டியவன் நான் என்கின்றனர் என் நாள் நோக்கிய நிமித்திகர்கள். அதை அவர்கள் சொல்லச்சொல்ல நான் அதுவே மெய் என ஏற்றுக்கொண்டேன். அந்நிலையில் இயல்பாக இருக்கவும் பழகிக்கொண்டேன்." அவன் தன்னுள் சென்று சுட்டுவிரலைச் சுழித்து காற்றில் எதையோ எழுதி

அழித்துக்கொண்டிருந்தான். பின்னர் மீண்டு நீள்மூச்சுடன் “ஆம்” என்றான்.

“தங்களை நாங்கள் நன்கு அறிவோம், தந்தையே” என்றான் விருஷகேது. விருஷசேனன் அவனை திரும்பிநோக்கி விழிகளை உறுத்தான். ஆனால் அத்தருணத்தில் எதையேனும் அப்படி பேசினால்தான் கர்ணன் மீள்வான் என விருஷகேது அறிந்திருந்தான். “ஆம், என்னை நீங்கள் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள்” என்று சொன்ன கர்ணன் புன்னகைத்து “அந்நம்பிக்கையில்தான் பேச விழைகிறேன்” என்றான். பின்னர் விருஷகேதுவிடம் “நீ நூல்நவில்பவன். நீ சொல். நான் வள்ளல் என்கிறார்கள். தன்னுள் தான் சுழன்று ஓயாது எரிந்துகொண்டிருப்பவன் எப்படி கொடைத்திறன் கொள்கிறான்?” என்றான்.

“ஒப்புமை என்பது அறிதல்களுக்கான மிகச்சிறந்த வழி. அளவைமுறை சென்றடையாத ஆழத்திற்கும் நுண்மைக்கும் ஒப்புமை சென்று சேர்ந்துவிடும். ஆகவேதான் அறிநெறிகளில் நேர்காட்சி, உய்த்தல், முன்னறிவுக்கு பின் அதை வைக்கின்றனர் கணாதகௌதம நெறியினர்” என்றான். விருஷகேது “தந்தையே, தங்களைப்போல நேரடியாக காவியமோ அளவையியலோ கற்காதவர்கள் ஒப்புமைகளை எளிய அணிவிளையாட்டென்று எண்ணுகிறீர்கள். காவியமும் அளவைநூலும் கற்காமலேயே ஒப்புமையின் ஆற்றலை இசைச்சூதர்கள் அறிவார்கள். வில்வேதம் கற்காது கைத்திறனாலேயே அம்புகளை மலைவேடர் அறிந்திருப்பதுபோல” என்றான்.

“உங்களை சூரியனுடன் ஒப்பிடுவதே உங்களை அறிவதற்கான மிகச்சிறந்த வழி. வேறெந்த பாதையும் உங்களுள் வாழும் மெய்யுருவை வந்தடையாது” என விருஷகேது தொடர்ந்தான்.

“நிமித்திகர்களின் அறிதல்முறையும் ஒப்புமைகளால் ஆனதே. சூதர்கள்போல் முடிவிலாத ஒப்புமைகளை அவர்கள் கையாள்வதில்லை. ராசிக்குறிகள் போன்று நன்கு வகுக்கப்பட்டு அனைவருக்கும் பொதுவான ஒப்புமைகளை மட்டும் கையாள்கிறார்கள். ஒருவனை ஒரு ராசியில் நிறுத்தி அவ்வடையாளங்களினூடாக அவனை அறிவதைப்போல் எளிய வழி ஒன்றில்லை. அவனை வகுத்துக்கொண்டு, பிறழ்வுகளையும் பிசிறுகளையும் குறித்துக்கொண்டு கூர்கொண்டு முன்செல்வதே அவனைச் சென்றடைய எளிய வழி. அவர்கள் அதை சித்தத்தாலும் கற்பனையாலும் கனவாலும் நிகழ்த்திப் பயின்று தலைமுறைகள்தோறும் கைமாறி விரித்து கால மடிப்புகளையே பிரித்து நோக்கும் ஆற்றல்கொண்டவர்களாக ஆகியிருக்கிறார்கள்.”

“கதிரவனின் அனைத்தியல்புகளும் உங்களுக்கு அமைந்துள்ளன. நீங்கள் கதிரவனின் மானுடவடிவமென்பதைப்போல் பொருந்தும் வரையறை வேறேதுமில்லை” என்றான் விருஷகேது. “எரிந்துகொண்டே இருக்கிறீர்கள். அவ்வெரிதலே பிற அனைவருக்கும் ஒளியென்றாகிறது. கோடி கைகளால் இப்புவியையும் வானையும் தழுவிக்கொண்டிருக்கிறீர்கள். அள்ளிக் கொடுக்கிறீர்கள். அமுது விளைவிக்கிறீர்கள். சுடரச் செய்கிறீர்கள். ஆகவேதான் உங்களை விழியறியும் தெய்வமென இங்குளோர் வணங்குகிறார்கள். அது என்றும் அவ்வண்ணமே இருக்கும்.”

அவன் சொற்கள் அவன் உடன்பிறந்தாரை உணர்வெழுச்சி கொள்ளச்செய்தன. கர்ணனின் விழிகளும் கூர்கொண்டு மின்னணிந்திருந்தன. “ஏன் கதிரவன் வள்ளல் ஆகிறான்? கதிரோனின் தன்னியல்பு ஒன்றினால்தான். தான் நோக்கும்,

தன்னை நோக்கும் எதையும் தானே என்றாக்குகிறான். ஆடிகள் சுடரோன் ஆகின்றன. கற்கள், உலோகங்கள், தளிர்கள், மலர்கள் அனைத்தும் அவனே என மாறிவிடுகின்றன. கடல்கள், ஓடைகள், பனித்துளிகள் அவன் வடிவு கொள்கின்றன. இங்கே விளையும் நெற்கதிரும் இன்கனியும் அவன் ஒளியே அல்லவா? பொன்னும் மணியும் அவனல்லவா? மானுடர் முகத்தில் விழிகளெனத் திகழ்பவை அவனாக தானே மாறிய இரு ஊன்குமிழிகள் அல்லவா?"

"நீங்கள் எவரை நோக்கினாலும் ஒருகணத்தில் இடம்மாறி அவரே என ஆவதை கண்டிருக்கிறேன். அவர்களின் வலியையும் துயரையும் முழுமையாகவே வாங்கிக்கொள்கிறீர்கள். அவர்களின் தனிமையையும் சீற்றத்தையும் நீங்கள் அடைகிறீர்கள். மறுபக்கம் அவர்கள் நீங்களென்றாகிறார்கள். நிமிர்வும் நம்பிக்கையும் கொண்டவர்களாக. உலகை விழிநோக்கும் ஆற்றல்கொண்டவர்களாக. தந்தையே பெருவள்ளல்கள் பிறருக்கு வழங்குபவர்கள் அல்ல. பிறர் என எண்ணுபவர் அளிக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் பிறரை மதிப்பிடுகிறார்கள். அம்மதிப்புக்கு நிகராக அளிக்கவேண்டும் என கணக்கிடுகிறார்கள். பிறனில் தன்னைக் காண்பவர், பிறர் நோய் தன்நோய்போல் நோக்குபவர் மட்டுமே அள்ளிக்கொடுத்து வள்ளலென எழுகிறார்கள். அவர்கள் அனைத்தையும் தனக்கே அளித்துக்கொள்பவர்கள்."

"கொடுப்பதனூடாக வள்ளல்கள் நூறுநூறு வடிவுகளில் எழுந்து பெற்றுக்கொள்கிறார்கள். தெய்வங்கள் கோடிநாவுகளால் தங்களையே பாடிக்கொள்வதுபோல" என்றான் விருஷகேது. அவன் குரல் உணர்வெழுச்சியால் தாழ்ந்தது. "வெங்கதிரோன்

அள்ளி வழங்குவனவற்றை அவனுக்கே படைக்கிறோம். தன் ஒளிவிரல்களால் தொட்டு வாழ்த்தி கடந்துசெல்கிறான். நீங்கள் பிறிதொருவர் அல்ல. உங்கள் உடலை நீங்கள் என நீங்கள் எண்ணலாம். உங்கள் உள்ளமே நீங்களெனக் கருதலாம். இங்கே உங்களைச் சூழ்ந்துள்ள எங்களுக்கு உங்கள் கனவே நீங்கள். நாங்கள் அதை எங்கள் கொடிவழியின் நினைவுகளில் அவ்வண்ணமே அணையா விளக்கென நிலைநிறுத்துவோம்."

அறைக்குள் ஆழ்ந்த அமைதி நிலவியது. கர்ணன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். விருஷசேனன் பெருமூச்சுவிட அவ்வொலியில் அனைவரும் கலைந்தார்கள். கர்ணன் எழுந்து கைகளை நீட்டி உடலை நெளித்தான். அறைக்குள் சில எட்டுகள் நடந்தபின் நின்று "நன்று, நான் கேட்கவிருப்பதை இனி விரித்துரைக்க இயலாது என்னால். மைந்தரே, நான் எவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாகாதென்று எண்ணியவன். கருதாது வழங்கியவன். ஆனால் உங்களுக்கு மட்டும் எதையும் வழங்கியதில்லை. இவ்வரசை நான் விரிவாக்கவில்லை. என் கொடிவழியினருக்கு பேரரசு ஒன்றை விட்டுச்செல்லவில்லை" என்றான். அவன் குரல் தழைந்தது. "நான் துறந்த அஸ்தினபுரியின் மணிமுடி உங்களுக்கும் உரியது" என்றான்.

விருஷசேனனின் தோளைத் தொட்டு "என்னை எண்ணாது உங்களை நான் எண்ணியிருந்தேன் என்றால் நீ அஸ்தினபுரிக்கு அரசனாகியிருப்பாய். இப்புவியே புகழ்பாடும் பேரரசனாகவும் அமர்ந்திருப்பாய்" என்றான். அப்போது கொள்ளவேண்டிய உணர்வென்ன என்று அறியாதவன்போல் அவன் முகம் குழம்பி விந்தையானதொரு கசப்புப்புன்னகையை அணிந்துகொண்டது. விருஷசேனன் நிமிர்ந்து தந்தையை நோக்கி "அவ்வண்ணம் ஒன்றை நான் விரும்பினேன் என்றால், ஒரு துளியேனும்

அக்கனவு என்னுள் இருந்தால் என் பொருட்டு இப்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் கனிவை நீங்கள் அடைவீர்களா, தந்தையே?" என்றான்.

கர்ணன் திகைத்து "அறியேன். ஆனால் இப்போது உன்னை தொட்டபோது நீயே நான் என உணர்ந்தேன்" என்றான். புன்னகைத்து "இதற்கு அப்பால் இப்புவியில் மைந்தனாக நான் எதையேனும் விழைவேன் என்று எண்ணுகிறீர்களா?" என்றான் விருஷசேனன். கர்ணன் நீர்பரவி ஒளிகொண்ட விழிகளுடன் நோக்கி நின்றான். "இதோ இவர் நான் என எண்ணி மைந்தன் தந்தையை நோக்கி அடையும் பெருமிதம் ஒன்று உண்டு. பெருந்தந்தையரை அடைந்த மைந்தருக்கு மட்டுமே தெய்வங்கள் அளிக்கும் நற்கொடை அது. கோடியினரில் ஒருவருக்கு மட்டுமே அமைவது. அதை அடைந்தவர்கள் நாங்கள். அதற்கிணையாக வேறெதை நீங்கள் எங்களுக்கு அளிக்கவியலும்?"

உணர்வற்றதென ஒலித்த குரலில், விழிகளில் ஒளி கூர்கொண்டிருக்க விருஷசேனன் சொன்னான் "உங்கள் உருவை அல்லவா நோக்கி நோக்கி மகிழ்ந்தோம்? உங்கள் அணிகலன் ஒன்றைக் கண்டாலே விழிநிறைந்து நெஞ்சு அதிர்பவர்களாக இருக்கிறோம். அழகோ பெருமையோ வெற்றியோ உங்களால்தான் பொருள்பெறும் சொற்கள் எங்களுக்கு" என்ற விருஷசேனன் திரும்பி "இங்கிருக்கும் என் இளையோர் சொல்க, ஒருநாளேனும் தந்தையின் நினைப்பன்றி ஏதேனும் உங்கள் முதல் விழிப்பில் உள்ளத்தில் எழுந்துள்ளதா? தந்தையை அன்றி பிற எதையேனும் எண்ணி துயில்கொண்டிருக்கிறீர்களா?"

அவர்கள் விழிகளில் நீருடன் உடல்விம்ம அசையாது நின்றனர். “நீங்கள் இப்புவியிலிருந்து எதையும் கொள்ளவில்லை, தந்தையே. ஆனால் எங்களிடமிருந்து நீங்கள் அவ்வண்ணம் ஒழிய முடியாது. நாங்கள் அளிப்பதை நீங்கள் மறுக்கவே இயலாது” என்றான் விருஷசேனன். “உங்களுடன் சேர்ந்து போருக்கெழுவோம். உங்களுக்காக உயிர்கொடுப்போம். நாம் வென்று மீண்டு நாடாண்டால் உங்களுக்கு அன்னமும் நீரும் அளிப்போம். உங்களுக்கு கொடுக்கும் நிலையில் இருப்பவர் நாங்கள் மட்டுமே. எந்த தந்தையும் மைந்தரிடமிருந்து கொள்ளமாட்டேன் என்று சொல்ல இயலாது. அது தெய்வ ஆணை!” என்ற விருஷசேனன் புன்னகைத்து “கொள்க, தந்தையே!” என்றான்.

கர்ணன் விழிகளில் நீர் வழிய சிரித்தபடி இரு கைகளையும் விரித்தான். விருஷசேனன் எழுந்து அவனை தழுவிக்கொண்டான். மைந்தர்கள் அனைவரும் சேர்ந்து தந்தையை தழுவிக்கொண்டார்கள். சொற்களில்லாதவர்களாக பொருளில்லாது நகைத்தவர்களாக ஒருவரை ஒருவர் தள்ளிவிட்டும் ஒருவரோடொருவர் முந்தியும் ஒருவரை ஒருவர் தழுவியும் ஓருடலென அங்கே நின்றிருந்தனர்.

முதற்களத்தில் அமர்ந்த சூதரான அஜர் பாடினார். “கூறுக, தோழரே! மண்ணுலகு முழுதுமாகப் பரப்பிய அனைத்துக் கைகளையும் இழுத்துக்கொண்டு மேற்கே அணையும் கதிரவன் துயர்கொண்டிருக்கிறானா மகிழ்கிறானா? துயர்போலும் உவகையும் உவகையெனும் துயருமல்லவா மானுடன் அடையும் உச்சமென வகுக்கப்பட்டுள்ளது? தெய்வங்களை வாழ்த்துக! அவை மானுடரை நடிக்கின்றன, அதனூடாக மானுடனை அழிவற்றவனாக்குகின்றன. கதிரவனை வாழ்த்துக,

அவன் கர்ணன் என இப்புவிக்கு இறங்கி வந்தான்! ஆம்! ஆம்! ஆம்!”

இருட்கனி - 10

அங்கநாட்டு அரசன் கர்ணனின் உடல் கிடந்த வட்டத்தைச் சுற்றி அமர்ந்திருந்த பன்னிரண்டு சூதர்களில் இரண்டாமவரான காளையர் சொன்னார் “தோழரே கேளுங்கள், பதினைந்தாம் நாள் போர்முடிந்த அன்று மாலை அஸ்தினபுரியின் அரசர் துரியோதனனின் அவைக்கூடலில் அவர் என்றுமிலாத பதற்றத்தையும் தளர்வையும் கொண்டிருந்தார். அவரை எப்போதும் கூர்ந்துநோக்கிக் கொண்டிருக்கும் வழக்கம்கொண்ட துச்சாதனன் அந்தப் பதற்றத்தை தானும் அடைந்தார். பீஷ்மரின் படுகளத்திற்குச் சென்றபோது இருந்த நிமிர்நடையை அவர் இழந்துவிட்டிருந்தார். அங்கிருந்து திரும்பும்போதே ‘நான் ஓய்வெடுக்கவேண்டும். மதுவுடன் ஏவலரை அனுப்பு’ என்று துச்சாதனனிடம் சொன்னார்.”

துச்சாதனன் அவைக்கூடத்திற்கு வந்தபோது அங்கே கிருபரும் சல்யரும் இருந்தனர். கிருபர் “கர்ணன் வந்துகொண்டிருக்கிறான். நாம் முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கிறது” என்றார். துச்சாதனன் “முடிவுகளை நாமே எடுப்போம். மூத்தவர் அதற்கான உளநிலையில் இல்லை” என்றான். “ஆணையை இடவேண்டியவர் அவர். அவரில்லாது அவை கூடமுடியாது” என்றார் சல்யர். கர்ணன் வந்து சல்யருக்கும் கிருபருக்கும் தலைவணங்கி முகமன் உரைத்து அமர்ந்தான். கிருபர் “அஸ்வத்தாமன் தந்தையை எரியூட்டும்பொருட்டு சென்றிருக்கிறார். அச்சடங்குகள் முடிந்து

அவர் இங்கே வர பொழுது பிந்துமென எண்ணுகிறேன். அவர் இல்லாமலேயே இன்றைய முடிவுகளை நாம் எடுத்தாகவேண்டும்" என்றார்.

"ஏன் இன்றிரவே முடிவை எடுத்தாகவேண்டும்?" என்று துச்சாதனன் கேட்டான். "நாளை முதற்புலரியில் நம் படைகள் எழுகையில் போருக்கென உளம் அமைந்திருக்கவேண்டும். இன்று அவர்கள் துயில்வதற்குள் இங்கே அடுத்த படைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு படைசூழ்கை அமைக்கப்படும் செய்தி சென்று சேர்ந்திருக்கவேண்டும்" என்றார் சல்யர். "அரசர் உளம்சோர்ந்திருப்பார் என்றும் படையெழுவதுகூட நிகழாதாகலாம் என்றும் நம் வீரர்கள் எண்ணுவார்கள். இரவில் எஞ்சிய எண்ணமே காலையில் முளைக்கிறது... அச்சோர்வுடன் அவர்கள் எழுவார்களென்றால் படைசூழ்கையை அமைத்து அவர்களை களம்நிற்கச் செய்ய இயலாது." துச்சாதனன் "அவர்களில் பெரும்பாலானவர்கள் துயில்கொண்டுவிட்டனர்" என்றான். "ஆம், ஆனால் இறுதியாகத் துயில்பவரே காலையில் எழுபவர். அவர்கள் அறியட்டும் அரசரின் உள்ளத்தை" என்றார் சல்யர்.

"நாம் நம் படையின் தலைவரை தேர்ந்தெடுக்கவேண்டும். படைசூழ்கையை இறுதிசெய்யவேண்டும்" என்று கிருபர் மீண்டும் சொன்னார். "அரசரை அழைத்துவர ஏவலர் செல்லட்டும்." துச்சாதனன் "மூத்தவர் முன்னரே சொல்லிவிட்டார், அங்கர் படைத்தலைமை கொள்ளட்டும் என்று. நம் தரப்பின் முதன்மை வீரர் என்று அங்கரை மூத்தவர் சொன்னார். ஒருவேளை இவ்வெற்றி அவருக்குரியதென முன்னரே தெய்வங்கள் வகுத்திருக்கும் போலும். ஆகவேதான் பீஷ்மரும் துரோணரும் களம்பட்டார்கள். அங்கர் கையால்

பாண்டவர்கள் கொல்லப்படவும் எனக்கு மணிமுடி சூட்டப்படவும் ஊழ் பாதை வகுத்துள்ளது என்றார். நாமனைவரும் கேட்டது அது" என்றான். "நான் வணங்கும் தெய்வங்களே என்னை கையொழிந்தாலும் சரி, உளம் சோரப்போவதில்லை. என் தெய்வமே வில்லெடுத்து எனக்கெதிராக வந்து நின்றாலும் சரி, களம் நில்லாதொழியப்போவதில்லை என்றார் மூத்தவர். அவருடைய அச்சொற்களே போதும்."

சகுனி "அரசர் வரட்டும். அவருடைய சொல் நமக்குத் தேவை. இந்த அவையில் அவரும் இருந்தாகவேண்டும்" என்றார். "அவர்..." என்று துச்சாதனன் சொல்லத்தொடங்க "அவரில்லாமல் எடுத்த முடிவு என எந்நிலையிலும் எவரும் சொல்லலாகாது. நமக்கே அவ்வண்ணம் தோன்றுதலும் கூடாது" என்றார் சகுனி. துச்சாதனன் மேற்கொண்டு பேசாமல் தலைவணங்கி வெளியே சென்று ஏவலனிடம் அரசரை அழைத்துவரும்படி ஆணையிட்டுவிட்டு வாயிலிலேயே நின்றிருந்தான். துரியோதனன் எந்நிலையில் இருக்கிறான் என்பதைப்பற்றி எண்ணிக்கொண்டு நின்றிருந்தபோது ஒருகணம் குண்டாசி நினைவிலெழுந்தான். எத்தனை அவைகளிலிருந்து குண்டாசியை தூக்கிக்கொண்டு சென்று வெளியேற்றியிருக்கிறோம் என எண்ணி அவ்வெண்ணம் ஏன் வந்தது என தன்னை கடிந்துகொண்டான்.

துரியோதனன் வரும்போதே மூக்கில் வழியுமளவுக்கு மது குடித்து நிலையழிந்திருந்தான். தள்ளாடியபடி தேரிலிருந்து இறங்கி இரு கைகளையும் வீசியபடி நடந்து வந்தான். "ஏன் வழியில் நின்றிருக்கிறாய், அறிவிலி!" என காவலனை அறைய கை தூக்கினான். துச்சாதனன் "மூத்தவரே" என்றான்.

“அறிவிலிகள்” என்று துரியோதனன் வசைபாடினான். புளித்த ஏப்பத்துடன் “அனைவரும் அறிவிலிகள்... கீழ்மக்கள்” என்றான். பீடத்தில் சென்று அமர்ந்தபோது அவன் இமைகள் தடித்து சரிந்துகொண்டிருந்தன. வாயை இறுக்கி தாடையில் பற்கள் நெரிபடும் அசைவு தெரிய சிவந்த விழிகளால் அவையை கூர்ந்து நோக்கினான். “அவை கூடிவிட்டது” என்று கிருபர் சொன்னபோது “ஆம்... அது தெரிகிறது” என்று உறுமினான்.

அவன் உடல் மிக வெளிறியிருந்தது. மெல்லிய நடுக்கும் தெரிந்தது. வெளித்தெரியாத புண் ஏதேனும் அமைந்திருக்குமோ, நோய் கொண்டிருப்பானோ என துச்சாதனன் அஞ்சினான். சகுனி தன் காலை இழுத்து வந்து இருக்கையில் அமர்ந்ததும் கிருபர் “நாம் தொடங்கலாம். இப்போது முறைமையெல்லாம் தேவையில்லை. நாம் சிலரே இருக்கிறோம்” என்றார். “ஆம், மிகச் சிலரே எஞ்சுகிறோம்” என்று கூறி துரியோதனன் புன்னகைத்தான். பின்னர் திரும்பி வாய்மணம் கொண்டுவர கைகளால் ஆணையிட்டான். ஏவலன் அப்பால் சென்றதும் அவன் துச்சாதனனை நோக்கி புன்னகைத்தான். அறிவின்மை துலங்கிய அப்புன்னகை துச்சாதனனை திடுக்கிடச் செய்தது. அவன் விழிகளை விலக்கிக்கொண்டான்.

கிருபர் துரியோதனனை நோக்கியபின் “நாம் முடிவெடுக்கவேண்டிய பொழுது இது. நமக்கு பேரிழப்பு நிகழ்ந்துள்ளது. நம் படைத்தலைவரும் ஆசிரியருமான துரோணர் மறைந்துவிட்டார்” என்றார். துரியோதனன் வாய்மணத்தை கைகளில் வைத்தபடி “என்ன?” என்றான். “துரோணரின் மறைவு குறித்து சொல்லப்பட்டது” என்றார் கிருபர். “ஆம், ஆசிரியர் மறைந்தார்... அவர் களம்பட்டார்” என்றான் துரியோதனன். “அவர் முழு வீரத்தை வெளிப்படுத்தி

விண்புகுந்தார்” என்றார் சல்யர். துரியோதனன் “என்ன நிகழ்ந்தது? என்ன நிகழ்ந்தது... விரிவாகக் கூறுங்கள் என்ன நிகழ்ந்தது?” என்றான். சற்றே எரிச்சலுடன் துச்சாதனன் “மூத்தவரே, என்ன நிகழ்ந்ததென்று பலமுறை பலர் கூறிவிட்டனர். மீள மீள அதை கேட்பதில் பொருள் இல்லை. இன்றைய போர் முடிந்துவிட்டது. இனி நிகழவிருப்பதென்னவென்று நாம் எண்ணவேண்டிய தருணம் இது” என்றான்.

துச்சாதனனை பொருளற்ற விழிகளுடன் வெறித்து நோக்கிய துரியோதனன் “ஆம், நாம் என்ன செய்யவேண்டுமென்பதை இப்போது எண்ணவேண்டும். உடனே திட்டங்களை வகுக்க வேண்டும். நாம் போருக்கெழுகிறோம். ஒருபோதும் அடிபணிய மாட்டோம்” என்றான். எழுந்து இரு கைகளையும் விரித்து “என்ன நிகழ்ந்தாலும் சரி, தெய்வங்களே நமக்கெதிர் வந்தாலும் சரி, நாம் வெல்வோம்! நின்று பொருதுவோம்! இந்த மண் எனக்குரியது! இந்த முடி என் முன்னோர் சூடியது! இப்பாரதவர்ஷம் நான் ஆளும்பொருட்டு விரிந்திருப்பது! கடல் சூழ் இந்த ஞாலம் என் புகழ்பாடக் காத்திருக்கிறது” என்றான். எங்கிருந்து அச்சொற்களை அவன் பெற்றான் என்று துச்சாதனன் எண்ணினான். அவை சூதர்களின் மொழியில் எழுந்து வந்தவை போலிருந்தன. அத்தருணத்தை அவை இளிவரல் நாடகம்போல் ஆக்கின.

“நான் எழுயுகத்தின் மைந்தன்! என் தெய்வத்தால் வழிகாட்டி அழைத்துச்செல்லப்படவிருப்பவன். விழைவொன்றே அறமென்றாகும் கலியுகத்தின் தலைவன். என்னை வெல்ல எவராலும் இயலாது. நான் இங்கு இன்று மும்முடி சூடிய பேரரசனாகத் திகழ்கிறேன். என்றும் என் கொடிவழியினர்

நாவிலிருப்பேன். சூதர்களின் எண்ணத்தில் இருப்பேன். என்றும் அழியாதவன், அக்கதிரவனைப்போல!" அவன் கைகள் நிலைத்திருக்க ஒருமுறை விக்கலெடுத்து "ஆம், கதிரவனைப்போல. அல்லது வடமலைகளைப்போல" என்றான். அச்சொற்களால் மூச்சிளைத்து மீண்டும் அமர்ந்து தன் தலையை பற்றிக்கொண்டான். கிருபர் அவனுடைய சொல்வதை பொறுமையின்மையுடன் நோக்கியபின் "நாம் பேசவேண்டியதை தொடங்குவோம்" என்றார். "நான் வெற்றியை மட்டுமே ஏற்றுக்கொள்வேன்" என தலையைப் பிடித்து குனிந்து அமர்ந்தபடி துரியோதனன் சொன்னான். எவரும் மறுமொழி உரைக்கவில்லை.

வாயிற்காவலன் வந்து வணங்கி "உத்தரபாஞ்சாலரான அஸ்வத்தாமன்" என அறிவித்தான். துரியோதனன் "அவர் எங்கே?" என்று முனகினான். சகுனி கைகாட்ட காவலன் சென்று அஸ்வத்தாமனை உள்ளே அனுப்பினான். அஸ்வத்தாமன் துரியோதனனை நோக்கி தலைவணங்கிவிட்டு பீடத்தில் அமர்ந்தான். "ஆசிரியர் விண்ணேகிவிட்டாரா?" என்றார் சல்யர். அதை அவ்வண்ணம் அவர் கேட்டிருக்கலாகாது என துச்சாதனன் உணர்ந்தபோதே கிருபர் எரிச்சலுடன் "நாம் இங்கே நாளைய போர்சூழ்கையைப் பற்றியும் படைத்தலைமை குறித்தும் பேசுவதற்காக கூடியிருக்கிறோம்" என்றார். அஸ்வத்தாமன் "அவை பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. இறுதிச்சொல் எடுப்பது மட்டுமே எஞ்சுகிறது" என்றான்.

துரியோதனன் உள்ளிருந்து எழுந்த எண்ணத்தால் துரட்டி குத்தப்பட்ட யானையென திடுக்கிட்டு எழுந்து துச்சாதனனிடம் "என்ன நிகழ்ந்தது? எவ்வாறு கொல்லப்பட்டார் ஆசிரியர்

துரோணர்?" என்றான். துச்சாதனன் "நாம் இந்த அவை நிகழ்வுகள் என்ன என்பதை பார்ப்போம் மூத்தவரே, நமக்கு பொழுதில்லை" என்றான். "ஆம், அவை நிகழ்வுகளை நாம் பார்க்கவேண்டியுள்ளது. நமக்கு பொழுதில்லை" என்ற துரியோதனன் "அங்கரே, அவை நிகழ்வுகள் என்ன? அஸ்வத்தாமன் எங்கே?" என்றான். "இங்கிருக்கிறேன்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "சொல்லுங்கள்! நாம் என்ன செய்யவிருக்கிறோம்? நமது படைசூழ்கை என்ன?" என்றான் துரியோதனன். அஸ்வத்தாமன் "முதலில் நாம் படைத்தலைவரை தேர்ந்தெடுத்தாகவேண்டிய இடத்திலிருக்கிறோம், அரசே" என்றான். சல்யர் "ஆம், முதலில் அதைப்பற்றிய ஆணை எழுக!" என்றார்.

"நமது படைத்தலைமை துரோணருக்கு உரியதல்லவா? வழக்கம்போல் அவர் வழிநடத்தட்டும் நமது படைகளை" என்று துரியோதனன் சொன்னான். திரட்டிக்கொண்ட பொறுமையுடன் துச்சாதனன் "மூத்தவரே, இன்று மாலை துரோணர் களம்பட்டார். அதன் பொருட்டே இங்கு அவை கூடியிருக்கிறோம்" என்றான். "ஆம், அவர் புகழுடல் அடைந்தார். களம்நின்று எதிரிகளை முற்றழிக்கப்போகும் தருணத்தில் வஞ்சத்தால் கொல்லப்பட்டார். அறிவேன். நாம் என்ன செய்யவிருக்கிறோம்? ஏன் நாம் இங்கு வெறுமனே அமர்ந்திருக்கிறோம்? நமது திட்டங்கள் என்ன? திட்டங்களை உடனடியாக இங்கு கூறுக! திட்டங்கள் மட்டும் போதும், வேறெந்தப் பேச்சும் வேண்டாம்" என்று துரியோதனன் சொன்னான். சல்யர் ஏதோ சொல்ல முயல கைநீட்டி "பேச்சு வேண்டாம்... திட்டங்கள்... போர்த்திட்டங்கள்" என்று கூவினான்.

அஸ்வத்தாமன் “அரசே, தாங்கள் உணர்வுகளை அடக்கி எங்களை சற்று செவிகூருங்கள். என் படைசூழ்கைத் திட்டத்தை நான் இங்கு விளக்குகிறேன். அதற்குமுன் நமது படைத்தலைவர் எவரென்று முடிவு செய்ய வேண்டியுள்ளது” என்றான். துரியோதனன் சீற்றத்துடன் இரு கைகளாலும் இருக்கையின் இரு பிடிகளையும் ஓங்கி அறைந்து “நான் படைத்தலைமை கொள்கிறேன்! ஆம், நானே படை நடத்துகிறேன். நான் எவருக்கு அஞ்ச வேண்டும்? இப்படைத்தலைமையை நான் கொள்கிறேன்! அதன்பொருட்டே இக்களம் வந்துள்ளேன்” என்று கூவினான். எழுந்து இரு கைகளையும் விரித்து “தெய்வங்கள் அறிக, சொல்லுங்கள்! என் படைகளுக்கு சொல்லுங்கள்! இனி இப்படைகளை நானே நடத்துகிறேன்” என்றான்.

சல்யர் “முடிக்குரிய அரசர்கள் நேரடியாக படைத்தலைமை கொள்வதில்லை” என்றார். “ஏன்? எவர் சொன்னது? இந்த மணிமுடியும் நிலமும் எனக்குரியது. இதன்பொருட்டு பொருதிநின்றிருக்க எழுந்தவன் நான்...” என்றான். “என் நிலத்தின்பொருட்டு போரிட எனக்கு எவர் ஒப்புதலும் தேவையில்லை.” துச்சாதனன் பெருமூச்சுடன் தன் பீடத்தில் அமர்ந்தான். அமர்கையில் அதன் கைப்பிடிமேல் கைகளை ஊன்றியதை அவனே விந்தையென எண்ணிக்கொண்டான். அவன் உடல் தளர்ந்திருந்தது. தசைகளில் ஒரு பகுதி ஏற்கெனவே இறந்துவிட்டிருப்பதைப்போலத் தோன்றியது. சல்யர் “அரசே, படைத்தலைவன் பொறுமை கொண்டிருக்க வேண்டும். எளிய இலக்காக அவன் படைமுகப்பில் நின்றிருக்கவும்கூடாது. அவனை நம்பி இருக்கின்றன படைகள். அரசன் படைத்தலைவன் ஆகுகையில் படைமுகத்தில் அமைதி இழக்கிறான்” என்றார்.

“நான் அமைதியிழக்கவில்லை. நான் அறிவேன், நான் வென்றே தீர்வேன் என. ஊழ் என்னை எங்கு கொண்டு செல்கிறது என்று எனக்குத் தெரியும். ஒவ்வொரு இழப்பும் எனது வெற்றியை உறுதி செய்கின்றது. எனது வெற்றியின் பெறுமதியென்ன என்று எனக்குச் சொல்வதற்கே இவ்விழப்புகள் நிகழ்கின்றன. என் உடன்பிறந்தார் இறக்கத்தொடங்குகையிலேயே நான் உணர்ந்துவிட்டேன், நான் முற்றிழக்கப் போகிறேன். ஒன்று மிஞ்சாது இக்களத்தில் நின்று வெற்றி ஒன்றையே தெய்வக்கொடை எனச் சூடுவேன். பிறகு அவ்வெற்றியைத் தூக்கி என் தெய்வத்தின் காலடியில் வீசி எறிவேன். அவ்வெற்றியும் எனக்கொரு பொருட்டல்ல என்று அதனிடம் சொல்வேன். ஆம்!”

துரியோதனன் வெறியுடன் ஓங்கி சிரித்தான். “ஆம்! என் தெய்வம் துணுக்குற வேண்டும். அதன் கண்களில் எவன் இவன் என்னும் திகைப்பு எழ வேண்டும். நான் செய்வதற்கு எஞ்சியிருப்பது அது ஒன்றே. ஐயமே இல்லை, வெற்றி என்னுடையதே. ஆகவே எனக்கு எந்தப் பதற்றமும் இல்லை. நான் நிலைகொண்டிருக்கிறேன், மலையுச்சியில் அமர்ந்த பெரும்பாறை போலிருக்கிறேன். எனக்கு ஐயமில்லை. அமைதி மட்டுமே. விண் தொடும் அமைதி மட்டுமே.”

“சற்று செவி கொள்ளுங்கள், அரசே!” என்று உரத்த குரலில் சல்யர் சொல்ல திடுக்கிட்ட துரியோதனன் “ஆம், ஆம், செவி கொள்கிறேன்” என்றான். இரு கைகளையும் கூப்புவதுபோல் நெஞ்சருகே வைத்துக்கொண்டு கண்களை மூடி “சொல்லுங்கள், செவிகொள்கிறேன். சொல்லுங்கள் முதியோரே, உங்களை எல்லாம் நம்பித்தான் இருக்கிறேன்” என்றான். “அஸ்வத்தாமன் பேசட்டும்” என்றபின் சல்யர் அமர்ந்தார். அஸ்வத்தாமன் “நாம்

நமது படைத்தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்" என்று மீண்டும் சொன்னான். "படைத்தலைமை கொள்ள இனி தகுதியானவர் அங்கர் மட்டுமே." கிருபர் "மெய், அரசரும் அதை உரைத்துள்ளார்" என்றார்.

"நமது படைகளின் முதன்மைப் பெருவீரர் எவரென்று கேட்டால் நாம் அங்கரைத்தான் சொல்வோம். பயிற்சியால், மூப்பினால் பீஷ்மரும் துரோணரும் நமது படையை நடத்தினார்கள். இப்போர் தொடங்கவிருக்கும்போது உண்மையில் நாம் எண்ணிய படைத்தலைவர் அங்கரே. பீஷ்மருக்கும் துரோணருக்கும் மேல் என அவர் வந்து படைமுகம் நின்றிருக்க வேண்டாமென்று தயங்கினோம். ஷத்ரியர்களின் அச்சத்தையும் தயக்கத்தையும் கருத்தில் கொண்டோம். இனி நமக்கு வேறு வழியில்லை. களம்பட்ட இருவரும் அவரை வாழ்த்தினார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகவே அங்கர் படைமுகப்புக்குச் செல்வதில் எப்பிழையும் இல்லை. அங்கர் படைத்தலைமை கொள்ளட்டும்" என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

துச்சாதனன் "ஆம், இனி நமக்கு வேறு வழியில்லை. இனி அங்கரே நம்மை காக்க வேண்டும்" என்றான். துரியோதனன் விழிதிறந்து கர்ணனை பார்த்தான். பின்னர் "நான் எவரிடமும் எதையும் கோர வேண்டியதில்லை. ஆனால் அங்கர் படைத்தலைமை கொள்வாரென்று நினைக்கிறேன். ஏனெனில் அவர் என்னை அறிவார்" என்றான். கர்ணன் கைதூக்கி "இதில் கோருவதற்கும் ஒப்புவதற்கும் ஏதுமில்லை. இயல்பாகவே படைத்தலைமை என்னை வந்து சேர்ந்திருக்கிறது. படையை நான் நடத்துகிறேன். களம்வென்று அரசருக்கு முடியை அளிக்கிறேன். இது என் தெய்வங்கள் மேல் ஆணை!" என்றான்.

துரியோதனன் “ஆம், அதுவே நிகழவிருக்கிறது. ஊழின் நெறி அது. என் தோழருக்கு நெடுங்காலத்துக்கு முன் நான் அங்கநாட்டு மணிமுடியை அளித்தேன். அது எனக்கு நானே சூட்டிக்கொண்ட மணிமுடி. இன்று அவர் எனக்கு அஸ்தினபுரியின் மணிமுடியை அளிப்பார். அது அவர் தனக்கு சூட்டிக்கொள்வது” என்றான். “அவர் வெல்வார். வென்றாகவேண்டும். ஏனென்றால் அவர் கதிரோன் மைந்தர். கதிரோன் நிலைபிறழ்ந்தால் விண்ணகம் அடுக்கு குலையும்...” சொல்லிவந்து வேறேதோ எண்ணம் ஊடுருவ நிலைகுலைந்து இரு கைகளையும் விரித்தபடி உரக்க நகைத்து “இதை நோக்கித்தானா வந்துகொண்டிருந்தோம்? நாம் நூறு ஆயிரம் வழிகளில் முட்டிமோதி இப்போதுதான் கண்டடைந்திருக்கிறோமா? இதுதானா? இவ்வளவுதானா?” என்றான்.

“அரசே, சற்று அமருங்கள். இதை நாம் முடிவெடுப்போம்” என்று அஸ்வத்தாமன் சொன்னான். பின்னர் கர்ணனிடம் “அரசாணை எழுந்துவிட்டது. அங்கரே, நீங்கள் படைநடத்துகிறீர்கள். நமது படைகளில் சிறு பகுதியே எஞ்சியிருக்கிறதென்று அறிவீர்கள். அவை முன்பு இருந்ததுபோல பயின்று முற்றும் ஒருங்கமைந்தவையும் அல்ல. அடுமனையாளர்களும் ஏவலர்களும்கூட படைக்கலமேந்தி உள்ளே வந்திருக்கிறார்கள். பெருவில்லவர்களும் முகப்பில் நின்று போரிடும் நீள்வேலர்களும் இன்றில்லை. நமது யானைகளும் புரவிகளும் பெரும்பகுதி அழிந்துவிட்டிருக்கின்றன. எஞ்சியிருப்பவர்களும் நம்பிக்கையிழந்தவர்கள். உடைந்த படைக்கலத்துடன் களமிறங்குகிறீர்கள்” என்றான்.

சல்யர் உரத்த குரலில் "ஆம், ஆனால் மறுபுறமிருக்கும் பாண்டவப் படையும் அவ்வாறே உள்ளது. அப்படை இன்று நமது படையை விட மூன்றில் ஒன்றே" என்றார். "துரோணர் விண்செல்லும்போது பாண்டவப் படையில் பெரும்பகுதியை எரித்தும் கொன்றும் இடிமின்னால் பொசுக்கியும் அழித்துவிட்டே சென்றிருக்கிறார். நமக்கு அவர் அளித்த பெருங்கொடை இது. ஓங்கி அறைந்தால் ஒரு நொடியில் நொறுங்கிவிடும் அமைப்பாகவே பாண்டவப் படை எனக்குத் தெரிகிறது" என்றார். அஸ்வத்தாமன் பேச நாவெடுக்க கையமர்த்தி மேலும் சொன்னார் "அவர்களும் அடுமனைச்சூதரையும் புரவிச்சூதரையும் போர்வீரர் என திரட்டி வைத்திருக்கிறார்கள். சூதர்களின் போர் நிகழவிருக்கிறது."

துச்சாதனன் சீற்றத்துடன் கைநீட்டி ஏதோ சொல்ல எழுந்தபோது துரியோதனன் வாய்திறந்து கோட்டுவாயிட்டு "பிறகென்ன? இப்போதே நமது படைகள் கிளம்பட்டும். இரவுப்போரெனில் அதுவும் ஆகுக! நாம் வென்றாகவேண்டும். வெல்வோம் என்ற என் தெய்வத்தின் ஆணையை அருகே கேட்கிறேன்" என்றான். துச்சாதனன் "அமருங்கள், மூத்தவரே. இதை நாம் பேசி முடிப்போம். தாங்கள் சொல்லெடுக்க வேண்டியதில்லை. சற்று பொழுதேனும் தாங்கள் அமர்ந்திருங்கள்" என்றான். துரியோதனன் அமர்ந்து திரும்பி ஏவலனிடம் மது கொண்டுவரும்படி கைகாட்டினான். ஏவலன் குனிந்து கொண்டு வந்து நீட்டிய யவன மதுவை வாங்கி மும்முறை அருந்தி வாயை மேலாடையால் துடைத்தபின் கண்களை மூடிக்கொண்டான். அவன் நெற்றியில் நரம்புகள் புடைத்து அதிர்ந்தன. கழுத்து அசைந்து தசைகள் இறுகி நெகிழ்ந்துகொண்டிருந்தன.

அஸ்வத்தாமன் "ஆகவே அரசாணைப்படி இது முடிவெடுக்கப்பட்டது. அங்கர் படை நடத்துவது உறுதியாயிற்று. அங்கருக்கு இப்படை நடத்துவதற்கு தேவையென்ன என்பதை இந்த அவையிலே கூறட்டும்" என்றான். கர்ணன் "தேவையென ஏதுமில்லை. எனது தேர், எனது வில், நான் பெற்ற அம்புகள் போதும். இக்களத்தில் வெற்றியை ஈட்டி அரசருக்கு அளிக்கிறேன்" என்றான். "தாங்கள் நாளை அர்ஜுனனை களம்நின்று எதிர்க்கப் போகிறீர்கள்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "இக்களவெற்றி இன்றியமையாதது. அர்ஜுனன் இறக்காமல், பீமன் களத்தில் சரியாமல் நாம் வெற்றியென்னும் சொல்லையே உரைக்க இயலாது" என்றான். கர்ணன் "ஆம், நாளை அர்ஜுனனை நான் வெல்வேன்" என்றான்.

சல்யர் "அதற்கு தேவையென்ன என்று கூறுக! ஷத்ரியர்களும் துணைவருவது நன்று. அர்ஜுனன் ஷத்ரியன் என்பதை கருத்தில் கொள்க!" என்றார். கர்ணன் சல்யரை நோக்கிவிட்டுத் திரும்பி அஸ்வத்தாமனிடம் "நான் என் விழியில் நாளை நிகழும் போரை ஓட்டிப்பார்க்கிறேன். எனது தேர் நிகரற்றது. விஜயம் காண்டீபத்தைவிட ஆற்றலும் வடிவும் கொண்டது. எனது அம்புகள் அரியவை. நான் பெற்ற பயிற்சி மேலானது. எனது ஆசிரியர்கள் புவியில் நிகரற்றவர்கள். மறுபக்கம் அவன் வில்லுடன் நின்றிருக்கிறான். என்னை வந்தடைய விழைந்தவன். எனக்கு நிகர்நிற்க இன்றும் இயலாதவன், ஆயினும் ஒன்றில் அவன் என்னை விஞ்சியிருக்கிறான். அவன் தேரை ஓட்டுபவன் யாதவ கிருஷ்ணன்" என்றான்.

"இந்தப் பதினைந்து நாள் போரில் நாம் கண்டது அவன் கைத்திறனையே. அவன் எண்ணமென ஓடின புரவிகள். அர்ஜுனன் எண்ணுவதற்கு முன்பே அதை அறிந்தான். அவன்

தேரினூடாக அவன் உள்ளமென்றாகி நின்றான் அர்ஜுனன். அவர்களின் இணைப்பினால் அத்தேர் ஓர் போர்த்தெய்வம் என்று ஆகி களத்தில் திகழ்ந்தது. அவனுக்கு நிகரான தேர்ப்பாகன் என்னிடம் இல்லை என்ற குறையை மீண்டும் மீண்டும் களத்தில் உணர்ந்துகொண்டிருந்தேன். அதை அவர்களும் அறிந்தனர். என் தேர்ப்பாகன்களையே குறிவைத்தனர். அவை அறியும், தேர்ப்பாகர்களாக அமர்ந்திருந்த எனது உடன்பிறந்தார் அனைவரும் கொல்லப்பட்டனர். நாளை போரில் எனக்கு இளைய யாதவனுக்கு இணையான தேர்ப்பாகன் தேவை. அவ்வண்ணம் ஒருவர் அமைந்தால் வென்றேன் என்றே கொள்க!" என்றான் கர்ணன்.

துச்சாதனன் "இளைய யாதவருக்கு நிகரானவர் என எவரும் இங்கு இல்லை" என்றான். அஸ்வத்தாமன் அவனை நோக்கி கையமர்த்திவிட்டு "நீங்கள் எவரை எண்ணுகிறீர்கள்?" என்றான். கர்ணன் "சல்யர் எனக்கு பாகனாக வரட்டும். அவர் எல்லாவகையிலும் இளைய யாதவனுக்கு நிகரானவர்" என்றான். அதை முதலில் சல்யர் புரிந்துகொள்ளவில்லை. கிருபர் "சல்யரா?" என்றார். "ஆம், அவர் புரவிதேர்வதில் திறனாளர். தேர்நுண்மை அறிந்தவர்" என்று கர்ணன் சொன்னான். சல்யர் ஒருகணத்தில் பற்றிக்கொண்டு ஓங்கி தன் கைகளை பீடத்தில் அறைந்தபடி எழுந்தார். "என்ன சொல்கிறாய்? கிருபரே, இங்கே என்ன பேசப்படுகிறது? சூதனுக்கு சூதனாகவா? நான் சூதன் காலடியில் அமர்ந்து தேரோட்ட வேண்டுமா? மலைமகன் என்றால் அத்தனை இழிவா?" என்று கூவினார்.

"இங்குள்ளோர் உணர்க! நான் எங்கும் அடிபணியவில்லை. எவருக்கும் ஏவல்செய்யவுமில்லை. பாண்டவர்களுக்கு பெண்

கொடுத்த குடியை சார்ந்தவன். இன்று விழைந்தாலும் மறுபுறம் சென்று நின்று படை நடத்தி உங்களை வெல்லும் ஆற்றல் கொண்டவன். நான் அஸ்தினபுரியின் ஷத்ரியப் படைக்கூட்டாளியாகவே இங்கே வந்தேன். எனக்கு எவருடைய பாகனாகவும் இருக்கவேண்டிய இழிவு இன்னும் அமையவில்லை" என்றார். "இளைய யாதவரைவிட குடிமேன்மை எதுவும் உங்களுக்கு இல்லை அல்லவா?" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "ஆம்! அவன் குடி என்னைவிட குறைந்ததே. யார் அவர்கள்? கன்றோட்டி வாழ்பவர்கள், வளைதடிகொண்டு காடுகளில் அலைபவர்கள். நாங்கள் அரசப்பெருங்குடி. சௌவீர மணிமுடி எங்கள் குடிக்கு வந்து நூறு தலைமுறைகளாகிறது. அன்று அஸ்தினபுரி என ஒரு நாடு இருந்ததா? சொல்க!"

"பால்ஹிகப் படைக்கூட்டை எவரும் குறைத்து மதிப்பிடவேண்டாம். நாங்கள் படைதிரட்டிக் களம்வென்று நிலம் சேர்க்காமல் இருக்கலாம். எங்கள் மலைநகர்கள் சிறியவையாக இருக்கலாம். எங்கள் கருவூலங்கள் இன்னும் நிறையாமலிருக்கலாம். ஆனால் விரிநிலத்திலிருக்கும் எந்த ஷத்ரியரைவிடவும் ஆற்றலும் விசையும் கொண்டவை எங்கள் விற்கள். இங்கிருக்கும் எந்த அரசகுடியை விடவும் தொன்மையானது எங்கள் குடி" என்று சல்யர் கூவினார். "நாம் இங்கு குடிப்பெருமை பேச வரவில்லை, மத்ரரே" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "நான் வந்தது அதற்காக மட்டுமே. நான் அன்றும் இன்றும் பேசிக்கொண்டிருப்பது அதுவே. அவை நடுவே என் குலப்பெருமை நிலைகொள்வது மட்டுமே எனக்கு இலக்கு" என்று சல்யர் கூவினார்.

“அவை நிகழட்டும். வெற்று உணர்ச்சிகள் வேண்டாம்” என்றார் கிருபர். “நீங்களும் இவர்களுடன்தானா? நன்று கிருபரே, நன்று. துரோணர் மறைந்ததும் நான் தனியனானேன்” என்றார் சல்யர். “இந்தச் சூதன்மகன் செய்யும் சூழ்ச்சி என்ன என்றறியாதவன் அல்ல நான். இவன் உளம்செல்லும் தொலைவை நானும் சென்றடைந்தேன். சொல்க, நான் எதன் பொருட்டு மலையிறங்கி வந்தேன்? எதன் பொருட்டு பாண்டவரை உதறி இங்கு சேர்ந்தேன்? எனது குடிப்பெருமை இங்கு களத்தில் நிறுவப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே. யாதவருடன் இணைந்தால் நாளை அவர்கள் வென்றாலும் எங்கள் குடி யாதவக்குடியுடன் இணைத்து பேசப்படும் என்பதற்காகவே ஷத்ரியராகிய அஸ்தினபுரியுடன் வந்து இணைந்தேன். ஷத்ரியப் பேரவை முன் நாங்கள் என்றென்றும் நிமிர்ந்து நின்றிருக்க வேண்டும் என்பதற்காகவே என் குருதியையும் தாண்டினேன்.”

“இன்று என்னை இவன் தனக்கு தேர்ப்பாகனாக அமர்ந்திருக்கக் கோருகிறான்... சூதனுக்குத் தேரோட்டியபின் இருநிலம் வென்று அமைந்தாலும் என் குடிகளுக்கு இழிவே எஞ்சும் என அறிந்தே அதை கோருகிறான்... நான் என்ன செய்யவேண்டும்? சொல்க, நான் என்ன செய்யவேண்டும்? என் நாவால் இவனை சூதன் என இகழ்ந்தேன். அதே நாவால் இவனுக்கு வணக்கம் சொல்லவும் இவன் ஆணைப்படி வார்பற்றவும் வேண்டும் அல்லவா? இயலாது. அவ்விழிவைச் சூட எந்நிலையிலும் என்னால் இயலாது. இதோ எஞ்சிய பால்ஹிகர்களுடன் நான் கிளம்புகிறேன். இனி இப்போரில் நாங்கள் கலந்துகொள்ள இயலாது” என்ற சல்யர் பீடத்தில் கிடந்த தன் மேலாடையை எடுத்து தோளிலிட்டபின் வெளியேறினார்.

இருட்கனி - 11

துச்சாதனன் திகைப்புடன் எழுந்தான். ஆனால் துரியோதனன் சல்யர் வெளியேறியதையே நோக்கவில்லை. துச்சாதனன் கிருபரிடம் "நான் சென்று அவரை அழைத்துவருகிறேன்" என்றான். "வேண்டியதில்லை, அவரால் செல்ல இயலாது. வருவார்" என்றார் கிருபர். அஸ்வத்தாமன் கர்ணனை நோக்கி "நீங்கள் அவரில்லாமல் படைமுகம் செல்ல இயலாதா என்ன?" என்றான். "அவர் முற்றாக விலகிச் செல்லட்டும். அதன்பின் அதைப்பற்றி எண்ணுவோம்" என்றான் கர்ணன். கிருபர் "அவர் தன் எதிர்ப்பை காட்டியாகவேண்டும்" என்றார். பின்னர் "முதியவர்களின் நடிப்பும் குழவியரின் நடிப்பும் மிக எளிமையானவை" என புன்னகை செய்தார். துச்சாதனன் "அவர் சீற்றத்துடன் சென்றிருக்கிறார்" என்றான். "ஆம், அச்சீற்றம் உண்மை..." என்றார் கிருபர்.

துச்சாதனன் அவர் சொன்னதை புரிந்துகொள்ள முயன்று விழித்து நிற்க சல்யர் வாயிலில் தோன்றினார். "நான் ஒன்றை சொல்லிக்கொண்டு விலகவே வந்தேன். நான் இங்கே எவரையும் நம்பி வரவில்லை. அவையில் என் தனித்தன்மையும் என் குடியின் பெருமையும் காக்கப்படும் என அரசர் அளித்த சொல்லை நம்பியே வந்தேன். இங்கே என்னை சிறுமைசெய்பவர், என் குடியை பழிப்பவர் அரசரைப் பழித்தவரே ஆவர்" என்றார். கிருபர் "இங்கே எவரும் உங்கள் குடியை பழிக்கவில்லை" என்றார். "நான் அறிவேன், என்ன நிகழ்கிறது என நான் அறிவேன்" என்று சல்யர் கூவினார். "உங்கள் திட்டங்கள் அனைத்தும் எனக்கு தெற்றெனத் தெரிகிறது.

அதைப்பற்றிப் பேச நான் வரவில்லை. அதைப்பற்றிப் பேச என்னிடம் ஒரு சொல்லும் இல்லை.”

“ஆம், இனி நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஒன்று உணர்க, நாளை அரசர் தன்னுணர்வு கொண்டு என்னைப்பற்றி கேட்கையில் என்ன நிகழ்ந்தது என்று மெய்யாகச் சொல்லும் பெற்றி உங்களுக்கு இருக்கவேண்டும். அது உங்களுக்கு காட்டும் நீங்கள் எனக்குச் செய்தது என்ன என்று. இனி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை” என்று சல்யர் மூச்சிரைத்தார். “எவரும் எதையும் தனிப்பட்ட உளமோதலாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இங்கு எவரும் தனியர்கள் அல்ல. நாம் அனைவரும் அரசரின் பணியிலிருக்கிறோம். இக்களத்தில் வெற்றியை ஈட்டவேண்டிய நிலையிலிருக்கிறோம். வெற்றுணர்வுகளுக்கு இங்கு இடமில்லை” என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

“இது வெற்றுணர்வல்ல” என்று சல்யர் கூவியபடி மேலும் உள்ளே வந்தார். “எதன்பொருட்டு நான் இங்கு வந்தேனோ அதையே அழிப்பது இது. ஒருபோதும் இதை நான் ஏற்க இயலாது” என்று கைநீட்டினார். “என்ன எண்ணியிருக்கிறீர்கள் என்னை? என்னை சூதன் என்று அமரச்செய்கிறீர்கள் என்றால் இதுநாள் வரை என்னவென்று எண்ணி என்னை அவையிலமர்த்தினீர்கள்?” துச்சாதனன் “அங்கர் ஓர் எண்ணமென்றே உரைத்தார், மத்ரரே. நாம் அதைப்பற்றி பேசுவோம் என்றே அதற்குப் பொருள்” என்றான். கர்ணன் “ஆம், நான் எளிய விழைவாகவே இதை சொன்னேன். ஆனால் இவரால் மறுக்கப்பட்டுவிட்ட பின்னர் இதில் உறுதி கொள்கிறேன். ஏனென்றால் மறுக்கப்பட்டேன் என்பது எனக்கு இழிவு. அவ்விழிவுடன் வில்லேந்தி களம் சென்றால் அது

என்னை உளம் அழிக்கும். இவர் எனக்கு பாகனாக வந்தே ஆகவேண்டும்" என்றான்.

"அது நிகழப்போவதில்லை. ஒருநிலையிலும் அது நிகழப்போவதில்லை. சூதனுக்குப் பாகனாக எந்த மலைமகனும் வரப்போவதில்லை" என்று சல்யர் கூச்சலிட்டார். கர்ணன் சுட்டுவிரலால் மீசையைச் சுழித்தபடி அவரை தன் சிறிய கூர்விழிகளால் நோக்கிக்கொண்டிருந்தான். சல்யர் அவனை நோக்கி கைநீட்டி பற்கள் தெரிய முகம் வலிப்புகொள்ள முன் சென்றபடி "சூதனே, உன் நோக்கம் என்ன என்று தெரிகிறது. என்னை முற்றிலும் வீழ்த்த எண்ணுகிறாய். நான் உனக்கு பாகனென களம்சென்றால் மறுபுறம் என் மறுமைந்தர்கள் என்னை நோக்கி நகைப்பார்கள் என்று அறிந்திருக்கிறாய். அவர்கள் முன் நான் இங்கே சூதனென்றே நடத்தப்படுகிறேன் என்று காட்டவிழைகிறாய். அவர்களுக்கு என் மீதிருக்கும் எஞ்சிய மதிப்பையும் அழிக்கத் திட்டமிடுகிறாய்" என்றார்.

"அவர்கள் என்னைக் கொல்வதற்கு இக்கணம் வரை தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் நான் இன்றும் அவர்களின் குடிமூத்தவன். தந்தையின் இடத்தில் அமர்ந்தவன். என் எதிரில் வில்லெடுத்து வருகையில் அவர்கள் கை தளர்வதை பலமுறை கண்டிருக்கிறேன். சூதனுக்குப் பாகனாக நான் அமர்ந்துவிட்டேன் என்றால் அதன் பின்னர் அவர்களுக்கு அத்தயக்கம் இருக்காது. அவர்களில் ஒருவனது வில்லால் நான் இறப்பேன் என்று எண்ணுகிறாய்" என்றார் சல்யர். "தேவையற்ற சொற்கள் எதற்கு..." என்று கிருபர் சொல்ல "தேவையானதுதான் இது. இவனுக்குத் தேவையானது. ஏனென்றால் இன்று இவன் வெறும் சொல்வீரன் என்றும் வீண் ஆணவத்தையே வீரம் என முன்வைப்பவன் என்றும் அறிந்துள்ளவன் நான் மட்டுமே.

பீஷ்மருக்குப் பின் அதை அவையிலெழுந்து சொல்பவனாகவும் இருக்கிறேன். இவனால் என்னை வெல்ல இயலாது. எனவே என்னை சிறுமைசெய்து அழிக்க எண்ணுகிறான்" என்றார் சல்யர்.

"நான் எண்ண வேண்டிய அனைத்தையுமே நீங்களே சொல்லிவிட்டீர்களென்றால் மேலும் எண்ணுவதற்கு எனக்கு சொற்கள் இருக்காது" என்று கர்ணன் இகழ்ச்சியாக சொன்னான். அதை புரிந்துகொள்ளாமல் சல்யர் மீண்டும் "ஒருபோதும் இது நிகழப்போவதில்லை. நான் சொல்கிறேன், இவன் படைத்தலைவனாக வேண்டிய தேவையும் இல்லை. இப்போரை நான் நடத்துகிறேன். என்னால் படைத்தலைமை கொள்ளமுடியும். என் வில்திறனால் பாண்டவர்களை வென்று இப்போரை முடிக்கவும் என்னால் இயலும். துரோணர் தொடங்கிவைத்ததை நான் முடிக்கிறேன். அவருக்கு நான் பட்ட கடனை தீர்க்கிறேன். பிறகென்ன?" என்று கூவினார். "ஆணை கொடுங்கள்! நான் படைத்தலைமை ஏற்கிறேன்" என்று துரியோதனனை நோக்கினார். கைகளில் தலைசாய்த்து வாயிலிருந்து எச்சில் வழிய அவன் துயின்றுகொண்டிருப்பதைக் கண்டு முகம் சுளித்து திரும்பிக்கொண்டார்.

அஸ்வத்தாமன் "அவ்வாறல்ல மத்ரரே, இத்தருணத்தில் போரை நடத்த அங்கரால் மட்டுமே முடியும். தாங்கள் வெல்லமுடியும். அதை மறுக்கவில்லை. ஆனால் வெல்லமுடியுமென்ற எண்ணத்தை நம் படைகளிடம் உருவாக்க அங்கரால் மட்டுமே முடியும். நீங்கள் அடைந்த வெற்றிகள் எல்லாம் உங்கள் மலைநாட்டில் நிகழ்ந்தவை. அவற்றை நம் படைகள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அங்கர் அவர்களை

நடத்திச்சென்று பாரதவர்ஷத்தின் பாதிநிலத்தை ஏற்கெனவே வென்றவர்" என்றான். கிருபர் "அங்கர் படைத்தலைமை ஏற்பதை முடிவு செய்துவிட்டுதான் மேலே பேசிக்கொண்டிருக்கிறோம்" என்றார். "எனில் இனி நீங்களே பேசுங்கள். இந்த அவையில் எனக்கு பணி எதுவும் இல்லை" என்றபின் சல்யர் வெளியே நடந்தார்.

துச்சாதனன் பார்த்தபோது இரு கைகளாலும் தலையைப் பற்றி குனிந்து இமைகள் சரிந்து வாய் சற்றே கோணலாகி நீள்மூச்சொலியுடன் துரியோதனன் அரைத்துயிலில் இருந்தான். "மூத்தவரே" என்ற துச்சாதனன் துரியோதனனின் காலைத் தொட்டு அசைத்தான். விழித்து "என்ன நிகழ்கிறது? யார்?" என்றான் துரியோதனன். வாயைத் துடைத்துவிட்டு "நாம் படைமுகம் செல்லவிருக்கிறோமா?" என்றான். "மூத்தவரே, சல்யர்தான் தனக்கு தேர்நடத்த வேண்டுமென்று அங்கர் விரும்புகிறார்..." என்று துச்சாதனன் சொல்வதற்குள் "ஆம், சல்யர் தேர்நடத்தட்டும்... அதுவே முறை. நாம் வெல்லும் வழி அதுவே" என்று துரியோதனன் சொன்னான்.

சல்யர் வாயிலருகே நின்று திரும்பி சீற்றத்துடன் "என்னை சூதன் என்று ஆக்க விழைகிறீர்களா? சூதனுக்குச் சூதனாக சென்று அமர்ந்த பின்னர் என் கொடிவழியினருக்கு நான் அளிக்கும் அடையாளம் என்ன? குடிப்பெருமை காக்க மட்டுமே நான் இப்போருக்கு வந்தேன். பிறிதொன்றையும் இங்கிருந்து நான் அடைவதற்கில்லை. நாளை என் மைந்தர் ஷத்ரிய அவையில் நிகரமர்வு கொள்ள வேண்டுமென்பதற்கப்பால் நான் எதையும் எண்ணிச் சூழவும் இல்லை. இக்களத்தில் அதை இழந்துவிட்டு பின் நான் அடைவதுதான் என்ன?" என்றார். "உங்கள் வெற்றியும் உங்கள் மணிமுடியும் எனக்கு ஒரு

பொருட்டே அல்ல. அது என் புரவியில் சூட்டும் கடிவாளத்திற்கு நிகர். ஆம், என் கால் குறடுக்கு நிகர்.” அழுத்தமான குரலில் “மிகைச்சொற்கள் வேண்டாம், மத்ரரே” என்று அஸ்வத்தாமன் சொன்னான். “இப்போரில் வென்றால் மட்டுமே உங்களுக்கு பெருமையோ செல்வமோ அணுவளவேனும் எஞ்சப்போகிறது. இல்லையேல் நீங்கள் ஒரு மலைப்புரவியின் மதிப்புகூட இல்லாதவர் என்று உணர்க!”

சல்யர் திகைப்புடன் வாய்திறந்து நின்றார். “இக்களத்தில் நீங்கள் தோற்றால் சௌவீர, பால்ஹிக நாடுகளின் அரண்களும் களஞ்சியங்களும் பாண்டவர்களால் முற்றழிக்கப்படும். அந்நாடுகள் நூறு துண்டுகளாக சிதறடிக்கப்பட்டு பாண்டவர்களின் கீழ் சிற்றரசுகளாக அமையும். ஒருபோதும் அவை கொடிகொண்டு அமரவோ கோல்கொண்டு ஆளவோ இயலாது. ஏனென்றால் நீங்கள் அவர்களுக்குச் செய்தது நேரடியான நம்பிக்கை வஞ்சகம்” என்று அஸ்வத்தாமன் சொன்னான். “சௌவீர, பால்ஹிக நாடுகளை ஆளவிருப்பவர்கள் சிபிநாட்டவர். ஏனென்றால் அவர்கள் வென்றவர்களுக்கு குருதியுறவுகொண்டவர்கள். ஆளவிருக்கும் யுதிஷ்டிரனின் மைந்தர் சைப்யர் என்பதை மறக்கவேண்டாம். உங்கள் கொடிவழியினர் சிபிநாட்டுக் கொட்டில்களில் புரவி மேய்ப்பதைவிட இப்போது நீங்கள் தேர்தெளிப்பதொன்றும் சிறுமை அல்ல.”

ஒரு கணத்தில் முற்றிலும் தளர்ந்து சல்யர் “ஆம்” என்றார். முனகல்போல மீண்டும் ஓர் ஒலியெழுப்பி கால் தளர்ந்து பீடத்தில் அமர்ந்தார். “நீங்கள் இன்று ஆற்றவேண்டியது ஒன்றே. இப்போரில் வெல்ல என்ன செய்யவேண்டும் என்பது மட்டும்தான் நம் எவருக்கும் முதன்மைக் கடமை. அதை

மட்டும் எண்ணுவோம்" என்றான் அஸ்வத்தாமன். "ஆம், அதைத்தான் நானும் எண்ணுகிறேன்" என தழைந்த குரலில் சல்யர் சொன்னார். கர்ணன் "நான் படை நடத்துகிறேன். தேரிலேறி களமுகம் நின்று அர்ஜுனனையும் பீமனையும் வெல்கிறேன். நாளைய போருக்குப் பின் எவர் வெல்வதென்ற பேச்சுக்கே இடமிருக்காது. ஆனால் இவர் எனக்கு தேரோட்டியாகவேண்டும்" என்றான்.

சல்யர் அழுகை நிறைந்த முகத்துடன் வெறுமனே அவனை பார்த்தார். துரியோதனன் மீண்டும் மெல்லிய குறட்டை ஒலியை எழுப்பினான். "மூத்தவரே" என்று அவன் காலை அசைத்தான் துச்சாதனன். துரியோதனன் விழித்து எழுந்து சல்யரை நோக்கி "மத்ரரே, தாங்கள் எனக்கு அளிப்பதற்கு பிறிதொன்றும் இல்லை. இது எனது ஆணை அல்ல, எனது விண்ணப்பம்" என்றான். சல்யர் தோள் தளர்ந்து "இத்தகைய சொற்களால் என்னை அடிமை கொள்கிறீர்கள்" என்றார். ஆனால் அவர் முகம் தெளிவடைந்தது. "உங்கள் ஆணை எனக்கு பொருட்டல்ல, ஆனால் இன்சொற்களை என்னால் தட்டமுடியாது என அறிவீர்கள்" என்றார். "எனில் இதை இறுதிமுடிவு செய்வோம். அங்கர் படைத்தலைமை கொள்கிறார். படைமுகப்பில் அவருக்கு சல்யர் தேரோட்டுகிறார்" என்றான் அஸ்வத்தாமன்.

சல்யர் மீண்டும் விசைகொண்டு எழுந்து தன் மேலாடையை எடுத்து அருகிலிருந்த இருக்கையில் ஓங்கி வீசி "அவ்வளவுதானே? நீங்கள் விழைவது நடக்கட்டும். நான் என் குடிப்பெருமையை இழக்கிறேன். என் ஆணவத்தை அழித்துக்கொள்கிறேன். இச்சூதனுக்கு பாகனாக அமர்கிறேன். அதற்குமேல் ஏதேனும் இருந்தால் அதையும் ஆற்றுகிறேன்..."

என்றார். பின்னர் "அரசே, இங்கு பெருவில்லவர்கள் உங்களுக்காக உயிர் கொடுத்தனர். மைந்தரை கொடுத்தனர் பலர். நான் அதற்கு அப்பாலும் கொடுத்திருக்கிறேன், நினைவுகொள்க!" என்று கூறி அவையை விட்டு வெளியேறினார். அவர் செல்வதை பொருளிலா விழிகளுடன் நோக்கி அமர்ந்திருந்த துரியோதனன் திரும்பி ஏவலனிடம் வாய்மணம் கொண்டுவரும்படி கைகாட்டினான்.

அஸ்வத்தாமன் கர்ணனிடம் "அவர்தான் தேரோட்ட வேண்டுமென்று ஏன் கூறினீர்? அவரை சிறுமை செய்யும் நோக்கம் மெய்யாகவே உங்களுக்கு இருந்ததா?" என்றான். கர்ணன் "இல்லை. இந்தக் களத்தில் இதுவரை நான் எடுக்காத சில அம்புகளை எடுக்கவிருக்கிறேன். அதற்குரிய விசை என் தேரில் கூடவேண்டும். நான் நாணொலிப்பதற்கு இணையாக என் தேர் திரும்பவேண்டும். என் அம்புகளை தானும் முற்றறிந்த ஒருவரே தேரை தெளிக்க முடியும். அந்தியில் நான் உணர்ந்தது அதுவே. அர்ஜுனனின் படைவெற்றிக்கு முதன்மை அடிப்படையாக அமைவது இளைய யாதவன் தேர்தெளிக்கிறான் என்பது. அவனது அத்தனை அம்புகளையும் தானும் அறிந்தவன். அவன் போடும் படைக்கணக்குகள் அனைத்தையும் முன்னரே உணர்ந்தவன்" என்றான்.

"களத்தில் பாகனுக்கு சொல்லி புரியவைப்பது இயலாது. நான் அறிந்த அம்புகளை ஷத்ரியரன்றி பிறர் அறிந்திருக்க மாட்டார்கள். ஷத்ரியர்களிலும் வில்தவம் இயற்றியவரே என் அரிய அம்புகளை உணரமுடியும். சல்யர் நானறிந்த அனைத்து வில்தொழிலையும் தானுமறிந்தவர். அவரிடம் நான் சொல்வதற்கெதுவுமில்லை" என்றான். துச்சாதனன் "அவர் சீற்றம் கொண்டிருக்கிறார். சிறுமைப்படுத்தப்பட்டதாக

நினைக்கிறார். நாளை போரில் அவர் உங்களை கைவிட்டாரெனில் என்ன செய்ய இயலும்?" என்றான். அதுவரை அங்கில்லாதவர்போல் இருந்த சகுனி "ஆம், தேர் நடத்தும்போது அவர் வேண்டுமென்றே தன்னை உள்ளிழுத்துக்கொண்டாரென்றால் இடர்தான்" என்றார்.

"அவ்வாறு வீரனால் செய்ய இயலாது என்றே எண்ணுகிறேன். அவர் எளிய வீரர், அரசுசூழ்தலின் கணக்குகள் அறிந்தவரல்ல. இக்கொந்தளிப்புகளும் வசைச்சொற்களும் போருக்கு முந்தைய கணம் வரைக்குமே. போர்முரசு முழங்கிவிட்டதென்றால் அதன் பின்னர் வில்லிலிருந்து எழும் தேவர்கள் போரை நடத்துகிறார்கள். அவர்கள் நம் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் அல்ல. நமது எளிய உணர்வுகள் எதையும் அவர்கள் அறிவதுமில்லை" என்றான் கர்ணன். கிருபர் "ஆம், போரில் எவரும் ஆணவக் கணக்குகள் போடுவதில்லை" என்றார். சகுனி "தெய்வங்களே நடத்துகின்றன என்பது உண்மை, ஆனால் தெய்வங்களை மனிதர்கள் கணிக்கவே முடியாது" என்றார்.

விழித்தெழுந்தவன்போல துரியோதனன் கைகளை ஓங்கித்தட்டினான். "நாம் வென்றாக வேண்டும். எவ்வகையிலும் வென்றாகவேண்டும். நாளையே இப்போர் முடிந்தாகவேண்டும்" என்று கூவினான். "நாளை இக்களத்தில் நான் குருதியில் நனைந்து எழுந்து நின்று அமலையாடவேண்டும். மணிமுடியை இங்கேயே சூடிக்கொள்ளவேண்டும்." கர்ணன் "ஆம் அரசே, நாளையுடன் இப்போர் முடியும்" என்றான். "நாளை அர்ஜுனன் இறக்கவேண்டும். நாளை யுதிஷ்டிரன் வந்து என் அடிபணிந்தாகவேண்டும்" என்றான் துரியோதனன். "அது நிகழும், அறிக தெய்வங்கள்!" என்று கர்ணன் சொன்னான்.

துரியோதனன் அஸ்வத்தாமனிடம் "நமது படைசூழ்கை என்ன? உடனே படைசூழ்கை வகுக்கப்படட்டும்" என்றான்.

"அங்கர் படை நடத்துகிறாரா என்பதை கருத்தில் கொண்டு எனது படைசூழ்கையை முழுமை செய்யலாமென்று எண்ணினேன். அவர் படை நடத்துகிறார் என்பது உறுதியாயிற்று. இனி நான் என் படைசூழ்கையை முழுமை செய்ய வேண்டும்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "அங்கரும் சல்யரும் ஒரே தேரில் அமர்ந்திருப்பார்களெனில் நான் இப்போது வகுத்து வைத்திருக்கும் படைசூழ்கையை அவிழ்த்து மீண்டும் கோக்க வேண்டும். புலரிக்குமுன் என் படைசூழ்கையை அறிவிக்கிறேன்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "அதற்குமுன் அங்கர் போர்த்தலைமை கொண்டதை முரசு அறிவிக்கட்டும். படைகள் அதை அறிந்தபின் துயில்கொள்ளட்டும்" என்று கிருபர் சொன்னார்.

"அவ்வாறே ஆகுக! நான் ஓய்வெடுக்கிறேன். என் உடல் மதுவால் எடை கொண்டிருக்கிறது" என்றபடி துரியோதனன் எழுந்தான். அவன் சற்று தள்ளாட துச்சாதனன் அவன் தோள்களை பற்றிக்கொண்டான். "விடு என்னை... நான் என்ன நோயாளன் என எண்ணினாயா?" என்றான் துரியோதனன். ஆனால் மீண்டும் நிலையழிந்து விழப்போனான். துச்சாதனன் அவனை பற்றிக்கொண்டு அழைத்துச் சென்றான். "அனைத்துச் செய்திகளும் என்னை வந்தடையவேண்டும்..." என்றான் துரியோதனன். "இளையோனே" என வேறெங்கோ நோக்கி அழைத்தான். "மூத்தவரே" என்றான் துச்சாதனன். துரியோதனன் "என் சார்பாகச் சென்று நீ சல்யரிடம் மீண்டும் பேசு. அவருடைய உளச்சோர்வை அகற்று... அஸ்வத்தாமனும்

அவரிடம் பேசட்டும்" என்றான். அஸ்வத்தாமன் "ஆணை" என்றான்.

சகுனி "நாளைய படைசூழ்கையை புலரிக்கு முன் ஒருமுறை என்னிடம் கொண்டுவந்து காட்டுக!" என்றார். அவர் அந்த அவையில் பேசவே இல்லை என்பதை அஸ்வத்தாமன் அப்போதுதான் உணர்ந்தான். "அங்கருக்கு பீஷ்மரின் நற்சொல் அமைந்தது என்பதையும் நம் படைகளிடம் அறிவிக்கவேண்டும்" என்றார் சகுனி. "ஆம்" என்று அஸ்வத்தாமன் சொன்னான். கர்ணனும் கிருபரும் பேசியபடி வெளியேறினர். சகுனி தன் காலை நீட்டி நீட்டி வைத்து மெல்ல நடந்தார். அஸ்வத்தாமன் அவருடைய நடையால் உள்ளம் சீண்டப்பட்டான். அவருடைய எப்போதுமிருக்கும் நடை அது என அவன் அறிந்திருந்தான். ஆயினும் அப்போது அவன் உள்ளம் சீற்றம் கொண்டது. அங்கே நிகழ்ந்தவற்றுக்கு முற்றிலும் அப்பால் அவர் பதறாது சோர்வுறாது அமர்ந்திருந்தார் என எண்ணச் செய்தது.

அவன் அவரை புண்படுத்த விழைந்தான். தொட்டுத்தொட்டு பல எண்ணங்களினூடாகச் சென்று கண்டடைந்ததும் அகம் மலர்ந்தான். "நான் தங்களிடம் கேட்கவேண்டும் என எண்ணினேன், காந்தாரரே. அமைச்சர் கணிகர் எங்கே இருக்கிறார்? அவர் நலமாக இருக்கிறார் அல்லவா?" என்றான். சகுனியின் முகத்தில் கடுமையான வலி என ஒரு சுளிப்பு உருவாகி மறைந்தது. புன்னகை எழ "அவர் அமைச்சர் அல்ல, அதை முதலில் சொல்லவேண்டும். அவர் அந்தணர், நோன்புகொண்ட அந்தணர் களம் வருவதில்லை" என்றார். "அஸ்தினபுரியில் அவர் இல்லை என எண்ணுகிறேன்" என்றான் அஸ்வத்தாமன் சகுனியின் கண்களை கூர்ந்து நோக்கியபடி. "ஆம், அவர் அருகே ஒரு காட்டுக்குடிலில் இருக்கிறார்" என்ற

சகுனி மேலும் புன்னகை விரிய "போரெழுகையைக் கண்டு அஞ்சி உடனே கிளம்பிவிட்டார். நலமாக இருக்கிறார் என நினைக்கிறேன்" என்றபின் நடந்து சென்றார்.

அஸ்வத்தாமன் அவையிலிருந்து வெளிவந்தபோது தன் தேரில் சல்யர் தலையை தாங்கி அமர்ந்திருப்பதை கண்டான். காலடி கேட்டு அவர் ஏறிட்டுப் பார்த்தார். அவருடைய பாகன் புரவியின் கடிவாளத்தைப் பற்றியபடி அவருடைய ஆணைக்காக காத்து நின்றிருந்தான். அவர் கர்ணன் அவரை கடந்துசெல்வான் என எதிர்பார்க்கிறார் என அஸ்வத்தாமன் எண்ணினான். ஆனால் கர்ணன் எதிர்ப்பக்கமாக நடந்து சென்றான். கிருபரும் அவனுடன் பேசியபடி செல்ல சல்யர் அவர்களை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். அஸ்வத்தாமன் அவரை நோக்கி நடந்து சென்று தேருக்குக் கீழே நின்றபடி "மத்ரரே, வணங்குகிறேன்" என்றான். சல்யர் நிமிர்ந்து சிவந்த விழிகளால் அவனை பார்த்தார்.

"தாங்கள் சற்று மிகையாக எண்ணுகிறீர்கள். தாங்கள் அங்கருக்குத் தேரோட்டியதனால் எந்த இழிவையும் அடையப்போவதில்லை. அர்ஜுனனை அவர் வென்றால் அதன் பெருமை அனைத்தும் உங்கள் இருவருக்குமாக பகிரப்படும். அது உங்கள் குடிப்பெருமையையும் தனிப்பெருமையையும் மிகையாக்கவே செய்யும். ஒருபோதும் இதன் பொருட்டு நீங்கள் வருந்த நேராது" என்றான் அஸ்வத்தாமன். "நான் அவரிடம் கேட்டேன். மெய்யாகவே உங்களை இழிவுசெய்யும் நோக்கம் அவருக்கில்லை. அம்புகளை தானுமறிந்தவரே நுண்ணொடு நுண் பொருதும் போரில் வில்லவனுக்கு தேர்தெளிக்க முடியும் என்றார். அர்ஜுனனும் கிருஷ்ணனும் இணைந்து களம்நிற்கையில் இணையான இன்னொரு பாகனும்

வில்லவனுமே அவர்களை எதிர்கொள்ள முடியும். அங்கர் சொல்வது உண்மையானதுதான்.”

“அல்ல” என்று அவர் சொன்னார். “அவனை நான் அறிவேன். அவனால் பாகனின் உள்ளத்தை ஆளமுடியும். பாகன் வழியாக புரவிகளையே ஆள முடியும். அவன் பரசுராமரின் மாணவன். நாணொலியால் உள்ளங்களைக் கவரும் கலை அறிந்தவன். இதில் போர்நோக்கமே இல்லை.” அஸ்வத்தாமன் “நான் அவரிடம் கேட்டேன். அவர் பொய் சொல்லவில்லை என்பதில் எனக்கு ஐயமில்லை. அவர் உங்களை எவ்வகையிலும் சிறுமைப்படுத்த விரும்பவில்லை என்றே எண்ணுகிறேன்” என்றான். “அவன் என்னை சிறுமைப்படுத்தவில்லை” என்று சல்யர் சொன்னார். “அவன் எனக்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறான். எனக்கல்ல, வேறு ஒருவருக்கு” என்றார்.

“என்ன செய்தி?” என்று அஸ்வத்தாமன் கேட்டான். சல்யர் மறுமொழி சொல்லவில்லை. சல்யரின் முகத்தை ஒருகணம் நோக்கிவிட்டு அஸ்வத்தாமன் “இந்தப் போரின் பொருட்டு தாங்கள் எவ்வகையிலும் உளவருத்தம் கொள்ளவேண்டியிருக்காது என்பதைத்தான் நான் மீளவும் சொல்ல விழைகிறேன்” என்றான். “இப்போரின் பொருட்டு மட்டும்தான் வாழ்நாளெல்லாம் நான் வருந்துவேன். ஆனால் இப்போர் முடிந்த பின்னர் ஒரு நாளுக்கு அப்பால் நான் உயிரோடிருப்பேன் என்று எண்ணவில்லை” என்று சல்யர் சொன்னார். “என்ன சொல்கிறீர்கள்?” என்று அஸ்வத்தாமன் கேட்டான். சல்யரின் விழிகள் சிவந்திருந்தன. “நீங்கள் அறியாத நூறு முடிச்சுகள் இந்தப் பரப்பில் உண்டு, இப்போது சொல்லமுடியாதவை” என்று சல்யர் சொன்னார்.

அவரை அஸ்வத்தாமன் வியப்புடனும் திகைப்புடனும் பார்த்துக்கொண்டிருந்தான். “நான் இந்தக் களத்திற்கு வந்தது வேறொன்றுக்காக. ஒருபோதும் எதிர்நின்று போரிட நேரக்கூடாது. ஒரு அம்பையேனும் என் கைகளால் தொடுத்துவிடக்கூடாது என்பதற்காக” என்றார் சல்யர். “எவருக்கெதிராக?” என்று அஸ்வத்தாமன் கேட்டான். சல்யர் அதற்கு மறுமொழி சொல்லாமல் இல்லை இல்லை என்பதுபோல் தலையசைத்தார். “இதோ நானே அழைத்துச் செல்லவிருக்கிறேன். செல்லுமிடம் எதுவென்று அவனுக்குத் தெரியும். எனக்கும் தெரியும். என்னை அழைத்துச் செல்ல வைக்கிறான். முழுப் பொறுப்பையும் என் மேல் சுமத்திச் செல்ல விரும்புகிறன். ஆம், அதற்கு நான் தகுதி கொண்டவனே. எழுந்து என் குரலை எந்த அவையிலும் ஒலிக்கத் துணியாதவன்.”

அவர் தனக்குத்தானே என சொல்லிக்கொண்டே சென்றார். “வேறெவருடையவோ உள்ளத்தை மட்டுமே நான் எண்ணினேன். அவனை எண்ணவில்லை. அவனை நான் எண்ணியிருந்திருக்க வேண்டும். அவனுக்கு அளிக்க வேண்டியதை அளிக்கவில்லை.” “யாருக்கு?” என்று அஸ்வத்தாமன் கேட்டான். சல்யர் கைநீட்டி தேர்ப்பாகனின் தோளில் தட்டி “செல்க!” என்றார். தேர் முன்னெழுந்து விரைய அஸ்வத்தாமன் அதில் உடல் குலுங்க அமர்ந்துகொண்டிருந்த சல்யரை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தான்.

துச்சாதனன் அவன் அருகே வந்து “சென்றுவிட்டாரா?” என்றான். “ஆம், நீ அவரை தொடர்ந்து செல். அவரிடம் பேசு. அவர் மேலும் சொற்கள் கொண்டிருக்கிறார். அவர் இங்கே நின்றதே அங்கரிடம் எதையோ சொல்வதற்காகத்தான். அச்சொற்கள்

இப்போது அவருள் பெருகிக்கொண்டிருக்கும். அவற்றைச் சென்று கேள்" என்றான் அஸ்வத்தாமன். "அவற்றை என்னிடம் சொல்லி என்ன பயன்?" என்று துச்சாதனன் கேட்டான். "அவற்றை என்னிடம் சொல்வாரா?" என்று மீண்டும் கேட்டான். "உன்னிடம் அங்கரிடம் பேசவிருந்தவற்றை பேசமாட்டார். முற்றிலும் வேறு சிலவற்றையே சொல்வார். ஆனால் அவர் அங்கரிடம் பேசவிழைந்தவற்றுக்கு அவை நிகரானவையாகவே இருக்கும்" என்றபின் அஸ்வத்தாமன் புன்னகைத்தான்.

துச்சாதனன் "எனக்கு ஒன்றும் புரியவில்லை, பாஞ்சாலரே" என்று சொன்னான். "என் உள்ளம் இப்போதெல்லாம் எதையும் முழுதுற உள்வாங்கிக்கொள்வதில்லை போலும். இச்சொற்கள் அனைத்திலிருந்தும் அகன்றிருக்கிறேன். இவை எனக்கு பொருள் அளிக்கின்றன, எவ்வுணர்வையும் அளிக்கவில்லை" என்றான். அஸ்வத்தாமன் சிரித்து "அதை பிராணசுஷுப்தி என்கிறார்கள் மருத்துவர்" என்றான். "என்ன?" என்றான் துச்சாதனன். "உயிராழ்வு" என்று சொல்லி அவன் தோளைத் தொட்டு "அதை அஸ்வினிதேவமாலிகை இப்படி சொல்கிறது. புலரிதேவி எழுவதற்கு முன் இனிய குளிர்காற்று வீசுகிறது. இரவின் மூச்சுக்களை எல்லாம் அள்ளி அகற்றுகிறது. உயிர்களை ஆழ்ந்து துயிலச்செய்கிறது. மலர்களைத் தொட்டு விரியச்செய்கிறது. புது நறுமணங்களை பரப்புகிறது. உள்ளங்களில் இனிய கனவுகளை நிறைக்கிறது. அதைப்போல சாவன்னை எழுந்தருளும்போது அவளுக்கு முன் உயிராழ்வு என்னும் இனிய காற்று எழுகிறது" என்றான் அஸ்வத்தாமன்.

துச்சாதனன் உரக்க நகைத்து "அவ்வாறு நிகழுமென்றால் நன்றே" என்றான். பின்னர் குரல் உடைய "துருமசேனனை மீண்டும் ஒருமுறை காணமுடியும் என்றால் அதன்பொருட்டு

ஏழு இருளுலகுகளுக்கும் செல்ல நான் ஒருக்கமாவேன்" என்றான். அஸ்வத்தாமன் அவன் தோளைத் தொட்டு "எந்தையின் உடலை துண்டுதுண்டாகச் சேர்த்துச் சிதையேற்றிவிட்டு வந்திருக்கிறேன். மீண்டும் ஒரு படைசூழ்கைக்காக. அச்சோர்வில் சொன்ன சொற்கள் அவை. கருத்தில் கொள்ளவேண்டாம்" என்றான். "இனிய சொற்கள் அவை, பாஞ்சாலரே" என்றான் துச்சாதனன். "எவ்வாறாயினும் தமையனின் ஆணையை கடைக்கொள்ளவேண்டும். அவரிடம் சென்று பேசிப் பார்க்கிறேன்" என்று தன் புரவியை நோக்கி சென்றான்.

இருட்கனி - 12

சல்யரின் குடிலுக்கு வெளியே துச்சாதனன் பொறுமையிழந்து காத்து நின்றிருந்தான். அவன் வந்ததுமே காவலன் உள்ளே சென்று அவரிடம் துச்சாதனனின் வரவை அறிவித்திருந்தான். உடனே உள்ளே செல்ல எண்ணியிருந்தமையால் சில கணங்களே நீளும் பொழுது எனத் தோன்றின. அவர் உடைமாற்றிக்கொள்ளக்கூடும் என்றும் பின்னர் அவர் துயில் எழுந்துகொண்டிருக்கிறார் போலும் என்றும் எண்ணி எண்ணி காத்திருந்தமையால் அவன் உணர்ந்த காலம் மிக நீண்டு சென்றது. எக்கணமும் கதவுக்கு அப்பாலிருந்து சல்யர் தன்னை அழைப்பாரென்று எதிர்பார்த்து அதையே நோக்கிக்கொண்டிருந்தான். அதன் அசைவின்மையும் ஓசையின்மையும் நேரடியான சிறுமைப்படுத்தலாகத் தோன்ற முழு விசையுடன் அதை உடைத்து உள்ளே செல்வதாக கற்பனை செய்தான்.

பலமுறை அவ்வாறு நுழைந்தபின் சலிப்புற்று பெருமூச்சுவிட்டான். கைகளை ஒன்றுடன் ஒன்று இறுக்கிக்கொண்டு தன் பெரிய உடலை குட்டியானைபோல் அசைத்தபடி விழிகளை விலக்கி அப்பால் தெரிந்த பலகை நிரத்த படைப்பாதையையும் அந்திப் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்த படையணிகளையும் அடுமனையாளர்களின் விளக்குகள் அவற்றினூடாக ஒழுகிக்கொண்டிருந்ததையும் ஊடாக காவலர்களின் புரவிகள் சீரான குளம்படித்தாளத்துடன் சென்று கொண்டிருந்ததையும் நோக்கினான். காவல்மாடத்தில் நின்ற வீரன் தன்னை கூர்ந்து பார்ப்பதை நோக்கி விழிவிலக்கிக்கொண்டான். அவன் காத்திருப்பதை அவனும் உணர்கிறான். அது நாளை செய்தியாக ஆகும். அதன்பொருட்டே சல்யர் அதை செய்கிறார்.

அவனுக்குள் சீற்றம் எழுந்து பெருகத்தொடங்கியது. அந்த மதிப்பின்மையை அரசகுடியினர் எவரும் அவனிடம் காட்டுவதில்லை. அவனை துரியோதனனின் மாற்றுருவாகக் காண்பதே அனைவருக்கும் வழக்கம். அவன் தோன்றியதுமே துரோணர்கூட மெல்ல தலைவணங்குவதுபோல் ஓர் அசைவை காட்டுவார். பீஷ்மர் அரசரிடம் சொல்லவேண்டியதை அவனிடம் சொல்வதுண்டு. அவன் உடலசைவுகள் அனைத்தும் துரியோதனனுக்குரியவை. கர்ணன் ஒருமுறை "உன் நிழல் அரசரைப்போலவே இருக்கிறது, இளையோனே" என்றான். துச்சாதனன் சிரித்தபடி "நான் அவருடைய நிழல்" என்றான். கர்ணன் "நீங்கள் நிழலை பரிமாறிக்கொள்கிறீர்கள் போலும்" என்று உரக்கச் சிரித்தான்.

ஆனால் சல்யர் அத்தகைய நுண்ணுணர்வுகள் கொண்டவரல்ல என்பதையும், அவரது உள்ளம் செயல்படும் முறை முற்றிலும்

பிறிதொன்று என்பதையும் அவன் அறிந்திருந்தான். சினம் எழுகையில் எவரிடமும் கடும் சொற்களை நேரடியாக முகம்நோக்கிச் சொல்வதும், சிறு செய்திகளுக்கே மிகையாக கொதித்தெழுவதும், ஒவ்வொருவரும் தன்னையும் தன் குலத்தையும் சிறுமைசெய்ய நுட்பமாக முயன்றுகொண்டிருப்பதாக கற்பனை செய்துகொள்வதும், சொற்களை தனக்குகந்த முறையில் பொருள் கொண்டு அதிலிருந்து அத்தருணத்திற்குரிய மெய்ப்பாட்டை பயிரிட்டு எடுத்துக்கொள்வதும், அதன்பொருட்டு ஊடி பலநாட்கள் முகம் திருப்பிக்கொண்டு செல்வதும், ஒரு சிறு இடரையோ உளக்கசப்பையோ எதிர்ப்படும் அனைவரிடமும் சொல்லிச் சொல்லி பெருக்கிக்கொள்வதும், தன் குரலுக்கு சற்று செவிசாய்க்காதவர்கூட தன்னை புறக்கணிப்பதாக எண்ணுவதும் அவரது இயல்பு.

துரியோதனனின் அரச அவையில் எப்போதும் தன் உடல்நிலை குறித்த உளக்குறையுடன் பேச்சை தொடங்குபவர் அவர் மட்டுமே. நிகர்நிலம் நோயும், ஒவ்வா காற்றுநிலையும் கொண்டது என அவர் சொன்னார். "இங்கே கதிரோன் மும்மடங்கு வெம்மைகொண்டிருக்கிறான். ஏனென்றால் இங்கு நோய் நிறைந்திருப்பதை அவன் அறிவான். புழுதி நிறைந்த இடத்தில் துடைப்பம் விசையுடன் விழுகிறது" என்பது அவர் அடிக்கடி சொல்வது. "என் மூட்டுகளில் வீக்கம் இருக்கிறது. இரவில் என்னால் துயில்கொள்ளவே முடியவில்லை. இங்கே புழுதியைப் போலவே ஓசையும் காற்றை நிறைத்துள்ளது. வெளிக்காற்று அனல் கொண்டிருக்கிறது. அறைகளுக்குள் ஆவி நிறைந்துள்ளது" என்று ஒவ்வொரு நாளும் சொல்வார். "எங்கள் முன்னோர் நிகர்நிலத்து மாந்தரை பழிக்காதே, அங்கு சென்றால் தெய்வங்களும் பொறுமையிழந்து சினம் சூடிக்கொள்ளும்.

சூதும் வஞ்சமும் கொண்டு உகிரும் பல்லும் பெருக்கி எழும் என்பார்" என்று சொல்லி வெடித்துச் சிரிப்பார். உடனிருப்பவரின் முகநிலை மாற்றங்களை அவர் கருத்தில் கொள்வதேயில்லை.

பொதுவாகவே அவர் தன்னிடம் பிறர் சொல்வதை செவிகொள்வதே இல்லை. பிறர் பேசத்தொடங்கியதுமே அவருடைய விழிகள் அலைபாயத் தொடங்கும். கைநகங்களை பார்ப்பார். அப்பால் இருக்கும் எதையேனும் நோக்குவதும் தலையசைப்பதும் பிறரிடம் கையோ முகமோ கொண்டு பேசத்தொடங்குவதும் வழக்கம். ஆனால் அவர் பிறரிடம் நெடுநேரம் பேசுவார். கேட்பவர் தான் சொல்வதை புரிந்துகொள்ள ஆற்றலற்றவர் என்னும் எண்ணம் கொண்டவராக "நான் சொல்வது புரிகிறதா?" என்றும் "நன்கு எண்ணிப்பார்க்கவேண்டும்" என்றும் "இது அத்தனை எளிதல்ல" என்றும் சொல்வார். சொல்லிவந்ததை வலியுறுத்த புதிய கோணம் பேச்சினூடாக அமையும் என்றால் அதை மீண்டும் சொல்லத்தொடங்குவார். ஒருவரிடம் நெடுநேரம் பேசவும் தன் உள்ளத்து மந்தணங்களையும் உணர்வுகளையும் விரித்துரைக்கவும் அவருடனான நெருக்கத்தையோ அவருக்கிருக்கும் தகுதியையோ சல்யர் கணக்கிடுவதில்லை.

அவர் எப்போதும் தனக்கெனவே பேசுவது தெரியும். ஒருவரிடம் பேசத் தொடங்கினால் அப்பேச்சினூடாகவே தன்னை கட்டமைத்து விரிவுபடுத்தி முழுமையாக்கி ஓர் ஆளுமையாக முன்னிறுத்திவிட்டு அதில் நிறைவடைந்து அந்நிறைவையே வெளிப்படையாகக் காட்டி புன்னகைத்து பெருமிதமும் செருக்கும் கொண்ட சொற்களால் அதுவரை உருவாக்கிய அந்த ஆளுமையை முற்றிலும் கலைத்து இளிவரலை உருவாக்கிவிட்டு அப்பால் செல்வது அவரது இயல்பு. அவரிடம்

பேசுபவர்களில் முதலில் பொறுமையின்மையும் மெல்லமெல்ல ஒவ்வாமையும் அறுதியாக எள்ளலும் உருவாகும். அவர்கள் பேசும் சிறு சொற்களில் அது வெளிப்படும். அரசர்கள் நுண்சொற்களில் எள்ளிநகையாடும் பயிற்சி கொண்டவர்கள். அவரால் அவற்றை புரிந்துகொள்ள முடியாது. "அம்புக்கூர்களின் நடுவே பறந்தலையும் ஈபோல" என ஒருமுறை அவரைப்பற்றி சுபாகு சொன்னபோது துரியோதனன் வெடித்துச் சிரித்தான்.

சல்யரை முதுமகனென்றும், பயிலாத மலைமானுடன் என்றும் துரியோதனன் அவையில் அனைவரும் கருதியிருந்தனர். அவருடைய இயல்புகளில் எப்பொழுதும் புதுமையை நோக்கி உளம் விரியும் மலைச்சிறுவனின் ஆர்வம் இருந்தது. எதைக் கண்டாலும் ஆர்வத்துடன் எழுந்து வந்து கூர்ந்து நோக்குவதும் அடுக்கடுக்காக வினவுவதும் உண்டு. ஆனால் எதிலும் அந்த ஆர்வம் நீடிப்பதில்லை. அதன் முதல் விந்தை முடிவடைந்து உட்சிக்கல் தொடங்கியதுமே அவர் உள்ளம் அதிலிருந்து விலகிவிடும். சிக்கல்கள் அனைத்தையும் அவர் ஐயப்பட்டார். அவை தேவையில்லாமல் அறிவால் உருவாக்கப்படுபவை என்று எண்ணினார். அவை எவ்வகையிலோ தன்னை சிக்கவைக்கும்பொருட்டு தனக்குச் சுற்றும் விரிக்கப்படும் வலையோ என்று ஐயம் கொண்டார். "இதெல்லாம் நிகர்நிலத்து மானுடர் வெறும்பொழுது கழிப்பதற்காக சொல்லிச் சொல்லி பெருக்கிக்கொள்பவை. மெய்யான சிக்கல் என்னவென்று நான் அறிவேன். முடிச்சுகள் அனைத்தும் ஒரு வாளால் ஓங்கி வெட்டி அறுக்கப்படுபவையே என்று எங்கள் மலையில் சொல்வதுண்டு" என்று அவர் எச்சொல்லாடலிலும் அறுதியாகச் சொல்லிவிடுவார்.

தான் ஒரு மலைமகன் என்பதில் அவருக்குப் பெருமை எப்போதும் இருந்தது. அதை பிற அனைவருக்கும் மேலான தனது தகுதி என்று கருதினார். "ஏனெனில் தூய்மை மலையிலேயே உள்ளது. கங்கை பெரிதுதான் ஆயினும் கழிவும் சேறும் கலந்து மாசுபட்டிருக்கிறது. எங்கள் மலையுச்சி நதிகள் வானிலிருந்து சொட்டிய தூய்மை கொண்டவை. தெய்வங்களுக்கு உகந்தவை. எங்கள் மலையின் நீரை முனிவர்கள் ஏழுமலை ஏறிவந்து தங்கள் கமண்டலங்களில் அவற்றை அள்ளிச்செல்வதை நாங்கள் கண்டிருக்கிறோம். எங்கள் உள்ளங்களும் மலைச்சுனை நீர் போன்றவை" என்று அவர் ஒருமுறை சொன்னார். உடனே வெடித்துச் சிரித்து "நாங்கள் நீராடி கழுவிவிடும் நீரையே நிகர்நிலத்து முனிவரும் அருந்துகிறார்கள் என்று எங்கள் சிறுவர் சொல்வதுண்டு" என்றார். அவையிலிருந்தவர்கள் முகம்சுளித்ததைக் கண்டு மேலும் மகிழ்ந்து "பறவைக்குக் கீழேதான் ஆலயகோபுரமும் என்பார்கள் அல்லவா?" என்றார்.

கிருபர் ஒருமுறை அவர் பேச்சை மறித்து எரிச்சலுடன் "எந்த மலைச்சுனையும் தன்னை தூயது என்று சொல்லிக்கொள்வதில்லை. தூயவர் என்று உணர்கையிலேயே தூய்மை அல்லாத ஒன்றை அறிந்துவிட்டிருக்கிறீர்கள் என்பதே நாங்கள் புரிந்துகொள்வது" என்றார். அதிலிருந்த இடக்கை உள்வாங்கிக்கொள்ளாமல் சல்யர் "ஏனெனில் நான் இங்கு வந்திருக்கிறேன். உங்கள் அவையில் இருக்கிறேன். நீங்கள் உங்கள் சொற்களால் சூதாடிக்கொள்வதை ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். ஒரு புது எண்ணம் எழுவதன் ஊக்கம் மீதூற கைதூக்கி "எனக்குத் தெரியும், இங்கு நீங்கள் அனைவரும் வாளேந்திப் போரிடவே விரும்புகிறீர்கள். வாளேந்தும் வாய்ப்பில்லாதபோது சொல்லேந்தி

போரிடுகிறீர்கள். ஒருகணமும் நீங்கள் போரிடாதிருந்ததில்லை. ஒருவரோடொருவர் போரிடுகிறீர்கள், தங்களுக்கு தாங்களே போரிடுகிறீர்கள். ஒருகணமும் நீங்கள் போரிடாதிருந்ததில்லை. ஒவ்வொரு கணமும் போரிடுகிறீர்கள். தங்களுக்குத் தாங்களே போரிடுகிறீர்கள். மைந்தருடனும் மனைவியருடனும் போரிடுகிறீர்கள். ஏன் ஊழுடனும் தெய்வத்துடனும் போரிடுகிறீர்கள்" என்றார்.

"நாங்கள் போரிடுபவர்களல்ல, நாங்கள் வேட்டையாளர்கள். விரிந்த வெளியில் எங்களுக்குரிய விலங்கு எங்கு இருக்கிறதென்பதை நுண்ணுணர்வுடன் உய்த்து பின்தொடர்ந்து செல்பவர்கள். ஒவ்வொரு காலடித்தடத்தையும் ஒவ்வொரு மணத்தையும் கொண்டு அதை தேடிச்சென்று வேட்டையாடித் திரும்புகையில் நாங்கள் தெய்வத்திடமிருந்து எங்கள் தகுதிக்குரிய பரிசொன்றைப் பெற்றதாகவே உணர்கிறோம். வென்றதாக அல்ல, வாழ்ந்ததாக எண்ணுகிறோம். போரிட்டதாக அல்ல விளையாடி மீண்டதாக மகிழ்கிறோம். எங்கள் வேட்டை ஊழுடன் மட்டுமே. ஊழ்வடிவென இறங்கிய தெய்வத்துடன் மட்டுமே நாங்கள் விளையாடுகிறோம். மானுடருடன் எங்களுக்கு போட்டியே இல்லை. மலையைப்பற்றி நீங்கள் என்ன அறிவீர்கள்? ஒவ்வொரு மனிதனும் பிறிதொருவனுடன் போட்டியிலாது வாழும் ஒரு நிலம் அது. அங்கிருந்து வந்திருக்கிறேன் நான்" என்று அவர் சொன்னார்.

அவர் சொல்லிச் சொல்லி உருவாக்கிக்கொண்ட கருத்து அது. ஒவ்வொரு முறை சொல்லும்போதும் சற்று சொல் மிகும். அதுவே அவருக்கு களிப்பை அளிக்கும். அவர் தான் கொண்ட அகச்சிறுமை ஒன்றை அச்சொற்களால் வென்று மறைத்துக்கொள்கிறார் என சுபாகு ஒருமுறை சொன்னான்.

“எனில் அந்தச் சொற்களைக் கீறி நோக்கலாகாது. ஒருவரின் உளநடிப்புகளை அகற்றுவது ஆடைஅகற்றி சிறுமைசெய்வதைவிட மும்மடங்கு கொடியது” என்றான் துரியோதனன். ஆனால் அவையில் அவருடைய சொற்கள் எழுகையில் அவரை நோக்கி நச்சுக்கூர்கள் எழாமல் தடுக்க இயல்வதில்லை. அமைதியானவரான கிருபரே சீற்றமும் எரிச்சலும் கொள்வதுண்டு. அரிதாக பீஷ்மர் கைநீட்டி சல்யரை சொல்லமர்த்துவதுண்டு. சகுனி மட்டுமே அவர் பேசட்டும் என்பதுபோல் தாடியை நீவியபடி விழிகளில் நகைப்புடன் நோக்கி அமர்ந்திருப்பார்.

“ஆனால் அங்கிருந்து நீங்கள் இறங்கி இங்கே வர வேண்டியிருக்கிறது, சல்யரே. எந்த எடை உங்களை கீழே இறக்கிக்கொண்டு வந்தது என்பதைப்பற்றி மட்டுமே இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம்” என்றார் கிருபர். அதை புரிந்துகொள்ளாமல் சல்யர் “நாங்கள் இறக்கிக்கொண்டு வரப்படவில்லை. நாங்களே இறங்கி வந்திருக்கிறோம். ஏனெனில் எங்கள் தூய்மையால், நிகரின்மையால் உங்களை வெல்லவிருக்கிறோம். அறிக, இன்று நாங்கள் இந்த அவையில் நூற்றுவரில் ஒருவராக எளிய உருக்கொண்டு அமர்ந்திருக்கலாம்! எங்கள் சொற்கள் இந்த அவையில் ஓங்கி திகழாமலிருக்கலாம். ஆனால் ஒருநாள் உங்களை எங்கள் குடி வெல்லும். எங்கள் கொடி உங்கள் நிலங்களின் மேல் பறக்கும். எங்களால் நீங்கள் ஆளப்படுவீர்கள். அது தவிர்க்க முடியாதது. ஏனெனில் தெய்வத்தின் ஆணை பெற்ற தூய மக்கள் நாங்கள். நாங்கள் இவ்வுலகை ஆளவேண்டுமென்பதே தெய்வங்களின் விழைவாக இருக்கும்” என்றார். கைகளைத் தூக்கி அறைகூவும் குரலில் “எங்களுடன் போரிடுகையில் நீங்கள் எங்கள் மலைத்தெய்வங்களுடன் போரிடுகிறீர்கள். அதை மறக்க

வேண்டியதில்லை" என்றார். துரியோதனன் இரு கைகளையும் விரித்து "இந்த வெறும் பேச்சை இங்கு நாம் நிகழ்த்தவேண்டியதில்லை. நாம் உசாவ வேண்டியவை பிற உள்ளன" என்று அப்பேச்சை அப்போது முடித்துவைத்தான்.

சல்யர் பொதுவாக அனைத்து அவைகளிலும் வேடிக்கைக்குரியவராக இருந்தாலும் அவ்வப்போது அரசர்களும் புண்பட்டு சீற்றம் கொண்டனர். அவர்கள் பேச்சுவழியில் தங்கள் குடிப்பெருமையை இயல்பாக சொல்லிவிட்டால் அக்கணமே அவர் அதை தனக்கெதிரான கூற்றாக எடுத்துக்கொண்டார். ஒருமுறை கோசலனிடம் "எவ்வண்ணம் உங்கள் நாடு பெருமையுற்றது என்று நாங்கள் அறியோமா என்ன? வீரத்தாலா? அல்ல, நூறுதேர் ஓட்டிய அயோத்தியின் அரசனுக்கு ஒரு மங்கையை மணம் புரிந்து கொடுத்ததனால்தான் நீங்கள் ஷத்ரியர்களும் குடிப்பெருமை கொண்டவர்களுமானீர்கள். இன்றும் அந்த அரசியின் பெயராலேயே உங்கள் நாடு அறியப்படுகிறது. பெண்கொடுத்து பெறும் பெருமை என்ன பெருமையென்று மலைமகனாகிய எனக்கு சற்றும் புரியவில்லை" என்றார். கோசலன் சீற்றத்துடன் எழுந்து "வாயை மூடுங்கள்! அல்லது இக்கணமே என் வாளுக்கு நிகர்நில்லுங்கள்" என்றான்.

"வாளுக்கெனில் வெளியே செல்வோம். அங்கு பூசலிடுவோம்! மலைமகனின் அம்பும் வில்லும் மும்மடங்கு இலக்கறிந்தவை என நீங்கள் அறிவீர்கள்" என்று சல்யரும் தன் வாளைத் தொட்டபடி எழுந்தார். பீஷ்மர் உரத்த குரலில் "அமர்க! அமர்க, சல்யரே! அமர்க, கோசலரே!" என்றதும் சல்யர் திரும்பி "இவர்தான் என்னை இப்போது பூசலுக்கு அழைத்தார். முதலில் பூசலுக்கு அழைத்தவரே படைக்கலம் தாழ்த்தி சொல்

பின்னெடுத்து அமரவேண்டும். நான் அமரக்கூடாது" என்றார். கோசலன் "பிதாமகரே, என்னை பூசலுக்கு அழைத்தவர் இவர். என் குடியை இழிவு செய்தார். ராகவராமனின் கால்பொடிக்கு இணையாகமாட்டார் இந்த மலைவீணர். இங்கு வந்து அமர்ந்து ராகவராமனின் புகழைக் கெடுக்கும் ஒரு சொல்லை சொன்னமைக்காகவே இவர் தலையைக் கொய்ய நான் கடமைப்பட்டிருகிறேன்" என்றான்.

பீஷ்மர் "இது என் ஆணை! இருவரும் ஒரே தருணத்தில் அமரவேண்டும். என் ஆணையை மீறுவோர் இக்கணமே என் வாளை எதிர்கொள்ளவேண்டும்" என்றார். கோசலன் "நீங்கள் தந்தைநிலை கொண்டவர். உங்கள் ஆணைக்குக் கட்டுப்படுவது என் கடமை" என்றபடி தன் பீடத்தில் அமர சல்யர் உரக்க நகைத்து "எவ்வண்ணமேனும் நீர் அமர நேர்ந்துவிட்டது, கோசலரே" என்றபடி தானும் அமர்ந்தார். "பிறிதொருநாள் களத்தில் நீர் என் வில்லின் ஆற்றலைக் காண்பீர்" என்றார். "பேச்சு போதும்" என்றார் பீஷ்மர். "ஆம், நான் ஏதும் சொல்லவில்லை. ஆனால் என்னை போருக்கு அறைகூவவேண்டும் என்றால் அர்ஜுனன் எண்ணவேண்டும். யாதவகிருஷ்ணன் கருதவேண்டும்" என்றார் சல்யர்.

அரசுசூழ்தல்களில் சல்யரை எதிர்கொள்வது எப்போதும் அவையினருக்கு இடர் கொண்டதாகவே இருந்தது. அவையில் நிகழும் எதையும் முழுமையாக அவர் புரிந்துகொண்டதே இல்லை. ஒவ்வொரு முறையும் நெடுந்தொலைவிலிருந்து வந்து சேர்ந்து பிற எவருக்கும் எழாத ஐயங்களை அவர் எழுப்பினார். "இந்தப் படைசூழ்கையுடன் நாம் முன்செல்கையில் இதில் முன்னணியில் நிற்பவர்கள் வீழ்ந்தால் பின்னணியில் நிற்பவர்கள் சென்று அவ்விடத்தை நிரப்பவேண்டும் என

சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு நிரப்பாவிடில் இச்சூழ்கை பயனற்றதாகிவிடும் அல்லவா?" என்று ஒருமுறை கேட்டார். "அவ்வாறு நிரப்பாதிருக்க வழியே இல்லை" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "அவர்கள் அவ்வாறு சென்று நிரப்புவார்கள் என்று எவ்வாறு உறுதி கூறுகிறீர்கள்?" என்று சல்யர் மீண்டும் கேட்டார். "ஏனெனில் அதன் பொருட்டே அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் கடமை அது" என்றான். "அவர்கள் தங்கள் கடமையை செய்யாவிடில் என்ன செய்வது? அதையும் நாம் எண்ணிச் சூழ வேண்டுமல்லவா?" என்று சல்யர் கேட்டார்.

"அவ்வாறு எண்ணத்தொடங்கினால் போரிடவே இயலாது. போர்முனையில் நமது படைவீரர்கள் படைக்கலம் தாழ்த்தி ஓடிவிட்டார்கள் என்றால் என்ன செய்வது என்று எண்ணி ஒரு படைசூழ்கையை அமைக்க முடியுமா?" என்று அஸ்வத்தாமன் கேட்டான். "ஆம், அதையும் எண்ணித்தான் ஆகவேண்டும், ஏனெனில் எங்கள் போர்களில் போர்வீரர்களின் இலக்குகள் முதன்மையானவை, ஒவ்வொருவருக்கும் இப்போரினால் என்ன கிடைக்கும் என்பதை உணர்த்திய பின்னர்தான் அவர்களை கூட்டி வருவோம். ஒவ்வொரு முறையும் அதை நினைவுபடுத்திக்கொண்டும் இருப்போம். அது கிடைக்காதென்றால் எங்கள் படைவீரர்கள் களம் நிற்கமாட்டார்கள். வெளிப்படையாகவே இதனால் பயனில்லை என்று சொல்லி வாள் தாழ்த்தி திரும்பிவிடுவார்கள்" என்றார் சல்யர்.

அவை முழுக்க பரவிய சிரிப்பை புரிந்துகொள்ளாமல் திரும்பிப்பார்த்த பின்னர் அவர் தொடர்ந்தார். "இங்கு போர் நிகழும்போது ஒவ்வொரு படைவீரனுக்கும் அரசரிடம்

எந்தவிதமான உளத்தொடர்பும் இல்லை என்று தோன்றுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் கனவுகளிலிருந்து எழுந்து வந்து இந்த போரை நிகழ்த்துகிறார்கள். அக்கனவுகளுக்குள்ளேயே போர் முடிந்ததும் திரும்பிச் செல்கிறார்கள். இது போரே அல்ல. இது வேறேதோ தெய்வங்களால் ஆட்டி வைக்கப்படும் சூதென்று எனக்குத் தோன்றுகிறது." எழுந்து கைநீட்டி "உங்கள் தெய்வங்களால் நீங்கள் ஆட்டிவைக்கப்படுக, சல்யரே! அமர்க இப்போது!" என்று உரத்த குரலில் துரோணர் சொன்னதும் சல்யர் திரும்பிப்பார்த்து "ஆம், எந்த தெய்வத்தால் நான் ஆட்டிவைக்கப்படுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு பெருவிழைவில்லை. எனக்கு இருப்பது என் குடிப்பெருமையை அவைகளில் நிலைநாட்டும் விழைவு மட்டும்தான். ஆனால் அது இங்கு ஒவ்வொரு நாளும் கீழிறங்கிக்கொண்டிருக்கிறதோ என்று ஐயுறுகிறேன்" என்றார்..

சல்யரின் இயல்புகளை ஒவ்வொரு முறையும் துரியோதனன் பொறுத்து, அவரை முறைச்சொற்கள் உரைத்து, பாராட்டியும் வாழ்த்தியும் முன்சென்றான். ஒவ்வொரு முறையும் சல்யருக்கு இறுதிச் சொல் கூறுவதற்கு இடம் கொடுத்தான். சல்யர் அதனாலேயே அந்த அவையில் தான் பீஷ்மருக்கும் துரோணருக்கும் கிருபருக்கும் நிகரான முதுதந்தையின் இடத்தை கொண்டிருப்பதாக எண்ணிக்கொள்ளலானார். ஒவ்வொருநாளும் அவையில் ஒருவர் உயர்குடியினர், இனியவர், பெருந்தன்மைகொண்டவர் என அவருக்குத் தோன்றியது. அவரிடம் மட்டும் நெடுநேரம் பேசினார். எஞ்சியவர்களிடம் முகம் கொடுக்காமல் மேட்டிமை நடித்து திரும்பிச்சென்றார். எப்போதும் அவையில் ஒருவர் பிறப்பால் கீழ்மைகொண்டவராகவும் நல்லியல்புகள் அற்றவராகவும்

அவருக்குத் தோன்றினார். அவையில் அனைத்தையும் அவரை நோக்கியே சல்யர் சொன்னார்.

எப்போதுமே கர்ணன் அவருக்கு உகக்காதவனாகவே இருந்தான். கர்ணன் ஒவ்வொரு முறையும் அவரை வணங்கி முகமன் சொன்னான். ஒருமுறைகூட அவர் அவனை விழிநோக்கவோ வாழ்த்தேற்பும் மறுவாழ்த்தும் உரைக்கவோ முற்படவில்லை. அதை கர்ணன் எப்போதுமே பொருட்டெனக் கருதவுமில்லை. தன்னை முகம் நோக்கி வாழ்த்துபவரை நோக்கி மறுமொழி சொல்லவேண்டும் என்பதும் வாழ்த்துக்கு வாழ்த்தெடுக்காமை கீழ்மை என்றே அரசவையில் கருதப்படும் என்பதும் சல்யருக்கு எப்போதுமே புரிந்ததில்லை. கோசலன் அப்பூசலுக்கு மறுநாள் அவரைப் பார்த்து "வணங்குகிறேன், மத்ரரே" என்றபோது தலைதிருப்பி நடந்து சென்றார். கோசலன் அதனால் உளம் புண்படவில்லை. அருகிலிருந்த மகதரை நோக்கி புன்னகைத்து "மலைக்குடிகளின் இயல்பு அது" என்று தாழ்ந்த குரலில் சொன்னான்.

அச்சொல் சல்யரின் செவிகளை அடைந்தது. திரும்பி நின்று "ஆம், மலைக்குடிதான். அதன்பொருட்டு பெருமைகொள்கிறேன். இங்கிருக்கும் அனைவரும் கிராதர்களும் வேடர்களும் மூத்து ஷத்ரியர்களானவர்கள். மலைக்குடிகள் ஷத்ரியர்களாகவே மலையின் மடிப்புகளிலிருந்து எழுந்து வந்தவர்கள். எங்கள் பின்னால் ஒருபோதும் தெய்வங்கள் இல்லாமலிருந்ததில்லை" என்றார். "ஆம், அதைத்தான் பேசிக்கொண்டிருந்தோம்" என்று கோசலன் விழிகளில் புன்னகையுடன் சொல்ல மகதர் "ஆம் மத்ரரே, மலைக்குடிமக்கள் பிறர் வாழ்த்துவதைக்கூட பொருட்படுத்தமாட்டார்கள். ஏனெனில் அது அரசர்களின்

இயல்பு. அங்கே கன்றோட்டுபவரும் ஏர் உந்துபவர்களும்கூட அரசர்களே என்றுதான் அவர் சொன்னார்" என்றார்.

சல்யர் அவர்கள் இருவரையும் மாறி மாறி நோக்கியபின் மெல்லிய ஐயம் கொண்டு "ஆம், அவ்வாறே. எங்களிடம் பேசுவதற்கான தகுதியை நீங்கள்தான் ஈட்டிக்கொள்ளவேண்டும்" என்றபின் அவைக்குள் சென்றார். அருகே நின்றிருந்த துச்சாதனன் அப்போது சல்யர் மேல் இரக்கத்தையே அடைந்தான். அன்று அதை அவன் துரியோதனனிடம் சொன்னபோது அவையில் அமர்ந்திருந்த சகுனி "நீ அவரை இளமையில் பார்த்திருக்கவேண்டும். அன்று வீரன் என்னும் நிமிர்வும் அரசுசூழும் திறனும் விரிந்த உள்ளமும் கூர்நோக்கும் கொண்டவராக இருந்தார்" என்றார். துச்சாதனன் "ஆம், அதையே ஒவ்வொருமுறையும் எண்ணிக்கொள்கிறேன். நானறிந்த சல்யர் அல்ல இவர். முதுமையின் நலிவென்றே தோன்றுகிறது" என்றான்.

"முதுமை ஒருவரை முற்றிலும் பிறிதொருவராக ஆக்குமா?" என்று துச்சாதனன் கேட்டான். கிருபர் "முதுமை மானுடரின் உடலை மண்ணை நோக்கி இழுக்கிறது. எலும்புகள் வளைய தசைகள் தொய்கின்றன" என்றார். "மண்ணை நோக்கி உடலை ஈர்க்கும் அவ்விசையையே இறப்பு என்கிறோம். அது கருக்கொண்ட கணமே மானுட உடலுக்குள் குடிகொள்ளத் தொடங்குகிறது. ஒவ்வொரு கணமும் வளர்கிறது. மானுடரைக் கொல்லும் நோய் அவர்களில் தோன்றாத் துணை என உடனிருக்கிறது, அதை ரிபு என்கின்றன மருத்துவநூல்கள். இன்று சல்யரில் வெளிப்படும் இவை துளி என, அணு என அவரில் முன்னரே உறைந்தவை. அன்று அவருடைய உயிரின்

ஆற்றலை அவர் எனக் கண்டோம். இன்று அவரை அழிக்கும் பிறப்புநோயை அவரெனக் காண்கிறோம்.”

சகுனி மெல்ல கனைத்து தன் கால்களை எடுத்து அப்பால் வைத்தார். அதுவரை அங்கில்லாதவன் போலிருந்த கர்ணன் திரும்பி நோக்கினான். “நான் எண்ணுவது பிறிதொன்று. அவரைப் பார்க்கையில் எல்லாம் தெய்வம் ஒழிந்த பாழ்கோயில் எனத் தோன்றுகிறது” என்றார் சகுனி. “அவரிலிருந்து அரிய ஒன்று பிறிதொன்றாகி எழுந்து அகன்றுவிட்டது.” துரியோதனன் சகுனியை சிலகணங்கள் நோக்கிவிட்டு “அவரைப் பற்றி பேசி என்ன பயன்? அவர் வில்லவர், பால்ஹிகக் கூட்டமைப்பை நமக்கென கொண்டுவந்தவர். களத்தில் நமக்கு உகந்தவர். நான் எண்ணுவது அதை மட்டுமே” என்றான்.

துச்சாதனன் மீண்டும் சல்யரின் கதவை நோக்கினான். அவன் வெளியே நின்றிருப்பதை செவிகூர்ந்தபடி அவர் உள்ளே அமர்ந்திருக்கிறார் என அவன் அறிந்தான். அவன் திரும்பிச்சென்றுவிட்டான் என்று தோன்றினால் அவர் எழுந்துவந்து கதவைத் திறந்து பார்ப்பார். அவரை பார்க்காமல் அவன் சென்றுவிட்டதை ஒரு பெருங்குறையாகவே துரியோதனனிடம் சொல்வார். அவன் தலையை அசைத்துக்கொண்டு பெருமூச்சுவிட்டான்.

இருட்கனி - 13

ஒரு சிறுபறவை ரீக் என்றபடி கடந்துபோன கணத்தில் துச்சாதனன் முற்றிலும் பொறுமை அறுபட்டு எழுந்து

சீற்றத்துடன் குடிலின் கதவை தட்டினான். “மத்ரரே! மத்ரரே!” என்று அழைத்தான். உள்ளே மறுமொழி எதுவும் ஒலிக்கவில்லை. மீண்டும் தட்டி “மத்ரரே, நான் தங்களிடம் பேசும்பொருட்டு வந்திருக்கிறேன்” என்று உரக்க அழைத்தான். சல்யர் எழுந்து வரும் ஓசை கேட்டது. அவன் கதவை உடைக்க எண்ணிய கணத்தில் கதவை விசையுடன் திறந்து “ஏன் கூச்சலிடுகிறாய், அறிவிலி? நான் உள்ளே இருக்கிறேன் என்பது உனக்கு தெரியுமல்லவா?” என்றார் சல்யர். அவர் விழிகளை நோக்கி “தெரிந்துதான் அழைத்தேன். நெடுநேரமாக இங்கு காத்திருக்கிறேன். நான் சென்று ஆற்றவேண்டிய பணிகள் உள்ளன” என்று துச்சாதனன் சொன்னான்.

“நான் எவரையும் சந்திக்க விரும்பவில்லை” என்று சல்யர் சொன்னார். அவர் கதவை மூடுவதற்குள் துச்சாதனன் உறுதியான குரலில் “நான் அரசரின் ஆணையுடன் வந்திருக்கிறேன். சந்தித்தே ஆகவேண்டும். அதை மறுக்கும் உரிமை இந்தப் படையில் எவருக்கும் இல்லை” என்றான். சல்யர் விழிதாழ்த்தி “நான் அவ்வாறு உரைக்கவில்லை. உண்மையில் சந்திக்கும்பொருட்டே என்னை சித்தமாக்கிக்கொண்டிருந்தேன். ஆனால் என் உடல்நிலை...” என்றார். “நாம் உள்ளே சென்று அமரலாமா?” என்று துச்சாதனன் கேட்டான். சல்யர் “வருக!” என்று கதவை நன்கு திறந்து பின்னால் சென்று தன் புலித்தோலில் அமர்ந்துகொண்டார். “உண்மையாகவே நான் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன்.”

துச்சாதனன் அவர் முன் சென்று அவரிட்ட மான்தோல் பீடத்தில் அமர்ந்து “நான் அரசரின் ஆணையை தெரிவிக்கும்பொருட்டு வந்திருக்கிறேன். நாளை புலரியில் நீங்கள் சென்று படைமுகம் நின்று அங்கரின் பொற்தேரை

தெளிக்கிறீர்கள். இது அரசாணை" என்றான். "நாளை புலரியில் எந்நிலையிலும் இதை நீங்கள் ஒழியலாகாது. உடல்நிலை குன்றினும் இதை ஆற்றியாகவேண்டும். இல்லையேல் அரசமறுப்பு என்றே கொள்ளப்படும்." அவனது ஒவ்வொரு சொல்லிலும் இருந்த ஆணைத் தோரணையை, அதில் அவர் மீதான மதிப்பு முற்றிலும் அகன்றுவிட்டிருந்ததை சல்யர் எவ்வகையிலும் உணரவில்லை. அவரது கண்கள் நிலைகொள்ளாது அலையத்தொடங்கின. கைவிரல்களைக் கோத்தும் விலக்கியும் தவித்தார்.

துச்சாதனன் அவரது உள்ளம் எங்கு செல்கிறது என்று உணர்ந்தான். அவரால் அவருக்கு இடப்படும் ஆணைகளை மீற இயலவில்லை. ஏனெனில் துரியோதனனை எப்போதும் அவர் அச்சத்துடனும் வியப்புடனும்தான் நோக்கிக்கொண்டிருந்தார். துரியோதனனே தன்னைத் தேடி வந்து அழைத்தமையால்தான் அவர் தன் குருதிச்சுற்றத்தைத் துறந்து இப்பால் வந்தார். அதை மறைக்கவே தானே அம்முடிவை எடுத்ததாக ஒவ்வொரு அவையிலும் ஒருமுறையேனும் சொல்லிக்கொண்டிருந்தார். ஆணைகளை மீற முடியாதவர் அவர் என துரியோதனன் அறிந்திருந்தமையாலேயே மிக அரிதாகவே அவருக்கு ஆணைகளை பிறப்பித்தான். அந்த ஆணைகளையும் அவர் தனித்திருக்கையிலேயே தாழ்ந்த கூரிய குரலில் சொன்னான். மறுமொழி சொல்லாமல் அவர் தலைவணங்கி ஏற்றார்.

அதை எவ்வாறு தானும் நோக்குவது தெரியாமல் நோக்கியிருந்தோம் என்று துச்சாதனன் வியந்தான். தேவையானபோது எடுக்க வேண்டிய மந்தணப் படைக்கலமாகக் கருதி அதை இருளறைகளில் இருத்தியிருக்கிறான். அவன் தனக்குள் புன்னகைத்துக்கொண்டு

இயல்பான குரலை மீட்டு "தாங்கள் அங்கநாட்டு அரசர் மேல் கொண்டிருக்கும் ஒவ்வாமையை அரசர் நன்கு அறிவார். ஆனால் அது நமது வெற்றியை எவ்வகையிலும் குறைக்கலாகாது என விழைகிறார். நாளையுடன் இப்போர் முடிவடைய வேண்டுமென்று அரசர் எண்ணுகிறார். அங்கர் தேரில் வில்லுடன் நின்றிருக்க நீங்கள் சவுக்குடன் அமரத்தில் அமர்ந்திருப்பீர்கள் எனில் அது வில்லேந்திய அர்ஜுனனும் புரவி நடத்தும் யாதவரும் இணைந்து போர்முகம் வந்ததுபோல" என்றான்.

"ஆம்" என்று சொல்லி சல்யர் புன்னகை புரிந்தார். "மெய்யாகவே அது ஒரு நல்ல படைசூழ் திட்டம். அதை அப்போது நான் உணரவில்லை. இங்கே அமர்ந்து எண்ணுகையில் நாளை போருக்கெழும்போது புரவிகளை என்ன செய்வதென்றுதான் கருதிக்கொண்டிருந்தேன். அரசருடைய ஆணை நான் என்ன எண்ணியிருக்கிறேனோ அதையே சொல்கிறது. உண்மையில் நானே அங்கே வந்து அரசரிடம் இதை சொல்வதாக இருந்தேன்." அவருடைய முகம் மலர்ந்தது. "புரவிகளைப்பற்றி நாம் பேசியாகவேண்டும். நீங்கள் தேர்களில் கட்டியிருக்கும் புரவிகள் ஒட்டிய நீளுடலும் சவுக்குபோல் நீண்ட கால்களும் கொண்டவை. அவற்றை அவற்றின் இலக்கண ஒருமைக்காக மட்டுமே தெரிவு செய்கிறீர்கள். அந்த இலக்கண ஒருமை எப்போதும் எங்கும் செல்லுபடியாகக்கூடியது அல்ல. புரவியின் இலக்கணங்களை நாங்கள் மலையில் வேறுவகையில் வகுத்து வைத்திருக்கிறோம்." அதைச் சென்று தொட்டதுமே இயல்பாக ஆவதற்கான வழி அவருக்கு திறந்துகொண்டது. அவர் குரல் எழுந்தது.

“ஏனெனில் எங்கள் நிலம் முற்றிலும் மாறுபட்ட ஒன்று. நிகர்நிலத்துப் புரவிகள் நேர்ப்பாதையில் நெடுந்தொலைவு ஓட வேண்டியவை. ஆகவே அவற்றின் உடலின் ஆற்றல் வீணாகக்கூடாது. விசை குவிந்து முன்எழு திசையிலேயே வெளிப்படவேண்டும். ஆகவே அவை இருபுறமும் சீராக அமைந்த நேருடல் கொண்டவையா என்று பார்க்கிறீர்கள். கால்களும் உடலும் எந்த வளைவுமின்றி இருக்கவேண்டும். உடலின் எடை நான்கு கால்களிலும் இணையாக பகிரப்படவேண்டும். முன்குளம்பு விழுந்த நேர்கோட்டிலேயே பின்குளம்பு பதியவேண்டும். சுழிகளை நீங்கள் நோக்குவது அவற்றின் உடலில் எங்கேனும் வளைவிருக்கிறதா என்று நோக்கத்தான்.” சல்யர் கைதூக்கி அவனிடம் “சுழிகள் என்பவை என்ன?” என்றார். அவன் வெறுமனே நோக்கினான்.

சல்யர் அவனை கூர்ந்து பார்த்தார். “சொல்க!” என்றார். அவர் என்ன எண்ணுகிறார் என்று அறியாமல் துச்சாதனன் “தெரியவில்லை” என்று தலையசைத்தான். “தெரிந்திருக்காது” என அவர் மகிழ்வுடன் சொன்னார். “நீங்கள் நூல்களை நம்புகிறீர்கள். நூல்களுக்கு அப்பால் சென்று அந்நூல்களை எழுதியவர்கள் என்ன எண்ணினார்கள் என்பதை ஒருபோதும் பார்ப்பதில்லை. நம் உடலிலும் சுழிகள் உள்ளன. உடலில் எவ்வண்ணம் அசைவுகள் நிகழும் என்பதையே சுழிகள் காட்டுகின்றன. நம் உடலிலிருக்கும் சுழிகளைக்கொண்டு நம் அசைவுகளையும் உய்த்துணர முடியும். புரவிகளின் சுழிகள் இன்னும் தெளிவாக தெரியும். மனித உடலின் சுழிகள் தலையில் தவிர வேறெங்கும் வெளிப்படாதவை. மயிரின்மையால் அவற்றை கண்டடைய இயலாது.”

அவர் சிரித்து "ஆனால் என்னைப்போல் நுண்நரம்புச் சுழிகளை காணும் கலை கற்றவர்கள் மிக எளிதில் ஒவ்வொரு மானுடரையும் தொட்டு அறிந்து அவர் உடலில் இருக்கும் பதினெட்டு சுழிகளையும் அடையாளம் காண்போம். அதனடிப்படையில் அவர்கள் எவ்வாறு உடலசைப்பார்கள், எவ்வண்ணம் தேர் தெளிப்பார்கள், எவ்வண்ணம் உணர்வெழுச்சிகள் கொள்வார்கள் என்பதை கணிப்போம். புரவிகளின் சுழிகள் தெளிவாகத் தெரிவன என்பதனால் அவற்றைக் கொண்டு புரவிச்சுழி கணிக்கிறோம். அச்சுழிகளின் அடிப்படையில் புரவிகள் எவ்வாறு விசை கொள்கின்றன என்பதை உய்த்துணர்கிறோம். இங்கு நமக்குத் தேவை என்ன? நெடுந்தொலைவு அம்புபோல விசைகொண்டு செல்லும் புரவிகள் அல்ல நமக்குத் தேவையானவை. இது போர்க்களம், நெடும்பாதை அல்ல. இங்கே குறுகிய தொலைவுக்குள் எண்ணிய அக்கணமே முழு விசையையும் அடையும் புரவிகள் தேவை!" என்றார்.

"ஆனால் நாம் சுழி நோக்குவது ஒவ்வொரு புரவியும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு ஒத்திசைந்து செல்கிறது என்பதை அறிவதற்காகவே" என்று துச்சாதனன் சொன்னான். அதை சொல்லியிருக்கலாகாது என்று தோன்றியது. அவர் தொடர்பற்ற ஏதோ திசைக்கு பேச்சை கொண்டுசெல்வதை உணர்ந்தான். ஆனால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் தோன்றியது. சல்யர் ஊக்கத்துடன் "ஆம், ஏழு புரவிகள் பூட்டிய தேரில் ஏழு புரவிகளும் ஒன்றுடன் ஒன்று நன்கு இசையாவிடில் அனைத்து தேர்விசையும் வீணாகும். தேர்த்தட்டு உலைந்துகொண்டே இருக்கும். தேர்ப்பாகன் அளிக்கும் ஆணைகள் புரவிகளை முழுமையாக சென்றடையாது. ஏழில் ஒன்று பிழையாக புரிந்துகொண்டாலும்கூட அந்த அளவில் தேர் பிழையுடனே

முன்னகரும்" என்றார். "ஆம், அதைத்தான் சொல்ல வந்தேன்" என்றான் துச்சாதனன்.

"எனில் உண்மையில் என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொரு புரவியின் சுழியையும் நன்குணர்ந்து அச்சுழி உருவாக்கும் அசைவுகளுடன் இணையும் சுழி கொண்ட பிறிதொரு புரவியை தேர்வு செய்யவேண்டும். ஏழு புரவிகளும் சேர்ந்து ஒற்றைப் புரவியாக மாற வேண்டும். ஒன்றையொன்று அவை நிரப்பவேண்டும்" என்றார் சல்யர். "ஆனால் இங்கு அவ்வாறு நாங்கள் பார்ப்பதில்லை. ஒவ்வொரு புரவியும் முழுமையான சுழியொருமை கொண்டதாக இருந்தால் இயல்பிலேயே அவை ஒன்றென்றாகி விடுகின்றன என்று எண்ணுகிறார்கள்" என்றான் துச்சாதனன். தனக்குள் ஏன் பேசுகிறோம் என எண்ணி உளம்சலித்தான். நான் இங்கே பேசவரவில்லை. இந்த முதுமூடர் என்னை அலைக்கழிக்கிறார்.

"ஆம், மெய்!" என்றார் சல்யர். "ஆனால் அதனால் நாம் எத்தனை புரவிகளை வீணடிக்கிறோம்? அறிக, தன்முழுமை கொண்ட புரவி ஆணவம் கொண்டது! அது உள்ளத்தால் இன்னொரு புரவியுடன் இணைய விழையாது. உங்கள் தேர்ப்புரவிகள் உண்மையில் உள்ளத்தால் ஒற்றைப்புரவி என்றாவதே இல்லை." துச்சாதனன் "ஆனால் அதுவே செய்யக்கூடுவது. ஒவ்வொரு புரவியின் சுழிகளையும் கணித்து ஒவ்வொன்றையும் பிறிதொன்றுடன் இணைக்கும் பெரும்பணியைச் செய்வதற்கு போர்க்களத்தில் பொழுதில்லை" என்று சொன்னான். அவன் உள்ளம் சலித்து தன் எச்சரிக்கைகளை கைவிட்டுவிட்டது. தற்கட்டுகளில் மிகக் கடினமானது சொல்லாடலில் நாவடக்குவது. முதல்சொல்லை எடுப்பதுவரை அது மிக எளிது. சொல்லிவிட்டால்

தன்முனைப்பை முன்வைத்து ஆடத் தொடங்கிவிடுகிறோம். தோற்கலாகாது என்றே மீளமீள சொல்லெடுக்கிறோம்.

“ஆம், உங்களுக்குப் பொழுதில்லை!” என்று சொல்லி உரக்க நகைத்த சல்யர் “பொழுது உண்டு!” என்றார். தன் நெஞ்சை சுட்டிக்காட்டி “என் உள்ளத்துக்குள் பொழுது உண்டு. நான் இங்கிருக்கையில் ஒவ்வொரு புரவியையும் தனித்தனியாக அடையாளம் கண்டு வைத்திருக்கிறேன். எனக்குத் தேவை உங்கள் விரிநிலத்தில் நீள்கால்களுடன் விரைந்தோடும் புரவிகள் அல்ல. நான் மலைகளிலிருந்து கொண்டு வந்த புரவிகள் இங்குள்ளன. அவை ஒவ்வொன்றையும் நான் நன்கறிவேன். ஒவ்வொரு சுழியையும் நான் இங்கிருந்துகொண்டே விழிமூடி எண்ணி நோக்க முடியும். அவை எங்கள் தேர்வலர்களால் தெளிக்கப்படுகின்றன. அப்புரவிகளை நாளை அங்கனின் தேரில் கட்டுவோம். அவை என் கைவிரல்களைப்போல. நான் எண்ணுவதற்குள் இயற்றும் திறன் கொண்டவை” என்றார்.

துச்சாதனன் முற்றிலும் சலிப்படைந்தான். அது எரிச்சலாக மாற அவரை இடைமறித்து “தாங்கள் விழைந்தபடியே தேரை செலுத்தலாம். ஆனால் அங்கரின் தேர் மிகுந்த எடைகொண்டது. அதை தங்கள் புரவிகள் தெளிக்குமா...” என்று சொன்னதுமே அவர் கைதட்டி “நில், நில். எங்கள் புரவிகளைப்பற்றி என்ன நினைத்தீர்கள்? உங்கள் புரவிகள் எங்கேனும் மேடேறுவதுண்டா? செங்குத்தாக தலைமேல் எழுந்து நிற்கும் மலை மீது எடை கொண்ட மல்லர்களைச் சுமந்து ஏறும் ஆற்றல் கொண்டவை எங்கள் மலைப் புரவிகள். அவற்றின் முன் கால்களைவிட பின்கால்கள் இருமடங்கு பெரியவை. தொடைகளை பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

உங்கள் புரவிகளின் தொடைகள் சும்பியவை. ஏனெனில் அவை முன் கால்களால் அறைந்து தாவி பின் கால்களை விசை கூட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்துகின்றன. எங்கள் புரவிகள் பின் கால்களால் முழு முன்னகர்தலையும் செய்கின்றன. எங்கள் புரவிகளின் பின் கால்களே நாளை இந்தப் போரை வெல்லப்போகின்றன என்பதை பார்ப்பீர்கள்" என்றார்.

"தாங்கள் அதை நிகழ்த்தினால் போதும். அது எவ்வண்ணம் என்று எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. நாங்கள் நிகர்நில மக்கள். உங்கள் புரவிகளையும் உங்கள் போர்முறைகளையும் அறிந்தவர்களல்ல" என்றான் துச்சாதனன். "அதை நாளை காண்பீர்கள்" என்று சொல்லி சல்யர் தன் மீசையை நீவி சுட்டு விரலால் சுருட்டினார். ஒருகணம் துச்சாதனனின் உள்ளம் மின்னியது. அவன் விழிகளை நோக்கி "என்ன?" என்று அவர் கேட்டார். "தாங்கள் சுட்டுவிரலால் மீசையை சுற்றி முறுக்குகிறீர்கள்" என்றான். "ஆம், அந்த அங்கநாட்டு அறிவிலி என்னைப் பார்த்து இதைப்போல செய்கிறான். அவனுக்கு அது சற்றும் பொருந்தவில்லை" என்று சல்யர் சொன்னார்.

"அவரை இன்று நீங்கள் அவையில் சிறுமை செய்தீர்கள். அது மீண்டும் நிகழலாகாது என்று மூத்தவர் விழைகிறார். நான் முதன்மையாகச் சொல்லவந்தது அதையே" என்றான் துச்சாதனன். சல்யரின் விழிகளில் ஒரு சிறு மாற்றம் எழுந்தது. அது என்ன என துச்சாதனன் வியந்தான். "உன் மூத்தவனிடம் சென்று சொல்க, அங்கன் இப்போரில் வெல்வானெனில் அது என் புரவித்திறனால் மட்டுமே என! அவனால் இந்திரன் மைந்தனை வெல்லமுடியாது. அவன் ஆற்றல் கொண்டவன்தான், இல்லை என்று நாம் மறுக்கவில்லை.

ஆனால் தாழ்வுணர்ச்சி கொண்டவன். தாழ்வுணர்ச்சியை ஆணவம் என்று மாற்றி நடித்துக்கொண்டிருக்கிறான். அவன் பெரும் கொடையாளி என்கிறார்கள். கொடையாளி என்பவன் யார்? கொடுத்துக் கொடுத்து புகழ் தேட விரும்புபவன். புகழ் அதர்வினவித் தேடி வரவேண்டும், புகழை ஈட்ட முயல்பவன் கொடையாளி அல்ல, சிறுமதியன்" என்று சல்யர் சொன்னார்.

"நான் அவரைப் பற்றி பேசுவதற்காக இங்கு வரவில்லை. அரசரின் ஆணையை உரைக்கவே வந்தேன்" என்றான் துச்சாதனன். எழுந்துவிடவேண்டியதுதான் என எண்ணிக்கொண்டான். ஆனால் அதற்கு ஒரு சிறு இடைவெளி தேவைப்பட்டது. பேச்சின் இடைவெளி. ஒரு நோக்கின் இடைவெளியேகூட போதும். ஆனால் சல்யர் ஊக்கம்கொண்டு "எதன்பொருட்டாயினும் இதை நீ அறிந்துகொள்ள வேண்டும். கொடையாளியை அறிவிலி என்றே அரசுசூழ்பவர் எண்ணுவர். நீ கொடையாளி அல்லவா என்று ஒருவன் புகழ்ந்துரைத்தால் அல்ல என்று ஒருபோதும் கொடையாளி சொல்வதில்லை. அவ்வாறு ஓரிடத்தில் ஒருவனை ஒற்றைச் சொல்லில் பிணைக்க முடியும் எனில் அவன் அச்சொல்லில் சிறைப்பட்டவன் என்றே பொருள். அச்சொல்லைக்கொண்டு அவனை எளிதில் வெல்லமுடியும். அவன் கோட்டையில் திறந்து கிடக்கும் வாயில் அது" என்றார்.

"அவன் கொடையாளி. அச்சொல்லில் மகிழ்பவன். சொல், அவன் எவருக்கு என்னென்ன அளித்திருக்கிறான் என்பதை நீ அறிவாயா? உன் மூத்தவன் அறிவானா? இல்லை, அதை அறிந்திருக்கமாட்டீர்கள். ஆனால் அவனை முழுவதும் அறிந்தவர்போல் எண்ணிக்கொள்கிறீர்கள்" என்றார் சல்யர். அப்போதுதான் அந்த எண்ணத்தை வந்தடைந்தமையால்

அவருக்கு ஊக்கம் எழுந்துகொண்டே வந்தது. அவர் விழிகளுக்கு அப்பால் உள்ளம் சூழ்கை அமைப்பதை காணமுடிந்தது. துச்சாதனன் சலிப்புடன் "நாம் இச்சொற்கள் அனைத்தையும் பிறிதொருமுறை விரிவாக அமர்ந்து பேசலாம். இப்பொழுது போருக்கு எழவேண்டிய பொழுது. சற்று ஓய்வெடுத்தபின் முற்புலரியில் எழுந்து நம் படைகளை சூழ்ந்தமைக்க வேண்டியுள்ளது" என்று கைகூப்பி எழுந்தான்.

"இரு! இரு!" என்று அவன் தொடைகளை தன் கைகளால் தட்டினார் சல்யர். "நான் சொல்வதை செவி கூர்ந்து உளம் கொள். அவன் எவருக்கு என்னென்ன கொடுத்திருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதை மதிப்பிடாமல் அவனை எவ்வண்ணம் அறியமுடியும்? அறியாத ஒருவன் கையில் எப்படி முழுப் படைப்பொறுப்பையும் அளிக்கமுடியும்? ஒவ்வொரு கொடையும் அவனை கட்டுப்படுத்துகிறது என்று அவன் அறிவதில்லை. அவன் மதவேழமாக இருக்கலாம். ஆனால் ஆயிரம் சரடுகளால் தறியறைந்து கட்டப்பட்டிருக்கிறான். ஒவ்வொரு சரடும் அவன் அளித்த கொடைகள்" என்றார் சல்யர். "அவனுடைய ஆற்றல் அனைத்தையும் அவன் அள்ளிக்கொடுத்துவிட்டான். பொன்னோ மணியோ அனைத்தும் பொருள்வடிவ ஆற்றல்களே. சொல்லோ நுண்வடிவ ஆற்றல். அவன் அள்ளிக்கொடுத்து வெறுமைகொண்டபடியே இருக்கிறான். இன்று அவன் முற்றிலும் ஆற்றலற்றவன், அறிக!"

துச்சாதனன் "தாங்கள் சொல்வது புரியவில்லை. எனக்கு அரசுசூழ்தல் பயிற்சியில்லை" என்றான். ஆனால் அவன் உள்ளம் படபடக்கத் தொடங்கிவிட்டது. "ஆம், அறிவேன். ஆகவேதான் நீங்கள் அரச அவைகளில் சுற்றிச் சுற்றிப்

பேசுகிறீர்கள். எதை பேசவேண்டுமோ அதை கூர்மையான சொற்களில் சொல்வதில்லை. நான் சொல்கிறேன், ஒருவன் ஒன்றை கொடுத்தான் என்றால் பெற்றவன் அதை முழுமையாகப் பயன்படுத்துவதை அவன் கண்காணிக்க வேண்டுமல்லவா? அதை பிறிதொருவன் பறித்துக்கொள்ளாமல் காக்க வேண்டுமல்லவா?" என்றார். "ஆம்" என்று துச்சாதனன் சொன்னான். "அது ஒரு கடமையாகிறதல்லவா?" என்றார் சல்யர். "ஆம்" என்று துச்சாதனன் சொன்னான். "ஒரு கொடை ஒரு கடமையை கொடுப்பவனுக்கு அளிக்கிறது. ஒரு சொற்கொடை அதை பேணும் சுமையாகிறது. அவ்வாறு கர்ணன் தன் வாழ்நாளெல்லாம் கொடுத்தவற்றால் கட்டுண்டிருக்கிறான்."

துச்சாதனன் நீள்மூச்செறிந்தான். "தன் சொற்கொடையால் எப்போதைக்குமாக பிறருக்கு அடிமைப்பட்டிருக்கிறான் அவன். அச்சரடுகள் என்ன, அவன் எங்கெல்லாம் கட்டப்பட்டிருக்கிறான் என்று அறியாமல் அவனுக்கு தேர் தெளித்தால் நான் மூடன் என்று ஆவேன். அவனுடைய தோல்விகளெல்லாம் என் தோல்விகள் என்று அறியப்படும். அதன் பொருட்டே நேற்று நான் அவனை எதிர்த்தேன். இன்றும் தயங்குகிறேன். இதை மட்டும் தெளிவுபடுத்திக்கொண்டு வந்து சொல்லுங்கள். நான் சவுக்குடன் வந்து தேரிலேறிக்கொள்கிறேன்" என்றார் சல்யர். "அவர் எவருக்கு சொல்லளித்திருக்கிறார்?" என்றான் துச்சாதனன். "அவனிடமே சென்று கேள், எவருக்கு சொல்லளித்திருக்கிறான் என்று. அல்லது உன் மூத்தவனிடம் கேட்கச் சொல். அவன் களத்தில் எத்தனை முறை பீமனை கொல்லாமல்விட்டான் என்பதை நீ அறிந்திருப்பாய். எத்தனை முறை யுதிஷ்டிரன் அவன் கையிலிருந்து உயிர் மீட்டெடுத்தான்? சொல், எத்தனை முறை நகுலனும்

சகதேவனும் அவன் முன்னிருந்து உயிருடன் திரும்பிச்சென்றார்கள்?”

துச்சாதனன் தன் நெஞ்சொலியை கேட்டுக்கொண்டிருந்தான். “அவன் அவர்கள் எவரையுமே கொல்லவில்லை. ஏனெனில் எங்கோ எவருக்கோ அவர்களை கொல்வதில்லை என்று சொல்லளித்திருக்கிறான். அது ஏன் என்று நான் அறிவேன். அதை இப்போது உன்னிடம் சொல்லப்போவதில்லை” என்றார் சல்யர். துச்சாதனன் தன் உடல் முற்றாக தளர்ந்திருப்பதாக உணர்ந்தான். தணிந்த குரலில் “ஆம், அதற்கு வாய்ப்பிருக்கிறது” என்றான். “அவன் களத்தில் இதுவரை ஆற்றியதென்ன? அவன் மிக எளிதில் அர்ஜுனனை கொன்றிருக்க இயலும் என்று அறியாதவர் எவர்? நாகவாளியை அவன் ஒரேஒருமுறை அர்ஜுனன் மேல் எய்தான். அதை அர்ஜுனன் திறம்பட ஒழிந்த பின்னர் பிறகு எத்தனைமுறை அதை மீண்டும் எய்தான் என்பதை சொல்” என்று சல்யர் கேட்டார்.

“ஆம், ஒருமுறை மட்டுமே” என்று துச்சாதனன் சொன்னான். “ஏன்? ஒரு போரில் நாகவாளியைப்போன்ற ஓர் அரிய அம்பை ஒருமுறை மட்டுமே தொடுக்கவேண்டும் என்று நெறியுள்ளதா என்ன? அந்நெறியை தனக்குத்தானே சூட்டிக்கொள்ளும் உரிமை அவனுக்குள்ளதா? அவன் துரியோதனன் பொருட்டு இறுதித் துளி குருதி வரை செலுத்தி இக்களத்தில் நின்றிருப்பேன் என்று வஞ்சினம் உரைத்தவனல்லவா? எதன் பொருட்டு அவன் தனக்கு அவ்வாறு எல்லையை வகுத்துக்கொண்டான்?” என்றார் சல்யர். துச்சாதனன் “நான் அவ்வண்ணம் எண்ணவில்லை” என்றான்.

“எண்ணி நோக்குக! எதையும் எண்ணி நோக்கவேண்டும், வெற்றுணர்ச்சிகளால் எப்பயனுமில்லை” என்று சல்யர்

சொன்னார். "ஆம், அவன் உனக்கு தமையனுக்கு நிகரானவன். உன்னை தன் இளையோனாக தோள்சேர்த்து அணைப்பவன். உங்கள் அனைவருக்கும் அவனுடனான உறவென்ன என்று எனக்கு தெரியும். இக்களத்தில் நீங்கள் ஒவ்வொருவராக இறந்துகொண்டிருக்கிறீர்கள். அவன் அதன்பொருட்டு துயருறுகிறான். ஆனால் அதன் பொருட்டு பழி வாங்குகிறானா? பழி வாங்குகிறான் என்றால் இத்தனை அரிய அம்புகள் கொண்ட மாவீரன் தன் நிகரற்ற பெருவில்லுடன் எழுந்த பின்னரும் களத்தில் ஏன் பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்?"

"ஐவரையும் அவன் உயிரளித்து அனுப்பிக்கொண்டிருக்கிறான்" என்று அவனை கூர்ந்து நோக்கிக்கொண்டு சல்யர் சொன்னார். "ஏன்? அதை எண்ணுக, ஏன் அதை செய்கிறான்?" துச்சாதனன் சொல்லின்றி சிறிய விழிகளால் சல்யரை பார்த்துக்கொண்டிருந்தான். "அவன் எவருக்கோ அளித்த சொற்கொடை அது. கொடை மட்டுமே அவனை கட்டுப்படுத்தும். அது அவன் பாண்டவர்களின் அன்னைக்கு அளித்ததாக இருக்கலாம். அன்றி யாதவ கிருஷ்ணன் அவனிடமிருந்து அச்சொல்லை பெற்றிருக்கலாம்" என்றார் சல்யர். துச்சாதனன் நீள்மூச்சுடன் மீண்டு தன் உள்ளத்தை தொகுத்துக்கொண்டு "எதன் பொருட்டு அச்சொல்லை அவர்களுக்கு அளிக்கவேண்டும் அங்கர்?" என்றான்.

"வேறு எதன் பொருட்டுமல்ல, தான் கொடையாளி என்பதன் பொருட்டு மட்டுமே. அவர்கள் இரவலர் என வந்தால் அவன் அவர்கள் கோருவதை அளிப்பான். உன்னை நம்பி வந்து கேட்கிறேன் நீ அளித்தாகவேண்டும் என்று ஒருவர் சொன்னால் மாட்டேன் என்று சொல்லுமிடத்தில் அவன் இல்லை.

அதைத்தான் அவனது தளை என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றார் சல்யர். "அவன் சொற்கொடை அளித்திருக்கிறான். ஆகவே இக்களத்தில் பாண்டவர் ஐவரில் எவரையும் அவன் கொல்லப்போவதில்லை. ஆனால் அவர்கள் தன்னை கொல்லக்கூடாதென்று ஒரு சொல்லை பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவனால் தன்னலத்துடன் எண்ணவும் முடியாது. ஏனெனில் அவன் எங்கும் தலை தாழ்த்தமாட்டான். எவரிடமும் எதையும் பெற்றுக்கொள்ள மாட்டான்."

"அந்த வெற்றாணவத்தால் தன் விரிநெஞ்சுடன் சென்று அவர்களின் அம்புகளுக்கு முன் நிற்கப் போகிறான். இக்களத்தில் அவன் விழுவான். ஐயமே இல்லை" என்று சல்யர் சொன்னபோது அவர் குரல் பிறிதொன்றாக ஆகிவிட்டதை துச்சாதனன் உணர்ந்தான். அதுவரை இல்லாத புதிய ஒருவர் அங்கே தோன்றியதுபோல. பொருளுள்ளதும் அல்லாததுமான பலநூறு சொற்களின் திரைக்கு அப்பாலிருந்து அவர் தோன்றினார். தனித்தவராக, களைத்தவராக, கூசிச்சுருங்கியவராக. துச்சாதனன் "நான் என்ன செய்ய வேண்டும், சல்யரே?" என்றான். "சென்று கேள். அவனிடமே நேரில் கேள். அவன் எவருக்கு என்னென்ன சொற்களை அளித்திருக்கிறான் என்று உசாவு. சென்று உன் தமையனிடம் அதை சொல். இக்களத்தில் அவன் எவ்வண்ணமெல்லாம் சிறைப்பட்டிருக்கிறான் என்று அவனுக்கும் புரியும். அதன் பின்னர் உங்கள் சூழ்கைகளை வகுத்துக்கொள்க!" என்றார்.

"எனக்கு அரசாணைகளை மீறும் வழக்கமில்லை. தலைமை என்றால் என்னவென்று அறிந்தவன் நான். மேலும் அரசர் வென்று முடிசூடவேண்டுமென்பதற்காகவே குருதிச்சுற்றத்தை

பகைத்து இங்கே வந்தேன். எனக்குத் தேவை அங்கனின் கடன்கள் என்ன என்னும் விளக்கம் மட்டுமே... இன்னும் சற்றுபொழுதே எஞ்சியிருக்கிறது. அச்செய்தியுடன் வந்து என்னைப் பார்" என்றார் சல்யர். "உண்மையில் எந்தக் கடனாக இருந்தாலும் அது இடரில்லை. அதற்கேற்ப என் சூழ்கைகளை அமைத்துக்கொள்வேன். அதற்காக மட்டுமே கேட்கிறேன். சல்யர் தேரோட்டினார், அவர் ஆற்றிய பிழையால் அங்கன் களம்பட்டான் என்னும் இழிசொல் எனக்கு அமையலாகாது. நான் எண்ணுவது அதை மட்டுமே."

அக்குரலினூடாக அவர் மீண்டும் தன்னை மறைத்துக்கொண்டார். துச்சாதனன் "ஆம், நான் அவரிடமே கேட்கிறேன். பிற எவரிடமும் இதைப்பற்றி பேசுவதற்கு முன் அவரிடமே நான் பேசுவதே உகந்தது" என்று எழுந்து கொண்டான். சல்யர் எழுந்து வந்து "அவன் படைமுகம் செல்ல வேண்டியதில்லை. அவன் படைத்தலைமை கொண்டால் இப்படை வெல்வது அரிது. நான் படைத்தலைமை கொள்கிறேன். படைகளை நடத்தும் பொறுப்பு எனக்கு புதிதல்ல. பால்ஹிகக் கூட்டமைப்பின் பெரும்படைத்தளபதியாக பணியாற்றியவன் நான். என் வாழ்நாளில் நூறு களங்களுக்கு மேல் கண்டவன். என் உடலிலிருக்கும் புண்களைக்கொண்டு நீ அதை உணரமுடியும். இப்போரை நான் நிகழ்த்துகிறேன். வென்று மணிமுடியை ஈட்டி துரியோதனனுக்கு அளிக்கிறேன். மலைமக்களின் வீரமும் கொடையும் என்னவென்று பாரதவர்ஷம் அறியட்டும்" என்றார்.

துச்சாதனன் அவரை நோக்கிக்கொண்டிருந்தான். சல்யர் மீண்டும் அனைத்துத் திரைகளுக்கும் அப்பால் சென்றுவிட்டிருந்தார். அவன் அவரிடம் எழுந்த

இன்னொருவரை நினைத்துக்கொண்டிருந்தான். “நான் விடைகொள்கிறேன்” என்றான். “செல்க, நான் பேசியதெல்லாம் அஸ்தினபுரியின் நலன் பொருட்டே! நான் இப்படையுடன் இருப்பது வரை இதன் வெற்றியே என் இலக்கு” என்றார் சல்யர். ஒரு மின் என அவரிடம் அந்த மறைந்திருப்பவர் தோன்றினார். “ஒருபோதும் ஒருவர் தோற்கமுடியாத இடமொன்று உண்டு” என்றார். அது என்ன சொல் என துச்சாதனன் திகைத்தான். அவர் எவரிடம் அதை சொன்னார். “என்ன?” என்று அவன் கேட்டான். “செல்க!” என்று துச்சாதனனின் தோள்களில் தட்டி சல்யர் புன்னகைத்தார். மீண்டும் ஒருமுறை அவரை கூர்ந்து நோக்கியபின் துச்சாதனன் வெளிவந்து தன் புரவியை நோக்கி நடந்தான்.

இருட்கனி - 14

துச்சாதனன் கர்ணனின் குடில் நோக்கி சென்று உளவிசையால் தொலைவிலிருந்து பாய்ந்திறங்கி, உடற்தசைகள் கொந்தளிக்க மூச்சு வாங்க அவன் குடில் வாயிலை அடைந்து, அங்கிருந்த ஏவலன் தலைவணங்குவதை பொருட்படுத்தாமல் கடந்து சென்று, கதவை ஓங்கி ஓங்கி மாறி மாறி தட்டினான். “மூத்தவரே! மூத்தவரே!” என்று கூச்சலிட்டான். அவன் பின்னால் நின்று காவலன் சொல்லெடுக்க தவித்தான். உள்ளிருந்து கர்ணன் “கதவை உடைக்காதே. உள்ளே வா” என்றான். துச்சாதனன் உள்ளே சென்று படுத்திருந்த கர்ணனை அணுகி அவன் காலடியில் நின்று “நான் சல்யரை சந்தித்துவிட்டு வருகிறேன்” என்றான்.

கர்ணன் ஒருகணம் அவனை கூர்ந்து நோக்கிவிட்டு "சொல்" என்றான். "உங்களிடம் அவர் சில கேள்விகளைக் கேட்கச் சொன்னார்" என்றான் துச்சாதனன். கர்ணன் இரு கைகளையும் தூக்கி தலைக்கு அணை வைத்தபடி "கூறுக!" என்றான். அவனுடைய திரண்ட தோள்தசைகள் இரு ஆமைகள் என எழுந்தன. துச்சாதனன் "மூத்தவரே, நீங்கள் கை தழையா வள்ளல் என்று நாங்கள் அனைவரும் அறிவோம். நீங்கள் எவருக்கு என்ன கொடுத்திருக்கிறீர்கள்? அக்கொடை வழியாக எங்கெல்லாம் கட்டுண்டிருக்கிறீர்கள்? அதை நீங்கள் கூறியாகவேண்டும்" என்றான்.

கர்ணன் "நீ அறியவேண்டியதென்ன? அதை மட்டும் கூறு. என் நினைவறிந்த நாள்முதல் நான் ஒவ்வொருநாளும் எவருக்கேனும் எதையேனும் அளித்துக்கொண்டுதான் இருக்கிறேன். அக்கொடை அனைத்துக்கும் கட்டுண்டிருக்கிறேன்" என்று சொன்னான். துச்சாதனன் "நீங்கள் களத்தில் அர்ஜுனனை கொல்வதில்லை என்று எவருக்கேனும் சொல்லுறுதி அளித்தீர்களா? பாண்டவர்கள் உயிரை பேணுவேன் என்று எவருக்கேனும் கூறினீர்களா?" என்றான். "ஏனென்றால் களத்தில் நீங்கள் அர்ஜுனனை கொல்லவில்லை. பாண்டவர்களை நீங்கள் பலமுறை தப்பிச் செல்லவிட்டீர்கள்."

அவனை நோக்கி விழிநட்டு கர்ணன் சொன்னான் "அர்ஜுனனை கொல்வதில்லை என்று சொல்லுறுதி அளிக்கவில்லை. ஆனால் நாகவாளியை ஒருமுறைக்குமேல் செலுத்தமாட்டேன் என்று சொல்லுறுதி அளித்தேன். பாண்டவர் நால்வரையும் எந்நிலையிலும் கொல்வதில்லை என்று கூறினேன்." நடுக்குகொண்ட குரலில் "எவரிடம்?" என்று துச்சாதனன் கேட்டான். கர்ணன் ஓங்காக் குரலில் "என் குருதியன்னையிடம்.

யாதவ அரசி குந்தி என் குடிலுக்கு வந்து என்னை தன் மைந்தன் என ஏற்று அன்னைக்கு மைந்தனின் கொடையென அதை கேட்டார். அவர் என் அன்னை என நான் முன்னரே அறிவேன். பிற அனைவருக்கும் எதையேனும் அளித்திருக்கிறேன். ஈன்ற அன்னைக்கு அளிக்க அப்போது அது ஒன்றே என்னிடம் இருந்தது. அவரும் அதுவன்றி வேறெதையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை" என்றான்.

துச்சாதனன் பெருமூச்சுடன் தளர்ந்து பின்நோக்கி நகர்ந்து குடிலின் மூங்கில் தூணை பற்றிக்கொண்டான். பின்னர் "ஏன், மூத்தவரே?" என்று கேட்டான். அதில் இருந்த துயரத்தின் ஒலியைக் கேட்டு அவனே மேலும் துயர்கொண்டான். "மூத்தவரே, அந்தச் சொல்லுறுதியின் வழியாக நீங்கள் என் தமையனை கைவிட்டீர்கள். அதை நீங்கள் உணரவில்லையா?" என்றான். "இல்லை. உண்மையில் நான் உன் தமையனைப்பற்றி எண்ணுவதே இல்லை. நான் எண்ணுவதற்கு அப்பால் அவருக்கு ஓர் உள்ளமும் விழைவும் உண்டு என்று கருதியதே இல்லை" என்றான் கர்ணன். "இக்களத்தில் அவர்களைக் கொன்று செருவென்று தமையனை அரசராக்குவதாக சொன்னீர்கள்" என்றான் துச்சாதனன்.

"உன் தமையனுக்காக என் உயிரை, என் மைந்தர்களை, என் குடியை அளிக்க சித்தமாக இருக்கிறேன். களத்தில் அர்ஜுனனை கொல்ல எனக்கு நாகஅம்போ பிற அரிய அம்புகளோ தேவையில்லை. பாண்டவ ஐவரில் அவனை மட்டுமே கொன்றால் போதும், இப்போர் முடிந்துவிடும். எழும் நாளில் எனது அம்பில் அர்ஜுனன் உயிர் நீப்பான். அதில் உறுதி கொண்டிருக்கிறேன். இப்போரை அர்ஜுனனை கொல்லும்பொருட்டு மட்டுமே என நிகழ்த்துவதாகவும்

திட்டமிட்டிருக்கிறேன்" என்று கர்ணன் சொன்னான். எண்ணியிராது எழுந்த சீற்றத்துடன் "அர்ஜுனன் அத்தனை எளிதில் கொல்லப்படக்கூடியவனல்ல" என்று துச்சாதனன் கூவினான். "உங்கள் நாகஅம்பையே அவன் ஒழிந்தான். அனைத்து அம்புகளிலிருந்தும் தப்பும் நுட்பத்தை அவனுக்கு கற்பிக்கும் ஆசிரியன் கையில் கடிவாளங்களுடன் புரவிமேடையில் அமர்ந்திருக்கிறான்."

கர்ணன் "நாகவாளியை அவன் ஒழிந்தது திறனால் அல்ல, ஒரு சிறு சூழ்ச்சியினால், ஒருமுறை ஒரு சூழ்ச்சியை செய்கையிலேயே சூழ்ச்சி செய்யக்கூடியவன் என்பதை பிறருக்கு உணர்த்துகிறோம். சூழ்ச்சிகள் எல்லையற்றவை அல்ல. இம்முறை அவன் செய்யவிருக்கும் சூழ்ச்சியையும் கருத்தில் கொண்டே அம்புகளை தொடுக்கவிருக்கிறேன். இதிலிருந்து அவன் எந்நிலையிலும் தப்ப இயலாது. பரசுராமரின் வில்லை வெல்லும் ஆற்றல் அவனுக்கில்லை. பரசுராமரின் சொல் பெற்ற அம்பை அவனால் தடுக்கவும் இயலாது" என்றான் கர்ணன். துச்சாதனன் கைகளை நெஞ்சில் கட்டி தலைகுனிந்து அமர்ந்திருந்தான். "அஞ்சவேண்டாம் இளையோனே, இப்போரில் நாம் வெல்வோம்" என்றான் கர்ணன்.

"இவ்வண்ணம் ஒரு சொற்கொடையை நீங்கள் நிகழ்த்தியதை உங்கள் நாவிலிருந்து மூத்தவர் அறிந்திருக்கிறாரா?" என்றான் துச்சாதனன். "இல்லை. நான் என் கொடைகளைப்பற்றி அவ்வாறு பிறரிடம் சொல்லிக்கொள்வதில்லை" என்றான் கர்ணன். "இது கொடை மட்டும் அல்ல. இது படைசூழ்கையை முற்றாகவே மாற்றும் ஒரு செய்தி. இதை நீங்கள் கூறியிருக்கவேண்டும்" என்றான் துச்சாதனன். "இதை இனி அவர் அறிந்தால் எவ்வண்ணம் உணர்வார் என்று எப்போதாவது

எண்ணியிருக்கிறீர்களா?" கர்ணன் புன்னகைத்து "இன்றுவரை உன் தமையன் என்ன எண்ணுவார் எப்படி புரிந்துகொள்வார் என்று ஒருகணம்கூட நான் கருதியதில்லை. இப்புவியில் என்னைப்பற்றி என்ன எண்ணுவார் என்று எந்நிலையிலும் கருதாமல் பழகும் ஒரே நட்பு அவருடையது. அதனால்தான் அதை நட்பென்று எண்ணுகிறேன்" என்றான்.

"அவர் உளம் குமைவார். இன்றிருக்கும் கசந்த நிலையில் உங்களை வெறுப்பார். போர்முனையில் நட்புக்கு மேல் குருதிப்பற்றை நிறுத்தி தன்னை கைவிட்டீர்கள் என்று எண்ணுவார். ஐயமில்லை" என்றான் துச்சாதனன். "இன்று அவர் தன் நல்லியல்பு அனைத்தையும் இழந்துவிட்டிருக்கிறார். இந்த அளவு நிலையில்லாதவராக அவரை முன்பு கண்டதே இல்லை. இளையோர் களம்பட்டு, பிதாமகர்களும் ஆசிரியர்களும் இறந்து, சுற்றமென வந்த அரசர்கள் ஒவ்வொருவராக மறைந்து தன்னந்தனியனாக நின்றிருக்கிறார். இந்தப் பெருவெள்ளத்தில் பற்றுக்கோடென உங்களை எண்ணியிருக்கிறார், நீங்களும் அவரை கைவிட்டீர்கள் எனும் இச்செய்தியை அவரால் தாள இயலாது."

கர்ணன் "இத்தனை சொற்களுக்குப் பின்னரும்கூட அவர் என்னைப்பற்றி என்ன எண்ணுவார் என்பது எனக்கு ஒரு பொருட்டெனத் தோன்றவில்லை. அவர் என்ன எண்ணினாலும் அது என் உளநிலையில் மாற்றத்தையும் உருவாக்காது" என்றான். "மூத்தவரே, நீங்கள் கொடையென அளித்தது உங்களுக்கு உரிமைப்பட்ட ஒன்றை அல்ல. அதை மட்டும் உங்களிடம் கூற விரும்புகிறேன். நீங்கள் அளித்தது எங்கள் உயிரை, எங்கள் தன்மானத்தை, என் மூத்தவரின் பெருமையை. உங்கள் அன்னையின் காலடியில் எங்களை

பலியிட்டுவிட்டீர்கள்" என்றான் துச்சாதனன். "அளிக்கையில் அவ்வாறு எண்ணிச் சூழ்வது என் வழக்கம் அல்ல" என்றபின் கர்ணன் சிலகணங்கள் கழித்து "நீ கூறுவது உண்மை. ஆனால் உன் தமையனின் உடைமையை, அவர் பெருமையை ஒருபோதும் என் உடைமையோ என் பெருமையோ அன்று என நான் எண்ணியதில்லை" என்றான். இதழ் கோணலாக புன்னகைத்து "எவரேனும் முனிவர் வந்து கேட்டால் அஸ்தினபுரியையும் அவரையும்கூட நான் கொடையளித்திருக்கக்கூடும்" என்றான்.

"இப்போரை முடித்துவிட்டீர்கள். இனி நாம் ஒவ்வொருவரும் நிரையாக நடந்து இறப்பின் முன் சென்று நின்றிருப்பதொன்றே எஞ்சியுள்ளது. அவ்வளவுதான். இனி ஒரு சொல்லும் உங்களுக்குச் சொல்வதற்கு என என்னிடமில்லை" என்றபின் திரும்பி துச்சாதனன் குடிலைவிட்டு வெளியே சென்றான்.

துரியோதனனின் அவைக்கூடத்தை துச்சாதனன் சென்றடைந்தபோது அங்கு இரு படைத்தலைவர்கள் மட்டும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். துச்சாதனன் அவர்களில் ஒருவரை நோக்கி "மூத்தவர் வந்தாரா?" என்றான். துரியோதனன் துயிலச்சென்றதை நினைவுகூர்ந்தான். ஆனால் அவன் சகுனியுடன் அங்கே இருப்பான் என்றே தோன்றிக்கொண்டிருந்தது. படைத்தலைவர்களில் ஒருவர் எழுந்து துச்சாதனனிடம் வந்து "அரசர் துயில்கொள்ளச் சென்றுவிட்டார். தாங்களே அறிவீர்கள், அவர் மயிர்க்கால்களும் நனைந்து குளிருமளவுக்கு மது அருந்தியிருக்கிறார். இந்நிலையில் அவருக்கு தன்னுணர்வென ஏதும் இருக்க

வாய்ப்பில்லை" என்றார். "நான் அவரை பார்த்தாகவேண்டும்" என்று துச்சாதனன் சொன்னான்.

"தாங்கள் கூறுவது எதையும் இப்போது அவரிடம் சென்று சேர்க்க இயலாது. தாங்கள் இப்போது தங்கள் மாதுலரிடம் பேசலாம். அவர் தெளிந்திருக்கிறார்" என்றார் படைத்தலைவர். "இல்லை, இது என் மூத்தவரிடம் மட்டுமே சொல்வதற்குரியது" என்று துச்சாதனன் சொன்னான். "அதனால் பயனில்லை" என்றார் படைத்தலைவர். "தெய்வச்சிலையிடம் என்று எண்ணிச்சொல்கிறேன், போதுமா?" என்று திரும்பி உரத்த குரலில் துச்சாதனன் கேட்டான். அவர்கள் சொல்லடைந்து நிற்க ஒருவர் "அங்கே இருக்கிறார்" என்றார். "குடிலுக்குள்ளா?" என்றான். "இல்லை, வெட்டவெளியில் துயில விரும்பினார். ஆகவே மரத்தடியில் மஞ்சம் அமைத்தோம்" என்றான் ஒரு ஏவலன்.

துச்சாதனன் வெளியே வந்து சில அடிகள் நடந்தபோதே அங்கு நின்றிருந்த சாலமரத்தின் அடியில் இலைப்படுக்கையில் இரு கைகளையும் தலைக்கு வைத்து அண்ணாந்து வானைப் பார்த்து படுத்து துயின்றுகொண்டிருப்பதை கண்டான். ஒருகணம் அவன் துயில்வதை கலைக்கவேண்டாம் என்று தோன்றியது. துரியோதனன் ஆழ்ந்துறங்குவதே இல்லை என்று அவன் அறிந்திருந்தான். பெரும்பாலான தருணங்களில் சிறுபொழுது துயின்று, உடனே உள்ளிருந்து தொட்டு உசுப்பப்பட்டு விழித்துக்கொண்டு நீள்மூச்சுகளும் பொருளிலா முனகல்களுமாக படுக்கையில் படுத்திருப்பான். அப்பால் படுத்திருக்கும் துச்சாதனன் அவன் விழித்துக்கொண்ட கணமே தானும் உணர்வு பெற்று அவன் அசைவுகளை செவிகளால்

அறிந்துகொண்டிருப்பான். ஆனால் மெல்லிய அசைவாகக்கூட தன் விழிப்பை துரியோதனன் அறியலாகாது என எண்ணுவான்.

புரண்டு புரண்டு படுத்து, "இளையோனே" என முனகி, தம்பியர் எவர் பெயரையேனும் சொல்லி, அரிதான சில தருணங்களில் மெல்ல விம்மி, அவ்வொலியை தானே கேட்டு எழுந்து, மீண்டும் மதுவருந்தி, அதை நிறுத்த முடியாமல் மீண்டும் மீண்டும் அருந்தி, உள்ளிருந்து குமட்டலெழுந்து உடல் உலுக்க சற்றே வாயுமிழ்ந்து, இரு கைகளையும் மஞ்சத்தில் ஊன்றி தலை குனிந்து அமர்ந்திருப்பான். குருதி எடைகொண்டு குமிழியிட்டு தலைக்குள் நிறைந்து, தலை பெருத்து முன் தள்ள, உடல் சற்று அசைந்து, அவ்வண்ணமே மஞ்சத்தில் விழுந்து மீண்டும் துயிலத்தொடங்குவான். மீண்டும் அவன் குறட்டை ஒலி கேட்பது வரை துச்சாதனன் உளம் பதைக்க அங்கே அசைவிலாது அமர்ந்திருப்பான்.

"இளையோனே" எனும் குரல் தன்னை அழைக்கையில் துச்சாதனனுக்கு அது தெரியும். பிற அனைத்துக் குரல்களும் விண்புகுந்த தம்பியருக்கு என்று அவன் அறிந்திருந்தான். அவன் குறட்டையொலி கேட்கத் தொடங்குகையில் நெஞ்சில் ஆறுதல் பரவும் நீள்மூச்சுடன் கைகளைக் கூப்பி தெய்வங்களை வாழ்த்திவிட்டு தானும் உடலமைத்து ஓசையில்லாமல் படுத்துக்கொள்வான். துரியோதனனின் குறட்டையொலியை கேட்டுக்கொண்டிருக்கையில் உள்ளம் அமைதியடையும். அது ஓர் ஆறுதல்மொழி, ஓர் உறுதிகூறல். மெல்ல துயிலெழுந்து உடலெங்கும் பரவி மெல்ல சித்தம் அழிந்து மூழ்கத்தொடங்குவான்.

அப்போது துரியோதனன் ஆழ்துயில் கொண்டிருக்கிறான் என்னும் உணர்வே அவனுக்கு அமைதியை அளிப்பதாக

இருந்தது. துச்சாதனன் திரும்பிச் செல்வதற்காக ஒரு காலடி எடுத்து வைத்தான். ஆனால் அங்கிருந்து செல்ல இயலாதென்று தோன்றியது. விசைமிக்க கைகள் அவனைப்பற்றி அங்கே நிறுத்தியிருந்தன. தன்னால் வேறெங்கும் சென்றமைய முடியாதென்று தெரிந்தபின் அவன் மெல்ல காலெடுத்து வைத்து துரியோதனனை அணுகினான். அவன் துயில்கையில் அவ்வாறே விட்டுவிடலாம் என்றுதான் எண்ணியிருந்தான். எவ்வண்ணமாயினும் துரியோதனன் நெடும்பொழுது துயிலப்போவதில்லை. மது கூடிப்போனால் இரு நாழிகைகூட துயில வைப்பதில்லை. உடலுக்குள் அதன் செறிவு குறைந்ததுமே சித்தம் விழித்துக்கொள்கிறது. இறகு உலர்ந்த ஈ என அதிலிருந்து விடுவித்துக்கொண்டு தன்னைத்தானே சுற்றி சிறகுவிரித்து எழுந்து பறக்கத்தொடங்கிவிடுகிறது.

அவன் எழும்போது அருகிருக்கலாம். அப்போது அதை சொல்லலாம். அதுவரை காத்திருக்கலாம். காத்திருப்பது ஒன்றும் எனக்கு புதிதல்ல. இவ்வாழ்நாள் முழுக்க தமையனின் அருகே காத்திருப்பதையே தவமென செய்திருக்கிறேன். குழவிப்பருவத்தில் இளையஅன்னை சத்யசேனை அவன் கைபற்றி மூத்தவனை சுட்டிக்காட்டி "உன் தமையனை நோக்கு. அவன் சென்றதே வழி இனி உனக்கு" என்றாள். அச்சொற்களை அவன் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் கண்டு கேட்டு அக்கணம் நிகழ்ந்ததுபோல் தெளிவுபடுத்திக்கொண்டே வந்தான். அன்றிருந்த துரியோதனன் அவனுடனே வளர்ந்து பேருருக்கொண்டவனாக ஆனான். அரியணை அமர்ந்தவனாக, அவையமர்ந்து சுற்றத்துடன் நகையாடுபவனாக, மைந்தருடன் களிக்கும் தந்தையாக, ஒவ்வொருவரையாக இழந்து

துயரடைந்து தனித்தவனாக மாறிக்கொண்டே இருந்தான். அச்சொற்கள் அவ்வாறே மாறாமல் ஒலித்தன.

துச்சாதனன் அருகே சென்றதும் துரியோதனன் விழித்திருப்பதை உணர்ந்தான். துரியோதனன் திரும்பிப்பார்க்கவோ ஒலியெழுப்பவோ செய்யவில்லை. ஆயினும் அவ்வுடல் படுத்திருந்ததிலிருந்த தன்னுணர்வு அவன் துயிலவில்லை என்று காட்டியது. உள்ளம் அனைத்துக் கடிவாளங்களையும் இழுத்து அமரத்தில் அமர்ந்திருக்கும் பாகன். துயிலில் உடல் கடிவாளங்கள் தளர விடுதலை கொள்கிறது. உள்ளத்திலிருந்து ஓய்வு பெற உடல் ஏங்கிக்கொண்டிருக்கிறது. அஞ்சிய உள்ளம், துயர் கொண்ட உள்ளம், ஐயம்நிறைந்த உள்ளம் உடலை சற்றும் அமைதி கொள்ள விடுவதில்லை. சவுக்கை சொடுக்கி ஆணையிட்டுக்கொண்டே இருக்கிறது. உள்ளம் அடையும் துயரில் பெரும்பகுதியை உடலும் அடைகிறது. துயருற்றவன் உடல் தொலைவிலேயே துயர் துயர் என்று கூவிக்கொண்டிருக்கிறது. துயருற்றவன் எப்பெருக்கிலும் தனித்து தெரிகிறான்.

தன் முகத்தை துச்சாதனன் ஆடியில் பார்ப்பதில்லை. ஒரே ஒரு முறை மட்டும் தன்னியல்பாக தீட்டப்பட்ட கேடயத்தில் அதை பார்த்தபோது திடுக்கிட்டு கேடயத்தை தாழ்த்திக்கொண்டு தன்னுள்ளத்தை அதிலிருந்து அகற்ற முயன்றான். அது பிறிதொருவனின் முகமாகத் தோன்றியது. ஒரு போதும் அதில் இல்லாத பதைப்பும் தனிமையும் துயரும் நிறைந்திருந்தது. அந்த முகத்தை நோக்கி இளமையிலிருந்து வந்துகொண்டிருந்தோமா? அந்த முகத்துடன்தான் இப்புவியிலிருந்து அகலப்போகிறோமா? அந்த முகம் என்னுள்

குழவிப்பருவத்திலேயே இருந்திருக்க வேண்டும். அலையற்ற நீரில் தோன்றி மறையும் பாவையென துயில்கையிலோ தனித்திருக்கையிலோ துயர்கொள்கையிலோ அது வந்து மறைந்திருக்கவேண்டும். என்னை வளர்த்த செவிலியரிடமோ அன்னையரிடமோ சென்று கேட்டால் தெரியும். "அன்னையே, இம்முகத்தை எப்போதேனும் பார்த்திருக்கிறீர்களா?" தயங்கி விழிதாழ்த்தி "ஆம், அரிதாக" என்று அவர்கள் சொல்லக்கூடும். அரிதாக என்பதனாலேயே அவர்கள் அதை மறக்காமலும் இருப்பார்கள். ஒருவேளை அதுவே அவன் என்று அவர்களின் உள்ளம் எண்ணியிருக்கவும் கூடும். ஆனால் அவர்கள் அனைவருமே அரசவையில் திரௌபதி துகிலுரியப்பட்டபின் அவனை ஏறிட்டும் நோக்குவதில்லை.

ஒரு முறை அவன் அன்னையரில் ஒருத்தி சுவரில் தெரிந்த அவன் நிழலை நோக்கி நின்றிருப்பதை சேடி ஒருத்தி கண்டாளாம். அதைப்பற்றி உசாவியபோது "அவனை நோக்குவதில்லை என வஞ்சினம் உரைத்திருக்கிறேன். நோக்காமலும் இருக்க இயலவில்லை. நிழல்நோக்கி அவனை அறிகிறேன்" என்றாளாம். அச்சேடி அதை சொன்னபோது அவன் நெஞ்சு அதிர எழுந்துகொண்டான். அசலை துருமசேனனில் அவனை கண்டாள். அவனை அரண்மனை மகளிர் அனைவரும் துச்சாதனனாக ஏற்றுக்கொண்டனர். நிழல்நோக்கியவள் என்ன கண்டாள்? மைந்தனை நோக்கியவர்கள் பிறிதொன்றை உணர்ந்தனரா என்ன?

அவன் அமர்ந்ததும் "எங்கு சென்றிருந்தாய்?" என்று துரியோதனன் கேட்டான். துச்சாதனன் "மூத்தவரின் குடிலுக்கு" என்றான். "அவன் துயின்றுவிட்டானா?" என்று துரியோதனன் கேட்டான். "படுத்திருந்தார். நான் அவரை எழுப்பினேன்"

என்றான் துச்சாதனன். அவன் மேலே சொல்லும்பொருட்டு துரியோதனன் செவிகாத்திருந்தான். "மூத்தவரே, அதற்குமுன் நான் சல்யரைச் சென்று பார்த்தேன்" என்றான் துச்சாதனன். "என்ன சொன்னார்?" என்று துரியோதனன் கேட்டான். ஆனால் ஒருகணத்திற்குப் பின்னர்தான் அவ்வினாவை துரியோதனன் கேட்கவில்லை என்று துச்சாதனன் உணர்ந்தான். கேட்டதாக அத்தனை தெளிவாக தான் உணர்ந்தது எவ்வாறு என வியந்தான். அவன் மேலும் சிலகணங்களுக்கு அந்த அமைதியை உணர்ந்தபின் சொன்னான்.

"அங்கர் தன் பெருங்கொடைத் திறனாலேயே ஒவ்வாச் சொல்லுறுதிகளை பலருக்கும் அளித்திருக்கலாம், ஆகவே அவர் பல சரடுகளால் கட்டுண்டவர், நமக்கு மட்டுமென தன்னை அளிக்கும் உரிமையை இழந்தவர் என்கிறார் சல்யர். ஆகவேதான் போர்க்களத்தில் அவர் அர்ஜுனனை கொல்லாமல் தவிர்க்கிறார். பாண்டவர்களை அவர் வெல்வதுகூட இல்லை. அவர் எவருக்கோ அவ்வண்ணம் சொல்லுறுதி அளித்ததுபோல் தோன்றுகிறது என்றார். அது மெய்யென்று எனக்குத் தோன்றியது. ஆகவே நான் நேரில் சென்று அவரிடம் கேட்டேன். மெய்யென்று அவர் கூறினார்."

துரியோதனனிடமிருந்து ஏதாவது எதிர்வினை வருமென்று துச்சாதனன் எதிர்பார்த்தான். ஒருகணம் காத்திருந்துவிட்டு "நம் படைகளுக்குள் நுழைந்து மூத்தவரின் பாடிவீட்டிற்குள் சென்று யாதவப் பேரரசி அச்சொல்லுறுதியை பெற்றிருக்கிறார்" என்றான். மீண்டும் ஒருகணம் காத்திருந்துவிட்டு "யாதவப் பேரரசிக்கு முதிரா அகவையில் பிறந்த மைந்தரே அங்கர். அதைச் சொல்லி அன்னையென நின்று அவர் அச்சொல்லுறுதியை பெற்றிருக்கிறார்" என்றான். கர்ணனைப்

பற்றி முன்னரே துரியோதனன் அறிந்திருப்பதுபோல் தோன்றியது. அவன் உடலில் ஏதேனும் அசைவு தோன்றுமென்று துச்சாதனன் கூர்ந்து பார்த்தான்.

"எனக்கும் அங்கரைப்பற்றி அந்த ஐயம் இருந்தது. எவ்வகையிலோ குந்தியன்னையின் குருதி அவரில் ஓடுவதாகத் தோன்றியிருக்கிறது" என துச்சாதனன் தொடர்ந்து சொன்னான். "அவருக்கும் அர்ஜுனனுக்குமான முகஒற்றுமையும் தோற்றப் பொருத்தமும் என்னுள் எப்போதும் தெரிந்தது. ஆனால் மதுவனத்தின் யாதவக்குடியில் எவரோ அங்கரைப் பெற்றிருக்கலாம் என்றே இதுவரை எண்ணினேன். அல்லது முயன்று அவ்வாறு எண்ணிக்கொண்டேன் என்று படுகிறது" என்றான். "அன்னையென நின்றிருந்தபோது அங்கர் அச்சொல்லுறுதியை அவருக்கு அளித்திருக்கிறார்" என மீண்டும் சொன்னான். துரியோதனனின் குரலை செவிகூர்ந்து இருளில் அமர்ந்திருந்தான்.

துரியோதனன் "ஆம், நான் அறிவேன்" என்றான். "அறிவீர்களா?" என்று உரத்த குரலில் கேட்டபடி துச்சாதனன் எழுந்தான். "இப்படைக்குள் நிகழும் ஒன்றை தெரியாதிருக்கும் அளவுக்கு உளவுத்திறனோ ஆட்சித்திறனோ அற்றிருப்பேன் என்று எண்ணுகிறாயா?" என்று துரியோதனன் கேட்டான். "அவர் யாதவ அரசியின் மைந்தன் என்று முன்னரே அறிவீர்களா?" என்றான் துச்சாதனன். "இளமைந்தனாக அங்கர் என் முன் வந்து நின்ற அன்றே மாதுலருக்குத் தெரியும். நான் அன்று அதை உளம்கொள்பவனாக இல்லை. பின்னர் அது என் கனவிலும் கள்மயக்கிலும் மெல்லிய தொல்நினைவென தோன்றி மறையும் ஒன்றாக மட்டுமே இருந்தது. அது என் உள்ளத்தில் எழுவதற்குக்கூட நான் ஒப்பியதில்லை" என்றான்

துரியோதனன். “ஒருவேளை அதை நான் ஏற்றிருந்தால் வாரணவதத்திற்கு துணிந்திருக்க மாட்டேன்...” என முனகிக்கொண்டான்.

“மூத்தவரே, எனில் அவரை நாம் ஏன் அங்கநாட்டுக்கு சிற்றரசராக அமரவைத்தோம்? அவர் இருந்திருக்க வேண்டிய இடம் தங்கள் அரியணை அல்லவா?” என்று துச்சாதனன் கேட்டான். “ஆம், என் அரியணை அவருக்குரியது. அது எனக்கு அவர் அளித்த கொடை” என்று துரியோதனன் சொன்னான். “அவர் மணிமுடிசூடவேண்டும் என்றால் குந்திதேவி அதை அவையில் எழுந்து சொல்லியிருக்கவேண்டும். அதை நம் ஷத்ரியக் குடிகள் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு அவர் கூறிவிடுவார் என பீஷ்ம பிதாமகர் அஞ்சினார். அதனூடாக அஸ்தினபுரியின் ஷத்ரியரும் யாதவரும் பூசலிட்டுக்கொள்வார்கள் என்றும் அஸ்தினபுரிக்கு எதிராக ஷத்ரிய அரசர்களின் கூட்டு அமையும் என்றும் கருதினார். ஆகவே அவர் அங்கரை எப்போதும் சூதன் என அவைச்சிறுமை செய்தார். அவர்மேல் வெறுப்பை உமிழ்ந்துகொண்டே இருந்தார்.”

“நமக்கும் பாண்டவர்களுக்குமான பூசல் முதிர்ந்து அவர்கள் கானேகும்போதும் மீண்டுவந்து நிலம் கோரும்போதும் எத்தருணத்தில் வேண்டுமென்றாலும் அஸ்தினபுரியின் குடியவையில் குந்திதேவி எழுந்து அங்கரை தன் மைந்தன் எனச் சொல்லி அரியணை கோரக்கூடும் என எண்ணினார் பிதாமகர். அதற்கு யாதவர் முதன்மைகொண்ட நம் குடிகள் ஒப்புதலும் அளிக்கக்கூடும். ஆனால் பீஷ்மரின் ஒப்புதல் இன்றி குடியவை அங்கரை பாண்டவர் என ஏற்காது, அவருடைய சொல் மட்டுமே ஷத்ரியரின் எதிர்ப்பை நிறுத்தும். அதை

குந்திதேவி அறிவார். எந்நிலையிலும் அங்கரை ஏற்கமாட்டேன் என்றே பிதாமகர் காட்டிக்கொண்டிருந்தார்" என்று துரியோதனன் சொன்னான்.

"அங்கர் என்ன உணர்ந்திருப்பார்? தன் அன்னையின் தன்மதிப்பை குறைக்கலாகாதென்று ஒதுங்கியிருக்கலாம். இளையோருக்காக தன்னை ஒடுக்கிக்கொண்டிருக்கலாம். அன்னை அவராக எழுந்து தன்னைப்பற்றி பிறருக்கு அறிவிக்க வேண்டுமென்றும் அல்லது இளையோரே அறிந்து தன்னிடம் வந்து கோரவேண்டுமென்றும் எண்ணியிருக்கலாம். அவையெல்லாம் உண்மைதான். ஆனால் அறுதியுண்மை அது அல்ல. அவர் எதையும் கொடையெனப் பெற விழையவில்லை. அங்கநாட்டு மணிமுடியை அவர் தாள்பணிந்து நான் அளித்தேன். அவருடன் அக்கணமே ஒன்றாகி நின்றேன். எனக்கு ஒரு கொடையென்றே அவர் அதை பெற்றுக்கொண்டார். ஈகை என இந்த மணிமுடியும் குலக்குறியும் அல்ல பாரதவர்ஷமே அளிக்கப்பட்டாலும் பெற்றுக்கொள்ளமாட்டார்" என்று துரியோதனன் சொன்னான்.

"இதெல்லாம் இங்கே இக்களத்திற்கு வந்தபின் என் உள்ளத்தில் தெளிவது" என துரியோதனன் தொடர்ந்தான். "இங்கே ஒவ்வொரு இரவும் எனக்கு ஓர் ஊழ்கம். என் உள்ளத்தின் ஆழங்கள் அனைத்தும் திறந்துகொள்கின்றன. இங்கு வரும்வரை எதையுமே நான் எண்ணியதில்லை. என் அகம் அறிந்தவற்றைக்கூட மறக்கவே முயன்றேன். இல்லையென்றே ஆக்கிக் கொண்டேன். அங்கர் என் தோள்தோழர் அல்ல, எனக்கு குருதிமூத்தவர். ஆனால் என் தோழர் என்றே எப்போதும் தன்னை காட்டிக்கொண்டிருந்தார். அவர் அவ்வாறு தன்னை காட்டுந்தோறும் நான் அவ்வாறே ஆனேன்."

துச்சாதனன் “ஆனால் இச்சொல்லுறுதியை அளித்ததினூடாக அவர் இப்போரின் அனைத்து நிகர்நிலையையும் அழித்துவிட்டார். பாண்டவர்களை அவர் கொல்லமாட்டாரெனில் இப்போர் எப்போது முடியும்? இச்சொல்லுறுதியை அவர் உங்களைக் கேட்காமல் எப்படி அளிக்க முடியும்?” என்றான். “இளையோனே, எப்போது வேண்டுமானாலும் அங்கர் எழுந்து அவைநின்று இந்த மணிமுடி எனது, இவர் எனது இளையோர், எனது அன்னை இவர் என சொல்லியிருக்கலாமே? இல்லை எனில் பாண்டுவின் பெயர்சொல்லி அனல்தொட்டு மறுக்கட்டும் என்று கேட்டால் யாதவ அரசி என்ன சொல்லியிருக்க முடியும்?”

“உண்மையில் அவர் அவ்வண்ணம் ஒரு சொல் உரைத்திருந்தால் என் தந்தை மறுசொல் இன்றி மணிமுடியையும் இளையோரையும் கொண்டுசென்று அவர் காலடியில் வைப்பதற்கு தயங்கியிருக்கமாட்டார். அரைக்கணம் அவர் தயங்குவாரெனில்கூட என் அன்னை ஒருபோதும் பிறிதொன்றை எண்ணியிருக்கமாட்டார். இந்த மணிமுடியும் நாடும் அவர் கொடையென்கையில் அதிலொரு சிறு பகுதியை எடுத்து தன் அன்னைக்கு அவர் கொடுப்பதில் என்ன பிழை?” என்று துரியோதனன் கேட்டான். “அவர் மீண்டும் தன் அன்னை முன் தன் மணிமுடியையும் உறவையும் அல்லவா துறந்திருக்கிறார்?”

துச்சாதனன் “எந்நிலையிலும் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் இந்நாட்டையும் முடியையும் உங்களுக்கு அளித்தாரெனில்கூட அக்கொடையை காத்து நிற்பது அவருடைய பொறுப்பு. அன்னைக்கு அளித்த சொல்லுறுதியினூடாக அவர் உங்களை கைவிட்டிருக்கிறார்”

என்றான். துரியோதனன் "இது அவருடைய நிலம். இதில் அவர் உகந்து எனக்கு அளிப்பதே என்னுடையது. இவ்வண்ணமேனும் அவர் எனக்கு அளித்தாரென்பது எனக்குப் பெருமை. அன்னையைக் கடந்து என்னை ஏற்றார் என்பது என் பிறவிப்பயன்" என்று துரியோதனன் சொன்னான்.

துச்சாதனன் கசப்புடன் "அவர் நாளை அர்ஜுனனை கொல்வதாக வஞ்சினம் உரைக்கிறார். அது நிகழப்போவதில்லை. மீண்டும் அவரது கொடையை நம்பியே அவர்கள் வருவார்கள். அர்ஜுனனின் உயிரை வேறு எவ்வகையிலேனும் மன்றாடி பெறுவார்கள். அதையும் அவர் கொடுப்பார். தன்னிடம் இரப்பவனிடம் இல்லையென்று சொல்ல அவரால் இயலாது என்று அறிந்திருக்கிறார்கள். அவ்வாயிலினூடாகவே உள்நுழைவார்கள். அவரை அழித்து நம்மை வெல்வார்கள்" என்று சொன்னான்.

துரியோதனன் "நான் ஊழுடன் விளையாடிக்கொண்டிருக்கிறேன். ஊழின் கருநீக்கங்கள் என்ன என்பதை கணக்கிடுவதை கைவிட்டுவிட்டேன். ஊழுடன் ஒப்ப நின்று பொருதுவதற்கான ஆற்றலையும் உளநிலையையும் மட்டுமே திரட்டிக்கொண்டிருக்கிறேன். இன்னும் எத்தனை நாள் இப்போர் தொடருமென்று தெரியவில்லை. வென்றவருக்கு என்ன எஞ்சுமென்றும் இப்போது சொல்லக்கூடவில்லை. வென்றவரும் தோற்றவரும் நிகரென்று தெய்வங்கள் முன் நின்றிருக்கும் நிலையை இப்போதே நாம் வந்து அடைந்துவிட்டோம்" என்றான். "இளையோனே, என் முதல் தம்பி களம்பட்ட அன்றே நான் முற்றிழந்தவனாகிவிட்டேன். எஞ்சியிருப்பது வந்த நிலையை தக்க வைத்துக்கொள்ளும் முனைப்பும், பொருத எழுந்தபின் ஒருபோதும் தணியவில்லை

என்னும் இறுமாப்பும் மட்டுமே. பிறிதொன்றும் என்னிடம் சொல்லத் தேவையில்லை.”

துரியோதனன் உடலை நீட்டி கைவிரித்து அலுப்பொலி எழுப்பி “என் வாழ்வை இன்று இக்களத்தில் அங்கர் கையில் அளிக்கவில்லை. வில்லுடன் அவர் அக்களத்தில் எழுந்த அன்றே அளித்துவிட்டேன். இதுவரை அவர் அளித்த அனைத்தும் அவரது கொடை. இனியும் அவர் அளிப்பது எதுவோ அதுவே என் வாழ்வு” என்றபின் கண்களை மூடிக்கொண்டான். துச்சாதனன் திகைப்புடன் துரியோதனனை நோக்கியபடி அசைவற்று நின்றான்.

இருட்கனி - 15

மூன்றாவது களத்தில் அமர்ந்திருந்த சூதராகிய காமர் வெண்கல்லாக அமர்ந்திருந்த புதனையும் வெண்சங்கு வடிவில் அருளிய திருமாலையும் வணங்கி தன் கையிலிருந்த நந்துனியின் நரம்புகளை சிறு வெண்கலக் கம்பியால் மீட்டி, நூறு வண்டுகள் ஒன்றையொன்று சுழன்று துரத்தும் இசையை எழுப்பி, அதன் மெல்லிய சுதிக்கு தன் நெஞ்சுக்குள் மட்டுமே ஒலித்த முதல் நாதத்தை பொருத்தி, மெல்ல மூக்குக்கு எடுத்து உதடுகளில் அதிரச்செய்து, குரலென்று வெளிக்கிளப்பி முதற்சொல்லை எடுத்தார். “ஓம்!” எனும் அவ்வொலி நந்துனியின் இசையின் மீது ஏறிக்கொண்டது. தழுவிப்பறக்கும் இரு வண்டுகள் என சுழன்று வானில் நின்றது. பின்னர் நந்துனியின் இசையை தான் வாங்கி பெருகி ஒற்றை சொல்லென்று நிலைகொண்டது. “ஓம்! ஓம்! ஓம்!” என்றார் காமர். “ஆம், இது நிகழ்ந்தது! இவ்வாறே நிகழ்ந்தது! ஆம்,

இவ்வாறே எப்போதும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது! ஆம், இது ஒன்றே மெய்மை! ஆம், இது என்றும் நிலை கொள்க! ஆம்! ஆம்! ஆம்!" என்று பாடி உரையெடுத்து கதை சொல்லத்தொடங்கினார்.

சூதரே, தோழரே, கேளுங்கள். நெடுங்காலத்துக்கு முன் இது நிகழ்ந்தது. கதிரோன் ஒளியை தன் கரிய உடலெனக் கொண்ட பேரழகனாகிய அங்கநாட்டரசன் கர்ணன் முன்னர் ஒருமுறை தன் படைத்துணைவருடனும் ஏவலருடனும் அங்கநாட்டுக்குத் தெற்கே விந்திய மலைகளுக்கு அப்பால் விரிந்திருந்த தண்டகக் காட்டில் வேட்டைக்குச் சென்றான். தண்டகத்தின் மையக்காட்டில் கோடையில் வேட்டையாடுவது எந்த வில்லவனுக்கும் விழைவு எழுப்பும் வெல்விளிக்கு உரியதாக இருந்தது. ஏனெனில் ஆண்டுக்கு அரைமழை மட்டுமே பெய்யும் அந்நிலத்தில் பெருவிலங்குகள் அரிது. முள்சூடிய குற்றிலைச் சிறுமரங்கள் ஆங்காங்கே எழுந்து வான்துழாவி காற்றுக்கு வளைந்து நிற்கும். அவ்வப்போது நிலம் வெளுத்து வானம் குடைகவிந்து கண்கூசும் ஒளியெனத் தெரியும். அங்கே இரவில் எழும் விண்மீன்கள் வலைச்சரடில் இறங்கிவரும் சிலந்திகள்போல மிக அருகில் வந்து நின்றிருக்கும். வெட்டவெளியில் துயில்பவர்களின் முகத்தருகே வந்து மின்மினி என எழுந்தமைந்து விளையாடும்.

அவ்வெறும் நிலவெளியில் பறவைகள் ஆயிரம் கண்கொண்டவை. கண்சொடுக்கும் நேரத்தில் எழுந்து பறக்கவும், எண்ணங்களை முன்னறியவும், அம்புக்கு முந்தி உடல் திருப்பி தப்பவும் பயின்றவை. சிறுவிலங்குகளோ எப்பொழுதும் நடுங்கும் உடலும், நொடி ஒலிக்கே மெய்ப்பு கொள்ளும் உள்எச்சரிக்கையும், எக்கணமும் மறையும்படி

நிலமெங்கும் வளைகளும் கொண்டவை. அங்கு சென்று வேட்டையாடி வெறும்வானில் வெறும்நிலத்தில் வாழ்ந்து நாற்பத்தொரு நாட்கள் தங்கி மீள்வதென்பது ஒரு நோன்பென்று கொள்ளப்பட்டது. அதை தண்டக நோன்பென்று நூல்கள் உரைத்தன. வில்பயின்றதுமே இளவரசர்களை அங்கே அனுப்புவார்கள். அந்நோன்புக்குப் பின் அவர்கள் தங்கள் வில்லம்புமீதும் கைகள்மீதும் நம்பிக்கை கொள்வார்கள். பெருந்துணையாவதும், வழிகாட்டுவதும் அதுமட்டுமே என அறிவார்கள். அங்கு சென்று மீளும் அரசர்கள் அரண்மனையில் அறுசுவை உண்டு மென்பஞ்சுச் சேக்கையில் துயில்கையிலும் அதில் மெய்மறக்காமலிருப்பார்கள்.

அந்நோன்பின் ஏழு நெறிகளில் முதன்மையானது, ஒரு விலங்கை ஒருமுறைக்குமேல் அம்பெய்யலாகாது என்பது. பிறிதொன்று, நின்றுவிட்ட விலங்கை எந்நிலையிலும் கொல்லலாகாது. மூன்றாவது, ஒருவேளை உணவை மறுவேளைக்கு எஞ்ச வைக்கலாகாது. நான்காவது, ஒருவர் உண்ண பிறிதொருவர் பசித்திருக்கலாகாது. ஐந்தாவது, நூல்கள் ஒப்பாத ஊனை உண்ணலாகாது. ஆறாவது நெறி, முட்டையிடும் பறவையையும் குஞ்சுகாக்கும் பறவையையும் சினைவிலங்கையும் பாலூட்டும் அன்னைவிலங்கையும் எந்நிலையிலும் கொல்லலாகாது. ஏழாவதாக, ஒரு விலங்கு ஒளிந்து அல்லது மரங்களில் அமர்ந்துவிட்ட பின்னர் அதை நோக்கி அம்பெய்யலாகாது என வகுக்கப்பட்டது. தண்டக நோன்பை எவ்வண்ணமேனும் முறிக்க நேர்ந்தால் மீண்டும் தண்டக நோன்புக்குச் செல்வதற்கு முன்னர் குடித்தெய்வக் கோயிலில் பதினான்கு நாட்கள் உணவும் நீரும் நீத்து பிழைநோன்பு இயற்றி தூய்மை செய்துகொள்ளவேண்டும்.

தண்டக நோன்பை ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்த்துவது கர்ணனின் வழக்கம். தண்டகக் காட்டின் உள்நிலங்களில் வணிகப்பெருவழிகள் இல்லை. மலைவேடரும் தொலைவணிகரும் உருவாக்கிய ஒற்றைக் காலடித் தடங்களாக செம்மண் பரப்பில் விரிந்து செல்லும் பாதைகளினூடாக அவன் தன் ஏழு படைத்துணைவருடன் சென்றான். மலைச்சரிவில் நின்று செம்மண் நிலத்தில் சிவந்த கோடுகளாக பரவியிருந்த பாதைகளைப் பார்த்த கர்ணன் புன்னகைத்து தன்னுடன் வந்துகொண்டிருந்த பாங்கனிடம் "நீ சூதனாயிற்றே, இந்நிலத்திற்கு ஓர் உவமை கூறு' என்றான். சூதன் "அந்தியில் நீராடும்பொருட்டு அணியாடை கழற்றிய மங்கையின் செவ்வுடலில் பதிந்த அணித்தடங்கள்" என்றான். கர்ணன் உரக்க நகைத்து "இவ்வண்ணம் எதையோ சொல்வாய் என்று எண்ணினேன். மழைக்காலத்து சேற்றில் மண்புழு ஊர்ந்த தடங்கள் என்று எனக்குத் தோன்றியது" என்றான்.

"தாங்கள் பிறிதொன்றை சொல்லமாட்டீர்கள் என்று நானும் அறிவேன்" என்றான் பாங்கன். "பெண்களின் உடல் குறித்து ஒரு வரியும் எழாது என்பதில் எனக்கு ஐயமே இல்லை" என்று படைத்துணைவன் சொன்னான். கர்ணன் வெடித்து நகைக்க அவன் சிரிப்பில் பிறரும் இணைந்துகொண்டனர். அப்பாதையினூடாக பயணம் செய்து அவ்விரவின் தங்குமிடத்தை அடைந்தனர். கோடையில் நீர்த்தடங்கள் அனைத்தும் வற்றி, ஊற்றுகள் ஓய்ந்து, ஆறுகள் வெறும் மலைப்பாதைகள்போல் மாற, பாறைகளில் நீரோடிய உப்பின் தடங்கள் பொரிந்திருக்க நிலம் சலிப்புற்றுச் சூழ்ந்திருந்தது. அதில் புழுதிமணம் கொண்ட காற்று மூச்சென ஓடிக்கொண்டிருந்தது. அடிவட்டத்து இலைகள் அனைத்தையும் உதிர்த்து, அடுத்த வட்டத்து இலைகளை வாடவிட்டுத் தழைத்து,

உச்சித்தளிரில் மட்டுமே உயிரை வைத்துக்கொண்டு மரங்கள் விண்ணோக்கி காத்திருந்தன. உதிர்ந்த சருகுகள் காற்றில் அள்ளப்பட்டு பாறைச்சரிவுகளின் அடியில் குவிக்கப்பட்டிருக்க அவற்றினூடாக ஓணான்களும் அரணைகளும் பாம்புகளும் சலசலத்து ஓடும் ஒலி எழுந்துகொண்டிருதது.

முள் புதர்கள் மலைக்காற்றில் பல்லாயிரம் நாகங்களென சீறிக்கொண்டிருக்க அந்தக் காடு நான் மானுடருக்குரியவனல்ல என்று கூறிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு காட்சியிலும் வெளியேறுக எனும் எச்சரிக்கை இருந்தது. மலைப்பள்ளங்கள் அணுகாதே என விம்மலோசையில் முழங்கின. பாறை வெடிப்புகள் பசி கொண்டு வாய் திறந்திருந்தன. எங்கோ மலைநரி ஒன்றின் ஊளை துயரின் ஒலிவடிவென எழுந்தமைந்தது. உச்சிமலைப் பாறைகள் எக்கணமும் அதிர்ந்து நிலம் நோக்கி எழும் விழைவு கொண்டவைபோல் அச்சுறுத்தின. அவர்கள் சாய்ந்த பாறை ஒன்றின் அடியில் படிந்த மென்பூழியில் தங்கினார்கள். அன்று முழுக்க செய்த பயணத்தில் அவர்களின் கையிருப்பு நீர் தீர்ந்துவிட்டிருந்தது. கால்கள் வெடித்து புழுதிபடிந்து கிழங்குகள் போலிருந்தன. ஒவ்வொருவராக அந்தக் குளிர்ந்த பூழியில் விழுந்து அலுப்பொலி எழுப்பினர்.

கர்ணன் தன் வில்லுடன் எழுந்து பாறைகளிலிருந்து பாறைகளுக்குத் தாவி, இடுக்கில் முளைத்த புல்லை தின்றுகொண்டிருந்த முயலை கண்டான். காலடி கேட்டு அவனிடமிருந்து தப்பி ஓடிய முயல் பாறை முனையிலிருந்து தன் வளை நோக்கித்தாவும் கணத்தில் காற்றிலேயே அம்பை எய்து அதை கொன்றான். அன்று அந்திக்குள் அவன் மூன்று குழிமுயல்களை கொன்றான். அவ்வூனை எண்மரும் பகிர்ந்து

உண்டு பசியாறிவிட்டு பாறைகளின் மேல் விண்மீன்கள் செறிந்த வானை நோக்கியபடி படுத்துக்கொண்டனர். பசி அடங்காததால் அவர்களுக்கு துயில் எழவில்லை. கர்ணன் "இதுவே நம் முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை போலும். இன்றும் முனிவர்கள் வாழும் முறையும் இதுவே. சிற்றுணவு, நெடுந்தேடல், வான் கீழ் தனிமை" என்றான். பாங்கன் நகைத்து "ஆம், பெண்டிரும் உடனில்லை" என்றான். கர்ணன் "தொல்மூதாதையருக்கு பெண்டிர் இல்லை எனில் நாமென்ன நதிகளுக்கும் மரங்களுக்குமா பிறந்தோம்?" என்றான்.

அத்தனிமையை வெல்வதற்கு விழைந்தவர்கள்போல் அவர்கள் நகைத்துக்கொண்டனர். விண்ணிலிருந்து சிறிய செந்தீற்றல்களாக இரு விண்மீன்கள் உதிர்வதை கர்ணன் பார்த்தான். "பேரரசர்கள் எங்கோ இறந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான். "ஆம், எழுவர். நான் ஏழு விண்தீற்றல்களை கண்டேன்" என்றான் பாங்கன். "அவர்கள் பிறப்பதை அறிவிக்கும் விண்மீன் ஏதும் உண்டா, சூதரே?" என்றான் கர்ணன். "அவர்கள் பிறக்கும்போது புதிய விண்மீன் ஒன்று எழுகிறது. ஆனால் வானின் பல்லாயிரம் கோடி விண்மீன் பெருக்கில் நம்மால் அதை அடையாளம் காண முடியாது. அரசே, பேரரசர்கள் பேரரசர்களாகவே பிறக்கிறார்கள். ஆனால் தங்கள் பெருஞ்செயல்களினூடாகவே அவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். உதிர்கையிலேயே உலகெங்கும் அறியப்படுகிறார்கள்" என்றான் சூதன்.

"ஒவ்வொரு நாளும் எரிவிண்மீன்கள் உதிர்ந்துகொண்டிருக்கின்றன. அத்தனை பேரரசர்களா இவ்வுலகில் இருக்கிறார்கள்?" என்று கர்ணன் கேட்டான். "ஆழிசூழ் இவ்வுலகு அலகிலா விரிவுள்ளது. இங்கு

ஆயிரத்தெட்டு நாடுகள் உள்ளன. அதிலொன்றே பாரதவர்ஷம் என்கிறார்கள். ஒவ்வொன்றிலும் பேரரசர்கள் திகழ்கிறார்கள். பேரரசர்கள் மானுடரில் மட்டுமல்ல, யானைகளில் கரடிகளில் சிம்மங்களில் புலிகளில் உண்டு. முயல்களில் எறும்புகளில் இங்குள்ள அனைத்துச் சிற்றுயிர்களிலும் பேரரசர்கள் உண்டு. தெய்வங்கள் அவர்களை மண்ணுக்கு அனுப்புவது பிறரை தலைமை தாங்கி வழி நடத்துவதற்காக. மண்ணின் உயிர்களை ஆற்றல் வழிநடத்தவேண்டும் என்று தெய்வங்கள் விரும்புகின்றன. அறங்களால் அவ்வாற்றல் உருவாகவேண்டுமென்று ஆணையிடுகின்றன. அறங்களை அக்குலம் நீடுவாழ்ந்து திரட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று அமைக்கின்றன. ஒவ்வொரு உயிர்க்குலமும் பாலாழியெனக் கொந்தளித்து தன்னை தான் கடைந்து தனது பேரரசர்களை உருவாக்கிக்கொள்கிறது. அவர்களை மணிமுடியென தலையிலணிந்திருக்கிறது. குலக்கொடியென ஏந்தியிருக்கிறது. அரசே, நெற்றியில் அறிவின் விழியென அவர்களையே அக்குலம் கொண்டிருக்கிறது. கொடியோர் தோன்றும் குலம் நஞ்சை திரட்டிக்கொண்டது" என்றான் சூதன். கர்ணன் "நஞ்சு எழுந்த பின்னர் ஒவ்வொரு முறையும் தவறாமல் அழுது எழுகிறது. கம்சன் எழாவிடில் யாதவர் குலத்தில் கிருஷ்ணனும் எழுந்திருக்க மாட்டான்" என்றான்.

பதினெட்டு நாட்கள் அக்காட்டில் அவர்கள் தங்கினார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் உணவு குறைந்து வந்தது. அலைந்து திரிந்த தொலைவு மிகுந்தும் வந்தது. உடலுருகி, கன்ன எலும்புகள் புடைத்து, விலாக்கூடு வெளித்தெரிந்து, வயிறொட்டி இடைஎலும்பு அமர்கையில் பாறையில் உரச, கைகால்கள் சுள்ளிகள் என்றாக அவர்கள் ஒட்டி உருக்குலைந்தனர். "இம்முறை உணவு மிகக் குறைவாக

இருக்கிறது. இந்நிலத்தில் நாம் எண்ணாத எதுவோ நிகழ்ந்துள்ளது" என்று அணுக்கன் சொன்னான். "தண்டகம் மாபெரும் காடு. அவ்வாறு அவ்வப்போது நிகழ்வதுண்டு" என்று கர்ணன் சொன்னான். "எங்கேனும் ஓரிடத்தில் மண்ணில் ஈரம் எஞ்சியிருக்கும். அதன்மேல் சற்று பசுமை பரவியிருக்கும். பறவைகள் அச்செய்தியை விண்பாதைகளினூடாக கீழே வாழும் உயிர்களுக்கு காட்டுகின்றன. யானைகள் முதலில் செல்கின்றன. குரங்குகள் பிறகு. மான்கூட்டங்களும் செந்நாய்களும் தொடர்கின்றன. ஒருகட்டத்தில் சிற்றுயிர்கள்கூட அப்பாதையை தேர்கின்றன. சில பகுதிகளில் முற்றிலும் உயிரசைவே இல்லாமல் ஆவதும் உண்டு."

"தண்டகத்தில் உணவின்றி பசித்து இறந்த நோன்பாளர்கள் பலர் உண்டு. ஆகவேதான் தண்டக நோன்புக்கு கிளம்புவதற்கு முன் மைந்தரிடம் இறுதிச் சொற்களை கூறிவிட்டு, நீத்தாருக்குரிய இறுதிக் கடன்களையும் முடித்து எழவேண்டுமென்று சொல்லப்படுகின்றது" என்று படைத்தலைவன் சொன்னான். "ஆம், நாம் இங்கு சிக்கிக்கொண்டிருக்கிறோம்" என்று படைத்துணைவன் சொன்னான். "திரும்பிச் சென்றுவிடுவதே உகந்தது, அரசே" என்றான் காவலன். கர்ணன் சீற்றத்துடன் "தண்டக நோன்பை பன்னிருமுறை ஆற்றியிருக்கிறேன். இன்றுவரை நோன்பு முறித்ததில்லை. ஒரு நோன்பை முறித்தவன் அனைத்து நோன்புகளையும் முறித்தவனாவான். ஏனெனில் நோன்புகள் எப்போது வேண்டுமானாலும் முறிப்பதற்குரியவை என்ற எண்ணம் அவனில் விழுந்துவிடுகிறது. நோன்பை முறிக்கலாம் எனும் எண்ணமே நோன்பை முறித்த பிழைக்கு மூன்றிலொன்று என்பார்கள்" என்றான்.

படைத்தலைவன் “நான் அவ்வாறு கூறவில்லை. நாம் இங்கே எங்கேனும் பசுமை எஞ்சியுள்ளதா என்று மலைமேல் ஏறி பார்க்கலாமே?” என்றான். “அருகே எங்கேனும் பசுமை இருந்திருந்தால் வானில் பறவைகள் இருந்திருக்கும். நெடுந்தொலைவில் உள்ளது அது. அங்கு சென்று சேர இன்னும் குறைந்தது இருபது நாட்களாகும்” என்று கர்ணன் சொன்னான். பின்னர் “நாம் திரும்பிச்சென்று சாலையை அடைவதற்கும் இருபது நாட்களுக்குமேல் ஆகும். எவ்வண்ணமாயினும் நாம் இந்நிலத்தில் நோன்பு முடிவதுவரை இருந்தாகவேண்டும். தண்டகக் காட்டில் இறப்பது இங்கு மறைந்த முனிவர்களுடன் சென்றமைவது. நோன்பில் இறப்பவர்களுக்குரிய விண்ணுலகம் பொன்னொளியால் ஆனது. அங்கு முனிவர்களே தெய்வங்கள் வடிவில் அருள்புரிகிறார்கள் என்று தொல்நூல்கள் கூறுகின்றன” என்றான்.

மேலும் மேலும் உணவு குறைந்துகொண்டே சென்றது. ஏழு நாட்கள் அவர்கள் ஒரு துண்டு உணவைக்கூட அருந்தவில்லை. உடன்வந்த தோழர்கள் நடை மெலிந்து மூச்சிளைக்க ஆங்காங்கே அமர்ந்தனர். “இது நமது இறுதிப் படுக்கை அமையும் இடம் போலும். ஒவ்வொருவரும் இவ்விடமா இதுதானா என்று ஒவ்வொரு தருணத்திலும் உசாவிக்கொண்டிருக்கிறார்கள். இல்லை இல்லை என மீண்டு எழுகிறார்கள். இதோ இறுதியாக என்னுடையதை நான் கண்டடைந்துவிட்டேன்” என்று படைத்தலைவன் சொன்னான். கர்ணன் “நோன்புகளை நாம் கொள்வதே நமது இறுதி எல்லை என்ன என்று அறிந்துகொள்வதற்காகவே. நமது எல்லையை நாம் ஒவ்வொரு முறையும் புதிதென உணர்கிறோம். ஒவ்வொரு முறையும் அதை நீட்டி வைக்கிறோம். நான் எளிதில் தோற்பதாக இல்லை. நீங்கள் இங்கு அமர்ந்திருங்கள்,

நான் சென்று ஏதேனும் உணவு எஞ்சியுள்ளதா இக்காட்டில் என்று பார்க்கிறேன்" என்று சொல்லி கிளம்பினான்.

பசிக் களைப்பால் அவன் விழிகள் ஒளியிழந்திருந்தன. அவன் உள்ளம் தன்னை வெளியுலகிலிருந்து உள்ளிழுத்து ஆழத்தில் சுருட்டிக்கொண்டது. பசியும் களைப்பும் மீதூறுகையில் உள்ளம் தன்னை தான் சுற்றி இறுக்கிக்கொள்ளும் பாம்பென ஆகிறது. வளையிருளுக்குள் விழிமூடிக்கொள்கிறது. ஏனென்றால் மேலும் புதிய புலன்செய்திகளைப் பெற்று அடுக்கி வியனுலகு சமைக்க அதனால் இயல்வதில்லை. எனவே ஏற்கெனவே தான் சமைத்துச் சேர்த்துவைத்திருக்கும் உலகைக்கொண்டு அது ஒரு புறத்தை அமைத்துக்கொள்கிறது. அதில் வண்ணங்களையும் வடிவங்களையும் பெருக்கி அவ்வுயிரை அதில் வாழச் செய்கிறது. எங்கேனும் காட்டில் விழுந்து உலர்ந்த வாயும் வெறித்த விழிகளுமாக குருதி வற்றி இறந்துகொண்டிருக்கும் உயிரை கூர்ந்து பாருங்கள். அது தன்னுள் ஒளிமிக்க பசுமை நிறைந்த பிறிதொரு உலகில் திளைத்துக்கொண்டிருப்பதை அறிவீர்கள். அதன் இமைகள் கனவில் அசைந்துகொண்டிருக்கும். அதன் முகத்தில் துயரின்மையே தெரியும்.

கர்ணன் கங்கை பெருகியோடும் சம்பாபுரியின் காடுகளில் அலைந்துகொண்டிருந்தான். இனிய மான்களை வேட்டையாடி தீயில் வாட்டி கொழுப்பு வாயோரம் வழிய, முழங்கைகளில் சொட்ட உண்டான். ஒளியே நீரென ஓடும் பெருக்கில் பாய்ந்து நீந்தித் திளைத்தான். தோழர்களுடன் மலையிலிருந்து புரவியில் பாய்ந்திறங்கினான். பாறைகளிலிருந்து பாறைகளை நோக்கி மூங்கில் கழைகளில் தாவி விளையாடினான். ஒருவரோடொருவர் அம்பு தொடுக்கும் போட்டி வைத்து

அவற்றில் வென்று நகைத்தான். பின்னர் அக்கனவுலகிலிருந்து விழித்துக்கொண்டு தான் எரிவெயிலில் நிழலில்லா முள்மரத்தின் கீழ் நா வறண்டு தொண்டை அடைக்க அமர்ந்திருப்பதை கண்டான். தன்னை திரட்டி எழுப்பிக்கொண்டு மீண்டும் காட்டுக்குள் சென்றான்.

அப்போது ஒரு முனகலோசை அவன் செவிகளில் விழுந்தது. அவன் அதை இடம் தேர்ந்து, வழி கூர்ந்து அணுகிச் சென்றபோது சிறிய குகையொன்றுக்குள் ஒரு விழியிலாத மூதாட்டி கரிந்த கருகிய விறகுக்குவை என மான்தோல் கந்தலுடுத்த உடலை மடித்து ஒடுக்கி ஒரு மூலையில் அமர்ந்து விம்மி அழுதுகொண்டிருப்பதை பார்த்தான். அக்குகைக்கு வெளியே கீழிருந்து மேலேறி வரும் பாறைகளில் ஓர் உடல் கிடந்தது. அவன் கூர்ந்து நோக்கியபோது கொப்பரையில் நீருடன் மேலேறி வருகையில் விழுந்து உயிர் துறந்த இளமுனிவனின் உடல் அது என்று தெரிந்தது. அவன் இறந்து மூன்று நாட்களுக்கு மேலாகியிருந்தது. உடல் வீங்கி பின்னர் வெடித்து தோல் மட்கத் தொடங்கியிருந்தது. சிரிப்பவன்போல் உதடு பின்னிழுத்து பற்கள் உந்தி வெளிவந்திருந்தன. அங்கிருந்து ஓநாய்களும் சென்றுவிட்டிருந்தமையால் அவன் எஞ்சியிருந்தான். ஆனால் அவனை மண்ணுக்குக் கீழிருந்து எழுந்த புழுக்கள் உண்ணத்தொடங்கியிருந்தன.

சற்று நேரம் அந்த முனிவனை நோக்கி நின்றிருந்த பின்னரே அங்கு நிகழ்ந்ததென்ன என்று கர்ணன் புரிந்துகொண்டான். குகைக்குள் நுழைந்து அவ்வன்னையை அணுகிச் சென்றான். காலடியோசை கேட்டதும் அன்னை இரு கைகளையும் நீட்டி “மைந்தா! மைந்தா! நீதானா!” என்றாள். முழந்தாளிட்டு தவழ்ந்து

அவளருகே சென்று "ஆம்" என அவன் முனகல்போல் ஓசையெழுப்பினான். "நீருக்குச் சென்றாயே! நெடுநேரமாயிற்றே! ஓரிரு நாட்கள் ஆகியிருக்கும் அல்லவா?" என்று அன்னை சொன்னாள். நடுங்கும் கைகளை நீட்டி "நீர் கொடு! என் உயிர் வறண்டு கொண்டிருக்கிறது! எங்கே நீர்?" என தவித்தாள். "இதோ" என நாவெழாது சொல்லி குகையிலிருந்து வெளிவந்து அப்பகுதியை விழிசூழ்ந்து பார்த்தான். பறவையோசையோ சிற்றுயிர்களின் மீட்டலோ இன்றி அந்தக் காடு அமைந்திருந்தது. உருவாக்கப்பட்ட கணம் முதல் பல்லாயிரம் ஆண்டுகள் ஒருமுறை ஒரு விரல்கூட தொடாத இசைக்கலம்போல.

"தண்ணீர்! மைந்தா, தண்ணீர் கொண்டு வா!" என்று அன்னை கூவிக்கொண்டிருந்தாள். கர்ணன் கீழிறங்கிச் சென்று அச்சடலத்தின் கையிலிருந்த சிறிய கொப்பரையை எடுத்தான். பின்னர் அதை மேலே கொண்டு வந்து அன்னைக்கு சற்று அப்பால் நின்று தன் அம்பை எடுத்து கைகளில் குருதிக்குழாயொன்றை வெட்டினான். அக்குருதியை அதில் விட்டு அன்னையின் அருகே கொண்டு சென்றான். "அன்னையே, நீர் கிடைக்கவில்லை. சிற்றுயிரொன்றை பிடித்தேன். அதன் இளங்குருதியை கொண்டுவந்திருக்கிறேன். இதை உண்டு விடாய் அமைக!" என்றான். விடாயில் செவிகள் அடைத்து விழிகள் உள்மடிந்து அணையும் சுடர்என இருந்த அன்னை "கொடு! கொடு!" என்று கைநீட்டினாள். கர்ணன் கொப்பரையின் செந்நீரை அவளுக்கு ஊட்டினான். அவள் பெருவிடாய் உடலின் அனைத்துத் தசைகளிலிருந்தும் பொங்கி எழுந்து நாவுக்கு வர கரைச்சேற்றில் மூச்சுக்குத் துள்ளும் மீனென உதடுகளும் நாவும் துடிக்க அதை அள்ளி உண்டாள். நாவால் நக்கி ஒரு சொட்டின்றி உண்டு பெருமூச்சுவிட்டு

பசியாறினாள். "ஆம், நான் இறந்துகொண்டிருகிறேன். ஆனால் பசித்து ஏங்கி இறக்கும் உயிர்கள் செல்லும் நரகத்துக்கு செல்லமாட்டேன். நாநீருடன் சாகும் நல்லூழ் எனக்குண்டு. என் மைந்தன் இருக்கிறான்" என்று அவள் சொன்னாள். "ஆம்" என்று கர்ணன் கூறினான்.

அன்னையுடன் அந்த குகையில் எட்டு நாட்கள் கர்ணன் இருந்தான். அவள் உடல் ஒவ்வொரு நாளும் நோய்கொண்டு நலிந்து இறப்பை அணுகிக்கொண்டிருந்தது. தன் குருதியையே அவளுக்கு ஒவ்வொரு நாளும் நா ஈரம் என அளித்து விடாயும் பசியும் தீர்த்துக்கொண்டிருந்தான் கர்ணன். அவன் உடலில் இருந்து உயிராற்றல் முற்றாக வடிந்தது. அக்குகையிலிருந்து எழுந்து அகல இயலாதவன் ஆனான். கைகளாலும் கால்களாலும் உடலை உந்தி தவழ்ந்துசென்று தன் புதுக் குருதிக்குழாயொன்றை வெட்டி உடலில் எஞ்சிய சோரியையும் அவளுக்கு ஊட்டினான். அன்னை தன் உடலில் எஞ்சிய இறுதி மூச்சை விடும்போது "மைந்தா, இதுவரை என்னுடன் இக்குகையிலேயே இருந்தாய். நினைவறிந்த நாள் முதல் உன்னை தொட்டுத் தடவி தழுவி அறிந்திருக்கிறேன். இந்நாட்களில் ஒருமுறைகூட உன்னை நான் தொட இயலவில்லை. உன் சொல்லும் தெளிவுடனில்லை. வருக, உன்னை தழுவிக்கொள்கிறேன். உனக்கு முலையூட்டிய என் நெஞ்சில் உன் முகம் பதிந்தால் இறக்கும் இக்கணம் எனக்கு தெய்வங்கள் அளித்த நற்கொடை என்றாகும்" என்றாள்.

கர்ணன் "இல்லை அன்னையே, நான் மிக மெலிந்திருக்கிறேன். என் உடலை தொட்டால் தாங்கள் துயருறுவீர்கள் என்பதனால்தான் அருகணையவில்லை" என்றான். "உன் குரலும் பசியால் உருமாறி நடுக்குண்டிருக்கிறது. அது

பிறிதெவருடையதோ என்று ஒலிக்கிறது. நீ மிக மெலிந்திருக்கிறாய் என்பதை நானும் அறிவேன். ஆயினும் இது என் இறுதிக்கணம். இனி எனக்கு பொழுதொன்றில்லை. வருக!" என்று அவள் கை நீட்டினாள். "நான் இக்குருதியை உண்டு ஆற்றலை திரட்டிக்கொண்டதே இரு கைகள் தூக்கி உன்னை நெஞ்சோடணைக்கும் விசை இவ்வுடலில் வேண்டுமென்பதற்காகத்தான்." கர்ணன் நடுங்கும் உடலுடன் அருகே சென்று அவளருகே தலை தாழ்த்தி "அன்னையே" என்றான். அவள் அதிர்ந்து கொண்டிருந்த தன் கைகளை அவன் தலைமேல் வைத்தாள். அக்கணமே அவை துள்ளித் துடிக்கத் தொடங்கின. உதடுகள் அதிர்ந்து விம்மல் போலொரு ஓசை எழுந்தது. அனல்பட்ட நாகங்கள்போல அக்கைகள் அவன் உடல்மேல் தவித்தலைந்தன.

ஆனால் கர்ணன் இரு அன்னைப்பசுக்கள் இருபுறமும் நின்று தன்னை நக்குவதுபோல் உணர்ந்தான். அவன் இரு கைகளையும் பற்றிக்கொண்டு "நீ யார்?" என்று அவள் கேட்டாள். "நான் உங்கள் மைந்தன்!" என்று அவன் சொன்னான். "ஆம்" என்று அவள் சொன்னாள். அச்சொல்லே இறுதியாக அமைய அவள் உயிர் துறந்தாள். விண்ணில் எழுந்து அங்கிருந்து கீழே நோக்கி "பொழிக மாமழை!" என்று ஆணையிட்டாள். கீழ் வானில் "ஆம்! ஆம்! ஆம்!" என்று முகில்பேரொலி எழுந்தது. மின்னல்கள் அதிர்ந்து வானம் சுடர் கொண்டது. மரங்கள் மின்னி அணைந்தன. வான் கிழிந்து நீரென மாறி வந்து மண்ணை அறைந்தது. பல்லாயிரக்கணக்கான அருவிகள் மலைப்பாறைகளிலிருந்து ஒளி கொண்டெழுந்து ஆழங்களை நோக்கி சரிந்தன. ஓடைகள் உயிர் கொண்டு நெளிந்தன. காட்டாறுகள் ஓசை கொண்டன.

கர்ணனை அவன் அணுக்கர்கள் தேடிவந்து மீட்டபோது அவன் மழையில் நனைந்து வானமுதை உண்டு உயிர் சேர்த்து நினைவிழந்து படுத்திருந்தான். அவனை அவர்கள் தூக்கிக்கொண்டு சென்றனர். செல்லும் வழியிலேயே உணவருந்தி அவன் உயிர்கொண்டு எழுந்தான். அங்கநாட்டுக்கு சென்றுசேர்கையில் அவன் உடல் உள்ளே விளக்கேற்றி வைத்த படிகக்கட்டிபோல் ஒளிகொண்டிருந்தது. அவன் அரண்மனையில் ஏறுகையில் பெண்டிர் அனைத்துச் சாளரங்களிலும் கூடி அவன் உடல் கொண்ட அவ்வொளியையே திகைப்புடன் பார்த்தனர். அவன் தன் அறையில் அமர்ந்திருக்கையில் அகல்சுடர்களுக்கு நிகராக அவன் உடலும் ஒளி கொண்டுள்ளதை அமைச்சர்கள் கண்டு மலைத்தனர். அந்தி மயங்குகையில் விளக்கேற்றும் பொழுதிற்கு முன்னர் அவன் உடல் கொண்ட ஒளியாலேயே அவ்வறையின் தூண்வளைவுகளும் உலோகக் குமிழ்களும் மிளிர்வதைக் கண்டு ஏவலர்கள் அரண்டனர்.

நிமித்திகர் கூடி அவன் உடற்குறியும் நாட்குறியும் கணித்துநோக்கி இக்கதையை கண்டு கூறினர். "தெய்வங்களால் ஆயிரத்தெட்டு முறை வருடப்பட்ட உடல் கொண்டவன் இவ்வரசன். இப்புவியில் பிறிதொருவன் இனி இவ்வழகை கொள்ளப்போவவதில்லை. இதுவரை கொண்டதுமில்லை" என்றனர். காமர் சொன்னார் "பேரழகனை வணங்குக! ஊனில் அமைவதல்ல அழகு. குருதியால் அடையப்படுவதுமல்ல பேரழகு. அருளே அழகென்று எழுகிறதென்று பாடுக! ஆம், அழகுருவனைப் பாடுக!" அவரைச் சூழ்ந்தமர்ந்திருந்த சூதர்கள் தங்கள் இசைக்கலங்களை மீட்டியபடி "ஆம்! ஆம்! ஆம்!" என இணைந்தேற்றுப் பாடினர்.

இருட்கனி - 16

புலரியில் கர்ணன் எழுந்து வெளியே வந்தபோது கண்முன் பேருருவென நின்ற இருண்ட மரம் ஒன்றைக்கண்டு வேறெங்கோ வந்துவிட்டதாக எண்ணி மலைத்தான். பின்னர் அண்ணாந்து நோக்கியபோது அது ஐந்து தலைகள்கொண்ட நாகம்போல் தெரிந்தது. பத்து மணிக்கண்களின் ஒளி விண்மீன்கள் போல வானில் நின்றது. சீறி அலையும் நாவுகளை காணமுடிந்தது. கீழே புடைத்தவேர்கள் என சுழன்று எழுந்திருந்தது நாகத்தின் சுருளுடல். எழுந்த உடலில் செதில்கள் இருளுக்குள் மெல்லொளி கொண்டிருந்தன. அவன் இலைத்தழைப்பில் காற்றோசை என அதன் சீறலை கேட்டான். அது கனவென்று உணர்ந்ததும் அவன் பதற்றம் தணிந்தது. பெருமூச்சுவிட்டு அண்ணாந்து நோக்கியபடி நின்றான்.

நாகம் மெல்ல படம்தாழ்த்தி கீழிறங்கியது. "என்னை நீ அறிவாய்" என்றது. "ஆம்" என்றான் கர்ணன். "நாம் முன்னரே கண்டிருக்கிறோம். நைமிஷாரண்யத்தில் இளைய யாதவரின் குடிலில்." கர்ணன் "அது என் கனவு அல்லவா?" என்றான். நாகம் "நான் கனவுகளின் தலைவன்" என்றது. "என் பெயர் கார்க்கோடகன். நான் அறியாத எவரும் இப்புவியில் இல்லை. ஏனென்றால் நான் ஆழங்களை ஆள்பவன்" என்றது. கர்ணன் "வணங்குகிறேன், அரவரசே" என்றான். "உன்னை தொடர்பவன் என் இளவலாகிய மணிகர்ணன். உன் அம்பில் இன்னமும் வாழ்பவன் என் மைந்தனுக்கு நிகரான தட்சன்" என கார்க்கோடகன் சொன்னது. "நீ இன்று போர்த்தலைமை கொள்ளவிருக்கிறாய். நான் உன்னை வாழ்த்திச் செல்லலாம்

என்று வந்தேன்." கர்ணன் "தங்கள் அருள் என்னை மகிழ்விக்கிறது" என்றான்.

"நீ என்றும் இருண்ட ஆழங்களுக்கு உகந்தவன்" என்றது கார்க்கோடகன். "நான் இன்றைய போரில் உன்னுடன் இருக்கவிழைகிறேன். உன் தேரில் என் ஐந்துதலைகளுடன் ஐந்து புரவிகளாக அமைகிறேன். உன் அம்புகளில் ஒன்றாகிறேன். நீ விழைந்தால் விண்ணை இருளால் நிறைப்பேன். மண்ணை அனலால் மூடுவேன். இடியோசையும் மின்னலோசையும் எழுப்புவேன். நச்சுமழைபொழியச் செய்வேன்." கர்ணன் புன்னகைத்து "அவ்வாறு நான் உதவிகோருவதும் பெறுவதும் என் ஆசிரியருக்கு இழிவு. அவர் அளித்த அரிய அம்புகள் என்னிடமுள்ளன. பிரம்மாஸ்திரமும் பிரம்மசீர்ஷாஸ்திரமும் பிரம்மாண்டாஸ்திரமும் வருணாஸ்திரமும் வாசவிசக்தி அஸ்திரமும் எவரிடமும் இல்லாதவை. அனைத்திற்கும் மேலாக என் ஆசிரியரின் சினமே அம்பென்றான பார்கவாஸ்திரம் மண்ணில் எவராலும் தடுக்கமுடியாதது. அவற்றால் நான் மூவுலகையும் வெல்லமுடியும்" என்றான்.

"ஆம், நீ அரிய அம்புகளால் ஆற்றல்கொண்டவன்" என்று கார்க்கோடகன் சொன்னது. "நான் உனக்கு ஏதேனும் நற்கொடை அளித்தாகவேண்டும். அது ஒரு கடன் என்னிடம் எஞ்சியிருக்கிறது." கர்ணன் "நமக்குள் ஏதேனும் உரையாடல் நிகழ்ந்ததா என்ன? என்னிடமிருந்து எதையேனும் எடுத்துக்கொண்டீர்கள் என நான் அறிந்ததே இல்லை" என்றான். "அது நெடுநாட்களுக்கு முன்பு. அதை நான் உனக்கு காட்டுகிறேன்" என்றது கார்க்கோடகன். "பொழுது எழுந்துவிட்டது. நான் போர்க்கோலம் கொள்ளவேண்டும்" என்று

கர்ணன் சொன்னான். “நாங்கள் வேறுகாலத்தில் வாழ்பவர்கள். எங்கள் காலம் உங்கள் காலத்தை இடைமறிப்பதே இல்லை. இக்கணமே நீ இங்கு மீண்டுவந்துவிடமுடியும்.” நாகம் தழைந்துவந்து “வருக!” என்றது.

அவனை தன் வாலால் தொட்டு கணப்பொழுதில் சுருட்டி அள்ளிக்கொண்டது. பின்னர் நீண்டு இருளில் எழுந்தது. கீழே குருக்ஷேத்ரம் துயிலெழுந்துகொண்டிருப்பதை அவன் கண்டான். எறும்புப்புற்று கலைந்ததுபோல் அது தெரிந்தது. வானில் முகில் மூடியிருந்தது. அங்கிருந்த நீராவிக்காற்று மூச்சடைக்கச் செய்தது. நாகம் கீழிறங்கியபோது அது ஒளிஎழாக் காடு எனக் கண்டான். அது அவனை கீழிறக்கிவிட்டு அப்பால் விழுந்து உடற்சுருள் நடுவிலிருந்து படம் தூக்கி மணிவிழிகளால் நோக்கியது. ஒற்றைத்தலைகொண்டதாக மாறியது. புரவியின் நீள்முகம். ஆனால் விழியசைவில் அது மானுட முகமாகவும் ஆகியது. “இந்த இடத்தை நீ அறிந்திருக்கவேண்டும். இது சதசிருங்கத்திலிருந்து அஸ்தினபுரிக்குச் செல்லும் வழி” என்று கார்க்கோடகன் சொன்னது.

“இவ்வழியே நெடுங்காலம் முன்னர் அஸ்தினபுரியின் யாதவ அரசி தன் ஐந்து மைந்தர்களை அழைத்துக்கொண்டு சென்றாள். கணவனை சதசிருங்கத்தில் எரியூட்டிவிட்டு, அவர்கள் விட்டுவந்த அரசு அங்கே உள்ளதா என்னும் ஐயம் நெஞ்சை அறுக்க, நம்பிக்கையிலிருந்து மேலும் எதிர்பார்ப்புகளுக்கும் அங்கிருந்து மிகைக்கனவுகளுக்கும் சென்று உச்சியில் சலித்து, சரிவில் உருண்டு தன்னிரக்கத்தின் ஆழத்தில் விழுந்து மேலும் மேலுமென துயருற்று, துயர் கசந்து, அக்கசப்பை வஞ்சமென மாற்றிக்கொண்டு, முகமிலா வஞ்சம் அலைக்கழிந்து எட்டி இலக்குகளை பற்றிக்கொள்ள அவர்கள்மேல் சீற்றத்தை

திரட்டிக்கொண்டு, எரிந்து எரிந்து உச்சமடைந்து, மேலும் எரிய ஏதுமில்லாமல் அணையத்தொடங்கி குளிர்ந்தடங்கி வெறுமையைச் சென்றடைந்து அவ்வெறுமையில் திளைத்து அதன் அடியில் இருந்து ஒரு சிறுநம்பிக்கையை மீண்டும் கண்டெடுத்து பிறந்து இறந்து அலைக்கழிந்துகொண்டிருந்தாள். அங்கநாட்டரசே, முற்றாத் துயரே உச்சத்துயர், அது வளர்ந்துகொண்டிருக்கிறது."

"அந்தச் சுனையை நோக்குக!" என்று கார்க்கோடகன் சொன்னது. "அதை நான் அறிவேன்" என்று கர்ணன் சொன்னான். "அதற்குள் நான் மூழ்கிக்கிடந்திருக்கிறேன். என் அன்னையை முதல்முறையாக அதனுள்ளிருந்துதான் பார்த்தேன். கையில் வாளுடன் அவள் என்னை நோக்கி வந்தாள். என்னை வெட்டினாள். நான் துண்டுகளாக அந்தச் சுனையில் சிதைந்து பரவினேன். என் விரல்களும் நாக்கும் மீன்களாயின. செவிகள் சிப்பிகளாயின. விழிகள் இரு குமிழிகளாக மிதந்தலைந்தன." கார்க்கோடகன் நகைத்து "ஆம், அந்தச் சுனைதான்" என்றது. கர்ணன் முன்னகர்ந்து அதை நோக்கினான். அது வெண்ணிறப் பாலால் நிறைந்திருந்தது. மெல்லிய அலையுடன் பளிங்குப்பரப்பென ஒளிர்ந்த அதன்மேல் ஒற்றைச் செந்தாமரை மலர்ந்திருந்தது. கர்ணன் அதை நோக்கிக்கொண்டு நின்றான். "நீ அருந்திய பால் இது" என்று கார்க்கோடகன் சொன்னது. "நானா?" என்று கர்ணன் கேட்டான்.

"அதை கொண்டுவந்தவள் இவள்" என்று கார்க்கோடகன் சுட்டிக்காட்ட கர்ணன் திரும்பி நோக்கினான். சிவந்த நாய் ஒன்று செவிகளை முன்கோட்டியபடி மெல்ல காலடி எடுத்துவைத்து அணுகியது. கண்கள் அனல்துளிகள் என ஒளிவிட்டன. வால் நீண்டு தழைந்திருந்தது. "எட்டு

அன்னையரில் சுவையின் தலைவியான பைரவி. நினைவுகளை ஆள்பவள். விழிநீரின் முலைப்பாலின் குருதியின் சுவையில் நிலைகொள்பவள். உன் குருதியன்னையின் முலைப்பாலை உனக்கு கொண்டுவந்தவள். பல்லாண்டுகளுக்கு முன்பு, நீ பைதலென இருந்தபோது. அன்றுமுதல் இக்கணம் வரை ஒவ்வொருநாளும் இங்கு அவள் முலைப்பாலை கொண்டுவந்தபடியே இருக்கிறாள். அவள்வழியாக வந்து இங்கே பெருகி நிறைந்துள்ளது இது" என்றது கார்க்கோடகன்.

கர்ணன் வியப்புடன் சுனையை நோக்கி "இவ்வளவு பாலுமா?" என்றான். "அறுபத்தைந்தாண்டுகாலம்" என்று கார்க்கோடகன் சொன்னது. கர்ணன் "ஆம்" என நீள்மூச்செறிந்தான். "அவள் உண்ட உணவின் ஒருபகுதி குருதியாகி பாலென்றாகி எழுந்தபடியே இருந்தது. ஒவ்வொருநாளும் அது பெருகியது. வெட்டுண்ட கள்ளிச்செடி என அவள் உடலெங்குமிருந்து பால் வழிந்தது..." என்றது கார்க்கோடகன். "இதில் நீராடுக... நீ இழந்த அனைத்தையும் மீளப்பெறுவாய்." கர்ணன் மெல்ல அருகணைந்து அந்தச் சுனையில் நிறைந்திருந்த வெண்பாலை அள்ளி முகர்ந்தான். "நான் நன்கறிந்த மணம்... இந்த மணத்தை ஒவ்வொருநாளும் துயிலில் மெல்ல அமைகையில் உணர்ந்திருக்கிறேன். ஒவ்வொரு விழிப்பிலும் முதலில் இதையே பெற்றிருக்கிறேன்." அவன் அதை தன் வாய்க்குள் விட்டுக்கொண்டான். "இன்சுவை... நான் நன்கறிந்த சுவை."

கார்க்கோடகன் "அத்தனை பெண்டிரில் இருந்தும் உன்னை அகற்றிய சுவை" என்றது. கர்ணன் திரும்பி நோக்கினான். "செல்க!" என்றது நாகம். கர்ணன் அந்தப்பாலை அள்ளி அள்ளி அருந்தினான். சுவையில் அவன் உடல் மெய்ப்பு கொண்டது.

உடலெங்கும் குருதியாக அந்தப்பால் ஓடுவது போலிருந்தது. குளிர்ந்த சுவை. இனிப்பு அல்ல என்றும் எண்ணும்போது இனிப்பென்றும் தோன்றுவது பாலின் சுவை. "இறங்குக!" என்றது நாகம். அவன் தன் காலை அவ்வெண்பரப்பை நோக்கி கொண்டுசென்றபின் விலக்கிக்கொண்டான். "உன் அழுக்குகள் ஐந்தும் அதிலிருந்து எழுந்தவைதான். ஆகவே தயங்கவேண்டாம்" என்று கார்க்கோடகன் சொன்னது. கர்ணன் தன் ஆடைகளை களைந்தபின் வெற்றுடலுடன் அதில் இறங்கினான். குளிர்ந்து உடல் மெய்ப்புகொண்டது. மெல்ல கைநீட்டி நீந்தி அச்சுனையின் நடுவே சென்றான். அதில் ஒரு சுழிப்பு இருந்தது. அது அவனை சுழற்றிச் சுழற்றிச் சென்றது.

மூழ்கி ஆழத்திற்குச் சென்றபோது அங்கே விந்தையான நிழல்கள் ஆடுவதை அவன் கண்டான். எழுந்து மூச்சுவிட்டு முகத்தில் விழுந்த மயிர்க்கற்றைகளை அள்ளி மேலே விட்டுக்கொண்டான். அவன் உடலும் உள்ளமும் எடையிழந்தன. அவன் சிரித்துக்கூச்சலிட்டு களியாட்டமிட்டான். ஒரு தருணத்தில் தன் சிரிப்பொலியை தானே கேட்டபோதுதான் தான் இளைஞனாக ஆகிவிட்டதை உணர்ந்தான். மூழ்கி எழுந்தோறும் அவன் இளமையடைந்துகொண்டே சென்றான். சிறுவனாக மதலையாக குழவியாக ஆனான். கால்களைத் தூக்கி கட்டைவிரலை வாயால் சப்பியபடி ஒரு குமிழி என அந்த வெண்நீர்ப் பரப்பில் சுழன்றுகொண்டிருந்தான். பின்னர் மெல்ல மெல்ல துயில்கொண்டான். இனிய துயில். எச்சங்களே இல்லாத துயில்.

அதற்குள் அவன் ஒரு கனவுகண்டான். எட்டு அன்னையர் அவனை நோக்கி எழுந்து வந்தனர். சுடரும் விழிகளும் நீட்டிய நாக்கும் நான்கு கைகளிலும் பாசமும் அங்குசமும் அருளும்

அடைக்கலமுமாக எழுந்த ருத்ரசர்ச்சிகை, மழுவும் மானும் சூடி அஞ்சல் அருளல் காட்டிய ருத்ரசண்டி, எழுந்துநின்றாடிய நடேஸ்வரி, அமர்ந்து அளித்த மகாலட்சுமி, பேயுருக்கொண்ட சித்தசாமுண்டிகை, ஊழ்கத்தில் அமர்ந்த சித்தயோகேஸ்வரி, மின்படையும் அமுதகலமும் ஊழ்கமணிமாலையும் அருட்கையும் கொண்ட ரூபவித்யை. அவர்களின் முகங்கள் ஒன்றாக இருந்தன. அவ்விழிகள் அவன் நன்கறிந்தவை.

விரிந்த கைகளில் வாள், வில், உடுக்கை, கண்டாமணி, கட்டாரி, கதை, உழலைத்தடி, வஜ்ராயுதம், திரிசூலம், பாசம், அங்குசம் ஏந்தி அருள் காட்டி எழுந்தவள் பைரவி. அவனை அவள் அள்ளி எடுத்தாள். முத்தமிட்டு மடியிலமர்த்தி முலையூட்டினாள். அவளிடமிருந்து ருத்ரசர்ச்சிகையும் ருத்ரசண்டியும் நடேஸ்வரியும் மகாலட்சுமியும் சித்தசாமுண்டிகையும் சித்தயோகேஸ்வரியும் ரூபவித்யையும் அவனை பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் மாறி மாறி முலையூட்ட அவன் கால்கட்டைவிரலை நெளித்து சிறுகைவிரல்களை விரித்து சுவையில் திளைத்து இருகால்களையும் உதைத்துக்கொண்டு அமுதருந்தினான்.

அவன் தன்னை உணர்ந்தபோது அவன் முன் கார்க்கோடகன் நின்றிருந்தது. "ஒருகணம்" என அது கூறியது. "ஆம் ஒருகணம்" என்று கர்ணன் சொன்னான். "செல்க, கதிரவன் மைந்தனே! இப்புவியில் இனி நீ எண்ணி ஒழிந்தவை ஏங்கி கைவிட்டவை என ஏதுமில்லை" என்றது கார்க்கோடகன். "ஆம், நான் எவ்வகையிலும் இனி இங்கு பற்றுகொண்டிருக்கவில்லை" என்று கர்ணன் சொன்னான். "உனக்கு நானும் இனி கடனாளி அல்ல" என்ற கார்க்கோடகன் "நிறைவுறுக!" என வாழ்த்தி

மெல்ல தேய்ந்து இருளுக்குள் மறைந்தது. கர்ணன் அதை நோக்கியபடி நின்றான்.

புரவி வந்து நிற்க அதிலிருந்து இறங்கிய துச்சாதனன் அவனை நோக்கி வந்தான். கர்ணன் அவனை நோக்கி "வருக, இளையோனே!" என்றான். கர்ணனின் முகத்தின் ஒளி துச்சாதனனை குழப்பியது. அவன் தன்னிலையில் இல்லையோ என அஞ்சியவன்போல நடைதயங்கினான். கர்ணன் "அஞ்சவேண்டாம். நான் சீருள்ளம் கொண்டிருக்கிறேன். அகிபீனாவோ மதுவோ மிஞ்சிப்போகவில்லை" என்றான். துச்சாதனன் அருகே வந்து "நான் அவ்வாறு எண்ணவில்லை மூத்தவரே" என்றான். "சொல், போருக்கு எழுந்துவிட்டாயா?" என்றான் கர்ணன். 'கவசங்கள் அணிந்திருப்பாய் என எண்ணினேன்."

துச்சாதனன் "ஆம், அணியவேண்டும். தங்களை சந்திக்கவேண்டும் என்று தோன்றியது" என்றான். "சொல்" என கர்ணன் அவன் கைகளைப் பற்றி தோளை வளைத்துக்கொண்டான். "போர்க்களம் வந்து பதினாறு நாட்களாகியும் உன் உடல் எடைகுறையவில்லை. தோள் சிறுக்கவுமில்லை" என்றான். துச்சாதனன் புன்னகைத்து "நான் சொல்லவந்ததை முதலில் சொல்லிவிடுகிறேன். நீங்கள் நேற்று கூறியவற்றை மூத்தவரிடம் சொன்னேன். இப்போர் அவருடையதல்ல, உங்களுடையது என்றார். வெல்வதும் கொள்வதும் உங்களுக்காகவே. அதற்கப்பால் அவர் ஒன்றும் சொல்வதற்கில்லை."

கர்ணன் "ஆம்" என்றான். துச்சாதனன் "நான் சற்றுமுன் சென்று சல்யரை கண்டேன். அவரிடம் அரசர் சொன்னதை சொன்னேன்.

எவருக்கு என்னென்ன சொல் அளிக்கப்பட்டுள்ளது என்று அறியாமல் அவர் உங்களுக்கு தேர்தெளிக்க இயலாது என்றார்" என்றான். கர்ணன் "என் விழைவு அது. அரசாணையையும் அவர் ஏற்கமாட்டார் என்றால் நான் ஏதும் சொல்வதற்கில்லை" என்றான். துச்சாதனன் "மூத்தவரே, நான் புலரியில் ஒரு கனவுகண்டேன்" என்று ஒலிமாறிய குரலில் சொன்னான். சொல் என்பதுபோல கர்ணன் பார்த்தான். "நான் அவளை கண்டேன்" என்றான். கர்ணன் வெறுமனே நோக்க "அவள் அன்றிருந்த அதே வடிவில் அதே விழிகளுடன் என் முன் வந்தாள். முன்னரும் பலமுறை அவ்வண்ணம் அவள் என் கனவில் வந்ததுண்டு. நான் அப்போதெல்லாம் அஞ்சி நடுங்கி விலகி ஓடுவேன். நான் செல்லுமிடமெல்லாம் அவள் இருப்பாள். வியர்வை வழிய அலறியபடி விழித்து எழுந்து அமர்வேன். நான் அலறி எழுந்தாலே மூத்தவருக்கு ஏன் என்று தெரியும். எனவே எதுவுமே அவர் கேட்பதில்லை."

"ஆனால் இம்முறை நான் அஞ்சாமல் அவள் விழிகளை நோக்கினேன். அவள் ஒன்றும் சொல்லவில்லை. விழிகள் மட்டும் எரிந்துகொண்டிருந்தன. நான் அவளிடம் ஒன்றும் சொல்லவில்லை. இருவரும் விழியோடு விழிநோக்கி நின்றிருந்தோம். பின்னர் நான் விழித்துக்கொண்டேன். வெளியே மரத்தடியில் படுத்திருந்தேன். இருண்டவானில் மின்னல்கள் அதிர்ந்துகொண்டிருந்தன. நான் விழிக்குள் ஒரு மின்னலைக் கண்டுதான் விழித்துக்கொண்டிருக்கிறேன் என உணர்ந்தேன். அவளிடம் நான் சொல்ல விழைந்தவை பல உண்டு. என் விழிப்புகளில் சொல்சொல்லென நான் சேர்த்து வைத்தவை. என்றேனும் என் சொற்களை அவள் செவிகொள்வாள் என நம்பினேன். அவற்றையெல்லாம் அக்கனவில் நான் ஏன் சொல்லவில்லை என வியந்தேன். உளம் ஏங்கி விண்ணில்

அதிரும் சிறுமின்னலகளை நோக்கியபடி படுத்திருந்தேன். இடியோசை உறுமியபோது எங்கோ களிறு ஒன்று ஓசையிட்டது.”

“துயருடன் சலித்துக்கொண்டு மீண்டும் படுத்தபோது ஓர் எண்ணம் வந்தது. மீண்டும் துயின்றால் அக்கனவை மறுபடியும் அடையமுடியுமா? உள்ளிருந்து அக்கனவை மீட்டெடுத்தால் அச்சொற்களை அவளிடம் சொல்லவேண்டும். ஆம் என சொல்லிக்கொண்டு விழிகளை மூடி படுத்து துயில்கொண்டேன். மூத்தவரே, மெய்யாகவே நான் மீண்டும் அக்கனவை சென்றடைந்தேன். அதே நோக்குடன் நான் விட்டுச்சென்ற அதே இடத்தில் அவள் நின்றிருந்தாள். அவளருகே நெருங்கினால் என் உடல் அனல்கொள்ளுமெனத் தோன்றியது. நான் அவளிடம் சிலவற்றைச் சொல்லவே வந்தேன் என எண்ணினேன். ஆனால் சொல்லவேண்டி சேர்த்துவைத்த சொற்களை முழுமையாக மறந்துவிட்டிருந்தேன். என் நினைவை துழாவத்துழாவ உள்ளம் மேலும் ஒழிந்துகொண்டே வந்தது. திகைத்து நின்றபோது அவள் நீள்குழல் பறக்க என்னைநோக்கி வந்தாள்.

“நான் கைகூப்பி அன்னையே என்றேன். அவள் முன் கால்மடித்து அமர்ந்தேன். நான் மகிஷன், உன் இடக்கால் என் மேல் அமைக! என்னுள் உருகும் இந்த நெஞ்சக்குமிழை செந்தாமரை என உன் கால்கள் சூடுக! என்னுள் அலைகொள்வன அனைத்தும் அமைதிகொள்ள அருள்க! என்றேன். அவள் என்ன சொன்னாள் என நான் அறியவில்லை. ஆனால் விழித்துக்கொண்டபோது என் உள்ளம் ஆழ்ந்த அமைதியை அடைந்திருந்தது. நான் எண்ணிய அனைத்தையும் சொல்லிவிட்டேன் என எண்ணிக்கொண்டேன். ஆனால் நான்

எண்ணிய ஒன்றையும் சொல்லவில்லை. உண்மையில் நான் எண்ணியவற்றுக்கு மாறாகவே சொல்லியிருந்தேன். ஆனால் என்னால் மேலும் படுத்திருக்க இயலவில்லை. எழுந்து நின்று வானை நோக்கினேன். மின்னல்களை நோக்கி விழிவிரித்து நின்றேன். விடிவெள்ளி இன்று எழாது என அறிந்திருந்தேன். நேரக்கணியர் நாழிகை எண்ணி அறிவித்ததும் உங்களைத் தேடி வந்தேன்."

கர்ணன் "நற்கனவுதான்" என்றான். "ஆம், காலையை அழகாக ஆக்கிவிட்டது. இருள் இத்தனை பேரழகு கொண்டது என நான் அறிந்ததே இல்லை. கண்கள் மும்மடங்கு காட்சித்திறன் கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறது. செவிகள் ஒரு மலரிதழ் உதிர்வதையும் கேட்குமளவுக்கு நுண்மை கொண்டுவிட்டன. ஒவ்வொரு விலங்கின் மணத்தையும் தனியாக என்னால் உணரமுடிந்தது. மூத்தவரே, என் நினைவறிந்த நாள் முதல் இன்றுவரை வாழ்தல் என்பது இத்தனை இனியது என உணர்ந்ததே இல்லை. மகிழ்ச்சியாக இருக்கும்போது புலன்கள் எவ்வளவு கூர்மை கொண்டுவிடுகின்றன! அவ்வாறென்றால் உள்ளிருக்கும் ஓயாத்துயரால்தான் நாம் நம் புலன்களை களிம்புமூடச் செய்திருக்கிறோமா?" என்றான் துச்சாதனன்.

"நீ இவ்வாறெல்லாம் ஆழ்ந்து பேசலாகாது, இளையோனே. உன் உடல்நிலைக்கு இது நன்றல்ல" என்று கர்ணன் வேடிக்கையாக சொன்னான். "நான் வந்தது வேறொன்றையும் சொல்வதற்காகத்தான். மூத்தவரே, நாம் இனிமேல் இந்த மண்ணில்வைத்து பார்த்துக்கொள்ளவோ பேசவோ முடியாது. விண்ணில் இங்குள்ள எவற்றுக்கும் பொருளிருக்காது. ஆகவே இதை சொல்லவந்தேன். நான் உங்களிடம் பொறுத்தருளும்படி கோரவேண்டும்" என்றான் துச்சாதனன். "எதற்கு? நேற்று நீ

பேசியவற்றுக்கா? அவை இயல்பான உணர்வுகள் அல்லவா?" என்றான் கர்ணன். "ஆம். ஆனால் இன்று உணர்கிறேன். ஒரு போரின் வெற்றிதோல்விகளுக்காக நாம் செயல்படக்கூடாது. நம் ஆழம் ஆணையிடும் திசையிலேயே செல்லவேண்டும். நீங்கள் அத்திசைநோக்கி செல்கிறீர்கள். இன்று இக்காலையில் நானும் அதை தெளிவாகக் காண்கிறேன்."

கர்ணன் 'நீ பெரியசொற்களை பேசி முடித்தாயெனில் சொல், நாம் சேர்ந்து உணவருந்தலாம்" என்றான். துச்சாதனன் "ஆம், நாம் சேர்ந்து உணவருந்தவேண்டும். அதை எண்ணி வரவில்லை. ஆனால் அது மிகமிக இன்றியமையாததாகத் தோன்றுகிறது. இவ்வுறவின் உச்சம். இப்புவியில் நான் அடைந்த அனைத்து உறவுகளுக்கும் உச்சம்..." கர்ணன் "என்ன சொல்கிறாய் மூடா!" என அவன் தலையை தட்டினான். "நான் உங்களிடம் பொறுத்தருளக்கோரியது பாஞ்சால அரசியின் பொருட்டு." கர்ணன் உடலில் மெல்லிய நடுக்கு எழ "என்ன சொல்கிறாய்?" என்றான். "நான் அவளுக்கு இழைத்த கீழ்மையின் பொருட்டு. நீங்கள் அதற்காக என்மேல் பிழையொறுப்பு செய்யவேண்டும். என்மேல் உங்கள் அகத்தில் எஞ்சியிருக்கும் சிறுகசப்பை முற்றாக அகற்றிவிடவேண்டும்."

"அவ்வாறெல்லாம் இல்லை. அறிவிலி. இதையெல்லாம் எங்கிருந்து நீ எண்ணிக்கொள்கிறாய்? உனக்குள் எண்ணம் என ஒன்று ஓடுவதாகவே நான் உணர்ந்ததில்லையே?" என்றான் கர்ணன். துச்சாதனன் "நான் நன்கு அறிவேன். இதைக்கூட அறியாவிட்டால் நான் என்ன மானுடன்? மூத்தவரே, உங்களுக்குள் என் மேல் வெறுப்பு உள்ளது. அச்செயலை நீங்கள் பொறுத்துக்கொண்டதே இல்லை. உங்களால் இயலாது" என்றான் துச்சாதனன் "ஏன், நானும் அச்செயலில்

உடனிருந்தேன்" என்றான் கர்ணன். "ஆம், ஆனால் அது மற்றொன்று. நான் செய்தது அதுவல்ல." துச்சாதனன் "எண்ணி எண்ணி எண்ணங்களின் அடியில் தள்ளிவிட்டது இது. மூத்தவரே, ஐவரல்ல அறுவர். அறுவரில் முதல்வர் நீங்கள்."

கர்ணன் கடும்சினத்துடன் "வாயை மூடு!" என்றான். ஆனால் துச்சாதனன் அதை கேட்கவில்லை. "நான் அவளிடம் மட்டுமல்ல, அறுவரிடமும் தலைமண்ணில் வைத்து பிழைமறக்கும்படி கோரவேண்டியவன்." கர்ணன் அவன் மேல் தன் கையை வைத்து "வேண்டாம்..." என்றான். "அவர்களிடம் நான் பிழையொறுப்பு கோரவேண்டியதில்லை. அதற்கு நிகராக அவர் என் நெஞ்சுபிளந்து குலைபறித்தெடுப்பார். குருதி அள்ளிக் குடிப்பார். அக்குருதியால் அவள் தன் குழல்நீவி முடிப்பாள். அதுவே போதுமானது. நீங்கள் எஞ்சியிருக்கிறீர்கள். ஆகவேதான்..." கர்ணன் உரக்க "போதும்!" என்றான். "நான்..." என துச்சாதனன் சொல்ல "போதும்!" என கர்ணன் கூவினான். "ஆம்" என்றான் துச்சாதனன். சிலகணங்கள் இருவரும் உறைந்து நின்றனர். மெல்ல உலைந்து உயிர்ப்புகொண்டு "வா என்னுடன்" என்றான் கர்ணன்.

இருவரும் மெல்ல நடந்தனர். கர்ணன் இருமுறை பேசப்போவதுபோல தொண்டையை கனைத்தான். ஆனால் துச்சாதனன் வேறொரு உலகில் என நாற்புறமும் விழியோட்டி நடந்து வந்தான். "மூத்தவரே, எனக்கு விந்தையான ஓர் எண்ணம் எழுகிறது. அதை சொன்னால் நீங்கள் என்னை ஏளனம் செய்வீர்கள்..." கர்ணன் நகைத்து "செய்வேன், சொல்" என்றான். "செய்யுங்கள்" என துச்சாதனன் நகைத்தான். "நான் இப்போது எண்ணினேன். இவ்வுலகில் வண்ணங்கள் இருப்பது எத்தனை பெரிய இறைக்கொடை என்று. வண்ணங்களில்

ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு. செந்நிறத்தை நோக்குகையில் அதுவே பேரழகு என தோன்றுகிறது. நீலம் இன்னொரு பேரழகு என உடனே தெரிகிறது. பசுமை பொன்றா உவகையை அளிக்கிறது. பொன்னிறம் கொந்தளிக்கச் செய்கிறது. எத்தனை பேரளி கொண்டு வண்ணங்களை அள்ளி மானுடருக்கு வழங்கியிருக்கின்றன தெய்வங்கள்!"

கர்ணன் "நகையாடவேண்டிய எண்ணம்தான்" என்றான். "மூத்தவரே, சற்று நின்று நோக்குக! இந்தக் கொடி. இதன் அழகிய பொன்னிறம். நாம் பொன்னிறத்தை நின்று நோக்கியது எப்போது? இளமைந்தனாக நோக்கியிருக்கலாம் இல்லையா? எந்த வண்ணத்தையாவது அது அழகிய வண்ணம் என்பதற்காக நோக்கியிருக்கிறோமா? பொன்னிறம் பொன்னென்று ஆகி வரவேண்டும். செவ்வண்ணம் மலர் என முன்னால் நின்றிருக்கவேண்டும். மூத்தவரே, இவ்வுலகின் வண்ணங்களை நோக்கி நோக்கி தெவிட்டுமா? இவற்றில் விழியாடி எவரேனும் நிறைந்து உயிர்விடலாகுமா? வண்ணங்களினூடாக தன்னை இங்கே நிகழ்த்துவது ஒன்றுண்டு. வண்ணங்களாக அது தன்னை கொண்டாடிக்கொள்கிறது. விழவென்று, பேருவகையென்று மட்டுமே வெளிப்பட இயல்வது அது. சற்று உளமெழுந்தால் அதை தொடமுடியும். கைநீட்டினால் தொட்டுவிடமுடியும். இதோ உங்களைப்போல் அருகே நின்றிருக்கிறது."

"இன்னும் கதிரொளியே எழவில்லை. நீ நோக்கும் வண்ணங்கள் உன் விழிகளுக்குள் உள்ளன" என்றான் கர்ணன். ஏவலன் அவர்களுக்கு முகம்கழுவுவதற்கான தாலங்களை கொண்டுவந்தான். கர்ணன் முகம் கழுவிக்கொண்டான். "ஆம், அதைத்தான் நான் இப்போது எண்ணினேன். விடியலொளி

எழுகையில் இக்களம் வண்ணங்களின் பெருங்கொந்தளிப்பாக மாறிவிட்டிருக்கும். இன்றுவரை இதை இப்படி நான் பார்த்ததே இல்லை. வெற்றிதோல்விகளின் வெளியாக மட்டுமே அறிந்திருக்கிறேன். மூத்தவரே, இங்கே நான் எதையுமே பார்த்ததில்லை. இவ்வுலகை நான் அறிந்ததே இல்லை. இன்றுகாலைதான் விழிகளுடன் செவிகளுடன் நாவுடன் பிறந்திருக்கிறேன். இப்போதுதான் என் உள்ளம் முகிழ்த்துக்கொண்டிருக்கிறது."

"வா, உணவருந்துவோம்" என்று கர்ணன் அவன் தோளை அறைந்தான். "இன்றிருக்கும் உளநிலையில் உனக்கு உணவு அருஞ்சுவைகொண்டதாக அமையக்கூடும்." துச்சாதனன் "மெய்!" என்றான். ஏவலனிடம் "இனிப்பு உள்ளதா?" என்றான். "தேனிலூறிய கிழங்குகள் உள்ளன" என்றான் ஏவலன். "கொண்டுவா... கலத்துடன் கொண்டுவா. நான் திகட்டத்திகட்ட உண்ணவேண்டும். எப்போது இனிப்பு திகட்டுமென தெரிந்துகொள்ளவேண்டும்" என்றான். "உனக்கு ஊன் திகட்டி நான் கண்டதில்லை. தேனும் திகட்ட வாய்ப்பில்லை" என்றான் கர்ணன்.

துச்சாதனன் உரக்க நகைத்தான். நகைப்பை அவனால் நிறுத்தவே முடியவில்லை. திகைப்புடன் திரும்பி நோக்கிய ஏவலனை நோக்கி கைசுட்டி "அவன் அஞ்சிவிட்டான்... அஞ்சி திரும்பி நோக்குகிறான்" என்றபின் மீண்டும் நகைத்தான். "போதும்" என்றான் கர்ணன். "நான் அரிதாகவே இவ்வண்ணம் நகைத்திருக்கிறேன் மூத்தவரே" என்றான் துச்சாதனன். மீண்டும் உரக்க நகைத்து "அவைகளிலும் அறைகளிலும் நகைப்புதான் எத்தனை கட்டுப்பாடுகள் கொண்டிருக்கிறது" என்றான். "ஏன் நகைப்பை அஞ்சுகிறது அவை?" என்றான். அவன் விழிகளில்

நீர்கசிய அதை விரல்களால் அழுத்தித் துடைத்தபடி மீண்டும் விம்மிச்சிரித்தான்.

இருட்கனி - 17

பாண்டவப் படைகளினூடாக அர்ஜுனன் புரவியில் மென்நடையில் சென்றான். இருபுறமும் பந்தங்கள் எரிந்த வெளிச்சப்பகுதிகளில் கூடி அமர்ந்து ஊனுணவுடன் கள்ளருந்திக்கொண்டிருந்த வீரர்கள் பேசிக்கொண்டிருந்த சொற்கள் துண்டுதுண்டாக செவிகளில் விழுந்தன. ஒரு சொல்லை பொருள்கொண்டுவிட்டால் அந்த உரையாடல் தேய்ந்து மறைவதுவரை செவியில் விழுந்தது. சிதைந்த சொற்களை உள்ளமே நிரப்பிக்கொண்டது. "கதிரவன் மைந்தர் என்கிறார். பரசுராமரின் வில்லேந்தியவர். அறிக, இக்களத்தில் இன்றுவரை அவர் வெல்லப்படவில்லை!" என்றார் ஒருவர். "அவ்வண்ணம் வெல்லப்படாதவர்களே பீஷ்மரும் துரோணரும்" என்றார் இன்னொருவர். "அவர்கள் வீழ்ந்ததே இவர் புகழ்சூடத்தான் என்று தோன்றுகிறது" என்றார் அப்பால் ஒருவர். "யாதவர் ஓட்ட வில்லேந்தி பார்த்தர் அமர்ந்திருந்தால் அவர்களை வெல்ல மூன்று தெய்வங்களாலும் இயலாது" என்று ஒருவர் இருளில் சொல்ல திரள் அமைதியடைந்தது. அச்சொல்லின் ஆறுதலில் அவர்கள் அமைந்தனர். இருளுக்குள் ஓசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. "ஆனால்..." என ஒருவர் தொடங்கினார்.

அர்ஜுனன் யுதிஷ்டிரனின் படைசூழ் அவைக்குச் சென்றபோது அங்கு கொந்தளிப்பான குரல்கள் வெளியே கேட்டுக்கொண்டிருந்தன. வாயிலில் நின்றிருந்த சுருதகீர்த்தி

தலைவணங்கி "அவைதொடங்கி சற்று பொழுதாகிறது, தந்தையே... தங்களை கேட்டார்கள்" என்றான். "இளைய யாதவர் உள்ளே இருக்கிறாரா?" என்று அர்ஜுனன் கேட்டான். "ஆம்" என்று சுருதகீர்த்தி சொன்னான். அர்ஜுனன் உள்ளே சென்று யுதிஷ்டிரனுக்கு தலைவணங்கி ஓரமாக ஒரு பீடத்தில் சென்று அமர்ந்தான். அமர்கையில் இளைய யாதவருக்கு அருகே செல்லவேண்டுமென்ற எண்ணம் எழவில்லையெனினும் என்றுமுள வழக்கப்படி அவன் உடல் அவருக்கு இடப்பக்கம் இருக்கும் இடத்தையே நாடியது. அவன் வந்தமர்ந்ததை திரும்பிப்பார்த்து புன்னகைத்த பின் அவைநிகழ்வை செவிகொள்ளத் தொடங்கினார் இளைய யாதவர்.

அர்ஜுனன் உடலை எளிதாக்கி கால்களை நீட்டி கைகளை மார்பில் கட்டிக்கொண்டான். அவை வெப்பமாக இருந்தது. அங்கிருந்தோர் உடல்களிலிருந்து எழுந்த வெம்மை. அவன் திரும்பி நோக்க அவையின் சாளரங்கள் எல்லாம் திறந்தே இருந்தன. வெளியே காற்றே இல்லை என அவன் நினைவுகூர்ந்தான். வரும்வழியில் அத்தனை கொடிகளும் தழைந்து கிடந்தன. படைவீரர்கள் தலைப்பாகை துணிகளைக்கொண்டும் வெவ்வேறு பொருட்களைக்கொண்டும் விசிறிக்கொண்டிருந்த அசைவு தரையெங்கும் பறவைகள் இறங்கிவிட்டதுபோல தோன்றச்செய்தது. அவன் காவல்மாடத்தில் புரவியை இழுத்து நின்றபோது காவலன் வியர்வை வழிந்த உடலுடன் தலைப்பாகையைச் சுருட்டி வீசிக்கொண்டிருந்தான். "காற்றே இல்லை, உள்ளே சிறிய இடம்" என்றான். பின்னால் நின்ற முதிய காவலர் "இரு நாளில் பெருமழை எழும். ஐயமே இல்லை" என்றார். அவன் புரவிகள் வெக்கைக்கு தலைதாழ்த்தி செவிகோட்டி நிற்பதைப் பார்த்தபடி முன்னால் சென்றான்.

கொந்தளிப்புடன் கைகளை அசைத்து பேசிக்கொண்டிருந்த யுதிஷ்டிரன் அவன் வருகையால் சற்றே அறுபட்டு மீண்டும் சென்று பொருத்திக்கொண்டு தொடர்ந்தார் "ஆகவேதான் சொல்கிறேன், இம்முறை நாம் போரை குறைத்து மதிப்பிடுவோம், நாம் ஏற்கெனவே வென்றுவிட்டோம் என்று எண்ணுவோம். கௌரவத் தரப்பின் முதன்மைப் போர்வீரன் இனிமேல்தான் தலைமைகொண்டு போருக்கெழுகிறான் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். பிறிதொருவர் வகுக்கும் படையில் திகழ்வது எல்லைக்குட்பட்டே தான் வெளிப்படுவது. தனக்கேயான படைசூழ்கையை வீரன் ஒருவன் அமைத்துக்கொள்வது முற்றிலும் வேறொன்று. கர்ணன் இதுவரை துரோணராலும் பீஷ்மராலும் கட்டுண்டவனாக இருந்தான். இப்போது அவனுக்கு முழு விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. படைசூழ்கை அவனை மையமாக்கியே அமைக்கப்படும். வென்றேயாகவேண்டும் என அவன் களமெழுவான். நாம் அவன் முன் நமது எளிய தன்னம்பிக்கையுடன் சென்று நின்றோமென்றால் தலைகொடுத்து அழிவோம்."

அவையை சூழநோக்கி யுதிஷ்டிரன் தொடர்ந்தார். "இன்றுவரை கர்ணன் பெற்றுள்ள அரிய அம்புகள் என்னென்ன என்று நமக்குத் தெரியாது. நம் இளையோன் பெற்றுள்ள அனைத்து அம்புகளையும் சூதர்கள் பாடிப் பாடி பரப்பியிருக்கிறார்கள். அவனிடம் நாகவாளி இருப்பதை மட்டுமே நாம் அறிந்தோம், அதை சூழ்ச்சியால் ஒழிந்தோம். அதை மீண்டும் அவன் ஏவினால் என்ன செய்வதென்று நாம் அறியோம்." இளைய யாதவர் "அவர் நாகவாளியை மறுமுறை ஏவமாட்டார்" என்றார். "இல்லை, ஆனால்..." என யுதிஷ்டிரன் தடுமாற "பிறிதொருமுறை அதை ஏவ இயலாது" என்றார் இளைய

யாதவர். "ஆயினும் வேறு அம்புகள் இருக்கக்கூடும். இனி என்னென்ன அம்புடன் அவர் படையில் எழப்போகிறார் என்பதை நாம் எவரும் அறியமாட்டோம். அவற்றுக்கான மாற்றும் நமக்கு இன்னும்கூட தெரியாது" என்றார்.

அங்கிருந்த அனைவரும் ஒருவகையான நிலைகொள்ளாமை தெரிய ஒருவரையொருவர் விழி நோக்காமல் அமர்ந்திருந்தனர். அவர்கள் சொல்லெடுக்காமையால் அமைதி நிலவியது. அது அங்கிருந்த புழுக்கத்தை மூச்சடைக்கச் செய்வதாக ஆக்கியது. சகதேவன் "அவர்கள் சற்று முன்னர்தான் படைத்தலைவராக அங்கநாட்டரசரை தெரிவு செய்திருக்கிறார்கள் என்று அறிந்தேன்" என்றான். யுதிஷ்டிரன் "ஆம். அச்செய்தி இங்கு ஓலையாக வந்துவிட்டது" என்றார். திருஷ்டத்யும்னன் "அவருக்கு தேர்தெளிக்க சல்யர் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்கிறார்கள் ஒற்றர்கள்" என்றான். அவையிலிருந்த நிஷாதர்களும் அரசர்களும் வியப்பொலி எழுப்பினார்கள். "சல்யரா?" என்று குந்திபோஜர் கேட்டார். "ஆம்" என்றான் திருஷ்டத்யும்னன். "அவர் எப்படி ஒப்புக்கொண்டார்?" என்றார் குந்திபோஜர். "இக்களத்தில் எதுவும் நிகழும் என்பதை நாம் முன்னரே அறிந்திருக்கிறோம்" என்றார் நிஷாத அரசரான ஹிரண்யநபஸ்.

அர்ஜுனன் விழித்துக்கொண்டு "சல்யர் தேரோட்டவிருக்கிறாரா?" என்றான். அனைவரும் அர்ஜுனனை திரும்பிப்பார்க்க "அதனால் என்ன வேறுபாடு வரவிருக்கிறது?" என்றான் அர்ஜுனன். சகதேவன் "மூத்தவரே, தங்களுக்கு தேர்தெளிக்கும் இளைய யாதவருக்கு நிகரான ஒருவர் என்று சல்யரை சொல்கிறார்கள். அவர் அங்கருக்கு தேரோட்டுவார் என்றால் உங்களிடையே நிகழும் போர் அவரிடம் இன்றிருக்கும் சிறு குறைவை

ஈடுகட்டிவிடுகிறது. அவர் உங்களை தன் அரிய அம்புகளால் வெல்லவும் கூடும்" என்றான். அர்ஜுனன் "என்னுடைய வெற்றி காண்டீபத்தாலோ அம்புகளாலோ அல்ல" என்றான். யுதிஷ்டிரன் "சல்யர் இன்னமும் ஒப்புக்கொள்ளவில்லை" என்றார். இளைய யாதவர் "அவர் ஒப்புக்கொள்வார். நாளை அல்ல, மறுநாள்" என்றார். யுதிஷ்டிரன் "அவர் தேர்தெளிக்கும் முறைமை நமக்கு அயலானது. மலைமக்களின் புரவிகளே மாறுபட்டவை" என்றார். "என் வெற்றி இப்போர்க்களத்தால்கூட நிகழ்வதல்ல" என்றான் அர்ஜுனன்.

யுதிஷ்டிரன் எரிச்சலுடன் "மீண்டும் நாம் வெற்றிகளைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். பெற்ற வெற்றிகள் அனைத்தையும் மறந்து இன்று புதிதாய் படையெழப்போகிறோம் என்பதே அங்கனை எதிர்கொள்வதற்கான ஒரே வழியாக அமையும் என்றுணர்க!" என்றார். சகதேவன் "வெற்றிகளைப்பற்றி நாங்கள் பேசுகிறோம். தோல்விகளைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்" என்றான். யுதிஷ்டிரன் சீற்றத்துடன் "பேசியாகவேண்டும்... ஏனென்றால் அங்கன் சீற்றம் கொண்டிருக்கிறான். அவன் தரப்பில் நாம் செலுத்திய அழிவுகள் ஒவ்வொன்றும் அவர்களை விசைகொண்டெழச் செய்திருக்கின்றன. புண்பட்ட யானை என அவன் இன்று களம் வருவான் என்று சூதர்கள் பாடக்கேட்டேன். அத்துடன் இன்றே போர் முடித்து வெற்றிகொள்ள அவன் உறுதி கொண்டிருப்பான். பீஷ்மரும் துரோணரும் வெல்லாத இடத்தில் தான் வென்றால் பாரதவர்ஷமே தன் வில்லுக்கு அடிமையாகும் என்று அவன் அறிந்திருப்பான்" என்றார்.

"அது அவ்வளவு எளிதல்ல" என்று நகுலன் சொல்ல யுதிஷ்டிரன் சினத்துடன் அவனை நோக்கி திரும்பி "இந்த அவையில் அங்கனைப்பற்றி என் அளவுக்கு அறிந்தவர்

எவருமில்லை என்றுணர்க! இந்த அறுபதாண்டுகளும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவுத் தனிமையிலும் நான் அவனையே எண்ணிக்கொண்டிருக்கிறேன். சென்ற பல ஆண்டுகளாக என் புலரியின் முதல் எண்ணமே அவனுடைய வில்லும் நாணொலியுமாக இருக்கிறது. நம்மால் வெறுக்கப்படுபவரை நாம் அறிவதில்லை, நாம் அச்சம்கொண்டிருப்பவரை நன்கு அறிகிறோம். நான் அவனை அஞ்சுகிறேன். தீயதெய்வம் என அவனை என்னி நடுங்குகிறேன்" என்றார்.

அவையினர் மீண்டும் நிலைகொள்ளாத அசைவுகளை வெளிக்காட்டி அமைய யுதிஷ்டிரன் சொன்னார் "இன்றுவரை படைக்களத்தில் மாவீரர்களை கட்டுண்டு நிறுத்தியது போர்நெறி, குலநெறி. அதற்கப்பால் குருதியின் அறம். இக்கட்டுகள் ஒவ்வொன்றையும் நாமே அறுத்து அனைவருக்கும் அனைத்தையும் அளித்திருக்கிறோம். இனி எதுவும் தடையல்ல. எந்த நெறியாலும் முறையாலும் கட்டுப்படாத விசையுடன் அங்கன் போர்க்களம் எழும்பொருட்டுதான் நம்மையறியாமலேயே ஊழ் நம்மைக்கொண்டு இதை செய்ய வைத்ததா என்று சற்றுமுன் எண்ணினேன்." "வீண்பேச்சு வேண்டாம். உங்கள் அச்சத்தை பரப்புவதனால் என்ன பயன்?" என்று நகுலன் சொல்ல "நான் பரப்புவது அச்சத்தை அல்ல, எச்சரிக்கையை. அறிவிலி!" என யுதிஷ்டிரன் சீறினார். நகுலன் ஒவ்வாமையுடன் முகம் திருப்பிக்கொண்டான்.

அவையை நோக்கி யுதிஷ்டிரன் தொடர்ந்தார் "அறுதியாக நான் சொல்வது ஒன்றே. பாதாளதெய்வங்களுக்குரிய தடையிலா ஆற்றலுடன் அவன் எழவிருக்கிறான். அவனை எதிர்கொள்வது

எப்படி? அதை நாம் இங்கு எண்ணிச்சூழ வேண்டும். வென்றோம் என்று எண்ண வேண்டாம். ஒருவேளை இவ்வெற்றி அனைத்தும் அங்கன் முன் தோற்பதற்காக அமைந்ததாக இருக்கலாம். அங்கனுக்கு புகழ்சேர்க்கும் பொருட்டு அவன் தந்தை மண்ணில் இயற்றிய விளையாட்டாக இது இருக்கலாம். வெல்லற்கரிய பாண்டவர்களை, வெற்றி மட்டுமே அறிந்த மாவீரர்களை கடந்து வந்தவர்களை ஒரே ஒருநாள் போரில் வென்றான் அங்கன் என்று சூதர்கள் பாடும் நிலை எழக்கூடும்."

பீமனின் குரல் எழுந்தபோதுதான் அவன் அங்கிருப்பதையே அர்ஜுனன் உணர்ந்தான். "மூத்தவரே, இந்த அவை கூடிய தருணத்திலிருந்து தோல்வியைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் தோல்வியை எப்படி அடைவதென்றுதான் திட்டமிடவிருக்கிறோமா?" என்றான். அக்கசப்பை புரிந்துகொள்ளாத யுதிஷ்டிரன் "அதைத்தான் பேசுகிறேன். நாம் வெற்றி பெற்றாகவேண்டும். ஆனால் வெற்றியை அடைந்துவிட்டோம் என்று எண்ணவேண்டியதில்லை. அது தோல்விக்கு நிகர். ஒருகணம் சற்றே திரும்பினால் போதும், தோல்வி அணைந்துவிடும். அதைத்தான் கூற வந்தேன்" என்றார். "ஆகவேதான் சொல்கிறேன்..." என அவர் மீண்டும் தொடங்க "அரசே, இன்னும் இந்த அவை பேசி முடிக்கவில்லை. பேசி முடிப்பது வரை தாங்கள் சொல்லடங்கி அரியணையில் அமர்வது நலம்" என்று இளைய யாதவர் கூரிய குரலில் சொன்னார்.

சற்றே திகைத்து பின் இரு கைகளும் தொய்ந்து விழ "ஆம், நான் பேசுவதற்கொன்றில்லை. நான் சொல்லவேண்டியதை பல முறை திருப்பித் திருப்பி சொல்லிவிட்டேன்" என்ற யுதிஷ்டிரன் சென்று தன் இருக்கையில் அமர்ந்தார். இளைய யாதவர்

திருஷ்டத்யும்னனை நோக்கி “நமது படைசூழ்கை என்ன? எவ்வண்ணம் இப்போரை நிகழ்த்தவிருக்கிறோம்? அதை அவையில் உரையுங்கள்” என்றார். திருஷ்டத்யும்னன் எழுந்து அவையை நோக்கி தலைவணங்கி தன் படைசூழ்கையை விளக்கத் தொடங்கினான். “அவர்கள் நாளை மகரச்சூழ்கை அமைக்கக்கூடும் என செய்தி வந்துள்ளது. அல்லது கூர்மம். ஆனால் அதற்கான வாய்ப்பு குறைவு. அங்கர் ஒருபோதும் பதுங்கிவந்து தாக்கும் சூழ்கையை ஒப்பமாட்டார். பருந்துச்சூழ்கை அமையவும் வாய்ப்பு. இவற்றில் எதுவாக இருப்பினும் நாம் பிறைசூழ்கை அமைப்பதே உகந்தது. அவர்களை நாம் சூழ்ந்துகொள்ளவேண்டும். அவர்களை கவ்வி இறுக்கி நிலைகொள்ளச் செய்யவேண்டும்.”

அர்ஜுனன் நோக்கியபோது அவையினர் எவரும் அதை செவிகூரவில்லை என்று தோன்றியது. படைசூழ்கைகளினால் எப்பொருளும் இல்லை என்று அவர்கள் அனைவரும் எண்ணுவதுபோல. உண்மையிலேயே படைசூழ்கைகள் எதற்கும் எப்பொருளும் இல்லை என்பதை களம் ஒவ்வொரு நாளும் காட்டிக்கொண்டிருந்தது. படைசூழ்கைகளை பெருவில்லவர்கள் அதுவரை அடைந்த வெற்றிகளை, வெளிப்படுத்திய ஆற்றல்களை கொண்டு கணிக்கின்றனர். பெருவில்லவர்கள் அப்படைசூழ்கையின் அனைத்துத் தடைகளையும் மீறி அக்கணம் பிறிதொருவராக வெளிப்படுகிறார்கள். படைசூழ்கைகள் என்பவை வீரர்களை ஆற்றலுடன் எழுந்து அமரச்செய்யும் பீடங்கள் மட்டுமே. திருஷ்டத்யும்னன் “அவர்கள் கர்ணனை முன்னிறுத்துவார்கள். மகரமென்றால் தலை. பருந்தென்றால் அலகு. நாம் அவரை படைகளிலிருந்து பிரித்து தனிமைப்படுத்தவேண்டும். நம் வீரர்கள் அவரை வெல்லவேண்டும்” என தொடர்ந்தான்.

தானும் கர்ணனைப்பற்றி எண்ணிக்கொண்டிருப்பதை உணர்ந்து அர்ஜுனன் நீள்மூச்செறிந்தான். அவ்வோசை கேட்டு இளைய யாதவர் திரும்பிநோக்கி மீண்டும் புன்னகைத்தார். முதல் முறையாக அப்புன்னகை அவனுக்கு எரிச்சலை உருவாக்கியது. ஒவ்வொரு முறையும் அப்புன்னகை ஒவ்வொரு பொருள் கொள்கிறது. உன்னை அறிவேன் என்று, நீயறியாததையும் அறிவேன் என்று, என்னை நீ அறிய இயலாது என்று, இவையனைத்திற்கும் நானே முழுமுதல் என்று, இவையனைத்தையும் கடந்தவன் என்று, இப்போர்க்களத்தின் பேரழிவில் சந்தையில் சிறுமைந்தனென மகிழ்ந்து திளைக்கிறேன் என்று, இப்போர்க்களம் என்னவென்றறியாது எங்கோ இருந்து தன்கனவிலென ஆழ்ந்திருக்கிறேன் என்று.

அவன் இளைய யாதவரை ஓரவிழியால் பார்த்தான். முதற்கணம் பார்வையில் முதியவர் என்றும் மீண்டும் மீண்டும் விழிதீட்டிக்கொள்கையில் இளமை வந்து படிந்து முகத்தசைகள் கூர்கொண்டு விழியொளி கூடி விளையாடும் இளஞ்சிறுவன் என்றும் அவர் மாறும் விந்தையை என்றுமென அன்றும் அறிந்தான். அவரைப் பற்றிய சூதர்களின் புகழ்பாடல்களில் எப்போதும் கிசோரகன் என்றே அவர் குறிப்பிடப்பட்டார். விளையாட்டுகளில் அனைவரும் சிறுவர்களே. விளையாடும்வரை சிற்றிளமை விட்டு செல்வதும் இல்லை. தன் வாழ்நாளில் விளையாட்டன்றி செயலெதையும் ஆற்றாதவர் போலிருந்தார்.

திருஷ்டத்யும்னன் சூழ்கையை விளக்கி முடித்து "இது முழுக்க முழுக்க அங்கரை உளம்கொண்டு உருவாக்கப்பட்டது. நீங்கள் பார்க்கையிலேயே இதை புரிந்துகொண்டிருக்க முடியும். எல்லா நிலையிலும் நமது படைகள் அனைத்தும் அங்கரையே

வட்டமிடுகின்றன. அங்கரை ஓரிடத்தில் அசையாது நிறுத்த முடியுமெனில், அவர் நம்முள் ஊடுருவ முடியாதெனில் நாம் வென்றோம். இப்போரில் இளைய பாண்டவர் அங்கரை எதிர்கொள்வார், அங்கரை அவர் கொல்வார் என்று வஞ்சினம் உரைக்கப்பட்டுள்ளது. அவருக்கு இருபுறமும் படைத்துணையென அவர் மைந்தர் இருப்பர். பிறையின் தென்னெல்லை சாத்யகியால், வட எல்லை சிகண்டியால் நடத்தப்படும். பிறை முன்னகர்ந்து வளைத்துக்கொண்டதும் எட்டு சுருக்குக் கயிறுகளாக மாறி தன்னைத்தான் வீசிக்கொண்டு சென்று முதலையின் கைகால்களையும் தலையையும் வாலையும் உடலையும் கவ்விக்கொள்ளவேண்டும். அதை அசையாது நிறுத்திவிட்டாலே போதும்" என்றான்.

நகுலன் "இப்படைசூழ்கையில் எங்கள் இடம் என்ன என்று வகுக்கப்படவில்லை" என்றான். திருஷ்டத்யும்னன் "அங்கர் உங்களை கொல்லலாகாதென்பதே இப்படைசூழ்கையின் இலக்கு. இன்னும் நீடுநாள் இப்போர் நீடிக்க இயலாது. இப்போதே இருபுறமும் படைப்பிரிவுகளில் பெரும்பகுதி அழிந்துவிட்டிருக்கின்றது. எங்கோ ஒரு புள்ளியில் இப்போரை நாம் சொல்நிறுத்தி முடிவு செய்யப்போகிறோம். அதுவரை பாண்டவ அரசகுடியின் ஐவரும் உயிருடன் இருந்தாகவேண்டும். ஆகவே இளைய பாண்டவர் அர்ஜுனன் தவிர பிற அனைவரும் இப்படைசூழ்கையால் முற்றிலும் காக்கப்படுவார்கள்" என்றான். பீமன் "என்னை எவரும் காக்கவேண்டியதில்லை... நான் இன்று படைமுகம் நின்று அவர்களை முற்றழிப்பேன்" என்று கூறி கைநீட்டியபடி எழ இளைய யாதவர் கைதூக்கி அவனை அமர்த்திய பின்னர் "அஞ்சவேண்டியதில்லை, பாண்டவ ஐவருமே களம்நிற்கட்டும்.

கர்ணனால் கொல்லப்படும் வாய்ப்புள்ளவர் இளைய பாண்டவர் அர்ஜுனன் மட்டுமே" என்றார்.

அவையினர் அனைவரும் வியப்புடன் திரும்பி அவரை பார்த்தனர். "பிற நால்வருக்கும் அங்கரால் எந்த உயிரிடரும் இல்லை" என்று மீண்டும் இளைய யாதவர் சொன்னார். நகுலன் "எவருடைய சொல்லுறுதி?" என்றான். இளைய யாதவர் "கர்ணனின் சொல்" என்றார். "எவருக்கு அளிக்கப்பட்டது?" என்றான் நகுலன். இளைய யாதவர் ஒன்றும் சொல்லவில்லை. அவையினரின் விழிகள் இருவரையும் மாறிமாறி நோக்கின. அர்ஜுனன் இளைய யாதவரின் புன்னகையை நோக்கியபின் திரும்பிக்கொண்டான். யுதிஷ்டிரன் "நீ பாம்பின் சொல்லுறுதியை நம்புகிறாய். சீறி ஆமென்றுரைக்கும், மும்முறை நிலம்கொத்தி ஆணை ஆணை ஆணை என்று கூறும். அப்பொழுதும் தன் வாலால் இல்லை இல்லை என்று நெளிந்துகொண்டிருக்கும். பாம்பின் சொல்லுறுதி என்பது அது தனக்கு எடுத்துக்கொள்வது மட்டுமே, பிறருக்கு அளிப்பதல்ல" என்றார். "கர்ணனை நான் அறிவேன்" என்று இளைய யாதவர் சொன்னார்.

யுதிஷ்டிரன் மேலும் ஏதோ சொல்ல முயன்றபின் தன்னை அடக்கிக்கொண்டார். "நாளை அவர் போர்க்களத்தில் எழும்போது அர்ஜுனன் காண்டீபத்துடன் அவரை எதிர்கொள்வார். நாளை நிகழவிருக்கும் அப்போரை நாம் அக்களத்தில் எழும் தெய்வங்களைக்கொண்டு மட்டுமே முடிவுசெய்ய இயலும். ஒவ்வொருவரும் தாங்கள் செய்ய வேண்டியதென்ன என்பதை முன்னரே அறிந்திருக்க இயலாது. எங்கிருந்து தொடங்குவது என்று மட்டுமே முடிவு செய்துகொள்ள முடியும். இப்படைசூழ்கை அதற்கு மட்டுமே. அவ்வாறே இதை அறுதி

செய்வோம்" என்று இளைய யாதவர் சொன்னார். திருஷ்டத்யும்னன் "ஆம்" என்று தலைவணங்கினான்.

அர்ஜுனன் கைகளைக் கட்டியபடி நிலம் நோக்கி அமர்ந்திருந்தான். பெருமூச்சுடன் கைகளை உரசிக்கொண்டு "எனில் படையாணைகளை அரசர் பிறப்பிக்கட்டும். இந்த அவையை முடித்துக்கொள்வோம்" என்று குந்திபோஜர் கூறினார். "நாம் சென்று விழக்கூடும் பொறியொன்றையே இவ்வவைகூடுகையில் நான் சொன்னேன். அதை மீண்டும் சொல்ல விழைகிறேன். பீஷ்மரையும் துரோணரையும் வென்றுவிட்டோம் எனும் தருக்கு நம்முள் சற்றேனும் இல்லாமல் இருக்காது. இன்று நம்மை களத்தில் வீழ்த்தும் இடர் அதுவாக இருக்கலாம். அச்சிறுவாயிலினூடாக அழிவு நம்மை நோக்கி வரலாம்" என்றார் யுதிஷ்டிரன். நகுலன் "அதைப்பற்றி பேசிவிட்டோம்" என்றான். அவையினர் ஓசையின்றி தலைவணங்க யுதிஷ்டிரன் அவர்களை வணங்கி சகதேவனுடன் அவை விட்டு வெளியே சென்றார்.

அர்ஜுனன் தளர்ந்த உடலுடன் அவையிலேயே அமர்ந்திருக்க பிறர் ஒவ்வொருவராக பேசியபடி எழுந்து சென்றார்கள். இளைய யாதவர் அவனிடம் திரும்பி "நீ இன்று நன்கு துயின்றாக வேண்டும்" என்றார். அர்ஜுனன் தலையசைத்தான். "நாளைய போர் கைகளாலோ படைக்கலங்களாலோ நிகழ்த்தப்படுவதல்ல. அது விழிகளாலும் எண்ணங்களாலும் நிகழ்வது. உன் உள்ளம் ஓய்வுகொள்ளட்டும்" என்று இளைய யாதவர் சொன்னார். அவன் தலைகுனிந்து அமர்ந்திருக்க அவர் மேலும் கனிந்த குரலில் "சித்தம் துயிலாது விழிசோர்பவன் முழுத் துயிலை அடைவதில்லை. இன்று உன்

ஆழமும் முழுதமைய வேண்டும்" என்றார். அர்ஜுனன் "நான் ஆழ்ந்து துயின்று நெடுங்காலமாகிறது, யாதவரே" என்றான். "என் காலம் முன்னே விரிந்து கிடந்தது. அது என்னை துயிலவிடவில்லை. இன்று காலம் முழுக்க பின்னால் விரிந்துள்ளது. அது என்னை ஒருபொழுதும் துயிலில் அமையவிடுவதில்லை."

"இன்று எவ்வண்ணமேனும் துயில்க! இன்று நீ துயின்றாக வேண்டும்" என்று சொன்ன யாதவர் எழுந்து "இன்று உன் உள்ளத்தை வருத்துவதென்ன என்று அறிவேன். நீ துரோணரை எண்ணிக்கொண்டிருக்கிறாய்" என்றார். அர்ஜுனன் நிமிர்ந்து "விந்தை என்னவெனில் நான் துரோணரை எண்ணவே இல்லை. மெய்யாகவே எண்ணவில்லை. சற்றுமுன் அவரது உடல் போர்க்களத்திலிருந்து ஏவலரால் ஒன்று சேர்க்கப்பட்டு கொண்டு செல்லப்படுவதை காவல்மாடத்தின் உச்சியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் அவர் தலையுடன் உடலை சேர்த்தார்கள். அவரது தலை கிடைக்க நெடுநேரமாயிற்று. அது கீழே விழுந்திருந்த பலநூறு தலைகளில் ஒன்றெனக் கிடந்தது. அது அங்கே படைக்கலம் பற்றியபடி இறந்து கிடந்த நிஷாதகுடி வீரன் ஒருவனின் அறுந்த கழுத்தின் அருகே விழுந்து இணைந்ததுபோல் இருந்தமையால் அவர்கள் பலமுறை அவ்வுடலை கடந்துசென்ற பிறகும் அவரை கண்டடைய முடியவில்லை. ஒருவனின் காலில் அத்தலை இடறி உருண்ட போதுதான் அது துரோணரென்று கண்டுகொண்டான். அவன் இந்தத் தலை விந்தையாக உள்ளது என்று கூறியபோது அப்பால் தந்தைக்காக தேடிக்கொண்டிருந்த அஸ்வத்தாமன் திரும்பிப்பார்த்தான்" என்றான்.

இரு கைகளையும் விரித்து பெருமூச்சுவிட்டு "அவன் முகத்தின் திகைப்பை அத்தனை குறைந்த ஒளியிலும் அவ்வளவு தொலைவிலும் நான் கண்டேன். அவன் அது தன் தந்தை என்று நடுக்குடன் மீளமீளச் சொல்வதை கண்டேன். பின்னர் அவர்கள் அவ்வுடலை நீத்தோர்சகடத்தில் வைத்து பொருத்தினார்கள். துரோணர் அந்த உடலில் மீண்டும் எழவே இல்லை. அந்தத் தலை உடல் சற்று அசைந்தபோது திரும்பிக்கொண்டது. இவையனைத்திலிருந்தும் விலகிக்கொண்டதுபோல. அஸ்வத்தாமன் ஒருகணம் அதை நோக்கியபின் திரும்பவேயில்லை. நான் விழியிமைக்காமல் நோக்கிக்கொண்டிருந்தேன். அந்த நிஷாத வீரன் எவன் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். சகடம் எழுந்தபோது அஸ்வத்தாமன் அந்த நிஷாத வீரனின் உடலையும் உடன் எடுத்துக்கொள்ளும்படி சொன்னான். அது பாண்டவர் தரப்பு உடல் என்று சுடலைஏவலர் சொல்ல தாழ்வில்லை அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் திகைப்புடன் ஒருவரை ஒருவர் நோக்கியபின் ஒப்புக்கொண்டார்கள்" என்றான்.

"அவர்கள் நிஷாதனின் உடலை எடுத்த பின்னர் அவன் தலைக்காக தேடினார்கள். அது எங்கோ கிடந்தது. நிஷாத குலத்தைச் சேர்ந்த ஏவலர் எழுவரை கொண்டுவந்து அதை கண்டெடுக்கச் சொன்னார்கள். அந்தத் தலை துரோணரின் மேலாடை சுற்றிக்கிடந்தது. அதை நிஷாதன் என அவர்களால் எண்ணமுடியாமையால் பலமுறை கடந்துசென்றனர். பின்னர் அவர்கள் அவன் நெற்றியிலிருந்த குலப்பச்சை குறியைக்கொண்டு அதை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் அதை உடலுடன் இணைத்து எடுத்துகொண்டு சென்றபோது நான் உளக்கொந்தளிப்புடன் காவல்மாடத்தின்

மூங்கில்களைப் பற்றியபடி நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அக்கணமே இடையிலிருந்து அம்பெடுத்தென் கழுத்தை அறுத்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணினேன். பின்னர் அத்தட்டிலேயே கால் தளர்ந்து அமர்ந்தேன். என் உள்ளம் வெறுமைகொண்டிருந்தது. பின்னர் ஆழத்திலிருந்து அந்த நிஷாத வீரனின் பெயர் என்ன என்று அறியும் ஆவல் எழுந்தது."

"மெல்ல இறங்கி கீழே வந்தேன். ஒற்றரை அழைத்து செய்தியறிந்துவர ஆணையிட்டு அனுப்பியபின் படைகளினூடாகச் சென்றேன். நம் படைகள் போர் முடிந்து தளர்ந்து பிரிந்து சென்றுகொண்டிருந்தன. பெரும்பாலும் அடுமடையர்கள், ஏவலர்கள், போரென்றால் என்னவென்றே தெரியாதவர்கள். இளைய யாதவரே, குதிரைச்சூதர்கள்கூட படைக்கலம் எடுத்து போர்புரிந்ததை கண்டேன். எங்கும் கரிய புகை எழுந்து காடாக வான் தொட்டு நின்றிருந்தது. ஒருகணத்தில் துரோணர் மேல் கடும்வஞ்சத்தை அடைந்தேன். ஒருதுளியேனும் அவர் உள்ளம் நெகிழ்ந்திருந்தால், தன்னை விலக்கி மெய்காண இயன்றிருந்தால், இவ்வழிவை அவராலேயே தடுத்திருக்க முடியும் என்று தோன்றியது. அவர் தன்னலத்தால், ஆணவத்தால், தவிர்க்கவே முடியாத பற்று எனும் சிறுமையால் இழிவடைந்தார். பேரியல்புகொண்டோர் சிறு இழிவடைந்தாலும் அது பெருஞ்சரிவென ஆகிறது. பீஷ்மருக்கு நிகராகவே அவரும் இவ்வனைத்தையும் சமைத்தார். அவர் வீழ்ந்தபோதே அக்கணக்கு முடிவடைந்தது."

"அக்கணத்தில் அவ்வெறுப்பினூடாக அவரைக் கொன்ற தன்னிழிவிலிருந்தும், அவர் மாணவன் என்ற துயரிலிருந்தும் முற்றாக விடுபட்டேன். இப்போது நீங்கள் கேட்பது வரை

அவரைப்பற்றி ஒருகணமும் நான் எண்ணியதில்லை.” இளைய யாதவர் புன்னகைத்து “நன்று, எண்ணாதொழிவது நம்மை எளிதாக்குகிறது. விழிப்பிலும் செயல்களிலும் வேறுஎண்ணம் வந்து ஊடறுக்காது செய்கிறது. ஆனால் துயிலில் மறைந்தவை எழுந்து வரும். நாகங்கள் இரவுக்குரியவை” என்றபின் அவன் தோளைத்தட்டி எழுந்து சென்றார். அவரை நோக்கியபடி அமர்ந்திருந்தான் அர்ஜுனன்.

பின்னர் தன் மேலாடையை அணிந்துகொண்டு எழுந்து வெளியே வந்தான். காற்றில்லாத வெளியில் கள்ளின் புளித்த மணமும் வியர்வை வாடையும் குதிரைச்சாணியின் தழைநாற்றமும் கலந்து விண்ணிலிருந்து இறங்கிய நீராவியுடன் இணைந்து வீசின. அவன் மூச்சடைப்பதுபோல் உணர்ந்தான். அவனுக்காக ஒற்றன் காத்து நின்றிருந்தான். அர்ஜுனன் நின்றான். ஒற்றன் தலைவணங்கி “அவன் ஹிரண்யவாகாவின் கரையிலுள்ள ஹிரண்யபதத்தின் நிஷாதர்குடியை சேர்ந்தவன். அக்குடியை ஆண்ட சோனர் என்னும் பெயர்கொண்ட ஹிரண்யதனுஸ் என்னும் நிஷாத அரசர் அவன் தந்தை. அவருடைய இரண்டாவது அரசி விந்தையின் மகன். பெயர் சித்ரபாணன். அவன் தமையன் ஏகலவ்யன் முன்னரே இளைய யாதவரால் கொல்லப்பட்டான். தமையனுடன் இவனும் மகதப்படையில் பணிபுரிந்திருக்கிறான். நான்குவிரல் வில்லவன்” என்றான். அர்ஜுனன் தலையசைத்துவிட்டு நடந்தான்.

இருட்கனி - 18

அர்ஜுனன் தன் புரவியை நோக்கி செல்கையில் அவனை நோக்கிவந்த நகுலன் “மூத்தவரே, நீங்கள் அரசரை வந்து பார்த்துச்செல்லவேண்டும்” என்றான். அர்ஜுனன் புருவம் சுளிக்க “அவர் சென்றதுமே மது வேண்டுமென்று கேட்டார். வழக்கமாக மிகக் குறைந்த அளவுக்கே அருந்துவார். இங்கே குருக்ஷேத்ரத்திற்கு வந்தபின்னர் அது மிகையாகிக்கொண்டே வந்தது. அதை நானும் சகதேவனும் பிறர் அறியாமல் காத்தோம்” என்றான். அர்ஜுனன் “அவர் கண்களே காட்டிக்கொடுக்கின்றன” என்றான். “அவரால் துயில்கொள்ள முடியவில்லை. சில நாட்களில் அகிபீனாவும் தேவையாகும்” என்று நகுலன் சொன்னான். “அவர் வெளியே ஒரு தோற்றத்தை சூடிக்கொள்கிறார். வெளிக்காட்டாத ஒன்று உள்ளே எரிந்துகொண்டிருக்கிறது. அதை எவரிடமும் பகிராமையாலேயே அது அழுகி நோய் என ஆகிவிட்டிருக்கிறது.”

அர்ஜுனன் “அதை அறியாத எவரும் நம்மில் இல்லை” என்றான். “அவர் அதை பொத்தி வைத்திருக்கிறார். மது அருந்துகையிலும் துயில்கையிலும் எவரும் உடனிருப்பதை விரும்புவதில்லை. ஆனால் இரவில் அஞ்சி ஓடி வந்து எங்களை எழுப்புவதுண்டு. அபிமன்யு இறந்த அன்று குடிலில் இருந்து இறங்கி கௌரவப் படை நோக்கி ஓடினார். அவன் காலில் விழுகிறேன், என் அரசை அவனிடமே அளிக்கிறேன், என் மைந்தரை விட்டுவிடும்படி கோருகிறேன் என்று கதறினார். நாங்கள் சென்று அவரை இழுத்துக்கொண்டு வந்தோம். அன்று அவர் உடல் வெம்மைகொண்டிருந்தது. மறுநாள் எழமாட்டார் என்றே நினைத்தோம். மறுநாள் எழுந்தபோது வழக்கம்போல் இருந்தார். போர்வெற்றி என்றும்

அறம் நிலைகொள்ளவேண்டும் என்றும் பேசிக்கொண்டிருந்தார்" என்றான் நகுலன்.

அர்ஜுனன் "அவரை இப்போர் என்ன செய்யும் என நான் அறிவேன்" என்று புன்னகைத்தான். "அவருடைய போர் சொற்களில் நிகழ்வது. அவை எவரையும் கழுத்தறுத்து நிலத்தில் இடுவதில்லை. குருதியாடுவதில்லை" என்றான். நகுலன் "அவரிடம் நீங்கள் வந்து பேசுங்கள்... இன்று மிக நிலையழிந்திருக்கிறார்" என்றான். "ஆம், அவர் நிலையழிந்திருப்பதை நான் அப்போதே கண்டேன்" என்றான் அர்ஜுனன். "அவர் கர்ணனை அஞ்சுகிறார் என நான் அறிவேன். நம்மை கர்ணன் கொன்றுவிடக்கூடும் என்னும் பதற்றத்திலேயே இத்தனை நாட்கள் வாழ்ந்திருக்கிறார்." நகுலன் "இன்று அவைக்கு வரும்போதே மது அருந்தியிருந்தார். அகிபீனாவை மூச்சில் இழுத்திருக்கிறார் என சற்றுமுன் ஏவலன் சொன்னான். மீளவும் குடிலுக்குச் சென்றபின் மீண்டும் குடித்து அகிபீனாவை இழுத்தார். சிறிய வலிப்புபோல ஒன்று வந்தது. துயிலப்போகிறார் என நினைத்தோம். ஆனால் எழுந்து கட்டின்றி கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார். சிரிப்பும் அழுகையுமாக தவிக்கிறார்" என்றான்.

"அதற்கு நான் என்ன செய்ய இயலும்? எனக்கு அவருடன் என்றுமே இயல்பான பேச்சு இருந்ததில்லை" என்றான் அர்ஜுனன். "நான் இளைய யாதவரிடம் சென்றேன். அவர் வந்து ஒரு சொல் உரைக்கலாகுமா என்று கேட்டேன். இல்லை, இத்தருணத்தில் அவருடன் பேசவேண்டியவன் அர்ஜுனனே என்றார். ஆகவே உங்களை நோக்கி ஓடிவந்தேன். நல்லவேளையாக நீங்கள் புரவியில் ஏறிவிடவில்லை" என்றான் நகுலன். "நான் பேசவேண்டும் என்றாரா?" என்று அர்ஜுனன்

கேட்டான். "ஆம்" என்றான் நகுலன். "நீங்கள் அரசருக்கு ஒரு சொல்லுறுதி அளித்தால் போதும் என்றார்." அர்ஜுனன் "என்ன?" என்றான். "நீங்கள் இன்று உறுதியாகவே கர்ணனை கொல்வீர்கள் என்று. அவர் கர்ணனை அஞ்சி நிலையழிந்திருக்கிறார். அவ்வச்சத்தை உங்கள் உறுதியால் போக்கினால் அவர் அமைவார்."

அர்ஜுனன் பெருமூச்சுடன் "சொல்லுறுதியை அளிக்கிறேன். நான் அதை அளிக்கலாம் என யாதவர் சொல்லியிருப்பதனால்" என்றான். பின்னர் நகுலனுடன் நடந்தான். "அவரை புரிந்துகொள்வது மிகக் கடினம். அவர் விழைவுகொண்டிருக்கிறார் என ஒரு தருணம் தோன்றும். எக்கணமும் துறக்கச் சித்தமாக இருப்பதாக மறுகணம் தோன்றும். போர்வெற்றிக்காக தவிப்பதாக எண்ணுவேன். போரை அஞ்சி ஒழிகிறார் என உடனே மறுத்து கருதுவேன்" என்றான். "அறம் பேசுபவர் எவரும் அவ்வண்ணமே. அறம் அவர்களை இருசுடர்நிழல் என இரண்டாக பகுத்துவிடுகிறது" என்றான் அர்ஜுனன். நகுலன் "அவர் நம் மீது கொண்டுள்ள பேரன்பு மட்டுமே எந்நிலையிலும் மாறாததாகத் தெரிகிறது" என்றான். அர்ஜுனன் ஒன்றும் சொல்லவில்லை. நகுலன் "இந்தப் போரை தொடங்கியதில் தனக்கு முதன்மைப் பொறுப்பு இருப்பதாக அவர் எண்ணுகிறார் என்று சகதேவன் சொன்னான். இதை அவர் தவிர்த்திருக்கக் கூடும். நாற்களமாடச் சென்றமைந்ததில் இருந்தே அவர் இப்போரை உருவாக்கத் தொடங்கிவிட்டார். அதை பிற எவரைவிடவும் அவர் அறிவார். அதுதான் அவருடைய துயர் என்று சொன்னான்" என்றான்.

அர்ஜுனன் "மெய்" என்றான். "ஆகவே ஒவ்வொரு சாவும் அவரை பெருவிசையோடு அறைகிறது என்று சகதேவன்

சொன்னான்" என்று நகுலன் தொடர்ந்தான். "அவர் பலமுறைகளில் அதை எதிர்கொள்கிறார். தான் ஏதுமறியாதவனாக உடன்பிறந்தாரின் ஆடலில் பாவையாக இருப்பதாக காட்டிக்கொள்கிறார். இளைய யாதவரின் வேதம் இங்கு நிலைகொள்ளும்பொருட்டே வாழ்வதாகவும் போரிடுவதாகவும் வெளிப்படுகிறார். மண்விழைவை நடிக்கிறார். இவை எவற்றிலும் பங்கில்லை என எண்ணுகிறார். ஆனால் இவை அனைத்தையும் விலக்கி அவருள் நிறைந்துள்ள பெருந்துயர் வெளிப்படுகிறது. அதை எவ்வகையிலும் அவரால் விசையழியச் செய்ய முடியவில்லை. அவரை இரவுகளில் அது பல்லாயிரம் நச்சுக்கொடுக்குகளுடன் வந்து சூழ்ந்துகொள்கிறது."

அர்ஜுனன் அவனுடன் குடிலுக்குள் நுழைந்தபோது சகதேவன் வந்து "இளைய யாதவர் வரவில்லையா?" என்றான். "இல்லை, அவர் மூத்தவரை அழைத்துச்செல்லும்படி சொன்னார்" என்றான் நகுலன். "எப்படி இருக்கிறார்?" என்று அர்ஜுனன் கேட்டான். "சற்று துயில்கொண்டுவிட்டார்" என்றான் சகதேவன். "எனில் நான் திரும்புகிறேன்" என்று சொன்னான் அர்ஜுனன். "இல்லை, எக்கணமும் விழிப்புகொள்வார். முனகலுடன் புரண்டுபடுக்கிறார்..." என்றான் சகதேவன். "யார்? யார் அது?" என்று உள்ளே யுதிஷ்டிரன் குழறலாக கேட்டார். அவர் எழும் ஓசை கேட்டது. "யார் அது? சகதேவா, மூடா, யார் அது?" சகதேவன் "இளையவர் உங்களை பார்க்க வந்திருக்கிறார், அரசே" என்றான். "எவரும் என்னை பார்க்கவேண்டியதில்லை. அவனை செல்லும்படி சொல். என் ஆணை இது. அவன் இக்கணமே சென்றுவிடவேண்டும்" என்றார் யுதிஷ்டிரன்.

அர்ஜுனன் "நான் செல்கிறேன்" என மெல்லிய குரலில் சொன்னான். ஆனால் யுதிஷ்டிரன் "அவனை இங்கே

வரச்சொல். அந்த வீணனிடம் நான் ஒன்று கேட்கவேண்டும்... இப்போதே கேட்டாகவேண்டும். இக்கணம், இங்கேயே... எங்கே அவன்?" என்றார். "செல்க!" என்றான் சகதேவன். அர்ஜுனன் உள்ளே சென்றான். யுதிஷ்டிரன் எழுந்து தலை முன்னால் தொய்ந்திருக்க மஞ்சத்தில் அமர்ந்திருந்தார். அவனை நிமிர்ந்து நோக்கிய விழிகள் சிவந்து பழுத்திருந்தன. "குருதி... எங்கு நோக்கினும் குருதி" என்றார். சற்று குமட்டி உடல் உலுக்கிக்கொண்டு "இந்தக் குடில் போர்முனைக்கு மிக அருகே உள்ளது. அங்கிருந்து குருதிவாடை இங்கே வந்துகொண்டே இருக்கிறது. நான் படுத்தால் கனவுகளுக்குள் செங்குருதி அலையலையாக வருகிறது. அவற்றில் வழுக்கி விழுந்து புரண்டு எழுகிறேன். உடலெங்கும் குருதி" என்றார்.

அவர் கைகளை தூக்கிப் பார்த்து "சற்றுமுன் பார்த்தேன். என் கைகளில் கண்கள்... மண்டையிலிருந்து தெறித்த கண்கள். சூழ்ந்தெடுத்த நுங்குபோல... அவற்றை கீழே போட்டேன். மீன்கள் போல துள்ளித்துள்ளி தாவின. இக்குடிலை மேலும் உள்ளே தள்ளி அமைக்கவேண்டும். இது என் ஆணை" என்றார். அர்ஜுனன் "இக்குடில் உள்ளே விலகித்தான் உள்ளது, மூத்தவரே" என்றான். "எனில் காற்று இவ்வழி அடிக்கிறது" என்று அவர் சொன்னதும் மீண்டும் குமட்டினார். அர்ஜுனன் "இப்போது காற்றே இல்லை" என்றான். அவர் கலங்கிய விழிகளால் அவனை நிமிர்ந்து நோக்கினார். "இங்கே பெண்கள் வருகிறார்கள்... இரவில் இப்படைவீரர்கள் பெண்களை உள்ளே விடுகிறார்கள், தெரியுமா உனக்கு?" என்றார். அர்ஜுனன் "பெண்களா?" என்றான். "ஆம், பெண்கள். நானே அவர்களின் குரல்களை கேட்டேன். இரவில் இருளினூடாக படைகளுக்குள் நுழைகிறார்கள். இங்கே காவலுமில்லை ஒன்றுமில்லை.

அனைவரும் கெடுமதியாளர்கள். சோம்பலில் திளைக்கும் கீழ்மக்கள்!”

அவர் முகம் வெறுப்பில் என சுளித்தது. “நிகழ்வதென்ன என்று எனக்குத் தெரியும். நீயும் உன் உடன்பிறந்தாரும் அவர்களுக்கு உதவுகிறீர்கள். உள்ளே வரும் பெண்கள் இங்கே அலறி அழுகிறார்கள். இறந்த தந்தையரையும் கொழுநரையும் மைந்தரையும் எண்ணி நெஞ்சிலறைந்து கூச்சலிடுகிறார்கள். மண்ணை அள்ளி என் குடில்மேல் வீசுகிறார்கள். மண் குடில்மேல் பொழிவதை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மண்மழை. மழைபோலவே ஒலிக்கிறது அது. அவர்கள் என் குடியை என் மூதாதையரை என் கொடிவழியினரை நாக்கூசும் சொற்களால் பழிக்கிறார்கள். வேண்டுமென்றே இதை செய்கிறீர்கள்.” அவர் சினத்துடன் எழுந்தார். “ஆனால் நான் இதனால் அஞ்சப்போவதில்லை... நான் எவரையும் வணங்கப்போவதுமில்லை. இந்தப் போர் நான் தொடுத்தது. இதில் வென்ற பின்னரே இக்களம்விட்டு செல்வேன்” என்று கூவினார்.

“ஆம் மூத்தவரே, நாம் வெல்வோம்” என்றான் அர்ஜுனன். “நான் வெல்வேன். நான் வெல்வேன். எவர் எதிர்நின்றாலும் சரி, நான் வெல்வேன். என் படைகள் முற்றழிந்தாலும் சரி, நான் வெல்லாமல் நிலைகொள்ளமாட்டேன். சகதேவா, அறிவிலி, எங்கே அவன்?” சகதேவன் உள்ளே வந்து “மூத்தவரே” என்றான். “மது... மது கொண்டுவா” என்றார் யுதிஷ்டிரன். அர்ஜுனன் விழிகாட்ட சகதேவன் வெளியே சென்றான். ஏவலன் மதுக்கோப்பைகளை தாலத்தில் கொண்டுவந்தான். யுதிஷ்டிரன் அவற்றிலொன்றை எடுத்து குடித்து வாயை துடைத்தபடி “போர்வீரர்கள் சாவதில் என்ன? அவர்கள் இறந்தால்தான் நாடு

வாழும். புதிய வீரர்கள் எழுவார்கள். படை இளமையுடன் இருக்கும். போரில்லாத நாடு நெருப்பெழாக் காடு. அங்கே குப்பையே பெருகியிருக்கும். எனக்கு எவர் இறந்தாலும் ஒரு பொருட்டு அல்ல" என்றார்.

"ஆம்" என்றான் அர்ஜுனன். "போரில் வெற்றி ஒன்றே பொருட்டு... நாம் போரில் இறங்கியிருக்கிறோம், வெல்வோம்" என்றார் யுதிஷ்டிரன். "ஆம், அங்கன் எதிர்வந்திருக்கிறான். இரக்கமில்லாதவன். பரசுராமரின் படைக்கலங்கள் கொண்டவன். நம்மை வெல்லும்பொருட்டு வஞ்சினம் எடுத்தவன். அதோடு..." அவர் சுட்டுவிரலை காற்றில் நிறுத்தி சிவந்த நீர்விழிகளால் அவனை உறுத்துநோக்கினார். "அவன் என்னை கொல்லவே விழைவான். ஏனென்றால்..." அவர் சிரித்தபோது தெரிந்த கீழ்மை அர்ஜுனனை திகைக்கச் செய்தது. மானுடருக்குள் இருந்து எழும் அறியாத் தெய்வம். "அவன் என்னை நோக்கி எரிந்துகொண்டிருக்கிறான். அவனுக்குரியவளை நான் கொண்டேன் என்பதனால். ஆம். அவன் உள்ளத்தை நான் அறிவேன்." அவர் மீண்டும் சினம்கொண்டார். "ஆகவேதான் அவன் அவைநடுவே அவளை சிறுமைசெய்தான். அவன் சொன்ன சொற்களை நான் மறவேன். அவன் குருதியை நான் கண்டாகவேண்டும். அவன் களத்தில் விழுந்துகிடப்பதைக் கண்டு நான் நகைப்பேன்."

யுதிஷ்டிரன் மீண்டும் மதுவுக்காக கைநீட்டினார் "போதும், மூத்தவரே" என்று சகதேவன் சொல்ல அர்ஜுனன் மேலும் கொடுக்கும்படி கைகாட்டினான். சகதேவன் தலையசைக்க ஏவலன் மதுக்கிண்ணங்களை யுதிஷ்டிரனிடம் நீட்டினான். யுதிஷ்டிரன் இரு கைகளாலும் கோப்பையை எடுத்து நீர் அருந்துவதுபோல முழுமையாக அருந்தினார். பிறகு வாயை

அழுத்தி தலையைப் பற்றியபடி குனிந்து அமர்ந்திருந்தார். பெருமூச்சுடன் மெல்ல மெல்ல தளர்ந்தார். விழியிமைகள் சரிந்து மூடின. தலை ஆட சரிந்து விழப்போய் கையூன்றி விழித்துக்கொண்டு அவனை நோக்கினார். பின்னர் தனக்கே என "எத்தனை பேரழகன்! எத்தனை பேரழகன்!" என்று முனகினர். எழுந்து "இளையோனே, இத்தனை பேரழகையும் மனிதனுக்கு தெய்வங்கள் அளிக்கையில் அவை நகைத்துக்கொள்கின்றனவா? உன் கோப்பை நிறைந்து வழியுமளவுக்கு ஊற்றுகிறேன் உன்னால் கொள்ள முடிகிறதா பார் என்று சொல்கின்றனவா?" என்றார்.

அவர் முகம் கூர்கொண்டது. காவிய அவைகளில் பேசும் யுதிஷ்டிரன் எழுந்தார். "பேரழகு கொண்டவை இப்புவியில் நிலை ததும்புகின்றன. அவை இப்புவி முழுமையாக தங்களக்கு எதிராக நிற்பதை உணருகின்றன. பாரதவர்ஷத்திலேயே பேரழகு கொண்டது என சொல்லப்பட்ட குதிரை ஒன்றிருந்தது. கேட்டிருப்பாய், அதன் பெயர் சுதேஜஸ். அதை மகதனாகிய பிருஹத்ரதன் வளர்த்தான். அதற்கு ஒரு அகவையாக இருக்கையில் அதன் புகழ் கேட்டு வங்கமன்னன் சமுத்ரசேனன் மகதம் மீது படையெடுத்துச் சென்றான். வங்கனிடமிருந்து அதை பிரக்ஜ்யோதிஷத்தின் மூத்த பகதத்தர் கைப்பற்றினார். பகதத்தரிடமிருந்து அதை கைப்பற்றிச் சென்றான் காமரூபன். ஒருபோதும் அது ஒரு கொட்டிலில் நிலைகொண்டிருக்கவில்லை. ஒருவர் கையிலும் அமையவில்லை. அரிய மணியென அது சென்றுகொண்டே இருந்தது. தன் வாழ்நாள் இறுதி வரை. அருமணிகள் ஒன்று போர்க்களத்தில் நின்றிருக்கின்றன, அல்லது புதைகளத்தில் ஆழத்தில் மறக்கப்பட்டுள்ளன."

“பேரழகு என்பது ஒரு கொடையல்ல. தீச்சொல்” என்றார் யுதிஷ்டிரன் “என்னை விழைகிறாய் அல்லவா, என் போல் இருந்து பார் என்று தெய்வங்கள் அறைகூவுகின்றன அழகுடையோனை நோக்கி. அங்கன் இப்பேரழகுடன் ஒரு மானுடனாக வாழ்ந்த தருணம் உண்டா என்ன? பேரழகை பெண்கள் அஞ்சுகிறார்கள். அவனுக்கு மெய்க்காதல் என்பதே கிடையாது. பேரழகர்களை ஒவ்வொருவரும் எதிரியென்றே காண்கிறார்கள். அவன் சென்று கை வணங்கி நிற்கையில் கருவறைத்தெய்வம் அவனைப் பார்த்து பொறாமை கொள்கிறது. அவன் தன்னைவிட ஆற்றல்மிக்க அனைத்துக்கும் முன் தனித்து நிற்கவேண்டியவன். இளையோனே, அங்கன் அளியவன். இங்கிருந்து எச்சிறப்பும் அடையப்போவதில்லை அவன். இங்கிருந்து சிறு அன்பைக்கூட பெறப்போவதில்லை. அவன் முற்றிலும் தோற்கடிக்கப்படுவான். அதனூடாக இங்கிருந்து அகற்றப்பட்டு அறியாக் கருவறை ஒன்றில் அமர்த்தப்பட்டு தெய்வமாவான். ஆம், அது ஒன்றுதான் நிகழவிருக்கிறது.”

யுதிஷ்டிரன் நெற்றிப்பொட்டை அழுத்தி கண்மூடி அமர்ந்திருந்தார். தலை முன்னும்பின்னுமென ஆடியது. ஏவலன் அவர் வாயுமிழ்வதற்காக தாலத்தை நீட்டினான். அவர் தலையை பீடத்தின் சாய்வில் சாய்த்து கைகளை தளரவிட்டு மல்லாந்து படுத்தார். ஏவலனிடம் “என்ன இங்கே காற்றே இல்லை? மூச்சுத் திணறுகிறது” என்றார். சகதேவன் கைகாட்ட இரு ஏவலர்கள் வந்து மயிற்பீலி விசிறியால் அவருக்கு விசிறத்தொடங்கினார்கள் மெல்ல அவருடைய இமைகள் தழைந்து மூட வாய்திறந்து குறட்டையொலி கேட்கத்தொடங்கியது. அர்ஜுனன் எழுந்து செல்வதாக நகுலனிடம் கைகாட்டியபோது அவர் கண்களைத் திறந்து

“செல்கிறாயா?” என்றார். “ஆம்” என்றான். “இளையோனே, அவனை நீ இன்றே கொல்... இன்றே அவனை கொன்றாகவேண்டும் நீ. அதனால் எப்பழியும் இல்லை. அவன் கொல்லப்பட்டால்தான் முழுமையடைகிறான். அவனைக் கொல்ல அனைத்து தெய்வங்களும் உனக்கு துணையிருக்கும்” என்றார்.

“ஆம், கொல்கிறேன்” என்றான் அர்ஜுனன். “அவனை கொல்... நாளை களத்திலேயே கொல். இல்லையேல் அவன் நம் மைந்தரை கொல்வான். நம் இளையோரை கொல்வான். அவன் மந்தன்மேல் சினம் கொண்டிருக்கிறான். அவன் சொற்கள் எதையும் நான் நம்பப்போவதில்லை. அவனில் குடிகொள்வது நாகநஞ்சு. இளையோனே, சிறுமைசெய்யப்பட்டவனின் வஞ்சம் ஆலகாலத்திற்கு நிகர். அவன் நம்மை முற்றழிப்பான்... நம் மைந்தர் மறைந்தபின் நாம் எதை வென்று என்ன பயன்? பழிநிகர் செய்ததும் அபிமன்யுவை நீ கடந்துவிட்டாய், என்னால் இயலவில்லை. என்னுள் நஞ்சென, நோயென அவன் வளர்கிறான். நம் எஞ்சிய மைந்தர் வாழவேண்டும். நீ அவனை கொன்றேயாகவேண்டும். அபிமன்யுவைக் கொன்ற கர்ணன் பிற மைந்தரைக் கொல்லத் தயங்கமாட்டான்... நீ அவனை கொல்... எனக்கு சொல்லளி. கொல்வாயா?”

அவர் விழிமூடியபடியே திரும்பத்திரும்ப “கொல் கொல்” என்றார். அர்ஜுனன் “ஆம், கொல்கிறேன்” என்றான். அவர் முனகியபடி புரண்டு படுத்தார். “எத்தனை பேரழகன்...” என்றார். அர்ஜுனன் அவரை நோக்கியபடி நின்றான். அவருடைய குறட்டை ஒலிக்கத் தொடங்கியது. சகதேவன் அவனிடம் வெளியே செல்லலாம் என கைகாட்டினான். அர்ஜுனன் யுதிஷ்டிரனை தலைவணங்கிவிட்டு வெளியேறினான். பேரழகு

என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் தன் உள்ளம் சொல்லிக்கொண்டிருப்பதை அப்போது அவன் உணர்ந்தான்.

அன்றிரவு அவன் துயில்கொள்ள முடியாதென்று எண்ணியிருந்தான். துயிலும்பொருட்டு படுக்கும்போதுகூட இரவை வான்நோக்கியே கழிக்கவேண்டியிருக்கும் என எண்ணிக்கொண்டான். வானில் மீன்கள் இல்லை. கொடிகளும் சுடர்களும்கூட நிலைத்து நின்றிருக்கும் காற்றின்மை. இருளின் புழுக்கம். ஓசைகளின் புழுக்கம். மணங்களின் புழுக்கம். அவன் இருட்டை வெறித்துக்கொண்டு கிடந்தான். அறியாமல் கண்கள் மூடியபோது அவன் ஒரு சிறு கனவை கண்டான். கங்கையில் அவனும் இளைய யாதவரும் பாய்ந்தனர். கைவீசி கூச்சலிட்டு நகைத்தபடி ஒருவரை ஒருவர் மிஞ்ச முயன்று நீந்தினர். மறுகரையை அடைந்து ஏறிநின்றவன் மேலும் உயரம்கொண்டிருப்பதை உணர்ந்து அவன் திகைப்புற்று "நீங்களா?" என்றான். "ஆம்" என்று கர்ணன் சொன்னான். "இளைய யாதவர் அல்லவா என்னுடன் நீந்தினார்?" கர்ணன் அவனை நோக்கி காலால் நீரை அறைந்து "அறிவிலி... நான்தான் உன்னுடன் நீந்தினேன்" என்றான். பின்னர் நீரில் அம்பெனப் பாய்ந்தான். சிரித்தபடி அவனை துரத்திச்சென்றான்.

விழித்துக்கொண்டபோது அவன் முகம் மலர்ந்திருந்தது. முகத்தசைகளில் இருந்து அவன் புன்னகைத்துக்கொண்டிருப்பதை உணர்ந்து உடலை நீட்டி மீண்டும் கைகளை விரித்து படுத்துக்கொண்டான். அதன்பின் எந்தத் தடையும் இல்லாமல் ஆழ்ந்துறங்கி கருக்கிருளில்தான் விழித்துக்கொண்டான். கரிச்சான் ஒலி கேட்டது என்பதை எழுந்தபின் உணர்ந்தான். முகத்தில் அப்புன்னகை அப்போதும்

இருப்பதை கன்னத்தசைகளில் இருந்து உணர்ந்தான். முகம்கழுவி உணவுண்டு கவசங்களை அணிந்துகொண்டிருக்கையிலும் அந்த உவகை அவனிடமிருந்தது. அவனுக்கு கவசங்களை அணிவித்த ஏவலர் அதை விந்தையுடன் நோக்கிக்கொண்டிருந்தனர். அவன் கையுறைகளை இழுத்துவிட்டபடி எழுந்தபோது யுதிஷ்டிரன் வந்து தேரிலிருந்து இறங்குவதை கண்டான். அவர் கவச உடை அணிந்து மணிமுடி சூடியிருந்தார். முகம் தெளிவுகொண்டிருந்தது. அருகணைந்தபடி "உன்னை பார்த்துவிட்டே களம்புகவேண்டுமென எண்ணினேன்" என்றார். அவன் தலைவணங்கினான்.

"நான் நேற்று உன்னிடம் என்னென்ன பேசினேன் எனத் தெரியவில்லை. ஆனால் உன்னிடம் பேசினேன் என்பது நினைவிருக்கிறது" என்றார் யுதிஷ்டிரன். "நான் அவனைப்பற்றிய அச்சத்தை சொல்லியிருக்கக்கூடும். அவனைப்பற்றி எண்ணாமல் என் ஒருநாள்கூட கடந்ததில்லை. அவன் என்னை என்ன செய்கிறான் என்பதை எனக்குள் உசாவிக்கொண்டிருக்கிறேன். அவனை நான் அஞ்சுகிறேன். என்றேனும் ஒருநாள் அவன் நமக்கெதிராக கொலைவில்லுடன் வந்து நிற்பான் என்று சிற்றிளமையிலேயே எண்ணியிருக்கிறேன். ஆனால் அதற்கும் அப்பால் ஒன்று உள்ளது, இளையோனே. அவன் என் ஆணவம் ஒன்றை சீண்டுகிறான். இக்குடியில் இக்குருதி வழியில் பிறக்காவிடில் அவன்முன் நான் யார்? எளிய சூதன் அவன். ஆனால் இருபுறமும் கந்தர்வர்கள் கவரி வீசும் தேவன்போல் இருக்கிறான். அவன் முன் நான் ஏவலனாக, இழிந்தோனாக தென்படுகிறேன். குருதியையும் குல அடையாளத்தையும்

கொண்டு அவனுக்கு மேல் அமர்ந்திருக்கையில் பெரும்பிழையொன்றை இயற்றுபவனாக அறிகிறேன்."

"ஆனால் அதை எனக்கு நானேகூட ஒப்புக்கொள்ள இயலாது. ஒப்புக்கொள்வேன் எனில் இந்தப் பட்டாடைகளையும் அணிகலன்களையும் குருதி அடையாளத்தையும் குலத்தையும் துறந்து காடேக வேண்டும். ஒருவேளை அவ்வாறு காடேகினேன் என்றால் இவன் மீதுள்ள அச்சத்திலிருந்தும் ஒவ்வாமையிலிருந்தும் நான் முற்றாக விடுபடுவேன். இப்புவியில் நான் எதிலிருந்தேனும் முழுமையாக விடுபடவேண்டுமெனில் அதிலிருந்துதான். இங்கென்னை கட்டி வைப்பதும் இங்கிருக்கையில் என்னை அலைக்கழிப்பதும் உண்மையில் இவன் மீதான இந்த அச்சமும் ஒவ்வாமையும்தான்." அர்ஜுனன் "நீங்கள் இவற்றையெல்லாம் வேறு சொற்களில் நேற்றே சொல்லிவிட்டீர்கள், மூத்தவரே" என்றான். "ஆம், இதெல்லாம் வெறும் பிதற்றல்கள். இவ்வாறெல்லாம் எண்ணங்களை ஓட்டிக்கொள்வதில் எந்தப் பொருளுமில்லை. இத்தகைய எண்ணங்களால் ஆகப்போவதொன்றுமில்லை" என்றார் யுதிஷ்டிரன்.

"எதன்பொருட்டு நான் துயருறுகிறேன்? அதை இத்தருணத்தில் என்னால் ஒருவாறாக சொல்லாக வகுத்துக்கொள்ள முடிகிறது. இளையோனே, நான் யார்? நான் மனிதர்களை ஒடுக்கி அவர்களை செங்கற்களாக வெட்டி அடுக்கி எழுப்பப்பட்ட கோட்டையின்மேல் அணி மாளிகையொன்று அமைத்து அதற்குள் வாழ்பவன் அல்லவா? அங்கிருந்துகொண்டு மானுட விடுதலை குறித்தும் மீட்பு குறித்தும் சொற்களை சமைத்துக்கொண்டிருக்கிறேன். இந்த இந்திரப்பிரஸ்தம், இந்தப் படை, இந்தக் குடிநிலை அனைத்தும் அறமின்மையின்மேல்

அமைக்கப்பட்டவை. இதன் மேல் இருந்துகொண்டு அறம் பேசுகையில் எனக்குள் ஒன்று என்னை இளிவரல் செய்கிறது. ஒவ்வொரு நாளும் மேலும் அறச்சொற்களை அள்ளி அதில் போட்டு அவ்வாறல்ல என்று எனக்கே சொல்லிக்கொள்கிறேன். அனைத்துத் திரைகளையும் கிழித்து இவன் வந்து நின்றிருக்கிறான். ஆம், அவ்வாறே என்று என்னிடம் சொல்கிறான்" என யுதிஷ்டிரன் தொடர்ந்தார்.

"இவன் விழிகள், தோள்கள், நடை ஒவ்வொன்றும் அதையே எனக்கு சொன்னது. இவன் ஒரு நாள் எனக்கெதிராக வில்லெடுத்து வந்து நிற்பான். அதன் பொருள் ஒன்றே. இத்தனை நாள் இங்கு எவ்வகையிலேனும் வெட்டி அடுக்கப்பட்டவர்கள், செதுக்கி உருமாற்றப்பட்டவர்கள், சிறைப்பட்டோர், வீழ்த்தப்பட்டோர் அனைவரின் சார்பாகவும்தான் அவன் வில்லுடன் வந்து நிற்கிறான். காலம் செல்லுந்தோறும் விசை கூடும் ஒன்று அவனிடம் இருக்கிறது. காலம் செல்லும்தோறும் ஆற்றல் கொள்வது ஒன்றே. நஞ்சு. மானுட உடலில் நோயென்றும் மலைகளில் கந்தகம் என்றும் நஞ்சு உறைகிறது. என்னை அச்சுறுத்துவது அதுதான். அவன் அறத்தின் தேவன், நாம் ஆள்வோர்." அர்ஜுனன் "நாம் போருக்கு எழும் பொழுது" என்று நிலைகொள்ளாமையுடன் சொன்னான்.

"யானையின் அருகே செல்கையில் எல்லாம் இதை நீ உணர்ந்ததில்லையா என்ன? அது நமக்கு ஊர்தியாகிறது, நமது கோட்டைகளை கட்டுகிறது, மரங்களை இழுத்து வருகிறது, நமது ஊர்வலங்களில் அணிகொண்டு அமைகிறது, அரிதாக நமது தெய்வ வடிவமாக வந்து நின்றிருக்கிறது. ஆயினும் அதன் அருகே செல்கையில் அதன் மீது நாம் சுமத்திய அனைத்திற்கும் அடியில் அது பிறிதொன்று என்று

தோன்றுகிறது. அதன் விழிகளை அருகில் சென்று கண்டால் உள்ளிருந்து ஒன்று திடுக்கிடுகிறது. அத்தனை சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு கந்துகளில் தளைக்கப்பட்டாலும் எக்கணமும் அறுத்துக்கொண்டு சீறிஎழும் வாய்ப்புள்ளது யானை. இளையோனே, என்றேனும் ஒருநாள் இப்புவியில் பெரும் யானையொன்று தோன்றும். அந்த வடமலைகள் அளவுக்கு பேருருவம் கொண்டது. விண்ணில் உரசும் மத்தகம் கொண்டது. அது நிலமதிர எழுந்து நம் நகர்களை நோக்கி வருகையில் நமது கோட்டையின் பெருங்கற்கள் ஒவ்வொன்றும் கூழாங்கற்களாக அதிரும். ஒரு கல் இன்னொரு கல்லுடன் உறவை முறித்துக்கொண்டு சரியும்."

"ஆம், இங்கிருக்கும் அனைத்தும் சரியும். இங்கிருக்கும் அனைத்தும் வெறும் புழுதி என்றாகும். அந்த யானை நம்மை நோக்காது. நாம் ஒரு பொருட்டாகத் தெரியாத அளவுக்கு அது பேருருக்கொண்டது. அது நம்மைக் கடந்து செல்லும்போது அதன் கால்பட்டு கூழாங்கல் தொகையென இந்திரப்பிரஸ்தமும் அஸ்தினபுரியும் சிதைந்து அழியும். மகதம் மறையும். அங்கமும் வங்கமும் கலிங்கமும் இல்லாமலாகும். அது வடமலையிலிருந்து தென்கடல் வரைக்கும் செல்லும். இங்குள்ள ஒவ்வொன்றும் சிதைந்து கிடக்கும். அந்த யானையை நான் பலமுறை கனவில் கண்டிருக்கிறேன்." கைதூக்கி மேலும் ஏதோ சொல்ல வந்த யுதிஷ்டிரன் அச்சொற்களை அப்படியே மறந்து தன்னுள் ஆழ்ந்தார். அவர் சொல்லவந்ததை சொல்லவில்லை என அர்ஜுனன் உணர்ந்தான். அது ஓர் உணர்வு. அதை அவர் கருத்துக்களாக ஆக்க முயல்கிறார். ஒவ்வொருமுறையும் அது ஒரு குறையுடன் வெளிப்படுகிறது. ஆகவே அதை மீண்டும் சொல்கிறார்.

யுதிஷ்டிரன் இனிய நினைவெழுந்ததுபோல் முகம் மலர்ந்து “பேரழகன்! அவன் அழகைப்பற்றி ஒவ்வொரு நாளும் நான் எண்ணுவேன். நம் ஐவரில் அவன் அழகைப்பற்றி எண்ணாத எவரேனும் இருக்கிறோமா? அந்த அழகிலிருந்து நம் ஐவருக்கும் மீட்பில்லை. ஏனெனில் நாம் அனைவரும் இணைந்தது, நாம் அனைவரும் விழைவது அவ்வழகு. இளையோனே, என்றும் நான் கனவு கண்டது நீயும் பீமனும் ஒன்றாக இணைந்த பேருடலை. நகுலனின் தேர்த்திறமும் சகதேவனின் நூல்திறமும் ஒன்றாக சேர்ந்த ஒருவனை. என்னைப்போல், அல்ல நான் விழைவதைப்போல் அறத்தில் அமைந்த ஒரு நெஞ்சை. நாம் ஐவரும் ஒன்றாக இணைந்து உருவானவனல்லவா அவன்?” என்றார்.

யுதிஷ்டிரன் பித்துக்குரிய விழியொளி கொண்டிருந்தார். “விண்ணிலிருந்து அவனைப் போன்ற ஒருவன் எப்போதோ பேரோசையுடன் மண்ணில் அறைந்து விழுந்து ஐந்து துண்டுகளானான். அவன் விழிகளே நீ. அவன் தோள்களும் நெஞ்சும் பீமன். அவன் கால்கள் நகுலனும் சகதேவனும். அவன் நாக்கு மட்டுமே நானாயிற்று. அவனில் இருந்த ஏதோ ஒன்று நம்மனைவரிலுமிருந்தும் பிரிந்து அவனாகவே எஞ்சுகிறது.” அவர் சிரித்து “பொருளிலாப் பேச்சு எனத் தெரிகிறது. ஆயினும் அவனைப்பற்றி பேசும்போது மீண்டும் மீண்டும் என்னை கண்டடைகிறேன்” என்றார். அர்ஜுனன் “நாம் கிளம்பும் பொழுது, மூத்தவரே” என்றான்.

அதை கேட்காததுபோல் யுதிஷ்டிரன் சொன்னார் “தோள்முதல் கால்வரை ஒவ்வொன்றும் பிறிதொன்றுடன் முழு இசைவுகொண்ட பிற உடல் இப்புவியில் நிகழ்ந்ததில்லை என்கிறார்கள் சமையர். விசையும் அமைப்பும் ஒன்றையொன்று

மறுக்காமல் இவ்வண்ணம் முயங்கியதில்லை என்கிறார்கள் சிற்பிகள். நின்றிருக்கையில் அழகன் என்றால் அமர்ந்திருக்கையில் அவ்வழகை இழக்கிறான். அமர்ந்திருப்பவன் எழுந்திருக்கையில் பிறிதொருவனாகிறான். எந்நிலையிலும் எக்கோணத்திலும் எவ்வுணர்விலும் பேரழகன் என்று ஒருவன் இப்புவியில் உண்டு என்றால் அவன் இவன்."

"தெய்வங்கள் நம்மை இளிவரல் வடிவுகளாக காட்டுவதற்கென்றே அவனை இப்புவியில் அளித்திருக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் அவன் முன் நின்று எளிய மானுடனாக உணர்கிறோம். சிறியவர்களாக, பொருளற்றவர்களாக நம்மை அறிகிறோம். அரிய உடல், முழுமை கொண்ட உடல். ஆயினும் அவ்வுடலுக்கு மேல் அந்தத் தலை அமர்ந்திருக்கையிலேயே ஒவ்வொன்றும் முழுமைப்பொருள் கொள்கின்றன. அந்த முகமோ தேர்ந்த கலிங்கச் சிற்பி தன் கைகளால் செதுக்கி எடுத்த கற்சிலை. அந்த முகத்தில் அந்த விழிகள் இல்லையெனில் இவையனைத்திற்கும் எந்தப் பொருளும் இல்லை. அவன் கால் சுட்டுவிரல் நகத்திற்கும் அழகூட்டுவன அந்த விழிகளே. ஆலயக்கற்கள் அனைத்திலும் இறைவனே அமைந்திருப்பதுபோல."

"அவன் எங்கேனும் எவரையேனும் கூர்ந்து நோக்கியதுபோல் நீ உணர்ந்ததுண்டா? அவன் எவர் சொற்களையாவது கேட்பதாக அவ்விழிகள் காட்டியதுண்டா? நானறிந்தவரையில் நோக்குகையில் நோக்காததாக உணர்வது இளைய யாதவரின் விழிகளில் உள்ளது. அது தெய்வம் மானுடனாகி வந்த நோக்கு என்று எனக்குத் தோன்றுவதுண்டு. இது அதற்கிணையான நோக்கு. மானுடன் தெய்வமாக எழும் தருணத்தின் நோக்கு. அள்ளிக்கொடுக்கும் வள்ளலின் கண்கள் அவை என்கிறார்கள்.

நான் அத்தகைய எவரையும் பார்த்ததில்லை. ஆனால் முலையூட்டுகையில் குனிந்து நோக்கும் அன்னையின் விழிகளை கண்டதுண்டு. முதல்முறை அவற்றை உள்ளுணர்ந்த நாள் நான் மெய்ப்பு கொண்டு நடுச்சாலையில் நின்றுவிட்டேன். என் முன் ஒரு சிற்றாலயப் படியில் அமர்ந்து அந்த குறவர்குலத்து அன்னை முலையூட்டிக்கொண்டிருந்தாள். விழிசரித்து முகம் கனிந்து...”

“நூறு முறை ஓடிச்சென்று அவள் கால்களில் விழுந்து அன்னையே அன்னையே என்று அரற்றியது என் உள்ளம். அதே விழிகள் இவனுடையவை. அதே விழிச்சரிவு. இவன் தன் கண்களினூடாக தன்னை தேவனாக்கிக்கொள்கிறான். அவன் கண்கள் அளிகொண்டவை. எவரையும் நோக்கும் கணமே உட்புகுந்து உளம் அறிபவை. நோக்குபவனாகவே மாறிநின்று அவன் துயரை தானே அடைபவை. அதன்பெயரே பேரளி. இக்கணம் இவ்வாறு தோன்றுகிறது, அறிவும் வீரமும் குடிப்பிறப்பும் எதுவும் ஒரு பொருட்டல்ல. கண்ணோட்டம் ஒன்றே மானுடனை தெய்வமாக்குகிறது. அளிநிறைந்தவனுக்கு மட்டுமே தெய்வங்கள் இருபுறமும் சாமரம் வீசுகின்றன. அளி என்பது உருகி நெகிழ்ந்து நீர்மை கொள்வது. உருகாது எஞ்சுவது ஆணவம் மட்டுமல்ல, அறிவும் மெய்ஞானமும் கூடத்தான்.”

“அவன் சூரியனின் மைந்தன் என்று சொன்னவன் பிறிது எதையோ உணர்ந்திருக்கிறான். எத்தருணத்தில் அவனுக்கு அப்படி தோன்றியிருக்கும்? சிற்றிளமையில் அவனை யாரோ அவ்வாறு அடையாளம் கண்டிருக்கிறார்கள். அங்கநாட்டின் ஏதோ ஒரு சிற்றூரின் நிமித்திகன். அவன் அத்தனை சிறியவனாக இருந்ததனால்தான் அவனைவிட பெரியன

பல்லாயிரவற்றை எளிதில் கடந்து சென்று உண்மையை கண்டடைய முடிந்தது. கோட்டையை, படைக்கலங்களை, கதவுகளையும் கடந்து வரும் சிறு ஈபோல அவன் கருவறை தெய்வத்தின் மேலமர்ந்தான். அவன் மொழிகளில் இருந்தது உண்மை. அவன் கதிரவன் மைந்தனேதான்."

"நான் அவனைப்பற்றி நேற்று உன்னிடம் சொன்னதென்ன என்று தெரியவில்லை. எதுவாயினும் அவை என்னை ஆட்டிவைக்கும் சிறுமையின் சொற்கள். அவையல்ல நான். அதை சொல்லவே வந்தேன். இளையோனே, அவன் ஏற்பான் என்று ஒரு உறுதி எனக்கு அமையட்டும், அவன் காலடியில் என் மணிமுடியை வைப்பேன். இப்பாரதவர்ஷத்தை முழுதாளும் தகுதி கொண்டவன் அவன் ஒருவனே, பிறவியிலேயே மும்முடி சூடி வந்த சக்ரவர்த்தி அவன். நான் எளியவன். என் விழைவால் மட்டுமே இக்குடியை, இவ்வுறவுகளை பற்றிக்கொண்டு கிடப்பவன். சிறியவன். அச்சிறுமையை உணர்ந்து மேலும் சிறுமை கொள்கிறேன். அச்சிறுமையை துறக்க இயலாது இவ்வாழ்நாள் முழுக்க இவ்வண்ணம் உழன்றலைகிறேன்."

அர்ஜுனன் "புலரியில் கனவு கண்டீர்களா?" என்றான். அவனை நோக்காமல் திரும்பிக்கொண்ட யுதிஷ்டிரன் "ஆம்" என்றார். அர்ஜுனன் மேலும் ஏதும் சொல்லவில்லை. யுதிஷ்டிரன் "இனிய கனவு, இளையோனே" என்றார். பின் தன் விரல்களால் விழிகளை அழுத்திக்கொண்டார். அப்பால் நகுலன் புரவியில் வந்து இறங்குவதைக் கண்டு இருவரும் திரும்பி நோக்கினர். அத்தருணத்தை அவ்வண்ணம் முடித்துவைக்க அவன் வந்ததை எண்ணி அர்ஜுனன் நிறைவடைந்தான். அப்போதும் தன் முகம் புன்னகையுடன் மலர்ந்திருப்பதை உணர்ந்தான்.

இருட்கனி - 19

குருக்ஷேத்ரத்தின் தெற்குக்காட்டில் பந்தங்கள் சூழ்ந்த வட்டத்தின் நடுவே முழுதணிக்கோலத்தில் படுத்திருந்த கர்ணனின் உடல் செங்கனல் குவியலென மின்னிக்கொண்டிருக்க, மூடிய இமைகளுடன் புன்னகை நிறைந்த உதடுகளுடன் அவன் சுற்றிலும் ஒலித்த புகழ்மொழிகளை செவிகூர்ந்து கேட்டுக்கொண்டிருப்பவன்போல் தோன்றினான். பன்னிரு களங்களில் நான்காவதாக அமைந்த சூதராகிய அலவர் தன் கிணைப்பறையில் இரு விரல்களை ஓடவிட்டு விம்மலோசை எழுப்பி தோல் முழவின் முழக்கமென கார்வை கொண்டிருந்த குரலில் முனகி அடிச்சுதியை நிறுவி அதிலிருந்து சொல் திரட்டிக்கொண்டு எழுந்து கர்ணனின் புகழை பாடத் தொடங்கினார். சூழ்ந்திருந்த பிற சூதர்கள் உடன் சொல் எடுத்து அவரை தொடர அங்கு அமர்ந்திருந்த சூதர்கள் அந்த ஓசையின் சரடால் ஒருவரோடொருவர் சேர்த்துக் கட்டப்பட்டனர்.

மெல்ல உடல் சேர்த்து ஆடி விழிகள் கர்ணனின் உடலில் ஊன்றியிருக்க அவர்கள் தங்களுக்குத் தாங்களே அதை பாடிக்கொண்டனர். அத்தருணத்தில் பிற மானுடர் விழிகள் எதுவும் அவர்களை பார்க்கவில்லை. எச்செவியும் அதை கேட்கவில்லை. நுண்ணுருவாக எழுந்த தேவர்கள் விண்ணில் சூழ்ந்து அவர்களை நோக்கி அச்சொற்களை கேட்டுக்கொண்டிருந்தனர். அறியா வடிவில் மண்ணுக்கடியில் வேர் நெளிவென செறிந்திருந்த நாகப்பெருக்கு தங்கள் கட்செவிகளால் அவ்வொலிகளை பெற்றுக்கொண்டிருந்தது. இருளென சூழ்ந்திருந்த காட்டுக்குள் பல்லாயிரம் தெய்வங்கள்

அப்புகழை தங்கள் புகழென்றே எண்ணி உளம் மயங்கி அமைந்திருந்தன. தாழம்பூ வடிவில் களத்திலமைந்த நிலவனும் குங்குமச்சிமிழ் வடிவில் விழியளும் அவர்களை நோக்கிக்கொண்டிருந்தனர்.

அலவர் சொன்னார்: கேளுங்கள் இதை! குருக்ஷேத்ரத்தில் இது நிகழ்ந்தது. விண்ணாளும் கதிரவனின் மைந்தன் தன் வெற்றிவில் விஜயத்துடன் எரியெழுந்த பெருமரம்போன்ற பொற்தேரில் களம்புகுந்தான். அவனைச் சூழ்ந்து ஏழு மைந்தர்கள் ஏழு வண்ண ஒளிக்கதிரென பிரிந்து நிலைகொண்டனர். அப்போரைப் பார்க்க விண்ணில் தேவர்கள் செறிந்தனர். மண்ணுக்கடியிலிருந்து நாகங்கள் எழுந்து நிலமெங்கும் பரவிய கூழாங்கற்களை தங்கள் விழிகளாக்கி திகைப்புடனும் பதைப்புடனும் நோக்கி நின்றன. கதிரவனின் ஒளி எழுந்ததும் தேவர்கள் விண்ணில் ஆர்ப்பரித்தனர். விண் முழுக்க நிறைந்திருந்த புள்குலம் மட்டுமே அவ்வொலியை கேட்டது. அதற்கேற்ப முகில்களின் மேல் அவை சுழன்றும் ஒன்றோடொன்று கோத்தும் சுழித்துக் கொப்பளித்து அலைமோதிக் கொண்டாடின.

என்றுமிலாதபடி விண்ணில் அவ்வண்ணம் பறவைக்கொப்பளிப்பு நிறைந்திருப்பதை கீழிருந்த படைப்பிரிவில் ஒரு சிலரே நோக்கினர். வியந்து விழிதாழ்த்தி கர்ணனை பார்த்தபோது அவன் நெஞ்சு அனலென பற்றி எரிவதுபோல் அக்கவசத்தை கண்டனர். இரு காதுகளிலும் எரிவிண்மீன் துளிகளென குண்டலங்கள் நின்று அசைந்தன. அச்சத்துடன் விழி திருப்பி அவர்கள் பார்த்தபோது எதிரில் ஏழு புரவிகள் பூட்டப்பட்ட விரைவுத்தேரில் கடிவாளங்களை இடக்கையால் பற்றியபடி, வலக்கையை ஊழ்க முத்திரையுடன்

தொடை மீது இயல்பாக அமைத்து, புன்னகை நிறைந்த உதடுகளும் ஊழ்கத்திலென பாதி சரிந்து இளந்தாமரை மலர்வளைவென அமைந்த இமைகளுமாக அமர்ந்திருந்த கார்வண்ணனை கண்டனர். அவன் தலையில் சூடிய மயிற்பீலி அங்கிலாத காற்றில் மெல்ல நலுங்கிக்கொண்டிருந்தது. அது அவ்வனைத்தையும் நோக்குவது போலவும் அனைத்தையும் அப்பால் நின்று நோக்கும் விழிபோலவும் உளமயக்கு அளித்தது.

தேரில் நின்றிருந்த இந்திரனின் மைந்தன் உடலெங்கும் அணிந்திருந்த கவசங்களில் சூழ்ந்திருந்த பந்தங்களின் ஒளியைப் பெற்று சுடர் கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த காண்டீபம் பதினைந்து நாள் போரில் அதன்மேல் பட்ட குருதியினால் நாகஉடலென கரிய மின்மெருகு கொண்டிருந்தது. அவன் ஐம்புலன்களும் அகத்தடங்க விழியினால் விளக்குவான் என அசைவிலாது தேரில் நிலைகொண்டிருந்தபோதும்கூட காண்டீபம் போர் போர் என விம்மித் துடித்துக்கொண்டிருந்தது.

போர் நிகழும் கணத்திற்காக அங்கிருந்த ஒவ்வொருவரும் காத்திருந்தனர். விண்ணில் கதிரவன் எழுவதற்காக பன்னிரு நோக்குமாடங்களில் நூறு கணியர்கள் விழி கூர்ந்திருந்தனர். அவர்களில் எண்மர் தொலைநோக்கு ஆடிகளை ஒன்றுடன் ஒன்று பொருத்தி விழிபூட்டி நோக்கினர். எஞ்சியோர் அப்பொழுதைக் கணிக்கும் வரைபடங்களை விரித்து அமர்ந்திருந்தனர். விண்ணை நோக்கிக்கொண்டிருந்த கணியர் ஒருவர் மெல்லிய ஒளியுடன் ஓர் அசைவு நிகழ்வதைக்கண்டு உளம் நடுங்கினார். கதிரெழுவது அவ்வாறல்ல என்று அவர் நெடுங்கால விழியறிதலால் உணர்ந்திருந்தார். அறியாது

அவரது கை நீண்டு அருகிலிருந்த கணியரைத் தொட அவரும் கூர்ந்து நோக்கி “என்ன அது?” என்றார். அதற்குள் பிற கணியர்களும் விழிகூரத் தொடங்கினர்.

அங்கு அப்போர் தொடங்கிய ஒவ்வொரு நாளும் வந்தமர்ந்து புலரியையும் அந்தியையும் அறிவித்தவர்களாயினும் அன்றிருந்த பதற்றத்தையும் கொந்தளிப்பையும் அவர்கள் முன்பு எப்போதும் அடைந்திருக்கவில்லை. அன்று அரிதென ஒன்று நிகழும் என்றும், அது பெருந்துயர் வடிவிலேயே வந்தமையும் என்றும் எவ்வண்ணமோ அவர்கள் உணர்ந்திருந்தார்கள். பொல்லா பிழையென ஒன்று நிகழ்ந்து முற்குறி கூட்டும் என எண்ணினார்கள். “அது ஒரு புரவி” என்று ஒருவர் மெல்ல சொன்னார். அங்கிருந்த அனைவருக்கும் அது கேட்டது. “ஆம்” என்று பெருமூச்சுடன் இன்னொருவர் கூறினார். “புரவியின் குஞ்சிமயிர்” என்றார் பிறிதொரு கணியர். அதற்குள் பிற அனைவருமே அப்புரவியை பார்த்துவிட்டிருந்தார்கள்.

புரவி முகம் தூக்கி பிடரிமயிர் உலைத்து மூக்குவிரிய தலைதாழ்த்தி கீழே விரிந்திருந்த நிலப்பரப்பை பார்த்தது. அதன் கழுத்தும் முன்னங்கால்களும் தெளிந்தெழுந்து வந்தன. “ஒற்றைப்புரவி!” என்று அப்பால் ஒருவர் சொன்னார். அதை அவர்கள் அனைவரும் தெளிவுற உணர்ந்தனர். பெரும்புரவி முதலில் வர அதைத் தொடர்ந்து மணிநீலத் தேர் துலங்கியது. தேர்த்தட்டில் அமர்ந்திருந்தவனை அவர்கள் அனைவரும் பல்வேறு உருவில் பலமுறை கண்டிருந்தார்கள். திகைப்புடன் அவர்கள் அவனை விழிமலைக்க நோக்கினார்கள்.

இந்திரனை வணங்கும் வேத மந்திரத்தை முதுகணியர் ஒருவர் கைகூப்பியபடி சொன்னார். அறியாது பிறரும் அதில் இணைந்துகொண்டனர்.

“பெருநீர்களுக்கு வழிவகுக்கும் உன் பெருமை

என்றுமென இன்றும் திகழ்கிறது

அவற்றை நீ ஆள்கிறாய்

உணவுக்கு அமரும் விருந்தினர் என

அமைகின்றன மாமலைகள் உன் ஆணையால்

நற்செயல்களின் தலைவ,

உன்னால் நிலைகொள்கின்றன உலகங்கள்

இந்திரனே! உனக்கு நிகராகவோ மேலாகவோ

தேவர்களில் எவருமில்லை

மானுடரில் எவருமில்லை

நீ நீர்களை தடுத்த அஹியை அழித்தவன்

நீர்ப்பெருக்குகளை கடல்சேர்ப்பவன்

நீ தடையுண்ட நீர்களை விடுவித்து

திசைகளெங்கும் செலுத்துபவன்

நீ சூரியனையும் ஒளியையும் புலரியையும்

பிறப்பித்து உலகங்களனைத்தையும் ஆள்பவன்!”

பரத்வாஜ முனிவரின் அழிவிலாச் சொற்கள் அங்கே ஒலித்தன. இந்திரனின் தேருக்கு வலது பக்கம் வெள்ளை யானை

தோன்றியது. அதில் இந்திர மைந்தன் சயந்தன் அமர்ந்திருந்தான். இந்திரனைப்போலவே மணிமுடியும் கவசமும் அணிந்திருந்த அவன் பொன்னிறஒளி கொண்டிருந்தான். இடப்பக்கம் வந்த தேரில் இருந்தவனை ஒரு கணியர் அடையாளம் கண்டார். "செந்நிறத்தோனாகிய பாலி!" என்றார். "ஆம், அவனேதான்!" என்றார் இன்னொருவர். "மைந்தருடன் எழுந்துள்ளான். மைந்தனின் போர்காண வந்திருக்கிறான்!" என்றார் முதிய கணியர்.

அவர்கள் எழுந்து நின்று கைகளை தலைக்குமேல் கூப்பி வாழ்த்தொலித்தனர். "இடிமின்னல்களின் அரசே! மண்ணை குளிர்விப்பவனே! விண்ணை ஒளியால் நிரப்புபவனே! உயிர்கள் அனைத்திலும் ஆற்றல் என நிறைபவனே! உள்ளத்தில் காமத்தை விளைவிப்பவன் நீ. மலர்களில் தேனையும் தளிர்களில் வண்ணத்தையும் கனிகளில் இனிப்பையும் நிறைப்பவன். வசந்தத்தின் தலைவன். உடலே விழியானவன். அமுதத்திற்கும் அனைத்து நன்மைகளுக்கும் உரிமையாளன். அரசே! இங்கெழுக! இங்கு உன் நோக்கு வந்து படுக!"

கீழே பெருகிநின்றிருந்த படைவீரர்கள் சிலர் திரும்பிப்பார்த்தபோது கீழ்ச்சரிவில் பெரிய முகிலொன்றை கண்டனர். செந்நிறத்தில் அது சுடர்கொண்டிருந்தது. அதன் விளிம்புகள் ஒளி கண் கூச கூர் காட்டின. நேர் எதிரில் மேற்குத் திசையில் பெரும் மழைவில்லொன்று தோன்றி முழுமையாகத் திரண்டு வளைந்து நின்றது. அத்தகைய கலைவிலா வான்வில்லை அவர்கள் எவரும் முன்னர் நோக்கியிருக்கவில்லையாதலால் படைகளிலிருந்து வியப்பொலி எழுந்தது. பலர் கைசுட்டி அந்த வில்லை காட்ட சற்று நேரத்திலேயே அனைவரும் அவ்வில்லை பார்த்தனர்.

ஒளி நனைந்து நின்ற அப்பெரும் முகில்திரளையும் அதன் மறுவடிவு எனத் தெரிந்த வண்ணவளைவையும் பார்த்த இரு படைகளும் கொண்ட முழக்கம் அங்கு முரசுப் பானைக்குள் கார்வையென நிறைந்திருந்தது.

விண்ணில் வெடிப்பென ஓர் இடி முழக்கம் எழுந்தது. மிதக்கும் மலைத்தொடர்களைப்போல் செறிந்திருந்த முகில்குவைகளில் அந்த ஓசை பலநூறு முறை எதிரொலித்தது. முகில்கணங்கள் தொட்டுத்தொட்டு கனைத்துக்கொண்டே இருந்தன. மழைக்காரின் இருள்திரளுக்குள் பலநூறு சிறுமின்னல்கள் வாள்வீச்சின் ஒளித்துடிப்புகளெனத் தெரிந்து துடித்து மறைந்தன. பின்னர் மென்மழைத்தூறலொன்று படைகளின்மேல் இறங்கியது. முகிலிலிருந்து பெய்த செவ்வொளியை பெற்றுக்கொண்டு பொற்துருவல்களென அந்த மழை காற்றில் அலைவுகொண்டது. மேலிருந்து மென்மையாக அசைக்கப்படும் கவரிபோல் அதன் பீலித்தொகை படைகளின்மேல் பரவி தெற்கிலிருந்து வடக்காகவும் வடக்கிலிருந்து மீண்டும் தெற்காகவும் ஊசலாடியது.

யானைகளின் கவசங்களும் தேர்களின் மகுடங்களும் நனைந்து ஒளிகொண்டு சொட்டத் தொடங்கின. குடைகளின் விளிம்புகளில் இருந்து சுடர்கொண்ட மணிகள் உதிர்ந்தன. வாள்வளவுகள் மின்னின. வேல்முனைகள் தளிர்களாயின. படைவீரர்கள் அந்தப் புலரிக் குளிர்மழையில் மெய்ப்படைந்தனர். உடல் குறுக்கி தலையை உதறி அந்த இனிமையில் திளைத்தனர். குளிர் அவர்களில் நினைவுகளை எழுப்ப அங்கிருப்போர் வேறெங்கெங்கோ வாழலாயினர். முகில்களில் நிறைந்திருந்த ஒளி அனைத்து

மழைத்துளிகளிலும் குடியேற நீரே ஒளியென மாறி வானாகி திசைகள் என அவர்களை சூழ்ந்திருந்தது.

நிமித்திகர்கள் நெஞ்சு விம்ம, கைகூப்பியபடி, உடல் மென்மழையில் நனைந்து நீர் வழிய, கிழக்கு திசையை நோக்கிக்கொண்டிருந்தனர். முகில்திரள்கள் மேலும் மேலுமென எழுந்து அனைத்துத் திசைகளையும் ஒன்றென ஆக்கி சூழ்ந்தன. கணிகர்களில் ஒருவர் "இன்று புலரி எழுவதை எவ்வண்ணம் கணிப்பது? முகில் மூடியிருந்தால் புலரி கணிப்பதற்கென உள்ள நெறிகள் போர்க்களத்திற்கு பொருந்துமா?" என்றார். "பொறு" என்று மூத்த கணிகர் கைவிரல் காட்டி அறிவுறுத்த அவர் தலைவணங்கினார். இடியோசை ஒன்று எழுந்து சூழ்ந்திருந்த மழைத்திரையை நடுங்கச்செய்தது. அதன்மேல் ஏறி ஒலிப்பதுபோல் மீண்டும் ஓர் இடியோசை. அதன்மேல் என மீண்டும் ஒரு இடியோசை.

இடியோசைகள் ஒன்றன்மேல் ஒன்றென விழுந்து நிலத்தை நடுங்கச்செய்தன. குருக்ஷேத்ரத்தின் மண்ணுக்கடியில் பல்லாயிரம் வளைகளில் சேர்ந்திருந்த நாகங்கள் நடுங்கி உடலைச்சுருட்டி தலையை நடுவே வைத்து இறுக்கிக்கொண்டன. மின்னல்களின் ஒளியில் படைகளின் வண்ணங்கள் விழிகளை நடுக்கச்செய்தபடி எரிந்து எரிந்து அணைந்தன. மின் ஓய மின்னிய காட்சி விழிகளில் அவ்வண்ணமே மீண்டும் சற்று நேரம் நிலைத்திருந்து மெல்ல அணைந்து மறைந்தது. ஒளி சூடிய படைக்கலங்களும் தேர்முகடுகளும் கவசங்களும் இறுதியாக மறைந்தன. வெண்ணிற இருள் விழிகளை நிறைத்த கணத்தில் அடுத்த மின்னல் எழுந்து முற்றிலும் புதிய ஒரு காட்சியை கண்ணுக்குள் வெளிக்கசெய்தது.

“பெருமழை அறையக்கூடும். இன்றைய போர் மழையால் முடிவு செய்யப்படும் என தோன்றுகிறது” என்றார் ஒரு நிமித்திகர். “மழை எழுமெனில் இங்கு நிகழ்வது படைகளின் போரல்ல, விண்ணரசனின் போர். மழையை அறிந்தவன் இந்திரனின் மைந்தன். மழைத்துளிகளைப்போன்ற அம்புகள் கொண்டவன். இந்திரசாபம் என அவன் வில்லை சூதர்கள் பாடுகிறார்கள். இன்றைய போரில் மைந்தனை தந்தை வழிநடத்தப்போகிறார் போலும்.” முதுநிமித்திகர் திரும்பி மீண்டும் கைகாட்டி அவர்களை பேசாதொழிக என அடக்கினார். அவர்கள் அமைய நீள்நேரம் கடந்து ஒருவர் “பொறுத்திருப்பதா?” என்று முதுநிமித்திகரிடம் கேட்டார். “ஆம்” என்று முதுநிமித்திகர் தலையசைத்தார்.

மீண்டும் சற்று நேரம் கழித்து அவர் “மழை எக்கணமும் இழியும் என குறுகி அணைந்துவிட்டது. மழைக்கு முன்னர் பொழுது கணித்து போர் அறிவிப்பு செய்வது உகந்தது. மழைக்குள் நம் ஒலிகள்கூட சென்று சேராதாகும். நாம் எரியம்பு எழுப்பினாலும் படைகளின் விழிகளில் படாதாகலாம்” என்றார். இளம் கணியர் ஒருவர் “அன்றி இம்மழை முடிவதுவரை போரை நிறுத்தி வைக்கலாம்” என்றார். பிறிதொருவர் “மழை எழுகையின் முனைப்பை பார்த்தால் இன்று அந்தி வரை பொழிவு நிலைக்காது தொடரும் என்று தோன்றுகிறது” என்றார். “இது மழைக்கான பருவமல்ல. ஆனால் பதினைந்து நாட்களாக ஓங்கி ஓங்கி அமைந்தது இந்திரனின் கை” என்றார்.

சீற்றத்துடன் திரும்பிய முதுநிமித்திகர் “அறிக, இப்புடவியில் ஒவ்வொன்றையும் பிறிதொன்றால் நிகர் செய்துள்ளது பிரம்மம்! மூன்று முதல் தெய்வங்களும் ஒருவரோடொருவர் நிகர்

செய்யப்பட்டவர்கள் என்று அறிக! தன்னை மாயையால் நிகர் செய்து இப்புடவியை சமைத்திருக்கிறது அது. இங்கு ஒற்றை விசையென்றும் ஓங்கும் தரப்பென்றும் அழியாது நின்றிருக்கும் எண்ணமென்றும் எதுவுமில்லை" என்றார். அப்பால் நின்றிருந்த இளம் கணிகன் "அதோ" என்று மூச்சின் ஒலியில் சொல்ல அனைவரும் திரும்பிப் பார்த்தனர். முதலில் அவன் கூறுவதென்ன என்று எவருக்கும் புரியவில்லை. ஆயினும் விழி கூர்ந்து கிழக்கு முனையை பார்த்துக்கொண்டிருந்தனர்.

வானில் ஒரு மெல்லிய விரிசல் தென்பட்டது. அதற்கப்பாலிருந்து பல்லாயிரம் யானைகள் தங்கள் தந்தங்களால் உந்தி அவ்விரிசலைக் கிழித்து முகில்திரையை மேலேற்றுவதுபோல தோன்றியது. நொறுங்கும் ஒலியுடன் மெல்ல முகில்பாறைகள் ஒன்றுடன் ஒன்று முட்டின. உரசுமிடங்களில் பொறி பறந்தது. அவை ஒன்றுடன் ஒன்று உந்தி அகல அந்த விரிசல் விரிந்தபடியே வந்தது. வானம் சுருங்கி அகலும் திரையென விலக அதற்கு அப்பாலிருந்து அணை திறந்து பீறிடும் வெள்ளமென இளஞ்செம்மை கலந்த வெண்ணிற ஒளி சரிந்து வந்து தொலைவில் தெரிந்த குன்றுகளின் மேல் படிந்து அவற்றை படிகக்கற்களென சுடரவைத்தது. குருக்ஷேத்ரத்தின் அனைத்துப் படைக்கலங்களும் ஒளி கொண்டன. ஈரப்பரப்புகள் அனைத்திலும் பல்லாயிரம் கதிரவன்கள் தோன்றினர்.

நிமித்திகர் தன் கையை விரித்து அசைக்க இளநிமித்திகர்கள் தங்கள் கணிப்பரப்புகளில் கையோட்டி பொழுது குறித்தனர். அறிவிப்பு நிமித்திகன் கையிலிருந்த கொடியை அசைத்தான். அவன் கொடியை நோக்கி சூழ்ந்தமர்ந்திருந்த முரசுக்காவலர்கள் எழுந்து முரசுப்பரப்புகளில் கோல்களை ஓடவிட்டனர்.

வெறியாட்டு கொண்டு நடனமிடும் பூசகர்கள்போல முழைகள் தோல்பரப்பில் நின்றாடின. வானில் எழுந்துகொண்டிருந்த இடியோசைக்கு நிகராக முழவுகள் ஒலிக்கத்தொடங்கின. கொம்புகள் சென்று இணைந்துகொண்டன. மழைத் தாரையை கீறிச்செல்லும்படி கூரிய ஒலி எழுப்பும் நீள்குழல்கள் ஒலித்தன. அவ்வொலி கேட்டு பலநூறு காவல்மாடங்களிலிருந்து போர்முரசுகளும் கொம்புகளும் ஒலிக்கத் தொடங்கின.

கீழே பெருகியிருந்த இரு படைகளுக்கும் நடுவே செந்நிற மண்பரப்பின் மீது இளமழை பொழிந்து அதை நிணக்கதுப்பென மாற்றிவிட்டிருந்தது. தேர்களின் சகடங்கள் அச்சேற்றில் சற்றே அழுந்தி நின்றிருந்தன. போர்முரசுகள் ஒலித்தும்கூட மழைத்தழுவலில் இருபக்கமும் நின்றிருந்த படைகள் போரிடும் எண்ணமிலாதவைபோல், வேறெதையோ கண்டு திகைத்தவைபோல் அசைவிழந்து நின்றன. கௌரவப் படைகளில் எவரோ "வெற்றிவேல்! வீரவேல்!" என்று கூற அவ்வொலி அக்கணமே பற்றிக்கொண்டு மொத்தப் படையும் "வெற்றிவேல்! வீரவேல்!" என்று கூவியபடி பாண்டவப் படை நோக்கி சென்றது. அதன் எதிரொலியென "வெற்றிவேல்! வீரவேல்! வெல்க மின்கொடி! வெல்க இந்திரப்பிரஸ்தம்! வெல்க அறச்செல்வன்!" என்று கூவியபடி பாண்டவப் படை அவர்களை எதிர்கொண்டது.

மேலிருந்து நோக்கிய நிமித்திகர்கள் இமைக்கணங்களுக்குள் குருக்ஷேத்ரத்தின் நீண்ட செந்நிறச் சதுப்பு தேர்களாலும் யானைகளாலும் புரவிகளாலும் கவசமணிந்த உடல்களாலும் முற்றாக நிரம்பிவிட்டதை கண்டனர். இரு ஆறுகள் இணையும் கோடென அப்போர்முனை கொந்தளிக்கத் தொடங்கியது. அது முழுவிசை கொண்டதும் அவர்கள் ஒவ்வொருவராக

உடல்தளர்ந்து நீள்மூச்செறிந்தனர். அவர்கள் அதற்குமேல் அங்கே செய்வதற்கு ஒன்றுமிருக்கவில்லை. அந்தியை அறிவிக்கும்வரை அங்கே காத்திருந்தே ஆகவேண்டும். அவர்களில் சிலர் நீர் அருந்தினர். சிலர் வாய்மணங்களை மெல்லத் தொடங்கினர். சிலர் மார்பில் கைகளைக் கட்டி தலைதாழ்த்தி துயில்கொள்ளலாயினர்.

அங்கு அமர்ந்து பதினைந்து நாட்களாக அவர்கள் அந்தப் போரை பார்த்துக்கொண்டிருந்தனர். முதலில் நோக்கியபோது அவர்களிடமிருந்த பரபரப்பும் அச்சமும் ஓரிரு நாட்களில் முற்றாக அழிந்துவிட்டிருந்தன. முதலிரு நாட்களில் கீழிருந்த போர்க்கொப்பளிப்பை புரிந்துகொள்வதற்கு அவர்கள் முயன்றனர். பின்னர் அது எவ்வகையிலும் தங்கள் நூல்களாலோ நுண்ணறிவாலோ விளங்கிகொள்ளத்தக்கதல்ல என்று அறிந்துகொண்டனர். ஓரிரு கணங்களுக்குப்பின் எதிரி எவர் நம்மவர் எவரென்றே அவர்களால் பிரித்துக்கொள்ள இயலவில்லை. வெறும் உடல்களின் அலைக்கொந்தளிப்பு. அவர்களுக்குமேல் அம்புகளின் மெல்லிய வலைப்படலம். மிதிபடும் நிலம்.

என்றுமே அவர்கள் தங்களை முரண்கொள்ளும் அனைவருக்கும் அப்பால் நிறுத்தியிருந்தார்கள். வெற்றியும் தோல்வியும் அவர்களுக்கு கணிப்புகளாகவும், பிழைகளாகவும், கணிநிறைவின் விந்தையாகவும் மட்டுமே தெரிந்தன. அஸ்தினபுரியின் நிமித்திகர்களும் இந்திரப்பிரஸ்தத்தின் நிமித்திகர்களும் ஓரிடத்தில் சந்தித்துக்கொண்டால் அங்கேயே அமர்ந்து தங்கள் அனைத்துச் சுவடிகளையும் பரப்பி வருவனவற்றை ஆராய்ந்து திரள்பொருள் தேடத்தொடங்கிவிடுவார்கள். அமர்கையில்

அஸ்தினபுரியினராகவும் இந்திரப்பிரஸ்தத்தினராகவும் இருப்பவர்கள் கவடிகளை விரித்து நூற்கூற்றுகளை எண்ணிச் சூழ்ந்து சொல்லாடத் தொடங்குகையிலேயே அனைத்திற்கும்மேல் எழுந்து விண்ணில் உலாவும் பறவைகள்போல் கீழே நோக்கத் தொடங்கிவிடுவார்கள். சொல்லும், உணர்வும், கடந்த கனவும், அதன் ஆழத்தில் எழும் பிறிதொரு அறிவுறுத்தலும் தங்களில் அமைகையில் தாங்கள் இவ்வுலகத்தில் வாழ்பவரல்ல என்றுணர்ந்தனர்.

ஒவ்வொரு நிமித்திகனுக்கும் வாழ்வில் பல படிகள் உண்டு. அவன் இளமைந்தனாக தந்தையுடன் சென்று நூல்நவிலத் தொடங்குகையில் தான் பிறருக்கில்லாத படைக்கலம் ஒன்றை பயிலப்போகும் எழுச்சியை அடைவான். பயிலப்பயில ஆற்றல் கொண்டவனாக, பிறரை ஆள்பவனாக, காலத்தை மடித்தமைக்க வல்லவனாக தன்னை அறிவான். தன் கலையைக்கொண்டு பிறரது ஊழை வகுத்துரைக்கத் தொடங்குகையில் அவ்வூழை வகுப்பவனும் தானே என சில நாட்கள் மயங்குவான். தன் சொற்களினூடாக முகம்காட்டும் ஊழ் பேரழிவென, பெருந்துயரென பிறர் மேல் படியக் காண்கையில் எந்த அடிப்படையுமிலாமல் பிறர் வாழ்வுமேல் துயரை ஏவும் கொடியவனாக தன்னை உணர்வான். தன் குலத்தை வெறுப்பான். தன் கல்வியையும் சுவடிகளையும் கைவிட்டு கண்காணாது ஓடிப்போக வேண்டுமென்று எண்ணி எண்ணி இரவெலாம் புரண்டு துயில் நீப்பான்.

கற்றதை அவ்வண்ணமே விட்டுவிட்டுச் சென்றவர்களும் உண்டு. குடியும் மைந்தரும் இவ்வுலகின் இன்பங்களும் அவர்களை கட்டிப்போடும். அதற்கப்பால் நிமித்தநூல் கற்றவன் எவ்வண்ணம் துறந்தாலும் முன்வரும் காலத்தை நோக்கி

எட்டிப்பார்க்கும் விழிகளை துறக்கவே இயலாதென்ற முன்னோர் கூற்று அவர்களை கட்டுப்படுத்தும். "நாம் தீராத தீச்சொல் ஒன்றால் ஆளப்படுபவர்கள். இன்றில் வாழும் எளிய உயிர்கள் தெய்வ அருள் கொண்டவை. நேற்றையும் சுமந்தலையும் மானுடர் துயர் எனும் தீச்சொல்லுக்கு ஆளானவர்கள். உடன் நாளையையும் அறிந்திருக்கும் நாமோ இருமடங்கு தீச்சொல் பெற்றவர்கள்" என்று முதுநிமித்திகர்கள் கூறுவதுண்டு. அச்சொல் இளையோரை அகம்நடுங்கச் செய்யும். "முற்றறிய முடியாத ஒன்றை சற்றறிந்து வாழ்தல்போல் கெடுதுயர் பிறிதேது?" என்பார் குடிமூத்த நிமித்திகர்.

முதுமை கனிந்து, உள்ளக்கணக்குகள் ஒன்றோடொன்று இசையாதாகி, உள்ளிருந்து எழும் குரல் தேய்ந்து மறைய நிமித்த நூலிலிருந்து உதிர்ந்து மீண்டும் வெளியே மானுடராக மாறிய முதியவர்கள் முகம்மலர்ந்து குழவிகள்போல் நகைத்து "இவ்விடுதலை அளிக்கும் உவகைக்கு நிகர் பிறிதில்லை. ஒவ்வொரு உறுப்பையும் அள்ளிப் பற்றியிருந்த ஆயிரம் கைகள் அகன்றுவிட்டன. இன்றுவரை இருபுறமும் உடல்நெருக்கி கட்டப்பட்ட சுவர்களாலான முடிவிலா பாதையொன்றில் சென்றுகொண்டிருப்பதுபோல் உணர்ந்தோம். இன்று எண்புறமும் திறந்த வெளிக்கு வந்திருக்கிறோம். தெய்வங்களுடன் இறைஞ்சுவதெல்லாம் இந்த உவகையில் இன்னும் சில நாள் வாழ்ந்து மறையவேண்டும் என்று மட்டும்தான்" என்று சொல்வார்கள்.

அவ்விடுதலை அமையாமல் நிமித்தநூலுடனேயே மண்நீங்கும் தீயூழ் கொண்டிருந்த முதியோர் இறுதிக்கணத்தில் தங்கள் இரு கைகளையும் விரித்து மெல்ல உதறி ஒன்றுமில்லை

ஒன்றுமில்லை என தலையசைத்து சலிப்பும் துயரும் நிறைந்த முகத்தை இறுக்கி மறைவார்கள். அவர்கள் சொல்லும் இறுதிச்சொல்லின் பொருளென்ன என்று சூழ்ந்திருக்கும் நிமித்திகர்கள் ஆராய்வார்கள். அது பொருள் தேடிச்சென்று மேலும் சென்று என்றுமுள பொருளின்மையை சென்றடைவதாகவே இருக்கும்.

இமைகள் அரைத்துயிலில் சரிய வாய் திறந்து சற்றே எச்சில் வழிந்து மார்பில் விழுந்தபோது திடுக்கிட்டு விழிப்புகொண்டு சுற்றி நோக்கி பின் சூழுணர்ந்து நீள்மூச்சுடன் கீழே பார்த்த முதுகணிகர் தலை நடுங்க நெடுநேரம் நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் பல்லில்லாத வாய் திறந்து சிரித்தபடி "விண்ணில் நிறைந்திருக்கிறார்கள் தேவர்கள்" என்றார். வாய்மணம் மென்றுகொண்டிருந்த இருவர் திரும்பி நோக்கினர். அவர் "இவர்கள் அவர்களுக்கு நடித்துக்காட்டுகிறார்கள்" என்றார்.

இருட்கனி - 20

நிமித்தநூலில் திரளும் அறுதிப் பொருளின்மையை நிமித்திகர் சென்றடைவதற்கு அறுபது ஆண்டு முதிர்வு தேவைப்படும் என்பர். ஆனால் குருக்ஷேத்ரப் போர்க்களத்திற்கு வந்த இளைய நிமித்திகர் பதினாறு நாட்களுக்குள் அறுபது ஆண்டு முதுமையை அடைந்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் அந்தியில் போர்நிறுத்த அறிவிப்பை எழுப்பிய பின்னர் அங்கிருந்து தனித்து தலைகுனிந்து தங்கள் இல்லங்களுக்கு மீண்டனர். அப்போது தங்கள் கைகள் மூதாதையர் இறுதி மூச்சுவிடுகையில் விட்ட அதே முத்திரையைக் காட்டி

அசைந்துகொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். தங்கள் கைகளை தாங்களே நோக்க அஞ்சினர்.

இரவில் துயில்வதற்காக படுக்கையில் எவரும் பிறருடன் சேர்ந்து படுக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்கான சிற்றிடத்தில் முற்றிலும் தனித்தவர்களானார்கள். மூடிய அறைகளுக்குள் எந்த நிமித்திகனும் துயில்கொள்ளவில்லை. விண்மீன்கள் விரிந்த வானைப் பார்த்தபடி மல்லாந்து படுத்திருப்பதை அவர்கள் விரும்பினர். அப்போது ஏனென்றறியாமல் தங்கள் விழிகள் நிறைந்து காதுகளை நோக்கி சொட்டிக்கொண்டிருப்பதை, அறியா விம்மலொன்று எழுந்து தங்கள் துயில் கலைப்பதை, துயிலுக்குள் பல்லாயிரம் மூதாதையர் முகங்கள் பொருள் விளங்காத உணர்வுகளின் சொல்லின்மையுடன் வந்து மறைவதை கண்டனர். மண்நீத்தபின் மூத்தோர் தங்கள் கனவிலெழுவதை அவர்கள் எப்போதும் உணர்வதுண்டு. எந்த விண்வாழ் நிமித்திகனும் எப்போதும் எச்சொல்லையும் பேசியதாக எவரும் கூறியதில்லை.

மண்நீத்தோர் ஏன் பேசுவதே இல்லை என்று இளையோர் முதியோரிடம் கேட்பார்கள். நிமித்திகன் வாழ்நாளெலாம் இங்கு பேசிக்கொண்டே இருப்பவன். பேசிப் பேசி பேச்சை மடித்து புதியனவற்றை கண்டறிபவன். பீதர் நாட்டு கலையொன்று உண்டு. பட்டுத்துணியை பல்லாயிரம்முறை பலநூறு வகைகளில் மடித்து மடித்து உருவங்களை உருவாக்கிக்காட்டுவது அது. நிமித்திகன் மொழியை அவ்வண்ணம் மடிப்பவன். அதில் சலிப்புற்றே அவன் இங்கிருந்து செல்கிறான். விண்ணில் எழுந்ததுமே அதன் பொருளின்மையைத்தான் உணர்கிறான். முக்காலத்தையும்

உணர்ந்தவன் என்னும் ஆணவம் தன்னை இப்புவியில் எவ்வண்ணம் அலைக்கழித்ததென்று அவன் உணர்ந்தபின்னர் எவ்வண்ணம் சொல்லெடுப்பான்? "சொல்லிச் சொல்லி நிமித்திகன் சென்றடைவது சொல்லின்மையை. காலம் கணித்து கணித்து அவன் அமர்ந்திருக்கும் இடம் அகால பீடம்" என்றார் முதுநிமித்திகர்.

ஒவ்வொருவரும் அவர்கள் இளமையிலிருந்தே குருக்ஷேத்ரப் போரை எதிர்பார்த்திருந்தார்கள். அவ்வண்ணம் ஒரு போர் நிகழுமென்று அவர்களின் நூல்கள் சொல்லத்தொடங்கி ஏழு தலைமுறைகள் கடந்துவிட்டன. ஏழு தலைமுறைக்கு முன்னர் அஸ்தினபுரியின் அரசர் ருக்ஷனின் அவையில் அமர்ந்திருந்த முதிய நிமித்திகராகிய பார்க்கவ பிரபாகரர் இரவில் தன் சுவடிகளை அடுக்கி ஆராய்ந்துகொண்டிருக்கையில் விந்தையானதோர் தன்னுணர்வுக்கு ஆளானார். அந்தக் குலம் பெரும்போர் ஒன்றால் தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் என்று. வீரத்தில், பண்புகளில் உச்சம்கொண்ட அக்குருதிவரிசை அந்த நற்பண்புகள் குறித்த பெருமிதத்தையே தன்னை அழிக்கும் நஞ்சென உண்டு உள்ளுடலில் வளர்த்துக்கொண்டிருக்கிறது என. குருக்ஷேத்ரப் பெரும்போரை அவர் அக்கணம் கண்முன் எனக் கண்டார். அந்தக் காட்சியை உள்வாங்க இயலாமல் உள்ளம் மலைத்து மயங்கி விழுந்தார்.

இளமையில் ஓர் அறியா அழைப்பை பிரபாகரர் அடைந்தார். பிறரிடமிருந்து அவரை பிரித்தது அது. ஒவ்வொரு நிமித்திகரும் அன்று அரசர்களுக்குரிய கனவுகளுக்கு விளக்கம் சொல்வது, நல்நிகழ்வுகளுக்கும் போருக்கும் நாள் குறித்தளிப்பது என நாள்கழித்துக்கொண்டிருந்தனர். அவையில் பரிசுபெறும் நிமித்திகன் என்றாகி நிமித்திகர் தெருவில் மாளிகையில்

பல்லக்கிலூரும் பெருமையும் பெற்று தலைப்பாகை சூடி அவைகளில் அமர்ந்து முதிர்ந்து மைந்தருக்கு குலக்கோலை அளித்துவிட்டு மறைவதே ஒவ்வொரு நிமித்திக இளைஞனுக்கும் கனவாக இருந்தது. ஆனால் எப்போதும் தன்னை பிறிதொருவர் நோக்கிக்கொண்டிருக்கும் உணர்வை அடைந்தார் பிரபாகரர். தந்தையிடம் பலமுறை அதை அவர் சொன்னார். தந்தை அதைக் கேட்டு திடுக்கிட்டார். ஏனெனில் நிமித்திகர்களில் பலருக்கு அவ்வண்ணம் விந்தையான உளமுடிச்சுகள் விழுவதுண்டு. அவற்றை அவிழ்த்து விடுபட்டவர்கள் சிலரே.

தாங்கள் இருவரென்று உணர்பவர்கள் உண்டு. தங்களுக்குள் ஓயாது முரண்பட்டு சமராடுவார்கள். தங்களில் ஒருவர் செய்யும் எச்செயலையும் பிறிதொருவர் அதே விசையுடன் மறுப்பதை அவர்கள் உணர்வார்கள். எவ்வண்ணம் எவராக அவர்கள் வெளிப்படுவார்கள் என்பதை அவர்களே அறிந்திருக்கமாட்டார்கள். பேருவகையுடன் எழுந்து உலகை வெல்லும் ஊக்கத்துடன் கொப்பளிப்பு கொண்டு விண் தொட எக்களித்து நின்று மலை உச்சியிலிருந்து தாழ்வரை நோக்கி உருளும் பாறையென பின்னர் சரிந்து சரிந்து இறங்கி கழிவிரக்கத்தின், தனிமையின் ஆழங்களுக்குச் சென்று அமைந்து அங்கு குளிர்ந்திறுகி நாட்கணக்கில் கிடந்து மீண்டும் எரி பற்றிக்கொண்டதென வெடித்துக் கிளம்பி வானில் பொலிவார்கள். அந்த அலைக்கழிப்பில் குறுவாளை எடுத்து கழுத்தை வெட்டிக்கொண்டவர்கள் உண்டு. நெய்யை குடத்துடன் தலைமேல் கவிழ்த்து ஆடையை பற்றிக்கொள்ளச்செய்து தழல் கொழுந்தாட சுழன்று கரிந்து விழுந்தவர்கள் உண்டு.

காதுகளுக்குள் அறியாக் குரல்கள் ஒலிக்கத் தொடங்குவதை இளநிமித்திகர்கள் பலர் நிமித்தநூல் கற்கத் தொடங்குகையிலேயே சொல்வார்கள். ஒரு நிமித்தநூலை விரித்து அங்கிருக்கும் சொல்லொன்றை படித்துக்கொண்டிருக்கையிலேயே "ஆம்!" எனும் ஆழ்ந்த குரலொன்று காதுகளுக்குள் ஒலிக்கும். சில தருணங்களில் அது இருள்தேவதையின் குரலென முழக்கமும் சீற்றமும் கொண்டிருக்கும். பிறிது தருணங்களில் வானிலிருந்து எழும் மெல்லிய இறகுபோல் இனிமையும் தண்மையும் கொண்டிருக்கும். "ஆம்" என்பதே எப்போதும் எழும் குரல். "ஆம்! ஆம்!" என அது ஒலிக்கையில் கேட்பவன் தன்னைக் குறித்து பெருமிதம் கொள்ளாமல் இருக்க இயலாது. விண்ணிலிருந்தோ ஆழங்களிலிருந்தோ எவரோ தன்னை ஆதரிக்கிறார்கள். தன்னுடன் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அவன் அக்குரலுக்கு செவிகொடுக்கத் தொடங்கியதுமே அது மெல்ல முரண்பட்டு அவ்வாறல்ல எனும் ஒலியாக மாறும். "அவ்வாறல்ல! அவ்வாறல்ல! அவ்வாறல்ல!" என்று அது வீறிடத் தொடங்கும். "நிறுத்து! நிறுத்து! அகல்! அகன்று செல்!" என்று அவன் கூவும்தோறும் அக்குரலின் சீற்றமும் பிடிவாதமும் மிகுந்து வரும். கூரிய வேலொன்றை முதுகில் மெல்ல ஊன்றியபடி எதிரி ஒருவன் பின்னால் வருவதுபோல் அவர்கள் நடை மாறுபடும். எதிரில் வரும் அனைவருக்கும் பின்னால் பேருருவப் பேய்வடிவொன்று நின்றிருப்பதுபோல் நோக்கு பதைப்பு கொண்டிருக்கும்.
பேசிக்கொண்டிருக்கையிலேயே ஊடே புகுந்தொலிக்கும் அக்குரலுக்கும் செவி கொடுப்பதனால் சொற்கள் குழறும். செவியில் ஒலிக்கும் அக்குரலை அஞ்சி மெழுகாலும் பஞ்சாலும் காதுகளை மூடிக்கொள்பவர் அது உள்ளிருந்து

ஒலிப்பதென்று அறிந்து தலையை சுவர்களில் முட்டிக்கொள்வார்கள். துயின்றுகொண்டிருக்கையில் உடல் அதிர எழுந்தமர்ந்து "யார்? என்ன?" என்று கூச்சலிடுவார்கள்.

எண்ணியிராக் கணத்தில் காதுக்குள் வெடித்தெழும் ஓசையைக் கேட்டு இருக்கைகளிலிருந்து துள்ளி எழுந்துநின்று நான்குபுறமும் பார்ப்பார்கள். சவுக்கென அறைந்து அறைந்து துரத்தும் குரலிலிருந்து தப்பும் பொருட்டு தெருவிலிறங்கி ஓடுவார்கள். குரல் கேட்கத்தொடங்குபவர்கள் நிமித்தநூல் கலையிலிருந்து மிக விரைவில் விலகிச்செல்வார்கள். அதன் பின்னர் அவர்களால் எந்த நூலையும் ஒழுங்குடன் பயில இயலாது. பயின்றவை மறக்கும். ஆனால் பயிலாதவையும் நினைவிலிருந்து எழுவது பெருவிந்தை. அவர்களால் கணித்து குறி சொல்ல இயலாது. எனினும் ஊசிமுனைக் கூர்மையுடன் கணித்து முதுநிமித்திகன் சொல்லும் சொல்லுக்கு அப்பால் உள்ள ஒன்றை புதிதென அவர்களால் சொல்ல இயலும். அவர்களில் கூடும் தெய்வம் நிமித்தநூலை எள்ளி நகையாடுகிறது என்பார்கள்.

அவர்களில் எழும் குரலில் எப்போதும் சொல்வனவற்றைக் கடந்து நின்றிருக்கும் ஓர் அகல்வு தென்படும். மறுகணமே அது பெரும் பதற்றமென்றாகி கண்ணீரும் திணறலுமாக வெளிப்படும். பிரபாகரரின் நுண்ணுணர்வு அத்திசைக்கு அவரை கொண்டுசெல்கிறது என்று தந்தை அஞ்சினார். "இந்த நகரின் அலைக்கழிவுகளே உன்னை அவ்வாறு எண்ணச் செய்கின்றன. நகரிலிருந்து நிமித்திகநூல் பயில்பவன் புரவியில் சென்றபடியே ஊசியில் நூல் கோக்க முயல்பவன் என்று சொல்வதுண்டு. நிமித்தநூல் மேலும்மேலும் உள்ளே புகுந்து அறிவதற்குரியது. இந்நகரமோ ஒவ்வொருவரையும் பல்லாயிரம் கைகளாலும்

கண்களாலும் வெளியே பிடித்திழுத்துக்கொண்டிருக்கிறது. காற்றில் ஆடைகள் பறப்பதுபோல் இங்கே சித்தம் நிலைகொள்ளாதிருக்கிறது. நீ காட்டிற்குச் சென்று நம் குலத்து முதுமுனிவராகிய பார்க்கவரிடம் கல்வி கற்று திரும்பு" என்று அவரை கங்கைக்கரை காட்டிலிருந்த தப்தவனம் என்னும் சோலைக்கு அழைத்துச்சென்றார். அங்கே பார்க்கவ குலத்து முனிவராகிய சுஃப்ரரிடமிருந்து சொல்பெற்று துறவு பூண்டு முனிவராகி குடிலமைத்து தங்கியிருந்த பார்க்கவ உத்தீப முனிவருக்கு மாணவரானார் பிரபாகரர்.

ஆனால் அங்கும் அவரிடம் அந்த நோக்குணர்வு இருந்துகொண்டே இருந்தது. அங்கு குளிர்ந்தோடும் கங்கையிலும், தழைத்து தளிர்சூடி நின்ற மரங்களிலும், இனிய இலைக்குடில்களின் இருண்ட அணைப்பிலும் நிமித்தநூலின் அனைத்து ஆழங்களையும் அவர் கற்றுக்கொண்டிருந்தார். ஆனால் எப்போதும் அந்நோக்குணர்வை அடைந்தார். அவர் அடிக்கடி திரும்பி எவரையோ பார்ப்பதை உடன் பயின்ற மாணவர்கள் உணர்ந்து ஆசிரியரிடம் சொன்னார்கள். ஒருநாள் ஆசிரியர் அவரை அழைத்து அருகமரச்செய்து குழல் நீவி "மைந்தா, என்ன உணர்கிறாய் நீ?" என்றார். "எவரோ என்னை பார்க்கிறார்கள்" என்று பிரபாகரர் சொன்னார். "என்னிடம் எதையோ சொல்ல முயல்கிறார்கள். என்னவென்று உணரக்கூடவில்லை" என்றார்.

சிலகணங்கள் அவர் விழிகளை கூர்ந்து நோக்கியபின் பார்க்கவர் சொன்னார் "நீ அக்குரலை அஞ்சாதே. அதை தவிர்க்க எண்ணாதே. எவ்வகையிலும் அதிலிருந்து விலக்கம் கொள்ளாதே. அதை நோக்கி திரும்பி இன்னுள்ளத்துடன் அதை வருக என அழை. உன் அகத்தில் அதற்கொரு பீடம்

அமைத்துக்கொள். நிமித்தநூல் கற்று தேர். உன் வழியாக இப்புவியில் அழியாச் சொல்லொன்று எழக்கூடும். இப்பிறப்பும் நீ கற்கும் இக்கல்வியும் அதன்பொருட்டே ஊழால் வகுக்கப்பட்டதாக இருக்கக்கூடும்." பிரபாகரர் தலைவணங்கினார். "நீ என் பெயரை சூடிக்கொள். என் மாணவனாக சென்று அஸ்தினபுரியில் அமைக! இனி இங்கு நீ கற்பதற்கொன்றுமில்லை" என்று சொல்லி அவர் தலைதொட்டு வாழ்த்தினார்.

தன் அரசவையில் வந்து நின்ற இளம் நிமித்திகனின் தகுதி கணித்து சொல்லும்படி அரசர் ஆணையிட்டார். ஏழு முதுநிமித்திகர் குழு ஒன்று பிரபாகரரை நடுவே நிறுத்தி நிமித்தநூல் குறித்த வினாக்களை உசாவத்தொடங்கினர். அவர்கள் நூற்றெட்டு வினாக்களை கேட்டார்கள். பதினெட்டு வினாக்களுக்கு மட்டுமே சரியான மறுமொழி சொல்ல அவரால் இயன்றது. ஒவ்வொரு பிழையாக அவர் இயற்ற இயற்ற நிமித்திகர்களின் முகங்கள் மாறிக்கொண்டிருந்தன. முதலில் திகைப்பும், பின்னர் சலிப்பும், பின்னர் இளிவரலும், அறுதியாக எரிச்சலும் சினமும் அவர்களிடம் தோன்றியது. "நீ எங்கு நிமித்தநூல் கற்றாய்?" என்று ஒருவர் உரக்க கேட்டார். பிறிதொருவர் "பார்க்கவர் என்று பெயர் சூடியிருக்கிறாய். பார்க்கவ குலத்து முனிவரிடம் கற்றதாகவும் சொன்னாய். அதற்கான தகுதிகள் உன்னிடம் இல்லை. அறிக, அரசவையில் நீ பொய்யுரைத்திருந்தால் கழுவேற்றுவதே அதற்குரிய தண்டம்!" என்றார்.

"நான் பொய் கூறவில்லை. அவரிடம் பயின்றேன். அவரது சொல்லென அப்பெயரைப் பெற்றே இங்கு வந்தேன்" என்று பிரபாகரர் சொன்னார். "ஏற்றுக்கொள்ள இயல்வதல்ல உனது

கல்வி" என்று தலைமை நிமித்திகர் சொன்னார். திரும்பி அரசரிடம் "ஆர்வத்தால் அவை புகுந்த இளைஞன் இவன். இந்த அத்துமீறல் குற்றமெனினும் இளமை கருதி இவனை விடுவித்து திரும்பச் சொல்லலாம். இவ்வார்வத்தாலேயே ஒருவேளை ஐயமின்றி நிமித்தநூல் கற்கவும் தேர்ச்சி பெறவும் மீண்டும் இந்த அவைக்கு திறன் கொண்ட நிமித்திகன் என வரவும் வாய்ப்புள்ளது. அறிவு மிக அரிதானது. அறிவுக்கு உரிய ஆர்வம் எந்நிலையிலும் அறிவை கொண்டுவந்துவிடும் என்பார்கள். ஆர்வமே இவனை இவ்வண்ணம் செய்யவைத்தது என்று கருதுவதே முறையானது" என்றார்.

ருக்ஷன் ஐயத்துடன் பிரபாகரரை நோக்கிக்கொண்டிருந்தார். அவர் விழிகளை சந்திக்கும்போதெல்லாம் தன்னுள் ஒரு திடுக்கிடலை உணர்ந்தார். மிக அருகில் வந்து எவரோ தன் உள்ளத்தைக் கடந்து நோக்குவதுபோல, கரந்து வைத்த ஒன்றை கண்டெடுப்பதுபோல அவர் உணர்ந்தார். நிமித்திகர்களிடம் "நீங்கள் அவைக்கு வெளியே இருங்கள். இவ்விளைஞனிடம் நான் தனியாக ஓரிரு சொற்கள் பேச வேண்டும்" என்றார். நிமித்திகர்கள் எழுந்து தலைவணங்கி வெளியே சென்றனர். அவர்கள் அனைவருமே விந்தையுணர்வுடன் இருவரையும் மாறி மாறி நோக்கியபடி அகன்றனர். அரசர் "சொல்க இளைஞரே, அவை புகுந்து தலைமை நிமித்திகர்களின் முன் அமர்ந்து உங்களை முன்வைக்கும்படி உங்களை பணித்தது எது?" என்று கேட்டார்.

"நான் நிமித்திகன் என்பதனால்" என்றார் பிரபாகரர். "நான் இங்கு இவர்கள் பேசும் இந்த அன்றாடத் தொழில் சார்ந்தவன் அல்ல. என்னுள் பிறிதொன்று நிகழுமென்று என் ஆசிரியர் சொன்னார். அதன்பொருட்டு என் கல்வியை பீடமென ஒருக்கிவைத்து

காத்திருக்கிறேன். அதை பேணிக்கொள்ளவே இங்கு வந்தேன்" என்றார். அரசர் களைத்த கண்களுடாக அவரைப் பார்த்தபின் பெருமூச்சுவிட்டு "என் விழிகளினூடாக நீங்கள் உள்ளே நோக்குவதுபோல் தெரிகிறது. அது என்னை பதற்றம் கொள்ளச்செய்கிறது" என்றார். "ஆம், உங்களை பார்த்ததும் ஒருகணம் நான் துணுக்குற்றேன்" என்றார் பிரபாகரர். "ஏன்?" என்று அரசர் கேட்டார். "நேற்றிரவு நீங்கள் கண்ட கனவை நான் அறிந்தேன்" என்றார்.

அரசர் அறியாது இருக்கையிலிருந்து எழுந்து "என்ன கனவு?" என்று பதறிய குரலில் கூவியபடி படிகளில் இறங்கி அணுகி வந்தார். "சொல்க, என்ன கனவு?" என்று கூவினார். "ஒரு பெரும்போர்க்களம். அதில் நீங்கள் உங்கள் உடன்பிறந்தவர் ஒவ்வொருவரையாக கதையால் அறைந்து தலையை உடைக்கிறீர்கள். உங்கள் உடன்பிறந்தார் நூற்றைவர். அவர்கள் உங்கள் முன் மண்டியிட்டு இறைஞ்ச நகைத்தபடி கதை சுழற்றி அவர்களைக் கொன்று அவர்களின் குருதியை தலைமேல் விட்டுக்கொண்டு கொண்டாடுகிறீர்கள். அறுதியாக ஒருவன் முன் அமர்ந்து அவன் நெஞ்சை அறைந்து பிளந்து துடிக்கும் குலையை வெளியே எடுத்து அழுத்தி அக்குருதியை அருந்தினீர்கள்" என்றார்.

"ஆம்" என்றார் ருக்ஷன். மேலும் ஏதோ கேட்க விழைந்தார். ஆயினும் "போதும்" என்றார். "எனக்கும் அக்கனவு புரியவில்லை, அரசே. அக்கனவு உங்களுக்குள் ஏன் வந்தது என்றும் தெரியவில்லை" என்றார் பிரபாகரர். "மும்முறை இத்தகைய கனவுகள் வந்துள்ளன" என்று ருக்ஷன் சொன்னார். "ஆம், இதற்கு முன்னால் வந்த கனவில் நீங்கள் உங்கள் மூத்தவரை ஒரு குளத்திற்குள்ளிருந்து கயிற்றில் கொக்கியைப்

பொருத்தி நீருக்குள் வீசி இழுத்து வெளியே எடுத்து அவர் இடத்தொடையை கதையால் அறைந்து உடைத்துக் கொன்றீர்கள். அதற்கு முன்..." என பிரபாகரர் சொல்லத் தொடங்க ருக்ஷன் கை நீட்டி தடுத்தார்.

மூச்சிளைக்க தவித்த பின் ருக்ஷன் "அக்கனவின் பொருளென்னவென்று அறிவீர்களா, நிமித்திகரே? என் தமையன் தன் இடத்தொடையில் அரசபிளவை நோய்வந்து எட்டு மாதம் வலியில் துடித்து இறந்தார். அவர் காலடியில் அமர்ந்து இரவும்பகலும் நான் மருத்துவம் செய்தேன். அவர் இறப்பில் உடன் இருந்தேன். என்னை அருகழைத்து என் தலையில் கையை வைத்து இம்மணிமுடியை எனக்களித்துவிட்டு அவர் மறைந்தார்" என்றார். "ஆம், அறிந்திருக்கிறேன்" என்று பிரபாகரர் சொன்னார். "எனில் இக்கனவு ஏன் எனக்கு வந்தது?" என்றார் ருக்ஷன்.

"அரசே, அதற்கு முன் ஒரு கனவு தங்களுக்கு வந்தது" என்று பிரபாகரர் சொன்னார். "தங்கள் தந்தை காட்டிற்குச் சென்றபோது அங்கிருந்த யாதவப் பெண்ணின்மேல் மையல் கொண்டு அவள் ஒரு மைந்தனை ஈன்றாள். தங்கள் தந்தையின் தனிஉருவாகவே நிமிர்வும் பேரழகும் கொண்ட மைந்தன்." ருக்ஷன் "ஆம்" என்று சொல்லி தளர்ந்து மீண்டும் அமர்ந்தார். "நான் என் இளமையில் அவரை கண்டேன். அவருக்கு என் அரசின்மேல் விருப்பிருந்தால் அதை அளிக்காமலிருக்க எனக்கு வழியில்லை என்று முதலில் தோன்றியது.
பெருந்தோள்களுடனும் பேரழகுடனும் அவர் இந்நகர் புகுந்து எந்தையின் மைந்தன் என்று சொன்னால் மறுத்துரைக்க ஒருவரும் இந்நகரில் இல்லை. அன்று துயருடன் திரும்பி

வந்தேன். என் அரண்மனையில் படுத்து துயிலிழந்து புரண்டுகொண்டிருந்தேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

புலரியில் ஒரு கனவு கண்டேன். எந்தை என்னை நோக்கி சொற்களில்லாத அசைவுகளால் ஏதோ சொன்னார். விழித்துக்கொண்ட பின்னர்தான் அவ்வசைவை நான் சொல்லென மாற்றிக்கொண்டேன். அவரே நான் என்று அவர் சொன்னார். அதன்பின் நான் தயங்கவில்லை. தேரை பூட்டச்சொல்லி மீண்டும் காட்டுக்குச் சென்றேன். என் மூத்தவரை சென்று கண்டு அவர் கால்களில் தலைவைத்து இவ்வரசையும் குடிகளையும் ஏற்றுக்கொள்க, என் மூத்தவரென அமர்ந்து எனக்கு அருள் புரிக, என் தந்தையென என்னை காத்தருள்க என்று கோரவேண்டுமென்று உறுதி கொண்டிருந்தேன். ஆனால் அங்கு சென்றால் முந்தைய நாள் இரவில் அவர் எங்கோ சென்றுவிட்டார் என்றார்கள். அவருடைய கனவில் எந்தை எழுந்து அவ்வாணையை இட்டதாகவும் அவ்வாணையின் பொருட்டு விலகிச் செல்வதாகவும் நான் தேடிவந்தால் என்னிடம் கூறவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியிருந்தார்.

அவரைத் தேடிச் செல்ல ஒற்றர்களை அனுப்பினேன். நான்காண்டுகளுக்குப் பிறகு அவர் பார்க்கவ ராமனின் மாணவராக அவரது குடிலில் உடனிருப்பதை ஒற்றர்கள் வந்து சொன்னார்கள். பரசுராமரின் பன்னிரண்டு மாணவர்களில் அவரே நான்காமவர். பரசுராமரைப் போலவே நீண்ட குழல் வளர்த்து வில் பயில்வதையே ஊழ்கமெனக் கொண்டு அக்காட்டில் அவர் தனித்திருந்தார். அவரிடம் சென்று வணங்கி என் உள்ளத்தை சொல்லவேண்டுமென்று விழைந்தேன். அமைச்சர்கள் துறந்து சென்றவரிடம் துரத்திச் சென்று

உலகியல் விழைவை ஊட்டுவதென்பது பெரும்பழி என்று என்னிடம் அறிவுறுத்தினார்கள். ஆனால் அவரிடமிருந்து இந்நாட்டை நான் பறிக்கவில்லை என்று அவருக்கு தெரிவிக்க வேண்டும், அன்றி எனக்கே அதை சொல்லிக்கொள்ள வேண்டும் என்று நான் விழைந்தேன். ஆகவே எவருமறியாது தேர்பூட்டச் செய்து தன்னந்தனியாக பார்க்கவ ராமனின் குடிலுக்குச் சென்றேன்.

நான் சென்றபோது பார்க்கவ ராமன் காட்டுக்குள் சென்றிருந்தார். உடன் அவரும் சென்றிருப்பதாக அறிந்தேன். குடிலிலிருந்து தனியாக நானும் காட்டுக்குள் ஒற்றையடிப் பாதையில் நடந்தேன். அங்கு கங்கையில் நீராடிக் களித்துக்கொண்டிருந்த பார்க்கவ ராமனை பார்த்தேன். கரையில் வில்லுடன் அவர் அமர்ந்திருந்தார். தொலைவிலிருந்து அவரை பார்த்துக்கொண்டிருந்தேன். விழிகள் நிறைந்து வழிந்தன. எந்தையை மீண்டும் பார்ப்பதுபோல் உணர்ந்தேன். எந்தை தன் வாழ்நாளெல்லாம் துறவுபூண்டு கானேக வேண்டுமென்று எண்ணியிருந்தார். மூத்தவருக்கு பதினெட்டு அகவை நிறைந்த அக்கணமே முடிதுறப்பதாக அமைச்சரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். அவருக்கு அகவை நிறைவதற்குள்ளாகவே அவர் உயிர்துறக்க வேண்டியிருந்தது. துறவுபூண்டு எந்தை காட்டில் இருந்திருந்தால் அவர் அவ்வண்ணம் இருந்திருப்பார் என எண்ணினேன்.

நான் நோக்குவதை உணர்ந்து அவர் என்னைப் பார்த்து புன்னகைத்து அருகே அழைத்தார். நான் அருகணைந்து எட்டுறுப்பும் நிலம்பட அவர் முன் விழுந்து வணங்கி “மூத்தவரே, நான் ஆற்ற வேண்டியதென்ன?” என்று கேட்டேன்.

“தந்தையின் புகழை வளர்க்கும் மைந்தனாக அமைக! இந்த நிலம் உன்னால் பொலிவுறுக! விண்ணில் தேவர்களும், மூத்தவர்களும் உன்னால் பெருகி வளர்க!” என்று அவர் வாழ்த்தினார். பிறிதொன்றும் கூறாமல் அவர் கால்களில் தலை வைத்து வணங்கி புறம்காட்டாது மீண்டேன். சொற்பெருக்கு உடைந்து ருக்ஷன் நிறுத்திக்கொண்டார்.

“மீண்டும் அக்கனவு வந்தபோது நீங்கள் காட்டிற்குள் இறுகியெழும் அம்புகளுடன் செல்கிறீர்கள். விலங்குகள் உங்களைக் கண்டு அஞ்சி ஓடுகின்றன. நாணொலி கேட்டு யானைகள் செவி அசைத்து தலை குலுக்கி பிளிறி கலைகின்றன. காட்டுப்பாதையினூடாக சென்று அங்கே கங்கைக்கரையில் நீராடிக்கொண்டிருக்கும் உங்கள் மூத்தவரை பார்க்கிறீர்க்ள். உங்களைக் கண்டதும் அவர் புன்னகையுடன் அணைக்கும்பொருட்டு நீட்டிய கைகளுடன் கரைநோக்கி வந்தார். அவரது கால் சேற்றில் புதைந்து அவர் அசைவிழந்தபோது ஏழு கூரிய அம்புகளால் அவர் நெஞ்சை பிளந்தீர்கள்” என்றார் பிரபாகரர். “ஆம்” என்றபின் தளர்ந்து பின்னடைந்து பீடத்தில் அமர்ந்து கைகளால் தலை பற்றி அரசர் அழத்தொடங்கினார். “ஏன் அந்தக் கனவு எனக்கு வந்தது? உண்மையில் இத்தகையவனா நான்?” என்றார்.

“நாம் எத்தகையவர் என்பதை இங்கு வாழ்ந்து எவரும் ஒருபோதும் முழுமையாக அறிந்துவிடமுடியாது. ஏனெனில் நாம் வாழும்தோறும் உருமாறிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கணத்திலும் புதிதாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதுவரை வெளிப்பட்டதைக் கொண்டு நம்மை நாம் வகுத்திருக்கிறோம். அதை பொய்யென ஆக்குவது அடுத்த கணமென நிகழ்கிறது” என்றார் பிரபாகரர். “நான் என்ன

செய்யவேண்டும்? அரசு துறந்து காட்டுக்குச் செல்லவா? அன்றி உண்ணாநோன்பிருந்து உயிர்துறக்கவா? இத்தீக்கனவுகளை சூடிய பின்னர் எதை நம்பி இங்கு கோலெடுத்து அமர்ந்து அறம் புரப்பேன்? பிழை செய்து என் முன் வந்த ஒருவனை எவ்வாறு தண்டிப்பேன்? என்றார் அரசர்.

"அரசே, அக்கனவுகள் உங்களுடையவை அல்ல" என்று பிரபாகரர் சொன்னார். "இங்கு நிகழ்வன அல்ல அவை. நாமறியாது பிறிதொரு வெளியில் அவை நிகழ்கின்றன. யவன மது இருந்த கலம் எத்தனை நன்கு பூட்டப்பட்டிருந்தாலும் துளியினும் துளி கசிந்து நறுமணமென காற்றில் அலையுமென்பார்கள். வரவிருப்பது தெய்வங்களால் மானுடர் அறியமுடியாதபடி ஏழுமுறை இறுக்கி மூடப்பட்டுள்ளது. எனினும் அது கனவுகளாக, நிமித்தக்குறிகளாக வந்துகொண்டுமிருக்கிறது. எவ்வளவு என்றும் எவ்வாறு என்றும் எங்கு என்றும் அறியமுடியாது. உள்ளது என்று மட்டுமே உணரமுடியும். நீங்கள் பழிகொள்ளப் போவதில்லை. இவ்வாழ்வில் ஒருகணமும் திறம்பா கோலுடன் வாழ்ந்து விண் புகுவீர்கள்."

"எனில் எனக்கு இந்தக் கனவு ஏன் வந்தது?" என்றார் அரசர். "ஆனால் அங்கிருந்து நீங்கள் பார்க்கையில் உங்கள் குருதிவழிகளில் இவையனைத்தும் நிகழ்வதை அறிவீர்கள். அதன் பொருட்டு துயருறுவீர்கள்" என்றார் பிரபாகரர். "அரசே, இப்பழிகள் அனைத்தையும் செய்யும் கொடிவழியினரின் கைகளால் எள்ளும் நீரும் பெற்று விண்ணுலகிலிருக்கும் தீப்பேறு உங்களுக்கு அமையும். அதன் முன்னறிவிப்பே இக்கனவு." அரசர் திகைப்பும் பதைப்புமாக பார்த்து சற்றுநேரம் தன்னுள் ஆழ்ந்து இருந்துவிட்டு "இங்கு என் தலைமை

நிமித்திகராக அமைக, இளைஞரே!" என்றார். பின்னர் "பிறிதொன்று..." என்றார். "உங்கள் கனவில் நெஞ்சுபிளந்து குருதி குடித்த நீங்கள் உங்கள் மைந்தர் பீமனின் உருவில் இருந்தீர்கள்" என்றார் பிரபாகரர். "ஆம்" என்றார் அரசர்.

இருபதாண்டுகள் நிமித்திகராக அஸ்தினபுரியில் இருந்த பிரபாகரர் ஒருநாள் தன் தலையோடு வெடித்து எழுவதுபோல் போரின் பெருங்காட்சியை கண்டார். அங்கிருந்து கங்கைக்கரைக்கு அவர் ஓடினார். அங்கே வாழ்ந்த இருபதாண்டுகளில் பன்னிருமுறை முற்றிலும் உளப்பிறழ்வுக்கு ஆளானார். ஒவ்வொரு உளப்பிறழ்வுக்கு முன்னும் அவர் நிலைமறந்து உரைத்த குறிகளை அவருடைய மாணவர்கள் எழுதிச் சேர்த்து ஒரு நூலாக்கினர். அந்நூல் அவருடைய மாணவர்களால் மட்டுமே பயிலப்பட்டது. மூன்றாம் தலைமுறையில் அந்நூலை அவர்கள் கைவிட்டனர். பின்னர் பொருளிலாச் சொற்களின் தொகுதி என அது மூத்த நிமித்திகர் குலத்தவரின் கைகளில் இருந்தது.

நெடுங்காலம் கடந்து தொல்நூல் தேடித் தொகுக்கும் விழைவுகொண்டிருந்த இளம்நிமித்திகனாகிய அஜபாகன் என்பவன் அச்சுவடிக்கட்டை கண்டடைந்தான். மூன்றாண்டுகாலம் புறவுலகு ஒழிந்து அந்நூலைப் பயின்ற அவன் ஒருநாள் அங்கிருந்து மறைந்தான். மீண்டும் அவன் திரும்பிவந்தபோது எதையும் தொகுத்துப் பேசமுடியவில்லை. அழுகையும் சிரிப்புமாக அவன் ததும்பிக்கொண்டே இருந்தான். அழுகைக்கு பதில் அவன் சிரிப்பதாகவும் சிரிப்புக்கு பதில் அவன் அழுவதாகவும் மக்கள் நினைத்தார்கள். நிமித்திகர்கள் அவனை அழைத்துச்சென்று தங்கள் குலகுருவான

பிருஹஸ்பதியின் ஆலயத்தில் அமரச்செய்தனர். அங்கே அமர்ந்து மடிந்து அவன் கோயில்கொண்டமைந்தான்.

நோக்குமேடை மேல் அமர்ந்திருந்த முதுநிமித்திகர் அஜபாகனின் சொற்களை நினைவுகூர்ந்தார். "அறத்தின் மேல் விழைவின் கொடி ஏறிவிட்டது" என்று அவர் சொன்னார். பிற அனைவரும் திடுக்கிட்டு திரும்பி நோக்கினர். "வெற்று விழைவு ஆற்றலை கோடைக்கால நதிபோல மெலியச் செய்கிறது. உயிரிழந்த விதைகளை மண் வதைக்கிறது" என்று அவர் மேலும் சொன்னார். அவர்கள் திகைப்புற்ற விழிகளுடன் நோக்கி அமர்ந்திருந்தனர்.

இருட்கனி - 21

பாண்டவப் படைமுகப்பில், எங்கிருந்தோ என ஒழுகிவந்து தழுவிக் கடந்துசென்ற காலைக்குளிர்காற்றில் கொடிகள் மட்டுமே படபடக்கும் ஓசை நிறைந்திருந்த வெளிக்குக் கீழ் மணியொலிகள் எழாத தேர்நிரையின் முகப்பில் அர்ஜுனனின் தேர் நின்றிருந்தது. இளைய யாதவர் கடிவாளங்களை தளரப்பற்றி, தலையில் சூடிய பீலி மெல்ல நலுங்க, வண்ணம் கொள்ளாத மஞ்சள் ஆடையுடன் அமர்ந்திருந்தார். அர்ஜுனன் காண்டீபத்தை தோழன் என அருகே நிறுத்தி தொடையில் கைவைத்து எதிர்த்திசை நோக்கி விழி நாட்டி காத்து நின்றிருந்தான்.

கருக்கிருட்டோ என ஐயம் எழும் அளவிற்கு வானும் மண்ணும் இருள் மூடியிருந்தன. மிக அப்பால் குருக்ஷேத்ரத்தின் குறுங்காடுகளில் இருந்து பறவைகளின் ஒலிகள் செவி

கூர்ந்தால் மட்டும் மெல்லிய ஒலித்தீற்றல்களாக கேட்கும் அளவுக்கு எழுந்துகொண்டிருந்தன. அச்சில நாட்களுக்குள் பறவைகள் மானுடர் பெருகிச் செறிந்திருந்த அவ்வெளியை முற்றிலும் ஒழிந்து அப்பால் செல்ல பயின்றுவிட்டிருந்தன. மாறாக ஒவ்வொரு நாளும் அந்தியில் முற்றிலும் புதிய பறவைகள் வேறெங்கிருந்தோ வந்து குருக்ஷேத்ரத்தில் இறங்கின. போர்முடிவதற்காக அவை காத்திருப்பதுபோல் தோன்றின. முதல்நாள் போர் முடிந்தபின்னர் ஓரிரு பறவைகள் வந்தன. பின்னர் நாள்தோறும் அவை பெருகின. அவற்றை முன்னர் கண்டதே இல்லை என்றனர் கணியர்.

இருளுக்குள் இருந்து அம்புகள் என வந்திறங்கியபோது அம்புகளை எண்ணி எச்சரிக்கையை பயின்றிருந்த படைவீரர்களின் உடல்கள் நடுங்கி ஒழிந்தன. அவை மானுடரை பொருட்டெனக் கருதவில்லை. அவர்களின் தூக்கிய வேல்முனைக்கூர்களில் கூட அமர்ந்து எழுந்தன. கால்கள் நடுவே மண்ணிலிறங்கின. அவற்றின் கண்கள் வஞ்சம்கொண்ட மலைத்தெய்வங்கள்போல சிவந்து அனல்கொண்டிருந்தன. கூரிய சிறு அலகுகளில் இருந்து மெல்லிய குரலில் ஒரு சொல் எழுந்துகொண்டே இருந்தது. பின்னர் ஒரு வீரன் கனவில் அச்சொல்லை கேட்டான். அவை “ரக்தஹ!” என சொல்லிக்கொண்டிருந்தன.

குருதியின் அன்னையான மகாரக்தையின் படைத்திரள்கள் அவை என்றனர் சூதர். எட்டு தலைகளும் பதினாறு கைகளும் கொண்டவள். எட்டு வாய்களிலிருந்தும் நீள்நாக்குகள் எழுந்தவள். முப்புரிவேலும், உடுக்கையும், வாளும், கேடயமும், பாசமும், அங்குசமும், மண்டைக்கொப்பரையும், மின்படையும், வில்லும், அம்பும், உழலைத்தடியும், படையாழியும், கதையும்,

சங்கும், மானும், மழுவும் கொண்ட கைகள் விரித்து அனல்விழிகள் துறித்து வருபவள். செந்நிற அலைபோல் ஆடைகள் உலைய குருதிவிடாய்கொண்ட ஓநாய் மேல் ஊர்பவள். போர்க்களங்களில் எழுபவள். நீரே அனலென்று ஆனவள். அனல் நீரென ஒழுகுபவள். விண்ணவர்க்கு இனிய கொழுங்குருதிப் பலிகளை கொண்டுசெல்பவள். மண்ணுக்கு அடியில் வாழும் தெய்வங்களுக்கு நிணமொழுகு உடல்களை அளிப்பவள்.

தசைப்பரப்பென்றாகி பல்லாயிரம் கோடி நுண்ணுயிரிகளை பிறப்பித்த குருக்ஷேத்ர மண்ணில் இறங்கி அச்சிறுபறவைகள் நுண்சொற்களில் பேசியபடி கொண்டை சிலுப்பி வால் பிரித்தடுக்கி சிறுகால்களால் நடந்து சட்டென்று எழுந்தமைந்து ஓயாது கொத்திப்பொறுக்கி உண்டு உடல்பெருக்கின. இருளில் சிறகடித்து சென்று மறைந்தன. அவற்றின் மூதாதையர் முன்பு அங்கு அவ்வண்ணம் வந்து குருதியில் உயிர்கொண்ட நுண்ணுயிர்த் திரளை உண்டு மீண்டதாக அவற்றின் நினைவுகள் கூறின. தங்கள் தலைமுறைச் சங்கிலியில் பிறிதொரு காலத்தில் அங்கு மீண்டும் வருவதற்காக அவை அந்நினைவை சேர்த்து புதைத்து வைத்துக்கொண்டன.

பேரழகு என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் தன் உள்ளம் சொல்லிக்கொண்டிருப்பதை அர்ஜுனன் உணர்ந்தான். நேற்று முதல் அச்சொல் நாவிலும் சித்தத்திலும் இருந்தது. அதே சொல் யுதிஷ்டிரனை இரவெல்லாம் அலைக்கழித்துக்கொண்டிருந்தது. பாண்டவ ஐவரும் நேற்று இரவு துயில்கொண்டிருக்க வாய்ப்பில்லை. ஒருவேளை பீமன் துயின்றிருக்கலாம். இவையனைத்துக்கும் அப்பாலிருப்பவர்

அவர். இந்தக் கொந்தளிப்புக்கு என்ன பொருள்? கடல்மேல் எழுந்த நிலவென எங்கள் சித்தம்மீது தோன்றியது என்ன?

மிகத் தொலைவில் ஒரு பறவையின் சிறகடிப்பை அவன் கண்டான். பின்னர் அது ஒரு கொடி என தெளிந்தான். யானைச்சங்கிலி பொறிக்கப்பட்ட அங்கநாட்டுக் கொடி. அது அணுகி வரும் வழியெங்கும் கௌரவப் படைகள் அலைகொண்டு பிரிந்தன. வாழ்த்தொலிகள் ஊமைமுழக்கம் என கேட்டன. பந்தங்களின் ஒளி அத்தனை உயரத்துக்கு சென்றுசேரவில்லை. எனில் எப்படி அதை அவன் காண்கிறான்? அத்தனை தொலைவிலும் அந்தத் தேரை எவ்வண்ணம் அறிகிறது விழி? அவன் நெடுங்காலமாக அங்கு நின்று அதை நோக்கிக்கொண்டிருப்பதுபோல் உணர்ந்தான்.

புதர்களிடையே இருந்து வேங்கை மெல்ல மெல்ல காலெடுத்துவைத்து அணுகுவதுபோல ஓசையின்றி அது வந்தது. காட்டில் இருட்டுக்குள் புலியைப் பார்த்தபின் அதன் பொன்வண்ணமும் தெளியத் தொடங்குவதுபோல. புலியின் விழிகள் என அவனும் தேர்ப்பாகனும் தெரிந்தார்கள். அவன் பொற்கவசம் அணிந்திருந்தான். சற்றே திரும்பியபோது கவசம் அனலென எரிந்தது. இரு விண்மீன்கள் என காதில் குண்டலங்கள் மின்னின. அர்ஜுனன் நோக்கிக்கொண்டே நின்றான். சூதர்கள் பாடும் கவசமும் குண்டலங்களும்தானா அவை? சூரியனால் தன் மைந்தனுக்கு அளிக்கப்பட்டவை. மானுடரின் அம்புகள் அக்கவசத்தை அணுகமுடியாது. மானுட வாள் அவன் கழுத்தை நெருங்காது. அது மெய்தான் போலும். சூரியன் அளித்த கவசமும் குண்டலமும்தான் அது. இல்லையேல் அந்தக் கருக்கிருளில் அவற்றுக்கு மட்டும் எங்கிருந்து கிடைக்கிறது ஒளி?

கர்ணனை வாழ்த்தி எழும் குரல்கள் பெருகிக்கொண்டே இருந்தன. அவன் தேர் வந்து படைமுகப்பில் நின்றது. அதைச் சூழ்ந்து விருஷசேனனும் திவிபதனும் சத்ருஞ்சயனும் பிரசேனனும் சுஷேணனும் சுதமனும் தேர்களில் அரைவட்டமென அணிவகுத்தனர். அவர்களும் கர்ணனைப்போலவே அணிகளும் கவசங்களும் அணிந்து அவனே ஆடிப்பாவைகள் என பெருகியதுபோலத் தெரிந்தனர். அவர்கள் முகங்களின் உணர்வுகளும் ஒன்றுபோலவே இருந்தன.

கர்ணன் படைமுகப்பில் நின்று ஒருகணம் பாண்டவ விரிவை நோக்கினான். எவரையும் குறிப்பாக அவன் விழிகள் தொடவில்லை. பின்னர் அவன் இமைகள் மெல்ல சரிந்தன. ஊழ்கத்திலென அவன் அமர்ந்திருந்தான். போர்க்களத்தில் அப்போது புலரிமுரசுக்கென காத்துநின்றிருந்த அனைவரும் உடலை வெவ்வேறு நிலைகளில் தளர்த்தி நின்றனர். தோள்கள் குழைந்திருந்தன. ஒற்றைக்கால் மேலெழுந்திருந்தது. கைகள் தழைந்திருந்தன. அவன் மட்டும் ஆலயக்கருவறையின் சூரியன்சிலை என முற்றிலும் நிகர்நிலைகொண்ட உடலுடன் தேரில் நின்றிருந்தான்.

கர்ணனின் காலடிகளிலிருந்து அர்ஜுனனின் பார்வை மேலெழுந்தது. ஐந்து கால்விரல்களிலும் கணையாழிகள். அருமணிகள் பதித்த கழல்கள், முழங்கால் காப்புகள், தொடைச்செறிகள், தோள்வளைகள், கச்சை, சல்லடம், ஒன்றன்மேல் ஒன்றென அமைந்த ஆரங்கள். ஒளிகொண்ட கவசம், மாந்தளிர்நிறத் தோளிலைகள், புயவளைகள், முழங்கைக்காப்புகள், கங்கணங்கள், விரலாழிகள். ஒளிரும் செம்மணிக் குண்டலங்கள் அவன் முகத்தை இருசுடர்கள் என

ஏந்தியிருந்தன. தலைக்கவசத்தில் எழுந்த செம்பருந்தின் இறகு தழலென நெளிந்தது. தழைப்பது தழல். அழகே அழல். அச்சொற்கள் ஒன்றின் வெவ்வேறு ஒலிகள்.

எத்தனை பேரழகு! இச்சொல்லை சொல்லிச் சொல்லி என் இவ்விரவு ஓய்ந்தது. இந்நாள் எழுகிறது. இத்தருணத்தில் இக்களத்தில் இவன் கையால் உயிர்விடுவேன் எனில் அதுவும் ஒரு பேறே. அவ்வெண்ணம் எழுந்ததுமே அவன் திடுக்கிட்டான். தன்னில் ஒலித்ததா அது? அவ்வெண்ணம் தன்னுள் இருந்ததா என்ன? வெறுப்பினூடாக ஒருவனை வழிபடக்கூடுமா என்ன? தெய்வமென, ஆசிரியர் என, தோழர் என இத்தேர்முனையில் கடிவாளம்பற்றி அமர்ந்திருக்கும் இவரை பெருவிருப்பின் அடியில் ஒரு துளி வெறுப்பாக அறிந்திருக்கிறேன். வெறுப்பின் அலைகளுக்கடியில் கூர்கொண்டமைந்த அன்பென இவனிடம் நான் உணர்ந்தேனா என்ன?

இந்த முழுதுரு. என்றென்றும் என் கனவுவிழைவு என் மூத்தவரின் பெருந்தோள்களை அடைதல். அடைந்தெழுந்த நான் இவன். என் மூத்தவரின் அறம் திகழும் நெஞ்சு. என் இளையோரின் அன்பு நிறைந்த கைகள். விழிகளால் தொட்டுக்கொண்டே இருக்கிறேன். எண்ணங்களால் தழுவிக்கொண்டிருக்கிறேன். ஒருபோதும் அணுகித் தொட்டதில்லை. கர்ணனை எப்போதேனும் தொட்டிருக்கிறோமா என்று அர்ஜுனன் எண்ணிக்கொண்டான். ஒருமுறையும் தொட்டதில்லை என்று நினைவுக்கு வந்தது. ஒருமுறைகூடவா என்று திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். தொட்டதாகவும் தோன்றியது, இல்லை என உள்ளம் மறுத்தது.

முதல்முறையாக கர்ணனை எப்போது பார்த்தோம் என்று அவன் உள்ளம் துழாவியது. எப்போதுமே

பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவனையறியாமல் சித்தம் இருந்த கணமே இல்லை. மீண்டும் மீண்டும் அவன் தன் இளமை நினைவுகளை எடுத்து எடுத்து பார்த்தான். கைக்குழவியாக இருக்கையில் கர்ணன் உடனிருந்ததாகவே உள்ளம் கூறியது. பின்னர் சிறு அதிர்ச்சியுடன் அவன் உணர்ந்தான். தன்னை தான் ஆடியில் பார்த்ததையே கர்ணனை பார்த்தது என உள்ளம் பதிவு செய்து வைத்திருக்கிறது. அவன் உடலில் விந்தையானதோர் பரபரப்பு ஏற்பட்டது. நரம்புகளினூடாக இசை ஒன்று அதிர்ந்து செல்வதுபோல. பற்கள் கூசி விழி நீர் கசிந்தன. காண்டீபத்தை சற்றே தாழ்த்தி தலைகுனிந்து கண்களை மூடி திறந்தான்.

முதிரா இளமையில். அல்லது பிறிதெப்போதோ. எங்கு அவனை முதலில் பார்த்தேன்? படைக்கலப் பயிற்சிநிலையத்திற்கு கிருபர் முன் அவன் வந்து நின்றபோதா? பின்னர் துரோணரின் படைக்கலநிலையில் அவன் வந்தபோது பிறிதொருவனாக ஆகிவிட்டிருந்தான். அப்போது எரிச்சலுடனும் எழும் சினத்துடனும் எப்போதுமிருக்கும் ஆற்றாமையுடனும் அவன் கர்ணனை நினைத்துக்கொண்டிருந்தான்.

நெடுநாட்களுக்குப் பின்னரே அந்த உணர்வுகள் ஏன் என்று எண்ணி எண்ணி தெளிவடைந்தான். தன்னை பிறிதொரு வடிவில் பார்த்த திகைப்பு, மறுகணம் அது தானல்ல என்றுணர்ந்த அதிர்ச்சி. அதன் பின் தன்னைவிட ஆற்றலும் அழகும் கொண்ட தனது வடிவம் என்னும் ஆற்றாமை. அது அளித்த பதற்றம். அந்தச் சீற்றத்தை அவன் புரிந்துகொண்டதேயில்லை. ஏனென்றால் அதை நேருக்குநேர் நோக்கியதில்லை. பின்னர் அச்சீற்றமே என்றுமென நிலைகொண்டது. ஆனால் அதற்கப்பால் ஒன்றுள்ளது. அதற்கும்

அப்பால். அத்தனை நுண்ணிய தேடலும் சென்றடையாத ஒன்று என்றால் அது இருண்டது, மிகமிக ஆழத்தில் உறைவது, ஒளியே படாதது. ஒளிபடாதவை அழுகிவிடுகின்றன. நாற்றம் கொள்கின்றன. நஞ்சாகின்றன. அங்கு வாழ்கின்றன இருளை ஆளும் தெய்வங்கள்.

கர்ணன் தன்னை நோக்கவேயில்லை என்று கண்டான். அது உளமயக்கு அல்ல, மெய்யாகவே முதற்கணத்திற்குப் பின் கர்ணன் அவனை நோக்கவில்லை. ஆனால் அவன் தன் அகவிழிகளால் கர்ணனின் தோளையும் நெஞ்சையும் தொடாத நாளொன்று இருந்ததில்லை. நேர்நோக்குகையில் வெறுமனே விழிமலைத்து அகன்று நின்றிருப்பான். ஆனால் ஒருமுறைகூட அருகணைந்ததில்லை. ஒரு சொல்கூட உரையாடியதில்லை. ஒருமுறை வெறுமனே அவன் உடலை தொட்டிருந்தால்கூட இவையனைத்தும் அன்றே முடிந்திருக்கும்.

எவர் சொல்வது அதை? எவரோ அருகே நின்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். மீளமீள, விந்தையான ஓர் வஞ்சத்துடன். விளையாட்டாக தீண்டியிருக்கலாம். நீர் விளையாடுகையில். அம்பு பயில்கையில். எங்கேனும் அவன் உடல் மெலிதாக என் மேல் பட்டிருந்தால் அக்கணமே திரும்பி அவன் காலடி நோக்கி சரிந்திருப்பேன். என்னை தன் கரங்களால் அள்ளி எடுத்து அவன் நெஞ்சோடு சேர்த்திருந்தால் அதன் பின் ஒருதுளியும் எஞ்சாமல் அவனடியில் விழுந்திருப்பேன். அர்ஜுனன் கூச்சமும் சினமும் கொண்டு அச்சொற்களை தன்னிடமிருந்து அகற்றுபவன்போல் தலையை அசைத்தான். நோக்கை விலக்கிக்கொண்டான்.

பின்னர் நெடுந்தொலைவிலிருந்து கேட்கும் குரல்போல பிறிதொன்று அவன் உள்ளில் எழுந்தது. அவனிலிருந்து

என்னை விலக்கிக்கொள்வது எது? ஒருகணம்கூட, ஒரு சொல்கூட, அவனைப்பற்றி உயர்ந்ததென எதையும் இளைய யாதவர் சொன்னதில்லை. அவனுடைய பேரழகைப் பற்றி ஒருமுறை அவன் சொன்னபோது 'ஆம் அழகன். அழகென்பது ஓர் உலகியல் நிகழ்வு. பொருட்களில் எழும் பொருள் கடந்த ஒன்றை பொருளென்றே நாம் மயங்குவதற்குப் பெயர் அழகு' என்று கூறி அகன்றார். விலக்கும் இரு முனைகள். அம்முனையில் கர்ணன், இம்முனையில் யாதவர். நான் இவரை நோக்கி வந்தது அவன் மீது கொண்ட விலக்கத்தால்தான். அல்லது இவர்மேல்கொண்ட அணுக்கம் அவனை விலக்கியதா? ஐயமில்லை, அவனை நோக்கி சென்றிருந்தால் இவரை முற்றிழந்திருப்பேன்.

இது என்ன? இவ்வுலகு அவன். கடந்த ஒன்று இவர். இங்கு நான் அடைய விழைவன அனைத்தும் அங்கு அவ்வடிவில் உள்ளன. அந்த ஒவ்வொன்றையும் துறந்தாலொழிய இங்கு இவர் காலடியில் நான் அமர்ந்திருக்க முடியாது போலும். ஒரு உலுக்கலுடன் அவ்வெண்ணம் அவனில் எழுந்தது, என்னை நான் கொன்றாலொழிய எய்த முடியாத ஒன்று இவர் காலடியில் எனக்கு கிடைக்கவிருக்கிறது. என்னை நான் கொல்வது மிக எளிது. நூறு நூறு இடங்களில் என்னை நான் கடந்திருக்கிறேன். என்னில் நான் வெறுப்பனவற்றைத் திரட்டி படைக்கலம் செலுத்தி கொன்றிருக்கிறேன். இப்போது என்னில் நான் வெறுப்பன ஒரு துளிகூட இல்லையா? நான் என என்னுள் பெருகியவை மட்டுமேயான ஒருவன் என் முன் எழுந்து நின்றிருக்கையில் அவனுக்கு எதிராக என்னிடம் ஒரு படைக்கலம்கூட இல்லையா?

தன் ஆவநாழியை அவன் எண்ணிக்கொண்டான். அவன் உள்ளம் அதை துழாவித்துழாவிச் சலித்தது. ஓர் அம்புகூட அகப்படவில்லை. இவனை கொல்வதற்கான அம்பு என்று என்னில் எஞ்சுவதென்ன? வெறுப்பின் நச்சு தீட்டிய அம்புகளே மானுடரை கொல்ல முடியும். ஒவ்வாமையை, காழ்ப்பை, கசப்பை அம்புகளாக ஆக்கிக்கொள்ளலாம். ஆனால் பெருவிருப்பையேகூட வெறுப்பென மாற்றிக்கொள்ளலாம் என கற்பிக்கிறது இக்களம். இன்று என் நெஞ்சு அம்பென ஆகுமெனில் அது சென்று அக்காலடியில் பணியும். முன்பு முதல் அம்புகளை பீஷ்மருக்கும் துரோணருக்கும் எதிராக நான் செலுத்தியபோது என் பணிவு அனைத்தையும், என் அன்பு முழுமையையும் திரட்டி அவற்றில் அமைத்திருந்தேன். அவர்களின் காலடியில் அது சென்று தைத்த மறுகணமே அவற்றிலிருந்து விடுபட்டேன். என் ஆழத்தில் திரண்டிருந்த நச்சை பெருக்கி பேருருக் கொள்ளச்செய்து அவர்களின் நெஞ்சை பிளந்தேன்.

இவனுக்கெதிராக எழுவது எந்த அம்பு? இவன் என் குலமகளை அவைச்சிறுமை செய்கையில் உடனிருந்தான். இவன் சொல் கேட்டு எங்களை பதினான்காண்டுகாலம் காட்டில் உழல வைத்தான் துரியோதனன். இவன் அளித்த நம்பிக்கையால்தான் அஸ்தினபுரியின் உடன்பிறந்தான் இத்தனை பெரிய பூசலுக்கு வந்து நின்றான். எங்களை பதினான்காண்டுகள் மைந்தரையும் மகளிரையும் அரசையும் பிரிந்து அடர்கானகத்தில் அலையச்செய்தான். இங்கிருக்கும் அனைத்து அழிவுகளுக்கும் ஒருநிலையில் இவனே அடிப்படை. இவனில்லையெனில் இவையனைத்தும் இல்லை.

ஆனால் இச்சொற்கள் அனைத்தையும் இதற்கு முன்னரும் பலமுறை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். கசப்புடன், வெறுப்புடன். கசப்பும் வெறுப்பும் கொள்ளலாகாதென்று எச்சரிக்கைகொண்டு எண்ணுகையிலும் இச்சொற்களையே வந்தடைந்திருக்கிறேன். இவன் பாரதவர்ஷத்தை அழிக்கும் நஞ்சு. செவியில் அதை அறியாக் குரலின் சொல் என அர்ஜுனன் உணர்ந்தான். அதே சொற்களை இளைய யாதவரைப் பற்றியும் சொல்ல முடியும். இரு ஆணவங்கள் இருவரும். இந்தப் போரே இவர்கள் இருவரும் நிகழ்த்திக்கொள்வதுதானா?

தன்னை உந்தி அவ்வெண்ணத்தை அர்ஜுனன் ஒழிந்தான். ஆனால் எண்ணம் அங்கே சென்றுகொண்டே இருந்தது. இந்தப் போர் இவர்களில் எவர் ஒருகணம் எண்ணியிருந்தாலும் ஒழிந்திருக்கக் கூடியது. ஒருவன் தன் கொடையால், அளியால் இதை நோக்கி அனைவரையும் செலுத்தினான். பிறிதொருவன் தன் மெய்யறிதலால், கனவால் இதை நோக்கி அனைவரையும் இழுத்தான். அரியவைக்காகவே இத்தகைய பெரும்போர் நிகழமுடியும். இத்தனை பெரிய விலையை எளியவற்றுக்காக எவரும் அளிக்கமாட்டார்கள். எத்தனை உயிர்கள்! எவ்வளவு குருதி! விழிநீர்ப்பெருக்கு. வீழும் பேரரசுகள். அனைத்தும் தெய்வங்களும் உகக்கும் சிலவற்றுக்காகவே. எண்ணங்கள் வெறுமைநிறைந்த வெளியொன்றில் சென்று மறைய விந்தையானதோர் சொல்லின்மை அர்ஜுனனில் கூடியது.

இப்போரில் அனைவரும் நாற்களக் காய்களே என்னும் சொற்களுடன் அவன் மீண்டு வந்தான். அச்சொற்களை எவரேனும் ஒவ்வொருநாளும் சொல்வதுண்டு. அது அங்கிருந்த அனைவரிலும் திகழும் எண்ணம் என ஆகிவிட்டிருந்தது.

அத்தனைமுறை சொல்லப்பட்ட சொற்கள் ஐயமற்றவையாக, மறுப்பற்றவையாக, வடமலைகளைப்போல பருவுருக்கொண்டவையாக ஆகிவிடுகின்றன. அச்சொற்களை பற்றிக்கொண்டு மீள முடிந்தது. அச்சொற்களைச் சூடி மறுநாள் எழ முடிந்தது. அச்சொற்களுடன் விண் சென்றால் அங்கே மூதாதையரை நேர்விழிகொண்டு நோக்கமுடியும். அறத்துக்கும் நெறிக்கும் கணக்கு சொல்லி துலாவுடனும் வாளுடனும் வரும் தெய்வங்களை எதிர்கொள்ளமுடியும்.

எழுக, இதோ எழுந்து நின்றிருக்கும் உன் பேருருவை நீயே கடந்து செல்க! உன் குருதியினூடாக நீ மறுபக்கம் செல்கையில் உனக்கென்று இதுவரை மறைந்திருந்த பாதை திறக்கும். இதுவரை நீ காணாத ஒரு தெய்வம் அங்கு எழக்கூடும். இதுவரை நீ அணிந்த அனைத்துச் சொற்களும் புத்தொளியுடன் அங்கு திரண்டு நின்றிருக்கலாகும். உன்னைக் கொன்று நீ அடைந்தனவே அனைத்தும். நீ விழைந்த இப்பெருவடிவு நீ விண்ணுலகில் சூடும் உன் தோற்றம். தன்னைக் கடப்பது எளிது, தன் கனவுகளைக் கடப்பது அரிதினும் அரிது. உன் பேருரு. உன் தெய்வத்தின் தோற்றம்.

அர்ஜுனன் இளைய யாதவரை பார்த்தான். அவர் புன்னகையுடன் திரும்பி அவனைப் பார்த்து "பார்த்தா, உனக்கு நான் உரைத்த அந்தத் தொல்நூலை நினைவுறுகிறாயா?" என்றார். "ஆம், அதை உமது பாடல் என என் உள்ளம் ஒவ்வொரு சொல்லாக நினைவுகூர்கிறது" என்று அர்ஜுனன் சொன்னான். "அச்சொற்கள் அனைத்தும் பொருள் கொள்ள வேண்டுமெனில் இதோ எழுந்து நின்றிருக்கும் இவனுக்கெதிராக எழுக உன் வில்!" என்று இளைய யாதவர் சொன்னார். அர்ஜுனன் காண்டீபத்தை இறுகப் பற்றிக்கொண்டு

சொல்லின்றி நின்றான். கைசுட்டி "இவனை வென்றாலொழிய நீ கடக்கமுடியாது" என்றார் இளைய யாதவர். மெய்யாகவே அவர் அதை சொன்னாரா?

காற்று விசையுடன் இல்லை என்றாலும் அதில் நடுங்கவைக்கும் குளிர் இருந்தது. மேலே முகில்நிரைகள் வானை மூடியிருக்கும் என அர்ஜுனன் எண்ணினான். இடியோசைகள் இரவு முழுக்க மிகத் தொலைவிலென ஒலித்துக்கொண்டிருந்தன. படைவீரர்கள் மழையில் துயில்வதற்குரிய தேன்மெழுகும் அரக்கும் வெண்சுண்ணத்துடன் கலந்து பூசப்பட்ட தட்டிகளை வளைத்து நிலத்தில் ஊன்றி அதற்குள் பலகைகளை அமைத்து உள்ளே புகுந்துகொண்டனர். படைப்பரப்பு கரையொதுங்கிய மீன்களாலும் ஆமைகளாலும் ஆன வெளிபோல மின்னல்களில் துலங்கி அணைந்துகொண்டிருந்தது. யானைகளுக்கும் புரவிகளுக்கும் முதுகின்மேல் மெழுகுத்தட்டிகள் அமைக்கப்பட்டன.

ஆனால் காற்றில் நீர்வெம்மையே நிறைந்திருந்தது. மழைத்துளி விழுந்தபின் குடிலுக்குள் செல்லலாம் என அவன் படுத்திருந்தான். உடல் வியர்வையில் எரிய விடாய் எழுந்தபடியே இருந்தது. பலமுறை எழுந்துசெல்ல எண்ணியும் உள்ளச்சலிப்பு எழவிடவில்லை. எப்போதோ துயின்று மிகமிக அப்பால் எங்கோ அறியா நிலங்களில் இளைஞனாக அவன் அலைந்துகொண்டிருந்தான். பின்னர் மூங்கில்செறிந்த நிலமொன்றில் இளங்கன்னியாக விளையாடினான். வேர்கள்செறிந்த நீராழத்தில் நீந்தித் திளைத்தான். மின்னும் கண்கள்கொண்ட இளைஞன் ஒருவனிடம் காதல்கொண்டான். அவனை மணந்து அழகிய இளங்குழவி ஒன்றுக்கு அன்னையானான். விழித்துக்கொண்டபோது நீர்வெம்மை

மறைந்து குளிர்காற்று ஒழுகிக்கொண்டிருந்தது. வானில் இடியோசைகளும் குறுமின்னல்துடிப்புகளும் நிறைந்திருந்தன.

இடியும் மின்னலும் நிறைந்த வானை அவன் நிமிர்ந்து நோக்கினான். முகில்களுக்கு அடியில் வானில் கதிர் எழுந்திருக்கக்கூடுமோ என ஐயம்கொண்டான். ஆனால் கதிர் விழிகளில் தோன்றவில்லை என்றால் கதிரவனின் பாதையை கணித்து காலையை அறிவிக்க நிமித்திகர் முடிவெடுப்பார்கள். எக்கணமும் முரசின் ஒலி எழக்கூடும். அவன் நெடுநேரமாக காத்திருப்பதாக உணர்ந்தான். ஆனால் சற்றுநேரமே ஆகியிருக்கிறதென்பதையும் உணர்ந்திருந்தான். அவ்வண்ணம் ஊசிமுனைத் தவம் எனக் காத்திருக்கும் பிறிதொரு பொழுது இனி வரப்போவதில்லை. இந்தக் கணங்களை மேலும் மேலும் என விரித்து நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாக, முழுவாழ்நாளாக என்னுள் மாற்றிக்கொள்ளவிருக்கிறேன். இத்தருணத்திற்குப் பின் நான் பிறிதொருவன்.

இடியோசை முழங்கி உள்ளத்தில் ஓடிய சொற்சரடை திடுக்கிட்டு குலையச் செய்தது. அவை எறும்புக் கூட்டமென சிதறி மீண்டும் ஒருங்கிணைந்தன. ஆனால் அவற்றின் திசையும் இலக்கும் மாறிவிட்டிருந்தது. மின்னல்கள் விழிகளை ஒளியால் குருடாக்கி, செஞ்சுழிக் கொந்தளிப்பாக்கின. மீண்டும் புறத்தோற்றம் எழுகையில் ஒவ்வொன்றும் அடுத்த மின்னலில் துடிதுடித்துத் தோன்றின. மென்மழை பொழியத் தொடங்கியது. மெல்லிய நீர்த்துளிகள் விசையில்லாமல் பொழிந்து இளங்காற்றில் பீலிபோல் அசைந்தன. யானைகள் மேலும் கருமைகொண்டன. வெண்கலத் தேர்மகுட வளைவுகளில் நீர்த்துளிகள் பொற்துளிகளாயின. குருக்ஷேத்ரத்தின்

பூழிமண்ணில் மென்துளிகள் படிந்து அது
மெய்ப்புகொண்டதுபோலத் தோன்றியது.

படைகளெங்கும் எழுந்த குரல்கள் இணைந்து முழக்கமாயின. பாண்டவப் படையில் அனைவரும் திரும்பி கீழ்வானை நோக்கினர். அர்ஜுனன் திரும்புவதற்குள் தன் முன் இருந்த தேர்த்தூண்களின் உலோகவளைவில் அனலென எழுந்த முகில்தொகையை பார்த்தான். தேர்மகுட வளைவுகளில், யானைக்கவசங்களில், வேல்முனைகளில் அந்தச் செம்முகில் சுடரென எழுந்தது. திரும்பி அதை நோக்கியபோது முன்னரே எதிர்பார்த்திருந்தபோதிலும்கூட அந்த முகில்மலையின் பெருந்தோற்றம் அவனை திகைக்கச்செய்தது. நூற்றுக்கணக்கான பாறைமுடிகளும் சரிவுகளும் கரவுகளும் கொண்ட மலை அனல்பற்றி எரிய வானில் மிதந்து நின்றது. மேலும் மேலுமென அதனுடன் முகில்கள் இணைந்துகொண்டன.

மீண்டும் பாண்டவப் படைகள் முழக்கமிட்டன. அவன் திரும்பி நேர்முன்னால் எழுந்த விண்வில்லை நோக்கி சொல்லிழந்தான். அதன் முழுமையும் தெளிவும் அது விண்வில்தானா என்றே ஐயம்கொள்ளச் செய்தன. ஒவ்வொரு வண்ணமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து துலங்க அது ஒரு பட்டுத்துகில் அணிவளைவு என நின்றது. பாண்டவப் படை "விண்ணவர்கோன் வாழ்க! வெல்க விண்ணோன் மைந்தன்! வெல்க இடித்தொடர்களின் தலைவன்! வெல்க மின்னொளியின் வேந்தன்! வெல்க மின்கொடி! வெல்க பார்த்தர்! வெல்க பாண்டவப் பேரரசர்!" என்று முழக்கமிட்டது. ஆடைகளும் படைக்கலங்களும் விண்ணிலெழுந்து அமைந்து அவனைச்

சூழ்ந்து அலையடித்தன. மழையின் இருளுக்குள் அவ்வோசை கார்வைகொண்டு சூழ்ந்தது.

ஆனால் மெல்லமெல்ல நீரிருள் மிளிர்வு கொண்டது. ஒவ்வொரு மழைத்துளியிலும் ஓர் ஒளித்துளி இணைந்துகொண்டது. மழையே குளிரொளி சூடி அப்பகுதியை துலங்கச்செய்தது. விண்முகில்கள் வெடித்து அகல செவ்வொளி வானிலெழுந்து களம் மீது பரவியது. அதன் முதற்கதிர் வந்து கர்ணனை தொட்டது. கர்ணனின் நெஞ்சக்கவசமும் குண்டலங்களும் சுடரொளி கொண்டன. பின்னர் ஒவ்வொரு அணிகலனாக ஒளி பற்றிக்கொள்ள அவன் சுடர்ந்தெழுந்து அப்படைநிலையின் முன்னிலையில் நின்றான். கௌரவப் படை மாபெரும் அகல்விளக்கெனத் தோன்ற அதில் எழுந்த திரிச்சுடர் என்று அவன் பொலிந்தான்.

அவன் தேர் ஒளி கொண்டது. அதன் மேல் படபடத்த யானைச்சங்கிலிக்கொடி அனல்நெளிவு கொண்டது. அவன் அணிந்த கவசமும் குண்டலங்களும் கருமுகில் பிளந்து பீறிடும் காலைச்செவ்வொளி என சுடர்ந்தன. அக்கவசங்களை கௌரவ வீரர்கள் அனைவரும் கண்டுவிட்டிருந்தனர். "அங்கர் வெல்க! வாழ்க கதிர்க்கவசம்! அணிகொள்க மணிக்குண்டலம்! வெல்க கதிர்மைந்தர்! வெல்க விண்ணொளியின் அரசர்! வெல்க கௌரவப் பெரும்படை! வெல்க அழுதகலக்கொடி! வெல்க கௌரவப் பேரரசர்!" என கௌரவப் படை ஓசையிட்டது.

எப்போதென்றறியாமல் பாண்டவப் படையிலிருந்து "அங்கர் வாழ்க! கதிர்மைந்தன் வாழ்க!" என்னும் தனிக்குரல் எழுந்தது. அதன் மாபெரும் எதிரொலி என பாண்டவப் படை முழக்கமிட்டது. "அங்கர் வாழ்க! மண்ணெழுந்த விண்ணுலாவி வாழ்க! பேரழகர் வாழ்க!" அர்ஜுனன் முகம் மலர்ந்தான்.

இளைய யாதவர் அவனை திரும்பி நோக்கி அவன் புன்னகையைக் கண்டு தானும் புன்னகைத்தார்.

இருட்கனி - 22

எப்போது போர் தொடங்கியதென்று தெரியவில்லை. போர்முரசு ஒலித்ததை கேட்டோமா என்றே அர்ஜுனனுக்கு ஐயமாக இருந்தது. தவிர்க்கமுடியாத விசையொன்றால் ஈர்க்கப்படுபவனைப்போல் கர்ணனை நோக்கி தான் சென்றுகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். பல ஆண்டுகளுக்கு முன் முதல்முறையாக கலிங்கத்திற்குச் சென்று கடலை பார்த்தபோது அந்த ஆட்கொள்ளல் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. மிகத் தொலைவிலேயே அவன் கடலின் முழக்கத்தை கேட்கத் தொடங்கினான். ஆனால் காற்றின் சுழற்சியில் அது அவன் தலைக்குப் பின்னும் இருபுறங்களிலுமாக மாறி மாறி ஒலித்து உளமயக்கை உருவாக்கியது. பெருந்திரளொன்று அலைகொள்வதுபோல, கூச்சல்கள் குழம்பி பொருளற்ற முழக்கமென மாறியதுபோலத் தோன்றியது. அருகே எங்கோ பெரும் சந்தை இருப்பதாக, விழவொன்று கூடியிருப்பதாக, போர்க்களம் நிகழ்ந்துகொண்டிருப்பதாக அவனை அறியாமலேயே அவன் உள்ளம் எண்ணியது.

அவ்வாறு அவன் எண்ணுவதைக்கூட அவ்வெண்ணத்தைத் தொடர்ந்து அவன் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளைக் கொண்டுதான் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. எதிரில் தெரிந்த காட்சியிலிருந்து தன்னை விலக்கும் ஓசைகளை திரும்பித்திரும்பி நோக்கிய பின்னர் அங்கே வெறும்

புறநிலம்தான் என உணர்ந்து மீண்டும் நோக்கியபோது தொலைவில் மண் மேலெழுந்து வானில் சற்றே வளைந்த கோடென நின்றிருப்பதை கண்டான். மரமோ செடிகளோ இல்லாத நீல நிலம். பின்னர் அதை நீலவண்ணம் பூசப்பட்ட பெரும்கோட்டைச்சுவர் என எண்ணினான். அதன் பின்னர்தான் துரட்டியால் குத்தப்பட்டதுபோல் அது கடல் என்று புரிந்துகொண்டான். அக்கணமே ஓசை சென்று அதில் பொருந்திக்கொண்டது. கொந்தளிப்போசையுடன் எழுந்து நின்று அலையடித்த அந்த நீர்வெளியைப் பார்த்தபடி அவன் கைநடுங்க அசைவிலாது நின்றான். நீர் அவ்வண்ணம் பொங்கி மேலெழுந்து தலைக்குமேல் நின்றிருக்கக் கூடுமென்பதை அவனால் கற்பனை செய்யவே இயலவில்லை.

விந்தையானதோர் தெய்வ ஆணைக்கு கட்டுப்பட்டதுபோல் அது தன்னைத் தன்னாலேயே வேலியிட்டுக்கொண்டு அங்கே நின்றது. நுரைக்குமிழிச் சுவர் அப்பரப்பு. ஒரு சிறுவிரல் தொடுகையில் உடைந்து பெருகி கரைக்கு வந்து ஒவ்வொன்றையும் அறைந்து சிதறடித்து தான் மட்டுமே ஆகி நின்றிருக்கும் என்று எண்ணச்செய்தது. அதன் விளிம்பில் அலைகள் நெளிந்தன. ஓடும் புடவையின் கீழ்மடிப்பின் அலைகள்போல. பறவைகள் அதன் மேல் இயல்பாக பறந்து சென்றன. கலங்கள் அதன் மேல் உள்ளங்கைகளால் ஏந்தி அசைக்கப்படுவதுபோல் நின்றுகொண்டிருந்தன. காற்றில் உலையும் நீண்ட சரடுமேல் எறும்புகள் வரிசையாக நின்றிருப்பதுபோல் என அவன் படகுகளை கற்பனை செய்தான்.

“எதனால் நீர் கரை நோக்கி வராமலிருக்கிறது?” என்று அவனுடன் வந்த இளம்வணிகன் கேட்டான். “பள்ளம் நோக்கி பெருக்கெடுக்கும் ஆணையை அதற்கு அளித்த தெய்வங்கள்

பொறு என்று சொல்லி மறைந்துவிட்டன என்று என் மைந்தனுக்குச் சொன்னேன்" என்றான் முதிய வணிகன். திரும்பி அவன் நோக்கிக்கொண்டே நின்றிருப்பதைக் கண்டு நகைத்து "இதுதான் கடல்" என்றான். "தலைக்குமேல் இத்தனை நீர் எழுந்து நிற்கும் என்று நான் எண்ணியதே இல்லை" என்றான் அர்ஜுனன். "தலைக்குமேல் அல்ல. தொலைவை நாம் உயரமென எண்ணிக்கொள்கிறோம்." அர்ஜுனன் அக்கணமே அதை விழியுணர்ந்து "ஆம், தொலைவு!" என்று எண்ணிக்கொண்டான்.

"தொலைவும் உயரமும் ஒன்றாவதை நாம் கடலில் மட்டுமே காணமுடியும்" என்றான் முதிய வணிகன். "இங்கு தொலைவென்பதற்கு பொருளே வேறு. கரையில் தொலைவென்பதை பலநூறு அடையாளங்களைக்கொண்டே நாம் வகுத்துக்கொள்கிறோம். ஊர்கள், மலைகள், ஆறுகள் என. கடலில் தொலைவென்பது நீர்வெறுமை. பெருந்தொலைவு முழு வெறுமை. இதோ இவ்வண்ணமே நீல மின்பரப்பு முடிவிலி வரை சென்றுகொண்டே இருக்கும். தன்னைத்தானே சுற்றிக்கொண்டே இருக்கும் ஆழி இது. பிறிதொன்றிலாததனால் பாழி."

அவன் நீரை நோக்கி நீள்மூச்சுவிட்டான். அது நீரென்றே தோன்றவில்லை. "பளிங்குப் பரப்பென்று விழிமாயம் கூட்டுகிறது" என்றான். "அதன் மேல் சென்றுகொண்டிருக்கையிலும் கூட அவ்வாறு தோன்றும். இறங்கி நடந்துவிடலாமென்னும் எண்ணம் ஏற்படும். அவ்வழைப்பு மாலுமிகள் உளம் கலங்குகையில் ஆற்றல் கொள்கிறது. இறங்கி நடந்து சென்று மறைந்தவர்கள் பல்லாயிரம் பேர் உண்டு" என்றான் முதிய வணிகன். "அது

வெறுமை என்பது ஒரு ஏமாற்று. அதற்கு அடியில் இப்புவி மேல் நாம் காணும் உலகத்தைவிட மும்மடங்கு, மூவாயிரம் மடங்கு பெரிய ஓர் உலகம் உள்ளது. இளையவனே, இந்தப் பெருநாவாய்களை நீருமிழ்ந்தே சிதறடிக்கச்செய்யும் மீன்கள் அங்கு உள்ளன."

"இப்புவியில் உள்ள மானுடர்கள், பிற உயிர்கள் அனைத்தையும்விட ஆயிரம் மடங்கு உயிர்கள் அங்கு செறிந்திருக்கின்றன. மீன்கள், பாம்புகள், சிறகுவிரித்து நீந்தும் முதலைகள், சிப்பிகள். நாம் உயிரென்றும் உடலென்றும் எண்ணியிருக்கும் அனைத்துக் கற்பனைகளையும் கடந்த ஆழத்தில் இப்பெருங்கடலின் எடை அனைத்தையும் தன்னுள்ளேற்றி உயிர்வாழும் கரிய மீன்கள் உள்ளன. அவை அப்பேரழுத்தத்தில் மட்டுமே வாழக்கூடியவை, இழுத்து மேலெடுத்தால் அக்கணமே உடல் சரிந்து உயிர் விடுபவை. கடலின் ஆழத்தில் ஒரு துளி ஒளியும் சென்று சேர்வதில்லை, ஒலி என எதுவும் அங்கு அடைவதில்லை, இவ்வுலகிலிருந்து அதை நோக்கவோ கேட்கவோ எவ்வழியும் இல்லை. ஆனால் இப்புவியில் கைவிடப்பட்ட அனைத்தும் அங்கு சென்று சேர்கின்றன."

"இங்கிருந்து ஒழிந்தவை அனைத்தையும் தெய்வங்கள் அங்கே கண்டெடுக்கின்றன. ஆகவேதான் நீத்தாரை கடல்புகச் செய்கிறோம். இங்கு அவர்கள் வாழ்ந்த உலகு அங்குதான் பிறிதொரு வடிவில் உள்ளது. அவ்வுலகில் அவர்களும் பிறிதொரு வடிவில் இருப்பார்கள்" என்றான் முதுவணிகன். "கடலென்பது ஒரு மாபெரும் உள்ளம். கடந்தவை அனைத்தும் இருளெனச் செறிந்த முடிவிலி. தெய்வங்களின் கைகளும் விரல்களும் அங்கே மீன்களென அலைகின்றன.

ஒவ்வொன்றையும் தொட்டுத்தொட்டு உணர்கின்றன. அவ்விருள் மேல் கதிரவனின் ஒளி படுவதனால் இந்நீலவண்ணம் உருவாகிறது. இருளின் புன்னகை அது.”

“கடலை கதிரவனின் மைந்தன் என்று தொல்யவனர்கள் கூறுவதுண்டு. அவர்களின் வருணன் நீல உடல் கொண்டவன். ஓயாது எழும் கைகள் கொண்டவன். ஒற்றைச் சொல்லை ஊழி முழுக்க சொல்லி நிலைபெற்ற ஊழ்கம் அமைந்தவன். புவி முழுக்க அனைத்து மக்களும் கடலை பெருங்கொடையாளனாகவே எண்ணுகிறார்கள். மழையால் மண் குளிர்கிறது. அன்னம் உருவாகிறது. அன்னத்தில் சேதனை எழுகையில் உயிர் பிறக்கிறது. அன்னத்தை உண்டு உயிர் வளர்கிறது. மடிந்து உப்பாகி மீண்டும் கடலுக்கே மீள்கிறது” என்றான் முதுவணிகன். “மைந்தர்களே, ஆயிரம் பல்லாயிரம் யுகங்களாக இப்புவிக்கே அள்ளி அள்ளி அளித்துக்கொண்டிருக்கும் கைகளையே நீங்கள் அலைகளென்று பார்க்கிறீர்கள். கடல் அளித்த கொடையே இந்நிலம். அதைச் சூழ்ந்து தன் எல்லையை தானே வகுத்து நின்றிருக்கிறது கடல். நோக்குக, அந்த வெண்ணிற மணல்விளிம்பை! எத்தனை ஆயிரம் கோடி அலைகள் வந்திருக்கும்! ஒவ்வொன்றும் விழிக்குத் தெரியாத அவ்வெல்லைக்கோட்டில் முட்டி திரும்பிச் செல்கின்றன. கடல் தனக்கு அளித்துக்கொண்ட சொல் அங்கு நுண்ணுருவில் சரடென நின்றிருக்கிறது.”

அர்ஜுனன் இரு கைகளையும் விரித்தபடி கடல்விரிவை நோக்கி செல்லத்தொடங்கினான். முதுவணிகன் அவனுடன் நடந்தபடி “இளையவனே, கடல் மானுடரை இழுக்கும். அது கண்முன் எழுந்த பிரம்மம். முடிவிலி என மானுடன் முன் தோன்றும் பொருள்வடிவம் அது ஒன்றே. ஓங்குசொல் எழுந்த

பெருநாவு. வான்நோக்கும் நீலவிழி. அறிந்ததும் மறந்ததும் கனவும் கடந்த ஆழமும் ஒன்றேயான அதன் ஆழ்தொலைவு. கடலில் இறங்கியவன் ஒருபோதும் மீள்வதில்லை. மேலும் மேலுமென விழைவுகொண்டு அதன் விரிவுதேடி செல்வான். மாலுமியாக அதன் மீது அலைவான். நிலத்தை வெறுப்பான். ஒருநாள் அதன் ஆழத்தில் மூழ்கி மறைவான்" என்றான்.

கடல்அலைகளை நோக்கி சென்று, சற்றும் தயங்காமல் அதிலிறங்கி, இடை கடந்து நெஞ்சு கடந்து கால் துழாவத்தொடங்கிய பின்னரும் அவன் சென்றுகொண்டிருந்தான். கரையிலிருந்து "இளையவரே, இளையவரே" என்று கூவிய வணிகர்கள் இருவர் பின்னர் நீரில் பாய்ந்து நீந்தி அவனருகே அணைந்து அவன் இடையில் சுற்றிய கச்சையை பற்றிக்கொண்டார்கள். "வருக! வருக!" என இழுத்துச்சென்று மணல்கரையில் நிறுத்தினார்கள். "என்ன செய்யவிருந்தீர்கள்? இது என்னவென்று முற்றுணர்ந்தீர்களா? இது ஆட்கொள்ளும் விரிவு. விரிவுகளை அணுகும் எவரும் தன்னை இழப்பார்." அவன் பித்தன்போல கடலையே நோக்கிக்கொண்டிருந்தான். "நீர்த்துளியை வானம் கவ்வி நிறுத்தி வடிவத்தை வழங்குகிறது. மானுடருக்கு ஆணவமே இருப்பையும் பொருளையும் அளிக்கிறது. விரிவுகள் ஆணவத்தை அறைந்து சிதறடிக்கின்றன."

அவன் மெல்ல தளர்ந்து "ஒளி கொண்ட கருமை" என்றான். "ஆம்!" என்று கடலை திரும்பிப்பார்த்தபின் இளம்வணிகன் சொன்னான். "கடல் தங்களை பற்றிக்கொண்டுவிட்டது. இனி மீளமீள கடலை நாடி வந்துகொண்டிருப்பீர்கள். நெடுங்கடல் பயணங்களை நிகழ்த்துவீர்கள். கடலிலிருந்து முற்றகன்று உங்களால் இனி வாழ இயலாது." அர்ஜுனன்

பெருமூச்சுவிட்டான். “இனி நீங்கள் நீலத்தால் ஆட்கொள்ளப்படுவீர்கள். விழி மூடினால் அக்கணமே அந்நிறம் உங்களை சூழ்ந்துகொள்ளும்.”

தொடங்கிய சில கணங்களிலேயே என்றும் அப்போர் அவ்வாறே நிகழ்ந்துகொண்டிருந்ததை அர்ஜுனன் உணர்ந்தான். ஒவ்வொரு போருக்குப் பின்னரும் அந்தப் போர் அம்புகளாலும் வில்லாலும் நிகழத்தொடங்குவதற்கு நெடும்பொழுதிற்கு முன்னரே அது தொடங்கியிருப்பதை உணர்ந்ததுண்டு. அக்களம் கூடுகையில், அல்லது அதற்குரிய வஞ்சங்கள் எழுகையில், அதற்கும் அப்பால் அந்த உளநிலை முளைவிடுகையில். பீஷ்மரிடம் போர் தொடங்கியது அஸ்தினபுரியின் அவையில் திரௌபதி சிறுமைசெய்யப்பட்டபோது. துரோணருடன் போர் தொடங்கியது அவன் துருபதரை வென்று கொண்டுசென்று அவர் காலடியிலிட்டு அவரில் ஊறிய நச்சுப்புன்னகையை கண்ட அக்கணத்தில். அப்போதே முதல் அம்பு அம்பறாத்தூணியிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அது நாணில் அமைந்து காற்றில் எழுவதற்கு அத்தனை ஆண்டுகள் தேவைப்பட்டன.

குருக்ஷேத்ரத்தில் கர்ணனுடன் போர்புரிகையில் குருதியும் புழுதியும் கலந்து வழிந்த உடலுடன் தோல்வியின் வஞ்சம் எரிந்த உள்ளத்துடன் முதல்நாள் அந்தியில் போர்முரசு கேட்டு காண்டீபத்தை தாழ்த்துகையில் அவன் உணர்ந்தான் அப்போர் அவன் கர்ணனை உளம் கொள்ளத்தொடங்கிய நாளில் தொடங்கிவிட்டதென்று. அல்லது அதற்கு முன்னரே. ஏழு பிறவியில் தொடரும் வஞ்சம் என இவனுடன் எனக்கென்ன உள்ளது? ஒருவேளை சூதர் கதைகளில் சொல்லப்படுவதுபோல

இவன் மெய்யாகவே கதிர்மைந்தனும் நான் இந்திரன்மைந்தனும்தானா? அத்தேவர்கள் தங்களுக்குள் கொண்ட பகைதானா இது?

அவர்களுக்குள் என்ன போட்டி இருக்க இயலும்? அள்ளிக் கொடுத்துக்கொண்டே இருக்கும் கதிரவன். இப்புவியில் விளைந்தவை, கனிந்தவை, முழுத்தவை அனைத்தையும் தனக்கென எடுத்துக்கொண்டே இருக்கும் இந்திரன். அவர்களுக்கிடையே ஒரு போதும் ஒத்திசைவு நிகழ இயலாது. அவர்கள் முரண்பட்டு நிற்பதினூடாகவே இப்புடவி முடையப்பட்டுள்ளது. எனில் இப்பகைமை எவ்வகையிலும் நான் வகுத்துக்கொள்ள இயலாதது. இது எனக்கும் இவனுக்குமான போரல்ல. என்னிலும் இவனிலும் எழுந்து நிகழ்ந்து முடிவது. முன்பும் இவ்வாறே வாலியிலும் சுக்ரீவனிலும் நிகழ்ந்திருக்கும். உலகமெங்கும் இருவருக்கும் மைந்தர்கள் பிறந்து பூசலிட்டுக்கொண்டே இருப்பார்கள். சிம்மங்களில், புலிகளில், மான்களில், மீன்களில், எறும்புகளில், உயிர்க்குலங்கள் அனைத்திலும்.

ஏனென்றால் விண்வாழும் அவர்களின் தந்தையர் இருவரும் ஓரன்னை வயிற்றில் எழுந்த உடன்குருதியர். அவர்கள் இருவரும் போரிட்டுக்கொள்வதை விண்ணில் எங்கோ இருந்து அன்னை அதிதி நோக்கிக்கொண்டிருக்கிறாள். முடிவிலிவரை நீள்வது அவளுடைய பெருந்துயர். மண்ணையும் விண்ணையும் செயல்விசை கொண்டதாக ஆக்கும் மாறா நெறி அவள் கண்ணீரின்மேல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆற்றல்மிக்க மின்னரசன் வெய்யோனுடன் என்றேனும் இணைந்துள்ளானா? அன்னை முன் அவர்கள் இருவரும் சென்று நின்றுள்ளனரா? அன்னை புன்னகைக்கும் ஒரு பொழுது எழக்கூடும். இருவரும்

தழுவிக்கொண்டால் ஒருடலென்றாவார்கள். அன்று இப்புடவிப்பெருநெசவு பிரியத்தொடங்கும். தன்னைத்தான் அழித்து இன்மையென்றாகும்.

கர்ணனின் இருபுறமும் அவன் மைந்தர்கள் தேரிலெழுந்திருந்தனர். அர்ஜுனனுக்கு இருபுறமும் சுருதகீர்த்தியும் சுருதசேனனும் சதானீகனும் ஊர்ந்தனர். இருபுறமும் விரிந்த படைகளை நடத்தியபடி சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் போரிட்டனர். போர் தொடங்கிய சற்று நேரத்திலேயே அம்புகளால் வானம் நிறைந்தது. கர்ணன் முழு விசையுடன் போரிட்டான். அவனுடைய அம்புகளினூடாக உருவான வான்கோட்டைக்கு அப்பால் அவர்கள் தொடுத்த அம்புகள் எதுவும் சென்று சேரவில்லை. ஆயினும் அர்ஜுனன் கைசலிக்காது அம்புகளால் கர்ணனை எதிர்த்தான். ஆயிரம் பல்லாயிரம் நாகங்கள் விண்ணில் புழைதேடி தவித்தன. நாகங்களால் அறைபட்டுப் பின்னி மண்ணில் விழுந்தன. அவன் விழிகளும் கைகளும் முற்றாக ஒத்திசைந்து போரிட உள்ளம் சொற்குவைகளைக் கலைத்தபடி அலைபாய்ந்துகொண்டிருந்தது.

போரில் வெற்றி தோல்வி இலாது, ஒருவர் கை ஒருவருக்குத் தாழாது நிகழ்கையில் போரென்பதே பொருளற்ற ஒன்றாகிவிடுகிறது. இப்புவியில் ஒருவர் ஒருவரை வெல்லவே இயலாதென்று தெய்வங்கள் வகுத்திருக்குமெனில் போரென்பதே நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. வெற்றி என்றொன்றை படைத்த தெய்வங்கள் ஒருபோதும் ஒழியாத போரை உள்ளும் புறமும் நிகழ்ந்துகொண்டிருக்கும்படி அமைத்தன. போர் ஒருவரை ஒருவர் கொல்வதில் நிறைவுறுவதில்லை. கொல்வதென்பது ஒரு தொடக்கமே. கொன்ற பின்னர் இறந்தவன் மேல் தன் புகழால் மேலும் ஒரு

வெற்றியை அடைந்தாகவேண்டும். அதன்பொருட்டே இறந்தவனை வென்றவன் புகழ்ந்து பெரிதாக்குகிறான். வென்றது எளிய வெற்றி அல்ல என்று நிறுவுகிறான். வென்றது ஊழென்று அமைக்கிறான். வெற்றியை மீளமீளச் சொல்லி நிலைநிறுத்தவேண்டும். விதைக்குமேல் பெரும்பாறையைத் தூக்கி வைத்ததுபோல அடியிலிருந்து முளைத்து வளைந்தெழுந்து தோற்றவர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள்.

போர் வெற்றி என்பது ஒரு பண்டமாற்று வணிகம். வென்றவனுக்கு இவ்வுலகு கிடைக்கிறது. தோற்றவர்கள் என்றுமுள புகழை அடைகிறார்கள். இப்புவியில் வீரன் என்று நானிருப்பேன். தன் உடலையும் உயிரையும் கொடுத்தவனாக இவன் எழுவான். தன் ஆணவத்தால் தோற்றவர்கள்கூட கொடையாளர்களாக புகழ் கொண்டெழுகிறார்கள். தோற்றவர்களை எங்கேனும் எவரேனும் முழுக்க மறந்திருக்கிறார்களா என்ன? நினைவில் நிறுத்துவதற்காகவே இப்போரெனில் இப்போது நான் செய்துகொண்டிருப்பதென்ன? என் பேருருவை, என் கனவுவடிவை இப்பல்லாயிரம் அம்புகளால் பெருந்திரையென விரித்து வானில் ஆணி அறைந்து நிறுத்துகிறேனா? இவ்வெண்ணங்கள் என்னுள் ஓட இங்கு நான் செய்துகொண்டிருப்பதென்ன?

போரில் கர்ணனை மானுடர் ஒருபோதும் வெல்ல இயலாது என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனென்றால் அவன் ஆசிரியனை எந்த மானுடனும் வென்றதில்லை. என் ஒவ்வொரு அம்பும் அதையே சொல்கிறது. ஒவ்வொரு அம்பையும் அவன் அம்பு அறைந்து வீழ்த்துவதையே இங்குள்ளோர் காண்கிறார்கள். ஒவ்வொரு அம்பிலும் அவன் என்னைத் தடுப்பதற்கு அப்பால்

ஒருகணம் மேலெழுந்திருக்கிறான் என்பதை நான் மட்டுமே அறிவேன். ஒவ்வொரு கையசைவிலும் அவனில் கூடும் அந்த ஒத்திசைவை நான் எங்கும் அறிந்ததில்லை. சுடரென எழுந்து நெளிந்தாடி என் உடல் கொள்ளும் இந்த ஒத்திசைவைவிட முற்றிலும் இருபுறமும் நிகர் கொண்டு அசைகின்றதா என்று விழிக்கு திகைப்பூட்டி அவன் எழுப்பும் அம்புகளின் ஒத்திசைவு ஒரு படி மேலானது. ஓரிடத்தில் நான் களைத்து சலிக்கக்கூடும். இவன் கடந்து செல்வான்.

இவன் என்னை கடந்து செல்லும் கணம்தான் என்ன? ஒவ்வொரு முறையும் இவன் அம்பால் நான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அது எங்ஙனம் நிகழ்ந்தது என்று எண்ணிச் சென்று அவ்விடத்தை தொட்டு திகைக்கிறது என் உளநுண்மை. எவ்வண்ணமோ அது நிகழ்ந்திருக்கிறது. வைரத்தின் ஓர் அரைக்கணத் திரும்பலில் அதன் முழு ஒளித்தோற்றமும் மாறிவிடுவதுபோல். எங்கு இம்முறை நான் தோற்றேன்? எவ்வண்ணம் என் அம்பு பொருளிழந்தது? அவன் வில் என்னை வெற்றி கொள்ளும் கணத்தை மட்டும் தொட்டெடுப்பேன். அதை என்னுள் நூறாக, ஆயிரமாக, பல்லாயிரமாக பிரித்து மீளமீள அடுக்கி கண்டடைவேன், இவனை வெல்வதெப்படி என. இவனில் என்னில் இல்லாத எது எஞ்சுகிறது என. எவ்வகையில் நான் என் கனவுகளுக்கு இப்பால் நின்றிருக்கிறேன் என. நான் எய்தவேண்டிய தொலைவு அக்கணத்துளியில், அவ்வணுவிடையில் பெருகிவிரிந்திருக்கிறது.

கர்ணனின் அம்புகள் அவன் தலைக்குமேல் வெடியோசை எழுப்பின. அர்ஜுனனின் தேர்மகுடம் அனல்கொண்டு உருகி நெளிந்தது. விழிக்கு முன் பொன்மஞ்சள் அலைகளென ஒளி

திரையிட காட்சிகள் நெளிந்தமைந்தன. சூழ்ந்த புகைப்புழுதிக்குள் விழி தெரியாது அவன் தேர் மிதந்தலைவதுபோல் சுழித்து உலைந்தது. கர்ணனின் நாணோசையை மட்டுமே அர்ஜுனன் கேட்டான். அவ்வதிர்விலிருந்து எழும் அம்பை உய்த்தறிந்தான். அவ்வம்பு எழுப்பும் மெல்லிய சீழ்க்கையிலிருந்து அதன் திசையையும் வடிவையும் உணர்ந்தான். நுண்புலன் ஒன்றால் அம்பு தொடுத்து அவ்வம்பை அறைந்து விண்ணிலேயே சிதறடித்தான். தலைக்குமேல் ஆயிரம் அனல்பறவைகள் என அம்புகள் முட்டிக்கொள்ளும் பொறிகள் நிறைந்தன. மின்கள், சுடர்வுகள், தழல்வுகள், எரிவுகள் வானை மூடின.

செவிகளில் வெடிப்பின், அதிர்வின், கொப்பளிப்பின் வெவ்வேறு ஓசைகள். கண்களுக்குள் நீலமும் பச்சையுமென வெடித்த ஒளிக்குமிழ்களை கண்டான். எக்கணம் எக்கணம் என்று அவன் உள்ளம் வியந்தது. பல்லாயிரம் அம்புகளை இதோ காற்றில் நிறுத்தி வைத்திருக்கிறேன். அவன் எடுக்கும் ஒவ்வொரு அம்புக்கும் இணையான அம்பு. நான் எடுக்கும் ஒவ்வொரு அம்புக்கும் இணையான அம்பு ஒன்று அவனிடம் இருக்கிறது. அப்பால் ஒன்றும் இருக்கிறது. எடுத்து தொடுக்கும்போதே அவன் அதை அறிவான், வந்து வென்ற பின்னரே நான் அறிவேன். அதை முன்னறியக்கூடுமெனில் நான் அவனை வெல்வது இயல்வதாகும். அது அங்கிருப்பதை எனக்குச் சொல்லும் உணர்வு என்ன? அது பெருகி என் துணைத்தெய்வமென எழலாகாதா? இதோ என் முன் தெய்வப்பேருரு என நான் கண்ட என் தலைவன். ஆனால் இப்போது இத்தேரில் நான் முற்றிலும் தனித்திருக்கிறேன்.

நாணறுந்து காண்டீபம் துள்ளித்துள்ளித் தெறித்துச் சரிந்தது. அக்கணமே அர்ஜுனன் தேர்த்தட்டில் குப்புற விழுந்து தன் மேல் கடந்து சென்ற கொலைவாளியை ஒழிந்தான். அதன் விம்மல் கடந்துசென்ற பின்னரும் அவன் காதுகளில் ஒலித்தது. தேர்த்தட்டிலிருந்து பாய்ந்து பின்னால் விழுந்து தரையில் புரண்டு அவன் கடந்து செல்ல ஏழு அம்புகள் அவனைத் தேடி தேர்த்தட்டை வந்தறைந்து தூண்களை உடைத்து தேர்மகுடத்தை தேரிலேயே விழச்செய்தன. அர்ஜுனன் கொல்லப்பட்டான் என எண்ணி பாண்டவப் படைகள் பேரொலி எழுப்பின. அதைக் கேட்டு கௌரவப் படைகளும் வெற்றிக்குரல் எழுப்பின. ஆனால் கடிவாளத்தைப் பற்றிய கையை இறுக்கி மறுகையை விண்ணில் தூக்கி அர்ஜுனன் இறக்கவில்லை என்று இளைய யாதவர் காட்டினார்.

திகைத்து சொல்லழிந்து நின்ற பாண்டவப் படைகள் சுருள்வில் எழுவதுபோல் உயிர்கொண்டு "வெற்றி! விஜயனுக்கு வெற்றி! வெல்லப்பட முடியாதவனுக்கு வெற்றி!" என்று கூச்சலிட கௌரவப் படைகள் திகைத்து பின்னர் சினவெறி கொண்டு "வெல்க! அங்கர் வெல்க! விண்ணொளி மைந்தர் வெல்க! கதிரோன் வெல்க!" என்று கூவினர். அர்ஜுனனைத் தேடி காற்றில் எழுந்த கர்ணனின் அம்புகள் வெடிப்பொலியுடன் மின்னொளியுடன் களத்தை வந்தறைந்தன. யானைகளை அரிந்து வீழ்த்தின. தேர்களை சிதறடித்து தீப்பற்றி எரியச்செய்தன. அர்ஜுனன் அவற்றினூடாக மழைத்துளிகளை கொசு ஒழிவதுபோல் கடந்து சென்று தன் படைக்குவைக்குள் புதைந்து மறைந்தான். அவன் சென்ற வழியெங்கும் மண்ணை அறைந்து குழியெழுப்பி புழுதித்திரை சமைத்தன கர்ணனின் அம்புகள். இறந்த யானைகளும் புரவிகளும் வீரர்களும் உடைந்த தேர்களுமாக அப்பாதை களத்தில் தெளிந்தது.

தேரை பின்னுக்குத் திருப்பி வளைத்து படைகளுக்குள் கொண்டு வந்த இளைய யாதவர் இறங்கி அங்கே எழுந்து உடல் தளர்ந்து அமர்ந்திருந்த அர்ஜுனனை நோக்கி ஓடிவந்தார். "என்ன ஆயிற்று? நலமாக இருக்கிறாயா?" என்றார். அர்ஜுனனை அணுகிய சகதேவன் அவனை தொடமுயன்று கையை விலக்கினான். அர்ஜுனனின் கவசங்கள் அனல்கொண்டு சிவந்து தோல்பட்டைக் கட்டுகள் பொசுங்கிக்கொண்டிருந்தன. அவனை நோக்கி ஓடிவந்த மருத்துவஏவலர் அவன் மேல் நீரை கொட்ட அவை நாகமென சீறி நீர்ப்புகை எழ வைத்தன. தோல்பட்டையை வெட்டி அறுத்து கவசங்களைக் கழற்றி அப்பாலிட்டனர். அர்ஜுனன் தளர்ந்து அவ்வண்ணமே மண்ணில் விழுந்து கண்களை மூடிக்கொண்டான். சகதேவன் "உடலில் அனல் வாழ்வதை இப்போதுதான் காண்கிறேன்" என்றான்.

அர்ஜுனனின் அருகே குனிந்த இளைய யாதவர் "நீ உயிர் பிழைத்திருக்கிறாய். அதுவே இத்தருணத்தில் வெற்றி எனக்கொள்க! உன் ஊழ் அவனை வெல்வதே என்பதற்கான சான்று அது. எழுக!" என்றார். அர்ஜுனன் கண்மூடி அசைவிலாது கிடக்க "ஐயம் வேண்டாம். நீ அவனை வெல்வாய். ஏனென்றால் முன்னர் இந்திரன் மைந்தனை கதிர்மைந்தன் வென்றான். இது உன் முறை" என்றார். அவன் தோளை மெல்ல தொட்டு "அவனை வெல்வது எத்தனை அரிது, அது எத்தகைய புகழை உனக்கு சேர்க்கும் என்பதன்பொருட்டே இத்தோல்விகள். இதற்காக நாளை நீ மகிழக்கூடும்" என்று இளைய யாதவர் மேலும் சொன்னார்.

கண்களைத் திறந்த அர்ஜுனன் "யாதவரே, என் நாணை அறுத்த அந்த அம்பு எங்கே?" என்றான். "நீ கேட்பாய் என்று தெரியும்" என்று கூறி இளைய யாதவர் தன் கையிலிருந்த மிகச் சிறிய

அம்பை எடுத்து அவனிடம் காட்டினார். நான்கு விரற்கடை நீளம் கூட இல்லாத அந்த அம்பு மூன்றாம் பிறையென வளைந்து படையாழியின் பாதிபோல் இருந்தது. அர்ஜுனன் அதை கையிலெடுத்துப் பார்த்தான். அதன் முகமுனை மட்டுமல்லாமல் அதன் தண்டும் ஒருபுறம் கூர் கொண்டிருந்தது. "இது ஆழியும் அம்பும் ஒன்றே ஆனது. இப்பகுதியில் எவரிடமும் இல்லாதது" என்று இளைய யாதவர் சொன்னார். அர்ஜுனன் புன்னகைத்து எழுந்து "ஆம், நான் அவனை வெல்வேன்" என்றான். இளைய யாதவர் புன்னகைத்தார்.

அருகே நின்ற சகதேவன் "ஏன், மூத்தவரே?" என்றான். "இது மிக அரிய அம்பு. தக்கணத்திலிருந்து இங்கு வந்தது. என்னை வெல்ல அறிந்த அம்புகளுக்கு அப்பால் ஒன்று அவனுக்கு தேவைப்படுகிறது என்பதே அவன் எல்லையை காட்டுகிறது. இத்தகைய அரிய அம்புகளுக்கு ஓர் எல்லை உண்டு. தெரிந்த அம்புகளில் நாம் கொள்ளும் கலைத்திறனுக்குத்தான் முடிவே இல்லை" என்று அர்ஜுனன் சொன்னான்.

இருட்கனி - 23

பாண்டவர்களின் படை திருஷ்டத்யும்னனின் கையசைவுக்கு ஏற்ப பேருருவ விண்நாகம் என கட்டுப்பட்டு வளைந்து முன்னேறியது. அதன் இரு முனைகளும் முன்னே சென்று மையம் பின்னால் வளைந்து பிறைவடிவம் கொண்டது. கர்ணன் பிறைசூழ்கை முதலையை வளைத்துக்கொள்ள இருப்பதை நோக்குகிறானா என்று திருஷ்டத்யும்னன் பார்த்தான். தொலைவிலிருந்து பார்த்தபோது அரைவிழி

மூடியிருக்க கர்ணன் அங்கில்லாததுபோல் இருந்தான். எதையுமே உளம் கொளாதவன் என. கைகள் அவனிலிருந்து விடுபட்டு ஒன்று நூறெனப் பெருகி அம்புகளை செலுத்துவதுபோல. அவனுக்கு இருபுறமும் அணிவகுத்த மைந்தர்கள் அவ்வடிவும் அவ்வசைவும் அதே முகத்தோற்றமும் உணர்வுகளும் கொண்டிருந்தார்கள்.

கௌரவப் படை கர்ணனின் திறன் மிகுந்துவருவதை பல்லாயிரம் விழிகளால் கண்டு எழுச்சி அடைந்தபடியே இருந்தது. முற்றிலும் உளச்சோர்வடைந்திருக்கும்போது சிறு நம்பிக்கைகூட பன்மடங்கு ஊக்கத்தை அளிப்பதை திருஷ்டத்யும்னன் பார்த்திருந்தான். அப்போது கௌரவப் படையில் இருந்த ஒவ்வொரு வீரனும் அடியிலாத இருளாழத்திலிருந்து மீண்டெழுந்து ஒளி நோக்கி வந்தவன் போலிருந்தான். அனைத்து முகங்களும் உவகையில் பல் தெரிய வெறித்து நின்றன. நகைத்தபடியே வாழ்த்துக்களையும் வெற்றிக்கூச்சல்களையும் எழுப்பியபடி அவர்கள் போரிட்டனர். ஒவ்வொரு அம்பிலும் அந்த விசை தெரிந்தது. மாட்டுத்தோல் கவசங்களில் நீள் அம்புகள் இறங்கி புதைந்து வால்சிறகு துடித்தன. வேல்கள் மின்னும் முனைகளுடன் வெள்ளி வளைகோடுகளென துடித்துச் சுழன்று கவசங்களை உடைத்து படைக்கலங்களை சிதறடித்து நகைப்பொலி எழுப்பின.

பாண்டவர் போர் தொடங்கிய சில கணங்களிலேயே கௌரவர்களின் விசையை உணர்ந்திருந்தனர். அதை முன்னரே எதிர்பார்த்தவர்கள் ஆகையால் அது எழுந்த அக்கணமே அடையாளம் கண்டுகொண்டு ஒவ்வொரு கணமும் என பெருக்கிக்கொண்டனர். அருகிலிருந்தவர்கள் அலறல்களாக, கூச்சல்களாக பகிர்ந்துகொண்டு உடலசைவுகளூடாக

ஒட்டுமொத்தமாக வெளிப்பட்டனர். சற்று நேரத்திலேயே அச்சமும் பதற்றமும் பருவடிவு கொண்டதுபோல் மாறியது பாண்டவப் படை. அது எடைதாளா வலை என மேலும் மேலும் வளைந்து கர்ணனை உள்ளே விட்டுக்கொண்டிருந்தது. அம்புகள் பட்டு விழுந்த உடல்களும் உடைவுகளும் மட்டுமே முன்னெழும் கௌரவப் படைக்கு தடையென்றாயின.

திருஷ்டத்யும்னன் உரத்த குரலில் "முன்னேறுக! உளம் தளராதெழுக! முன்னேறுக! அவர்கள் ஆற்றலற்றவர்கள்! அடுமனையாளர்களும் புரவிச்சூதர்களும் வில்லும் வேலும் கொண்டு எழுந்திருக்கிறார்கள்! நின்று பொருதுக! நிலைகொண்டு பொருதுக!" என்று கூவினான். அதன் பின்னரே அவ்வாறு கூறியதன் பிழையை அவன் உணர்ந்தான். அவன் சொற்கள் முரசொலிகளாக காற்றில் விண்வடிவு கொண்டபோது பாண்டவப் படைகளை நோக்கியே ஏளனம் உரைப்பதுபோல் தோன்றியது. பாண்டவப் படையினர் தாங்கள் அடுமனையாளர்கள் என்பதை அச்சொற்களால் சாட்டையடி என உணர்ந்து உளச்சோர்வு கொண்டனர். மாறாக கௌரவப் படையிலிருந்த அடுமனையாளர்களும் புரவிச்சூதர்களும் கர்ணனைக் கண்டு தங்கள் உடலில் மண்மறைந்த கௌரவ மாவீரர்களின் நுண் வடிவும் வந்தமைந்ததுபோல் ஆற்றல் கொண்டெழுந்தனர்.

காற்றில் நெற்றுகளும் சருகுகளும்போல தங்களுடன் வந்தவர்கள் களம்படக்கண்டு, அடுமனையாளரும் ஏவலருமான தங்களை வெறும் தசைக்கோட்டையென அம்புகளுக்கு முன் நிறுத்துகிறார்கள் என பாண்டவப் படையினர் எண்ணியிருந்தனர். அவர்களின் கால்கள் அச்சத்தால் துடித்துக்கொண்டிருந்தன. கைகளில் படைக்கலங்கள் வழுக்கி

நழுவின. ஒவ்வொருவரும் படையிலிருந்து பிரிந்து தனியராயினர். "அடுமனையாளர்! ஏவலர்!" என முரசொலி அவர்கள் செவிகளில் ஒலித்தது. அதை அவர்கள் தெய்வச்சொல்லெனக் கேட்டனர். "பின்னடைக! பின்னடைக!" என எவரோ கூவ பொங்கும் பால்நுரையில் நீர்த்துளி விழுந்ததுபோல் அந்தச் சொற்கள் பாண்டவப் படையின் முகப்பணியை துண்டுகளாக உடையச் செய்வதை விழிகளால் பார்த்து திருஷ்டத்யும்னன் திகைத்து நின்றான். "யுயுதானர் தென்னெல்லை செல்க... தென்னெல்லையும் வட எல்லையும் எழுந்து ஊடுருவுக!"

"செல்க! செல்க! வெற்றி அணுகிக்கொண்டிருக்கிறது! படைமுகப்பில் பார்த்தர் முன்னெழுகிறார். இந்திரனின் நாள் இது! அதோ நம் வெற்றியைக் கூறி எழுந்துள்ளது இந்திரவில்! விண்ணவனின் வெற்றி திகழ்க! வெற்றி! வெற்றி!" என்று திருஷ்டத்யும்னன் கூவினான். ஆனால் அதுவும் முரசில் எழுந்தபோது எதிர்ச்சொல்லெனவே மாறியதை உடனே உணர்ந்தான். வானில் புலரியொளி எழுந்த பின்னரும்கூட முழுதொளி கூடவில்லை. முகில்கணங்கள் நிறைந்திருந்த கீழ்த்திசை சற்றே திறந்து கதிரவனைக் காட்டி களம் துலங்கவைத்து போரை தொடங்கிய உடனேயே மூடிக்கொண்டது. முகில் திரள்கள் கரைந்து ஒற்றைத் திரையென மாறி வானை மூட வானே அங்கிலாததுபோல் ஓர் சாம்பல் வளைவே மேலே திகழ்ந்தது. கதிரவன் ஒளி தெரியவில்லை. ஆனால் எங்கிருந்தோ பெற்ற மெல்லிய வெளிச்சம் ஒன்றால் கர்ணன் பொற்கவசங்களும் மணிக்குண்டலங்களும் அணிகளும் ஆடையும் சுடர் பொலிய தேரில் எழுந்த கதிரவன் சிலை என உடல் அசையாது நின்று போரிட்டான்.

“எழுக! எழுக!” என்று உளம் உடைய கூவியபடி திருஷ்டத்யும்னன் தன் கைகளை அசைத்தான். பாண்டவப் படை அவன் எண்ணியது போலவே நீள்பிறையென வளைந்தது. அதன் தெற்கு முனையில் சாத்யகியும் வடக்கு முனையில் சிகண்டியும் வளைந்து முன்னேறி கௌரவப் படைகளை நண்டுக்கொடுக்கென கவ்வத்தொடங்கினர். சகுனி படைகளை இரு பகுதிகளாகப் பிரித்து பாண்டவர்களின் வடக்கு தெற்கு முனைகளை எதிர்கொள்ளும்படி ஆணையிட்டார். ஆனால் சாத்யகியையும் சிகண்டியையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்ட படைவீரர்கள் கௌரவரிடம் இருக்கவில்லை. அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் கர்ணனின் இரு பக்கங்களையும் காத்து கைகள் என விரிந்து நின்றிருந்தனர். பீமனை துச்சாதனன் துணை நிற்க துரியோதனன் எதிர்கொண்டிருந்தான்.

சகுனியின் ஆணை எழும்போது படைவீரர்கள் கொள்ளும் உடலசைவிலிருந்து திருஷ்டத்யும்னன் என்ன நிகழ்கிறது என்று புரிந்துகொண்டான். கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் இரு பிரிவுகளாகப் பிரிந்து பிறையின் இரு முனைகள் உள்புகுவதை தடுக்கும்பொருட்டு படையின் தெற்கு வடக்கு எல்லைகளை நோக்கி சென்றனர். குருக்ஷேத்ரப் போர் தொடங்கியபோது வெற்றுவிழிகளால் நோக்க முடியாத அளவிற்கு இருபுறமும் அகன்றிருந்த படைஎல்லைகள் சற்றே கூர்ந்தால் தெரியுமளவுக்கு அணுகி வந்திருந்தன. ஆகவே காவல்மாட அறிவிப்புகளும் கழையர்களின் கூற்றுகளும் இல்லாமல் முழுப் படையையும் விழியோட்டி நோக்க முடிந்தது. நாற்களம் ஆடுவதுபோல் படைகளை நகர்த்த இயன்றது.

எண்ணியிராக் கணத்தில் அர்ஜுனன் படைபிளந்து முன்னெழுந்து தன் காண்டீபத்தை முழக்கியபடி கர்ணனை அம்புகளால் தொடர்ந்து அறைந்து கொண்டு முன்னே சென்றான். என்ன நிகழ்ந்தது என்று அறியாது பாண்டவப் படை ஊக்கம் கொண்டது. "வெற்றிவேல்! வீரவேல்! இந்திரன் மைந்தனுக்கு வெற்றி! மின்கொடிக்கு வெற்றி! இந்திரப்பிரஸ்தத்திற்கு வெற்றி! யுதிஷ்டிரனுக்கு வெற்றி!" என்று கூவியபடி பாண்டவப் படைகள் கௌரவப் படைகளைத் தாக்கி செறுத்துநிறுத்தி பொருதி பின்னடையச் செய்யத்தொடங்கின. சற்று முன்னர்வரை அனைத்து ஊக்கத்தையும் இழந்து அசைவிலாது ஓய்ந்த உள்ளத்துடன் இருந்த திருஷ்டத்யும்னன் களிவெறி கொண்டு "முன்னேறுக! முன்னேறுக! இன்றே முழு வெற்றி! இன்றே முழு வெற்றி!" என்று கூவியபடி தன் தேரை செலுத்தினான்.

பாண்டவப் படை ஆறு வலைக்கண்ணிகளாக மாறியது. முதலையின் முகப்பை நோக்கி அர்ஜுனன் தலைமை தாங்கிய முதல் கண்ணி முன்னேறியது. முதலையின் இரு கால்களுக்கும் இரு கைகளுக்கும் இரு படைகள் சென்றன. அதன் ஆற்றல் மிக்க வாலை நோக்கி இரு முனைகளிலுமிருந்து சிகண்டியும் சாத்யகியும் சென்றார்கள். அதன் விழிகளுக்கென மட்டும் அமைக்கப்பட்டிருந்த வில்லவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து தொடர்ந்து தாக்கினார்கள். முதலை கால்களையும் கைகளையும் அறைந்து தலையை மேலே தூக்கி வால் முன்வர சற்றே வலம் சுழன்று திமிறி போரிட்டது. அதன் வால் எழுந்து வந்து அறைய பாண்டவப் படையின் இரு கண்ணிகளும் உடைந்து தெறித்தன. அக்கணமே மீண்டும் ஒருங்கிணைந்து விசைகொண்டு வந்து வாலை கவ்விக்கொண்டன.

முதலை வால் நிறுத்தப்பட்டுவிட்டால் அதன் தலை அசைவிழந்து விடும். தலை நிறுத்தப்பட்டுவிட்டால் வால் மும்மடங்கு விசை கொள்ளும் என்று திருஷ்டத்யும்னன் அறிந்திருந்தான். ஆறு கண்ணிகளும் ஒற்றை விசையென இசைந்து கவ்வுகையிலேயே முதலையின் ஆற்றலை கட்டுப்படுத்த இயலும். ஒவ்வொரு கண்ணியாக அது அறுக்குமெனில் மிக எளிதில் விடுபட்டுவிடும். ஒத்திசைவை உருவாக்குவது எப்போதும் உளவிசை. உளவிசை நம்பிக்கையிலிருந்து மட்டுமே எழும். நம்பிக்கை கொண்ட படை மிகைச்சீற்றம் கொள்ளும். மிகைச்சீற்றம் கொண்ட படை மிக விரைவிலேயே அழியக்கூடியது. களத்தில் எந்த ஒத்திசைவையும் நெடும்பொழுது நீட்டிக்க இயலாது. எக்களத்திலும் எதுவும் எப்போதைக்குமென ஒத்திசைவு கொள்வதில்லை. ஏனென்றால் ஒவ்வொன்றையும் தனித்தன்மை கொண்டதாகவே அமைத்துள்ளது தெய்வம். தனித்தன்மை விசையில், திசையில், எண்ணத்தில், எழுச்சியில் தனிவழிகளாகவே வெளிப்படுகிறது.

பாண்டவப் படையின் அந்த எழுச்சி வெறும் கணச்சீற்றம்தானா எனும் ஐயம் திருஷ்டத்யும்னனுக்கு இருந்தது. ஆனால் மிக விரைவிலேயே முதலை ஆற்றல் இழந்து அங்குமிங்கும் அலைகொள்ளத் தொடங்குவதை அவன் கண்டான். அதன் கால்களும் வாலும் தலையும் பாண்டவப் படைகளால் கவ்வப்பட்டுவிட்டன. அர்ஜுனன் கர்ணனை போர்முகப்பில் தன் அம்புகளால் பிறிதொன்றும் எண்ண இயலாதபடி தடுத்து நிறுத்தியிருந்தான். பீமனை சூழ்ந்துகொண்ட கௌரவர்கள் அவனை அங்கேயே தடுத்து நிறுத்தினர். ஆனால் சாத்யகியும் சிகண்டியும் முதலையின் வால் என அமைந்த சல்யரின் படைகளை சலிக்காது தாக்கி அங்குமிங்கும் சுழலச்செய்து

ஆற்றலை வீணடிக்க வைத்தனர். முதலையின் கால்களென அமைந்த படைகளனைத்தும் கவ்வப்பட்டுவிட்டிருந்தன.

முதலை செயலிழந்து உறைந்து மீண்டும் விசைகொண்டு எழுந்தது. முன்பைவிட விரைவாகத் தளர்ந்து திகைத்தது. ஒருகணம், ஒரு காலடி கர்ணன் பின்னடைவான் எனில் முழு கௌரவப் படை அதுவரை கொண்டிருந்த அனைத்து நம்பிக்கையையும் இழந்து சிதறி பின்னடையத் தொடங்கிவிடும். முதலையின் உறுப்புகளில் ஓரிரண்டு சற்றே செயலிழக்குமெனில் அதன் உடலில் சற்று ஒத்திசைவு குலையுமெனில் மேலும் அரைநாழிகைக்குள் கௌரவப் படையே நூறு துண்டுகளாக சிதைந்து உருமாறும். அவற்றை சூழ்ந்து தாக்கும் சிறிய கண்ணிகளாக பாண்டவப் படையை மாற்றுவது மிக எளிது. துண்டுகளாக உடைக்கவும் இணைக்கவும் ஏற்ற படைசூழ்கை பிறை வடிவத்திலானது. கௌரவர்களின் ஆற்றலின் மையமுடிச்சு கர்ணனிடமிருந்தது.

திருஷ்டத்யும்னன் கர்ணனையே பார்த்துக்கொண்டு போரிட்டான். கர்ணன் அங்கு நிகழ்வன எதையும் அறிந்திருக்கவில்லையா? கௌரவப் படை தன் நம்பிக்கையை ஒவ்வொரு கணமும் இழந்துகொண்டிருப்பதை உணராமல் விழியிலா வேகமும் விசையும் கொண்டிருக்கிறானா? ஆனால் நூறு கைகளுடன் எழுந்த கார்த்தவீரியன்போல போரிட்டுக்கொண்டிருந்த கர்ணனின் விசையில் அணுவளவேனும் குறைவு தென்படவில்லை. அது நிகழ்ந்தேயாக வேண்டும். எத்தனை பெரிய வீரனும், தெய்வ வடிவமே கொண்டவனாயினும், படைப்பெருக்கைவிட மேலானவன் அல்ல. விண்ணவருக்கு படைத்தலைமை

கொள்ளும் அறுமுகக் கடவுள்கூட பெரும்படை திரட்டியே சென்றார் என்கின்றன நூல்கள்.

படைகளின் உணர்வுகள் குவிந்து அப்படைத்தலைவன் என்றாகின்றன. அவனிலிருந்து அவ்வுணர்வுகள் எழுந்து பெருகி படையை சென்றடைகின்றன. அவ்வுரையாடல் எங்கேனும் ஓரிடத்தில் முறிந்தால் படைகள் சிதறி சிறுகுழுக்களாக மாறுவதை கண்கூடாகவே பார்க்கமுடியும். படைகளிலிருந்து எழும் உணர்வுகளை முற்றாகத் தவிர்த்து படைமுகம் நின்றிருக்க எந்தப் பெருவீரனாலும் இயல்வதில்லை. கௌரவப் படைகள் பல இடங்களில் வளைந்து பின்னடைவதை திருஷ்டத்யும்னன் கண்டான். முதலை ஆமையென தன் கால்களை பின்னிழுத்துக்கொண்டது. அதன் வால் பொறியில் சிக்கி செயலிழந்து தணியலாயிற்று.

எக்கணமும் கர்ணன் அச்சோர்வை தானும் அறியக்கூடும். இழுபட்ட வில்நாணின் ஒரு சிறு தளர்வென அது வெளிப்படலாம். வில் வளைவில் ஒரு அதிர்வென அது நிகழலாம். என்னவென்றறியாத சலிப்பாகவோ சோர்வாகவோ அவனுள்ளத்தில் எழலாம். அவனிலிருந்து எழும் அம்பின் விசை குறைந்து இலக்கு பிழைக்கும். சோர்ந்து ஓர் அம்பு நிலத்தில் தைத்து நிற்கும். அது தொடக்கம். அதன்பின் சில கணங்கள்தான். அக்கணங்களில் நமது படைகளில் விசை சற்று மேலெழுமெனில் உடைய முடிவெடுத்துவிட்ட கற்கோபுரம் முதல் விரிசல் கொள்ளும் அக்கணம் நிகழும். அதன் பின் அக்கோபுரத்தின் எப்பகுதியும் அச்சரிவை தடுக்க இயலாது. வெளியே இருந்து எவரும் அதை தூக்கி நிறுத்திவிடவும் முடியாது.

ஒரு கணம்தான். இக்கணம் இக்கணம் என்று திருஷ்டத்யும்னன் எண்ணி உளப்பதைப்பு கொண்ட அத்தருணத்தில் தன்னைச் சூழ்ந்திருந்த படைகளைப்பற்றி எந்த உணர்வுமிலாமலேயே கர்ணன் பெருவிசைகொண்டு முன்னெழுந்தான். அவன் அம்புகள் இருமடங்கு முழக்கமிட்டு வந்து அர்ஜுனனின் அம்புகளை உடைத்தன. அர்ஜுனனின் தேர்த்தட்டு கர்ணனின் அம்புகளால் சிதைந்து தெறித்தது. அவன் கொடி உடைந்து அப்பால் விழுந்தது. கொடிஉடைவுபோல ஒரு படைவீரன் கைதாழ்கிறது என்பதை சூழ்ந்திருக்கும் துணைப்படையினருக்கு அறிவிக்கும் பிறிதொன்றில்லை. ஒவ்வொருவரும் அறியாமலேயே தலைவனின் கொடியை தங்கள் தலைக்குமேல் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அர்ஜுனனின் கொடி விழுந்ததுமே பாண்டவப் படையில் ஒரு மெல்லிய ஒலியாக சோர்வு வெளிப்பட்டது. ஒருவரையொருவர் அணுகி கலந்து ஒன்றென போரிட்டுக்கொண்டிருந்த படைகளில் ஒரு துளியில் எழும் சோர்வை அக்கணமே முழுப் படையும் உணர்ந்துகொள்கிறது. பெண்ணுடன் உறவுகொள்கையில் அவள் அடையும் உளமாற்றத்தை முழுக்க அவள் உடலிலிருந்து நம் உடல் அறிவதுபோல என்று ஒருமுறை அதைப் பற்றி துரோணர் அவனுக்கு கூறியிருந்தார். அதை தடுக்க இயலாது, அதனுடன் உரையாடவே இயலாது. ஆனால் அதைவிட விசைகொண்ட நம்பிக்கையை அதற்கு அளிக்கமுடியும். ஊக்கத்தையும் அவ்வண்ணம் உடலென்றே உணரச்செய்ய முடியும்.

கௌரவப் படை கர்ணனுடன் எழுந்து பேரொலியுடன் பொங்கி வந்து பாண்டவப் படையை அறைந்தது. இரு கால்களையும் முன்னறைந்து பின்கால்களில் சற்றெழுந்து வால் சுழற்றி

தலைதூக்கி அறைகூவி பாய்ந்து வந்தது முதலை. அதை கட்டியிருந்த எட்டு சரடுகளும் அறுந்து தெறிக்க பாண்டவப் படை பதினெட்டு துண்டுகளாக மாறியது. "ஒருங்கிணைக! பின்னடைக! ஒருங்கிணைக!" என்று கூவியபடி திருஷ்டத்யும்னன் தன் தேரை பின்னுக்கிழுத்தான். அர்ஜுனன் நிலை பெயராது அம்புகளால் கர்ணனை செறுத்து நிற்க அவனுக்குப் பின்னால் மீண்டும் அரைவட்டமென பாண்டவப் படையை தொகுப்பதற்கு அவன் முயன்றான். "ஒவ்வொருவரும் துண்டுபட்ட பகுதியுடன் சென்று இணைக! படைத்தலைவர்கள் முன்செல்க! இணைந்துகொள்க! இணைந்து கொள்க!" என்று தலைக்கு மேல் முரசுகள் பதறி குரலெழுப்பின.

பாண்டவப் படைகளின் பிளவுகளினூடாகப் புகுந்து கௌரவப் படைகள் அவை ஒன்றிணைந்துகொள்வதை தடுத்தன. சகுனியின் ஆணை ஒலித்துக்கொண்டே இருக்க முதலையின் வால் எழுந்து சுழன்று வந்து சாத்யகியை அறைந்தது. அவன் தேர் சிதறிச் சரிய அதிலிருந்து தப்பி தன் படைகளுக்குப் பின்னால் ஓடி அவன் உயிர் பிழைத்தான். "சாத்யகி கொல்லப்பட்டார்!" என்று கௌரவப் படைகளில் ஒலியெழ சாத்யகியின் படையைச் சேர்ந்த யாதவர்கள் "யுயுதானர் நெடுநாள் வாழ்க! சாத்யகி நீடுவாழ்க!" என்று ஒலியெழுப்பி அவன் உயிரோடிருப்பதை உறுதி செய்தனர். ஆனால் அதற்குள் பாண்டவப் படையின் தெற்கு எல்லை முற்றாகவே சிதறி வெறும் திரளாக மாறிவிட்டிருந்தது. சல்யரின் படை விசையுடன் மறுபக்கம் திரும்பி சிகண்டியை அறைந்தது. சிகண்டி அதை எதிர்த்து நின்று போரிட்டார். ஆனால் பிறிதொரு அடியில் சிகண்டியை தொடர்ந்திருந்த பாஞ்சாலப் படைவீரர்கள் விற்களைத் தாழ்த்தி பின்னடைந்தனர். தனிமை கொண்டு

நின்றும் சலிக்காமல் சல்யரை எதிர்த்தபடி மெல்ல சிகண்டி பின்வாங்கினார்.

அர்ஜுனனும் கர்ணனும் போரிட்டுக்கொண்டிருந்த விசை சற்றும் குறையவில்லை. ஒவ்வொரு கணமுமென அர்ஜுனனின் விசை மிகுந்து வருவதை திருஷ்டத்யும்னன் கண்டான். முதற்கணம் அர்ஜுனன் சீற்றம் கொண்டெழுந்து கர்ணனை வென்றுவிடுவான் என்ற எண்ணத்தை அவன் அடைந்தான். ஆனால் சற்று நேரத்திலேயே அது உருவாக்கிக்கொண்ட உளஎழுச்சியின் விசை மிகுதலே என்றும் அதற்கொரு எல்லை இருக்கிறதென்றும் தோன்றலாயிற்று. எண்ணியதுபோல் ஒருகணத்தில் அர்ஜுனனின் அம்புகள் விசை இழக்கத்தொடங்கின. கர்ணனின் அம்புகள் வந்து அவன் கவசங்களை அறைந்தன. கவசமுடியை உடைத்து தெறிக்கச்செய்தன. காண்டீபம் நாணறுந்து துள்ளிச் சரிந்தது. இளைய யாதவர் தேரைத் திருப்பி படைகளுக்குள் புகுந்துகொண்டு அவனை காப்பாற்றினார். அர்ஜுனன் "செல்க! முன்னெழுக!" என கூவிக்கொண்டிருந்தபோதிலும் சாட்டையால் புரவிகளை அறைந்து அறைந்து ஊக்கி தேரை விலக்கிச்சென்றார் யாதவர். கௌரவப் படைவீரர்கள் வெற்றிக்குரலெழுப்பினர். பாண்டவர்களின் கேடயப்படைகள் வந்து இணைந்து கோட்டையாகி கர்ணனை தடுத்தன.

கர்ணன் வஞ்சினம் உரைப்பான், அறைகூவல் எழுப்புவான், ஏளனக் குரலெழுப்புவான் என்று திருஷ்டத்யும்னன் எண்ணினான். அறைகூவி ஏளனம்செய்தால் அந்த ஆற்றலழிந்த நிலையிலும் சீற்றம்கொண்டு அர்ஜுனன் முன்னெழுந்து போருக்கு வரக்கூடும். ஆனால் அங்கொரு போர் நிகழ்வதையே அறியாதவன்போல, கனவிலோ ஊழ்கத்திலோ இருப்பவன்போல

அவன் தெரிந்தான். அவன் அம்புகளால் பாண்டவப் படையின் முகப்பு அணிசிதைந்தது. யானை மத்தகங்களைப் பிளந்து சரிய வைத்தன அவனுடைய வாளிகள். தேர்களை ஒரே அம்பில் உடைத்து தெறிக்க வைக்க முடியும் என்றும் இரும்புக் கவசத்தை பிளந்து அறைந்து மறுபக்கம் ஊடுருவி மண்ணில் தைத்து வீரர்களை நிலம் தொடாது நிற்கவைக்க முடியுமென்றும் திருஷ்டத்யும்னன் அப்போதுதான் கண்டான்.

நிறுத்தமுடியாத மலைப்பாறைபோல அனைத்துத் தடைகளையும் நொறுக்கி அனைத்து வேலிகளையும் விலக்கியபடி கர்ணன் பாண்டவப் படைகளுக்குள் புகுந்து வந்துகொண்டிருந்தான். திருஷ்டத்யும்னன் எழுந்து நோக்கியபோது இருபுறமும் விழி தொடும் எல்லை வரை பாண்டவப் படை சிதறிவிட்டிருந்தது. பிறை வடிவை காக்க இயலாதென்று அவன் புரிந்துகொண்டான். முடிவெடுத்து கைகளை அசைத்து "அனைவரும் பின்னடைக! முடிந்தவரை பின்னடைந்து ஒன்று சேர்ந்துகொள்க! வேல்முனை சூழ்கை அமைத்துக்கொள்ளுங்கள்! வேல்முனை சூழ்கை அமைத்துக்கொள்ளுங்கள்!" என ஆணையிட்டான். வேல்முனை சூழ்கை எறும்புகள் பெருவெள்ளத்தில் ஒன்றையொன்று ஒட்டி ஒரு பந்தென ஆகி மிதந்து செல்வது போன்ற இறுதித் தற்காப்பு.

அவனுடைய அந்த அறிவிப்பு பாண்டவப் படை முழுக்க தீ சுட்ட விதிர்ப்பை உருவாக்கியது. ஆனால் அது பிற ஆணைகளைப்போல் தயக்கத்துடனும் குழப்பத்துடனும் அங்கிங்காகவும் எதிர்கொள்ளப்படவில்லை. ஒரே கணத்தில் முழுப் படையையும் அது சென்றடைந்தது. படைகள் அனைவரும் தாங்கள் நின்ற நிலையிலிருந்து அவ்வண்ணமே

பின்னால் திரும்பி ஓடினர். ஓடுகையிலேயே ஒருவருடன் ஒருவர் இணைந்து கொண்டனர். ஒருவருடன் ஒருவர் தொகுத்துக்கொண்டு நீண்ட வேல்முனை வடிவை அடைந்தனர். படைமுகப்பில் நின்றிருந்த பீமனை நோக்கி திருஷ்டத்யும்னன் தேரை விரையச்செய்தான். "யுயுதானரும் முதல்பாஞ்சாலரும் வேல்முனையில் அமைக!" என்று அவன் கூவினான்.

வேல்முனை கூர்கொண்டபடியே இருந்தது. பீமன் வேல்முனையின் கூரென்று அமைய இருபுறமும் பாண்டவ வீரர்கள் அணிவகுத்து அச்சூழ்கை அமைந்தது. "வேல் முதலையின் தாடையை குறிவைக்கட்டும். அன்றி அடிவயிறு. முதலையை செயலிழக்கச் செய்யுங்கள். அதன் பற்களையும் வாலையும் எதிர்கொள்ள வேண்டியதில்லை" என்று திருஷ்டத்யும்னன் ஆணையிட்டான். முதலை வேல்முனையை நின்று நோக்கி தயங்கி தன்னை தொகுத்துக்கொண்டது. பின்னர் அது வாய்திறந்து வால்சுழற்றி பாய்ந்து வந்தது.

கர்ணனை நோக்கியபடி நின்ற திருஷ்டத்யும்னன் அப்போரில் வெல்லமுடியுமா என்னும் சோர்வை அடைந்தான். அங்கு நிகழ்வன எதையும் அறியாதவனாக அனைத்தையும் நிகழ்த்திக்கொண்டிருந்தான். அவனை எதிர்கொண்ட சுருதகீர்த்தியும் சுருதசேனனும் சதானீகனும் சோர்ந்து பின்னடைந்தனர். அவனை நோக்கி வந்த சகதேவன் "பாஞ்சாலரே, அங்கரை எதிர்கொள்வோம். மைந்தரை விலக்காவிடில் தீது நிகழக்கூடும்" என்றபடி முன்னால் விரைந்தான். "பார்த்தன் எங்கே?" என்று திருஷ்டத்யும்னன் கேட்டான். "அவர் உடலில் நான்கு அம்புகள் தைத்துள்ளன. மருத்துவர் கட்டுபோட்டபின் களம்புகுவார். அதுவரை இந்தப் பேரலையை நாம் நிறுத்தியாகவேண்டும்" என்றான் சகதேவன்.

திருஷ்டத்யும்னன் சகதேவனுடன் இணைந்து சென்று கர்ணனை தாக்கினான். “அரசர் யுதிஷ்டிரன் பின்னடைக... அவருடன் நகுலன் நிலைகொள்க! கவசப்படையாலும் யானைப்படையாலும் அவர் சூழ்ந்துகொள்ளப்பட வேண்டும்” என்று கையசைவால் ஆணையிட்டான். அவன் ஆணைகள் முரசொலியாக எழுந்து விண்ணில் பரவின. கர்ணனின் அம்பு வந்து அவன் தேரை அறைந்து பாறையில் முட்டிய படகென உலையச்செய்தது. அவன் தாவி அகன்று, பாகன் தேரை நிமிரச்செய்ததும் மீண்டும் அதில் தொற்றிக்கொண்டு அம்புகளால் கர்ணனை எதிர்கொண்டான்.

இருட்கனி - 24

வேல்முனை முதலையை நோக்கி செல்ல, முதலை உடலை வளைத்து ஒழிந்து தன் வலக்காலால் அதை அறைந்தது. துரியோதனனும் துச்சாதனனும் இளையோரும் சேர்ந்து பீமனை தாக்கினார்கள். வேல்முனையின் விளிம்பிலிருந்து பிறிதொரு வேல்முனையென திருஷ்டத்யும்னனும் சாத்யகியும் சிகண்டியும் குவிந்தெழுந்து கர்ணனை நோக்கி சென்றார்கள். கர்ணன் தடையற்றவனாக பாண்டவப் படைகளை நோக்கி வந்தான். அவர்கள் மூவரும் தொடுத்த அம்புகளால் எவ்வகையிலும் அவனை தடுத்து நிறுத்த முடியவில்லை. விண்ணிலேயே அவர்களின் அம்புகள் முறித்து வீழ்த்தப்பட்டன. தேர்த்தட்டுகளிலிருந்து அவர்கள் கர்ணனின் ஒளிமிக்க விழிகளை மிக அருகிலெனக் கண்டனர். அவற்றிலிருந்த தெய்வ விழிகளுக்குரிய விலக்கம் அவர்களை அச்சுறுத்தியது.

கர்ணனின் அம்புகள் சீரான அலையாக எழுந்துகொண்டிருந்தன. அவற்றில் எழுச்சி தெரியவில்லை. ஆனால் மெல்ல மெல்ல அது விரிவடைந்துகொண்டிருக்கும் வளையம் என்றும், அதை எந்த விசையும் தடுக்கவியலாதென்றும் அவர்கள் கண்டுகொண்டார்கள். முதலில் சிகண்டி வில்லைத் தாழ்த்தியபடி பின்னடைந்தார். மறுபுறம் சாத்யகியும் கைதளர்ந்து பின்னடைந்தான். திருஷ்டத்யும்னன் அரைக்கணம்கூட விழிதிருப்பி அவர்களை பார்க்கவில்லை. ஆனால் அவனுடைய எண்ணத்தில் ஒரு பகுதி அவர்களைச் சென்று தொட்டு வந்தது. அந்த இடைவெளியை பயன்படுத்திக்கொண்டு கர்ணனின் வாளி அவன் வில்லை துண்டித்தது. அவன் தேர்தட்டிலிருந்து பாய்வதற்குள் பிறிதொரு அம்பு நெஞ்சை அறைந்து கவசத்தைப் பிளந்து எலும்பு மேல் பாய்ந்து நின்றது.

பின்புறம் தேர்த்தட்டில் அறைந்து மல்லாந்து விழுந்து இரு கைகளும் இழுபட்டு உதறிக்கொள்ள அவன் துடித்தான். அவன் உயிர்துறந்துவிட்டான் என்று எண்ணி பாண்டவப் படையினர் அச்சக் குரலெழுப்பினர். அவனுடைய பாகன் தேரை அக்கணமே கவிழ்த்து அதனடியில் திருஷ்டத்யும்னன் சிக்கிக்கொள்ளும்படி செய்ததனால் கர்ணனின் அம்புகளால் பருந்துக்கூட்டம் என வந்து அறைந்து அறைந்து தேரை உடைக்கவே இயன்றது. கழுத்தறுந்த பாகன் புரண்டு திருஷ்டத்யும்னன் மேல் விழுந்தான். அவனைச் சுற்றி வெட்டுண்ட தேர்ப்புரவிகள் விழுந்து உடல் துடித்தன. தேர் மகுடமும் தட்டும் சகடங்களும் குவியலாகி அவர்களை முற்றிலும் மூடிமறைத்தன. அப்பகுதியிலிருந்து வீரர்கள் விலகி அகல கர்ணனின் அம்புகள் மழைத்துளிகள் பாறையின்மேல் என விழுந்து துள்ளிச் சிதறிக்கொண்டிருந்தன.

அதைக் கண்டு சீற்றத்துடன் தன் தேரைத் திருப்பி கர்ணனை நோக்கி செல்ல ஆணையிட்டு வில்நின்று துடிக்க போரிட்டபடி சிகண்டி முன்னெழுந்தார். கர்ணனின் அரைவிழிதான் அவரை நோக்கி திரும்பியது. சிகண்டியின் தேர்மகுடம் உடைந்தது. மறுகணம் வில் உடைந்தது. செயலற்று நின்ற அவர் இடையை தாக்கி தூக்கி வீசியது கர்ணனின் வாளி. முன்னர் திருஷ்டத்யும்னனின் தேரோட்டி செய்ததைக் கண்டிருந்த சிகண்டியின் பாகன் அக்கணமே தேரை கவிழவைத்து அதனடியில் சிகண்டியை சிக்கச்செய்து உயிர் காத்தான். ஆனால் வந்தறைந்த கர்ணனின் அம்புகள் தேரை துண்டு துண்டாக பறக்கவிட்டன. ஊன் குவியலாக அவர் மேல் தேர்ப்பாகனும் புரவிகளும் விழுந்தனர். தேருக்கு அடியில் சிகண்டியின் கால்கள் துடித்தன.

குருதியில் முற்றாக நனைந்து, கருவறை விட்டு வெளிவரும் குழவியென ஆகி தவழ்ந்து புரண்டு எழுந்து மீண்டும் புரண்டு விழுந்து கிடந்த உடல்களுக்கு நடுவே மறைந்துகொண்டார் சிகண்டி. அவர் சென்ற வழியெங்கும் அறைந்து நாணல்வேலிபோல் மண்ணில் நின்று சிலிர்த்தன கர்ணனின் அம்புகள். சாத்யகி தன் கையில் இருந்த வில்லுடன் திகைத்து நின்றான். கர்ணனின் விழிகள் அவனை நோக்கி திரும்பியபோது அவற்றிலிருந்த நோக்கின்மை அவன் உள்ளத்தை பதறச்செய்தது. தன் இறுதிக்கணம் அது என அறிந்ததுபோல் அவன் மெய்ப்பு கொண்டான். எங்கிருந்தோ என அவன் தன் இளமையில் நீராடிய ஒளிமிக்க நதி ஒன்று நினைவிலெழுந்தது. அவன் உள்ளம் இரண்டாகப் பிரிந்தது. ஒன்று அங்கே நீர் துழாவ பிறிதொன்று விழிமட்டுமாக நோக்கி நின்றது.

கர்ணனின் வில்லின் துள்ளல்களை, நாணின் அதிர்வுகளை ஒவ்வொரு அசைவையும் என தனித்தனியாக காண முடிந்தது. அவன் கை சுற்றும் ஒளி எனச் சுழன்று பின்சென்று வாளியொன்றை எடுப்பதை, நாணில் வைத்து இழுத்துத் தொடுப்பதை, அது சற்றே திரும்பி நாகபடம் போன்ற முனையுடன் காற்றில் அவனை நோக்கி வருவதை அவன் நூறுநூறு காட்சிகளால் ஆன தொடர் என கண்டான். ஆனால் அதை பிறிதொரு அம்பு அறைந்து தெறிக்க வைத்தது. "விலகிச் செல்க! யுயுதானரே, விலகிச்செல்க!" என்று கூவியபடி பீமன் அவர்களுக்கு நடுவே புகுந்தான். அவன் அம்புகள் கர்ணனைச் சூழ்ந்து மணியோசை எழுப்பியபடி அறைந்தன.

கர்ணன் முதல்முறையாக விழிகளில் சினத்துடன் திரும்பி பீமனை பார்த்தான். கைசலிக்காது அம்பு தொடுத்தபடி இருபுறமும் சர்வதனும் சுதசோமனும் துணைவர பீமன் கர்ணனை நோக்கி வந்தான். கர்ணனின் அம்புகள் விம்மல் ஓசையும் வெடிப்போசையும் எழுப்பி பீமனை தாக்கின. அவை புலியென உறுமின. யானை என பிளிறின. கழுகுகள் என அகவின. அவ்வோசைகள் இணைந்து காட்டெரியின் முழக்கமென்று மாறின. பீமனின் தேரின் உலோகப்பரப்புகள் வெம்மை கொண்டு அனல் என்றாயின. அவன் கொடி உடைந்து தெறித்தது. அவன் தேர்த்தண்டு ஏழுமுறை உடைந்தது. அருகிலிருந்த பிற வில்லவர்கள் அக்கணமே தங்கள் வில்லை அவனை நோக்கி எறிந்துவிட்டு தங்கள் தேரை பின்னுக்கிழுத்தனர். அவற்றைப் பற்றி அதே விசையில் அம்புகளை நாணேற்றி கர்ணனை அறைந்தான் பீமன்.

இருபுறமும் சூழ்ந்திருந்த மைந்தர்கள் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டார்கள். சுதசோமன் கர்ணனின் காலடிகளை

மட்டுமே இலக்காக்கி அம்புகள் எய்து ஒருகணமேனும் கர்ணனின் உள்ளத்தை திசை திருப்பிவிட இயலுமா என்று பார்த்தான். கர்ணனின் வலப்பக்கத்து தேர்த் தண்டை மட்டுமே இலக்காக்கி அம்புகளை எய்து அவன் விழிகளை திருப்ப இயலுமா என்று முயன்றான் சர்வதன். பீமனுக்குப் பின்னால் நின்ற நகுலனும் சகதேவனும் கர்ணனின் மைந்தர்களையும் தேர்ப்பாகன்களையும் புரவிகளையும் கொல்ல முயன்றனர். ஐவரையும் தனி ஒருவனாகவே கர்ணன் அம்புகளால் எதிர்த்தான். அவன் மைந்தர்கள் பாண்டவர்களைச் சூழ்ந்து வந்த பாஞ்சாலத்து வில்லவர் படையை எதிர்கொண்டு பின்னடையச் செய்தனர். வில்லவர்கள் அலறி தேரிலிருந்து விழுந்தும் புரவிகள் கவிழ்ந்தும் நிலையழிந்தும் தேர்கள் கவிழ்ந்தும் பின்னணிப்படை சிதைந்து துண்டுகளாகி அப்பால் செல்ல வேல்முனை ஒரு தனித்த சிறு குழுவென்றாகி கர்ணனின் முன் சென்றது.

சாத்யகி தேர்த்தட்டிலிருந்து உடலை நெளித்துச் சரிந்து மருத்துவஏவலர்களின் முன் விழுந்தான். அவர்கள் அவனை அள்ளிச்சென்று படுக்க வைத்து கவசங்களை கழற்றினார்கள். அவன் உடலில் ஏழு இடங்களில் புதைந்திருந்த அம்புகளை பிடுங்காமல் அவற்றின் மேலேயே மெழுகையும் மரவுரியையும் வைத்துக் கட்டி இறுக்கி மீண்டும் கவசங்களை அணிவித்தனர். அவன் மதுவருந்தி எழுந்து நின்றபோது கால்கள் நீர்மேல் மிதக்கும் தெப்பத்தில் நிற்பதுபோல் அசைவதை உணர்ந்தான். கர்ணனின் தேர் பாண்டவர்களை நோக்கி திரும்பியதுமே கொக்கிகளை வீசி திருஷ்டத்யும்னனையும் சிகண்டியையும் பின்னுக்குக் கொண்டுவந்தனர் வீரர்கள். அவர்களை தூளிக் கட்டிலில் படுக்க வைத்து தூக்கிக்கொண்டு சென்றதை சாத்யகி

கண்டான். “உயிர் இருக்கிறதா? உயிர் இருக்கிறதா அவர்களுக்கு?” என்று அவன் கூவினான்.

மருத்துவஏவலன் ஒருவன் கைவீசி விரல்செய்கை காட்டி திருஷ்டத்யும்னன் உயிருடன் இருப்பதை அறிவித்தான். “பாஞ்சாலர் எங்கே? பாஞ்சாலர் எப்படி இருக்கிறார்?” என்று சாத்யகி மீண்டும் கூவினான். அங்கிருந்து பிறிதொரு மருத்துவஏவலன் இன்னொருவரின் இடையில் கால்வைத்து மேலெழுந்து திரள்மேல் தலைதூக்கி சிகண்டியும் உயிருடனிருப்பதை அறிவித்தான். உளநிறைவுடன் கண்களை மூடி அருகிலிருந்த தேரை பற்றிக்கொண்டு சில கணங்கள் சாத்யகி நின்றான். ஒரு நொடியென எழுந்து உள்ளத்தை மூடி உடலுறுப்புகள் அனைத்தையும் செயலற்றதாக்கி பின்னர் எங்கிருக்கிறோம் என்பதையே அறியா வெளியொன்றில் நிறுத்தி மீளச்செய்த வெறுமையை அவன் அடைந்தான்.

அங்கிருந்து விலகி ஓடிவிடவேண்டுமென்ற எண்ணமாக அது குவிந்தது. அது இயல்வதல்ல என்று உணர்ந்ததும் அனைத்துச் சொற்களையும் பொருளிழக்கச் செய்யும் சோர்வு என்றாகியது. பின்னர் திரும்பி போர்முகத்தை பார்த்தான். பீமன் கர்ணனை வெறிகொண்டு தாக்குவதை கண்டான். கர்ணன் பீமனை ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்று தெரிந்தது. ஆயினும் பீமனின் வெறியும் சினமும் பெருகிக்கொண்டே வந்தது. எண்ணியிராக் கணமொன்றில் பீமன் தன் தேரிலிருந்து பாய்ந்து இரு தேர்முகடுகள் வழியாகச்சென்று கதையைச் சுழற்றி கர்ணனின் தேரை ஓங்கி அறைந்தான். தேர் சற்றே நலுங்கி தூண் வளைந்து முகடு சரிந்தது. கர்ணன் தன் வில்லாலேயே பீமனை தடுத்தான். பீமன் துள்ளி விலகி நிலத்திலிறங்க கர்ணன் பாய்ந்திறங்கி அவனருகே செல்வதற்குள் பின்னிருந்து

அவன் ஆவக்காவலன் கதையொன்றை எடுத்து அவனை நோக்கி வீசினான். ஒரு கையால் அதைப்பற்றி அதே விசையில் பீமன் தன் தலையை நோக்கி செலுத்திய கதையை தடுத்தான்.

அவர்கள் கதைப்போரிடலாயினர். பீமன் இரு கைகளாலும் கதையைப்பற்றி விசைகொண்டு துள்ளிச் சுழற்றி கர்ணனை அறைந்தான். கர்ணன் ஒரு கையால் அதைவிட எடை கொண்ட கதையை பற்றியிருந்தான். இன்னொரு கையை பறவையின் இறகுபோல சற்றே சரித்து நீட்டி கால்களை அரைமண்டிலமாக விரித்து நிலைகொண்டிருந்தான். அவன் விழியன்றி பிற எதுவும் அசையவில்லை. பீமனின் அடிகளை தடுப்பதற்கு அந்தக் கையும் கதையுமன்றி பிற உறுப்பெதுவும் எழவில்லை. ஏழு சுற்றுகள் அவர்கள் வந்து சுற்றி அடித்தனர். அவர்களைச் சூழ்ந்து கர்ணனின் மைந்தரும் பாண்டவர் தரப்பும் எய்த அம்புகள் ஒன்றையொன்று முட்டி மணியோசையுடன் ஒலித்துக்கொண்டு விழுந்தன. ஒருகணம் விழிநிறுத்தி நோக்கினால் வெறுங்காற்றில் எழுந்த முள்ளால் ஆன வட்ட வடிவ வேலிபோல் அவை தோன்றின.

அங்கே பிறர் எவரும் இல்லை என்பதுபோல் அவர்கள் இருவரும் வெறிகொண்டு கதைகளால் போரிட்டனர். பீமனின் விசை மேலெழுந்து மேலெழுந்து சென்றது. கர்ணன் ஒரு விழிக்கணம் திரும்புவதற்குள் பீமனின் கதை அவன் நெஞ்சை அறைந்தது. கர்ணன் மல்லாந்து மண்ணில் விழுந்து அதே சுழற்சியில் கதையை நிலத்தில் அறைந்து உடலைத் தூக்கி அப்பால் சென்றான். பீமன் முன் பாய்ந்து ஓங்கி ஓங்கி அறைந்த அடிகள் குருதிச் சேறென குழம்பிய சிவந்த மண்ணில் விழுந்து சிதர் தெறிக்கச்செய்தன. நிலமெங்கும்

இருந்து செவ்விழுதுத் திப்பிகள் அவன் உடலிலும் முகத்திலும் பட்டு வழிய பீமன் தலை சிலுப்பி அவற்றை உதிர்த்து, நாசுழற்றி உதடுகளை நக்கிக்கொண்டு, நகைப்பவன்போல் பல்லிளித்து உறுமலோசை எழுப்பியபடி கர்ணனை மீண்டும் அறைந்தான்.

அதை ஒழிந்து அமர்ந்து சுழன்றெழுந்த கர்ணன் பீமனின் நெஞ்சை தன் கதையால் தாக்கினான். பீமன் நிலைகுலைந்து பின்னடைந்த கணத்தில் எழுந்து தன் காலால் பீமனின் நெஞ்சை உதைத்து பின்னால் தள்ளினான். அவன் மீண்டும் ஒரு முறை ஓங்கி அறைந்தபோது பீமனின் கதை தெறித்தது. துள்ளி பீமனின் உடல்மேல் கால்வைத்து நின்று தன் கதையை அவன் தலைக்கென தூக்கி மும்முறை ஓங்கி பின்னர் நகைத்தபடி அதை அகற்றினான். பீமனின் மேலிருந்த தன் காலை எடுத்து அவனை விடுவித்து பின்னகர்ந்து "செல்க, மந்தா! இது உன் போரல்ல. எந்தக் காட்டிலும் செங்கழுகை வெல்லும் வேழம் பிறந்ததில்லை" என்றபடி புன்னகைத்து தாவி தன் தேரிலேறிக்கொண்டான்.

வெறுப்பும் சீற்றமும் கொண்டு பல்வெளிக்க இளித்த முகத்துடன் கர்ணனை நோக்கிக்கொண்டு கிடந்த பீமன் அவன் கால் எடுத்ததும் நெஞ்சு அதிர்ந்தான். முனகியபடி கையூன்றி புரண்டு ஒருக்களித்தான். அவனை திகைப்புடன் நோக்கி சூழ்ந்திருந்த பாண்டவப் படையினரின் விழிகளை ஒழிந்து தள்ளாடிய நடையுடன் தன் தேர் நோக்கி சென்றான். அப்பாலிருந்து நகுலன் "மூத்தவரே, தேரிலேறிக் கொள்ளுங்கள். பின்னடையுங்கள். மீண்டும் ஒருங்கிணைவோம்!" என்று கூவ அவனைப் பார்த்த கணத்திலேயே சீற்றம் பெருகியெழ பீமன் தன் நெஞ்சில் மாறி மாறி அறைந்து தலைதூக்கி ஓலமிட்டான்.

பின்னர் தன் தொடைகளையும் தோளையும் வெடிப்போசையுடன் அடித்துக்கொண்டு நிலத்தில் கையூன்றி எழுந்து குதித்து தன்னைத்தானே சுழன்றான். அவன் உடலில் இருந்து அவன் குருதியில் வாழும் தொல்குரங்குகள் வெளிவந்தன. கீச்சொலிகளும் சீற்றம்கொண்ட உறுமல்களுமாக கொந்தளித்துப் பாய்ந்து வாயில் நுரை எழ வெறிகொண்டு கூத்தாடினான்.

பின்னர் தன் தேரிலேறி அம்பை எடுத்து வில்லில் பூட்டி ஏவியபடி கர்ணனை நோக்கி முன்னால் சென்றான். "மூத்தவரே, நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று சகதேவன் கூவினான். நகுலன் "சேர்ந்து எதிர்ப்போம்! பின்னடைக! நாம் சேர்ந்து எதிர்ப்போம்!" என்று பின்விளி எழுப்பினான். எக்குரலும் அவன் செவிகளை எட்டவில்லை. அவன் அம்புகள் ஒன்றையொன்று தொட்டு எழுபவைபோல் கர்ணனின் தேர்முகட்டை தாக்கின. அம்புகள் சென்று உரசி கர்ணனின் தேரின் பொற்பரப்பு நசுங்கியது. கர்ணன் விழிகளில் சீற்றம் தெரிய "செல்க... அறிவிலி, அகன்று செல்க!" என்றபடி பீமனை தன் அம்புகளால் அறைந்தான். ஆனால் பெரும்சீற்றத்தால் ஆற்றல் கொண்டிருந்த பீமன் அந்த அம்புகள் அனைத்தையுமே விண்ணில் சிதறடித்தான். கர்ணனின் தேர்மகுடம் மீது அவன் அம்புகள் விண்கற்கள் என விழுந்தன.

ஒரு கணத்தில் தன் தேரிலிருந்து பாய்ந்து இன்னொரு தேர்மகுடத்திற்குச் சென்று அம்பால் அடித்தான். அந்தப் பாய்ச்சலை எதிர்பாராத கர்ணன் திகைத்து பின்னடைய அவன் தோள்கவசத்தில் பாய்ந்தது அம்பு. பிறிதொரு அம்பு அவன் தொடையில் பாய்ந்தது. கர்ணன் முதல்முறையாக தேர்த்தட்டில் மண்டியிட்டு தன் வில்லை காத்துக்கொண்டு

சுழன்று எழுந்து அடுத்த அம்பால் பீமனை அறைந்தான். பீமன் பிறிதொரு தேர்த்தட்டுக்குப் பாய்ந்து அங்கிருந்து அம்பு தொடுத்து கர்ணனின் கொடியை உடைத்தான். கர்ணனின் கொடி உடைந்ததைக் கண்டு கௌரவப் படைவீரர்கள் அச்ச ஒலி எழுப்பினர். பின்னிருந்து சகுனியின் குரல் "சூழ்ந்து கொள்க! அங்கரை சூழ்ந்து கொள்க!" என்று ஆணையிட அவ்வாணையே அவர்களின் அச்சத்தை மேலும் பெருக்கியது.

பீமன் யானைகள் மேலும் தேர்மகுடங்கள் மீதும் கால் வைத்து தாவி காற்றில் நின்றபடி மேலும் மேலும் அம்புகளால் கர்ணனை அறைந்தான். கர்ணனின் நெஞ்சிலும் தோளிலும் அவன் அம்புகள் பட்டன. அவன் வில்லின் நாண் அறுந்தது. அவ்வில்லை ஆவக்காவலனிடம் அளித்துவிட்டு பிறிதொரு வில்லை அவன் எடுப்பதற்குள் கர்ணனின் கைகளின் கங்கணத்தை உடைத்து தெறிக்க வைத்தது பீமனின் அம்பு. கர்ணன் நாணேற்றிய வில்லுடன் எழுவதற்குள் அவன் பாகன் தலையறுந்து அமரத்தில் விழுந்தான். புரவிகளில் ஒன்று கொல்லப்பட்டது. கர்ணன் முதல்முறையாக தன் வில்லைத் தூக்கி தலைநிமிர்ந்து சிம்மக்குரலில் உறும அவன் ஆவநாழியிலிருந்து எடுத்த அம்பு எடுக்கையிலேயே மும்மடங்காக நீண்டது. இழுத்து அதை எய்தபோது எழுந்த விம்மலோசையை யானைகள் அஞ்சி பின்காலெடுத்து வைத்தன. புரவிகள் நின்று செவிகோட்டி மெய்ப்பு கொண்டன.

அதைக் கண்டபின் பீமன் பிறிதொரு தேர்முனைக்குத் தாவ அந்த அம்பு காற்றிலேயே பாம்பென வளைந்து சீறி அவனை நோக்கி வந்தது. அவன் நெஞ்சக் கவசத்தை அறைந்து உடைத்து தேரில் பாய்ந்தது. பேரோசையுடன் பீமன் நிலத்தில் அறைந்து விழுந்தான். பீமனின் தேர் வெடித்துச் சிதறியது.

கர்ணனின் நீளம்புகள் மீள மீள எழுந்து வந்து அவனை அறைந்தன. பீமன் புரண்டு கையூன்றி எழுந்து தாவி தப்ப முயல அம்புகள் அவனைச் சூழ்ந்து மண்ணில் தைத்து ஒரு வேலியிட்டன. அதன் நடுவே எழுந்த சிற்றம்புகளால் பீமனின் கவசங்கள் அனைத்தும் உடைந்தகன்றன. அவன் கால்தண்டைகளும் கங்கணங்களும் அறுபட்டன. அவன் தலையின் இருபுறமும் கூந்தலை மழித்தபடி சென்றன இரு பிறையம்புகள்.

பீமன் காலெடுத்து வைத்து பின்னகர தேரொன்றில் முட்டி மல்லாந்து விழுந்தான். பாகனிழந்த கர்ணனின் எடைமிக்க தேர் அசைவிலாது நிற்க அவன் அதன் அமரத்தில் பாய்ந்து தேர்ப்புரவியின் மீது கால்வைத்து தாவி இறங்கி விஜயத்தை நீட்டி பீமனின் கழுத்தில் மாட்டி இழுத்துக்கொண்டு தன் தேரிலேறிக்கொண்டான். அதற்குள் இறந்த பாகனை அகற்றி அங்கே ஏறியமர்ந்த பிறிதொரு பாகன் தேரை அடித்துத் திருப்ப கர்ணனின் வில்லில் சிக்கி தள்ளாடும் கால்களுடன் பீமன் சென்றான். "செலுத்துக! செலுத்துக!" என்று கர்ணன் ஆணையிட்டான். பீமனை இழுத்தபடி கர்ணனின் தேர் படைமுகப்பில் வட்டமிட்டது. பாண்டவப் படைவீரர்கள் ஓலமிட்ட முழக்கம் எழுந்து சூழ்ந்தது.

பீமன் கர்ணனால் போர்க்களமெங்கும் சுழற்றப்பட்டான். பீமனைக் காக்கும்பொருட்டு அறைகூவியபடி எழுந்த நகுலனும் சகதேவனும் கர்ணனின் மைந்தர்களால் முற்றிலும் தடுக்கப்பட்டனர். "மூத்தவரே! மூத்தவரே!" என்று சகதேவன் கதறி அழுதான். அவன் அம்புகளைத் தடுத்து அவன் கவசங்களை உடைத்து இறுதியில் அவன் வில்லை மூன்று துண்டுகளாக்கியது விருஷசேனனின் அம்பு. நகுலனை

தேர்த்தட்டிலிருந்து வீழ்த்தி அவன் தேரை கவிழ்த்தன திவிபதனின் அம்புகள். சர்வதனையும் சுதசோமனையும் சத்ருஞ்சயனும் பிரசேனனும் சுஷேணனும் சுதமனும் சேர்ந்து செறுத்தனர். சாத்யகி கூச்சலிட்டபடி களமுகப்பை நோக்கி ஓடிவர விருஷசேனன் அவனை நோக்கி திரும்பினான். கர்ணனின் அம்புகளுக்கு நிகரான விசைகொண்டிருந்தன விருஷசேனனின் அம்புகள். சாத்யகி தள்ளாடும் உடலுடன் அவனுடன் போரிட்டான். அவன் தேரை உடைத்தன அம்புகள். அவன் நெஞ்சிலறைந்து அப்பால் வீழ்த்தின.

களம் முழுக்க பீமனை இழுத்துச் சுழற்றி அலைக்கழித்த பின்னர் வில்லை உதறி அவனை அப்பால் வீழ்த்தினான் கர்ணன். அம்பால் சுட்டி "இழிபிறப்பே, காட்டுவிலங்கை களத்தில் கொல்வது நெறியல்ல என்பதனால் மட்டுமே உன்னை இன்று கொல்லாமல் விடுகிறேன். இனி எந்த வில்லவன் முன்னும் ஆணவத்துடன் எழாதொழிக உன் வில்! நீ கொண்டிருக்கும் உயிரென்பது இந்தச் சூதனின் கொடையென்று என்றும் உணர்க! சூதனின் எச்சில் தின்று வளர்த்த உடம்பு இதென்று அன்னத்தை கையிலெடுக்கும் ஒவ்வொரு கணமும் இனி நீ அறிக! செல்"! என்றான்.

பீமன் கைகளை விரித்து மண்ணில் முழந்தாள் மடித்து மண்டியிட்டு "கொல்! என்னை கொல்! இழிமகனே, என்னை கொல்!" என்று கூவினான். "உன்னைக் கொன்றால் என்னால் கொல்லப்பட்ட மதிப்பை உனக்களித்தவனாவேன். என் கொடையினூடாக எவரும் சிறுமைப்படலாகாதென்று இதுவரை எண்ணியிருந்தேன். இன்று அறிகிறேன், கொடுப்பவனின் தருக்கை. செல்க, என் கையிலிருந்து உயிர்பெற்று மீண்ட இரவலனாக உன் குடியினரிடம் செல்க!" என்றபடி தன் தேரைத்

திருப்பி பின்னால் சென்றான் கர்ணன். திகைப்புடன், கண்களில் வழிந்த நீருடன் உடல் நடுங்கிக்கொண்டிருக்க விரித்த இரு கைகளும் காற்றில் அலைபாய கர்ணனை நோக்கி அமர்ந்திருந்தான் பீமன்.

அவன் உதடுகள் அசைந்து கூறுவதென்ன என்பதை ஒருகணம் வியப்புடன் நோக்கிய சாத்யகி மறுகணமே அவன் செய்யப்போவதென்ன என்பதை உய்த்துணர்ந்தான். பீமன் எழுந்து அருகிலிருந்த அம்பொன்றை எடுத்து தன் கழுத்தை நோக்கி செலுத்துவதற்குள் தன் அம்பால் அந்த அம்பை அறைந்து தெறிக்க வைத்தான். புரவியை விரைந்து செலுத்தி தேரை அருகணைத்து பீமனை இடைவளைத்து தூக்கி தன் தேரிலேற்றிக்கொண்டான். "செல்க! பின்செல்க!" என்றான். தேர் விரைய "விடு என்னை! விடு! விடு!" என்று பீமன் உறுமினான். திமிறிச் சுழன்று தேர்த்தட்டில் விசையுடன் விழுந்தான்.

"இளவரசே, தாங்கள் கழுத்தறுந்து இக்களத்தில் விழுந்தாலும் அவன் அளித்த உயிர் என்பதே நிலைக்கும். இனி ஒருமுறையேனும் களத்தில் அவனை வென்று தாங்கள் பெற்றவற்றை திருப்பிக் கொடுக்காமல் உயிர்துறப்பதைப்போல் அறிவின்மை பிறிதொன்றில்லை" என்றான் சாத்யகி. பீமன் கொட்டும் குளிரருவியின் கீழே நிற்பவன்போல் உடல் அதிர்ந்துகொண்டிருந்தான். வியர்வையும் குருதியும் வழிந்த உடல் ஆங்காங்கே விதிர்த்தது. "எண்ணுக, இதற்கு பழிவாங்காது நீங்கள் மண்நீத்தீர்கள் என்றால் இக்கணத்தில் அடைந்த அனைத்து இழிவும் உங்களையே சாரும்! சூதர் சொற்களில் என்றும் அது நீடித்திருக்கும். உங்கள் மைந்தரைத் தொடரும்" என்றான் சாத்யகி.

பீமன் உளமுடைந்து விம்மினான். கர்ணன் அப்பால் திருஷ்டத்யும்னனை எதிர்கொள்வதை சாத்யகி பார்த்தான். “பாஞ்சாலர் புண்பட்டிருக்கிறார். இத்தனை விரைவாக களத்திலெழுவார் என்று எண்ணவில்லை. அவரைக் காத்து பின்துணை செய்தாகவேண்டும் நான்” என்றான். பீமனிடம் “செல்க அரசே, சென்று சற்று ஒய்வெடுத்து உணவும் மதுவும் அருந்தி படைமுகப்புக்கு மீள்க! நீங்கள் ஆற்றவேண்டிய பணி பிறிதுள்ளது” என்றபின் அணுகிய மருத்துவ ஏவலரை நோக்கி கைகாட்டினான். அவர்கள் வந்து பீமனை தூக்க முயல தேர்த்தட்டிலிருந்து புரண்டு நழுவி கீழிறங்கி மண்ணில் நின்ற பீமன் கால் தளர்ந்து பின்னால் விழுந்து நிலத்தில் அமர்ந்து தலையை முழங்கால் மேல் வைத்துக்கொண்டான். உள்ளிருந்தெழுந்த வெறியொன்று உந்த இரு கைகளாலும் மாறி மாறி தலையை ஓங்கி அறைந்தான்.

மருத்துவஏவலர் அவனை அள்ளிப்பற்றி சாய்த்து கீழே படுக்க வைத்தனர். பீமன் மதம்கொண்ட யானைபோல உறுமலோசை எழுப்பினான். தன் தேர் விரைந்து முன்செல்ல திருஷ்டத்யும்னன் கர்ணனை எதிர்கொள்வதை சாத்யகி பார்த்தான். அவனுக்கு மறுபுறம் தேர்த்தட்டில் சிறு பீடத்தில் அமர்ந்தபடியே போரிட்டுக்கொண்டு அவனுக்கு உதவிக்கு வந்த சிகண்டியையும் கண்டான். விரைந்து சென்று திருஷ்டத்யும்னனின் வலப்பக்கம் தான் இணைந்துகொண்டான்.

இருட்கனி - 25

சாத்யகி அம்புகளைத் தொடுத்தபடி கர்ணனை நோக்கி சென்றான். அவன் செல்வதற்குள் கர்ணனும்

திருஷ்டத்யும்னனும் போரில் முழுமையாக தொடுத்துக்கொண்டுவிட்டிருந்தார்கள். பாஞ்சால விற்படைவீரர்கள் திருஷ்டத்யும்னனைச் சூழ்ந்து பின்பிறை அமைக்க அவர்களை கர்ணனின் மைந்தர்கள் தடுத்து சிதைத்து விலக்கிக்கொண்டிருந்தனர். கர்ணன் பீமன் அகன்றதை, திருஷ்டத்யும்னன் வந்ததை, துணைக்க சிகண்டி எழுவதை உணராதவன் போலிருந்தான். அவனுடைய அரைவிழிநோக்கு அவ்வண்ணமே நிலைகொண்டிருக்க வில்மட்டும் துள்ளித்துள்ளிச் சுழன்று அம்புகளை சொரிந்துகொண்டிருந்தது.

ஒரு மெல்லிய மின்னலுக்குப் பின் விண்ணிலிருந்து இடியோசை எழுந்தது. முகில்கணம் விரிசலிட்டு அகல வானின் ஒளி களத்தின்மேல் அருவி எனப் பொழிந்தது. அதன் ஒளியில் அங்கு நின்றிருந்த தேர்முகடுகள் சுடர்களாயின. புரவிகளின் வண்ணம் மின்னியது. குருதிச்செம்மை தழல்போல் தெளிந்தது. மிக மெல்லிய நீர்த்திவலைகள் காற்றில் சிதறிப்பொழிந்து சுழன்றுகொண்டிருந்தன. யானைகள் கன்னங்கருமை கொண்டன. தரையில் குருதிகலந்த செம்மண் சேறாகி மிதிபட்டது. தேர்களின் சகடங்களால் அள்ளித்தெறிக்கப்பட்டு யானைக்கவசங்கள் மேல் நிணம் என, தசைத்துண்டுகள் என வழிந்தது.

அந்தப் போரில் முதல் அம்பை தொடுத்தபோதே அது சில கணங்களுக்குக்கூட நீடிக்காத போரென்பதை சாத்யகி உணர்ந்தான். அப்பாலிருந்து சிகண்டியும் அம்புகளை எய்தபடி வந்து கர்ணனுடன் போரிட்டார். சிகண்டியும் திருஷ்டத்யும்னனும் உடலில் சற்றும் ஆற்றலில்லாது தள்ளாடினார்கள். சிகண்டியால் தேர்ப்பீடத்தில் இருந்து எழவே இயலவில்லை. கர்ணனிடம் சிக்கிக்கொண்ட பீமனை

காக்கும்பொருட்டே அவர்கள் தங்கள் வலியுடன், நிலைக்காத குருதியுடன், வெளிறித் தளர்ந்த முகங்களுடன், நிலையழிந்த உடல்களுடன் தேரிலேறி வந்திருக்கிறார்கள் என்பதை அவன் உணர்ந்தான். சிகண்டியின் அம்புகள் பெரும்பாலும் இலக்கை ஒழிந்தன. சாத்யகி தன் அம்புகளை கர்ணனை நோக்கி ஏவவே இல்லை. கர்ணனின் பாகனை கொல்ல இயலுமா என்றே முயன்றான்.

கர்ணன் அவர்கள் மூவரின் அம்புகளையும் தடுத்தபடி மேலும் மேலுமென பாண்டவப் படைகளுக்குள் நுழைந்துகொண்டிருந்தான். அவன் நுழைய வழியமைப்பதுபோல் பாண்டவப் படைமுகப்பு விரிந்து அகன்றது. சாத்யகி சிகண்டியையும் திருஷ்டத்யும்னனையும் காப்பது தன்னால் இயல்வதல்ல என்று உணர்ந்தான். மூவரில் ஒருவரேனும் அந்தக் களத்தில் விழக்கூடும் என்று தோன்றியது. கர்ணனின் வெற்றி துரியோதனனின் படைகளை ஊக்கம் கொள்ளச்செய்ய அவர்கள் பெருங்குரலில் "அங்கர் வெல்க! விண்ணோன் மைந்தன் வெல்க! கதிர்மைந்தன் வெல்க!" என வாழ்த்தியபடி முன்னகர்ந்தனர். கைகளை நீட்டிவைத்து வால் சுழற்றி அறைந்தபடி முதலை வேல்சூழ்கையை சிதைத்தது. இருபக்கமும் விலகிச் சிதறி சிறு குழுக்களாகி அக்குழுக்களாக ஆனதனாலேயே பாதுகாப்பின்மையை உணர்ந்து மீண்டும் சென்று இணைந்துகொண்டு வேல்வடிவை அடைந்துகொண்டிருந்தது பாண்டவப் படை.

அன்று போருக்கென எழுந்தவர்களில் பெரும்பகுதியினர் அதற்குள்ளாகவே களம்பட்டுவிட்டனர் என்று தெரிந்தது. சற்றே உடல் எம்பி கண் ஓட்டிய ஒரே நோக்கிலேயே முழுப்

பாண்டவப் படையையும் பார்க்க முடிந்தது. அவர்களில் பெரும்பகுதியினர் எப்பயிற்சியும் இலாத எளிய ஏவலர்கள். அவர்கள் மீதூறிய அச்சத்தாலும் ஆணையிலாது அணிநிரக்க இயலாததாலும் படையின் பின்பகுதியில் முட்டித் ததும்பி நிலையழிந்துகொண்டிருந்தார்கள். நூற்றுவர்தலைவர்கள் மண்பட்டபோது புதிய நூற்றுவர்தலைவர்கள் வந்தனர். பலமுறை அவ்வண்ணம் வந்தபோது செவியாணைகளையும் விழியாணைகளையும் சொல்லாணைகளாக ஆக்கிக்கொள்ளும் பயிற்சி இல்லாதவர்கள் தலைமைகொண்டார்கள். படை செவியற்றதாக, வாயற்றதாக மாறியது. பழகாத யானை என முரண்கொண்டது. புரியாமையால், புரிந்துகொள்ளப்படாமையால் சினம் அடைந்தது. செய்வதென்ன என்று அறியாமல் தன்னைத்தானே சுற்றிவந்தது.

சாத்யகி கர்ணனின் அம்புகளால் சிகண்டி எக்கணமும் உயிர்துறப்பார் என்று எதிர்பார்த்தான். திருஷ்டத்யும்னன் தன்னைக் கருதியபடி போரிட சிகண்டி எதையும் எண்ணா படைமடத்துடன் போரிட்டார். ஆனால் மேலும் மேலும் தன் எஞ்சிய ஆற்றலை முழுதுறக் குவித்து விழிகூர்ந்து உடலொடுக்கி நின்று பொருதிய சிகண்டியைக் கண்டபோதுதான் அவரும் வில்லை ஊழ்கமென வாழ்நாளெல்லாம் பயின்றவர், வெல்லற்கரியவர் என்பதை புரிந்துகொண்டான். திருஷ்டத்யும்னன் கர்ணனின் அம்புகளால் அறைபட்டு தேர்த்தட்டில் விழுந்தான். மேலும் ஓர் அம்பால் அவனை கொல்ல கர்ணன் முயல அந்த அம்பை சாத்யகி தடுத்தான். கர்ணன் மீண்டும் தாக்காமலிருக்க கர்ணனின் புரவிகளை நோக்கி அம்புகளை தொடுத்தான். பாகன் திகைத்து தேரைத் திருப்ப அந்த இடைப்பொழுதில் திருஷ்டத்யும்னனின் பாகன் தேரை பின்னுக்குக் கொண்டுசென்று அவனை மீட்டான்.

கர்ணனின் தேர்ப்பாகன் களநுண்மை அறியாதவன். ஏழு புரவிகளில் ஒன்றிரண்டு விழுந்தாலும் தேர் நிலைமாறுவதில்லை. அக்கணத்தில் பாஞ்சாலனைக் கொல்வதே வெற்றியின் உச்சம். வெற்றியின் உச்சத்திற்கு முந்தைய கணத்திலேயே உளம் திருப்பும் தாக்குதலை எதிரிகள் செய்வார்கள். அந்த ஒருகணத்தை கடத்தலே போர்த்திறனின் முதன்மை அறைகூவல். சினத்துடன் பாகனை வசைபாடிய கர்ணன் பற்களைக் கடித்தபடி சாத்யகியை நோக்கி முழுமையாகத் திரும்ப முயல மறுபக்கம் சிகண்டியின் அம்புகள் அவனைத் தாக்கி நிறுத்தின. கர்ணன் சிகண்டியை நோக்கி திரும்பி அம்புகளை தொடுத்தான். சிகண்டி உடலை நன்றாகக் குறுக்கி சுண்டி எழக் காத்து புல்முனையில் நின்றிருக்கும் புழு என தேரில் இருந்தார். அவரிடமிருந்து எழுந்த அம்புகள் கர்ணனை வண்டுக்கூட்டம் என சூழ்ந்துகொண்டன.

விருஷசேனன் சாத்யகியை நோக்கி அம்புகளுடன் வந்தான். கர்ணனுக்கு நிகரானவன் என்று அவனை அறிந்திருந்தான் சாத்யகி. களத்தில் பலமுறை அதை கண்டுமிருந்தான். ஆயினும் அவன் இளையோன், எனவே முதற்சில கணங்களில் அப்போரை எளிதாகக் கடந்துவிடலாம் என்று எண்ணினான். ஆனால் விருஷசேனனின் அம்புகள் அவன் தேரை யானைத்துதிக்கைகள் என அறைந்தன. அலைகளில் என தேரை ஊசலாட்டின. தேர்ப்பாகன் கழுத்தறுந்து சரிந்து அமரத்தட்டிலேயே விழுந்தான். புரவிகள் நிலையழிய சாத்யகி பாய்ந்து பின்னால் நின்ற பிறிதொரு தேரிலேறிக்கொண்டான். அத்தேர்ப்பாகனையும் தேர்ப்புரவிகளையும் கொன்றான் விருஷசேனன். அவனுடைய அம்புகளை அறைந்து தெறிக்கவிட்டபடி மேலும் பின்னடைந்து பிறிதொரு

தேரிலேறிய சாத்யகி மீண்டும் அம்புகள் வந்து பொழிய அப்போர் முடிந்துவிட்டது, அர்ஜுனன் படைமுகம் வந்தாலொழிய எதுவும் நிகழப்போவதில்லை என்று உணர்ந்தான்.

கர்ணன் நீளம்புகளால் அறைந்து சிகண்டியின் தேரை உடைத்தான். சிகண்டியின் பாகன் நெஞ்சில் தைத்த அம்புடன் சரிய இரு புரவிகள் கழுத்தறுந்து சரிந்து கால்களை உதைத்தபடி விரைந்த தேருடன் இழுபட்டுச் சென்றன. சிகண்டி அணிந்திருந்த இரும்பு நெஞ்சக்கவசமும் தலைக்குடமும் உடைந்தன. மேலும் இரு அம்புகள் உறுமியபடி சென்று தேர்த்தட்டை அறைந்து பிளக்க சிகண்டி ஒருகணம் தேரிலிருந்து மறைந்தார். அம்பால் அறைபட்டு தூக்கி வீசப்பட்டிருப்பார் என்ற எண்ணம் எழ சாத்யகி திரும்பிப் பார்த்தான். அப்பால் இரு யானைகளுக்கு நடுவே சிகண்டி மறைவதை கண்டான். கர்ணன் திரும்பி சாத்யகியை பார்க்க அவன் தேரிலிருந்து பின்னால் குதித்து படைகளுக்குள் சென்று மறைந்தான். கர்ணனின் கையசைவுக்கேற்ப அவன் மைந்தர்கள் இருவரும் இரு வாள்கள்போல உருமாறி பாண்டவப் படையை வகுந்து அகற்றினர். அந்த இடைவெளியினூடாக கர்ணன் முழுவிசையுடன் பண்டவப் படையின் மையம் நோக்கி சென்றான்.

ஓடிச்சென்று பிறிதொரு தேரிலேறிக்கொண்டு கர்ணன் செல்வதை பார்த்தபோது பாண்டவப் படை உயிர்விடத் துடிக்கும் ஈசல்களின் திரளாக ஆகிவிட்டது என்னும் எண்ணத்தை சாத்யகி அடைந்தான். மறுகணம்தான் மிக அருகிலேயே யுதிஷ்டிரன் இருக்கும் எண்ணம் ஏற்பட்டது. தேரிலிருந்து பாய்ந்திறங்கி அருகிருந்த வீரர்களிடம் "அரசர்

எங்கிருக்கிறார்? நோக்குக, அரசர் எங்கிருக்கிறார்?" என்று கூவினான். அதற்குள் அவனே கர்ணன் சென்று கொண்டிருக்கும் அத்திசையிலேயே யுதிஷ்டிரனின் கொடியை பார்த்தான். "இளைய பாண்டவர் எங்கிருக்கிறார்? இளைய பாண்டவரை அழையுங்கள். உடனே இளைய பாண்டவருக்கு செய்தி செல்லட்டும்!" என்று கூவினான். "அவர் ஏழு அம்புகளால் ஆழமாக அறைபட்டிருக்கிறார். மருத்துவர்களால் சூழப்பட்டிருக்கிறார்!" என்று ஒருவன் சொன்னான். "இல்லை கட்டுகளுக்குப் பின் தேரிலேறினார். இத்திசை நோக்கி வரும் வழியில் அவரை சல்யரும் கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் சேர்ந்து எதிர்க்கிறார்கள். மூவரையும் எதிர்கொண்டபடி அங்கு நின்றிருக்கிறார்" என்றான் இன்னொருவன்.

"செய்தி செல்லட்டும். உடனடியாக அவர் இங்கு வந்தாகவேண்டும்... உடனடியாக அரசரை காக்கவேண்டும்!" என்று சாத்யகி ஆணையிட்டான். "அரசரை காத்துக்கொள்க! அரசரை காத்துக்கொள்க!" என்று வானில் முரசுகள் முழங்கத்தொடங்கின. தன்னால் பிறிதொரு கணமும் போர்புரிய இயலாதென்று உணர்ந்து கால் தளர்ந்து வெறும் நிலத்திலேயே அமர்ந்து பின்னர் உடல் ஓய மல்லாந்து படுத்து வான் நோக்கி வெறித்தபடி ஒரு சில கணங்கள் மட்டுமே நீண்ட ஆழ்துயிலுக்குச் சென்றான் சாத்யகி. தன் மூச்சொலியைக் கேட்டு பின்னர் துடித்தெழுந்தபோது கர்ணன் யுதிஷ்டிரனை நெருங்கிவிட்டதை உணரமுடிந்தது.

அவன் எழுந்து யுதிஷ்டிரனை கர்ணன் தாக்கும் ஓசைக்காக செவிகொண்டான். அவர் பின்னடைந்துவிடவேண்டும், அவருடன் வில்லவர் சேர்ந்துகொள்ளவேண்டும். ஆனால் அவன் அங்கு செல்வதற்குள் போர் மூண்டுவிடும். "அவருடன்

யார் இருக்கிறார்கள்?" என்றான். "அவரது இரு மைந்தர்கள்" என்றான் காவலன். "பிரதிவிந்தியனும் யௌதேயனும் போர்க்கலை தேராதவர்கள்... பிற மைந்தர்களேனும் அங்கே செல்லட்டும்" என்று கூவியபடி "என் வில் எங்கே? என் அம்பறாத்தூணி வருக!" என்று இருகைகளையும் நீட்டியபடி சாத்யகி தன் தேரை நோக்கி சென்றான். அந்த உளவிசைக்குப் பழகாத உடல் பின்னிருந்து எவரோ உதைத்ததுபோல் நிலைதடுமாறியது. என்ன நிகழ்கிறது என உணராத ஒருகணத்திற்குப்பின் தேரிலேயே தன் முகம் அறைபட விழுந்திருப்பதை உணர்ந்தான்.

"யாதவரே, தங்களால் இத்தருணத்தில் போர்புரிய இயலாது" என்றார் முதிய படைவீரர் ஒருவர். அவரை கைகளால் விலக்கி "செல்க!" என ஆணையிட்டான். தேரில் ஏற முயன்றபோது நெஞ்சுக்குள் ஒரு தரை அறுபட்டுத்துடிப்பதுபோல் வலியெழுந்தது. "அரசரை காத்துக்கொள்க! அரசரை காத்துகொள்க!" என்று கூவியபடி தேரில் கையூன்றி உடலைத்தூக்கி எழுப்பி தேர்த்தட்டில் அமர்ந்து புரண்டு எழுந்து தேர்த்தூணைப் பற்றியபடி நின்றான். உடலில் அனைத்து தசைகளும் அனல்கொண்டவைபோல் எரிந்து துடித்தன. பற்கள் கிட்டித்து உரசிக்கொள்ள விழிகளில் நீர் கசிந்தது. "செல்க! அரசரை நோக்கி செல்க!" என்று பாகனுக்கு ஆணையிட்டான். பாகனின் சாட்டை புரவிகளின் மேல் விழுந்த ஒலியைக்கூட அவன் தன் உடலின் வலியாகவே உணர்ந்தான். தேரின் ஒவ்வொரு அசைவும், அதன் சகடங்கள் ஏறிய ஒவ்வொரு பொருளும் வலியென அவனை அடைந்தன.

சாத்யகியின் தேர் கர்ணன் பாண்டவப் படைகளை வகுந்து சென்ற வழியிலேயே சென்றது. படைவீரர்களும் யானைகளும்

புரவிகளும் தேர்களும் சேர்ந்தும் உடைந்தும் கிடந்த வழியில் படகென அலைமோதி அவன் உடலைத் தூக்கி அங்குமிங்கும் வீசி கொந்தளித்துச் சென்றது அது. "இளைய பாண்டவர் வருக! இளைய பாண்டவர் வருக! அரசரைக் காக்க இளைய பாண்டவர் வருக!" என்று செய்திமுரசுகள் ஒலித்துக்கொண்டே இருந்தன. அந்த எச்சரிக்கையிலிருந்தே யுதிஷ்டிரன் அகப்பட்டுக்கொண்டிருக்கக் கூடும் என்று உணர்ந்து சகுனி "சூழ்ந்து கொள்க! இளைய பாண்டவரை சூழ்ந்து கொள்க!" என்று தன் படையினருக்கு ஆணையிட்டார். "இளைய பாண்டவர் முன்னகரலாகாது... அவர் சிறைநின்றாகவேண்டும்" என்று கௌரவ முரசுகள் முழங்கின.

சல்யர் வலப்பக்கமும் கிருதவர்மன் இடப்பக்கமும் நிற்க அஸ்வத்தாமன் அர்ஜுனனை எதிர்கொண்டான். அர்ஜுனன் அங்கு இறுதி மூச்சையும் திரட்டி போரிடுவதை தொலைவில் வானில் பறவைக்கூட்டம்போல் மின்னி எழுந்து சுழன்று கொண்டிருந்த அம்புகளின் கொப்பளிப்பிலிருந்தே சாத்யகி புரிந்துகொண்டான். அரைநாழிகைப் பொழுது போதும், அதற்குள் கர்ணன் யுதிஷ்டிரனை பிடித்துவிடக்கூடும். அத்தருணத்தில் ஓர் எண்ணம் அவனுக்கு எழுந்தது, யுதிஷ்டிரன் கர்ணனை பார்த்ததும் தோற்று தாள் பணியக்கூடும், யுதிஷ்டிரனை சிறைப்பிடித்து இழுத்துச்சென்று துரியோதனன் முன் நிறுத்தக்கூடும். போர் அக்கணத்துடன் முடிந்துவிடும்.

யுதிஷ்டிரனை கர்ணன் கொல்லப்போவதில்லை என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. அது ஏன் எழுகிறது என்று அவன் வியந்தாலும் அது மிக உறுதியாகவே தெரிந்தது. யுதிஷ்டிரனை எந்நிலையிலும் கர்ணனால் கொல்ல இயலாது. ஆனால் இப்போர் யுதிஷ்டிரனால்தான் முடியும். யுதிஷ்டிரன்

சிறைப்படுவதுகூட தேவையில்லை. அவர் அவன் வில்லுடன் எழக் கண்டதும் தன் தோல்வியை ஏற்று மணிமுடியைக் கழற்றி கீழே வைப்பாரெனில், அதை கர்ணன் எடுத்துக்கொண்டு செல்வான் எனில் இப்போர் இங்கேயே முடியும். அந்த மணிமுடியை தான் விழைந்தவருக்குச்சூட்ட கர்ணனுக்கு உரிமையுள்ளது. களத்தில் மண்டியிட்ட எதிரியிடமிருந்து பெற்ற மணிமுடி மூதாதையரால் அளிக்கப்பட்டதற்கு நிகர். ஆம், அதுவே நிகழவிருக்கிறது. இவையனைத்தும் சென்று முனைகொள்வது அங்குதான்.

சாத்யகி உடல் தளர்ந்து தேர்த்தட்டில் அமர்ந்தான். அதுதான் நிகழப்போகிறதென்று தெள்ளத்தெளிவாக கண் முன் கண்டான். அக்கணமே அக்காட்சி மீள மீள மெய்நிகர் என அவனுள் ஓடியது. யுதிஷ்டிரன் ஓர் அம்பால்கூட கர்ணனை எதிர்கொள்ளப்போவதில்லை. அவர் வில்லெடுத்துப் பயின்றே அவன் பார்த்ததில்லை. அவருக்கு இருபுறமும் துணை நிற்பவர்கள் தாங்களும் அவரைப்போலவே நூல் பயின்று வில்லறியாத இளையோர். கர்ணனின் ஐந்து அம்புகளைக் கூட அவர்களால் தடுக்க இயலாது. அதற்குள் ஏதேனும் நிகழலாம். அர்ஜுனன் தடைகடந்து வந்துவிடலாம். பீமன் மருத்துவர்களை மீறி களம்புகலாம். மைந்தர் வந்து காத்து நிற்கலாம். இவை என் விழைவுகள். நிகழவிருப்பது ஒன்றே.

சாத்யகி படைகளின் இடைவெளியினூடாக கர்ணனின் தேரை பார்த்தான். இருபுறமும் அவனை அழைத்துச் சென்றுகொண்டிருந்த மைந்தர்களின் தேர்களின் மகுடஒளிக்கு மேல் எழுந்து கதிர்த்தேவனின் ஆலயத்தின் பொற்கோபுரம்போல் நின்றிருந்தது. அத்தேர்களிலிருந்து எழுந்த அம்புகள் இருபுறமும் கிளம்ப பாண்டவப் படை அகன்று

அகன்று அவர்களை உள்ளே ஏற்றுக்கொண்டது. சேற்றில் கற்களென அத்தேர்கள் புதைந்து இறங்கின. மிக அருகே யுதிஷ்டிரனின் கொடியை சாத்யகி பார்த்தான். யுதிஷ்டிரனை நோக்கி சென்ற கர்ணன் தன் நாணை ஒலித்து உரக்க கைதூக்கி அவர் அடிபணியவேண்டுமென்று ஆணையிட்டான். அவனது ஆணையை அவனுக்குப் பின்னால் சென்ற படைகளிலிருந்த முழவுகள் திரும்ப ஒலித்தன. "அடிபணிக! அடிபணிக! முடி எடுத்து நிலம் வைத்து அடிபணிக! உயிர் காத்துக்கொள்க!"

நெஞ்சு துடித்து, உடலெங்கும் அத்துடிப்பு பரவ கையிலிருந்து வில் நழுவாதிருக்க இறுகப்பற்றியபடி சாத்யகி அமர்ந்திருந்தான். அம்புகள் எட்டா அகல்விலிருந்தாலும் எழுந்து ஓர் அம்பையேனும் எடுத்து கர்ணனை நோக்கி தொடுத்து அங்குளேன் என அறிவிக்கவேண்டும் என்று எண்ணியபோதும்கூட உடலை அவனால் அசைக்க இயலவில்லை. ஆனால் அவன் எண்ணியதுபோல் யுதிஷ்டிரன் அஞ்சவில்லை. "இழிமகனே, இவ்வண்ணம் உன்னை இக்களத்தில் எதிர்கொள்ளும்பொருட்டே நான் இதுகாறும் உயிர் பிழைத்திருக்கிறேன் என்று எண்ணுகிறேன். என் வாழும் உடலிலிருந்து இம்மணிமுடியை நீ எடுக்கப்போவதில்லை..." என்று கூவியபடி அவர் கர்ணனை நோக்கி அம்புகளைத் தொடுத்தபடி பாய்ந்து முன்னால் வந்தார். அவருடைய இரு மைந்தர்களும் இருபுறம் துணை வந்தனர். "இது யயாதியின் மணிமுடி. குருவின், ஹஸ்தியின் மணிமுடி. இதை ஒருபோதும் சூதன் வெல்லமாட்டான்... விலகிச்செல், கீழ்மகனே" என்று யுதிஷ்டிரன் வில்லைத் தூக்கியபடி கூச்சலிட்டார்.

சாத்யகி துடித்து உயிர்கொண்டு "செல்க! செல்க!" என பாகனை ஊக்கி தேரைக் கிளப்பி கர்ணனை நோக்கி சென்றான்.

கர்ணனின் மைந்தர்களான விருஷசேனனும் திவிபதனும் பின்னால் திரும்பி அவனை நோக்கி வந்து அவனை தடுத்தனர். அவர்கள் இருவரையும் அவன் தன் வில்லால் எதிர்கொண்டான். அவர்களின் அம்புகளைக் கடந்து செல்ல தன்னால் இயலாதென்பதை ஒருசில அம்புகளுக்குள்ளே உணர்ந்தான். பளிங்குச் சுவரொன்றால் அவன் கர்ணனிடமிருந்து பிரிக்கப்பட்டவன் போலிருந்தான். பட்டுத்திரைக்கு அப்பால் என பறக்கும் அம்புகளினூடாக கர்ணனும் யுதிஷ்டிரனும் போரிடும் காட்சி தெரிந்தது. கர்ணன் தன் அம்புகளால் யுதிஷ்டிரனின் தேர்ப்புரவிகளை சிதறடித்தான். தேர்ப்பாகனை வீழ்த்தினான். புரவிகள் அலறியபடி சரிந்து விழ யுதிஷ்டிரன் நிலைகொண்ட தேர்த்தட்டில் நின்றபடி கர்ணனை நோக்கி அம்புகளை தொடுத்தார்.

அவரில் எழுந்த அந்த வெறி வியப்பூட்டியது. ஒவ்வொரு அம்புக்கும் சினமும் வெறியும் மிகுந்தவராக கூச்சலிட்டுக்கொண்டே போரிட்டார். அவருடைய அம்புகளில் ஒன்று கர்ணனின் தோளை தாக்கியது பிறிதொன்று அவன் தொடையை தாக்கியது. கர்ணன் அதை எதிர்பார்க்கவில்லை என்பதனால் சீற்றத்துடன் முன்சென்று யுதிஷ்டிரனின் தேர்த்தட்டை அம்புகளால் அறைந்தான். முள்ளால் வேலியிடப்பட்டதுபோல் கர்ணனின் அம்புகள் நடுவே யுதிஷ்டிரன் நின்றார். ஆயினும் அவர் தொடர்ந்து போரிட்டார். பற்கள் தெரிய "கீழ்மகனே, ஒருபோதும் உன் முன் இந்திரப்பிரஸ்தத்தின் பேரரசன் மண்டியிடப் போவதில்லை. என் தலை கொய்து இம்மணிமுடியுடன் செல். குருதியுடன் மட்டுமே இம்மணிமுடி உன் கைக்கு வரும். அக்குருதிக்கு நீயும் உன் குலமும் நூறு தலைமுறைக்காலம் நிகர்த்திறை கொடுக்கவேண்டியிருக்கும்" என்று கூவினார்.

கர்ணன் யுதிஷ்டிரனின் தேரின் ஆரத்தை உடைக்க அது ஒருபக்கமாக சரிந்து அவரை கீழே தள்ளியது. வில்லுடன் சரிந்து தேர்த்தட்டிலிருந்து உருண்டு கீழே மண்ணில் விழுந்து குருதிச்சேற்றில் புரண்டு எழுந்தபோது அவர் ஏந்தியிருந்த வில்லையும் அம்பையும் அறைந்து உடைத்து துண்டுகளாக தெறிக்கவிட்டான் கர்ணன். அவர் தொடர்ந்து போரிடும் வெறியுடன் குனிந்து கீழே கிடந்த ஒரு வில்லை எடுத்தபடி முன்னால் வர அதையும் உடைத்தான். அவர் காதில் அணிந்திருந்த குண்டலங்கள் இரண்டையும் அறைந்து தெறிக்க வைத்தான். சிறிய கூரிய அம்புகளால் அவருடைய கால்களின் கழல்களை, கைகளின் கங்கணங்களை, இடைக்கச்சையை, ஆரங்களை, நெஞ்சக்கவசத்தை, தோளிலைகளை ஒவ்வொன்றாக அம்புகளால் அறைந்து உடைத்து விழச்செய்தான். அவர் விரல்களில் அணிந்திருந்த கணையாழியைக்கூட ஓர் அம்பு உடைத்தது.

பின்னர் பிறைஅம்பொன்று வளைந்து சென்று அவர் இடையில் அணிந்திருந்த ஆடையைச் சீவி அறுத்துச் சென்றது. இடையாடை கீழே நழுவ அவர் பதறி அதை இரு கைகளாலும் பற்றினார். அவர் குழலை ஓர் அம்பு சீவி மழித்துச்செல்ல அவர் கைதூக்கி தலையை காக்க முயன்றபோது இன்னொரு அம்பு வந்து ஆடையைப் பிடுங்கி கொண்டுசென்றது. உள்ளே காமஉறுப்பை மட்டும் இறுக்கிக் கட்டியிருந்த தோல்சிறுகச்சு தெரிய ஆடையற்ற உடலுடன் திகைத்தவராக யுதிஷ்டிரன் நின்றார். பிறிதொரு அம்பினால் அவர் மணிமுடியை அறைந்து கீழே விழச்செய்தான். மேலும் மேலும் அம்புகளை அவன் செலுத்த அவை பறவைகள் ஊன்துண்டை கொத்துவதுபோல் அந்த மணிமுடியை அடித்து அடித்து களத்தில் துள்ளித் தெறிக்கவைத்தன. மணிமுடி வலியுடன் குதித்தது. ஒளிய

விழைவதுபோல சகடங்களின் இடுக்குகளில், சிதைந்த உடல்களின் மடிப்புகளில் ஒண்டிக்கொண்டது. உருண்டு துடித்து தவித்து எம்பி எம்பி குதித்து உருவழிந்தது.

கர்ணன் யுதிஷ்டிரனிடம் "யுதிஷ்டிரா, உனக்குரியது இந்த மான்தோல் சிறுகச்சையும் சடைமுடியும் கமண்டலமும்தான். அரசனென்று தருக்கி அரியணையில் இனி அமராதே. கோழையே, பெண்ணையும் மண்ணையும் விரும்புவதை மறைத்து அறம்பேசும் வீணனே, செல்க! சென்று காட்டில் தவம் செய். நீ கற்ற அரசியலையும் நெறியையும் முற்றிலும் மறந்து உன் விழைவுகளுக்கு உன்னை ஒப்புக்கொடு. அவற்றை மெய்யென ஏற்றுக்கொண்ட பின்னர் அவற்றை துறக்க முயல்க! உன் இழிநடிப்புகளைத் துறந்து மெய்யுணர்ந்தாய் என்றால், அவற்றுக்கு அப்பால் ஒருகணமேனும் எழுந்து நின்றாயெனில், ஏழு பிறவிக்கு அப்பாலென்றாலும் உனக்கு விடுதலை இயல்வதாகும். செல்க! செல்க, மூடா!" என்றபின் தேரை திருப்பிச் சென்றான். அவன் மைந்தரும் உடன்சென்றனர். வில்தாழ்த்தி சாத்யகி யுதிஷ்டிரனை நோக்கினான். அவரை சென்று எதிர்கொள்ளக்கூடாது என்று உணர்ந்தான்.

யுதிஷ்டிரன் உடல் நடுங்கித் துள்ள, இரு கைகளும் அலைபாய, கண்ணீர் வழிய, உதடுகள் துடிக்க அங்கே நின்றார். அவரது மணிமுடி வெட்டுண்ட தலை என குருதியாடி செஞ்சேற்றில் பாதி புதைந்து கிடந்தது. அதை ஒருமுறை நோக்கியபின் திரும்பி தன் படைகளை நோக்கி சென்றார். ஒரு வீரன் அதை எடுக்கச் செல்ல "ம்!" என்னும் ஆணையோசையால் அவனை அகற்றினார். அப்பால் பாண்டவப் படையைப் பிளந்தெழுந்த அர்ஜுனன் கர்ணனை தன் அம்புகளால் எதிர்கொண்டான். அம்புகள் அம்புகளுடன் தொடுத்துக்கொள்ள அவர்களிடையே

மீண்டும் போர் மூண்டது. சாத்யகி தன் தேரைத் திருப்பி அத்திசை நோக்கிச் செல்ல ஆணையிட்டான்.

இருட்கனி - 26

குருக்ஷேத்ரத்தின் தெற்குக்காட்டில் கர்ணனின் அணிநிறை முழுதுடலைச் சூழ்ந்து அமர்ந்திருந்த சூதர்களில் ஐந்தாமவரான மடங்கர் தன் சிறுபறையை மீட்டி ஓங்கிய குரலில் களநிகழ்வுகளை புனைந்து உரைக்கத் தொடங்கினார். அவருடன் பிற சூதர்களும் இணைக்குரல் எடுத்து சேர்ந்துகொண்டனர். வண்டு முரல்வதுபோல் எழுந்த ஓசையை மிக அப்பால் நின்று சுப்ரதர் நோக்கிக்கொண்டிருந்தார். விழுந்து மடிந்த காட்டு யானைக்கு மேல் மணியீக்கள் பறந்து எழுப்பும் முரலலென அது அவருக்கு கேட்டது. விழிதிருப்பிக்கொண்டு அப்பால் இருளில் பந்தங்கள் எரிய விரிந்துகிடந்த கௌரவப் படையை பார்த்தபோது அவர் உள்ளம் கசப்பால் நிறைந்திருந்தது.

நெஞ்சில் பொருளிலா விம்மலொன்று எழ நடந்து மேலும் அகன்று பாதையின் விளிம்பை அடைந்து அங்கிருந்த ஏவலனிடம் "அங்கநாட்டு அரசியும் மைந்தனும் எதுவரை வந்துள்ளனர்?" என்றார். "இறுதிச்செய்தி அவர்கள் முதற்காவல்மாடத்தை அடைந்துவிட்டதை சொன்னது" என்றான் காவலர்தலைவன். சுப்ரதர் கைகளைக் கட்டியபடி விண்ணில் ஒவ்வொன்றாக முழுத்து எழத்தொடங்கியிருந்த விண்மீன்களைப் பார்த்தபடி நின்றார். அங்கே இருந்து மீளும்போது தவச்சாலையிலிருந்து வரும் முனிவர்போல் பிறிதொருவராக ஆகியிருப்போம் என்று தோன்றியது.

அங்கநாட்டின் தெருக்களும் அந்தணர்மையங்களும் அயன்மை கொண்டிருக்கும். மனையாட்டியும் மைந்தரும்கூட எவரோ என்று ஆகியிருக்கக் கூடும்.

மடங்கர் சொன்னார்: இடியோசை மின்துடிப்புடன் நிறைந்திருந்த வானின் கீழே போரிட்ட படையின் உடல்வெப்பத்திலிருந்து மழையீரம் நீராவியென எழுந்து பரவியது. வியர்வையின் உப்புமணம் அதில் நிறைந்திருந்தது. மானுட உடலின் மணம் அது. காமத்தில் இனிதாவது. விழவுகளில் உளம் கிளரச் செய்வது. ஒவ்வாதவரிடம் உமட்டல் வரவழைப்பது. அக்கணத்தில் ஒருகணம் அது உளவிலக்கை ஏற்படுத்தி கொல்லத்தூண்டியது. மறுகணமே ஆரத்தழுவி உடல் சேர்க்க உந்தியது. குருதியின் மணம் ஆயினும் குருதியில் இருக்கும் எரிவீச்சம் அதிலில்லை. அதிலிருந்தது ஒரு கனிவு. குருதி அசைவிலாது நின்று மெல்லத் தெளிந்து மேலே ஊறி வந்தது போன்ற தூய்மை.

ஒவ்வொரு படைவீரரும் அங்கே கொல்வதனூடாக பிறிதொருவருடன் உறவாடினர். வீழ்வதனூடாக பிறருடன் கலந்தனர். வீழ்ந்தவர்கள் அக்கணம் வரை கொண்டிருந்த அனைத்து அடையாளங்களையும் துறந்து ஒருவரோடொருவர் தழுவி மண்பற்றிக் கிடந்தனர். அவர்கள் மேல் கால்களும் சகடங்களும் ஓடின. அவர்களது இறுதி மூச்சுக்கு மீதாக படைக்களத்தின் பூசலோசை நிறைந்திருந்தது. அதற்குமேல் மழை நின்று அசைந்தது. அதற்குள் அம்புகள் சீறிச்சென்றன. அப்பால் விண்ணிலிருந்து இமையா விழியர் அதை நோக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு சொல் உரைத்தபோது அது கீழிருப்போரில் ஓர் எண்ணமென எழுந்தது. அதற்கேற்ப போரின் நிலை மாறியது. முகில்நிரைகளின்மேல்

அமர்ந்தபடி கந்தர்வர்கள் போரை நோக்கிக்கொண்டிருந்தனர். அந்தப் பூசலோசையை இசையெனக் கேட்டனர். அறிக, உரிய தொலைவு இருந்தால் எந்த ஓசையும் இனியதே!

தோழர்களே, கர்ணனின் அம்புகள் பட்டு விழுந்த பீமனையும் களத்தில் உளமுடைந்து நின்ற யுதிஷ்டிரனையும் படைவீரர்கள் பற்றி இழுத்து படைப்பின்னணிக்கு கொண்டுசென்றனர். சர்வதனும் சுதசோமனும் வந்து இரு கைகளையும் பற்றி இழுத்தபோது "விடுங்கள் என்னை! அகலுங்கள். அறிவிலிகளே! விலகுக!" என்று நரம்புகள் புடைக்கக் கூவி கை சுழற்றி இருவரையும் தூக்கி அப்பாலிட்டபின் ஓங்கி நிலத்தில் உமிழ்ந்து எடை மிக்க காலடிகளை வைத்து பின்னணிக்குச் சென்றான் பீமன். செல்லும் ஒவ்வொரு அடிக்கும் உள்ளத்தின் ஆற்றல் வார்ந்து ஒழிய தள்ளாடி முழந்தாள் மடிந்து நிலத்தில் விழுந்தான்.

சற்று அப்பால் யுதிஷ்டிரன் தன் இரு மைந்தர்களாலும் இழுத்து பின்னுக்கு கொண்டுசெல்லப்பட்டார். பிரதிவிந்தியன் கையசைவால் பாண்டவ மணிமுடியை எடுத்துவர ஆணையிட அதை கண்டுவிட்ட யுதிஷ்டிரன் சீற்றத்துடன் திரும்பி "தொடாதே அதை! அது அங்கு கிடக்கட்டும். ஆம், அங்கேயே கிடக்கும் அது. அவ்விழிமகன் அதை எடுத்துச் சென்று தன் தோழனின் தலையில் சூட்டட்டும். இரு பேடிகளின் தமையன் ஆனேன் என உலகு அறியட்டும். அப்பேடிகள் வேண்டுமென்றால் அதை எடுத்து சூடிக்கொள்ளட்டும்" என்று கூவினார். மூச்சிரைக்க "இனி அதை நான் சூட வேண்டுமென்றால் அவன் குருதியால் அதை கழுவவேண்டும். அவன் குருதி நனையாமல் அதை இனி நான் தொடமாட்டேன். தெய்வங்கள் மேல் ஆணை! மூதாதையர் மேல் ஆணை! இனி

அவன் குருதி நனையாது பாண்டவர்களுக்கு மணிமுடி இல்லை. இது என்னுள் உறையும் இருள் தெய்வங்கள்மேல் தொட்டு நான் இடும் ஆணை!" என்று குழறியபின் தளர்ந்து நிலத்தில் அமர்ந்தார்.

அவரை பிரதிவிந்தியனும் யௌதேயனும் தூக்கி கொண்டுசென்றார்கள். அவர் விம்மியபடி அதிர்ந்து பின்னர் மெல்ல தளர்ந்தார். அவருடைய கைகள் தரையில் இழுபட்டபடியே சென்றன. அவர் உடலில் ஓர் வலிப்பு உருவானது. மருத்துவர் அவரை நோக்கி ஓடிவந்து சூழ்ந்தனர். ஒருவர் மரவுரியை விரிக்க அதில் அவரை கிடத்தினர். அவரை தூக்கிக்கொண்டு செல்ல யௌதேயன் "தெய்வங்களே!" என முனகியபடி அமர்ந்தான். பிரதிவிந்தியன் அந்த மணிமுடியை எடுத்துக்கொண்டுவரும்படி ஏவலருக்கு கையசைவால் ஆணையிட்டான். ஓர் ஏவலன் சென்று அதை எடுத்துவந்தான். அது அம்புகள் பட்டு உருக்குலைந்திருந்தது. ஓர் ஊன்துண்டுபோல அவ்வீரனின் கையில் இருந்தது. பிரதிவிந்தியன் அதை வாங்கி நோக்கியபின் தன் கையில் வைத்துக்கொண்டான்.

பீமனின் அருகே வந்து குனிந்த சுதசோமன் "தந்தையே" என்றான். தலைதூக்காமலேயே ஓங்கி அவனை அறைந்தான் பீமன். வெடிப்போசை எழ நிலை தடுமாறிச் சரிந்து மண்ணில் விழுந்து எழுந்து அகன்றான் சுதசோமன். மறுபக்கம் நின்ற சர்வதன் உறுதியான காலடிகளுடன் பீமனை அணுகி "தந்தையே, எழுக!" என்றான். குருதியென சிவந்த விழிகளால் நிமிர்ந்து நோக்கி "என்ன சொல்லப்போகிறாய்? ஆறுதல் உரைகளா? ஊக்கச்சொற்களா? யாதவரின் அந்நூலை திரும்பக்கூறு. இவையனைத்தையும் முன்கண்டு யாக்கப்பட்டது

அது...” என்றான் பீமன். “ஆம், ஆறுதல்சொற்கள்தான்” என்றான் சர்வதன். “தாங்கள் வேண்டுமானால் என்னையும் அறையலாம். நான் தடுக்கப்போவதில்லை.”

அந்தத் துணிவு பீமனை மெல்ல தளரச்செய்தது. “சொல்” என்றான். “அவரிடம் தாங்கள் தோற்றதைப்பற்றி வருந்துகிறீர்கள் என்றால் மிதமிஞ்சிய ஆணவம் கொண்டிருக்கிறீர்கள் என்றே பொருள். வில்லுடன் மண்ணுக்கு வந்த இந்திரனின் மைந்தனே அஞ்சும் மாவீரனை இத்தனை பொழுது களத்தில் எதிர்த்து நின்றிருக்கிறீர்கள். இதற்கப்பால் இக்களத்தில் நீங்கள் அடைய விரும்புவதுதான் என்ன? அவ்வாறு விரும்பும் அளவுக்கு வீங்கிய வெற்று ஆணவம் கொண்டவரா நீங்கள்?” என்றான் சர்வதன். பீமன் விழிதழைத்து தாழ்ந்த குரலில் “நான் தோல்விக்காக துயருறவில்லை” என்றான். “பிறகு எதற்காக?” என்று சர்வதன் கேட்டான். “நான் தோல்விக்காக துயருறவில்லை” என்று மேலும் உரத்த குரலில் பீமன் சொன்னான். “நான் துயருறுவது பிறிதொன்றுக்காக.”

சுதசோமன் எழுந்து அருகே வந்து “அதை என்னால் உணரமுடிகிறது, தந்தையே” என்றான். “ஏனெனில் நானும் நீங்கள்தான்.” பீமன் அவனை நிமிர்ந்து நோக்க சுதசோமன் “அங்கர் உங்களுக்கு அளித்த கொடை உங்கள் உள்ளத்தை சிறுமைகொள்ளச் செய்கிறது. இதுநாள் வரை நீங்கள் எதையும் எவரிடமும் பெற்றிருக்கவில்லை. இன்று விழியிழந்த இரவலனுக்கு ஒற்றை நாணயத்தை சுண்டி எறிவதுபோல் உங்களுக்கு உயிரை அளித்திருக்கிறார் அவர். அவ்வுயிரை உடலில் சூடி நின்றிருக்க கூசுகிறீர்கள் அல்லவா?” என்றான். இரு மைந்தரையும் மாறி மாறி நோக்கியபின் பீமன் தாடை இறுகி அசைய பற்களை கடித்தான். சர்வதன் “ஆம், நானும்

அவ்வாறே எண்ணினேன். அக்களத்தில் தாங்கள் அடைந்த சிறுமையை ஒவ்வொரு தசையசைவிலும் கண்டேன். அது பெற்றுக்கொள்கையில் கைதாழ்பவனின் தன்னிழிவு" என்றான்.

"ஆம்" என்றபின் பீமன் தன் தலையை கைகளில் தாங்கி உடல் வளைத்து குனிந்தான். "புழுவினும் கீழானவனாக என்னை ஆக்கினான். என் தலைமேல் நடந்து சென்றான். இனி ஆணென இங்கு நிமிர்ந்து நின்றிருப்பதில் என்ன பொருள்?" சர்வதன் "எனில் உங்கள் கடமையை துறக்கவிருக்கிறீர்களா? போர்முகம் நின்று இறுதித்துளிக் குருதி வரை சமராடுவதல்லவா உங்கள் தன்னறம்?" என்றான். "என்னால் இனி படைக்கலம் எடுக்க முடியாதென்று தோன்றுகிறது. ஓர் உயிரை இனி என்னால் கொல்ல இயலுமா என்றே ஐயம்கொள்கிறேன்" என்றான் பீமன். "இல்லை, என்னால் இயலாது. நான் முற்றாக பின்னடைந்துவிட்டேன். நான் தொடங்கிய இடத்திற்கே மீண்டுவிட்டேன்."

"நான் வீரன் எனும் ஆணவத்தால் கொல்பவனல்ல. வெற்றிக்காக கொல்பவனுமல்ல. இப்புவியிலிருந்து எதையும் எடுத்துக்கொள்வதற்காக இங்கு போரிட வரவில்லை. இது என் கடன் என்பதற்காக மட்டுமே வந்தேன். எனை ஆளும் விசைகளுக்கு என்னை முற்றளித்து இங்கு சமராடுகிறேன்" என்று பீமன் சொன்னான். தன் எண்ணங்களை உரிய சொற்களாக மாற்றியதும் அவன் மெல்ல தளரத்தொடங்கினான். "ஒவ்வொரு முறை கதை சுழற்றி ஒரு தலையை அறைந்து உடைக்கையிலும் ஒருகணம்கூட நான் அச்செயலை திரும்பி எண்ணி நோக்குவதில்லை. எந்நிலையிலும் என் கையால் கொல்லப்பட்டவர்களுக்காக இரங்குவதுமில்லை. ஏனெனில் அவர்களால் கொல்லப்படுவதற்கு என் உயிரையும் கொண்டு

வைத்திருக்கிறேன். என் உயிரை காத்துக்கொள்வதற்கும் இங்கிருந்து மீள்வதற்கும் ஒருகணமேனும் விழைந்தேனெனில் மட்டுமே நான் அவர்களுக்காக இரங்கவும் பிழையுணர்வு கொள்ளவும் வேண்டும்."

"என்னை ஊழின் துளியென உணர்கிறேன், அவர்களையும் அவ்வாறே" என்றான் பீமன். "தந்தையே, இன்று களத்தில் அங்கர் முன் நின்றிருக்கையில் உங்கள் உயிருக்காக அஞ்சினீர்களா?" என்று சர்வதன் கேட்டான். பீமன் விழி தூக்கி அவனை ஓரிரு கணங்கள் நோக்கியபின் "நீயே கூறுக, உன் தந்தையை நீ எவ்வாறு அறிவாய் என்று நானும் உணர்கிறேன்" என்றான். "நீங்கள் ஒரு கணமும் அஞ்சவில்லை" என்று சர்வதன் சொன்னான். "உண்மையில் நீங்கள் அக்கணத்தில் சற்று அஞ்சக்கூடும் என்றுதான் உள்ளாழத்தில் நீங்களே எதிர்பார்த்தீர்கள். ஏன் ஒரு துளியும் அச்சம் எழவில்லை என்று எண்ணி வியந்தீர்கள்" என்றான் சர்வதன். பீமன் "ஆம்" என்றான்.

"ஏனெனில் அவர் உங்களை கொல்லமாட்டார் என்று அறிந்திருந்தீர்கள். அதை உங்கள் ஆழம் எப்போதும் உறுதியுடன் உணர்ந்திருந்தது என்று அறிந்திருந்தீர்கள். அது ஏன் என்றுதான் அப்போது வியந்தீர்கள். அந்த ஓரிரு கணங்களுக்குள் நீங்களே அஞ்சும் நெடுந்தொலைவுக்கு சென்று மீண்டீர்கள்" என்று சர்வதன் சொன்னான். தலைதாழ்த்தி "ஆம்" என்றான் பீமன். பின்னர் மீண்டும் விழி தூக்கி "இப்போது கூறுக. ஏன் அவன் என்னை கொல்லவில்லை? அவன் என்னை கொல்லமாட்டான் என்று ஏன் அறிந்திருந்தேன்?" என்றான். தன் இடக்கையை நீட்டி சர்வதனின் கையை பற்றிக்கொண்டு "நீ இக்கணம் என் மைந்தன் என்று நின்று அங்கிருந்து

பேசவில்லை. என் ஆழம் என்று இங்கு என் உடலுக்குள்ளிருந்து பேசுகிறாய்" என்றான்.

சர்வதன் குனிந்து நோக்கி "தந்தையே, அவ்வாறு அங்கரை அறிந்திருந்தமையால்தான் நீங்கள் ஆசிரியர் முன்னிலையிலும் ஆடுகளத்திலும் அவைநிறைவிலும் அவரை சிறுமை செய்தீர்கள். அல்ல எனில் உங்களிடமிருந்து அச்சொற்கள் எழுந்திருக்காது. நீங்கள் எந்நிலையிலும் பிறப்பு சொல்லி எவரையும் இழிவு செய்ததாக நான் அறிந்ததில்லை. உங்களை ஷத்ரியர் என நீங்கள் ஒருபோதும் எண்ணியதில்லை. அரக்கனின் தந்தையாக, வால்மானுடரின் குருதிகொண்டவராகவே கருதுகிறீர்கள்" என்றான். விழிசுருக்கி பீமன் அவனை நோக்கினான். சர்வதன் "நீங்கள் அறிந்திருந்தீர்கள், உங்கள் சொற்கள் அவரை எவ்வகையிலும் ஆழ்துயருக்கு கொண்டுசெல்லாதென்று. அவைச்சிறுமையை அவர் அடைவார், அதன் பொருட்டு கூசி தலைகுனிந்து நிற்பார், ஆழுள்ளத்தில் சினம் கொள்வார், பழிநிகர்க் குருதிக்கென எழுவார். ஆனால் உங்கள் சொற்களிலிருந்து ஒருபோதும் துயரோ வஞ்சமோ கொள்ளமாட்டார். முதல் நாள் முதற்சொல் எடுத்த கணம் முதல் அதை நீங்கள் அறிவீர்கள்" என்றான்.

பீமனின் உடல் நடுங்கத்தொடங்கியது. "ஆகவேதான் நீங்கள் அது குறித்து குற்றவுணர்வை அடையவேயில்லை. தந்தையே, முதல் இழிசொல்லை எடுத்த கணமே நீங்கள் அவர் விழிகளை சந்தித்திருப்பீர்கள். அவற்றிலிருந்து நீங்கள் உணர்ந்ததென்ன? அந்த உறுதிதான் இக்களத்தில் நீங்கள் அறிந்தது" என்றான் சர்வதன். பீமன் மேலும் நடுங்கிக்கொண்டிருந்தான். சர்வதன் "தந்தையே, அவர் தங்களுக்கு அளித்த கொடை இவ்வுயிர். அதை இனி தங்களால் மறுக்க இயலாது" என்றான். பீமன்

நோக்கு தழைத்தான். அவன் தசைகள் விம்மி அசைந்தன. “ஆயின், இந்த உயிர்க்கொடை அவர் அளித்த சிறிய கொடையென்று உணர்க! அதை விடப் பெரிய கொடை உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.”

பீமன் நிமிர்ந்து நோக்கினான். “உங்களுள் உறைந்த நுண்ணிய ஆணவம் ஒன்றை உடைத்துச் சென்றிருக்கிறார் அங்கர்” என்றான் சர்வதன். பீமன் சர்வதனை பார்த்தபோது ஒரு கணத்தில் முதுமைகொண்டவன் போலிருந்தான். “தந்தையே, நினைவுறுகிறீர்களா, முன்பு முதிரா இளமையில் நீங்கள் அஸ்தினபுரியின் அரசருக்கு அளித்த உயிர்க்கொடையை? நாங்கள் அதை கதையில்தான் கேட்டிருக்கிறோம். உங்கள் வேட்டைக்குடிலுக்கு வந்து அவரை கவ்விக்கொண்ட கரடியிடமிருந்து அவர் உயிரை காத்தீர்கள்.” பீமன் “ஆம்” என்றான். சர்வதன் கூற வருவதை முன்னரே அவன் உணர்ந்துவிட்டிருந்தான்.

“நாங்களிருவரும் உங்கள் வாழ்க்கையை மீளமீள நடித்துக்கொண்டிருப்பவர்கள். உங்கள் கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்கள். நீங்கள் ஒருகணம் வாழ்ந்த அனைத்து இடங்களிலும் நூறு வருடம் வாழ்ந்தவர்கள்” என்று சுதசோமன் சொன்னான். “அன்று நீங்கள் உணர்ந்ததென்ன என்று கண்முன் மலையை கதிரொளியில் பார்ப்பதுபோல் அறிகிறேன். நீங்கள் அகத்துள் தருக்கினீர்கள். இதோ என் கொடை என்று எண்ணினீர்கள்.” பீமன் அமைதியிழந்து அசைய “அவரை நீங்கள் வெல்ல விழைந்தீர்கள். அத்தருணத்தில் வென்றுவிட்டதாகக் கருதினீர்கள்” என்று சுதசோமன் சொன்னான். “இன்று நாம் எதை சொல்லமுடியும்?” என பீமன் முனகினான்.

“நீங்கள் அறிவீர்கள், உங்களுக்கு நிகரான தோள்வல்லமையும் உங்களுக்கு மேலான பேரளியும் கொண்டவர் அவர் என்று. மும்முடி சூடி பாரதவர்ஷத்தை ஆளும் பிறவித்தகுதி கொண்டவர் இப்புவியில் இன்று இருவரே. அங்கர் இல்லையெனில் அஸ்தினபுரியின் அரசர்” என்றான் சுதசோமன்.

பீமன் சற்று சினம்கொண்டு “என்ன சொல்கிறாய்?” என்றான். “இங்கு படைக்கலம் ஏந்தி பாண்டவர் தரப்பிலிருந்து போரிடும் ஒவ்வொருவரும் அறிந்த ஒன்றையே” என்று சுதசோமன் சொன்னான். “பொய்ச்சினம் காட்டி சொற்களை திருப்பவேண்டாம், தந்தையே. நீங்கள் அஸ்தினபுரியின் அரசரின் அகவிரிவை ஒவ்வொரு கணமும் உணர்ந்துகொண்டிருந்தீர்கள். அவர் உங்கள் மேல் காட்டிய பேரன்பினால் உங்களையே மீண்டும் மீண்டும் வென்று செல்வதைக் கண்டு உளம் உலைந்தீர்கள். அவரைக் கடந்து செல்ல உங்களுக்கிருந்த வழி உங்கள் தோள்வல்லமை ஒன்றே. அதற்கென தருணம் வந்தபோது அவ்வாறு வெளிப்பட்டீர்கள்.”

“உங்கள் உடலில் சொற்களில் விழிகளில் வெளிப்படவில்லையெனினும் தெய்வங்கள் அறியும் பாதை ஒன்றினூடாக உங்கள் எண்ணம் அவரை சென்றடைந்தது. இன்று நீங்கள் அடையும் இதே சிறுமையை ஏழுமடங்கு அன்று அவர் அடைந்தார். அங்கு தொடங்கியது இந்தப் போர்” என்றான் சுதசோமன். பீமன் “இத்தனை கடந்துசென்று நான் எண்ணுவதில்லை. இத்தனை எண்ணினால் ஒவ்வொன்றும் நாம் எண்ணியிராப் பொருள் கொள்கின்றன. பொருளின்மை வரை சென்று நின்றுவிடுகின்றன” என்றான். “இதை நீங்கள் உணரவேண்டும். இத்தருணத்தில் நீங்கள் அதை

முழுதுணர்வதன் மெய்மையே உங்களுக்கு அங்கர் அளித்த கொடை" என்று சுதசோமன் சொன்னான். "பெற்றுக்கொள்வதின் சிறுமை என்ன என்று அவர் காட்டினார். பிறரைவிட விரிந்தெழுவதனூடாக அடையும் ஆணவத்தால் அல்லவா நீங்கள் இத்தனை நாள் இங்கு வாழ்ந்தீர்கள்?"

"ஆம்" என்று பெருமூச்சின் ஒலியுடன் சொன்ன பீமன் மீண்டும் ஏதோ சொல்ல முயன்று கையசைத்து தலை தாழ்த்தி அதை ஒழிந்தான். சர்வதன் "தந்தையே, மூத்தவர் கூறியதற்கப்பால் ஒன்றும் நான் சொல்வதற்கில்லை. இக்களத்தில் உங்களுக்கு உங்கள் குடிமூத்தோர் ஒரு பேரறிவை வழங்கிச்சென்றிருக்கிறார் என்று உணருங்கள். இதில் சிறுமைகொள்ள ஏதுமில்லை. பொன்னோ நிலமோ பெறுவதில் சிறுமையுண்டு. அறிவைப் பெறுவது எந்நிலையிலும் பெருமையளிப்பதே" என்றான். பீமன் பெருமூச்சுகளுடன் மீண்டு வந்துகொண்டிருந்தான். இருவரும் அவனை நோக்கியபடி நின்றனர்.

பீமன் "ஆம்" என தனக்குத்தானே சொல்லிக்கொண்டபோது "உங்களை களத்தில் வெற்றுக் கையுடன் நிறுத்தி மீள்கையில் நீங்கள் இறுதியாக அவர் விழிகளை பார்த்தீர்களல்லவா?" என்றான் சர்வதன். "ஆம்" என்றான் பீமன். "அவ்வாறு நோக்காதொழிய எவராலும் இயலாது" என்றான் சர்வதன். "கூறுக, அவ்விழிகளில் இருந்தது வெற்றியின் மிதப்பா? உங்களுக்கு மேலாக தான் விரிந்தெழுந்ததன் ஆணவமா?" பீமன் "தெரியவில்லை. அவ்விழிகளை இதோ இந்தக் கூழாங்கல்போல் இத்தனை பருவடிவாக, இத்தனை அருகே என காண்கிறேன். அவற்றின் பொருள் எனக்கு புரியவில்லை" என்றான். "உங்களால் அவற்றை மதிப்பிட இயலாது.

வைரங்களை மதிப்பிடுவது பெருவணிகர்களால் மட்டுமே இயலும். அவர்கள் வைரங்களன்றி பிறிதெதையும் காணாத கண் கொண்டிருப்பார்கள்" என்று சர்வதன் சொன்னான். "ஒப்பிட்டு நோக்குங்கள். அந்த விழிகளை இதற்கு முன் எவ்வாறு எங்ஙனம் பார்த்திருக்கிறீர்கள்? எவரிடம்?"

பீமன் "அறியேன் ஆனால் நான் களத்தில் தளர்ந்து விழுகையில் ஒருகணம் மூத்த தந்தை திருதராஷ்டிரரின் நோக்கு அது என்று உணர்ந்தேன்" என்றான். சர்வதன் புன்னகைத்து "அவர் உங்கள் கனவுகளில் எப்போதும் நோக்கும் விழிகளுடன்தான் வருகிறார்" என்றான். "ஆம், இனிய கனிந்த நோக்குடன் மட்டுமே அவரை நான் பார்த்திருக்கிறேன். பெரும்பாலும் அதனூடாக அவருள் நோக்கியே உரையாடியிருக்கிறேன்" என்றான் பீமன். "எங்கள் கனவுகளிலும் அவர் விழிகளுடன்தான் வருகிறார்" என்றான் சர்வதன். "எண்ணுக, பிறிதெங்கும் அவ்விழிகளை நீங்கள் கண்டதில்லையா?"

"பிறிது ஓரிடத்தில்" என்று பீமன் சொன்னான். "இப்போது நீ இதை கேட்கையில் நான் உணர்கிறேன். நான் இளமையிலேயே பெருந்தோள் கொண்டவனாக இருந்தேன். என் தோள் குறித்து பெருமிதம் கொண்டிருந்தேன். முன்பு சதசிருங்கத்தின் ஏரிக்கரையில் பாறைகளைத் தூக்கி எறிந்து பிடித்து உடல் பயின்றுகொண்டிருக்கையில் சேற்றுப் பரப்பினூடாக ஒருவர் ஏறிவருவதை கண்டேன். மேலெழுந்த பாறை என் தோளில் விழுந்து என் உடலை அதிரச்செய்தது. அத்தனை தொலைவிலேயே அச்சமூட்டும் பேருருக்கொண்டவராக இருந்தார். அருகணைந்து விழிமலைத்து நின்ற என் கைகளைப்பற்றி சற்றே முறுக்கி தூக்கி தன் உடலுடன்

சேர்த்துக்கொண்டார். நான் அவர் அருகே குழவி எனத் தோன்றினேன்.”

“என்னை இரு தோள்களிலும் பற்றி மேலே தூக்கி குழவிபோல வீசிப்பிடித்து உரக்க நகைத்து இங்கு காட்டில் நல்லுணவில்லையா உனக்கு, உடல் மெலிந்திருக்கிறாயே என்றார். என்னை ஒருவர் உடல் மெலிந்திருக்கிறாய் என்று சொல்லக்கூடுமென்று அன்றுதான் உணர்ந்தேன். என்னுடன் அவர் முனிவர்களைக்காணவந்தார். அவர் யாரென்று அன்று அன்னையிடம் கேட்டேன். அவர்தான் பலாஹாஸ்வ மாமுனிவர் என்று அன்னை சொன்னார். ஒருநாள் எங்களுடன் சதசிருங்கத்தில் இருந்தபின் அவர் மேலும் வடக்காக கிளம்பிச்சென்றார். அந்த முதல் தொடுகைக்குப்பின் அவர் என்னை தொடவில்லை. கிளம்புவதற்குமுன் என்னை நோக்காமல் வேறெங்கோ நோக்கி தோளின் ஆற்றல் பிறிதொரு ஆற்றலின் வெளிப்பாடு மட்டுமே. இதை ஒவ்வொரு கணமும் சொல்லிக்கொண்டிரு என்றார்.”

“நான் அன்று அச்சொற்களை செவிகொள்ளவில்லை. அவர் என்னை பார்ப்பார் என்றும் இனிய சொல் எதையேனும் உரைப்பார் என்றும் எதிர்பார்த்தேன். அவர் திரும்பாமல் நடந்து அப்பால் சென்று மறைந்தார். பிறிதொரு முறையும் அவரை நான் பார்த்ததில்லை. ஆனால் அந்த நோக்கை இன்றும் நினைவுகூர்கிறேன். அச்சொற்கள் என்னுள் இருந்துகொண்டே இருக்கின்றன. பலநூறு முறை அவர் விழிகள் என் கனவில் வந்திருக்கின்றன. இன்று அங்கனிடம் நான் கண்டது அவ்விழிகளை எனத் தோன்றுகிறது” என்றான் பீமன்.

“பிறகென்ன? இக்கொடை உங்களை இப்போது சிறுமை செய்கிறதா என்ன? முலைப்பால் குழவியை என அது

உங்களை வந்தடைந்திருக்கிறது. பெறற்கரிய ஒன்றை பெற்று பொலிவுற்றிருக்கிறீர்கள், தந்தையே. எண்ணுக, பிறிதொரு நாள் நீங்கள் தனிமையில் உங்கள் உடலை நிறைத்திருக்கும் அமுதென அவர் அளித்த இவ்வுயிரை உணர்வீர்கள்! அன்று நெஞ்சில் கைசேர்த்து விழிநீர்விட்டு அவருக்கென ஏங்குவீர்கள். இந்நாள் உங்கள் வாழ்வு நிறைவுற்ற தருணங்களில் ஒன்றென்று அறிக!" என்றான் சர்வதன்.

உடல் நடுக்குற மூச்சு திணற பீமன் நோக்கிக்கொண்டிருந்தான். சுதசோமன் "போருக்கென எழுக... இந்நாளில் நாம் இயற்றவேண்டியவை பல" என்றான். "ஆம், போர்புரிந்தாக வேண்டும். அது என் கடன்" என்று பீமன் சொன்னான். "உங்களுக்காக மட்டுமல்ல. இப்போர் நீங்கள் அறியாத வேறு பலவற்றுக்காக" என்று சர்வதன் சொன்னான். "மீண்டும் ஒருவேளை இக்களத்திலேயே நீங்கள் அவரை சந்திக்கக்கூடும். அப்போதும் ஒருகணம் உங்கள் வில் தாழ வேண்டியதில்லை. தாழ்வதை அவர் விரும்பப்போவதும் இல்லை. இந்தப் பொற்கணத்திலிருந்து மேலும் ஒளியும் ஆற்றலும் கொண்டவராக எழுவதை அவர் விரும்புவார். எழுக!" என்றான் சர்வதன்.

பீமன் எழுந்து தன் இரு கைகளையும் விரித்தான். விழி கனிந்து நகைத்தபடி "வருக!" என்றான். சர்வதன் புன்னகைத்தபடி அருகணைந்தான். அவனை எட்டிப்பற்றி தன் தோளுடன் சேர்த்துக்கொண்டு "இத்தகைய தருணங்களில்தான் தந்தையர் தெய்வங்களால் வாழ்த்தப்படுவதாக உணர்கிறார்கள். மைந்தரால் முற்றிலும் புரிந்துகொள்ளப்படும் தந்தையர்போல் நல்லூழ் கொண்டவர் எவருமில்லை. மானுடருக்கு தெய்வங்கள் அளிக்கும் மிகப்பெரும் கொடை என்பது அதுவே.

என்னை உங்கள் உடல்களில் முற்றிலும் பகிர்ந்துவிட்டேன் என்று தோன்றுகிறது" என்றபின் உரக்க நகைத்து "விந்தையானதோர் எண்ணம்தான் இது. உயிர் வாழ்க்கை போதுமென்று தோன்றும் தருணங்களில்தான் நாம் வாழ்வை பொருள்கொண்டதாக உணர்கிறோம்" என்றான்.

"தங்கள் மொழியில் இத்தகைய சொற்கள் எழுவது மகிழ்வளிக்கிறது. இன்னும் இதைப்போன்ற சில சொற்களினூடாக தாங்கள் தங்கள் மூத்தவரை நெருங்கிவிடக்கூடும்" என்று சர்வதன் சொன்னான். சிரிக்காமல் அவன் சொன்னதனால் திகைத்துப்பார்த்த பீமன் அவன் விழிகளிலிருந்த சிரிப்பைக் கண்டு "அறிவிலி!" என்று சொல்லி நகைத்தபடி அவன் தோளை ஓங்கி அறைந்தான். எளிதாக அதை ஒழிந்து கையால் மறு அடியைத் தடுத்து சர்வதன் நகைக்க சுதசோமன் உடன் இணைந்துகொண்டான்.

இருட்கனி - 27

பீமன் மீண்டும் தேரில் ஏறிக்கொள்ள சர்வதனும் சுதசோமனும் இருபுறமும் தங்கள் தேர்களில் அவனை தொடர்ந்தனர். படைமுகப்பை நோக்கி அவர்கள் செல்கையிலேயே மிகத் தொலைவில் அர்ஜுனன் மீண்டும் கர்ணனை எதிர்கொண்ட செய்தியை அறிவித்தன முரசுகள். திருஷ்டத்யும்னனின் ஆணை காற்றில் அலைமோதியது. "ஒருங்கிணையுங்கள்! ஒருங்கிணையுங்கள்! ஒவ்வொருவரும் பிறருடன் ஒருங்கிணைந்துகொள்ளுங்கள். வேல்முனைச்சூழ்கை திரள்க! நூற்றுவரும் ஆயிரத்தோரும் வேல்முனையின் கூர் ஆகுக! முதன்மை வீரர் பின் பிறர் திரள்க!"

ஆனால் கௌரவப் படையினர் முதலை வடிவை அகற்றி பிறைவடிவை மேற்கொண்டனர். பிறையின் வலது எல்லையில் கிருதவர்மனின் படைத்துணையுடன் சல்யரும் இடது எல்லையில் அஸ்வத்தாமன் துணையுடன் கிருபரும் தங்கள் தேர்ப்படைகளை நடத்த பிறை நடுவே கர்ணன் மைந்தருடன் திகழ்ந்தான். சிறு துண்டுகளாகச் சிதறி ஒன்றுடன் ஒன்று முட்டி இலக்கழிந்து கொந்தளித்துக்கொண்டிருந்த பாண்டவப் படையை இரு கைகளையும் விரித்து அள்ள முயல்வதுபோல் கௌரவப் படை அணுகி வந்தது. பாண்டவப் படை அதன் அணைப்பில் சிக்கி முற்றாக சிதறி அழியக்கூடுமென்று தேர்மேடையில் நின்று தலைதிருப்பி நோக்கினாலே உணரமுடிந்தது.

வெற்றுத்திரளாக கூச்சலிட்டுக்கொண்டிருந்த பாண்டவப் படையிலிருந்து மிக அரிதாகவே அம்புகள் எழுந்தன. ஆனால் கௌரவப் படையிலிருந்து கடல்அலையிலிருந்து துமியென அம்புகள் எழுந்து வளைந்து விழுந்துகொண்டிருந்தன. அவை தொட்ட இடங்களிலெல்லாம் பாண்டவப் படைவீரர்கள் நிலம் தொட விழுந்து வெற்றிடம் உருவாகியது. அவ்வெற்றிடத்தில் நிலைதடுமாறிக்கொண்டிருந்த பிற வீரர்கள் ததும்பி வந்து நிரப்பினர். அவர்கள் ஒருவரோடொருவர் முட்டிமோதி நிலையழிந்தனர். கால்கள் சிக்கியே பலர் விழுந்தனர். விழுந்தவர்கள் மேல் பிறர் நடக்க புரண்டு எழுவதற்குள் யானைகளின் கீழ் மிதிபட்டனர்.

“பாண்டவர்களை நடுவே உடையுங்கள்... இரு பகுதிகளாக்குங்கள்...” என்று சகுனி கர்ணனைச் சூழ்ந்து முன்னெழுந்துகொண்டிருந்த கௌரவப் படையினருக்கு ஆணையிட்டார். “நாம் அவர்களை நடுவே உடைக்கவேண்டும்.

அது ஒன்றே வழி” என்று பீமன் சொன்னான். “அவர்களது சூழ்கையின் நடுவே இடைவெளி உருவானால் இருமருங்கும் எழுந்து சுற்றிவளைக்க முயலும் அஸ்வத்தாமனும் சல்யரும் நின்றுவிடுவார்கள். இல்லையேல் இன்னும் சிறுபொழுதில் நாம் வளைக்கப்பட்டுவிடுவோம்.” ஆனால் அங்கே கொப்பளித்துக்கொண்டிருந்த பாண்டவப் படைகளை எவ்வண்ணம் ஓர் அணியென்றாக்கி வழிநடத்துவது என்று சர்வதன் திகைத்தான்.

கர்ணன் அர்ஜுனனால் நிறுத்தப்பட்டுவிட்டான் என்று அறிவித்தன முரசுகள். அதை வெறும் விழிகளாலேயே நோக்கமுடிந்தது. அர்ஜுனனின் அம்புகள் கர்ணனின் மைந்தர்களை அறைந்து பின்னகர்த்த கௌரவப் படை விசையழிந்து கர்ணனுக்குப் பின்னால் அரைவட்டமாக அரண் அமைத்துச் சூழ்ந்தது. அவ்வாறு ஒரு தேக்கம் உருவானபோது கௌரவப் படை இரு பக்கமும் பிதுங்கி நீளம் மிகுந்தது. சல்யரும் கிருபரும் நடத்திய ஓரத்துப்படைகளில் செறிவு மிகுந்தது. அவர்கள் பாண்டவப் படையை வளைக்கும் விசை கூடிச்சென்றது.

அவர்களை துணைத்துச்சென்ற கிருதவர்மனின் யாதவப் படைகளும் அஸ்வத்தாமனின் பாஞ்சாலப் படையினரும் பாண்டவர்களை பக்கவாட்டில் தாக்க திரும்பி அவர்களை எதிர்கொண்டமையால் பாண்டவப் படை ஒரு பெரிய வட்டமாக ஆகியது. எந்த வட்டத்திலும் என மையம் உருவாகியது. எந்த இயக்க மையமும் என அது சுழியானது. எச்சுழியையும்போல அது அவ்வட்டத்தை தூக்கிச் சுழற்றியது. அதன் விளிம்பு அழிந்துகொண்டே இருக்க இயல்பாக உருவான சுழிமையத்தில்

என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்றே அறியாத வீரர்கள் தடுமாறிக்கொண்டிருந்தனர்.

திருஷ்டத்யும்னனின் ஆணை பதறிக்கொண்டிருந்தது. "ஒருங்கு சேர்க! ஒவ்வொருவரும் பிறிதொருவருடன் இணைந்துகொள்க! ஆணைகளை செவி கூர்க! அருகிருக்கும் நூற்றுவரின் ஆணைகளை ஒவ்வொருவரும் செவி கூர்க! ஒருங்கிணைக!" ஆனால் எவரும் அதை கேட்டதுபோல் தெரியவில்லை. பொருளில்லாமல் அங்குமிங்கும் ஓடினர். அம்புபட்டு விழுந்தனர். பாண்டவர்களின் அம்புகள் பாண்டவர்கள் மீதே விழுந்து அவர்களை கொன்றன. "பேரழிவின் கணம், தந்தையே" என்றான் சர்வதன்.

பீமன் தன் இடையிலிருந்து சங்கை எடுத்து மும்முறை ஊதினான். எங்கிருந்தோ "காற்றின் மைந்தர் வெல்க! பெருந்தோள் மல்லர் வெல்க! பீமசேனன் வெல்க!" என்று ஒரு குரல் எழுந்தது. அதைத் தொடர்ந்து "பீமசேனன் வெல்க! இளைய பாண்டவர் வெல்க! மாருதர் வெல்க!" என படைவீரர்களிடம் வாழ்த்தொலி எழுந்தது. அவ்வொலிக்காக செவிகூர்ந்தவர்கள்போல வீரர்கள் ஒற்றைக்குரலில் அவ்வாழ்த்தொலியை ஏற்றொலிக்க கடலில் அலை உருவாவதுபோல் பாண்டவப் படையிலிருந்து ஓர் முன்னெழுச்சி தோன்றியது. சிதறிப்பரந்திருந்த பாண்டவப் படையினர் போர்க்குரல் எழுப்பியபடி ஒருங்கிணைந்து ஒற்றைச்சரடென்றாயினர்.

விழிநோக்கவே அச்சரடு பருமன்கொண்டு திரண்டு கோட்டைச்சுவர் வடிவாகியது. சுவர் மடிந்து குவிந்து கூர்முனையாகி வேல்முனை வடிவை அடைந்தது. விண்ணில் பறக்கும் பறவைக்கூட்டங்களுக்குரியது அச்சூழ்கை. அதுவே

ஒரு பறக்கும் பறவை வடிவம். அதன் முகப்பில் நீட்டிய அலகு என பீமன் சென்றான். பாண்டவப் படையினர் ஊக்கம்கொண்டு வாழ்த்துரைத்தபடியும் கூச்சலிட்டபடியும் நாணோசை எழுப்பியபடியும் அவன் பின்னால் பெருகிச் சென்றார்கள். அவர்கள் ஆணைகளால் அன்றி தங்கள் தன்னியல்பான உணர்வெழுச்சியினால் அவ்வடிவை அடைந்திருந்தார்கள்.

பீமன் தன் தேரை விரைந்து செலுத்தி அப்பெருக்கின் முன்னால் சென்றான். அவ்வாறு படையின் ஒரு பகுதியில் ஓர் உணர்வெழுச்சி தோன்றியமை முழுப் படையினருக்கும் ஊக்கமூட்டுவதாக இருந்தது. உளச்சோர்வின் எல்லையில் ஊக்கத்திற்காச் செவிகூர்வதும் ஊக்கத்தின் உச்சியில் உளச்சோர்வின் துளிக்காக துழாவி அலைவதும் மானுட இயல்பென்பதால் ஒவ்வொருவரும் அதில் இணைந்துகொண்டனர். பீமன் முதன்மைகொண்டு எழுந்து கௌரவப் படையை சந்தித்தபோது அவனுக்குப் பின்னால் மழைநீர் மலையிறங்குவதுபோல பல திசைகளிலிருந்தும் திரண்ட பாண்டவப் படைப்பெருக்கு விற்களும் வேல்களுமாக ஒழுகி வந்தது.

“அணிவகுக்கப்படாத திரள், தந்தையே” என்றான் சர்வதன். “ஆம், ஆனால் எதிரிகளும் அணிவகுக்கப்படாதவர்களாகவே இருக்கிறார்கள்” என்றான் பீமன். “இத்தருணத்தில் ஒரு செறுத்துநிற்பு மட்டுமே இயல்வது. அது நிகழட்டும்.” அம்புகளைத் தொடுத்தபடி பீமன் கௌரவப் படைக்குள் புகுந்தான். மிக அப்பால் மறு எல்லையில் சாத்யகி அஸ்வத்தாமனை எதிர்கொள்ளும் செய்தியை அறிவித்தன முரசுகள். ஒவ்வொருவரும் தங்கள் தருணத்திற்கும் வாய்ப்பிற்கும் ஏற்ப போர்த்திட்டங்களை வகுத்துக்கொண்டு

போரிட்டனர். எங்கும் ஒருங்கிணைக்கும் ஆணைகள் எதுவும் செவிகொள்ளப்படவில்லை. திருஷ்டத்யும்னன் என்ன நிகழ்கிறதென்றே தெரியாதவன்போல் "ஒருங்கிணைக! ஒருங்கிணைக!" என்று கூவிக்கொண்டிருந்தான். நோய்ப் படுக்கையில் எழும் அரற்றலென அது ஒலித்தது.

பீமன் தொலைவில் அரவுக்கொடியை கண்டான். "செல்க! செல்க!" என்று கைகாட்ட அவன் தேர் எழுந்து சென்று துரியோதனனையும் துச்சாதனனையும் சந்தித்தது. அம்புகளைத் தொடுத்தபடி சென்று அவன் துரியோதனன் முன்னால் எழுந்தான். துரியோதனன் பீமன் அவ்வண்ணம் எழுந்து வருவான் என்பதை எதிர்பார்க்கவில்லை. சற்று முன்பு வரை அவனை வந்தடைந்த செய்தி பீமன் உடல்குலைந்து உளம்சிதைந்து எங்கோ விழுந்திருக்கிறான் என்பதே. பாண்டவப் படை அலைசுருண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டபோதுகூட தேர்களில் சர்வதனும் சுதசோமனும் இருக்கக்கூடும் என்றே அவன் எண்ணினான். சங்கை முழக்கியபடி விசைகொண்டு எழுந்த தேரில் அலைமேல் எழுவதுபோல் அணைந்த பீமன் அவன் உள்ளத்தை மலைக்கச்செய்தான்.

பீமன் வருவதைக் கண்டதும் கை செயலிழக்க துரியோதனன் வில் தாழ்த்தினான். அவன் பின்னால் நின்ற துச்சகன் "இவர் இறந்துவிட்டார் என்றார்களே!" என்றான். துச்சாதனன் "இழிவிலிருந்து மேலும் சீற்றம் கொண்டிருக்கிறான்" என்றான். துரியோதனன் உளம் மீண்டு உரக்க நகைத்து "நம் கையால் இறப்பது போலும் இவன் ஊழ்... தொடர்க என்னை!" என்று ஆணையிட்டு அம்புகளால் தாக்கியபடி முன்னால் எழுந்தான். அம்புகளின் எல்லைகள் தொட்டுக்கொண்டபோது விண்ணில்

உலோக மின்னல்களாலான வளைவு ஒன்று உருவாகியது. சிலைக்கும், சிலம்பும், சிறகு துடித்து உதிரும், ஒளிர்ந்தெழும் சிறு பறவைகளினாலான வளைவுக்குக் கீழே விலங்குகள்போல் பொருளிலாது கூச்சலிட்டபடி அவர்கள் போரிட்டனர்.

துச்சாதனன் உரத்த குரலில் "மந்தனே, நீ அடைந்த சிறுமை போதவில்லை என்று தேடி வந்தாயா? இக்களத்தில் உன்னை இனி என்ன சிறுமை செய்யவேண்டியிருக்கிறது? சொல், அதை செய்கிறேன்" என்றான். துரியோதனன் "பேடி என்றானான். இனி பெண்ணென்றாக்கி திருப்பி அனுப்புவோம்" என்றான். ஆனால் பீமனின் முகத்தில் அச்சொற்கள் எந்த அலையையும் எழுப்பவில்லை என்று அவர்கள் கண்டார்கள். புன்னகையுடன், பதறாத கைகளுடன் அவன் போரிட்டான். அவன் அம்புகள் வந்து கௌரவர்களின் தேர்களை அதிரவைத்தன. துச்சகனின் தேர்த்தட்டை அறைந்து அதை நிலைபிறழவைத்து அதை திருப்பும் பொருட்டு திரும்பிய பாகனின் தலையை கொய்தெறிந்தது பீமனின் அம்பு. அடுத்த அம்பு வந்து தேர்த்தட்டில் பாய்வதற்குள் துச்சகன் பின்னடைந்தான்.

துர்முகனின் கொடி அறுந்தது. அவன் வெறிகொண்டு கூவியபடி எடுத்த பேரம்பு நாணை அடைவதற்குள் உடைந்தது. சீற்றத்துடன் அவன் ஆவநாழிக்கு கை நீட்டியபோது நாண் அறுந்தது. அவன் தேர்த்தட்டில் முழந்தாளிட்டு அமர்ந்து பிறிதொரு வில் தேர்வதற்குள் வில்லும் உடைந்தது. இன்னொரு வில்லுடன் அவன் எழுந்தபோது தோள்கவசம் உடைந்தது. தன்னை காத்துக்கொள்ள தேர்த்தூணருகே ஒதுங்க நெஞ்சக் கவசம் பிளந்து விழுந்தது. "இளையோனே!" என்று கூவியபடி துச்சாதனன் அவன் உதவிக்கு வந்தான். அதற்குள் சர்வதனும் சுதசோமனும் இருபுறமும் நின்று துரியோதனனை

தாக்க அவன் பின்னடைந்தான். எக்கணமும் பீமன் திரும்பி துரியோதனனை பின்னின்று தாக்கும் நிலை எழுந்தது. அவன் புறத்தைக் காக்கும்பொருட்டு துச்சாதனன் முன்னகர்ந்தாக வேண்டியிருந்தது.

நிலைதடுமாறி இருமருங்கும் நோக்கியபின் முடிவெடுத்து வில்லுடன் முன்னேறும்போதே சுஜாதனை நோக்கி "செல்க... மூத்தவரை புறம் காத்துக்கொள்க!" என்று துச்சாதனன் ஆணையிட்டான். சுஜாதன் அம்புகளைத் தொடுத்தபடி துச்சகனின் பின்புறம் வந்தான். மறுஎல்லையில் வில்லுடன் போரிட்ட விகடாननனை நோக்கி "மூத்தவரை புறம் காக்க... வில்லவர் இன்றி புறம் அமையலாகாது" என்று கூவியபடி துச்சாதனன் அம்புகளால் சர்வதனை அறைந்தான். விகடாननன் வந்து துர்முகனின் புறத்தை காத்தான். சுபாகு மிக அப்பால் பீமனைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த உதிரி வீரர்களை அம்புகளால் அறைந்து அவர்கள் சூழ்ந்துகொள்ளாமல் தடுத்தான்.

மிக விரைவிலேயே இணைநிலை கூடிவிட்டது. அதுவரை அங்கிருந்த மேலேகலும் கீழிறங்கலும் நிலைத்து அவர்கள் வெல்வதும் வீழ்வதுமின்றி அம்புகளை அம்புகளால் அறைந்துகொண்டு என்றுமென அங்கேயே நின்றிருந்தனர். இமைப்பில்கூட தோல்வி அணுகிவிடக்கூடும் என்பதுபோல, நரம்புகள் அனைத்தும் உச்சத்தில் இறுகிநின்றிருக்க, ஒவ்வொரு கணமும் முழு வாழ்வென்றே விரிய, ஒவ்வொரு புலனும் வானுருக்கொண்டு அகல, ஒவ்வொரு அம்பையும் அதன் ஒவ்வொரு கணத்தையும் கண்டு, ஓர் அம்புவீச்சை ஓராயிரம் அம்புகளின் நீள்தொடரெனக் கண்டு, அதன் எய்துதலையும் இழிதலையும் உளம்சென்று தான் நடித்து மீள, அங்கே அவர்கள்

திகழ்ந்த அக்கணமே மானுடருக்கு தெய்வங்கள் மெய்யென அருளியது.

தோழரே அறிக, அவ்வுச்சத்தை அஞ்சியே சிறியவற்றை இயற்றுகிறார்கள்! உளம்ஒன்றாச் செயல்களாலான அன்றாடத்தைச் சமைத்து சூழப் பரப்பி அதில் திளைக்கிறார்கள். சலிப்பென்பது உச்சத்தை நாடும் உளஆழம் கொள்ளும் விழைவே. உச்சங்களுக்காகவே மானுட உள்ளமும் உடலும் படைக்கப்பட்டுள்ளன. உச்சங்களிலேயே மானுடன் கொண்டுள்ள திறன்கள் அனைத்தும் எழுந்து பொருள் சூடுகின்றன. உச்சங்களில் வாழும் வாழ்க்கையை மட்டுமே மானுடர் தாங்களும் வாழ்வென கணக்கிடுகிறார்கள். நூறாண்டு வாழ்பவர்கள்கூட வாழ்ந்ததை ஒருசில நாட்களென்றே கருதிக்கொள்கிறார்கள். போர் உச்சம். ஏனென்றால் அதனருகே இறப்பு நின்றிருக்கிறது. ஊழ்கம் பிறிதொரு உச்சம். அதனருகே முடிவிலி நின்றிருக்கிறது. இறப்பு என்பது முடிவிலியின் இருட்தோற்றம்.

துர்முகன் எண்ணியிராக் கணத்தில் புது விசை ஒன்றை அடைந்து அம்புகளை மேலும் வீச்சுடன் செலுத்தியபடி பீமனை நோக்கி சென்றான். அந்தச் சிறுமுன்னேற்றத்தால் பீமன் நிலைகுலைந்தான். முழு நிகர்நிலையை அடைந்த பொருள் ஒரு மணற்பருவால் அலைக்கழிவதுபோல. அவன் அம்புகள் இலக்கழிய துரியோதனனின் அம்புகள் வந்து அவன் தேர்மகுடத்தையும் கொடியையும் உடைத்தன. அதைக் கண்டு பாண்டவப் படையினர் கூச்சலிட்டார்கள். அவ்வோசை மேலும் அவர்களை தளர்த்த அவர்களின் நெஞ்சக் கவசங்களை அறைந்து உடைத்து ஆழப் பாய்ந்து தேரிலிருந்து தூக்கி வீசின துச்சாதனனின் அம்புகள்.

துச்சாதனனின் பேருருவ அரக்கர்களுக்கு நிகரான தோள்வல்லமை ஒவ்வொரு அம்பிலும் இருந்தது. அவனுடைய அம்புகள் முழுவாரை அளவு நீளம் கொண்டிருந்தன. அவை சென்று பட்ட வீரர்களின் உடல்களைக் கடந்துசென்று நிலத்திலோ தேர்த்தட்டிலோ ஊன்றி நின்றன. அவர்கள் அவற்றால் தாங்கப்பட்டு தலைதொய்ந்து கைகள் தளர்ந்து குருதி ஊறி மூக்கிலும் வாயிலும் வழிய கால் நிலம் தொடாது நின்றனர். அவன் அம்பு இரண்டு குதிரைகளை ஒன்றாகக் கோத்தது. அணுகி நின்று போரிட்ட மூன்று காலாள்வீரர்களை சேர்த்து மண்ணில் அறைந்தது. தேர்களின் இரு தூண்களை உடைத்தெறிந்தது. யானைகளையும் கடந்து அப்பால் சென்று குருதிதோய்ந்த கழுகின் அலகென எட்டிப்பார்த்தது.

பீமன் பின்னடையத் தொடங்கினான். அவனுக்கு பின்துணை அளித்தபடியே சர்வதனும் சுதசோமனும் பின்னடைந்தார்கள். எக்கணமும் கதையுடன் துரியோதனன் பாய்ந்தெழுந்து பீமனின் தலையை உடைக்கக் கூடும் என்று தோன்றியது. ஆனால் பீமன் தேரிலிருந்து பாய்ந்து யானையொன்றின் மருப்பின் மேல் ஏறி மறுபுறம் சென்று விகடானனனின் தேரின் மேல் தாவி அவன் அமரத்தில் குதித்து ஒரே அடியில் அவன் தேர்ப்பாகனின் தலையை உடைத்தெறிந்தான். தேர் சரிந்தபடியே செல்ல விகடானனன் அலறியபடி தேரிலிருந்து பாய்ந்து ஓட முயன்றான். தன் கதையை சுழற்றி வீசி அவனை நிலத்தில் வீழ்த்திய பீமன் விட்டில் எனத் துள்ளி அவன் மேல் பாய்ந்து அவன் நெஞ்சில் ஓங்கி மிதித்தான். விலாவெலும்புகள் உடைந்து தசைகிழித்து வெளியே தெரிய மூக்கிலும் வாயிலும் கொழுங்குருதி குமிழியிட்டுத் தெறிக்க உடல் உலைந்து துள்ளி எழுந்தமைய விகடானனன் உயிரிழந்தான்.

அந்தத் தாக்குதலை எதிர்பாராத துரியோதனன் "கொல்க அவனை... கொல்க!" என உடைந்த குரலில் கூவினான். துச்சாதனன் "இளையோனே!" என்று கூவியபடி தேரிலிருந்து ஓடிவருவதற்குள் பீமன் பாய்ந்து பின்னடைந்து பிறிதொரு யானையின் காலுக்கு அடியில் புகுந்து எழுந்து தன் தேரிலேறிக்கொண்டு அதே விசையில் வில்லை எடுத்து துரியோதனனை தாக்கத் தொடங்கினான். கைகள் நடுங்க "என்ன ஆயிற்று? என்ன ஆயிற்று? நோக்குக! நோக்குக!" என்று துரியோதனன் பதறிக்கொண்டிருக்க அவன் கவசங்களை உடைத்தன பீமனின் அம்புகள். துர்முகனும் துச்சகனும் இருபுறமும் வந்து அம்புகளால் திரையிட்டு துரியோதனனை காத்தனர். தேரை பின்னடையச் செய்த துரியோதனனின் பாகன் பீமனின் அம்புபட்டு சரிந்து நிலத்தில் விழுந்தான்.

யானையை சுற்றிக்கொண்டு அப்பால் சென்ற துச்சாதனன் "இளையோனே" என்று கூவினான். விகடானனன் களம்பட்டான் என அறிவிக்கும் முரசுகள் முழங்கத்தொடங்கின. துரியோதனன் தேர்த்தட்டில் தளர்ந்து அமர துச்சகனும் துர்முகனும் கண்களில் நீர் வழிய "இழிமகனே! இழிவிலங்கே!" என்று கூவியபடி வெறியுடன் பீமனை தாக்கினர். அவர்களில் நுரைகொண்டெழுந்த அந்தச் சீற்றத்தை ஒப்புக்கொண்டபடி வில்லுடன் மெல்லமெல்ல பின்னடைந்தான் பீமன். சர்வதனும் சுதசோமனும்கூட கை தளர்ந்தவர்களாக தோன்றினர். பீமன் தளர்ந்து பின்னடையும்தோறும் மேலும் சீற்றம்கொண்ட துர்முகன் "கீழ்மகனே, இன்று உன் சாவு... என் உடன்பிறந்தாருக்காக நான் அளிக்கும் குருதிக்கடன் இன்று" என்று கூவினான்.

தன் தேரிலிருந்து பறந்தவன் என எழுந்த பீமன் யானை ஒன்றைக் கடந்து தேர்மகுடங்களினூடாகச் சென்று துர்முகனைக் கடந்து பின்னால் இறங்கி அதே விசையில் குதிரைகளின் முதுகுகளில் மிதித்துப் பாய்ந்து சுஜாதனின் தேரிலேறிக்கொண்டான். சுஜாதன் தன் வில்லை தேர்த்தட்டில் வைத்து முழந்தாளிட்டு அமர்ந்தான். "ஆம் மூத்தவரே, நீங்கள் என்னை கொல்வதே முறை. ஒருகணம்கூட அவையில் அன்று நிகழ்ந்ததை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிக!" என்றான். ஒருகணம் பீமனின் கதை தழைந்தது. "இங்கு பொருளிலாது வாழ நான் விழையவில்லை. என் உடன்பிறந்தாரின் உலகையே நாடுகிறேன்" என்று சுஜாதன் சொன்னான்.

பீமன் கண்ணெதிரிலிருந்து மறைந்ததைக் கண்டு திகைத்த துர்முகன் தொடுத்த அம்புடன் சுற்றி நோக்கிய கணத்தில் கௌரவப் படையில் ஓசை எழுந்தது. அவன் திடுக்கிட்டு உடல்திருப்பி நோக்கியபோது சுஜாதனின் தலையை அறைந்து உடைத்து கதையுடன் கைதூக்கி நின்ற பீமனை கண்டான். அவன் கை தளர்ந்து வில் தேரில் விழுந்தது. "எஞ்சியிருப்போர் நால்வர். நால்வரையும் இன்றே கொல்வேன். இது தெய்வங்கள் எனக்களித்த ஆணை!" என்று பீமன் கூவினான். துர்முகன் கால்கள் தளர்ந்து தேரின் பீடம் நோக்கி சரிந்து அமர அவன் தேரை வளைத்து அப்பால் கொண்டுசெல்ல பாகன் முயன்றான்.

துச்சகன் "கீழ்பிறப்பே... அரக்கனே" என்று கூவியபடி அம்புகளைத் தொடுத்து முன்னால் பாய்ந்து வந்தான். பீமனைச் சூழ்ந்து வந்தறைந்த நீள்அம்புகளின் விசையால் காற்று கிழிபட்டு ஊளையோசை எழுப்பியது. பீமன் துள்ளி எழுந்து நிலத்தில் பாய்ந்து குனிந்து யானைகளின் கால்களினூடாக

தேர்களின் நடுவினூடாக ஓடினான். நிலத்தில் விழுந்து இறந்து குவிந்திருந்த உடல்களினூடாக ஊடுருவிச்சென்று பாய்ந்து எழுந்து தன் தேரை அடைந்தான். துச்சகன் "நில்... இழிவிலங்கே! ஆண்மையிருந்தால் நில்! என்னுடன் போர் புரிக... நில்!" என்று கூவினான். பீமனின் ஆணைக்கேற்ப அவன் தேரை பாகன் பின்னடையச் செய்ய சர்வதனும் சுதசோமனும் அம்புகளால் துச்சகனை தடுத்தனர்.

பின்னாலிருந்து துரியோதனனும் துச்சாதனனும் நாணோசை எழுப்பியபடி முன்னால் வந்தனர். துரியோதனன் விழிகளில் இருந்து நீர்வழிய, துடிக்கும் உதடுகளுடன் கடித்து இறுகிய பற்கள் வெளித்துத் தெரிய தேர்த்தட்டில் நின்றான். துச்சாதனன் மூத்தவனின் வடிவென்றே தோன்றினான். "தெய்வங்களே! என் தெய்வங்களே!" என்று துரியோதனன் கூவினான். "என்னை துணைசெய்யுங்கள்... என்னுடன் இருங்கள்... இத்தருணத்தில் என்னை ஆளுங்கள்..." நெஞ்சில் ஓங்கி அறைந்துகொண்டு "இன்று உன்னை கொல்லாமல் மீள்வேன் என்றால் நான் அரசன் அல்ல, ஆண்மகனும் அல்ல!" என்று அலறினான். கைவீசி சர்வதனிடமும் சுதசோமனிடமும் "விலகிச் செல்க! விலகிச் செல்க, மைந்தர்களே! என் அம்பால் நீங்கள் உயிர்துறக்கலாகாது... விலகிச் செல்க!" என்று கூவினான்.

சர்வதனும் சுதசோமனும்கூட விழிநீர் வடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் அம்புகள் துரியோதனனையும் துச்சாதனனையும் தடுத்து நிறுத்தின. துர்முகனும் துச்சகனும் மூத்தவர்களுக்கு படைத்துணையென பின்னால் சென்றனர். அவர்களின் போர் முழு விசையை அடைந்து நிகர்நிலை கொண்ட பொழுதில் இரு தேர்கள் நடுவே பீமன் யானையில் தோன்றினான். அதை எதிர்பாராத

துரியோதனன் தேரை பின்னடைய ஆணையிட்டான். இரும்புக் கவசம் அணிந்திருந்த பெரிய போர்யானையாகிய பிரசண்டன் துதிக்கையில் ஏந்திய மிகப் பெரிய இரும்பு முழைத்தடியை வீசிச்சுழற்றியபடி பிளிறிக்கொண்டு களம் நடுவே எழுந்தது. நான்குவாரை நீளமும் ஆளுடல் தடிமனும் யானையளவு எடையும் பன்னிரு முள்முழைகளும் கொண்டிருந்த அந்த முழைத்தடி ஒரே வீச்சில் நான்கு தேர்களை அறைந்து துண்டுகளாக தெறிக்கச் செய்தது. அதன் அடிபட்ட யானைகள் உடல்சிதறிச் சரிந்தன. புரவிகள் துண்டுகளாகத் தெறித்தன.

"பின்னடைக! பின்னடைக!" என்று கூவியபடி துரியோதனன் தேரில் நின்று அம்புகளை தொடுத்தான். பிரசண்டனின் இரும்புக் கவசங்கள் மேல் மணியோசை எழுப்பியபடி அம்புகள் முட்டி முட்டி உதிர்ந்தன. துரியோதனனும் துச்சாதனனும் தேர்களை பின்னுக்கு கொண்டுசென்றனர். சர்வதனும் சுதசோமனும் இடையறாது செலுத்திய அம்புகளால் நிலையழிந்திருந்த துச்சகனாலும் துர்முகனாலும் அதே விசையில் தேர்களை பின்னடையச் செய்ய இயலவில்லை. கௌரவப் படையை சிதறவைத்துக்கொண்டு முன்னெழுந்த பிரசண்டன் தன் முழைத்தடியால் துர்முகனின் தேரை அறைந்து புரவிகளின் உடல்களை தசைத்துண்டுகளாக தெறிக்கச் செய்தது. தேர் பலகைச்சிம்புகளாகப் பறந்து நிலம் படிந்தது.

தேரிலிருந்து பாய்ந்து நிலத்தை அடைந்த துர்முகன் புரவிகளின் வெம்மை நிறைந்த குருதி அருவித்திவலைகள் என உடலெங்கும் தெறித்து முழுக்காட்ட முகத்தை கைகளால் வழித்து நோக்கு திருத்தியபடி ஏறிட்டுப் பார்ப்பதற்குள் அவன் முன் கதையுடன் பாய்ந்து வந்து நின்றான் பீமன். துர்முகன்

“வணங்குகிறேன், மூத்தவரே” என்று முழங்கால் மடிந்தான். அவன் தலையை அறைந்து மண்டைக்கலம் திறந்து செங்குருதியுடன் வெண்நிணம் சிதறச்செய்த பின்னர் பீமன் பாய்ந்து யானையின் உடல் ஒன்றின்மேல் ஏறி சுழன்றுவந்த பிரசண்டனின் முழைத்தடி மேலேயே தொற்றி அதன் மத்தகம் மேல் சென்று எழுந்து நின்றான்.

முழைத்தடியால் அறையுண்ட துச்சகனின் தேர் உடைந்து பரவியது. அவன் பாய்ந்து குருதிச்சேறு மண்டிய நிலத்தை நிரப்பிக்கிடந்த மானுட உடல்களின்மேல் விழுந்து கையூன்றி எழுந்தபோது கால்கள் தடுக்கி மீண்டும் விழுந்தான். “அமைக. இனி உன்னால் போரிட இயலாது!” என்றான் பீமன். “கீழ்மகனே, இறுதிக்கணம் வரை போரிடுவேன்! வா, ஆண்மையிருந்தால்!” என்று துச்சகன் கூவினான். பீமன் யானையிலிருந்து பாய்ந்திறங்கி கதையுடன் அவனை அணுகி ஓங்கி அறைய தலைசுழற்றி தப்பி அருகே கிடந்த கதையை அவன் கையிலெடுத்துக்கொண்டான்.

இருவரும் கதை சுழற்றிப் பொருத அவர்களை துணைக்கும்பொருட்டு முன்னெழுந்து வந்த துரியோதனனையும் துச்சாதனனையும் பிரசண்டன் முழைத்தடியைச் சுழற்றியபடி சென்று தடுத்தது. சூழ முயன்ற கௌரவப் படையினரை சர்வதனும் சுதசோமனும் செலுத்திய அம்புகள் தடுத்தன. துச்சகன் உச்ச விசையில் வாயால் மூச்சுவிட்டபடி அமர்ந்தும் எழுந்தும் துள்ளியும் சுழன்றும் போரிட்டான். அவன் அடிகளை தடுத்தபடி அவன் கால்களிலேயே நோக்கு நிலைக்க பீமன் சுற்றிவந்தான். கீழே கிடந்த உடைந்த சகடம் ஒன்றில் கால்பட்டு துச்சகன் அரைக்கணம் நிலையழிய பீமனின் கதை சுழன்று அவன்

நெஞ்சை அறைந்தது. எலும்பு முறியும் ஒலியுடன் துச்சகன் மல்லாந்து விழுந்தான். அவன்மேல் பாய்ந்தேறி அவன் தலையை அறைந்து உடைத்தான் பீமன்.

துரியோதனன் தன் சிறு அம்பால் பிரசண்டனின் வலக்கண்ணை அடித்தான். அது அலறியபடி முழைத்தடியை கீழே போட்டுவிட்டு தன்னைத்தானே சுழன்றது. நோக்கழிந்த அதன் விழியின் பக்கம் நின்றபடி தானும் சுற்றிவந்த துரியோதனன் அதன் கவசங்களுக்கு நடுவே கழுத்தில் பிறைவாளியால் அறைந்தான். நரம்பு அறுபட பிரசண்டன் திகைத்து நின்று முன்னும் பின்னும் ஊசலாடியது. அக்கணம் துச்சாதனன் பாய்ந்து தேரிலிருந்து எழுந்து அதை நோக்கி ஓடி அதன் கவசமணிந்த துதிக்கைமேல் கால்வைத்து ஏறி மேலே சென்று முதுகின்மேல் நின்றபடி அதன் மத்தகத்தின்மேல் கதையால் ஓங்கி அறைந்தான். தலைமுழையில் விழுந்த அடியால் பிரசண்டன் நிலைதடுமாறி அசைய மேலும் மும்முறை அந்த முழைகளில் அறைந்தான் துச்சாதனன்.

பிரசண்டனின் துதிக்கையினூடாக குருதி ஊற்றுப்பெருக்கென கொட்டத் தொடங்கியது. அது துதிக்கையை தூக்கிச் சுழற்ற குருதித்துளிகள் சரம்போல வானில் அரைவட்டமாக பறந்தன. வயிற்றுக்குள் எழுந்த உறுமலுடன் பிரசண்டன் அசைந்தாடி பக்கவாட்டில் சரிந்து விழ துச்சாதனன் பாய்ந்து மறுபக்கம் குதித்து தன் தேரை நோக்கி சென்றான். துரியோதனன் அப்போதுதான் துச்சகனும் துர்மதனும் உடல்சிதைந்து கிடப்பதை கண்டான். “இளையோனே! இளையோனே!” என்று கூவியபடி அவர்களை நோக்கி பாய்ந்துசெல்ல முயல பீமனின் அம்புகள் வந்து அவன் கவசங்களை அறைந்தன. “மூத்தவரே, விலகுக... மூத்தவரே, அம்புகளை ஒழிக!” என துச்சாதனன்

கூவினான். கவசப் படை வந்து துரியோதனனை மூடிக் காத்து பின்னெடுத்துச் சென்றது.

இருட்கனி - 28

துச்சகனும் துர்முகனும் வீழ்ந்ததை தொலைவிலிருந்தே சுபாகு கண்டான். "தேரை திருப்புக... மூத்தவரிடம் செல்க!" என்று ஆணையிட்டான். அவனுடைய தேர் அணுகிவருந்தோறும் அங்கே நிகழ்ந்திருந்த அழிவு மேலும் துலங்கியபடி வந்தது. பீமனும் மைந்தரும் விசைகொண்டு கௌரவப் படையை தாக்கிக்கொண்டிருந்தார்கள். கௌரவப் படை உளமழிந்து பல துண்டுகளாக சிதறி அவர்களின் அம்புகள் முன் எளிய விலங்குகள் என விழுந்து உயிர்துறந்தது. மேலிருந்து கட்டிய கயிறு அறுந்து ஓவியத்திரைச்சீலை விழுந்து சுருள்வதுபோல ஒரு படைப்பிரிவே அவர்களின் அம்புகளால் விழிமுன் இருந்து மறைவதை சுபாகு கண்டான். "விரைக! விரைக!" என தன் தேர்ப்பாகனை விசைகூட்டினான்.

துச்சாதனன் பீமனுடனும் மைந்தருடனும் போரிட்டுக்கொண்டிருந்தான். சுபாகு உடன்சென்று இணைந்து கொண்டான். ஆனால் விற்பூசல் தொடங்கிய சற்று நேரத்திலேயே அது பொருந்தாப் போர் என சுபாகு புரிந்துகொண்டான். சர்வதனும் சுதசோமனும் பீமனும் ஓர் உடலின் மூன்று வடிவெனத் தோன்றினர். அவர்களுக்கிடையே மிகச் சிறந்த ஒருமை கூடியது. உடலசைவாலேயே உரையாடிக்கொண்டார்கள். முத்திரை காட்டி நடனமாடும் கையின் மூன்று விரல்கள்போல. அவர்களின் அம்புகள் ஒன்றுடன் ஒன்று இசைவுகொண்டிருந்தன. ஓர் அம்பு எண்ணி

எய்தாததை இன்னொரு அம்பு அக்கணமே நிகழ்த்தியது. ஓர் அம்பு தொடங்கியதை பிற அம்புகள் நிரைகொண்டு வந்து முடித்தன. அவர்களால் கௌரவ வில்லவர்கள் அலறி விழுந்துகொண்டே இருந்தனர்.

ஒவ்வொரு கணமும் பீமனின் ஆற்றல் மிகுந்தபடியே வந்தது. அவன் வில்லை கண்களால் பார்க்கக்கூடவில்லை. களத்தில் விழுந்துகிடந்த துர்முகனையும் துச்சகனையும் கொக்கிகளால் இழுத்து பின்னால் கொண்டு சென்றனர். அந்தக் காட்சியை நோக்கலாகாது என்று சுபாகு எண்ணினாலும் விழிகள் அரைக்கணத்திலும் ஒரு துளியில் அதை நோக்கி மீண்டன. துர்முகனின் சிதைந்த தலை ஓர் உடைந்த தேர்ச்சகடத்தில் முட்டி அசைந்த தருணம் அது. அவன் எதையோ ஏற்பது போலிருந்தது. அவன் விழிகளை மூடிமூடித் திறந்தான். அந்தக் கணம் அவ்வண்ணமே அழிவின்மை கொண்டுவிட்டிருந்தது. எதை ஏற்றுக்கொண்டார் மூத்தவர்? எதையேனும் எப்போதேனும் அவர் ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததுண்டா? வாரணவத நிகழ்வை, அஸ்தினபுரியில் அரசி அவைச்சிறுமை செய்யப்பட்டதை? அவற்றை ஏற்றதுபோல் அவ்விறப்பையும் மறுப்பின்றி ஏற்றுக்கொண்டாரா?

துர்முகன் எப்போதுமே அமைதியானவன். பெரும்பாலும் தலையசைவே அவன் மொழி. இளமையில் அவனுக்கு இடப்பட்ட பெயர் ஊர்மிளன். அவனுடைய சொல்லின்மையால் அது துர்முகன் என்று மாறியது. அப்பெயரைச் சொல்லி அவனை அழைத்தவர் தந்தை. பின்னர் அனைவரும் அதையே ஏற்றனர். எப்பெயரும் பொருட்டல்ல என அதை ஏற்றுக்கொண்டான் துர்முகன். தாளமுடியாத ஒருவன்போல, பெருமதம் கொண்ட ஒருவன்போல, ஆணையிடப்பட இயலாத

ஒருவன்போல, முகமில்லாத ஒருவன். முகம்கொள்ளாதவன். உண்மையில் எதையேனும் அவர் எண்ணினாரா? எவரிடமேனும் எண்ணத்தை பகிர்ந்துகொண்டாரா? இப்போது அவர் உடன் கொண்டுசெல்வதுதான் என்ன?

"மூத்தவரே, நீங்கள் ஏன் பேசுவதே இல்லை?" என்று சுபாகு பலமுறை கேட்டிருக்கிறான். பெரும்பாலும் அவன் புன்னகை மட்டுமே பூப்பான். ஒருமுறை மட்டும் "நாம் நூற்றுவர். சொற்களை பகிர்ந்து பேசுவதே நன்று. நமக்காக மூத்தவர் பேசுகிறார். நீ பேசுகிறாய். அனைவரும் பேசினால் இங்கே பேச்சு நிகழாது, கூச்சலே எஞ்சும்" என்று துர்முகன் சொன்னான். "நாம் கூறாத சொற்களுக்கு பொறுப்பேற்க வேண்டியிருக்குமே?" என்று சுபாகு கேட்டான். "எவ்வகையிலாயினும் இங்குள்ளோர் அவர்கள் அறியாச் சொற்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்பவர்களே" என்று சொல்லி துர்முகன் புன்னகைத்தான். அவன் புன்னகையும்கூட மிக மென்மையானது. நிழலில் தேங்கிய சுனைநீரின் ஒளிபோல.

கவசப்படை பிளந்து துரியோதனன் தோன்றினான். துச்சாதனன் "மூத்தவரே, அகல்க! இப்போரை நான் முடிக்கிறேன். நீங்கள் உளத்தொகுப்புடன் இல்லை" என்று கூவினான். "இது என் போர்" என்றான் துரியோதனன். "வேண்டாம், அகல்க! இப்போரை நாங்களே முடிக்கிறோம்" என்றான் சுபாகு. மறுசொல் உரைக்காமல் துரியோதனன் அம்புகளைச் செலுத்தியபடி சென்று பீமனை எதிர்கொண்டான். பீமன் அவன் முகத்தை கூர்ந்து நோக்குவதை சுபாகு கண்டான். அவன் உள்ளத்தை கொந்தளிக்கச் செய்யும் எதையேனும் பீமன் சொல்வான் என எதிர்பார்த்தான். அவனை நிலையழியச் செய்வான். அதன் பின்னரே அவனை நேரில்நின்று தாக்குவான்.

எண்ணியதுபோலவே பீமன் "தார்த்தராஷ்டிரனே, உன் நூறு கைகளில் இனி எஞ்சுவன எவை?" என்று கூவினான். "ஆயிரம் கையறுத்து கார்த்தவீரியனைக் கொன்ற பரசுராமனை நினை. உனக்கும் அந்தச் சாவுதான் எஞ்சியிருக்கிறதென்று கொள்!" துரியோதனன் "என் இளையோரின் குருதிக்கு ஈடுபழி கொள்ளாமல் இன்று களம்விட்டு அகலப்போவதில்லை, கீழோனே" என்று கூவினான். "உன் குருதியினரின் உடல்கள் நீறாகி மண்ணில் கலந்துவிட்டன. விண்பரப்பில் அவர்கள் திகைத்தலைகிறார்கள்!" என்று பீமன் உரக்க நகைத்தான்.

கண்ணீர் வழியும் முகத்துடன், பொருளற்ற வெறிக்கூச்சலுடன் துரியோதனன் கதையுடன் பாய்ந்து சென்று பீமனை தாக்கினான். அவன் கதையை தன் கதையால் தடுத்து சிட்டுக்குருவியென தேர்த்தட்டிலிருந்து துள்ளி அகன்று நிலத்தை அடைந்தான் பீமன். இருவரும் கதைகளால் வெறிகொண்டு அறைந்தபடி போரிட்டனர். அமர்ந்து எழுந்தும் கதைவீசித் துள்ளியும் சுழன்று விரிந்து படர்ந்து மீண்டும் எழுந்தும் இருவரும் போரில் விசை மிகுந்தபடியே வந்தனர். துரியோதனனின் உதவிக்கு கதையுடன் எழுந்த துச்சாதனனை சர்வதன் தடுக்க, சுபாகுவை சுதசோமன் தடுக்க, கௌரவப் படையினர் படைக்கலம் தாழ்த்தி நின்று நோக்க, பாண்டவர்கள் வெறிக்கூச்சலிட்டு பீமனை ஊக்க அந்தப் பூசல் நிகழ்ந்தது.

சுதசோமனின் அம்புகளின் விசை தாளாது சுபாகு பின்னடைந்தான். கதையுடன் முன் பாய்ந்தெழுந்த சுதசோமன் சுபாகுவின் தேர்த்தட்டில் பாய்ந்தணைந்து அவன் விலாவில் கதையால் அறைய அவன் இரும்புக் கவசம் உடைபட்டது. இருமி குருதியுடன் கோழை துப்பியபடி அவன் நிலத்தில் விழுந்தான். அவன் மேல் பாய்ந்து கதையால் தலையை

அறைய முயன்ற சுதசோமனின் காலை தன் காலால் ஓங்கி அறைந்து நிலையழியச் செய்து அந்த இடைப்பொழுதில் உருண்டு பாய்ந்தெழுந்து பின்னடைந்து ஒரு கதையை கையில் எடுத்துக்கொண்டான் சுபாகு. சுதசோமன் கதையை வீசியபடி மீண்டும் பாய்ந்து வந்தான்.

சுபாகுவால் கதையை சுழற்ற முடியவில்லை. நெஞ்சுக்குள் நரம்பு ஒன்று அறுபட்டு நின்றுதுடிப்பது போலிருந்தது. அவனுடைய கதை வீச்சை அறைந்த சுதசோமனின் கதையின் எடை உடலின் எல்லாத் தசைகளையும் வலியுடன் அதிரச்செய்தது. கால்கள் தள்ளாட விழிகள் ஒளிகுன்ற அவன் சுதசோமனின் கதையை மட்டுமே நோக்கியபடி போரிட்டான். சுதசோமன் மேல் ஓர் அடியை செலுத்தக்கூட அவன் முயலவில்லை. அவனைச் சுற்றி வஞ்சம்கொண்டு தாக்கவரும் மிகப் பெரிய கருவண்டு என கதையின் இரும்புக்குமிழ் முனகியபடி பறந்தது. அவன் கதையைச் சுழற்றி மீண்டும் தூக்க முயல வயிற்றுத்தசை ஒன்று அறுபடுவதுபோல் வலி எழுந்தது. அக்கணம் சுதசோமனின் கதை வந்து அவன் தோளை அறைந்தது. அவன் மல்லாந்து விழுந்தான். அவனைக் கொல்ல கதையுடன் துள்ளி எழுந்த சுதசோமன் கதை சுழற்றுவதற்கு முன்னரே கவசப்படையினர் பின்னிருந்து கொக்கிகளை வீசி இழுத்து சுபாகுவை அப்பால் கொண்டு சென்றனர். கேடயப்படைகள் வந்து தடுக்க சுதசோமன் பீமனைப் போலவே நெஞ்சில் இரு கைகளால் ஓங்கி அறைந்து பெருங்குரலெழுப்பியபடி திரும்பினான்.

அங்கே பீமன் துரியோதனனின் கதை வீச்சுக்கு கைதளர்ந்து பின்னடி எடுத்துவைக்கத் தொடங்கியிருந்தான். துரியோதனனின் மூன்று கதை வீச்சுகள் பீமனின் அருகே

மண்ணில் விசையோசையுடன் விழுந்தன. குருதிச்சேறு தெறித்து பீமனின் உடலில் வழிந்தது. துரியோதனன் கதையை ஓங்கி தரையில் அறைந்து அவ்விசையிலேயே மண்ணிலிருந்து துள்ளி மேலெழுந்து கதையை மண்ணிலிருந்து எடுத்த விசையில் தலைக்குமேல் சுழற்றி பீமனை ஓங்கி அறைந்தான். பீமனின் கதையைவிட மும்மடங்கு எடைகொண்டது துரியோதனனின் கதை.

பீமன் நெஞ்சில் விழுந்த அறையில் வலிமுனகலுடன் பின்னால் ஆடி நிலையழிந்து மல்லாந்து தரையில் ஓசையுடன் விழுந்தான். துரியோதனனின் கதையின் அடுத்த அடி வந்து அவன் தலை அருகே நிலத்தில் விழ உருண்டு தப்பினான். மீண்டும் மூன்று முறை அறைந்தபின் பிறிதொரு பெரும் பிளிறலுடன் காற்றிலெழுந்த துரியோதனன் பீமனின் நெஞ்சில் கால் வைத்து கதையை ஓங்கி அவன் தலையை உடைக்க முயல பாய்ந்து வந்த சுதசோமன் துரியோதனனின் கதையை தன் கதையால் அறைந்து விலகச்செய்தான்.

அவர்களிருவரும் கதை கோத்துக்கொள்ள பீமன் தன் கதையை ஊன்றி புரண்டெழுந்து தவழ்ந்து அப்பால் சென்றான். அவனை நோக்கி ஏவலர் ஓடி வந்தனர். இருமியபடி அவர்களை கைகளால் விலக்கினான். இருமுறை உடல் அதிர தசைகள் இழுபட்டு நெளிய அவன் இருமியபோது தசைக்குழம்பு என வாயிலிருந்து குருதி வெளிவந்தது. மேலும் மேலும் இருமி துப்பி உடல் அதிர்ந்துகொண்டிருந்தான். “அரசே, பின்னடைக! உள்ளே எலும்புகள் முறிந்துள்ளனவா என்று நோக்கவேண்டும்” என்றான் மருத்துவஏவலன். இருமியபடி செல்க என பீமன் கையை அசைத்தான். மீண்டும் கையூன்றியபடி எழ முயல நெஞ்சு அதிர்ந்து குருதிச்சேற்றில் முகம் புதைய விழுந்தான்.

பற்களைக் கடித்தபடி இரு கைகளையும் ஊன்றி எழுந்து அமர்ந்தான். இருமியபடி தலையை உலுக்கிக்கொண்டான். பின்னர் வெறியுடன் தன் நெஞ்சிலேயே ஓங்கி அறைந்தபடி முழு உயிரால் உடலை உந்தி எழுந்து நின்றான்.

துச்சாதனன் சர்வதனை கதையால் அடித்து பின்னடையச் செய்துகொண்டிருந்தான். துச்சாதனனின் அடிகளில் இருந்த எடையும் விசையும் சர்வதனால் தாளமுடிவதாக இருக்கவில்லை. முதல் சில அடிகளை கதையால் தடுத்த பின்னர் அவன் கதையைச் சுழற்றி ஒழிவதையே போர்முறையெனக் கொண்டான். துச்சாதனனின் கதையின் எடையாலேயே விரைவு சற்றே குறைவதை உணர்ந்து அந்த இடைவெளியில் கதைசெலுத்தி அவனை அடிக்கமுயன்றான். இருமுறை துச்சாதனனின் தோளை அடிக்கவும் அவனால் இயன்றது. ஆனால் துச்சாதனன் அத்தகைய அடிகளால் நிலைபிறழக்கூடியவனாக இருக்கவில்லை. அவனுடைய எடையே ஆற்றலென வெளிப்பட்டது.

துள்ளிச்சுழன்று துச்சாதனன் நிலம்தொடுவதற்கு முன் விலாவில் பட்ட அடியால் சரிந்து கீழே விழுந்து கையூன்றி எழுந்தான் சர்வதன். தொடர்ந்து வந்த துச்சாதனனின் மூன்று அடிகளை உடலொழிந்தான். மீண்டும் எழுந்து தாக்கியபோது அவன் நிலையில் ஒத்திசைவு கூடவில்லை. அடிபட்ட விலாவிலிருந்து காலுக்கு ஒரு சரடு அறுபட்டு துடித்தது. காலை இழுத்து இழுத்து வைத்தபடி அவன் கதைவீசி முன்னால் சென்றான். துச்சாதனன் "செல்க... செல்க, மைந்தா... என் கையால் இறவாதொழிக!" என்று கூவியபடி அவனை தாக்கினான். வேண்டுமென்றே அவன் இருபுறங்களிலும் நிலத்தில் கதையால் ஓங்கி அறைந்தான். உடைந்த

தசைகளிலிருந்து குருதி தெறித்தது. விழுந்துகிடந்த யானையின் மத்தகம் ஒன்றை ஓங்கி அறைந்து சிதறடித்தபின் "ஓடு... ஓடி உயிர்காத்துக்கொள்" என்று துச்சாதனன் கூவினான்.

துரியோதனனிடம் பொருதிய சுதசோமனும் அந்த எடைமிக்க அடிகளை தாளமுடியாது திணறினான். ஒவ்வொரு அடியையும் துள்ளி ஒழிவதில் மட்டுமே அவனால் உளம் செலுத்த இயன்றது. அடிகள் விழ விழ நிலம் நெளிந்து பள்ளங்கள் மிக்கதாக ஆகியது. அந்தப் பள்ளங்களிலேயே கால்சிக்கி அவன் நடை நொடித்தான். துரியோதனனின் கதை வந்து அறைந்தபோது சுதசோமனின் கதை சிறுமணிபோல தெறித்து மறுசுழற்சி கொண்டது. அடிகளுக்கு இயைய நடனமென பின்காலடி எடுத்து வைத்து பின்னால் சென்றான். அவன் உடல் அடிவிழுவதற்காகக் காத்து துடிப்பு கொண்டது. தன் இறுதிக் கணம் அதுவென எண்ணி மெய்ப்புகொண்டான். ஆனால் அது ஒருவகை களிப்பையும் உள்ளத்தில் நிறைத்தது. அவன் விசையை அது கூட்டியது.

சர்வதன் துச்சாதனனை எதிர்கொள்ளும் வழி அவன் விழிமுன் நிலைகொள்ளாமல் துள்ளிக்கொண்டிருப்பதே என்று கண்டுகொண்டான். தரையில் கால்பரப்பி அமர்ந்து துச்சாதனனின் கதைவீச்சை தன் தலைக்குமேல் பறந்து செல்லச்செய்தான். அது சுழன்று மீண்டும் எழுவதற்குள் துள்ளி எழுந்து காற்றில் கால் விரித்து நின்று அதன் வீச்சை தன் கீழே கடந்து செல்லும்படி செய்தான். அவன் காலூன்றி மீண்டும் எழும் கணத்தில் துச்சாதனனின் அடி அவன் தோளில் விழுந்தது. அலறியபடி சர்வதன் நிலத்தில் விழுந்தான். அவன் கதை தெறித்து அகன்றது. கையை ஊன்றி அவன் புரண்டு எழுவதற்குள் துச்சாதனன் வெறிகொண்டு கதையைத் தூக்கி

அவனை தலையில் அடிக்கப் போனான். ஆனால் ஒருகணம் அந்தக் கதை காற்றில் நின்றது. காலால் சர்வதனை ஓங்கி உதைத்து "செல்க... இனியொருமுறை என் முன் எழாதே!" என்று கூவினான்.

அத்தருணத்தில் எப்படி அம்முடிவை எடுத்தோம் என்று பீமனுக்குத் தெரியவில்லை. அவன் பெரும்கூச்சலுடன் முன்னால் சென்று சர்வதனை அறைய ஓங்கிய துச்சாதனனின் கதையை அறைந்தான். துச்சாதனன் கதை தெறித்து அகல வெறும் கையுடன் அவன் திகைத்து பின்னகர்ந்தான். விழிகள் வெறிப்புகொள்ள உதடுகள் ஒரு சொல்லுக்கென அசைய துச்சாதனன் இரு கைகளையும் செயலற்றவைபோல் விரித்தான். மீண்டும் ஒரு கூச்சலுடன் காற்றில் துள்ளி எழுந்த பீமன் துச்சாதனனின் நெஞ்சில் உதைத்தான். நிலை தடுமாறி விழுந்த அவன் உடல்மேல் தாவிச்சென்று நின்று கதை சுழற்றி அவன் தலையை ஓங்கி அறைந்து உடைத்து குருதிக்கூழும் வெண்கதுப்பும் தெறிக்கச்செய்தான்.

சூழ்ந்திருந்த கௌரவர்களின் பேரொலி சுதசோமனை கொல்லும் பொருட்டு எழுந்த துரியோதனனை திகைக்கச் செய்தது. அவன் திரும்பி நோக்கியபோது துச்சாதனன் தலை உடைந்து உடல் துடித்துக்கொண்டிருப்பதை பார்த்தான். கையிலிருந்து கதை நழுவ ஓங்கி நெஞ்சில் அறைந்து "இளையோனே!" என்று கூவினான். அக்கணத்தில் சர்வதனும் சுதசோமனும் பாய்ந்து சென்று அவனை இருபுறத்திலாக தாக்கினர். இருதோள்களிலும் கதைகளின் அடிகள் விழ கால் தளர்ந்து துரியோதனன் மல்லாந்து விழுந்தான். அவர்கள் பாய்ந்து சென்று அவனை மேலும் அறையத் துவங்க கைகளையும் கால்களையும் ஊன்றி தவழ்ந்து அவ்வடிகளை

ஒழிந்து மீண்டும் பின்னால் செல்ல அவனை அப்பாலிருந்து காவல்படையினர் கொக்கிகளால் இழுத்துத் தூக்கி பின்னால் கொண்டுசென்றனர்.

துரியோதனன் "இளையோனே! இளையோனே!" என்று கதறியபடி எழுந்துவர முயன்றான். திமிறி எழுந்தவன் ஏந்து சரடு அறுபட்டவன்போல் மயங்கி துவண்டு பக்கவாட்டில் விழுந்தான். அவனை வீரர்கள் பற்றிக்கொண்டார்கள். இருபுறத்திலிருந்தும் கவசப்படையினர் வந்து அவனை முழுமையாக மூடிக்கொண்டனர். மீண்டு வந்த சுபாகு தன் தேரிலிருந்து இறங்கி கௌரவப் படையை நோக்கி ஓடி கவசங்களுக்குள் புகுந்தான். விழுந்து கிடந்த துரியோதனனை ஏவலர் மரவுரியில் தூக்கிக்கொண்டு சென்றனர். சுபாகு உடன் ஓடி "என்ன ஆயிற்று மூத்தவருக்கு? நலமாக இருக்கிறாரா? அடிகள் விழுந்தனவா?" என்றான். மருத்துவஏவலன் "நலமாக உள்ளார். மூச்சு சீராகவே உள்ளது. நெஞ்சக்குழியின் துடிப்பும் சீர்நடைகொண்டிருக்கிறது. உளமழிந்துள்ளார்" என்றான். சுபாகு தலையைப் பற்றியபடி கால்தளர்ந்து களத்திலேயே சரிந்தான்.

பீமன் தன்னைச் சுற்றி எழுந்த கௌரவர்களின் பெரும் கூச்சலை கேட்டான். அப்போதுதான் துச்சாதனனை கொன்றுவிட்டிருப்பதையே முழுதுணர்ந்தான். துச்சாதனனின் நெஞ்சில் கால்வைத்து எழுந்து நின்று சூழ அலைகொண்ட முகங்களை பார்த்தான். கௌரவர் முகங்களும் பாண்டவர் முகங்களும் ஒன்றுபோலவே திகைப்பில், அச்சத்தில் வெறிப்பு கொண்டிருந்தன. சொற்களில்லாத வெற்றொலிகளின் திரளாக முழங்கியது படை. ஒவ்வொருவர் விழிகளிலும் தெரிந்தது அச்சம் மட்டுமே என உணர்ந்தபோது அவன் தன்னை விலகி நின்று நோக்கினான். அவ்விலக்கம் அளித்த தவிப்பு ஒருகணம்

அவன் முகத்தில் வெளிப்பட்டது. மறுகணமே அதிலிருந்து தன்னை முற்றறுத்துக்கொண்டு மீண்டு இரு கைகளாலும் நெஞ்சை ஓங்கி ஓங்கி அறைந்து தலை தூக்கி மலைக்குரங்குகளின் அரசன் என பேரொலி எழுப்பி ஊளையிட்டான்.

அந்த ஊளை கௌரவர்களையும் பாண்டவர்களையும் மீண்டும் விலக்க அவர்கள் அகன்று அவ்வட்டம் பெரிதாயிற்று. கௌரவர்களின் தரப்பிலிருந்து எவரும் பாய்ந்து வந்துவிடா வண்ணம் சர்வதனும் சுதசோமனும் சென்று அப்பகுதியை நோக்கி கதை சுழற்றி அவர்களை அப்பால் ஒதுக்கினர். ஆனால் எவரும் செலுத்தாமலேயே ஒருவரோடொருவர் முட்டி தோள் உரசி ததும்பியது கௌரவப் படை விளிம்பு. பாண்டவப் படைகளும் ஏனென்றறியாமலேயே விலகி விலகி பின்னடைந்து அகன்றன. அவர்களைச் சூழ்ந்து அம்புகளோ வேல்களோ இல்லாத பெரிய வெளி ஒன்று உருவாகியது. நிகழவிருப்பதை அவர்கள் ஒவ்வொருவரும் எண்ணமறியாமலே உள்ளுணர்ந்தனர். கொடுந்தெய்வம் என அத்தருணத்தில் உடலெங்கும் குருதி வழிய வெறிக்களிப்பு எழுந்த முகத்துடன், துறித்த விழிகளுடன் நின்ற பீமனை முற்றொழியலாயினர்.

பீமன் குனிந்து கீழே கிடந்த துச்சாதனனை பார்த்தான். தலை உடைபட்டுத் தெறித்ததும் அவ்வுடல் மெய்யிழந்து வெற்றுப் பொருளென்றாகிக் கிடந்தது. இரு கைகளும் அறியேன் என்பதுபோல் விரித்து வான்நோக்கி மலர்ந்திருந்தன. கால்கள் அகன்று சரிந்திருந்தன. நெஞ்சக்குழியில் சிறிய துடிப்பொன்று எஞ்சியிருந்தது. உடைந்த தலையிலிருந்து தெறித்த ஒற்றைக்கண் சிப்பியிலிருந்து எடுத்த தசை உருளைபோல்

கிடந்தது. பிறிதொரு விழி நசுங்கிய தலையிலிருந்து பிதுங்கி நின்றது. திறந்த வாய்க்குள் எருமை மாட்டுக்குரியவைபோல் பெரிய பல் நிரைகள் அகன்று பல்லுக்கு அடியிலிருக்கும் மஞ்சள் தடம் தெரிய விரிந்திருந்தன. நாக்கு உள்மடங்கி தொண்டையை அடைத்திருந்தது. அதில் ஊற்றின் நொதிப்பு என மெல்லிய அசைவு எஞ்சியிருந்தது. இரு காதுகளிலிருந்தும் குருதி வழிந்து தரையை அடைந்திருந்தது.

பீமன் ஒருகணம் அனைத்து ஆற்றலையும் இழந்தான். இந்த வெறும் சடலத்தை இனி என்ன செய்யப்போகிறேன்? இவ்வுடலிலிருந்த அவனுடனான பகைமை முடிவுற்றது. இது பிறிதொன்று. இது வேறு தெய்வங்களுக்குள்ளது. மிக அருகே எங்கோ அவன் நின்று என்னை நோக்கிக்கொண்டிருக்கிறான். எனக்கிருக்கும் அதே தொலைவு அவனுக்கும் இவ்வுடலுடன் உள்ளது. உள்ளம் உறைந்து எவ்வுணர்ச்சியுமற்று இடத்தொடை மட்டும் துள்ளிக்கொண்டிருக்க, இரு கைகளும் அறியேன் என விரிந்து காற்றில் அசைவிழக்க, பீமன் நின்றான் அக்கணம் ஓர் இறுதி வலிப்பு துச்சாதனன் உடலில் நிகழ்ந்தது. வலக்காலும் வலக்கையும் இழுத்து துடிக்க உடல்முறுகி பின் விடுபட்டது. அவ்வசைவு கால் வழியாக பீமனின் உடலில் நுழைய அத்தருணம் வரை கொண்டிருந்த அனைத்து உணர்வுகளிலிருந்தும் மீண்டு வந்து மீண்டும் தன் இரு கைகளையும் மாறி மாறி நெஞ்சில் அறைந்து உரக்க வெறிக்கூச்சலிட்டான்.

முழங்கால் மடித்து துச்சாதனனின் உடல் மேல் அமர்ந்தான். வெறுங்கைகளை குவித்து வியாஹ்ர முத்திரையாக்கி ஓங்கி அவன் வெற்று மார்பின் நெஞ்சக்குழியில் குத்தி இறக்கினான். சூடான குருதிக் குழம்பிற்குள் இறங்கிய விரல்கள் உள்ளே

செல்ல வழுக்கியபடி விலா எலும்புகள் தட்டுப்பட்டன. நான்கு விரல்களால் அவற்றை பற்றிப் பிடித்து முழுமூச்சு கொண்டு இழுத்து விரிசலாக்கி மீண்டுமொரு உறுமல் ஒலி எழுப்பியபடி விலாக்கூட்டை இருபுறமும் பிடித்திழுத்து உடைத்து திறந்தான். நீருக்குள் மண்கலம் உடையும் ஓசையென எலும்புகள் நொறுங்குவது கேட்டது. நெஞ்சு விரிந்து அகல உள்ளே சிறுநுரைக்குமிழியென கொப்பளித்து கொண்டிருந்தது குலை. அதை வலக்கைவிரலால் பற்றி வேர்ச்சுருள்கள் நீண்டு வர இழுத்தெடுத்தான்.

சேற்றிலிருந்து தாமரை மொட்டை தண்டுடன் பறித்தெடுப்பதுபோல் உணர்ந்தான். அதனுடன் வந்த குருதிக் குழாய்களைச் சுழற்றி அறுத்து அதை பிரித்தெடுத்து தலைக்குமேல் தூக்கினான். எழுந்து கையில் தூக்கி நான்குபுறமும் காட்டி வெறிகூச்சலெழுப்பினான். கௌரவப் படைகளிலிருந்து கதறல்களும் ஓலங்களும் ஒலித்தன. பாண்டவர்களும் அழுகைக் குரலெழுப்பியபடி சிதறி ஓடினர். விழிதொடும் தொலைவில் எங்கும் எவரும் இருக்கவில்லை. அக்குமிழை தன் தலைக்குமேல் தூக்கி அதிலிருந்து சிறு விழுதென இறங்கிய கொழுங்குருதியை தன் முகத்திலும் தோள்களிலும் விட்டுக்கொண்டான். வாய் திறந்து அதை நாவில் ஊற்றினான். ஒவ்வா சளியொன்றை வாயில் உணர்ந்ததுபோல் உளம் கூசியது. கண்களை மூடி ஒரே மிடறாக அதை குடித்தான்.

அது உடலுக்குள் இறங்குவதை உணரமுடிந்தது. அமைதியான பயணமாக அது அவன் உடலுக்குள் வழுக்கிச் சென்றது. புழு ஒன்று ஊர்ந்து செல்வதுபோல். கையிலிருந்து அக்குலை அதிர்ந்தது. மீண்டும் அதை தூக்கி கனி எனப் பிழிந்து நாவில்

விட்டான். மும்முறை அருந்தியபின் அதைத் தூக்கி அப்பால் வீசினான். சுற்றுமுற்றும் நோக்கியபோது அப்பால் விழுந்துகிடந்த கலம் போன்ற தலைக்கவசத்தை கண்டான். அதை எடுத்துக்கொண்டு வந்து துச்சாதனனின் பிளந்த நெஞ்சின் பள்ளத்திற்குள் ஊறி தேங்கத்தொடங்கியிருந்த குருதியை இரு கைகளாலும் அள்ளி அதில் விட்டான். இரு தோல்பைகள்போல் துடித்துக்கொண்டிருந்த மூச்சுக்குலைகளைப் பற்றிப் பிடுங்கி வெளியே எடுத்தான். அது தேன்கூடுபோல தோன்றியது. அழுத்தியபோது அதிலிருந்து தேன்போல் கருமை கலந்த குருதி வழிந்து கலத்தில் விழுந்தது.

அந்தக் கணத்தில் தன் உள்ளம் அத்தனை அமைதிகொண்டிருப்பதை, ஒவ்வொன்றையும் புலன்கள் உணர்வதை, ஒவ்வொரு அறிதலையும் நினைவுகளுடன் இணைத்து கூர்மையாக பின்னிக்கொள்வதைக் கண்டு வியந்தபடி அவனுள் ஒரு பகுதி தனித்து நின்றது. குருதிச்சரடு குருதிப்பரப்பில் விழும் மெல்லிய ஒலியை அவன் கேட்டான். குருதிக்குமிழியில் அலை விலகும் செம்மையை கண்டான். எழுந்து துச்சாதனனின் உடலை கழுத்திலும் இடையிலும் பற்றித் தூக்கி திருப்பி காற்றில் நிறுத்தி இருமுறை அசைத்தபோது உள்ளிருந்து அக்கலம் நிறையுமளவுக்கு குருதி கொட்டியது. துச்சாதனன் உடலை தலைக்குமேல் தூக்கி நாற்புறமும் நோக்கியபடி சொல்லில்லாது கூச்சலிட்டு பீமன் அறைகூவினான்.

பின்னர் அதை கௌரவப் படைகளை நோக்கி எறிந்தான். குனிந்து கீழே இருந்த குருதி நிறைந்த கலத்தை கையில் எடுத்தபடி திரும்பி பாண்டவப் படைகளை நோக்கி நடந்தான்.

அவன் நடந்து செல்கையில் பின்புறம் ஓசைகள் கேட்டன. பாண்டவ வீரர்கள் அங்கே ஓடிச்செல்வதை கண்டான். திரும்பி நோக்கலாகாதென்று தன்னை கட்டுப்படுத்திக்கொண்டான். ஆனால் பாண்டவப் படைகளை அடைந்து அவர்கள் விலகி வழி விட அவர்களூடாக சென்றுகொண்டிருக்கையில் ஒருகணம் உள்ளம் ஓர் ஐயத்தை அடைந்தது. அவன் திரும்பிப்பார்த்தபோது சர்வதனும் சுதசோமனும் மயங்கி கீழே விழுந்திருக்க அவர்களை படைவீரர்கள் அள்ளி தூக்கிக்கொண்டுவருவதை கண்டான்.

சீற்றத்துடன் அருகே நின்ற படைத்தலைவனிடம் "என்ன ஆயிற்று? அவர்களை எவரேனும் தாக்கினார்களா?" என்றான். "இல்லை, அவர்கள் கால்நடுங்கி நினைவிழந்து விழுந்தார்கள்" என்று அவன் சொன்னான். அதுவரை இருந்த சினமும் வெறியும் அகல பீமன் உடல் தளர்ந்தான். குனிந்து கையிலிருந்த குருதிக் கலத்தை பார்த்தான். அதை அவ்வண்ணமே வீசி எறிந்துவிட்டு திரும்பி வடபுலக் காட்டிற்குள் ஓடி மீளாத வண்ணம் மறைந்துவிட வேண்டுமென்று தோன்றியது. உடல் உலுக்கி வாயுமிழ வந்தது. கண்களை மூடி தன் உடலுக்குள் புரண்டெழுந்த அனைத்தையும் எண்ணங்களால் பற்றி அங்கங்கே அடக்கி தொகுத்து தன்னை மீட்டு விழிதிறந்தான். கையிலிருந்து சரிந்து சற்றே சிந்தத் தொடங்கியிருந்த கவசக்கலத்தை நேராகப் பிடித்தபடி நடந்தான்.

இருட்கனி - 29

சுபாகு தன்னிலை உணர்ந்தபோது துச்சாதனனின் இறப்பு விண்ணில் முரசொலித் தொடராக பரவியிருந்தது. அவன் முன்விழிப்பு நிலையில் அந்த முரசொலியை வேறேதோ இறப்பறிவிப்பு என எண்ணினான். மெல்ல மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்தபோது "இளைய கௌரவர் வீழ்ந்தார்!" என முரசுகள் இயம்புவதை உணர்ந்தான். அவனை நோக்கி ஓடிவந்த குண்டாசி "அறிந்தீர்களா? மூத்தவர் சுபாகு யானையால் கொல்லப்பட்டார்" என்றான்.

அவன் தானல்லவா சுபாகு என துணுக்குற்றான். "என்ன சொல்கிறாய்?" என்றான். "யானைமேல் அமர்ந்து கங்கையை நீந்திக்கடக்கும் விளையாட்டு. அனைவரும் இறங்கினர். அவர் தவிர பிறர் அனைவரும் மறுகரையை அடைந்தனர்." சுபாகு "நன்று, அவனுடைய நூலறிதல் அவனுக்கு உதவவில்லைபோல" என்றான். குண்டாசி திகைப்புடன் பார்க்க "நீ செல்க! நான் வருகிறேன்" என்றான். "யானை மறுகரையை அடைந்துவிட்டது, மூத்தவரே, மூத்தவர் சுபாகு மட்டும் வரவில்லை" என்றான் குண்டாசி. சுபாகு "அவன் வருவான்... கங்கையின் ஆழமும் அவனுக்குரியதே. செல்க!" என்றான்.

குண்டாசி சென்றபின் கண்களை மூடிக்கொண்டான். மீண்டும் முரசுகள் ஒலித்துக்கொண்டிருந்தன. "கௌரவனாகிய சுபாகு மறைந்தார். சுபாகு களம்பட்டார்." நான் அல்லவா சுபாகு? எனில் களம்பட்டது யார்? எங்கோ ஒரு பிழை நிகழ்ந்துள்ளது. என்ன பிழை அது? "பெருமல்லர் களம்பட்டார்! பெருந்தோளர் புகழுடல் அடைந்தார்!" சுபாகு துடித்து விழித்துக்கொண்டான். இறந்தது துரியோதனன் என்றா சொல்கின்றன முரசுகள்? துரியோதனன் களம்படக்கூடுமா? என்ன நிகழ்கிறது? முரசுகள் தெளிவாக

ஒலித்தன. “மூதாதையர் அருகணைந்தார் துச்சாதனர்! வெல்க கௌரவக்குடி! வெல்க அஸ்தினபுரி! வெல்க அமுதகலக்கொடி!

முரசொலி மென்படலமாக படிந்த களத்தில் கௌரவப் படைகள் அலறலாக, சொல்லிலா அழுகையாக, அரற்றலாக, அச்செய்தியை அதே விசையில் பரப்பின. பலர் படைக்கலங்களை நிலத்தில் வீசி ஆங்காங்கே அமர்ந்து அழுதனர். நெஞ்சில் அறைந்து வீறிட்டனர். இறந்தவர்கள்போல் மண்ணில் கிடந்த குருதி வழியும் உடல்கள் மேல் மல்லாந்து விழுந்து வானை வெறித்து நோக்கினர். பின்னிருந்து சகுனியின் ஆணை எழுந்தது. “அங்கர் முன்னெழுகிறார்! அங்கர் வெற்றிமுகம் கொள்கிறார்! விரைக! விரைக! படைகள் தங்களை தொகுத்துக்கொள்க! நம் இளவரசரின் குருதிக்கு பழிநிகர் கொள்க!”

ஆனால் ஒவ்வொரு கணமுமென கௌரவப் படை உளவிசையை முற்றிழந்து பின்னகர்ந்து கொண்டிருந்தது. மறுபுறம் பாண்டவப் படை அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு எழுந்து முன்வரவில்லை. அவ்வண்ணம் வந்திருந்தால் அப்போதே முடிந்திருக்கும் என்று தோன்றியது. இரு படைகளுமே ஒன்றையொன்று அஞ்சியவைபோல், அருவருத்தவைபோல் விலகிக்கொண்டிருந்தன. அல்லது இரு படைகளுக்கும் நடுவே தோன்றிய ஒன்றைக் கண்டு அவை விலக்கம் கொள்கின்றன.

சுபாகு எழுந்து புரவியை நோக்கி சென்றான். செல்லும்போதே “மூத்தவர் எங்கே?” என்று ஏவலரிடம் கேட்டான். “மருத்துவப்பணியாளர்களால் கொண்டுசெல்லப்பட்டார். நினைவழிந்திருக்கிறார் . அகிபீனா அளிக்கப்பட்டுள்ளது” என்றான் அவனுடன் ஓடிய ஏவலன். சுபாகு புரவியில்

விசையுடன் சென்றபடி சகுனியின் ஆணையை செவிகொண்டான். “படைகள் ஒன்று சேர்க! அங்கரையும் அஸ்வத்தாமனையும் கிருபரையும் சல்யரையும் துணை செய்க! பிறை வளைந்து வேல் முனையை அழுத்துக! நாம் சூழ்ந்துவிட்டோம். இதோ கவ்வி நொறுக்கவிருக்கிறோம். இதோ வெற்றி அருகணைந்துள்ளது! இதோ வெற்றிகொள்கிறோம்!”

திரும்பி நோக்கியபோது அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் கிருபரும் சல்யரும் பாண்டவப் படையை முற்றிலும் வளைத்துக்கொள்வதற்காக நெடுந்தொலைவு சென்றுவிட்டனர் என்று தெரிந்தது. கர்ணன் மையத்தில் எழுந்து தன்னை எதிர்த்த அர்ஜுனனை அறைந்து பின்செலுத்தி முன்னால் சென்றுவிட்டமையால் முப்புரி வேலெனத் தோன்றியது கௌரவப் படை. நடுவே முழுமையாகவே மையத் தொடர்பிழந்து, உணர்வு குலைந்து வெறும் திரளென முட்டி மோதி கொப்பளித்துக்கொண்டிருந்தது பாண்டவப் படை. அவர்கள் இழந்ததென்னவென்று ஒருகணத்தில் சுபாகுவுக்கு புரிந்தது. தங்கள் அறவல்லமை மேல் இருந்த நம்பிக்கையை. தெய்வங்கள் உடனுண்டு என்னும் எண்ணத்தை. இத்தருணம்போல் பாண்டவர்கள் எப்போதும் ஆற்றல் குன்றி இருந்ததில்லை.

காவல்மாடத்தின்மேல் சகுனி நின்றுகொண்டிருப்பதை கண்டான். புரவியிலிருந்து இறங்கி அவரை நோக்கி ஓடினான். “மாதுலரே” என்றான். “செய்திகள் அனைத்தையும் அறிவேன். இத்தருணத்தில் நம்மால் சற்று எழ முடிந்தால் நாம் வென்றுவிட்டோம் என்றே பொருள்” என்றார். “நமது படைகள் உளம்சோர்ந்திருக்கின்றன” என்றான் சுபாகு. “ஆம், நாம் நம்

தலைவர்களில் ஒருவனை இழந்தோம். நம் அரசரின் பாதி அவன். அவர்கள் இழந்தது மேலும் பெரிது. அவர்கள் இன்றுடன் மூதாதையரின் துணையை முற்றிழந்திருக்கிறார்கள். நம் உளச்சோர்வைவிட அவர்களின் உளச்சோர்வு சற்று மிகுதி. அந்த வேறுபாட்டை இங்கு நின்று இரு படைகளையும் நோக்குகையில் நான் உணர்கிறேன். அதை அவர்களுக்கு சொல்லிவிட முடிந்தால் நாம் வென்றோம்" என்றார் சகுனி.

சுபாகு அவரை வெறுமனே நோக்கியபடி நின்றான். அந்நம்பிக்கையை ஒரு பாதாளதேவனை பார்ப்பதுபோல அச்சத்துடன் பார்த்தான். சகுனியின் உடல் நோயுற்றதுபோல் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. உதடுகள் வெளிறியிருந்தன. ஆனால் அவர் உள்ளம் நிலைகொண்டிருப்பது கண்களில் தெரிந்தது. "மூத்தவர் துச்சாதனர்..." என சுபாகு தொடங்க "அவன் இறப்பதை நான் எதிர்பார்த்திருந்தேன். ஒருவேளை அவன் இறந்ததனால் அவர்களின் வஞ்சத்தின் வெம்மை குளிர்ந்து அழியக்கூடும். அவர்களை இயக்கிய விசை மழுங்கி அழியவும்கூடும்" என்றார் சகுனி.

சீற்றத்துடன் மேலும் சொல்லெடுக்க சுபாகு முயல "நீ உணர்வதை நானும் உணர்கிறேன். ஆனால் இக்களத்தில் கௌரவர்களின் நிரை முழுமையாகவே மடிந்துவிட்டது. அவன் மடிந்தான் என்னும் செய்தி வந்தபோது முதலில் நான் எண்ணியது, இவன் முதல் நாளிலேயே மடிந்திருந்தால் எஞ்சிய மைந்தர்கள் பிழைத்திருக்கக் கூடுமோ என்றுதான்" என்றார். "அவரை கொன்றவர் நீங்கள்!" என்றான் சுபாகு. "ஆம். இங்குள்ள அனைவரையும் கொல்பவன் நானே" என்று சகுனி சொன்னார். உதடுகள் ஏளனச் சிரிப்பில் வளைய "என்னை துவாபரன் என்கிறார்கள்" என்றார். சுபாகு கண்களில் நீர் எழ செயலற்று

நின்றான். “எழுந்துவிட்டோம். எண்ணமுடியாத இழப்பையும் அடைந்துவிட்டோம். இனி வெல்வதொன்றே வழி. அதுமட்டுமே இழப்புகளை சற்றேனும் பொருள் கொண்டதாக்கும்” என்று சகுனி சொன்னார்.

திரும்பி முரசுக்கழையர்களை நோக்கி “செல்க! செல்க! படைவீரர்கள் திரண்டு கொள்க! துயரொழிக! வெற்றி அணைகிறது” என்று அவர் ஆணையிட்டார். அவருடைய ஆணை முரசொலியாக வானில் எழுந்தது. நூறுமடங்கு பேருருக்கொண்டு அவர் வானிலிருந்து கூவிக்கொண்டிருந்தார். சுபாகு அந்த ஆணையை கண்களால் என கேட்டுக்கொண்டிருந்தான். சகுனி களைப்புடன் காவல்மாடத்தின் மூங்கில் கைப்பற்றில் அமர்ந்துகொள்ள மேலே தாவி வந்த ஏவலன் “அரசர் நனவழிந்திருக்கிறார். அவருக்கு அகிபீனாவும் பீதர்நாட்டு மயக்குமருந்தும் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள்” என்றான். “ஆம், அவர் இனி களம் வரவேண்டியதில்லை. அவரிடமிருந்து துயரையும் சலிப்பையும் படை பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை” என்ற சகுனி திரும்பி கௌரவப் படையை நோக்கி எரிச்சலுடன் தலையசைத்து “ஒரு தெய்வத்தருணம்! இது போலொன்று தெய்வங்களே இனி அருளா. இந்த அறிவிலிகள் சற்றே துணிவுகொண்டிருந்தால் இத்தருணத்திலேயே வெற்றி அமையும்” என்றார்.

துச்சாதனன் வீழ்ந்தான் எனும் செய்தி பாண்டவப் படைகளுக்குள் பரவிச் செல்லச் செல்ல மேலும் மேலும் பாண்டவர்கள் சோர்வடைந்துகொண்டிருந்தனர். அவன் வீழ்ந்ததை அவர்கள் எவரும் வெற்றியாக எண்ணவில்லை. அவன் அவ்விறப்பினூடாக ஒரு கொடுந்தெய்வமாக எழுந்து

பேருருக்கொண்டு அவர்களை அச்சுறுத்தினான் என்று பட்டது. படைகளின் அளவு சிறுத்திருந்தமையால் ஒற்றை நோக்கிலேயே திருஷ்டத்யும்னனையும் சாத்யகியையும் சிகண்டியையும் அர்ஜுனனையும் காண முடிந்தது. அனைவருமே உளத்திட்பம் அழிந்து தளர்வதை அத்தனை தொலைவிலும் சுபாகு உணர்ந்தான். "அவர்கள் தளர்கிறார்கள்! பின்னடைகிறார்கள்! சூழ்ந்து கொள்க! சூழ்ந்து கொள்க!" என்று சகுனி எழுந்து மீண்டும் ஆணையிட்டார். இவர் சலிப்புறப்போவதே இல்லை. ஓநாய் கிடந்து சாகாது, சென்றுகொண்டிருக்கையிலேயே சாகும் என்ற பாலைவனச் சொல்லை அவன் நினைவுகூர்ந்தான்.

அர்ஜுனனுடன் பொருதிக்கொண்டிருந்த கர்ணன் துச்சாதனன் கொல்லப்பட்ட செய்தியை, அவன் குருதியை பீமன் அருந்தியதை அருகிருந்த வீரர்கள் சொல்லக்கேட்டு பெருஞ்சீற்றத்துடன் விஜயத்தை நாணொலி எழுப்பியபடி அம்புகளால் அறைந்து அறைந்து பாண்டவ வீரர்களை வீழ்த்தியபடி முன்எழுந்து சென்றான். அச்செய்தியால் உளம்சோர்வுற்ற அர்ஜுனனின் காண்டீபம் நாண்தளர்ந்து அழுகையொலியென விம்மியது. அவன் தேரின் தூண்களும் மகுடமும் கர்ணனின் அம்புகளால் சிதைந்தன. இளைய யாதவர் அவனை கர்ணனின் அம்புவட்டத்திலிருந்து மேலும் மேலும் பின்னகர்த்தி கொண்டுசென்றார். ஒருகணத்தில் காண்டீபத்தை தாழ்த்தி தேர்த்தட்டில் தலைகுனிந்து அமர்ந்த அர்ஜுனனின் நெஞ்சக்கவசத்தை கர்ணனின் நீளம்பு வந்து அறைந்து உடைத்தது. பாண்டவப் படையினர் அலறியபடி சிதறிப் பின்னடைந்தனர்.

“அர்ஜுனன் வீழ்ந்தார்!” என எழுந்த ஓசையைக் கேட்டு திருஷ்டத்யும்னன் திரும்பிப்பார்த்தான். தொலைவில் குரங்குக்கொடி தெரியவில்லை. அவன் தொழும்பனிடம் மேலேறிச் சென்று நோக்கி உரைக்க ஆணையிட்டான். தொழும்பன் இறங்கி “அவர் படைமுகத்திலேயே இருக்கிறார். தேரில் விழுந்துவிட்டிருக்கிறார். ஆனால் இளைய யாதவரின் கைமுத்திரை அவர் இறக்கவில்லை என்பதையே காட்டுகிறது!” என்றான். “ஆம், அவர் எவ்வாறு இறக்க முடியும்! அது அல்ல ஊழின் வழி” என்று திருஷ்டத்யும்னன் எண்ணினான். ஆனால் அவ்வாறு சொல்லப்பட்டதுமே ஏன் தன் உள்ளம் அதை நம்பியது என அவன் அகம் வியந்தது. எந்த வீழ்ச்சியையும் நம்பும் நிலையில் நொய்வுற்றிருக்கிறது தன் உள்ளம் என அவன் உணர்ந்தான். முன்னரே அங்கே சென்றுவிட்டிருக்கிறது ஆழம். ஆகவே அனைத்தும் அங்கே வந்துசேர விழைகிறது. தோல்வியை முன்கண்டவர்கள் பின்னர் தோல்வியை அகம்விழைகிறார்கள். எண்ணி எண்ணி தோல்வியை இழுத்து ஏற்றுக்கொள்கிறார்கள். இறப்பின், வீழ்ச்சியின், நோயின் தேவியர் இறைஞ்சிக்கொண்டாலொழிய வருவதில்லை. வழிபட்டாலொழிய தங்குவதில்லை.

இளைய யாதவர் தேரைத் திருப்பி படைகளுக்குள் அதை கொண்டு சென்று மறைத்தார். “நில்... நில், இழிமகனே! உன் குருதியை நான் குடிக்கிறேன். ஆணிலியே, நில்!” என்று வெறிக்கூச்சலிட்டபடி அர்ஜுனனை அம்புகளால் தொடர்ந்து அறைந்து துரத்திச் சென்றான் கர்ணன். அர்ஜுனன் தேர் மேலும் மேலும் பின்னடைய கவசப்படைகள் வந்து இணைந்துகொண்டு அவனை காத்தன. அவன் தேர் நீரில் கல்லென மூழ்கி படையின் நடுப்பகுதிக்குள் சென்றது. கண்ணீருடனும் சீற்றத்துடனும் களிறுகள் சுமந்துகொண்டுவந்த எடைமிக்க

கேடயப்பரப்புகளின்மீதே அம்புகளால் அறைந்தான் கர்ணன். அவை இரும்புலையில் பொறிகளென சிதறிச் சிதறி தெறிக்க ஊடே அவனுடைய சொற்களும் தெறித்தன.

பின்னர் எழுந்து கேடயங்களைச் சுமந்துவந்த யானைகளின் கால்களை நோக்கி குறிவைத்தான். யானையின் காலை குறிவைப்பது வில்லவர்க்கு விலக்கு என்பதனால் அதுவரை அவன் அதை செய்திருக்கவில்லை. அவன் தொடுத்த அம்புகளிலொன்று கவசமேந்திய யானையை நிலைதடுமாறச் செய்தது. கேடயம் சரிந்து அதன் செவி தெரிந்தது. செவியிடுக்கில் சென்று தைத்த கர்ணனின் நீளம்பு அந்த யானையை வீழ்த்த அவ்விடைவெளியினூடாக அவனுடைய தேர் உள்ளே புகுந்தது. அவ்விடைவெளியை தொடர்ந்து அம்புகளால் நிலைநிறுத்தியபடி அவன் மைந்தர்கள் உள்ளே நுழைந்தனர். "கேடய வாயிலை மூடுக... யானைகள் இணைந்து கொள்க!" என்று திருஷ்டத்யும்னன் கூவினான். ஆனால் இரண்டு யானைகளின் செவிகள் தெரிய இரண்டையும் அம்புகளால் அறைந்து வீழ்த்தினான் கர்ணன். அந்த யானைகளின் பெரிய உடல்களே தடையாக அதற்கப்பாலிருந்த யானைகள் வந்து வழியை மூட முடியாமலாயிற்று.

மறுபுறம் அஸ்வத்தாமனின் அம்புகளை எதிர்கொள்ள இயலாமல் சிகண்டி பின்னடைந்தார். அவர்களிருவரும் பின்னடைந்ததை ஓசைகளினூடாகவே உணர்ந்து சாத்யகியும் பின்னடைந்தான். கிருபரும் சல்யரும் இருபுறமும் பாண்டவப் படைகளை வளைத்து முன்னகர திருஷ்டத்யும்னன் "ஒருங்கிணைக! ஒருங்கிணைக! நம்மை சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்! ஒருங்கிணைக!" என்று ஆணையிட்டுக்கொண்டிருந்தான். அது ஆணையென்பதை

மெல்ல மெல்ல இழந்து எச்சரிக்கையாக உருமாறியது. ஏதோ ஒரு கணத்தில் கதறல்போல ஒலிக்கத் தொடங்கியது. அந்த ஆணையாலேயே பாண்டவப் படை நம்பிக்கையிழந்தது. நம்பிக்கையிழப்பு உடனடியாக படையினரை தனி மானுடர்களாக ஆக்கிவிடுகிறது என்பதை திருஷ்டத்யும்னன் கண்டான். நம்பிக்கை என்பது பிறர்மேல் கொள்வது, திரள்மேல் எழுவது, திரளென்றாக்கித் தொகுத்து படையென நிறுத்துவது.

சகுனி "தாக்குங்கள்! ஒருங்கிணைந்து கொள்ளுங்கள்! படைத்தலைமைக்குப் பின் ஒருங்கிணைக!" என்றார். அவருடைய ஆணை தலைக்குமேல் அலையடித்துக்கொண்டிருக்க கீழே படையினர் இழுத்துக்கட்டப்பட்ட வலை கயிறுகள் அவிழ்ந்து தொய்வுறுவதுபோல தளர்வுற்றனர். நோக்கியிருக்கவே தங்கள் படைக்கலங்களை நிலத்தில் வீசிவிட்டு அலையலையாக மடிந்து பின்னால் வரத்தொடங்கினர். "முன்னேறுக! முன்னேறுக!" என்று ஆணையிட்டுக்கொண்டிருந்த சகுனி ஒருகணத்தில் இனியொன்றும் செய்வதற்கில்லை என்றுணர்ந்தார். கைகள் சரிய மீண்டும் பின்னடைந்து காவல்மாடத்தின் மூங்கில் வரிமேல் அமர்ந்து வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தார். சுபாகு அவரையும் படைகளையும் மாறி மாறி திகைப்புடன் நோக்கினான்.

கௌரவர்களின் அனைத்துப் படைகளும் பின்னடைய கர்ணனும் கிருபரும் சல்யரும் அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் மட்டும் படைமுகப்பில் எஞ்சினர். அவர்களின் புறத்துணைப் படையினர் திரும்பி நோக்கி தங்கள் படையினரும் விலகிச்சென்றுகொண்டிருப்பதை அறிவித்தனர்.

சல்யர் முதலில் முடிவெடுத்து திரும்பும்படி கைகாட்டி தன் படைத்துணைவருடன் பின்னடைந்தார். சூழ எழுந்த கௌரவப் படையின் இரு நண்டுக்கொடுக்குகளும் துண்டுகளாக உடைந்தன. கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் பாண்டவப் படைகளின் உள்ளே சிக்கிக்கொள்ளகூடும் என்று அஞ்சிய சகுனி உடல் துடிக்க எழுந்து கைகளை அசைத்து "ஒன்றாகப் பின்னடைக! சிதறாமல் பின்னடைக!" என்று கூவினார். அவருடைய ஆணை முரசொலியில் முழக்கமாகியது.

கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் மேலும் விசையுடன் பாண்டவப் படைகளை தாக்கிக்கொண்டிருந்தார்கள். "பின்னடைக! பின்னடைக! பாஞ்சாலரும் யாதவரும் பின்னடைக!" என்று சகுனி ஆணையிட்டார். அவ்வாணை சென்றுசேர்வதை படைகளின் அசைவாக நோக்க முடிந்தது. ஆணைகளை செவிகொள்ளும் யானையின் செவிகள் மடிந்து உடல் ஊசலாடுவதுபோல படைகள் ததும்பின. அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் போரை நிறுத்தி பின்னடைந்து, மேலும் மேலும் பின்வாங்கிக்கொண்டிருந்த கௌரவ மையப்படையை வந்தடைந்தார்கள். "ஒருங்கிணைக! ஒருங்கிணைக!" என சகுனி கூவினார். பின்னடையும் எந்தப் படையையும் எதிர்ப்படை துரத்துவது வழக்கம். ஆனால் பாண்டவப் படையும் பின்னடைந்து இணைந்துகொண்டிருந்தது.

பாண்டவப் படைகளுக்குள் புகுந்துவிட்டிருந்த கர்ணனை அப்படைச்சிதறல்கள் ஒன்றாக இணைந்து முழுமையாகவே சூழ்ந்துகொண்டன. திகைப்புடன் நோக்கியபின் "அங்கரை துணைசெய்க! சல்யரும் கிருபரும் கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் இணைந்து கூரம்பு வடிவு கொள்க! பாண்டவப் படையின் முகப்பை உடைத்து அங்கரை

மீட்டெடுத்து வருக!” என்று ஆணையிட்டார் சகுனி. அதுவரை கர்ணனைப் பற்றி எண்ணாதிருந்த அந்நால்வரும் ஒருவரையொருவர் நோக்கிக்கொண்டு கையசைவால் தங்கள் புறப்படைக்கு ஆணையிட்டு ஒற்றைச்சரடென்றாகி மடிந்து அம்புவடிவம் கொண்டு பாண்டவப் படை நோக்கி சென்றனர்.

கௌரவப் படைகளுக்கு நிகராகவே அதே விசையில் பாண்டவப் படையும் ஒட்டுமொத்தமாக பின்னடைந்துகொண்டிருந்தது. அவர்களில் முதன்மை வீரர் எவரும் படைமுகப்பில் இருக்கவில்லை. கர்ணனை சூழ்ந்துகொண்ட பாஞ்சாலத்தின் வில்லவர் படையை கர்ணனின் மைந்தர் எதிர்த்தனர். அவர்கள் நின்றிருந்த இடத்தைச் சூழ்ந்து உருவான வெளி பெரிய வட்டமாக அகன்றது. கர்ணன் உள்ளே சிக்கிக்கொண்டதை உணர்ந்து திருஷ்டத்யும்னன் “சூழ்ந்துகொள்க! அங்கர் சிறைப்பட்டார். சூழ்ந்துகொள்க! முதன்மை வீரர்கள் எழுக!” என முரசாணை விடுத்தபடி பாய்ந்து அணுகினான்.

கர்ணன் ஓர் அம்பை எடுத்து தொடுக்க, பேரொலியுடன் மஞ்சள் நிற மலரென அது வெடித்து அகன்றது. யானைகள் சிதறி அப்பால் விழுந்தன. பல யானைகள் கவசங்களை கீழே போட்டுவிட்டு அலறியபடி அகன்று விலகின. அவ்விடைவெளியினூடாக கர்ணன் தன் மைந்தருடன் பாண்டவப் படைசூழ்கையிலிருந்து வெளியே வந்தான். புகை சூழ்கையிலிருந்து கர்ணனும் தொடர்ந்து மைந்தரும் ஒவ்வொருவராக தோன்றுவதை உடல் மெய்ப்புகொள்ள சுபாகு பார்த்தான். முகில்களிலிருந்து தேவர்கள் எழுவதுபோல என்று அவன் உள்ளம் எண்ணியது. கர்ணனைக் கண்டதும் அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் வாழ்த்தொலி எழுப்பியபடி

ஓடிச்சென்று அவனை எதிர்கொண்டனர். கௌரவப் படை வாழ்த்தொலி எழுப்பியது.

பாண்டவக் கவசப்படை கேடயங்களை உதிர்த்து எஞ்சிய யானைகளுடன் அப்பால் சென்றது. நெளியும் உடல்களும் மானுடச் சிதைவுகளும் தேர்களின் உடைவுகளுமாக குருக்ஷேத்ரம் முற்றாக ஒழிந்தது. சுபாகு வானை பார்த்தான். அந்தி எழுவதற்கு இன்னும் நெடும்பொழுது உள்ளதென்று தோன்றியது. ஆனால் அதற்குள் இரு படைகளும் முற்றாகவே போரை நிறுத்திவிட்டிருந்தன. படைவீரர்கள் சிறு சிறு குழுக்களாக மாறி பின்னால் சென்று, செல்லுந்தோறும் விசைகொண்டார்கள். ஆணைகள் இல்லாமலேயே பலர் தங்கள் பாடிவீடுகளுக்கு சென்றனர். பலர் ஆங்காங்கே அமர்ந்துகொண்டனர். படைகளின் பின்முனை மண்ணில் படிந்தபடியே வர மெல்ல முழுப் படையுமே அமைவுகொண்டது.

பாண்டவப் படை மீண்டும் எழுந்து வந்து தாக்கினால் அரைநாழிகைப் பொழுதுக்குள் கௌரவப் படைகளை வென்றுவிடலாம். ஆனால் அங்கிருந்து பார்க்கையில் பாண்டவப் படையினரும் வெற்றுக்கைகளுடன் தங்கள் படைவீடுகளுக்கு மீண்டதையே காண முடிந்தது. சுபாகு சகுனி மீண்டும் அறைகூவக்கூடும் என எண்ணினான். ஆனால் கௌரவப் படைகளை நோக்கி நின்றிருந்த சகுனி பெருமூச்சுவிட்டு ஒழிந்த களத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் உடல் எடையை ஒரு காலில் அமைத்து மெல்ல எழுந்து நின்று மூங்கில் கழைகளைப் பற்றியபடி வலி முனகலுடன் படியிறங்கலானார்.

சுபாகு அவருக்குப் பின்னால் படிகளில் இறங்கும்போதுதான் துச்சாதனனை மீண்டும் நினைவுகூர்ந்தான். நெஞ்சை அடைப்பதுபோல் தோன்ற கைப்பிடியைப் பற்றியபடி கண்மூடி படிகளின் நடுவே நின்றான். பின்னர் வியர்வை குளிர நினைவுமீண்டு மெல்ல இறங்கி கீழே வந்தான். சகுனி தன் தேரை நோக்கி சென்றார். அவரிடம் அவன் பேச விழைந்தான். எவரிடமேனும் பேச வேண்டியிருந்தது. அவன் அருகணைந்து "நம் படைகள் இனி எழா என தோன்றுகிறது" என்றான். "ஆம், உளச்சோர்வு கொண்டுவிட்டார்கள்" என்றார் சகுனி.

"மூத்தவரின் சாவு அவர்களுக்கு நம்பிக்கை இழப்பை உருவாக்கிவிட்டது" என்று சுபாகு சொன்னான். "அவர்கள் பீஷ்மர் மறைந்த அன்றே மெய்யான நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். துச்சாதனனை அவர்கள் பொருட்டெனக் கருதவில்லை" என்று சகுனி சொன்னார். சுபாகு உடலெங்கும் சினம் பரவ நின்றான். பின்னர் அவருடன் சென்றுசேர்ந்து "எனில் ஏன் அவர்கள் உளச்சோர்வு அடைகிறார்கள்?" என்றான். "அவர்கள் அவனுடன் சேர்ந்து தாங்களும் இறந்தார்கள்..." என்று சகுனி சொன்னார். தேரிலேறிக்கொண்டு "அவர்களின் நெஞ்சு பிளக்கப்பட்டது. குருதி அருந்தப்பட்டது" என்றார்.

சுபாகு விழித்து நிற்க சகுனி உதடுகள் வஞ்சமென நகைகாட்டி வளைய "போர்களில் வீரர்கள் தங்களை பெருவீரர்களுடன் அடையாளம் கண்டுகொள்கிறார்கள்" என்றார். "அவர்கள் மீளமாட்டார்களா?" என்றான் சுபாகு. "நாளை மீண்டுவிடுவார்கள். ஒரு இரவு போதும் எல்லா பழியுணர்வையும் பிழையுணர்வையும் கடந்து நான் என்றும் எனக்கு என்றும் எழ..." என்றபின் சகுனி கையசைவால் ஆணையிட தேர் எழுவிசை கொண்டு ஓசையுடன் சாலைமேல் ஏறியது.

சுபாகு தேர் செல்வதை நோக்கியபடி நின்றான். அதை மறுக்கவேண்டும் என விழைந்தான். அவனே அல்ல. எவராவது. ஆழ்ந்த சொல்லுடன் அல்ல என வேண்டும். அவன் அப்பால் நின்ற படைத்தலைவனை நோக்க அவன் வந்து தலைவணங்கினான். "மூத்தவரின் களச்சாவு நம் படைகளை சோர்வுறச் செய்துள்ளது" என்றான். ஆம் என அவன் தலையசைத்தான். "அவர் கொல்லப்பட்ட முறை, அவர் அடைந்த இழிவு நம்மவர்களை அஞ்ச வைத்துள்ளது. அதை வஞ்சமென ஆக்கியாக வேண்டும்" என்றான் சுபாகு. படைத்தலைவன் ஒன்றும் சொல்லவில்லை.

"அதற்கு என்ன செய்யலாம்? சொல்க!" என்றான் சுபாகு. படைத்தலைவன் "ஆணையிடுக!" என்றான். "உமது எண்ணம் என்ன?" என்று சுபாகு கேட்டான். "நம் படைகள் வஞ்சம் கொள்ள வாய்ப்பில்லை" என்றான் படைத்தலைவன். "ஏன்?" என்று சுபாகு கேட்டான். "அவர் தன் வினைப்பயனையே அறுவடை செய்தார் என அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் இக்களத்தில் கொல்லப்பட்டவரின் இடத்தில் இல்லை." சுபாகு "ம்" என்றான். "அவர் கொல்லப்பட்டமையால் அவர்கள் அதிர்ச்சி அடைந்திருக்கலாம். ஆனால் பழி நீங்கியது என்றும் நாளை ஆறுதல் கொள்ளக்கூடும். மீண்டெழுவதற்கான வழி அதுமட்டுமே" என்றான் படைத்தலைவன்.

"எதிலிருந்து மீள?" என்றான் சுபாகு. "பழியிலிருந்து. பெண்ணை அவைச்சிறுமை செய்தவர் அவர். அதை அவர் தன் இழிசாவால் நிகர்செய்தார்..." சுபாகு "அப்பழியில் இப்படைகளுக்கு பங்கில்லையா என்ன?" என்றான். "இல்லை, அதை கௌரவக்குடியின் பழி என்றே நம் படைகள் எண்ணுகின்றன." சீற்றத்துடன் "உமக்கு எப்படி தெரியும்

அவர்களின் அகம்?" என்று சுபாகு கேட்டான். "நான் அவர்களில் ஒருவன்" என்றபின் மீண்டும் தலைவணங்கி படைத்தலைவன் இரு பின்னடி எடுத்து வைத்தான். செல்க என கைகாட்டியபின் சுபாகு தன் புரவி நோக்கி சென்றான்.

இருட்கனி - 30

குருக்ஷேத்ரத்திலிருந்து தென்கிழக்கு நோக்கி செல்லும் காட்டுப்பாதையில் புதர்களை ஊடுருவியபடி பீமன் புரவியில் சென்றான். அவனது தலைக்குமேல் அன்னைக் குரங்கு ஒன்று "நில்! நில்!" என்று கூவியபடி கிளைகளிலிருந்து கிளைகளுக்கு வால் விடைத்துத் தாவி, ஊசலாடி அமர்ந்து, மீண்டும் துள்ளி கிளை நுனி பற்றி ஊசலாடி அமர்ந்தெழுந்து கூவியபடி உடன் வந்தது. "நில், மைந்தா! நில்!" என்று மீண்டும் அது கூவியது. பீமன் அதன் குரலைக் கேட்டாலும் எவ்வகையிலும் பொருட்படுத்தவில்லை. தன்னுள் ஆழ்ந்து தோள்கள் தளர்ந்து உடல் முன்னால் சாய்ந்து ஊசலாட புரவியில் அமர்ந்திருந்தான். அவன் உடலிலிருந்து எந்த ஆணையையும் பெறாவிட்டாலும்கூட அவன் உள்ளத்தை அறிந்ததுபோல் புரவி பாய்ந்தோடியது.

அதன் குரல் கேட்டு மேலும் மேலும் குரங்குகள் வந்து சேர்ந்துகொள்ள தலைக்கு மேல் சுழல்காற்று ஒன்று கிளையுலைத்து இலைஉதிர்த்துச் சுழன்று உடன்வருவதுபோல் தோன்றியது. "நிறுத்துங்கள் அவனை! மைந்தா, நில்!" என்று அன்னைக் குரங்கு கூவிக்கொண்டிருந்தது. பீமன் நடுவே வந்த பிலம் ஒன்றை புரவியில் தாவிக்கடந்தான். கூழாங்கற்கள் புரவியின் குளம்பில் பட்டு உதிர்ந்து பிலத்தின் ஆழத்திற்குள்

இறங்கின. அங்கே முட்டையிட்டு குழவிகளை ஈன்று நிறைந்து நெளிந்துகொண்டிருந்த நாகங்கள் சீறி தலை தூக்கின. அவற்றின் குழவிகள் அஞ்சி உடல் நெளித்து தளிர்பத்தி விரித்தன.

பீமனின் புரவி சூழ்ந்திருந்த எதையும் உணராததுபோல், இலக்கொன்றையே அறிந்ததுபோல் சென்றது. பிறிதொரு குரங்கு தூமவர்ணி என்னும் அந்த அன்னைக் குரங்குடன் இணைவந்தபடி "அவர் எங்கு செல்கிறார் என்று தெரியுமா?" என்று கேட்டது. அன்னைக் குரங்கு "எங்கெனினும் இப்போது அவன் செல்வது தீய இலக்கிற்கே" என்றது. "ஏன்?" என்றது இன்னொரு குரங்கு. தூமவர்ணி பல்காட்டிச் சீறி "அறிவிலி, அவன் கைகளை பார். அந்தக் கலம் நிறைய குருதி இருக்கிறது. அது மானுடக் குருதி... உன் மூக்குமா அடைந்துவிட்டது?" என்றது. இன்னொரு குரங்கு தாவியபடி "ஆம். அது மானுடக் குருதி. அது உறையத்தொடங்கியிருக்கிறது. அதன் மேற்பரப்பில் கரிய படலம் உருவாகி அசைவில் நலுங்கிக்கொண்டிருக்கிறது" என்றது. "ஆம், வாடிய செம்மலரிதழ்போல சுருக்கம் கொண்டிருக்கிறது" என்றது இன்னொரு குரங்கு.

"அக்குருதியின் அனல் அணையத்தொடங்கியிருக்கிறது. இன்னும் சற்று நேரத்தில் அது கரியென்றாகும்" என்றது ஒரு குரங்கு. பீதகர்ணி என்னும் தாட்டான் குரங்கு ஆழ்ந்த குரலில் "அவன் அக்குருதியுடன் எங்கு செல்கிறான் என்று எனக்கு தெரியும்" என்றது. "ஏதேனும் கொடுந்தெய்வத்திற்கு அதை பலியென அளிக்கப்போகிறான். கற்சிலை ஒன்றின் மேல் அதை ஊற்றி முழுக்காட்டு நிகழ்த்துவதே அவன் எண்ணம்." தூமவர்ணி பெருமூச்சுடன் நின்று "இனி அவனை தொடர்வதில்

பயனில்லை" என்றது. பீதகர்ணி "நாம் அவன் மேல் குதிப்போம். அவனை கைகால் பற்றி நிறுத்துவோம்" என்றது. சௌவர்ணன் என்னும் ஆண்குரங்கு "நம்மினும் பன்மடங்கு ஆற்றல் கொண்டவன் அவன். நம் போர்முறைகளை நம்மைவிட அறிந்தவன். அவனிடம் நாம் போரிட இயலாது" என்றது.

குரங்குகள் ஒவ்வொன்றாக கிளைகளில் நின்றுவிட பீமன் ஒற்றையடிப் பாதையில் குறையா விரைவில் சென்றுகொண்டிருந்தான். குரங்குகள் மரங்களின் எல்லை வரை வந்து கிளை நுனியில் எழுந்தமர்ந்து உரக்க கூச்சலிட்டன. தூமவர்ணி "மைந்தா, பேருருவம் கொண்டவனாயினும் இதுவரை வாழ்வின் பொருளறியாதவன் நீ" என்று கூவியது. "நில், அன்னை சொல் கேள்! நில்!" பின்னர் துயருடன் "அவன் செவிகள் மூடியிருக்கின்றன. தன்னை வெறுப்பவனும் தன்னை வழிபடுபவனும் செவிகளை மூடிக்கொள்கிறான்" என்றது.

பிற குரங்குகள் அதைச் சுற்றி அமர்ந்தன. "அவன் பெருந்துயர் நோக்கி செல்கிறான்" என்று தூமவர்ணி சொன்னது. "இறப்பா? சிறுமையா?" என்றது சௌவர்ணன். "மீள முடியாத உண்மையைப்போல் பெருந்துயர் அளிப்பது வேறு ஏது?" என்று தூமவர்ணி சொன்னது. "அது அவனை சிறைப்படுத்துமா?" என்றது பீதகர்ணி. "இல்லை, எல்லா உண்மைகளும் விடுதலை அளிப்பவையே" என்று அன்னை சொன்னது. "எனில் அதை அவன் அறிந்துகொள்வதல்லவா நன்று?" என்றது சௌவர்ணன்.

தூமவர்ணி சீற்றத்துடன் பற்களைக் காட்டி "எந்த அன்னையாவது தன் மைந்தன் பட்டு உலகறிந்து முதிரவேண்டுமென்று எண்ணுவாளா? தன் மைந்தனின் அலைக்கழிப்பும் துயரும் வாழ்வை அறியாததனால் அமைவதே என்று அறிந்தாலும் மைந்தர் முதிர்ந்து

வாழ்வறியவேண்டுமென்று பெற்றோர் விரும்புவார்களா?" என்றது. பீதகர்ணி "ஆம், என்றும் உலகறியா சிறுமைந்தராக அவர்கள் இருக்கவேண்டும், இவ்வுலகே குவிந்து அவர்களை காக்கவேண்டும் என்றுதான் இவ்வுலகெங்கும் அன்னையர் எண்ணுகிறார்கள்" என்றது.

"ஏன்?" என்றது அப்பால் வந்து கிளையில் அமர்ந்த சிறுகுரங்கான மூர்த்தன். தூமவர்ணி சலிப்புடன் தலையசைத்து "அறியேன். மானுடர் எவ்வண்ணம் உணர்கிறார்கள் என்பதை அவர்கள்தான் கூறவேண்டும். மைந்தர் முதிர்கையில் தந்தையர் தங்கள் இறப்பை உணர்கிறார்கள். அன்னையர் பொருளின்மையை சென்றடைகிறார்கள். அதனாலாக இருக்கலாம். அன்றி முதிர்வென்பதே இறப்பை நோக்கிய செலவு என்று உணர்ந்ததனாலாக இருக்கலாம்" என்றது.

அனைத்துக் குரங்குகளுக்கும் பின்னால் மூச்சிரைக்க வந்த மிக முதிர்ந்த பெருங்குரங்கான கும்போதரன் கிளைக்கவரில் அமர்ந்து வாலை தொங்கவிட்டு சாய்ந்துகொண்டு "அவ்வாறல்ல. இளமையில் அறியாமையே களிப்பும் துயரும். வளர்தல் என்பது அறிதல். பின்னர் அறிதலே களிப்பும் துயரும். அறியாமையும் அறிவும் அறிபவனுடன் விளையாடுகின்றன. அறிதலும், அறியாமையை கண்டடைதலும், மீண்டும் அறிதலும், அறிதொறும் அறியாமை காண்டலும் என நிகழும் அந்த விளையாட்டே வாழ்வின் கொண்டாட்டம். வலியும் துயரும் கொண்டாட்டமே என்று அறிக! ஊசல் பின்னகராவிடில் முன்னெழ இயலாது" என்றது.

இளம்குரங்குகள் அதை நோக்கின. கும்போதரன் "முதிர்ந்தபின் அறிபவை அனைத்தும் மலைகளைப்போல் மாறாது நிலைகொள்ளும் மெய்மைகள். பெருமெய்மைகள் அனைத்தும்

அறிபவனுக்கு வெறுமையை மட்டும் அளிக்கின்றன" என்றது. "ஏன்?" என்று சிறுவனாகிய புஷ்பகர்ணி அதை நோக்கி தாவிச் சென்று அருகே நின்று தலைசரித்து இமைமூடி விழிமின்னி கேட்டது. "ஏனெனில் இங்கு மகிழ்ச்சியென்று நாம் அறிவது அனைத்தும் ஆணவத்தின் பிறிதொரு வடிவையே. வெல்வது, நுகர்வது, ஈவது என நாம் இங்கு கொண்டாடும் அனைத்தும் ஆணவத்தின் தோற்றங்களைத்தான். மெய்யறிவு ஆணவத்தை அழிக்கிறது. மகிழ்வை மறைத்துவிடுகிறது" என்று கும்போதரன் சொன்னது.

"ஆணவ அழிவு என்பது பேருவகை என்றல்லவா கேட்டிருக்கிறேன்?" என்று மரங்களுக்கிடையிலிருந்து ஒரு பெண்குரங்கு சொன்னது. கும்போதரன் திரும்பி அந்த இளம் பெண்குரங்கை சற்று நேரம் பார்த்தது. அதுவரை பேசிய அனைத்தையும் மறந்து அரைத்துயிலில் ஆழ்ந்தது. புஷ்பகர்ணி பாய்ந்து அதன் அருகே வந்து அதன் காலைப்பற்றி அசைத்து "சொல்லுங்கள், தாதையே" என்றது. சற்றே இழுபட்ட வாயிலிருந்து எச்சில் கோழை வழிய அதை கையால் துடைத்துக்கொண்டு "என்ன? என்ன?" என்றது கும்போதரன். "சற்று முன் சொல்லிக்கொண்டிருந்தீர்களே..." என்றது இன்னொரு இளமைந்தனாகிய மூர்த்தன். "என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்?" என்றது கும்போதரன்.

புஷ்பகர்ணி கிளைபற்றி மேலேறி அதன் தலையருகே வந்து சிறு கிளையில் அமர்ந்து "மெய்மையை அறிவது துயரென்றீர்கள். அது மகிழ்வென்றல்லவா சொல்லப்பட்டுள்ளது என்று அவர் கேட்டார்" என்றது. "ஆம், மெய்யறிந்து அதை சென்றடைந்தவர்கள் கூறிய சொற்கள் அவை. அது மகிழ்வென்றே உரைக்கின்றன நம் உடலில் எழும் மூதாதையர்

குரல்களும். மானுடரின் நூல்களில் பதிந்துள்ள சொற்களும் மற்றொன்று கூறவில்லை. ஆயினும் நாம் அறியும் மெய்மையின் கணத்தோற்றங்கள் அனைத்தும் நாம் கொண்டுள்ள அனைத்தையும் பொருளற்றவையாக்கி சோர்வையும் சலிப்பையும் வெறுமையையும் மட்டுமே அளிக்கின்றன" என்றது கும்போதரன்.

சற்று நேரங்கழிந்து பீதகர்ணி "ஆம், நான் இவ்வாழ்வில் பொருட்படுத்தக்கூடிய எதையேனும் அறிந்திருக்கிறேன் என்றால் அதன்பின் நெடுநாட்கள் வெறுமையை மட்டுமே உணர்ந்திருக்கிறேன். அவ்வெறுமையிலிருந்து என்னை பிடுங்கி அகற்றிக்கொண்டு பொருளற்றவை என்று நன்கறிந்த சிறு செயல்களில் ஈடுபட்டு, சிறு பூசல்களில் ஊடாடி, சிறு விழைவுகளை துரத்திச்சென்று, அவ்வெறுமையிலிருந்து மீண்டு வந்தேன். இங்கு நான் வைத்திருப்பவை அனைத்தும் அதன் பின்னர் நான் திரட்டி என் மேல் அணிந்துகொண்டிருப்பவைதான்" என்றது.

மற்ற குரங்குகள் ஒன்றும் சொல்லவில்லை. சில குரங்குகள் எண்ணம்கூர சலிப்புற்றவை என தலையை சொறிந்துகொண்டன. பீதகர்ணி தொடர்ந்தது "அவ்வப்போது தனிமையில் அவ்வெறுமையை சென்று தொடுகையில் என் உள்ளம் திடுக்கிட்டு குளிர்ந்து உறைகிறது. அக்கணமே அதை உதறி மீண்டு வந்து இவற்றில் என்னை ஈடுபடுத்திக்கொள்கிறேன்" என்றது. சௌவர்ணன் "ஏன் நீ அறிந்தவற்றில் சென்று நிலைகொள்ள முடியவில்லை?" என்றது. "அங்கு செல்ல நான் இங்கிருக்கும் அனைத்தையும் விட்டுவிடவேண்டும். நான் அறிந்து திளைத்து அறிதல்களாகவும் நினைவுகளாகவும் சேர்த்துக்கொண்டுள்ள

ஒவ்வொன்றையும். எண்ணவே அச்சம் கொள்கிறேன்" என்றது பீதகர்ணி.

"ஒவ்வொரு அறிதலும் ஒரு சிறு இறப்பு" என்றது கும்போதரன் எங்கிருந்தோ என. அக்குரல் அதன் வாயிலிருந்துதான் எழுந்ததா என்னும் ஐயம் பிற குரங்குகளுக்கு ஏற்பட அவை மெய்ப்பு கொண்டன. "ஆனால் மெய்மை விடுதலை செய்கிறது என்கிறார்கள். நீ இப்போது கையில் வைத்திருக்கும் ஒவ்வொன்றும் உன்னை இங்கு கட்டிப்போடுவன. இவை உன்னால் தாள முடியாத துயரை எப்போதுமே அளிக்குமெனில் அக்கணமே அவற்றை உதறிவிட்டு நீ உள்ளே வைத்திருக்கும் அந்த மெய்மையை சென்று தொட்டுவிடுவாய். அதை பற்றிக்கொண்டு இவையனைத்தையும் துறக்க முயல்வாய்" என்றது தூமவர்ணி.

கும்போதரன் "மெய்மை விடுதலை செய்கிறது" என்று தானிருந்த மாற்றுலகிலிருந்து தனக்கே என சொன்னது. "விடுதலை என்பது இழப்பும் கூடத்தான். இழப்பவற்றின் ஏக்கம் விடுதலை கொண்ட எவருக்கும் சற்று நாள் இருக்கும். பெருநோய் கொண்டு வலி சூடித் துடிப்பவர்கள்கூட அதிலிருந்து விடுதலை கொண்டதும் அவ்வலியை நினைத்து சற்று ஏங்குவதை பார்த்திருக்கிறேன். தன்னிடம் இருந்த நன்றோ தீதோ விலகிச்சென்றால் மானுடன் ஏக்கம் கொள்கிறான். ஏனெனில் அதை தன்னுடையதென்றே அவன் உணர்கிறான். எதுவாயினும் அது தன் ஆணவத்தின் ஒரு பகுதியே என ஆழத்தில் அறிந்திருக்கிறான்."

"அந்த ஏக்கத்தையும் கடந்துவிட்டால்தான் மெய்மை அளிக்கும் விடுதலை உவகையை அளிக்கத்தொடங்கும். அது பிறிதொன்றால் மறுநிகர் செய்யப்படாத உவகை என்பதனால்

கணந்தோறும் பெருகும். பெருகுந்தோறும் பெறுபவனையும் பெருகவைப்பதனால் திகட்டுவதில்லை. மூதாதையர் சொல்லைக்கொண்டு நோக்கினால் பெறுபவன் பெறுபொருளாகவே மாறுவதனால் பெறுவதென்பதே நிகழாமலாகி பெருவெளியென்று விரிந்து இருப்பும் இன்மையும் அகன்று பரம் என நின்றிருக்கும் நிலை அது."

சீற்றத்துடன் பெண்குரங்கான விருக்ஷநந்தினி கேட்டது "பிரம்மம் மானுடனுடன் ஏன் அவ்வாறு விளையாட வேண்டும்?" பீதகர்ணி "எனக்கு புரியவில்லை. என்ன விளையாட்டு?" என்று கேட்டது. "இங்கு இத்தனை இனிய காட்டை, இன்கனிகளை, அழகிய சுனைகளை, காற்றை, ஒளியைப் படைத்து நம்மை சூழ வைத்திருக்கிறது. நாம் அதில் ஆடிக் களிக்கிறோம். உடன் நோயையும் இறப்பையும் பின்னி அனைத்தையும் மறுநிகர் செய்திருக்கிறது. மகிழ்கையில் துயரையும் நலம்கொள்கையில் நோயையும் வாழ்வில் சாவையும் எண்ணி எண்ணி நாம் நிலையழிகிறோம்."

அதன் குரல் ஓங்கியது. "இவையனைத்திற்கும் அப்பால் இவையனைத்தும் பொருளற்றவை என்று காட்டும் ஒன்றை நிறுவி அதன் ஒரு துளி சுவை அனைவருக்கும் ஒருகணமேனும் அமையும்படி வகுத்துள்ளது. இங்கிருக்கும் நன்மை தீமைகளில் ஊசலாடி எங்கோ இருக்கும் இவைகடந்த ஒன்றை சற்றே அறிந்து முழுதடைய ஏங்கி எத்திசையும் தேடி இங்கிருந்து அங்கென முடிவிலா ஊசலாட்டத்தை அடைந்து ஒருகணமும் நிலைபெறாமல் அழியும் பொருட்டே உலகிலுள்ள உயிர்களனைத்தும் நெறிப்படுத்தப்பட்டுள்ளன."

"அறிவென்பது பிரம்மம் அளித்துள்ள ஒரு கொடை. அதனூடாக அறிவுகொண்டோர் தன்னை வந்தடையவேண்டுமென்று அது

எண்ணுகிறது" என்றது கும்போதரன். "நீ அறியமாட்டாய், இங்குள உயிர்கள் ஒவ்வொன்றும் முற்பிறவியில் நன்மை செய்தவை. நலம் பேணி, வீரம் விளைவித்து, அறம் நின்று, தவமியற்றி, மேலும் மேலும் பிறவியெடுத்து அறிவடைந்து அகம் கூர்கொண்டு மெய்மையை சென்றடைகின்றன. பிரம்மம் பல்லாயிரம்கோடித் துளிகளாக தன்னை சிதறடித்து ஒவ்வொரு துளியையும் தன்னை நோக்கி ஈர்த்து தானென இணைத்து முடிவிலாது தன்னை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது."

"இச்சொற்கள் இங்கு நின்றுவிடுவதே நல்லது. இவற்றை நாம் மீளமீளப் பேசுவதனால் பொருளொன்றுமில்லை. முதியோர் எப்போதும் இவற்றை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இளையோர் அவற்றை முற்றறியக் கூடுவதுமில்லை. எங்கேனும் ஒரு தலைமுறையில் முதியோர் இவற்றைக் கூறுவதை நிறுத்திக்கொண்டார்கள் என்றால் நம்மைப்போன்ற மரமானுடர்களும் அவர்களைப் போன்ற நிலமானுடர்களும் விடுதலைபெறுவோம்" என்றது பீதகர்ணி.

கும்போதரன் "ஆம், நானும் அதை எண்ணுவதுண்டு. துள்ளித் திரியும் என் சிறார்களிடம் ஒருபோதும் இவற்றை கூறலாகாதென்று. ஆயினும் இங்கிருக்கும் ஒவ்வொன்றும் நான் உணர்ந்த ஒன்றுக்கு சான்று கூறுவனவாக தன்னை மாற்றிகொள்கையில், ஒவ்வொரு நிகழ்விலும் கூறுவதற்கு ஒன்று என்னிடம் எழுந்து நாகொண்டு துடிக்கையில் உளம் அடக்கி அமர்வது அத்தனை எளிதாக இல்லை" என்றது. நீள்மூச்சுடன் "நன்று. கூடுமானவரை கூறிவிட்டோம். இங்கு நிறுத்திகொள்வோம்" என்று சொல்லி விழிகளை மூடிக்கொண்டது.

எப்போதும் அச்சொற்கள் அவ்வண்ணம் திசைமுடிவில் முட்டி அறுபட்டு நிலைகொள்வதை அறிந்திருந்த குரங்குகள் ஆங்காங்கே சென்று அமர்ந்தன. சிறிய குரங்குகள் ஒன்றையொன்று துரத்தி கிளைகளில் தாவி விளையாடத் தொடங்கின. முலையருந்தும் மகவுகளை வயிற்றுடன் அணைத்தபடி அன்னைக் குரங்குகள் கவர்கிளையில் அமர்ந்து விழி மூடின. பெண்குரங்குகள் ஒன்றையொன்று பேன் துழாவத்தொடங்க நான்கைந்து முதிய ஆண் குரங்குகள் அப்பால் சென்று ஒரு கிளையில் அமர்ந்து விசைகொண்ட கையசைவுகளுடனும் உறுமல்களுடனும் தங்களுக்குள் பேசிக்கொண்டன.

கும்போதரன் கால்களை நீட்டி அமர்ந்தது. அதன் விழிகள் சரிந்தன. இளங்குரங்கான மூர்த்தன் அருகே வந்து அதன் தொடை மேல் கைவைத்து "தாதையே, எனக்கொரு கதை சொல்லுங்கள்" என்றது. "உன் நண்பர்கள் அங்கே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சென்று விளையாடு" என்றது கும்போதரன். "நீங்கள் கதை சொன்னால் நான் அந்தக் கதைகளை அவர்களிடம் சொல்வேன்" என்றது மூர்த்தன். "அவர்களிடம் எல்லா கதைகளையும் சொல்லிவிட்டேன்." கும்போதரன் சிரித்து "அவர்கள் உன் கதைகளை விரும்புகிறார்களா?" என்றது. "அவர்கள் நான் கதை சொன்னால் கேட்பார்கள். சற்று நேரத்திலேயே கதையிலிருந்து விலகிவிடுகிறார்கள்" என்றது மூர்த்தன்.

"ஏன் உனக்கு மட்டும் உள்ளம் விலகவில்லையா?" என்று கும்போதரன் கேட்டது. மூர்த்தன் மேலும் அதன் உடலுடன் ஒட்டிக்கொண்டு "இல்லை, எனக்கு இவர்களின் இந்த விளையாட்டுகளைவிட கதைகேட்பதுதான் உகந்ததாக உள்ளது.

இங்கிருக்கும் இந்தக் காடு, காற்று, ஒளி அனைத்தையும்விட கதைகளில் உள்ள காடும் இருளும் ஒளியும்தான் என்னை கவர்கின்றன. கதைகளை கற்பனை செய்துகொள்ளும் பொருட்டே இவற்றையெல்லாம் பிரம்மம் படைத்திருக்கிறதென்று தோன்றுகிறது" என்றது. கும்போதரன் புன்னகையுடன் அச்சிறுகுரங்கின் புன்மயிர் பிசிறி நின்ற தலையைத்தொட்டு "ஆம், நீ பிறிதொருவன். இளமையில் உன்னைப்போலவே நானும் இருந்தேன்" என்றது.

"என்னுடன் பிறந்தவர்கள் கிளையிலிருந்து கிளை தாவி மகிழ்ந்துகொண்டிருக்கையில் உச்சிக்கிளை நோக்கி சென்று நுனியில் அமர்ந்து விரிந்த வானை நோக்கி எதையென்று தெரியாமல் எண்ணி ஏங்கி விழிநீர் விடுபவனாக இருந்தேன். கனிந்த பழத்தை பார்க்கையில் அச்செம்மையும் மணமும் நான் அறியாத எவரோ எனக்களிக்கும் பரிசென்று கருதினேன். நோயுற்று மறைந்துகொண்டிருக்கும் முதியவர்களைப் பார்க்கையில் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாத நீர்ப்பரப்பொன்றில் மூழ்கிக்கொண்டிருப்பவர்களாக, அடியிலிருந்து ஒரு கை அவர்களை இழுத்து எடுத்து தங்கள் மடியில் வைத்துக்கொள்வதாக கற்பனை செய்தேன்" என தொடர்ந்தது.

"பிறருடைய உடலுரமும் கிளைதாவும் விசையும் எனக்கு கூடவில்லை. என்னை அவர்கள் ஏளனம் செய்தார்கள். ஆனால் உள்ளூர என் மேல் மதிப்பும் கொண்டிருந்தார்கள். என் தோழன் என்னைவிட மும்மடங்கு ஆற்றல் கொண்டவன். இருமடங்கு பெரிய உடல் கொண்டவன். என்னை எப்போதும் கேலிச்சொற்களால்தான் அழைத்து வந்தான். ஆனால் இவர்கள் அனைவரிடமிருந்தும் என்னை பாதுகாத்தான். இக்குடியின்

தலைவன் என்று அவன் ஆனபோது அவனுடைய தோழனாக நானும் குடித்தலைமைக்கு பொறுப்பேற்றேன். சென்ற மழைக்காலத்தில் அவன் உயிர்துறப்பதுவரை நானும் இணைந்தே இக்குடியை நடத்தினேன்."

"இதை இவ்வளவு பெருக வைத்தது அவன் தோள்வல்லமை. அவனுடைய கொடிவழியில் வந்தவன் நீ. நீ கதைவிழைவு கொண்டிருக்கிறாய். என் மைந்தர் தோளாற்றல் கொண்டுள்ளனர். எப்போதும் ஒருவர் நம் குடியில் இப்படி இருந்துகொண்டிருப்பார்கள்" என்றது கும்போதரன். உடனே சற்று உளம் சோர்ந்து "இவ்வாறு இருப்பது நன்றோ தீதோ என்று எனக்கு தெரியவில்லை. நான் கொண்ட அலைக்கழிப்புகள் எதையும் என் தோழன் அடையவில்லை. இங்கு உள்ள இன்பங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அடைந்தான். ஆற்றல் மிக்க அரசன் என்று மலைமானுடக்குடிகள் அனைவரும் அவனை புகழ்ந்து நினைவில் கொண்டிருக்கிறார்கள். இங்கு எதையும் அவன் இழக்கவில்லை. விண்புகுந்து அங்கும் எதுவும் அவனுக்கு குறையப்போவதில்லை" என்றது.

"ஆனால் நான் ஐயமின்றி இங்குள்ள எதையும் தொட்டதில்லை. அடைந்த எதிலும் நிறைவு கொண்டதில்லை. இங்கிருந்து அகன்றால் அங்கும் எனக்கு நிறைவுண்டா என்று தெரியவில்லை. நான் அறிவுள்ளவன் என இளமையில் தருக்கினேன். ஆனால் அவ்வப்போது அவனைப் போலிருந்தால் நன்றோ என்று நான் எண்ணுவதுண்டு. ஒருபோதும் அவனென்று நான் ஆகக்கூடும் என்று எண்ணியதில்லை. ஆக விழையாமலும் இருந்ததில்லை. ஆனால் ஒருகணமேனும் நானென்று இருக்க அவன் விழைந்திருப்பானா? அவ்வாறு

உணர்ந்ததே இல்லை" என்றபின் "கதை சொல்லும் உளநிலையில் நான் இல்லை. உன் அன்னையிடம் சென்று கேள். அவள் சொல்வாள்" என்றது. மீண்டும் உடல் தளர்த்தி விழிமூடி கும்போதரன் துயிலத்தொடங்க மூர்த்தன் கிளைநுனிகளில் தொங்கி ஊசலாடி தன் அன்னையை நோக்கி சென்றது.

மூர்த்தன் தூமவர்ணியை அணுகி அதன் மென்மயிர்த் தோளைப் பிடித்து இழுத்து உலுக்கி சிட்டுக்குருவியின் கூர்குரலில் "அன்னையே, கதை சொல்" என்றது. தூமவர்ணி எரிச்சலுடன் "போ, கதை சொல்லும் நிலையில் நான் இல்லை. நான் கடந்து சென்ற அவனைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்றது. "அன்னையே! கதை சொல்லுங்கள், அன்னையே!" என்று அதன் கைகளைப் பிடித்து உலுக்கியது மூர்த்தன். "நான் அவனைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறேன், மைந்தா" என்றது தூமவர்ணி. "கதை சொல்... கதை சொல்... கதை சொல்" என வெறிகொண்டு உலுக்கியது மூர்த்தன். "சரி சரி, உயிரை எடுக்காதே... அடங்கு... நிறுத்து... சொல்கிறேன்" என்று அன்னை சொல்ல "சரி" என அன்னையின் கைகளை விலக்கி மடியில் ஏறி அமர்ந்துகொண்டது மூர்த்தன்.

"நான் ஒரு மூதாதையின் கதையை சொல்கிறேன்" என்றது தூமவர்ணி. "நிறைய குரங்குகளின் கதையை சொல்லியிருக்கிறீர்கள்" என்று மூர்த்தன் சொல்லியது. அந்நினைவினால் ஊக்கம் கொண்டு அன்னையின் கைகளை விலக்கி பாய்ந்து குருவி போலவே துள்ளி கிளையிலிருந்து கிளை பாய்ந்து சுழன்று அமர்ந்து வால் நெளிய "நிறைய குரங்குகள்! ஒரு குரங்கு அங்கே கடலிலிருந்து கடல் தாவியது.

அதன் வாலில் பத்துதலையுள்ள அரக்கன் ஒருவன் பற்றிக்கொண்டான். தன் வாலால் அந்த அரக்கனை சுற்றி எடுத்துக்கொண்டு தாவிச்சென்றது. எட்டுக் கடல்களும் தாவிய பின்னரே அந்த அரக்கனை பார்த்தது. புன்னகைத்து அடடா நீ இங்கிருக்கிறாயா, எனக்குத் தெரியவில்லையே நண்பா என்று சொன்னது."

அதன் சிறு உடலால் உள்ளிருந்து எழுந்த துடிப்பை தாளமுடியவில்லை. துள்ளித்துள்ளித் தாவியபடி "அரக்கன் பத்து தலையிலும் புண்பட்டு இருபது கைகளும் தளர்ந்து மெய்யாகவே நீ என்னை பார்க்கவில்லையா என்று கேட்டான். பேருருவம் கொண்டெழுகையில் சிறியவை என் பார்வையிலிருந்து மறைந்துவிடுகின்றன. அந்த வடமலையே எனக்கு சிறு கூழாங்கல்லெனத் தெரிகையில் உன்னை நான் எவ்வண்ணம் உணரமுடியும் நண்பா என்று அக்குரங்கு கேட்டது" என்றது. உரக்க நகைத்து துள்ளிக்குதித்து அமர்ந்து கைகளை தலைக்குமேல் விரித்து "அவ்வளவு பேருருவம்... வான் வரை பெரிய உருவம்!" என்றது. மகிழ்ந்து சிரித்து "பெரியது... மிகப் பெரியது!" என்றது.

அன்னை தன் மைந்தனின் தலையிலிருந்த சிறிய சுழியில் சுட்டுவிரலை வைத்து சுழற்றிச் சிரித்து "ஆம், அது பாலியின் கதை. அவன் இந்திரனின் மைந்தன்" என்றது. மூர்த்தன் "அங்கே மரக்கிளைகளின் மேல் அமர்ந்து நாம் தொலைவில் இந்திரனின் மைந்தனை பார்த்தோமே! வில்லேந்தி பொருதிக்கொண்டிருந்தான்... வில்... பெரிய வில்!" என்றது. "ஆம், அவனும் இந்திரனின் மைந்தன் என்றுதான் சொல்கிறார்கள்" என்றது அன்னை. மூர்த்தன் "ஆனால் இவன் இவ்வளவு சிறியதாக இருக்கிறான். ஆற்றலற்றவனாக இருக்கிறான்.

நாமேகூட அவனை வென்றுவிடலாமென்று தோன்றுகிறது" என்றது.

தூமவர்ணி அன்புடன் நகைத்து "உன் அகவையில் அவ்வாறுதான் தோன்றும்" என்றது. மூர்த்தன் நினைவுகூர்ந்து "இன்னொரு குரங்கின் கதை! இது இன்னொரு குரங்கு!" என்று சொல்லி சிறிய சுட்டுவிரலை தலைக்குமேல் தூக்கி, பாசிமணி விழிகளை விரித்து உதடைக் குவித்தது. "முன்பொருநாள் தன் தமையனை ஒரு பெருங்குகைக்குள் பெரும்பாறையைப் புரட்டி வைத்து மூடியது. மிகப் பெரிய பாறை!" தூமவர்ணி "ஆம், அவன் தமையன் அரக்கன் ஒருவனுடன் பொருதியபடி அந்த குகைக்குள் நுழைந்தான். அரக்கன் தமையனை கொன்றிருப்பான் என்று எண்ணி அவ்வரக்கன் வெளியே வந்துவிடக்கூடாது என்று அக்குகையை மூடினான் இளையோன்" என்றது.

"ஒருவேளை தமையன் உயிரோடிருந்திருந்தால்?" என்று குட்டிக் குரங்கு கேட்டது. "அறிவிலி, தமையன் உயிரோடிருந்தால் ஒற்றைக்கையால் அந்தப் பாறையைத் தள்ளி வெளிவந்து விடமாட்டானா?" என்றது தூமவர்ணி. "அந்தப் பாறையை அரக்கன் தள்ளி விலக்க முடியாதா?" என்றது மூர்த்தன். "அரக்கனால் எப்படி அவ்வளவு பெரிய பாறையை தள்ளி விலக்க முடியும்?" என்றது அன்னை. "அன்னையே, அப்படியானால் அந்த அரக்கன் எப்படி தமையனை வெல்ல முடியும்?" என்று மூர்த்தன் கேட்டது. தூமவர்ணி உரக்க நகைத்து "நன்று, நீயே இனிமேல் கதைகளை புனையலாம்" என்றது.

குட்டிக் குரங்கு அருகே வந்து குரல் தாழ்த்தி "வேண்டுமென்றேதான் அந்தக் குகையை மூடினார் அல்லவா?"

என்றது. "இருக்கலாம்" என்றது தூமவர்ணி. "வேண்டுமென்றேதான்" என்றது மூர்த்தன். "ஏன்?" என அன்னை கேட்டது. "அந்தக் குரங்கு தன் தமையனின் மனைவிமேல் மையல் கொண்டிருந்தது. அவள் பெயர் தாரை." தூமவர்ணி திகைத்து "இதை யார் சொன்னது?" என்றது. "யாரும் சொல்லவில்லை, நானே எண்ணிச்சூழ்ந்தேன்." அன்னை மைந்தனை சற்று நேரம் நோக்கிக்கொண்டிருந்தபின் "உனக்கு எப்படி தோன்றியது?" என்றது. "அன்னையே, நான் அந்தப் பாறையை மூடிய குரங்காக நின்று அதை பார்த்தேன்" என்றது மூர்த்தன். தூமவர்ணி "நீ மாபெரும் கதையாளன். உன் சொல் வாழும்" என்றது.

மூர்த்தன் சிணுங்கலாக "கதை சொல், அன்னையே" என்றது. தூமவர்ணி "தமையன் வெளியே வந்தாரல்லவா?" என்றது. "ஆம், வந்தார்" என்றது மூர்த்தன். "தமையனும் இளையோனும் போரிட்டுக்கொண்டார்கள்" என்றது தூமவர்ணி. "ஆம், பெரும்போர்! அது பெரும்போர்!" என்று சொல்லி மீண்டும் கிளைகளில் எம்பிக் குதிக்கத்தொடங்கியது மூர்த்தன். "அந்தப் பெரிய போரை நான் பார்த்தேன். அப்போது நான் மிக அருகே ஒரு மரக்கிளையில் அமர்ந்திருந்தேன். அவர்கள் பாறைகளை எடுத்து வீசிக்கொண்டார்கள். ஒருவரை ஒருவர் அறைந்துகொண்ட ஒலியில் அருகிலிருந்த மரங்களெல்லாம் நடுங்கின."

தூமவர்ணி உடல் வலிப்புபோல விதிர்க்க அதன் ஒரு விழி இழுத்துக்கொண்டது. "அதன்பின் இளையவனை மூத்தோன் அறைந்து கொல்லப்போகும்போது... கொல்லப்போகும்போது..." மூர்த்தன் கதையை அப்படியே விட்டுவிட்டு பாய்ந்து தாயின் அருகே வந்து அதன் தோளிலேறிச் சுழன்று மடியிலமர்ந்து

“அன்னையே, நான் பிறிதொருவனை கண்டேன். செவ்வண்ணக் குரங்கு. அவன் ஒரு மலை மேல் ஏறி நின்றான். நான் நான் என எண்ணி எண்ணி எண்ணி வீங்கி பேருருக்கொண்டான். அவன் தலை கதிரவனை முட்டுவதுபோல் எழுந்தது. அவன் எழுந்து பறந்து சென்றபோது நின்றிருந்த மலை சற்றே பின்னடைந்தது” என்றது.

“ஆம், அவன் பெயர் அனுமன். அஞ்சனையின் மைந்தன். நம் குடிக்கு முதல் தெய்வம்” என்றது தூமவர்ணி. “ஆம், அனுமன்” என்றபோது குட்டிக் குரங்கு மிகவும் மலர்ந்தது. திரும்பி அப்பால் நின்ற தன் தோழனை நோக்கி “அனுமனின் கதை! அனுமனின் கதை!” என்று கூச்சலிட்டது. அங்கிருந்த அத்தனை குட்டிக் குரங்குகளும் பாய்ந்து ஓடி அருகணைந்தன. “அனுமனின் கதை! அனுமனின் கதை!” என்று எல்லாக் குரங்குகளும் கூச்சலிட்டன. “சொல்லுங்கள்! அனுமனின் கதை! அனுமனின் கதை சொல்லுங்கள்” என்று அவை கூவின.

“அனுமனின் கதையை பலமுறை சொல்லியிருக்கிறேன்” என்று தூமவர்ணி சொன்னது. “அனுமனின் கதையை அறியாத குரங்குகள் எவரும் இந்தக் காட்டில் இல்லை.” புஷ்பகர்ணி “மறுபடியும் சொல்லுங்கள். இன்னும் பெரிய அனுமனின் கதையாக சொல்லுங்கள்” என்றது. குட்டிப் பெண்குரங்கான சம்விதை “அந்த அனுமனின் கதையை எழுதிய மானுடர் ஒருவர் இருந்தார்” என்றது. “ஏன் எழுதினார்?” என்றது புஷ்பகர்ணி. “எழுதினால்தான் மானுடர் அதை மறக்காமல் இருப்பார்கள்.” புஷ்பகர்ணி ஐயத்துடன் தலையசைத்து “எழுதிய அந்தச் சுவடி தொலைந்துவிட்டால்?” என்றது. “தொலையாமல் இருக்க அதை மீண்டும் மீண்டும் எழுதி வைப்பார்கள். ஆயிரம்முறை எழுதி வைப்பார்கள்.” “ஆயிரம் முறை

எழுதினாலும் அதை மறந்துவிடுவார்களா?" என்று மூர்த்தன் கேட்டது.

தூமவர்ணி நகைத்து "அந்த அளவுக்கெல்லாம் நாம் மானுடரை புரிந்துகொள்ள முடியாது" என்றது. "சரி, அஞ்சனை மைந்தனின் கதையை எழுதியவரின் கதையை சொல்லுங்கள்" என்றது மூர்த்தன்.

இருட்கனி - 31

தூமவர்ணி தன் கால்களை அகற்றி வைத்து மரக்கிளையில் அமர்ந்து தன்னைச் சுற்றி குழுமிய குட்டிக் குரங்குகளை இரு கைகளாலும் அணைத்து உடலோடு சேர்த்து அவற்றின் மென்தலையை வருடியபடியும் சிறுசெவிகளை பற்றி இழுத்தபடியும் கொஞ்சியபடி கதை சொல்லத் தொடங்கியது. கதையின் ஆர்வத்தில் குழவிகளின் வால்கள் நாகக் குழவிகளென நெளிந்தன. அந்த ஒன்றுதலை அப்பாலிருந்து கண்ட பிற குரங்குகள் அருகணைந்து செவிகூர்ந்து மரக்கிளைகளில் அமர்ந்தன. சற்று நேரத்தில் கதை சொல்லும் குரங்கைச் சுற்றி கூடின.

மிக அப்பால் கும்போதரன் கிளையில் நன்கு சரிந்து விழி சரித்து துயின்றுகொண்டிருந்தது. "அந்தத் தாதை ஏன் கதை கேட்க வரவில்லை?" என்று புஷ்பகர்ணி கைசுட்டி கேட்டது. "சிலநாளில் அவரும் கதையாகிவிடுவார்" என்றது பீதகர்ணி. ஆவலுடன் "அப்போது அவர் எங்கிருப்பார்?" என்றது புஷ்பகர்ணி. "பேசாதே" என்று கதை சொல்லும் அன்னைக் குரங்கு அதை செல்லமாக அதட்டிவிட்டு "நடுவே பேசக்கூடாது.

இது தொல்கதை. தொல்கதைகள் நடுவே நம் குரல் எழுந்தால் கதையை நிகழ்த்தும் தெய்வங்கள் விலகிச்சென்றுவிடும்" என்றது.

"நான் ஒன்றுமே சொல்லமாட்டேன்" என்று சொன்ன மூர்த்தன் "ஆனால் இவன் பேசுவான்" என்றது. "நீயும் பேசக்கூடாது" என்று அக்குரங்கின் வாயை சுட்டுவிரலால் சுண்டியபின் தூமவர்ணி கதை சொல்லத் தொடங்கியது. "மைந்தர்களே கேளுங்கள், இக்கதை நெடுங்காலத்துக்கு முன்பு சரயு நதியின் கரையில் இருந்த பிரம்மவர்த்தம் என்னும் காட்டில் நிகழ்ந்தது. அன்று அந்தக் காடு செறிந்த மரங்களால் ஆனதாகவும், நடுவே யானை நின்றால் மறையும் அளவுக்கு உயரம் கொண்ட பெரிய சிதல்புற்றுகள் நிறைந்ததாகவும் இருந்தது. அக்காட்டில் வாழ்ந்தார் நமது மூதாதையான கபீந்திரர்."

"அவர் ஒருநாள் மரக்கிளையிலிருந்து கூர்ந்து கீழே நோக்கியபோது அங்கிருந்த பெரிய சிதல்புற்றுகளின் நடுவே ஒரு மனிதன் நின்றிருப்பதை கண்டார். மெல்ல மரக்கிளைகளினூடாக இறங்கி சற்று அப்பால் சென்று நின்று எச்சரிக்கையுடன் அந்த மனிதரை பார்த்தார். நெடுந்தொலைவிலிருந்து அவர் தனித்து நடந்து வந்திருப்பது தெரிந்தது. கால்கள் புழுதி படிந்து வேர்கள்போல் இருந்தன. இடையில் மான் தோலாடை அணிந்திருந்தார். விழிகள் கலங்கி நீர் உதிர்த்துக்கொண்டிருந்தன. கைகளைப் பார்த்தால் வில்லேந்திய தடங்கள் தெரிந்தன. ஆனால் அவர் ஷத்ரியர் அல்ல என்று நமது மூதாதை புரிந்துகொண்டார். ஷத்ரியர்கள் பொன்னோ வெள்ளியோ அணிந்திருப்பார்கள். எனில் வேடன். வேடர்கள் இக்காட்டிற்கு தனியாக வருவதற்கு தேவையெதுவும் இல்லையே என்று எண்ணினார்."

“மலைவேடர்களை நமது மூதாதையர் அஞ்சுவதில்லை. ஏனெனில் அவர்கள் குரங்குகளை கொல்வதில்லை. இன்றும் வேடர்கள் நம்மை தேவர்கள் என்று எண்ணி வணங்குகிறார்கள். ஆயினும் அவர் உரிய எச்சரிக்கையுடன் மேலும் அருகணைந்து அந்த மனிதரை நோக்கிக்கொண்டிருந்தார். அவர் தன் கையிலிருந்த சிறிய இரும்பு அம்பால் அச்சிதல்புற்றின் ஒருபக்கக் கூம்புச் சரிவை குத்திப் பொளித்து வாயில் ஒன்றை உருவாக்கிக்கொண்டிருந்தார். உள்ளே இருந்த சிதல்அறைகளை தூர்த்து வெளியாக்கினார். அவ்வாயிலில் நுழைந்து மேலும் மண்ணைப் பொளித்து வெளியே அகற்றி ஒரு சிறு இல்லமென ஆக்கிக்கொண்டார். அது சிதல்கள் கைவிட்டுவிட்ட கூம்பு. அது எப்படி அவருக்குத் தெரிந்தது என கபீந்திரர் வியந்தார்.”

“அந்த மானுடர் தழைகளை பறித்துச்சென்று உள்ளே பரப்பி அமர்விடம் உருவாக்கி அதில் கால் மடித்து அமர்ந்தார். அவரை நோக்கிக்கொண்டிருந்த கபீந்திரர் அவர் “மரம்! மரம்!” என்று சொல்வதை கேட்டார். கபீந்திரர் அவர் உதடுகளையே நோக்கிக்கொண்டிருந்தார். நம் குலத்திற்கே உரிய இயல்பால் அதைப்போலவே தானும் அமர்ந்து அவ்வாறே உதட்டை அசைத்தார். ஆனால் அம்மனிதர் தன்னை நோக்கவோ உணரவோ இல்லை என்று கண்டதும் மேலும் அருகணைந்து பலவகையான உடல்விளையாட்டுக்களை காட்டினார். இறந்தவர்போல் அருகே விழுந்து கிடந்தார். இளித்துக்காட்டி குர்ர் என்று ஓசையிட்டார். பற்களைக் காட்டி கடிப்பதுபோல நடித்தார். பலவகையாக புரண்டும் துள்ளி உருண்டும் வேடிக்கை காட்டினார். இறுதியாக அருகே சென்று கிள்ளிவிட்டு வால் விடைக்க தாவி விலகி ஓடினார்.”

“அவர் எதையுமே உணரவில்லை. அச்சொல் மட்டுமே அவர் நாவில் இருந்தது. ஆகவே கபீந்திரர் சில கணங்கள் உடல்குவித்து கூர்ந்துநோக்கி நின்றபின் அருகிருந்த மரத்தின் மேலேறி அங்கிருந்து கனிகளைப் பறித்து கொண்டுவந்து புற்றின் வாயிலில் வைத்தார். மிக அகன்று நின்று அந்த மனிதர் கனிகளையும் கிழங்குகளையும் எடுத்து உண்கிறாரா என்று பார்த்தார். நெடுநேரம் கழித்து விழித்துக்கொண்ட அவர் உணவு படைக்கப்பட்டிருப்பதை அறிந்து அதை எடுத்துப் பார்த்தார். சூழ விழியோட்டியபோது நோக்கிநின்ற கபீந்திரரை பார்த்தார். “நீயா?” என்றார். கபீந்திரர் புன்னகைத்து அருகணைந்து “நான் இங்கு கொண்டுவந்து வைத்தேன்” என்றார்.

அந்த மனிதர் திடுக்கிட்டு “நீ பேசுவது எனக்கு புரிகிறது” என்றார். “இன்று வரை விலங்குகள் பேசுவது எனக்கு புரிந்ததில்லை.” கபீந்திரர் “நீங்கள் அம்பை ஒழிந்துவிட்டீர்கள். படைக்கலமில்லாதவர்களுடன் மட்டுமே எங்களால் பேச முடியும்” என்றார். “இல்லையே, என் கையில் இப்போதும் அம்பிருக்கிறது” என்றார் அம்மனிதர். “ஆம், அதை இக்கூம்பை செதுக்கும்பொருட்டு எடுத்தீர்கள். ஆனால் உள்ளத்திலிருந்து அம்பை முற்றாக ஒழிந்துவிட்டீர்கள்” என்று கபீந்திரர் சொன்னார். “ஆம், இருக்கலாம்” என்று அவர் சொன்னார். “இங்கென்ன செய்யப்போகிறீர்கள்? புற்றுக்குள் இவ்வாறு மனிதர்கள் நுழைவதை நான் பார்த்ததே இல்லை” என்றார் கபீந்திரர்.

மலைவேடர் மீண்டும் துயருற்று விழி கலங்கி தலை குனிந்தார். “இங்கு ஏன் வந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. என் கால் போன வழியில் இவ்விடத்தை

அடைந்தேன். இந்தப் புற்றுகளைக் கண்டதும் இங்கு தங்கலாம் என்று முடிவெடுத்தேன்" என்றார். "புற்றுகளுக்குள் நாகங்களே தங்கும். ஆகவே மனிதர்கள் புற்றுகளை ஒழிகிறார்கள். நாங்களும் புற்றுகளுக்கு அருகே செல்வதில்லை" என்றார் கபீந்திரர். "இத்தகைய பெரிய புற்றுகளில் நாகங்கள் நுழைவதில்லை" என்று மலைவேடர் சொன்னார். "கிழக்குமலைச்சரிவில் வால்மீகம் என்றொரு காடு இருக்கிறது. அங்கே பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மையான மாபெரும் சிதல்புற்றுகள் உள்ளன. அவற்றை இவ்வாறு சற்றே செதுக்கி வாயில் அமைத்து உட்புறம் திருத்தி வீடுகளாக்கி வாழும் குலமொன்று உள்ளது. அவர்களை வால்மீகிகள் என்கிறார்கள். நான் அக்குலத்தைச் சார்ந்தவன்."

"மெய்யாகவா?" என வியந்தபடி கபீந்திரர் அவர் அருகே சென்று அமர்ந்தார். "எங்கள் இல்லங்கள் இத்தகைய சிதல்புற்றுகளுக்குள் இறங்கி உள்ளே செல்லக்கூடியவையாக இருக்கும். மண்ணுக்குள் பலர் தங்கும் அளவுக்கு இடமுள்ள புற்றுகளும் கூட உண்டு" என்று மலைவேடர் சொன்னார். "உங்கள் பெயரென்ன?" என்று கேட்டபடி கபீந்திரர் அவர் முன் கால் நீட்டி அமர்ந்தார். "என்னை எந்தை ரத்னாகரன் என்று அழைத்தார். என் அன்னை வால்மீகி குலத்தை சார்ந்தவர். அவள் பெயர் பிருகதை. தந்தை தொல்முனிவராகிய பிரசேதஸ் என்று அவள் என்னிடம் சொன்னாள்" என்றார் மலைவேடர்.

இளமையில் ஒருமுறை அவள் காட்டிற்குள் கனி தேடச் சென்றிருந்தபோது அங்கு தவம் செய்து கொண்டிருந்த மாமுனிவரான பிரசேதஸை பார்த்தாள். அவர் உடலின் ஒளியால் கவரப்பட்டு காய் கனிகளுடன் சென்று அவரை பணிந்தாள். தனக்கு ஒரு மைந்தனை அளிக்கும்படி அவரிடம்

கோரினாள். எங்கள் குடியில் பெண்ணின் மதிப்பென்பது நன்மைந்தனைப் பெறுவதிலேயே. காமத்தின்பொருட்டு எங்கள் குடிப்பெண்கள் உறவுகொள்வதில்லை. முனிவர் தன் தவத்திற்கு உதவி செய்யும்படியும் அவள் பணிவிடைகளில் மகிழ்ந்தால் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்வதாகவும் சொன்னார்.

ஏழாண்டுகள் அவள் அவருக்கு பணிவிடை செய்தாள். ஒவ்வொரு நாளும் கனியும் தேனும் காய்களும் கொண்டுவந்து படைத்தாள். ஏழாம் ஆண்டு தன் நோன்பை முடித்து விழி திறந்த பிரசேதஸ் அவளைக் கண்டு புன்னகைத்து அருகணைந்து "என் கனவுக்குள் உன்னை நான் கண்டேன். முற்பிறவிகளில் நீ எனக்கு மனைவியாக இருந்திருக்கிறாய். இனியவளே, நமக்கு புகழ்மிக்க மைந்தன் ஒருவன் பிறப்பான்" என்றார். அவர்கள் அந்தக் காட்டிலேயே கூடினார்கள். சித்திரை மாதம் முழுக்க வேனிலைக் கொண்டாடியபடி அவர்கள் அக்காட்டில் மகிழ்ந்திருந்தார்கள்.

அவரை அவள் தன் குடிக்கு அழைத்து வந்தாள். அங்கே சிதல்புற்றுக்குள் அமைந்த வீட்டில் அவர் அவளுடன் ஓராண்டுகாலம் வாழ்ந்தார். அப்போது ஒருநாள் அவர் கனவில் என்னை கண்டார். நான் ஒளிமிக்க உடல்கொண்ட குழவியாக ஓர் ஆற்றங்கரையில் இலைப்பரப்பின் மீது கிடப்பதைக் கண்டு எடுத்து நெஞ்சோடணைத்துக்கொண்டார். கனவிலிருந்து விழித்துக்கொண்டு தன்னருகே படுத்திருந்த என் தாயை அழைத்து "சற்று முன் நான் ஒரு கனவு கண்டேன். ஒளி மிக்க உடல் கொண்ட ஒரு குழந்தையை நீ பிறப்பிப்பாய். அவனுக்கு நீ ரத்னாகரன் என்று பெயரிடு" என்று சொன்னார்.

அன்னை "நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?" என்று கேட்டாள். "இக்கனவு எனக்கு வந்தது எனது பணி முடிந்துவிட்டது

என்பதை காட்டுகிறது. இன்னும் அடுத்த நோன்புக்கு நான் செல்ல வேண்டியுள்ளது. வடமலை நாடிச் செல்கிறேன். என் வடிவென மைந்தன் உன்னுடன் இருப்பான். புகழ்மிக்கவனாவான். சொல் அவனை தொடரும், சொல்லை அவன் தொடர்வான். பெருந்துயரங்களிலிருந்து பேரழகை கண்டடைவான் . வடமலைகளைப்போல் இந்நிலத்தின் மேல் குளிர்முடி என எழுந்து என்றும் இங்கு நின்றிருப்பான். ஆம், அவ்வாறே ஆகுக!" என்றார்.

அவள் அவரை வணங்கினாள். அவள் செவியில் அவர் ஒரு ஊழ்கநுண்சொல்லை உரைத்தார். அவ்விரவிலேயே கிளம்பி வடதிசை நோக்கி சென்றார். என் அன்னை அவர் செல்லும் திசை நோக்கி கைகூப்பி நின்றிருந்தாள். அவரை தன் கணவனாக ஏற்றதனால் தன் குலத்தால் அவள் மதிப்புடன் நடத்தப்பட்டாள். ஆனால் அவள் மேல் பிறருக்கு விலக்கமும் இருந்தது. அவளுக்கு அவர்கள் தனி புற்றுக்குடிலொன்றை அமைத்துக் கொடுத்தனர். அவள் அங்கு தன்னந்தனியாக தங்கினாள். அந்த ஊழ்கநுண்சொல்லை விழிப்பிலும் துயிலிலும் சொல்லிக்கொண்டிருந்தாள்.

எட்டுமாதம் நிறைவுற்றபோது அவள் ஒரு கனவு கண்டாள். நடந்து செல்கையில் தரையிலிருந்து ஒளிரும் கல் ஒன்றை அவள் எடுத்தாள். அது விண்மீன் உதிர்ந்து கிடந்ததுபோல் தோன்றியது. கையில் எடுத்துப் பார்த்தபோது கனிபோல் அழுந்தியது. உதட்டில் வைத்துப் பார்த்தபோது இனிமையும் நறுமணமும் நாசியை வந்தடைந்தன. அந்த ஒளிரும் கனியை அவள் விழுங்கினாள். அந்த ஊழ்கநுண்சொல் அது என அக்கல் உள்ளே நுழைந்தபோது உணர்ந்தாள். விழித்துக்கொண்டபோது தன் வயிற்றைத் தொட்டு கணவர் தன் குழவிக்கு ரத்னாகரன்

என்று பெயரிட வேண்டுமென்று சொன்னதை நினைவுற்று விழி நீர் உகுத்தாள். ரத்னாகரா ரத்னாகரா ரத்னாகரா என மும்முறை அழைத்தாள்.

மாதம் திகைந்து நான் பிறந்தபோது எங்கள் வால்மீகக் குடியினரின் வழக்கப்படி காட்டுவிலங்குகளின் பெயர்களைத்தான் இடவேண்டுமென்று மூத்தோர் சொன்னார்கள். ஆனால் எனக்கு ரத்னாகரன் என்று பெயரிடுவதில் அன்னை உறுதியாக இருந்தாள். ஆகவே அப்பெயரை நான் அடைந்தேன். ஆனால் என் குலத்தோர் எவரும் அப்பெயரில் என்னை அழைக்கவில்லை. தாங்கள் ஒருவருக்கொருவர் வால்மீகிகள் என்றே அழைத்துக்கொள்வது வழக்கம். ஆகவே நான் வால்மீகியாகவே வளர்ந்தேன்.

என் அன்னை எனக்கு எதையும் கற்றுத்தரவில்லை. எந்தையின் பெயரை மட்டுமே சொன்னாள். நான் வளர்ந்து வில்லவனும் வேட்டைத் திறன் கொண்டவனுமாக மாறினேன். எங்கள் குலத்தில் எவருக்கும் சொல்பயிலும் வாய்ப்பில்லை. மூத்தோர் சொல்லும் குலக்கதைகளும் வேட்டைக்கதைகளும் அன்றி பிறிதெதையும் செவிகொள்ளவும் கூடவில்லை. வேட்டையில் நான் என்னை கண்டுகொண்டேன். வேட்டையை பசிக்காகத்தான் நிகழ்த்துவதாக வேடர்கள் சொல்வதுண்டு. அது பொய். இங்கே எந்த உயிரும் பசிக்காக மட்டும் வேட்டையாடுவதில்லை. எல்லா செயல்பாடுகளும் விளையாட்டுகளும் கூடத்தான்.

எந்த இளைஞனும் பசிக்காகவோ சுவைக்காகவோ மட்டும் வேட்டையாடுவதில்லை. வெல்லும் பொருட்டும் தன்னை அதில் கண்டடையும் பொருட்டும் மட்டுமே அவன் வில்லேந்துகிறான். பிறரைவிட மேலானவனாக, தான் முன்பு அடைந்ததைவிட ஒருபடி மேலே சென்றவனாக, தன்னைப்

பற்றி பிறர் எண்ணுவதை ஒவ்வொரு முறையும் கடந்து செல்பவனாக உணரும் பொருட்டே விற்தொழில் பயில்கிறான். நானும் அவ்வாறே. பறக்கும் பறவையை அறைந்து வீழ்த்தி அது நிலம் தொடுவதற்குள் மீண்டும் வில் எடுத்து அம்பால் அறைந்து வானில் எழுப்புவேன். அம்புகளாலேயே அதை வானில் பறக்க வைப்பேன். நீர்நிழல் பார்த்து பறவைகளை வீழ்த்துவேன். நீருக்குள்ளிருக்கும் மீனை எய்து பிடிப்பேன். பறக்கும்போதே பறவையின் விழிகளை அம்பால் துளைப்பேன்.

என் வில்லால் இயலாதது ஒன்றில்லை என்று தருக்கினேன். பின்னர் ஏதோ ஒரு கணத்தில் வில்லில் சலிப்புற்றேன். வில்லென்பது நம் உள்ளில் எழும் விசையில் ஒரு சிறு பகுதியை மட்டுமே பெற்றுக்கொள்கிறது. வில்லேந்துவதற்கு முன் நம்மில் எழுவதில் ஒரு பகுதியே அம்பெடுக்கையில் கூடுகிறது. நாணில் அமைவது அதிலொரு பகுதி. அம்பென எழுவது இன்னும் ஒரு சிறு பகுதி. இலக்கடைவது பிறிதொரு துளி. ஒவ்வொரு முறை இலக்கடையும்போதும் ஏமாற்றம் கொள்ளத்தொடங்கினேன். பின்னர் நான் அம்பையும் வில்லையும் தொடுவதை வெறுத்தேன். வேட்டைக்கு மட்டுமே அம்புகளை தொட்டேன். என் வெளி சுருங்கி என் உடலுக்குள் மட்டுமானதாகியது.

பறவைகளை வேட்டையாடி கொண்டுசென்று வழியோரம் நின்று அவ்வழி செல்லும் வணிகர்களிடம் விற்று அவர்களிடமிருந்தே பொருட்களை வாங்கி குடிக்கு மீள்வது என் குலத்து ஆண்களின் வழக்கம். சாலைகளில் முழுக்க நாங்கள் இருபுறமும் நின்றுகொண்டிருப்போம். அவ்வழி செல்லும் வணிகர்களை கூவிக்கூவி அழைப்போம். ஆடைகளும் படைக்கலக் கருவிகளும் இனிப்புணவும் அவர்களிடம்

இருந்தன. ஒரு நாள் முழுக்க காட்டில் உலாவி வேட்டையாடி கொண்டுவந்த மான்தோலோ புலித்தோலோ ஒரு முறை உண்ணும் அளவுக்கு இனிப்பாக மாறியது. ஒருமுறை தொடுக்கும் அம்பு அளவுக்கே மதிப்பு கொண்டது. ஆனால் வாழ்க்கை அவை இன்றி நிகழவும் இயலவில்லை. முன்பெல்லாம் எங்களுக்கு ஒருநாள் வேட்டை என்பது ஒரு வார காலம் ஓய்வும் களியாட்டும். மெல்ல மெல்ல ஒவ்வொருநாளும் இரவும் பகலும் வேட்டையாடியாகவேண்டும் என்றாயிற்று.

ஒவ்வொன்றிலும் நான் சலிப்புற்றுக்கொண்டிருந்தேன். இங்கல்ல, இவையல்ல என்றொரு விளி என்னில் எழுந்தது. என் குலத்திலிருந்து நான் அகன்றகன்று சென்றேன். அவர்களின் உணர்வுகள் ஒவ்வொன்றும் பொருளற்றவையாக தோன்றலாயின. ஏதோ ஒரு கணத்தில் என் அன்னையே ஒரு பண்படா விலங்கெனத் தோன்ற திடுக்கிட்டு தன்னுணர்வு கொண்டு என்னை நானே வெறுத்துக்கொண்டேன். அன்று அன்னையிடம் சென்று எனக்கு ஒரு பெண் தேரும் படி ஆணையிட்டேன்.

அன்னை நான் என் குலத்தில் மணம்செய்வேன் என்பதையே எண்ணியிருக்கவில்லை . "என்ன சொல்கிறாய்? உணர்ந்துதான் சொல்லெடுக்கிறாயா?" என்று என்னிடம் கேட்டாள். "நம் குடிப்பெண் ஒருத்தியை மணந்துகொள்ள விழைகிறேன். இங்கே எனக்கொரு குடி உருவாகவேண்டும்" என்றேன். "உனக்கான பெண்ணை நீ தேடிக்கொள்" என்றாள் அன்னை. "எனக்கான பெண் இங்கேயே வரவேண்டும்... இப்போதே. ஒருநாள் பொறுக்க என்னால் இயலாது" என்றேன். "அறிவிலிபோல் பேசுகிறாய்"

என்று அன்னை சொன்னாள். "இல்லையேல் நான் அம்பால் என் கழுத்தை அறுத்துக்கொள்வேன்" என்று கூவினேன்.

அன்னை திகைப்புடன் என்னை பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கற்பனையில் நான் வில்லுடன் வால்மீகத்திலிருந்து கிளம்பி அறியா நிலங்களுக்குச் சென்று வீரர்களை வென்று நகரங்களுக்குள் புகுந்து இளவரசிகளை மணம்புரிந்துகொண்டு வருவேன் என வளர்த்திருந்தாள். என் வில்லிலிருந்து என் குடி புகழ்பெற்று எழும், வான்மீகத்தின் புற்றுவீடுகள் ஏழடுக்கு மாளிகைகளாகும், இரவும் பகலும் ஒளி நிறைந்திருக்கும் நகரமொன்று அக்காட்டிற்குள் எழும் என கனவு கண்டாள். அப்படி எத்தனையோ கதைகளை அவள் கேட்டிருந்தாள். அவள் முனிவரை சந்திப்பதற்கு முன்னரே அக்கனவுகள் அவளுக்குள் இருந்தன.

பல நாட்கள் அவளால் அந்த ஏமாற்றத்திலிருந்து வெளிவர இயலவில்லை. இரண்டு நாட்களுக்குப் பின் என்னிடம் மீண்டும் "நீ மெய்யாகவே இங்கு மணம்புரிந்து தங்க எண்ணுகிறாயா?" என்றாள். "ஆம், உடனே எனக்கு பெண் வேண்டும்" என்று சொன்னேன். "நீ இப்போதெல்லாம் வில்லை எடுப்பதே இல்லை. காட்டில் இருந்து கிழங்குகளை மட்டும் அகழ்ந்துகொண்டு வருகிறாய். உன் கண்ணெதிரில் மான்கூட்டம் கடக்கும்போது கை ஓய்ந்து அமர்ந்திருக்கிறாய் என்று உன் தோழர் சொன்னார்கள். நீ வேட்டையில் ஆர்வமிழக்கிறாய் என்பதுகூட எனக்கு ஒருவகையில் உவப்பாகவே இருந்தது. இங்குள்ள வாழ்க்கையை விட்டு விலகுகிறாய், பிறிதெங்கோ செல்லவிருக்கிறாய் என்று எண்ணினேன்" என்றாள்.

“இல்லை, நான் பிறிதெங்கும் செல்ல எண்ணவில்லை. செல்லும் தொலைவுகள் எனக்கு மேலும் சலிப்பை அளிக்கின்றன. இங்கு மீண்டும் அமிழ்ந்துகொள்ள விரும்புகிறேன். இதுவரை சென்ற தொலைவுகள் அனைத்தையும் கரைத்தழிக்க விரும்புகிறேன்” என்று அன்னையிடம் சொன்னேன். அவளால் என்னை புரிந்துகொள்ள இயலவில்லை. மீண்டும் மீண்டும் “மெய்யாகவா சொல்கிறாய்? இங்கேயே இருக்கத்தான் எண்ணுகிறாயா?” என்று கேட்கத்தான் முடிந்தது. பின்னர் அவள் வழக்கம்போல் ஊழை அடைக்கலம்கொண்டாள். சொல்லவிந்தாள். ஆனால் என் விழிநோக்குவதை தவிர்த்தாள். தன்னை மேலும் இறுக்கி உடையாத தனிமைக்குள் புகுந்துகொண்டாள்.

என் குலத்துப் பெண்ணொருத்தியை மணந்துகொண்டேன். என்னைவிட நான்காண்டு முதியவள். முன்னரே அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவள் கணவன் பாம்பு கடித்து உயிர்துறந்திருந்தான். எங்கள் குலமுறைப்படி வரிசையில் அடுத்த ஆணேற்புக்கு உரியவள் அவளே என்பதனால் அவள் எனக்கு மனைவியானாள். அவள் பெயர் விரூபாக்ஷி. எனக்கு அவளில் மேலும் ஏழு குழந்தைகள் பிறந்தன. என் குடியின் மிகமிக அழகற்ற பெண் அவள்தான். அவளுக்கு அவள் அன்னை இட்ட பெயர் அது அல்ல. ஊரார் இளிவரலாக விளித்தது, அவ்வண்ணமே ஆகியது.

ஆனால் எனக்கு பெண் உடலே போதுமென்றிருந்தது. அவளிடம் நான் பேசியதுண்டா, நேராக விழிகொண்டு நோக்கியதுண்டா என்றே ஐயுறுகிறேன். அவள் வெறும் தசை. ஆனால் உடல் திரண்ட விலங்கு. காட்டுவிலங்கின் ஆற்றலும் விசையும் கொண்டவள். விலங்குகளுக்குரிய கெடுமணம்.

விலங்குகளுக்குரிய கட்டற்ற உணர்வுகள். என்னில் எழுந்த விலங்குக்கு உரிய இணை அவளே. விலங்குகள் கெடுமணத்தையே விரும்புகின்றன.

ஏழாண்டுகள் நான் வெறிகொண்ட காமத்தில் என்னை முற்றாக அழித்துக்கொள்ள இயலுமா என்று பார்த்தேன். காமம் கொள்ளுந்தோறும் பெருகுவது, விலக எண்ணுகையில் பேருருக்கொள்வது, ஒருபோதும் மானுடனை தன் பிடியிலிருந்து விட்டுவிடாதது என்று மூத்தோர் சொல்லி கேட்டிருந்தேன். அதன் ஆயிரம் கைகள் என்னைப் பற்றி நிறுத்துமெனில் நன்றென்றே எண்ணினேன். ஆனால் மிக விரைவிலேயே காமம் என்னை கைவிடத் தொடங்கியது. அச்செயலிலிருந்த விலங்கியல்பு என் கருத்தை அடைந்ததும் காமம்கொள்ளும் ஒவ்வொரு முறையும் என் நினைவில் எழுந்து அவள் உடல்மேல், என் உடல்மேல் ஒவ்வாமையை உருவாக்கியது. நான் மீண்டும் கசந்து தனியனானேன். என் உள் உலர்ந்து தக்கையாகி உடலோட்டுக்குள் பிரிந்து நின்றது.

மீண்டும் காடுகளில் இருளில் வழி தவறி அலைந்தேன். என் கால்களில் மூதாதையரின் வழிகள் இருக்கையில் ஒருபோதும் வழி தவற இயலாதென்று உணர்ந்து மேலும் கசப்பு கொண்டேன். காமத்தை சென்று பற்றிக்கொள்ள முயன்றபோது முலைகுடி மாறிய குழந்தையை அன்னை விலங்கு என சீறி உதைத்து விலக்கியது அது. ஆகவே வஞ்சத்தில் திளைக்க முயன்றேன். சினத்தை வளர்த்துக்கொண்டேன். அனைவரிடமும் பூசலிட்டேன். ஆகவே அனைவராலும் விலக்கப்பட்டேன். விலக்கப்பட்டமையால் வெறுக்கப்பட்டேன். வெறுக்கப்பட்டமை என்னில் வெறுப்பெழுவதற்கு வழியமைத்தது. ஆனால் சில நாட்களிலேயே அதுவும்

சலித்தது. ஏனென்றால் என் வஞ்சம் வெறும் நடிப்பென நான் அறிந்திருந்தேன். காமத்தையும் வஞ்சத்தையும் எவரும் முடிவிலாது நடிக்க முடியாது. ஏனென்றால் அதில் வேறுவேறு வாய்ப்புகளும் வடிவங்களும் ஊடுவழிகளும் இல்லை.

ஆனால் என் காமத்தின் விளைவென ஒன்பது குழந்தைகள் என் இல்லத்தில் இருந்தனர். ஒன்பதின்மரும் வேட்டை விலங்குகளுக்குரிய வெறிகொண்ட பசியுடன் விளங்கினர். என் மனைவி நான் காமத்தை இழந்ததுமே என்மேல் கசப்பு கொண்டவளானாள். நான் அவள் குழந்தைகளுக்குரிய உணவுடன் மீளாமலானபோது அது வெறுப்பென வெளிப்பட்டது. எப்போதும் என்னை வேட்டைக்கும் உணவுக்கும் துரத்தினாள். "என்ன செய்கிறாய்? பித்தனா நீ? சென்று எங்களுக்கு உணவு கொண்டு வா. உணவின்றி நாங்கள் இறந்தால் மண்ணுக்கடியில் உறங்கும் மூதாதையருடன் நீ சென்றுசேர இயலாது. மண்ணை துளைத்துத் துளைத்து ஆழுலகுக்குச் செல்ல முயன்று சலித்து உயிர்விடும் மண்புழுவாக பிறப்பாய்" என்று அவள் என்னை முனிந்தாள்.

மண்புழுக்களை பார்க்கையில் எல்லாம் இளமையிலிருந்தே உடம்பில் ஒரு நடுக்கை உணர்வதுண்டு. மண்ணில் முட்டி முட்டி துளையிட்டு தோற்று அந்நெளிவையே வாழ்வெனக்கொண்ட பிறவி. எத்தனை பெரிய தீச்சொல் வாழ்நாளெல்லாம் மூடிய வாயில்களில் தலையால் தட்டிக்கொண்டே இருக்கவேண்டும் என்பது! மண்ணில் நெளியும் கோடானுகோடி மண்புழுக்கள் அனைத்தும் மூதாதையரின் தீச்சொல் பெற்றவை. அவர்கள் அளித்த நெறிகளிலிருந்து வழுவியவை. அவர்களுக்கான கடனை இயற்றாமல் ஒழிந்தவை.

ஒரு நாள் சேற்றுக்கரையொன்றில் அமர்ந்திருந்தபோது முழு உடலையும் நெளித்து நெளித்து மண்ணில் புக முயன்றுகொண்டிருந்த மண்புழு ஒன்றை கண்டேன். கைநீட்டி அதை எடுத்து நோக்கினேன். விழியில்லை, செவியில்லை, மண்ணின் உள்ளே நுழையும் விழைவன்றி வேறெந்த எண்ணமும் அதிலிருப்பதாக தெரியவில்லை. அதை வீசிவிட்டு எழுந்து ஓடினேன். உடம்பெங்கும் முட்கள் கீறின. மூச்சிரைக்க வணிகச்சாலை ஓரமாக வந்து நின்றேன். வெறுங்கையுடன் அங்கு நின்றிருப்பதன் பொருளின்மை அப்போதுதான் தெரிந்தது. அப்போது நான் இறந்தேன். மறுகணம் மற்றொருவனாகப் பிறந்தேன்.

இருட்கனி - 32

"இறுதி வெறுமை என்பது சாவு. ஆனால் அது வாழ்வில் ஒருமுறைதான் நிகழவேண்டும் என்பதில்லை. அது நிகழ்ந்து மீள்பிறப்பெடுத்தோர் முன்னிலும் ஆற்றல்கொண்டவர்கள் ஆகிறார்கள். தெய்வங்களுக்கு நிகரானவர்களாக நிலைகொள்கிறார்கள். ஆழுலகத்து தெய்வம் அல்லது விண்ணொளிகொண்ட தேவன். நான் கொடுந்தெய்வமென அத்தருணத்தில் பிறந்தெழுந்தேன்" என்று வால்மீகி சொன்னார். அருகே கபீந்திரர் அதைக் கேட்டு அமர்ந்திருந்தார்.

"இனிய குழந்தைகளே, கேளுங்கள். இது வால்மீகியின் கதை. என் குலமூத்தவரான கும்போதரர் நான் சிறுமியாக இருக்கையில் எனக்குச் சொன்னது. அவர்களுக்கு அவர்களின் மூத்தவர்கள் சொன்னார்கள். முதல் மூதாதையான கபீந்திரர் இதை தன் மைந்தருக்குச் சொன்னார். என்னிடமிருந்து நீங்கள்

இதை உங்கள் கொடிவழியினருக்கு சொல்க! என்றும் இக்கதை இங்கே திகழ்க!" என்று தூமவர்ணி தன்னைச் சூழ்ந்திருந்த குழந்தைக் குரங்குகளுக்கு சொன்னது. அவை விழிகள் கனவுநிறைந்து நோக்கு மங்கலடைந்திருக்க உடல் குறுக்கி வால் நிலைக்க அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தன.

வால்மீகி சொன்னார்: நான் என் கையிலிருந்த அம்பை எடுத்து கழுத்து நரம்பை வெட்டிக்கொள்ளவேண்டுமென்று எண்ணினேன். எண்ணம் எழுந்தபோதே கையும் உடனெழுந்தது. நெடுநாட்களாக அதற்காகக் காத்திருந்ததுபோல. அப்போது பெருத்த உடலும், நெடுங்கால மதுப்பழக்கத்தால் களைத்து சரிந்த இமைகளும் கொண்ட வணிகனொருவன் அத்திரிமேல் ஊர்ந்து அவ்வழி வந்தான். என்னை நோக்கி "அடேய் நிஷாதா, இழிபிறப்பே, கீழ்மகனே, அங்கு என்ன செய்கிறாய்? தொலைவிலேயே உன் உடலின் கெடுநாற்றம் வீசுகிறதே" என்று கூவி "அறிவிலி என்பது உன் நோக்கில் தெரிகிறது. கீழ்விலங்கே, உண்பதற்கு ஊனேதும் வைத்திருக்கிறாயா?" என்றான்.

நான் "இல்லை" என்று தலையசைவால் சொன்னேன். "பிறகென்ன இரப்பதற்கா இங்கு நிற்கிறாய்? கைகால் உள்ளவன் இரக்கலாமா? சென்று காட்டுக்குள் ஏதேனும் திரட்டிக்கொண்டு வா. என் வயிறு நிறைந்தால் உனக்கு ஒரு செப்புக்காசு தருவேன். அதைக்கொண்டு பின்னால் வரும் வணிகர்களிடமிருந்து நீ எதையாவது வாங்கிக்கொள்ளலாம்" என்றான். நான் அவனை பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் என் அருகே நெருங்கி வந்து "நீ கொண்டுவரும் வேட்டைஊன் உன்னைப்போல் நாற்றமடிக்கும் உடல் கொண்டிருக்கலாகாது. மானோ முயலோ போல தூய விலங்காக இருக்கவேண்டும்.

இழிமகனே, இன்று உன்னை கண்களால் பார்க்கும் தீயூழ் பெற்றேன். செல்லும் தொழில் வெல்லுமா என்று ஐயமேற்படுகிறது" என்றான்.

அவன் உடலிலிருந்து வியர்வை வழிந்துகொண்டிருக்கிறது. தொங்கிய வாய்க்குள்ளிருந்து கறை படிந்த பெரிய பற்கள் நீண்டிருந்தன. இடையில் தோலாலான கச்சையை கட்டியிருந்தான். அவன் எடையால் ஏறி வந்த அத்திரி நீராவி உமிழ மூச்சிரைத்துக்கொண்டிருந்தது. அவன் வண்டுமேல் ஏறி அமர்ந்த பெரிய மஞ்சள்நிறப் புழுபோல தோன்றினான். நான் அவன் என்னைச் சொன்ன வசைச்சொற்கள் அனைத்தையும் என் அகத்தால் முழுதாக உள்வாங்கி அதுவாக ஆகிக்கொண்டிருந்தேன். வணிகர்கள் நிஷாதர்களை வசைகூவி அழைப்பதே வழக்கம். அது அவர்களின் அச்சத்தால்தான். அந்த அழைப்பு நிஷாதர்களை உடனே உளம்சுருங்கி ஆணவம் அழிந்து விலங்கென்றே ஆக்கும். அவ்வாறு மாறாத உளத்தளர்ச்சியில் அவர்களை வைத்திருக்கவேண்டியது அவ்வழியே அவர்கள் செல்வதற்கான தேவை.

எங்ஙனம் அது நிகழ்ந்ததென்று எனக்குத் தெரியவில்லை, தவளை நாக்கு என என் கை மின்னி நீண்டது. கூரம்பால் அவன் கழுத்தை அறுத்தேன். அதை எதிர்பாராமல் திகைத்த விழிகளுடன், வாய் திறந்து மூச்சுக்குத் தவித்து, உடல் துடிக்க அவன் அத்திரியிலிருந்து கீழே விழுந்தான். நீர்நிறைந்த தோல்பை மண்ணை அறையும் ஓசை எழுந்தது. அத்திரி எடை அகன்றதும் முன் கால் எடுத்துவைத்து அப்பால் சென்று நின்று பிடரி குலைத்து சினைப்பொலி எழுப்பியது. கால்களைத் தூக்கி நிலத்தை குளம்புகளால் தட்டியது. அவன் கீழே கிடந்து உடல் உலுக்கினான். குருதி கொப்பளித்து பூழியில் ஊறி நனைந்து

பரவியது. கைகால்கள் இழுத்து அதிர்ந்தன. பசுங்குருதியின் மணம் எழுந்தது.

அம்பை மீண்டும் வீசி அவன் கச்சையை அறுத்து உள்ளிருந்து மூன்று வெள்ளி நாணயங்களை என் கையில் கவிழ்த்தேன். அவனை இழுத்து புதருக்குள் போட்டுவிட்டு காட்டுக்குள் புகுந்தேன். ஆலமரத்தடி ஒன்றில் அமர்ந்துகொண்டபோது என் உள்ளம் மிகத் தெளிந்திருந்தது. என் கையிலிருந்த வெள்ளி நாணயங்கள் என்னை சிலநாட்களுக்கு நலமாக வாழவைக்கும் என்று நான் அறிந்தேன். மூன்று வெள்ளி நாணயங்கள் நான்கு புலித்தோலுக்கு நிகரானவை. அந்த வணிகனைக் கொன்றது குறித்து கழிவிரக்கம் தோன்றவில்லை. பழியுணர்வும் உருவாகவில்லை. அவனைக் கொன்ற பிறகும் கூட அவன் தோற்றமளித்த அருவருப்பே என்னில் எஞ்சியிருந்தது. ஆகவே இருபுறமும் மாறி மாறி துப்பிக்கொண்டிருந்தேன். துப்ப வாய்க்குள் எச்சில் கோழை வற்றாமல் திரண்டுகொண்டிருந்தது.

அங்கேயே படுத்து இரவு துயின்றேன். மறுநாள் காலை எழுந்து அந்த நாணயங்களை ஆலமரத்துக்கடியில் புதைத்து வைத்தேன். அதிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்துக்கொண்டு சென்று வழிப்போக்கனாகிய வணிகனிடமிருந்து அரிசியும் இனிப்பும் ஆடைகளும் வாங்கிக்கொண்டேன். அவற்றை என் மைந்தருக்கு கொண்டுசென்று கொடுத்தேன். வேட்டை உணவின் மீது பாயும் ஓநாய்க்குட்டிகள்போல அவர்கள் அதன் மேல் பாய்ந்து பூசலிட்டு ஒவ்வொருவரும் தங்களுக்கென எடுத்துக்கொண்டதைக் கண்டபோது உளம் மகிழ்ந்தேன். நெடுநாட்களுக்குப் பின் அத்தகைய மகிழ்ச்சியை உணர்கிறேன் என்று தோன்றியது. அதனூடாக நான் மீண்டும் என் குலத்துடன் இணைந்துகொள்வேன் என்று எண்ணினேன்.

அகன்றிருப்பதன் சலிப்பும் கசப்பும் இனி இல்லை. ஒன்பது இனிய மைந்தரின் தந்தை. அவர்களால் வணங்கப்படுபவன். குடியினர் பதின்மராலும் வாழ்த்தி பணிவிடைகள் செய்யப்படுபவன். அவர்களின் நினைவில் என்றும் நின்றிருப்பவன். மண்நீங்கிச் சென்றபின் அவர்களால் நீரும் அன்னமும் அளிக்கப்பட்டு புரக்கப்படுபவன், அவர்களின் கொடிவழியினர் நினைவில் வாழ்பவன். அவ்வெண்ணம் எனக்கு நிறைவளித்தது. நான் அணிந்துகொள்ள ஒரு முகம் அமைந்தது. நெடுநாட்களுக்குப் பிறகு அன்று என் இல்லத்திலேயே ஊன்கறியும் வெதுப்புச்சோறும் இன்கனிக்கூழும் உண்டேன். வயிறு நிறைய கள்ளுண்டவன்போல் மயங்கி துயின்றேன்.

பின்னர் நான் வேட்டைக்குச் சென்றதில்லை. சில மாதங்களுக்கு ஒருமுறை சாலையோரம் பதுங்கி நின்று தனியாக வரும் வணிகன் ஒருவனை அம்பால் கொன்று வீழ்த்துவேன். அவன் இடையிலிருக்கும் நாணயங்களை மட்டும் எடுத்துக்கொண்டு காட்டுக்குள் சென்றுவிடுவேன். அவன் உடலை இழுத்து காட்டுக்குள் போடுவேன். அதை நாய்நரிகள் ஒருநாளுக்குள் வெள்ளெலும்புக்குவையாக ஆக்கிவிடும். ஒரு வாரத்தில் அதனை மண் எழுந்து மூடும். அவனைத் தேடுபவர்கள் கண்டடையவே இயலாது. அவன் ஓட்டிவரும் அத்திரியின் வாலில் ஒரு நெற்றுக்கொப்பரையை கட்டிவிடுவேன். அது எழுப்பும் ஒலி அதை துரத்த கொலை நடந்த இடத்தில் இருந்து பல காதம் அது சென்றுவிட்டிருக்கும்.

ஒவ்வொரு முறையும் வெவ்வேறு இடங்களில் சாலையோரமாக நின்று அவ்வழி செல்லும் வணிகர்களை வெறுமனே நோக்கிக்கொண்டிருப்பேன். அவர்களில் என்னிடம்

எதுவும் பேசாமல் செல்பவர்களை தாக்குவதில்லை. வெறுப்பு நிறைந்த விழிகளால் அவர்களை கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பேன். அவர்களும் சாலையோரம் நின்றிருக்கும் காட்டு விலங்கொன்றை பார்க்கும் அகல்வும் விந்தையும் கொண்ட கண்களால் என்னை பார்த்துச் செல்வார்கள். ஒருவருக்கு மேலிருந்தால் என்னைப்பற்றி இளிவரலாக ஏதேனும் சொல்வார்கள். தன்னந்தனியாக வரும் வணிகர்களில் பசியும் விடாயும் கொண்டவர்கள் மட்டுமே என்னை பொருட்படுத்துவார்கள். என்னிடம் பேசுகையில் அவர்களின் விழிகளையே நோக்கிக்கொண்டிருப்பேன்.

நிஷாதரிடம் இனிது பேசினால் இழிகுலத்தோருடன் பேசிய பழியை சூடவேண்டியிருக்கும். அவர்களை வசைபாடுவதும் பழிப்பதும் உரையாடல் என்று கொள்ளப்படாது. ஆகவே இனிய இயல்புள்ள நல்லவர்கள்கூட அவ்வாறுதான் பேசுவார்கள். அந்த வசைச்சொற்கள் சொல்லிச்சொல்லி தேய்ந்து பொருளிழந்தவையாகையால் இருவருக்குமே அவை பொருட்டல்ல. எனக்கும் அவை நேர்ப்பொருள் அளிப்பதில்லை. ஆனால் நான் அவர்கள் விழிகளையே நோக்கிக்கொண்டிருப்பேன். அதில் மெய்யான சீற்றமோ அருவருப்போ ஒவ்வாமையோ உருவாகிறதா என்று பார்ப்பேன்.

அது சிறு மின் எனத் தோன்றிய அக்கணமே எவ்வுருக் கொண்டவனாயினும் அவ்வணிகன் நான் முதலில் கொன்ற அந்த பெரும்புழுவுக்கு நிகரானவன் ஆகிவிடுவதை கண்டேன். மெலிந்தவனோ கரியவனோ சிற்றுடல் கொண்டவனோ அவனில் அந்த புழு தோன்றியதும் அக்கணமே கால் வைத்து முன்னால் பாய்ந்து அம்பை வீசி அவனை கொல்வேன். கழுத்தறுபட்ட கணம் அம்முகத்திலெழும் திகைப்பும், மூச்சுக்குத்

திறந்த வாயும், பிதுங்கிய விழிகளும் எப்போதும் ஒன்றே. ஒருவனே வெவ்வேறு உடல்களில் மீளமீள எழுவதுபோல். ஒரு தருணமே வெவ்வேறு வடிவில் மீண்டும் மீண்டும் நிகழ்வதுபோல்.

உடல் நிலத்திலறைய, கைகால்கள் துடித்து இழுத்துக்கொண்டிருக்க அவன் கைகால்கள் வெட்டி அதிர்கையிலேயே இடைவாரை அறுத்து நாணயங்களை எடுத்துக்கொள்வேன். அவர்களில் சிலர் அருமணிகள் அணிந்திருப்பார்கள். பொன் மாலைகள் போட்டவர்களுண்டு. சிலருடைய அத்திரிகளின் இருபுறமும் அரிய பொருட்கள் கொண்ட பைகள் தொங்கிக்கிடப்பதுண்டு. நான் இடையிலிருக்கும் வெள்ளி நாணயங்களன்றி வேறெதையும் எடுத்துக்கொள்வதில்லை. என்னால் அச்செயலை மாறாமல் ஒன்றுபோலவே நிகழ்த்த முடிந்தது. திட்டங்களும் செயல்களும் மட்டும் அல்ல அசைவுகளும் எண்ணங்களும்கூட ஒன்றேதான்.

ஒரு நூறு கொலைகளைக் கடந்தபோது நான் உணர்ந்தேன், வேறெவ்வகையில் அதை நிகழ்த்தினாலும் என்னால் முழுமை செய்ய இயலாதென்று. அது எனக்கு ஒற்றைக்கணம் மட்டுமே. நான் அறிந்த ஒன்றையே திரும்பச்செய்கையில் அதில் தேர்ச்சிகொண்டவனானேன். வணிகனைக் கொல்வதும் இழுத்து அருகிருக்கும் புதரில் போடுவதும் ஊர்விலங்கை ஓட்டுவதும் வெள்ளி நாணயங்களுடன் காட்டுப்புதர்களுக்குள் மறைவதும் மிகச் சில கணங்களுக்குள் நிகழும் ஒன்றாயிற்று. சிறுத்தை வந்து இரை கவ்விச்செல்லும் விரைவு. குளம்படி கேட்கும் தொலைவில் அவ்வணிகனுக்குப் பின்னால் வந்துகொண்டிருப்பவர்கள்கூட என்னை பார்க்க இயலாது.

ஒவ்வொரு முறையும் கைநிறைய பொருட்களுடன் இல்லம் திரும்பும் என்னை என் மைந்தர்கள் தொலைவிலேயே ஓடிவந்து வரவேற்றார்கள். என் தோளிலும் கைகளிலும் தொற்றி ஏறினார்கள். "தந்தையே! தந்தையே!" என்று என்னை கொஞ்சினார்கள். நாய்க்குட்டிகள்போல என் கைகளிலும் கால்களிலும் முத்தமிட்டு கூச்சலிட்டார்கள். நான் என் சுற்றத்திற்கும் உணவளிப்பவனாக ஆனேன். என் தங்கையரும் அவர்கள் மைந்தர்களும் அயலவரும்கூட என் கைப்பொருளை நம்பி வாழலாயினர். கிளை புரப்பவன் ஆனபோது மேலும் ஆணவ நிறைவு கொண்டேன். காட்டில் பலநூறு கிளைகளை விரித்து நின்றிருக்கும் ஆலமரம்போல் என்னை உணர்ந்தேன்.

ஆணவம் உடலில் கொழுப்பென சேர்கிறது. அசைவுகளை குறைக்கிறது. பயணங்களை இல்லாமலாக்குகிறது. அமைந்த இடத்தில் மேலும் ஆழப் பதிக்கிறது. அதுவே மெய்யென்றும் பிறிதொன்றில்லை என்றும் எண்ணச்செய்கிறது. புதுச் செல்வம் அளிக்கும் ஆணவம் நாளை என ஒன்றில்லை என மிதப்படைய வைக்கிறது. நேற்றின் வெற்றிகளை மட்டும் நினைவுகளாக சேர்க்கிறது. நான் அன்று எண்ணினேன், இறுதியாக என் வழியை கண்டடைந்துவிட்டேன் என. என் நிறைவை அடைந்துவிட்டேன் என.

இளமையில் நான் இங்கிருந்து வானிலெழும் புள்ளென்று எண்ணிக்கொண்டேன். அனைவரிலிருந்தும் முன்னால் ஓடும் விலங்கென்று ஆக முயன்றேன். பின்னர் இவையனைத்தும் அல்ல நான், பிறிதொருவன் என்னுள் உறைகிறான் என்று எண்ணினேன். பிறிதெங்கோ என் இலக்குகள் இருப்பதாக எண்ணிக்கொண்டேன். செல்ல வழியறியாது சலித்து, அச்சலிப்பை வெல்ல செலவொழிந்து, அங்கேயே கைவிரித்து

பற்றிக்கொண்டு தங்க விழைந்தேன். அங்கே வேர் ஊன்றி விரிந்து நின்றுவிட்டேன். குலம் சமைக்கும் பெருந்தந்தையரைப்போல. அவர்கள் மரமென முளைத்து வேர்பரப்பி கிளைவிரித்து மெல்லமெல்ல பாறையாக, மலையாக ஆகிவிடுபவர்கள்.

பெருந்தந்தை ஆவதே ஆண் அடையும் முழு நிறைவு. பெருந்தந்தை எனும் கனவில்லாத ஆண் இல்லை. பெருந்தந்தையாக சிலகணங்களேனும் நடிக்காதவர்கள் எவருமில்லை. தெய்வங்கள் அதற்கென்றே அவனை படைத்துள்ளன. பெருந்தந்தையருக்குரிய மண் கீழ் அடுக்குகள் நூறு கொண்டது. அங்கே நம் குலத்து மூதாதையர் வாழ்கிறார்கள். நான் மண் திறந்து அவர்களைச் சென்றடையும்போது இரு கைகளையும் நீட்டி என்னை அணுகி அள்ளி நெஞ்சோடணைத்துக் கொள்வார்கள். “வருக, மைந்தா!” என்பார்கள். அவ்வெண்ணம் இனித்தது. அந்த நிறைவில் சில காலம் வாழ்ந்தேன்.

ஒருநாள் காட்டில் ஒரு பாறையின் மறைவில் வழக்கம்போல் நின்றிருந்தேன். என்னை வணிக நிரையினர் கடந்து சென்றார்கள். சிலர் என்னை பார்த்தனர். சிலர் இளிவரல் உரைத்தனர். ஒருவர் என் மண் படிந்த கரிய உடலைப் பார்த்து அருவருப்பு கொண்டு என்மேல் துப்பிவிட்டுச் சென்றார். நான் அந்தப் புழு தோன்றும் வணிகனுக்காக காத்திருந்தேன். அவ்வாறு காத்திருக்கத் தொடங்கி பதினாறு நாட்கள் கடந்துவிட்டிருந்தன. அந்தப் புழு எங்கோ ஒளிந்து எனக்காகக் காத்திருந்தது. அவ்வழியே அது வரக்கூடும். வந்தாகவேண்டும்.

அப்போது ஓர் எண்ணம் வந்தது. இனி அந்தப் புழு வரவில்லையெனில் நான் என்ன செய்வேன்? அது எச்சரிக்கை

கொண்டிருக்கலாம். வேறு பாதை தேடியிருக்கலாம். எங்கோ ஒதுங்கி என்னை நோக்கிக்கொண்டிருந்திருக்கலாம். நூறுமுறை அது தோன்றி கொல்லப்பட்டுவிட்டது. இந்த வேட்டை வடிவை நான் மாற்றியாகவேண்டும். இவ்வண்ணம் இது முடிவிலாது நீள இயலாது. இன்று என்னை நம்பி நூறு வயிறுகள் காத்திருக்கின்றன. என் கையிலிருக்கும் வெள்ளி நாணயங்கள் மழைக்காலம் வரை போதுமானவை அல்ல. மானுட வேட்டையாடியே ஆகவேண்டும். எனக்கென நானிட்ட எல்லையை கடக்கவேண்டும். காட்டுவிலங்குகள் தெய்வங்களிட்ட எல்லையை ஒருபோதும் கடப்பதில்லை. எல்லை கடப்பவன் மானுடன். ஆகவேதான் அனைத்து விலங்குகளுக்கும் மேல் அவன் ஆற்றல் எழுந்துள்ளது என்று மூதாதை சொல்லி கேட்டிருக்கிறேன்.

எனது எல்லையை கடக்கவேண்டும். எனக்கு நானே ஆணையிட்டுக் கொண்டேன், தன்னந்தனியன் எவனாயினும் அவனை நான் தாக்கவேண்டும் என. என் பழகிய பாதையை மீறிச் செல்வேன். என்னுள் எழும் எச்சரிக்கைக் குரலை ஒழிவேன். ஒருமுறை ஒன்றை நிகழ்த்திவிட்டால் போதும், அந்த வழி எனக்கென திறந்து கொள்ளும். அது முடிவிலாதது. அதன் பின் தனித்து வரும் எந்த வணிகனையும் என்னால் கொல்ல முடியும். ஆகவே கண்ணை மூடி என் கையிலிருந்த அம்பை இறுகப்பற்றிக்கொண்டு அடுத்து வரும் வணிகன் எவனாயினும் அவனை கொல்வேன் என்று எனக்குள் வஞ்சம் உரைத்துக்கொண்டேன்.

தொலைவில் வருவது ஒற்றை அத்திரியின் குளம்படி ஓசையென்று அறிந்தேன். அதன் மேல் இருப்பவன் எனது இன்றைய இலக்கு. இவ்வுறுதியை எடுத்த உடனேயே

ஒற்றைக்குளம்படி ஓசையை கேட்கச்செய்து தெய்வங்கள் எனக்கு ஆம் அவ்வாறே என்று ஒப்புதல் அளிக்கின்றன. வருபவனும் நானும் ஊழால் அவ்வாறு கோக்கப்பட்டிருக்கிறோம். இதில் பிழையென ஏதுமில்லை. வேட்டைவிலங்கும் ஊன்விலங்கும் ஒரே ஊழ்நெறியின் இருபுறங்கள் என்று என் மூதாதையர் சொல்வதுண்டு. வருபவன் தன் ஊழை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். என்னை இங்கு நிறுத்தியிருப்பது அதே ஊழ்தான்.

பாறைக்கப்பால் அவன் தோன்றியதும் நான் அம்பை வீசிக்கொண்டு முன்னால் பாய்ந்தேன். ஆனால் அதற்குள் அவன் தன் காலைத் தூக்கி என் நெஞ்சை உதைத்து பின்னால் தள்ளினான். பாய்ந்திறங்கி தன் இடையிலிருந்த வாளை உருவியபடி நின்றான். நான் அக்கணமே பின்னால் பாய்ந்து ஓடியிருக்கவேண்டும். திருடர்களின் வழி அதுவே. ஆனால் என்னுள் ஆழத்தில் இருந்தவன் நான் வீசியெறிந்துவிட்டேன் என நம்பிய அந்த வில்லவன். சீற்றமும் சினமும் எழ நான் ஓங்கி நிலத்தில் துப்பியபடி என் அம்புடன் அவனை நோக்கி எழுந்தேன்.

அவன் அஞ்சவில்லை. விழிகூர்ந்து நோக்கி “ உனக்கென்ன வேண்டும்?” என்று கேட்டான். அவன் கைகளை நோக்கிய விழிகளைத் தூக்கி அவன் கண்களை பார்த்தேன். அவற்றில் அருவருப்பையோ கசப்பையோ சினத்தையோ காணவில்லை. இனிய நகைப்பொன்று இருப்பதுபோல் தோன்றியது. மறுகணமே அந்நகைப்பு ஓர் ஏளனமென்று என் ஆணவம் திரித்துக்காட்ட, நான் “உன் உயிர்! உன் உயிர் வேண்டும் எனக்கு” என்றேன். “என் உயிர்கொள்ளும் அளவுக்கு உனக்கு என் மேல் என்ன வஞ்சம்?” என்று அவன் கேட்டான். “ஏனெனில்

உன் மடியில் வெள்ளி நாணயங்கள் உள்ளன. என் மைந்தரும் சுற்றமும் பசித்திருக்கிறார்கள்" என்று நான் சொன்னேன்.

அவன் மேலும் கனிந்து நகைத்து "நன்கு எண்ணிப் பார். மெய்யாகவே உன் குழவியருக்காகவா இக்கொலையை செய்கிறாய்? உன் ஆணவத்திற்காக அல்லவா?" என்றான். "இல்லை! இல்லை!" என்று நான் கூவினேன். "நான் பெருந்தந்தை. நூறு வாய்களுக்கு உணவூட்ட வேண்டியவன். அதன் பொருட்டு நான் செய்யும் அனைத்தையும் தெய்வங்கள் ஒப்புக்கொள்ளும்" என்று சொன்னேன். "நூறு வாய்களை ஒருவனிடம் ஒப்படைக்கும் அளவுக்கு தெய்வங்கள் அறிவில்லாதவை அல்ல. இக்காட்டில் அப்படி ஒரு விலங்கு உண்டா என்ன?" என்று அவன் கேட்டான். என்னால் மறுமொழி சொல்லக்கூடவில்லை.

அவன் என்னை நோக்கி மேலும் கூர்விழிகொண்டு "உனது குழந்தைகள் வேட்டையாடும் அகவை அடைந்துவிட்டனரா?" என்றான். "ஆம்" என்று நான் சொன்னேன். "எனில் ஏன் அவர்கள் உன்னை நம்பி இருக்கிறார்கள்? எந்த வேட்டைவிலங்கும் அவ்வாறு பல்லும் நகமும் எழுந்த மைந்தருக்கு உணவூட்டுவதில்லையே" என்றான். மறுமொழி சொல்ல இயலவில்லை என்பதனால் நான் சீற்றம்கொண்டு உறுமினேன். அவன் கைநீட்டி என்னை ஆறுதல்படுத்தி "எண்ணி நோக்கு, நீ இதை இயற்றுவது உன் ஆணவத்துக்காக மட்டும்தான் அல்லவா? சற்று முன் சொன்னாய், நீ பெருந்தந்தை என்று. அது உன் ஆணவ வெளிப்பாடல்லவா?" என்றான்.

"நீ யார்?" என்று நான் கேட்டேன். "என் தந்தை இவ்வழியில் நெடுநாட்களுக்கு முன் கொல்லப்பட்டார். நான் அவர் பன்னிரு மைந்தர்களில் இளையவன். பதினொருவரும்

வணிகர்களானார்கள். நான் பொருள் துறந்து கானேகி நூல் பயின்றேன். துறவு பூணும் பொருட்டு தந்தையிடமும் அன்னையிடமும் வாழ்த்துச் சொல் பெற்று மீளும் எண்ணத்துடன் திரும்பி வந்தேன். எந்தை வணிக வழியில் கொல்லப்பட்டார் எனும் செய்தியை அறிந்தேன். என் உடன்பிறந்தார் அக்கொலையை உரிய சடங்குகளுக்குப் பின் மறந்துவிட்டனர். வணிகர்கள் வழியில் இறப்பது அன்றாட நிகழ்வு."

"ஆனால் நான் அவர் சாவை மேலும் அறிய விழைந்தேன். ஏனென்றால் அதில் நான் கற்க ஏதோ உள்ளது என்று எனக்குப் பட்டது. இல்லையேல் நான் அவ்வண்ணம் திரும்பி வந்திருக்க மாட்டேன். உலகியலில் இருந்து பெறும் ஒரு மெய்யறிதலின் துளியே முழுமெய்மை நோக்கி மானுடரை செலுத்துகிறது. உலகியலை ஒறுக்க ஆணையிடுகிறது. அது இந்நிகழ்வில் உள்ளது என எண்ணினேன். ஏனென்றால் என் தந்தையின் மடியில் மூன்று வெள்ளிக் காசுகள் மட்டுமே இருந்தன. மூன்று வெள்ளிக் காசுகளுக்காக கொன்றவன் எவ்வண்ணம் வாழ்கிறான், அவன் இழந்ததும் பெற்றதும் என்ன என அறிய விழைந்தேன்."

"ஆகவே இவ்வழியில் நான் பலமுறை சென்றேன். பல வடிவங்களில் பல வகைகளில். இன்றுதான் உன்னை கண்டுகொண்டேன்" என்றான். நான் அவனை நோக்கி புன்னகைத்து "வேட்டைவிலங்குக்காக வேடன் இரக்கம் கொள்வதில்லை. பழியுணர்வு அடைவதுமில்லை. ஏனென்றால் அவனை தெய்வங்கள் பிழை சாற்றுவதில்லை" என்றேன். "வேடனே ஆயினும் கொலைப்பழிக்கு நீ தப்ப முடியாதென்று அறிவாயா? நெறியிலாக் கொலையை ஒப்பும் மானுடக்குலங்கள்

ஏதும் மண்ணில் இல்லை" என்று அவன் சொன்னான். என் உடல் நடுக்கு கொண்டது.

"அறிக, கொலைக்கு நெறி கொள்ளாத உயிர்க்குலங்களே இப்புவியில் இல்லை! பசிக்காது வேட்டையாடும் சிம்மத்தை கண்டுள்ளாயா? சிறிய எதிரியை யானை கொல்வதுண்டா? தன் மேல் மிதித்தவரை கடிக்கையில்கூட அந்த மிதியால் உருவாகும் வலிக்கு நிகராகவே நஞ்சு செலுத்தவேண்டுமென்று வகுக்கப்பட்டுள்ளது நாகங்களுக்கு. நூற்றில் ஒன்றே மெய்க்கடி, எஞ்சியவை பொய்க்கடி என கொடுநச்சுக் கருநாகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சொல், நீ அதன் எல்லையைக் கடக்காது உன் எல்லையைக் கடந்து வந்து தாக்கிய விலங்கை கண்டுள்ளாயா? கேட்டுள்ளாயா?" என்றான். நான் "உண்மை" என சொல்நின்ற விழிகளுடன் நோக்கினேன்.

"வேடனே, எண்ணம் சூழ்வாயெனில் கடந்து நோக்கு, நீ இயற்றிய பெரும்பழி என்னவென்று உனக்குத் தெரியும். இவ்வழி சென்றவர் உன்னை நம்பி மலையேறியவர். உன் குடியினர் வழிப்போக்கர்களை தாக்குவதில்லை என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதனால்தான் இந்த வழியில் வணிகர்கள் வருகிறார்கள். அது உன் குடியினர் எம் மூதாதையருக்கு அளித்த சொல். உங்களுக்கு உங்கள் மூதாதையர் அளித்த ஆணை. அவர்களை நீ மீறியிருக்கிறாய். உன் முன் வந்த வணிகன் கையில் எப்படைக்கலமும் இல்லாதவன். வேட்டையனாகிய நீயே கூறுக! கொம்போ குளம்போ உகிரோ எயிரோ சிறகோ இல்லாத உயிர்களைக் கொல்ல உனது நெறி ஒப்புக்கொள்கிறதா?" என்றான் அவ்வணிகன்.

நான் மெய் தளர்ந்து குரல் தாழ்த்தி "கொன்று ஈட்டிய எதையும் நான் நுகர்ந்ததில்லை. என் குடியினருக்கு உணவாகவே அனைத்தையும் கொண்டு செல்கிறேன். கொலைப்பழி வேட்டைவிலங்கை அணுகுவதில்லை. ஏனெனில் தன் குருதியை அது மைந்தருக்கு அளிக்கிறது என்று எங்கள் குலத்திலொரு சொல் உண்டு" என்றேன். "ஆம் எனில் சென்று உன் குலத்தவரிடம் கேட்டு வா. நீ கூட்டி வைத்த இப்பழியை அவர்கள் பகிர்ந்துகொள்வார்களா என்று" என்றான். "அவர்களிடமா?" என அறிவிலிபோல் கேட்டேன். "ஆம், உன் கையின் செல்வத்தை அவர்கள் உண்டவர்களல்லவா?"

நான் ஆமென்று தலையசைத்தேன். "உன் பழியில் அவர்களுக்கும் பங்குள்ளது என அவர்கள் சொன்னால், அவர்களில் ஒருவரேனும் உன் பழியில் ஒருதுளியையேனும் ஏற்றுக்கொள்வார்கள் என்று முன்வந்தால், மீண்டு வா. என்னை நீ கொல்லலாம். இந்த வாள் உன் முன் தாழும். நீ வரும்வரை இங்கு காத்திருப்பேன். என் தந்தைமேல் ஆணை" என்று அவன் சொன்னான். புன்னகைத்து "இது நானும் கற்றுக்கொள்ளும் தருணம். இதைத்தான் தேடி வந்தேன்" என்றான்.

நான் அவன் விழிகளை பார்த்துக்கொண்டிருந்தேன். அத்தகைய ஒருவனை அதற்கு முன் நான் பார்த்ததில்லை. "நன்று, வணிகரே. சென்று என் குலத்தை அழைத்து வருகிறேன். நான் செய்தது பழி எனில் அப்பொறுப்பைப் பகிர அவர்கள் ஒருபோதும் தவறப்போவதில்லை. எனக்கு அதில் ஐயமே இல்லை. ஏனென்றால் நிஷாதர்களாகிய நாங்கள் ஒரே குருதியின் ஆயிரம் முகங்கள். கிளைபிரிந்து வான் பரவினாலும் வேர்பின்னி ஒன்றென்று நிலைகொள்பவர்கள்" என்றபின் திரும்பி நடந்தேன்.

இருட்கனி - 33

தூமவர்ணி அரைத்துயிலில் என விழிசொக்கி அமர்ந்திருந்த குட்டிக்குரங்குகளிடம் சொன்னது "சிதல்புற்றின் முன் அமர்ந்திருந்த கபீந்திரரிடம் வால்மீகி தன் கதையை சொன்னார். கபீந்திரர் அச்சொற்களை தன் விழிகளாலும் வாங்கி உள்ளமென ஆக்கிக்கொண்டார். ஆகவே இக்கதை இந்நாள் வரை இங்கே திகழ்கிறது. என்றும் திகழும்."

உண்மையில் ஒவ்வொரு அடிக்கும் நான் நம்பிக்கை இழந்துகொண்டிருந்தேன். அவ்வாறுதான் அது முடியுமென்றும் தோன்றியது. ஆனால் என் குடியின் எல்லை கடந்து நான் சென்றதும் என்னை நோக்கி களிக்கூச்சலிட்டபடி ஓடிவந்த மைந்தரைக் கண்டதும் நானே நூறு துண்டுகளாகச் சிதறி அங்கு நிற்பதை உணர்ந்தேன். எனது குருதி, எனது முகம், எனது விழிகள். எனது பழியும் கூடத்தான் என்று அப்போது உறுதியாக நம்பினேன். புற்றுகளிலிருந்து என் குடிமைந்தர்கள் ஈசல்போல எழுந்து வந்து என்னைச் சுற்றி கூச்சலிட்டனர். "தந்தையே! தந்தையே!" என்று கை நீட்டி எழுந்தனர். என் துணைவி மலர்ந்த முகத்துடன் எழுந்து வந்து "என்ன கொண்டு வந்தீர்கள்? நெடும்பொழுதாக காத்திருக்கிறோம்" என்றாள்.

"இம்முறை நான் கொண்டுவந்தது ஒரு வினாவை. உன் செயலின் விளைவென்ன என்று அறிவாயா என ஓர் இளம் முனிவர் என்னிடம் கேட்டார். அது மூதாதையரும் தெய்வங்களும் பொறுக்காத பழி என நிறுவினார். காலத்தில் ஒரு மலையளவுக்கு அது பெருகி நின்றிருக்கிறது என காட்டினார்" என்றேன். அவள் விழி சுருக்கி "என்ன செய்தீர்கள்

அத்தகைய பெரும்பழியைக் கொள்ள?" என்றாள். "நான் உன் பொருட்டும் நம் குடியின் பொருட்டும் வழிப்போக்கர்களைக் கொன்று செல்வம் கொணர்ந்தேன்" என்றேன். அவள் "வழிப்போக்கர்களையா? நாம் அவர்களை கொல்லலாகாது அல்லவா?" என்றாள். "ஆம்" என்றேன்.

"நம் முன்னோர் உப்புதொட்டு ஆணையிட்ட பின்னரே இந்த வழியை வணிகர்கள் பயன்படுத்துகிறார்கள்" என்று அவள் சொன்னாள். "ஆம்" என்று நான் அவளை நோக்கியபடி சொன்னேன். அப்போது அவள் சொல்லப்போவதென்ன என்று மட்டுமே என் உள்ளம் எண்ணியது. "அவர்கள் அளித்த செல்வத்தால்தான் நாம் பெருகினோம். அவர்கள் நமக்கு அன்னமிட்டவர்கள்." நான் "ஆம், ஆகவேதான் நான் செய்தது பெரும்பழியெனக் கொள்ளப்பட்ட்து" என்றேன். "நம் குழந்தைகளுக்காக நான் இப்பிழையை செய்தேன். அவர்கள் என்னால் பெருகவேண்டும் என எண்ணினேன்."

அவள் விழிகளில் நீர்மை பரவ என்னை நோக்கி "விலகு, வீணனே! நீ மூதாதையர் சொல் திறம்பி, தெய்வங்களின் நெறி பிறழ்ந்து இப்பெரும் பழியை இயற்றினாய்! இப்போது அது எங்கள் பொருட்டென்று சொல்கிறாய்!" என்றாள். என் உடல் துடிக்கத் தொடங்கியது. நிலத்தில் கால் நிற்கவில்லை. "என்ன சொல்கிறாய் நீ? உன் நெஞ்சுதொட்டுச் சொல், உங்கள் பொருட்டே இதை இயற்றினேன் என்று உனக்கு மெய்யாகவே தெரியாதா?" என்றேன். அவளை நோக்கியபடி அருகணைந்து "நீ விழைவு கொள்ளவில்லையா? உன் விழைவல்லவா என்னை செலுத்தியது?" என்றேன்.

"ஆம், நான் விழைந்தேன். விழைவில்லாத பெண் இல்லை" என்றாள். அவள் விழிகளை கூர்ந்து நோக்கி "என்னை நோக்கி

சொல், மெய்யாகவே இது பழிச்செல்வமென்று அறியாதவளா நீ? வேட்டை விலங்குகள் விண்ணிலிருந்து மழையென உதிர்ந்தால்கூட எவராவது இத்தனை செல்வத்தை ஈட்டிக்கொண்டு வந்திருக்க முடியுமா?" என்றேன். அவள் விழி விலக்கி "எனக்கென்ன தெரியும்?" என்றாள். "தெரியாதென்று சொல். என் விழிகளை நோக்கி சொல், தெரியாதென்று" என்று கூவினேன். "எந்த இல்லறத்தாளுக்கும் தெரியாமலிருக்காது."

"ஆம், அறிவேன்" என அவள் கூவினாள். "நீ திருடியிருக்கக்கூடும் என எண்ணினேன். அல்லது ஏதோ புதையல் கிடைத்திருக்கும் என்று கருதினேன். படைக்கலம் ஏந்தாதவர்களைக் கொல்லும் கீழ்மகன் நீ என நான் அறியவில்லை. பெரும்பழியையா எங்களுக்கு இதுவரை அன்னமென்றும் அமுதென்றும் ஊட்டினாய்?" நான் மேலும் மேலும் கூர்கொண்டேன். "முதல் நாள் இதை கொண்டுவரும்போது உன் உள்ளம் துடித்திருக்கும். விலக்க எண்ணியிருப்பாய். விழைவு தடுத்திருக்கும். அதை கடந்துவந்து இதை நீ ஏற்றுக்கொண்டாய். இவ்வின்பத்தில் திளைத்து இதில் உழன்று இதுவென்றான பிறகு இதுவன்றி இருக்கவொண்ணாதவளானாய்."

வஞ்சத்துடன் முகம் இளிப்புபோல ஆகி பற்கள் தெரிய அடிக்குரலில் "ஆம், அவ்வாறே. எனில் என்னை அவ்வண்ணம் ஆக்கியது நீ. நீ அளித்த பொருளால் நான் என் குலநெறியை கடந்தேன். பழிகொண்டவளானேன்" என்றாள். நான் அவளை மேலும் அணுகி அவள் மேல் பாய்வதுபோல் நின்று "இக்குருதிப்பழியில் இணைப்பங்கு உனக்குண்டு. கணவனின் அறத்தில் இணைப்பங்கு துணைவிக்கு உண்டு என்றால் பழியிலும் இணைப்பங்கு இருக்கவேண்டும்" என்றேன். "எந்த

நெறி? எந்த நெறி சொல்கிறது அவ்வண்ணம்?" என்று அவள் கூவினாள். "தொல்நெறி... ஆம், தொல்நெறி சொல்கிறது" என்றேன்.

அவள் என் விழிகளை நோக்கி "இல்லை, இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அறத்தையோ பழியையோ மறுப்பதற்கு துணைவிக்கு ஒரு வழியுண்டு, அக்கணவனை மறுத்துவிடுவது" என்றாள். அந்த அடியால் துடித்து நான் பின்னடைந்தேன். தழைந்த குரலில் "நீ இப்படி சொல்வாய் என்று எண்ணவே இல்லை. உன்பொருட்டே இவையனைத்தையும் செய்தேன். உன் மைந்தரின் பொருட்டு" என்றேன். "என் மைந்தர் உங்கள் கொடையால் வளர்ந்தனர், ஈகையால் அல்ல. தந்தையின் கடன் நீங்கள் இயற்றியது. அதன் பொருட்டு அவர்கள் மூதாதையர் பழி கொள்ள இயலாது" என்று அவள் சொன்னாள்.

"அவர்களிடமே கேட்கிறேன். உன்னிடம் என்ன பேசுவது, அவர்களிடமே கேட்கிறேன்" என்று கூவியபடி என் மைந்தரை நோக்கி திரும்பினேன். குடிலை விட்டு வெளியே வந்து அவர்களை நோக்கினேன். நாங்கள் பூசலிடுவதைக் கண்டு திகைத்து நின்ற மைந்தர்கள் பின்னடைந்தனர். என் முதல் மைந்தனை நோக்கி "சொல், உன் பொருட்டும் உன் இளையோர் பொருட்டும் நான் பெரும்பழியொன்றை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். அவையனைத்தையும் உங்கள் பொருட்டே செய்தேன் என்பதனால் நீங்கள் பகிர்ந்துகொள்வதே முறையென்றாகும். என் பழியை நீ கொள்வாயா?" என்றேன்.

"தந்தையின் பழியை மைந்தர் கொள்ள வேண்டுமென்பதில்லை. என் பிறப்பில் நான் ஈட்டும் பழியை நீக்கவே என் பிறப்பு போதாதென்றிருக்க நீங்கள் திரட்டியதை நான் எவ்வாறு

கொள்ள முடியும்?" என்று அவன் சொன்னான். "உங்கள் பொருட்டே, உங்களை ஊட்டி வளர்க்கும் பொருட்டே நான் அனைத்தையும் செய்தேன்" என்று குரல் உடைய கூவினேன். "எளிய ஊனுணவால், கிழங்குகளால் நாங்கள் வளர்ந்திருப்போம். சுவை மிக்க அன்னமும் அமுதும் நாங்கள் கோரி நீங்கள் அளித்ததல்ல" என்று அவன் சொன்னான்.

அவனை அடிப்பதுபோல அணுகியபடி குரல் உயர "நீ அவற்றை விழையவில்லையா? உண்கையில் உளம் களிக்கவில்லையா? உன் அகம் தொட்டு சொல், எங்கோ ஒரு துளிக்குருதி இதில் இருக்கிறதென்று உண்மையில் உனக்குத் தெரியாதா?" என்றேன். அவன் முகமும் அன்னை போலவே மாறுவதைக் கண்டேன். விழிகளைச் சரித்து "உணர்ந்திருக்கலாம், ஆனால் தந்தையை நெறியுசாவும் பொறுப்பு மைந்தனுக்கில்லை என்பதனால் நான் மேலும் எண்ணவில்லை" என்றான். "வளர்ந்த மகன் நீ. வில்லேந்தி கானேகவும், மலை கடந்து மீளவும் கையும் காலும் கொண்டிருக்கிறாய். இத்தனை நாள் இல்லத்திலிருந்து நீ உண்டது நான் சேர்த்துக்கொண்டு வந்திருந்த பழியை" என்றேன்.

"அல்ல, உங்கள் ஆணவத்தை" என அவன் கூவினான். என்னை தாக்கவருவதுபோல முன்னெழுந்து வந்தான். "உங்கள் கீழ்மை அது. குலம் புரக்கும் பெருந்தந்தை என்று நடிப்பதற்காக நீங்கள் இப்பழியை செய்தீர்கள். அந்த ஆணவத்தில் ஒரு துளியை நான் உண்டு வளர்ந்தேன். அவ்வளவுக்கு மட்டுமே நான் பழிகொள்ள முடியும். அதை ஈடுசெய்கிறேன்" என்று அவன் கூறினான். "மூதாதையரிடம் அதன்பொருட்டு பொறுத்தருள்கை கோருகிறேன். நோன்பிருக்கிறேன். என் குருதி வற்றும்வரை தவம் செய்கிறேன். ஆனால் உங்கள் ஆணவத்தின் விளைவை நீங்கள்தான் பெற்றுக்கொள்ளவேண்டும்."

என்னால் அவன் முகத்தை நோக்க முடியவில்லை. முற்றாகத் தளர்ந்தவனாக மைந்தர்களை நோக்கினேன். "மைந்தர்களே, நீங்கள் எவரும் இப்பழியை கொள்ளப்போவதில்லையா? ஒருவரேனும் என் உடன் வந்து நிற்கப்போவதில்லையா?" என்றேன். இளைய மைந்தன் "நீங்கள் கொண்ட குருதிப்பழி உங்களாலேயே நிகர் செய்யப்படவேண்டியது. அதற்கு எவ்வகையிலும் நாங்கள் பொறுப்பல்ல" என்றான். பிற மைந்தரும் "ஆம்! ஆம்!" என்று கூவினர். நான் "மைந்தர்களே, நான் கெடுநரகுக்குச் செல்வேன். காலகாலமாக இழிவுறுவேன்" என்று கூவினேன். என் கண்ணிலிருந்து நீர் வழிந்தது. இரு கைகளையும் நீட்டி "உங்களை தூக்கி வளர்த்த கைகள் இவை" என்றேன். அவர்கள் என்னை அகற்றும் நோக்குடன் விலகினர். அகல்வு பகைமை என்றாவதைக் கண்டேன். பகைமை வெறுப்பென்று கூர்வதை உணர்ந்தேன்.

என் சுற்றத்தாரும் குருதியினரும் என்னை விலக்கி அகன்றனர். "ஆம், உங்கள் பழி அது. அதை நிகர்செய்ய வேண்டிய பொறுப்பு உங்களுடையதே" என்றனர். "மானுடர் முற்றிலும் தனியாகவே தங்கள் சுமையை சுமந்தாகவேண்டும்" என்றார் குலமூத்தார் ஒருவர். உளமுடைந்து விழி நீர் பெருக நான் அங்கிருந்த கல்லில் அமர்ந்தேன். தலையை கைகளால் தாங்கிக்கொண்டு விம்மி அழுதேன். ஒருகணத்தில் குலமிலியாக, மண்ணில் எவருமில்லா தனியனாக ஆனேன். பழி நிறைந்தவன், மீளா இருளொன்றில் நெடுந்தொலைவு சென்றுவிட்டவன். என்னை நானே தன்னிரக்கத்தில் தள்ளிக்கொண்டேன். என்னை கரைத்து கரைத்து அழுதேன்.

மெல்ல ஓய்ந்து நீள்மூச்சும் விம்மலுமாக மீண்டேன். பின்னர் ஒரு சொல்லும் உரைக்காமல் திரும்பி நடந்தேன். அவர்கள்

எவரேனும் என்னை பின்னால் அழைக்கக் கூடும் என்று எண்ணினேன். ஒரு சொல்லையேனும் அவர்கள் எனக்கென அளித்து முற்றும் நம்பிக்கை இழப்பதிலிருந்து என்னை காக்கக் கூடும். என் செவிகளிலிருந்து ஊரின் ஓசை முற்றொழிவது வரை அப்படி ஒரு குரல் எழவே இல்லை. நெடுந்தொலைவு வந்தபின் திரும்பிப்பார்த்தேன். சிதல்புற்றுகளின் ஊர் செம்மண் அலையென அசைவிலாது நின்றது. பின்னர் நீள் காலெடுத்துவைத்து மீண்டும் சாலைக்கு வந்தேன்.

ஒவ்வொரு அடியிலும் என் உள்ளம் விடுதலை கொண்டபடியே இருந்தது. முற்றிலும் உளம் எடையிழந்து முகம் மலர்ந்த பின்னர்தான் அதை எண்ணமாக மாற்றிக்கொண்டேன். குருதியை, குடியை, சுற்றத்தை விட்டு எழுவதென்பது எவ்வளவு பெரிய பேறு. என் நினைவறிந்த நாள் முதல் நான் எண்ணி ஏங்கியது அதுதான். இதோ என் குடி, என் குருதி ஆயிரம் கரங்களால் என்னைத் தூக்கி அகற்றியிருக்கிறது. இத்தனை எளிதாகத் துறக்க பிறிதொரு வழியில்லை. தனிமைப்படுத்தப்படுவோர் பேறு பெற்றோர். பழி கொள்வோர் தெய்வங்களால் வாழ்த்தப்பட்டோர். துயருற்றோர் ஊழின் நற்சொல் அடைந்தவர். அவர்கள் துறப்பது எளிது. விடுதலை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் அவர் முன் வந்து நின்றபோது என் முகம் தெளிந்திருந்தது. அவரை நோக்கி வணங்கி "இளமுனிவரே, உங்களால் தெளிவுற்றேன். கடமையைக் காட்டி எவரும் தீது செய்த பழியிலிருந்து தப்ப இயலாது. மைந்தருக்கோ தந்தைக்கோ நீத்தாருக்கோ குடிக்கோ இயற்றும் செயல்கள் ஆயினும் அவை எந்நிலையிலும் நெறி நின்றவையாகவே அமையவேண்டும்" என்றேன். அவர் முன் கால்மடித்து அமர்ந்து

“இப்புவியில் இன்பத்தை பகிர முடியும், துயரத்தை எவராலும் பகிர இயலாது. நற்பேறுகளை பகிர இயலும், பழிகளை பகிர இயலாது. செல்வத்தை பகிர இயலும், தவத்தை பகிர இயலாது. இதை இன்று உணர்ந்தேன். இதை எனக்கு உரைக்கும்பொருட்டே இங்கு நீங்கள் வந்தீர்கள் போலும்” என்றேன்.

அவர் புன்னகைத்து “நீங்கள் இத்தெளிவை வந்தடைந்தது உங்களுக்கும் எனக்குமாகவே. நீங்கள் இங்கிருந்து கடந்து செல்வது வரை உங்கள் மேல் வஞ்சமும் கசப்பும் கொண்டிருந்தேன். நீங்கள் உறுதியாக திரும்பி வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். வந்ததும் வன்சொற்களால் உங்களை உடைத்து உயிருள்ளவரை ஆறாத புண்ணை அளித்து மீள வேண்டுமென்றே கருதியிருந்தேன். ஆனால் நீங்கள் தொலைவில் செல்வதை நோக்கி நின்றபோது ஒன்று தோன்றியது, நீங்கள் மானுடரில் அரிதிலும் அரியவர். ஆகவே அரிதரிதான மெய்மையை சென்று அடையக்கூடியவர்” என்றார்.

“வேடரே, உயிர்களில் இயற்கையும் சூழலும் அமைக்கும் எல்லைகளைக் கடப்பவை மிகச் சிலவே. அது உயிராற்றலால் இயல்வது அல்ல. அறியவொண்ணா ஊழின் ஆற்றலால், ஊழை ஆளும் பிரம்மத்தின் ஆணையால் இயல்வது. முனிவர்களில் அனைவருமே மானுட எல்லையை கடந்துசென்றவர்கள்தான். கடத்தலால் மெய்ஞானத்தை அடைந்தவர்கள். எல்லை கடத்தலென்பது எத்திசையிலும் ஆகலாம். விழைவால், காமத்தால், வஞ்சத்தால் கீழெல்லையைக் கடந்தோர் ஆயினும் எல்லை கடப்பவர் மெய்மையை சென்றடையும் வாய்ப்புகொண்டவர். ஏனென்றால் அவர்களில் சிலரே தெய்வங்கள் வகுத்த மேல் எல்லையையும் கடக்க இயலும்.”

“உங்களில் எழுந்த உயிர்கடந்த பேராற்றலே கொடிய வேடனாக சாலை ஓரத்தில் உங்களை நிறுத்தியது. அவ்வாற்றலை உங்களில் நிறுவிய தெய்வங்களின் விழைவு இவ்வாறு அமைந்தது. அந்த ஆற்றல் இன்னும் நெடுந்தொலைவு உங்களை கொண்டு செல்லக்கூடும்” என்றார் இளமுனிவர்.
“இல்லை, எனது வழி முடிந்துவிட்டது என்று உணர்கிறேன். உங்கள் சொல் பெற்றபின் இங்கிருந்து கிளம்பி காட்டின் ஆழத்திற்கு செல்வேன். உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவேன். என் பழி இருண்ட வெளியென சூழ்ந்திருக்கும் ஆழத்திற்குச் சென்று யுகங்களைக் கழிப்பேன். அதுவே நான் செய்யக்கூடுவது” என்றேன்.

“அல்ல. உங்கள் இலக்கு பிறிதொன்றென்று எனக்குத் தோன்றுகிறது. இங்கு நீங்கள் சொன்ன சொற்கள் எவையும் எளிய வேடனுக்குரியவை அல்ல. வேடர்கள் ஒருபோதும் விழிக்கோ செவிக்கோ சிக்காதவற்றை சொல்ல இயலாது. ஐம்புலன்களையும் வில்லெனக்கொண்டு அறிவை விண்தொலைவுக்குத் தொடுக்கும் ஆற்றல் பலகோடியினரில் ஒரு சிலருக்கே அமைகிறது. நீங்கள் செல்லும் தொலைவென்ன என்று எனக்குத் தெரியாது. அதை தெய்வங்களே கூற இயலும். ஆயினும் இவ்வண்ணம் இவை நிகழ்ந்தது ஊழின் பெருந்திட்டத்தின்படியே என்று எண்ணுகிறேன். எழுக! இங்கிருந்து செல்லும் தொலைவு உங்களுக்கு தெளிவடையட்டும்” என்றார்.

“நான் செய்யக்கூடுவதென்ன?” என்று நான் கேட்டேன். “எங்கு ஒருவர் தன் வாழ்வின் வழிகளனைத்தும் மூடிவிட்டன என்று உணர்கிறாரோ அப்போது செய்யக்கூடுவது ஒன்றே. தவம் செய்க! தவம் என்பது அதுவரை ஒருவன் கொண்டிருக்கும்

அனைத்தையும் முற்றாக துறத்தல். ஒன்றும் எஞ்சாமல் வெட்ட வெளியில் நிற்றல். அதன் பின்னர் உருவாகி வருவனவற்றில் வாழ்தல். அடைந்து சென்றடையும் மெய்மையை அறிவென்பர். துறந்து சென்றடையும் மெய்மை ஞானமெனப்படும். அறிவைக் கடந்த ஒன்று உங்களில் நிகழ்வதாக!" என்று அவர் சொன்னார்.

"எனக்கு தவம் எதுவும் தெரியாது. தவத்தோர் எவரையும் நான் பார்த்ததில்லை" என்றேன். "தவம் என்பது ஒன்றே. இனியில்லை இனியில்லை என்று சென்று கொண்டே இருத்தல். அச்சொல் எங்கு முடிவடைகிறதோ அங்கிருக்கும் சொல்லை உங்கள் ஊழ்க நுண்சொல்லெனக் கொள்ளுங்கள். அதை உளம் சூடுங்கள். அதை வழிகாட்டியென அமையுங்கள். அது உங்களை இட்டுச்செல்லும். அறிக, எச்சொல்லும் ஊழ்க நுண்சொல்லே! ஏனென்றால் பிரம்மத்தின் துளியாக அன்றி ஒருபொருளும் இங்கில்லை. பிரம்மத்தின் பேராக அன்றி ஒரு சொல்லும் இங்கு எழவில்லை."

நான் கைகூப்பினேன். "ஆம், அவ்வாறே ஆகுக!" என்று அவர் சொன்னார். "நான் உங்களை எனது முதல் ஆசிரியனாகக் கொள்ளலாமா?" என்று கேட்டேன். "ஆம், நான் கற்றவை அனைத்தும் இங்கு இவ்வண்ணம் தொகுத்துக் கூறும்பொருட்டே என்று உணர்கிறேன். இதுநாள் வரை கற்றவை வெறும் சொற்களென என்னில் இருந்தன. இத்தருணத்தில் அவை என்னில் ஞானமெனத் திரண்டுள்ளன. வணங்குக, என் வாழ்த்தை கொள்க!" என்றார். எட்டுறுப்பும் நிலம்தொட அவர் முன் விழுந்து அவர் கால்களில் என் தலை வைத்து "வாழ்த்துக, ஆசிரியரே!" என்றேன். குனிந்து என் தலை

தொட்டு "நலம் சூழ்க! இறையருள் கூடுக! முழுத்தது பழுத்து மடியில் உதிர்க!" என்று சொல்லி அவர் வாழ்த்தினார்.

நான் எழுந்து என் ஆடையைக் களைந்து இடப்பக்கமாக வீசிவிட்டு வலப்பக்கம் திரும்பி நடக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு அடிக்கும் இனி இல்லை இனி இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்தேன். பல்லாயிரம் காலடிகள் அவ்வாறு சென்றேன். எழும் ஒவ்வொரு எண்ணத்தையும் இனி இல்லை எனும் சொல்லால் அறைந்து அப்பால் செலுத்தினேன். பின்னர் நெடுநேரம் சொல்லின்மையில் சென்று கொண்டிருந்தேன். விலக்க ஏதுமில்லாது அமைந்த வெறுமையில் எதிரில் ஒரு மரம் நின்றது. "அம்மரம்" எனும் சொல் உளத்திலெழுந்தது.

அருகணைந்து அதைப் பார்த்து அச்சொல் என்னுள்ளத்தில் ஏன் எழுகிறதென்று வியந்தேன். "அம்மரம்" என்று சொன்னபடியே நடந்தேன். இத்தனை தொலைவு இங்கணைந்து இந்த சிதல்புற்றைக் கண்டபோது தோன்றியது இதுவே என் இடம் என்று. இது எனக்காக ஒருங்கி இங்கே காத்திருக்கிறது என்று. அருகே கிடந்த இந்த பழைய அம்பும் எனக்கான கருவியென்று அறிந்தேன். இவ்விடத்தை தெரிவு செய்தேன். இங்கே அமர்ந்து சொன்னபோது அச்சொல் "இம்மரம்" என உருமாறிவிட்டிருந்தது. அம்மரம் இம்மரம் என்று என் நுண்சொல்லை நாவில் நிறுத்தினேன்.

"இங்கிருந்து தான் நான் செல்ல வேண்டியுள்ளது. இச்சொல்லில் இருந்தே என் வழிகள் நீளும்" என்றார் வால்மீகி. அதன் பின் அவர் கபீந்திரரிடம் எதுவும் பேசவில்லை. கபீந்திரர் ஒவ்வொரு நாளும் தனக்குகந்த காய்களையும் கனிகளையும் கிழங்குகளையும் கொண்டு அவர் முன் வைத்து வணங்கி மீண்டார். ஒவ்வொரு நாளும் விழித்தெழுந்து அக்கனிகளை

உண்டு அருகிருக்கும் சரயுவில் நீராடி தன் புற்றுக்குள் புகுந்துகொண்டார் வால்மீகி. பல்லாண்டுகள் அங்ஙனம் சென்றன. கபீந்திரர் முதுமை எய்தி மண் புகுந்தார். அவர் மைந்தர்கள் அக்கடனை தொடர்ந்தனர்.

புற்றிலிருந்த வால்மீகி சடைமுடி நீண்டு விழுதாகி, தாடி சுருண்டு கொத்தாகி, உடல் மெலிந்து, கைநகங்கள் நீண்டு சுருண்டு முனிவர் என தோற்றம் கொண்டார். அவர் பெயர் எவருக்கும் தெரியவில்லை. அவ்வழி சென்ற வேடர்கள் அவரை வால்மீகி என்றனர். அங்கு வந்து வணங்கிச்செல்லும் வணிகர்கள் அவரை வால்மீகமுனிவர் என்றனர். அவர் எவரிடமும் ஒரு சொல்லும் உரைக்கவில்லை. அவரை அவர் நாவில் திகழ்ந்த சொல் உள்ளங்கையில் ஏந்தியிருந்தது.

ஒருமுறை நீண்ட தாடியும் தோள்களில் தொங்கும் புரிசடையுமாக முனிவர் ஒருவர் வந்தார். அவர் புற்றை அணுகி வெளியே வணங்கி நின்றார். விழி திறந்து அவரைப் பார்த்த வால்மீகி அவரை அடையாளம் காணவில்லை. "நான் புரந்தரன். என்னை வாழ்த்துக, ஆசிரியரே!" என்றபடி புரந்தரர் அவர் காலில் விழுந்து வணங்கினார். "உங்களை வாழ்த்தியபின் நானும் நெடுந்தொலைவு சென்றேன். அவ்வாறல்ல அவ்வாறல்ல என்று பல்லாயிரம் முறை கடந்து சென்ற பின்னரும் ஆம் எனும் ஒன்று எஞ்சியது. அதை கடப்பதெப்படி என்று தென்திசையில் நான் சென்ற காட்டில் அமர்ந்த துர்வாச முனிவரிடம் கேட்டேன். ஒன்றை ஒருவனுக்கு அளித்தாய். அவனிடமிருந்து நீ பெற்றுக்கொண்டதென்ன என்றார்."

"அன்று தெரிந்துகொண்டேன், நீங்கள் என் காலடியை வணங்கியபோது நான் கொண்ட ஆணவத்தை. என்னை இங்கே கட்டியிட்ட அதை இங்கு வைத்து மீள வந்தேன்" என்றார்

புரந்தரர். வால்மீகி “ராம! ராம!” எனும் சொல்லையன்றி பிறிதொன்றையும் உரைக்காதவராக மாறியிருந்தார். எட்டுறுப்பும் நிலம்தொட அவர் முன் விழுந்து புரந்தரர் வணங்கினார். அவர் கால்பொடி தன் தலையில் பட்டபோது அந்த இறுதிச் சொல்லும் நீங்கி உளம் தெளியலானார். வணங்கிய கைகளுடன் புறம் காட்டாது அங்கிருந்து அகன்றார்.

குருக்ஷேத்ரத்தின் காட்டின் விளிம்பில் கிளைகளில் சூழ்ந்தமர்ந்திருந்த குரங்குகளின் நடுவே அமர்ந்திருந்த தூமவர்ணி தன் மடிமீது அரைத்துயிலில் கிடந்த குரங்குக் குழவிகளின் மென்மயிர் தலையை வருடியபடி அக்கதையை சொல்லி முடித்தது. “அவரை வால்மீகி என்கின்றனர். அவர் சொல்லிலேயே மானுட குலத்தின் முதல் கதை பிறந்தது. பின்னர் நெடுங்காலம் கழித்து அவ்வழி சென்ற ராகவராமன் வந்து அவர் அடிகளை பணிந்தான். தன் அடிகளைப் பணிந்தது தான் வணங்க வேண்டிய தெய்வம் என்று அவர் கண்டுகொண்டார். தெய்வத்தால் வணங்கப்படுபவனே கவிஞன் என்று உணர்ந்தார். தெய்வத்தை தீச்சொல்லிடவும் உரிமை கொண்டவன் கவிஞன் என்று அறிந்தபோது அவர் பெருங்காவியம் ஒன்றை இயற்றலானார்.”

மிக அப்பால் முதிய குரங்கான கும்போதரன் மரத்தில் சாய்ந்தமர்ந்து குறட்டை விட்டு தூங்கிகொண்டிருந்தது. அதன் மெல்லிய மூச்சொலியைக் கேட்டு கதையின் அமைதியில் நிலைத்திருந்த குரங்குகள் திரும்பிப்பார்த்தன. துயின்று கொண்டிருந்த புஷ்பகர்ணி எழுந்தமர்ந்து “அதன் பின் அனுமன் என்ன செய்தார்?” என்றது. “அனுமன் மண்ணில் கிளைவிரித்த மரத்தின் உச்சியிலிருந்து விண் நோக்கி பாய்ந்தார். விண்ணில்

காய்த்து கனிந்து சிவந்து ஒளிகொண்டிருந்த அழகிய கனியொன்றை தன் வாயால் கவ்வினார்" என்றது தூமவர்ணி.

"அது சூரியன்! அது சூரியன்! எனக்குத் தெரியும்" என்று மூர்த்தன் துள்ளி எழுந்தது. "சூரியனை கவ்வியது அனுமன்!" என்றது. "ஆம், நம் குலத்தில் ஒருவன் சூரியனை கவ்வினான்" என்று முதுகுரங்கு சொன்னது. "அதை எழுதியவர் தொல்கவிஞரான வால்மீகி."

இருட்கனி - 34

பீமன் வருவதை தொலைவிலேயே மிருண்மயத்தின் மாளிகையின் காவல்மாடத்திலிருந்த வீரர்கள் பார்த்தனர். அவர்களிலொருவர் கொம்போசை எழுப்ப கீழ்த்தளத்திலிருந்து காவலர்கள் வெளியே வந்து நோக்கினர். புரவி அணுகி விரைவழிந்து நின்றதும் பீமன் அதிலிருந்து கால்சுழற்றி இறங்கி தன் இடக்கையிலிருந்த குருதிக்கலத்துடன் எடை மிக்க காலடிகள் மண்ணில் பதிந்தொலிக்க எவரையும் நோக்காமல் சென்று மாளிகையின் சிறு முற்றத்தில் நின்று உரத்த குரலில் "அரசியர் எங்கே?" என்று கேட்டான். கொம்பொலி கேட்டு உள்ளிலிருந்து வந்த ஏவலன் தலைவணங்கி "அரசியர் ஓய்வறையில் இருக்கிறார்கள், அரசே" என்றான்.

"சேடியரை அழைத்து சொல், உடனே அவர்கள் இங்கு வந்தாகவேண்டும் என்று சொல். உடனே சொல்" என்று உரத்த குரலில் பீமன் ஆணையிட்டான். அதற்குள் அறைக்குள்ளிருந்து எட்டிப்பார்த்த சேடியர் அச்செய்தியை சொல்வதற்காக உள்ளே ஓடினர். பீமன் குருதியும் சேறும் உலர்ந்து அரக்குபோல் பற்றியிருந்த இரும்புக்குறடுகளை கழற்றாமல் மரப்படிகளில் மிதித்து மேலேறி உட்கூடத்திற்கு சென்றான். உள்ளிருந்து சேடியொருத்தி வெளிவந்து "பாஞ்சால அரசி எழுந்தருள்கிறார்கள்" என்றாள். அவள் குரல் அடைத்திருந்தது. "வரச்சொல்! உடனே வரச்சொல்!" என்று மதுவெறியில் இருப்பவன்போல் பீமன் குரல் கொடுத்தான்.

சிற்றறையின் வாயிலுக்குள் இருந்து நன்கு குனிந்து திரௌபதி வெளிவந்தாள். அவனைக் கண்டதும் விழிகள் சற்று விரிந்தன. சொல்லுக்கென இதழ்கள் மெல்ல பிரிந்தன. இரு கைகளும் தளர்ந்து விழ வளையல்கள் ஒலியெழுப்பின. மூச்சில் அவள் முலைகள் எழுந்தமைந்தன. நோயுற்றவள்போல் அவள் நடுங்கிக்கொண்டிருந்தாள். பீமன் அவளை நோக்கி "இதோ நீ காத்திருந்தது. உன் ஆடை தொட்டு இழுக்கத்துணிந்தவனின் நெஞ்சக்குருதி... அள்ளிப் பூசி குழல் முடிந்துகொள்" என்றான். அச்சொற்களை நெடுநாட்களாக அவன் உளம்பயின்றிருந்தமையால் அது பொருளில்லா பூசனைமொழி என ஒலித்தது.

அவள் உடலில் ஓர் அதிர்வு கடந்து சென்றது. "இதோ!" என்று பீமன் அந்தத் தலைக்கவசக் கலத்தை நீட்டினான். அவள் ஓரடி எடுத்து பின்னால் வைத்தாள். "திரும்பு. உன் குழலில் நானே பூசிவிடுகிறேன் இக்குருதியை" என்றான். வேண்டாம் என்பதுபோல் அவள் தலையை அசைத்தாள். பீமன் "என் வஞ்சினத்தை அங்கு களத்தில் முடித்துவிட்டேன். இக்கீழ்மகனின் குருதியை உண்டு என் உடலுக்குள் தேக்கியிருக்கிறேன். இவ்வெறுங்கைகளால் அவன் நெஞ்சக்கூட்டை உடைத்துப் பிளந்தேன். அங்கிருந்த குலையை பிழுதெடுத்து பிழிந்து இச்சாறை உனக்கென கொண்டுவந்தேன்" என்றான்.

திரௌபதி மேலுமிரு அடிகள் பின்வைத்து மூச்சு இளைத்தாள். அவள் கழுத்து ஏறி இறங்கியது. முகத்தில் தெரிந்த பதைப்பு பீமனை மேலும் சினம்கொள்ள வைத்தது. "அஞ்சுகிறாயா? நீ அஞ்சவேண்டியது உன் சொல்லை. நாவிலெழுந்தவை பூதமென பேருருக்கொண்டு சூழ்ந்துகொள்ளுமென அறிந்திருப்பாய், இன்று

தெரிந்துகொள் உன் நாவிலெழுந்தது கௌரவக் குலம் முடித்து குருதி குடிக்கும் கொற்றவையின் சிம்மம்" என்று தன் தொடையில் வலக்கையால் ஓங்கி அறைந்து வெடிப்பொலி எழுப்பி பீமன் சொன்னான். "இதோ அத்தருணம்" என அக்கலத்தை நீட்டினான்.

அறைக்கு அப்பால் நின்று நோக்கிய ஏவலர்களுக்கு அது விந்தையானதோர் நாடகக்காட்சி போலிருந்தது. இப்புவியில் பிறிதொரு முறை நிகழாதவை, முன்பு இலாதவை, அவ்வண்ணம் பொருந்தா நடிப்பென வெளிப்படுகின்றன. அவை மானுடரின் தருணங்களல்ல. மானுடரை ஆளும் மேல், கீழ், ஒளி, இருள் தெய்வங்களுக்குரியவை. வெறியாட்டு எழுந்தவர்களின் உடலில் கூடும் பொருந்தாமை அதிலுள்ள அனைவரிலும் வெளிப்படுகிறது. அந்தக் கலம் ஏவலரை அச்சுறுத்தியது. சிலர் குமட்டியபடி வாய் பொத்தி உடல்நடுங்கி மடிந்து அமர்ந்தனர். குந்தி வரும் ஒலி கேட்க அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு சுவரோடு ஒண்டிக்கொண்டனர்.

சிற்றறையிலிருந்து வெளிவந்து பீமனை நோக்கிய குந்தி "என்ன செய்கிறாய், மந்தா?" என்றாள். அவன் தோற்றம் அவளை திகைக்கச் செய்தது. அவள் செய்தியை அறிந்திருக்கவில்லை. பீமன் அவளை நோக்கி திரும்பி கலத்தை நீட்டி "இவள் குழல் முடிக்க கொண்டுவந்தேன். எஞ்சியதை நீ உன் முகத்தில் பூசிக்கொள். வேண்டுமென்றால் சற்று அருந்து, உன் மைந்தன் அருந்திய குருதியின் மிச்சில் இது. உன்னுள் எரியும் அந்த அனல் இதனால் முற்றவியக்கூடும்" என்றான். "என்ன சொல்கிறாய்?" என்று மொந்தையைப் பார்த்த பின் முகம்

சுளித்து பற்களைக் கடித்து "பழிகொண்டவனே... என்ன செய்தாய்?" என்று மூச்சொலியின் குரலில் கூவினாள் குந்தி.

"நம் குலமகளை சிறுமை செய்த வீணனின் நெஞ்சக்குருதி. இவன் வீழ்ந்தபின் இனி துரியோதனன் உயிர்வாழமாட்டான். இன்றல்லது நாளை அவன் குருதியையும் இங்கு கொண்டுவருகிறேன். உன்னை ஒரு மணையிட்டு அமரவைத்து தலையில் ஊற்றி முழுக்காட்டுகிறேன். அஸ்தினபுரியின் வாயில் கடந்து நீ உள் நுழைந்தபோது தெய்வங்கள் இத்தருணத்தை கருதியிருக்கின்றன. ஆம், இதோ உன் வருகை நிறைவுறுகிறது" என்றான் பீமன். "சீ அறிவிலி! பெண்சொல் தலைக்கொண்டு இக்கீழ்மையை நிகழ்த்தினாயா நீ? போரில் வெல்வது ஆணுக்குரிய செயல். குருதியள்ளிக் குடிப்பதும் நெஞ்சைப்பிழிந்து மொந்தையில் கொண்டுவந்து சேர்ப்பதும் அரக்கனின் குணங்கள். நீ என் மைந்தனே அல்ல. உன் பொருட்டு எண்ணி உளம் கூசுகிறேன். விலகு! இக்கணமே விலகிச்செல்!" என்று குந்தி கூவினாள்.

பீமன் விந்தையான இளிப்புடன் அவளை நோக்கி சென்று "இதை நீ விழையவில்லை என்று சொல். உன் மறுமகள் இவ்வஞ்சினத்தை உரைத்தபின் இத்தனை ஆண்டுகளில் நீ ஒருமுறையேனும் இதை மறுத்துச் சொல்லியிருக்கிறாயா? இப்போர் தொடங்கிய பின்னரேனும் இதை ஒழியும்படி அறிவுறுத்தியிருக்கிறாயா? இந்தக் குருதியின் பழி உன்னைத் தேடி வருகையில் பின்னடி வைத்து ஒளிகிறாய் அல்லவா? சொல், பன்னிரண்டு ஆண்டுகாலம் ஆற்றியிருந்த போதெல்லாம் எத்தனை ஆயிரம் முறை இவ்வஞ்சினத்தை நீ உரைத்திருப்பாய்?" என்றான்.

குந்தி முகம் குருதியெனச் சிவக்க "வீணன்! இன்று பெண்ணை அவைச்சிறுமை செய்பவன் நீ! பிழுதெடுக்க வேண்டியது உன் நாக்கை!" என்றாள். "ஆம், இப்பழியை நான் கொள்ளமாட்டேன். உடன்பிறந்தானின் நெஞ்சு பிளந்தெடுத்த குருதியுடன் வந்திருக்கும் நீ என் மைந்தனல்ல. இனி ஒருபோதும் உன் கை என் மேல் படுவதற்கு நான் ஒப்பமாட்டேன். நான் மண் மறைந்தபின் உன் கைகளால் அளிக்கப்படும் நீரும் அன்னமும் எனக்கு வரக்கூடாது. இன்றிலிருந்து நீ பாண்டவனல்ல, கௌந்தேயனுமல்ல. அகல்க... என் விழிமுன்னிருந்து செல்க..." என்றாள்.

உறுமலோசை கேட்டு பீமன் திரும்பிப் பார்த்தான். திரௌபதியின் விழிகள் வெறித்துத் திறந்திருக்க வாய் பின்னுக்கு விரிந்து பற்கள் அனைத்தும் வெளியில் தெரிந்தன. பிறிதொரு பெரிய உறுமல் அவளிடமிருந்து வெளிவந்தது. கூந்தலை தலையுலைத்து முன்னால் கொண்டு இட்டு கைகளை நீட்டி "ம்" என்றாள். அவளில் பிறிதொரு தெய்வம் எழுந்ததை பீமன் உணர்ந்தான். குந்தி "என்ன செய்கிறாய் பாஞ்சாலி? தீராப் பழி கொள்ளவிருக்கிறாய்... இதை சூதர்கள் ஒருபோதும் மறவார். உனது கொடிவழியினரை ஷத்ரியர்கள் எந்நிலையிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தலைமுறை தலைமுறையென இப்பழி தொடர்ந்து வந்து அவர்களை கருவறுக்கும். வேண்டாம்" என்றாள்.

"ம்ம்..." என்று உறுமியபோது திரௌபதியின் விழிகள் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொள்பவைபோல் கோணலாயின. "ம்ம்... கொண்டு வா!" என்று சொன்னபோது அவள் குரல் பிறிதொன்றாக ஒலித்தது. பீமன் அவளை கூர்ந்து பார்த்தபடி மெல்லிய அடிவைத்து அவளை அணுகினான். "பூசுக!" என்று அவள்

சொன்னாள். “ம்ம்ம்... பூசுக!” என்று மீண்டும் சொன்னாள். பீமன் அவளிடம் “நீ யார்?” என்றான். “நான் மாயை. நான் விண்ணில் இத்தருணத்திற்காகக் காத்திருந்தவள். நான் மாயை! விடாய்கொண்டவள். குருதிக்காக நோற்றிருந்தவள்!” என்று அவள் உரக்கக் கூவினாள்.

பீமன் உடல் தளர்ந்து “ஆம், காத்திருந்தவள் நீதான்” என்றபின் அக்குருதியை அள்ளி கரிய மெழுக்கை அவள் கூந்தலில் நீவினான். அவள் வெறித்த விழிகளுடன் குனிந்து தன் இரு கைகளாலும் அக்கலத்திலிருந்த குருதி விழுதை அள்ளி தலையிலும் கூந்தலிலும் பூசிக்கொண்டாள். இரு கைகளையும் முகத்திலும் நெஞ்சிலும் அறைந்தாள். இளிப்பு மேலும் பெரிதாக “கொழுங்குருதி! ஆம், கொழுங்குருதி!” என்றாள். பீமன் அவளை தொடும்போது கைகள் நடுங்கினான். “ம்ம் ம்ம்ம்” என உறுமியபடி திரௌபதி குருதியை அள்ளி உடலிலும் குழலிலும் பூசிக்கொண்டாள்.

“விலகிச்செல்! அறிவிலி, விலகிச்செல்! அவளில் எழுந்திருப்பது நம் குலம்முடிக்க வந்த கொடுந்தெய்வம். உன் நெஞ்சம் பிளந்து குருதி அருந்தக்கூடும் அது. விலகு!” என்று குந்தி கூவினாள். அஞ்சி சுவரோடு சேர்ந்து நின்று கைநீட்டி பதறினாள். கலத்தை இரு கைகளாலும் வாங்கி தன் தலைமேல் கவிழ்த்த பின் தூக்கி அப்பால் வீசினாள் திரௌபதி. இரு கைகளையும் விரித்து, கழுத்து நரம்புகள் சொடுக்கி இழுக்க, உடல் அதிர்ந்து துள்ள, வான் நோக்கி தலைதூக்கி ஓலமிட்டாள். பின்னர் உந்தித் தள்ளப்பட்டவள்போல் பின்னால் சரிந்து உடல் நிலமறைய விழுந்தாள். கைகளும் கால்களும் இழுத்துக்கொள்ள மெல்ல துடித்து அடங்கினாள்.

பீமன் அவளை நோக்கியபடி கைகள் இனி என்ன என்பதுபோல் விரிந்திருக்க நின்றான். குந்தி "ஏன் நோக்கி நின்றிருக்கிறீர்கள்? அறிவிலிகளே, அரசியைத் தூக்கி மஞ்சத்திற்கு கொண்டுசெல்லுங்கள். உடனே" என்றாள். ஆனால் ஏவல்பெண்டுகள் அருகே வரத் தயங்கினர். பீமன் அவளை தூக்கச் செல்ல "விலகு! இனி அவள் சொல் பெறாது அவள் உடலை நீ தொடலாகாது. அந்தக் கைகளால் இனி நீ என் குலத்துக் குழவியர் எவரையும் தொடலாகாது. விலகு!" என்றாள் குந்தி. பின்னர் குனிந்து திரௌபதியைத் தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டு "இக்கணமே இங்கு வந்து இவளைத் தூக்காத ஏவற்பெண்டிரின் தலை கொய்து வீசப்படும். ஆணை" என்றாள்.

துடிப்பு கொண்டு ஏவற்பெண்டுகள் ஓடிவந்து திரௌபதியை பற்றினர். நான்கு பெண்டிர் அவள் கையையும் காலையும் பிடிக்க அவளைத் தூக்கி உள்ளே கொண்டுசென்றனர். அவள் உடல் அவர்கள் அனைவரையும்விட அரைமடங்கு உயரமும் பருமனும் கொண்டிருந்தது. கருவண்டொன்றை தூக்கிச்செல்லும் எறும்புகள்போல் அவர்கள் தோன்றினார்கள். சிறுவாயிலினூடாக அவர்கள் சென்று மறைய பீமன் அதை நோக்கியபடி அங்கேயே நின்றான்.

சற்று நேரம் கழித்து வெளியே வந்த ஏவற்பெண்டிடம் "அரசி விழித்துக்கொண்டாரா?" என்று பீமன் கேட்டான். அவள் அவன் அங்கே நின்றிருப்பதை எதிர்பார்க்கவில்லை. திகைத்து பின்னடைந்து "ஆம்" என்றாள். "ஆனால்..." என்று மீண்டும் தயங்கி "நான் கேட்டுவிட்டு வருகிறேன்" என்று சிறுவாயிலினூடாக உள்ளே சென்றாள். நெடுநேரம் கழித்து வெளியே வந்த இன்னொரு சேடி பீமனைக் கண்டதும் பதறி

உள்ளே செல்ல முயல "இங்கு வா! வா, என் ஆணை!" என்று பீமன் உரக்கக் கூவினான். அவள் நடுங்கும் உடலுடன் வந்து கைகூப்பி நின்றாள். "உள்ளே அரசி விழித்துக்கொண்டாயிற்றா?" என்றான். "ஆம் அரசே, விழித்துக்கொண்டுவிட்டார்" என்றாள்.

"நான் அவளை பார்க்க வேண்டும்" என்று பீமன் சொன்னான். "சென்று சொல், நான் காத்திருப்பதாக. அவளைப் பார்த்து ஒருசொல் உரைக்கவேண்டும் என." அவள் "நான் போய் உசாவி வருகிறேன்" என்றாள் . "உடனே உசாவி வரவேண்டும். இல்லையேல் வாயில் கடந்து நான் உள்ளே வருவேன் என்று அவளிடம் சொல்" என்றான். நெடுநேரம் கழித்து ஏவற்பெண்டு மீண்டும் வந்து "அரசே, பாஞ்சால அரசி தங்களை பார்க்க விழையவில்லை என்றார்கள்" என்றாள். பீமன் சீற்றத்துடன் கைகளை விரித்து அவளை தாக்கவருவதுபோல் முன்னால் வந்து "நான் பார்த்தாக வேண்டுமென்று சொன்னேன் என்று அவளிடம் சொல். பார்க்காமல் செல்லமாட்டேன் என்று சொல்" என்றான்.

"நான் கூறிவருகிறேன்" என்று அவள் உள்ளே செல்ல பீமன் வெளியே நின்றபடி "நான் பார்த்தாகவேண்டும். அன்னையிடம் சொல், நான் பார்த்தாக வேண்டும். அன்னையின் ஆணை இது என அறிவேன்" என்று கூவினான். மீண்டும் நெடுநேரம் வாயிலில் எவரும் தோன்றவில்லை. பீமன் தன் இரு கைகளையும் ஓங்கி அறைந்து ஓசையெழுப்பி "யார் அங்கே? சேடியர் எவராயினும் வெளியே வருக! நான் உள்ளே வந்து அரசியை பார்த்தாக வேண்டும். என்னை எவரும் தடுக்க இயலாது" என்று கூவினான். ஓங்கி கதவை மிதிக்க அது பேரோசையுடன் சுவரில் அறைந்தது. "எவராயினும் வெளியே

வருக! நான் அவளை பார்த்தாகவேண்டும். பார்க்காமல் செல்லமாட்டேன்!”

உள்ளிருந்து குந்தி சினத்தால் சுருங்கிய விழிகளுடன் வெளியே வந்தாள். அவள் முகம் வெளிறி தசைகள் நீரற்றவைபோல் சுருங்கியிருந்தன. உதடுகள் வளைந்து வெண்பற்கள் சற்றே தெரிய, கழுத்தில் நீலநரம்புகள் புடைத்திருக்க, வஞ்சம் உருக்கொண்டவள்போல் தோன்றினாள். “ஏன் கூச்சலிடுகிறாய்? முற்றிலும் விலங்கென்றே ஆகிவிட்டயா?” என்று அவள் பற்களைக் கடித்தபடி நாகச்சீறல் என ஒலியெழுப்பி கேட்டாள். “நான் அவளை பார்க்கவேண்டும். அவளிடம் ஒரு சொல்லேனும் பேசவேண்டும்” என்றான் பீமன். “அவள் களைத்திருக்கிறாள். நினைவு மீண்டபின் அவளால் நிகழ்ந்தவற்றை தாள இயலவில்லை” என்றாள் குந்தி.

அருவருப்புடன் முகம் சுளித்து “உன்னைப்போல் இழிவிலங்கல்ல அவள். உயர் ஷத்ரியக் குடியில் பிறந்தவள். குருதி அள்ளி குழல் முடிந்து நின்றிருப்பாள் என்று எண்ணினாயா? செல், சற்றேனும் நெறியறிந்தவன் என்றால் இனி இங்கே நில்லாதே!” என்றாள். பீமன் குந்தியைக் கடந்து நடந்து வாயில்கதவை காலால் உதைத்துத் திறந்து உள்ளே புக முயல அவள் விலகித்தெறித்து “என்ன செய்கிறாய்? பெண்டிர் தளத்திற்குள் எல்லை மீறி நுழைகிறாயா? எங்குள்ள பழக்கம் இது?” என்றாள். “நில், நான் வீரர்களுக்கு ஆணையிடுவேன். உன்னை கொல்லும்படி சொல்வேன்” என பிச்சிபோல கூச்சலிட்டாள். “இழிமகனே, காட்டாளனே, நில்!” என்று அலறினாள்.

திரும்பி அவளை நோக்கி ஏளனத்தால் இளித்த முகத்துடன் “நான் காட்டு மனிதன் ஆகிவிட்டேன். இனி நெறிகளுக்கு

அஞ்சவேண்டியதில்லை" என்றபின் பீமன் உள்ளே சென்றான். சிறிய வாயிலினூடாக தலைகுனிந்து உடலைத் திருப்பி நுழைய வேண்டியிருந்தது. உள்ளே நின்றிருந்த சேடியர் அவனைப் பார்த்ததும் எலிகள்போல் கீச் ஒலி எழுப்பிச் சிதறி கிடைத்த இடுக்குகளிலெல்லாம் புகுந்துகொண்டனர். அவன் தன்முன் திகைத்து நின்ற முதிய சேடியிடம் "எங்கே அரசி?" என்றான். அவள் நடுங்கும் விரலால் சுட்டி "அங்கே" என்றாள். பீமன் அங்கு வாயில்காப்பு நின்றிருந்த பிறிதொரு சேடியைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு குனிந்து சிறிய மஞ்சத்தறைகுள் நுழைந்தான்.

மிகச் சிறிய மர அறைக்குள் தாழ்வான மஞ்சத்தில் திரௌபதி மல்லாந்து படுத்திருந்தாள். அவள் கால்கள் மஞ்சத்திலிருந்து வெளிநீண்டிருந்தன. உடல் மஞ்சத்தை நிறைத்திருந்தது. அவள் கன்னங்களிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது. உதடுகளை இறுகக் கடித்திருந்தாள். அவன் உள்ளே நுழைந்ததும் அவளுடைய வெறித்த விழிகள் அவனை நோக்கின. அஞ்சியவள்போல படுக்கையிலேயே சற்று நெளிந்தாள். பீமன் அவளருகே நின்று "உன் சொல் என்னவென்று அறிந்து போக வந்தேன். உன் பொருட்டு இன்று அவனை களத்தில் கொன்று அக்குருதியுடன் வந்திருக்கிறேன். சொல், உன் நெஞ்சம் நிறைவுற்றதா?" என்றான்.

அவள் அவனை நடுங்கும் முகத்துடன் வெறுமனே பார்த்தாள். "வீண்மருட்சி காட்டாதே. உன்னுள் அவ்வஞ்சம் குளிர்ந்ததா? இனி ஏதேனும் எஞ்சுகிறதா உன்னுள்?" என்றான் பீமன். அவளால் மறுமொழி கூற இயலவில்லை. சொல் உடலுக்குள் சிக்கிக்கொண்டதுபோல வாயும் நெஞ்சும் தவித்தன. பீமன் தன் இரு கைகளையும் அவள் மஞ்சத்தின் மீது ஊன்றினான். "உன்

அச்சம் என்னை விலக்குகிறது. இத்தனை ஆண்டுகள் நீ விடுத்த சொல்லை உளம் கொண்டிருந்தவன் நான் மட்டுமே. அதன் பொருட்டு நான் அடைந்த அனைத்தையும் விலக்கிக்கொண்டேன். அடையக்கூடுமென என் முன் எழுந்த மெய்மையையும் விலக்கினேன். இன்று உன் துயரால் என் கொடையை நீ பொருளற்றதாக்குகிறாய். கூறுக!"

அவள் ஓசையின்றி நடுங்கிக்கொண்டிருக்க இரு கைகளாலும் ஓங்கி அவள் மஞ்சத்தை அறைந்து "கூறுக!" என்று பீமன் கூவினான். மஞ்சத்தின் கால்கள் நொறுங்க அது ஒரு புறமாக சரிந்தது. அவளால் ஒரு சொல்லும் உரைக்க இயலவில்லை. உதடுகள் நீருக்குத் தவிப்பவைபோல் அசைந்தன. பின்னால் அறைவாயிலில் வந்து நின்ற குந்தி "வெளியேறுக, கீழ்மகனே! அவள் உன்னிடம் ஒரு சொல்லும் உரைக்க விரும்பவில்லை. அதற்கு அப்பால் நீ தெரிந்துகொள்வதற்கு என்ன உள்ளது இங்கே?" என்றாள்.

"ஏன் என்று நான் அறிந்தாகவேண்டும்" என்று பீமன் சொன்னான். "நான் அறிந்தே ஆகவேண்டும். அவள் அகம் நிறைவுற்றதா? அவள் சொல் நிலைகொண்டது என உணர்கிறாளா? அவளில் எழுந்த பெருந்தோழி அவளேதான் அல்லவா? அவள் சொல்லட்டும்..." குந்தி "நீ அறிய வேண்டியது ஒன்றே. இக்கீழ்மையில் அவளுக்கு பங்கில்லை. இப்பழி அவளால் சூடப்படப் போவதில்லை" என்றாள். "இப்பழியை எவரும் ஏற்கப்போவதில்லை. இதைச் செய்தவன் நீ. தெய்வங்கள் முன்பும் மூத்தோர் முன்பும் பொறுப்பேற்கவேண்டியவனும் நீயே... இது உன் பிறவிச்சுமை. ஏழு பிறவிக்கும் நீ மட்டுமே தீர்க்கவேண்டிய கடன்."

“நன்று” என்றபடி பீமன் திரும்பிப் பார்த்தான். “இது அத்தனை எளிதாக அகலும் பழியா என்ன? இதை சூதர்கள் பாடப்போவதில்லையா?” என ஏளனச் சிரிப்புடன் குந்தியை நோக்கி கேட்டான். “சூதர்கள் பாடட்டும். எவர் பாடினால் என்ன? அவள் அதை தான் ஏற்றுக்கொள்ளவில்லை. உன் குருதிக்கலத்தை நான் உள்ளத்தாலும் தொடவில்லை. உயிர் வாழும் காலம் வரைக்கும், நீத்த பின்னரும் அது அவளையும் என்னையும் விடுதலை செய்யும். நீ உடனே வெளியேறு. இப்போதே வெளியேறு” என்று உரக்கக் கூவினாள் குந்தி.

முனகலோசை கேட்டு பீமன் திரும்பிப்பார்க்க அவன் மஞ்சத்து வெண்பட்டுவிரிப்பில் கையூன்றிய தடத்தில் இருந்த குருதியைக் கண்டு திரௌபதி அஞ்சி எழுந்து மறுசுவர் நோக்கி சென்று ஒட்டிக்கொண்டு நின்றாள். இரு கைகளையும் நெஞ்சோடு சேர்த்து பதறி அலையும் கண்களால் அதை பார்த்தாள். அவள் பார்ப்பதென்ன என்பதை தான் பார்த்த பீமன் தோள் தளர்ந்து புன்னகைத்தான். “நன்று, இப்பழியை முற்றிலும் ஏற்கும் தோள்கள் எனக்குண்டு. இதில் பங்குகொள்ளும்படி எவரிடமும் சென்று மன்றாடி நிற்கப்போவதில்லை. எஞ்சும் நூற்றுவரையும் நானே கொல்வேன். குலமழித்தவன் என்னும் பழி சூடி நிமிர்ந்து தெய்வங்களை நோக்கி நின்றிருப்பேன்” என்றான்.

தன் நெஞ்சில் ஓங்கி அறைந்து “ஆம், பிதாமகரைக் கொன்றவன், தந்தையரைக் கொன்றவன். தெய்வங்கள் என்னை நோக்கி கேட்கும் இப்பழியைச் சூடுகிறாயா என. ஏழு யுகங்கள் இருள் நரகில் உழல்கிறயா என்று. ஆம் என்று சொல்வேன். என் குலக்கொடியின்மேல் கைவைத்தவனைக் கொன்று குருதி குடிப்பேன் என்னும் வஞ்சம் என்னுடையது. அது எவரும்

சொல்லி நான் ஏற்றது அல்ல. அன்று செயலற்று அந்த அவையில் நின்றமையின் கீழ்மையை வெல்லும் பொருட்டு அவ்வாறு எழுந்தேன். தெய்வங்களை அழைத்தே ஆணையிட்டேன். இன்று இவள் சொல் பொருட்டு குருதியுடன் வந்த பழியையும் நானே சுமக்கிறேன்" என்றபின் குனிந்து வெளியேறினான்.

கூடத்திற்கு வந்து பிறிதொருமுறை திரும்பி நோக்கியபின் முற்றத்தை அடைந்து தன் புரவியை நோக்கி சென்றான் ஏவல்வீரர்கள் அவனுக்குப் பின்னால் விழிநட்டு வெறித்து நோக்கி நின்றனர்.

இருட்கனி - 35

பீமன் விசையுடன் நடந்து பாய்ந்து புரவியிலேறி அதை நாற்குளம்போசையுடன் விரையச்செய்தான். அவன் உளமறிந்ததுபோல் புரவி புதர்கள் மண்டிய பாதையில் தாவிச் சென்றது. சிறு ஓடைகளை தாவிக் கடந்தது. அதன் குளம்புகளில் பட்டு கூழாங்கற்கள் பறந்தன. பீமன் கடிவாளத்தை ஒரு கையால் பற்றியபடி பற்களைக் கடித்து உடற்தசைகளை இறுக்கி அமர்ந்திருந்தான். அங்கிருந்து விலகி செல்லச் செல்ல அவன் மெல்ல ஆறுதல் அடைந்தான்.

தன் அகம் அத்தனை அஞ்சியிருப்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். எதன் பொருட்டு அஞ்சினேன் என தன்னையே கேட்டுக்கொண்டான். உடனே அவன் உடல் மெய்ப்புகொண்டது. அறியாது கடிவாளத்தை இழுத்தமையால் புரவி நின்று சுழன்று கனைத்தது. நெஞ்சத்துடிப்பை உணர்ந்து மெல்ல தன்னை

மீட்டுக்கொண்டான். ஒவ்வொரு உடற்தசையாக தளர்த்தினான். புரவியை தட்டித்தட்டி ஆறுதலடையச் செய்தான். புரவி சீர்நடையில் செல்லத் தொடங்கியதும் அவனும் ஆறுதலடைந்தான்.

அவன் அஞ்சிய அத்தருணத்தை நினைவிலிருந்து மிகமிக மெல்ல தொட்டு எடுத்தான். திரௌபதியில் மாயை எழுந்த தருணம். அப்போது அவன் அஞ்சியதாக நினைவுக்கு வரவில்லை. அத்தருணத்தை குந்தியும் பகிர்ந்துகொண்டாள். அவன் உள்ளம் இருவரிலாக ஊசலாடியது. அப்போது தான் செய்யவேண்டியதைப் பற்றி வேறொரு பகுதி எண்ணிக்கொண்டிருந்தது. அக்குருதியை இருவரும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது என்னும் தத்தளிப்பு இருந்துகொண்டிருந்தது. மாயையாகி அவள் அதை பெற்றுக்கொண்டதும் அத்தருணம் நிறைவுற்றது என்னும் விடுதலை உணர்வே எஞ்சியது.

ஆனால் அகத்தில் ஒரு பகுதி ஆழமான நடுக்கு கொண்டுவிட்டிருந்தது. அவளில் மாயை எழுந்ததை அஸ்தினபுரியின் அவையிலேயே அவன் உணர்ந்துவிட்டிருந்தான். பின்னர் உபப்பிலாவ்யத்தில். அதன்பின் அவளை அவன் நேர்விழிகொண்டு நோக்கி சொல்லாடுவதே அரிதென்று ஆகிவிட்டிருந்தது. அவளை நோக்கும் முதற்கணம் அவனுள் ஏற்படும் அச்சத்தை மறுகணமே அத்தருணமும் அப்போது எழும் சொற்களும் வென்று கடந்துவிடும். ஆனால் மிக ஆழத்தில் இருண்ட நீர் நலுங்கிக்கொண்டிருக்கும்.

அவளுடைய நிழல் எப்போதும் அவனை திடுக்கிடச் செய்தது. பேய்த்தேவொன்றை கண்டதுபோல. அவன் ஒருகணம் நடுங்கிச்

செயலற்று நின்று உடல் நடுங்க மீண்டு வருவான். அது ஏதோ உளமயக்கு என எண்ணி மீண்டும் அந்நிழலை நோக்குவான். அப்போதும் அது அச்சுறுத்தும். கண் நட்டு, உளம் நாட்டி, அது திரௌபதிதான் என நிறுவிக்கொண்டு நோக்குகையிலும் அந்த நடுக்கம் நீடிக்கும். அது ஏன் என அவன் தனக்குத்தானே எண்ணிக்கொண்டதுண்டு. அவள் நடை மாறிவிட்டிருக்கிறது என்று தோன்றியது. ஆனால் நேராக நோக்குகையில் அவள் நடையில் எந்த மாறுதலும் இல்லை. நிழலில் என்ன வேறுபாடு தெரிகிறது என எண்ணி எண்ணி நோக்கி சலித்திருக்கிறான்.

அதை ஒருமுறை நிமித்திகர் ஒருவரிடம் கேட்டான். "நிழல் என்பது என்ன? மானுடரின் உடலால் மறைக்கப்படும் ஒளியை நிழல் என்பர். அல்ல, நிழல்நோக்கு என்று ஒரு நிமித்திக முறை உண்டு. நிழல்போல மானுட இயல்பை தெளிவாகக் காட்டும் ஒன்று பிறிதில்லை. அரசே, நீங்கள் நிழலோவியங்களை கண்டுள்ளீர்களா?" என்றார். பீமன் கலிங்கத்தில் பீதர்நாட்டு ஓவியர்கள் வரையும் நிழலோவியங்களை கண்டதுண்டு. அவர்கள் தங்கள் ஓவியநிலைகளில் வணிகர்களை பக்கவாட்டில் நிற்கவைப்பார்கள். அப்பால் ஓர் ஒளிர்விளக்கு வெண்பட்டு வளையத்தால் சூழப்பட்டு வெயில்போல் வெள்ளி ஒளி பரப்பும். வணிகனின் நிழல் வெண்பலகை ஒன்றில் படியும். அந்த நிழலின் எல்லை விளிம்பை கரிக்கோட்டால் வரைவார்கள். அதை கருமையால் நிறைக்கையில் அவருடைய நிழல் அந்த வெண்பலகையில் படிந்தது போலிருக்கும் அந்த ஓவியம்.

முதல்முறை அதைப்பற்றி கேட்டபோது அதில் என்ன நுட்பம் தெரியக்கூடும் என பீமன் வியந்தான். ஆனால் அவனை

அழைத்துச்சென்ற இளம்வணிகன் "நோக்குக!" என்று சுட்டிக்காட்டியபோது அந்த ஓவியம் உயிர்கொண்டது என நின்றது. நோக்க நோக்க வரையப்பட்டவனின் முகத்தை அருகிலெனக் காட்டியது. அவன் முகத்தின் நுண்செதுக்குகள் துலங்கின. அவன் உணர்வுகள் வெளிப்பட்டன. அவன் அகம்கூட தெளிந்தெழுந்தது. "ஆம், கலிங்கத்தில் அவற்றை பீதர்நாட்டு ஓவியர் வரையக் கண்டிருக்கிறேன்" என்றான் பீமன். "வெறும் நிழலில் எவ்வண்ணம் தெரிகிறது உணர்வு?" என்றார் நிமித்திகர்.

பீமன் வெறுமனே நோக்கினான். "மானுடரில் நாம் எப்போதும் நாம் விழையும் உருவை, நாம் கண்டுபழகிய உருவை, நாம் அஞ்சும் உருவை விழிகளால் தொட்டுச்சேர்த்து உள்ளத்தால் தொகுத்து கற்பனையால் வரைந்து அடைந்துகொள்கிறோம். நமக்கு இனியோர் அழகுகொள்கிறார்கள். நமக்கு ஒவ்வாதோரின் அழகு மறைந்துவிடுகிறது. நிழல் நம் விழியும் உள்ளமும் கற்பனையும் சென்று தொடாத பிறிதொரு வடிவம்" என்றார் நிமித்திகர். மானுடரில் குடியிருக்கும் இருளும் ஒளியுமான தெய்வங்களை நம்மால் நேர்நோக்கில் அறிய முடிவதில்லை. நிழலில் அவை வெளிப்பாடு கொள்கின்றன."

அவன் திரௌபதியை தன் உளத்திலிருந்து அழிக்க விழைந்தான். அங்கிருந்து விலகும்தோறும் அவள் அகன்றுவிடுவாள் என எதிர்பார்த்தான். எப்போதும் அவன் செய்வது அது. உள்ளம் இடருறும்போது அங்கிருந்து அகன்றுவிடுவது. முலையூட்டிய குரங்கில் இருந்து பெற்ற இயல்பு போலும் அது. அந்த நிகழ்வுகள் அனைத்திலிருந்தும் அறுத்துக்கொள்ள, முற்றிலும் பிறனாக மீண்டெழ விழைந்தான். ஆனால் அவன் அங்கிருந்து அகலும்தோறும் ஆடிப்பாவை என

அந்தத் தருணம் சுருங்கி ஆடிக்குள்ளேயே சென்றது. அங்கே துளியாக அணுவாக அது இருந்துகொண்டேதான் இருக்குமென உணர்ந்தான்.

அத்தருணத்தில் தன் மைந்தர்களுடன் இருக்க விழைந்தான். அவர்களின் சொற்களால் கர்ணனிடம் அடைந்த சிறுமையிலிருந்து எப்படி மீண்டு வந்தோம் என நினைவுகூர்ந்தான். அவன் உளம் நிறைவுகொள்ளும்படி பேச அவர்கள் இருவருக்குமே தெரிந்திருக்கிறது. அவர்கள் சொலல்வல்லர்கள் அல்ல. அவ்வாறு எங்கும் அவர்கள் வெடிப்புறப் பேசி அவன் கேட்டதேயில்லை. ஆனால் அவனிடம் பேசும்போது அவர்களின் சொற்கள் அவனுக்குள்ளிருந்தே எழுவன போலிருந்தன. ஒருவேளை மெய்யாகவே அவனுள் இருந்துதான் அச்சொற்கள் எழுகின்றனவா என்ன?

அவ்வெண்ணம் அவனை மலரச் செய்தது. ஆம் ஆம் ஆம் என அவன் உள்ளம் கொப்பளித்தது. அவர்கள் வேறல்ல. அவன் உடல் பிரிந்து உருவானவர்கள். அவன் உள்ளம் ஊற்றி நிறைக்கப்பட்டவர்கள். அவனுடைய இளமைத்தோற்றம் கொண்டவர்கள். அவர்கள் அவனாக நின்று வாழ்வை நடிப்பவர்கள். அவனைவிட கூர்கொண்டவர்கள். ஆகவே அவனை அவனைவிட அறிந்தவர்கள். அவர்கள் என எழுந்து அச்சொற்களைக் கூறுவது அவனில் கூர்கொண்ட அவனேதான். பிற எவரும் அச்சொற்களை சொல்லிவிடமுடியாது.

அவன் புரவியை மேலும் மேலும் விரையச்செய்தான். ஒருகணம் பிந்தவும் விரும்பாதவன்போல. புவியில் வேறு எந்த முகத்தையும் நோக்க விழையாதவன்போல. புரவி மூச்சிரைக்க நின்றது. அவன் அதன் மேல் மலர்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தான். புரவி நடந்து சென்று ஒரு சிறு ஓடையை

அடைந்து நீர் அருந்தியது. அது ஓய்வெடுக்க விழைந்தது. அவன் "செல்க!" என அதை ஊக்கினான். "செல்க, செல்க!" என குதிமுள்ளால் அழுத்தினான். மீண்டும் அது விசைகொண்டபோது அவர்களை நோக்கி செல்லும் உணர்வு பெருக உளம் எழுந்தான்.

சர்வதனும் சுதசோமனும் நிலம் என விரிந்திருக்க அவர்களை நோக்கி அவன் விழுந்துகொண்டே இருந்தான். இத்தனை இனிய மைந்தர்களை எப்படி நான் பெற்றேன்? என்னில் இத்தனை இனிமை எப்போதும் நிறைந்ததில்லை. குன்றா நல்லியல்பு கொண்டவர்கள். மாசற்ற படிகமென சுடர்விடும் உள்ளம் கொண்டவர்கள். அவர்களின் சொல்லில் எழுவது அந்தத் தூய்மை. என்னில் எழுந்தவர்கள் அவர்கள் எனில் என்னிலும் எஞ்சியிருக்கிறது அந்த நன்மையும் தூய்மையும். எங்கோ ஆழத்தில். நானறியா வெளி ஒன்றில். நான் இன்னமும் தெய்வங்களுக்கு உகந்தவனே.

அவன் இயல்பாக கடோத்கஜனை நினைவுகூர்ந்தான். கடோத்கஜனை ராமனுக்கு எதிர்நின்ற கும்பகர்ணனுடன் ஒப்பிட்டு ஒரு சூதன் பாடினான். கடோத்கஜன் மறைந்ததற்கு மறுநாள். அவன் படைகளினூடாக சென்றுகொண்டிருந்தான். இருளுக்குள் படைவீரர்கள் சூழ்ந்திருக்க நடுவே அமர்ந்த சூதன் பாடுவதைக் கேட்டு இருட்டுக்குள் நின்றான். "தீதிலா அரக்கன். படிகப்பரப்பில் நீர் நிலைகொள்ளாததுபோல் தீமை நிலைகொள்ளா நெஞ்சு கொண்டவன். தென்னிலங்கை ஆண்ட ராவண மகாப்பிரபுவின் பேருருவ இளையோன்போல" என்று சூதன் பாடினான்.

ஒரு வீரன் "விபீஷணன் அல்லவா அறத்தின்பால் வந்தான்?" என்று கேட்டான். மற்ற வீரர்கள் அவ்வினாவால்

எரிச்சலுற்றனர். அவன் இளம்வீரனாக இருக்கக்கூடும். சூதன் அவ்வினாவை பொருட்படுத்தவில்லை. ஆனால் அவன் மேலும் பாடியபோது அவ்வினாவுக்கான மறுமொழி இருந்தது. "தான் கொள்ளா அறத்தின் பொருட்டு களம் நின்றவன். குருதிப்பற்றே மேலறம் என்று கொண்டவன். கொள்ளத் தெரியாதவன், கொடுப்பதொன்றையே இயற்றி விண்மீண்டவன், அரக்கர்கோன் கடோத்கஜன். ஆம், அவன் இலங்கையின் இளையகோனுக்கு நிகர்."

ஒருகணத்தில் துயரின் அலை ஒன்று வந்து அறைய பீமன் செயலிழந்தான். நெஞ்சு அழுத்தம் கொண்டு எடை மிக, அறியாது விம்மலோசை எழ கண்ணீர் மல்கினான். புரவி பெருமூச்சுடன் நின்றது. அவன் சூழ் மறந்து அழத்தொடங்கினான். நெஞ்சை பற்றிக்கொண்டு, உள்ளே சிக்கிக்கொண்ட ஒன்றை அவ்வழுகையினூடாக வெளித்தள்ள விழைபவன்போல அங்கு இருளில் நின்று கேவல்களும் விம்மல்களும் விசும்பல்களுமாக அழுதான். அவனுடைய அழுகையோசை அவன் செவிகளில் விழ மேலும் மேலும் விடுதலைகொண்டு உரக்கக் கதறினான். நெஞ்சை ஓங்கி ஓங்கி அறைந்தான்.

பின்னர் விழிப்புகொண்டபோது அவன் புரவியின் கழுத்தின்மேல் குப்புறச் சாய்ந்திருந்தான். கையூன்றி எழுந்து கன்னங்களைத் துடைத்தபடி சூழ நோக்கினான். எவரும் நோக்கவில்லை என எண்ணி நீள்மூச்செறிந்து கடிவாளத்தை இழுத்தான். புரவி காலெடுத்து வைத்த அசைவில் அவன் உள்ளம் உலைவு கொண்டு எதிலோ சென்று முட்டி மெய்ப்புகொண்டது. கடும் அச்சம் என. மிகப் பெரும் துயர் ஒன்றை கண்டுகொண்டது என. அவன் எண்ணமுனை

தவித்துத் தவித்து தேடிச்சென்று அதை தொட்டது. அத்தவிப்பு நின்றதனால் அவ்வறிதலின் தொடுகை மெல்லிய ஆறுதலையே அளித்தது. அவன் கண்முன் ஒரு கரிய பாறையை என அந்த அறிதலை நோக்கிக்கொண்டிருந்தான்.

அவன் சர்வதனும் சுதசோமனும் கொண்ட இறுதி விழியுணர்வை முன்னில் எனக் கண்டான். அவர்கள் நினைவழிந்து விழுந்தார்கள் என பின்னர் கேள்விப்பட்டபோது ஒருகணம் அந்த விழித்தோற்றம் மீண்டும் அவன் உள்ளத்தில் தோன்றி மறைந்தது. அவன் நீள்மூச்சுடன் புரவியை மெல்ல நடத்தினான். பின்னர் அதை முற்றாக மறந்தான். இருளுக்குள் மெல்லிய காற்றென சென்றுகொண்டிருந்தான். உடலே அற்றவன்போல. அவனே அறியாத வேறொரு இருப்புபோல.

புரவி உரத்த பெருமூச்சுடன் நிற்க விழித்து அது எவ்விடம் என்று பார்த்தான். குருக்ஷேத்ரத்தின் முகப்புக்காடு. அவன் நீள்மூச்சுவிட்டு தளர மேலிருந்து அன்னைக் குரங்கொன்று இறங்கி தாழ்ந்த கிளையில் அமர்ந்து அவனை துயர் மிகுந்த கண்களால் பார்த்தது. அதன் விழிகளின் மின்னை நோக்கியபடி அவன் அசையாமல் அமர்ந்திருந்தான்.
இலைத்தழைப்புகளிலிருந்து ஏராளமான குரங்குகள் அவனை பார்த்தன. இரு சிறுகுரங்குகள் கொடிகளினூடாக வந்திறங்கி அக்குரங்கின் இருபுறமும் பதுங்கி அமர்ந்து சிறிய மணிக்கண்கள் துடித்து அசைய அவனை நோக்கின. அவன் அக்கணம் வரை கொண்டிருந்த இன்மையுணர்வை முற்றாக இழந்தான். அங்கே அவற்றின் நடுவே நிறைவுணர்வுடன் நின்றான்.

அன்னைக் குரங்கு "மைந்தா, நீ செல்கையிலேயே இதை எண்ணித்தான் தடுத்தேன்" என்றது. "நீ அங்கே முற்றாக கைவிடப்படுவாய், முழுமையாக அழிவாய். அது உன் சாவு." விழிதாழ்த்தி "ஆம், உங்கள் குரலை நான் கேட்டேன்" என்று பீமன் சொன்னான். "நீ சென்று அடையவிருக்கும் மெய்மையின் வெறுமை என்னவென்று அறிந்திருந்தேன். நீ செல்லலாகாதென்று விழைந்தேன். இப்போது நீ சென்று மீள்வதைக் காண்கையில் அது இயல்பே என்று தோன்றுகிறது" என்றது அன்னைக் குரங்கு. "ஏனென்றால் நீ சென்றுதான் ஆகவேண்டும். இப்போரில் நீ பெறும் விடுதலையில் ஒன்று இது."

"ஆம்" என்று பீமன் சொன்னான். குட்டிக் குரங்கு அன்னைக் குரங்கின் விலாவை பற்றிக்கொண்டபடி ஒண்டிக்கொண்டு கைகளால் அன்னையின் விலாமுடியை பற்றி உலுக்கி "இவர்தான் அனுமனா?" என்றது. "பேசாமலிரு" என்று அதன் தலையில் தட்டியது இன்னொரு குரங்கு. இன்னொரு குட்டிக் குரங்கு அதன் வாலைப் பிடித்து இழுத்து "எனக்குத் தெரியும், இவர்தான் வால்மீகி" என்றது. "சத்தம் போடாதீர்கள்" என்றது அன்னை. "சத்தம் போடவில்லை" என்று குட்டிக் குரங்கு சொல்லி "அனுமன் ஏன் குதிரையில் செல்கிறார்?" என்றது.

இரு குரங்குகளையும் மாறி மாறி நோக்கியபோது பீமனின் முகம் மலர்ந்தது. "நன்று, கதைகள் கேட்டு வளர்கின்றனர்" என்றான். "ஆம், சற்று முன்னர் முதற்கவிஞனின் கதையை அவர்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தேன்" என்றது அன்னை. "நீண்ட கதை!" என்று குட்டிக் குரங்கு இரு கைகளையும் மேலே தூக்கி செவிதுளைக்கும் குரலில் சொன்னது. "எனக்குத் தெரியும்... முழுக் கதையும் எனக்குத் தெரியும். நான்

வேண்டுமானால் அதை சொல்கிறேன்.” “எனக்கும் தெரியும்” என்றது இன்னொரு குட்டிக் குரங்கு. “போடா போடா போடா” என அக்குரங்கை கடிக்கப்போனது குட்டி.

பீமன் காலை அசைத்து புரவியை நகர்த்தி அவர்கள் அருகே சென்றான். “சொல்க!” என்றான். குட்டிக் குரங்கு “வால்மீகி! வால்மீகி! வால்மீகி!” என்று சொல்லி விழிதிறந்து கைகளை அசைத்து உள்ளத்தின் விசை தாளமுடியாமல் ஒருமுறை தலைகீழாகக் குதித்து வால்நுனி நெளிய “அவர் மிகப் பெரிய புற்றுக்குள் அமர்ந்திருந்தபோது... அமர்ந்திருந்தபோது... அமர்ந்திருந்தபோது...” என்று திக்கியது. “நான் சொல்கிறேன்! நான் சொல்கிறேன்” என்று இன்னொரு குரங்கு அதை மடக்கியபடி முண்டியடித்தது. “நான் சொல்வேன்! போடா” என்று முதற்குட்டி அதன் வாலைப் பிடித்து இழுத்தது. அவை இரண்டும் பற்களைக் காட்டி சீறின.

“என்ன கதை சொன்னீர்கள்?” என்றான் பீமன். இரு குட்டிக் குரங்குகள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு மரத்திலேறிச் செல்ல அன்னைக் குரங்கு “நமது மூதாதையான கபீந்திரர் முதற்கவிஞரை கண்ட தருணம். அவர் கபீந்திரருக்கு சொன்ன தன்னுடைய கதை” என்றது. “ஆம், நானும் கேட்டிருக்கிறேன்” என்று பீமன் சொன்னான். “தொல்கதைகள் நினைவுக்கு வரும் தருணங்கள் எப்போதும் அரியவை. அவை தங்கள் எடையால் மேலும் மேலும் ஆழத்திற்கு சென்றுவிடுகின்றன. அவற்றில் உள்ளுறைந்திருக்கும் விசையால் எண்ணியிராக் கணத்தில் வெளித்தோன்றுகின்றன” என்று அன்னைக் குரங்கு சொன்னது.

“அன்னையே, நான் துயருற்றிருக்கிறேன். இனி என்னால் ஒரு தசையைக்கூட அசைக்க முடியும் என்று தோன்றவில்லை” என்று பீமன் சொன்னான். குரங்கு கை நீட்ட அவன் அருகே

சென்றான். அவன் கையைப்பற்றி இழுத்து தோளை தடவியபடி "நீ துயருறுவாய் என்று தெரியும். எதன்பொருட்டும் என் குடியின் மைந்தனாகிய நீ துயருறலாகாது" என்றது. "நீ காற்றின் மைந்தன். அனுமனின் இளையோன். நீ துயருறுவதற்குரியது என எதுவும் இங்கில்லை." பீமன் பெருமூச்சுவிட்டான். "உனக்காக வான்மீகியின் கதையின் இறுதியை எச்சம் வைத்திருந்தேன்" என்றது அன்னைக் குரங்கு.

"கூறுக, அன்னையே!" என்று பீமன் சொன்னான். அன்னைக் குரங்கு சொன்னது. "கங்கைக்கரையில் தன் இலைக்குடிலில் மாணவர்களுடன் முனிவரான வால்மீகி தங்கியிருந்தார். ஒருநாள் நீராடும்பொருட்டு சரயுவுக்கு சென்றார். சான்றோரின் உள்ளம்போல் தெளிந்திருந்த அந்நதியில் தன் உரு நோக்க குனிந்தபோது பின்னால் மரக்கிளையொன்றில் இரு அன்றில் பறவைகள் ஒன்றையொன்று தழுவி அலகுரசி காதலின் உவகையில் உலகு மறந்திருப்பதை பார்த்தார். எத்தனை இனியது காதல், மானுடர் பெறும் அளவுக்கே திரும்ப அளிப்பதற்கு வாய்ப்புள்ள ஒன்று காதல் மட்டுமே என எண்ணினார். அளிக்க அளிக்க பெருகுவதும் கொள்ளுந்தோறும் விழைவு மிகச் செய்வதுமான பெருஞ்செல்வம் பிறிதொன்றுண்டா என்று புன்னகைத்தார். ஆகவேதான் உலகின் உயிர்களெல்லாம் காமத்தை விழைகின்றன. காமமோகிதம் என்னும் சொல் அவர் நாவிலெழுந்தது. காமமோகிதம், காமமோகிதம் என்று நெஞ்சும் வாயும் சுவையுறச் சொன்னபடி நீர் அள்ளி முகம் கழுவிக்கொண்டார்."

அப்போது ஒரு நீளம்பு வந்து அந்த ஆண் அன்றிலின் உடலை அறைந்து அதை வீழ்த்தியது. திகைப்புடன் திரும்பிப் பார்த்தபோது பெண் அன்றிலை நோக்கி அம்புவிடும்

வேடனொருவனைக் கண்டார். “கூடாது, நிஷாதனே!” என்று கூவினார். தன் கொழுநனின் உடலுக்கு அருகே இறங்கி அமர்ந்து சிறகு சரித்து துயர் மிகுந்து கூவிக்கொண்டிருந்த பறவையைக் கண்டு உளமுடைந்து அங்கே அமர்ந்து விழிநீர்விட்டு அழுதார். அழுந்தோறும் துயர் பெருகியது. அவருடைய மாணவர்களால் அவரை தேற்ற இயலவில்லை. நூற்றெட்டு நாள் அப்பெருந்துயரில் அவர் மூழ்கிக் கிடந்தார். பின்னர் தான் அத்தருணத்தில் அறியாது சொன்ன முதற்சொல்லை மின்படையும் தாமரையும் அருளும் அடைக்கலமும் கொண்ட கைகளுடன் தோன்றிய சொல்மகள் என கண்முன் கண்டார். தன் மாணவனிடம் எழுதிக்கொள்க என்று சொல்லி முதல் காவியத்தின் முதல் வரியை உரைக்கலானார்.

“மைந்தா, துறந்து துறந்து சென்றவர், உறவின் பொருளின்மையை உணர்ந்தவர் மட்டுமே பெண் துயரைக் கண்டார். என்றென்றுமென மானுட குலத்திற்கென அதை சொல்லி வைத்துச் சென்றார். முதல் கவிதையின் முதற்செய்யுளே தீது கண்டு வெகுண்டு உரைத்த பழிச்சொல் என்று அறிக! நீ பழி கொள்ளப்போவதில்லை. எழும் தலைமுறைகள் உன்னை பெண்துயர் கண்ட முதற்கவிஞனுக்கு இணையானவன் என்றே எண்ணுவார்கள். இவ்வுலகையே முற்றழித்தாலும் நிகராகாத பெரும்பழி பெண்ணின் விழிநீரால் அமைவது, அவளே ஒழிந்தாலும் தெய்வங்கள் அதை ஒழியாது என்பதைக் காட்டுவதாகவே உன் செயல் நின்றிருக்கும்.”

“அன்னையே, ஆயினும் நான் குருதி உண்டது பழிசேர்ப்பதல்லவா?” என்றான் பீமன். “மானுடருக்கு அது பழிசேர்ப்பதே. மானுடர் அதை அஞ்சுவதும் இயல்பே. ஆனால்

நீ எங்களில் ஒருவன். எதிரியைக் கொன்றபின் குருதியுண்டு குரலெழுப்புவது குரங்குகளின் வழக்கம். அதனால்தான் அச்சொல் உன் நாவில் எழுந்தது. நீ செய்தது உன் குருதிக்குரியதே" என்றது அன்னைக் குரங்கு. "அன்னையே, மண்மறைந்த மூதாதையர் நம் செயலை ஏற்கிறார்களா என்று அறிய ஒரே வழி மைந்தர் நம் செயலை ஏற்கிறார்களா என்று நோக்குவதே என்பார்கள் நிமித்திகர். என் மூதாதையர் என் செயலை ஏற்கிறார்கள் என்பதை நான் எப்படி அறிவேன்?" என்றான் பீமன்.

மேலிருந்து ஒரு குட்டிக் குரங்கு "மூதாதை கீழே விழுந்துவிட்டார்" என்று கூவியது. குரங்குகள் கிளைகளினூடாக தாவிச் செல்ல துயின்ற மரத்திலிருந்து நழுவி தரையில் விழுந்து ஒருக்களித்துக் கிடந்த முதிய குரங்கை கண்டன. பாய்ந்து அதன் அருகே அமர்ந்த அன்னைக் குரங்கு அதைப் புரட்டி தலையையும் காலையும் பற்றி நோக்கிய பின் "இறந்துகொண்டிருக்கிறார்" என்றது. முதுகுரங்கு வாயைத் திறந்து மூட பீமன் அப்பால் சென்று இலைகோட்டி ஓடையிலிருந்து தண்ணீர் அள்ளிக்கொண்டு வந்தான். குனிந்து முதுகுரங்கின் வாயை சற்றே திறந்து அந்த நீரை அதற்கு ஊட்டினான். மும்முறை விழுங்கியபின் விழிகளைத் திறந்து பீமனைப் பார்த்த முதிய குரங்கு கை நீட்டியது. பீமன் தலைகுனிக்க அவன் தலையில் கை வைத்தது.

அந்த மெல்லிய கை நடுக்கம் கொண்டிருந்தது. சருகுபோல அது தோளிலிருந்து சரிய மீண்டும் விழிகளை மூடியது. அதன் கழுத்துத் தசைகள் இழுப்பட்டன. உதடு சுருங்கி அதிர்ந்தது. இறுதி உலுக்கலொன்று நிகழ பின்னர் ஒவ்வொரு தசையாக

தளரத் தொடங்கியது. அன்னைக் குரங்கு பீமனின் தோளைத் தொட்டு “நீ மூதாதையரால் வாழ்த்தப்பட்டாய்” என்றது.

வெண்முரசு விவாதங்கள்

இருட்கனி - 36

ஆறாவது களமான குமரியில் அமர்ந்திருந்த சூதரான விசுத்தர் தாழ்ந்த குரலில் அகன்ற தோற்பரப்பு கொண்ட கிணைப்பறையை சுட்டுவிரலால் சுண்டி புலி உறுமுவது போன்ற மெல்லிய ஓசையை எழுப்பி பாடினார். அவருடன் இணைந்துகொண்ட பிற சூதர்களின் குரல்களும் அவ்வாறே உள்ளடங்கி நெஞ்சுக்குள் ஒலிப்பதுபோல் எழுந்தன. வெண்கல்லாக புதனும் பொற்கலத்தில் நீர் வடிவில் நாராயணனும் அச்சொற்களைக் கேட்டு அமர்ந்திருந்தனர். போர்க்களத்தின் காட்சியை விசுத்தர் பாடினார்.

தோழரே, இந்தக் காட்சியை நான் கண்டேன். இருபுறமும் படைவீரர்கள் தனித்து துயருற்று முகில் நிறைந்த வானின் கீழ் புழுக்களைப்போல சுருண்டு நிலம் செறிந்து கிடந்தனர். மழைக்குளிர் நிறைந்த காற்று அவர்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருந்தது. அவ்வப்போது எழுந்த இடியோசையில் அவர்கள் உடல் நடுங்கினர். பல்லாயிரக்கணக்கானவர்கள் கிடந்த அந்தக் களத்திலிருந்து எந்த ஓசையும் எழவில்லை. விழி நிறைக்கும் மாபெரும் ஓவியத்திரை எனத் தோன்றியது குருக்ஷேத்ரம். வீசும் காற்றில் அது சற்று நெளிவதுபோல், இடியோசையில் அதிர்வதுபோல், மின்னலில் பற்றிக்கொண்டதுபோல் தோன்றியது.

படைவீரர்கள் ஒவ்வொருவரும் களைத்து சொல்லிழந்துவிட்டிருந்தனர். வழக்கமாக ஒவ்வொருவரும் போர் முடிந்த பின்னர் தங்கள் இடங்களுக்கு திரும்புகையில் தங்கள் உற்றார் எவரையேனும் தேடி சேர்ந்துகொள்வதே வழக்கம். இன்நீரும் உணவும் அருந்தத் தொடங்குகையிலேயே அவர்கள் அக்கணம் வரை இருந்த இறுக்கத்தை இழக்கத் தொடங்குவார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் உயிருடன் இருப்பதன் உவகையை அடைவார்கள். ஆனால் அன்று உயிருடன் இருப்பதை அவர்கள் பிழையென்றும் சுமையென்றும் உணர்ந்தார்கள். ஒவ்வொருவரும் அதை உடலெங்கும் நிறைந்த ஒருவகைக் கசப்பென அறிந்தார்கள். அக்கசப்பு அவர்களின் முகத்தில் சுளிப்பென நிரம்பியிருந்தது.

ஒவ்வொருவரும் தங்கள் அருகிலிருந்தவர்களை வெறுத்தனர். தங்களை நீரிலோ ஆடியிலோ பார்த்துக்கொள்ள முடிந்தால் தங்களையும் அவ்வாறே வெறுத்திருப்பார்கள். வாளை எடுத்து தன் கழுத்தில் தானே பாய்ச்சிக்கொள்ள வேண்டுமென்ற உந்துதல் பலருக்கும் ஏற்பட்டது. மீளமீள எழுந்துகொண்டிருந்த அந்தத் தினவு ஏன் என்று அவர்களில் சிலர் உளம் விலகி எண்ணிக்கொண்டனர். பிற எந்த எண்ணத்தையும்விட உயிர் மாய்த்துக்கொள்ளும் எண்ணம் அகத்திற்கு மென்மையானதாக இருந்தது. அடிபட்டுக் கன்றிய தசைப்பரப்பின் மீது மெல்ல விரலோட்டுவதுபோல. அவ்வாறு தாங்கள் செய்யப்போவதில்லை என்று ஆழத்தில் அறிந்திருந்தும் அவர்கள் அதில் திளைத்தனர்.

சிலர் தன்னந்தனியாக படுத்து வானை நோக்கி விழிநீர் உகுத்துக்கொண்டிருந்தனர். சிலர் மண்ணில் முகம் புதைத்து மேலும் உள்ளே செல்ல விரும்புபவர்கள்போல் படுத்திருந்தனர்.

போர்க்களத்திலிருந்து இறந்த உடல்களை இழுத்துக்கொண்டு சென்ற ஏவலர்கள் இறந்தவருக்கும் வாழ்பவருக்கும் எந்த வேறுபாடும் தெரியவில்லை என்று கண்டனர். சடலங்கள் நடுவே கிடந்த சிலர் அவர்களின் கைபட்டதும் விழித்து சிலிர்ப்புடன் எழுந்தனர். பிணங்கள் எழுவதுபோல திடுக்கிடச் செய்தனர். பின்னர் பிணங்கள் எழுந்தாலும் திடுக்கிடாதவர்களாக அவர்கள் மாறினர்.

அவர்கள் கண் முன் பாண்டவப் படைகள் உரு சிறுத்து சுருங்கி வெறும் மக்கள் திரளென ஆகியிருந்தன. முன்பெல்லாம் படைவிரிவை நோக்குபவர்கள் நான்கு புறமும் விழி எல்லை கவிந்து பரந்திருக்கும் அதன் திரள்வைக் கண்டு விந்தையானதோர் உள எழுச்சியை அடைவதுண்டு. மானுடத்திரள் எந்நிலையிலும் தனிமனிதனுக்கு கொண்டாட்டத்தின் உவகையை, தான் கரையும் உணர்வை, தான் பெருகி பேருருக்கொண்ட பெருமிதத்தை அளிக்கிறது. அவனுள் என்றும் நலுங்கிக்கொண்டிருக்கும் தனிமையுணர்வு அழிகிறது. விழவுகளில் கைவீசி கூச்சலிட்டு கூவிக் கொந்தளிக்கும் நினைவுகள் அறியாமலேயே அவர்களுக்குள் எழுந்து முகம் மலரச்செய்யும்.

“விழி சென்று தொடவில்லை அல்லவா?” என்று இன்னொருவரிடம் ஒரு சொல்லேனும் அவர்களால் உசாவாமல் இருக்க இயலாது. “ஆம், பெருந்திரள்!” என்று மறுமொழி சொல்லும் முகமும் மலர்ந்தே தென்படும். தம்மவரும் அயலவரும் என அங்கிருக்கும் படை பிரிந்திருப்பதை அவர்கள் அறிந்திருந்தாலும்கூட விழி நேரடியாக உள்ளத்திற்கு அனுப்பும் காட்சியை ஆழம் பெற்றுக்கொள்வதில்லை. நாம் நாம் என்றே அவர்கள்

திளைத்தனர். போர்க்களத்திலிருந்து குருதியாடி திரும்பி மதுக்களியாட்டமிட்டு துயின்று பின்னிரவில் சிறுநீர் கழிக்க எழும்போது விழிதொடும் வான்கோடு வரை சூழ்ந்திருக்கும் பந்தங்களின் பெருக்கைக் கண்டு உளம் விம்மி விழிநீர் உகுத்தனர்.

ஆனால் படை குறுகி வரத் தொடங்கிய பின்னர் ஒவ்வொரு முறை விழியோட்டி நோக்குகையிலும் அவர்கள் ஒரு துணுக்குறலை அடைந்தனர். ஒவ்வொரு நாளும் "எத்தனை சிறிதாகிவிட்டது படை" என்னும் சொற்களையே வெவ்வேறு வகையில் கூறினார்கள். "தெற்கு எல்லை மிக அணுகிவிட்டது" என்றோ "பீஷ்மரின் படுகளம் எத்தனை அப்பால் சென்றுவிட்டது" என்றோ "காடு அணுகி வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது" என்றோ கூறுவார்கள். எதிர்ச்சொல் எடுப்பவர்கள் பெரும்பாலும் தானும் ஒருமுறை அப்போதுதான் முதல் முறை என நோக்கிவிட்டு "ஆம்" என்றோ "நான் முன்னரே பார்த்தேன்" என்றோ ஒரு சொல் உரைப்பார்கள்.

அக்களத்திற்கு வந்த முதல் நாள் அவர்கள் அனைவருமே அங்கே விழுந்த உடல்களைக் கண்டு உளம் திகைத்து அமர்ந்திருந்தனர். சென்றவர்களை எண்ணி ஏங்கி அழுதனர். கொந்தளித்துக் குமுறி மெல்ல அடங்கி துயின்று மறுநாள் காலையில் எழுந்தபோது இருக்கிறேன் என்னும் தன்னுணர்வை அடைந்தனர். இதோ இங்கிருக்கிறேன். இவ்வொரு காலை, இன்றொரு நாள் மட்டுமாக இருக்கலாம். ஆனால் இன்னும் நான் இறக்கவில்லை. அவ்வுணர்வு அந்தக் காலையை அழகியதாக்கியது. அதன் வண்ணங்கள் செறிந்தன. அதன் ஒளி இனிதாக இருந்தது. அன்றைய ஒலியில் இருந்த இசைவை, அன்று காட்டிலிருந்த நறுமணத்தை, அன்று சந்தித்த

முகங்களிலிருந்த நட்பை அவர்கள் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

பின்னர் ஒவ்வொரு காலையும் ஒளி கொண்டதாக, ஒவ்வொரு மாலையும் துயரின் அமைதியான இருள் செறிந்ததாக மாறியது. மாலையின் இருளே மறுநாள் காலையை அழகியதாக்கியது. காலையின் அழகு மாலையை மேலும் இருளாக்கியது. அந்தியின் உளம் அழுத்தும் சோர்வை வெல்ல அவர்கள் உளம் அழியும்படி குடித்தனர். கீழ்மைப் பாடல்களில் திளைத்தனர். தங்கள் எஞ்சுதலை தாங்களே கொண்டாடினர். சாவை கேலிநாடகமாக்கி கூத்திட்டனர். செத்தவர்கள் மீண்டதுபோல் நடிப்பது இரு படைகளிலும் ஒரு வேடிக்கையாக இருந்தது. ஒப்பாரிப் பாடல்களை வெவ்வேறு பகடிச்சொற்களுடன் கோத்துப்பாடுவது அவர்களை சிரிப்பில் கொப்பளிக்கச் செய்தது.

ஓரிரு நாட்களுக்குப் பிறகு இரு படையிலும் வெற்றி தோல்வி என்பது முற்றிலும் மறைந்து போயிற்று. எவர் வென்றனர் எவர் விழுந்தனர் என்பதையே எவரும் பேசாமலாயினர். ஒவ்வொருவரும் தங்கள் உள்ளிருந்து புத்தம் புதியனவற்றை ஒவ்வொரு நாளும் வெளியே எடுத்தனர். பிறரை வெடித்துச்சிரிக்க வைக்கும், பிற செவிகளை தன்னை நோக்கி கூரச்செய்யும் எதையேனும் சொல்ல வேண்டுமென்பதை அவர்கள் கற்றுக்கொண்டனர். வெளிப்படுவதனூடாக மேலும் இருக்கிறேன் என்று, பிறர் நோக்குகையில் அங்கிருப்பதை மேலும் உறுதி செய்துகொள்கிறோம் என்று உணர்ந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் கூச்சங்களும் தயக்கங்களும் அகன்றன. சிலர் பாடினர், சிலர் நடித்தனர், சிலர் ஆடினர், சிலர் இளிவரல் புனைந்தனர், சிலர் வாள் தூக்கி

வானிலிட்டு கழுத்தைக்காட்டி நின்று இறுதி கணத்தில் ஒழியும் இடர் மிகுந்த விளையாட்டுகளை ஆடினர். ஓரிரு நாட்களுக்குப் பின்னர் அந்தப் போரின் நிகழ்வுகள் அவ்வண்ணம் ஓர் ஒழுங்கு பெற்று அதுவே இயல்பென்றாகியது. அவ்வாறே நெடுங்காலமாக நடந்துகொண்டிருக்கிறதென்று தோன்றச்செய்தது. அவர்கள் பின்னர் இறந்தவர்களுக்காக வருந்தவில்லை. எஞ்சியிருப்பதன் உவகையொன்றே அவர்களை ஆண்டது. ஆனால் பின்னர் சில நாட்களில் ஒவ்வொருவராக தங்கள் சாவு குறுகியணைவதை உணரத்தொடங்கினர். படைவெளி சுருங்குந்தோறும் அவர்களுக்குள் எரிந்தவை அணைந்து குளிர்கொள்ளத் தொடங்கின.

அன்றிரவு மட்டும் அவர்கள் உயிரோடிருப்பதையே வெறுத்தனர். எஞ்சியிருப்பவர் சென்றவர்களுக்கு ஏதோ பெரும்பழியை இயற்றிவிட்டதாக உணர்ந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் உடலுக்குள் குருதி நிறைந்து விரல் முனைகளை அழுத்தி விம்மச் செய்வதை, செவிமடல்களை வெம்மை கொள்ளச் செய்வதை அறிந்தனர். ஒரு சிறு வாள்முனையால் கீறலிட்டால் அதனூடாக உள்ளிருக்கும் குருதியனைத்தும் பீறிட்டு வெளியேறிவிடும். உடல் உடைந்து வெறுங்கலமென ஆகி அங்கே கிடக்கும். அதில் வான் வந்து நிறைகையில் எழும் முழுமை அத்துயரிலிருந்து விடுதலை அளிக்கும்.

ஒருவர்கூட அன்று களத்தில் துச்சாதனனின் உடல் உடைத்து குருதி அருந்திய பீமனைப்பற்றி எண்ணிக்கொள்ளவில்லை. அதை எண்ணி தவிர்க்கவில்லை. அவர்களின் ஆழமே அதை தவிர்த்தது. ஆழமும் அறியாது எங்கோ புதைந்தது அது.

ஆனால் அங்கிருந்து அதன் கடுங்குளிர் அவர்கள் உள்ளத்திலும் உடலிலும் பரவிக்கொண்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் அதைத்தான் எண்ணிக்கொண்டிருந்தனர் என தெய்வங்கள் மட்டுமே அறிந்திருந்தன.

சுபாகு தன் படைகளினூடாக புரவியில் சென்றபோது இருபுறமும் கௌரவப் படைகள் முற்றாகவே இறந்து பிணங்களின் நிரையாகக் கிடப்பதுபோல உணர்ந்தான். எங்கும் எந்த ஓசையும் எழவில்லை. உணவு விளம்புபவர்கள் தங்கள் பணியை தொடங்கியிருக்கவில்லை. தெற்கிலிருந்து வடமேற்கு நோக்கி வீசிக்கொண்டிருந்த காற்றில் கொடிகள் துடிதுடித்துப் பறந்துகொண்டிருந்தன. வானில் எழுந்த மின்னல்களில் படைக்கலங்களும் உலோக வளைவுகளும் சுடர்ந்து அதிர்ந்து அணைந்தன. அவன் புரவி ஏனென்று தெரியாமல் தும்மலோசை எழுப்பிகொண்டே இருந்தது. காதுக்குள் ஏதோ புகுந்ததுபோல் தலையை உலுக்கி மணியோசையை எழுப்பியது. அவ்வப்போது நின்று குளம்புகளால் தரையை தட்டிக்கொண்டது.

அவன் அதன் கழுத்தை தட்டி அதை ஊக்கி முன் செலுத்தினான். ஒவ்வொரு முறையும் எங்கேனும் அது நின்று எடை கொண்ட தலை மேலும் எடை கொண்டதுபோல் மெல்ல தாழ துயிலில் ஆழ்வதுபோல் ஒற்றைக்கால் தூக்கி மூன்று காலில் நின்றது. அதற்கு என்ன ஆயிற்று என்று அவன் குனிந்து முகத்தை பார்த்தான். காதைப் பற்றி உள்ளே வண்டு ஏதேனும் சிக்கியிருக்கிறதா என்று நோக்கினான். அதன் நெற்றியிலும் கழுத்திலும் தட்டி ஆறுதல்படுத்தி மேலும் செலுத்தினான். அது உடல் எடை மிகுந்துவிட்டதுபோலத்

தோன்றியது. ஒவ்வொரு காலடிக்கும் மூச்சு சீறியது. அவ்வப்போது நின்று இருமல்போல ஒலியெழுப்பியது.

புரவிகள் மானுடரின் உளநிலையை தாமும் கொண்டுவிடுவதை புரவியேற்றம் கற்ற காலத்திலிருந்து அவன் அறிந்திருந்தான். போர்க்களத்தில் திரளென எழும் வெறியையும் குருதிக்களிப்பையும் அவை மானுடரிடமிருந்து பெற்றுக்கொள்கின்றன. அவை மானுடரின் விழைவு விலங்குடலில் எழுந்த வடிவங்கள். அன்னை உடலுக்குள்ளிருந்து ஒரு புரவிக் குழவியை வெளியே எடுக்கையில் மானுடன் முதற்சொல் வழியாக தன் உள்ளத்தை அதற்கு அளிக்கிறான். தன் நாவிலிருந்து ஒரு பெயர். தன் நினைவிலிருந்து முந்தைய புரவிகளின் அடையாளம். தன் உடல் வழியாக, சொற்களின் வழியாக, தன் உள்ளத்தை அதில் பெய்து நிரப்புகிறான். பின்னர் அதை பயிற்றுவித்து போர்ப்புரவியாக்குகிறான். அதற்குள்ளிருந்து விலக்கப்பட்ட தெய்வம் அதன் ஆழத்திலெங்கோ இருண்ட சுனையின் கரிய நீரின் அடியில் கிடக்கும் சிறு அருமணியென சென்று மறைந்துவிடும். அங்கே ஒரு ஆழ்விழியென அதை நோக்கிக்கொண்டிருக்கும்.

புரவி பெருமூச்சுவிட்டு நின்றபோது அவன் அதிலிருந்து இறங்கி அதன் கழுத்தையும் தோளையும் தட்டியபடி மெல்லிய குரலில் "என்ன ஆயிற்று? எழுக! எழுக!" என்றான். புரவி தளர்ந்த காலடிகளை எடுத்து வைத்து நடக்கத் தொடங்கியது. அவன் அதன் உடலில் எங்கேனும் புண்கள் இருக்கின்றனவா என்று பார்த்தான். அது முற்றிலும் திறந்த உடல் கொண்டிருந்தது. போருக்குச் சென்று மீண்டபின் அனைத்துக் கவசங்களையும் கழற்றி புரவிகள் எங்கேனும் புண்பட்டுள்ளனவா என்று

பார்ப்பது சூதர்களின் வழக்கம். புண்படாத புரவிகளை ஒருமுறை இலை தழையாலோ தோலாலோ உருவி கள்ளும் வெல்லமும் கலந்த நீரைப் புகட்டி உடனடியாக குறும்பயணத்திற்கு கொடுப்பார்கள். அந்திப்பயணங்கள் முடிந்து அவை கொட்டில்களுக்கு திரும்பும். மீண்டும் உணவளித்து துயிலச்செய்வார்கள்.

அந்தப் புரவி போருக்குச் சென்று மீண்டது என்பதை அதன் நடையிலிருந்து உணர முடிந்தது. அதன் கண்கள் இமை சரிந்து நிலம் நோக்குபவை போலிருந்தன. அதன் கடிவாளத்தைப் பற்றி மெல்ல இழுத்தபோது குளம்புகளை தூக்கி வைத்து அவனுடன் அது வந்தது. அதன் உடல் நன்கு நிகர்கொண்டிருந்தது. பல்லாயிரத்தில் ஒன்றே நிகருடல் கொண்ட புரவி. எஞ்சியவை கடும் பயிற்சியினால் நிகருடலை ஈட்டிக்கொண்டவை. அது போருக்குச் சென்ற முதன்மை வீரன் ஒருவனின் புரவியாகவே இருக்கக்கூடும். அவன் புரவிகளை பொதுவாக நோக்குவதில்லை. துச்சாதனன் புரவிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அறிந்தவன். தன்னுடைய புரவிகளுடன் பேசிக்கொண்டிருப்பவன். புரவி அறியும் ஒன்றை தான் அறிந்துகொள்ள முயல்வதுபோல, தன்னுள்ளிருந்து சொல் திரளாத ஒன்றை புரவிக்கு புகுத்திவிட எண்ணுபவன்போல.

புரவி மீண்டும் நிற்க அவன் எதிரே வந்த ஏவலனிடம் "இப்புரவி புண்பட்டுள்ளதா?" என்றான். ஏவலன் புரவியை ஒருமுறை சுற்றிப் பார்த்து "இல்லை அரசே, புரவி நல்ல நிலையில்தான் உள்ளது. அது நன்கு களைப்படைந்திருக்கலாம். அல்லது அச்சமோ பெருந்துயரோ கொண்டிருக்கலாம். அதன் கழுத்து நரம்புகள் புடைத்துள்ளன. மயிர்ப்பும் தெரிகிறது. ஆகவே உளக்கொதிப்பு கொண்டுள்ளது. அது எதையோ கண்டு பேரச்சம்

அடைந்துள்ளது" என்றான். "போரில் அழிவுகளைக் காணாத புரவிகள் எவை? சென்ற சில நாட்களாக களத்தில் இடியோசையும் மின்னல்களுமல்லவா நிறைந்துள்ளன" என்றபின் புரவியை கழுத்தைத் தட்டி மீண்டும் முன்னிழுத்து சேணத்தை மிதித்து கால் சுழற்றி ஏறிக்கொண்டான். புரவி அவன் எடையுடன் கண்ணுக்குத் தெரியாத பேரெடை ஒன்றை ஏற்றியதுபோல நடந்தது.

துரியோதனன் குடில் முகப்பு வரை மிக மெதுவாகவே சென்றது. ஓரிரு அடிகளுக்குப் பின்னர் அவனும் அந்த விரைவிலா நடையை விரும்பலானான். துச்சாதனன் வீழ்ந்ததுமே துரியோதனன் களம்விட்டு அகன்றான். போர் முடிந்ததும் சுபாகு புரவியில் சென்று காவல்மாடங்களை ஒருமுறை நோக்கிவிட்டு துச்சாதனனுக்கான சிதை ஒருக்கத்தையும் பார்வையிட்டுவிட்டு மீண்டும் களத்திற்கு வந்தான். பாடிவீடு திரும்ப அவன் விரும்பவில்லை. அங்கே அச்சமூட்டும் எதுவோ ஒன்று காத்திருப்பதுபோல் உள்ளம் தயங்கியது. அவனைத் தேடிவந்த ஏவலன் "தாங்கள் உடனே அரசரை சென்று பார்க்கவேண்டும் என்று ஆணை" என்றான். "எவருடைய ஆணை?" என்று சுபாகு கேட்டான். "காந்தார அரசரின் ஆணை. மத்ரரும் உத்தரபாஞ்சாலரும் கிருதவர்மரும் அரசரைப் பார்க்கும்பொருட்டு சென்றிருக்கிறார்கள். தங்களை உசாவினார்கள். தெற்குக்காட்டிற்குச்சென்றுள்ளார் என்று நான் சொன்னேன்" என்றான் ஏவலன்.

சுபாகு நன்று என்று தலையசைத்தான். ஆனால் மீண்டும் ஒரு நாழிகைக்கு மேல் களத்திலேயே ஏதேனும் பணியை கண்டுபிடித்து அதை இயற்றுபவன்போல் நடித்து பொழுதோட்டினான். மீண்டும் ஒரு ஏவலன் அவனைக் கண்டு

தலைவணங்கி காந்தாரரின் ஆணையை அறிவித்தபோது "மூத்தவர் என்ன செய்கிறார்?" என்று கேட்டான். "அவர் துயில்கொண்டிருக்கிறார். களத்திலிருந்து அவரை கொண்டுசென்றதும் அகிபீனா அளித்து படுக்க வைத்துவிட்டார்கள். விழிப்பே கூடவில்லை" என்று ஏவலன் சொன்னான். "விழிப்பு கொள்ளவில்லையா?" என்றான் சுபாகு. "இத்தருணம் வரை விழி திறக்கவில்லை" என்றான் காவலன். சுபாகு தலையசைத்தான். காவலன் "எங்கிருந்தாலும் தங்களைக் கண்டுபிடித்து வரச்சொல்லும்படி ஆணையிடப்பட்டிருக்கிறேன்" என்றான். "செல்க, நான் வருகிறேன்!" என்று சுபாகு சொன்னான். பின்னர் புரவியின்மீது அமர்ந்தபடி கைகளை கட்டிக்கொண்டு இரு படைகளுக்கும் நடுவே வெளித்துத் திறந்திருந்த குருக்ஷேத்ரத்தை பார்த்துக்கொண்டிருந்தான்.

உடல்களைச் சுமந்தபடி வண்டிகள் சகடங்கள் ஒலிக்க சென்றன. அத்திரிகள் செருக்கடித்து குளம்புகளின் ஓசையுடன் எடைசுமந்து நடந்தன. குருதியும் விலங்குகளின் சாணியும் கலந்த வாடையுடன் குருக்ஷேத்ரம் ஒழிந்து கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் அது மூளியாகிவிடும். அச்சொல்லாட்சி அவனை திகைக்கச் செய்தது. போர்க்களத்திற்கு இறந்த உடல்கள் அணிகளா? ஒருநாள் முழுக்க இவள் அணி பூண்கிறாளா? அந்தியில் அவற்றைக் கழற்றி ஆமாடப்பெட்டிகளில் வைத்துவிட்டு துயில்கிறாளா? இதை ஏதேனும் சூதர் பாடி என் நினைவுக்கு எழுகிறதா? மேலும் எண்ணங்கள் எழுந்தபோது எப்போதும் இத்தகைய பொருளின்மையை தான் அடைந்ததில்லை என்று உணர்ந்தான். அங்கு நின்றுகொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை.

புரவியைத் தட்டி துரியோதனன் குடில் நோக்கி செலுத்தலானான்.

துரியோதனனின் குடிலுக்கு முன்னால் காந்தாரரின் தேர் நின்றது. சற்று அப்பால் நின்றிருந்த புரவிகள் கிருதவர்மனும் அஸ்வத்தாமனும் வந்தவை என்று தெரிந்தது. அவன் விழிகளை ஓட்டி மிக அப்பால் சல்யரின் தேர் நிற்பதை பார்த்தான். தன் புரவியிலிருந்து இறங்கி அவன் நடக்கத்தொடங்கியபோது அவனுக்கு எதிராக ஓடிவந்த வீரனின் விழிகளில் ஒரு பதைப்பு தென்பட்டது. அவன் தன்னிடம் ஏதோ சொல்ல எண்ணுவதுபோல. சுபாகு "என்ன?" என்றான். அதற்குள் தனக்குப் பின்புறம் உடல் விழும் ஓசை கேட்டு திரும்பிப்பார்த்தான். அவன் ஊர்ந்த புரவி நிலத்தில் விழுந்து கால்களை ஓடுவதுபோல் உதைத்துக்கொண்டிருந்தது. அதன் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் குருதியும் நுரையும் கலந்து வழிந்து மண்ணை நனைத்தன. அவ்வீரன் புரவியை நோக்கித்தான் ஓடினான்.

"என்ன ஆயிற்று?" என்று சுபாகு கேட்டான். மேலும் ஏவலர்கள் அதன் அருகே ஓடிச்சென்றனர். முதல் ஏவலன் குனிந்து அதன் கால்களை பற்றினான். ஒருவன் அதன் முகத்தைப் பிடித்து தூக்கிப் பார்த்தான். "நோயுற்றிருக்கிறது. ஆனால் உடலில் எங்கும் புண்ணில்லை" என்றான். இன்னொரு முதிய ஏவலன் ஓடிவந்து குனிந்து அதன் விழிகளை இமை விலக்கி நோக்கியபின் "நெஞ்சு உடைந்துவிட்டது, அரசே" என்றான். "ஏன்?" என்று சுபாகு கேட்டான். முதியவன் பார்த்துவிட்டு மறுமொழி சொல்லவில்லை. அதன் பின்னங்கால் மட்டும் உதைத்துக்கொண்டே இருந்தது. சுபாகு இடையில் கைவைத்து அதை பார்த்துக்கொண்டு நின்றான். அதன் கால் இழுபட்டு

எதையோ உதற முயல்வதுபோல் காற்றில் உதைத்துக்கொண்டது. பின்னர் மெல்ல அடங்கி எடை மிக்க குளம்பு தரையை தட்டியது. அதன் விழிகள் திறந்திருந்தன. இமைகளிலும் வாயின் தொங்கு தசையிலும் மட்டும் சிறிய அசைவு இருந்துகொண்டிருந்தது.

முதிய காவலன் "நெஞ்சுடைவது புரவிகளுக்கு வழக்கம்தானே?" என்றான். "ஏன்?" என்று சுபாகு கேட்டான். "எடைமிக்க புரவிகள் நெடுந்தொலைவு ஓடும்போது நெஞ்சுடையும் என்று கேட்டிருக்கிறேன்" என மேலும் சொன்னான். "இது உடல் தகைந்த போர்ப்புரவி. உளம் உடைந்திருக்கக்கூடும்" என்று குனிந்து பார்த்தபடி அமர்ந்திருந்த ஏவலன் சொன்னான் . "ஏன்?" என்று உரக்க கேட்டான் சுபாகு. ஏவலன் மறுமொழி சொல்லவில்லை. சுபாகு இரண்டு எட்டு எடுத்து வைத்து முன்னால் வந்து ஓங்கி அவனை உதைத்து மல்லாந்து விழச்செய்து "அறிவிலி, சொல்! ஏன்?" என்றான். அவன் விழுந்து கிடந்தபடி வெறுப்பும் கசப்பும் நிறைந்த நோக்கால் அவனைப் பார்த்து "இது இளைய அரசர் துச்சாதனனின் புரவி" என்றான்.

சுபாகு திகைப்புடன் "இன்று அவர் இதில்தான் போருக்குச் சென்றாரா?" என்றான். "இல்லை. ஆனால் இதுவும் அவர் தேருக்குப் பின்னால் சென்றது" என்று ஏவலன் சொன்னான். "போருக்குச் சென்றதா?" என்று மீண்டும் சுபாகு கேட்டான். சற்று நேரம் கழித்து எந்த மறுமொழியும் சொல்லாமல் வீரன் எழுந்து தன் ஆடையை சீர்படுத்தியபடி அகன்று சென்றான். முதிய காவலன் "புரவிகளின் உள்ளத்தின் விசை அவற்றின் உடலைவிட பன்மடங்கு மிகுதி, அரசே" என்றான்.

இருட்கனி - 37

சுபாகு துரியோதனனின் குடிலை அடைந்தபோது உள்ளிருந்த மருத்துவ ஏவலன் வெளியே வந்தான். அவன் சுபாகுவைக் கண்டதும் திடுக்கிட்டு நின்று பின் தன் மூச்சை சேர்த்துக்கொண்டு "வணங்குகிறேன், அரசே" என்றான். "மூத்தவர் என்ன செய்கிறார்?" என்று சுபாகு கேட்டான். "துயில் கொள்கிறார்" என்றான் ஏவலன். "விழித்தாரா? எவரையாவது பார்த்தாரா? என்று சுபாகு கேட்டான். "'இல்லை. அளவுக்கு மிஞ்சியே அகிபீனாவும் மதுவும் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் நினைவு மீளவே இல்லை" என்று ஏவலன் சொன்னான்.

சுபாகு "செல்க!" என்று சொல்லி கைகாட்டிவிட்டு குடில் வாயிலை பார்த்தான். பின்னர் தன்னை கடந்துசென்ற ஏவலனை விரல் சொடுக்கி நிறுத்தி "என்னைப் பார்த்தவுடன் நீ துணுக்குற்றதுபோல் இருந்தது. ஏன்?" என்றான். "ஒன்றுமில்லை" என்றான் ஏவலன். "ஏன்?" என்று உரத்த குரலில் கேட்டான் சுபாகு. அவன் நடுக்கத்துடன் "நான் நெடுநேரமாக உள்ளே அரசரை புரந்துகொண்டிருந்தேன். எண்ணங்கள் எங்கோ மயங்கிவிட்டிருந்தன. வெளியே வந்து தாங்கள் நடந்து வருவதை பார்த்தபோது அரசர் வருவதுபோல் தோன்றியது. இவர் எங்கே என்று என் உள்ளம் அதிர்ந்தது" என்றான்.

சுபாகு புருவங்களைச் சுருக்கி சற்று நேரம் அவனை பார்த்துவிட்டு "ம்" என்றான். அவன் வணங்கிவிட்டு செல்ல மேலும் சிலகணங்கள் எண்ணம் சூழ்ந்துவிட்டு மெல்ல காலடி ஓசை கேட்காது நடந்து குடில் படலைத் திறந்து உள்ளே பார்த்தான். துரியோதனன் கைகால்களை விரித்து மஞ்சத்தில்

படுத்திருந்தான். அவன் அருகே வைக்கப்பட்டிருந்த அனற்கலத்தில் மெல்லிய புகை எழுந்து அறையை மூடியிருந்தது. அப்புகையில் அகிபீனா மணப்பதை உணர்ந்தான்.

சற்று நேரம் அவன் துரியோதனனை நோக்கிக்கொண்டிருந்தான். துரியோதனனின் உடல் மிக வெளிறி நீரிழந்து முதுமை கொண்டிருந்ததுபோல் தோன்றியது. பெரிய தோள்களும் தசைகள் புடைத்த கைகளும் என்றுமே அவன் விழிகளை கவர்பவை. எங்கிருந்தாலும் ஒரு கோணத்தில் துரியோதனனை பார்த்துக்கொண்டிருப்பது அவன் வழக்கம். எப்போதேனும் ஆடியில் பார்க்கும்போது அங்கு தெரிவதும் துரியோதனனின் வடிவுதானோ என்று எண்ணிக்கொள்வான். துரியோதனன் போலவே தன் உடலும் இப்போது தெரியக்கூடும். நீரிழந்து, முதுமை படர்ந்து.

அவன் பெருமூச்சுடன் படலை சார்த்தி வெளியே வந்தபோது ஓர் உள அதிர்வை அடைந்தான். துரியோதனனின் தம்பியரில் உயிருடன் எஞ்சுபவன் அவன் மட்டுமே. நூற்றுவர் இருந்தபோது எவருக்கும் தம்பியர் எவரைப் பார்த்தாலும் துரியோதனனோ என்ற ஐயம் எழுந்ததில்லை. கால்தளர்ந்து சுபாகு குடிலின் திண்ணையில் அமர்ந்தான். தூணில் சாய்ந்துகொண்டு கண்களை மூடினான். துரியோதனனின் உருவம் கண் முன்னில் எழுந்தது. அவன் நெஞ்சக்குழி துடித்துக்கொண்டிருந்தது. உள்ளிருந்து ஊற்று கிளம்பும் சுனையின் சேற்றுச்சுழி போல்.

அவன் இருகைகளையும் தலையில் தாங்கி திரும்பி அமர்ந்தான். நூற்றுவர் முகங்கள் ஒவ்வொன்றாக எழுந்து வரத்தொடங்கின. ஒரு முகத்தின் நூறு தோற்றங்கள். நூறு முகங்களின் ஒற்றை உணர்வு. விழிகளை அவன்

அண்மையிலெனக் கண்டான். துச்சாதனன் எதையோ எண்ணி நகைத்துக்கொண்டிருந்தான். துச்சகனும் துர்முகனும் துர்மதனும் அவனை எள்ளி நகையாடும் விழிகள் கொண்டிருந்தனர். சுஜாதன் திகைப்புடன் எதையோ சொல்வது போலிருந்தான். துச்சலனும் துர்விகாகனும் விழிகளில் வினவுடன் இருந்தனர்.

எங்கிருக்கிறார்கள் அவர்கள்?. எங்கோ ஓர் உலகு உண்டென்றும் அங்கு சென்று நீத்தவர் வாழ்கிறார்கள் என்றும் இளமையிலேயே எண்ணியிருந்தான். ஒருபோதும் அதில் ஐயம் தோன்றியதில்லை. ஆனால் குருக்ஷேத்ரத்திற்கு வந்தபின்னர் உடன்பிறந்தார் ஒவ்வொரு நாளும் மாய்கையில் அவர்கள் எங்கும் செல்லவில்லை, முற்றாக மறைந்துவிட்டார்கள் என்ற எண்ணம் எழுந்து வலுப்பெற்றது . புகை விண்ணில் மறைவதுபோல.

நெடுநாட்களுக்குமுன் அவன் சந்தித்த சார்வாக நெறியைச் சேர்ந்த ஒருவர் "இவ்வுலகு மெய். எதன் பொருட்டேனும் இவ்வுலகை நீத்துவிடுங்கள் என்று உங்களுக்கு அறிவுறுத்துபவர்களே உங்களுக்கு அவ்வுலகைப்பற்றி சொல்கிறார்கள். அவ்வுலகென்பது பொய். அணையும் சுடர் என்பது எங்கு செல்கிறது? அலகிலா வெளியில் கரைந்து மறைகிறது. உடலில் எரியும் உயிரும் அவ்வண்ணமே. மீண்டும் அது எழுவதில்லை. இப்புடவிப் பெருக்குக்கு சென்ற புள்ளிக்கு திரும்பி வர பொழுதில்லை. ஏனெனில் சென்று முடியாத பெருந்தொலைவு அதற்கு உள்ளது.

"சென்று மீண்டு சிறுவட்டத்தில் சுழன்றுகொண்டிருப்பது மானுட சித்தம். அச்சிற்றுணர்வால் அவன் உருவாக்கியது மறுபிறப்பெனும் பொய். அவ்வுலகெனும் பெரும்பொய்.

விண்ணுலகில்லை. நீத்தாருலகும் இல்லை. கீழுலகும் இல்லை. அறிக, இங்கு தொட்டு உண்டு உயிர்த்து நோக்கி முகர்ந்து வாழும் உலகே மெய்! இங்கிருந்து பெறுவன அனைத்துமே மெய். இதற்கப்பால் மானுடன் அடைவதற்கும் அறிவதற்கும் பிறிதொன்றில்லை" என்றார்.

சுபாகு அவரிடம் "இங்குள்ள மானுடர் இங்கு வாழ்ந்து முடிகிறார்கள் என்றால் இவ்வாழ்க்கையே பொய்யென்றாகிறது. இங்கு நிகழ்வதற்கு ஒருமையும் பெறுபயனும் இல்லையென்றாகிறது" என்றான். "இங்கு நிகழ்வதற்கு ஒருமையும் பெறுபயனும் உண்டெனில் அது இங்கு மட்டுமே. இங்கிருந்து எதுவும் மீள்வதில்லை. இங்கிருந்து நாம் சென்றடையும் பிறிதோரிடம் ஏதுமில்லை" என்று சார்வாகர் சொன்னார். "அவ்வண்ணம் ஒன்று உண்டு என்பதற்கு உய்த்துணர்தலன்றி சான்று ஏதேனும் உண்டா?"

"நீங்கள் ஐயத்தைக் கொண்டு விளையாடுகிறீர்கள். ஐயத்தை விளைவிப்பது மிக எளிது" என்று சுபாகு சொன்னான். அவன் விழிகளை கூர்ந்து பார்த்த சார்வாகர் "நான் ஐயத்தை விளைவிப்பதில்லை. எண்ணம் சூழும் ஒவ்வொருவருக்குள்ளும் உறையும் ஐயத்தை தொட்டு அது அங்கிருப்பதை அவர்களுக்கு காட்டுகிறேன். ஐயத்தின்மேல் அவர்கள் குவித்திருக்கும் சொற்களை சற்றே அகற்றிவிடுகிறேன். இதற்கப்பால் ஏதுமில்லை. இதுவே மெய். இதை அறியாத ஓர் உயிர்கூட இப்புவியில் இல்லை.. ஆகவேதான் நோயுற்று உடல் நலிந்து அழகு கெடினும், எண்ணப்பொறாச் சிறுமை நேரினும் இங்குள்ள ஏதேனும் ஒன்று எஞ்சுமெனில் தங்கிவாழ உயிர்கள் விரும்புகின்றன" என்றார்.

சுபாகு பெருமூச்சுடன் “நன்று” என்று சொல்லி அவரை வணங்கினான். பின்னர் தம்பியருடன் செல்கையில் இவர்கள் எவருக்கேனும் இத்தகைய ஐயங்கள் இருக்குமா என்ற எண்ணம் ஏற்பட்டது. நூற்றுவரில் அவன் மட்டுமே தனித்தவன். நூலாயும் வழக்கம் கொண்டவன். அவனிடமிருந்து சுஜாதன் நூல்நவில கற்றுக்கொண்டான். அவர்கள் நூல் பயில்வதைப் பற்றி அவன் உடன்பிறந்தாருக்கு பெருமிதம் இருந்தது. அதை ஒருவித ஏளனமாக அவர்கள் வெளிப்படுத்துவார்கள். “தங்கள் நூல்களில் இதைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது, அறிஞரே?” என்று துரியோதனன் உரத்த குரலில் கேட்க மற்ற இளையோர் வெடித்து நகைப்பார்கள். அவன் நூல்குறிப்பை சொல்லச் சொல்ல அவர்கள் விழிகூர்ந்து கேட்பார்கள். ஓரிரு சொற்களுக்குள் அவன் சொல்வதென்ன என்பது அவர்களுக்கு முற்றிலும் புரியாமலாகிவிடும். ஆனால் முகங்கள் பெருமிதம் கொண்டு மலர்ந்தபடியே செல்லும்.

தன்னருகே வந்த துர்தர்ஷனிடம் “நீ என்ன எண்ணுகிறாய், இளையோனே? இங்கு வாழும் நாம் இங்கிருந்து சென்றடையும் இடமொன்று உண்டா?” என்றான். “என்ன?” என்று அவன் கேட்டான். “அவ்வுலகு என்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா?” என்றான். அவன் மீண்டும் “என்ன?” என்றான். விழிமலைத்து “ஏன்?” என்று மீண்டும் கேட்டான். பின்னர் “அவ்வுலகு அங்குள்ளதல்லவா? இல்லையென்று சொல்கிறீர்களா?” என்றான். “நீ அதை நம்புகிறாயா?” என்று கேட்டான் சுபாகு. அவனிடம் அந்த வினாவே எழுந்ததில்லை என்று அவன் கொண்ட தவிப்பிலிருந்து தெரிந்தது.

அவன் “அவ்வுலகு என்றால்?” என்ற பின்னர் “இவ்வுலகு இங்கிருக்கிறது என்றால் அவ்வுலகு அங்கிருக்கிறது

என்றுதானே சொல்கிறார்கள்?" என்றான். "நீ நம்புகிறாயா?" என்றான் சுபாகு. "அனைவரும் சொல்கிறார்களே?" என்றான் துர்தர்ஷன். "நீ எவ்வகையில் அதை உறுதிப்படுத்திக்கொண்டாய்?" என்றான் சுபாகு. "மூத்தவர் சொல்கிறார், ஆகவே நான் ஏற்றேன். நீங்கள் இல்லையென்று சொன்னால் அதையும் நான் ஏற்பேன்" என்றான் துர்தர்ஷன். "உனக்கென எண்ணம் ஏதுமில்லையா?" என்றான் சுபாகு. "இதை எவ்வண்ணம் நான் அறிய முடியும்? நான் இதற்கு முன் இறந்ததில்லை" என்று சொல்லி உரக்க நகைத்தான் துர்தர்ஷன்.

சுபாகுவும் நகைத்தான். அவன் "நான் அறிந்து நம்பும் அனைத்தும் எவரோ எனக்கு சொல்வதுதான். அவர்கள் சொல்வதை மெய்யென்று உணர பொய்யென்று தெளிய எனக்கு எந்த வழியும் இல்லை. அவர்களே மெய்யென்று உணரும் வழியொன்று உள்ளது. ஏனென்றால் அவர்கள் என் மூத்தோர். ஆகவே எனக்கு எதிலும் ஐயமில்லை. ஐயமின்மையும் இல்லை" என்றான் துர்தர்ஷன். "நீ நல்லூழ் கொண்டவன்" என்றான் சுபாகு.

சுபாகு விழிதிறந்து சூழ நோக்கினான். எங்கும் இருள் செறிந்திருந்தது. படைகளுக்குள் உணவுக் கலங்கள் உலவும் வெளிச்சம் மட்டுமே இருந்தது. படைவீரர்களின் உருவங்கள் முற்றாக விழிக்கு தெரியவில்லை. பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால் எவரும் அவ்வெளிச்ச வட்டத்திற்குள் வந்து அமர விரும்பவில்லை. ஒவ்வொருவரும் சென்று இருளுக்குள் ஒடுங்கிக்கொண்டிருந்தமையால் அங்கு படைகள் இல்லையென்றே விழி காட்டியது.

அவன் எழுந்து நின்றான். எங்கும் அமரவோ படுக்கவோ தன்னால் இயலவில்லை என்பதை இருநாட்களாக உணர்ந்துகொண்டிருந்தான். சென்றுகொண்டே இருக்கையில் உள்ளம் சற்று ஆறுதல் கொள்கிறது. வெந்த புண்ணை காற்றில் வீசி ஆற்றுவது போல. அமர்ந்திருக்கையில் மண்ணுடன் அழுத்தி தசைகளை துடிக்க வைக்கிறது உள்ளம். வலி என்பதும் துயர் என்பதும் தனிமை என்பதும் ஒன்றே என உணரும் தருணங்கள்.

அவன் தொலைவில் மரத்தடியில் இருளில் அமர்ந்திருந்த சல்யரையும் அஸ்வத்தாமனையும் கண்டான். அருகே கிருதவர்மன். அவர்கள் அவனை நோக்கிவிட்டிருந்தனர். அவன் வரும்பொருட்டு அவர்கள் காத்திருந்தனர். அவன் எழுந்து அவர்களை நோக்கி சென்றான். கிருதவர்மன் அவன் வருவதை திரும்பிப்பார்த்தபின் புன்னகைத்தான். அவன் அருகே சென்று சற்று தள்ளி கைகளை கட்டிக்கொண்டு நின்றான்.

அவர்கள் எவரும் எதையும் பேசிக்கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. இருளுக்குள் வெவ்வேறு வகையில் அமர்ந்தும் சாய்ந்தும் தலைகுனிந்து தரையில் வீணே கோடிழுத்துக்கொண்டும் தொலைவில் தெரிந்த வெளிச்சங்களை பார்த்துக்கொண்டும் தங்கள் எண்ணங்களுக்குள் தாங்கள் அலைந்துகொண்டிருந்தார்கள். அவன் வரவே அவர்களை ஒருவரோடு ஒருவர் தொடர்புறுத்தி ஒன்றாக்கியது. கிருதவர்மன் "உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம், அமர்க!" என்றான். "தாழ்வில்லை, நிற்கிறேன்" என்றபடி சற்று முன்னகர்ந்து நின்றான் சுபாகு.

"நாம் படைசூழ்கையை வகுக்கவேண்டியுள்ளது" என்று அஸ்வத்தாமன் சொன்னான். "இப்போர் நாளையும் நிகழும்.

இப்போது நமது படைவீரர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள். ஆகவே அவர்களை ஒருங்கிணைப்பது எளிது. ஆனால் என்ன இடரெனில் நமது படைத்தலைவர்களில் பெரும்பாலானவர்கள் போரில் மடிந்துவிட்டார்கள். இப்போது இருப்பவர்களில் சிலஆயிரத்தவரும் நூற்றுவரும்கூட எந்த படைப்பயிற்சியும் இல்லாதவர்கள். அவர்களிடம் படைசூழ்கையை சொல்லி விளக்கி ஒருவாறாக ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு நெடுநேரம் தேவைப்படும். ஆகவே இன்றே நமது படைசூழ்கையை வகுத்துக்கொள்வது இன்றியமையாதது.”

கிருதவர்மன் “அதைப்பற்றி பேசத்தொடங்கியபோது எங்களுக்கு எழுந்த ஐயம் நாளை போரை தொடங்கவிருக்கிறோமா என்றுதான்” என்றான். “ஏன்?” என்று சுபாகு கேட்டான். “இன்றைய இழப்பிற்குப் பின்...” என கிருதவர்மன் குரல் தாழ்த்த சல்யர் “நான்தான் அந்த ஐயத்தை எழுப்பினேன். அரசர் இன்றிருக்கும் நிலையில் இப்போரை முன்னெடுக்கும் எண்ணம் அவருக்கு இருப்பதாக சொல்ல இயலாது. இன்று அவர் எழுந்து எதையும் சொல்லும் நிலையிலும் இல்லை. நாளை அவர் எழுந்து உளம் வெளித்த பின்னர் மட்டுமே நம்மால் எதையும் முடிவெடுக்க இயலும். அவர் சொல்லின்றி படைசூழ்கை அமைப்பதும், அதன் பொருட்டு ஆணைகளை பிறப்பிப்பதும் உகந்ததல்ல. அவரே நம் அரசர். இப்படைகளின் முன்நிலைக் கோல் அவருடையது” என்றார்.

அஸ்வத்தாமன் “அதைத்தான் பலவாறாக பேசிக்கொண்டிருந்தோம். அரச குடியில் அவருக்கு இளையோராக இன்று எஞ்சியிருப்பவர் நீங்கள் மட்டுமே. அவருக்கு இணையானவராக இன்று நீங்கள் முடிவெடுக்கலாம்.

அரசவையில் நீங்கள் கைச்சாத்திடுவதும் ஏற்றுக்கொள்ளப்படுவதே. அவர் நாளை போரிட விழைவாரா என்று மட்டுமே நாம் அறியவேண்டியிருக்கிறது" என்றான். கூரியகுரலில் "விழைவார்" என்று சுபாகு சொன்னான். அவர்கள் சற்று அதிர்ந்ததுபோலத் தோன்றியது.

"அவ்வாறெனில்..." என்று சல்யர் சொல்லத்தொடங்க "அவர் போரிடவே விழைவார். ஒருகணமும் ஒருமுறைகூட பின்கால் எடுத்து வைக்கமாட்டார். இங்கு வருவதற்கு முன் அவருக்கு எத்தனை உறுதி இருந்ததோ அதை மிஞ்சும் உறுதியுடன் நாளை காலை விழித்தெழுவார். ஐயமே வேண்டாம்" என்றான் சுபாகு. "ஆகவே படைசூழ்கை அமைக்கப்படவேண்டும். அதற்கான ஆணையை அவர் பொருட்டு நானே பிறப்பிக்கிறேன்."

அஸ்வத்தாமன் பெருமூச்சுவிட்டு "நானும் அவ்வாறே எண்ணினேன். ஆனால் மத்ர நாட்டு மூத்தவர் சொல்கையில் அதையும் உசாவ வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. நன்று, உங்கள் சொற்கள் உகந்தவை. இத்தருணத்திற்கு முற்றிலும் போதுமானவை" என்றான். கிருதவர்மன் "நாளை நாம் போருக்கெழுந்தால்..." என்று சொல்லத்தொடங்க அஸ்வத்தாமன் "ஐயம் புரிகிறது. ஆனால் நாம் இன்னும் தோற்கவில்லை. நம் தரப்பின் முதன்மைவீரர்கள் இன்னமும் ஆற்றல் குன்றாது இருந்துகொண்டிருக்கிறோம். அங்கர் இருக்கிறார். மத்ரர் இருக்கிறார். நானும் நீங்களும் இருக்கிறோம். நாம் போரிடுவோம்" என்றான்.

"போரிட்டாகவேண்டும்" என்று சுபாகு சொன்னான். சல்யர் "இன்றைய போரிலேயே அங்கன் முறையாக தேர் நடத்தவில்லை. அவன் தேர்ப்பாகன் கொல்லப்பட்டது எங்கோ

அவன் அகத்தின் தன்தொகுப்பு நிலையை இல்லாமல் ஆக்கிவிட்டது. ஆகவேதான் பீமனின் கழுத்தில் வில்லை இட்டு இழுத்துச் சுழற்றினான். போர்வீரன் அதை செய்ய மாட்டான். கொன்றுவிட்டு பிறிதொரு நோக்களிக்காமல் கடந்து செல்வான். இழிவுபடுத்தவேண்டும் என்றும் நெஞ்சில் மிதித்து மேலேறி நின்றிருக்கவேண்டும் என்றும் தோன்றுவது வெற்றாணவம் மட்டுமே" என்றார்.

கிருதவர்மன் சீற்றத்துடன் எழுந்து "எனில் நீங்கள் தெளித்திருக்கவேண்டும் அவருடைய தேரை. நீங்கள் மறுத்ததனால்தான் எளிய சூதனொருவனால் தேரோட்டப்பட்டது" என்றான். சுபாகு "நாளை சல்யர் தேரோட்டுவார்" என்றான். "நான் சில வினாக்கள் கேட்டேன். அதற்கு இன்னும் எனக்கு விடை கிடைக்கவில்லை" என்று சல்யர் சொன்னார். "நாளை நீங்கள் அங்கருக்கு தேரோட்டுக, மத்ரரே! இது தார்த்தராஷ்டிரரின் ஆணை. வேண்டுகோள் அல்ல" என்று சுபாகு சொன்னான்

சல்யர் திகைப்புடன் விழி தூக்கி பார்த்தார். "ஆனால்..." என்றார். "அரசாணைக்குப்பின் ஆனால் என்னும் சொல் உரைக்கப்படுவது குற்றம். அஸ்தினபுரியின் படை ஒருபோதும் அதை பொறுத்துக்கொள்ளாது" என்று சுபாகு சொன்னான். சல்யர் முகம் மாறி சிரித்து "உண்மையில் நான் நேற்றே தேர் தெளிக்கும் எண்ணத்தில்தான் இருந்தேன். புரவிகளையே தேர்வு செய்து வைத்திருந்தேன். எனக்கு அரசாணை வரவில்லை. அதற்காகக் காத்திருந்து அங்கன் வேறு தேர்ப்பாகனுடன் போர்க்களம் நோக்கி சென்றுவிட்டான் என்று அறிந்தபின்னரே நான் போருக்குச் சென்றேன்" என்றார்.

“இது அறுதி அரசாணை என்று கொள்க!” என்றான் சுபாகு. “ஆம், நாளை நான் தேர் தெளிக்கிறேன். அது என் கடமை” என்றபின் சுபாகுவை நோக்கி புன்னகைத்து “நான் தேர் தெளித்தால் அங்கன் வெல்வான். பாண்டவர்கள் ஐவரையும் அவன் கொல்வான். ஏனெனில் தேரென்பது முதன்மைப் படைக்கலம் என்று தெரிந்தவன் நான். எனது புரவிகளை அவனது தேரில் கட்டுகிறேன். அவை நாளை களத்தில் விந்தை காட்டும் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்” என்றார்.

“அங்கர் எங்கே?” என்று சுபாகு கேட்டான் விழிகளால் சற்று அப்பாலிருந்த மரத்தடியை சுட்டிக்காட்டினான் கிருதவர்மன். அங்கே கர்ணன் மரத்தடியில் இருள் நோக்கி சாய்ந்து அமர்ந்திருந்தான். சுபாகு அஸ்வத்தாமனிடம் “நீங்கள் படைசூழ்கையை வகுத்து எனக்குக் காட்டுங்கள். மூத்தவரின் பொருட்டு நான் ஆணை பிறப்பிக்கிறேன்” என்றான். பின்னர் தலைவணங்கிவிட்டு கர்ணனை நோக்கி சென்றான்.

கர்ணன் அவன் வருவதை அறியவில்லை. சற்று நேரம் அருகே நின்றபின் “வணங்குகிறேன், மூத்தவரே” என்றான் சுபாகு. கர்ணன் திரும்பிப் பார்த்தபோது கண்கள் தொலைதூரத்து வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். “மூத்தவர் துயில் கொண்டிருக்கிறார். இன்றிரவு அவர் விழித்துக்கொள்ளமாட்டார். தாங்கள் சென்று ஓய்வெடுக்கலாம். உரிய ஆணைகளை நான் அஸ்வத்தாமனுக்கு அளித்துவிட்டேன். நாளை தங்கள் தேரை சல்யர் தெளிப்பார்” என்றான்.

“ஆம், நாளை போர் இறுதியானது...” என்றபின் கர்ணன் எழுந்து நின்றான். அவன் மேலும் உயரம் கொண்டுவிட்டதைப்போல சுபாகு உணர்ந்தான். அவன் முகத்தை அண்ணாந்து வானிலென

பார்க்கவேண்டியிருந்தது. “நாளைய போரில் நாம் வெல்ல வேண்டும். அவ்வெற்றி ஒன்றே அரசருக்கு சற்றேனும் நிறைவளிக்கும்” என்று கர்ணன் இருட்டிடம் என சொன்னான். சுபாகு ஒன்றும் சொல்லவில்லை.

அஸ்வத்தாமனும் கிருதவர்மனும் தணிந்தகுரலில் பேசியபடி நடந்து அகல்வதை, சல்யர் அவர்களுக்குப் பின்னால் மேலாடையை இழுத்துச் சுற்றியபடி மெல்லிய, முதுமை தெரியும் அசைவுகளுடன் தொடர்வதை சுபாகு பார்த்தான். “அவர்களுடன் தாங்களும் செல்லலாம், மூத்தவரே. நன்கு துயில் கொள்க!” என்று கர்ணனிடம் சொன்னான். “இல்லை, இன்றிரவு இங்கிருந்து அகல இயலும் என்று எனக்குத் தோன்றவில்லை. நான் அவர் குடில் வாயிலில் அமரவிரும்புகிறேன்” என்றான் கர்ணன்.

“துயில்நீப்பு தங்களுக்கு நன்றல்ல” என்று சுபாகு சொன்னான். “என்னால் துயில முடியுமென்று தோன்றவில்லை” என்றான் கர்ணன். “மூத்தவரே, அரசர் எவ்வகையிலும் விழிப்புகொள்ள வாய்ப்பில்லை. அகிபீனா அவரை நாளை புலரி வரை துயிலவைக்கும். அவர் அறைக்குள் மேலும் அகிபீனா புகை சுழன்றுகொண்டிருக்கிறது. அவர் எவ்வகையிலும் துயிலெழ வாய்ப்பில்லை” என்றான் சுபாகு. “ஆம், அறிவேன்” என்று கர்ணன் சொன்னான். “ஆனால் நான் தன்னினைவு கொண்டிருக்கிறேன். அவருடன் இருக்கவேண்டும் என்று தோன்றுவது எனக்காகவே.”

சுபாகு மீண்டும் ஏதோ சொல்ல வாயெடுத்தபின் தவிர்த்தான். “வருக! என்றபின் கர்ணன் நடந்தான். சுபாகு அவனை தொடர்ந்தான். கர்ணன் துரியோதனனின் குடில் வாயிலில் அமர்ந்து தூணில் சாய்ந்துகொண்டான். “நமது படைகள்

சோர்ந்திருக்கின்றன" என்று சுபாகு சொன்னான். "படையெங்கும் ஓர் ஒழுங்கின்மை நிறைந்திருக்கிறது. எந்தக்கட்டுப்பாடும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆயிரத்தவரும் நூற்றுவரும் பலர் மறைந்துவிட்டனர். இரண்டாம் நிலையில் இருந்தவர்கள் நடத்துநர்களாக மாறியிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பலர் அடுமடையர்கள், வெறும் ஏவலர்கள்."

அவன் பேசவிழைந்தான். ஆனால் ஏன் சொல்கிறோம் எனத் தெரியவில்லை. "இன்றிரவு புலர்வதற்குள் ஆயிரத்தவர் அனைவரையும் ஒருமுறை பார்த்துவிடவேண்டுமென்று எண்ணினேன்" என்றான். "செல்க!" என்று கர்ணன் சொன்னான். பின்னர் கண்களை மூடிக்கொண்டான். காற்று ஊளையுடன் கடந்துசென்றது. படைகளிடமிருந்து எழும் ஊனழுகும் வாடை அதில் கலந்திருந்தது. கொடிகள் படபடத்தன. இருளுக்கு அப்பால் ஒரு யானை உறுமியது.

சுபாகு கர்ணனை நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் புன்னகைத்து "மூத்தவரே, சற்று முன் அறைக்குள் பார்த்தபோது மூத்தவர் முதிய அகவை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகத் தோன்றியது. ஆனால் தாங்கள் மேலும் இளமை கொண்டு ஒளிபெற்று வருவதாகத் தெரிகிறது" என்றான். கர்ணனும் புன்னகைத்து "நான் இருளில் சற்று ஒளியுடன் தெரிவேன் போலும்" என்றான்.

ஒரு புன்னகை அனைத்தையும் உருமாற்றிவிட்டதை சுபாகு உணர்ந்தான். அதுவரை இருந்த தயக்கங்களும் ஐயங்களும் பதற்றங்களும் முற்றாக மறைந்தன. "மூத்தவரே, அவ்வுலகென்று ஒன்று உண்டு என்று எண்ணுகிறீர்களா? அங்கு மூத்தாரும் நீத்தாரும் வாழ்கிறார்கள் என்பதை நீங்கள்

நம்புகிறீர்களா?" என்றான். "அப்படி ஒன்று இல்லையேல் அதை உருவாக்கியாகவேண்டும்" என்று கர்ணன் சொன்னான்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று சுபாகு கேட்டான். "இத்தனை நூல்களினூடாக இத்தனை கதைகளினூடாக இத்தனை நினைவுகளை சேர்த்துக் கொள்வதனூடாக நாம் எதை செய்கிறோம்? இங்கு வாழும் இந்த வாழ்வை பொருளேற்றம் செய்கிறோம். எவ்வகையிலேனும் இங்குள்ள நிகழ்வுகளை ஒன்றுடன் ஒன்று தொடுத்துக்கொண்டு உட்பொருளொன்றை உருவாக்க இயலுமா என்று பார்க்கிறோம்" என்றான் கர்ணன். சுபாகு ஆம் என தலையசைத்தான்.

"அங்கு தெற்குக்காட்டிலெங்கோ நம் குலத்து முதியவர் கிருஷ்ண துவைபாயன மகாவியாசர் இவற்றையெல்லாம் எழுதிக்கொண்டிருப்பதாக நேற்றிரவு ஒரு சூதன் சொன்னான். இது சொல்பெருகும் நிலம். போர் முடிந்ததும் மேலும் சொற்கள் அவருக்குக் கிடைக்கும். ஒரு பெருங்காவியம் உருவாகும். விண்ணிலோ கீழிலோ நீத்தாருலகோ தேவருலகோ இருப்பதை நம்மால் அறிய இயலாது. ஆனால் இக்காவியம் இங்கிருக்கும். இங்கிலாத அனைத்துப் பொருளும் அதில் இருக்கும். இங்கு மறைந்தவர்கள் அனைவரும் அங்கு வாழ்வார்கள். நீயும் நானும்கூட அங்கு சென்று சேர்வோம். அந்த உலகில் ஒருவரை ஒருவர் கண்டு தழுவிக்கொள்வோம்" என்றான் கர்ணன்.

சுபாகு உரக்க நகைத்து "நன்று மூத்தவரே, இது ஒரு தெளிவை அளிக்கிறது" என்றான். பின்னர் "முதியவருக்கு கண்ணும் செவியும் நாவும் கூருடன் இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்வோம். உகந்தவற்றை அவர் எழுதவேண்டும்" என்றபின் மேலும் நகைத்து "அவரை நான் பார்த்ததில்லை.

ஆனால் எங்கோ அவர் இருக்கிறார் எனும் உணர்வு எனக்கு எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அவரைப் பழித்தோ இளிவரல் செய்தோ ஏதேனும் எங்கேனும் சொல்லியிருக்கிறேனா என்று எண்ணிக்கொண்டேன்" என்றான்.

கர்ணன் நகைத்து "இளமையில் அவரைப் பற்றி இளிவரல் செய்திராத ஒருவர்கூட இங்கிருக்க மாட்டார்கள்" என்றான். "ஆம், அவர் எழுதும் காவியங்களில் எவருக்கும் நிழலே இல்லை என்று இளமையில் என் ஆசிரியர் சொன்னார். ஏன் என்று என்னிடம் கேட்டார். நிழலிருந்தால் அவை புணர்ந்து பெருகும். அவற்றைக்கொண்டு வேறு காவியங்கள் உருவாகும். ஆகவே அவற்றை எங்கோ சிறு பெட்டிக்குள் பூட்டி வைத்திருக்கிறார் என்று சொன்னேன். அதன் பொருட்டு அன்று ஆசிரியர் என்னை அடித்தார்" என்றான் சுபாகு.

கர்ணன் புன்னகைத்தான். மீண்டும் முகம் மாறி சுபாகு "தாங்கள் இங்கு இரவு முழுக்க அமர்ந்திருப்பதில் எப்பொருளும் இல்லை. தாங்கள் ஓய்வெடுக்கலாம், மூத்தவரே" என்றான். "இல்லை. இங்கிருப்பது எனக்கு உளநிறைவளிக்கிறது. இதுவன்றி பிறிதெதுவும் இப்போது செய்வதற்கில்லை" என்றான் கர்ணன். சுபாகு ஒன்றும் சொல்லாமல் தலைவணங்கி விடைபெற்று திரும்பிச்சென்றான். கர்ணன் விழிகளை மூடிக்கொண்டான்.

அவனுடைய குதிரையை அங்கிருந்து அகற்றிவிட்டிருந்தனர். வேறு ஒரு குதிரை அவனுக்காக காத்து நின்றிருந்தது. அவன் அதன் அருகே சென்று அதன் கழுத்தை தட்டியபின் சேணத்தில் காலூன்றி ஏறி அமர்ந்தான். ஏவலனிடம் "அப்புரவி?" என்று ஏதோ சொல்லத்தொடங்கினான். "அதை எடுத்துக்கொண்டு

சென்றுவிட்டார்கள்” என்றான் ஏவலன். “செல்க!” என்றபடி அவன் புரவியை தட்டினான்.

இருட்கனி - 38

திருஷ்டத்யும்னன் யுதிஷ்டிரனின் சிற்றவை முகப்பில் புரவியிலிருந்து இறங்கி ஏவலனிடம் கடிவாளத்தை அளித்துவிட்டு புண்பட்ட கால்களை மெல்ல அசைத்து, உடலை முழு உளவிசையாலும் உந்தி நடந்து குடில் வாயிலை சென்றடைந்து அதன் தூணைப்பற்றியபடி நின்றான். உடலெங்கும் பலநூறு நரம்புகள் சுண்டி இழுபட்டு வலி நிறைத்தன. தனித்தனியாக நூறுவலிகள். அவை ஒன்றெனத் திரண்டு ஒற்றை வலியாக ஆகாது போவது ஏன்? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இலக்கு இருக்கிறது. ஒவ்வொரு செயல்முறை இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொருமொழியில் அவனிடம் பேசிக்கொண்டிருந்தன.

மூச்சைத்திரட்டி கால் தூக்கி திண்ணையிலேறியபோது அவன் மீண்டும் தள்ளாடி தூணை பற்றிக்கொண்டான். உள்ளிருந்து எழுந்த வலியை உணர்ந்து பற்களை இறுகக் கடித்தான். ஒருகணம் போதும் இந்த நைந்த உடலிலிருந்து விடுதலை அடைந்துவிட வேண்டும் என்று தோன்றியது. இதை இன்னும் நெடுநாட்கள் சுமந்தலைய இயலாது. இது இங்கு இனி ஆற்றுவதற்கு ஒன்றுமில்லை. அவன் கண்களை மூடி உள்ளிருந்து குருதிக்குமிழிகள் எழுந்து கொப்பளித்து சுழன்றலைவதை பார்த்துக்கொண்டிருந்தான். பின்னர் விழிகளைத் திறந்து சூழ நோக்கியபோது உடல்

வியர்த்திருந்தது. இரவின் மென்குளிர்காற்று வந்து தொட்டபோது குளிர்ந்தது.

அவன் மீண்டும் உடலைச் செலுத்தி உள்ளே சென்றான். வாயிலில் நின்றிருந்த சுருதகீர்த்தி தலைவணங்கி உள்ளே செல்லும்படி கைகாட்டினான். உள்ளே சாத்யகியும் சிகண்டியும் பாண்டவமைந்தர்களும் மட்டும் அமர்ந்திருந்தார்கள். நகுலனும் சகதேவனும் யுதிஷ்டிரனை அழைக்கச் சென்றிருப்பார்கள் என்று அவன் எண்ணினான். பீமனும் அர்ஜுனனும் இறுதியில் வருவதே வழக்கம். ஒருவேளை அர்ஜுனன் வராதொழியவும் வாய்ப்புண்டு. அவனுக்கு அந்த அவையிலிருந்து தானும் ஏதேனும் சொல்லி ஒழிந்துவிடவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அங்கு பேசுவதோ படைசூழ்கை வகுத்தளிப்பதோ அன்றுபோல் பொருளற்றதென என்றுமே தோன்றியதில்லை.

சாத்யகி அவனிடம் "நோயுற்றிருக்கிறீர்கள், பாஞ்சாலரே" என்றான். "ஆம்" என்று வலியுடன் முனகியபடி கைகளை இருக்கையின் பிடியில் ஊன்றி மெல்ல உடல் தாழ்த்தி அமர்ந்து பெருமூச்சுடன் கால்களை நீட்டிக்கொண்டான் திருஷ்டத்யும்னன். "தாங்கள் சற்று ஓய்வெடுக்கலாம்" என்று சாத்யகி சொன்னான். சிகண்டி "ஓய்வெடுப்பதால் எந்தப்பயனும் இல்லை. எனது உடலிலும் ஏழு அம்பு முனைகள் பாய்ந்துள்ளன. அவற்றை பிழுதெடுத்தால் அந்தப்புண் எளிதில் ஒருங்கிணையாதென்பதனால் அப்படியே விட்டுவிட்டிருக்கிறார்கள். இரவில் படுத்தால் மொத்த உடலும் அந்த உலோகங்களுக்கு எதிராக போரிடத்தொடங்குகின்றது. ஓய்வெடுப்பது என்பது உடலை வலிக்கு அளிப்பது மட்டுமே" என்றார்.

திருஷ்டத்யும்னன் முனகலுடன் மீண்டும் உடலை எளிதாக்கி கண்ணை மூடிக்கொண்டான். சிகண்டி "உங்கள் உடலில் எத்தனை அம்பு முனைகள் நுழைந்துள்ளன, இளையபாஞ்சாலரே?" என்றார். அதிலிருந்த இளிவரலை புரிந்துகொண்டு "ஒன்பது" என்று விழிதிறக்காமல் திருஷ்டத்யும்னன் சொன்னான். சாத்யகி "எனது உடலிலிருந்தவற்றை பிழுது அகற்றிவிட்டார்கள். தசை சேர்த்து தையலும் இட்டிருக்கிறார்கள்" என்றான். "நன்று" என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். சிகண்டி "தைத்த தசைகள் ஒவ்வொரு அசைவிலும் இழுபடுவதைவிட நான் அடையும் வலி குறைவானதே" என்றார்.

மீண்டும் அவர்களிடையே ஒரு சொல்லின்மை உருவாகியது. "இளையோர் எவருக்கும் ஆழ்ந்த புண் எதுவுமில்லையல்லவா?" என்று சிகண்டி கேட்டார். சுருதகீர்த்தி "சர்வதன் மட்டுமே ஓர் ஆழ்ந்த புண்ணை அடைந்திருக்கிறான்" என்றான். "இளையோர் விரைவிலேயே அவற்றை ஆற்றிக்கொள்வார்கள்" என்று சாத்யகி சொன்னான். ஒவ்வொரு உரையாடலாக தொடங்கி அது மேலும் தொடர இயலாது உடனடியாக சொல்லழிவதை அவர்கள் உணர்ந்துகொண்டிருந்தனர். எதை பேசுவதென்று தெரியவில்லை.

திருஷ்டத்யும்னன் தான் குடிகொள்ளும் அந்த உடலிலிருந்து அனைத்துச் சரடுகளையும் அறுத்துக்கொண்டு எழுந்து விலகிச்சென்றுவிடவேண்டுமென்று எண்ணினான். இந்த உயிர் தன் வலியுடன், நோயுடன் இந்தப் பீடத்தில் வீற்றிருக்க வேண்டும். அது இறுதியாக அமர்ந்த பீடம். அந்தப்பீடத்தை அது என்றும் விரும்பியிருந்தது. அங்கிருக்கையில் முழுமையடைந்ததாகவும் வெற்றியை அடைந்துவிட்டதாகவும்

எண்ணிக்கொண்டிருந்தது. எழுந்து வெளியே சென்றால் உடலின்மை எடையின்மையாகி அனைத்திலிருந்தும் விடுதலை அடையச்செய்திருக்கும். அங்கு வீசிக்கொண்டிருக்கும் குளிர்ந்த காற்றில் கலந்து திசையின்மையாக மாறி சுழல முடியும்.

அவன் இமைகள் சரிந்தன. கைகள் தளர்ந்து கைப்பிடிகளில் முழுதமைந்தன. தலை தொங்கி மூச்சு சீரடைய அவன் தன் குறட்டையொலியை தானே கேட்டான். பின்னர் விழித்துக்கொண்டபோது உள்ளம் சற்று தெளிந்திருந்தது. அந்தச் சிறு பொழுதுக்குள் கனவில் தான் வேறெங்கோ சென்று ஒரு துளி வாழ்க்கையை நுகர்ந்து மீண்டதை அவன் உணர்ந்தான். அதில் காம்பில்யத்தின் தெருக்களினூடாக புரவியில் நகைத்தபடி பாய்ந்து சென்றான். பாஞ்சாலத்து இளைஞர்கள் புரவியில் அவனைத் துரத்தி வந்தனர். சென்ற விரைவிலேயே புரவியை இழுத்து விசை குறைத்து அதிலிருந்து தாவி ஆற்றின் பெருக்கில் குதித்து நீந்தத்தொடங்கினான். செல்லும்போதே தன் காலிலிருந்து இரும்புக்குறடுகளை கழற்றியிருந்தான். தொடர்ந்து வந்தவர்கள் சேற்றுப்பரப்பில் புரவிகளை இழுத்துச் சுழன்று நின்று நீந்திக் கடந்துசெல்லும் அவனை பார்த்தனர். பின்னர் காலணிகளைக் கழற்றிவிட்டு ஒவ்வொருவராக நீரில் குதித்தனர். அவன் நீந்தியபடியே மல்லாந்து திரும்பி அவர்களைப்பார்த்து வாயில் அள்ளிய நீரை ஓங்கி பீறிட்டு உமிழ்ந்து உரக்க நகைத்தான். அவனைச்சுற்றி நீர்த்துளிகள் பளிங்கு உருளைகளென எழுந்து ஒளிகொண்டு துள்ளிக்கொண்டிருந்தன.

வெளியே சங்கொலி கேட்டது. பிரதிவிந்தியன் அவைக்குள் நுழைந்து "அரசர் எழுந்தருள்கிறார்" என்றான். சற்று நேரத்தில்

மீண்டுமொரு சங்கொலி எழுந்தது. இரு ஏவலர்க்ள் சங்கொலி எழுப்பியபடி முன்னால் வர ஒருவன் மின்கதிர்க்கொடியுடன் தொடர சால்வையை நன்றாகப் போர்த்தியபடி உடலைக்குறுக்கி கூன்விழுந்த முதுகுடன் யுதிஷ்டிரன் அவைக்குள் நுழைந்தார். எழுந்து நின்று வணங்கிய அனைவரையும் பார்த்து தானும் வணங்கிவிட்டு குறுகிய காலடிகளுடன் பறவை நடையில் சென்று தன் பீடத்தில் அமர்ந்தார்.

திருஷ்டத்யும்னன் மீண்டும் தன் இருக்கையில் அமர்ந்துகொண்டான். அவன் எழுந்து ஏதேனும் பேசுவான் என்று எதிர்பார்த்து சாத்யகி அவனை நோக்கிக்கொண்டிருந்தான். யுதிஷ்டிரன் அவையை சூழ்ந்து பார்த்தார். பின்னர் "இளையோர் எவருமே வரவில்லையா?" என்றார். அதற்கு அவையிலிருந்து மறுமொழி எழவில்லை. யுதிஷ்டிரன் திரும்பி வாயிலருகே நின்ற சுருதகீர்த்தியிடம் "எங்கே உன் தந்தை?" என்றார். சுருதகீர்த்தி "அவரை அழைத்து வருவதற்கு சுருதசேனன் சென்றிருக்கிறான். சிறிய தந்தையர் நகுலரும் சகதேவரும் வந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான்.

"மந்தன் எங்கே?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். "அவர் உணவருந்திக் கொண்டிருக்கிறார்" என்றான் சுருதகீர்த்தி. "உடனே சென்று அவனை வரச்சொல். இங்கு அவை கூடியிருக்கிறது என அவனுக்குத் தெரியாதா என்ன? அவை முடிந்தபின் சென்று உணவு கொள்ளலாம். செல்க!" என்றார் யுதிஷ்டிரன். சுருதகீர்த்தி தலைவணங்கி வெளியே சென்று ஏவலனை அழைக்கும் ஓசை கேட்டது. திருஷ்டத்யும்னன் அந்நிகழ்வுகளை வேறெங்கோ நிகழ்வதுபோல அரைக்கனவில் என அறிந்துகொண்டிருந்தான்.

யுதிஷ்டிரன் தாடையைக் கடித்து தலையை சலிப்புடன் அசைத்தார். "அவ்வாறெனில் இப்போரை தொடரவேண்டுமென எனக்கு மட்டுமே இன்று எண்ணம் உள்ளது. பிற அனைவரும் ஓய்ந்து சலித்துவிட்டார்கள்" என்றார். அவை சொல்லெடுக்காமல் துயில்வதுபோல் அமர்ந்திருந்தது. அவர் அவர்களை சூழநோக்கிவிட்டு "எவருக்கும் இனி சொல்வதற்கொன்றுமில்லை அல்லவா?" என்றார். சாத்யகி முனகலாக "அவ்வாறல்ல, அரசே" என்றான். "பிறகென்ன? பிறகென்ன?" என்று அவர் உரக்க கேட்டார். "ஒவ்வொருவரும் இங்கே என்ன சொல்லவிரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. என் பொருட்டு படை நின்றீர்கள், சுற்றத்தை இழந்தீர்கள், புண்பட்டீர்கள், தன்நினைப்பு ஒழிந்தீர்கள் அல்லவா?"

அவையிலிருந்த எவரும் எதுவும் சொல்லவில்லை. யுதிஷ்டிரன் மேலும் உரக்க "என்பொருட்டென்றால் இதோ இப்போதே போரை நிறுத்திவிடுகிறேன். எனக்கு எவரிடமும் கடப்பாடு எதுவும் இல்லை. நான் எவரிடமும் எதையும் கோரிப்பெறவுமில்லை. எவர் சொல்லுக்கு இந்தப்போர் தொடங்கியதோ அவர் சொல்லட்டும், போரை நிறுத்திவிடுவோம்" என்றார். அதற்கும் அவையிலிருந்து மறுமொழி எதுவும் எழவில்லை. "என்ன சொல்கிறீர்கள்?" என்று யுதிஷ்டிரன் கூவினார்.

அதற்குள் அறிவிப்பு ஏதுமில்லாமல் நகுலனும் சகதேவனும் அவையின் வாயிலில் வந்தனர். சுருதகீர்த்தி உள்ளே வந்து தலைவணங்க யுதிஷ்டிரன் திரும்பி சிவந்த விழிகளால் அவர்களை பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் தலைதிருப்பிக்கொண்டார். நகுலனும் சகதேவனும் வந்து யுதிஷ்டிரனுக்கு தலைவணங்கியபின் சென்று தங்கள்

பீடங்களில் அமர்ந்துகொண்டனர். யுதிஷ்டிரன் செருமியபடி தன் மேலாடையை சீரமைத்தார். மீண்டும் அவை அந்த உளமழுத்தும் சொல்லின்மையை சென்றடைந்தது.

சாத்யகி மெல்ல உடலை அசைத்து "மழை பெய்யுமென்று தோன்றுகிறது" என்றான். திருஷ்டத்யும்னன் அச்சொல்லால் உளம் எளிதாகி "இது ஆடி, மழை வழக்கமில்லை" என்றான். "ஆம், ஆனால் பதினெட்டாம் பெருக்கன்று மழை உண்டு என்ற சொல்லாட்சியை சிறு அகவையில் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் சாத்யகி. இது என்ன பேச்சு என்பதுபோல் முகம் சுளித்து அவனை நோக்கிய யுதிஷ்டிரன் "பெய்யட்டும், அதனால் என்ன?" என்றார். சாத்யகி "அரசே, நமது படை வீரர்களில் பெரும்பாலானவர்கள் புண்பட்டு மருத்துவ நிலையில் படுத்திருக்கிறார்கள். இப்போது மழை பெய்யுமென்றால் அவர்களில் சற்று ஆழ்ந்த புண்பட்ட அனைவருமே இருநாட்களுக்குள் நோயுற்று உயிர் துறப்பார்கள். புண்ணுக்கு மழையீரம்போல் எதிரி வேறில்லை" என்றான்.

யுதிஷ்டிரன் "அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? வானை மூடி கூரையிட முடியுமா என்ன?" என்றார். அவருடைய எரிச்சலை உணர்ந்து சாத்யகி ஒன்றும் சொல்லவில்லை. யுதிஷ்டிரன் மேலும் சினம் கொண்டு உரத்த குரலில் "இங்கு அம்புகளால் கொல்லப்பட்டதைவிட மழையால் கொல்லப்பட்டவர்கள் மிகுதி என்பதை நான் அறிவேன். ஒவ்வொரு நாளும் களத்திலிருந்து தெற்குக்காட்டுக்கு செல்பவர்களைவிட மிகுதியானவர்கள் காலையில் மருத்துவநிலையிலிருந்து சென்றுகொண்டிருக்கிறார்கள்" என்றார்.

சாத்யகி "ஆம்" என்றான். அப்பேச்சை அப்படியே விட்டுவிட்டு நகுலனையும் சகதேவனையும் நோக்கிய யுதிஷ்டிரன் "எங்கு சென்றார்கள் உங்கள் உடன் பிறந்தோர்?" என்றார். அவர்களிருவரும் ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார்கள். சிலகணங்கள் அவர்களை நோக்கி விழிதிறந்து வாய் சினத்தில் சற்றே வளைந்திருக்க நிலைத்திருந்தபின் திரும்பி திருஷ்டத்யும்னனிடம் "பாஞ்சாலரே, நீங்கள் ஏதேனும் படைசூழ்கை வகுத்துள்ளீர்களா? அல்லது இறப்புக்கு ஒருங்கி உடல் அமைத்து அமர்ந்திருக்கிறீர்களா? என்றார் யுதிஷ்டிரன்.

திருஷ்டத்யும்னன் "நான் ஏற்கனவே பாதி இறந்தவன்" என்றான். யுதிஷ்டிரன் உடல் நடுக்கு கொள்ள பற்களை இறுகக் கடித்ததனால் தாடை அசைய நீர்மை கொண்ட கண்களால் அவையை நோக்கிக்கொண்டிருந்தார். "இக்களத்தில் இனி நான் இயற்றுவதற்கோ அடைவதற்கோ ஒன்றுமில்லை" என்று திருஷ்டத்யும்னன் மீண்டும் சொன்னான். "ஆம், நீங்கள் மட்டுமல்ல நானும் இனி இயற்றுவதற்கும் எய்துவதற்கும் ஒன்றுமில்லை. எவருக்கும் இங்கு எதுவுமில்லை. எவர் பொருட்டு நிகழ்கிறதென்று இக்களத்திலுள்ள எளிய வீரனுக்குக்கூட தெரியாது. எனக்கும் தெரியாது" என்றார் யுதிஷ்டிரன்.

அவர் குரல் எண்ணியிராமல் மேலெழுந்தது. "அங்கே நூறு உடன் பிறந்தார்களை இழந்து அமர்ந்திருக்கிறானே வீணன், அவனுக்கும் தெரியாது. அவன் இழந்ததற்கு நிகராக இனி இப்புவியில் எதை அடையப்போகிறான்? அறிவிலிகள்! அனைவருமே அறிவிலிகள்! அறிவிலிகளில் முதலாமவன் நான். நான் செய்த முதற்பெரும் பிழை இவையனைத்தையும் அறிய முயன்றதே. அறியக்கூடுமென நம்பி நூல் பயின்றதே.

அறிதோறும் அறியாமை காணும் இப்பெருக்கில் அறிவது அறியாமையை பெருக்குவதற்கன்றி பிறிதெதற்கும் அல்ல" என்றபின் எழுந்து "நான் கிளம்புகிறேன். நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் அதில் என்பொருட்டு சகதேவனிடம் ஆணை பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

எவரும் அவரை அமரும்படி சொல்லவில்லை. ஆனால் வாயிலில் பீமன் தோன்றி தலைவணங்கியதும் அவனை விழித்துப்பார்த்தபடி யுதிஷ்டிரன் நின்றார். பீமன் மெல்ல உடல் உந்தியபடி நடந்துவந்தான். "புண்பட்டிருக்கிறயா மந்தா?" என்று யுதிஷ்டிரன் கேட்டார். சீற்றத்துடன் திரும்பிய பீமன் "நலம் உசாவுகிறீர்களா? என்ன செய்ய வேண்டும் நான்? மருத்துவ நிலைக்குச் சென்று பார்த்துக்கொள்ளவா? போரை நீங்கள் நடத்துகிறீர்களா?" என்றான். அந்தப் பொருளிலாச் சீற்றம் யுதிஷ்டிரனை சினம்கொள்ளச் செய்தது. "உன் உடல் நிலை பற்றி கேட்டேன், அரசனாக, மூத்தவனாக" என்றார்.

"ஆம், புண்பட்டிருக்கிறேன். என் உடலில் நூறு வலிகளை உணர்ந்துகொண்டிருக்கிறேன். இக்கணமே இறந்துவிடவேண்டுமென்று விழைகிறேன். என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று பீமன் மேலும் எரிச்சலுடன் கேட்டான். யுதிஷ்டிரன் தளர்ந்தவராக மீண்டும் பீடத்தில் அமர்ந்துகொண்டார். பீமன் இருக்கையில் அமர்ந்துகொண்டு "என்ன முடிவெடுப்பதாக இருந்தாலும் சற்று நேரத்தில் அதற்கு சொல்லெடுத்து முடிவெடுத்துவிடுங்கள். இங்கு நெடுநேரம் அமர்ந்திருக்க நான் விழையவில்லை" என்றான். யுதிஷ்டிரன் "இங்கு இப்போது இருக்க வேண்டியது இளைய யாதவன் மட்டுமே" என்றார்.

“அவர் இல்லாமலிருப்பதே மேல். இருந்தால் அனைத்து வினாக்களையும் அவரிடம் கேட்போம். அவரோ எப்பொழுதும்போல் எந்த வினாவுக்கும் எந்த மறுமொழியும் சொல்லப்போவதில்லை” என்று பீமன் சொன்னான். யுதிஷ்டிரன் தளர்ந்த குரலில் “மந்தா, இந்த அவையில் நாம் முடிவெடுக்க வேண்டியது ஒன்றே. இப்போரை தொடரவிருக்கிறோமா? எதன் பொருட்டு தொடரவேண்டும்” என்றார். பீமன் “தொடரவேண்டியதில்லை. இனி இங்கு வென்று அடைவதற்கு ஒன்றுமில்லை. நாம் அழைத்துவந்த படைகளில் எஞ்சுபவர் மிகச்சிலரே. இன்னும் ஒரு நாள் போர் நிகழ்ந்தால் எத்தனை பேர் உயிருடன் எழுந்து நிற்பார்கள் என்பதை சொல்ல இயலாது” என்றான்.

அவையை ஏளனத்துடன் விழியோட்டி நோக்கி “ஒருவேளை இங்கு அமர்ந்திருக்கும் நாம் சிலர் மட்டுமே இக்களத்தில் எஞ்சி நின்றிருப்போம். வீண்இறப்பு அன்றி வேறெதுவும் இப்போரில் இருந்து கிடைக்காதென்பது உறுதியாயிற்று” என்றான். பின்னர் திரும்பி திருஷ்டத்யும்னனிடம் “போரை நிறுத்தி விடுவோமா? என்ன சொல்கிறீர், பாஞ்சாலரே?” என்றான். திருஷ்டத்யும்னன் ஒரு சொல்லும் பேசாமல் அமர்ந்திருக்க சாத்யகி “இவ்வாறு ஒரு எண்ணம் இந்த அவையில் எழுமென்று உறுதியாக இளைய யாதவர் அறிந்திருப்பார். ஆகவே அவர் அவை புகுவார். அவர் முடிவெடுக்கட்டும்” என்றான்.

யுதிஷ்டிரன் “போரை நிறுத்திவிடுவதொன்றே என் விருப்பமும்” என்றார். “அக்கீழ்மகன் என் மணிமுடியை அறைந்து நிலத்திலிட்டான். செத்த முயலை என அதை அம்புகளால் அறைந்து அறைந்து சுழற்றினான். அக்கணத்தில் எனக்குள் எழுந்த அருவருப்பு இன்னும் என்னை குன்றச்செய்கிறது. இனி

அதை தலையில் சூடமாட்டேன். இங்கிருந்தே வடபுலம் நோக்கி செல்கிறேன். முடிசூடும் குடியில் பிறந்ததை மறந்துவிடுகிறேன். வேட்டையாடியும் கனிதேர்ந்தும் அங்கே வாழ்கிறேன்."

அவர் குரலில் கசப்பு நிறைந்தது. "என் தீயூழ் என்னவென்று இப்போது உணர்கிறேன். இக்குடியில் பிறந்தது. பெருவீரர்கள் என இரு இளையோரை கொண்டிருந்தது. அவை எனக்களித்த ஆணவத்தால்தான் இங்கு அனைத்திலும் என்னை தொடுத்துக்கொண்டிருந்தேன். ஒருபுறம் கற்றறிந்துகொண்டும் மறுபுறம் எண்ணி தருக்கிக்கொண்டுமிருந்தேன். இதிலிருந்து விடுபட்டால் ஒருவேளை கற்ற சொற்களில் ஓரிரண்டாவது எனக்கு பொருள்படக்கூடும். ஒன்றாவது உகந்த சொல்லாக மாறி என்னை விடுதலை நோக்கி கொண்டு செல்லக்கூடும். போதும்'' என்றார்.

அச்சொற்கள் அவருக்கு அவர் சூடவேண்டிய தோற்றத்தை அளிக்க அவர் முகம் தெளிந்தது. குரல் கூர்கொண்டது. "மாலையிலேயே இவ்வெண்ணம் எனக்கு வந்தது. அரசர்கள் தெய்வங்களால் வாழ்த்தப்பட்டவர்கள். மணிமுடி சூடி பொன்னரியணையில் அமர்ந்து நாடும் குலமும் சூழ வந்து வாழ்த்த குடிகள் திறை கொடுத்து வணங்க வீற்றிருப்போர் வேறில்லை. உடல் கொண்ட தெய்வங்கள் அவர்கள். ஆனால் நூல்களை திருப்பிப்பார்த்தால் அரசர்களைப் போல எண்ணிச்சென்று அடையமுடியாத பேரிழிவுகளை அடைந்தவர்களும் வேறில்லை."

"அரசர்களை வெறிகொண்டு அழித்துக்கொண்டிருக்கிறது காலம். போர்க்களங்களில் துண்டு துண்டாக வெட்டி வீசப்பட்டிருக்கிறார்கள். கைகால்கள் மாற்றி வைக்கப்பட்டு

சிதையேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் பற்கள் கொண்டு செல்லப்பட்டு கோட்டைகளில் பதிக்கப்பட்டிருக்கின்றன. மண்டையோடுகளை உணவுக்கலங்களாக ஆக்கியிருக்கிறார்கள். விரல் எலும்புகளைக் கோத்து மாலையாக்கி அணிந்திருக்கிறார்கள். முதுகெலும்பை சரமாக ஆக்கி கோட்டை வாயில்களில் சூட்டியிருக்கிறார்கள். அவர்களின் உடல்கள் முதலைகளுக்கும் நாய்களுக்கும் உணவாக போடப்பட்டிருக்கின்றன. அவர்கள் அடைந்ததுபோல் பெருந்துன்பங்களை யார் அடைந்திருக்கிறார்கள் இங்கு?"

"மகதமன்னன் உக்ரநாபன் முன்பு உயிருடன் தோலுரிக்கப்பட்டான். கலிங்க மன்னன் சூரியவர்மன் ஒவ்வொரு முடியாக பிடுங்கப்பட்டிருக்கிறான். கூர்ஜர மன்னன் பிரதிசத்ரன் யானைகளின் காலடியில் கட்டப்பட்டு பன்னிரு நாட்கள் இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறான். இருபுறமும் யானைகளைக் கட்டி கேகயனின் உடலை கூறு போட்டிருக்கிறார்கள். அனலிலும் புனலிலும் வீழ்த்தி கொல்லப்பட்டிருக்கிறார்கள் அரசர்கள். நீரின்றி உணவில்லாமல் சிறையில் அடைக்கப்பட்டு மடிந்திருக்கிறார்கள். உயிருடன் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். மண்ணுக்குள் அமைந்த வாயில் இல்லாக் கல்லறைகளில் ஆண்டுக்கணக்காக அடைபட்டுக்கிடந்து புழுத்து செத்திருக்கிறார்கள். அவையினரே, மன்னர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் உடல் கொண்டு வந்த எந்த உயிருக்கும் இப்புவியில் இழைக்கப்பட்டதில்லை."

"நிகரான துயரை இன்று நான் அடைந்தேன். இனி ஒருபோதும் அத்துயரிலிருந்து என்னால் விடுதலை அடைய முடியாது. போதும், இவ்வொன்றே இதுவரை நான் ஈட்டிய உச்சமென்று அடைந்து இவையனைத்திலுமிருந்து விடுதலை பெற்றேன்

எனில் நான் அறிவுள்ளவன். நான் கிளம்புகிறேன். இங்கே இதை நிறுத்திக்கொள்வோம்" என்றார் யுதிஷ்டிரன். பீமன் "ஆம், இங்கேயே நிறுத்திக்கொள்வோம்" என்றான். சாத்யகி "அது எவ்வாறு, இளைய யாதவர்..." என்று சொல்லத்தொடங்க யுதிஷ்டிரன் கையைத் தூக்கி "அரசனென இது என் ஆணை. இப்போரை தொடர்ந்து நடத்த எனக்கு எண்ணமில்லை" என்றார்.

சகதேவன் "இப்போரை எவர் தொடங்கினாரோ அவர்தான் முடிக்க முடியும். நாம் தொடங்கவில்லை" என்றான். நகுலன் "ஆம், அவர் இங்கு வரட்டும். அவர் முடித்துவைக்கட்டும்" என்றான். யுதிஷ்டிரன் "ஆம், அவன் வரட்டும். எங்கே அவன்?" என்று சொல்லி திரும்பி சுருதகீர்த்தியிடம் "செல்க! உன் தந்தை எங்கிருந்தாலும் இங்கு கூட்டி வருக! உடன் இளைய யாதவன் இங்கு அவை வரவேண்டும். ஏன் அழைக்கிறார்கள் என்று கேட்டால் போரை நிறுத்துவதைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், இறுதிச் சொல்லுரைக்க அவன் வரவேண்டுமென்று அரசரின் விழைவு என்றே சொல்" என்றார்.

சுருதகீர்த்தி வெளியே சென்று அரைக்கணம் நின்று பின்னர் திரும்பிப்பார்த்து "அவர்கள் வந்துவிட்டர்கள்" என்றான். திருஷ்டத்யும்னன் ஒரு சிறு உளஅசைவை உணர்ந்தான். இளைய யாதவரை பார்க்கும் பொருட்டு விழிதிருப்பி வாயிலை நோக்கிக்கொண்டிருந்தான். முதலில் அர்ஜுனன் அவைக்குள் நுழைந்து யுதிஷ்டிரனை வணங்கிவிட்டு தன் பீடம் நோக்கி செல்ல தொடர்ந்து உள்ளே வந்த இளைய யாதவரின் முகத்தில் என்றும் மாறா புன்னகை இருந்தது. கண்கள் கூசியதுபோல் திருஷ்டத்யும்னன் விழி விலக்கிக்கொண்டான். யுதிஷ்டிரனை வணங்கிவிட்டு பிற அனைவரையும் நோக்கி

புன்னகைத்தபடி சென்று தன் பீடத்தில் அமர்ந்துகொண்டார் இளைய யாதவர்.

யுதிஷ்டிரன் உரத்த குரலில் "உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம் யாதவனே. நீ இறுதிமுடிவு உரைக்கவேண்டும். இப்போர் இனி இவ்வண்ணம் தொடர இயலாது. ஒவ்வொருவரும் இழப்பனவற்றின் உச்சத்தை இழந்திருக்கிறோம். இன்று போர்க்களத்தில் நான் அடைந்த அவைச்சிறுமைக்குப்பின் இனி ஒரு துன்பத்தை இப்புவியிலிருந்து பெற இயலாது" என்றார். சலிப்புடன் கைவீசி "போதும். நான் துறந்து செல்கிறேன். மந்தனும் அவ்வாறே உரைக்கிறான். போரைத் தொடர்வதற்கு இந்த அவையில் அமர்ந்திருக்கும் எவருக்கும் விருப்பமில்லை" என்றார்.

யுதிஷ்டிரனை ஒருகணம் நோக்கிவிட்டு இளைய யாதவர் திரும்பி அர்ஜுனனை பார்த்தார். "கூறுக பார்த்தா, உன் எண்ணமென்ன? இப்போரை தொடர்ந்து நடத்த விரும்புகிறாயா? அன்றி முடித்துக்கொள்ளலாமா?" என்றார். அர்ஜுனன் "இப்போர் தொடங்குவதற்கு முன்பிருந்த உளநிலையை சென்றடைந்துவிட்டேன். இது என் போர் அல்ல, என் கடன் மட்டுமே. போரும் போரின்மையும் எனக்கு எவ்வகையிலும் வேறுபாடானவை அல்ல" என்றான்.

யுதிஷ்டிரன் "பிறகென்ன? எங்கள் ஐவருக்கும் இருந்த வஞ்சத்தை தீர்க்கும் பொருட்டும் எங்களுக்குரிய நிலத்தை பெறும்பொருட்டுமல்லவா இப்போர் தொடங்கியது? எங்களுக்கு வஞ்சமில்லை. எங்களுக்கு நிலம் வேண்டியதுமில்லை. ஐவரும் இப்போரை இப்போதே முடித்துக்கொள்ள விரும்புகிறோம். நாங்கள் முன்பு உனக்களித்த சொல்லே எஞ்சியிருப்பது. அதிலிருந்து எங்களை விடுவிக்கும் பொறுப்பு

உனக்குள்ளது. கூறுக, இப்போரை இங்கு நிறுத்திவிடலாம்" என்றார்.

"ஆம், இனி மற்றொன்று எனக்கும் சொல்வதற்கில்லை. இங்கு இப்போரை நிறுத்திவிடலாம்" என்று யுதிஷ்டிரனை நோக்கி இளைய யாதவர் சொன்னார். அவை நோக்கி புன்னகையுடன் விழி சுழற்றியபின் "உங்கள் அனைவரையும் நீங்கள் எனக்கு அளித்த சொல்லிலிருந்து விடுவிக்கிறேன். நீங்கள் உங்கள் முடிவுகளை எடுக்கலாம்" என்றார். முகம் மலர்ந்து பரபரப்பு கொண்ட யுதிஷ்டிரன் "பிறகென்ன? அமைச்சரை அழையுங்கள். போர் நிறுத்த ஓலை எழுதப்படட்டும். நான் சாத்திடுகிறேன். இன்றே அது படைமுகப்பில் முரசொலியாக முழங்கட்டும். புலரிக்குள் நமது படைகள் குருக்ஷேத்ரத்திலிருந்து விலகிச் செல்லட்டும்" என்றார்.

உளஎழுச்சியுடன் எழுந்து கூவினார். "நமக்கு நிலம் வேண்டியதில்லை. பாரதவர்ஷம் பெரியது. எங்கு காலூன்ற இடம் கிடைக்குமோ அங்கு தங்குவோம். இயற்றிய பிழைகள் அனைத்திற்கும் பழியீடு செய்வோம். ஈட்டிக்கொண்ட சிறுமைகள் அனைத்தையும் நற்செயல்களால் துளித்துளியாக மறப்போம். குருக்ஷேத்ரம் என்ற நிகழவே இல்லையென்று எப்போது நம் உள்ளம் எண்ணுகிறதோ அன்று விடுதலை பெறுவோம்." திருஷ்டத்யும்னனும் உளமெழுந்தான். "சொல் மந்தா, நீ எண்ணுவதென்ன?" என்றார் யுதிஷ்டிரன்.

"ஆணை பிறப்பிக்கலாம், போதும் இப்போர்" என்று பீமன் சொன்னான். சகதேவன் எழுந்து "இது அறுதி முடிவென்றால் நான் ஓலை நாயகத்தை அழைக்கிறேன்" என்றான். "ஆம், அறுதி முடிவு. இதற்கு இனி மாற்றுச்சொல்லில்லை" என்றார் யுதிஷ்டிரன். அவை ஒன்றும் சொல்லாது அமர்ந்திருக்க

சகதேவன் “நான் ஆணைகளை அமைக்கிறேன்” என்றபடி வாயில் நோக்கி சென்றான். அவையில் எழுந்த சிலிர்ப்பை உணரமுடிந்தது. விழிகள் மின்னிக்கொண்டிருந்தன. “இப்போர் இதோ முடிந்தது” என்றார் யுதிஷ்டிரன்.

“ஆம், உங்கள் போர் முடிந்தது” என்று இளைய யாதவர் சொன்னார். “எனது போர் ஒயவில்லை. குருக்ஷேத்ரம் எனது களம். இப்போரை நான் நிகழ்த்துவேன். என்னுடன் எவர் நின்றிருக்கப் போகிறீர்கள்?” சாத்யகி “தங்களுடன் எப்போதும் நின்றிருப்பவன் நான்” என்றான். அர்ஜுனன் “எனக்கும் பிறிதொரு சொல் இல்லை” என்றான். பீமன் “ஆம், யாதவரே இனி உயிர் மட்டுமே உள்ளது. அதையும் உங்களுக்கு அளிப்பதே எனக்கு உகந்ததென்று தோன்றுகிறது” என்றான். நகுலனும் சகதேவனும் தயங்கி நிற்க திருஷ்டத்யும்னன் அவர்களை மாறி மாறி பார்த்தான்.

யுதிஷ்டிரன் “என்ன சொல்கிறீர்கள்? இதென்ன பித்து?” என்றார். “உங்கள் போரை நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள். நான் தொடங்குகிறேன்” என்றார் இளைய யாதவர். “அறிக, மறுசொல் இல்லாத வெற்றி ஒன்றிற்குக் கீழாக எதையுமே என்னால் ஏற்க இயலாது. இது என் போர்...” சினத்தில் உதடுகள் நடுங்க “இத்தனை அழிவுக்குப் பின்னருமா?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “ஆம், இத்தனை அழிவுக்குப் பின்னரும்தான்” என்றார் இளைய யாதவர். “புதிய உலகை சமைக்கும் சொற்கள் அனைத்துமே பழைய உலகை முற்றழித்துவிட்டே நிறுவப்பட்டிருக்கின்றன. என் வேதத்தின் ஒவ்வொரு சொல்லும் கடலென அலைபெறும் குருதியால் நிறுவப்படவிருக்கிறது.”

“வேறெதன் பொருட்டுமல்ல, என் சொல் மாற்றின்றி நிலைகொள்வதற்காகவே இப்போர். இம்முற்றழிவுதான் என்

சொல்லை பிறிதிலா வல்லமை கொள்ளச்செய்கிறது. இனி இச்சொல்லை அகற்றவேண்டுமென்றால் இதற்கிணையான குருதி இங்கு ஒழுக்கப்படவேண்டுமென்று இதோ நிறுவப்பட்டுள்ளது. இனி யுகங்கள் தோறும் இச்சொல்லே இப்புவியை ஆளும். அதன் பொருட்டே நிகழ்கிறது குருக்ஷேத்ரம்" என்றபோது அவர் குரல் ஒலிக்கிறதா என்றே ஐயம் எழுந்தது. திருஷ்டத்யும்னன் மெய்ப்புகொண்டான். "குருக்ஷேத்ரத்தின் நினைவின்றி இனி எங்கும் எவரும் என் சொற்களை பயிலப்போவதில்லை. இது நாராயண வேதம்" என்றார் இளைய யாதவர்.

வெண்முரசு விவாதங்கள்

இருட்கனி - 39

யுதிஷ்டிரன் தளர்ந்த குரலில் "பிறகென்ன? உன் விருப்பப்படி நிகழட்டும். நீ எண்ணுமிடத்தை சென்று எய்துக அனைத்தும்!" என்றார். இளைய யாதவர் புன்னகை மாறாமுகத்துடன் "அதுவே நிகழும்" என்றார். மீண்டும் அவையில் ஆழ்ந்த அமைதி நிலவியது. அர்ஜுனன் திருஷ்டத்யும்னனிடம் "பாஞ்சாலரே, நாளைக்கான படைசூழ்கைகளை வகுத்துள்ளீர்களா?" என்றான். "நான் எதையும் இதுவரை எண்ணவில்லை. படைசூழ்கை என ஒன்று இனி பெரிதாக தேவைப்படும் என்றும் தோன்றவில்லை. நம் படைகள் நம் விழிவட்டத்திற்குள்ளேயே இப்போது திரண்டுள்ளன" என்றான்.

“ஆனால்...” என சாத்யகி சொல்ல திருஷ்டத்யும்னன் மறித்து “ஒரு படைசூழ்கை எப்படியேனும் தேவை. வெறும் திரளாக நாம் போருக்கெழ இயலாது. எனவே நாளை எது தேவையோ அதை இயற்றுவோம். எளிய படைசூழ்கை ஒன்றே போதும்” என்றான். “நாளை அவர்கள் படைக்கு எழுவார்களா?” என்று சிகண்டி கேட்டார். யுதிஷ்டிரன் “ஆம், நானும் அவ்வாறு ஐயம் கொள்கிறேன். இளையோனை இழந்த பின்னர் துரியோதனன் இவ்வுலகில் எதையும் வேண்டாதவனாக ஆகியிருக்கக்கூடும். இன்றிரவு அவனுக்கு தன்னினைவே இருக்க வாய்ப்பில்லை” என்றார்.

பீமன் “இன்று அவன் பொருட்டு அவன் இளையோன் முடிவெடுப்பான். நாளை அம்முடிவை அவனே எடுப்பான். ஐயம் வேண்டியதில்லை, நாளை புலரியில் மும்மடங்கு வஞ்சத்துடன் துரியோதனன் களத்திற்கு வருவான். பின்னடைவது அவன் இயல்பல்ல. எந்நிலையிலும் ஒருதுளியும் அவன் இயல்பு குறைபடாது” என்றான். யுதிஷ்டிரன் “எனில் உளம் தளர்வது நாம் மட்டும்தானா? நம்பிக்கையிழப்பதும் இங்கு மட்டும்தானா?” என்றார்.

திருஷ்டத்யும்னன் அப்பேச்சைத் தவிர்த்து “படைசூழ்கையை வகுத்து நாளை காலை அரசரின் அவைக்கு கொண்டு வருகிறேன். மற்றபடி இன்று நாம் முடிவெடுக்க வேண்டியது ஏதுமில்லை. நாளை போருக்கு எழுகிறோமெனில் அதற்கான ஆணையை மட்டும் அரசர் அளித்தால் போதும்” என்றான். “போருக்கெழுகிறோம். அம்முடிவை அவர் எடுத்துவிட்டார். மறுமுடிவை எடுக்குமிடத்தில் நானில்லை” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “எனில் இந்த அவை கலையட்டும். அனைவருமே

உளம் சோர்ந்திருக்கிறோம். அதற்கு மேலாக உடல் சோர்ந்திருக்கிறோம்" என்றபடி பீமன் எழுந்தான்.

யுதிஷ்டிரன் கைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து எதையோ கசக்குவதுபோல அசைத்துக்கொண்டிருந்தார். ஒருகணம் இருக்கையிலிருந்து ஒரு சொல்லுடன் எழப்போவதுபோல் தோன்றினார். அவர் உடலில் வந்த அந்த மெய்ப்பாட்டை அவையினர் அனைவரும் நோக்கினர். யுதிஷ்டிரனின் கண்கள் மாறுபட்டன. பகைமையும் சினமும் தெரிய "இளையோனே, நான் உன்னிடம் ஒன்று கேட்கவேண்டும். இன்று அக்களத்தில் சூதன் மகன் என்னை இழிவு செய்தபோது நீ எங்கிருந்தாய்?" என்றார். அர்ஜுனன் திடுக்கிட்டு திரும்பி நோக்கி "தாங்கள் அறிவீர்கள்" என்றான். வஞ்சம் எரியும் முகத்துடன் "நான் அறியேன், சொல்க!" என்றார் யுதிஷ்டிரன். அர்ஜுனன் முகத்தில் சினம் எழுந்தது. "நான் அவன் அம்புகளால் புண்பட்டேன். என் உடலை சீரமைத்து மீண்டு வருவதற்குள் தாங்கள் அவன்முன் சென்றீர்" என்றான்.

"எனில் நீ என்னை அறிவுறுத்தியிருக்கவேண்டும். அவன்முன் செல்ல வேண்டாம் என்று எனக்கும் இளையோருக்கும் மைந்தருக்கும் அறிவிப்பு அளித்திருக்கவேண்டும். உன்னால் எதிர்கொள்ள முடியாதவனை நான் எதிர்த்து நின்று போரிட இயலாதென்று நீ அறிவாய். உன்னிடமிருந்து அவ்வாறு அறிவிப்பு ஏதேனும் எழுந்ததா என்ன?" அர்ஜுனன் சிலகணங்கள் தன்னை தொகுத்துக்கொண்டு "நீங்கள் அவ்வாறு உங்கள் எல்லையைக் கடந்து சென்று அவனை எதிர்கொள்வீர்கள் என்று நான் எண்ணவில்லை" என்றான். யுதிஷ்டிரன் பற்களைக் கடித்தபடி தலையை முன் நீட்டி "என் எல்லை என்று எதை சொல்கிறாய்?" என்றார். அர்ஜுனன் தன் கட்டுப்பாட்டை

இழப்பது தெரிந்தது. "உங்கள் ஆற்றலின் எல்லை. துணிவின் எல்லை" என்று ஒவ்வாமையுடன் சொன்னான்.

"என் கோழைத்தனத்தை என்கிறாயா? உயிரச்சத்தை என்கிறாயா?" என்றார் யுதிஷ்டிரன். "அது உங்கள் சொற்கள்" என்றான் அர்ஜுனன் வெறுப்புடன். "என்ன எண்ணினாய்? நான் அஞ்சி ஒடுங்கியிருப்பேன், ஆகவே எச்சரிக்கவேண்டாமென்று அல்லவா?" என்றபோது யுதிஷ்டிரன் குரல் எழுந்தது. "அத்தருணத்தில் எதை செய்ய இயலுமோ அது செய்யப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களை உணர்ந்து போரிடவேண்டும்" என்றான் அர்ஜுனன். "என்னை நான் உணரவில்லை. ஏனெனில் என்னை நான் மதிப்பிட்டதில்லை. உன்னையும் மந்தனையும் சேர்த்தே என்னை எப்போதும் மதிப்பிட்டிருக்கிறேன். அது பெரும்பிழையென்று இப்போது உணர்கிறேன். களத்தில் நான் அவனால் சிறுமை செய்யப்படவில்லை, உன்னால் சிறுமை செய்யப்பட்டேன். சொல், நீ அவன் முன் என்னை திட்டமிட்டே செலுத்தினாய் அல்லவா?" என்றார் யுதிஷ்டிரன்.

அர்ஜுனன் பதறி எழுந்து "ஏன் நான் அதை செய்ய வேண்டும்? என்ன சொல்கிறீர்?" என்று கேட்டான். "நான் அவன் முன் சென்று நிற்பேன் என்று நீ உணர்ந்திருந்தாய். என்னை தடுக்க வேண்டாமென்று எண்ணினாய். இந்தக் களத்தில் இத்தனை பேர் சூழ்ந்திருக்க உன்னால் பொய்யுரைக்க இயலுமெனில் சொல், நீ அறிந்திருந்தாய் அல்லவா?" என்றார் யுதிஷ்டிரன். என்ன செய்வதென்று அறியாமல் உடல் தவிக்க "எவர் முன்னும் என்னை நிறுவவேண்டிய தேவை எனக்கில்லை. உங்களை முகப்புக் களத்தில் நிறுத்தவேண்டும் என்றிருந்தால் அது முதல் நாள் பீஷ்மரின் முன்னாலேயே நிகழ்ந்திருக்கும்" என்றான். "அவர் என்னை சிறுமை செய்ய மாட்டார்.

துரோணரும் என்னை சிறுமை செய்ய மாட்டார்" என்றார் யுதிஷ்டிரன். "துரோணர் உங்களை பல முறை பிடித்து இழுத்துச் செல்லமுயன்றார். அவர் தேர்க்காலில் கட்டி களமெங்கும் அலைக்கழிக்கப்பட்டிருப்பீர்" என்றான் அர்ஜுனன்.

"ஒருபோதும் அவர் அதை செய்யமாட்டார். என்னை பணயம் கொண்டு இப்போரை நிறுத்த முயன்றிருப்பார். இந்தச் சூதன்மகனின் வஞ்சம் அவ்வாறல்ல. என்மேல் பொறாமை கொண்டவன். நாளெல்லாம் என் மேல் வஞ்சத்துடன் வாழ்பவன் அவன். அவ்வஞ்சத்தை அஞ்சி அஞ்சி நான் வாழ்ந்தேன். இங்குள்ள அனைவருக்கும் தெரியும், இப்போரென்பது அவன் என் மேல் கொண்ட வஞ்சத்திற்கும் நான் அவன் மேல் கொண்ட அச்சத்திற்குமான மோதல் என்று. அதை நீயும் அறிந்திருந்தாய். அவன் தருணம் பார்த்திருக்கிறான் என்று நன்குணர்ந்து அவன் முன் கொண்டு நிறுத்தினாய். நீயும் தருணம் பார்த்திருந்தாய். கீழ்மகனே, என் மணிமுடியை அவன் களத்தில் இட்டு எற்றி விளையாடினான் என்று அறிவாயா நீ?" என்றார் யுதிஷ்டிரன்.

அர்ஜுனன் தத்தளிப்புடன் "இதை நாம் இப்போது ஏன் பேசவேண்டும்?" என்றான். "இதை இப்போது பேசியாகவேண்டும். இந்தப் போர் என் மணிமுடிக்காக. என் மூதாதையர் மணிமுடி என நான் தலையில் சூடியதை காக்கும்பொருட்டே இந்தப்படை, இதை நடத்தும் நீங்கள். அந்த மணிமுடியை அவன் நெற்றென குப்பையென களத்தில் விளையாடினான். பல்லாயிரம் விழிகள் அதை பார்த்தன. அதன் மதிப்பென்ன என்று அவன் அவர்களுக்கு காட்டினான். அதன் மேல் காறி உமிழ்ந்துவிட்டுச் சென்றான். அல்ல, அது என்மேல் இக்குடியின் மேல், மூதாதையரின் மேல், என் தெய்வங்கள் மேல் விழுந்த

எச்சில். ஒரு கணத்தில் அது வெறும் அணியாக ஆகியது. உலோகப்பொருளாக உருமாறியது. குப்பையாக நிலத்தில் கிடந்தது."

"அதை எற்றி விளையாடியவை அவன் செலுத்திய அம்புகளெனினும் அதில் உன் விழைவும் இருந்தது. நீயும் அதை செய்தாய்" என யுதிஷ்டிரன் கூவினார். "அவை நின்று இல்லை என்று சொல்லாதே. உன் விழிகளை நான் நன்கறிவேன். நான் மணிமுடி சூடிக்கொண்ட ஒவ்வொரு முறையும் உன் விழிகளை நான் பார்ப்பதுண்டு. ஏனெனில் அங்கு ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாத ஒன்றை நான் பார்த்திருக்கிறேன். அது சிலபோது விழைவு, சிலபோது ஏளனம். சிலபோது வஞ்சம். ஏனென்றால் வில்திறனால் விழைவால் என் அரியணையில் அமரத் தகுதியானவன் நீ. நீ துறந்த அரியணையில் அமர்ந்திருப்பவன் நான் என்றே நீ எப்போதும் எண்ணிக்கொண்டிருக்கிறாய்."

"ஆம், நீ ஒழிந்த மணிமுடியை சூடியவன் அல்லவா நான்? அந்த மணிமுடியை அவன் எற்றி விளையாடும்போது உன் அகம் மகிழ்ந்தது அதனால்தான். உன் காலாலும் அந்த மணிமுடியை நீ எற்றினாய். அது இப்போதல்ல, இந்தக்களத்திலல்ல, முன்பும் பலமுறை அதை செய்திருக்கிறாய். உபப்பிலாவ்யத்தில் நான் மணிமுடி சூடியபோதே!" என்றார் யுதிஷ்டிரன். அவர் விழிகள் கலங்கி முகம் இழுபட்டு பற்கள் வெறித்திருந்தன. இரு கைகளும் தொடையில் ஒட்டியிருந்தன. அர்ஜுனன் நடுங்கிக்கொண்டிருந்தான். "இங்கு எதை நிறுவ விரும்புகிறீர்? நான் உங்கள் அரியணையை விரும்பும் வீணன் என்று நிறுவி எதை அடையவிருக்கிறீர்?" என்று தன்னை முற்றிலும் திரட்டிக்கொண்டு இறுகிய குரலில் கேட்டான். ஆனால் அவன்

இருகைகளும் விரல் சுருட்டி உடலோடு சேர்க்கப்பட்டிருந்தன. அவன் இடத்தொடை நடுங்கிக்கொண்டிருந்தது.

திருஷ்டத்யும்னன் எழுந்து யுதிஷ்டிரனை தடுக்க எண்ணினான். ஆனால் தன் சொற்களை யுதிஷ்டிரன் செவி கொள்ள மாட்டார் என்று அறிந்திருந்தான். அப்போது அவரிடம் சொல்லும் எதையும் அவர் வஞ்சமென்று இழிவுபடுத்தலென்றுமே புரிந்துகொள்வார். அத்தருணத்தில் அங்கு பேசுவதற்கு எழ வேண்டியவர் குந்திபோஜர் மட்டுமே. அவர் அங்கு நிகழ்வதென்ன என்று அறியாதவர்போல் மலைத்த விழிகளுடன் அமர்ந்திருந்தார். இளைய யாதவர் ஒரு சொல்லில் அத்தருணத்தை நிறுத்திருக்க முடியும். அவர் பேசியாக வேண்டும். தவிப்புடன் அவன் இளைய யாதவரை பார்த்தான். அவர் அங்கிலாதவர்போல் விழிசரித்து உதடுகளில் நிறைந்த புன்னகையுடன் அமர்ந்திருந்தார். அது புன்னகைதானா? ஒருவேளை முக அமைப்பால் அந்தத் தோற்றம் எழுகிறதா? அல்லது தன்னைத்தானே ஓர் ஆலயச்சிலையாக ஆக்கிக்கொள்கிறாரா? தசையில் எழுந்த கற்சிலை. தொன்மையான தெய்வமொன்றின் சிலை.

திருஷ்டத்யும்னன் எழுந்து கைதூக்கி "நிறுத்துங்கள்! போதும் நிறுத்துங்கள்!" என்று கூச்சலிட விழைந்தான். "இங்கு போருக்குமுன் நம்மை நாம் கடித்து கிழித்துக்கொள்ள விரும்புகிறோமா? இவ்வளவு வஞ்சத்தை திரட்டியபின் எங்கு போய் எதிரியைத் தேடுவது? போர் நம்மை அறிவிலிகளாக்கிவிட்டது. போர் நம்மை வீணர்களாகவும் கீழ்மக்களாகவும் ஆக்கிக்கொண்டிருக்கிறது. போதும்" என்று தன்னுள் குரலெழுப்பினான். உடல் தளர்ந்து விழி மட்டுமாக பீடத்தில் அமர்ந்திருந்தான். அவன் தொடையும்

நடுங்கிக்கொண்டிருந்தது. யுதிஷ்டிரன் தன் கையால் தலையில் மும்முறை அறைந்தார். "இன்று இந்தப் பீடத்தில் அமர்ந்திருக்கையில் தெய்வங்களாலும் கைவிடப்பட்டவனாக உணர்கிறேன். என்னைவிடக் கீழானவன் எவனுமில்லை இவ்வுலகில்" என்று விம்மியழுதார். சீறலோசையுடன் அவர் மூச்சு ஒலித்தது. பின் கைகளைக் கூப்பியபடி முதுமகன்களுக்குரிய நடுங்கும் குரலில் சொன்னார்.

"அச்சூதனை அஞ்சாத ஒருநாளில்லை. அவனை ஏன் அஞ்சுகிறேன் என்று பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு. அவனை நான் அஞ்சியது அவன் வில்லாற்றலால் அல்ல. எனது மணிமுடியை அவன் பறித்துவிடுவான் என்றோ அரியணையில் அவன் அமர்வான் என்றோ அல்ல. எனது அரசமகள் அவன்மீது கொண்ட நுண்காமத்தை நான் அறிவேன். அதையும் நான் அஞ்சவில்லை. பெண்களின் உள்ளம் கட்டற்றது. அவர்களின் கருபீடம் விண்துழாவிக்கொண்டிருக்கிறதென்பதை அறிந்த பின்பே முதற்பெண்ணை அறிந்தேன். நான் அஞ்சியது பிறிதொன்று. அவனில் எழும் ஒரு பெருவஞ்சத்தை. அது இந்த மண்ணில் அவையமர்ந்து, கோல் கைகொண்டு, மணிமுடி அணிந்து, குலம்புரந்த அனைத்து அரசர்களுக்கும் எதிராக எழுந்த சூதர்களின் வஞ்சம். தொழும்பர்களின், உரிமைமாக்களின், அடியாளர்களின், நிஷாதர்களின், நாகர்களின், அசுரர்களின் அரக்கர்களின் வஞ்சம். அதன் முன் நிற்க அஞ்சினேன். அதைத்தான் ஒவ்வொரு நாளும் எண்ணி எண்ணி ஒழிந்தேன். அதன் முன் என்னை கொண்டு நிறுத்தினாய்."

"ஏனெனில் நீ நாகர்களின் பெண்ணை மணந்தவன். அவனைப்போலவே நீயும் நாகர்களுக்கு கடன்பட்டவன். உன்

குடிலுக்குள் நேற்றிரவு ஒரு நாகன் வந்து சென்றிருந்தான் என்றால் நான் வியப்படையமாட்டேன்" என்றார் யுதிஷ்டிரன். அர்ஜுனன் "மூத்தவரே, இந்த உணர்வுக் கொந்தளிப்புகளுக்கு எந்தப் பொருளுமில்லை. இன்று நிகழ்ந்தது போர்க்களத்தில் நிகழக்கூடியது. தங்களுக்கு முன்னரே மூத்தவர் பீமன் அவன் கையால் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார். இறப்புக்கு நிகரான சிறுமை கொண்டு இன்னும் உளம் தேறாதவராக வஞ்சம் திரட்டி இங்கு அமர்ந்திருக்கிறார். அவன் முன் பத்துமுறையேனும் நான் வில் தாழ்த்தி ஒழிந்தேன். புண்பட்டு தேரில் விழுந்தேன். நானும் இழிவுபடுத்தப்பட்டவனே. சொல்சொல்லென வஞ்சத்தை திரட்டிக்கொண்டிருப்பவனே" என்றான்.

யுதிஷ்டிரன் மீண்டும் உரத்தகுரலில் "எனில் ஏன் நீ என்னை அங்கு கொண்டு சென்று நிறுத்தினாய்? கீழ்மகனே, ஏன் அங்கு கொண்டு சென்று நிறுத்தினாய்?" என்றார். "நான் நிறுத்தவில்லை, உங்கள் எல்லை கடந்து நீங்கள் சென்றீர்கள்" என்றான் அர்ஜுனன். "எல்லை கடத்தல் எங்கும் இயல்வது. ஆனால் நான் எல்லை கடப்பவனல்ல. அங்கு நான் எல்லை கடக்கவுமில்லை. என் முன்னிருந்த கவசப்படைகள் அகன்றன. என் பின்னிருந்த படைகள் முன்னால் வந்தன. எனவே என்னால் நகர முடியாத நிலை ஏற்பட்டது. எனக்குக் காவலென நின்றிருந்தவர்கள் வில் பயிலாத என் இரு மைந்தர்கள். இதுபோல பாதுகாப்பற்றவனாக நான் எப்பொழுதுமே இருந்ததில்லை. எண்ணி நோக்குக! நீங்கள் எண்ணி நோக்குக!" என்று யுதிஷ்டிரன் எழுந்து அவை நோக்கி கைவீசினார். "நான் உந்தி முன்செலுத்தப்பட்டேன். காவலின்றி தள்ளிக்கொண்டு செல்லப்பட்டேன்."

“இந்தப்போரில் முதன்மைப் பகை எவனோ அவன் முன் நின்றிருக்கிறேன். இந்தப் போர் தொடங்கிய பின்பு ஒரு போதுமில்லாத பாதுகாப்பின்மையுடன் நான் அங்கு செல்ல நேர்ந்தது. அது தற்செயலா? இல்லை. அது எவருடைய சூழ்ச்சி? நான் கேட்கிறேன், எவருடைய சூழ்ச்சி அது?” சீற்றத்துடன் “நான் சூழ்ச்சி செய்தேன் என்கிறீரா?” என்று அர்ஜுனன் கேட்டான். “நீ சூழ்ச்சி செய்யவில்லை. உன்னிலிருந்து எழும் ஒன்று சூழ்ச்சி செய்தது. உன்னில் உறங்கியிருக்கும் அந்த நஞ்சு. அந்த நஞ்சு ஏன் என்று சொல்லவா?” என்றபடி தலையை நாகமென நீட்டியபடி யுதிஷ்டிரன் முன்னால் வந்தார். “போதும்! இதை இங்கு நிறுத்திக்கொள்வோம்” என்று பீமன் சொன்னான். “நிறுத்த வேண்டாம். இங்கு இதை பேசியாகவேண்டும். ஒருவேளை நாளையோ நாளை மறுநாளோ நாம் எவருமே உயிருடன் எஞ்சாமலாகலாம். அதற்குள் இச்சொற்களை பேசியாகவேண்டும். பேசாச்சொல்லுடன் விண்புகும் இழிநிலை எனக்கு ஏற்படக்கூடாது” என்று யுதிஷ்டிரன் கூச்சலிட்டார்.

“ஏனென்றால் நீ ஒரு பேடி. பேடி! பேடி! ஆம் பேடி நீ! என்னை எண்ணி பொறாமை கொண்டவன். நான் அரசனாக இருப்பதனால் மட்டுமல்ல” என்றபோது யுதிஷ்டிரனின் உதடுகள் சுருங்கின. “கணவனாக! ஆம் கணவனாக!” என்றார். “நிறுத்துங்கள், மூத்தவரே. என்ன பேச்சு இது” என்று சகதேவன் கூவினான். யுதிஷ்டிரன் நிலையழிந்து பித்தன்போல் ஆகிவிட்டிருந்தார். “அனைவரும் கேட்கட்டும். இங்கு சூழ்ந்திருக்கும் அத்தனை தெய்வங்களும் கேட்கட்டும். நீ அறிவாய், அவள் என்னை முதன்மையில் வைத்தது என் மணிமுடியினால் அன்று என. என் மெய்மையினால். நெஞ்சிலும் உடலிலும் நான் கொண்டுள்ள ஆண்மையினால்.”

“இழிமகனே, பேடியே, நீ கொண்டிருக்கும் அந்த வெல்லமுடியாத அம்புகள் அச்சூதனின் முன்பு வெறும் விளையாட்டுப் பொருட்கள். ஆனால் எங்கும் அடங்காத மெய்மை என்னிடமிருந்தது. அதை இக்களத்தில் தோற்கடித்தாக வேண்டும் என நீ திட்டமிட்டாய். என்றோ ஒரு நாள் நீ அவள் முன்னிலையில் அவ்வெண்ணத்தை அடைந்தாய். என்னை சிறுமை செய்ய வஞ்சம் கொண்டாய். என் மணிமுடியை எற்றி விளையாட வேண்டுமென விழைவு கொண்டாய். இன்று அதை செய்தாய்” என்றார் யுதிஷ்டிரன். “பேடியின் வஞ்சம் அது. நேர் நின்று வெல்லும் துணிவு ஒருபோதும் பேடிக்கு வருவதில்லை.”

அந்த எல்லைவரை அவர் செல்வார் என்று எவரும் எதிர்பார்க்காமையால் அவை திகைத்து உறைந்து அமர்ந்திருந்தது. நடுங்கி கால் தளர்ந்து பீடத்தில் அமர்ந்துவிட்டிருந்த அர்ஜுனன் தன் வில்லை கீழிருந்து எடுத்து ஓங்கியபடி பாய்ந்து முன்னால் சென்றான். “கீழ்மகனே! கீழ்மகனே! இச்சொற்களுக்காக இந்த அவையிலேயே உன்னைக் கொன்று இடாவிட்டால நான் மானுடன் அல்ல! ஆம், உன்னைக் கொல்லாவிட்டால் நான் பேடியே!” என்று கூவினான். பீமன் குறுக்கே புகுந்து இருகைகளாலும் அர்ஜுனனைப் பற்றி பின்னால் இழுத்தான். “விடுங்கள் என்னை! இன்று என்னைத் தடுப்பவர் எவரும் எனது எதிரிகளே” என்று அர்ஜுனன் கூவினான். “இதோ அரியணை அமர்ந்திருப்பவன் பேடி. இப்பேடியின் அச்சத்தால் கீழ்மையால் நாம் சிறுமையடைந்தோம். இவனை கொன்றேயாகவேண்டும்.”

அவனே மெல்ல தளர்ந்து மூச்சிரைக்க குரல்தழைந்தான். “இவன்பொருட்டா நாம் போரிடுகிறோம்?. இப்போர் எவருக்காக?

தன் விழைவையும் அச்சத்தையும் மறைத்துக்கொண்டு அறம் பேசி அமர்ந்திருக்கும் இந்தக் கீழ்மகன் நம்மீது சுமத்தியது இது. இன்று இவனைக் கொல்லாமல் அவைவிட்டுச் செல்லமாட்டேன்." உறுதியான குரலில் "அதற்குமுன் என்னை நீ கொல்லலாம்" என்று பீமன் சொன்னான். "நான் படைக்கலம் ஏந்தவில்லை. என் உடல் உன் முன் நின்றிருக்கிறது. கொன்றுவிட்டு கடந்துசென்று அவரை கொல்." பீமன் இருகைகளையும் விரித்து நிற்க அர்ஜுனனின் கை தளர்ந்தது. பின்னடைந்து தன் பீடத்தில் எடையுடன் விழுந்து ஓங்கி தரையில் அறைந்துகொண்டு "கீழ்மை! கீழ்மை! இதற்கப்பால் ஒரு கீழ்மையை என் மேல் எவரும் சுமத்துவதற்கில்லை" என்றான்.

யுதிஷ்டிரன் தளர்ந்து தானும் பீடத்தில் அமர்ந்தார். தான் சொன்னவை என்ன என்பதை அதன் பின்னரே அவர் உளம் கொள்வதுபோல் தோன்றியது. அந்த அவையில் நிகழ்ந்தவை மெய்தானா கொடுங்கனவா என்று அனைவரும் நோக்கி நின்றனர். அங்கிலாதவர்போல் இளைய யாதவர் இருந்தார். அர்ஜுனன் சட்டென்று அந்த அம்பை தன் கழுத்தை நோக்கி தூக்க பீமன் அக்கையை பிடித்துக்கொண்டான். முறுக்கி அந்த அம்பைப் பிடுங்கி அப்பால் வீசினான். மணியோசையுடன் அது தளத்தில் விழுந்தது. "அதற்கும் எனக்கு உரிமையில்லையா?" என அவன் உடைந்தகுரலில் கேட்டான். "இல்லை. இதேபோல நானும் அம்பை எடுத்தேன். என்னிடம் யுயுதானன் சொன்னான், அவ்வண்ணம் நான் இறந்தேன் எனில் அவ்விழிவைச் சூடியவனாக விண்புகுவேன் என்று. அவன் குருதி கண்டு நிகர் செய்து மீண்டாலொழிய எனக்கு மீட்பில்லை என்று. அதை இங்கு உனக்குச் சொல்கிறேன்" என்றான் பீமன்.

அர்ஜுனனின் தோளைத்தட்டி பீமன் சொன்னான் "இங்கு மூத்தவர் சொன்ன சொற்கள் அனைத்தையும் கடந்துபோகும் வழி ஒன்றே. நாளை கர்ணனை வெல்ல வேண்டும். களத்தில் அவன் குருதியை அள்ளி விண்ணுக்கு வீசவேண்டும். அங்கு வந்து நின்றிருக்கும் உன் தந்தை அறியட்டும், நீ வென்றுவிட்டாய் என்று. நீ வென்றாகவேண்டும். ஏனெனில் சென்றமுறை வென்றவன் கதிரோன் மைந்தன். நாளை கதிர் இருளட்டும், முற்றிருள் பரவட்டும்." யுதிஷ்டிரன் "இச்சொற்கள் ஒவ்வொன்றும் பொருளற்றவையாக இருக்கின்றன. எது வெற்றி, எது தோல்வி, எவருக்காக என்று எனக்கு புரியவில்லை. யாதவனே, என்னை எங்கு கொண்டு சென்று நிறுத்தியிருக்கிறாய்? சொல்க, என்னை எதுவாக ஆக்க நினைக்கிறாய்?" என்றார்.

திடுக்கிட்டவர்போல் விழித்த இளைய யாதவர் "ஒவ்வொருவரும் தங்கள் உணர்ச்சிகளை கொட்டிவிட்டீர்கள் என்றால் ஒழிந்த கலமென்றாவீர்கள். அதன் பின்னர் நான் சொல்வதை கோத்து முன்வைக்கலாம் என்று எண்ணினேன்" என்றார். "இதற்கப்பால் என்ன வெளிப்பட வேண்டியிருக்கிறது?" என்றான் அர்ஜுனன். சற்றே சிரித்தபடி "உமிழப்படும் நஞ்சு உடலுக்கு நன்று" என்று இளைய யாதவர் சொன்னார். "இன்னும் உங்கள் வஞ்சம் தீரவில்லையா? எங்களை கீழ்மக்களாக்கி விட்டீர்கள். எங்கள் கண்களிலேயே எங்களை பொருளற்றவர்களாக்கி நிறுத்திவிட்டீர்கள். இதற்கப்பால் நாங்கள் சென்றடையும் வெறுமை ஒன்றுண்டா என்ன?" என்று அர்ஜுனன் கேட்டான்.

"ஆம், இதற்கப்பாலும் பெருவெறுமை ஒன்றுண்டு. இன்று உங்கள் வெறுமையில் இத்தனை சொற்கள் எழுகின்றன. ஒரு

சொல்லும் எழாத வெறுமையும் உண்டு. அவ்வெறுமையில் ஒற்றைச்சொல் போதும், உங்களைத் திறந்து பிறிதொன்றைக் காட்ட" என்றார் இளைய யாதவர். விம்மலோசை கேட்டு அனைவரும் திரும்பிப்பார்க்க யுதிஷ்டிரன் தலையை கையால் தாங்கி தோள்குறுக்கி அழுதுகொண்டிருந்தார். அவையெங்கும் அமைதி நிலவியது. அங்கிருந்து எழுந்து செல்ல ஒவ்வொருவரும் விழைந்தனர். ஆனால் எவராலும் இருக்கையைவிட்டு அசைய இயலவில்லை. பெருந்துயர்களுக்கே உரிய ஈர்ப்பு அவர்களை அங்கு நிறுத்தியிருந்தது. பெருந்துயர்களில் உள்ளம் அதற்கும் அப்பாலென ஒன்றை எதிர்பார்க்கிறது. மேலும் பெருந்துயரை. அல்லது மீட்பை. அதை காணாமல் அதிலிருந்து விலகியோட இயல்வதில்லை.

திருஷ்டத்யும்னன் தன் உள்ளமும் உடலும் நடுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். விரல்களால் மேலாடையை பற்றியிருந்தான். மேலாடை ஆடிக்கொண்டிருப்பதை உணர்ந்து கைகளை ஒன்றின் மேல் ஒன்று கோத்து மார்பின்மேல் வைத்துக்கொண்டான். குளிரில் நடுங்குவதுபோல் மார்பின் மேலிருந்த அவன் கை நடுங்கியது. அவன் எவர் முகத்தையும் பார்க்கவில்லை. ஆனால் அனைத்து முகங்களும் ஒன்றுபோல் தோன்றின. அனைவரும் ஒன்றையே எண்ணிக்கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஓர் உணர்வுநிலையில் இருந்தனர். ஆயினும் கண்களின் விரிப்பும் முகத்தின் வலிப்பும் வாய்கள் இறுகி இருந்தமையும் அனைத்து முகங்களையும் ஒன்றென்று ஆக்கின.

பின்னர் ஒருகணத்தில் அனைவரும் உடல் தளர்ந்தனர். அவர்கள் அனைவரையும் இணைத்திருந்த ஒற்றைச்சரடு

அறுபட்டு விலகியது போல். யுதிஷ்டிரன் தளர்ந்து "தெய்வங்களே!" என்றார். பின்னர் எழுந்து பொதுவாக அவையை நோக்கி கைகூப்பிவிட்டு வெளியே நடந்தார். பிரதிவிந்தியனும் யௌதேயனும் அவருக்குப் பின்னால் சென்றனர். அர்ஜுனன் எழுந்து "பாஞ்சாலரே, அவை முடிவுப்படி ஆவன செய்யுங்கள். நாளை சந்திப்போம்" என்றபடி நடந்தான். மெல்ல அசைந்தெழுந்து ஒவ்வொருவராக விலகிச்செல்லச் தொடங்கினர். பீமன் கைகளைக்கட்டி தலைகுனிந்து அமர்ந்திருந்தான்.

இளைய யாதவர் எழுந்து வெளியே செல்வதைக்கண்டு திருஷ்டத்யும்னன் தானும் எழுந்து வலியில் இழுபட்டு அதிர்ந்த உடற்தசைகளைத் திரட்டி நடக்கும் விசையென மாற்றி ஒவ்வொரு அடியாக உந்தி அவருக்குப் பின்னால் சென்றான். அவன் நிழல் அவருக்கு முன்னால் விழுந்து மறிக்க அவர் நின்று திரும்பி அவனைப் பார்த்து புன்னகைத்தார். அவரிடம் என்ன கேட்க விழைந்தோம் என்பதை அவன் மறந்து நின்றான். "புண்பட்டிருக்கிறீர், பாஞ்சாலரே" என்று இளைய யாதவர் சொன்னார். "ஆம்" என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். இளைய யாதவர் மீண்டும் புன்னகைத்து "அதை எவ்வகையிலோ விழைகிறீர் அல்லவா?" என்றார்.

திடுக்கிட்டு, பின் புன்னகைத்து, சொல் பதறி "ஆம், நேற்று இரவு முழுக்க என்னிடமிருந்த பதற்றமும் துயரும் இன்றில்லை. நான் விடுதலைகொண்டிருக்கிறேன்" என்றான். "உடல்வலியால் அவற்றை நிகர் செய்துகொண்டீர் போலும்" என்று சொன்னபின் இளைய யாதவர் முன்னால் சென்றார். பீமன் எழுந்து வெளியே நடந்தான். அவனைத் தாண்டிச் செல்கையில் பீமன் உடலிலிருந்து அனல் வெம்மை எழுந்து தன்னை தொட்டுச்

செல்வதுபோல் திருஷ்டத்யும்னன் உணர்ந்தான். காய்ச்சல் கண்டவர்களின் உடலிலிருந்து எழும் வெம்மை அது. எதற்காக இங்கு நின்று இவ்வாறு தவிக்கிறோம் என்று அவன் குழம்பினான். சாத்யகியும் நகுலனும் சகதேவனும் வெளியேறினர். ஒழிந்த அவை அவனை நோக்கி சூழ்ந்திருந்தது.

அவன் மீண்டும் சற்று நேரம் அங்கிருக்க விரும்பினான். மெல்ல கைநீட்டி இருக்கையின் விளிம்பைப் பற்றி உடலைச் சாய்த்து அமர்ந்தான். பெருமூச்சுடன் தசைகளை இளக்கி உடலைத் தளர்த்தி கால்களை நீட்டிக்கொண்டான். கண்களை மூடிக்கொண்டு அங்கு நிகழ்ந்த அனைத்தையும் தன் உள்ளத்தில் ஓட்டத்தொடங்கினான். திடுக்கிட்டு விழித்துக்கொண்டு சூழ நோக்கினான். அது அவன் அறிந்த அவைதானா என்ற ஐயமேற்பட்டது. சற்று முன் அங்கு நிகழ்ந்த உணர்வு நாடகத்தில் ஒவ்வொருவரும் பிறிதொருவராக மாறியிருந்தார்கள். ஒவ்வொருவரும் அவர்கள் சொல்லக்கூடும் என்று எண்ணவே இயலாத சொற்களை கூறினார்கள். அவர்கள் ஆற்றக்கூடும் என எண்ணுவதன் எல்லை வரை சென்றார்கள். மெய்யாகவே ஒவ்வொருவரும் உள்ளூர இப்படித்தான் இருக்கிறார்களா? ஒவ்வொருவரும் பிறிதொருவர் மேல் உண்மையான மதிப்பில்லாதவர்கள்தானா?

இல்லை, இது பிறிதொரு அழுத்தம். ஒவ்வொரு உலோகமும் உருகுவதற்கு ஒரு வெப்ப நிலை உள்ளது. இன்று இச்சூளை அவ்வெப்பத்தை அடைந்துவிட்டது. அவ்வாறுதான் எனில் உருமாறாத மானுடரென்று எவரும் இப்புவியில் இல்லையா? அவன் இளைய யாதவரின் புன்னகையை நினைவுகூர்ந்தான். ஒருகணம் பெரும் சினம் எழுந்து அவன் உடலை விதிர்க்கச்

செய்தது. வயிற்றிலிருந்து அனலெழுந்து நாவை அடைந்தது. சில கணங்களுக்குப்பின் அது வடிந்து உடலெங்கும் வியர்வையும் மெல்லிய மயிர்ப்பும் எஞ்சியது. வெளியிலிருந்து வந்த குளிர்காற்று உடலைத்தொட மீண்டும் களைத்துச் சரிந்தான். "எந்தையே" என்று அவன் முனகிக்கொண்டான்.

இருட்கனி - 40

ஏழாவது களமான துலாவில் அமர்ந்திருந்த சமன் என்னும் சூதர் தன் முறை வந்ததை உணர்ந்து நீள்குழலை எடுத்து வாயில் பொருத்தி அதன் பன்னிரு துளைகளில் விரலோட்டி சுழன்று சுழன்றெழும் கூரிய ஓசையை எழுப்பி நிறுத்தி தன் மெல்லிய குரலை அதன் மீட்டலென தொடரச்செய்து சொல்லாக்கி, மொழியென விரித்து கதை சொல்லத் தொடங்கினார் "தோழரே கேளுங்கள், இது பதினேழாவது நாள் போரின் கதை."

முந்தைய நாள் இரவு முழுக்க ஓங்காது ஒழியாது குருக்ஷேத்ரத்தின் படைவிரிவின்மீது மென்மழை நின்றிருந்தது. அனைத்து கூரைப்பரப்புகளும் விளிம்புகள் உருகிச்சொட்டுவதுபோல் துளியுதிர்த்துக் கொண்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான பறவைகள் அலகால் நிலத்தைக் கொத்துவதுபோல் துளிவிழும் ஓசை எழுந்து கொண்டிருந்தது. யானைகள் அக்குளிரை விரும்பி உடலசைத்து, செவி வீசி, துதிக்கை சுழற்றி, இருளுக்குள் ததும்பிக்கொண்டிருந்தன. புரவிகள் தசை விதிர்த்து கால் மாற்றி துயின்றன.

கழுகுப்பாளைகளாலும், ஈச்சஓலைமுடைந்து உருவாக்கப்பட்ட பாய்களாலும், தோலாலும் செய்யப்பட்ட மூடுகைகளை தலைமேல் கவிழ்த்துக்கொண்டு, தோல்போர்வைகளையும் மரவுரிப்போர்வைகளையும் போர்த்தியபடி குந்தி அமர்ந்தும், சாய்ந்து கால்நீட்டியும் படைவீரர்கள் துயின்றனர். தரையிலிருந்து ஈரம் எழுந்து வந்தமையால் தரைப்பலகைகள் அமையாத எவரும் படுத்துத் துயில இயலவில்லை. அவர்கள் தொலைவிலிருந்து பாதையெனப் போடப்பட்ட பலகைகளை பெயர்த்துக்கொண்டு வந்தனர். உடைந்த தேர்களையும் தண்டுகளையும் சேர்த்து தீமூட்டி அதன்மேல் பலகை அமைத்து நனையாமல் காத்து எரிகாய்ந்தனர். படைகள் மிகமிகக் குறைந்துவிட்டிருந்தமையால் படைவீரர்களில் ஏராளமானவர்களுக்கு கூடாரங்கள் அமைந்தன.

அடுமனையாளர்கள் பின்னிரவிலேயே விழித்துக்கொண்டார்கள். அவர்களில் ஒருவர் வானை நோக்கி "இன்று பகல் கதிர்வன் எழுமென்று தோன்றவில்லை" என்றார். பிறிதொருவர் "அவ்வாறே நேற்றும் தோன்றியது. நேற்று பின்னுச்சிப் பொழுதில் கண்கூச ஒளி எழுந்தது கண்டோம்" என்றார். அடுமனைக்கலங்கள் மரங்களில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. அவையனைத்திலும் மழைநீர் கீழ்வளைவு விளிம்பில் தேங்கியிருந்தது. அவற்றைச் சுழற்றி கலங்களை கவிழ்த்துவிட்டு காதுகளில் வடம் புகுத்தி மூங்கிலுள் நுழைத்து இருவரும் நால்வரும் என அவற்றை தூக்கிக்கொண்டு சென்று அடுப்புகளின்மேல் வைத்தனர்.

அடுகலமே கூரையென்றாக, அடுப்புகளுக்குள் விறகை அடுக்கி அரக்கும் தேன்மெழுகும் இட்டு எரிமூட்டினர். மென்மழைக்குக்கீழே நெருப்பெழுந்தபோது சூழ்ந்திருந்த

நீர்ச்சரடுகள் அனைத்தும் தழலால் ஆனவைபோல் தோன்றின. “மழையை கொதிக்க வைத்துவிடலாம் போலிருக்கிறது” என்று ஒருவர் சொன்னார். பிறிதொருவர் “இசைச்சூதர் ஏன் அடுதொழிலுக்கு வருகிறீர்? யாழ் நரம்பு அறுந்துவிட்டதோ?” என்று அவரை நோக்கி ஏளனம் செய்தார். “அவர் அன்னை விறலி”என்றார் இன்னொருவர்.

சூதர்கள் ஒவ்வொருவராக எழுந்து வந்தனர். முகம் கழுவி கைகால் தூய்மை செய்து கிழக்கு நோக்கி வணங்கிவிட்டு தங்கள் பணிகளை தொடர்ந்தனர். களஞ்சிய அறைக்குச் சென்ற சூதர்கள் அங்கிருந்த முது சூதரிடம் “இன்று ஐந்திலொரு அகெஷளகிணி வீரர்கள் இருப்பார்கள் என்று தோன்றுகிறது” என்றனர். முதுசூதர் வாயிலிருந்த வெற்றிலைச் சாறை எட்டி அப்பால் உமிழ்ந்து மரவுரி ஒன்றால் சுருங்கிய உதடுகளை துடைத்தபின் “அது இங்கிருந்து நோக்கும்போது தெரிகிறது. புலரிக்கொம்பு ஒலிக்கும்போது இவர்களில் எத்தனை பேர் எழுவார்கள் என்று எண்ணுகிறீர்? எண்ணிக்கொள்க, பாதி கூட இருக்காது! இந்த மழையில் நனைந்து உயிர் விடும் நல்லூழ் அமைந்தவர்கள் பலர் இருப்பார்கள்” என்றார்.

“அதை நாம் அறிய வேண்டியதில்லை. போருக்குச் செல்பவர்களுக்கு உணவு போதாமலாகக்கூடாது. எஞ்சியதை மாலையில் அளிப்போம்” என்றார் ஒருவர். “நான் அளிக்க மாட்டேன் என்று சொல்லவில்லை. சொல்லிப்பார்த்தேன்” என்றபின் தன் மரப்பட்டை ஏட்டில் மைதொட்டு கூலக்கணக்குகளை எழுதி அதை பிறிதொரு ஓலையில் பார்த்து எழுதி அதை சூதர்களிடம் அளித்தார். சூதர்கள் அவற்றை தங்களுக்குள் பிரித்துக்கொண்டனர். ஒவ்வொருவரும் தங்களைத் தொடர்ந்து வந்து நின்றிருந்த கூலவண்டிகளை

நோக்கி கையசைத்தனர். அவற்றை ஓட்டிவந்த ஏவலர்கள் அச்சூதர்களின் கையசைவுக்கு ஏற்ப பிரிந்து களஞ்சியவாயில்களை நோக்கி சென்றனர்.

தாழ்வான சுவர்களின்மேல் பனையோலைக் கூரையிட்டு அமைக்கப்பட்டிருந்த களஞ்சிய நிரைகள் தோளோடு தோள்தொட்டு இரு புறமும் நிரைவகுத்தன. அவற்றின் நடுவே செல்வதற்கும் வருவதற்குமான மரப்பட்டை சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. எண்ணைப்பந்தங்களின் சுடர்நிரைகள் பெருநகர்த்தெரு என எண்ணச்செய்தன. அனைத்து களஞ்சியங்களுக்கு முன்னும் சிறிய கமுகுப்பாளைக் கூரையிட்ட காவல்மாடத்தில் நெய்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இரு காவலர்கள் அரைத்துயிலில் வேலுடன் அமர்ந்திருந்தனர். அவர்கள் தோல்தைத்து உருவாக்கபப்ட்ட மழை மூடிகளை தலையிலணிந்திருந்தனர். அழுத்திய துயிலில் அவர்கள் குனிந்திருந்தமையால் ஈரத்தோல்பரப்பில் கருமை மின்ன ஆமைகள்போல் தோன்றினர்.

ஓலைகளின்படி ஒவ்வொரு சூதரும் களஞ்சியங்களின் முன் சென்று நின்று அவர்களைக் கூவி எழுப்பினர். துயில் கலைந்து எழுந்த வீரர்கள் "என்ன... என்ன நிகழ்ந்தது?" என்றனர். சூதர்கள் "பொழுது விடியப்போகிறது. பிறிதொரு நாள் போர், வேறென்ன?" என்றனர். வாயைத் துடைத்தபடி "சற்று முன்னர்தானே இருட்டியது" என்று ஒரு காவலர் சொன்னார். "நற்துயில்! இப்படி போர்க்களத்தில் துயில்வதற்கும் ஒரு தனிப்பயிற்சி இருக்கவேண்டும்" என்றார் ஒரு சூதர். "வந்து அமர்ந்து பாரும், தெரியும்... நான் படுத்துத் துயின்று பன்னிருநாட்கள் ஆகின்றன" என்றார் காவலர்.

பெருமூச்சுடன் வேலை எடுத்துக்கொண்டு சென்று களஞ்சியத்தின் தாழைத் திறந்து கதவை விலக்கினார் காவலர். சூதர்கள் ஆணையிட ஏவலர் உள்ளே சென்று பனைநாரும் ஓலையும்கொண்டு முடைந்து உருவாக்கிய கூலமூட்டைகளை தூக்கிக்கொண்டு வந்து வண்டிகளில் ஏற்றினர். முதிய காவலர் ஒருவர் "இன்னும் எத்தனை நாளுக்கு இக்கூலம் நிற்கும், சூதரே?" என்றார். "எண்ணி எண்ணி சமைத்தால் இன்றும் நாளையும். நாளை மறுநாள் இவ்வண்ணமே போர் நிகழுமெனில் வெறும் வயிற்றுடன்தான் போருக்கெழ வேண்டியிருக்கும்" என்றார் ஒரு சூதர்.

அப்பால் நின்ற முதிய சூதர் "இன்று ஒருநாள் அனைவரும் நிறைவுற்று உண்ணவே அன்னம் இருக்குமென்று தோன்றவில்லை. அன்னத்தை குறைத்து ஊனைக்கூட்டும்படி தலைமை அடுமனையாளரின் ஆணை" என்றார். அப்பால் வண்டிகளில் கூலங்களை ஏற்றிக்கொண்டிருந்த இன்னொரு சூதர் ஏதோ சொல்ல பிறிதொரு சூதன் உரக்க நகைத்தான். "என்ன?" என்று முதிய சூதர் அவனிடம் கேட்டார். "ஒன்றுமில்லை" என்றான் அவன். "சொல்" என்று அவர் உரக்கக் கூற "ஒன்றுமில்லை" என்று அவன் பின்னடைந்தான்.

"சொல், அறிவிலி! இப்போதே சொல்!" என்று முதுசூதர் ஆணையிட "இந்த அன்னமும் ஊனும் அனைத்தும் கழிவாக இங்கேயே மண்ணுக்குள் இறங்கியிருக்கிறது, என்றேன்" என்று அவன் சொன்னான். "களஞ்சியத்திலிருந்து மண்ணுக்கு அவற்றைச் செலுத்தும் வழிகள்தான் இவ்வீரர்கள் என்று இவர் சொன்னார்" என்றார் இன்னொரு சூதர். முதியசூதர் அதிலிருந்த பகடியை புரிந்துகொள்ளாமல் சிறுகண்களால் உற்று நோக்கியபின் "வேலை நடக்கட்டும்" என்றார்.

தன் பகடி புரிந்துகொள்ளப்படாததால் ஏமாற்றம் அடைந்த இளம் சூதன் "இங்கே மானுடரையும் அவ்வாறே தெற்குக்காட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம்" என்றான். "நாம் பேசுவதற்காக இங்கு வரவில்லை. இந்த மழையில் தழல் நின்று நெடுநேரம் எரிந்தாலும் கலத்தில் வெப்பம் ஏறாது. இருநாழிகைப்பொழுதுக்குள் உணவு ஒருங்கியிருக்க வேண்டும்" என்றார் முதுசூதர். "நாம் பிந்துவதை வீரர்கள் விழைவார்கள். அவர்கள் துயிலத்தொடங்கி இருநாழிகைப்பொழுதுகூட ஆகவில்லை" என்றான் ஒரு சூதன்.

கூலமூட்டைகளை ஏற்றி அவற்றின்மேல் தேன்மெழுகு பூசப்பட்ட பாய்களால் கூரையிட்டுக் கட்டி அத்திரிகளையும் மாடுகளையும் பூட்டி இழுத்தபடி மரப்பட்டைப் பாதைகளினூடாக அவர்கள் அடுமனை நோக்கி சென்றனர். அடுமனைகளும் கருவூலங்களும் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு தீ பரவாத அளவுக்கு படைப்பெருக்கின் இரு எல்லைகளிலாக அமைக்கப்பட்டிருந்தன. நடுவே தீயைக்கடத்தும் கூரைகளோ காவலரண்களோ எதுவும் இருக்கவில்லை. மழையில் உடல் குவித்து குனிந்து வண்டிகளைத் தொடர்ந்து சூதர்கள் சென்றனர்.

அடுகலங்கள் அனைத்திலும் நீர் கொதிக்கத் தொடங்கியிருந்தது. கூலங்களை மரக்காலால் அள்ளி நீரிலிட்டனர். "ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு ஒன்பது பத்து பத்திற்கொன்று பத்திற்கொன்று... ஒன்று இரண்டு மூன்று" என்று கூலம் அள்ளியிடும் சூதர்கள் கூவும் ஒலிகள் எழுந்தன. கொதித்து ஓசையிட்டுக்கொண்டிருர்த நீர் கூலம் விழுந்ததும் அமைதியடைந்தது. மழையின் ஓசைக்குள் அனலின் ஓசை எழுந்தது.

விறகென குவிக்கப்பட்டிருந்தது முழுக்க உடைந்த தேர்களின் மரப்பகுதிகள். அவற்றிலிருந்த ஆணிகள் நெருப்பில் சிவந்து குருதித் துண்டுகள்போல் மாறி நீட்டி நின்றன. ஊன் கொள்ளப்போன வண்டிகள் ஒவ்வொன்றாக வந்து சேர்ந்தன. முதுசூதர் ஒருவர் ஊன் துண்டுகளைப்பார்த்து "புரவிகளா?" என்றார். "ஆம் வேறு ஊன் இல்லை" என்று சூதர் ஒருவர் சொன்னார். "நேற்றே தெற்கு அடுமனைகளில் புரவியைத்தான் சமைத்திருக்கிறார்கள். நேற்று முதல்நாளே கௌரவ அணியில் உணவென புரவியூன்தான் அளிக்கப்பட்டது."

முதுசூதர் "இன்னும் இவ்வாறு போர் நீளுமென்றால் இறந்த வீரர்களை நாம் உண்ணவேண்டியிருக்கும்" என்றார். "புரவியை உண்ணும் பழக்கம் முன்பே உண்டு. சற்று கடினமான ஊன் என்பதற்கப்பால் அதற்கென்ன குறை? ஊனுண்ணி விலங்குகளை உண்பதுதான் விலக்கப்பட்டுள்ளது. ஊனுண்ணிகள் என்பதனால் பறவைகளையும் விலக்குவதுண்டு. ஆனால் மலை வேடர்கள் மட்டுமன்றி மலைப்பயணம் செய்யும் ஷத்ரியர்களும்கூட பறவை ஊனைத்தான் உண்கிறார்கள்" என்றார் ஒரு சூதர். "புரவி நம்முடன் தோள்நின்று பொருதியது" என்றான் ஓர் இளம்சூதன். எவரும் மறுமொழி சொல்லவில்லை.

புரவிகளின் தொடைகள் தோலுரிக்கப்பட்டு பெரிய வெண்ணிற மரக்கட்டைகள்போல் தோன்றின. அவற்றைத் தூக்கி அடிக்கட்டை மேல் வைத்து ஊன் வெட்டும் கோடரியால் வெட்டி துண்டுகளாக்கி விரிக்கப்பட்ட பாய்மேல் குவித்தனர். செம்மண்பாறைத்துண்டுகள்போல அவை பளபளத்தன. மழை விழுந்து கழுவியபோது அவற்றிலிருந்து குருதி வழிந்தோடியது. "இறந்த புரவிகளா, அன்றி புண்பட்டவையா?"

என்றார் ஒருவர். “நேற்று புண்பட்டு மீண்ட புரவிகள் மட்டுமே உண்ணப்பட்டன. இன்று போர்முகப்பிலிருந்து வெட்டுண்ட புரவிகளின் உடல்களையும் எடுத்து வந்திருக்கிறார்கள்” என்றார் ஒரு சூதர்.

“இத்தனை பேருக்கும் ஊன்உணவு வேண்டும். இன்று அன்னத்தில் மூன்றில் ஒருபங்கு ஊன்” என்று ஊன்வெட்டிய சூதர் சொன்னார். “எடுத்து வரும்போது நன்கு பார்த்தீர்களா? புரவித்தொடைக்கு நிகராக மானுடத்தொடைகளும் அங்கு கிடந்தன” என்றார் இருளில் ஒருவர். “இப்பேச்சை நாம் ஏன் பேசுகிறோம்? எங்கோ நம்முள் மானுட ஊன் உண்ணவேண்டும் என்று விழைவிருக்கிறதா என்ன?” என ஒரு குரல் எழுந்தது. “மானுடஊன் உண்டு அமலையாடிய காற்றின்மைந்தனின் படையினர் நாம்” என இன்னொரு குரல் சொல்ல அனைவரும் அமைதியடைந்தனர்.

சற்றுபொழுது கடந்து “மானுடரில் அமர்ந்து ஊனுண்ண விரும்புபவை தெய்வங்கள். தெய்வங்களுக்குரிய பலிகளில் முதன்மையானது மானுடக் குருதி. அதை மறக்க வேண்டியதில்லை” என்றார் இருளுக்குள் ஊன்களை துண்டுபடுத்திக்கொண்டிருந்த ஒரு பேருடல்கொண்ட சூதர். “நான் துர்க்கையன்னைக்கு மானுடனை பலிகொடுத்திருக்கிறேன். எட்டு முறை... ஒவ்வொரு நாள் கனவிலும் அன்னை எழுந்து வந்து என்னை வாழ்த்தியிருக்கிறாள்.” தொலைவில் ஒரு முதிய சூதர் “மண்ணை பொறையன்னை என்பதுண்டு. அவளும்கூட குருதிவிழைபவளே” என்றார்.

“என்ன ஐயம், புவிமகளுக்கு மானுடக்குருதி இன்றி பொழுதமையாது. துர்க்கை கொண்டதைவிட நூறு மடங்கு

குருதியை அவள் கொண்டிருப்பாள்" என்றார் ஒருவர். "புவித்திரு என சீதையை சொல்வதுண்டு. இலங்கையை உண்டு அவள் பசியாறினாள். ராவண மகாபிரபுவின் நெஞ்சக்குருதியில் ஆடினாள்" என்றார் ஒருவர். நெடுநேரம் கழித்து "நிலமங்கையும் அனல்மங்கையும்" என்றார் ஒருவர். அவ்வெண்ணம் அவர்கள் அனைவரிலும் ஏற்கனவே இருந்ததுபோல் எவரும் ஒன்றும் சொல்லவில்லை.

ஊன் துண்டுகள் இடையளவு குவியலென்றாக அவற்றின்மேல் பெய்த மழையிலிருந்து ஊறிய நிணமும் குருதியும் ஓடை என ஒழுகின. "இன்னும் குருதியூறுகின்றன" என்றார் ஒருவர். "வேட்டை விலங்குகள் அருகிவிட்டனவா இக்காட்டில்?" என்று ஒருவர் கேட்டார். "கொண்டு வந்த உலர்ஊனும் உப்பிட்டஊனும் முதல் இரு நாட்களிலேயே முடிந்துவிட்டன. நாற்புறமிருந்தும் நிஷாதரும் கிராதரும் கொண்டுவந்த ஊனும் படைப்பிரிவின் வில்லவர்கள் சென்று வேட்டையாடி வந்த ஊனும் அதை ஈடு கட்டின. இப்போது வில்லவர் மாய அடுமனையாளரும் போருக்கெழுந்துவிட்டார்கள். இரவில் வேட்டையாடச்செல்ல எவருமில்லை. நிஷாதர்கள் இங்கு நிகழ்ந்த போரைக் கண்டு அஞ்சி விலகி நெடுந்தூரம் சென்றுவிட்டனர். ஊன் மணம் பெற்று ஓநாய்களும் நரிகளும் கழுதைப்புலிகளும் வந்து சூழவே காட்டின் விலங்குகளும் அகன்று சென்றுவிட்டன" என்றார் முதியசூதர்.

இருளுக்குள்ளிருந்து ஒரு சூதர் "மண்ணுக்குள் உள்ளது இன்னும் நூறாண்டுகாலம் உண்ணத்தொலையாத ஊன். பல்லாயிரம் நாகங்கள் அங்கே செறிந்துள்ளன" என்றார். பலர் அவரை நோக்க எவரும் ஒன்றும் சொல்லவில்லை. அவரே "நாகங்கள் நாகங்களை உண்ணும்" என்றார். "நாமும்

உண்ணத்தொடங்கினால் இன்னும் எட்டு தலைமுறைக்காலம் இங்கு இவ்வாறு உணவு உண்டு போரிடலாம்" என்றார். அவர் சொல்வதன் பொருளென்ன என்றறியாமல் பலர் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்தனர். அடுப்பிலிருந்து எழுந்த செந்நிறத் தழலில் அவர் முகம் மட்டும் எரியும் கனலென இருளுக்குள் நின்றிருந்தது. விண்ணிலிருந்து அறியாத தெய்வம் ஒன்று இறங்கிவந்து அதை சொல்வதுபோல் தோன்றியது.

"பேச்சு போதும். அடுமனைகள் விரைவு கொள்ளட்டும்" என்று மிக அப்பால் நின்ற தலைமைச் சூதர் உரக்க குரல் கொடுத்தார். தொலைஎல்லை வரை நூற்றுக்கணக்கான அடுப்புகள் இருபுறமும் அனல் கொள்ள வானை நோக்கி எரியாலான இணைக்கோட்டு பாதைபோலத் தோன்றியது அடுமனைக்கூடம். இளம்சூதன் ஒருவன் "எரிநூல் ஏணி" என்றான். பின்னர் "ஏறி இருண்ட விண்ணுக்குச் சென்று மறைந்துவிடலாம்" என்றான்.

குதிரைப்பந்தியில் பாண்டவப்படையின் தலைமைப் புரவிச்சூதரான சுதீபர் மழையில் நனைந்து உடல்சிலிர்த்துக்கொண்டிருந்த குதிரைகளை நோக்கியபடி மெல்ல நடந்தார். அவற்றின் முதுகின்மேல் தேன்மெழுகு பூசப்பட்ட பாய்களாலான மழைமூடிகள் அணிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் பிடரியிலும் கழுத்திலும் நீர் வழிந்தது. குளிருக்கு அவை மெய்ப்பு கொண்டபடி தசை விதிர்த்தபடி கால்மாற்றி நீள்மூச்செறிந்தபடி நின்றன. அவர் ஒவ்வொரு புரவியையாக நோக்கால் தொட்டார். சிலவற்றை மட்டும் கைகளால் தொட்டு நோக்கினார். அவருடைய நோக்கை புரவிகள் உணர்ந்திருந்தன. அவர் பார்வை தொட்ட இடத்தில் அவை உடல்சிலிர்த்தன.

இளம்சூதனும் அவருடைய மாணவனுமான காமிகன் “புரவிகள் நூற்றுக்கு ஒன்றே எஞ்சியிருக்கின்றன” என்றான். “ஆம், அவையும் நோயுற்றவை, புண்பட்டவை” என்று சுதீபர் சொன்னார். “இப்போது புரவிகளின் சாவு விழுக்காடு மிகவும் பெருகிவிட்டது” என்றான் காமிகன். “ஆம், ஏனென்றால் பெரும்பாலான புரவிகள் புண்பட்டவை. புண்பட்ட புரவி தன் உடலின் நிகர்நிலையை இழக்கிறது. உடல்மீதான கட்டுப்பாட்டை கைவிடுகிறது. அம்புகளுக்கும் வேல்களுக்கும் எளிதில் இலக்காகிறது” என்றார் சுதீபர். “அத்துடன் இந்தப்புரவிகள் பெரும்பாலும் படைப்பயிற்சி கொண்டவை அல்ல. வெறும் வண்டிக்குதிரைகள் பல. இவை போரில் எளிய தசைக்கேடயங்களாகவே நின்றிருக்கும்.”

காமிகன் சொல்லத் தயங்கினான். ஆனால் முட்டிவந்த சொல்லால் திணறினான். பின்னர் “அவர்கள் புரவியை உண்கிறார்கள்” என்றான். “எல்லா போர்களிலும் இறுதியில் புரவிகள் உண்ணப்படும்” என்றார் சுதீபர். “ஆனால்...” என தயங்கிய காமிகன் “ஆனால் புரவியை உண்பதில் மிகமிக அறப்பிழையாக ஏதோ ஒன்று உள்ளது. ஏன் உண்ணலாகாது என கேட்டால் எனக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை. பசுவைக்கூட உண்ணலாம், புரவியை உண்ணலாகாது. புரவி இப்பேரரசுகளை உருவாக்கியது. அறம்வளரவும் மெய்ஞானம் விளையவும் தன்னை வேலியாக்கிக்கொண்டது. தேவர்கோன் இந்திரன் புரவிவடிவில் மண்ணில் வந்தான் என்கின்றன கதைகள்” என்றான்.

சுதீபர் புன்னகைத்து “நீ கண்டிருப்பாய், இவர்கள் போரை எப்படி தொடங்கினர் என. தங்கள் மைந்தர்களை களப்பலி கொடுத்து போர் குறித்தவர்கள். புரவிகளை எப்படி கருதுவார்கள்?” என்றார்.

“இருந்தாலும்...” என்று காமிகன் சொன்னான். “என்ன நிகழும் என்கிறாய்?” என்றார் சுதீபர். “இப்போருக்குப்பின் புரவிகளை இவர்கள் எப்படி அணுகுவார்கள்? போரில் புரவிகளை வெட்டிக்குவிப்பது இயல்பானதே. ஏனென்றால் புரவிகள் ஷத்ரியர்கள். போருக்கெனப் பிறந்தவர்கள். ஆனால் புரவியை உண்டபின் எப்படி அவர்கள் ஒரு புரவியின் தோளை தழுவமுடியும்? அதன்மேல் ஏறி அமர்ந்து ஊர்ந்து செல்லமுடியும்? ஆசிரியரே, புரவி தன்னை ஊர்பவனின் உள்ளமென ஆவது. அவன் உண்பது எதை?’

காமிகன் சொல்கொண்டான். “எண்ண எண்ண என் துயில் அழிகிறது. புரவிகள் இப்போரில் எப்படி நின்று பொருதுகின்றன என நாம் அறிவோம். நீரின்றி புரவி நிலைகொள்ளாது. முதற்சில நாட்களுக்குப்பின் அனைத்துப்புரவிகளும் களத்தில் ஒழுகும் குருதியையே உறிஞ்சிக் குடிக்கின்றன. அவற்றின் சாணத்தில் கரிய குழம்பு என குருதிச்சேறு இருக்கிறது.” அவன் மூச்சிளைத்தான். “மூன்றாம் நாள்தான் நான் அதை கண்டடைந்தேன். புரவிகளின் சாணத்தின் நாற்றம் மாறிவிட்டிருந்தது. அழுகிய ஊன் எனத் தோன்றின அவை. நான் உசாவியபோது முதுசூதரான கர்மர் சொன்னார் அப்புரவி குருதியை உண்டுவிட்டிருக்கிறது என்று.”

“ஆம், பெருவிடாய் கொண்டு களம்நிற்கும் புரவி தன் வாயருகே ஒழுகிவரும் குருதியை நாநீட்டி குடிக்கத்தொடங்குகிறது. பின்னர் அதில் சுவை காண்கிறது. விழுந்தவர்களின் பச்சை ஊனைக் கவ்வி உண்டு விடாயும் பசியும் தீர்க்கும் புரவிகளை கண்டிருக்கிறேன்” என்றார் சுதீபர். “ஆனால் ஒன்றுண்டு. அத்தனை புரவிகளும் முதலில் குடிப்பது தங்கள் உடலில் இருந்து ஒழுகும் குருதியைத்தான். பின்னர் அவை குடிப்பன

எல்லாம் தங்கள் குருதியே என அவை எண்ணிக்கொள்கின்றன."

"இவர்கள் உண்பது எதை? தன்குருதி உண்ட புரவிகளின் ஊனை என்றால் அது தன்னையே அல்லவா?" என்றான் காமிகன். சுதீபர் திரும்பி அவனை நோக்கி சிலகணங்கள் விழியிமைக்காமல் நின்றபின் "மெய், இங்கே களத்தில் இளையபாண்டவன் உண்டது தன் குருதியைத்தான்" என்றார். மீண்டும் எண்ணம்சூழ்ந்து பெருமூச்சுவிட்டு "ஆனால் இங்கே நிகழும் இப்போரே தன்குருதி உண்ணல்தானே?" என்றார். மேலும் எண்ணத்திலாழ்ந்து "எல்லா போர்களும் இவ்வண்ணம் நிகழ்வதே. இங்குள்ள ஷத்ரியர்கள் அனைவருமே உடன்குருதியினர் என்பார்கள். இவர்கள் கொன்றுகுவிக்காமலிருந்த நாளே இருந்ததில்லை."

அவர்கள் நின்று நெடுந்தொலைவுவரை விழியோட்டி நோக்கினர். அடுமனை எரிநிரை தெரிந்தது. "புரவிச்சிதை" என்றான் காமிகன். சுதீபர் மறுபக்கத்தை சுட்டிக்காட்டி அங்கிருந்த படைகளைக் காட்டி "அவர்களும்தான்" என்றார். சுதீபர் ஒரு பெரும்புரவியை அணுகி அதன் முதுகை மெல்ல தட்டினார். அது எண்ணியிராமல் சீறியபடி திரும்பி அவரை கடிக்க வந்தது. அவர் திகைத்து பின்னடைந்தார். காமிகன் "பெரும்பாலான புரவிகள் இப்படி கடிக்க வருகின்றன" என்றான். "நேற்று மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் புரவிகளால் கடிக்கப்பட்டார்கள். அணுகாமல் உணவளிக்கும்படி ஆணை."

"ஊன்சுவை கண்ட புரவிகள் இவ்வண்ணம் ஆகின்றன" என்றார் சுதீபர். இரு ஏவலர் கூடைகளில் உணவுடன் புரவிகள் நடுவே சென்றார்கள். சுதீபர் விழிசுருக்கி நோக்கியபின் ஒருவனை கைசுட்டி அருகே அழைத்து "என்ன உணவு?" என்றார். அவன்

தயங்கி இன்னொருவனை நோக்க அவன் "ஊன்" என்றான். "ஊனா?" என்றான் காமிகன். "ஆம், ஆணையாளரே. பச்சை ஊனை மட்டுமே இவை உண்கின்றன. அவற்றையே இரண்டு நாட்களாக அளித்து வருகிறோம்" என்றான் சூதன். "முதலில் புல்லும் வைக்கோலும் அளிக்கப்பட்டபோது சற்று பச்சை ஊனும் சேர்க்கப்பட்டது. பச்சை ஊன் என்றால் புல்லும் வைக்கோலும் குறைவாகவே போதும். இப்போது நிஷாதர்கள் வருவதில்லை. ஆகவே இந்தப்படைகளில் புல்லோ வைக்கோலோ இல்லை."

"யானைகள்? அவை எதை உண்கின்றன?" என்றார் சுதீபர். "அவை தழைகளையே உண்கின்றன. சற்று குருதிபட்டிருந்தால்கூட கையால் தொடுவதில்லை" என்றான் சூதன். சுதீபர் "நல்லூழ்தான். அந்த அளவுக்கேனும் தெய்வங்கள் மானுடன்மேல் கனிவுடன் உள்ளன" என்றார். பின்னர் கைகூப்பி "இந்திரனின் இரு ஊர்திகள். அவன் தாமரைக்கையனாக எழுகையில் யானை. மின்படைகொண்டு எழுகையில் புரவி. யானை நீர். புரவி அனல்" என்றார். "அனல் தன் எல்லையை கடந்துவிட்டது. நீர் வேலிமீறவில்லை."

"நாமநீர் வேலி என்கின்றன நூல்கள். தெய்வங்களின் சொல் நீரின் வேலி" என்றான் காமிகன். சுதீபர் அவர்களிடம் செல்லும்படி கைகாட்டினார். அவர்கள் அடுத்த புரவிநிரை நோக்கி கூடையுடன் செல்ல காமிகன் "இங்கே இத்தனை ஊன் எங்கிருந்து?" என்றான். சுதீபர் மெல்ல நடுங்கினார். காமிகன் "அது என்ன ஊன்?" என்றான். "முதலில் களம்பட்ட எருதுகளை அளித்தோம். பின்னர் அத்திரிகள், யானைகள்". காமிகன் "புரவிகள்?" என்று மூச்சுக்குரலில் கேட்டான். "ஆம்,

ஆணையாளரே. இப்போது பெரும்பகுதி புரவியூன்தான்" என்றான் சூதன்.

இருட்கனி - 41

புலரிச்சங்கொலி எழுந்தபோது கௌரவப் படைகளுக்குள் எந்த அசைவும் ஏற்படவில்லை. சுபாகு தலையில் பாயாலான மழைமூடியை கவிழ்த்துக்கொண்டு காவல்மாடத்தின்மீது சாய்ந்த மழைச்சரடுகளுக்கு சற்றே குனிந்து உடல்கொடுத்து நின்றிருந்தான். புலரிமுரசு அமைந்த பின்னரும் படை அசைவிலாதிருக்கக் கண்டு ஒருகணம் அவன் உளம் துணுக்குற்றது. ஒருநாள் காலையில் அங்குள்ள படைவீரர்கள் அனைவரும் உயிரிழந்திருப்பார்கள் என்று அவனுள் ஒரு எண்ணம் முன்பொருநாள் வந்தது. உண்மையாகவே அது நிகழ்ந்துவிட்டதா?

பல படையெடுப்புகளில் கொடிய நோய்கள் உருவாகி முழுப் படையும் அழிந்த கதையை அவன் அறிந்திருக்கிறான். ஒருவரோடொருவர் நெருங்கி வாழும் படைகளில் தொற்று நோய்கள் எளிதில் பரவுகின்றன. நோய்களுக்கு தங்களை கொடுக்கும் உளநிலையும் படைநிலைகளில் எளிதில் உருவாகிவிடுகிறது. நோய்கண்டவர்களை அப்படியே விட்டுவிட்டு அப்படியே இடம் பெயர்வதையே பெரிய படைகள் செய்வது வழக்கம். அவ்வுடல்களை மறைவு செய்தாலோ எரித்தாலோ அச்செயலாலேயே மேலும் நோய் தொற்றும். ஆனால் மழைக்காலம் என்றால் அவர்கள் விலகிச்செல்லுந்தோறும் நீரினூடாகவும் காற்றினூடாகவும் நோய் அவர்களை தொடர்ந்து வரும்.

சதகர்ணிகளின் நிலத்திற்குள் சென்ற கலிங்கமன்னன் ஜோதிவர்மனின் பெரும்படை முழுமையாகவே நோயில் அழிந்து அவன் உடலை மட்டும் அவர்கள் மெழுகு பூசிய துணியில் சுற்றிக்கொண்டு வந்து எரித்த கதையை கலிங்க விஜயம் எனும் காவியத்தில் அவன் பயின்றிருந்தான். அவன் மைந்தன் அது சதகர்ணிகளின் தெய்வங்கள் அளித்த தீச்சொல் என எண்ணி விஜயபுரியின் அத்தனை ஆலயங்களையும் இடித்தும் எரித்தும் அழித்தான். ஆனால் அவர்கள் திரும்பி வரும்போது மீண்டும் நோய் பரவி படைவீரர்கள் மறைந்தனர். இறந்த உடல்கள் அனைத்திலும் உடல் வலிப்பு கொண்டு முகம் இளித்து பெருநகைப்பு ஒன்று உறைந்திருந்தது.

சதகர்ணிகளின் தெய்வங்களின் நகைப்பு அது என்றது கலிங்க விஜயம். அதன்பின் அந்நகைப்புடனேயே அத்தெய்வங்களை கலிங்கநாட்டு எல்லையில் நிறுவி குருதிபலி கொடுத்து தடுத்து நிறுத்தினர். ஆண்டுதோறும் பலிகொடுத்து நிறைவுசெய்தனர். கலிங்கப் படை பின்னர் சதகர்ணிகளின் மண்ணுக்குள் நுழையவே இல்லை. அவர்களின் எல்லைக்கோயில்களில் கழுத்துநரம்பு தெறிக்க வாய்விரித்து இளித்துநிற்கும் தெய்வங்களின் சிலைகளை அவன் கண்டதுண்டு. உக்ரஹாஸர்கள் என அத்தெய்வங்கள் அழைக்கப்பட்டன.

எதை எதிர்பார்க்கிறோம் என்று அவன் வியந்துகொண்டிருக்கையிலேயே படையின் ஒரு மூலையில் மெல்லிய அசைவு தெரிந்தது. ஒவ்வொருவராக எழுந்து நின்றனர். மழைக்கு உடலை மடக்கி ஒடுக்கியிருந்த மெழுகுப்பாய்களையும் பாளைகளையும் மரப்பட்டைகளையும் அகற்றினர். குளிரில் அனைவரும் உடலொடுக்கி நின்றிருப்பதை அவனால் காண முடிந்தது. அவர்களின் குரல்கள்

மழைச்சாரலைக் கடந்து வரவில்லை. வானில் இடியோசையும் மின்னல் தெறிப்புகளும் நின்றுவிட்டிருந்தன. நீரே அவன் விழிதுலங்கச் செய்யும் ஒளியாக மாறியதுபோல் தோன்றியது.

படைகள் அணிவகுக்கும்படி ஆணையிட்டபடி கொம்புகள் முழங்கின. ஒன்றுடன் ஒன்று தொடுத்துக்கொண்டு அவைகள் படைக்களம் எங்கும் பரவின. சுபாகு கயிற்றேணியின் வழியாக இறங்கி கீழே வந்தான். அங்கு நின்ற தன் புரவியை அணுகி அதன்மேல் ஏறிக்கொண்டு மரப்பட்டைப் பலகைகளினூடாக சென்றான். படைகள் குறுகி சிறு எல்லைக்குள் ஒடுங்கிவிட்டிருக்க படையெல்லைக்கு அப்பாலிருந்த பாதைப்பலகைகளையும் கைவிடப்பட்ட காவல் மாடங்களையும் உடைத்து அந்த மரங்களை விறகுக்காக எடுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவன் புரவி அந்த வண்டிகளைக் கடந்து சென்றது. அடுமனை நெருப்புகள் அனல் வழிந்தோடும் ஆறென நெடுந்தொலைவுக்கு தெரிந்தன. படைவீரர்கள் விசையற்ற அசைவுகளுடன் துயிலில் நடமாடுபவர்கள்போல் தோன்றினார்கள். பெரும்பாலானவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவில்லை. மிக மெல்ல நடந்து நீரள்ளி முகம் கழுவினார்கள். அவர்களின் படைக்கலங்கள் ஆங்காங்கே குவிக்கப்பட்டிருந்தன. அவர்கள் எவரும் இரவில் நன்கு துயின்றிருக்கவில்லை என்று அண்மையில் தெளிந்த முகங்களிலிருந்து தெரிந்தது.

மழை மட்டுமல்ல, அதற்கப்பால் அவர்களை துயிலவிடாத வேறு ஒன்றும் இருந்தது. முந்தைய நாள் அந்தியிலேயே அது ஒரு நோயென அவர்கள் மேல் படர்ந்திருந்தது. எதிரே வந்த வீரனின் விழிகளிலிருந்த ஒளிமங்கலில் அதை அவன் கண்டான். அது என்ன என அவன் அறிந்திருந்தான். அவர்கள்

அனைவரையும்போல அவனும் அதை சொல்லென உளமாக்க விழையவில்லை. அதை ஒவ்வொரு உளச்சொல்லாலும் உந்தி அகற்றிவிடவே முயன்றான்.

அஸ்வத்தாமனின் குடிலை அடைந்து புரவியை நிறுத்திவிட்டு இறங்கி முற்றம் நோக்கி சென்றான். குடில் வாயிலில் அமர்ந்திருந்த காவலன் அவனைக் கண்டதும் எழுந்து நின்று நடுங்கினான். அவன் இரவெல்லாம் சாரல் அடித்த ஈரத்தை காலில் வாங்கி உடலில் நடுக்கெனச் சூடியிருந்தான். குடிலுக்குள் சிறு அகல் விளக்கின் ஒளி இருந்தது. குறடுகளை கழற்றிவிட்டு "வணங்குகிறேன், பாஞ்சாலரே" என்றபடி சுபாகு உள்ளே நுழைந்தான். அஸ்வத்தாமன் நிலத்தில் அமர்ந்து மென்தோல் இழுத்து ஆணியறையப்பட்ட பலகையில் முள்ளம்பன்றி முள்ளால் கடுக்காய் அரைத்து உருவாக்கப்பட்ட மையைத் தொட்டு வரைந்துகொண்டிருந்தான்.

அந்தக் களத்தை சுபாகு நோக்கினான். படைசூழ்கை என்ன என்று உய்த்துணரக்கூடவில்லை. குடில்கூரைமேல் மழையின் ஓசை பெருகியிருந்தது. "படைசூழ்கை இன்னும் முடிவாகவில்லையா?" என்றான் சுபாகு. "படைசூழ்கை ஒருபோதும் முடிவடையாது. இது பொற்கொல்லர்கள் நகை செய்வதுபோல் செய்யச் செய்ய பெருகும் பணி" என்றான் அஸ்வத்தாமன். "படைசூழ்கையே தேவையில்லை என்று நேற்று சொன்னீர்கள்" என்றான் சுபாகு. "ஆம். ஆனால் ஒன்றை அமைக்கத் தொடங்கும்போது அது முழுமை பெறாது உள்ளம் நிறைவடைவதில்லை" என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

"இனி நமக்கு பொழுதில்லை" என்றான் சுபாகு உடல் தாழ்த்தி சிறிய பீடத்தில் அமர்ந்தபடி. "இப்போது கருக்கிருள். ஆயினும் இன்னும் சற்று நேரத்திலேயே விடிந்துவிடும் என்று

தோன்றுகிறது. இந்த மென்மழைச்சாரல் விண்ணிலிருந்து ஒளியை இறக்குவது. நாம் எண்ணுவதைவிட விரைவாகவே ஒளியெழும். ஒளியெழுந்த பின்னர் படையினரை சூழ்கைக்குச் செலுத்தும் வழக்கமில்லை." அஸ்வத்தாமன் விழிதூக்காமல் "ஆம், ஆனால் அதெல்லாம் முன்பு. அன்று எதிரிப் படையினர் காவல்மாடத்திலிருந்து நமது படையை அறிந்துவிடுவார்கள் என்று எண்ணினோம். அதெல்லாமே வெறும் நடிப்புகளென்று இன்று தோன்றுகிறது" என்றான்.

"நாம் இருளுக்குள் எவருமறியாது படைகளை நகர்த்தி சூழ்கை அமைத்தபோதுகூட நமது சூழ்கையை அவர்கள் அறியாமல் இருந்ததில்லை. அவர்களது சூழ்கையை நாமும் அறியாமலிருந்ததில்லை. ஏனெனில் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அவ்வாறு கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறோம். இங்கிருப்பவர்கள் அங்கிருப்பவர்களின் உறவினர்கள். அங்கிருப்பவர்கள் நமக்கு அவ்வாறே. இது உண்மையில் போரல்ல, காதலனும் காதலியும் கொள்ளும் காமம்போல அணுக்கமானது. ஒருவரையொருவர் நன்கறிந்து ஒருவரை ஒருவர் நிரப்பிக்கொண்டு தாங்கள் விழைந்ததை அடையும் திளைப்பு இது" என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

அஸ்வத்தாமன் அன்று காலையில் நன்கு துயின்று புத்துணர்வு கொண்டு எழுந்தவன் போலிருந்தான். "பாஞ்சாலரே, இந்தப் போர் வெல்லக்கூடுவதா? இன்று போரில் நாம் எதை எய்துவோம் என்று எண்ணுகிறீர்?" என்று சுபாகு கேட்டான். "வெல்வதென்றால் இன்று வெல்வோம். நேற்றே அங்கர் அவர்கள் படைகளின் பெரும்பகுதியை அழித்துவிட்டார். இன்று எஞ்சியிருப்பவற்றை அவரால் அழிக்க முடியும். இன்று

அவர்கள் தங்கள் இறுதி எல்லையை அறிவார்கள்" என்றான் அஸ்வத்தாமன்.

சுபாகு "இன்னும் அவர்களில் எவரும் கொல்லப்படவில்லை" என்றான். "உண்மை. அவர்கள் எவரையும் கொல்லும் எண்ணம் அங்கருக்கு இல்லை என்று நேற்று தெரிந்துகொண்டேன். எண்ணியிருந்தால் அவர் நேற்று யுதிஷ்டிரனையும் பீமனையும் கொன்றிருக்க முடியும். அர்ஜுனனையன்றி எவரையும் அவர் கொல்ல முயலவும் இல்லை என்பது தெளிவு" என்றான் அஸ்வத்தாமன். "ஏன்?" என்று சுபாகு கேட்டான். "அவர்களைக் கொல்லும் பழி தனக்கு வேண்டாம் என்று எண்ணுகிறார்" என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

"இங்கு நாங்கள் நூற்றுவரில் இருவர் எஞ்ச பிறர் கொல்லப்பட்டோம்" என்று சுபாகு சீற்றத்துடன் சொன்னான். "ஆம்" என்றான் அஸ்வத்தாமன். "பாஞ்சாலரே, நானும் இறந்துவிட்டேன்" என்று சுபாகு சொன்னான். "மெய். அதன்பொருட்டு அவர்களை கொன்றால் நாளை நாம் நாடாள இயலாது. அவர்கள் நிலம்நாடி போரிட்டு சாக எண்ணுகிறார்கள். நாம் வென்று நாடாள திட்டமிடுகிறோம். பழிகொண்ட மன்னனை மக்கள் துறப்பார்கள். அதை அங்கர் கருதுகிறார்" என்றான் அஸ்வத்தாமன். "நேற்றே அந்த மணிமுடியை நிலத்திலிட்டு உருட்டி அது தனக்கு எத்தனை எளிய ஒன்று என்று காட்டிவிட்டார். சற்றேனும் நுண்ணுணர்வு அவர்களுக்கு இருக்குமென்றால் அவர்கள் அதை எண்ணிச்சூழ்ந்து அம்மணிமுடியை கொண்டு வந்து அங்கருக்கு அளிக்கவேண்டும்."

அஸ்வத்தாமன் தொடர்ந்தான். "நன்று. எஞ்சியிருக்கும் தினவால் இன்று அவர்கள் போருக்கு வருவார்கள் என்றால்

இறுதி எல்லையை அவர்கள் இன்று காண்பார்கள். இன்று ஆணவம் உடைந்து அடிபணிவார்கள். ஐயமே இல்லை. அங்கர் ஒருவேளை அவர்கள் கோரும் சிறு நிலப்பகுதியை அளித்து அவர்களை துரத்திவிடக்கூடும். இன்று போர் முடிந்துவிடும். இன்று இச்சூழ்கையை அமைக்கும்போதே அந்த நம்பிக்கையை நான் அடைந்தேன். இப்போதும் அவர்களைவிட இருமடங்கு இருக்கிறது நமது படை. அவர்களைவிட வில்லவரும் தலைமைத் திறன் கொண்டோரும் நம்மிடையே மிகுதி."

சுபாகு "நன்று நடக்கட்டும்" என்றான். "ஏன், நீங்கள் ஐயம் கொண்டிருக்கிறீர்களா?" என்றான் அஸ்வத்தாமன். "நம்பிக்கை கொள்வதை நான் விட்டுவிட்டேன். ஆகவே ஐயம் கொள்வதற்கான உரிமை எனக்கில்லை" என்றபின் சுபாகு எழுந்தான். பின்னர் "நான் கிருதவர்மனை இங்கு வரச்சொல்கிறேன். இப்படைசூழ்கையை அவர் படையில் நிகழ்த்தட்டும்" என்றான். "ஆம், நானே அவரை வரச்சொல்லியிருக்கிறேன்" என்று அஸ்வத்தாமன் சொன்னான்.

"மூத்தவர் எழுந்துவிட்டாரா என்று பார்க்கவேண்டியிருக்கிறது" என்றான் சுபாகு. "அவர் நேற்று நன்கு துயின்றார். ஆகவே இன்று தெளிந்த உள்ளத்துடன் எழுவார். ஐயமில்லை, சென்று நோக்குக!" என்று அஸ்வத்தாமன் சொன்னான். சுபாகு வெளிவந்து தன் புரவியை நோக்கி சென்றபோது ஒருகணத்தில் எடைமிக்க சேற்றுப் பரப்பொன்று அவன் மீது விழுந்து மண்ணோடு மண்ணாக அழுத்துவதுபோல் துயில் வந்து தாக்குவதை உணர்ந்தான்.

இமைகளை உந்தி மேலே தூக்கி உடற்தசைகளை இறுக்கி மெல்ல விட்டு அத்துயிலை கடந்தான். புரவியிலேறி அமர்ந்து அதை கிளம்பும்படி ஆணையிட்டதை உணர்ந்தான். பின்னர்

விழித்துக்கொண்டபோது புரவி சீரான குளம்படிகளுடன் சென்றுகொண்டிருந்தது. அவனைச் சூழ்ந்து கௌரவப் படை துயிலெழுந்து காலைக்கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஓசை கேட்டது. அவன் செலுத்தாமலேயே புரவி துரியோதனனின் குடில் நோக்கித்தான் சென்றுகொண்டிருந்தது. அது அவன் உள்ளத்தை அறியத்தொடங்கி நெடும்பொழுதாகிறது என எண்ணினான். விழித்திருக்கையில் உள்ளம் கொள்ளும் அலைக்கழிவுகளை புரவிகளால் தொடர இயல்வதில்லை. துயில்கையில் உடலிலிருந்து தெளிவான ஆணை அவற்றுக்கு கிடைக்கிறது போலும்.

துரியோதனனின் பாடிவீட்டின் முகப்பில் அவன் இறங்கி புரவியின் கடிவாளத்தை ஏவலனிடம் ஒப்படைத்துவிட்டு நடந்தபோது குடிலின் முகப்பில் கர்ணன் அமர்ந்திருப்பதை கண்டான். அருகே சென்று அவனை வாழ்த்த எண்ணிய பின்னர் தயங்கி நின்றான். அங்கிருந்து கர்ணனை பார்த்துக்கொண்டிருந்தான். உள்ளே துரியோதனன் இன்னும் துயில் விழிக்கவில்லை என்று தெரிந்தது. கர்ணன் அமர்ந்திருக்கும் உடல் அமைப்பில் சற்று முன் அவ்வாறு அமர்ந்ததுபோல் தோன்றினான். உடற்தசைகள் தளர்ந்திருக்கவில்லை. உடல் எங்கும் சாய்வு தேடவுமில்லை. இரவு முழுக்க அவ்வாறு உடல் திரட்டி அமர்ந்திருக்கிறாரா என்ன? உள்ளம் அவ்வாறு எழுந்து நிலை கொள்கிறதா?

உள்ளிருந்து ஏதோ ஓசை கேட்டதுபோல கர்ணன் திரும்பிப்பார்த்தான். பின்னர் எழுந்து நின்று தன் கைகளை நீட்டி உடலை இறுக்கி தளர்த்தினான். துரியோதனன் துயிலெழுந்த ஓசை அது என்பதை சுபாகு உணர்ந்தான். கர்ணன் திரும்பி ஏவலனை நோக்கி கைகாட்ட ஏவலன் குடில்

படலைத் திறந்து உள்ளே சென்றான். கர்ணனும் தொடர்ந்து உள்ளே செல்வான் என்று சுபாகு எதிர்பார்த்தான். ஆனால் கர்ணன் திரும்பி முற்றத்தில் இறங்கி நீண்ட கால்களை எடுத்து வைத்து நடந்து அவனை நோக்கி வந்தான். சுபாகு தலைவணங்கியதை அவன் உளம் பார்க்கவில்லை. அவனைக் கடந்து சென்று அங்கு நின்றிருந்த புரவிமேல் ஏறி அதை கிளப்பிக்கொண்டு மரப்பாதையில் ஏறி குளம்புகள் விசைத் தாளமிட விரைந்து அகன்றான்.

சுபாகு அவனை நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். ஏவலன் வெளியே வந்து "அரசர் விழித்தெழுந்துவிட்டார்" என்றான். சுபாகு குடில் வாயிலை சென்றடைந்து குறடுகளை கழற்றியபின் மெல்ல உள்ளே சென்று "வணங்குகிறேன், மூத்தவரே" என்றான். கையூன்றி எழுந்து அமர்ந்த துரியோதனன் இரு கைகளாலும் முகத்தை அழுத்தி துடைத்தபின் நிமிர்ந்து அவனை பார்த்தான். "இளையோனே" என்றான். "ஆம், இங்குள்ளேன்" என்றான் சுபாகு. "சற்று முன் உன்னைத்தான் கனவில் கண்டேன்" என்றான் துரியோதனன். அவன் முகம் நன்கு தெளிந்திருந்தது.

துரியோதனன் புன்னகைத்தபடி படுக்கையை கையால் தட்டி "விழிப்பதற்கு சற்று முன் உன்னை பார்த்தேன். இரவெல்லாம் அவர்கள் அனைவரையும் பார்த்தேன். அவர்கள் என்னிடம் சொன்னார்கள், இன்று அவர்களும் போரில் இருப்பார்கள் என்று. இன்று நாம் வெல்வோம். அது உறுதி. இன்றுடன் போர் முடியும். இன்றுடன் நாம் மூதாதையருக்கு அளித்த சொல் நிறைவேறும்" என்றான். சுபாகு துரியோதனனின் மலர்ந்த கண்களை பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றான்.

சுபாகு புரவியில் அமர்ந்து கௌரவப் படைகளினூடாகச் சென்றான். அவன் புரவியின் ஒவ்வொரு குளம்படியும் எடைமிக்கதாக இருந்தது. எதிரே வந்த கௌரவப் படைத்தலைவர்கள் தலைவணங்கி வாழ்த்துச்சொல் உரைத்ததை அவன் அறியவில்லை. அவர்கள் அவன் முகத்திலிருந்த பதைப்பைக் கண்டு வியப்படைந்தனர். அவன் சாவுநோக்கி செல்பவனின் விழிகள் கொண்டிருந்தான். அல்லது பெருவிடாயோ பசியோ கொண்டவன் போலிருந்தான். அவன் உதடுகள் அழுந்தி தாடை அசைந்துகொண்டிருந்தது. வாய்க்குள் ஏதோ ஒன்றை இறுக மென்றுகொண்டிருப்பவனைப்போல. அல்லது அவன் மெல்வது ஓர் உளச்சொல்லை என்பதுபோல.

கௌரவப் படைகள் ஒருங்கிக்கொண்டிருந்தன. மிக அப்பால் கிருதவர்மனின் ஆணைகள் கொம்போசையாக எழுந்து படைகளை மூடியிருந்த கருக்கிருளுக்குள் ஊடுருவி ஒலித்தன. அதற்கேற்ப படைத்தலைவர்கள் எழுப்பிய சிறுகொம்போசைகளும் முழவோசைகளும் கேட்டன. ஆனால் படையினர் ஒருவருக்கொருவர் முட்டிமோதினார்கள். மாறிமாறி ஆணைகளையும் எச்சரிக்கைகளையும் கூவிக்கொண்டார்கள். சிறுதலைவர்கள் வசைக்கூச்சலிட்டனர். படையினர் தங்களவரை கூவி அழைத்தனர். இருளுக்குள் இருளலைகளாக படை ததும்பிக்கொண்டே இருந்தது.

பயிற்சிபெற்ற படையினரிடம் உள்ள ஒழுங்கும் அமைதியும் கலந்த சிறுசலிப்பு அவர்களிடையே இருக்கவில்லை. பெரும்பாலானவர்கள் ஏவல்பணியினர் என்பதனால் ஆணைகளை புரிந்துகொள்வதில் அவர்களுக்கு இடர் இருந்தது. புரிந்துகொண்டதும் உருவாகும் கிளர்ச்சியும் இருந்தது. அதை

அவர்களால் கூச்சலிட்டு பிறரிடம் உரைக்காமலிருக்க இயலவில்லை. ஒருவரோடு ஒருவர் உடல்முட்டிக்கொண்டார்கள். பழகாத கால்கள் ஒன்றுடனொன்று உரச குறடுகள் ஒலித்தன. படைக்கலங்கள் ஒருவரை ஒருவர் குத்த எச்சரிக்கைச் சொற்களுடன் வசைபாடினார்கள்.

அந்தப் பதற்றத்திலும்கூட அவர்கள் புதிய ஒன்றைச் செய்வதன் உவகையை கொண்டாடினர். நகையாடலும் இளிவரலும் செய்தனர். உறவுமுறை பேசி இழிசொற்கள் வீசி விளையாடினர். நெடுங்காலமாக அவர்கள் ஏவலர்களாக படைவீரர்களுக்கு பணிசெய்தவர்கள். படைபயின்ற வீரர்கள் அவர்களை கீழாகவே நடத்துவார்கள். ஆணையிடுவார்கள், வசைபாடுவார்கள், அவ்வப்போது அடிப்பதுமுண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கனவில் படைவீரர்களாக ஆகி களம்சென்று வீரம்விளைத்து மீள்வதை கண்டுவந்தவர்கள். அந்த நாள் வந்தது அவர்களை நிறைவடையச் செய்தது.

முதல்முறை மேடையேறிய நடிகன் என தங்கள் கவசங்களையும் கச்சையையும் படைக்கலங்களையும் நோக்கி நோக்கி மகிழ்ந்தார்கள். அவற்றை எத்தனை முறை சீரமைத்துக்கொண்டாலும் அவர்களின் உள்ளம் நிறைவடையவில்லை. ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டி நகையாடினர். ஒருவரை ஒருவர் சீரமைத்துக்கொண்டார்கள். அவை உரிய முறையில் அமைந்தாலே போதும், போர் என்பது அந்தத் தோற்றம் மட்டுமே என்பதுபோல. அந்த மாற்றுருவுக்குள் ஒளிந்திருக்கும் உணர்வை அவர்கள் அடைந்தமையால் அனைவர் முகங்களிலும் ஓர் அறிவின்மையின் நகைப்பு இருந்தது.

சாவு மிக அண்மையிலிருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனால் அது எவருடைய உள்ளத்திலும் அப்போது இருக்கவில்லை. அவர்கள் களத்திற்குச் சென்று அணிவகுத்து நின்றிருக்கையிலும்கூட அத்தருணத்தின் நடிப்பில் மகிழ்வுற்றிருந்தனர். போர்முரசு ஒலிக்கத்தொடங்குவதற்கு முந்தைய பொழுதின் ஆழ்ந்த அமைதியில்தான் அவர்கள் ஒரு கடுங்குளிர் அலையென அச்சத்தை உணர்ந்தனர். அது அவர்கள்மேல் எடையுடன் ஏறி அமர்ந்து மூச்சை திணறச்செய்தது. கால்களை எடைதாளாமல் வளைய வைத்தது. நெஞ்செலும்புக்கூடு வெடித்துவிடுவதுபோல் அக்கணங்களை அறிந்தனர்.

ஒவ்வொருவரும் அங்கிருந்து தப்பியோட, மைந்தர்களையும் மனையாட்டியரையும் காண விழைந்தனர். அது இயலாதென்று உணர்ந்து உளமுருகி விழிநனைந்தனர். சிலர் வெளிப்படையாகவே விழிநீர்விட்டு விசும்பி அழுதனர். ஒவ்வொரு படைக்கலத்தின் கூரும் அவர்களை நோக்கி வஞ்சத்துடன் திரும்பியிருப்பதாகத் தோன்றியது. மண்ணில் மானுடர் எத்தனை கோடி படைக்கலங்களை கூர்தீட்டி வைத்திருக்கிறார்கள் என வியந்தனர். அவை மானுடர் பிற மானுடர்மீது கொண்ட அச்சமும் ஐயமும் பருவுருக்கொண்டு எழுந்தவை.

படைக்கலம் தீட்டுபவனுக்குள் இருந்து தன்னை கூர்கொள்ளச் செய்வது ஒன்றுண்டு. அது குருதிவிடாய் கொண்டது. அணையாத சினமும் தளராத வஞ்சமும் கொண்டது. அது மானுடரை அழித்துக்கொண்டே இருக்கிறது. பல்லாயிரமாண்டுகாலமாக. அதன் விசை குறையவே இல்லை. வேல்முனைகளை நோக்கியதுமே அவற்றின் கூரின் குளிர்

நெஞ்சில் பாய்வதுபோல, வாள்களின் கூரின் ஒளி வயிற்றைப் பிளந்துசெல்வதுபோல தோன்ற அவர்கள் மெய்ப்பு கொண்டனர். பலர் நிலம் நோக்கினர். சிலர் வானை. சிலர் அப்பால் ஏதேனும் இலக்கை. சிலர் கொடிகளை.

கொடிகளைப்போல அத்தனை பொருளில்லாத எதையும் அவர்கள் அதற்குமுன் கண்டதில்லை என உணர்ந்தார்கள். அந்தக் கொடிகளை வணங்கவும் அவற்றின் ஆணைகளுக்குப் பணியவும் அவற்றுக்காக உயிர்விடவும் அவர்கள் நினைவறிந்த நாள் முதலே பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். அவற்றை நோக்கி களிவெறிகொண்டு கூச்சலிட்டார்கள். அவற்றை நோக்கி நோக்கி மெய்ப்பு கொண்டார்கள். கொடிக்கென வாழ்வதாக உறுதிபூண்டவர்கள், தங்கள் நினைவின் வாழ்வின் மீட்பின் குறி என கொடியை எண்ணிக்கொண்டிருந்தவர்கள் அவர்கள்.

கொடி அரசனின் நேர்த்தோற்றம். அரசன் என எழுந்த குருதிநிரையின் அடையாளம். அவர்களுக்கு அன்னமும் அன்னையும் ஆன நிலத்தின் துளி அது. மூதாதையரின் சொல் எழுந்து விழிநோக்க வானில் துடிப்பது. ஆனால் களத்தில் கிழிந்த வெற்றுத் துணியாகவும் ஒவ்வொரு கணமும் குருதிப்பசிகொண்ட கொடிய விலங்கொன்றின் விடாய்கொண்ட நாவாகவும் இரக்கமேயற்ற அரசாணை ஒன்று பொறித்த ஏடாகவும் பலிநாடும் இருள்தெய்வமொன்றின் முகப்புப்படாமாகவும் அது தோன்றியது. கொடிகளை நோக்கிய அனைவரும் திடுக்கிட்டு விழிதாழ்த்திக்கொண்டார்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையைப்பற்றி எண்ணும் கணம் அது. தாங்கள் எய்தியவற்றை நினைவுகூர்ந்தனர். அவையனைத்தும் முதிரா இளமையிலேயே என்பதை மெல்ல உணர்ந்ததும் ஏக்கம் கொண்டனர். தாங்கள் வாழவே இல்லை

என, வாழ்வுக்கு அப்பால் என சிலவற்றைக்கொண்டு அவற்றை நோக்கி செல்வதையே வாழ்வாக எண்ணி மயங்கி நாள்கடத்தியிருக்கிறோம் என உணர்ந்தனர். அவை அனைத்தும் பிறரால் உருவாக்கி அளிக்கப்பட்டவை. அவற்றை தங்கள் அகம் முழுமையாக நம்பியதுமில்லை. ஆயினும் அவற்றுக்காக வாழ்க்கையை அளித்திருந்தனர்.

ஏனென்றால் வாழ்க்கை முடிவற்றது என்னும் மாயை அவர்களுக்குள் இருந்தது. நாட்கள் நெடிது நீண்டு முன்னால் கிடக்கின்றன என்றும் அள்ள அள்ளக் குறையாதவை காத்திருக்கின்றன என்றும் அவர்களின் ஆழம் நம்பியது. அந்நம்பிக்கை குழந்தைப்பருவத்தில் வந்தமைந்தது. அதை பின்னர் எண்ணி நோக்கியதே இல்லை. தொடப்படாததாக அது அங்கிருந்தது. கையிடுக்கினூடாக காலம் ஒழுகுவதை உணர்ந்திருந்தபோதும்கூட அவர்கள் எண்ணிய அனைத்தையும் அடையும் பொழுது எழவிருப்பது என்றே மயங்கினர்.

அந்நினைப்பு சிலரை விழிகசிய, நெஞ்சுலையச் செய்தது. சிலரை நெடுமூச்சுடன் தளரவும் சிலரை எவர் மேலோ என வஞ்சம்கொண்டு பல்லிறுக்கவும் செய்தது. சிலர் மட்டும் கசப்புடன் சிரித்துக்கொண்டார்கள். அச்சிரிப்பை அருகிருந்தோர் ஐயத்துடன் நோக்க அவர்கள் நோக்குபவர்களின் உள்ளத்தை எண்ணி மேலும் சிரித்தனர். அச்சிரிப்பு அவர்களை அத்தருணத்தின் இறுக்கத்திலிருந்து முற்றாக விடுவித்தது.

போர்ப்பறை முழங்கிய கணம் அவர்கள் திகைத்து செயலற்று நின்றனர். உள்ளமும் உடலும் தனித்தனியாக பிரிந்துவிட்டதுபோல. மீண்டும் மீண்டும் போர்ப்பறை அறைகூவியது. “செல்க! செல்க!” என ஆணையிட்டது. “உயிர்கொடு! உயிர்கொடு!” என அது ஒலித்தது. தங்களை

முந்தைய கணத்திலிருந்து அறுத்துக்கொண்டு அவர்கள் அந்த உச்சக்கொந்தளிப்பு நோக்கி பாய்ந்தார்கள். அடியிலா ஆழம் நோக்கி பாய்பவர்கள்போல. இருண்ட ஆழம். வெறுமையின் முடிவிலி.

முரசொலிகள் ஆணையிட்டுக்கொண்டே இருந்தன. இருளில் சென்றுகொண்டிருந்த சுபாகு தன் எதிரில் வந்த பெண்ணைக் கண்டு நின்றான். அவள் கரிய ஆடை அணிந்திருந்தாள். விழிகள் கனிவு கொண்டிருந்தன. ஒரு கையில் அமுதகலமும் மறுகையில் கொடியும் சூடியிருந்தாள். சுபாகு தன் புரவியை இழுத்து நிறுத்தினான். அவள் அருகணைந்து தன் கையிலிருந்த கலத்தை அவனை நோக்கி நீட்டினாள். அவன் அதை வாங்கியபின் அவள் விழிகளை நோக்கினான். அவள் முகத்தில் புன்னகை இல்லை. உதடுகள் இறுகியிருந்தன. ஆனால் விழிகளின் ஒளி கனிவுகொண்டிருந்தது. வைரங்கள்போல. வைரங்கள் கனிவுகொண்டு ஒளிசூடிய கூழாங்கற்கள்.

அவன் அந்தக் கலத்தைத் தூக்கி அதிலிருந்த குளிர்ந்த இனிய மதுவை அருந்தினான். அது நரம்புகளில் ஓடும் மெல்லிய அதிர்வாக உடலெங்கும் பரவியது. கைவிரல்நுனிகளை அதிரச்செய்தது. இனிப்புண்ணும் நாக்கு என காதுமடல்கள் தித்தித்தன. அவன் முகம் மலர்ந்தது. அக்கணம் வரை அவனை அழுத்திய அனைத்துத் துயர்களும் விலகின. அவன் முகம் மலர்ந்தது. "வாழ்த்துகிறேன், அன்னையே! என்னை மீட்டீர்கள்" என்றான். அவள் கலத்தை வாங்கிக்கொண்டு புரவியில் கடந்துசென்றாள். அவன் உள்ளம் உவகையில் திளைக்க புரவியில் படைநடுவே சென்றான்.

இருட்கனி - 42

சுருதகீர்த்தி தன் குடிலின் முன் நின்று முகம் துலக்கிக்கொண்டிருந்தபோது புரவியில் வந்திறங்கிய சுருதசேனன் "மூத்தவரே" என அழைத்தபடி அவனை நோக்கி வந்தான். சுருதகீர்த்தி அக்குரலில் இருந்த பதற்றத்தை உணர்ந்ததுமே தன் இயல்பால் மேலும் அமைதியும் சீர்நிலையும் கொண்டு வாயிலிருந்த நீரை உமிழ்ந்துவிட்டு "சொல்" என்றான்.

"மூத்த தந்தை எங்கு சென்றார் என்றே தெரியவில்லை என்கிறார்கள்" என்றான் சுருதசேனன். "அவர் எங்கிருக்கிறார் என்று வினவி இளைய யாதவர் நேற்றிரவே ஏவலரை அனுப்பியிருக்கிறார். அவர் தன் குடிலில் இல்லை என்று ஏவலர்கள் சென்று சொன்னார்கள். எனில் அருகிலிருக்கும் காடுகளில் தேடுக என்று இளைய யாதவர் ஆணையிட்டார். நாற்பது ஒற்றர்கள் சூழ்ந்திருக்கும் காடுகளெங்கும் சென்று தேடியிருக்கிறார்கள். மழை பெய்துகொண்டிருப்பதனால் காட்டுக்குள் செல்வது கடினமாக இருந்தது. எங்கும் மூத்த தந்தை இல்லை" என்றான்.

"தந்தை எங்கு சென்றிருப்பாரென்று இளைய யாதவராலும் உய்த்துணரக்கூடவில்லையா?" என்று சுருதகீர்த்தி கேட்டான். "இல்லை, அவரே சற்று பதற்றமடைந்து ஏவலரை அனுப்பி இளைய தந்தையரிடம் விரைந்து மேலும் ஒற்றர்களை அனுப்பும்படி கோரியிருக்கிறார். தந்தை என்னிடம் தங்களிடம் வந்து கூறும்படி சொன்னார்" என்றான் சுருதசேனன். "நான் என்ன செய்யவேண்டும்?" என்றான் சுருதகீர்த்தி. "என்னிடம் தெற்குக்காட்டை எல்லை கடந்து சென்று நோக்கி வரும்படி

ஆணையிட்டனர். நீங்கள் என்ன செய்யவேண்டும் எனச் சொல்லவில்லை" என்றான் சுருதசேனன்.

"நான் உடைகளை அணிந்துகொண்டு இப்போதே கிளம்புகிறேன்" என்று சுருதகீர்த்தி சொன்னான். "தந்தையைத் தேடி கண்டடையும்படி ஆணை என்று கொள்கிறேன்." சுருதசேனன் "ஆம், பிறரால் இயலாதது உங்களால் கூடும்" என்றான். "தந்தையர் இருவரும் காட்டுக்குள்தான் சென்றிருக்கிறார்கள். இன்னும் அரைநாழிகைக்குள் மூத்த தந்தை திரும்பி வந்தாகவேண்டும். படைகள் ஒருங்கவேண்டும். சூழ்கை அமைத்து போர்முகம் செல்ல வேண்டிய பொழுது இது. அவரை நேரில் கண்டாலொழிய படைகள் ஊக்கம்கொள்ளப் போவதில்லை."

"நேற்றிரவு நிகழ்ந்தவற்றுக்குப் பின் அவர் அனைத்தையும் உதறி துறவியென சென்றுவிட்டால்கூட வியப்பில்லை" என்று சுருதகீர்த்தி சொன்னான். "சிறிய தந்தை என்னிடம் சொன்னார் பிற எவரையும்விட தங்கள் தந்தையின் உளத்தடத்தை தங்களால் தொடர இயலும் என்று. பிறரிடம் உசாவ வேண்டாம், உங்கள் அகம் நோக்கி தடம் உணர்ந்து செல்க, தங்களால் தந்தையை கண்டடைய முடியும்." சிலகணங்கள் அவனை நோக்கி நின்ற சுருதகீர்த்தி "முயல்கிறேன்" என்றபடி குடிலுக்குள் சென்றான்.

சுருதசேனன் பதற்றத்துடன் காத்திருந்தான். சுருதகீர்த்தியின் அமைதி அவன் பதற்றத்தை மேலும் கூட்டியது. சுருதகீர்த்தி வெளியே வந்து அவனை நோக்காமல் கடந்துசென்று புரவியில் ஏறிக்கொண்டான். "நானும் உடன் வரவா?" என்று சுருதசேனன் கேட்டான். "இல்லை, தனித்துச் செல்கையில் மட்டுமே நான் என் அகத்தை தொடர இயலும். தனிமையில் எப்போதும்

என்னை நான் என் தந்தையாகவே கற்பனை செய்துகொள்வதுண்டு" என்றான் சுருதகீர்த்தி. "நானும் அதைச் செய்வதுண்டு" என்றான் சுருதசேனன். அவன் முகம் மலர்ந்தது. "தந்தையாகவே என்னை உணர்கையில் நான் முழுமைகொண்டவன் ஆகிறேன்."

"தந்தையென என்னை எண்ணிக்கொள்கையில் மட்டும் வரும் விடுதலை ஒன்றை நான் அடைவேன். அதை இம்முறை உணர்ந்தால் இப்போது நான் செல்லும் தடமே அவருடைய தடமாக இருக்கும்" என்ற சுருதகீர்த்தி புரவியைத் தட்டி மரப்பலகைகளினூடாக இருபுறமும் ஒருங்கிக்கொண்டிருந்த பாண்டவர்களின் படைப்பெருக்கினூடாகச் சென்றான். வேல்களும் வாள்களும் ஒன்றையொன்று உரசும் ஒலி, சகடங்களின் ஒலி, புரவிகளும் யானைகளும் பிளிறும் ஒலி எல்லாம் கலந்து பாண்டவப் படை இருளுக்குள் முழங்கிக்கொண்டிருந்தது. விரைவு விரைவு என செலுத்தி அவன் படையை கடந்துசென்றான்.

அதன் குளம்புத்தாளம் ஒருங்கமைந்து அவன் உள்ளத்துடன் இசைவுகொண்டதும் அவன் கடிவாளத்தை முற்றாக மறந்தான். புரவி இறுதிக்காவலரணை அடைந்து அதைக் கடந்து காட்டுக்குள் நுழைந்தது. புதர்களைக் கடந்து அடர்காட்டுக்குள் நுழைந்தபோது மீண்டும் தன்னுணர்வடைந்து பின்னர் அதை வேண்டுமென்றே நழுவவிட்டான். மேலாடையை காற்றில் பறக்கவிடுவதுபோல. தனக்குப் பின்னால் இருக்கும் பாண்டவப் படை குறித்த தன்னுணர்வை அகற்றினான். சூழ்ந்திருக்கும் காட்டைப் பற்றிய உள்ளறிவையும் கடந்தான். விழிகளை மூடிக்கொண்டு நெடுநேரம் அமர்ந்திருந்தான்.

பின்னர் விழிதிறந்து சூழ்ந்திருக்கும் இடம் என்ன என்பதை உணராதவன்போல் நோக்கியபடி புரவியிலேயே அமர்ந்திருந்தான். புரவி காட்டின் புதர்ச்செறிவுக்குள் வழி திகைத்தது. ஆங்காங்கே நின்று இடம் சூழ்ந்து செருக்கடித்து மீண்டும் சென்றது. சிறிய பிலங்களை தாவிக் கடந்தது. சிறுமேடுகளில் மூச்சிரைக்க ஏறியது. சில இடங்களில் மரங்களுக்கடியில் நின்று இலைகளின்மீதிருந்து சொட்டிய நீரை உடலிலிருந்து சிலுப்பி உதறிக்கொண்டது. மீண்டும் அது சென்று ஓரிடத்தில் நின்றபோது அவன் சற்று அப்பால் மரக்கிளைகளின் நடுவே சிறிய பாறையொன்றின்மேல் அமர்ந்திருந்த அர்ஜுனனை கண்டான்.

ஒருகணம் அவன் உள்ளம் சுண்டப்பட்ட யாழ் என அதிர்ந்தது. பின்னர் புரவியிலிருந்து ஓசையிலாது இறங்கி புரவியைத் தட்டி அமைதிப்படுத்தி அப்பால் நிறுத்திவிட்டு கைகளை நெஞ்சில் கட்டியபடி மழை இருட்துளிகளென உதிர்ந்துகொண்டிருந்த காட்டிற்குள் நின்றான். எதிரில் அர்ஜுனன் இருப்பது எவ்வாறு தன் கண்ணுக்குப்பட்டது என்ற வியப்பை அவன் அடைந்தான். இருளுக்குள் மிக மெல்லிய இருட்கோடால் வரையப்பட்டதுபோல் அவன் உருவம் தெரிந்தது. அவன் விழிகள் மூடியிருந்தன. கைகள் கோத்து மடியில் வைக்கப்பட்டிருந்தன. நீர்த்துளிகள் குழலிலும் தாடியிலும் உருண்டு மார்பிலும் மடியிலும் சொட்டிக்கொண்டிருந்தன.

தன் வரவை அர்ஜுனன் உள்ளாழத்திலெங்கோ உணர்ந்திருப்பான் என்று சுருதகீர்த்தி எண்ணினான். அதை தன் விழிப்புணர்வுக்கு கொண்டு வந்து அவன் திரும்பிப்பார்ப்பது வரை அவ்வாறு அங்கு நின்றிருப்பதே முறையாகும் என்று

தோன்றியது. அர்ஜுனனை அவன் அப்படி கூர்ந்து நோக்கியது எப்போது? இளமைந்தனாக அமர்ந்து வில்பயிலும் தந்தையை அவன் விழி விலக்காமல் நோக்கியதுண்டு. பின்னர் அந்தக் காட்சியை நெஞ்சில் தேக்கி இளமையை கடந்தான். அவைகளில் அவன் தந்தையை நோக்குவதுண்டு. ஆனால் நெடுநேரம் விழிநிலைக்க நோக்க தயக்கம் ஏற்படும். அவர் கான்மீண்டபின் அவன் அவரை கூர்ந்து நோக்கியதே இல்லை எனத் தோன்றியது.

அர்ஜுனன் விழிகள் திறந்து அவனை பார்த்தான். அக்கணத்தில் விந்தையானதோர் உளமயக்கை சுருதகீர்த்தி அடைந்தான். அவன் அந்த மரத்தடியில் ஊழ்கத்தில் அமர்ந்திருந்து விழித்து எதிரே அவனை நோக்கி நின்றிருந்த தந்தையை பார்த்தான். அர்ஜுனன் அவனை நோக்கி "என்ன?" என்றான். "தங்களை தேடிக் கண்டுபிடித்து வரும்படி இளைய யாதவரின் ஆணை" என்றான். பெருமூச்சின் ஒலியில் "ஆம்" என்றபடி அர்ஜுனன் எழுந்தான். "தாங்கள் இருக்குமிடத்தை அவர் அறியக்கூடவில்லை என்பது இதுவே முதன்முறையாக இருக்கும் போலும்" என்று சுருதகீர்த்தி மேலும் சொன்னான்.

அவன் அந்தக் கணத்தின் இறுக்கத்தை தளர்த்த பேச விழைந்தான். பேச்சு அதன் மேல்தளத்தை கலைத்து உள்ளிருக்கும் மெய்யான சிலவற்றை வெளிக்கொண்டுவரும் என்று தோன்றியது. "உங்களைத் தேடி ஒற்றர்கள் எல்லா திசைகளுக்கும் சென்றிருக்கிறார்கள், தந்தையே. நான் பின்னிரவில் இங்கு வந்தேன்" என்றான். தான் சொன்ன முந்தைய சொற்றொடரின் பொருள் என்ன என்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. அவன் உள்ளத்தின் ஆழத்தில் இளைய யாதவர்மேல் ஒரு பொறாமை இருந்தது.

அதே பொறாமை அபிமன்யுவுக்கு இருந்தது. அன்னை சுபத்ரைக்குக்கூட இருந்தது.

“நான் தனிமையை நாடினேன்” என்று அர்ஜுனன் சொன்னான். “தாங்கள் கொண்டுள்ள உளநிலை எனக்குப் புரிகிறது, தந்தையே” என்றான் சுருதகீர்த்தி. “என் உள்ளத்தில் ஒன்றுமில்லை” என்றபடி அர்ஜுனன் எழுந்தான். “மெய்யாகவே வெறுமை. முன்னர் இதை இப்படி உணர்ந்ததே இல்லை.” மேலாடையை அணிந்தபடி “விந்தையானதோர் கனவு என்னை எழுப்பியது. நீ இங்கு ஊழ்கத்தில் அமர்ந்திருப்பதுபோல், உன்னைத் தேடி நான் வந்து நின்றிருப்பதுபோல் கனவு கண்டேன்” என்றான்.

சுருதகீர்த்தி புன்னகைத்தான். “வருக!” என்று அவன் தோளில் தட்டியபடி அர்ஜுனன் நடந்தான். “நீங்கள் புரவியில்லாமலா வந்தீர்கள்?” என்று சுருதகீர்த்தி கேட்டான். “இங்கு வர நான் எண்ணவில்லை. என் கால்களால் கொண்டுவரப்பட்டேன்” என்று அர்ஜுனன் சொன்னான். “இளைய யாதவர் தங்களை எதிர்பார்க்கிறார்” என்று சுருதகீர்த்தி சொன்னான். “ஆம், அனைவருமே எதிர்பார்த்திருப்பார்கள். இன்றுபோல் என் வில்லை நம்பி என்றுமே ஊழ் காத்திருந்ததில்லை” என்றான் அர்ஜுனன்.

“இன்று என்ன நிகழும்? நீங்கள் வெல்வீர்கள் என்று நிமித்திகர்களின் கூற்று உள்ளது. அன்றி தோற்பீர்கள் என்றால் களத்தில் மடிவீர்கள். அதிலுமென்ன?” என்று சுருதகீர்த்தி சொன்னான். அர்ஜுனன் ஒன்றும் சொல்லவில்லை. “களத்தில் மடிவதொன்றும் வீரனுக்கு இழிவல்ல. வெற்றி தோல்வியை நிகரெனக் கருதி போர்க்களம் எழுபவனே வீரனெனப்படுவான் என்று நான் கற்றுள்ளேன்” என்று சுருதகீர்த்தி மீண்டும்

சொன்னான். அர்ஜுனன் புன்னகைத்து பேசாமல் நடக்க சுருதகீர்த்தி "தந்தையே, நீங்கள் சிறுமை செய்யப்படுவீர்கள் என்று எண்ணுகிறீர்களா?" என்றான்.

அர்ஜுனன் திரும்பி நோக்காமல் "நீ என்ன எண்ணுகிறாய்?" என்று கேட்டான். "நீங்கள் சிறுமை செய்யப்படமாட்டீர்கள். அவர் உங்களை அவ்வாறு நடத்தமாட்டார்" என்று சுருதகீர்த்தி சொன்னான். "இரு வகை ஆணவங்களால் ஆனவர்கள் அரசரும் மூத்த தந்தை பீமசேனனும். அவர்களின் ஆணவத்தை அழிக்கும் நோக்கம் அங்கருக்கு வந்தது இயல்பே. அதை நிகழ்த்துபவர்கள் மானுட உள்ளங்களை ஊர்தியெனக் கொள்ளும் தெய்வங்கள். எண்ணி நோக்குக, அங்கர் அவர்களுக்குச் செய்த அவ்விழிவை நீங்கள் செய்ததில்லையா? உள்ளத்தின் மிக ஆழத்தில்? ஏதேனும் ஒரு கனவில்?"

அர்ஜுனன் "ஆம்" என்றான். "நேற்று அரசர் அவையில் அதை சொன்னபோது நானும் எண்ணினேன்" என்றான் சுருதகீர்த்தி. "அதை எங்கோ அவரும் அறிவார். அதைத்தான் அவர் நேற்று சொன்னார். அங்கரால் சிறுமை செய்யப்பட்டது உங்களால் சிறுமை செய்யப்பட்டதற்கு நிகர் என்றார். அவர் அதற்கு சொன்ன சொற்களும் நாநெறியும் மிகையானவை, பொய்யானவை. ஆனால் உள்ளாழத்தில் அதற்கொரு மெய்மை உண்டு. அவ்வாறு ஆழத்தில் ஒரு துளி மெய்மை இல்லையென்றால் அத்தனை வெறிமிக்க உணர்வெழுச்சிகள் ஒருபோதும் உருவாகாது. அத்தனை ஆழமான ஐயம் ஒருபோதும் இன்மையிலிருந்து எழவும் எழாது" என்றான்.

"உண்மை" என்று அர்ஜுனன் சொன்னான். சுருதகீர்த்தி "உங்கள் உள்ளத்தால் நீங்கள் வில் கொண்டு தருக்கியதில்லை. அங்கரை எந்நிலையிலும் இழிவுபடுத்தியதுமில்லை. எப்போதும் மூத்தவர்

என்றே அவரை கருதி வந்திருக்கிறீர்கள்" என்றான். அர்ஜுனன் நிற்க சுருதகீர்த்தியும் நின்றான். இருவர் முகங்களும் ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டன. "அந்தக் கதைகளை நீ நம்புகிறாயா?" என்றான் அர்ஜுனன். "அறியேன். ஆனால் நீங்கள் அவருக்கெதிராக போரிட்டு எழும்போது நான் ஒன்று உணர்ந்தேன், நீங்கள் உங்களுக்கெதிராகவே போர்புரிகிறீர்கள். உங்கள் பேருருவுக்கு எதிராக."

"ஆம்" என்று அர்ஜுனன் சொன்னான். "உங்களையே நூறு முறை ஆயிரம் முறை கிழித்துக் கிழித்து முன் செல்கிறீர்கள். அங்கு பெரும் மலையென எழுந்து நின்றிருக்கும் உங்கள் மேல் முட்டி திரும்பி வருகிறீர்கள். அதைத்தான் நான் போர்க்களத்தில் பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று சுருதகீர்த்தி மேலும் சொன்னான். "அதை அவரும் அறிவார். நீங்கள் அவரை அவ்வாறு நீங்கள் என்று உணர்ந்தீர்கள் என்பதனாலேயே அவரும் உங்களை தானென்று உணர்ந்திருப்பார். எனவே ஒருபோதும் அவர் உங்களை சிறுமை செய்யமாட்டார்."

"இன்று களத்தில் நான் வீழ்வேன் என எண்ணுகிறாயா?" என்று அர்ஜுனன் கேட்டான். சுருதகீர்த்தி ஒன்றும் சொல்லவில்லை. "சொல்க, இன்று நான் விழக்கூடுமா?" என்று அர்ஜுனன் மீண்டும் கேட்டான். "நான் எண்ணுவதில் என்ன உள்ளது?" என்றான் சுருதகீர்த்தி. "நான் என்ன எண்ணுகிறேன் என உணர்வதற்கே உன் சொல் கேட்டேன். உன்னில் எழுவது எனது நா" என்றான் அர்ஜுனன். சுருதகீர்த்தி மேலும் தயங்க "சொல்" என்றான் அர்ஜுனன். "நிமித்தக்கூற்று..." என சுருதகீர்த்தி தொடங்க "நான் உன் ஆழத்திலெழும் சொற்களைக் கேட்டேன்" என்றான் அர்ஜுனன்.

“தந்தையே, அங்கரை வெல்ல எவராலும் இயலாது” என்று சுருதகீர்த்தி சொன்னான். அர்ஜுனன் ஒன்றும் சொல்லவில்லை. “வெற்றியும் தோல்வியும்...” என சுருதகீர்த்தி சொல்லத்தொடங்க அர்ஜுனன் கையால் அவனை அமர்த்தி “அது உனக்கு கற்பிக்கப்பட்டது. நான் உன்னை பயிற்றுவிக்கவில்லை. என் இளமையிலிருந்து இதுவரை வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றைப்பற்றி நான் எண்ணியதில்லை. எந்நிலையிலும் தோல்வியைப்பற்றி உளம்கொண்டதில்லை. ஆகவே வெற்றி என்றும் எனக்குரியதாகவே இருந்தது” என்றான்.

“நான் இங்கு வந்து அமர்ந்திருந்தது தோல்வியை எண்ணி அல்ல. என் வெற்றி எவ்வாறு அமையக்கூடுமென்று எண்ணி மட்டும்தான். வெற்றிதோல்வி என்னும் சொல்லை தன் உள்ளத்தில் கொண்டவன் அறுதிவெற்றியை அடைவதில்லை. வெற்றியை மட்டும் எண்ணுபவனே எப்போதும் வெற்றியை அடைகிறான். நான் இன்று வரை எங்கும் தோற்றவனல்ல” என்றான் அர்ஜுனன். சுருதகீர்த்தி “அது நிகழ்க!” என்றான்.

அவர்கள் காட்டைவிட்டு வெளியே வரும் வரை பிறகு ஒன்றுமே பேசவில்லை. காட்டின் எல்லையில் அவர்களுக்காக இளைய யாதவரின் தூதன் காத்திருந்தான். தலைவணங்கி “இளைய யாதவர் தங்களுக்காக தன் குடிலில் ஒருங்கியிருக்கிறார், அரசே” என்றான். அர்ஜுனன் “நான் என் குடிலுக்குச் செல்ல வேண்டும். ஆடைமாற்றி அணிகளும் கவசங்களும் அணிந்து செல்கிறேன்” என்றான். “அல்ல. அங்கு அவர் ஒரு சிறு வேள்வியை நிகழ்த்துகிறார். தாங்கள் வந்து அதை முழுமை செய்யவேண்டுமென்று விரும்புகிறார்” என்றான் ஏவலன்.

“வேள்வியா, அவரா?” என்று அர்ஜுனன் திகைப்புடன் கேட்டான். “ஆம், நேற்று பின்னிரவிலேயே அதை தொடங்கிவிட்டார். அதை நிகழ்த்தும்பொருட்டு ஓர் அதர்வவேதியான அந்தணரை அழைத்துவரும்படி எனக்கு நேற்று முற்பகலில் ஆணையிட்டார். அருகிருக்கும் சிற்றூருக்குச் சென்று அந்தணரை நான் அழைத்துவந்தேன். களம் வரைந்து வேள்விக்குளம் அமைத்து வேள்வி தொடங்குகையில் இரவு கடந்துவிட்டது” என்றான் ஏவலன்.

“அதர்வ வைதிகரா?” என்று அர்ஜுனன் கேட்டான். “நிகழ்வது ஷுத்ர யாகமா?” “அந்த அளவுக்கு வேள்விகளைப் பற்றி எனக்குத் தெரியாது, அரசே” என்றான் ஏவலன். “அதில் ஏழுவகை குருதி, ஏழுவகை மலர்கள், ஏழுவகை அன்னம், ஏழுவகை விறகுகள், ஏழுமங்கலங்கள் இடப்பட்டனவா?” என்றான் சுருதகீர்த்தி. “விலங்குகளின் குருதி ஆகுதி செய்யப்பட்டது. நான் காட்டிலிருந்து பன்றி ஒன்றை கொண்டுவந்து கொடுத்தேன்” என்றான் ஏவலன். அர்ஜுனன் “எனில் அதுதான்” என்றபின் “யாதவர் அதை செய்வார் என்று என்னால் எண்ணவும் கூடவில்லை” என்றான்.

“அவர் செய்யக்கூடாதது என ஏதுமில்லை” என்றான் சுருதகீர்த்தி. “மேலும் இன்று அவர் சற்று நிலைகுலைந்திருப்பதுபோல் தோன்றியது.” அர்ஜுனன் “ஆம், நானும் எப்போதும் அவரை இவ்வுளநிலையில் அறிந்ததில்லை” என்றான். “செல்வோம்” என்றபின் ஏவலனின் புரவியில் அர்ஜுனன் ஏறிக்கொண்டான். “அவர் வேள்விகளை ஏற்காதவர்” என்று அர்ஜுனன் சொன்னான். “அவருக்கு தேவைப்பட்டிருக்கலாம்” என்றான் சுருதகீர்த்தி. “அவருடைய

தேவர்கள் சொற்களில் வாழ்பவர்கள். ஊழ்கத்தில் எழுபவர்கள்" என்றான் அர்ஜுனன்.

அர்ஜுனனும் சுருதகீர்த்தியும் புரவிகளில் விரைந்து சென்றார்கள். சுருதகீர்த்தி "அவர் இனி வேள்விகள் தேவையில்லை என்று சொன்னதாக சூதர்கள் பாடுகிறார்கள். வேள்விகளால் தேவர்கள் நிறைவடைகிறார்கள் என்பதை அவர் மறுக்கிறாரா?" என்றான். "ஆம், வேள்விகள் அறியாத் தெய்வங்களுக்கு அளிக்கப்படும் கொடைகள் என்று அவர் ஒருமுறை சொன்னார். அறிந்து, அறிபடுவதற்கு அளிக்கும் ஒன்றாக அறிவொன்றே இருக்க முடியும். அறிவில் அமைந்து அறிவென்றாவதே விண்ணுலகாகவும் அமையும் என்றார்."

"எனில் இதை எதற்காக இயற்றுகிறார்?" என்றான் சுருதகீர்த்தி. அர்ஜுனன் "எனக்குத் தெரியவில்லை. ஆனால் இன்றைய போருடன் அது எவ்வகையிலோ தொடர்பு கொண்டுள்ளது. இன்று எதையோ அவர் முன்னால் உய்த்துணர்ந்திருக்கிறார்" என்று அர்ஜுனன் சொன்னான். "ஏன்?" என்று சுருதகீர்த்தி கேட்டான். "அருகிருக்கும் சிற்றூரிலிருந்து அதர்வ வைதிகரை தேடிக் கொண்டுவரும்படி யாதவர் முற்பகலிலேயே ஆணையிட்டிருக்கிறார். மூத்த தந்தையர் இருவரும் சிறுமைப்படுத்தப்படுவதற்கும் முன்பேயே." அர்ஜுனன் ஒன்றும் சொல்லவில்லை.

அவர்கள் இளைய யாதவரின் குடில் முகப்பை அடைந்தபோது விழி துலங்கும் அளவுக்கு மெல்லிய வெளிச்சம் விண்ணிலிருந்து இறங்கத் தொடங்கியிருந்தது. மழைத்தாரைகளை நெற்றிமயிர் முகத்தில் விழுந்ததுபோல மிக அருகில் காணமுடிந்தது. பந்தங்களின் முகப்பில் மழை பொன்னிறச் சரடுகளாக அசைந்துகொண்டிருந்தது. புரவிகளை

நிறுத்திவிட்டு இறங்கி காவல் நின்ற ஏவலனை நோக்கி கையசைத்துவிட்டு இருவரும் இளைய யாதவரின் குடில் நோக்கி சென்றனர்.

குடில் முற்றத்திலேயே உள்ளே வேள்விப்புகையின் கெடுமணத்தை உணரமுடிந்தது. பசுங்குருதி தீயில் பொசுங்கும் மணம் என்று சுருதகீர்த்தி உணர்ந்தான். குடிலுக்குள் வேள்விக்குளம் அமைக்கப்பட்டிருப்பதை குடிலுக்கு மேலிருந்து கனிந்தெழுந்து மழைத்தாரைகளால் அறைபட்டு சிதறி மேலே சென்றுகொண்டிருந்த வெண்புகை காட்டியது. அர்ஜுனன் குறடுகளைக் கழற்றிவிட்டு கைகூப்பியபடி குடிலுக்குள் நுழைய குறடுகளைக் கழற்றிவிட்டு குடில் வாயிலில் நின்று உள்ளே பார்த்தான் சுருதகீர்த்தி.

அர்ஜுனனைப் பார்த்ததும் உள்ளே அமர்ந்திருந்த இளைய யாதவர் வரவேற்கும்முகமாக தலையசைத்தார். அவருக்கு முன்னால் அமைக்கப்பட்ட செங்கல்லால் ஆன அறுகோண வடிவிலான வேள்விக்குளத்தில் தழல் எழுந்து படபடத்துக்கொண்டிருந்தது. அதற்கப்பால் குருதியும் அரிசிமாவும் கலந்து தரையில் வரையப்பட்ட கோலக்களத்தில் விரிக்கப்பட்ட தர்ப்பைப்பாய் மேல் அமர்ந்திருந்த முதிய வைதிகர் கரடித் தோலை போர்த்தியிருந்தார். வலக்கையில் இருந்த சிறிய கரண்டியால் நெய்யை அள்ளி எழுதழலில் ஊற்றி இடைமுறியாது அதர்வ மந்திரங்களை சொல்லிக்கொண்டிருந்தார்.

அவருடைய வலக்கை வேறொரு உயிர் என நெளிந்தும் அசைந்தும் வெவ்வேறு முத்திரைகளை உருவாக்கியது. நாகம்போல். அறியா உருவொன்றின் நாக்குபோல். இணைந்தும் பிரிந்தும் அசைந்த விரல்களிலிருந்து மான்கள்

செவியசைத்தன. நாகங்கள் படமுயர்த்தின. புலிகள் நாசி நீட்டி முன்னகர்ந்தன. கழுகு சிறகடித்தெழுந்தது. நீரலைகள் சுழித்துப் பெருகின. அலைகொண்டன. தழல்கள் நின்றாடின. முகில்கள் முட்டிக்குவிந்தன. ஆறுகள் பெருகி கடலை அடைந்தன. கடலலைகள் அறைந்து பின்னணைந்தன.

அவற்றுடன் இணைந்து சொற்கள் எழுந்தன. சொற்களை விரல்கள் அம்மானையாடின. சொற்கள் முத்திரைகள் மேல் சிறகு மடித்து வந்தமைந்தன. ஒவ்வொரு கணம்தோறும் புதுப்பொருள் கொண்டபடி உருமாறியது அதர்வம். அமர்க என்று இளைய யாதவர் கைகாட்ட அர்ஜுனன் வணங்கியபடி அவர் கைகாட்டிய இடத்தில் விரிக்கப்பட்டிருந்த மான்தோலில் அமர்ந்தான். குடிலுக்குள் நிறைந்திருந்த புகை சுருதகீர்த்தியை இருமச் செய்தது. பின் திரும்பி ஓசையிலாது அதை வெளியிட்டான்.

இளைய யாதவர் புலித்தோலில் அமர்ந்திருந்தார். ஓடக்குழலை மடியில் வைத்து கைகளை மார்பில் கட்டியபடி தழலை நோக்கிக்கொண்டிருந்தார். அர்ஜுனன் அந்த வேள்வி எதன் பொருட்டு என்ற எண்ணத்தை உள்ளத்தில் கொண்டிருந்தமை அவன் முகத்தில் தெரிந்தது. சுருதகீர்த்தி அந்த எழுதழலில் தெரிந்த மூன்று முகங்களையும் மாறி மாறி நோக்கிக்கொண்டிருந்தான். அர்ஜுனனின் தவிப்பும் இளைய யாதவரின் ஆழ்ந்த அமைதி நிறைந்த புன்னகையும் சொற்களுக்கேற்ப பற்றியெழுந்து தழலென்றே ஆகியிருந்த வைதிகரின் முகமும் கனவில் என தெளிந்து முன் நின்றது.

வேள்வியை முடித்து இறுதிக்கொடை முத்திரையைக் காட்டி வணங்கி கண்மூடி ஊழ்கத்தில் அமர்ந்தார் வைதிகர். பின்னர் விழிதிறந்து பெருமூச்சுவிட்டு “சொல்க!” என்றார். அவரது

குரலில் இருந்த மானுடம் கடந்த ஓசை சுருதகீர்த்தியை திகைக்கச் செய்தது. “இங்கு எழுக வேள்விக்குரிய தேவன்!” என்றார் இளைய யாதவர். “எங்கள் சொற்களை அவரே செவிகொள்க!”

வைதிகர் உரத்த குரலில் “ஆவாகர் எழுக! ஆவாகர் எழுக!” என்றார். இளைய யாதவரின் குடிலுக்கு மறுபக்கம் அப்படி ஒரு வாயில் இருப்பதை அப்போதுதான் சுருதகீர்த்தி உணர்ந்தான். அது எப்போதும் மரவுரித்திரையொன்றால் மூடப்பட்டே இருந்தது எனத் தெரிந்தது. அத்திரையை விலக்கி அங்கிருந்து ஓர் இளம்வைதிகன் பதினைந்து அகவைதோன்றும் வைதிகச் சிறுவன் ஒருவனை கைகள் பற்றி அழைத்து உள்ளே கூட்டி வந்தான்.

அவன் நோக்கு கொண்டவனாயினும் விழியிலாதவன்போல நடந்து வந்தான். அவனை வேள்விக்குளத்தின் வலப்பக்கம் அமரச்செய்தார். அங்கு இடப்பட்டிருந்த தாமரை வடிவ பீடத்தில் அவன் அமர்ந்தான். கால்களை மலரமைவில் வைத்து கைகளை மடியில் ஊழ்க நிலையில் பதித்து அமைந்தான். அவன் விழிகள் அனலையே நோக்கிக்கொண்டிருந்தன. அவன் முகத்தில் செஞ்சுடர் அலையடித்துக்கொண்டிருந்தது.

மிக அழகிய சிறுவன் எனும் எண்ணத்தை சுருதகீர்த்தி அடைந்தான். அனைத்து இலக்கணங்களும் கொண்ட முகம். பழுதற்ற இளம் உடல். ஒருகணம் அவனை வேள்விக்குளத்தில் பலியிடப்போகிறார்களோ என்ற எண்ணம் ஏற்பட்டு அவன் உடல் நடுங்கினான். அவ்வண்ணமெனில் உட்சென்று தன் உயிரை அளித்தாவது அவனைக் காக்க வேண்டுமென்று எழுச்சி கொண்டான். ஆனால் தன் சுட்டுவிரலை அவ்விளைஞனின் நெற்றிப்பொட்டில் ஊன்றியபடி வைதிகர்

இந்திரனைப் போற்றும் அதர்வ வேதப்பாடல்களை ஓதத் தொடங்கினார். ஒரு கையால் இந்திரனை செய்கைகளால் வழுத்தினார். அவர் உதவியாளர் இடப்புறம் அமர்ந்து அவியும் நெய்யுமிட்டு எரியோம்பினார்.

இளைஞன் இந்திரனாக உருவகப்படுத்தப்படுவதை உணர்ந்ததும் சுருதகீர்த்தி ஆறுதல் கொண்டான். பெருமூச்சுடன் கதவருகே சாய்ந்து நின்றான். அர்ஜுனன் உளமழிந்தவன்போல் அனலை நோக்கியபடி அமர்ந்திருந்தான். இந்திரனாக உருவகிக்கப்பட்ட இளைஞனை கைகளால் உடலெங்கும் வருடி நிறைவுறச்செய்து "இந்திரன் எழுக! தேவர்கோன் எழுக! விண்வாழி எழுக! அவிகொள் தேவன் எழுக! மின்படையன் எழுக! வெண்முகிலூர்வோன் எழுக! இந்திரன் எழுக!" என்று அதர்வ வைதிகர் குரலெழுப்பினார்.

அவன் விழிகள் மாறிவிட்டிருப்பதை சுருதகீர்த்தி கண்டான். தெய்வச்சிலைகளில் உள்ள பொருளில்லாத வெறிப்பு. "இந்திரனே, இங்கு எழுந்தாய்! நீ வாழ்க! இங்குள்ளோர் விழைவதை அளித்தருள்க!" என்று கூறிய வைதிகர் அவன் முன் ஏழு மங்கலங்கள் கொண்ட தாலத்தைப் படைத்து நிலம் நெற்றிதொட வணங்கினார்.

இருட்கனி - 43

குருக்ஷேத்ரத்திற்கு தென்கிழக்காக செறிந்த காட்டிற்குள் அமைந்த சிறு ஊற்றுக்கண் சூரியதாபினி என்று அழைக்கப்பட்டது. அங்கு அரிதாக சில நிமித்திகர்களும் விண்ணுலாவியை வழிபடும் யோகியரும் ஒழிய பிறர் எவரும்

செல்வதில்லை. அவ்வாறொன்று அங்கிருப்பது நிமித்த நூல்களில் மட்டுமே இருந்தது. முள்செறிந்த காட்டுக்குள் வழி தேடி அங்கு செல்வது எளிதாக இருக்கவில்லை என்பதனால் அவ்வாறொன்று இருப்பதையே கற்பனை என்று பெரும்பாலானோர் எண்ணினர். அது கற்பனை என்பதனால் ஆழ்ந்த பொருளை அதற்கு அளித்து, உருவகமென வளர்த்து, பிறிதொன்று என்று ஆக்கி பிறிதொரு இடத்தில் அதை நிறுவிக்கொண்டனர்.

கிழக்கே மணிபூரக நாட்டிற்கு அப்பால் மேரு மலையின் அடியில் சூரியதாபினி இருப்பதாக பின்னாளில் நம்பலாயினர். தொல்நூல்களை உளமயக்கிலாது கற்கவும், அடையாளங்களை செவிச்சொல் மரபெனப் பேணவும் ஆசிரியநிரை இருந்த பூசகரும் யோகியரும் நிமித்திகரும் மட்டுமே அங்கு வந்தனர். அவர்கள் அந்தச் சிறிய ஊற்றைக் கண்டு ஏமாற்றம் அடையவும் இல்லை. ஏனெனில் மிகத் தொல்காலத்திலேயே அடையாளம் காணப்பட்ட எதுவும் மிகச் சிறிதாகவே இருக்குமென அவர்கள் அறிந்திருந்தார்கள். தொன்மையான ஆலயத்தின் சிலைகள் மிகச் சிறியவை. தொன்மையான மலைமுடிகள்கூட சிறியவை என்று அவர்களின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சூரியதாபினியை அணுக முள்செறிந்த புதர்களினூடாக ஓடும் ஓர் ஓடை ஒன்றே பாதை. ஓடையின் வழுக்கும் பாறைகளினூடாக தொற்றி ஏறி, மேலும் மேலும் உள்ளே சென்று, காட்டிற்குள் புதைந்து அமர்ந்திருக்கும் ஒரு பிலத்தைக்கண்டு, அதன் இடைவெளியினூடாக அப்பால் சென்றால் சற்றே தாழ்ந்த வட்ட வடிவ நிலத்தை அடையலாம். அதன் நடுவே சூரியதாபினி ஒரு சிறு குமிழியாக மண்ணுக்குள்

இருந்து எழுந்துகொண்டிருந்தது. தொலைவிலிருந்து நோக்குகையில் அது செந்நிற உடல் கொண்ட விலங்கின் விழிக்குமிழி என்றே தோன்றும். அக்குமிழி அசைய அது செல்பவர்களை நோக்கி விழி திருப்புவது போலிருக்கும். அணுகிய பின்னரே அது குன்றாது குறையாது கூடாது எழுந்துகொண்டிருக்கும் ஊற்றென்று தெரியும். அதனைச் சுற்றி செம்மண்ணாலான வரம்பு கட்டிய சுனைப்பெருக்கு இருந்தது. அதன் நான்கு பக்கமும் நீர் பெருகி கவிழ்ந்தொழுகும்படி கரைவிளிம்பு நிகராக வளைத்திருந்தது.

காலையில் கதிர் எழுகையில் நீர்ப்பெருக்கு கிழக்கு நோக்கி வழிந்து வளைந்தோடி ஓடையை அடையும். கதிர் செல்லும் திசை நோக்கியே அந்த நீர் பெருகி விழும். அந்தியில் மேற்கு திசைநோக்கி விழும் நீர் இரவில் எஞ்சிய அரைவட்டத்தை முடித்து புலரியில் சூரியன் எழும் திசைநோக்கி காத்திருக்கும். அந்த விந்தை அதை கதிரவனின் கோயிலாக ஆக்கியது. சுனைக்கு அப்பால் சிறிய கற்சிலையாக கதிரவன் உயரமில்லாத பீடத்தில் நிலை பொருத்தப்பட்டிருந்தான். நான்கு கைகளில் தாமரையும் அஞ்சலும் அருளலும் காட்டி, நிகர்நிலையில் உடல் கொண்டு அவன் நின்றிருந்தான். அப்பகுதியில் பறவைகளும் சிற்றுயிர்களும் செறிந்திருந்தன. பெரிய உயிர்கள் அச்சுனையில் நீரருந்த வருவதில்லை. எனவே அச்சமிலாது பல்லாயிரக்கணக்கில் சிற்றுயிர்கள் வந்து அந்த ஓடையிலும் சுனையிலும் நீரருந்தின. சூழ்ந்திருந்த புதர்களில் பறவைகள் இரவும் பகலும் கூடி குறுமொழி பேசி முழக்கமென திரண்டிருந்தன. அப்புதர்கள் அனைத்திலும் மலர்களும் விரிந்திருந்தமையால் அப்பகுதி வண்ணங்களாலும் நறுமணங்களாலும் நிறைந்திருந்தது.

முதலில் அச்சுனையைக் காண்பவர்கள் அதைச் சூழ்ந்திருக்கும் அந்த முழக்கத்தை காற்று எழுப்பும் ஓசையென உணர்வார்கள். அல்லது அருகே அருவி இருப்பதாக. மறுகணமே அந்த ஓசை பல்லாயிரம் தனிப்பறவைக்குரல்களாக விரியும்போது உள எழுச்சி அடைந்து கைகூப்பி வணங்குவார்கள். அவர்கள் காலடி எடுத்து வைத்து அணுகுந்தோறும் சிற்றுயிர்கள் அகன்று அவர்களுக்கு வழிவிடும். தங்கள் வாழ்நாளில் கண்டிராத உயிர்களை அவர்கள் அங்கு காண்பார்கள். இவை இங்கிருந்தனவா, விழிக்கு மறைந்து வாழும் கலை இத்தனை முழுமையானதா, நாம் வாழும் உலகு இத்தனை விரிந்ததா என உள்ளம் விம்மிதம் கொள்ளும். விழிச்சுனையின் நீர் மிக இனியது. அதில் இனிமை என எது அமைகிறதென்பது நெடுங்காலமாகவே உசாவப்பட்டு விடையறியாதது. அள்ளி வாயில் விடுகையில் குளிர் கொண்டதென்றே தோன்றும். பிற நீரை விட அது எடைமிக்கது என நா அறியும். விழுங்கிய பின்னர் நாவிலும் உடலெங்கும் உணரும் இனிமை என்பது சுவையல்ல, ஓர் மெல்லுணர்வு என்று கூறினர் அங்கு சென்றோர்.

மீள மீள அருந்தவேண்டுமென்று விடாய் எழுப்புவது அச்சுவை. அருந்தி உடல் நிறைத்ததும் இனிய களைப்பால் அங்கேயே அமரச் செய்துவிடும். அங்கிருந்து மீள உளம் கொளாமல் அங்கேயே இருந்து அம்மயக்கிலேயே உயிர்விட்டவர்கள் உண்டு. அங்கிருந்த மென்சேறு நத்தையின் நாவென வந்து அவர்களை மூடி மண்ணின் வயிற்றுக்குள் கொண்டு செல்லும். அவர்களின் உடலுக்கு மேல் ஓரிரு நாட்களிலேயே சிறு செம்மலர்கள் முளைத்து நிறையும். தேனீக்களும் வண்டுகளும் பொன்னீக்களும் அமர்ந்து எழுந்து ரீங்கரித்துச் சுழலும் யாழொலி சூழ அப்பகுதியை சென்றடைந்து, ஏழுமுறை

அச்சுனையை வலம் வந்து, நீரள்ளி தலையில் விட்டு உடற்தூய்மை செய்து, அங்கிருக்கும் ஏழு வண்ண மலர்களைப் பறித்து கதிரவனின் முன் படைத்து சுடரேற்றி வணங்கி மீள்வது அங்கு வருபவரின் வழக்கம். கண்களை மூடிக்கொண்டு கைநீட்டி பறித்தாலே ஏழு வண்ண மலர்கள் கைநிறைய வந்து சேரும் என்று அந்த இடத்தைப் பற்றிய கதைகள் சொல்லின. ஏழு வண்ணப் பறவைகள், ஏழுவித கனிகள், ஏழு நிறத் தளிர்கள், ஏழு ஒளிகொண்ட கற்கள் அங்கே சூழ்ந்திருந்தன. அங்குள்ள மண்ணுமே ஏழு வண்ணக் கீற்றுகளாக விரித்த பட்டாடையின் அலைமடிப்புபோல தெரிவது.

விழிச்சுனைக்கு புலரிக்கு முன்னரே கர்ணன் விருஷசேனனும் திவிபதனும் தொடர வந்து சேர்ந்தான். சுனைக்கு அருகிலிருந்த சிறிய பாறை வரை வருவதற்கான குறுக்கு வழி அவர்களுக்கு தெரிந்திருந்தது. திவிபதனும் விருஷசேனனும் அங்கு முன்னர் வந்திருக்கவில்லை. தந்தை செல்லுமிடம் ஏதென்று அவர்கள் அறிந்திருக்கவுமில்லை. கர்ணன் பாறைகளினூடாக தொற்றி ஏற அவர்கள் உடன் சென்றனர். விழிச்சுனையை தொலைவிலிருந்து நோக்கியதுமே விருஷசேனன் அவன் முன்னரே நூல்களில் அறிந்த அதே இடம் என்பதை உணர்ந்தான். திவிபதனிடம் ஒலியில்லாமல் “விழிச்சுனை” என்றான். “ஆம்” என்று அவன் சொன்னான். கர்ணன் கைகூப்பியபடி விழிச்சுனையை நோக்கியபடி நீள்காலடிகளுடன் நடந்து சென்று அங்கே நோக்கு கொண்டு அசைந்துகொண்டிருந்த விழிமணியை அடைந்தான். அந்நீரை வலக்கையால் அள்ளி மும்முறை தன் தலையில் தெளித்து நீராடினான். மும்முறை அருந்தி உடல் நிறைத்தபின்

கைகூப்பியபடி கதிரவனின் சிலை நோக்கி சென்றான். அங்கே கால் மடித்து விழிநாட்டி அமர்ந்தான்.

அவனைத் தொடர்ந்துசென்ற மைந்தர் விழிச்சுனையை வணங்கினர். திவிபதன் ஏழு வண்ண இலைகளையும் விருஷசேனன் ஏழு வண்ண மலர்களையும் கொய்து கொண்டுவந்தனர். இரு அகன்ற இலைகளைப் பறித்து அவற்றை தாலமெனக்கோட்டி அவற்றில் அவற்றை நிறைத்துக்கொண்டு வந்து கர்ணன் முன் வைத்தனர். கர்ணன் கதிரவனின் பெயர்களை ஒலியிலாது கூறியபடி அம்மலர்களை எடுத்து சிலையின் காலடிகளில் இட்டு வணங்கினான். அவன் உதடுகளின் அசைவுகளிலிருந்தே அப்பெயர்களை அறிந்துகொண்ட விருஷசேனனும் திவிபதனும் அச்சொற்களை தாங்களும் ஓசையின்றி சொல்லி உடன் உளம் சென்றனர். கருக்கிருள் முன்னரே வடியத் தொடங்கிவிட்டிருந்தது. சுனையை அவர்கள் காணும்போது விழிதுலங்கும் ஒளி இருந்தது. அவர்கள் மலர் கொய்யத் தொடங்கும்போதுதான் வண்ணங்கள் தெரியுமளவுக்கு ஒளி அங்கு பரவியிருப்பதை உணர்ந்தார்கள். வானிலிருந்து அங்கு மட்டும் ஒளி இறங்கியிருந்தது. கதிரவன் ஒரு கைப்பிடி ஒளியை அள்ளி அங்கே வீசியதுபோல.

ஊழ்கத்தில் அமர்ந்த பின்னர் ஒவ்வொரு உளச்சொல்லுக்குமென பொழுது விடிந்தபடியே வந்தது. இலைகள் மிளிர்வு கொண்டன. மலர்வண்ணங்கள் சுடர் ஏந்தின. பறவைக்குரல்கள் உருமாறிக்கொண்டே இருந்தன. தாழ்ந்த கிளையொன்றில் அமர்ந்திருந்த அனல்கொழுந்தென வளைந்த வால் எழுந்த நீள்கழுத்து மாந்தளிர்ப்பீலிச் சேவல் ஒன்று தலை சொடுக்கி நிமிர்ந்து இரு சிறகுகளையும் காற்றில் அசைத்து

“உம்பர் குலக்கோவே இங்கெழுந்தருளாயே!” என்று கூவியது. “எங்கோ வாழ்! எங்கோ வாழ்!” என்றன நாகணவாய்கள். “இங்கெழுக! இங்கெழுக! இங்கெழுக!” என்றன ஆலாக்கள். “இனிதே! இனிதே!” என்றன உள்ளான்கள். “காவலா! காவலா” என்றன காகங்கள். பறவைக்குரல்கள் சொல்திரண்டு கதிரவனை வாழ்த்துவதை சூதர் பாடல்களிலும் காவியங்களின் அணிமுகப்பிலும் விருஷசேனன் பயின்றிருந்தான். அவை மிகைக்கற்பனைகள் என்று கருதியுமிருந்தான். மெய்யென அவை நிகழும் ஓரிடம் இப்புவியில் உண்டென்று அவன் அதற்கு முன்னால் அறிந்திருக்கவில்லை.

வானொளி முதலில் சுனை நீரின் ஒளியிலேயே தெரிந்தது. தண்ணென்ற சுடரென்று நீர்க்கொப்பளிப்பு மாறியது. விழிநிறைக்கும் குளிர்ந்த ஒளி எழுந்து வளைந்து சுழியாகியது. அவ்வளைவில் சூழ்ந்திருந்த காட்டின் பசுமையும் மலர்வண்ணங்களும் நெளியலையென தெளிந்தன. சுழிமையத்தில் விழிக்கூர் ஒன்று அசைவிலாது நின்றது. ஆணையிடுவதுபோல். அன்புகொண்டு கனிந்ததுபோல். கர்ணன் கைகூப்பி எழுந்தபோது பிறிதொரு காலடி ஓசை கேட்டது. வியப்புடன் விருஷசேனன் திரும்பிப்பார்க்க இளம் அந்தணன் ஒருவன் கைகூப்பியபடி சூரியமகள் உஷையைப் போற்றும் வேதச்சொல் உரைத்துக்கொண்டு நடந்து வருவதை கண்டான்.

“**திருமகள்**, **இந்திரனுக்கு** **விருப்பமானவள்**

உஷை **இதோ** **பிறந்தாள்**

உலகுவாழ **அன்னத்தை** **பிறப்பிக்கிறாள்**

விண்மகள்,** **சுடர்மகள்**,** **அங்கிரிசர்களின்** **முதல்வி**

நலம்செய்பவனுக்கு செல்வத்தை அருள்பவள்

உஷையே,** **உன்னை வணங்கினோர் பெற்ற**

பெருஞ்செல்வங்களெல்லாம் எங்களுக்கும் அமைவதாக!**

காளைகள் என முழங்கி உன்னை வரவேற்கிறோம்

கவரப்பட்ட பசுக்கள் அடைபட்ட

மலைவாயில்களை திறக்கிறாய்!**

அவன் குரல் வெள்ளிக்கம்பிபோல் ஒளியுடன் மென்மையாக வளைந்தது. வேதச்சொற்கள் காலையொளியில் தளிர்கள் என எழுந்தன. பதினைந்து அகவைகூட நிறையாத இளைஞன். சிறுவர்களுக்குரிய உடலமைப்பும் மழலைகளுக்குரிய தோல் மினுப்பும் கொண்டிருந்தான். பொன்னிற உடலில் முப்புரி நூல் குறுக்காக ஓடியது. செவிகளில் சிறுமணிக் குண்டலங்கள் அணிந்திருந்தான். கழுத்தில் அவன் கொண்ட வேதநெறியைக் காட்டும் ஒற்றை விழிமணி மாலை புல்சரடில் தொங்கியது. இடையில் அணிந்திருந்த வெண்பட்டாடையும் இரு கைகளிலும் இருந்த மலர்க் குடலைகளும் அவன் அங்கு பூசனைக்கு வருபவன் என்று காட்டின. அவர்களை அவன் முன்னரே பார்த்துவிட்டிருந்தாலும்கூட எவ்வகையிலும் பொருட்படுத்தாதவன்போல் ஒருகணமும் ஓதிய வேதம் ஒலி நலுங்காமல் சீரடி எடுத்து வைத்து நடந்து வந்தான். ஆகவே துயிலிலோ பிற மயக்கிலோ நடந்து வருபவன்போல் தோன்றினான்.

கர்ணன் கைகூப்பி அவனை வணங்கினான். அந்தணன் அவனை விழி நோக்கினாலும் உளம் அறியவில்லை.

வேதச்சொல் ஓதியபடி மும்முறை விழிச்சுனையை சுற்றிவந்து கிழக்கு நோக்கி அமர்ந்தான். தன் கையிலிருந்த மலர்த்தாலத்தை வலப்பக்கம் வைத்து இடப்பக்கம் அரிமணித்தாலத்தை வைத்து மலரையும் அரியையும் எடுத்து சுனை சுழிப்பில் இட்டு கதிர்மகளின் புகழ் பாடும் வேதத்தை பாடினான். ஏற்றம் இறக்கம் இல்லாமல் சிறு அலையென எழுந்து கொண்டிருந்த வேதச்சொல் எத்தனை நுட்பமாக அங்கிருந்த பறவைக்குரல்களுடன் முற்றிணைந்து பிரித்தறிய முடியாதபடி ஆகிறது என்பதை விருஷசேனன் வியப்புடன் அறிந்தான். அந்தப் பறவை ஒலிகளிலிருந்தே தொட்டெடுத்து கோத்த ஒலிகளாலானது அது. மீண்டும் அப்பெருக்கிலேயே சென்று சேர்ந்தது. அங்கிருந்த முடிவிலா நுண்பொருட்களிலொன்று மானுடனுக்கு தன்னை அறிவித்து மீண்டும் அந்த முழுப்பொருள் வெளிக்கு சென்றது.

பின்னர் அங்கிருந்து புதிய ஒலி ஒன்று வந்து அந்த வேதசொல்நிரையில் கலப்பதுபோல் தோன்றியது. வேதம் பறவைக்குரல்களுக்கு ஏற்ப உருமாறுவது போலிருந்தது. புதிய ஒலிகள் அதில் சேர இடம் உண்டா என்ன? ஒரு சொல் நுழையவோ ஒரு சொல் உதிரவோ இயலாதபடி ஏழு முறை பொன்னூலால் கோத்துக் கட்டப்பட்டது வேதம் என்பார்கள். ஆனால் கண்முன் அது உருமாறிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். நாகணவாய்கள், காகங்கள், சிட்டுக்குருவிகள், மரங்கொத்திகள், சேவல்கள், மயில்கள் தங்கள் சொற்களை அதில் கலந்துகொண்டிருந்தன. அவன் தன் திகைப்பு ஓய்ந்தபோது பிறிதொன்றை உணர்ந்தான். ஒழுகும் தெளிந்த நீர்ப்பரப்பில் கரைக் காட்சிகள் படிவது போலத்தான் அந்த ஓசை வேதச் சொல்லொழுக்கில் படிகிறது. அது விழிமயக்குபோல் செவிமயக்குதான்.

வேதம் ஓய்ந்து ஏழு முறை ஓங்கார ஒலியெழுப்பி வணங்கியபின் இளம் அந்தணன் எழுந்து மீண்டும் மும்முறை விழிச்சுனையை வலம் வந்து வணங்கினான். கதிர்த்திசை நோக்கி கைகூப்பி நின்றான். கர்ணன் அருகணைந்து குனிந்து அவன் கால்கள் அருகே நிலம் தொட்டு வணங்கி "இது என் நல்லூழ் என்று எண்ணுகிறேன், உத்தமரே. இந்தக் காலையில் தங்களை நோக்கி விழிமங்கலம் கொள்ளும் பேறு பெற்றேன்" என்றான். விழியசைந்து அப்போதுதான் அவனைப் பார்ப்பதுபோல் முகம் திகைத்து பின்னர் "நீ பொன்றாப் புகழ் பெறுவாய். உன் குலம் இங்கு அரியணை வீற்றிருக்கும். உன் கொடிவழியினர் பாரதவர்ஷத்தின் அனைத்து அரசவைகளிலும் முதலிடம் பெறுவார்கள். இந்நிலத்தில் இனியெழும் எந்தப் படைக்கலப்பயிற்சி நிலையிலும் வில் தொடுபவர் உன்னையும் வழுத்திவிட்டே கல்வி தொடங்குவர். இங்குள்ள சொற்களில் நீ அழியாமல் என்றுமிருப்பாய். இங்குள இளமைந்தர் தங்கள் வாழ்வில் ஒருகணமேனும் நீயென திகழ்ந்து மீள்வர். என்றுமிரு! ஆம், அவ்வண்ணமே ஆகுக!" என்று அந்தணன் அவனை வாழ்த்தினான்.

கர்ணன் திரும்பி தன் மைந்தரைப் பார்த்து அந்தணரை வணங்கும்படி சொன்னான். விருஷசேனனும் திவிபதனும் சென்று அந்தணரை வணங்க "புகழ் பெறுக! என்றும் பெயர் நிலைகொள்க!" என்று அவன் வாழ்த்தினான். கர்ணன் திகைப்புடன் தன் உடலை தானே தொட்டுப் பார்த்து தேடி "உத்தமரே, தங்கள் வாழ்த்துச் சொல் பெற்றேன். இத்தருணத்தில் தங்களுக்குப் பரிசிலென அளிக்க என்னிடம் எதுவுமில்லை. இங்கு வரும்போது விழிகளன்றி அணியேதும் உடலிலிருக்கலாகாது என்று நெறியிருப்பதால் அவ்வண்ணம் வந்தேன். தாங்கள் என் குடிலுக்கு வருவீர்கள் என்றால்

தாங்கள் விழைவது அனைத்தையும் அளிப்பேன்" என்றான். அந்தணன் அவனை கூர்ந்து நோக்கி "சற்று முன் ஒருகணம் நான் உன்னை இந்த நீரில் பார்த்தபோது நீ அணிகள் அணிந்திருப்பதை கண்டேன். பொற்கவசமும் மணிக்குண்டலங்களும் கொண்டிருந்தாய்" என்றான்.

"ஆம். என் உடலை பிறர் அவ்வாறு நோக்குவதை நான் அறிந்திருக்கிறேன். இன்றுவரை நான் அதை முழுமையாக கண்டதில்லை. அது கனவு அல்லது விழிமயக்கென்றே உணர்ந்துள்ளேன்" என்று கர்ணன் சொன்னான். "சென்று அச்சுனையில் நோக்குக! அவ்வாறு அணிகலன் தெரியுமெனில் அதை எனக்கு கொடையென அளி" என்று இளைய அந்தணன் சொன்னான். திகைத்து ஓர் அடி எடுத்துவைத்து திவிபதன் ஏதோ சொல்ல முயல விருஷசேனன் வலக்கை நீட்டி அவனை தடுத்தான். கர்ணன் விழிமாறுபாடு ஏதுமின்றி "அவ்வாறே" என்றபின் மூன்றடி எடுத்து வைத்து சுனையருகே குனிந்து தன்னை அதில் பார்த்தான். "ஆம், பொற்கவசமும் மணிக்குண்டலங்களும் தெரிகின்றன" என்றான்.

"அங்கநாட்டரசே, அந்தக் குண்டலங்களின், கவசத்தின் மதிப்பை நான் அறிவேன். எனக்கு அதை பரிசிலெனக் கொடு" என்றான் அந்தணன். "அந்தணனாகிய நான் நீ அளிக்கும் உலகியல் பரிசுகளால் உளநிறைவு கொள்பவன் அல்ல. அவை தேவை என்ற விழைவால் வேதம் கற்றவனும் அல்ல. அந்தணன் பரிசில் கொள்வதாக இருந்தால் என் வேதச்சொல்லுக்கு நிகரானதையே கொள்ளவேண்டும். அத்தருணத்தில் வேதச்சொல்லுக்கு எது நிகரோ அதைத்தான் கோரவேண்டும். சில தருணங்களில் எளிய கூழாங்கல்லோ ஒரு பருக்கை அன்னமோகூட வேதத்தை நிகர்செய்யும். சிலபொழுது

பேரரசர்களின் கருவூலம் தேவையாகும். இத்தருணத்தில் இங்கு என் சொல்லுக்கு நிகரானது அதுவே, ஆகவேதான் உன்னிடம் அதை கோருகிறேன்" என்றான்.

திரும்பி விருஷசேனனை நோக்கிய பின் "உன் மைந்தரை எண்ணுவாய் என்றால் நீ பிறிதொன்றை அளிக்கலாம். அந்த மணிக்குண்டலங்களையும் பொற்கவசத்தையும் நீயே வைத்துக்கொள்ளும் வழி அது. உன்னை நான் வாழ்த்துகையில் சொன்ன அனைத்தும் உன்னை காத்திருக்கும் நல்லூழ். அதை என் நா சொன்னதே அதற்குச் சான்று. அவையனைத்தையும் எனக்கே கொடையென அளி. இங்கு நான் ஓதிய வேதத்திற்கு அதுவும் நிகரே" என்றான் அந்தணன். கர்ணன் சொல்லெடுப்பதற்கு முன் விருஷசேனன் "அந்தணரே, தந்தையின் புகழும் எழுகாலத்தில் அவர் கொள்ளவிருக்கும் அழிவின்மையும் எதன்பொருட்டும் விடப்படவேண்டியவை அல்ல" என்றான். திவிபதன் "ஆம், தந்தை இன்று எழுஞாயிறு. காவியங்களில் அவர் திசைக்கதிராக நிலைகொள்ளவேண்டும்" என்றான்.

கர்ணன் "அந்தணரே, வீரன் வில் தொட்டு எடுத்து முதலாசிரியரை வணங்கும்போது தலையில் கைவைத்து அவர் சொல்லும் முதல் வாழ்த்தொலியே புகழ் பெறுக என்றுதான். புகழ்தான் இங்கு வாழும் ஒவ்வொரு வீரனும் கனவிலும் கணந்தோறும் விழைவது. எதன் பொருட்டேனும் வீரர்கள் புகழை அளிப்பார்களா என்ன?" என்றான். அந்தணன் புன்னகைத்து "வெற்றியை அளிக்கும் வீரர்கள் உண்டா என்ன?" என்றான். கர்ணன் "ஆம், புகழின் பொருட்டெனில் வெற்றியையும் அளிப்பார்கள்" என்று சொன்னான். "உன் தெரிவு" என்று அந்தணன் சொன்னான். "உத்தமரே, நீங்கள் கோரியதை

கொள்க! இத்தருணத்தில் அவ்வழியா வேதச்சொல்லுக்கு நிகரென என்னிடம் ஒன்று இருப்பது நிறைவளிக்கிறது. இதன்பொருட்டே தெய்வங்கள் இதை எனக்களித்தன போலும்" என்றான்.

"வேதச்சொல்லுக்கு நிகர் வைக்கும் ஒவ்வொரு பொருளும் வேதமென்றே ஆகிறது. வேதங்களின் விழுப்பொருளான பிரம்மத்திற்கு படைக்கப்படுகிறது அது. இவ்வாறு ஒரு இறுதிக்கொடையை விண்பெருவெளியென நின்ற பரத்திற்கு அளிக்கும் நல்லூழ் எனக்கமைந்தது இறையருள், என் மூதாதையர் சொல், ஆசிரியரின் வாழ்த்து" என்றபின் கர்ணன் தன் உருவை விழிச்சுனை நீரில் நோக்கி இரு காதிலிருந்த குண்டலங்களை கழற்றினான். விருஷசேனனும் திவிபதனும் அணுகி நீர்ப்பரப்பில் அவனை நோக்கினர். கர்ணனின் கைகளில் மணிக்குண்டலங்கள் இரு செந்தழல்துளிகள் என சுடர்விட்டன. அவற்றை அவன் நீட்ட அந்தணன் "நான் செல்வத்தை கையால் தொடுவதில்லை . அவற்றை அந்த நீரில் இடுக... நான் வேதக் கொடைச்சொல் உரைத்து அவற்றை விண்தேவர்களுக்கு ஆகுதியாக்குகிறேன். இந்தச் செவ்வொளிப்பொழுதில் அனலும் நீரும் ஒன்றே" என்று சொன்னான்.

"ஆம், அவ்வாறே" என்று சொல்லி கர்ணன் குண்டலங்களை நீரிலிட்டான். திவிபதன் கைநீட்டி விருஷசேனனைத் தொட்டு நோக்குக என்று சொல்லெழாது சொன்னான். விருஷசேனன் முன்னரே அதை நோக்கிக்கொண்டிருந்தான். நீருக்குள் தெரிந்த அந்தணனின் உரு பிறிதொன்றாக இருந்தது. இரு கைகளையும் நீட்டி அவன் அந்தக் குண்டலங்களை வாங்குவது தெரிந்தது. அவன் சூரியனுக்கு அவியளிக்கும் வேதச்சொல்லை உரைத்துக்கொண்டிருந்தான். தன் நெஞ்சிலிருந்து கவசத்தைக்

கழற்றிய கர்ணன் நீரில் இட்டபோது மும்முறை "கொள்க! கொள்க! கொள்க!" என்றுரைத்து அந்தணன் இரு கைகளையும் மலர் முத்திரை காட்டி ஓதி முடித்தான். அளித்த கைகளைக் கூப்பியபடி கர்ணன் நின்றான். விழிச்சுனை ஒளிக் கொப்பளிப்பென தெரிந்தது.

கர்ணன் திரும்பும்பொருட்டு வணங்கியபோது அந்தணன் அவனை நோக்கி கனிந்த விழிகளுடன் "உன் கவசமும் குண்டலங்களும் உன் தந்தையான சூரியனுக்கே அளிக்கப்பட்டன. வேள்வியில் அளிக்கப்பட்டவற்றை தேவர்கள் மறுக்கவியலாது என்பதனால் அவன் அதை கொண்டான். கதிர்மைந்தனே, ஈன்று எழுந்த அன்னைப்பசு அதுவரை தன்னுள் அமைந்து அக்கன்றைக் காத்த கருப்பையையும் நச்சுக்கொடியையும் உண்பதுபோல இது இயல்பானது. நீ அளித்தவற்றை உரிய தேவனுக்கே அளித்து நான் மேலும் வேதப்பயன் கொண்டவன் ஆனேன். அதன்பொருட்டு மீண்டும் உன்னை வாழ்த்துகிறேன். என்றுமிருப்பாய்! ஒளி வளர பாரதவர்ஷம்மேல் நின்றிருப்பாய்! ஆம், அவ்வாறே ஆகுக!" என்றான். கர்ணன் அவன் காலடியைத் தொட்டு வணங்கி மூன்றடி எடுத்து வைத்து பின்னடைந்தான்.

மைந்தரை அணுகி "செல்வோம்" என்று கர்ணன் சொன்னான். அவர்கள் மூவரும் திரும்பி புதர்களினூடாக நடந்தனர். காடு இருண்டிருந்தது. விழிதுலங்கும் அளவுக்குக்கூட பாதை தெரியவில்லை. திரும்பி நோக்கியபோது அந்த வட்ட தாழ்நிலத்தில் மட்டுமே ஒளியிருப்பது தெரிந்தது. வானில் கதிர் எழுந்திருக்கவில்லை. விருஷசேனன் நோக்குவதைப் பார்த்து "விடிய இன்னும் நெடும்பொழுது இருக்கிறது" என்றான் திவிபதன். அவர்கள் தங்கள் காலடியோசை சூழப்பெருகியிருந்த

இருட்டில் முட்டி எதிரொலிக்க நடந்தனர். விருஷசேனன் “தந்தையே, நீரில் தெரிந்த தோற்றத்தில் வந்தது எவரென்று நான் கண்டேன்” என்றான். “ஆம், நானும் நீரில் அவரை பார்த்தேன்” என்று கர்ணன் சொன்னான்.

இருட்கனி - 44

கர்ணன் கவசங்களை அணிந்துகொண்டிருந்தபோது சற்று அப்பால் சல்யர் குளம்படிகள் விசையுடன் ஒலிக்க புரவியில் வந்து கால்சுழற்றி இறங்கினார். அவன் விழிதூக்கி நோக்க கையிலிருந்த கடிவாளத்தை ஓங்கி நிலத்தில் வீசிவிட்டு பதற்றத்தில் நிலையழிந்து அங்குமிங்கும் ஆடிய உடலுடன் முதுமையின் நடுக்கத்துடன் அவனை நோக்கி வந்தார். வரும் வழியிலேயே ஓங்கி நிலத்தில் உமிழ்ந்தார். அருகணைந்து கைநீட்டி “அறிவிலி! உன்னைப்போல் அறிவிலியை நான் இதற்குமுன் கண்டதில்லை. காமத்தாலும் விழைவாலும் அறிவிலாது ஆனவர்கள் உண்டு. ஆணவத்தால் அறிவிலி ஆனவன் நீ. அறிவிலி, அறிவிலி... உன்னை என்னவென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்? அள்ளி அள்ளிக்கொடுத்து அனைத்துமின்றி அழிய நீ யார் யோகியா அன்றி விண்ணிலிருக்கும் மெய்ஞானத்தை தேடிச்செல்லும் துறவியா?” என்று கூவினார்.

எழுந்து கைகூப்பி வரவேற்றபடி “மத்ரரே, தங்கள் சினம் எனக்கு புரியவில்லை” என்று கர்ணன் சொன்னான். “புரிந்தது என்று உன் விழிகளில் காண்கிறேன். நீ சற்று முன் அளித்ததென்ன? சொல், மூடா! அளித்தது என்ன?” என்று மத்ரர் கூவினார். கர்ணன் “வேதம் ஓதி கொடை நோக்கி நின்ற இளைய

அந்தணர் ஒருவருக்கு அவர் கோரியதன்பொருட்டு நான் என் கவசத்தையும் குண்டலங்களையும் அளித்தேன். அதுவே அத்தருணத்தில் இயல்வது" என்றான். சல்யர் தலை நடுநடுங்க "எவரைக்கேட்டு அதை அளித்தாய்? சொல், எதன்பொருட்டு அளித்தாய்? அதை அளிக்க உனக்கு என்ன உரிமை? உன் தந்தை எதன் பொருட்டு உனக்கு அதை அளித்தார் என்று தெரியுமா உனக்கு? அவர் ஒப்புதலின்றி நீ அதை எப்படி கொடையளிக்கலாம்?" என்றார்.

"கொடையில் மடம் ஒப்பப்பட்டுள்ளது" என்று கர்ணன் சொன்னான். 'கொடையளிப்பதன் பொருளே அதுதான், இங்குள எதுவும் நம்முடையதல்ல, நம் முன்னோராலும் நம்மைவிடப் பெரியவர்களாலும் நமக்களிக்கப்பட்டது என்பதனாலேயே நம்மைவிட இளையோரும் நம்மைவிட அறத்தோரும் அதைப் பெறும் தகுதி கொண்டவர்களாகிறார்கள் என்னும் உணர்வு. அது உலகியலில் மடமை. வேறு ஒரு பொருளில் மெய்யறிவு." சல்யர் அச்சொற்களை எவ்வகையிலும் உள்வாங்கவில்லை. "தத்துவம் பேசுவதற்கு நான் வரவில்லை. இப்படி சொல்மடக்கிப் பேசுமளவிற்கு நான் அறிவுள்ளவனும் அல்ல. நான் மலைமகன். ஆனால் ஒன்றுமட்டும் சொல்வேன். நீ செய்தது அறிவின்மை. ஆம் முழுமுதல் அறிவின்மை."

மிகையுணர்ச்சியால், அதன் விளைவான மூச்சிளைப்பால் அவர் சற்று தளர்ந்தார். 'அதைவிட இது மிகப்பெரிய கீழ்மை. உன் உயிரை எப்பொருளுமின்றி களத்தில் மாய்த்துக்கொள்ள முடிவெடுத்திருக்கிறாய். ஆம், நீ செய்ததற்கு அது ஒன்றேதான் பொருள். உனக்கு இங்கே உறவுகள் பொருட்டல்ல. கடமை பொருட்டல்ல. உன் ஆணவம் ஒன்றே பொருட்டு... ஆணவம்போல் அழுகிநாறும் சிறுமை வேறு ஏது?" என்று

சொன்னபின் உளமுடைந்து சல்யர் மெல்ல குரல் தழைந்து "என்ன செய்துவிட்டாய்... நீ செய்தது என்ன என்று உணர்கிறாயா?" என்றார்.

"இதை உங்களுக்கு எவர் சொன்னார்கள்?" என்றான் கர்ணன். "நான் அறிந்தேன். உனது மைந்தர் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக்கேட்டு ஐயம்கொண்டு சுபாகு உசாவியபோது அவனிடமும் கூறினார்கள். அவன் விரைந்து என்னை நாடிவந்து என்னிடம் இதை சொன்னான்" என்றார் சல்யர். கர்ணன் சலிப்புடன் "சுபாகுவிடம் அவர்கள் ஏன் சொன்னார்கள்?" என்றான். "அவர்கள் சொல்லியாகவேண்டும். ஏனெனில் இன்று அரசரின் இடத்தில் உளம்எஞ்சியிருக்கும் கௌரவன் அவன் மட்டுமே. அவன் நீங்கள் எங்கு சென்றீர்கள், அங்கு என்ன நிகழ்ந்தது என்று கேட்டபோது மைந்தர் அனைத்தையும் சொல்லிவிட்டார்கள்" என்றார் சல்யர்.

கால் தளர அவர் அங்குமிங்கும் நோக்கி அருகிருந்த பெட்டியில் அமர்ந்தார். "துயரமும் கசப்புமாக சுபாகு என் குடிலுக்கு வந்தான். நீ உன் கவசத்தையும் குண்டலங்களையும் அளித்துவிட்டதை சொன்னபோது நான் அதை நம்பமுடியாமல் அமர்ந்திருந்தேன். எந்த மானுடனும் அதை செய்ய மாட்டான். இதுவரை நீ அளித்ததெல்லாம் உன் தந்தை அளித்த பெருங்கொடைகள் உன்னிடம் இருக்கின்றன என்ற தன் நிமிர்வால் என்று எண்ணினேன். எந்நிலையிலும் எங்கும் தோற்கமாட்டாய் என்று உணர்ந்ததனால்தான் எதுவரினும் கொடுப்பேன் என்ற நிலைகொண்டிருக்கிறாய் என்று கருதினேன். இவ்வாறு அறிவின்மையின் எல்லை வரை செல்வாய் என்று அணுவளவும் எண்ணவில்லை."

“மத்ரரே, இது அறிவின்மையெனில் அவ்வாறே ஆகுக! என் முன் கைநீட்டி நின்றிருக்கும் அந்தணர் ஒருவருக்கு அளிக்க இயலாமல் ஒரு செல்வத்தை பேணினேன் எனில் இதுவரை நான் அளித்தவற்றுக்கெல்லாம் என்ன பொருள்? நான் அளிப்பது அவர் அங்கு ஓதிய வேதத்திற்கு நிகராக அமையவேண்டும் என்பது நெறி. அதை முடிவுசெய்யவேண்டியவர் அவர். நான் அதில் பேரம் பேசியிருக்கக்கூடுமா என்ன?” என்றான் கர்ணன். மீண்டும் உளவிசைகொண்டு பாய்ந்து எழுந்த சல்யர் “அது சூழ்ச்சி! வெறும் போர்சூழ்ச்சி. உன்னை அழிப்பதற்காக அவர்கள் வகுத்த கீழ்நெறி அது என்று அறியாதவனா நீ? அவன் உருவை உன் மைந்தர் நீரில் பார்த்தார்கள்...” என்றார்.

“ஆம், அவர் வரும்போதே நானும் நீரில் பார்த்தேன்” என்றான் கர்ணன். “பிறகென்ன? அது அந்த யாதவனால் செய்யப்பட்ட சூழ்ச்சி. அந்தணனின் உடலில் இந்திரனை அமைத்து அவன் அனுப்பியிருக்கிறான். இந்திரன் உன் தந்தை உனக்களித்த காப்புகள் அனைத்தையும் உன்னிடமிருந்து திருடியிருக்கிறான் என்றால் என்ன பொருள்? இன்றைய போரில் நீ எக்காப்புமின்றி நின்றிருக்கப்போகிறாய். உன்னை இன்றே கொன்றுவிடவேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள்” என்றார் சல்யர். கர்ணன் விழிதாழ்த்தி எழாக்குரலில் “அது ஊழெனில் அவ்வாறு ஆகுக! ஒவ்வொன்றும் பிறிதொன்றுக்காகவே நிகழ்கிறது என்று அறிந்தபின் என் கையிலிருப்பது எதையும் முற்றாக வடிவமைக்க நான் முயல்வதில்லை” என்றான்.

சல்யர் அவன் கைகளை பற்றிக்கொள்ள கைநீட்டினார். “வேண்டாம், சொல்வதை கேள்” என்றபின் கைகளை பின்னிழுத்துக்கொண்டார். உடல் முழுக்க ஓடும் தவிப்பால்

சற்று துடித்து, பின் இருகைகளையும் கோத்து இறுக்கி, தலைகுனிந்து நிலம் நோக்கி, உதடுகள் பலமுறை அசைந்தபின் தனித்தனியாக உதிர்ந்த சொற்களால் அவர் சொன்னார் "என்னை உன் தந்தையென்று எண்ணிக்கொள். ஒரு த்ந்தையாக நின்று இங்கு என் உளம் துடிப்பதை சற்றேனும் புரிந்துகொள்." கர்ணன் அதே குரலில் "புரிகிறது" என்றான். அவர் தாக்குண்டவர்போல அவனை நிமிர்ந்து நோக்கினார். அவர் உதடுகள் அசைந்தன. விழிகள் நீர்மைகொண்டு பளபளத்தன. அவன் எந்த உணர்வும் இல்லாமல் அவர் விழிகளை நோக்கினான்.

விழிகளை விலக்கிக்கொண்டு "என்னை ஒரு சொல் உசாவவேண்டும் என்று எண்ணினாயா நீ?" என்று சல்யர் கேட்டார். "எப்போதும் எதையும் அவ்வாறு உசாவிச் செய்ததில்லையே" என்று கர்ணன் சொன்னான். "கொடையை நான் மறுமுறை என்னிடமேகூட உசாவுவதில்லை." சல்யர் தளர்ந்து "ஆம், நீ அன்னையாலும் தந்தையாலும் கைவிடப்பட்டவன். உனக்குரிய தனிவழியை தேடிக்கொண்டாய்" என்றார். கைகளை விரித்து "விண்ணில் கதிரவனும் அவ்வாறே முழுத்தனிமையில் சென்றுகொண்டிருக்கிறது என்பார்கள்" என்றபின் மேலும் ஏதோ பேச விழைந்து சொல்லின்றி நீள்மூச்செறிந்தார்.

கர்ணன் "இன்றைய போரில் என் வெற்றி எவ்வண்ணம் என்பதை நானும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்" என்றான். மென்னகை காட்டி "ஒன்று நோக்கின் இது நன்றே. அரிய அம்புகள், மூதாதையரின் சொற்கொடைகள், தெய்வக்காப்புகள் எதுவுமின்றி என் தோள்வலிமை மட்டுமே கொண்டு களத்தில் தனித்து நிற்கப்போகிறேன். நான்

களத்திற்குக் கொண்டுசெல்லவிருப்பவை அனைத்தும் நானே ஈட்டிக்கொண்டவை. ஆகவே நான் பெறும் வெற்றி முற்றிலும் என்னுடையதே" என்றான். சல்யர் மீண்டும் சினம்கொண்டு "மூடா! மூடா! மூடா!" என்று தலையில் அடித்துக்கொண்டார். "நீ போரிடப்போவது அர்ஜுனனிடம் அல்ல. அவன் தனியன் அல்ல. யானையின் கையிலிருக்கும் கதாயுதத்துடன் போரிட முடியாதென்று ஒரு சொல் உண்டு. யானையின் முழு எடையும் அக்கதையில் இருக்கிறதென்பதை நீ உணரவில்லை."

"இது ஊழின் ஆடல்போலும்" என சல்யர் சொல்தளர்ந்தார். "அறுதியாக இப்போரில் அவனே வெல்வான் என்பதை எப்போதோ என் உளம் அறிந்திருந்தது. அதை நான் கற்ற அனைத்துச் சொற்களைக்கொண்டும் மழுப்பிக்கொண்டிருந்தேன். இன்று நீ இவ்வண்ணம் களத்திற்குச் செல்கிறாய் எனும்போது அதை முழுமையாக உணர்கிறேன். இன்றுகாலைவரை உன்னை எவரும் வெல்ல இயலாது என்று நம்பினேன். கதிர்மைந்தனை வெல்லும் மானுடர் எவரும் இங்கில்லை. இன்று ஒருவேளை போர் முடியும் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். இப்படி ஒரு அறிவின்மையை ஆற்றி மீள்வாய் என்று எண்ணியிருக்கவே இல்லை."

அவர் விசைகொண்டு தன் தலையை கைகளால் அறைந்துகொண்டார். "என் பிழை! ஆம் என் பிழை! நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்க வேண்டும். நான் வந்து நின்றிருக்கவேண்டும். நான் அறிந்தது அனைத்தும் உனக்குரியவை என்று உரைத்திருக்கவேண்டும். என் பிழை! என் சிறுமை!" என்றார். அவர் மெல்லிய விம்மல்களுடன் விழிநீர் சிந்துவதை கர்ணன் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தான். சிலகணங்களுக்குப்பின் அவர்

மீண்டு மூச்சு சீறி கனைத்து குரல் திரட்டி "என் சிறுமையை எண்ணி நான் நாணாத நாளில்லை. தன்பிழையை தன்னிடமிருந்து மறைக்கவே இப்புவியில் மானுடர் சொல்பெருக்குகிறார்கள்..." என்றார்.

கர்ணன் அதை கேட்டதாகக் காட்டவில்லை. "நீ இவ்வண்ணம் களத்திற்குச் செல்வதைப்போல பிழை வேறில்லை. அவன் இந்திரனின் மைந்தன். தன் மைந்தனை வெல்லச்செய்ய தந்தையே வேதம்வழியாக மண்ணிறங்கி வந்திருக்கிறான்" என்றார். "நீ உன் தந்தையை அழை. நிகழ்ந்ததை சொல். இன்னும் பிந்தவில்லை. உடனே ஒரு வேதியரை நான் அழைத்துவருகிறேன்." கர்ணன் "நாம் தெய்வங்களுடன் நாற்களமாடவேண்டியதில்லை, மத்ரரே" என்றான். 'இனி எதற்கும் பொழுதில்லை. அதை நீங்களே அறிவீர்கள்." சல்யர் "ஆம், மெய்தான். இத்தருணத்தில் எதைப்பேசுவதும் எவ்வண்ணம் சொற்கூட்டுவதும் ஒற்றைப்பொருளையே அளிக்கின்றன. இது வீண் உளமாடல்" என்றார்.

கர்ணன் திரும்பி அப்பால் விலகி நின்றிருந்த ஏவலனிடம் தனக்கு கவசங்களை அணிவிக்கும்படி கைகாட்டினான். அவன் வந்து கவசங்களை எடுத்து அணிவிக்க இயல்பாக உடலை அவனிடம் அளித்தபடி நிலம் நோக்கி அமர்ந்திருந்தான். சல்யர் தலைதாழ்த்தி சொல்லின்றி அமர்ந்திருந்தார். ஆனால் அவர் உடலில் இருந்து வெம்மைபோல் ஒன்று வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. மெல்லிய அசைவுகள் அவ்வப்போது ஏற்பட்டன. அவர் உள் எரிவதை உடல் காட்டியது. கர்ணன் கையசைவாலேயே ஏவலனுக்கு ஆணைகள் இட்டான்.

கவசங்களை அணிவித்துமுடித்த ஏவலன் சற்று விலகி தலைவணங்கி "முடிவுற்றது, அரசே" என்றான். கர்ணன் தலையசைக்க அவன் "அங்கர் போருக்கு எழுகிறார்" என்று கையசைவால் அப்பால் நின்றிருந்த காவலர்களுக்கு அறிவித்தான். காவலர்களில் ஒருவன் சங்கொலி எழுப்ப அது ஒன்றில் இருந்து ஒன்றென தொட்டுச் சென்று தொலைவெளியெங்கும் நிறைந்திருந்த அங்கநாட்டுப் படைகளை சென்றடைந்தது. அவர்கள் "அங்கர் வாழ்க! கதிர்மைந்தன் வாழ்க! வெல்க சம்பாபுரி! வெல்க கதிர்க்கொடி!" என வாழ்த்தொலி எழுப்பினார்கள். அவ்வொலி பரவ கௌரவப்படைகள் அனைத்திலிருந்தும் வாழ்த்தொலிகள் ஒன்றிலிருந்து ஒன்றென தொடுத்துக்கொண்டு பெருகி ஒலித்தன.

சல்யர் எழுந்து கர்ணனை நோக்காது "இன்று நான் உனக்கு தேர் நடத்துகிறேன்" என்றார். "தாங்கள் அதற்கு விரும்பவில்லை என்று நேற்று சொன்னார்கள்" என்றான் கர்ணன். "ஆம், நேற்று அதை ஒழிய வேண்டியிருந்தது. இன்று வேறு வழியில்லை" என்றார் சல்யர். "இன்று நானே தேர் நடத்துகிறேன். நான் தேரிலிருக்கும்வரை எவரும் உன்னை கொல்ல முடியாது" என்றார். "தாங்கள் விழையாத ஒன்றை செய்யவேண்டியதில்லை" என்று கர்ணன் சொன்னான். சினம் மேலேற "அறிவிலி!" என்று உரக்க கூவிய சல்யர் அடிக்க என எழுந்த கை காற்றில் நிற்க, எண்ணம் தயங்கி, "நான் உன்னுடன் இருப்பேன். இன்று நான் உன்னுடன் இருப்பேன்" என்றார்.

"நன்று" என்று கர்ணன் புன்னகையுடன் சொன்னான். மேலும் ஏதோ சொல்ல முயன்றபின் அதை அவ்வாறே விட்டு விட்டு சல்யர் எடைமிக்க நடையுடன் சென்று தன் புரவியை அணுகி

அதன்மேல் ஏறிக்கொண்டார். ஏவலன் அளித்த கடிவாளத்தைப் பற்றி காலால் குதிமுள்ளை செலுத்தி விசை கூட்டி மரப்பலகைகளில் குளம்படிகள் துடி தாளமெழுப்ப விரைந்தகன்றார். கர்ணன் அவர் செல்வதை வெறும்விழிகளுடன் நோக்கி நின்றான். ஏவலன் அவனருகே குனிந்து குறடுகளை அணிவிக்கலானான். ஏவலன் ஏதோ சொல்ல ஒருகணம் குனிந்து அதை ஏற்றுவிட்டு மீண்டும் விழிதூக்கியபோது சல்யர் நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்தார்.

கர்ணன் எழுந்து குறடுகளை அணிவித்துக்கொண்டிருந்த ஏவலனிடம் "விரைவாக" என்றான். மீண்டும் குளம்படித் தாளம் ஒலிக்க சல்யர் வளைந்து திரும்பி வந்தார். புரவியிலிருந்து வில்லில் அம்பை என தன்னை விடுவித்துக்கொண்டு அவனை நோக்கி ஓடிவந்து மூச்சிரைக்க நின்று "செல்கையில் ஓர் எண்ணம் வந்தது. அதை சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். நீ உரைத்ததுபோல நீ களத்திற்கு கொண்டுசெல்லவிருப்பவை நீ ஈட்டிக்கொண்ட அனைத்தும்தான். அவற்றில் தலையாயவை கொடைப்பயன்கள். அவை உன்னை காக்கும். தேவர்கள் நிரைநிரையாக வ்ந்து உன்னைச் சூழ்ந்து நின்றாகவேண்டும். உனக்கு அழிவின்மையை அவர்கள் அளித்தாக வேண்டும்" என்றார்.

"இல்லையேல் இப்புவியில் மானுடரைக் காக்கும் அறம் என்று ஒன்றை நிறுவிய தெய்வங்கள் பொருளற்றவர்கள் ஆவார்கள். சற்று முன் நீ அளித்த கவசமும் குண்டலங்களும்கூட அதற்கு நிகரான கொடைப்பயனை உனக்கு அளித்திருக்கும். அவற்றை தக்கவைத்துக்கொள். அவை உன்னைக் காக்க்கும் கேடயங்கள் ஆகுக! உன் படைக்கலங்கள் என கூர்கொள்க! உடன்

நானுமிருப்பேன். ஒருகணமும் ஓயாது நிற்பேன். எண்ணிக் கொள்க, நான் தேர் அமரத்தில் இருக்கும் வரை உன்னை எவரும் வெல்லப்போவதில்லை! தேரின் கணக்கனுக்கு புரவியின் உள்ளம் தெரியும், அதற்கப்பால் களத்தில் நிகழும் பிறிதொன்று எனக்குத் தெரியும். அது மலைமகனின் உள்ளுணர்வு, அது அவர்களுக்குத் தெரியாது. எரியும் பந்தம் ஒன்றை கையிலேந்தி இருளுக்குள் செல்வது போல நீ என்னை கூட்டிக்கொள். நான் உடன் இருப்பேன்" என்றபின் மீண்டும் உடல் தளர்ந்து "தெய்வங்களே" என்றார்.

"நன்று, தாங்கள் உடனிருப்பது என்னை நம்பிக்கை கொள்ளச்செய்கிறது. நான் வெல்வேன்" என்றான் கர்ணன். அந்த முறைமைச்சொற்கள் அவரை திடுக்கிடச்செய்தன. அவனை திகைப்பு கொண்ட விழிகளுடன் நோக்கினார். ஒரு கண் இமைதளர்ந்து சற்று கீழிறங்கியதுபோலிருந்தது. உதடுகளில் அவர் அங்கு சொன்ன சொற்களுக்கு அப்பாலிருந்த ஏதோ சொற்கள் ஒலியிலாது அசைவென நிகழ்ந்தன. போகட்டும் என்பதுபோல கைகளை வீசினார். முதுமை நிறைந்து தசைகள் நெகிழ்ந்து உடல் வளைந்தவர் போல் நடந்து தன் புரவியை நோக்கி சென்றார். கர்ணன் ஒரு சொல் பேசாமல் அவர் செல்வதையே நோக்கிக்கொண்டிருந்தான்.

படைகள் அணி நிரப்பதற்கான கொம்போசையும் முரசோசையும் எழுந்தன. மழைச்சாரல் சற்று ஓய்ந்திருக்க வானொளியை வாங்கி ஆடித்துண்டுகள் என மின்னிய நீர்ப்பரப்புகள் விழிதுலங்கும் ஒளியை எங்கும் பரப்பியிருந்தன. யானைகள் நிழலுருக்களாக அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்தன. புரவிகள் நீரொளிச்சிதறல்களில்

தயங்கி மெய்குறுக்கி தாவிக்கடந்தன. “தங்கள் படைக்கலங்கள் ஒருங்கிவிட்டன, அரசே” என்று ஏவலன் சொன்னான். “எடுத்து தேரில் வை” என்று கர்ணன் ஆணையிட்டான். பின்னர் தன் குடில்நோக்கி நடந்து படலைத் திறந்து உள்ளே சென்றான். குடிலுக்குள் ஏதோ ஒன்று மறந்து வைக்கப்பட்டுவிட்டதுபோல் உணர்ந்தான். அதுவரை ஆழம் அதை எண்ணிக்கொண்டிருந்ததை அப்போதுதான் உணர்ந்தான்.

குடிலின் குளிருக்குள் அரையிருள் நிறைந்திருந்தது. அவன் விழி திருப்பியபோது குடில் மூலையில் அவன் எண்ணியதைக் கண்டான். ஒரு சிறு நாக நெளிவு. அவன் அசையாது நிற்க அது ஒளியுடன் ஒழுகி வந்து அவன் முன் சுழித்தது. சிறுசுனையில் முளைத்து எழுந்த கரிய செடி என அதன் சிறிய தலை படம்கொண்டது. “உன்னைத்தான் எண்ணிக்கொண்டிருந்தேன்” என்று கர்ணன் சொன்னான். “ஆம், எனக்களிக்கப்பட்ட ஒரு சொல் எஞ்சியுள்ளது” என்றது நாகம். பின்னர் அது தட்சமைந்தனின் உருக்கொண்டு எழுந்தது. அதன் நிழல் நாகவடிவமென அரைச்சுவரில் வளைந்து நின்றது. பாதி வெந்த உடலும் தசை பிளந்து எலும்புகள் தெரியும் விலாவுமாக அம்மைந்தன் நின்றிருந்தான். அவன் இருகண்களும் இமையா மணிகளென கர்ணனை நோக்கின.

“எனக்களிக்கப்பட்ட சொல் அவ்வாறே உள்ளது, அங்கரே” என்றான். “எங்கள் குலம் அச்சொல்லை நம்பித்தான் பாரதவர்ஷமெங்கும் காத்துள்ளது.” கர்ணன் “ஆம், நான் எந்நிலையிலும் சொல்லழிபவனல்ல” என்றான். “இனி எஞ்சுவதென்ன? எங்கள் குலத்திற்கு நீங்கள் அளிக்க உங்களிடம் மிஞ்சுவதென்ன?” என்று தட்சன் கேட்டான். “சற்று முன் எந்தை இங்கு சொல்லிச் சென்றார். என்னில் இப்போதிருப்பது நான்

வாழ்நாளெல்லாம் ஈட்டிய கொடைப்பயன் என்று. அது அழிவின்மையை அளிப்பது. அதற்குப்பின் தெய்வங்கள் அணிநிரக்கும். அதை அளிக்கிறேன். உனக்கும் உன் குலத்துக்கும் அதை அளிக்கிறேன். என்றும் அது உன்னுடன் இருக்கட்டும். உங்கள் குலம் அழிவின்மை கொள்ளும். எந்தபோரிலும் உங்களுக்குத் துணையாக தெய்வங்கள் இறங்கி வரும்" என்றான் கர்ணன்.

அவன் இமையாவிழிகளை நோக்கி கர்ணன் சொன்னான் "அறிக, இங்கிருக்கும் அத்தனை தெய்வங்களுடனும் நீங்களும் இருப்பீர்கள் ஆழிவண்ணன், அனல்வண்ணன். நான்முகன், யானைமுகன், ஆறுமுகன், முப்பெரும் தேவியர், இங்கு தெய்வமென எழுந்த அனைவரும் நாகமின்றி நிலைகொள்ளாமலாவார்கள். இனி இங்கு தெய்வங்களை வணங்குவோர் எவராயினும் நாகங்களையும் வணங்குவர். உங்கள் குலம் பாலில் நெய் என பாரதவர்ஷத்தின் அனைத்துக் குலங்களிலும் கலந்து உறையும்." தட்சமைந்தனின் உடல் நடுங்கியது. தன் கையை நீட்டி "அளியுங்கள்" என்று அவன் சொன்னான்.

கர்ணன் புன்னகைத்து "எவ்வடிவு கொண்டாலும் அவ்வடிவில் இருக்கையில் அவர்களே நாம் என்பதை நீ அறிவாய்தானே?" என்றான். இளம்தட்சன் "ஆம்" என்றான். "எனில் உன் படம் தூக்கி இந்நிலம் தொட்டு மும்முறை ஆணையிடு. என்னிடம் பெற்றுக்கொண்ட இந்தக்கொடை பயனுறும் என்று. எந்நிலையிலும் இது எவராலும் நாகர்களுக்கு மறுக்கப்படாது என்று." தட்சன் சிலகணங்கள் நிலைத்த நோக்குடன் நின்று பின் புன்னகைத்து தன் இடக்கையை தூக்க அது சிறு

நாகக்குழவியின் படமென்றாயிற்று. மும்முறை அதை நிலத்தில் கொத்தி "ஆணை! ஆணை! ஆணை!" என்றான்.

கர்ணன் தன் இடையிலிருந்த குறுவாளை எடுத்து கையின் நீல நரம்பை வெட்டி அதில் பெருகிய குருதியை வலக்கை குமிழில் ஏந்தி மூன்று சொட்டுகள் விட்டு "அளித்தேன்! அளித்தேன்! அளித்தேன்!" என்றான். நாகக்குழவியின் உடல் சற்று ஒளி கொண்டது. "பெற்றுக்கொண்டேன், அங்கரே. இச்சொல்லால் நாகர்குலம் என்றும் இந்நிலத்தில் அழியாது நீடிக்கும். சொல்லில் ஒளிகுறையாது வாழும். எங்கள் நினைவுகளில் நாகபாசன் என்று நீங்களும் நின்றிருப்பீர்கள். கார்கடல் ஒளிகொண்டது போல் பாரதவர்ஷத்தில் உமது புகழ் ஒருபோதும் குன்றாது பெருகி நிறைந்திருக்கும். ஆம், அவ்வாறே ஆகுக!" என்றபின் சுருண்டு வளைந்து தரையிலிருந்த சிறுவெடிப்புக்குள் புகுந்து மறைந்தான்.

கர்ணன் குடிலிலிருந்து வெளிவந்தபோது விருஷசேனன் அங்கே நின்றிருந்தான். "தேர் ஒருங்கிவிட்டது, தந்தையே" என்றான். கர்ணன் தன் அணிகளின் ஒளி சுடர தேர் நோக்கி சென்றான்.

இருட்கனி - 45

எட்டாவது களத்தில் அமர்ந்திருந்த சூதரான துருதர் பாரதவர்ஷத்தில் மலைக்காடுகள் மண்டிய மணிப்பூரக நாட்டிலிருந்து வந்திருந்தார். மூங்கில்களை ஒன்றுடன் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்டிருந்த வேத்ரம் என்னும் இசைக்கருவியின் மீது சிறிய கழிகளால் விரைந்து தட்டி

யாழ்நிகர் ஒலியெழுப்பி அவர் பாடத்தொடங்கினார். "தோழரே இக்கதையை கேளுங்கள். இது செவிகளினூடாக பரவி, புல்விதைகள் போல் பெருகி, அருகு போல் செழித்து, அனல் கடந்து, நீர்ப் பெருக்கை வென்று என்றும் இங்கு நின்றிருக்கும் சொல்லென்று உணர்க! இதைச் சொல்லும் நான் புல்லின் வேர். ஆலமரங்கள் சரியும், மலைகள் மடிந்து மண்ணாகவும் கூடும், புல் என்றும் இங்கிருக்கும். புல்லின் தழல் என என் நா எழுக! இச்சொல் இங்கு விளைக! ஓம், அவ்வாறே ஆகுக!

சூழ்ந்திருந்த சூதர்களும் கைகளைக்கூப்பி "ஆம், அவ்வாறே ஆகுக!" என்று ஒலிக்க துருதர் தன் கதையை சொல்லத்தொடங்கினார். இது முன்பொரு நாள் நிகழ்ந்தது. பிருகு குலத்து அந்தணரும் மழுவேந்திய மாவீரருமான பரசுராமர் கோதை நதியின் கரையிலிருந்த தன்னுடைய குடிலிலிருந்து தன் மூதாதையருக்குரிய ஆண்டு நீர்க்கடன் செய்யும் பொருட்டு கிளம்பினார். அன்று அவருடன் இருந்தவன் இளைய மாணவனாகிய கர்ணன் மட்டுமே. ஆசிரியனின் நிழல் தன் மீது எப்போதும் விழும்படி, தன் காலடியோசை எழுந்து அவர் சித்த ஓட்டத்தை முறிக்காதபடி அணுகியும் அணுகாமலும் அவன் அவரைத் தொடர்ந்தான். அது அனலுக்குரிய நாள். வைகாசி மாதம் வளர்பிறை மூன்றாம்நாள். குறைவிலா மூன்றாம்பக்கம். பார்க்கவ குலத்து முனிவர்களுக்கு அவர்களின் வழித்தோன்றல்கள் நீரளிக்கும் பொழுது. பாரதவர்ஷம் எங்குமிருந்த பரசுராமர் நிலைகளில் பூசனைகள் நிகழும். அனல்குலத்து அந்தணர் அனலோம்பி அவியிட்டு குருநிரையை வழுத்துவர். அனல்குடி ஷத்ரியர்கள் குருபூசனைசெய்வர்.

அன்று முதற்கதிர் எழும் தருணத்தில் கோதையின் கரையை அடைந்த பரசுராமர் தன் வில்லை நிலத்தில் வைத்துவிட்டு நீரருகே சென்று அதை தன் சுட்டுவிரலால் தொட்டார். கோதையின் நீர் செவ்வொளி கொண்டு அனல்பெருக்காக மாறி ஓடத்தொடங்கியது. அதிலிருந்து வாள் என, நெருப்பென, தளிரென மின்னிய மீன்கள் துள்ளி எழுந்து விழுந்து அலைவட்டம் கிளப்பின. நீரை மும்முறை அள்ளி ஒளிர்ந்து வழியவிட்டு முன்னோருக்குச் சொல்லும் முறைவணக்கமும் முடித்தபின் பரசுராமர் நீர்மேல் கால்வைத்து நிலம்மேல் என நடந்து நடுஆற்றை சென்றடைந்தார். ஆற்றின் நடுவே மலரமர்வில் கால்களை மடித்து அமர்ந்தார். அவரைச்சூழ்ந்து அனற்கொழுந்தின் அலைவென கோதை ஓடிக்கொண்டிருந்தது. பொன்னுருகி வழிவதுபோல் பரசுராமரின் தாடியும் குழல்கற்றைகளும் பொன்னொளி கொண்டன. அங்கிருந்து நோக்கியபோது நீரில் பொற்றாமரை மலர்ந்ததெனத் தோன்றியது.

கரையில் இருகைகளையும் நெஞ்சோடு சேர்த்துக்கட்டி தன் ஆசிரியரை நோக்கியபடி கர்ணன் நின்றிருந்தான். குறையுணர்ந்து விழித்துக்கொண்ட பரசுராமர் தன் கையைத்தூக்கி அசைத்து “வில்லை கொண்டு வருக!” என்று ஆணையிட்டார். தன் அருகே அவர் வைத்த வில் இருப்பதைக் கண்ட கர்ணன் அதை எடுக்கும்பொருட்டு சென்றபோது அதைச்சூழ்ந்து ஓர் அனல் வட்டம் எழுவதைக்கண்டு திகைத்து நின்றான். மீண்டும் ஆசிரியரின் பெயரை உளம் நிறுத்தி அதை அணுகி எடுக்க முயன்றபோது அவனை சுட்டு தூக்கி வீசியது சூழ மின் என துடிப்புகொண்டு எழுந்த அனல். மீண்டும் ஒருமுறை முயன்றபின் உடல் வெந்து உயிர் தளர்ந்து அவன் நிலத்தில் விழுந்தான்.

அதன் பின்னரே பரசுராமர் திரும்பி அவன் விழுந்துவிட்டதைக் கண்டார். எழுந்து நீர்மேல் நடந்து அருகணைந்து சுட்டுவிரலைக்கொண்டு அவ்வில்லை எடுத்தார். மூன்று முறை அம்பு தொடுத்து கோதையின் மீது எய்தார். மூன்று அம்புகள் மூன்று மீன்கொத்தி முத்தங்கள் என நீர்ப்பரப்பை தொட்டன. அவருடைய மூதாதையர்களான ஜமதக்னியும், ருசிகரும், ஊர்வரும், சியவனரும், பிருகுவும் எழுந்துவந்தனர். அலைவடிவான கைகள் விரித்து அவர் அளித்த அக்கொடையை பெற்றுக்கொண்டனர். வில்லை தோளிலிட்டபடி பரசுராமர் திரும்பி நடக்க கர்ணன் அவருக்குப் பின்னால் சென்றான். அவர் அன்று காலை உணவு உண்பதில்லை என்பதனால் ஆலமரத்தடியில் சென்று அமர்ந்தார். சற்று முன்னால் சென்று அவர் விழி முன் இல்லாமலும் நோக்கில் இருந்து அகலாமலும் கர்ணன் நின்றான்.

கண் மூடி நெடுநேரம் அமர்ந்திருந்தபின் அவர் தன் உணர்வு கொண்டு விழித்து அவனைப் பார்த்து சில கணங்கள் விழி கூர்ந்து நீள் மூச்செறிந்து "என் பிழைதான்" என்றார். கர்ணன் அவரை பணிவுடன் நோக்கி நிற்க "உன்னால் அது இயலாது என்று நான் எண்ணியிருக்கவில்லை. என் மாணவர்கள் அனைவரும் இயல்பாக அதை இயற்றக்கூடும் என்று நான் எண்ணினேன்" என்றார். கர்ணன் "தங்கள் மாணவர்களில் நான் எவ்வகையில் குறைவுடையவன், ஆசிரியரே?" என்றான். "இது அனல்குலத்து முன்னோர் தங்கள் கைகளில் சூடியிருந்த வில். நூற்றெட்டு பரசுராமர்கள் இதை ஏந்தியிருக்கிறார்கள். இன்னும் முடிவிலி வரை பரசுராமர்கள் இதை ஏந்துவார்கள். பரசுராமர் என்றாகும் தகைமை கொண்டவனே இதை தொட இயலும். நீ ஷத்ரியன் அல்ல, அந்தணனும் அல்ல. எளிய போர் வீரன்.

உன்னால் இதை தொட இயலாமல் ஆனது இயல்பே" என்றார் பரசுராமர்.

கர்ணன் கைகூப்பி "நான் இதை தொடவும் ஏந்தவும் விழைகிறேன், ஆசிரியரே" என்றான். "நீ ஏன் இதை தொடவேண்டும்? நீ சென்று நிற்கப்போகும் எந்தக்களத்திலும் இது உனக்கு உதவப்போவதில்லை. இது மண்ணை வெல்லும், விண்ணை வளைத்து அணையச்செய்யும். மாபெரும் யோகிகளுக்கு நிகராக உன்னை அமரவைக்கும். ஆனால் இவ்வுலகில் மானுடன் அடையப்பெறும் எளிய செல்வங்கள் அவன் இயற்றும் உலகியல் செயல் எதற்கும் இதை பயன்படுத்த இய்லாது" என்றார். கர்ணன் "ஆசிரியரே, மாணவன் ஆசிரியனாக மாறுவதே கல்வி என்பது. நான் தங்களைப்போல் ஆகவில்லை எனில் இத்தனை தொலைவு வந்து, இங்கு தங்கள் அடிபணிந்து, சொல்பெறுவதில் என்ன பொருள்? அது எனக்கு இழிவு. அவ்வண்ணம் கல்வி முழுமையடையாது நான் செல்வேனெனில் தங்கள் பெருமைக்கு குறைவும்கூட" என்றான்.

"மூடா! இது எளிய செயலுக்கு பயன்படாது என்று உணர்க! நீ இவ்வுலகில் திகழ்பவன், யோகம் தேடும் ஊழ் இல்லாதவன்" என்று பரசுராமர் மீண்டும் சொன்னார். "எளிய செயல் என்பது என்ன? பேரரசுகளை உருவாக்குவது, பல்லாயிரம் கோடி மக்களின் நலன் பேணுவது, வேள்வி நிறைய வைப்பது, வேதம் விளையச்செய்வது, எளிய செயலா என்ன?" என்று கர்ணன் கேட்டான். "ராஜசூயத்தில் தன் கருவூலம் ஒழியும்படி அள்ளி வழங்கும் அரசன் ஆயிரம் வேதியருக்கு நிகரானவன், ஏழு தலைமுறைக்காலம் அனல் புரந்த அந்தணர் சென்று அமரும் இட்த்தில் தானும் சென்று அமர்பவன் என பராசர ஸ்மிருதி சொல்வதை தாங்கள் அறிந்திருப்பீர்கள், ஆசிரியரே" என்று

தொடர்ந்தான். "ஒவ்வொருவரும் தங்கள் உச்ச எல்லையில் சென்று நின்று செய்வதே பெருஞ்செயல். அது தன்நலம் கருதியதாக அமையாது."

அவனை நோக்கிக்கொண்டிருந்த பரசுராமர் ஒருகணத்தில் வாய்விட்டு நகைத்தார். "நான் பராசர ஸ்மிருதியை சொன்னேன்" என்று கர்ணன் விழிதாழ்த்தினான். "எல்லையற்ற ஆற்றல்கொண்ட இந்த வில்லால் எளிய வெற்றிகள் என்று தாங்கள் கூறும் இவ்வுலகத்துப் பொருட்களை வென்றெடுக்க இயலாதா என்ன?" என்றான். "இயலும். அவை இந்த வில்லையும் அம்பையும் கொண்டவனுக்கு மிக எளிய விளையாட்டுக்கள்" என்று பரசுராமர் சொன்னார். "எனில் எனக்கு இந்த வில்லை ஏந்தும் ஆற்றலை அளியுங்கள். தேக்கு மரங்களை வேருடன் பிழுதெடுக்கும் ஆற்றல் கொண்ட காட்டுவேழத்தின் முகக்கை மென்மலர்களை தொட்டெடுத்து சுருட்டிக்கொள்வதையும் நான் கண்டதுண்டு. பெரும்படைக்கலங்கள் அனைத்தும் எண்ணித்தீரா நுண்மை கொண்டவை" என்று கர்ணன் சொன்னான். இளஅகவையருக்குரிய உறுதியுடன் அவர்களுக்கே உரிய நம்பிக்கையுடன் அவன் ஆசிரியரிடம் பேசினான்.

"என் இலக்கு எதுவெனினும் இது என் படைக்கலமாகுக! இதை ஏந்துகையில் நான் தாங்களாக மாறுவேன். அத்தருணத்தில் மட்டுமே நான் முழுமை கொள்வேன்" என்றான் கர்ணன். பரசுராமர் அறிவுதெளியா இளமைந்தனை நோக்கும் தந்தையின் கனிவு நிறைந்த நகைப்புடன் அவனைப் பார்த்து "இதை பெறுவதற்கு நீ இயற்றவேண்டிய தவம் என்னவென்று அறிவாயா?" என்றார். "எத்தவமாயினும் ஆகுக! நான் இயற்றுவேன்" என்றான் கர்ணன். பரசுராமர் வாய்விட்டு

நகைத்து தன் தொடையில் தட்டியபடி எழுந்தார். “நன்று எத்தவம் தேவை என்று அறிவாயா எனக் கேட்டதும் எதுவானாலும் ஆகுக என்று உரைப்பவன் மட்டுமே தவம் செய்ய இயலும். எண்ணிச் செயல்சூழ்பவன் அருந்தவம் செய்வதில்லை. தவநோன்பென்பது எண்ணிய அக்கணமே எஞ்சியவற்றை அறுத்தெறிபவர்களுக்குரியது” என்றார். “என் குடிலுக்கு இன்று மாலை வருக! இதன் பொருளென்னவென்று உனக்குச் சொல்கிறேன்” என்று அவன் தலைமேல் கைவைத்து வருடினார்.

அன்று மாலை பரசுராமரின் குடில் முற்றத்தில் பனை விதையின் சாரம் பிழிந்தெடுத்த நெய் ஊற்றிய கல்லகல் எரிந்துகொண்டிருக்க அதன் அருகே கர்ணன் கால்மடித்து கைகூப்பி அமர்ந்தான். அவன் முன் கல்பீடத்தில் அமர்ந்த பரசுராமர் அவனுக்கு ஐந்தனல் யோகத்தின் கதையை சொன்னார். அக்னி வித்யை, அக்ஷர வித்யை, ஆனந்த வித்யை, அதிம்ருத்யுபாஸன வித்யை, பாலாகி வித்யை, பூம வித்யை , ப்ரம்ம வித்யை, சாண்டில்ய வித்யை, தஹர வித்யை,. ஜ்யோதிர் வித்யை, கோச விஜ்ஞான வித்யை, மது வித்யை, மைத்ரேயி வித்யை, கௌரக்ஷ ஜ்யோதிர் வித்யை, ந்யாஸ வித்யை, பஞ்சாக்னி வித்யை, பர வித்யை, பர்யங்க வித்யை, ப்ரஜாபதி வித்யை, ப்ராண வித்யை, ப்ரதர்ன வித்யை, புருஷ வித்யை, புருஷாத்ம வித்யை, ரைக்வ வித்யை, புருஷோத்தம வித்யை, ஸத் வித்யை, ஸர்வ பர வித்யை,. ஷோடஸ கல ப்ரஹ்ம வித்யை, உத்கீத வித்யை , உபகோஸல வித்யை, வைஷ்ணவ வித்யை, வைச்வாநர வித்யை என முப்பத்திரண்டு வித்யைகளை யோகநூல்கள் சொல்கின்றன. அவற்றில் ஒன்றான பஞ்சாக்னி வித்யை வன்பாதை. ஷத்ரியர்களுக்கு மட்டுமே உரியது. அதை பிறர் அறிந்திருக்கவில்லை.

நெடுங்காலம் ஷத்ரியர் தங்கள் குல முறைப்படியும் குருமுறைப்படியும் அதை பேணினர். அதை பெற்ற முதல் அந்தணர் ஆருணியான உத்தாலகர். அதை ஆற்றி தகைவு கொண்டவர் அந்தணனின் தொழிலெல்லை கடந்து, அறிவெல்லை கடந்து, ஷத்ரியனும் ஆகி நிமிர்ந்தவராகிய அவர் மைந்தன் ஸ்வேதகேது. உத்தாலகரின் மைந்தரான ஸ்வேதகேது அந்தணருக்குரிய அனைத்தையும் கற்றபின் பாஞ்சாலநாட்டு அவைக்குச் சென்று அங்கே அரசுவீற்றிருந்த பிரவாகண ஜைவாலி என்னும் அரசருக்கு அறமுரைக்க முற்பட்டார். "அந்தணரே, உமது கல்வியின் தொலைவென்ன?" என்று உசாவிய பிரவாகணர் ஐந்து வினாக்களை தொடுத்தார். ஐந்துக்கும் மறுமொழி சொல்ல இயலாது உளம்நலிந்த ஸ்வேதகேது திரும்பிச்சென்று தந்தையிடம் அவற்றை கேட்டார்.

உத்தாலகருக்கும் அந்த விடை தெரிந்திருக்கவில்லை. அவர் பிரவாகணரிடம் சென்று அவ்வினாக்களுக்குரிய விடையை கேட்டார். ஷத்ரியர்களுக்கு மட்டுமே உரிய மெய்யறிதல் அது என்று பிரவாகணர் சொன்னார். அதை எய்துவதற்கும் ஷத்ரிய ஆற்றல் தேவை என்றார். "நான் ஷத்ரியனாகிறேன். என் மைந்தனும் ஷத்ரியனாகி அவ்வித்தையை கற்பான்" என்றார் உத்தாலகர். பாஞ்சாலனாகிய பிரவாகண ஜைவாலி ஆணவம் அகற்றி, குலமிழந்து தன் அடிபணிந்து அமர்ந்த ஆருணியாகிய உத்தாலகருக்கு ஐந்தனல்யோகத்தை கற்பித்தார். அது பின்னர் அனைவருக்கும் உரியதாகியது. பிருகுகுலத்து அனல்குடி முனிவர்கள் தங்கள் யோகமுறை என அதை கொண்டார்கள்.

பிரம்மத்தின் சுடர்வே அனல். அனல்களே இப்புடவியை சமைத்திருக்கின்றன. ஐந்துவகைகளில் அறியப்படுவதனால்

அவ்வனல்வெளி ஐந்தனல் எனப்படுகிறது என்று பரசுராமர் சொன்னார். அனலை அறிவது புடவிமெய்மையை உணர்வது. அனலென்றாவது மாயையை அழித்து மானுட எல்லை கடப்பது. புடவியை ஆள்பவை ஐந்து அனல்கள். மின்வடிவில் விண் நிறைப்பது ஒன்று. பருவடிவப் பொருளென்றாகி நிலைப்பது பிறிதொன்று. விசையென்றாகி பொருள்களை ஆட்டுவிப்பது மூன்றாவது, இணைவும் பிரிவும் அழிவும் என்றாகி பொருள்களை ஆளும் நெறியாகி நிற்பது நாலாவது அனல். இன்மை என்றாகி இருள் வடிவில் சுழல்வது ஐந்தாம் அனல். இவ்வுடலை ஐந்தனல்கள் ஆள்கின்றன. மூலாதாரத்தில் காமம். சுவாதிட்டானத்தில் பசி. மணிபூரகத்தில் இதயம். அனாகதத்தில் மூச்சு. விசுத்தியில் சொல்.

இப்புவியை ஆள்கின்றன ஐந்தனல்கள். ஒன்று விண்ணில் ஒளியென உறைகிறது. பிறிதொன்று அனைத்துப் பருப்பொருட்களிலும் அனல் என உறைகிறது. நீரில் வாழ்கிறது மூன்றாவது. அன்னத்தை உயிர்பெறச்செய்வது அது. கருவில் தளிரில் குருதியில் நிறைந்திருப்பது. நான்காவது அனல் சொல்லில் பொருள் எனத் திகழ்கிறது. ஐந்தாவது அனல் யோகத்தில் வெறுமையென விரிகிறது. ஐந்து வகை கருவனல்களால் இவை படைக்கப்படுகின்றன. விண்ணின் தூயநீர்வெளி. அதிலெழுந்தவை விண்மீன்களும் சூரியனும் சந்திரனும். முகில்களில் விளைகின்றது மழை. மண்ணின் கருவிலெழும் அனலே உணவாகிறது. ஆணின் விந்துவிலும் பெண்ணின் கருப்பையிலும் வாழும் அனல்கள் உடலென உள்ளமென பொறிகளென சித்தமென மலர்ந்து நோக்கு கொண்டு புடவிசமைக்கின்றன.

பரசுராமர் சொன்னார் “கதிர் கொள் அனைத்திலும் எழுகிறது அனல். ஐந்து அனல்தெய்வங்களை வணங்குக! முன்பு பிரவாகண ஜைவாலி ஸ்வேதகேதுவுக்கு அளித்த ஐந்தனல் யோகநெறியை நான் உனக்கு உரைக்கிறேன். ஐந்து ஆற்றல்கள், ஐந்து அழிவின்மைகள், ஐந்து இன்மைகள். அவை உனக்கு அருள்க!” கர்ணன் அவர் காலடியை வணங்கி அச்சொற்களை பெற்றான். நூலறிவுறுத்திய நெறிகளின்படி கர்ணன் கோதையின் கரையில் ஏழுபனை என்று பெயர் கொண்ட குன்றின் மீது நூற்றெட்டு பாறைக்கற்களை கூம்பு வடிவில் அடுக்கி தனக்கென கற்சிதை ஒன்று அமைத்தான். அதனைச் சுற்றி விறகுகளை அடுக்கி அனல்மூட்டினான். கிழக்கு திசையின் அனலான ஜாதவேதனும் மேற்கின் அனலோனான வஹ்னியும் எழுந்தனர். தெற்கே சாவின் நெருப்பான கிரவ்யாதன் பற்றிக்கொண்டான். வடக்கே ஊழிநெருப்பான ருத்ரன். மேலே விண்நெருப்பான சூரியன் ஒளிசூடி நின்றான்.

அந்தச் சிதைபீடத்தின் மீதேறி கிழக்கு நோக்கி ஊழ்கத்தில் அமர்ந்தான் கர்ணன். ஜ்வாலை, கீலம், அர்ச்சிஸ், ஹேதி, சிகை என்னும் ஐந்து தழல்கள் எழுந்து சுழன்றாடின. ஃபூதி, ஃபஸிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷ என்னும் ஐந்து சாம்பல்கள் தோன்றின. அனல் ஜ்வலனன், பர்ஹிஸ், கிருசானு, பாவகன், அனலன், தஹனன், தமுனஸ், வி஫பவஸ், சூசி என்னும் தன் முடிவிலா வடிவங்களில் வண்ணவண்ணத் தோற்றங்களில் அவனைச்சூழ்ந்து எழுந்தான். அனல்பட்டு உடல் பொசுங்க பாறை கொதித்து தானும் அனலென்றாகி மெய்யுருக கர்ணன் நின்றான். உடலென்பது எரியும் நீரும் நிகர்செய்த கணமே இருப்பென்றாகி நீளும் காலம் கொண்டது என்று உணர்ந்தான். நீரும் அனலே என்று உணர்கையில் அனல் ஏந்திய அனலே உடலென்று அறிந்தான். அனலன்றி பொருளென்று ஏதுமில்லை.

அனல்தலன்றி நிகழ்வென்று ஏதும் புடவியில் இல்லை. அனலாதலே தவம். அனல் மூன்று நிலை கொண்டது. எழும் அனல், அணையும் அனல். அனலின்மை, இன்மையென ஆன அனல். இன்மையனலில் இருப்புகொண்டுள்ளன அனைத்தும். கருவனல் அது. காண்பதற்கரியது. யோகத்தீ. அவன் அதை சென்றடைந்தான். அது அவனைத் தொட்டு தானாக்கிக் கொண்டது.

ஐந்தனல் மேல் தவம் செய்பவன் தன்னுள் ஒவ்வொரு அனலாக எழுப்புகிறான். அவை தன்னை கொதிக்க வைத்து, உருக வைத்து. முற்றழிப்பதை காண்கிறான். பின்னர் அனலின் ஆழத்தில் தண்ணிலவு ஒன்று எழுகிறது. விண்ணின் அமுதாக உருகிச்சொட்டிய துளி என நோக்குகையிலேயே உடல் தித்திக்கவைப்பது அது. எண்ண எண்ண சித்தம் குளிர வைப்பது. அதிலிருந்து பெருகி வழியும் வெண்ணிற தண்மையில் தன் உடலின் அனல்கள் ஒவ்வொன்றாக அணைவதை காண்கிறான். அனைத்து அனல்களும் அணைந்து குளிர்ந்த பாறை ஒன்று சுனையடியில் கிடப்பதுபோல் தான் அங்கு இருப்பதை அவன் உணர்கிறான். பின்னர் விழி திறந்து நோக்குகையில் அவன் தன்னைச் சூழ்ந்திருந்த அனல் குளிர்ந்த மென்மலர்களாக ஆகிவிட்டிருப்பதை காண்பான்.

கர்ணன் விழி திறந்தபோது தன் இரு கண்மணிகளும் பனிக்கட்டிகளென குளிர்ந்திருப்பதை உணர்ந்தான். கிழக்குத்திசையில் பொற்கொன்றை மரம் பூத்திருந்தது. மேற்கே செந்தழலென செண்பகம். வடக்கே பொன்பூசி நின்றது வேங்கை. தெற்கே செவ்வொளி கொண்டிருந்தது காந்தள். அவன் எழுந்து நான்கு பூமரங்களையும் வணங்கினான். தலைக்கு மேல் பொன்முகில்கள் அலைதிரண்டு ஒளி சூடி

நின்றிருந்தன. தன் உடல் ஒளிகொண்டிருப்பதை, ஆகவே நிழலற்றிருப்பதை அவன் கண்டான். விழிமூடி ஆசிரியரின் காலடிகளை சித்தத்தில் நிரப்பி தொழுதான்.

கொன்றையில் எழுந்த முதல் அனலோனாகிய ஜாதவேதன் அவன் முன் தோன்றினான். பொன்னெரியாலான ஒளியுடல்கொண்டிருந்தான். வலக்கையில் அமுதகலமும் இடக்கையில் வேள்விக்குரிய நெய்க்கரண்டியும் ஏந்தியிருந்தான். அவன் நா எரிகுளத்தின் எழுதழலென பறந்தது. "உன் தவம் பொலிக! உன் அம்பில் நான் எழுவேன். உன் ஆணைப்படி நின்று ஆடுவேன். என் அருளை பெறுக!" கர்ணன் அவனை வணங்கினான். செண்பகத்தில் வஹ்னி எழுந்தான். வலக்கையில் தர்ப்பையும் இடக்கையில் மின்படையும் வைத்திருந்தான். "உன் படைக்கலம் என ஆவேன். உன்னுடன் நின்றிருப்பேன்" என அருள் அளித்தான். தெற்கே காந்தளில் எழுந்த கிரவ்யாதன் "நீ விழையும்வரை உனக்கு சாவில்லை. விழைந்தால் அழிவின்மையையும் அளிப்பேன்" என்றான். வடக்கே வேங்கையில் எழுந்த ஊழித்தீயான ருத்ரன் "வீரனே, உலகனைத்தையும் உண்ணும் பசியுடன் உன் அம்புகளில் வாழ்வேன்" என்றான்.

விண்ணிலிருந்து ஒளிரும் இளமழை என இறங்கி அவன் முன் நின்று ஐந்தாவது அனலோன் சொன்னான். "விண்ணெரிவடிவு கொண்ட என் பெயர் திரிகாலன். என்னை நீ எடுக்கையில் உருத்திரனுக்கும் ஆழிவெண்சங்கு கொண்டவனுக்கும் நிகராக ஆவாய். அவர்களும் உன்னை எதிர்த்து வெல்லமுடியாதவர்கள் என உணர்வார்கள். என்னை கையில் வைத்து நீ இவ்வுலகை ஏழு முறை அழிக்க இயலும். ஏழாயிரம் முறை புரக்கவும் இயலும். ஆம் அவ்வாறே ஆகுக!" கர்ணன் ஐந்தாம்

அனலோனை வணங்கி தன் ஆசிரியரின் குடிலுக்கு திரும்பினான். அவர் காலடிகளைப் பணிந்து "நான் மீண்டேன், ஆசிரியரே" என்றான். அவர் புன்னகையுடன் தன் வில்லை சுட்டிக்காட்டினார். அவன் சென்று அதை எடுத்தபோது மென்மூங்கில்போல் எடையற்று குளிர்ந்திருந்தது.

எட்டாவது சூதரான துருதர் சொன்னார். "அன்று காலை கர்ணன் தன் விஜயத்தை எடுத்தபோது அதைச்சூழ்ந்து ஐந்து அனலவன்களும் ஒளிக்கதிர்களாக விரிந்திருப்பதை கண்டான். அப்போரில் அவர்கள் தன்னுடன் வருவார்கள் என்று உணர்ந்தான். சூதரே, மாகதரே, கேளுங்கள். அன்றைய போர் ஐந்தனல்கள் ஆற்றிய விளையாடலாக அமைந்தது."

இருட்கனி - 46

மென்மழை நின்றுகொண்டிருந்த குருக்ஷேத்ரக் களத்தில் கௌரவப்படைகள் அணிவகுத்து சூழ்கை அமைத்தன. படைக்கலங்களும் தேர்களின் உலோகமுகடுகளும் ஒளியென்றும் மெல்லிருளென்றும் மாறி மாறி விழிமாயம் காட்டிய நீர்த்திரைக்குள் மின்னி திரும்பின. புரவிகளின் குளம்படி ஓசைகளும் சகட ஒலிகளும் ஆணைகளின் பொருட்டு எழுந்த கொம்பொலிகளும் சங்கொலிகளும் நீர்த்திரையால் மூடப்பட்டு மழுங்கி கேட்டன. கூரையிடப்பட்ட காவல்மாடங்களில் எழுந்த முரசொலிகள் இடியோசைகளுடன் கலந்து ஒலித்தன.

முரசுத்தோற்பரப்பு சாரல் ஈரத்தில் மென்மை கொள்ளாதிருக்கும்பொருட்டு காவல் மாடத்தில்

அனல்சட்டிகளை கொளுத்தி தோலை காய்ச்சிக்கொண்டிருந்தார்கள். மழைக்குள் நூற்றுக்கணக்கான காவல் மாடங்களில் எரிந்த பந்தங்களின் ஒளி எரிவிண்மீன் நிரைகள் எனத் தெரிந்தது. அனலொளி மழைச்சாரலில் குருதிபோல் கரைந்து பரவுவதுபோலத் தோன்றியது. படைகள் இடம்மாறிக்கொண்டிருக்கையில் நின்றுகொண்டிருப்பன போன்றும் சென்றுகொண்டிருப்பன போன்றும் விழிமயக்கு ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கட்டற்ற முட்டிமோதலாகவும் ஒவ்வொன்றும் சென்றமைகையில் முன்னரே வகுக்கப்பட்ட வடிவம் என்றும் தன்னை காட்டியது படை. பெருந்திரள் வடிவம் கொள்கையிலேயே அது இயற்கை என்று ஆகி இயற்கையின் இயங்குமுறையையே தானும் கொண்டுவிட்டிருந்தது.

விருஷசேனன் தன் புரவியிலிருந்து இறங்கி கர்ணனின் குடில் வாயிலில் காத்து நின்றான். மழையின் ஈரத்தில் தரையில் காலடித்தடங்கள் நீர்ச்சுவடுகளாக மாறி ஒளிகொண்டிருந்தன. அங்கிருந்த புரவிச்சுவடு சல்யருடையது என அவன் எண்ணினான். அவர் வந்து சுழன்று நின்று இறங்கிச்சென்றதை அதிலேயே பார்க்கமுடிந்தது. அப்பகுதியில் வயல்சேறென நிலம் கலக்கப்பட்டிருந்தது. எடைமிக்க குறடொலி கேட்டது. அவன் நன்கறிந்த ஓசை. மெல்லிய மெய்ப்புடன் அவன் உடல்நீட்டி நின்றான். கவசங்கள் அணிந்து முழுதணிக்கோலத்தில் குடிலில் இருந்து வெளிவந்த கர்ணன் கிழக்கு நோக்கி கைகூப்பி வணங்கிவிட்டு மைந்தனை அணுகினான். இயல்பாக அவன் கை வந்து விருஷசேனனின் தோளில் பதிந்தது.

விருஷசேனன் உளஎழுச்சி அடைந்து மெல்ல நடுக்கம் கொண்டான். சிறு குழந்தையென அவன் தோள்கள் முன் வளைந்தன. கர்ணன் அவனைத் தொடுவது மிக அரிது. இளநாட்களில் நீர்விளையாடும்பொழுது அவன் மைந்தர்களை தூக்கி வீசுவதுண்டு. கானாடச் செல்கையில் மரங்களில் கை பிடித்து ஏற்றுவதுண்டு. அம்பு பயில்கையில் பிழை நிகழும்போது மட்டும் கண்களில் சிறு சினம் தெரிய எழுந்து வந்து கைபற்றி வில்லுடன் சேர்த்து திருத்துவது வழக்கம். அத்தனை தொடுகைகளும் விருஷசேனனுக்கு நன்கு நினைவிருந்தன. ஒருகணத்தில் அத்தனை தொடுகைகளுமே நினைவிலெழ அவன் மேலும் மேலும் அகம் நெகிழ்ந்தபடியே சென்றான்.

கர்ணன் அவனை நோக்கி வந்தபோது முகத்தில் இருந்த உணர்வு அவன் எதையோ சொல்லப்போவதுபோல் தோன்றியது. ஆனால் தோளைத் தொட்டதுமே அனைத்துச் சொற்களையும் மறந்துவிட்டவன்போல அவன் முன்னால் சென்றான். விருஷசேனன் தொடர்ந்தான். கர்ணன் தன் புரவியை அணுகி அதன் கழுத்தை தடவிவிட்டு கால் வளையத்தில் மிதித்து மறுகால் சுழற்றி அமர்ந்தான். மீண்டும் அவன் எதையோ சொல்லப்போகிறான் என்ற எண்ணத்தை விருஷசேனன் அடைந்தான். ஆனால் கர்ணன் புரவியை மெல்ல தட்டி செல்லும்படி பணித்தான்.

மழை ஓங்குவதுபோல் ஓசை எழுந்தது. ஆனால் விசையுடன் தெற்கிலிருந்து வீசிய காற்று மழைப்பிசிறுகள் அனைத்தையும் ஒற்றை அலையென அள்ளிச் சுழற்றி வடமேற்காக கொண்டு சென்றது. பின்னர் ஒரு குளிர்காற்று மேலும் சுழல்விசையுடன் வந்து அனைத்துக் கொடிகளையும் படபடக்கச்செய்து

கூடாரத்தோல்கள் உப்பி எழுந்து உடனே வளையும்படிசெய்து, தேர்மணிகளையும் புரவிகளின் கவசங்களையும் மணிக்குச்சங்களையும் குலுங்க வைத்து கடந்து சென்றது.

காற்றில் ஒரு நீர்ப்பிசிறுகூட இல்லை என்பதை விருஷசேனன் கண்டான். அங்கு அதுவரை இளம்மழை பெய்ததற்கான தடயங்கள் தரைச் சேற்றில் மட்டுமே இருந்தன. புரவிக்குளம்புகள் பதிந்த பள்ளங்களில் தேங்கிய நீர் மான்விழிகள் போல் ஒளி கொண்டிருந்தது. பல்லாயிரம் விழிகள் எழுந்து குருக்ஷேத்ரம் அவர்களை நோக்கிக்கொண்டிருந்தது. மழை நின்றதும் அனைத்து ஒலிகளும் கூர்மை கொள்ள அதுவரை அங்கிலாத பெரும் படையொன்று வந்து தன்னை சூழ்ந்துகொண்டதைப்போல விருஷசேனன் உணர்ந்தான். அந்த ஒலியே குளம்புக்குழிவிழிகளில் நீரின் நலுங்கல் என உள்ளம் மயங்கியது.

கர்ணன் புரவியைத் தட்டி ஊக்கி மென்நடையில் மரப்பலகை பாதை மீது எழுந்தான். நோக்கியிருக்கவே அனைத்து வண்ணங்களும் மேலும் துலங்கி புடைப்புகொண்டு எழுவதுபோல் விருஷசேனன் உணர்ந்தான். காட்சி கூர்கொண்டபோது அதையே உள்ளமென போலிசெய்துகொண்டிருந்த அகமும் தெளிவடைந்தது. சூழ நோக்கியபோது யானைகளின் கவசங்களும் முகபடாம்களும் சுடர் கொண்டிருந்தன. கொடிகள் முற்றாக ஈரத்தை இழந்து படபடத்தன. படைவீரர்கள் அந்தக் காற்றால் அதுவரை இருந்த உளஅமைப்பு மாறுபட நகைத்தபடியும் சிறுசொற்கள் பேசிக் களியாடியபடியும் சென்றுகொண்டிருந்தனர்.

அவன் அண்ணாந்து நோக்கியபோது வானம் மிக மெல்ல பிளவுபடுவதை கண்டான். கருமுகில் திரை விலகி வானின் பெரும்பகுதி மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. கிழக்கு வானில் திறந்த பெருவாயிலினூடாக கண்கூசாத இனிய ஒளி குருக்ஷேத்ரத்தின்மேல் பெய்தது. படைகளின் வியப்பொலியைக் கேட்டு அவன் திரும்பிப்பார்த்தபோது ஒரு கணம் மெய்ப்பு கொண்டு அறியாது கடிவாளத்தை இழுத்தான். அவன் புரவி தயங்கி நிற்க கர்ணன் மட்டும் காற்றில் மிதந்து செல்வதுபோல் மரப்பலகை பாவிய பாதையில் சென்றான்.

கர்ணன் மீது விண்ணிலிருந்து பொன்னிற ஒளி ஒன்று இறங்கியிருந்தது. அவன் அணிந்திருந்த கவசங்களும் அணிகளும் விழிமலைக்கும்படி மின் கொண்டிருந்தன. அவன் புரவியின் கடிவாள மணிகளும் சேணத்தின் பித்தளை வளையங்களும் அது அணிந்திருந்த வெள்ளி அணிகளும்கூட பொற்சுடர் பெற்றிருந்தன. புரவியின் கால்கள் நிலம் தொடுவதுபோல் தோன்றவில்லை. அவை காற்றைத் துழாவி சென்றுகொண்டிருந்தன. முகில் ஊர்வது போல் அவன் படைகளின் நடுவே சென்றான்.

படைவீரர்கள் வாழ்த்தொலி எழுப்பவில்லை. ஆனால் இயல்பாக அவர்கள் வாயிலிருந்து எழுந்த வியப்பொலிகளும் மகிழ்ச்சிக் கூச்சல்களும் கலந்து பெரும் கார்வையென கர்ணனை சூழ்ந்திருந்தது. விருஷசேனன் நடுங்கிக்கொண்டிருந்தான். கண்களிலிருந்து நீர் வழிந்து மார்பில் சொட்டியது. இருகைகளையும் கூப்பி நெஞ்சோடு அணைத்துக்கொண்டான்.

கூடி நின்ற படைவீரர்களில் எவனோ ஒருவன் தன் வேலை தூக்கி வானிலெறிந்து பற்றி வெடிப்புறு பெருங்குரலில்

“மணிக்குண்டலன் வாழ்க! கதிர்க்கவசத்தோன் வாழ்க! விண்ணூர்பவன் மைந்தன் வாழ்க! வெற்றிகொள் வேந்தன் வாழ்க!” என்று கூவினான். “மணிக்குண்டலன் வாழ்க! ஒளிக்கவசன் வாழ்க! கதிர்மைந்தன் வாழ்க!” என்று சூழ்ந்திருந்த கௌரவப்படையினர் கைவீசி ஆர்ப்பரித்தனர். திகைப்புடன் திரும்பி கர்ணனின் உடலை விருஷசேனன் பார்த்தான். சற்று முன் அவன் அணிந்திருந்த அதே இரும்புக்கவசங்களும் வழக்கமான அருமணிக் குண்டலங்களும்தான் தெரிந்தன.

தேவதேவனுக்கு அளிக்கப்பட்ட மணிக்குண்டலங்களும் கதிர்க்கவசமும் மீண்டு வந்துவிட்டனவா? இப்படை வீரர்கள் எதை பார்க்கிறார்கள்? அவன் புரவியைத்தட்டி தந்தையின் அருகே சென்றான். விழிகளால் தந்தையின் உடலையும் சூழ்ந்து அவனை நோக்கி படைக்கலங்களை வீசி துள்ளி குதித்தெழுந்து ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த படைகளையும் மாறி மாறி பார்த்தான். இவர்கள் பார்ப்பதென்ன? இவர்கள் உணர்வதென்ன? ஏன் அதை நான் பார்க்கவில்லை? இவர்கள் பார்ப்பதை பார்க்கும் அளவுக்கு எனக்கு அயல்கை இல்லையா? அறியாமை இல்லையா? அல்லது அது அணுக்கமும் அறிவும்தானா?

பின்னர் நீள்மூச்சுடன் அவன் மெல்ல தளர்ந்து அமைந்தான். ‘ஆம்’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். மானுடம் எனும் அழியாப் பெரும்திரைச்சீலையில் வரையப்பட்ட கதிர்மைந்தனின் ஓவியத்தை எவர் அழிக்க இயலும்? என்றும் அது அங்குதான் இருக்கும். அதைத்தான் இந்திரன் அச்சுனைக்கரையில் நின்று சொன்னான். அது என்றென்றும் அழியாது அங்கு இருக்கும்.

போர் முனையில் சல்யர் நின்றிருந்தார். தொலைவிலேயே அவரை விருஷசேனன் கண்டான். கைகளை விசையுடன் ஆட்டி ஏவலர்களுக்கும் சூதர்களுக்கும் ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தார். படையில் எழுந்த ஆரவாரத்தை அவர் அறியவில்லை. தன்னைச் சூழ்ந்திருந்த அனைவரும் தன் ஆணைகளை முற்றாகவே கேட்பதை நிறுத்திவிட்டு விழிநட்டு நோக்கும் திசையை உணர்ந்தபின்னர் அவர் திகைப்புடன் திரும்பிப் பார்த்தார். கர்ணனைக் கண்டதும் அவர் கையிலிருந்த சவுக்கு மெல்ல தாழ்ந்தது. முதிய முகம் வியப்பில் விரிய வாய் திறந்து கண்கள் நிலைத்தன. கர்ணன் புரவியில் அவரை அணுகும் வரை அவர் சொல்லிழந்து செயலற்று நின்றார்.

கர்ணன் புரவியிலிருந்து கால் சுழற்றி இறங்கியதும் சல்யர் உயிர்கொண்டு சிறிய தாவல்களுடன் அவனை நோக்கி வந்து "பிந்திவிட்டாய்! சற்று பிந்திவிட்டாய்!" என்றார். கர்ணன் "ஆம், மத்ரரே. சற்று பிந்திவிட்டேன். இங்கு விரைந்து வர எண்ணினேன், இயலவில்லை" என்றான். சல்யர் "நீ அணியூர்வலம்போல வந்தாய்... உன் இயல்பாகவே அது ஆகிவிட்டது. நீ அழகன் என அனைவரும் சொல்லிச்சொல்லி உன்னில் ஆணவத்தை ஏற்றிவிட்டனர். அவர்களின் விழிகளுக்கு முன் நடிக்கிறாய்" என்றார்.

கர்ணன் "பொறுத்தருளவேண்டும்" என்று மட்டும் சொன்னான். சல்யர் "ஆயிரம் விழிகளில் ஒருவிழி நச்சுவிழி என்றாலே போதும்... இவர்கள் அத்தனை பேரும் நல்ல உள்ளம் கொண்டவர்கள் அல்ல" என்றபின் மீண்டும் தன்னை தொகுத்துக்கொண்டு "சரி, வெகுவாக பிந்தவில்லை. இன்னும் பொழுதிருக்கிறது. நமது படைகள் ஒருங்கமைந்துகொண்டுதான்

இருக்கின்றன. இப்போது எஞ்சியிருக்கும் படைகளில் திறன் மிகுந்த வில்லவர்கள் இருப்பது காந்தாரர்களிடம்தான். அவர்களை நமக்குப் பின்னால் நிறுத்தியிருக்கிறேன். அஸ்தினபுரியின் காலாட்படையினர் நமது நிரையின் இருபுறமும் இரு கைகளென வருவார்கள். உனது மைந்தர் உனக்குப் பின்னால் பிறை வடிவுகொண்டு புறம் காக்கட்டும்" என்றார்.

கர்ணன் "ஆம், தங்கள் ஆணைப்படி" என்றான். சல்யர் "இன்று நம்மை எவரும் நிறுத்தப்போவதில்லை. பாண்டவப்படைகளை ஊடுருவிச் செல்லவிருக்கிறோம். ஐவரும் இன்று அடிபணிந்தாகவேண்டும். அன்றேல் யுதிஷ்டிரனின் தலைகொண்டு மீள்வோம். அர்ஜுனனின் நெஞ்சு பிளந்த பின்னரே அது ஆகுமெனில் அவ்வாறே ஆகட்டும்" என்றார். கொந்தளிப்புடன் கைகளைத் தூக்கி அசைத்து "இன்றுடன் இப்போர் முடிந்தாகவேண்டும். அது நம் கடமை" என்று கூவினார். கர்ணன் "ஆம், அவ்வாறே ஆகுக, மத்ரரே!" என்றான்.

அந்த அழைப்பு சல்யரின் விழிகளில் சிறிய ஒளி ஒன்றை அணையச் செய்வதை விருஷசேனன் கண்டான். சல்யரின் உடலசைவு, பேச்சு, தோற்றம் என எதிலும் கர்ணனின் எந்தச் சாயலும் இல்லை என்றாலும் எவ்வகையிலோ அவர் அவனுக்கு கர்ணனை நினைவுறுத்திக்கொண்டே இருந்தார். அது ஏனென்று அப்போதும் அவனால் உணரமுடியவில்லை. சல்யர் சவுக்கால் தன் தொடைக்கவசத்தை தட்டியபடி ஏவலர்களிடம் "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், அங்கே? அனைத்துக் குளம்புகளையும் இறுதியாக சரிபார்த்துவிட்டீர்களா? "என்றார்.

புரவிக்குளம்புகளை தரையிலமர்ந்து நோக்கிக்கொண்டிருந்த ஏவலன் "பார்த்துவிட்டோம், அரசே" என்றான். கர்ணன்

இடையில் கைவைத்து நின்று புரவிகளைப் பார்த்து ‘சற்று சிறியவை” என்றான். “ஆம், சிறியவை. ஏற்கெனவே இங்கு கட்டப்பட்டிருந்த புரவிகள் நீண்ட பேருடல் கொண்டவை. அப்புரவிகளால் இந்தத் தேரை மிகுந்த விசையுடன் இழுத்துச்செல்ல முடியும். ஆனால் நெடுநேரம் அவை செல்வதில்லை விரைவிலேயே அவை களைத்துவிடுவதை பார்க்கலாம். ஏனெனில் அவை கடுகிச்செல்பவை. இவை மலைப்புரவிகள். இவற்றால் அந்த அளவுக்கு விரைவுகூட்ட இயலாது. ஆனால் நிகர்நிலத்தில் இன்று அந்திவரை ஒருகணமும் கால்தளராமல் நுரை கக்காமல் தேரை இழுக்க முடியும்.”

“ஏனென்றால் எடைகளுடன் மலையேறிச்செல்லும் தொடைவல்லமை கொண்ட புரவிகள் இவை. என் கைகளில் பிறந்து வளர்ந்தவை. ஒவ்வொன்றையும் கருப்பையிலேயே இலக்கணம் நோக்கி தெரிவு செய்து ஒன்றுடன் ஒன்று இசைவுபடும்படி பயிற்றுவித்து வளர்த்தேன். நோக்குக, என் ஆணை பிறந்ததும் இவ்வேழு புரவிகளும் ஒன்றென்றாகும்! ஒற்றை எண்ணமும் இயல்பும் மட்டுமே கொண்டவை ஆக மாறும். இந்தத் தேர் அவற்றுக்குப் பின்னால் தெய்வங்களால் உள்ளங்கையில் ஏந்திச்செல்லப்படுவது போல செல்லும்” என்றார் சல்யர். உள ஊக்கம் எழ கைதூக்கி “ஐயம் வேண்டாம், இன்று இந்தக்களத்தில் நானே சிறந்த தேர்ப்பாகன்” என கூவினார்.

கர்ணன் “நன்று, மத்ரரே. இந்நாளில் வெற்றி நம் அரசருடன் நிலைகொள்க!” என்றபடி தேரை நோக்கி சென்றான். விருஷசேனன் சூழ்ந்திருந்த கௌரவப்படையை பார்த்தான். எழுகதிரோன் வடிவத்தில் சூழ்கை அமைக்கப்பட்டிருந்தது.

புரவியில் அமர்ந்தவாறே படையின் இரு எல்லைகளையும் பார்க்க இயன்றது. வலது எல்லையில் கிருபர் தன் பின்னால் அஸ்தினபுரியின் படைப்பிரிவுகளுடன் நின்றார். இடது எல்லையில் கிருதவர்மன் யாதவபடைப்பிரிவுகளுடன் நின்றான். இருபுறமும் அஸ்வத்தாமனும் சுபாகுவும் அணிவகுத்து நின்றிருந்தனர். கதிரோனின் நீல மையம் என கர்ணன நின்றிருக்க அவனிலிருந்து எழும் கதிர்களின் வடிவில் கௌரவப்படைப்பிரிவுகள் அமைந்திருந்தன.

விருஷசேனன் துரியோதனன் படைமுகப்புக்கு வந்துவிட்டாரா என்று பார்த்தான். அவர் காலையில் புத்துணர்வுடன் துயிலெழுந்துவிட்டார் என்றும் படைபயிற்சி எடுத்துவிட்டு உணவு அருந்திக்கொண்டிருக்கிறார் என்றும் தந்தையின் குடில் நோக்கிச் செல்லும்போது ஏவலன் சொல்லி அறிந்திருந்தான். புத்துணர்ச்சியுடன் எழுவதா என்று ஒருகணம் தோன்றினாலும் துரியோதனனின் இயல்பை அறிந்திருந்தமையால் அது நிகழக்கூடியதே என்றும் தோன்றியது.

படைசூழ்கை முழுமையடைந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு படைப்பிரிவும் அதற்குரிய இடத்தில் வந்து பொருந்த, தேர்ந்த ஓவியன் தூரிகையில் வண்ணம் தொட்டு வரையும் ஓவியம் உருதிரண்டு முழுமை கொள்வதுபோல் படைசூழ்கை தெளிந்து வந்தது. எத்தனை முறை இப்படி படைசூழ்கைகள் துளிகளென இணைந்து ஒருங்கமைவதை பார்த்திருக்கிறோம் என்று விருஷசேனன் எண்ணிக்கொண்டான். முதல் நாள் படைசூழ்கை அவ்வாறு ஒத்திசைவதைக் கண்டபோது எழுந்த உளஎழுச்சியை நினைவு கூர்ந்தான். அன்று அவன் தேர்ப்பாகனாக இருந்தான். அணிவித்தொருக்கிக்கொண்டிருந்த தேரின் மேல் நின்று படைசூழ்கையை பார்த்தான்.

பல்லாயிரம் மானுடரை அவ்வாறு ஒரு பெரிய போர்ப் பொறியாக ஆக்க முடியும். ஒற்றைச் சொல்லில் இயக்க முடியும். பெரும்பூதம் போல் ஆணைகளுக்கு அது கட்டுப்படும். ஒருகட்டத்தில் ஆணையிடுபவன் உள்ளத்தையே உணர்ந்து பல்லாயிரம் கைகளும் படைக்கலங்களுமாக நின்று போரிடும். எண்ண எண்ண அன்று உள்ளம் கொந்தளித்தது. படைசூழ்கையே மானுடர் வகுத்தவற்றில் தலை சிறந்தது என்று அவன் நூல்களில் பயின்றிருந்தான். மானுடர் குடிகளை அமைத்தனர். குலங்களென திரண்டனர். அரசுகளாயினர். நகரங்களை அமைத்தனர். அவை அனைத்திலுமிருந்து கற்றவற்றைக் கொண்டு படைசூழ்கையை வடிவமைத்தனர். படையில் வெளிப்படும் செயல்கூர்மையும் ஒழுங்கமைவும் மானுடர் கூடிச்செயல்படும் வேறெங்கும் வெளிப்படுவதில்லை.

மானுடர் படைகளில் மட்டுமே முழுமையாக தானற்றவர்களாகிறார்கள். தாங்கள் என்று உணராமல் தன்னை அப்பேருருவென்று முற்றிலும் எண்ணி மயங்குகிறார்கள். படைகளில் தன்னழிவு கொள்ளும் வீரன் புடவியில் தன்னைக் கரைத்து அமரும் முனிவருக்கு நிகரானவன். பிறிதொரு இடத்திலும் அப்பேருருவை அவன் அடைய இயலாது என்பதனால்தான் பெரும்போரில் உயிர் பிழைத்தவர்கள்கூட மீண்டும் போருக்கெழ விழைகிறார்கள். போரை எப்போதும் கனவு காண்கிறார்கள். போரிலேயே மானுடனின் அனைத்து உச்சங்களும் வெளிப்படுகின்றன என்பதனால்தான் கவிஞர்கள் எழுதிய காவியங்கள் அனைத்துமே போரைப்பற்றி அமைந்துள்ளன.

ஆனால் அன்று அந்தப் படைசூழ்கை அவனை சிறிய ஏமாற்றத்தை நோக்கி கொண்டுசென்றது. போர்

தொடங்கியதுமே அப்படைசூழ்கை பொருளற்றதாகிவிடுவதை அவன் கண்டான். ஒரு படைசூழ்கையை நிகரான இன்னொரு படைசூழ்கையால் தாக்கமுடியும் என்றால், படைசூழ்கையை தக்க வைப்பதே அதை அமைத்தவர்களின் முழுப்பொறுப்பாக போரின்போது ஆகிவிடுமெனில் அதனால் என்ன பயன்? ஒழுங்கின்மையை படைத்துப் பரப்பியிருக்கும் பிரம்மத்தின் முன் ஒழுங்கு ஒன்றை அமைத்துக்காட்டி தானும் படைப்பாளியே என்று தருக்குகிறான் மானுடன். அல்லது பிரம்மத்தின் பேரொழுங்கிற்கு மாற்றாக தன் சிற்றொழுங்கை முன்வைக்கிறான். ஒழுங்கின்மை என பேருருக் கொண்டெழுந்த மலைகளுக்குக் கீழே சிறிய ஒரு மாளிகையை கட்டுபவன் போல். கட்டற்ற காட்டைத் திருத்தி சதுரக் கழனியாக்குபவன் போல.

அது மானுடனின் எல்லையை மட்டுமே காட்டுகிறது. அதன் செயலின்மை அவன் சிறுமைக்கு சான்று. போர் படைசூழ்கைகளால் நிகழ்வதில்லை. சூழ்ந்திருக்கும் பல்லாயிரம் கோடி மானுடரின் உள விழைவுகளால், தெய்வங்களின் ஊடாட்டங்களால், ஐம்பெரும் பருக்களின் ஆடலால், அவையனைத்தையும் ஆட்டுவிக்கும் பிறிதொன்றின் விருப்பத்தால் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அது உள்ளங்கையில் ஏந்தி உற்று நோக்கும் சிறு குமிழி மட்டுமே.

முதல் நாள் போர் முனையில் புலரி எழுவதற்குமுன் அவன் மயிர்ப்புகொண்டு உடல் தசைகள் இறுகி உச்சத்தில் நின்றிருந்தான். எக்கணம் முரசுத்தோலில் கோல் விழும் என அவன் கைகால்கள் வலிப்புற்று நின்றன. இதோ இதோ இதோ என அக்கணம் நீண்டுகொண்டிருந்தது. அங்கு சென்றிருந்த அத்தனை படைவீரர்களும் அவ்வண்ணமே நாண் ஏற்றிய

அம்பின் இறுக்கத்துடன் அசைவற்றிருந்தனர் அவன் விழி சுழற்றி நோக்கியபோது அப்பால் பீஷ்மபிதாமக்ர் தேரில் நின்றிருக்கக் கண்டான். அவர் மட்டுமே அந்தக்களத்தில் அச்சூழ்கைக்கு அப்பாலென நின்றிருந்தார். அங்கிருந்த எதையுமே உணராதவர் போல். அப்போரிலேயே ஆர்வமற்றவர் போல்.

அவன் அணிவித்த தேரை ஊர்ந்த கலிங்க நாட்டு படைத்தலைவனாகிய பர்ஜன்யன் "எங்கு நோக்குகிறாய், அறிவிலி?" என்றான். ஒன்றுமில்லை என்பதுபோல் அவன் தலைவணங்கினான். மீண்டும் பீஷ்மரின் முகத்தை நோக்கியபோது அதுவரை எழுந்த உளஎழுச்சி முற்றணைந்து சலிப்பும், பின் சினமும் ஏற்பட்டது. இத்தனை பெரிய உளக்கொந்தளிப்பை எழுப்பி, பல்லாயிரம் பேரில் நிரப்பி, அதைக்கொண்டு அவர்களை தொடுத்து, ஒற்றை விசையென்றாக்கி களத்தில் கொண்டு வந்து நிறுத்தியபின் அதன் தலைமையில் சற்றும் உளம் குவியாத முதியவர் ஒருவரை கொண்டுவந்து நிலைகொள்ள வைத்த அறிவின்மையை அவன் எண்ணி வியந்தான்.

இங்கு நின்றிருக்கும் இப்பல்லாயிரவரின் உணர்வெழுச்சியில் ஒரு துளி கூட அவரை சென்றடையவில்லை. எனில் அவரிலிருந்து ஒரு துளி ஊக்கத்தை கூட இப்படையும் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. இது ஓர் உரையாடல் என்று அவன் நூல்களில் பயின்றிருந்தான். படையினர் படைத்தலைவனை நடத்துகிறார்கள், படைத்தலைவன் படையினரை ஆள்கிறான். இன்னும் சற்று நேரத்தில் அவர் உடலிலிருந்து அந்த ஆர்வமின்மையை கௌரவப்படைகளும் பெற்றுக்கொள்ளும். அவருடைய சலிப்பே படைகளின்

ஒவ்வொரு வாள்வீச்சிலும் ஒவ்வொரு போர்க்கூச்சலிலும் வெளிப்படும்.

அவன் பீஷ்மரையே பார்த்துக்கொண்டிருந்தான். அவர் ஓர் அடையாளம். இத்தனை பெரிய படையும், இத்தனை உளக்கொந்தளிப்பும் அறுதியாக தோல்வியடையும் என அவர் காட்டுகிறாரா என்ன? அவரை அறியாமல் அவர் ஆழம் அதை முன்னுணர்ந்துவிட்டதா? பர்ஜன்யன் "எங்கு நோக்குகிறாய்? பிறிதொரு முறை புரவிகளின் குளம்புகளை நோக்கு" என்று ஆணையிட்டான். அத்தருணத்தில் அந்த ஆணை அத்தனை உவப்பானதாகத் தோன்றியது. விழிதாழ்த்தி புரவிகளின் குளம்புகளை பிறிதொரு முறை பார்த்தான். அவை பொறுமையிழந்து நிலத்தை தட்டிக்கொண்டிருந்தன. மிக அப்பால் முரசுத்தோல்மேல் கழிகள் அதே போல் பொறுமையிழந்து தொட்டுக்கொண்டிருக்கின்றன.

அவனால் மீண்டும் விழிதூக்கி பீஷ்மரை நோக்காமலிருக்க முடியவில்லை. பீஷ்மரின் வில்லின் நாண் தளர்ந்திருப்பதை அப்போதுதான் பார்த்தான். இன்னமும் வில்லை நாண் இழுத்து பூட்டக்கூட இல்லை இம்முதியவர். இவர் பெருவீரர் என்றே ஆகுக! இக்களத்தில் இவர் எவரும் நிகழ்த்தாத விந்தையை காட்டுவார் என்றே ஆகுக! ஆயினும் இறுதியில் எஞ்சப்போவது இந்த ஆர்வமின்மையே. இத்துளியே இக்களத்தில் கௌரவரை வீழ்த்தும் நஞ்சு. இதையே அவர்கள் அறுதியில் தங்கள் போர்ப்பரிசென பெறுவார்கள்.

இல்லை, இவ்வாறு எண்ணக்கூடாது. இது வீண் எண்ண ஓட்டம். இது தோல்வியை வரிந்துகொள்ளும் முயற்சி. ஆனால் இச்சலிப்பும் அவரிடமிருந்தே வந்தது. விழிகளால் அவரிடமிருந்து நஞ்சை தொட்டெடுக்கிறேன். தன்

உடலிலிருந்து அவர் அதை பரப்பிக்கொண்டிருக்கிறார். அத்தருணத்தில் போர் முரசு ஒலித்தது. படைகள் ஒருகணம் திகைத்து அசைவிழந்து நின்றன. எங்கிருந்தோ "வெற்றிவேல்! வீரவேல்! அழுதகலக்கொடி வெல்க! கௌரவப்படை வெல்க!" என்று வாழ்த்தொலி எழுந்தது. மலையிறங்கும் வெள்ளமென கௌரவப்படை பெருகி பாண்டவப்படை நோக்கி சென்றது.

கலிங்கப் படைத்தலைவன் பர்ஜன்யனின் தேரை விட்டு விலகி உடல் குனித்து முன்னேறி வந்த படைகளின் இடைவெளியினூடாக சென்று விருஷசேனன் படைகளின் பின்நிரையை அடைந்தான். அங்கு நின்று நோக்கியபோது அவனுக்கு முன்னால் படைக்கலங்களும் மானுட உடல்களும் புரவிகளும் யானைகளும் தேர்களும் கலந்து கொப்பளித்த பெரும் திரையை பார்த்தான். அதுவரை படையென்றும் போரென்றும் அவன் உருவாக்கிக்கொண்டிருந்த அத்தனை உளஓவியங்களும் கலைந்தன. அவன் முற்றிலும் அறியாத பிறிதொன்று நிகழ்ந்துகொண்டிருந்தது. எவ்வகையிலும் எச்சொற்களாலும் பொருள் அளிக்க இயலாத ஒன்று.

விருஷசேனன் நீள்மூச்சுடன் தன்னைச்சூழ்ந்து முழுமைகொண்டுவிட்ட கௌரவப்படையின் அமைப்பை பார்த்தான். கதிர்முகச் சூழ்கை பழுதற அமைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றியது. முழுப்படையையும் கொண்டு முதல்நாள் பெரும்படை சூழ்கை அமைத்த அஸ்வத்தாமனின் பணி ஒப்பு நோக்க எளிது என்று தோன்றியது. இது இன்னும் கடினமானது. வறுமையில் ஐந்தறைப் பெட்டியில் எஞ்சும் பொருட்களைக் கொண்டு கையளவு அரிசியை களைந்து அடிசில் சமைக்கும் இல்லத்தரசியின் பொறுமை அதற்கு தேவை. அவன்

அஸ்வத்தாமனை விழிகளால் தேடினான். அஸ்வத்தாமனின் உருவத்தைக் கண்டதும் முதற்கணம் அவன் உள்ளம் அதிர்வு கொண்டது. அவன் அதில் பீஷ்மரின் அதே உடல் மொழியை கண்டான்.

இருட்கனி - 47

சல்யர் தன்னை மிகையாக காட்டிக்கொள்வதை விருஷசேனன் நோக்கினான். கைகளை வீசி உரத்த குரலில் "யாரங்கே? பின்சகடத்தின் ஆரத்தை இன்னொருமுறை பார்க்கச் சொன்னேனே? அடேய் சம்புகா, நான் வந்தேனென்றால் குதிரைச்சவுக்கு உனக்காகத்தான்" என்று கூவினார். "அறிவிலிகள், பிறவியிலேயே மூடர்கள்" என்று முனகியபடி திரும்பி வந்து ஒவ்வொரு புரவியின் வாயாக பிடித்து பிளந்து நாக்கை பார்த்தார். அவற்றின் கழுத்தை தட்டியபடி "புரவிகள் நடுங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னும் சற்று மலைமது வரட்டும்" என்றார். அதைக் கேட்டு இரு ஏவலர் விரைந்ததைக் கண்டபின்னரும் "அடேய்! மலைமது என்று சொன்னேன். எங்கு பார்க்கிறாய்? விழிக்கிறான். உன்னையெல்லாம் படைக்குக் கொண்டுவந்தவன் எவன்?" என்றார்.

அந்தத் தருணத்தில் சல்யரின் கூச்சலும் வசைகளும் ஒவ்வாமையை உருவாக்கின. அவன் பார்வை சென்று தைக்க அவர் விருஷசேனனைப் பார்த்து, "என்ன செய்கிறாய்? உனது புரவிகளை பார்த்தாயா?" என்று கேட்டார். "இல்லை" என்று அவன் சொன்னான். "எங்கு போர்க்கலை கற்றாய் நீ? வில்லவன் தேரிலேறுவதற்கு முன் தன் தேரில் கட்டப்பட்டிருக்கும் புரவிகளை அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். அவற்றுடன்

பேச வேண்டும். அவை அவனை புரிந்துகொள்ள வேண்டும். யாருக்காக போர் புரியவேண்டும் என்பதை அறிந்துகொள்ளும் உரிமை அவற்றுக்கு உண்டு. உனக்கும் புரவிக்குமிடையே ஒரு உரையாடல் நடந்தாலொழிய தேரில் நின்றிருக்கும் உன்னை அவை அறியப்போவதில்லை. அவை எண்ணப்போவதென்ன என்று உனக்கும் தெரியாது" என்றார்.

விருஷசேனன் முதல் கணம் தன்னுள்ளிருந்து எரிச்சல் பொங்கி வருவதை உணர்ந்தான். ஆனால் ஒரு சொல்லும் பேசாமல் தலை திருப்பிகொண்டு புரவிகளை அணுகி அவற்றின் கழுத்தையும் காதுகளையும் தொட்டு மெல்ல இழுத்தான். தந்தை எப்போதுமே சல்யரிடம் புரிந்துகொள்ள இயலாத பணிவு ஒன்றை கொண்டிருப்பதை அவன் அறிந்திருந்தான். அவருடைய அந்தச் சிறுமைகளை அவர் விரும்புவதுபோலக்கூடத் தோன்றும். மீண்டும் திரும்பியபோது சல்யர் என்ன செய்வதென்றறியாமல் சகடத்தின் பட்டையை கைகளால் நீவிப்பார்ப்பதை கண்டான். ஒருகணத்தில் அவனுக்கு அவருடைய உளநிலை புரிந்து புன்னகை வந்தது. அவர் தன் வாழ்வின் உச்சதருணமொன்றில் இருக்கிறார். உச்ச தருணங்களில் இளிவரல் கூத்தர்போல் நடிக்கத் தொடங்கிவிடுபவர்களே மிகுதி. அப்போது என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று எவருக்கும் தெரிவதில்லை. அவர்கள் செய்வதெல்லாமே எண்ணிச்செய்பவை. செயற்கையாக இயற்றப்படும் அனைத்துமே ஒவ்வாமையை உருவாக்குகின்றன. மிகையாக, பொருத்தமற்றவையாக, பிழையானவையாக ஆகிவிடுகின்றன.

அத்தருணத்தில் தானும் அவ்வாறு மிகையாக நடந்துகொள்ளக்கூடுமோ என்று அவனுக்குத் தோன்றியது.

ஆனால் அவன் உள்ளம் முற்றாக சொல்லணைந்து படிந்துகிடந்தது. ஒரு வகையிலும் எழுச்சி கொள்ளவில்லை என்பதை நோக்கும்தோறும் உணர்ந்தான். என்ன ஆயிற்று எனக்கு? முதல் நாள் தந்தையுடன் போருக்கு வந்தபோதிருந்த கொந்தளிப்பில் துளிகூட இப்போதில்லை. தந்தையுடன் போருக்கு வந்தபோது அன்றே போர் முடியுமென்று அவன் நம்பினான். தந்தையின் அம்புகளுக்கு நிகராக எவரும் நின்றிருக்க இயலாது. அவரை வென்று கடந்து செல்வதென்பது பரசுராமர் ஒருவருக்கே இயல்வது. ஒருவேளை மறுபுறம் தேரோட்டி அமர்ந்திருக்கும் இளைய யாதவர் எண்ணினால் அவருக்கு நிகர் நிற்க இயல்வதாகும். வெல்லவும் கூடும். அவரோ படைக்கலம் எடுப்பதில்லை என நோன்பு கொண்டிருக்கிறார்.

ஆனால் களத்தில் ஒவ்வொன்றும் அவன் எண்ணியதற்கு மாறாகவே நிகழ்ந்தது. ஒவ்வொரு நிகழ்வும் வேறெங்கோ எவரோ முன்னரே முடிவு செய்து தன் வழியினூடாக கொண்டு செலுத்தி அமைப்பது போல் தோன்றியது. ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் உருவாகும் வெறுமையை, சலிப்பை, அதிலிருந்து உந்தி உந்தி நம்பிக்கையை மீட்டுக்கொள்ளும் தவிப்பை உணர்ந்த பின்னர் போர்க்களத்திற்கு எழுகையில் அவன் எந்த நம்பிக்கையையும் பேணிக்கொள்ளவில்லை. முதல்நாள் போரிலிருந்து மீள்கையில் அவன் ஏழுமுறை தேர் ஏறிச்சென்ற நாகம்போல மண்ணோடு மண்ணாக வெறும் தோல்சக்கைபோல தான் மாறிவிட்டிருப்பதாக உணர்ந்தான். இளையோரின் முகங்களை நோக்கிய பின்னர்தான் தன் கடனை உணர்ந்து "இன்று நாம் அவர்களை பெரும்பாலும் அழித்துள்ளோம். நாளை முழுவெற்றி, ஐயம் வேண்டாம்" என்றான்.

மறுநாள் "இன்று நாம் பாண்டவ மணிமுடியை வெல்வோம். தந்தை அதை அரசரின் தலையில் சூட்டுவார்" என்று தம்பியரிடம் சொன்னான். அவர்கள் அச்சொற்கள் முறைமைக்கென உரைக்கப்படுவன என அறிந்திருந்தார்கள். ஆயினும் அவர்களை அவை ஊக்கமூட்டி எழச்செய்தன. ஆனால் இருநாட்களில் அவன் அந்தச் சொற்களையும் இழந்தான். அடுத்தநாள் காலை களமெழுகையில் அவன் "இன்று களம் புகுகிறேன், இன்று என் உயிர் எஞ்சும் வரை தந்தையை காத்து நிற்பேன். இதற்கப்பால் எனக்கென்று இலக்குகளில்லை. இன்றுக்கு அப்பால் எனக்கு திட்டங்களுமில்லை" என்று திவிபதனிடம் சொன்னான். "நமது பணி அதுவே. இது ஒன்றே நம்மை காக்கும். இங்கு முரண்படும் அறங்கள் போரிடுகின்றன. நம்முடையதல்லா அரசுகள் முட்டிக்கொள்கின்றன. வெல்பவர்களும் வீழ்பவர்களும் நமக்கொரு பொருட்டு அல்ல. இந்த ஆடலில் நாம் இல்லை."

திவிபதன் "அவ்வாறு நம்மை விலக்கிக்கொள்ள முடியுமா என்ன?" என்றான். "முடியும். ஆகவேதான் இதை சொல்கிறேன். இச்சொற்களை மீள மீள நமக்கே சொல்லிக்கொள்க! நம்மிடம் நாமே சொல்வதனைத்தையும் நாம் ஏற்று அறியாமலே அடிபணிகிறோம் என்பதை சொல்லிப்பார்ப்பவர்கள் உணர்வார்கள்" என்றான். திவிபதன் "ஆம் செய்து பார்க்கிறேன்" என்றபின் "இப்போர் என்னுடையதல்ல. இதன் வெற்றி தோல்விகள் எனக்கொரு பொருட்டல்ல. எந்தையைக் காத்து நிற்பதென்பதே எனது பணி" என்றான். பின்னர் "மூத்தவரே. இதை நாம் கிளம்பும்போது கூட்டு உறுதிப்பாடென சொல்லிக்கொண்டால் என்ன?" என்றான்.

விருஷசேனன் அவ்வெண்ணத்தை உடனே பெற்றுக்கொண்டு “ஆம், நன்று. அதை நாம் செய்வோம்” என்றான். படைகள கிளம்புவதற்கு முன்பு வாளை உருவி நீட்டி அவன் அவ்வரிகளை சொன்னான். இளையோர் அனைவரும் தங்கள் வாள்களை உருவி நீட்டி அவ்வரிகளை ஏற்றுச் சொன்னார்கள். வாளுடன் சொல்லப்படும் வரி வாளே நாவென்றாக எழுவது. வாளென உடனிருப்பது. வாள் போல் கூர்மை கொண்டு படைக்கலமாவது. பின்னர் நிகழ்ந்த போர்களில் அவ்வுறுதிப்பாடு அவர்களை காத்தது. அவர்கள் எதற்கும் தயங்க வேண்டாம் எனும் நிலை ஏற்பட்டது. திரும்பி வருகையில் தங்கள் குருதிச் சுற்றத்தின் இழப்பை அன்றி எதைப் பற்றியும் அவர்கள் எண்ணிக்கொள்ளவில்லை. அவ்விழப்புகளைக்கூட அந்தியின் கூடுகையில் ஓரிரு சொற்களினூடாக கடந்து சென்றார்கள்.

அன்று காலை தன் குடிலுக்கு இளையோர் வந்தபோது விருஷசேனன் கவசங்கள் அணிந்துகொண்டிருந்தான். திவிபதன் அவனிடம் வந்து தலைவணங்கி நின்றான். பிற இளையோருக்காக விருஷசேனன் விழி தூக்கினான். அவர்கள் ஒவ்வொருவராக புரவியில் வந்து அருகே நின்றனர். “கிளம்புவோம்” என்றபடி அவன் எழுந்தான். அவன் இடைக்கச்சையை ஏவலன் இறுக்கிக்கட்டினான். தன் உடைவாளை கையிலெடுத்தபின் அவன் அவர்கள் விழிகளை பார்த்தான். பின்னர் “இன்று அவ்வுறுதிமொழியை நாம் எடுக்கவேண்டியதில்லை” என்றான். “ஏன்?” என்று திவிபதன் கேட்டான். “தேவையில்லை என்று தோன்றுகிறது. அச்சொல் நம் உளம்சென்று அமைந்துவிட்டது” என்றபின் செல்வோம் என கைகாட்டி அவன் தன் தேரை நோக்கி சென்றான்.

தேரின் அருகில் சென்றதும் ஏன் அந்த உறுதிமொழியை எடுத்துக்கொள்ளவில்லை என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். அன்று காலை முதல் நெடுநேரம் அவன் உள்ளம் முற்றாக ஓய்ந்துகிடந்தது. துயிலெழுந்து நெடுநேரம் இருளை வெறித்துக்கொண்டிருந்தான். புலரியில் துயில் விழிப்பில் எந்த முகமும் நினைவிலெழவில்லை. முந்தைய நாள் துயிலில் எஞ்சிய எண்ணம் எழுந்து தொடர்வதும் நிகழவில்லை. வெளியிலிருக்கும் இருளே உள்ளும் நிறைந்திருந்தது. அப்போது அறிந்த பொருளின்மையை அவன் முன்பு எப்போதும் அறிந்ததில்லை. அப்பொருளின்மை அந்தக் காலையை நிறைத்திருந்தது. தெளிநீர்ப்பரப்பில் மலர் என அக்காலை அவ்வெறுமை மேலேயே விடிந்தது.

மிக அரிதாக ஏதோ ஒரு பொருளின்மையில் சென்று அவன் உளம் தொடுவதுண்டு. அது இப்புவியிலுள்ள எந்த நிகழ்வுகளுடனும் தொடர்புகள் அற்றது. கற்றோ எண்ணிச்சூழ்ந்தோ அடைவதல்ல. புரிந்துகொள்ள முடியாத ஒரு பொருள் விண்ணிலிருந்து விழுந்து முன் கிடப்பது போல் புலரி முதல் விழிப்பில் வந்து உள்ளம் நிறைப்பது. அகம் ஏங்கி விழிநீர் வடித்துக்கொண்டிருப்பான். கண்ணீர் காது மடல்களை நோக்கி வழியும். அதிலிருந்து அறுத்துக்கொண்டு எழுந்து முகம் துடைத்து கைகளை நீட்டி சோம்பல் முறிக்கையில் அவ்வெறுமை மெல்லிய தித்திப்பு கொண்டிருக்கும். இரும்பை மெல்ல நாவால் நக்கிக்கொண்டதுபோல பொருளற்ற தித்திப்பு.

ஆனால் அன்று அறிந்த வெறுமை விழிநீருக்கும் இடமற்றதாக இருந்தது. நீர்த்துளியை இழுத்து இன்மையென்றாக்கும் வான் பெருவெளி போல். ஏவலன் வந்து கதவு மடலை மெல்ல தட்டி ஓசையெழுப்பாவிடில் அவன் அந்த முடிவிலியில் சென்று

மறைந்திருக்கவும் கூடும். அந்த வெறுமை அவனை அன்று சொல்லற்றவனாக்கியது. நாவால் சொற்களை உரைப்பதுகூட அகத்துடன் தொடர்பற்று வேறெங்கோ நிகழ்வதுபோல் தோன்றியது. அவ்வுறுதிமொழி உரைக்கப்பட்டால் அது நெடுந்தொலைவில் எங்கோ கேட்கும். அவ்வளவு தொலைவுக்கு அதை விலக்கிவிட்டால் ஒருவேளை அதன் மீதிருக்கும் நம்பிக்கையை அவன் இழக்கவும் கூடும்.

சல்யர் கர்ணனிடம் "பொழுதாகிறது. தாங்கள் தேரில் ஏறிக்கொள்ளும் நேரம் இது. படைகள் முகம் திரண்டுவிட்டன. நமது தேர் சென்று முன்னில் நிற்கையில்தான் அவர்கள் தலைமையை விழிகளால் காண்பார்கள். போருக்கு அது இன்றியமையாதது" என்றார். "ஆம்" என்றபடி கர்ணன் கிழக்கு நோக்கி நிலம் தொட்டுத் தொழுது சென்னி சூடி வணங்கி தன் தேர் நோக்கி சென்றான். விருஷசேனன் சற்று அப்பால் சகட ஓசை எழுவதைக்கேட்டு திரும்பிப்பார்த்து துரியோதனனின் தேர் அணுகுவதை கண்டான். திரும்பி தந்தையிடம் "பேரரசர்!" என்றான். கர்ணன் திரும்பி நின்று துரியோதனனின் விரைவுத்தேர் சகடப்பாதையினூடாக விசையுடன் ஒலித்தபடி அணுகுவதை பார்த்தான். தேர் நின்றதும் அங்கு நின்றிருந்த படைவீரர்கள் "பேரரசர் வெல்க! அமுதகலக்கொடி வெல்க! கௌரவ குலம் வெல்க! அஸ்தினபுரி வெல்க!" என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

தேருக்குள்ளிருந்து துரியோதனன் இறங்கி அவர்கள் அனைவரையும் நோக்கி வணங்கிவிட்டு கர்ணனை நோக்கி வந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது. விழிகள் சிறுவவர்களுடையவைபோல் ஒளிகொண்டிருந்தன. நேராக வந்து இருகைகளையும் விரித்தபடி ஒருசொல்லும் இன்றி

கர்ணனின் தோள்களைப்பற்றி தன் நெஞ்சோடணைத்து தழுவிக்கொண்டான். கர்ணனும் தன் நீண்ட பெருங்கைகளால் அவன் உடலை தழுவினான். இருவரும் மிக அரிதாகவே அவ்வாறு தழுவிக்கொள்வார்கள் என்பதை விருஷசேனன் அறிவான். அவர்கள் தொடும்போதுகூட ஒரு ஒவ்வாமை இருப்பதுபோல் தோன்றும். தழுவிக்கொள்கையில் இரு வேழங்கள் கொம்புகளை மெல்ல உரசிக்கொண்டு விலகுவதுபோல் இருக்கும். தொடுவதில் அவர்களுக்கு தயக்கம் இருந்தது. என்றாவது நெஞ்சோடு நெஞ்சு இறுகத் தழுவிக்கொள்வார்களா என்று அவன் எண்ணியதுகூட உண்டு.

அத்தருணத்தில் அவர்களின் உடல்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்துவிட்டதுபோல் தோன்றினார்கள். சூழ்ந்திருந்த படைப்பெருக்கை, திகைப்புடனும், மகிழ்வுடனும் சற்றே விலக்கத்துடனும் அவர்களை நோக்கிநின்ற பல நூறு விழிகளை, அத்தருணத்தில் எழவிருக்கும் போரை முற்றாக மறந்ததுபோல் தெரிந்தார்கள். விருஷசேனன் அவர்களின் தழுவல் நீண்டு செல்வதைக்கண்டு பொறுமையிழந்தான். அவர்களை எவ்வண்ணம் விலக்குவது என தயங்கினான். விலக்கியாகவேண்டும் என்று தோன்றியது. உச்சநிலைகளில் ஏன் அவற்றிலிருந்து விலகிவிடவேண்டும் என்ற தவிப்பு ஏற்படுகிறது? போதும் போதும் என ஏன் உள்ளம் தவிக்கிறது? ஏன் அஞ்சுகிறது? மானுட அகம் அன்றாடங்களில்தான் இயல்புநிலை கொள்ளக்கூடியதா என்ன? தன் உச்சநிலையில் காலம் மறந்துவிடக்கூடும். பிறர் கொள்ளும் உச்சநிலைகளில் காலம் இழுபட்டு நீண்டு விடுகிறது. சூழ்ந்திருப்பவர்களால் அங்கே நிற்கவே முடிவதில்லை. அங்கிருந்த அனைவரும் அப்படித்தான் தவித்துக்கொண்டிருந்தனர் என விழிகள் காட்டின.

தன்னிலை உணர்ந்து அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் விலகி, ஆடைகளையும் அணிகளையும் சீரமைத்தபடி, உடல்கள் நிறைவுடனும் பிரிவால் உணர்ந்த தனிமையுடனும் ததும்ப, சற்றே அகன்று, அல்லது அகல்வெனக் காட்டும் ஓர் அசைவை எழுப்பி, அருகிருப்பவர்களிடம் ஏதேனும் பொருளற்ற சொற்களைச் சொல்லி, ஏதேனும் ஆணைகளை இட்டு, அல்லது ஏதேனும் சிறு செயலினூடாக நிலை மீள்வார்கள் என்று அவன் எண்ணினான். அந்நிகழ்வை அவன் உள்ளத்தால் கண்டுவிட்டிருந்தமையால் அவர்களின் அத்தழுவல் நீண்டு நீண்டு நெடும்பொழுதாக சென்றுகொண்டிருப்பதுபோல் தோன்றியது. மேலும் மேலும் பொழுதாகிக் கொண்டிருந்தது. அவன் பெருமூச்சு எழ அதை நெஞ்சுக்குள் அடக்கினான்.

சல்யர் உரத்த குரலில் "பொழுதாகிறது! போர்முரசுகள் எக்கணமும் ஒலிக்கும். விண் வெளுக்கலாயிற்று" என்றார். விருஷசேனன் அவர் முகத்தை பார்த்தபோது அது சிவந்து, கண்கள் கலங்கி, கழுத்து நரம்புகள் இழுபட்டு, உச்சகட்ட சினத்துடன் தெரிவதை கண்டான். அவன் பார்ப்பதை அவருடைய விழிகள் வந்து சந்தித்ததும் நாணுவதற்கு மாறாக மேலும் அவர் சினம் கொண்டார். "நமது உணர்வுகளைக் காட்டும் இடமல்ல இது. ஆற்றலும் நம்பிக்கையும் வெளிப்பட்டாகவேண்டிய இடம்" என்று கூவினார். அத்தருணத்தின் அனைத்து உணர்வுகளையும் வாள் என வெட்டியது அவர் குரல்.

துரியோதனன் கர்ணனை தன் அணைப்பிலிருந்து விடுவித்து பின்னகர்ந்து தன் மேலாடையை சீரமைத்து திரும்பி விருஷசேனனிடம் "பார்த்துக்கொள்" என்றான். கர்ணன் விலகி தன் ஆடையை சீரமைத்து குழல்கற்றைகளை அள்ளி பின்னால்

தள்ளி சல்யரிடம் "மெய்தான், மத்ரரே" என்றான். சல்யர் மேலும் சினம் கொண்டு "இப்போது எதற்காக இங்கு அரசர் வரவேண்டும்? இங்கிருந்த உணர்வுகள் அனைத்தையும் கீழிறக்கிவிட்டார். இன்றுடன் இப்போர் முடியவேண்டும். வில் விஜயனையும் அவன் உடன் பிறந்தோரையும் கொன்று மீளும் நாள் இது. அனல்தொட்டு வஞ்சினம் உரைத்து நீங்கள் வில்லெடுக்க வேண்டிய பொழுது இது" என்றார்.

துரியோதனன் "பொறுத்தருள்க மத்ரரே, நான் முழு நம்பிக்கையோடும் உவகை நிறைந்த உள்ளத்தோடும்தான் இங்கு வந்தேன்" என்றான். "இதற்கு முன் அங்கர் போருக்குச் செல்லும் நாளிலெல்லாம் வந்து தழுவிக்கொண்டிருக்கிறீர்களா என்ன?" என்றார் சல்யர். சல்யரின் உடல் முழுக்க இருந்த நடுக்கம் அவருடைய கழுத்தின் தசையில் அதிர்ந்துகொண்டிருந்தது. பேசும் போதே பற்களை இறுகக் கடித்திருந்ததும் விருஷசேனனுக்கும் இளையோருக்கும் விந்தையாக இருந்தது. அவர்கள் விழிளால் நோக்கி புன்னகைத்துக்கொண்டனர்.

துரியோதனன் சிறுவன் என விழிதாழ்த்தி " இல்லை. ஆனால் இன்று புலரியில் நான் ஒரு கனவு கண்டேன். அது என்னை மீட்டது. நான் என் அரண்மனை அறைக்குள் நோயுற்று படுத்திருக்கிறேன். மிக இளமைந்தனாக இருக்கிறேன். இரவெல்லாம் என் அரண்மனை வாயிலுக்கு வெளியே அங்கர் எனக்காக காத்திருக்கிறார். அங்கரும் மிக இளமைந்தர். பின்னர் அங்கர் வந்து என் மஞ்சத்தறை கதவை தட்டினார். அந்த ஓசையைக் கேட்டு அக்கணமே என்னிலிருந்த அனைத்து வலிகளும் அகன்றன. நோய் நீங்கி பாய்ந்தெழுந்து கதவை நான் திறந்தேன். இருவரும் ஆரத்தழுவிக்கொண்டோம். இறுக

முயங்கி நெடுநேரம் நின்றோம்" என்றான். அவன் முகம் நாணத்தால் சிவந்து அகல்கொண்டதுபோல் ஆகியது.

"பின்னர் கைகளைக் கோத்தபடி பாய்ந்து ஓடினோம். அது ஒரு அணிச்சோலை. பொற்கொன்றை மரங்கள் பூத்து நின்றிருந்தன. பொன்னிற ஒளி கொண்டிருந்தது அக்காற்று. பொன்மலர்களை அள்ளி விரித்த தரையில் நாங்கள் ஓடிச்சென்று ஒளிததும்பி பெருகி ஒழுகிக்கொண்டிருந்த ஆற்றில் குதித்தோம். கூச்சலிட்டு நீரை அள்ளி வீசி சிரித்து களியாடிக்கொண்டிருக்கையில் நான் விழித்துக்கொண்டேன். என் உள்ளம் மலர்ந்திருந்தது. முந்தைய நாள்வரை என்னைத் தொடர்ந்த எந்நினைவும் எத்துயரும் ஒரு துளியும் எஞ்சவில்லை. இந்தக்காலை இப்போது தொடங்கியதுபோலிருந்தது. இப்போது என்னிடமிருக்கும் நம்பிக்கையும் ஆற்றலும் அக்கனவிலிருந்து வந்தது. என் படைமுகத்துக்குச் செல்லும்போது கனவில் நான் அங்கரை தழுவிக்கொண்டதை நினைவு கூர்ந்தேன். ஆகவேதான் வந்து தழுவிக்கொள்ளவேண்டுமென்று தோன்றியது."

சல்யர் "படைமுகப்பில் இவ்வாறு உணர்வுகளைக் காட்டுவதற்கு வேறு பொருள்கள் உண்டு" என்று தணிந்த குரலில் சொன்னார். "ஏதேதோ எண்ணிக்கொள்வார்கள் படைவீரர்கள். அறிக, தலைவர்களையும் அரசர்களையும் ஒவ்வொரு படைவீரனும் நோக்கிக்கொண்டிருக்கிறான். அவர்கள் உடலில் ஒரு தசை தளர்வதையும், ஓர் எண்ணம் அவர்களில் எழுந்தமைவதையும்கூட முழுப்படையும் அறியும்." தலைதாழ்த்தி "ஆம்" என்றபின் துரியோதனன் திரும்பி கர்ணனிடம் "படைமுகம் கொள்க, அங்கரே! வெற்றியுடன் மீள்க!" என்றான். கர்ணன் "நன்று! படைமுகம் கொள்ளவிருந்தேன. நீங்கள் வந்தது மேலும் ஊக்கமளிக்கிறது"

என்றபின் தலைவணங்கி தன் வில்லுக்காக கை நீட்டினான். அப்பால் நின்றிருந்த இரு ஏவலர்கள் விஜயத்தை கொண்டு வந்து அவன் கையில் அளித்தனர். அதை வாங்கிக்கொண்டு நடந்து தேரில் ஏறினான்.

தேரில் ஏறுகையில் படிகளில் கால் வைக்காது தட்டிலேயே நீண்டகாலை வைத்து ஏறிக்கொள்வது கர்ணனின் வழக்கம். அது நிலத்திலிருந்து ஒருகணத்தில் அவன் மேலெழுந்து தோன்றுவதுபோல் விழிமயக்களிக்கும். துரியோதனன் புன்னகையுடன் கர்ணன் தேரிலேறுவதை நோக்கிக்கொண்டிருந்தான். சல்யர் விருஷசேனனிடம் "பிறகென்ன? நீங்களும் தேரில் ஏறிக்கொள்ள வேண்டியதுதானே?" என்றபின் துரியோதனனை நோக்கி தலைவணங்கினார். துரியோதனன் "நன்று மத்ரரே, வெற்றியுடன் அந்தியில் பார்ப்போம்" என்றபின் தலைவணங்கி திரும்பிச்சென்று தன் தேரில் ஏறிக்கொண்டான்.

மத்ரர் அலுப்புடன் தலையசைத்து "நாடகங்கள்! எல்லோருக்குமே நாடகங்கள் பிடித்திருக்கின்றன" என்று பற்களைக் கடித்தபடி தலையசைத்து தனக்குத்தானே என சொன்னார். பின்னர் திரும்பி அப்பால் நின்ற சூதர்களிடம் "அங்கு என்ன செய்கிறீர்கள்? அறிவிலிகளே, விலகிச்செல்லுங்கள். தேர் கிளம்பவிருக்கிறதல்லவா?" என்று கூவினார். அவர்கள் தலைவணங்கி திரும்பிச் சென்றனர். புரவிகளை மீண்டும் தொட்டுத் தடவி செவி பற்றி இழுத்து ஓரிரு இன்சொற்கள் கூறிய பின்னர் கையூன்றி அமரத்தில் அமர்ந்து கடிவாளக் கற்றையை தன் கையிலெடுத்துக்கொண்டு சாய்ந்தமர்ந்தார் சல்யர்.

விருஷசேனன் தன் தேரிலேறி நின்றான். திவிபதனும் இளையவர்களும் தேரிலேறிக்கொண்டார்கள். அங்கிருந்து நோக்கியபோது கௌரவப்படை முற்றிலும் ஒருங்கமைந்துவிட்டிருப்பதை காண முடிந்தது. சகுனியின் முரசு பின்பக்கம் தணிந்த குரலில் "ஒருங்கிணைக! அணிமுழுமை கொள்க! ஒருங்கிணைக!" என்று ஆணையிட்டுக்கொண்டிருந்தது. விருஷசேனன் பாண்டவத் தரப்பை பார்த்தான். இருபுறமும் சுருதகீர்த்தியும் சுருதசேனனும் பின்துணையென அமைய அர்ஜுனன் தேரில் நின்றிருந்தான். காற்று நின்றுவிட்டிருந்தமையால் குரங்குக்கொடி தளர்ந்துகிடந்தது. காண்டீபத்தை ஊன்றி வானத்தொலைவை நோக்குவதுபோல் விழிதூக்கி அசைவிலாது நின்றிருந்தான் அர்ஜுனன். அவன் தேரிலும் அசைவில்லை. புரவிகள்கூட அசைவிழந்தது செவிகளைக்கூட திருப்பாமல் நின்றிருப்பதுபோல் தோன்றின.

தேர்முகப்பில் தலையில் சூடிய மயிலிறகு விழிகொண்டிருக்க கால்களை மடித்து அமர்ந்து கைகளை மடியில் தளரவைத்து அரைவிழி மூடி ஊழ்கத்திலென இளைய யாதவர் இருந்தார்.

பாண்டவப்படையின் வலப்புறம் சாத்யகியும் இடப்புறம் திருஷ்டத்யும்னனும் அணிவகுத்திருந்தனர். வடக்கு எல்லையில் சுதசோமனும் சர்வதனும் இருபுறமும் துணையிருக்க பீமன் நின்றிருந்தான். இடது எல்லையில் நகுலனும் சகதேவனும் துணை நிற்க யுதிஷ்டிரன் படைமுகம் வந்திருந்தார். அவர்களின் முகங்களும் மண்பாவை என உறைந்த உணர்வுகளுடன் இருந்தன. பிற அனைத்தையும்விட அப்போது அவர்களை ஆள்வது துயிலே எனத் தோன்றியது. அவர்கள் நற்துயில்கொண்டு பதினேழு நாட்களாகிவிட்டிருந்தன.

அமைதியான பொழுதில் குளிர் என துயில்வந்து உள்ளங்களை கவ்வி மூடியது. உளைசேற்றில் என எண்ணங்கள் சிக்கி அசைவிழந்தன.

படைகள் எழுபொழுதிற்காக காத்திருந்தன. ஒவ்வொரு படைவீரனும் முன்னும் பின்னுமின்றி அத்தருணத்தில் மட்டும் உளம் நட்டு நின்றிருக்கும் பொழுது. முன்னோர்களும் தெய்வங்களும் அவனை சூழ்ந்திருக்கவேண்டிய தருணம். தன் உளம் ஏன் அவ்வாறு முற்றிலும் ஒய்ந்துகிடக்கிறதென்று விருஷசேனன் வியந்தான். அதை எவ்வுணர்வால் எச்சொற்களால் உந்தி முன் செலுத்துவது? வானம் நன்கு வெளுத்துவிட்டிருந்தது. முகில் நிரைகள் வடமேற்கே மிக அப்பால் விலகிச்சென்றுவிட்டிருந்தன. தென்கிழக்கில் புதிய முகில்கள் எழுந்து வரவுமில்லை. கதிரொளி எத்தருணத்திலும் எழக்கூடும். எக்கணமும் முரசொலி எழும். இத்தனை ஆயிரம்பேரும் துயிலில் இருந்து விழித்தெழுவார்கள். அனைவருமே குறுங்கனவுகளுக்குள் இருப்பார்கள். அவை தனிக்கனவுகள். இந்த மாபெரும் பொதுக்கனவுக்குள் விழித்தெழுவார்கள்.

தன் புரவி தலை திருப்பி செருக்கடித்த கணத்தில் விருஷசேனனின் உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. துரியோதனன் சொன்ன சொல் என்ன? தன்னிடம் அவர் என்ன சொன்னார்? அச்சொல்லுக்காக அவன் உள்ளம் தவித்து அலைந்தது. என்ன சொன்னார்? என்ன சொன்னார்? பல்வேறு நினைவுமூலைகளில் முட்டிமோதியபின் அதை அவன் கண்டுகொண்டான். அவன் உள்ளம் அனைத்து விசைகளையும் இழந்து நிலைத்தது. பின்னர் எங்கிருந்தோ என விசை எழுந்து

அவன் தோள்கள் இறுகின. கண்கள் அனல் கொள்ளும் அளவுக்கு உள்ளம் பொங்கி எழுந்தது.

அத்தருணத்தில் போர் முரசு முழங்கியது. "வெற்றிவேல்! வீரவேல்!" எனக்கூவியபடி கௌரவப்படை எழுந்து பாண்டவப்படையை தாக்கலாயிற்று. கர்ணன் ஒளி சுடர எழுந்து பாண்டவப்படையை நோக்கி அம்புகளைச் செலுத்தியபடி சென்றான். "வெற்றிவேல்! வீரவேல்!" என்று தன் அகமே பல்லாயிரம் நாவென்று மாறி அப்படைக்களத்தில் ஒலித்துக்கொண்டிருப்பதாக விருஷசேனன் உணர்ந்தான்.

இருட்கனி - 48

படைகள் பெருகி எழுந்து தாக்கிய கணத்தில் விருஷசேனன் இயல்பாக வானை அண்ணாந்து நோக்கினான். அங்கே அனல் பற்றி எரிவதைக் கண்டு ஒருகணம் அவன் உள்ளம் திடுக்கிட்டது. கானாடலுக்கும் வேட்டைக்கும் செல்லும்போதெல்லாம் காட்டெரி குறித்த எச்சரிக்கையை பயிற்றுநர்கள் அளித்திருந்தார்கள். சொல்லிச்சொல்லி விழிகளில் அந்தக் கூர்வு எப்போதுமே இருந்தது. காட்டுமரங்களுக்கு அப்பால் செவ்வானத்தை கண்டால்கூட உள்ளம் பற்றிக்கொள்ளும் அளவுக்கு. ஒரு கணத்திற்குப் பின் அகம் அமைந்தபோதும் அது எரி என்றே தோன்றியது. நாணிழுத்து அம்புகளைத் தொடுத்தபடியே அவன் மீண்டும் நோக்கியபோது எரிமுகில் ஒரு முகம் சூடியிருப்பதுபோலத் தோன்றியது.

மழை முற்றாக நின்றுவிட்டிருந்தது. மேலும் மேலும் களத்தில் ஒளி பெருகி நிறைந்தது. புழுதியை மென்மழை முற்றாக அகற்றி விட்டிருந்தமையால் ஒவ்வொன்றும் மும்முறை கழுவப்பட்டவை என துலங்கின. யானைகள் மின்னும் கருமை கொண்டிருந்தன. கொடிகள் புதியவை என படபடத்தன. வண்ணங்கள் மேலும் துலங்க வடிவங்கள் மேலும் அண்மை கொள்ள படைக்கலங்கள் அனைத்தும் கண்களை மின்னிச்சுழன்றன. "முன்னேறுக! முன்னேறுக! வெல்க! வென்று மேலும் செல்க!" என்று முரசு ஆணையிட்டுக்கொண்டிருந்தது. மழை நின்ற பின் ஒலிகளும் கழுவப்பட்டு தெளிவுகொண்டிருந்தன. ஒவ்வொரு வாளுரசல்களும் நாண்முறுகல்களும் வில்நெரிவுகளும் அம்புத்தொடுகைகளும் தனித்தனியாக செவியில் விழுந்தன.

கர்ணனின் கையசைவுகளுக்கு ஏற்ப அவனைச் சூழ்ந்து சென்றுகொண்டிருந்த ஆணை முரசர்கள் ஓசையிட அதற்கேற்ப அவனை பின்தொடர்ந்து சென்ற படைகள் களத்தில் இயங்கின. சூரிய வியூகத்தின் மையத்தில் எரியும் நீல வட்டமென கர்ணன் விளங்கினான். சூழ்ந்து சென்ற படைவீரர்கள் கதிர்களைப்போல் அரைவட்டமாக விரிந்து அவனை பாதுகாத்து சென்றனர். கர்ணன் கை நீட்டி அர்ஜுனனை நோக்கி செல்ல ஆணையிடுவதை விருஷசேனன் கண்டான். அவன் எண்ணியதைவிட விரைவில் அர்ஜுனனும் கர்ணனும் அம்புகளால் சந்தித்துக்கொண்டார்கள். சென்ற முறை எங்கு நிறுத்தினார்களோ அங்கிருந்து போரை அவர்கள் தொடங்குவதுபோல் தோன்றியது.

திவிபதன் மறுபுறத்திலிருந்து கையை அசைத்து "நான் இளைய பாண்டவர்களில் ஒருவனை இன்று கொல்வேன்!" என்றான்.

விருஷசேனன் “நமது பணி இன்று தந்தையின் புறம் காப்பது மட்டுமே” என்று கூறினான். திவிபதன் “இந்தப் போரில் எனக்கென வெற்றி ஒன்றாவது வேண்டும், மூத்தவரே” என்றான். கர்ணனின் விசை கௌரவப் படையில் எதிரொலித்தது. படையினர் கூச்சலிட்டபடி திரண்டுசென்று தாக்கினர். அம்புகள் எழுந்தமைவதிலேயே படைகளின் ஊக்கம் தென்படும் என்பதை விருஷசேனன் கண்டிருந்தான். ஊக்கம் கொண்ட படையின் அம்புகள் நெடுந்தொலைவு மேலெழுந்து வளையும். அவை சீரான பேரலைகள் என தெரியும். ஊக்கமிழந்த படையிலிருந்து எழும் அம்புகள் சிதறுண்ட சிறிய கொப்பளிப்புகளெனத் தெரியும்.

பாண்டவப் படை காளை வடிவில் அணிவகுத்திருந்தது. காளையின் இரு கொம்புகளாக பீமனும் அர்ஜுனனும் திகழ்ந்தனர். விருஷசேனன் படைமுகப்பில் அர்ஜுனன் இடியென முழங்கும் அம்புகளால் கௌரவப் படையை அறைந்து பின்னடையச் செய்வதை பார்த்தான். அவனுடைய அம்புகள் கண்ணைப் பறிக்கும் மஞ்சள் ஒளியுடன் வெடித்தெழுந்து, ஓசையுடன் நிலத்தை அறைந்து, அனல் வளையங்களை எழுப்பின. மும்முறை வெடித்து தீப்பொறிகளை சீறவைத்து அமைந்தன. அவை விழுந்த ஒவ்வோரிடத்திலும் பூத்த மலர்க்கொன்றை ஒன்று முளைத்து சில கணங்களில் விண்ணில் திகழ்ந்து மறைவதுபோல் தோன்றியது. முதற்கணத்திலேயே தன்னிலிருக்கும் ஆற்றல்மிக்க அம்புகளை எடுக்கிறார். எனில் அஞ்சியிருக்கிறாரா? அல்லது, பாண்டவப் படைகள் அஞ்சியிருக்கின்றன, அவ்வச்சத்தை போக்க எண்ணுகிறார்.

கர்ணனைச் சூழ்ந்து வந்து விழுந்து வெடித்து தேர்வில்லவர்களை சிதறடித்தன அர்ஜுனனின் எரியம்புகள். கர்ணனை நேருக்குநேர் அம்புகளால் தாக்க இயலாது என அறிந்திருந்தமையால் அவ்வாறு செய்கிறார். கர்ணனை அவன் பின்னணிப் படையிலிருந்து தனித்து பிரித்துக்கொண்டு போவதே அர்ஜுனனின் நோக்கம் என்று தெரிந்தது. கர்ணன் மையப்படையிலிருந்து விடுபட்டு பாண்டவப் படைகளுக்குள் சென்றுவிட்டால் காளையின் இரு கால்களென சற்று அப்பால் நின்றிருக்கும் சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் முன்னெழுந்து அவனை வளைத்துக்கொள்வார்கள். காளையின் கொம்புகளெனத் திகழும் அர்ஜுனனும் பீமனும் இருபுறமும் போரிட சாத்யகியாலும் திருஷ்டத்யும்னனாலும் வளைக்கப்படுகையில் கர்ணன் முற்றிலும் செயலிழந்து சிக்கிக்கொள்ளக்கூடும்.

ஆனால் அத்தகைய கணக்குகளின் பொருளின்மை என்ன என்பதை விருஷசேனன் ஒவ்வொரு முறையும் களத்தில் பார்த்தான். சிலந்தி வலைகள் சிறுபூச்சிகளுக்குரியவை. வண்டுகள் வலையில் சிக்குகையில் சிலந்தியே அவற்றை அறுத்து விடுவிக்கின்றது. அத்தகைய சூழ்கைகளின் பயன் ஒன்றே, நம்பிப் போரிட ஒரு முறைமை அமைகிறது. வல்லவர்கள் சூழ்கைகளை முறிக்கவும் கடக்கவும் கற்றிருப்பார்கள். அம்முறை பாண்டவர்கள் ஐவருமே கர்ணனை மிகவும் அஞ்சிக்கொண்டிருந்தார்கள் என்பதை அவர்கள் முகங்களிலிருந்து காண முடிந்தது. அவர்கள் அனைவருமே அவன் மேல் உச்சநிலை வஞ்சமும் சினமும் கொண்டிருந்தார்கள். நேற்றிரவு அவர்களில் எவரும் துயின்றிருக்க வாய்ப்பில்லை. களத்தில் அவர்களை இறப்புக்கு நிகரான ஆணவ அழிப்புக்கு கொண்டு சென்றிருந்தார் தந்தை.

அவர்கள் இன்று வெறிகொண்ட இருள்தெய்வங்களென உருமாறியிருக்கிறார்கள்.

ஆணவம் புண்படுகையில் மானுடரில் நிகழ்வது விழிச்சாவு. அதன்பின் முன்னர் இருந்த விழிகள் அவர்களுக்கு அமைவதே இல்லை. அவர்கள் ஒவ்வொருவரும் அந்த ஆணவ முறிவை மிக ஆழத்தில், மிக தனிமையில் அடைந்திருப்பார்கள். ஆணவம் அழிந்த நிலையில் தென்படும் உண்மைகள் எப்பொழுதும் கசப்பானவை. அவை அவர்களுக்கே தெரியாமல் ஆழத்தில் மறைந்திருக்கையில் மட்டுமே வாழ்க்கை இயல்பாக முன்செல்ல இயலும். ஆணவமென்பது அதன் பொருட்டே உருவாகிறது, அது ஒரு பெருந்திரை. புண்ணுக்குமேல் தோல் தடித்து காய்ப்பு கொள்வதுபோல். அதை இழந்தவர்கள் ஒவ்வொரு கல்லிலும் முள்ளிலும் உரசிப் புண்பட்டு தவிக்கிறார்கள்.

அவர்களது விழிகளின் வெறிப்பு அவன் உள்ளத்தை இளகச் செய்தது. அர்ஜுனன் "சூதன் மகனே, இன்று இக்களத்திலிருந்து நீ செல்ல மாட்டாய். இல்லையேல் நான் செல்லமாட்டேன். அவ்வஞ்சினத்துடன்தான் வில்லெடுத்து வந்தேன்!" என்று கூவினான். கர்ணன் புன்னகையுடன் "இக்களத்திலிருந்து வெற்றியுடன் மீள்வேன் என்று நான் அறிவேன்" என்றான். "விண்ணிலிருந்து நம் தந்தையர் இறங்கி வந்து நோக்கட்டும் இந்தப் போரை. இது என்றுமென நிகழும் போர். எவர் வென்றாலும் இங்கு இது முடியப்போவதில்லை" என்று அர்ஜுனன் அறைகூவினான். போர்வஞ்சினங்களையும் அறைகூவல்களையும் ஏன் அத்தனை உரக்க கூச்சலிடுகிறார்கள்? அவை அவர்களுக்கே

சொல்லிக்கொள்பவை. அவர்களின் ஆழம் அவர்களின் நாவிலிருந்து அத்தனை தொலைவிலா உள்ளது?

அர்ஜுனனின் எரியம்புகளை கர்ணன் விண்ணிலேயே தடுத்தான். காற்றிலேயே வெடித்து அனல் மழையென அவை படைகள் மீதிறங்கின. யானைகளின் கவசங்கள் மேல் வெடித்து சிறு சுடர்கள் என துள்ளி எரிமலர்களென பொழிந்தன. கர்ணனின் அம்புகள் இடியோசையுடன் எழுந்த விசையிலேயே ஒன்று நான்கு எட்டு பதினாறெனப் பெருகி பாண்டவப் படைகளின் மேல் விழுந்தன. விழுந்த இடங்களில் நிலம் வெடித்ததுபோல் படைவீரர்களும் புரவிகளும் உடல் சிதறித் தெறித்தனர். யானைகளும் தேர்களும்கூட உடைந்து சிதறின. கர்ணனின் அம்புகளை இளைய யாதவர் திறமையுடன் தேர் திருப்பி தவிர்த்தார். அர்ஜுனனின் அம்புகள் அதற்கிணையான தேர் நுட்பத்துடன் சல்யரால் தவிர்க்கப்பட்டன.

அந்தப் போர் எரியுமிழும் அரிய அம்புகளால் ஆனதென்பதனால் தேர்வலர்களின் கைத்திறமையாலேயே நிகழ்த்தப்படுவதாக இருந்தது. அவற்றில் ஒரு அம்பு ஒருவர் மேல் விழுந்தால்கூட அக்கணமே போர் நின்றுவிடும். ஒவ்வொருவரும் அதை மயிரிழை இடையில் தவிர்த்துக்கொண்டிருந்தனர். மிகச் சிறிய இடைவெளிகளுக்குள் சல்யர் தேரை கொண்டுசென்றார். அவருடைய புரவிகள் மண்ணில் கால் தொடுவன போலவே தோன்றவில்லை. தேர் ஒற்றைச்சகடத்தில் விழுந்துவிடுவதுபோல் சரிந்து இரு யானைகளுக்கு நடுவே சென்று அப்பால் சென்று நிலை கொள்ளமுடியுமென்பதை, யானை திரும்பும் இடம்கூட இல்லாத இடத்தில் ஏழு புரவிகளும் குளம்படி மாற்ற தேர் நேர் எதிர் திசைக்கு திரும்பி வட்டமிட்டு அகலமுடியுமென்பதை, விழுந்து கிடந்த

யானைகளின் மேல் தேர் ஏறிச்சென்று அப்பால் சென்று இறங்க முடியுமென்பதை, சீறி எழும் அம்பொன்றுக்கு தன்னை ஒழிந்துகொள்ளும்பொருட்டு அனைத்துப் புரவிகளும் ஒருகணத்தில் கால் மடித்து நிலத்தில் அமைய தேர் முற்றாகவே சரிந்து நிலம் தொட்டு அதன் சகடங்கள் காற்றில் சுழல சற்று நேரம் சென்று புரவிகள் எழுந்து பாய்ந்து செல்ல அவ்விசையில் மீண்டும் எழ முடியுமென்பதை அதற்கு முன் விருஷசேனன் எண்ணி நோக்கியதே இல்லை. இளைய யாதவரே அவ்வப்போது சல்யரின் தேர்த்திறன் நோக்கி உளம் மலைத்தவர் போலிருந்தார்.

புகையடங்கி காட்சிகள் தெளிந்து மீண்டும் புகையெழும் இடைவெளியில் அர்ஜுனனைச் சூழ்ந்திருந்த பாஞ்சாலப் படைவீரர்கள் களமெங்கும் சிறு துண்டுகளாகி தெறித்திருந்தனர். அர்ஜுனன் தன் படைத்திரளிலிருந்து தனித்து கர்ணன் முன் தோன்றாமலிருக்கும் பொருட்டு அம்புகளால் அறைந்தபடி மேலும் மேலும் பின்னடைந்து கொண்டிருந்தான். அவனை தனித்து விடக்கூடாதென்பதற்காக பின்னிருந்து ஆணைகள் எழ இருபுறத்திலிருந்தும் பாஞ்சாலப் படைகள் தொடர்ந்து வந்து இறந்தவர்களின் இடைவெளிகளை நிரப்பின.

கர்ணன் அனலம்பால் அர்ஜுனனை அறைந்தான். அவன் வில்லே அனல்கொடியாலானதுபோல் தோன்றியது. விண்ணில் துடிக்கும் மின்கதிர்போல் தேரில் நின்றதிர்ந்தது. அதிலிருந்து எழுந்த ஒவ்வொரு அம்பும் எழுகையிலேயே பற்றிக்கொண்டது. அனல் பெருகி முழங்கியபடி சென்று பாண்டவப் படைகள் மேல் விழுந்தது. மேலும் மேலும் அர்ஜுனனை பின்னடையச் செய்து கர்ணனின் தாக்குதல்களிலிருந்து அவனை காத்தார் இளைய யாதவர். "சூழ்ந்துகொள்க! இளைய பாண்டவரை

சூழ்ந்துகொள்க! இடைவெளி விடாதொழிக!” என்று பாண்டவப் படைகளின் பின்னாலிருந்து திருஷ்டத்யும்னின் எச்சரிக்கை வந்துகொண்டே இருந்தது.

என்ன நிகழ்கிறதென்று நோக்க இயலாதபடி புகையும் தூசும் நிறைத்திருந்தன களத்தை. அம்புகள் சென்றறைந்த மண்ணிலிருந்து செம்புழுதி குமிழியெனக் கிளம்பி, இதழ்களென மலர்ந்து, நிலத்திலமைந்தது. புகை எழுந்து வானில் கரைந்து சாம்பல் நிற நீர்போல் பரவி களத்தை மூடியது. அதற்குள் எரியம்புகள் சென்னிற மலர்வுகள் என எழுந்தெழுந்து அமைந்தன. உடல் உருகி விழுந்தவர்களின் அலறல்கள் சூழ்ந்தன. உடைந்து சிதறிய தேர்களில் மரத்தூண்களும் பீடங்களும் பற்றிக்கொண்டு எழுந்த தழல்களும், அலறி நிலையழிந்து சுழன்று விழுந்த யானைகளின் முழக்கங்களும் செவிகளையும் விழிகளையும் நிறைத்திருந்தன.

அர்ஜுனனின் இரு மைந்தர்களும் ஒருகணம்கூட பின்னடையாது தந்தையைக் காத்து பொருதி நின்றிருந்தனர். இருபுறத்திலிருந்தும் வில்லவர்களை இரு கைகளென ஆக்கி கர்ணனின் பின்னணிப் படையை உடைக்க திருஷ்டத்யும்னன் முயன்றான். வலப்பக்கமிருந்தும் இடப்பக்கமிருந்தும் இடையறாது வந்து கொண்டிருந்த எரியம்புகளை விருஷசேனனும் திவிபதனும் பிற மைந்தர்களும் தடுத்தனர். சுருதகீர்த்தியின் அம்புகள் விசைமிகுந்து வந்து வலப்பக்கம் தாக்க விருஷசேனன் அவனை நோக்கி திரும்பி தாக்கினான். அவன் அம்புகளை தடுக்கமுடியாமல் சுருதகீர்த்தி பின்னடைந்தான்.

கர்ணனின் அம்புகளில் எழுந்த அனலை விருஷசேனன் வியப்புடன் நோக்கிக்கொண்டிருந்தான். அதற்கு முன் எங்கும்

அத்தகைய பேரனலை பார்க்க நேர்ந்ததில்லை. ஒரு கணத்தில் காட்டெரி எழுந்து முழுப் படையையும் சூழ்ந்துகொண்டது போலிருந்தது. எரி வானை முழுமையாக நிரப்பி கூரைபோல மூடியது. எரிக்குள் இருந்து எரி எழுந்தது. எரி முகில்கள்போல குமிழ்த்தது, கரும்புகைபோல இருண்டது. உடனே அதை ஏந்தியபடி செம்முகில் என அடுத்த அனல் வெடிப்பு எழுந்தது. செந்தழலுக்குள் மலைவெள்ளப்பெருக்கில் சருகுகள் தெரிவதுபோல மானுட உருவங்கள் தோன்றித்தோன்றி மறைந்தன. யானைகளும் தேர்களும் தெரிந்தன. வானிலிருந்து உடற்துண்டுகளும் சிதைந்த தேர்ச்சிம்புகளும் பொழிந்தன. தன்னருகே வந்து விழுந்த ஒரு பித்தளைத் தேர்மகுடம் உருகி உருவழிந்திருப்பதை விருஷசேனன் கண்டான்.

எரியெழுந்த போர் அங்கே துரோணரின் வஞ்சம்கொண்ட அம்புகளில் இருந்தே தோன்றியது. முதல் நாள் அந்த எரியம்புகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். எரி எவ்வாறு எழுகிறது என ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டார்கள். "எரி அல்ல அது. நம் உளமயக்கே" என்றார் ஒருவர். "நம்மை அந்த அம்புகள் கனவுக்குள் நிறுத்திவிடுகின்றன. அக்கனவில் நாம் கதைகளை நேரில் காண்கிறோம்." இன்னொருவர் "களமெங்கும் வெந்து கிடக்கும் உடல்களும் கனவா என்ன?" என்றார். "கனவுகளில் இருந்து நாம் விடுபடுவது எளிதல்ல" என்றார் முதலில் சொன்னவர்.

படுகளத்தில் படைவீரர்களின் உடல்கள் வெந்து தசையுருகி, எலும்புகள் வெளித்தெரிய கிடப்பதை விருஷசேனன் பார்த்தான். பற்கள் வெறித்து அவற்றில் பல முகங்கள் இளிப்பு கொண்டிருந்தன. பொசுங்கும் தசையின் குமட்டும் கெடுமணம். உயிர் எஞ்சியவர்கள் உரிந்து கழன்றுகிடந்த தோலுடன்

பொசுங்கிய மயிர்களுடன் கதறிக்கொண்டிருந்தனர். "கொல்க! என்னைக் கொல்க! மூத்தவரே, மைந்தரே, என்னைக் கொல்க..." என்று மன்றாடினர். "நீர்! நீர்!" என நா நீட்டி கதறினர். நாவுகள் வெந்து வாயை நிறைத்திருந்தன.

அந்தக் களத்தில் நீரெனக் கிடைத்தது புரவிகளின் குருதி மட்டுமே. எரியும் உடல்களுக்குமேல் குருதியையும் கொழுநிணத்தையும் அள்ளிச் சொரிந்தனர். குருதிச்சேற்றில் கிடந்து வெந்த உடல்கள் புளைந்தன. கவசங்கள் உருகி வளைந்திருந்தன. ஆடைகள் பொசுங்கி அகல பெரும்பாலானவர்கள் வெற்றுடலுடன் கிடந்தனர். ஒரு முதிய வீரர் "இது போரல்ல... போரின் எந்நெறியும் இதை ஒப்புவதில்லை" என்று கூவினார். "போரே ஒரு மாபெரும் நெறியழிவு" என்று எவரோ சொன்னார்கள்.

அத்தனை பெரிய அனல் எங்குள்ளது? எதில் அது பற்றி எரிகிறது? "அனைத்திலும் அனல் உள்ளது. அனலம்பு காற்றில் ஒளிந்திருக்கும் அனலை எழுப்புகிறது. நீரிலும் பனிக்கட்டியிலும் குளிர்பாறையிலும்கூட அனலை எழுப்ப இயலும்" என்றார் ஒரு முதிய வீரர். "அனல் எழக் காத்திருக்கிறது... இந்த மானுட உடல்களைப் பொசுக்கிய அனல் எங்கிருந்து எழுகிறது? இது இவ்வுடல்களுக்குள்ளேயே உள்ளது. உடலுக்குள் நீராலும் அன்னத்தாலும் அது நிகர்செய்யப்பட்டுள்ளது. வெளியே இருந்து வந்து தொடும் அனல் உள்ளிருக்கும் நிகர்நிலையை அழிக்கிறது. கட்டுண்ட அனல்கள் எல்லைகடந்து எழுகின்றன."

அவன் எரிந்த உடல்களை பார்த்துக்கொண்டிருக்கையில் தெற்குக்காட்டின் சிதைகளைத்தான் எண்ணிக்கொண்டிருந்தான். முதலிரு நாட்கள்தான் அங்கே சிதைகூட்ட விறகுகள்

தேவைப்பட்டன. எரி நிலைகொண்ட பின்னர் உடல்களே உடல்களுக்கு விறகாயின. உடலில் இருக்கும் நெய் முதலில் எரிகிறது. வெம்மை தசைகளையும் நெய்யாக்குகிறது. உடல்கள் தங்களைத் தாங்களே கொளுத்திக்கொண்டன. தங்களைத் தாங்களே எரித்தழித்து சாம்பலாயின.

"அங்கே சிதையில் எரியும் அனல் கிரவ்யாதன். அதுவே வைஸ்வாநரன் என்ற பேரில் மானுட உடல்களில் எரிகிறது. வயிற்றில் அது பசி. நாவில் அது ருசி. எண்ணத்தில் அது விழைவு. தசைகளில் அது ஆற்றல். குருதியில் வெம்மை" என்றார் முதிய சூதர். "அன்னத்தை உண்டு அன்னம் வாழ்கிறது. அன்னத்தை முற்றெரிக்கும் அனலே அன்னம் என்று நூல்கள் சொல்கின்றன. வேட்டை விலங்கின் சினமே அதன் வயிற்றின் அமிலம். இங்கு எரிவதும் அந்த எரிதான் எனக் கொள்க!"

அனலம்புகளைத் தொடுக்க முதல் அனல் உள்ளத்தின் ஆழத்தில் இருந்தாகவேண்டும் என்றார் முதிய வில்வீரரான சுவீர்யர். "அகத்தில் இல்லாத அம்பு எதையும் கைகளில் எடுக்க இயலாது. துரோணரில் எழுந்தது புல்லின் தழல். அங்கரில் எழுவது புரவிச்சவுக்கின் சீற்றம். ஆனால் அர்ஜுனனில் எழுவது சொல்லின் அனல். சொல்லனல் கூரியது, ஆனால் வஞ்சத்தின், சீற்றத்தின் அனல்போல மூண்டெழுவது அல்ல. முற்றழிப்பதும் அல்ல."

மீண்டும் விழிதூக்கி மேலே பார்த்தான். அந்த முகம் அசைவிலாது கீழே நோக்கி நின்றிருந்தது. ஆனால் ஊழ்கத்திலென கனவுநிறைந்த அமைதி அதில் தெரிந்தது. தேர் வட்டமாக சுற்றிச் செல்ல நோக்குகோணம் மாறியபோது அது பூத்த கொன்றை என உருமாறியது. யார்? வேதச் சொல்லில் எழும் ஜாதவேதனா? அன்னத்தை அனலாக்கி வானாக்கி

இன்மையாக்கி பிரம்மத்திடம் கொண்டுசேர்க்கும் தூதனா? இன்று ஏன் வானை அடிக்கடி நோக்கிக்கொண்டிருக்கிறேன்? முன்பெப்போதும் இப்படி வானை நோக்கியதில்லை. களத்தில் வானை நோக்குதல் பிழை என்பார்கள். போருக்குரியவை மண்ணாழத்திலிருந்து காட்டின் இருளில் இருந்து எழுந்துவரும் கொடுந்தெய்வங்கள். மேலே நோக்குபவன் விண்ணிலிருந்து குனிந்து நோக்கும் தேவர்களின் விழிகளை சந்திக்க நேரும். அக்கணமே அனைத்தும் பொருளின்மை கொள்ளும். புண்பட்டு விழுந்தவர்கள் விண்நோக்குவார்கள் எனப்படுவதுண்டு. விண்ணில் தேவர்களும் மூதாதையரும் நிரந்திருப்பதை அவர்கள் காண்பார்கள். ஆனால் நான் இன்னமும் புண்படவில்லை.

அம்புகளில் இருந்து அனல் தெறித்து எழுந்தது. பல்லாயிரம் நாக்குகள் என்றாகியது. பெருகிப்பெருகி எழும் கைகள் என்றாகியது. அள்ளி அணைத்து இறுக்கியது. பற்றி நிறுத்தி பொசுக்கியது. நக்கி உண்டது. அறைந்து சிதறடித்தது. மேலும் மேலும் உடல்கள் சிதறிவிழ இளைய யாதவர் அர்ஜுனனின் தேரை பின்னுக்கிழுத்து அம்புகளின் எல்லைக்கு அப்பால் கொண்டு சென்றார். கர்ணன் அர்ஜுனனை துரத்திச்செல்ல அவர்கள் நடுவே எழுந்த எரிபரப்பும் தரையை நிரப்பியிருந்த உடல்களும் உடைவுகளும் அரண் என்றாயின. தேர்த்தட்டில் அர்ஜுனன் தளர்ந்து அமர்வதை புகையலைவின் இடைவெளியினூடாக ஒருகணக் காட்சிமின்னல் என காணமுடிந்தது.

கர்ணன் கைகாட்ட சல்யர் தேரை பின்னுக்கிழுத்தார். அவருடைய புரவிகள் முன்னால் செல்லும் அதே விசையில் பின்னடி எடுத்து வைத்தன. அவர் அதே விரைவில் தேரை

பின்னெடுக்க விருஷசேனனும் தம்பியரும் தங்கள் தேர்களை பின்னால் கொண்டுசென்றார்கள். கௌரவப் படையும் உடன் சேர்ந்து விலக எதிர்பாராத வெறியுடன் சகதேவன் அம்புகளைத் தொடுத்தபடி முன்னோக்கி வந்து அந்த இடைவெளியில் புகுந்துகொண்டான். "சூதன் மகனே, கொல் என்னை... உன் அம்புகளுக்கு ஆற்றலிருந்தால் என்னை கொல்!" என்று கூவினான். "என் மூத்தவர்களை நீ சிறுமைசெய்தாய். நான் வீணே நோக்கி நின்றேன் என்னும் பழி அகலட்டும்... கொல் என்னை ! கீழ்பிறப்பே, கொல் என்னை!"

கர்ணனின் அம்புகள் அவனை எதிர்கொண்டன. சகதேவனின் இருபுறமும் எரியம்புகள் சென்று அறைந்து அனற்புழுதி கிளப்பின. ஆனால் அவன் இறப்பதற்கென்று முடிவெடுத்து அங்கே வந்ததுபோல் தோன்றினான். அது ஒரு கண எழுச்சி என விருஷசேனன் உணர்ந்தான். முந்தைய நாள் யுதிஷ்டிரனும் பீமனும் களத்தில் சிறுமைசெய்யப்பட்டதை அவர் வெவ்வேறு சொற்களினூடாக கடந்துசென்றிருப்பார். நேற்று அவையில் உணர்வெழுச்சிகள் வெளிப்பட்டிருக்கலாம். பழிச்சொற்கள் எழுந்திருக்கலாம். அனைத்தையும் மேலும் மேலும் எடைமிக்க சொற்களைக் கொண்டு மூடியிருக்கலாம். ஒரு தருணத்தில் அந்த விசை தடைகளை உடைத்து எழுந்துவிட்டிருக்கிறது.

கர்ணன் சகதேவனை தொடர்ச்சியாக அம்புகளால் அறைந்தாலும் அவற்றை எல்லாம் விண்ணிலேயே தடுத்து பொறிமழையென உதிரச்செய்ய சகதேவனால் இயன்றது. அவன் வெறியாலேயே ஆற்றல் கொண்டுவிட்டிருந்தான். அவன் புலன்கள் ஒவ்வொன்றும் பலமடங்கு கூர்கொண்டன. கர்ணனின் அம்புகள் அவனை தொடவில்லை. ஆனால் அந்த

விசை சற்றுநேரமே நீடிக்கும் என அனைவரும் அறிந்திருந்தனர். அதை உணர்ந்தவன்போல சுருதகீர்த்தியும் சுருதசேனனும் இரு பக்கங்களிலும் இருந்து அம்புகளைச் செலுத்தியபடி அணுகினர்.

கர்ணன் அக்கணத்தில் சற்றே திரும்பி அகல, இடைவெளியில் விசையுடன் முன்னெழுந்த சுருதகீர்த்தி மிகவும் நெருங்கி வந்துவிட்டான். தன் ஆவநாழியிலிருந்து எரியம்பு ஒன்றை எடுத்த கணம் மிக அருகே சுருதகீர்த்தியை விருஷசேனன் பார்த்தான். அவனுடைய எரியம்பின் மிக அணுக்கவளையத்திற்குள். ஊதியே அவனை சாம்பலாக்கிவிடக்கூடும் என்பதைப்போல். ஒருகணம் அவன் உள்ளம் வெறிகொண்டு எழுந்தது. "மூத்தவரே, கொல்லுங்கள் அவனை! கொல்லுங்கள்!" என திவிபதன் கூச்சலிட்டான். அதே தருணம் அப்பால் சகதேவனின் தேரை தன் எரியம்பால் அடித்து இருபுறமும் பிளந்து விழச்செய்தான் கர்ணன். தேரிலிருந்து பாய்ந்திறங்கி நின்ற சகதேவன் வெறும் கைகளுடன் திகைத்து விழிகள் வெறிக்க நின்றான். கர்ணன் அவனை நோக்காதவன்போல திரும்பிக்கொண்டான்.

சுருதகீர்த்தியை நோக்காதவன்போல விருஷசேனன் திரும்பிக்கொண்டான். "மூத்தவரே..." என்று கூவிய திவிபதன் விருஷசேனனின் விழிகளைக் கண்டு சொல் அமைந்தான். நாணொலி எழுப்பியபடி முன்னால் சென்ற கர்ணனை அம்புகளால் வேலியிட்டபடி விருஷசேனன் தொடர்ந்தான். வில்தாழ்த்தி தேர்த்தட்டில் நின்றிருந்த சுருதகீர்த்தியை பாகன் பின்னால் கொண்டு செல்ல அப்பால் சகதேவன் தளர்ந்த நடையுடன் பாண்டவப் படை நோக்கி சென்று அங்கு வந்த தேர் ஒன்றில் தொற்றி ஏறிக்கொண்டான்.

இருட்கனி - 49

ஒன்பதாவது களத்தில் அமர்ந்திருந்த சூதரான சார்ங்கர் தன் கையிலிருந்த பித்தளைக் கம்பியை வளைத்துச் செய்ததுபோன்ற சிறிய இசைக்கலனை உதடுகளுடன் பொருத்தி, நாவாலும் உதடாலும் அதை மீட்டி, சிறு தவளைகள் போலவும் வண்டுகள் சேர்ந்து விம்மலோசை எழுப்புவது போலவும் அதை இசைத்து, போர்க்களத்தின் காட்சியை விரித்துரைக்கலானார். பிற சூதர்கள் அவருடன் இணைந்துகொண்டனர். அங்கு குருக்ஷேத்ரத்தின் பதினேழாவது நாள் போர்க்களம் மீண்டும் நிகழ்வதுபோல் தொட்டுவிரிந்து அகன்று அலைகொள்ளும் காட்சிகளென விரிந்தது. அவர்களின் சொற்களின் நடுவே பந்தங்களின் ஒளியில் உடலெங்கும் அணிச்சுடர்கள் நிறைந்திருக்க கர்ணன் கிடந்தான். பனியில் அணிகளின் ஒளி சற்று நனைந்திருப்பதுபோல் தோன்றியது. அங்கே ஒலித்த பாடலின் சொற்கள் அக்குளிரில் நடுக்கு கொண்டவை போலிருந்தன.

சூதரே, மாகதரே, கேளுங்கள். நான் குருக்ஷேத்ரப் பெருங்களத்தை பார்க்கிறேன். அங்கு முட்டி மோதும் உடல்களும் படைக்கலங்களும் ஒற்றை விசையொன்றின் பல்லாயிரம் நெளிவுகளெனத் தோன்றுகின்றன. விசைகொண்டோடும் நாகம் போலவோ, தன்னில் தான் களித்து துள்ளிக் குதித்து சுழன்றாடும் குட்டிப்புரவி போலவோ, ஒற்றை உடலே எங்கும் நின்று கொந்தளித்துக் கொண்டிருந்தது. மேலிருந்து நோக்குகையில் படைக்கலங்களின் மின்களால் நிறைந்திருந்தது அது. கீழிருந்து நோக்குகையில் உதிர்ந்த உடல்களுக்குமேல் தாவிச்செல்லும் கால்களால் மூடியிருந்தது.

அனலெழுந்து பெய்துகொண்டிருந்த அக்களத்தின் மீது முகில்பிளந்த ஒளி பெய்துகொண்டிருந்தது.

அன்றைய போர் ஐந்தனல்களின் போர் என்று அறிந்தேன். நான் அக்களத்தில் எரி எழுந்த காட்டின் பெருந்தழல்கள் என அசைந்த செங்கொப்பளிப்பையே கண்டேன். இரண்டாவது அனலோனாகிய வஹ்னி கர்ணனின் அம்புகளில் ஏறிப்பாய்ந்தான். மண்ணிலறைந்து வெடித்தெழுந்தான். தேர்களை அள்ளிப்பற்றி கொழுந்தாடினான். யானை உடல்களைச் சுட்டு அவற்றை அலறி சரியச்செய்தான். படைக்கலங்கள் கூட அனல் துண்டுகளென கனல் கொண்டன. அர்ஜுனனும் கர்ணனும் எதிரெதிர் நின்று தழலம்புகளால் போராடினர். ஒருகணம் பிந்தவில்லை, ஒருகணம் முந்தவும் இல்லை. அவர்களின் அம்புகளால் இரு படைகளின் பொருதுமுனை செவ்வனல் ஒழுகும் ஆறு எனத் தெரிகிறது. செங்குருதி தோய்ந்த வாளின் வளைந்த முனை. இரு படைகளும் இரும்புத்தகடுகளென உரசிக்கொண்டு அனலெழுப்புகின்றனவா?

சூதரே, இங்கிருந்து பார்க்கையில் இரு படைகளும் விட்டில்கள்போல் அவ்வனல்பரப்பை நோக்கி வந்து பெருந்திரளென விழுந்து பொசுங்கிக்கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. இன்றுடன் முற்றாக அழிந்துவிட விரும்புபவைபோல. சிறகுகொண்டதே அனலுக்கு உணவாவதற்கு என்பதுபோல. போர் தொடங்கிய இச்சிறுபொழுதுக்குள்ளேயே பெரும்பகுதியினர் எரிந்தழிந்துவிட்டிருக்கின்றனர். இருபுறமும் முகப்புப்படையிலிருந்து எவரும் பின்னடையவில்லை. முன்னுந்தி எழுவதற்குப் பின்னால் படைகள் மிகக்

குறைவாகவே இருக்கின்றன. இரு படைகளுக்கும் பின்பகுதி சிதறுண்டு அலைக்கழியும் படைவீரர்களும் தேர்களும் உதிரி வண்டிகளும் நிறைந்ததாக தெரிகிறது. இதோ எரியம்பு விழுந்து சாலையென அமைக்கப்பட்ட பலகைகள் பற்றிக்கொள்கின்றன. நெருப்பு அவற்றினூடாக ஓடை நீர் என வழிந்தோடி பின்பகுதியை அடைகிறது. எழுந்து மிகத் தொலைவில் சென்றுவிழுந்த எரியம்புகளால் கூடாரங்கள் பற்றிக்கொள்கின்றன. வைக்கோற்போர்களும் அன்னக்களஞ்சியங்களும்கூட அனல்கொண்டுவிட்டன. இரு படைகளும் இப்போது எல்லாப்புறமும் எரியால் சூழப்பட்டிருக்கின்றன. எரி நடுவே நின்று கொந்தளிக்கின்றது மானுட உடற்பெருக்கு.

கர்ணனின் அம்புகளிலிருந்து எழுந்த அனல் நுண்ணுருக்கொண்டு அங்கே எழுந்த பெருந்தவளை ஒன்றின் நீள்நாக்கு என பாய்ந்தும் மாறிமாறிச் சுழன்றும் படைகளை நக்கி உண்டது. இன்றுடன் போரிடுவதற்கு இரு தரப்பிலும் எவரும் எஞ்சப்போவதில்லை என்ற எண்ணத்தை போரிட்டுக்கொண்டிருந்த படைத்தலைவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தனர். திரும்பித்திரும்பி நோக்கி உளமழிந்தனர். போர்க்களத்தில் எரி ஏன் தடுக்கப்பட்டிருந்தது என அறிந்தனர். எரியை எழுப்புவது வரைதான் அது மானுடக் கைகளுக்குரியது. எழுந்த பின் எரி தன் வழியை தானே கண்டுகொள்கிறது. தன் இலக்கை வெறிகொண்டு சென்றடைகிறது. இப்புவியில் தானன்றி வேறேதும் எஞ்சலாகாது என எண்ணுகின்றதா அது? தானுண்ணும் அன்னம் அழிந்து தானும் அழிந்து வெறுமையை உருவாக்கிச் செல்ல ஆணையிடப்பட்டுள்ளதா? பேரழகு கொண்டது அனல். அழிவின் பேரழகு. மின்னி மின்னி அணையும் மாபெரும் மலர்வுகளை பார்க்கிறேன்.

வெண்வெடிப்பு மஞ்சள் இதழ்களென்றாகி சிவந்து நுனிகருகி நீலம்கொண்டு விரிந்தமைய மையத்தில் மீண்டும் எழுகிறது இருள். இவ்வொளி எங்கிருந்தோ இருளை உறிஞ்சி இங்கே துப்பிக்கொண்டிருக்கிறது.

வெந்து கருகி குவிந்த உடல்களுக்கு மேல் எழுந்து சென்றன தேர்கள். அலைகளிலென தடுமாறின. நிலையழிந்து ஒன்றுடன் ஒன்று முட்டிமோதின. கருகிய கொடிகளைக் கொண்டு எவர் எவரென அறிய இயலவில்லை. ஆணையிடும் கொடிகளும் கருகியணைந்தன. வெடிப்பொலியில் முரசொலிகள் மறைந்தன. ஒளிக்குறிகள் அனுப்ப இயலவில்லை. ஆணையிடும் கைகளை நோக்க இயலாது புகை திரையிட்டது. சகுனியின் ஆணை "எரியெழுகையை ஒழிக... எரியெழும் இடத்தை உய்த்து விலகிக்கொள்க!" என முழங்கிக்கொண்டிருந்தது. அதன் ஊடே புகுந்த வெடிப்போசைகள் அவற்றை சொற்திரிபு செய்தன. "எரிக்கு உணவாகுக! எரியே ஆகுக! எரிக்கு அடிபணிக!" என அச்சொற்கள் முழங்குவதுபோலக் கேட்டு சில படைவீரர்கள் திகைத்தனர். "எரிமலர் சூடுக... எரியால் மூடுக!" என முரசுகள் முழக்கமிட்டன. ஒவ்வொருவரும் அத்தருணத்தில் புகையால் முழுமையாக போர்த்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டார்கள். அவர்களின் செவிகள் கூர்கொண்டன. கேட்காமலேயே சொல்லுணரும் திறன் கொண்டன. அந்தப் படை அனைத்துவகை தொடர்புறுத்தல்களையும் இழந்து அகங்களை ஆளும் அச்சம், வெறி எனும் உணர்வுகளாலேயே ஒன்றென நிறுத்தப்பட்டது.

சகதேவன் தன் தேரை நோக்கி ஒடுவதைக்கண்ட சல்யர் கைநீட்டி அமரத்திலிருந்து எழுந்து கூச்சலிட்டார் "விடாதே!

அவனை கொல்! கொல்! கொல் அவனை!" கர்ணனை நோக்கி முற்றிலும் திரும்பி "என்ன செய்கிறாய்? எங்கே திரும்புகிறாய்? இதுவே தருணம்! கொல்" என்று கூவினார். கர்ணன் இடது பக்கம் தேர் திரும்பும்பொருட்டு கைகாட்டினான். சல்யர் திகைப்புற்று "என்ன செய்கிறாய்? அவன் இக்களத்தில் உன் எதிரி. களத்தில் மறமொன்றே நெறி. அளியும் கொடையும் அங்கு பழி சேர்ப்பது. துறப்பது இளிவரலாவது. அறிவிலி! கொல் அவனை!" என்றார். வாயோரம் நுரையெழ "இப்போதே கொல்... ஓர் அம்பு போதும்... கொல் அவனை!" என்றார்.

கர்ணன் அச்சொற்களை செவிகொள்ளவில்லை. சல்யர் "கொல் அவனை! கொல்! அறிவிலி!" என்று வெறிகொண்டவராக கூவிக்கொண்டிருந்தார். கர்ணனின் கையசைவுக்கு ஏற்ப அவனைச் சூழ்ந்து வந்த படைகள் அவன் ஆணைக்கு கட்டுப்பட்டு அரைவட்டமெனத் திரும்பியமையால் சல்யராலும் தன் தேரை திருப்பாமலிக்க இயலவில்லை. எழுகதிர் வடிவமென அமைந்த சூழ்கை சற்றே வளைந்து பாஞ்சாலர்களின் வில்லவர்ப் பெருக்கை எதிர்கொண்டது. கர்ணன் காலில் கட்டை விரலாலும் நுனி விரலாலும் பற்றிய விஜயத்தின் நுனியை அசைவிலாது தேரில் நிறுத்தி செவி வரை நாணிழுத்து ஒன்றின் சீற்றத்தை ஒன்று ஏற்க, ஒன்றின் காற்றசைவை இன்னொன்று பெற, தன் அம்புகளை தொடுத்தான். அனலேந்திய அம்புகள் சூல்கொண்ட நாகமென பருத்திருந்தன. அவை வில்விட்டு மேலேறுகையில் விம்மலோசை எழுந்தது. அனல்சூல் கொண்ட அம்பு விண்ணில் சீறியதுமே சிறியதோர் அம்பு மேலும் விசையுடன் தொடர்ந்து சென்று அதை அறைந்தது. அனல்கருவைச் சூடிய முதல் அம்பு வெடித்து விழிஇருளச் செய்யும் மின்னொளியை வானில் நிறைத்து வெங்காற்று வளையங்களை உருவாக்கி அனல்

அலையலையெனப் பெருகியது. அதிலிருந்து நூற்றுக்கணக்கான அனல்துகள்கள் வீசுவலையென குடைவிரிந்து வளைந்து இறங்கின.

சல்யர் ஒரு கையால் கடிவாளத்தைப் பற்றியபடி திரும்பி நோக்கி பற்களை இறுகக் கடித்து "நீ அவனை தப்பவிட்டாய்... நீ அவனை வேண்டுமென்றே தப்பவிட்டாய்" என்றார். கர்ணன் "ஆம்" என்றான். "அவனுக்கு உயிர் அளிப்பதற்கு நீ யார்? போர்க்களத்தில் உயிர்க்கொடை அளிக்கும் உரிமை அப்போரை அறைகூவி முன்னெடுத்த அரசனுக்கு மட்டுமே உண்டு. பிற எவருக்கும் தங்கள் உயிர்மீதே உரிமை இல்லை என்பதை அறியாதவனா நீ?" என்று சல்யர் கூவினார். "சகதேவன் என் மருகன். என் தங்கையின் வயிற்றில் எழுந்தவன். என் தோள்களில் வளர்ந்தவன். ஆனால் இக்களத்தில் அவனை என் எதிரி என்றே கொள்கிறேன். அவனை கொல்லவேண்டும் என உன்னை தூண்டுகிறேன். ஏனென்றால் நான் போர்நெறிகளை அறிந்தவன். போர்முனையில் தனிநோக்கங்களும் தனிவிழைவுகளும் பழி என அறிந்தவன்."

பின்னர் அவர் மூச்சிளைப்புடன் தளர்ந்தார். அமரத்தில் அமர்ந்துகொண்டு இரு வளைவாடிகளில் தோன்றி அவனிடம் சொன்னார். "இப்போரில் அவனை நீ கொன்றிருந்தால் பாண்டவர்களின் உளஉறுதி இன்றே அவிந்திருக்கும். இக்கணம் வரை அவர்கள் தளராமல் நின்று பொருதுவதற்கு ஒன்றே அடிப்படை என்று கொள்க! அவர்கள் ஐவரில் எவரும் இன்னும் உயிர் துறக்கவில்லை. அவர்களில் எவர் ஒழிந்தாலும் பிறர் உயிர் வாழ எண்ணமாட்டார்கள் என்பது உறுதி. இன்னும் பிந்தவில்லை, இன்னும் வாய்ப்புள்ளது. செல்க, அவன் தன் தேரில் ஏறிக்கொண்டிருக்கிறான். விழுந்த பிணங்களின் மேல்

அவன் தேர் அலைமோதிக்கொண்டிருக்கிறது. அவனை இப்போதுகூட உன்னால் நீளம்பால் அறைய முடியும். எரியம்புகளால் அவனை தொடரமுடியும். சற்று விசை கூடினால் முன் சென்று அவனை மறித்துவிடவும் கூடும்."

கர்ணன் அவர் சொற்களை கேளாதவன்போல் தன் எதிரில் எழுந்துவந்த படைகளை நோக்கி அம்புகளை செலுத்திக்கொண்டிருந்தான். சல்யர் "என்னை சிறுமைசெய்கிறாய். என் சொற்களை விலக்குகிறாய்!" என்று கூச்சலிட்டுக்கொண்டே முழுப் படையும் செல்லும் திசைக்கே தேரை செலுத்தினார். "இதன்பொருட்டு வருந்துவாய்... அவன் உன்னை பழித்துவிட்டுச் செல்கிறான். அவனை நீ உயிர்தப்பவிட்டாய் என்பதை நீ மட்டுமே அறிவாய்." கர்ணன் அவருக்கு மறுமொழி சொல்லவில்லை. "வெல்க... இன்று வெல்வதனூடாக நீ இழந்த அனைத்தையும் அடைவாய்! பாரதவர்ஷத்தின் மாமன்னனுக்கு மும்முடி சூட்டியவன் நீ என்றாவாய். குலமும் புகழும் தேடி வரும்... இதுவே இறுதி வெற்றி. இவ்வெற்றிக்கென்றே நீ இதுவரை தோற்றாய்..." கர்ணனை அவருடைய சொற்கள் சென்றடைவதாகத் தெரியவில்லை. இரு தூண்களின் ஆடிவளைவுகளில் மாறிமாறித் தோன்றி அவர் கூவினார். "வெல்க! வெல்க!"

எழுசுடர்ச் சூழ்கையிலிருந்து ஏழு நேர்கதிர்களாக எழுந்த கௌரவ வில்லவர்படை காளையின் உடலை தாக்கியது. அதை ஏழு பிரிவுகளாகப் பிரிந்து ஊடுருவியது. ஏழு நாகங்களாக மாறி பாண்டவப் படையை துண்டுகளாக்கியது. அதன் கிளைகள் விரியும் தோறும் மீண்டும் தங்களை ஒருங்கிணைத்துக்கொள்ளும் பொருட்டு பாண்டவப் படை பின்நகரலாயிற்று. "அவர்களை பின்னடைய விடலாகாது.

பின்னடைந்து ஒருங்கிணைந்தால் மீண்டும் ஒற்றைக்காளை உருவென ஆவார்கள். அவர்களை துண்டுபடுத்தும்பொருட்டு நாம் ஏழு சரடுகளாக மாறியிருக்கிறோம். அவர்கள் பின்னடைந்தால் அவர்கள் ஒன்றாவார்கள். நாம் பல துண்டுகளாக அவர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முன்னகர்க! முன்னகர்க!" என்று சல்யர் கூவினார்.

கர்ணனின் அம்புகளுக்கு ஏற்ப, அவன் எண்ணுவதற்கு ஒருகணம் முன்னரே சல்யரின் கடிவாளங்களால் இயக்கப்பட்ட புரவிகள் தேரைத் திருப்பின. "உன்னை எதிர்கொள்ளும் படைகளை முற்றாக அழி. ஒருவர்கூட எஞ்சியிருக்கலாகாது. நமது இரு சரடுகளுக்கு நடுவே சிக்கிக்கொண்ட படை முற்றழிந்தால் இரு சரடுகளும் ஒன்றிணைந்து மேலும் விசை கொள்ள முடியும்" என்றார். கர்ணன் "ஆம். ஒருவர் கூட எஞ்சமாட்டார்கள். ஐயம் வேண்டாம்" என்றபடி அம்புகளை தொடுத்தான். இரு கதிர்ச்சரடுகளுக்கு நடுவே சிக்கிக்கொண்ட பாண்டவப் படை நொறுங்கியது. அதன் முகப்புமுனையில் கர்ணனின் எரியம்புகள் அறைந்து அனலெழுப்பின. பின்வாங்க முடியாமல் பின்பக்கம் கௌரவப் படைச் சரடு மறித்தது. அதற்கப்பாலிருந்த பகுதியில் இருந்து சகதேவனும் மறுபக்கம் நகுலனும் அச்சரடுகளை தாக்கினர். அதை உடைத்து இடைவெளியை உருவாக்கி பாண்டவப் படையை பின்னடையச் செய்ய முயன்றனர். கர்ணனின் அனலம்புகளிலிருந்து பாண்டவப் படை பின்னடைந்தது. "அதோ மீண்டும் அவர்கள் வந்திருக்கிறார்கள். இச்சரடுகள் உருவாக்கிய வழியினூடாகச் சென்று அவர்களை கொல். இக்கணமே அவர்களை கொல்" என்று சல்யர் கூவினார். கர்ணன் ஆணையிடுவதற்குள்ளாகவே தன் புரவிகளை சவுக்கால் சொடுக்கி விசைகொள்ளச் செய்தார். "அவர்களில் ஒருவர்

இப்போது வீழ்ந்தாலும் வெற்றி தொடங்கிவிட்டதென்றே பொருள். அறிக, அவர்களில் ஒருவராவது வீழ்வதுவரை எவரைக் கொன்றாலும் அவர்கள் தோற்பதில்லை!”

கர்ணனால் கொல்லப்பட்ட உடல்கள் இடைவெளியின்றி விழுந்து பரவி உருவான களவெளியினூடாக சல்யரின் தேர் சென்றது. உளைச்சேற்றில் என சகடங்கள் புதைந்து தேர் அசைந்தாடியது. கர்ணன் இரு கால்களும் தேர்த்தட்டில் உருக்கி ஒட்டப்பட்டவைபோல நின்று உடலில் சற்றும் உலைவில்லாது விஜயத்தை இயக்கி பாண்டவப் படையை அழித்தபடி முன்னால் சென்றான். அனல் நீரென மாறி பெருகி நின்றிருந்தது களத்தில். மழைத்திரையென எழுந்து உலைந்தாடியது. வலுவுடன் வீசி புகைத்திரையை அள்ளி அகற்றிய காற்றுக்குப் பின் ஒருகணம் மிக அருகே நகுலனை கர்ணன் கண்டான். “அதோ! அதோ!” என்று கூவியபடி சல்யர் எழுந்தார். “அதோ அவன்! அவனை கொல்! இக்கணமே கொல்!” என்று வீறிட்டார். புகைத்திரைக்குள் கர்ணனைக் கண்டுவிட்ட நகுலன் தன் படைகள் பின்னடைய சங்கொலி எழுப்பியபடி தான் அம்புகளை ஏவியபடி முன்னெழுந்து வந்தான்.

அர்ஜுனன் நகுலனையும் சகதேவனையும் காக்கும்பொருட்டு சங்கொலியுடன் எழுந்துவர அவனை கிருதவர்மனின் தலைமையிலான கௌரவப் படையின் கதிர் தடுத்தது. அவர்கள் போரில் தொடுத்துக்கொண்டு நிகராற்றலுடன் களம்நின்றனர். மறுமுனையில் நகுலனையும் சகதேவனையும் காக்கும்பொருட்டு பீமன் எழுந்துவர அஸ்வத்தாமனின் படைக்கதிர் அவனை தடுத்தது. இரு சுவர்களால் அவர்கள் பிரிக்கப்பட்டுவிட நகுலனும் சகதேவனும் தங்கள் படையுடன் கர்ணன் முன் நின்றனர். நகுலன் சற்றும் அஞ்சாமல்

அம்புகளைத் தொடுத்தபடி அவனை எதிர்கொண்டான். கர்ணனின் எரியம்புகளை விண்ணிலேயே தடுத்து உடைத்து எரிமழையாக வீழ்த்தினான்.

சல்யர் அமரத்தில் இருந்து கொந்தளித்தார். "அனலம்பை எடு! அவனை தேருடன் தூக்கி வீசு! இக்கணமே அவர்களில் ஒருவன் கொல்லப்பட்டாக வேண்டும். அவர்கள் உயிருடன் மீண்டால் உன்னை வென்றுவிட்டதாகவே பொருள்... இருவரையும் கொல். அன்றி ஒருவரையாவது கொல்!" என்று சல்யர் கூச்சலிட்டார். "அவர்களில் ஒருவனைக் கொல்வது இன்னொருவனையும் கொல்வதற்கு நிகர். அவர்கள் ஈருடல்கொண்ட ஒருவர்... கொல்!" கர்ணனின் அம்புகள் சென்று அறைந்து வெடிக்க நிலம் அதிர்ந்தது. நகுலனின் தேருக்கடியில் சென்று வெடித்த அம்பு அவனை தேர்த்தட்டிலிருந்து தூக்கி வீசியது. புரவிகள் உடல் உடைந்து நாற்புறமும் தெறிக்க புழுதி எழுந்து மழையென விழுந்தது. அவன் படைக்களத்தில் தெறித்து விழ அவன் மேல் விண்ணிலிருந்து எரிபற்றிக்கொண்ட தேர்ச் சிம்புகள் விழுந்தன. உடல் முழுக்க செம்புழுதியும் குருதியும் படிந்திருக்க நிலத்தில் புரண்டெழுந்து அவன் சகதேவனை நோக்கி ஓடினான்.

"கொல் அவனை! இக்கணமே கொல்!" என்று சல்யர் கூவினார். ஆனால் தன் படைப்பிரிவை வலப்பக்கம் திரும்புவதற்கு கர்ணன் ஆணையிட்டான். சகதேவன் தன் தேரை முன்னால் கொண்டு வந்து நகுலனை அதில் ஏற்றிக்கொண்டு திரும்பி பின்னடைவதை சல்யர் கண்டார். சவுக்கை ஓங்கி தேர்த்தட்டில் வீசிவிட்டு எழுந்து திரும்பி கர்ணனை நோக்கி "யார் நீ? சொல்! யார் நீ? எதன்பொருட்டு இங்கே வந்தாய்? யாருக்காக போர்புரிகிறாய்?" என தொண்டை புடைக்க கூவினார். "உன்னை

தன் உயிர்த்தோழன் என்று எண்ணியிருக்கும் அஸ்தினபுரியின் அரசருக்கு வஞ்சம் செய்கிறாய். இழிமகனே, உன்னை தோள்சேர்த்தணைத்து அவர் விடைகொடுத்து இன்னும் இருநாழிகைகூட ஆகவில்லை. அதற்குள் அவருக்கு இரண்டகம் செய்கிறாய்!" மூச்சிரைக்க அவர் "நீ எண்ணுவதென்ன? போர்புரியாமல் பின்னடைகிறாயா? சொல், தேரைத் திருப்புகிறேன்" என்றார்.

சல்யரை நேருக்குநேர் நோக்கி கர்ணன் "அர்ஜுனனை அன்றி பிறரை நான் கொல்லப்போவதில்லை, மத்ரரே" என்றான். "ஏன்?" என்று சல்யர் கேட்டார். "அவனை அன்றி பிறரை கொல்லமாட்டேன் என உறுதிகொண்டிருக்கிறேன்." சல்யர் விழிகள் மாற "அவளுக்கு சொல் கொடுத்தாயா?" என்றார். "ஆம்" என்று கர்ணன் சொன்னான். "அறிவிலி! ஆண்மகனா நீ? சூழ்ச்சிக்காரப் பெண்ணொருத்தி வந்து உன் உயிரை உன்னிடமிருந்து பெற்றுச்சென்றிருக்கிறாள். உன் வெற்றியை, பெருமையை அனைத்தையும் பெற்றுச்சென்றிருக்கிறாள். அதைக்கூட உணராதவனா நீ?" கர்ணன் "அது நான் அளித்த சொல்" என்று தணிந்த குரலில் சொன்னான். சல்யர் தலையில் ஓங்கி அறைந்தபடி "அச்சொல் உன்னை கொல்லும். அச்சொல்லால் உன் உயிரை அவள் பெற்றுச்சென்றுவிட்டாள்" என்றார். "அதற்கு அவளுக்கு ஏது உரிமை? உனக்கு அவள் ஒருதுளி முலைப்பாலேனும் அளித்திருக்கிறாளா? சொல்..."

"அவளுடையது என் குருதி" என்று கர்ணன் சொன்னான். "மூடா, நீ இன்னமும் உளம் முதிராதவன். இப்புவியில் நூல்கள் உருவாக்கிய அனைத்துப் பொய்களிலும் பெரிய பொய் தாய்மை. பெண்ணை இல்லம்தேக்கிவைக்க, அவள் மேல் குடியைக் கட்டி எழுப்ப மூத்தோர் அதை சமைத்தனர்.

சொல்லிச் சொல்லி அதில் பெண்ணை தளையிட்டனர். அத்தளையிலிருந்து விடுபடும் சூழ்ச்சித்திறன் கொண்ட பெண் அது மறுஎல்லைக்குத் திரும்பி ஆண்கள் அனைவரையும் சிறையிடும் ஆற்றல்கொண்டது என உணர்கிறாள். அதை தன் படைக்கலமாகக் கொண்டவள் வெல்லமுடியாதவள்" என்றார் சல்யர். "நீ அறியாத கதையா? இந்தப் போரே சத்யவதி என்னும் அன்னையின் சிறுமையால் எழுந்தது. இவள் கொண்ட பெருஞ்சிறுமையால் வளர்ந்தது... இங்கு பெய்யும் இக்குருதியின் ஒவ்வொரு துளிக்கும் அவளே பொறுப்பு... அவளுக்கு அளித்த சொல் உன்னை கட்டுப்படுத்தாது. நான் சொல்கிறேன், அது உன்னை கட்டுப்படுத்தாது. இதோ நான் என் சொல்லால் அத்தளையை உடைக்கிறேன்."

"சொல்பிறழ்வது என் வழக்கம் அல்ல" என்று கர்ணன் சொன்னான். "செல்க!" என கைகாட்டினான். "நீ சொல்பிறழ்வதனால் வரும் அனைத்துப் பழியையும் நான் சூடுகிறேன். நீ கொள்ளும் அனைத்துப் பழிகளையும் சூடும் முறைகொண்டவன் நான்..." என்று சல்யர் சொன்னார். அவர் விழிகள் நீரணிந்தன. "அவள் சொல்லவேண்டும். அவள் சொல்லாமல் நான் சொல்ல நெறியில்லை... அவளுக்குக் கட்டுண்டிருக்கின்றன தெய்வங்களும்" என்றபோது அவர் குரல் உடைந்தது. "வேண்டாம். செல்க, முன்னெழுந்து செல்க! உன் வில்திறனால் பாண்டவர் ஐவரையும் வெல்க... ஒருவரை கொன்றால் நால்வரும் அடிபணிவார்கள்... நான் சொல்வதை கேள். ஐயம்கொள்ளாதே."

கர்ணன் "மத்ரரே, என் ஆற்றலால் இப்போரை நான் வெல்ல இயலும்" என்றான். சல்யர் சீற்றம்கொண்டு கூச்சலிட்டார் "இந்தப் போரை நீ வெல்ல இயலாது. அறிவிலி, இந்தப் போரில்

நாம் வெல்ல முடியாது. ஏனென்றால் இது ஏற்கெனவே தோற்றுவிட்டது. தொடங்குவதற்கு முன்னரே தோற்றுவிட்ட போர் இது. இதை அறியாத ஒருவரும் இப்படையில் இல்லை. என்று மறுபுறம் துவாரகையின் யாதவன் தேர்த்தட்டில் அமர்ந்தானோ அப்போதே நாம் தோற்றுவிட்டோம். முற்றழிவை நோக்கி ஒவ்வொரு நாளும் சென்றுகொண்டிருக்கிறோம். அவன் முடிவெடுத்துவிட்டான், நம்மை அழிப்பது என்று. உருளும் மலைப்பாறைக்குக் கீழே ஒரு கல் என ஒன்றை வைக்கச் சொல்கிறேன். இப்போரை இன்று நிறுத்திவிட்டால்கூட நீ உயிருடன் மீளமுடியும். நான் எண்ணுவது அதை மட்டுமே. அவர்களில் ஒருவரை கொல். பாண்டவர் உளம்தளர்ந்து யாதவனிடம் சென்று போரை நிறுத்தும்படி கோருவார்கள். நம்முன் இருக்கும் வழி இது ஒன்றே."

கர்ணன் "என் வில்மேல் எனக்கு நம்பிக்கை உள்ளது. என் ஆசிரியரின் சொல் உடன் உள்ளது. நான் இக்களத்தை வெல்வேன். யுதிஷ்டிரனை வென்று அஸ்தினபுரியின் முடியை என் தோழனுக்கு அளிப்பேன்... உயிருடனிருந்து அதை நோக்குக!" என்றான். சல்யர் சலிப்புடன் "நீ இங்கு இயற்றுவது என்னவென்று அறிவாயா? இது கொடையல்ல, வெற்று ஆணவம். இந்த ஆணவம் உன்னுள் இருக்கும் தாழ்வுணர்விலிருந்து எழுவது. அனைத்து ஆணவங்களுக்கும் அடியிலிருப்பது தற்சிறுமையே. உன்னை இங்கு நிறுவிக்கொள்ள முயல்கிறாய். கொடையாளன் என்றும், வஞ்சத்தால் வீழ்த்தப்பட்டவன் என்றும் உன்னைப்பற்றி சூதர்கள் பாடவேண்டும் என்று விரும்புகிறாய். ஆகவேதான் வெற்றிக்கான அனைத்து வாய்ப்புகளையும் நீயே தவிர்க்கிறாய்" என்று சல்யர் சொன்னார். "வீரர்களில் ஒருசிலரை

கவ்விக்கொள்ளும் மாயை இது. வெற்றியைவிட தோல்வியே பெரும்புகழ்சேர்ப்பது என அவர்கள் எண்ணத்தலைப்படுவார்கள். துயரப்பாடல்களைப் பாடும் சூதர்களின் நாவில் அவலநாயகனாக என்றென்றும் வாழலாமென எண்ணமுயல்வார்கள்...”

கர்ணன் பற்களைக் கடித்து “போதும், இங்கே சொல்லாட நான் வரவில்லை” என்றான். “நான் சொல்லியாகவேண்டும். நோய்கொண்டவர்களிடம் இறப்பை நோக்கிய விழைவை உருவாக்குகிறது ஒரு தெய்வம். பொருதுபவர்களிடம் தோல்வியை நோக்கிய ஈர்ப்பை வளர்க்கிறது. ஆழங்களை எட்டிப்பார்ப்பவர்களிடம் பாய்ந்துவிடு எனச் சொல்கிறது. அதன் பெயர் விஷாதை. அது வியாமோகை என்னும் பிறிதொரு தோற்றம் கொண்டு அணுகுகிறது... அந்தத் தெய்வம் இப்புவியில் இதுவரை பல்லாயிரம் ஆடல்களை நிகழ்த்தியிருக்கிறது. களத்தில் வீரன் இறுதியாக வெல்லவேண்டியது அதையே. அதை வெல்க... இந்த உளமயக்கு உனக்கு பேரழிவை அளிப்பது. இதை வெல்க!” என்றார் சல்யர். அப்பால் அர்ஜுனனின் நாணொலியை கர்ணன் கேட்டான். “செல்க... செல்க... அவனை நான் எதிர்கொள்ளவேண்டும்” என்று கூவினான்.

இருட்கனி - 50

அனல் பெருகிநின்ற குருக்ஷேத்ரப் பெருங்களத்தில் விஜயத்தை கையிலேந்தியவனாக அர்ஜுனன்மேல் அம்புடன் எழும்பொருட்டு திரும்பிய கர்ணனிடம் சல்யர் துயரும் ஆற்றாமையுமாக சொன்னார் “மைந்தா, என் சொற்களை கேள்.

நான் பெரிதும் கற்றறிந்தவன் அல்ல. நான் ஈட்டியவையும் குறைவே. ஆனால் எத்தனை எளியோன் ஆயினும் ஒவ்வொரு தந்தையும் தன் மைந்தனுக்கு அளிக்கும் பிறிதில்லாத மெய்மை என ஒன்று உண்டு. அதை நான் உனக்கு அளிக்கிறேன். கேள்."

கர்ணன் நாணொலி எழுப்பி "செல்க... அவனை இன்றே கொல்கிறேன், செல்க!" என்றான். "அவன் தன் சாவு நோக்கி வந்துகொண்டிருக்கிறான். வல்லமைகொண்ட என் அம்புகளில் அவன் உயிர்குடிக்கவிருப்பது எது என பார்க்கிறேன்" என்று அறைகூவினான். சல்யர் "இது இக்களத்தை வகுக்கவிருக்கும் அறுதிப்போர் என நான் உணர்கிறேன். என்னிலெழும் சொற்களை நான் சொல்லியாகவேண்டும்... இவற்றை நான் பிற எங்கும் சொல்ல இயலாது போகலாம். தேர்ப்பாகனாக அமர்ந்து மட்டுமே சொல்லத்தக்கவை இவை எனத் தோன்றுகிறது" என்றார்.

"எனில் தேரை அவனை நோக்கி செலுத்துக... அவனை என் முன் நிறுத்துக... செல்லும் வழியில் நான் தடையென எழுந்துவரும் இப்படைகளை அழித்துக்கொண்டிருக்கையில் உங்கள் சொற்களை என்னிடம் சொல்லுங்கள்" என்று கர்ணன் சொன்னான். "ஆம், அவ்வாறே" என்றார் சல்யர். மூச்சுத்திணறலுடன் "என்னில் எழும் இச்சொற்களை எப்படி வகுப்பதென்று அறியேன். நூல்நவின்றுள்ளேன், எனினும் நூல்முறைமைகள் எவையும் மெய்வாழ்வின் தருணத்தில் சொல்லெடுத்துத் தருவதில்லை என்றும் அறிகிறேன்" என்றார். "நீ இப்போது வஞ்சினம் உரைத்து கிளம்புகிறாய். வெற்றி உறுதி என உனக்கே சொல்லிக்கொள்கிறாய். ஆனால் உன் நாணொலியில் நான் ஒரு தயக்கத்தை உணர்கிறேன். ஒருகணம், ஒரு மாத்திரை அது தொய்வடைந்துள்ளது."

“அந்தத் தொய்வால்தான் நீ அவர்களுக்கு உயிர் அளித்தாய். எவ்வண்ணமேனும் வெற்றி, வெற்றிக்குக் குறைவாக ஏதுமில்லை என்பதே வீரன் கொள்ளும் முழுவிசை நிலை. அது உன்னில் இன்னமும் அமையவில்லை. அந்த ஒருகணத்தால் நீ வெல்லப்படுவாய் என நான் அஞ்சுகிறேன். ஆகவே இதை சொல்கிறேன்” என்று சல்யர் சொன்னார். அவர்களுக்குமேல் வெண்ணிற முகில்திரள் ஒன்று வந்து நின்றது. உச்சிநெருங்கும் பொழுது என்பதனால் அது மாபெரும் வெண்வைரம் என சுடர்விட்டது. அதன்மேல் ஏறிநின்று தேவர்கள் கீழே நோக்கினர். அவர்களின் மணிமுடிகளின் ஒளிர்வால் முகில்திரளின் விளிம்புகள் கூர்மின் கொண்டன. வானில் இடியோசை எழுந்தமைந்தது.

சல்யர் இடைவெளியில்லாது பேசிக்கொண்டிருந்தார். பேசப்பேச அவரிடமிருந்து சொற்கள் ஊறிக்கொண்டே இருந்தன. அவர் அதுநாள் வரை தன்னுள் பேசிய அனைத்தும் அவரிடமிருந்து எழுவதுபோலத் தோன்றியது. “நீ கொண்ட இழிவுகள் அனைத்தையும் நான் அறிவேன். துரோணரால் துரத்தப்பட்டாய். உன் ஆசிரியரால் தீச்சொல்லிடப்பட்டாய். உன் உடன்பிறந்தாரால் அவையிழிவு செய்யப்பட்டாய். உன் பிதாமகரால் சிறுமை செய்யப்பட்டாய். உன் அரசவையிலேயே ஷத்ரியர் உன்னை மதிக்காமல் அமர்ந்திருந்தனர். உன் குடிக்கு இன்னமும்கூட ஷத்ரியத் தகுதி இல்லை...” கைகளை வீசி மூச்சிரைக்க அவர் உரக்க சொன்னார். “ஆனால் அதை எண்ணி வருந்தினால் நீ ஆண்மகனல்ல. எவருக்கு இருந்தது அந்தத் தகுதி? ராவண மகாப்பிரபு அரக்கர்குலத்தில் பிறந்தவர் அல்லவா? யாதவர் அல்லவா கார்த்தவீரியர்?”

“ஏன், அதோ எதிரில் வெல்லற்கரியவனாக அமர்ந்திருக்கும் இளைய யாதவன் அவைமுன்பனாக அமைந்து நடத்தியதல்லவா யுதிஷ்டிரனின் ராஜசூயம்? அங்கே அத்தனை ஷத்ரியர்களும் சென்று அவனை வணங்கி மங்கலஅரிசி கொண்டு வேள்விநிறைவு செய்தார்கள் அல்லவா? எங்ஙனம்? அவன் தன் ஆழியை எடுத்தான். எதிர்கொள்வோர் எழுக என்றான். அதை எதிர்க்கும் ஆற்றல் எந்த ஷத்ரியனுக்கும் இருக்கவில்லை” என்றார் சல்யர். “கர்ணா, உன் விஜயம் அந்த ஆழியைப்போல் எழவேண்டிய தருணம் இது. வேள்விக்களத்திலும் போர்க்களத்திலும் முடிவாகிறது குலமூப்பு என உணர்க! அறைகூவி நில். எதிர்கொண்டு எழு. பணியாதோரைக் கொன்று முன்செல்... உனக்கு நான் சொல்வதற்கு பிறிதொன்றில்லை. இது தெய்வங்கள் உனக்கு அளிக்கும் களம்...”

அவர் நெஞ்சில் கைவைத்து கண்ணீர் நிறைந்த விழிகளுடன் திரும்பினார். “உனக்கு நானன்றி இதைச் சொல்ல எவருமில்லை என்று உணர்க! பிறர் உன் பெருமையையோ சிறுமையையோ மட்டுமே காண்பார்கள். இரண்டையும் காண்பவன் நான் மட்டுமே. பிறர் உன்மேல் கொண்ட அன்பில் துளியிலும் துளியேனும் தன்னலம் இருக்கும். உனக்காக உயிரையும் கொடுக்க இயல்பாக எழுபவன் நான் மட்டுமே.” அவர் உடல் விதிர்த்துக்கொண்டிருந்தது. “கேள், மானுடர் அனைவருக்கும் தெய்வங்கள் ஒரு வினைவட்டத்தை அளிக்கின்றன. ஆம், ஒரே ஒரு வினைவட்டத்தை மட்டுமே அளிக்கின்றன. அதை கர்மமண்டலம் என்கின்றனர் நூலோர். முன்வினை வந்து உறுவது, நிகழ்வினை கூர்கொள்வது, வருவினை தொடங்குவது அப்புள்ளியில்தான். பிரார்த்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூன்றும் அறுதியாகக் குவியும்

அப்புள்ளியை கர்மபிந்து என்கின்றனர். நீ நின்றிருப்பது அங்கு. அதை தெளிக!”

“தன் வினைவட்டத்தை உணர்பவன், தன் வினைமையத்தில் உச்சவிசையுடன் எழுபவன் மட்டுமே தெய்வங்களுக்குரியவன். அவன் செல்வினையின் பயன்முடிக்கிறான். நிகழ்வினையை நிறைவுசெய்கிறான். வருவினையை தன் தோள்வலியால் உளவிசையால் வகுக்கிறான். மண்ணில் அனைத்தையும் அடைகிறான். விண்ணில் தேவர்களுடன் சென்றமர்கிறான். இந்த குருக்ஷேத்ரம் பல்லாயிரம்பேரின் கர்மபிந்து. இங்கு உச்சம்கொள்ளவேண்டியவர்கள் நீயும் அர்ஜுனனும். ஒருகணம் நீ பிந்தினால் அவன் எழுவான். ஒரு எண்ணம் உன்னில் தயங்கினால் நீ அனைத்தையும் இழப்பாய். இத்தருணத்தை வென்றெழுக!”

“மைந்தா, இக்கணத்தை தெய்வங்களுக்கு உகந்ததாக ஆக்குக! களம் ஒரு வேள்வி. இங்கே ஆற்றலே வேதம். அளியின்மையே சங்கல்பம். அம்புகள் நெய்க்கரண்டி. குருதியே நெய். உயிர்கள் ஆகுதியாகின்றன. இனியவனே, இங்கே வெற்றியே வேள்விப்பயன் என்று தெளிக!” என்றார் சல்யர். சொல்லிச்சொல்லி அவரிடம் சொல் ஒருமைகொண்டது. சொல்லொருமைகளில் வந்தமையும் காலம்கடந்து நின்றிருக்கும் மெய்மைகள் அதில் கூடின. அச்சொற்களை அவரும் நன்கறியவில்லை. அவரினூடாக அவை நிகழ்ந்தன. “அங்கனே, மீட்பென்பது தன்னிடமே என சொல்கின்றன வேதமுடிபின் நூல்கள். தானென்றுணர்தலே மெய்மையிலமர்தல். அதன்பொருட்டு கணந்தோறும் வாயில்களை தட்டுவதொன்றே நாம் செய்யக்கூடுவது.

திறக்கும் கணமும் வாயிலும் ஒருங்கமையும் என்றால் மீட்பு நிகழ்கிறது.”

“கணந்தோறும் என நிகழும் ஆயிரம்கோடி அறிதல்களில் ஒன்றில் உள்ளது நமக்கான மெய்மை. அது கல்லில் தெய்வமென எழுந்து நம்மை ஆட்கொள்வதே விடுதலை. அங்கனே, எளியோருக்கும் பெரியோருக்கும் இல்லை இந்த அகக் குழப்பம். நீ எளியோர் என துயர்கொள்கிறாய். அறிந்தோர்போல் பேசுகிறாய். அறிக, துயரின்மையே மெய்மை எனப்படும்! இறந்தவர்க்கோ இருப்பவர்க்கோ துயர்கொள்ளார் அறிவர். உனக்கு வகுக்கப்பட்ட இக்களம் உனக்கான வாய்ப்பென்று கொள்க! உனக்கு அளிக்கப்பட்ட ஆற்றலும் அந்த எல்லைக்குட்பட்டதே. அவ்விரண்டும் முரண்கொண்டு முடைந்துகொண்டு மட்டுமே உன் வாழ்க்கையை உருவாக்க முடியும். நீ இன்று இக்கணத்தை மட்டுமே ஆள இயலும். எழும்காலம் உன்னிடமில்லை. அது உன்னை எவ்வண்ணம் வகுக்கும் என நீ அறியவே இயலாது. வரும்புகழுக்காக இக்கணத்தை தவறவிட்டால் நீ தெய்வங்களுக்கு முன் இளிவரலுக்கு உரியவனாய். நீ மானுடன். மானுடனுக்குரிய அனைத்தும் எல்லைக்கு உட்பட்டவை. எல்லைக்குட்பட்ட ஆற்றல்களுடன் எல்லையின்மை முன் எப்படி நிற்பாய்? கடுவெளிமுன் நறுமணம் என கரைந்தழிவாய்.”

“உடலால், உள்ளத்திறனால், பிறப்பால், சூழலால் வகுக்கப்படாது இங்கு வரும் மானுடர் எவருமில்லை. தனக்கு அளிக்கப்பட்ட அனைத்தையும் திரட்டி உச்சமென வெளிப்பட்டு தன் களத்தில் நின்றாடுபவன் நிறைவடைகிறான். அவனுக்கு இங்கே இருப்பது வெற்றியும் தோல்வியும் அல்ல. தன்னிறைவு. தன் செயலை முழுமைசெய்தவன் தெய்வங்களை அறைகூவி

தனக்குரியவற்றை கோரலாம். ஏனென்றால் வெளிப்படுகையிலேயே அவன் வென்றவனாகிறான். அவன் அடைவன அவனுக்கு வெளியே இல்லை. வேழங்களைத் தடுக்கும் பெருங்கிளைகளை கீரிகள் அறிவதேயில்லை. சிறுதவளைகள் சிம்மங்களுக்குமேல் ஏறிவிளையாடுகின்றன. உனக்கு அமைந்த களத்தின் அனைத்து எதிர்விசைகளும் உன் ஆற்றலைக் கோரியே அப்பேருருக் கொண்டன என்று உணர்க! எழுக... தயக்கங்களை களைக!"

"இங்கனைத்திலும் நிறைந்திருக்கும் அழிவற்ற ஒன்றின் அலைகளே இவையென்று உணர்ந்தவன் துயரோ களிப்போ கொள்வதில்லை. எழுவதே அமையும். எரிவதே அணையும். எனவே இருமைகளற்று துலாமுள் என நிலைகொள்பவனுக்கு சோர்வென்பதில்லை. அங்கனே, உணர்வுகளில் உயர்ந்தது அஞ்சாமை. மானுடரில் சிறந்தவன் வீரன். தன் செயல்களில் ஐயமற்று, முழு விசையுடன் வெளிப்படுவதே வீரம் எனப்படுகிறது. இருத்தலில் முழுமைகொள்பவன் என்பதனால் வீரனுக்கு சாவுமில்லை. வில்லவர் அனைவரும் அறிந்த ஒன்றுண்டு. அம்பில்தான் அவர்களின் திறன் செல்கிறது. இலக்குகளை தெய்வங்கள் ஆள்கின்றன. ஆனால் அதை எண்ணி வில் தாழ்த்துவோர் கோழைகள் என்றோ அறிவிலிகள் என்றோ அழைக்கப்படுவர். இயற்றும் பொறுப்பே மானுடருக்கு, எய்துவது முடிவிலியை ஆளும் வல்லமையின் ஆணையால்."

"ஆகவே, போர்புரிக! விழைவினால் அல்ல, வெறுப்பினால் அல்ல, செயலாற்றும் பொருட்டு இங்கு வந்திருக்கிறாய் என்பதனால் செயலாற்றுக!" என்றார் சல்யர். "அங்கனே, மானுடர் அடைந்த எதையும் இழப்பதில்லை. அறியாமையை, ஐயத்தை, சினத்தை, துயரைக்கூட அவர்கள் உடைமையென்றே

கொள்கிறார்கள். கைவிட மறுக்கிறார்கள். இழக்க அஞ்சுகிறார்கள். நீ அடைந்த துயரை உடைமையென இடையில் சுமந்திருக்கிறாய். இழிவுகளை தொட்டுத்தொட்டு பெருக்கிக் கொள்கிறாய்.. கைவிடப்படாத எதுவும் சுமையே. இழக்கப்படாத எதுவும் தளையே. நிகர்கொண்ட வேலே இலக்கடைகிறது. உணர்வுகளால், ஐயத்தால், மிகைவிழைவால் நிலையழியாது இயற்றும் செயல் வெல்கிறது. செயலை அறுதியாக தளரச்செய்வது தேவையற்ற இரக்கம். தோள்விசையை முழுதும் பெற்ற அம்புகளே நெடுந்தொலைவை கடக்கின்றன.”

“எழுக! உன் தோள்களில் வெல்லும்விழைவு நிறைக! உன் ஆற்றல் முழுமையும் களத்தில் நிகழ்க! வெற்றியால் இவ்வுலகனைத்தையும் அடைவாய். சிறுமைகளை அத்திருவால் நிரப்புவாய். வீழ்ந்தால் அச்சிறுமைகளை பெரும்புகழ் எழுந்து அழிக்கும். ஆகவே, போர்புரிக!” என்று சல்யர் சொன்னார். விண்ணின் கிழக்குச்சரிவில் மீண்டும் ஓர் இடிமுழக்கம் எழுந்து எதிரொலித்தொடராக மேற்குவான்சரிவுவரை சென்று அமைந்தது.

கர்ணன் சல்யரின் சொற்களை செவிகொண்டான். நெஞ்சில் கைவைத்து தலைவணங்கியபடி அவன் கேட்டான். “மத்ரரே, எல்லா வகையிலும் என் தந்தைக்கு நிகரானவர் நீங்கள். உங்கள் சொற்களைக் கடக்க விழைபவன் அல்ல நான். ஆயினும் ஒன்றை கேட்கிறேன். ஒருவன் தன் வாழ்நாளெல்லாம் கொண்டிருக்கும் அனைத்தையும் தன் வினைமையத்தில் துறந்தாகவேண்டுமா? அளிகொண்டவன் அளியை. கொடைபழகியவன் கொடையை. அறம்நிற்பவன்

அறத்தை? அவ்வண்ணம் உச்சத்தில் கைவிடவேண்டியவை அவை என்றால் ஏன் மானுடனுக்கு அவை ஆணையிடப்பட்டுள்ளன? ஏன் அவற்றை மானுடன் வாழ்நாளெல்லாம் பயிலவேண்டும்?"

சல்யரின் முகம் கனிந்தது. "நான் இங்கு சொல்வன அனைத்தும் என் வாழ்நாளில் அறிந்தவை. தந்தையர் மைந்தரிடம் நூலில் கற்றவற்றை, பிறர் சொல்லி அறிந்தவற்றை சொல்வதில்லை. பட்டு உணர்ந்தவையே அவர்களிடம் சொற்களாகின்றன. இவை தந்தைசொல் என உளம்கொள்! நான் இவற்றை என்னுள் இருந்தே அறிந்திருக்கிறேன். நான் கொண்ட நடிப்புகள், நான் பூண்ட மாற்றுருக்கள், நான் வெளிப்பட்ட தருணங்கள் வழியாக நான் உணர்ந்தமைந்த மெய்மைகள் இவை. இவற்றை குருதிகொடுத்து அறிந்திருக்கிறேன். கண்ணீருடன் எனக்குள் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அவ்வண்ணம் சொல்ல சில இல்லாத தந்தையர் இல்லை."

"மைந்தா, மானுடரிடம் அவ்வாறு மாறாத தன்னிலை என ஒன்றில்லை. இங்கிருப்பது ஒரு மாபெரும் உரையாடல். உரையாடலில் நாம் பிறரை புரிந்துகொள்ள முயல்கிறோம். ஆகவே அறிந்த சிலவற்றைக்கொண்டு அவர்களை வகுக்கிறோம். அவ்வாறு வகுக்கப்பட்ட அவர்களுக்கு எதிர்வினையாக நம்மை வகுத்துக்கொள்கிறோம். அவர்களும் நம்மை வகுக்கிறார்கள், விளைவாக தங்களை வகுக்கிறார்கள். இருபுறமும் நின்று நம்மை நாமே சமைத்துக்கொள்கிறோம். எந்த உரையாடலையும் கூர்ந்து நோக்கு, அது நீளும்தோறும் ஒவ்வொருவரும் முற்றாக வரையறை செய்யப்பட்டிருப்பதையே காண்பாய். இங்கே நாம் என நாம்

எண்ணிக்கொள்ளும் அனைத்தும் நம் மீது நம்மாலும் சூழலாலும் ஏற்றப்பட்டவையே. என்னை நோக்குக! ஆணவமும் மிடுக்கும் கொண்ட மலைமகன் என என்னை வரையறை செய்துகொண்டேன். பின்னர் அரசுக்கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதை தலைமைதாங்கும் அரசியல்திறனாளனாக. பேரரசு ஒன்றை உருவாக்கும் தொடக்கவிசையாக. பின்னர் மெல்லமெல்ல குடிப்பெருமிதமும், குடிகளைப்பற்றிய பொறுமையின்மையும், குடிகளின் எதிர்காலம்பற்றிய பதற்றமும் கொண்ட பெருந்தந்தையாக."

"இவற்றின் நடுவே நான் யார்? ஓர் உரு இன்னொன்றாக ஆகும்போது முந்தையது எங்கே செல்கிறது? எவராலும் சொல்ல இயலாது? நீர்நிழலை நதி எனக் கொள்ளலாமா? நீரோட்டத்தையே நதி எனக் கொள்ளலாமா? இல்லை இரு கரைகளை கொள்ளக்கூடுமா? நதி என்பதுதான் என்ன?" என்று சல்யர் சொன்னார். "நாம் கொண்டுள்ள அத்தனை அடையாளங்களும் விடைகள் என்று உணர்க! நம்மிடம் பிறர் கேட்பதற்கான விடைகள். நாமே நம்மிடம் கேட்டுக்கொள்வதற்குரிய விடைகள். அவ்வினாக்களே விடைகளை வடிவமைக்கின்றன. வினாக்கள் திட்டவட்டமான புலங்களிலிருந்து உருவாகின்றன. அறுதியான வடிவம் கொண்டிருக்கின்றன. விடைக்கான வாய்ப்புகள் என்னும் வடிவில் விடையையே உள்ளடக்கியிருக்கின்றன. அவ்வினாக்களை உருவாக்கும் புலங்களால் நாம் வடிவமைக்கப்பட்டிருக்கிறோம் எனில் அந்த வரையறை அறுதியானதா என்ன? அந்தப் புலங்களுக்கு அப்பால் அவற்றுக்கு என்ன மதிப்பு இருக்கமுடியும்?"

“எண்ணுக, நீ கொடையாளி! நீ சொல்பிறழாதவன். நீ அளிகொண்டவன். நீ அறம்தவறாத வீரன்... ஆம், இவையனைத்தும் நீயே. ஆனால் இவை நீ எவருக்கு அளிக்கும் விடைகள்? எந்தப் புலங்களில் நின்று உன்னை நீ வகுத்துக்கொண்டவை இவை? எந்தத் துலாவின் மறுதட்டில் இதை நிகரெடை என வைத்தாய்?” என்று சல்யர் கேட்டார். “தயங்காமல் உன்னை கிழித்துச்சென்று இதை உணர்க! இந்த உருவங்களை எவர்பொருட்டு சூடிக்கொள்கிறாய்? அனைத்து உருவங்களும் மானுடன் மூடிக்கொள்ளும் திரைகள்தான். இந்த உடலும் முகமும்கூட. நாம் பதுங்கி மறைந்திருக்கும் திரைகளை நாம் அஞ்சுகிறோம். ஏனென்றால் அவற்றை நம்மால் எளிதில் விலக்கிவிட முடியாது. திரையிட்டுக்கொண்டமைக்கு நாணுகிறோம், ஏனென்றால் அது சிறுமை என நாம் அகத்தால் அறிந்திருக்கிறோம்.”

“திரையிட்டுக்கொண்டவன் தெய்வங்களை ஏமாற்றுபவன். திரையணிந்தவனுக்கு ஊழ்கமில்லை. ஊழ்கம் முதிர்கையில் யோகம். யோகமில்லாமல் மெய்யறிதல் இல்லை. மெய்யறிவே விடுதலை. கர்ணா, யோகமென்பது அகத்தமைவதும் புறத்தமைவதும் ஒன்றென ஆதல். இருமுனை இசைவையே யோகம் என்றனர் நூலோர். யோகமில்லாதவனுக்குள் இருந்து அவன் ஆழம் தவிக்கிறது. ஆழ்கிணற்றில் நீர் நலுங்கிக்கொண்டிருக்கிறது. அது வான் தேடுகிறது. அந்த அமைதியின்மையால் நாம் திரைகளை அணிகளென்று ஆக்கிக்கொள்கிறோம். உடலுக்கு அணிபூட்டுகிறோம். உடலையே அணியென்று ஆக்கிக்கொள்கிறோம். உடல்சூடும் அனைத்தையும் அணியென்றே உணர்கிறோம். அனைத்து அடையாளங்களும் நம் அணிகளென்று

உருமாறிக்கொள்கின்றன. ஆணவமும் அணியே. கர்ணா, அனைத்து அணிகளும் ஆணவத்தின் அழகுத்தோற்றங்களே.”

“அடையாளங்கள் பாதுகாக்கின்றன. அடையாளங்கள் வாயில்களை திறக்கின்றன, அவையில் அமரச்செய்கின்றன, முறைமைச் சொற்களாகின்றன. குடியில், குலத்தில், நாட்டில் நம்மை நிறுத்துகின்றன. அடையாளம் துறந்து உலகியலில் வாழ எவராலும் இயலாது. அடையாளம் துறப்பதே துறவு. இவ்வுலகு அளித்த அடையாளங்களைத் துறப்பதன் உருவகமே ஆடைதுறத்தல். தன்னிலெழுந்த அடையாளங்களைத் துறப்பதன் உருவகமே மயிர்துறத்தல். அனைத்து அடையாளங்களையும் துறப்பவன் தெய்வங்களுக்குமுன் நிற்கிறான். தெய்வம் என்பது அடையாளமாகி வந்த அடையாளமின்மை என்றனர் நூலோர். இங்குள்ள ஒவ்வொருவரும் அறியப்படும் அடையாளங்களே. அரசன் என்பவன் அடையாளங்களின் மையமாக அமைந்த அடையாளம்.”

“ஆனால் அடையாளங்களை நாம் சுமக்கலாகாது, கர்ணா. கவசங்களால் நடக்கமுடியாமலாவது போன்றது அது. அணிகள் மின்னலாம், விழிகளுக்கு அவை மாற்று என ஆகாது. அடையாளங்களை அணிகளாக்கிக் கொள்பவன் ஆணவம் கொள்கிறான். அது அவனை அழிக்கும். ஆணவம் காயில் இனித்து கனியில் கசப்பது. நீ கொண்டுள்ள இவ்வடையாளங்கள் அல்ல நீ. இவையனைத்தும் உன்னை தளையிடுகின்றன என்று உணர்க! நீ வாழ்நாளெல்லாம் இயற்றியது என்பதனால் ஒன்று உன் வாழ்க்கையென்றாவதில்லை. நீ சுமந்தவை என்பதனால் தளைகள் உன் உடைமைகளும் அல்ல” என்றார் சல்யர்.

“இத்தருணம் ஓர் அறைகூவல். ஒரு வினா. இதற்கு இங்கே நீ அளிக்கும் விடை என்ன என்பதே உன்னை வடிவமைக்கட்டும். வாழ்வின் வினைமையங்கள் அனைத்தும் ஒற்றைவினாக்களே. அதற்கான விடையாக தன்னை அக்கணம் உருக்கி உருமாற்றிக்கொண்டு எழுபவனே வெல்கிறான்.”

“நம்மை எப்போதும் சிறப்பாக ஏமாற்றுபவர்கள் நாமே. ஒவ்வொரு உருவும் எங்கோ உள்ள ஒரு தெய்வத்தின் உருவம்தான் என்கின்றன நூல்கள். கடுவெளியில் கருத்துருவாக உள்ள அவை எங்கோ எவரோ கொண்ட கனவில் உருவம்கொள்கின்றன. பின்னர் இங்கு இப்புவியில் தங்களை நிகழ்த்த அவ்வுருவையே கருவியெனக் கொள்கின்றன. நாம் அணிந்த மாற்றுருக்களுக்குரிய தெய்வங்கள் நம்முடன் எப்போதும் உள்ளன. அவ்வுருவே நாம் என நம்மிடம் சொல்கின்றன. ஒவ்வொரு உருவுக்கும் அவற்றுக்குரிய இயல்புகள் உண்டு. அவ்வியல்புகளை அவை நமக்கு அளிக்கின்றன. அவற்றையே நாம் என நாம் மயங்கும்படி செய்கின்றன. தெய்வங்களிடமிருந்து மானுடர் எளிதில் விடுபட இயலாது.”

“அங்கனே, இதை நீயே அறிந்திருப்பாய். அறியாதோர் எவருளர் இங்கு? தீமையில் ஊறிய ஆணவம் எளிமையானது. அது தீயது என அறியும் வாய்ப்பை நமக்கு அளிக்கிறது. நன்மையில் விளையும் ஆணவம் மேலும் கொடியது. அது நாம் வெளியேறும் வாய்ப்புகள் அனைத்தையும் மூடிவிடுகிறது. அன்னை என்னும் ஆணவம் தன் உடலே மைந்தர் என எண்ணச் செய்கிறது. தந்தை எனும் ஆணவம் மைந்தர் வடிவில் தான் வாழவிருப்பதாக நம்பவைக்கிறது. பிதாமகன் என்னும் ஆணவம் குடியை தன் மைந்தர் என

கருதச்செய்கிறது. அறத்தோன் என உணர்பவன் அளியிலாதவன் ஆகிறான். கொடையாளி என உணர்பவன் மடமையை தன் பெருமை எனக் கொள்கிறான். அவை ஒவ்வொன்றின்பொருட்டும் மானுடர் உயிர்துறக்கிறார்கள். மைந்தா, மெய்மையறியாமல் மயங்கி துறக்கப்படும் உயிர் வீணானதே. உடலில் உயிர் குடிகொள்வதே அறிதலென ஆகி மெய்மையில் அமையும்பொருட்டு என்கின்றன நூல்கள். ஆணவத்தின்பொருட்டு அதைத் துறப்பவன் எவ்வகையிலும் தன் இலக்கை எட்டாதவனே."

"அளிகொண்டவனின் கீழ்நிலை ஒன்றுண்டு, தகுதியற்றவனிடம் இரக்கம் காட்டுவது. கொடையாளியின் சிறுமை ஒன்றுண்டு, கோரப்படாதபோது அளிப்பது. பசிக்காதபோது உண்ணப்படும் உணவும் நோயிலாதபொழுது உண்ணப்படும் மருந்தும் உசாவப்படாதபோது சொல்லப்படும் உண்மையும்போல அது நஞ்சென்று ஆகும். அளிப்பவனுக்கும் பெறுபவனுக்கும் அழிவை கொண்டுவரும்" என்று சல்யர் சொன்னார். "நீ அளித்த சொற்கள் உனது ஆணவத்தின் வெளிப்பாடு. நீ கொடுத்தவை உனது வீண்தருக்கையே காட்டுவன. அதை இப்போதேனும் உணர்ந்தால் நீ விடுபடுவாய். இத்தருணத்தை இன்று புதிதெனப் பிறந்தாய் என எண்ணி எதிர்கொள்க! உலைக்குள் நுழையும் இரும்பிலிருந்து அழுக்கும் துருவும் அகல்கின்றன. அனல்கொள்கையில் அதுவும் அனலாகின்றது."

"அங்கனே, இக்களம் உன்னை எவ்வண்ணம் வடிவமைக்கிறது? உணர்க, இங்கு நீ வில்கொண்டு எழுந்த வீரன்! பரசுராமரின் அம்புகளை தோளிலேற்றியவன். வென்று முன்செல்லவேண்டியவன். இத்தருணத்தை மறைக்கும்படி உன்னில் எழும் நேற்றைய உன் வடிவங்கள் அனைத்தும்

தடைகளே. நேற்று அளித்த சொற்கள், நேற்று கொண்ட உணர்வுகள் அனைத்தும் உன்னை இதிலிருந்து பின்னிழுக்கின்றன. எளிய மானுடருக்கு பெருவெற்றிகள் இல்லை என அறிக! எளிய மானுடரை ஆளும் உணர்வுகளிலிருந்து எழுந்தவர்களே பேருருவர்கள்" என்றார் சல்யர். "நோக்குக, மறுபுறம் எழுந்து வருபவனை! நாளை அவனை அருஞ்செயல்புரிந்தவன் என காவியங்கள் பாடும். அவன் தன் ஆசிரியரை கொன்றான். தன் பிதாமகரை கொன்றான். அவன் வில் தழையவில்லை. அம்புகள் இலக்கு பிறழவுமில்லை. ஏனென்றால் அவனுக்கு அவனுடைய தேர்ப்பாகனால் வெற்றிக்கான சொல் உரைக்கப்பட்டிருக்கிறது."

"ஆகவே, போர்புரிக! பேரறத்தை எவரும் ஐயமின்றி உணரவியலாது. பேரறத்தில் எப்பகுதியில் பொருத்திக்கொள்வதென்று உணர்தல் அதனினும் அரிது. அறம் உசாவுபவன் செயலாற்றுவதில்லை. செயலாற்றாதவனின் உள்ளம் இருளும் தூசும் தேங்கி நாற்றம் கொள்கிறது. மானுடர் அறியக்கூடுவது தன்னறம் ஒன்றையே. தன்னறத்தில் எவருக்கும் ஐயமிருப்பதில்லை. செயலாற்றுக! செயலாற்றுவதற்குரிய ஒரே வழி அதுவே. தன்னறம் நின்று செய்யும் போரைவிட உயர்ந்த நன்மை அரசர்க்கில்லை. தானே வந்தெய்துவது, திறந்து கிடக்கும் பொன்னுலக வாயில் போன்றது இத்தருணம். இதில் முதன்மைகொண்டு எழுக!" என்று சல்யர் சொன்னார்.

கர்ணன் அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் பெருமூச்சுடன் "நீங்கள் சொல்லும் இச்சொற்களை என்னுள் அமர்ந்து எவரோ சொல்வதுபோல், நான் என்றென்றும் அறிந்திருப்பதுபோல் உணர்கிறேன். இச்சொற்களை இங்ஙனம்

பரிந்து எனக்கு இப்புவியில் பிற எவரும் சொல்லப்போவதில்லை என்றும் அறிவேன். ஆயினும் நான் நிலைகொள்ளவில்லை. என் வில்லுக்கே அனைத்தையும் விட்டுவிடுகிறேன். அது களத்தில் முடிவெடுக்கட்டும்" என்றான். சல்யர் "மீண்டும் என் சொற்களை எண்ணுக! அவை உன்னுள்ளத்தில் நிலைகொள்ளட்டும்" என்றார்.

மறுபக்கம் அர்ஜுனனின் தேர் நடுவே இருந்த கௌரவப் படையின் சுவரை உடைத்துக்கொண்டு தோன்றியது. வெடித்து புகைமரங்கள் என எழுந்து முகிலென மாறி விண்ணில் பரவிய எரியம்புகளின் நடுவே அவன் தேர்மகுடம் மின்னி மின்னி அணைந்தது. செம்புகைத்திரை காற்றில் அள்ளப்பட்டு அகல வெளித்த இடையில் அவனுடைய தேர் உச்சிவானின் ஒளியில் சுடர்ந்தபடி உதிர்ந்து பரவிய பிணங்களின்மேல் ஊர்ந்து உலைந்தாடியபடி வந்தது. அதன் ஏழு புரவிகளும் குஞ்சிமயிர் அனலென பறக்க, கவசங்களில் பாவைச்செவ்வெரி அலைபாய, புகைக்கு மூக்குவிரித்து கனைப்பில் பல்தெரிய வாய்திறந்து விழிகள் வெறித்து உருண்டிருக்க குளம்புகளால் மிதித்து உந்தி ஏறி அமைந்து அணுகின.

அத்தேரின் அமரத்தில் ஒரு கையால் கடிவாளக் கற்றைகளைப் பற்றியபடி அமர்ந்திருந்த இளைய யாதவர் மறுகையைச் சுட்டி அர்ஜுனனிடம் சொல்லாடிக்கொண்டிருந்தார். அவருடைய சொற்களை செவிகொண்டபடி காண்டீபத்துடன் நின்றிருந்த அர்ஜுனனின் விழிகள் கனவிலென மயங்கியிருந்தன. இளைய யாதவரின் தலையில் சூடப்பட்டிருந்த பீலி காற்றில் நலுங்கியது. நோக்கா விழி என நீலம் கொண்டிருந்தது.

இருட்கனி - 51

கர்ணனும் அர்ஜுனனும் ஒருவரையொருவர் மீண்டும் அம்புமுனைகளால் சந்தித்துக்கொண்டனர். கால மடிப்புகளில் மீளமீள அவ்வாறு சந்தித்துக்கொண்டே இருப்பதைப்போல இருவரும் உணர்ந்தனர். நூற்றுக்கணக்கான சந்திப்புகளில் ஒவ்வொரு முறையும் உணர்ந்ததுபோல் அது அங்கு தொடங்கவில்லை, எவ்வண்ணமும் அங்கு முடியப்போவதுமில்லை என்ற உணர்வை அவர்கள் அடைந்தனர். எஞ்சியிருப்பது அத்தருணம் மட்டுமே. அதில் வெல்வது எவர் எனும் வினா. வென்ற பின் தொடர்வதென்ன என்பதை அவர்கள் அறியவியலாது. வெல்வது எதன் தொடர்ச்சி என்பதையும் அறியவியலாது. இருபுறமும் அறியமுடியாமைகளின் பெருவெளி அவர்களை இரு கைகளென அள்ளி அழுத்தி அருகணையச் செய்தது. இருவரும் பின்பக்கம் உணர்ந்த பெருவிசையை மறுகணமே முன்பக்கம் ஈர்ப்பென அறிந்தனர். அத்தனை நாளும் தாங்கள் ஒருவரை ஒருவர் கவர்ந்திழுப்பதாக எண்ணி மயங்கியது அவ்விசையையே எனத் தெளிந்தனர்.

அம்பு தொடுத்து ஒருவரையொருவர் எதிர்கொண்டதுமே அக்கணம் முடிவிலா கணங்களின் ஒழுக்கின் ஒரு துளி என ஆயிற்று. ஒவ்வொரு கணத்திலும் எவர் வெல்கிறார் என்பதே வினா. ஒவ்வொரு அம்பிலும் எந்த அம்பு முந்துகிறது என்பது. முந்தும் ஒரு அம்பு விண் நிறைந்திருக்கும் புடவிகள் அனைத்தையும் ஆளும் பெருநெறி ஒன்றின் துளி. அவ்வண்ணமே ஆகுக என்று பணிக்கப்பட்டவர்கள் அவர்கள். அவ்வண்ணமே தன்னை நிகழ்த்திவிட்டு இன்மை நோக்கி செல்பவர்கள். நிகழ்கின்றனவா கனவிலெங்கோ அலைகொள்கின்றனவா என்றறியாத களம். கொன்று கொன்று

குவித்தனர் மானுடர். ஒன்றுள் ஒன்று புகுந்தன படைகள். மானுடர் ஒருவரை ஒருவர் எவ்வெல்லை வரை கொன்றழிக்க முடியும்? இரு பாம்புகள் ஒன்றை ஒன்று விழுங்கி இரண்டுமில்லாமல் ஆகிவிடக்கூடுமா என்ன?

ஒவ்வொரு அம்பும் தன் எதிர்அம்பை முன்னரே அறிந்திருந்தது. முன்பு நிகழ்ந்த பல்லாயிரம் களங்களில் அவை சந்தித்துக்கொண்டிருந்தன. உலோக முனைகள் முட்டி ஒலித்த மணியோசை முந்தைய கணங்களுடன் இணைந்து ஒரு ரீங்காரமென மாறி, ஊழி முதல் ஊழி வரை காலமிலி என்றே ஆகி, ஒலிக்குமொரு ஒலிக்கோடு. பல்லாயிரம் ஒலிக்கோடுகள். அவை ஒன்றையொன்று அறிவதே இல்லை. ஒருகணத்திலிருந்து மறுகணம் வரை விரிந்திருக்கும் யுகங்களில் அவை சென்றுகொண்டே இருந்தன. ஒவ்வொரு இடிமின்னலும், ஒவ்வொரு எரிகுமிழியும், ஒவ்வொரு புழுதிமலர்வும், ஒவ்வொரு மண்ணதிர்வும், ஒவ்வொரு குருதிநிணப்பொழிவும் அவ்வண்ணமே முன்னரே நிகழ்ந்திருந்தது. மீண்டும் நிகழவிருந்தது.

அக்களத்தில் ஒருவரையொருவர் விழிகளால் தொடுத்துக்கொண்டு பிறர் உளரென்றே அறியாமல் அவர்களிருவரும் போரிட்டனர். அர்ஜுனனுக்குப் பின்னால் சுருதகீர்த்தியும் சுருதசேனனும் புறத்துணை அளித்தனர். அர்ஜுனனின் வண்ணநிழல்கள் என நின்று போரிட்டு அவர்கள் கர்ணனுக்குப் பின்னால் அரைவட்ட வடிவில் துணைப்புறம் சேர்த்த கர்ணனின் மைந்தர்களை தாக்கினர். விருஷசேனனின் அம்புகளால் சுருதகீர்த்தி முற்றாகவே தடுக்கப்பட்டான். திவிபதன் சுருதசேனனை தடுத்தான். எஞ்சிய கர்ணனின் மைந்தர்கள் இரு சரடுகளென முன் நீண்டு வந்து

அர்ஜுனனைத் தொடர்ந்து எழுந்து வந்த பாஞ்சாலத்து வில்லவர் படையை எதிர்கொண்டனர்.

தேர்முகப்பில் அமர்ந்திருந்த இளைய யாதவர் அரைவிழி மூடி, இசைமயக்கில் அமர்ந்து யாழ் மீட்டுபவர் போலிருந்தார். ஒற்றைக்கையில் அவர் பற்றியிருந்த ஏழு கடிவாளச்சரடுகளும் ஏழு ஸ்வரங்களைச் சூடிய யாழ்நரம்புகள். அவற்றை அவர் சுண்டவில்லை. இழுக்கவும் இல்லை. இயல்பாக பற்றி மடியில் வைத்திருப்பது போலிருந்தார். ஆனால் அவற்றில் ஓடிய விரல்களின் வழியாக ஒவ்வொரு புரவியும் அவர் ஆணையை அறிந்தது. ஒவ்வொன்றும் தனித்தனியாக தங்கள் ஆணையை இயற்ற அவ்வசைவுகள் ஒன்றெனக் கூடி தேரை செலுத்தின. அத்தேர் மலர்களில் அமர்ந்து இலைச்செறிவில் ஊடாடி அலையும் வண்டுபோல் பறந்தது. சரிந்து சுழன்று எழுந்து வளைந்து முன்னெழுந்து பின்னமைந்தது.

இளைய யாதவரின் வலக்கையில் அமைந்த சவுக்கு காற்றில் வெறுமனே நெளிந்தது. அதன் நுனியிலிருந்த தோற்சரடு காற்றில் வளைந்து வளைந்து உருவாக்கிய வடிவங்கள் பின்நிற்கும் படையினருக்கான ஆணைகள் என்பதை சல்யர் உணர்ந்தார். அர்ஜுனனின் தேர் கர்ணனின் அம்புகளிலிருந்து ஒழிந்து எழுந்து அகன்று எதிரம்பை உமிழ்ந்தது. அது நாகமொன்றின் தலை. பின்புறம் அலைநெளியும் உடலே தொடரும் படை. அத்தேர் ஒரு சிறு ஆடி என்றும் அதிலிருந்து எழும் அம்புகள் ஒளிக்கதிர்கள் என்றும் தோன்றின. அவற்றை நோக்கி செல்லும் அம்புகள் அவ்வண்ணமே திரும்பி வந்தன. அர்ஜுனன் அத்தேரின் உலோகவளைவுகளில் நின்று நெளிந்தாடும் பாவை போலிருந்தான். அவன் முகத்தில்

கணம்தோறும் மாறிக்கொண்டிருந்த உணர்வுகள் அக்களத்தின் எதிரொளிப்பு.

சல்யர் தன் தேர்த்தட்டில் அமர்ந்து கூச்சலிட்டுக்கொண்டிருந்தார். "சூழ்க! அவனை சூழ்ந்துகொள்க! இத்தருணம் இனி அமையப் போவதில்லை. இக்களத்தில் இதுவே உங்கள் இறுதிச் சந்திப்பு என்று அமையட்டும். அங்கனே, அவன் இடப்புறத்தை அடி. இதுவரை நோக்கியதில் அவன் இடப்புறமே காப்பு தளர்ந்தது எனத் தெரிகிறது. ஆகவேதான் அத்தேர் எப்பொழுதும் இடப்புறம் காட்டாது வலம் சுழிக்கிறது. இடப்புறத்தில் அடி. இடப்புறத்தில் அவன் தேரை உடை!" தேர்வலர்களின் எல்லைகளைக் கடந்து அவரே அப்போரை நிகழ்த்துபவர் என அவர் கொந்தளித்தார். "எளிய அம்புகள் இனி உதவாது. எல்லா எல்லைகளும் கடக்கப்பட்டுவிட்டன. ஐம்பருக்களின் மதம் கொண்ட அம்புகளை எடு... இதோ!" என்று கூவினார்.

கர்ணன் "ஆம், இதோ!" என்று கூறி ருத்ராஸ்திரத்தால் அர்ஜுனனின் தேரை தாக்கினான். அதிலிருந்து சுழற்காற்று எழுந்து அப்பகுதியை மூடியது. பல்லாயிரம் கைகள் என அது அனைத்தையும் பிடித்து உலுக்கியது. மலையிறங்கும் பெருநதியிலெழுந்த சுழி என அள்ளித் தூக்கி சுழற்றியது. காவல்மாடங்களில் நின்றிருந்தவர்கள் அங்கே ஒரு ஆழி சுழன்று செல்வதை கண்டனர். தரையிலிருந்து புழுதியும் குருதிச்சிதர்களும் எழுந்து பக்கவாட்டில் வீசிஅறையும் மழைச்சாரல் என அவர்கள் மேல் பாய்ந்தன. அந்த ஆழியின் விளிம்பிலமைந்தவை தூக்கி அப்பால் வீசப்பட்டன. அதன் நடுவிலமைந்தவை மேலே தூக்கப்பட்டு மையக்குழியில்

விழுந்து குவிந்தன. யானைகள் அடிபதற, புரவிகள் தெறித்துவிழ, தேர்கள் உலைந்து சரிய அச்சுழல்காற்று கடந்து சென்றது.

அதன் பின்னரே அதன் வெம்மையை ஒவ்வொருவரும் உணர்ந்தனர். புரவிகளின் குஞ்சிமயிர்கள் பொசுங்கின. கொடிகள் பற்றிக்கொண்டன. அன்றைய போர் அனலாடல் என அறிந்திருந்தமையால் ஒவ்வொருவரும் தோலாடைகளையே அணிந்து வந்திருந்தனர். துணியாடை அணிந்தவர்கள் அவை பற்றிக்கொள்ள நிலத்தில் படுத்து வெந்த ஊனில், உருகிய நிணத்தில், கொதிக்கும் சோரியில் புரண்டு ஆடையற்ற செவ்வுடலுடன் மண்ணின் கருவறைக்குள் இருந்து வருபவர்கள் என எழுந்தனர். ஆடையின்மையைக் கண்டு நாண அவர்களுக்கு பொழுதில்லை. விண்ணிலிருந்து பொழிந்தவற்றால் அவர்கள் மீண்டும் மண்ணுடன் சேர்த்து அறையப்பட்டனர். எரிகாற்று பல்லாயிரம் நரிகளின் கூட்டமென ஊளையிட்டபடி சூழ்ந்தது. உலோகப்பரப்புகள் ஒவ்வொன்றும் அனல்கொண்டன. அவற்றின்மேல் விழுந்த குருதித்துளிகள் தேனீக்கள் என ரீங்கரித்தபடி உலர்ந்து கருகின. ஊன்துண்டுகள் வெந்து உருகி சறுக்கி விழுந்தன.

“ருத்ரனின் மூன்றாம் விழி!” என்று வீரர்கள் கூவினர். அர்ஜுனன் மகேஸ்வராஸ்திரத்தால் அதை எதிர்த்தான். அனலுக்கு அனலே காப்பு என அனலெழுந்து அனலை தடுத்தது. கர்ணன் தொடுத்த மாருதாஸ்திரங்கள் சிறு சிறு புயல்காற்றுகளென குருக்ஷேத்ரக்களத்தில் வெடித்து, குமிழ்த்து எழுந்தும் அலைத்துப் பரவியும் வெளியை அதிரச்செய்தன. புரவிகளின் செவிப்பறைகள் அதிர அவை கனைத்தபடி நிலையழிந்து சுற்றின. தேர்கள் அவ்விசையில் குடைசாய்ந்தன.

அவற்றை வந்தறைந்த மாருதவாளிகள் அவற்றை தரையிலிருந்து தூக்கி குப்புற கவிழச்செய்தன. குளம்புகள் காற்றில் உதைபட புரவிகள் முதுகு நிலத்திலறைய விழுந்தன. அவற்றின் அடிவயிறுகள் வெளிறித் தெரிய மேலிருந்து விழுந்த சிம்புகளும் உலோகத் துகள்களும் அவற்றை தாக்கின. அடுத்த அம்பில் அவை வெட்டுண்டு தனித்தனிப் புரவிகளாக விண்ணில் தெறித்து சுழன்று தலை ஒடிந்து மடிய நிலமறைந்து விழுந்தன. உடல் திறந்து குருதிக் கலங்களென சிதறின.

தேர்களை ஓட்டிய வீரர்கள் புரவிகளின் உடலுடன் இணைந்து சிதறிப்பரவினர். கன்மதமும் மண்மதமும் நீர்மதமும் காற்றுமதமும் சூடிய அம்புகள் வெடித்தன. கன்மதம் வெடித்து அனலென்றாகி அணைந்த பின்னர் கந்தகப் புகை மண்டியிருந்தது களத்தில். மண்மதம் அழுகும் ஊன் என கெடுமணம் கொண்டிருந்தது. நீர்மதம் தேங்கலின் தைலவாடையை. காற்றுமதம் குமட்டவைக்கும் ஆவியுடனிருந்தது. பருப்பொருள் ஒவ்வொன்றிலும் உறையும் வஞ்சத்தை வாற்றி எடுத்து ஊற்றிச்செய்த அம்புகள் அங்கே அப்பருப்பொருட்களாகி நின்று உறுமி ஆர்ப்பரித்தன. ஒவ்வொன்றும் பிறவற்றின்மேல் சீற்றம்கொண்டிருந்தது. நீர் அறைந்தது கல்லை. மண் மேல் மோதியது கல். நீருடன் முரண்கொண்டது காற்று. தோழரே, மானுடர் தங்கள் போருக்கென இயற்கைப் பெருவல்லமைகளை துணைக்கழைக்கிறார்கள். குனிந்து ஒரு கல்லை எடுக்கும் காட்டாளனில் தொடங்கியது அது. நதியோரங்களில் படிந்த செம்பும் மண்ணாழத்தில் புதைந்த இரும்பும் அவர்களின் வஞ்சத்தால் தங்கள் காலத்துயில் கலைந்து எழுந்தன. உருகி படைக்கலங்களாயின. குருதிகுடித்து கூர்கொண்டன.

படைக்கலநிலைகளில் தெய்வங்கள் என அமர்ந்து பலி கோரின. வஞ்சம் வஞ்சம் என தவமிருந்தன. களம் களம் என காத்திருந்தன. எழுந்து வெறியாடுகையில் மானுடனை தங்கள் படைக்கலங்கள் என ஏந்திக்கொண்டன.

மானுடன் மேலும் மேலும் என வஞ்சமும் சீற்றமும் கொள்ள இன்னும் இன்னும் என எழுந்து வருகின்றன பருப்பொருட்களின் மதங்கள். கல்லில் எழுந்தது கன்மதம். பின் ஒவ்வொன்றிலும் எழுந்தன மதங்கள். உண்ணும் அன்னம் மதம்கொண்டு நஞ்சாகிறது. இனி மலரிலிருந்து எழும் போலும் கொல்லும் பெருவஞ்சம். வஞ்சம் கொண்ட பருப்பொருள் தன் வடிவத்தால் மறைக்கப்பட்ட நஞ்சை வெளியே எடுக்கிறது. சுருளவிழ்ந்து நாகம் நச்சுநா நீட்டுவதுபோல. கல்லின் கண் மின்னுவதை நான் கண்டதுண்டு. நிலம் முனகி எழுவதை, நீர் சீறி படமெடுப்பதை, காற்று இடியோசை கொள்வதை நான் கண்டதுண்டு. வஞ்சம் பருப்பொருட்களின் எல்லைகளை அழிக்கிறது. பருப்பொருட்கள் என்பவை பிரம்மத்தின் ஆணையால் எழும் ஏழாயிரம் தளைகளைப் பூண்டு நிலைகொண்ட ஆற்றல்கள். அவை வெறிகொண்டு தங்கள் வடிவத்தை களைகின்றன. தங்கள் உடலை அழித்து நெருப்பென்றும் நஞ்சென்றும் எழுகின்றன.

பிரம்மாண்டாஸ்திரம் இங்குள்ள அனைத்துப் பருப்பொருட்களையும் தளையறுத்துவிடுகிறது. பிரம்மாஸ்திரம் அவற்றை ஆளும் அனைத்து நெறிகளையும் சிதறடிக்கிறது. கட்டற்று எழுகின்றன பெருவல்லமைகள். மானுடனை ஆக்கிய ஐம்பருக்களும் கிளர்ந்தெழுந்து பிணைப்பறுத்து உருவழிந்து உடல்கரைத்து அவற்றுடன் கலக்கின்றன. இங்கே பின்னர் எஞ்சுவது அனல்கொந்தளிப்பு. ஒளிக்குழம்பல். ஓசையின்மை.

வெறுமை. இருந்தவை எண்ணங்களில்கூட எஞ்சாத இன்மை. இருந்தவை சென்றொடுங்கும் பிரம்மம். இருந்தவற்றின் இருப்புகளையும் இழுத்து தன்னகத்தே கொண்டு சுருளும் வெறுஞ்சுழி. ஒவ்வொன்றையும் உருவழித்து வெறுமையின் இறுதிச்சுழியைச் சென்றடையும் தவத்தோர் கண்ட கனவுகளிலிருந்து சிதறி எழுந்த படைக்கலங்கள் அவை.

அர்ஜுனன் உளம் தளர்வதை சல்யர் கண்டார். அது அவரை வெறிகொள்ளச் செய்ய "அறை அவனை! இத்தருணத்திலேயே அவனை அறைந்து கொல்!" என்று கூவினார். அர்ஜுனன் தன் தேருடன் பின்னடைந்ததும் அலைசுருண்டு பின்வளைவு கொள்வதுபோல் பாண்டவப் படை மடிந்தது. கர்ணனின் அம்புகள் அந்த இடைவெளியை சென்றறைந்து வெடித்துக்கொண்டிருந்தன. "அவன் ஆற்றல் மிக்க அம்பை எடுப்பான்... அவன் பின்னடைவது அதற்காகவே!" என்று சல்யர் கூவினார். கர்ணன் "அவனிடமிருக்கும் அம்புகள் எவை என பார்க்கிறேன்" என நகைத்தபடி அம்புகளை தொடுத்தான்.

அர்ஜுனனின் கை பின்னால் சென்றது. அவன் விழிகளில் சினம் ஒளிகொண்டது. அவன் பர்வதாஸ்திரத்தை எடுத்தான். அத்தருணத்திலேயே அதை உய்த்துணர்ந்த சல்யர் தன் புரவியின் அனைத்துக் கடிவாளங்களையும் ஓங்கி இழுத்து உரத்த கூச்சலுடன் தேரிலிருந்து தரையில் பாய்ந்தார். கர்ணனின் தேரில் கட்டப்பட்டிருந்த ஏழு மத்ரநாட்டுப் புரவிகளில் வலப்பக்கப் புரவிகள் நான்கும் கால்களை வயிற்றோடு மடித்து நிலத்தில் அமைய இடப்புறப் புரவிகள் மூன்றும் கால்களை நிலத்தில் அறைந்து விசைகொடுத்து

மேலே தாவின. தேர் முழுமையாகவே கவிழ்ந்து உருண்டுகொண்டிருந்த சகடங்களின் விசை தரையிலிருந்த உடல்களை குருதிச் சிதைவுகளென தெறிக்க வைக்க முன்னால் சென்றது. நுகத்தில் கட்டப்பட்டிருந்த புரவிகள் கால்களை உதைத்தபடி காற்றில் நீந்தி பறப்பவைபோல் வளைந்து சென்று நிலத்தில் குளம்புகள் அறைபட தொட்டு உந்தி எழுந்து முன்னால் சென்றன.

கர்ணனின் தேர் நிலத்தில் படிந்து ஓடி எழுந்த அந்தக் கணத்தில் அர்ஜுனன் தொடுத்த மலையம்பு வெடியோசையும் விழிமறைக்கும் மஞ்சள்நிற ஒளியும் கந்தகம் எரியும் மணமும் கொண்டு எழுந்து வந்து கர்ணனின் தேரை மகுடத்தை உரசியபடி அப்பால் சென்றது. அத்தொடுகையில் கர்ணனின் தேர்முகடு கனன்று செங்குழம்புபோல் மாறியது. சரிந்த தேரின் தூணை பற்றிக்கொண்டு ஒடுங்கி நின்ற கர்ணன் அதிலிருந்து பிடிவிட்டு தாவி ஓடி அப்பால் சென்றான். விண்ணில் எழுந்து வளைந்து உறுமியபடி மீண்டும் அணுகியது அர்ஜுனனின் மலையம்பு. சல்யர் அருகிருந்த கவிழ்ந்த தேரொன்றை தன் தேரால் மோதி அதை தன் தேர்மகுடத்தின்மேல் தூக்கியபடி தேரை நிமிரச்செய்தார். கர்ணனின் தேர் மேலெழுந்த தேரை அறைந்து பல நூறு எரிதுண்டுகளாக விண்ணிலிருந்து பொழியவைத்தபடி மீண்டும் கடந்து சென்றது. காற்றில் வளைந்து ஓசை கொப்பளித்து ஒளி சீறியெழ மீண்டும் அணுகியது.

கர்ணன் நிலத்தில் அமர்ந்து அருணாஸ்திரத்தால் அறைந்தான். ஏழு வண்ணக் கதிர்கள் சிதற எழுந்த அந்த அம்பு குறி தவறி விண்ணில் ஊடுருவிப் பாய்ந்து எழுந்து வளைந்து திரும்பி வந்து கௌரவப் படையிலேயே விழுந்து வெடித்து மூன்று

தேர்களை புரவிகளுடன் தெறிக்க வைத்தது. சினம்கொண்ட பருந்தென அறைதலோசை எழுப்பியபடி கர்ணனை மீண்டும் அணுகியது அர்ஜுனனின் பர்வதாஸ்திரம். சல்யர் "விழிகளால் அதை நோக்காதொழிக! அதன் ஒளியே அதன் திரையென்று உணர்க!" என்று கூவினார். கர்ணன் பாய்ந்து நிலம் படிய விழுந்து உருண்டு எழுந்து நிலத்தில் நெளிந்து வளைந்து சுழன்ற தேர்களின் நிழல்களைக் கொண்டு அம்பின் இடத்தை உய்த்தறிந்து சூரியாஸ்திரத்தால் அதை அறைந்தான். எக்கால ஓசையுடன் எழுந்த அவ்வம்பு சென்று அறைந்து பர்வதாஸ்திரத்தை சிதறடித்தது.

இரு அம்புகளும் குருக்ஷேத்ரக்களம் முழுக்க படைவீரர்களின் பற்கள் ஒன்றோடொன்று உரசிக்கொள்ள, செவிப்பறை அடைக்க, முதுகெலும்பு கூசச்செய்து, உடற்திரவங்கள் வயிற்றில் குளிர்ந்து அழுத்த குறுகி அமர்ந்து நடுங்கவைக்கும் அதிர்வை எழுப்பியபடி கீழே வந்தன. விழிகள் வெண்ணிருளால் முற்றாக நிறைய, மூச்சு கரும்புகையால் அடைபட, வெடித்து நீண்ட சீழ்க்கை ஒலிகளென மாறி மெல்ல ஓசை அவிந்தன. விண்ணிலிருந்து குளிர்காற்று மழைபோல குப்புறப் பொழிந்து அங்கிருந்த அனைத்து குருதிச்சகதிப் புழுதியையும் அள்ளிச் சுழற்றி அப்பால் வீசி மீண்டும் ஓசைகளை துலங்கச்செய்தது. செவிகளை கைகளால் பற்றி இறுக்கி தலைகளைக் கவிழ்த்து உடல் வளைத்து நின்றிருந்த வீரர்கள் அனைவரும் கனவிலிருந்தென மீண்டெழுந்தனர். இடம் சூழல் அறிந்து இருப்புணர்ந்து போர்க்கூச்சலுடன் படைக்கலங்களை எடுத்து முன்னால் பாய்ந்தனர்.

சல்யர் தேர் நுகத்திலேறி அமர்ந்து கடிவாளத்தை சுழற்றி இழுத்து புரவிகளை விசையுடன் குளம்பொலிக்க

விரையச்செய்து தேரை நிமிரவைத்தார். பேரலையில் எழும் நாவாய் என தேர் நிமிர்வுகொள்ள கர்ணன் பாய்ந்து தேர்த்தட்டில் ஏறிக்கொண்டான். சல்யர் உரத்த குரலில் "இனி அவனிடம் இருக்கும் அம்புகளென்ன என்று நம்மால் கூற இயலாது. இன்னும் ஆற்றல் கொண்ட அம்புகள் சில இருக்கும் என்பதில் ஐயம் வேண்டியதில்லை. இக்களத்தில் இன்னமும் வீரர்கள் எஞ்சுகின்றனர் என்பதனால் அம்புகளை வைத்திருப்பான். எந்த வீரனும் ஓர் இறுதி அம்பை கருதியிருப்பான். அதை அவன் எடுக்கலாகாது. உன்னிடமிருக்கும் ஆற்றல் மிக்க அம்பு நாகபாணம். எடு அதை! இதுவே தருணம். எடு அதை!" என்றார்.

கர்ணன் அதை கேளாதவனாக த்வஷ்டாஸ்திரத்தை அர்ஜுனனை நோக்கி தொடுத்தான். பிளிறலோசையுடன் சென்று அர்ஜுனனின் தேரருகே நிலத்தில் பதிந்து பெரிய குழி ஒன்றை உருவாக்கி புழுதி எழச்செய்தது. அதை அவன் எடுத்தபோதே உணர்ந்து தேரை திருப்பி அர்ஜுனனை காத்த இளைய யாதவர் தேரின் சகடங்கள் அக்குழியில் சரிய தேர் நிலையழிந்தபோது அர்ஜுனனிடம் ஏதோ கூற அர்ஜுனன் அதற்கிணையான கருடாஸ்திரத்தால் கர்ணனை அறைந்தான். தேரை சிட்டுக்குருவிபோல் தாவும் சுதியில் முன்னெடுத்து அதை ஒழிந்தார் சல்யர். பருந்தென எழுந்து வட்டமிட்டு அது திரும்பி வர கர்ணன் சாரங்காஸ்திரத்தால் அதை விண்ணிலேயே அடித்து வீழ்த்தினான். இரு அம்புகளும் முழங்கியபடி எரிவிண்மீன்கள் என வானில் சரிந்து அகன்றன.

கர்ணன் தொடுத்த அஸ்வாஸ்திரத்தை சிறுத்தையின் பாய்ச்சலுக்கு இணையான வியாஹ்ரகதியில் தேரைச் செலுத்தி இளைய யாதவர் தவிர்த்தார். "எடு நாகபாணத்தை! அது ஒன்றே

இத்தருணத்தில அவனை அழிப்பதென்று அறிக! எடு அதை!" என்று சல்யர் கூவினார். "அதற்கு மட்டுமே அவனைக் கொல்லும் ஆற்றலுண்டு. ஏனெனில் அதற்கு தானே தன் இலக்கு தேரும் திறனுண்டு. தேரை யாதவர் எப்படி திருப்பினாலும் அது அவனை தாக்கும். எடு நாக அம்பை!" கர்ணன் "மத்ரரே, ஒருமுறைக்குமேல் அதை அவன் மேல் தொடுப்பதில்லை என்று நான் சொல் அளித்திருக்கிறேன்" என்றான். "எவருக்கு? எவருக்கு அந்தச் சொல் அளிக்கப்பட்டது?" என்று கூவியபடி திரும்பினார் சல்யர். உடனே உணர்ந்துகொண்டு "அவ்விழிமகளுக்கா? உன் உயிர் கொண்டு சென்றிருக்கிறாள் அவள். அன்னைவிலங்கின் நிகரற்ற இரக்கமின்மையை அறியாதவனா நீ? முதல் குட்டியைத் தின்று எஞ்சும் குட்டிகளுக்கு அமுதூட்டுவது குருதி உண்ணும் விலங்குகளின் வழக்கம். உன்னை தின்கிறாள் அவள். இத்தருணத்தில் நீ கடந்து போகவேண்டியது அவளை மட்டுமே" என்றார்.

"குருதியை கடக்கலாம். முலைப்பாலைக் கடப்பது எளிதல்ல" என்று கர்ணன் சொன்னான். "நன்கு எண்ணுக... இத்தருணத்தில் உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நீ அவனை தவிர்த்தால் உன் மைந்தரை கொண்டுசென்று அவன் அம்புகளுக்கு முன்னால் நிறுத்துகிறாய்... எண்ணிக்கொள், உன் மைந்தர் இக்களத்தில் நிலம்பட்டார்களெனில் அதன் முழுப் பொறுப்பும் உனக்கே. நீ அவளுக்கு அளித்த அச்சொல் உன் குடிக்கு நஞ்சு என்று உணர்க!" என்றார் சல்யர். கர்ணன் "இச்சொற்கள் அனைத்தையும் நீங்கள் முன்னரே உரைத்துவிட்டீர்கள், மத்ரரே. இவை அனைத்தையும் நானே எனக்கு உரைத்தும்விட்டேன். அதற்கப்பால் என்னுள்ளம் இதையே ஆணையிடுகிறது" என்றான். எரிச்சலும் துயருமாக "உன்னை

கைவிட்டவளுக்காகவா உன் குடியை பலிகொடுக்கிறாய்?" என்று சல்யர் கூவினார். "கைவிட்டவர்களுக்காக அளிக்கையில்தானே கொடை மேலும் பொருள் கொள்கிறது?" என்று கர்ணன் சொன்னான்.

"தாய்மையைப்போல் பெரும்பொய் ஒன்றில்லை" என்று சல்யர் கூவினார். "உறவுகளில் பொய்யானது அதுவே. ஏனென்றால் அது மிகை. முழுப் பொய்யைவிடப் பெரிய பொய்யே மிகை என்பது. பெண்ணை இல்லத்தில் கட்டுறுத்த முந்தையோர் சொன்ன பொய் அது... அதை ஏற்கும் பெண் இற்செறிப்பாள். நம்பும் ஆண் பெண்ணால் ஏமாற்றப்படுவான்." கர்ணன் "இப்புவிவாழ்க்கையே மாபெரும் பொய்யென்று இக்கணம் அறிகிறேன். அப்பொய்களில் முதன்மையானது தாய்மை. அதை தழுவி நின்றிருக்கையிலேயே இப்புவி வாழும். இதை உடைத்த பின் இங்கு உருக்கொண்டு நின்றிருக்கும் கருத்தென எதுவும் எஞ்சாது" என்றான். "கீழ்மை! கீழ்மை!" என்று சல்யர் தன் சவுக்கால் தன் தலையில் அறைந்தார். "எடு உன் நாகவாளியை! இது உன் தந்தையின் ஆணை! உன் குருதித்தந்தையின் ஆணை இது!" என்று நெஞ்சிலறைந்தபடி ஓலமிட்டார்.

"என் அன்னை உங்கள் பெயரை சொல்வது வரை நீங்கள் எனக்கு தந்தையல்ல, மத்ரரே" என்று சல்யரை நேர்நோக்கி கர்ணன் சொன்னான். தளர்ந்து "முற்றாக அழித்துவிட்டாள் உன்னை. ஒரு துளி எஞ்சாமல் உண்டுவிட்டுச் சென்றுவிட்டாள்" என்றார் சல்யர். அத்தருணத்தில் சிம்மமென உறுமியபடி வந்த அம்பு ஒன்று கர்ணனின் இடப்புறம் காத்து நின்ற சுதமன் மேல் விழுந்தது. அவன் தேருடன் உடைந்து துண்டுகளாக தெறித்தான். கர்ணன் திகைத்து உடல் பதற

திரும்பி நோக்கினான். சல்யர் "நோக்குக, உன் மைந்தர்..." என்று கூவுவதற்குள் அடுத்த அம்பை அர்ஜுனன் எடுத்தான். விருஷசேனன் "பின்னடைக! பின்னடைக, இளையோரே" என்று கூவியபடி தன் அம்புகளை அர்ஜுனன் மேல் தொடுத்தபடி முன்னடைந்தான். அவனுடைய அம்புகளைச் சிதறடித்தபடி வந்த அர்ஜுனனின் அம்பு அவன் நெஞ்சில் பாய்ந்து கவசத்தை உடைத்து உட்புகுந்தது. அவ்விசையில் அவன் தேர்த்தூண்கள் உடைந்து துண்டுகளாகச் சிதற புரவிகள் நிலையழிந்து ஒன்றையொன்று முட்டி தேரை சரித்தன. நெஞ்சில் பாய்ந்த நீளம்புடன் அவன் நிலத்தில் விழுந்து துடித்து ஓய்ந்தான்.

சல்யர் "அவனைக் கொன்றவன் நீ! உன் மைந்தனை உன் அன்னைக்கு பலியாக்குகிறாய்! குருதிகொள் கொற்றவை உன் குலத்தை உண்கிறாள்! அறிவிலி! அறிவிலி! அறிவிலி!" என்று கைநீட்டி கூவினார். கர்ணன் ஒருகணம் தன் இரு மைந்தரையும் விழிதிருப்பி நோக்கினான். உதடுகளை இறுகக் கடித்து முகத்தில் எழுந்த அனைத்து உணர்வுகளையும் உறைய வைத்து பாவகாஸ்திரத்தை எடுத்து தேர்த்தட்டில் நின்று துள்ளிய விஜயத்தின்மேல் தொடுத்து நாண் இழுத்து ஓங்கி அர்ஜுனனை அறைந்தான். அதை எண்ணியவர்போல் இளைய யாதவர் அவன் தேரை மேலும் மேலும் பின்னடைய வைத்தார். நீரில் மூழ்கி ஆழத்தில் மறையும் பெரிய மீன் என அர்ஜுனனின் தேர் பாண்டவப் படைகளுக்குள் மறைந்தது. அவனைச் சூழ்ந்து வந்த வில்லவர்களும் இருபுறமும் துணையமைத்த மைந்தர்களும் பெரிய வளையமென ஆகி அகன்று விலகினர்.

கர்ணனின் சினம் அனைத்தையும் அள்ளி வந்த பாவகாஸ்திரம் நிலத்தில் அறைந்து வெடித்து நீண்ட அமைதியொன்றை

களத்தில் உருவாக்கி பின்னர் செவிகளனைத்திலும் தனித்தனியாக வெடித்து ஒலியின்மையை மீட்டி விழியின்மையில் அனைவரையும் உள்ளணையச் செய்து பின்பு எழுப்பியது. பலர் நிலத்தில் அமர்ந்து வாயுமிழ்ந்தனர். நிலத்தில் தலையைச் சேர்த்து உடல் நடுக்குற அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு மேல் விண்ணுக்கு எழுந்த சிதைந்த உடல்களும் தேர்த்துண்டுகளும் குருதிச் சிதைவுகளும் மழையெனப் பொழிந்தன.

சல்யர் தன் கடிவாளக்கற்றையை ஓங்கி தேர்த்தட்டில் வீசினார். "போதும்! இதற்கு மேல் இப்போரை நான் நடத்தலாகாது. நீ உயிர்கொடுக்கச் செல்கிறாய். உன்னை அதற்கு அழைத்துச்சென்றேன் என்னும் பழியுடன் இக்களத்திலிருந்து நான் மீள மாட்டேன். என் குடிமைந்தர் களம் விழுந்தமைக்கு நானே பொறுப்பென்று நாளை என் கொடிவழியினர் எண்ணலாகாது. இனி உன் தேரை நான் தெளிக்கப் போவதில்லை" என்று சொல்லி தேரிலிருந்து பாய்ந்து இறங்கினார். கர்ணன் "வாழ்த்திச் செல்க, மத்ரரே!" என்றான். சல்யர் நின்று திரும்பி அவனை பார்த்தார். உள்ளிருந்து எழும் ஒரு சொல் அவர் முகத்தை உருகச் செய்தது. உடலெங்கும் அது தவிப்பென வெளிப்பட்டது. ஆயினும் அதை கூறாமல் நடந்து படையின் பின்புறம் நோக்கி சென்றார்.

இருட்கனி - 52

பத்தாவது களத்தில் அமர்ந்திருந்த கும்பீரர் என்னும் சூதர் சுரைக்குடுக்கையின் மேல் கட்டிய மூங்கிலில் முதலைத் தோல் வார்ந்து உலர்த்தி இழுத்துக் கட்டி உருவாக்கிய மூன்று

இழை குடயாழை மடியிலமர்த்தி அதை வலக்கையின் சிறுவிரலாலும் கட்டைவிரலாலும் நடுவிரலாலும் மீட்டி இடக்கையால் அருகில் இருந்த சிறுமுழவைத் தட்டி தாளமிட்டபடி கர்ணன் போருக்கெழுந்த களத்தின் காட்சியை கூறலானார். அவருடன் பிற சூதர்களும் இணைந்துகொண்டனர். பின்னிரவு அணைந்துகொண்டிருந்தமையால் காட்டுக்குள் இலைகளில் இருந்து பனித்துளிகள் சொட்டிக்கொண்டிருந்தன. முற்புலரியின் பறவைக்குரல்கள் சில எழுந்தன. ஆயினும் சிதைகளனைத்தும் மூண்டெழுந்து அனல் உறும புகை எழுந்தாட ஊன்நெய் உருகும் வாடையுடன் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

தோழர்களே, நான் குருக்ஷேத்ரக் களத்தின் தென்மேற்கு மூலையில் நோக்குமாடத்தில் அமர்ந்திருந்தேன். தென்னாட்டிலிருந்து களம்பாட அழைத்து வரப்பட்ட சூதன் நான். எனது முன்னோர்களில் எவரோ இக்குருக்ஷேத்ரக் களத்தில் அமர்ந்து இந்திரனும் விருத்திரனும் இயற்றிய பெரும்போரை கண்டனர். சொற்களில் அதை பொறித்தனர். உள்ளங்களில் அதை நிலைநிறுத்திச் சென்றனர். என் தலைவழியில் எவரோ இங்கு வந்து பரசுராமர் ஐந்து குளங்களை குருதியால் நிரப்பிய காட்சியை கண்டனர். என் மைந்தர் இங்கு காணப்போவதென்ன என்பதை இக்குருக்ஷேத்ரம் மட்டுமே அறியும். என் குருதியில் இருந்து முளைத்தெழுந்து இங்கே களம்பாட வந்துகொண்டே இருக்கிறார்கள். இங்கே இறப்பவர்களும் இவ்வாறு பிறந்து பிறந்து வந்துகொண்டே இருக்கிறார்கள். வலசைப்பறவைகள் வந்தமைகையில் மீன்களும் நண்டுகளும் முட்டை விரித்து வெளிவந்து பெருகி நிறைகின்றன.

குருக்ஷேத்ரம் குருதியால் கழுவப்படுகிறது. குருதியை உண்டு குருதிவண்ணம் கொள்கிறது. இங்கே ஒவ்வொரு சிற்றுயிரும் குருதியை அறிந்திருக்கின்றது. குருதியைத் தேடி பறவைகள் அணைகின்றன. குருதிக்கென மண்ணின் ஆழத்திலிருந்து நுண்ணுயிர்கள் முளைத்தெழுகின்றன. இங்கே ஒவ்வொரு கூழாங்கல்லிலும் குருதிவிழையும் தெய்வங்கள் உறைகின்றன. ஒவ்வொரு கல்லும் தெய்வச்சிலையான இம்மண்ணை வணங்குக! இதை அறநிலை என வகுத்த முன்னோரை போற்றுக! போர் வெங்குருதியின்றி அமையாதென்று நூல்கள் உரைக்கின்றன. துர்க்கை அன்னைக்கும் மகவீன்ற வேங்கைக்கும் குருதியே உகந்ததென்றறிக! குருதி தூயது. குருதியிலோடுகின்றன உயிர்க்குலங்களின் நினைவுகள். குருதியில் வாழ்கின்றன தெய்வங்கள் இட்ட ஆணைகள். குருதியாகி நின்றிருக்கிறது விண் நிறைத்துள்ள தழல். குருதி வெல்க! குருதி நிறைவுறுக! குருதி முடிவிலாது முளைத்து எழுக! ஆம், அவ்வாறே ஆகுக!

தோழரே, குருக்ஷேத்ரக் களத்தில் கர்ணன் அர்ஜுனனை எதிர்கொண்டு அம்புகளால் அறைந்து போரிட்டு நின்றிருக்க நான் தொலைவிலிருந்து கண்டவை இவை. ஓங்கி தாழ்த்தப்படும் வாளில் எஞ்சுவதென்ன? பெரும்பாறை உருண்டு வந்து மூடிய விதையில் காத்திருப்பதென்ன? முதிர்ந்த நாகம் தன் நஞ்சை அருமணியாக்கும் விந்தைதான் என்ன? இக்களத்தில் நிகழ்ந்தவை கோடி. நிகழக் காத்திருந்தவை கோடி கோடி. சூதரே, நிகழாது எஞ்சியவை முடிவிலாக் கோடி. எங்குள்ளன அவை? எவ்வண்ணம் எழுந்து வரும் அவை? புவிமேல் முளைக்காத புல்விதைகள் கோடிகளின்கோடி அல்லவா? அவற்றை ஆளும் தெய்வங்கள் எதற்கு பணிக்கப்பட்டிருக்கின்றன?

குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் அன்று களமெழுந்ததுமே அஸ்வத்தாமன் தீய குறிகளை கண்டான். இடமிருந்து வலமாக சிறு கரிச்சான் கீச்சொலி எழுப்பி கடந்து சென்றது. அவன் குடிலில் இருந்து முதற்காலடி எடுத்து வைத்த இடத்தில் ஒரு சிறுகல் வலக்காலில் தடுக்கியது. புரவியில் ஏறி அமர்ந்து அதை கிளப்பியபோது வழக்கத்திற்கு மாறாக அது இடக்காலெடுத்து வைத்து முன்னால் எழுந்தது. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட புரவி. அது வலக்காலை மட்டுமே முதலில் எடுத்துவைக்கும். அவன் அதன் கழுத்தில் தட்டியபடி குனிந்து நோக்கினான். அவனுடைய தேர்ப்பாகன் அருகே நின்றிருந்தான். "பிழை இயற்றிவிட்டது, அரசே. பிறிதொரு புரவியை..." என அவன் தொடங்க அஸ்வத்தாமன் கைநீட்டி அவனை சொல்தடுத்தான். "தாங்கள் ஏறுவதற்கு முன்னரே ஏறிவிட்டீர்கள் என்று ஓர் உடற்குறி எழுந்தது. அது வலக்காலை எடுத்துவைத்துவிட்டது. ஏறிய பின் இடக்காலை..." என்றான் தேர்ப்பாகன். அஸ்வத்தாமன் அவனை வெற்றுவிழிகளுடன் நோக்கினான். தன் உடலில் அப்படி ஒரு அசைவு எழுந்ததா?

அவன் முகக்குறியில் சினமிருந்திருக்கலாம். மிகையாக சொல்லிவிட்டோமா என்று அஞ்சிய தேர்ப்பாகன் "என் விழிமயக்காகவும் இருக்கலாம்" என்றான். சினம் தன்னுள் இல்லை என அஸ்வத்தாமன் உணர்ந்தான். துயில்நீத்து களைத்து தசைகள் தொய்ந்த முகம் உள்ளத்துத் துயரையும் சலிப்பையும் சினத்தையும் மிகையாக வெளிப்படுத்துகிறது. "அதன் குறிப்பொருள் என்ன?" என்றான். அவன் "நான்..." என்றான். "சொல்க, புரவிகளைக் கொண்டு குறிப்பொருள் உரைக்கும் வழக்கும் குதிரைச்சூதர்களுக்கு உண்டு அல்லவா?"

அவன் தயங்கி “அரசே, ஓங்கி அமையும் கை” என்றான். “சொல்” என்றான் அஸ்வத்தாமன். “அது உண்டு செரிக்காத உணவுபோல் நஞ்சு” என்றான் சூதன். அஸ்வத்தாமன் பொருள் விளங்காத விழிகளுடன் நோக்கிவிட்டு தலையை மட்டும் அசைத்தான்.

அன்று நிகழப்போவதென்ன என்னும் விந்தை உணர்வை அஸ்வத்தாமன் அடைந்தான். அன்று களம்படப் போகிறோமா என்ன? அவ்வெண்ணம் எழுந்ததுமே அவன் புன்னகைத்தான். இறப்பிலி என்று அவனை தந்தை வாழ்த்தியிருந்தார். இறப்பிலி என்று மைந்தரை வாழ்த்தாத தந்தையர் எவருளர்? ஆனால் தன் தவத்தை முழுதும் திரட்டி அவனுக்கு இறவாமை என அளித்துச் சென்றிருந்தார் தந்தை. தவத்தை அவனுக்கு அளித்துவிட்டு வஞ்சத்தை மட்டும் தனக்கென வைத்துக்கொண்டார். தலையில் ஓர் அருமணியென அவன் அந்த இறவாமையை சூடியிருந்தான். அதன் எடைக்குக் கீழ் எப்போதும் வாழ்ந்திருந்தான். மின்மினி தன் ஒளியால் ஏந்திச்செல்லப்படுவதுபோல் அது அவனை கொண்டுசென்றது.

இறவாதொழிதல். மலைகளைப்போல் காலமிலாது எஞ்சுதல். வானம்போல் அனைத்திற்கும் மேல் சொல்லின்றிப் படர்ந்திருத்தல். பிறந்த நாளிலிருந்தே இறப்பிலி என்னும் சொல்லை அவன் கேட்டிருந்தாலும் ஒருமுறைகூட அதன் முழுப் பொருள்விரிவு அவன் உளத்தில் எழுந்ததில்லை. முதல்முறையாக அன்று குருக்ஷேத்ரக் களமுகப்பு நோக்கி புரவியில் செல்லும்போது அந்தச் சொல்லின் முழுவிரிவும் வந்து அவனை சூழ்ந்தது. அன்று அக்களத்தில் அவன் வீழ்ந்துபட விழைந்தான். எஞ்சுவது ஒன்றுமில்லை என்றான பின்னர் உயிர் மிஞ்சி இருப்பதில் பொருளில்லை. இறப்பென்பது

ஒவ்வொன்றுக்கும் பொருள் அளிக்கும் இறுதிச் சொல். அது உரைக்கப்படாதபோது அனைத்துச் சொற்களும் வெற்றொலிகளாகி விரிந்த முடிவிலா வெளியே அவனை சூழ்ந்திருந்தது.

தன் படைசூழ்கையை அவன் ஒரு நாழிகைக்குள் முற்றாக நோக்கி முடித்து களமுகப்பிற்கு சென்றான். அங்கு படைசூழ்கை அமைக்கத் தொடங்கிய நாள் முழுப் படையையும் விழிகளால் தொட முடியாது என்பதனால் பன்னிரு காவல்மாடங்களின் மீதேறி அங்கு பாகைமானியை பதித்து ஒவ்வொரு பாகைக்கும் விழிகளால் திசைஎல்லை வரை கோடிழுத்து கணக்கிட்டு பலகையில் சுண்ணக்கட்டியால் குறித்து தொகுத்து தான் அளித்த சூழ்கைத்திட்டம் பருவடிவம் கொண்டிருப்பதை உறுதிசெய்தபின் மீள்வது வழக்கமாக இருந்தது. எத்தனை நோக்கிய பின்னரும் உள்ளம் நிறைவுறாமல் மீண்டும் மீண்டும் காவல்மாடங்களில் ஏறி நோக்குவான். ஒரு பகுதியை உளம்போனபோக்கில் தெரிவுசெய்து அதை நுணுக்கமாக வரைவுடன் ஒப்பிடுவான். ஆனால் அன்று புரவிமேல் கால் வளையங்களில் பாதம் ஊன்றி உடலெழுப்பி நின்று நோக்கினாலே முழுப் படையையும் பார்க்கமுடியும்போல் தோன்றியது.

ஒருமுறை சுற்றி வந்தபோது அத்தனை படைவீரர்களின் முகங்களிலும் ஒற்றை உணர்வே எஞ்சுவதுபோல் தெரிந்தது. அது என்ன என்ன என்று தொட்டுத் தொட்டுத் தவித்த உள்ளம் படைமுகப்பை சென்றடைந்தபோது தெளிந்தது. அது அக்களத்தில் இறக்க வேண்டுமெனும் விழைவே. ஒவ்வொரு கண்களிலும் முகக்குறியிலும் சாவு சாவு சாவு என்னும் ஊழ்கச்சொல் திகழ்ந்தது. அந்தப் படைவிரிவிலிருந்து

அவ்வுணர்வு தனக்கு வந்ததா? அன்றி ஆடிப்பெருக்கில் தன் முகம் தெரிவதுபோல் அதுவே எழுந்து படையெனத் தெரிகிறதா? உளச்சோர்வு சாவுக்கான விழைவை உருவாக்குகிறது. உளச்சோர்வு பிழையுணர்விலிருந்து எழுகிறது. பிழையுணர்வு பொருளிலாச் செயலின் விளைவு. சாவினூடாக அப்பொருளின்மையை கடந்துவிட இயலுமென எண்ணுகிறது உள்ளம். சாவால் அனைத்தையும் முழுமையாக்கிவிட முடியும். பிசிறுகளை களைந்து அனைத்து முடிச்சுகளையும் இட்டு ஓர் அழகிய வடிவை உருவாக்கிக்கொள்ள முடியும்.

படைமுகப்பில் காம்பில்யத்தின் படைகள் மறுபுறம் படைக்கலங்கள் ஏந்தி அணி நிரந்து நின்றிருப்பதைப் பார்த்தபடி தன் தேரில் வில்லேந்தி நின்றபோது அஸ்வத்தாமன் ஓரிரு கணங்கள் துயிலுக்குள் சென்று எங்கெங்கோ திகழ்ந்து மீண்டான். அங்கிருந்த அத்தனை படைவீரர்களும் துயிலிலிருந்து எழுந்து மீண்டும் வழுக்கி வழுக்கி துயிலுக்குள் விழுபவர்கள்போல் தோன்றினார்கள். இப்போரை முடித்து வைக்கப்போவது துயில்தான். பிற அனைத்தையும்விட துயிலே பெரிதென உடல் முடிவுசெய்யும் தருணம். ஒத்தி வைக்கப்பட்ட துயில்கள், எஞ்சவிட்ட துயில்கள் அனைத்தும் ஒன்றெனத் திரண்டு பெருந்துயிலென மாறி வந்து சூழ்ந்துகொள்ளவிருக்கிறது. போர் முடிந்து திரும்புகையில் இறந்து கிடப்பவர்களைக் கண்டு அவர்கள் ஆழ்துயில்கொண்டிருக்கிறார்கள் என எண்ணி அத்துயிலுக்காக ஒருகணம் ஏங்கி திகைத்து மீளாத எவரும் அங்கில்லை.

அவன் ஒவ்வொருவர் விழிகளாக பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு சிறு துணுக்குறலுடன் திரும்பி தனது படையை

பார்த்தான். உத்தர பாஞ்சாலத்தின் படையினரும் காம்பில்யப் படையினரும் ஆடிப்பாவைகள் என ஒருவரையொருவர் காட்டினர். பதினேழு நாள் போரில் குருதியும் புழுதியும் பட்டு வண்ணம் மறைந்து ஆடைகள் ஒன்றென ஆகிவிட்டிருந்தன. போர்க்களத்தில் திகழ்ந்து, இரவு துயில்புகுந்து ஆழங்களில் அலைந்து உள்ளங்கள் ஒன்றென மாறிவிட்டிருந்தன. விழிகளை தொட்டுத் தொட்டுச் செல்ல அத்தனை விழிகளும் ஒன்றே என்று கண்டு சலிப்புடன் அவன் தலையசைத்தான். ஒரு நிலத்தவர். ஒற்றைப் பெருங்குடியைச் சேர்ந்தவர்கள். இரு அரசர்களால் எதிரெதிரென பகுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு நின்றிருக்கும் படையினர் அனைவருமே ஒருகுடியர் ஒருநிலத்தர் அல்லவா? அனைவருமே பாரதவர்ஷத்தவர் அல்லவா?

ஒருமுறைகூட களத்தில் அவ்வாறு உள்ளம் நிலைகொள்ளாது எழுந்ததில்லை என்று அஸ்வத்தாமன் உணர்ந்தான். அத்தகைய எண்ணங்களை எப்போதும் அவன் இகழ்ந்தே வந்திருந்தான். அவ்வாறு சொற்கூட்டி விளையாடுவதில் தந்தைக்கு விருப்பம் இருந்தது. யுதிஷ்டிரன் பெருவிழைவுடன் அதில் ஈடுபடுவதுண்டு. அரிதாக அர்ஜுனனும் அதில் கலந்துகொள்வான். அப்பொழுதெல்லாம் சலிப்புடன் "இது அந்தி வெயிலில் தன்னுரு பார்த்து மகிழும் குழந்தைக்கு நிகரான பேதைமை. ஒவ்வொன்றும் நீள்நிழல் கொண்டிருக்கும் வெளி இது. ஒவ்வொன்றுக்கும் தெய்வங்கள் அளித்த அளவும் எடையும் மதிப்பும் மட்டுமுள்ள உலகிலேயே நான் வாழ விழைகிறேன்" என்றான். துரோணர் நகைத்து "ஒவ்வொன்றுக்கும் உருமாறும் நிழல்களை அளித்த தெய்வங்கள் அறிவிலிகள் அல்ல" என்றார்.

“முடிவிலாத ஆடிப்பாவைகளும் தெய்வங்களே சமைப்பதுதான். அவற்றில் தெய்வங்களே விளையாடி மகிழட்டும்” என்று அஸ்வத்தாமன் சொன்னான். இதோ நான் நிழல்களுடன் ஆடிக்கொண்டிருக்கிறேன். இது அந்தி. மீளும் இரவு. நிழல்கள் நீண்டு நீண்டு மேலும் நீள முடியாமல் ஆகி நிலைத்து கரைந்து மறைகின்றன ஒற்றைப்பெருநிழலில்.
அப்பெருவெளிக்கருமையை அஞ்சுகிறது தனிநிழல்.
படம்விரித்து எழுந்து பொருட்களை, பொருள்வய உலகை சுற்றி வளைத்து நொறுக்கி விழுங்கி தன் வயிற்றில் அடக்கிக்கொள்கிறது. அவனுடைய எண்ணங்களை அறுத்தபடி முரசுகள் முழங்கத்தொடங்கின. “எழுக! எழுக!” என கைதூக்கி ஆணையிட்டு வில் குலைத்தபடி அவன் பாண்டவப் படைப்பெருக்கை நோக்கி பாய்ந்துசென்றான்.

சிகண்டி முன்னின்று நடத்திய பாஞ்சாலப் படையை அஸ்வத்தாமன் சந்தித்தான். சிகண்டியின் வில் வல்லமையைக் குறித்து அவன் கதைகளெனக் கேட்டிருந்தான். போர்நாட்களில் ஒவ்வொரு முறையும் மேலும் மேலும் அறிந்துகொண்டிருந்தான். ஒவ்வொரு மதிப்பீட்டையும் சிகண்டி கடந்து செல்வதை கண்டான். பின்னர் அறிந்தான், அப்போர்க்களத்தில் வஞ்சம் துளியும் இன்றி, வெற்றி தோல்வி என ஒருகணமும் கருதாது, போர்புரிபவர் அவர் என்று.
அந்நிலையில் போர் வெறும் பயிற்சி என்றாகிவிடுகிறது.
ஒவ்வொரு அம்பும் அதை தொடுப்பவனை பயிற்றுவிக்கிறது.
ஒரு மெய்த்துளியை அம்பறாத்தூணியில் எஞ்சவிட்டே அது எழுந்து செல்கிறது. பயின்று தேர்ந்து கணம் தோறும் வளர்ந்து அவர் நின்றிருந்தார்.

சிகண்டியை அம்புகளால் எதிர்கொள்ளத் தொடங்கியபோதே அன்று புதிதெனப் பிறந்து அவர் வந்திருப்பதை அஸ்வத்தாமன் உணர்ந்தான். அவருடைய ஒவ்வொரு அம்பையும் தன் அம்பால் அறைந்து வீழ்த்திக்கொண்டிருக்கையிலேயே போர் நெடும்பொழுது நீடிக்க இயலாதென்று அவனுக்கு தெரிந்தது. சிகண்டியின் அம்புகள் அவன் தொடுத்த அம்புகளுக்கு நிகரான விசையும் எடையும் கொண்டிருந்தன. எனில் தன் அம்புகள் ஒவ்வொன்றையும் முற்றாக கணிக்க இயல்கிறது அவரால். ஒற்றை அம்புகூட முன்கணிக்கப்படாது வெற்றுப்பயிற்சியின் விசையால் தொடுக்கப்படவில்லை. எவ்வண்ணம் அதை கணிக்கிறார்? எங்கே திறந்திருக்கிறது என் வாயில்? அஸ்வத்தாமன் ஒவ்வொரு வழியாக உளம் செலுத்தி தன்னை தொகுத்து மூடிக்கொண்டான். ஆயினும் சிகண்டி அவன் அருகிலென, அகத்தே என திகழ்ந்து அவனை அறிந்திருந்தார்.

ஒவ்வொரு அம்புக்கும் எதிரம்பு தொடுத்தபடி சிகண்டியை கூர்ந்து நோக்கிக்கொண்டு போர் புரிந்தான் அஸ்வத்தாமன். எவ்வண்ணம் கணிக்கிறார்? அவன் உள்ளம் எங்கோ முட்டித் தவித்தது. தன் முன் நின்று போரிடுவது ஒரு மனிதரல்ல, சிலை என்று ஆழம் உணர்ந்தமையின் தவிப்பு அது என சித்தம் கண்டடைந்தது. பின்பு ஒரு தண்தொடுகை என அவன் அறிந்தான், சிகண்டி தன் விழிகளை நோக்கவில்லை என்று. விழிகளின்மை அவரை சிலையென்றாக்கியது. விழிகளன்றி மானுடனை அறியும் வழி பிறிதொன்றுண்டா என்ன? சிகண்டியின் விழிகளை நோக்க இயன்றால் அவர் எண்ணுவதென்ன என்று உணர்ந்துகொள்ளலாம். விழிகள் விழிகள் விழிகள்... விழிகளில்லா முகம்போல் மூடப்பட்ட பிறிதொன்றில்லை.

சிகண்டி பாதி விழி மூடி துயில்பவர் போலிருந்தார். அவருடைய மெலிந்து நீண்ட இரு கைகளும் கொடிநடனம்போல் சுழன்று அம்புகளை தொடுத்தன. எவ்வண்ணம் என்னுள் நுழைகிறார்? எவ்வண்ணம் என்னை அறிகிறார்? அஸ்வத்தாமன் உள்ளம் அலைக்கழிந்தது. இரு படைகளும் அம்புகளால் தொடுத்துக்கொண்டு இரு முள்ளம்பன்றிகள் முட்களைக் கொண்டு போரிடுவதுபோல் போரிட்டன. உலோகங்கள் உரசிக்கொள்ளும் ஓசைகள் அங்கு ஒரு பெரும்சமையல் நிகழ்வதுபோல கனவுக்குள் மாயம் காட்டின. அங்கிருந்த அனைவருமே சிலகணங்கள் கனவுக்குள் சென்றனர். உடல்கள் முந்தைய கணத்தின் அசைவையும் விசையையும் முன்னெடுக்க அவர்கள் இன்னுணவு நறுமணம் கொண்டுநிறைந்த உண்டாட்டில் திளைத்துக் கூச்சலிட்டு திடுக்கிட்டு மீண்டனர்.

தன்னுணர்வு கொண்டபோது வியர்வை முளைத்திருந்தது. மெல்லிய குமட்டலும் எழுந்தது. முள்காடு காற்றில் உலைவதுபோல் வேல்களும் வாள்களும் சுழன்றன. உருகிவழிந்த வெயில் கண்களை கூசச் செய்தது. சென்று முட்டிய ஒரு கணத்தில் அஸ்வத்தாமன் உணர்ந்தான், சிகண்டி எவ்வண்ணம் தன் உள்ளத்தை உணர்கிறார் என்று. தன்னைப் பகுத்து ஒரு பகுதியை பிறரென்றாக்கி எதிர்நிறுத்தி போரிட்டுக்கொண்டிருக்கிறார். இப்போது எதிர் முனையில் அஸ்வத்தாமனாக அவரே நின்று பொருதிக்கொண்டிருக்கிறார். அவரை நோக்கி எதிர்வினையாற்றுவதனால் அவன் அவரால் நிகழ்த்தப்பட்டான். அவனேயாகி நின்று அவர் தன்னை நிகழ்த்திக்கொண்டிருந்தார். தன்னுடன் தான் பொருதுபவர் தன்னுடைய விழைவால் மட்டுமே தோல்வி அடைவார்.

அஸ்வத்தாமன் அவ்வுணர்வால் மேலும் மேலும் சீற்றம் கொண்டு விசை மிக்க அம்புகளால் சிகண்டியை அடித்தான். வியாஹ்ராஸ்திரம் நிலமறைந்து வாள்பற்கள் காட்டி மீசை விடைக்க உறுமும் வேங்கை என ஓசையிட்டபடி சென்றது. மிருகாஸ்திரம் காற்றில் பாயும் கலைமான் என ஊளையிட்டபடி பறந்து சென்று தாக்கியது. பஸ்மாஸ்திரம் புழுதி கிளப்பி திரையிட அதை மின்நெளிவென துளைத்துச்சென்று அறைந்தது வஜ்ராஸ்திரம். அனைத்து அம்புகளையும் அவற்றுக்கு ஈடான அம்பால் சிகண்டி தடுத்தார். ஒரு துளி சிந்தாமல் ஒரு புட்டியிலிருந்து இன்னொன்றுக்கு மதுவை செலுத்துவதுபோல. ஒரு சொல் துளியும் பொருள்குன்றாமல் புரிந்துகொள்ளப்பட்டதுபோல.

எவ்வண்ணம் அவ்வாறு முற்றாக பகுத்துக்கொள்ள இயல்கிறது? மானுடர்க்கு இயல்வதுதானா அது? ஏனெனில் அவர் ஒருவர் அல்ல, இருவர். ஆணும் பெண்ணும் ஒருடலில் குவிந்தவர். ஆணென்றும் பெண்ணென்றும் நின்று வாழ்ந்தவர். ஆணும் பெண்ணும் போரிட்டும் முயங்கியும் திகழும் களம் அவர் உடல். இங்கு ஒருமுனை நிறுத்தி மறுமுனையை எந்த எல்லை வரைக்கும் கொண்டு செல்ல அவரால் இயலும். பெண்ணொருபாகம் வைத்த பெருமானே இங்கு வந்தால் மட்டுமே இவரிடம் போரிட இயலும். முப்புரம் எரித்த அம்புகளுடன் அவர் எழுந்தாகவேண்டும். உமை தேரோட்டவேண்டும். மூவிழி அனல்வடிவுகொண்டு அம்புகளிலெழவேண்டும்.

இடியோசை எழுப்பிய பர்ஜன்யாஸ்திரம் நிலத்தை அறைந்து புழுதி கிளப்பியது. சுழன்று சுழன்று அறைந்தது வாயுவாஸ்திரம். சிகண்டி ஒருகணமும் உளமொழியவில்லை.

தன் கை தளர்வதை அஸ்வத்தாமன் உணர்ந்தான். ஆனால் பின்னடைதல் தன் இயல்புக்கு ஒவ்வாதது. உயிர்கொடுப்பதே வழி. ஆனால் இறவாதவனை வெல்ல எவரால் இயலும்? ஈருடலனே இயன்றால் என்னை கொல்! உன்னை விழைந்து கேட்பதொன்றே, கொல்க என்னை! உன் அருந்தவத்தால் என்னை வெல்க! ஆற்றி அகன்று நின்றிருக்கும் உனது ஊழ்கத்தால் என்னை அழித்துச்செல்க! உன் அணைந்த வஞ்சம் இறுகிய கரும்பாறையால் அறைந்து என்னை விடுதலை செய்க!

அஸ்வத்தாமன் மேல் மேலும் மேலும் அம்புகளைத் தொடுத்தபடி சிகண்டி முன்னெழுந்து சென்றார். இருபுறங்களிலும் இருந்து திருஷ்டத்யும்னனின் படைவீரர்கள் வந்து சேர்ந்துகொள்ள சிகண்டி இரு கைகளையும் விரித்து முன்னால் வரும் கடல் நண்டுபோல் கௌரவப் படையை அணைக்க வந்தார். சகுனியின் ஆணை பின்னிருந்து ஒலித்தது. "உத்தரபாஞ்சாலர் பின்னடைக! படைகளை காத்துக்கொள்க! படைகள் அழியலாகாது! உத்தரபாஞ்சாலப் படைகளை மீட்டுக்கொண்டு பின்னடைக!" அஸ்வத்தாமன் இருபுறமும் திரும்பிப் பார்த்தான். கௌரவப் படை பாஞ்சாலர்களின் வில்லுக்கு முன் சிதறி அழிந்து நிலம் தழுவிக்கொண்டிருந்தது. "பின்னடைக!" என்று கைகாட்டியபடி மூச்சை இழுத்து வில் தாழ்த்தினான்.

அவனது தேர்ப்பாகன் தேரை இழுத்து பின்னடையச் செய்ய கௌரவப் படைவீரர்கள் கூச்சலிட்டபடி ஒருவரோடொருவர் முட்டிக் கலைந்து பின்னடைந்தனர். நிலைக்கேடயங்களைத் தூக்கி ஒன்றுடன் ஒன்று ஒட்ட வைத்து இரும்புச் சுவரொன்றை சமைத்தபடி பின்நீங்கத் தொடங்கினர்.

தேரிலமர்ந்து பின்னடைந்து செல்கையில் அஸ்வத்தாமன் சிகண்டியின் முகத்தை நோக்கிக்கொண்டிருந்தான். அங்கு ஒருகணமாவது வெற்றியின் உவகை எழுந்தால் நான் வென்றேன். ஒருகணம் விழி தூக்கி பின்னடையும் என் முகத்தை அவர் நோக்கினால் இத்தருணத்தை கடந்தேன். ஆனால் அஸ்வத்தாமன் தன் முன் நின்றிருப்பதையே சிகண்டி அறியவில்லை. தன் முன் எழுந்து பொருதி மீள்பவன் எவனென்றே உணரவில்லை. எங்கோ ஏதோ களத்தில் அவர் தன் ஆடிப்பாவையுடன் போர்புரிந்துகொண்டிருந்தார்.

கௌரவப் படைகள் முற்றாக விலகி படைமுகப்பு ஒழிய இருபுறத்திலிருந்தும் கிருபரும் கிருதவர்மனும் நடத்திய கேடயப்படை வந்து முகப்பை மூடிக்கொண்டது. தளர்ந்து தேர்த்தட்டில் அமர்ந்த அஸ்வத்தாமன் ஒருகணம் அன்றைய போரின் தொடக்கத்தில் தான் பீஷ்மரை எண்ணிக்கொண்டதை நினைவுகூர்ந்தான். காலை அரையிருளில் படைமுகப்பில் நின்று தன் முன் விரிந்திருந்த பாண்டவப் படைவிரிவை பார்த்தபடி, தனக்குப் பின் எழுந்த கௌரவப் படையின் சூழ்கையை உள்ளத்தால் தொட்டுத் தொட்டு மீண்டும் ஒருமுறை சீர்நோக்கிக்கொண்டிருந்தபோது அப்போர்க்களத்தின் வெற்றிதோல்விக்கு அப்பால் சென்று உளம் சலிப்புற்று அவன் நின்றிருந்தான். அப்போது குருக்ஷேத்ரத்தின் போர் தொடங்கிய முதல் நாள் பீஷ்மரைக் கண்டதை நினைவுகூர்ந்தான்.

இருபுறமும் திசைதொடும் பெருக்கென படைகள் விரிந்திருக்க, போர் போர் என ஒவ்வொரு படைக்கலமும் துடித்துக்கொண்டிருக்க, படைமுகப்பில் நின்றிருந்த பீஷ்மர் விலக்கமும் சலிப்பும் கொண்டிருந்தார். அவர் உடலில் இருந்த தசைகள் அனைத்தும் தளர்ந்திருந்தன. கை தொங்கி

தொடையை தொட்டுக்கொண்டிருந்தது. அதை உணர்ந்த கணம் தானும் அவ்வாறே நின்றிருப்பதாகத் தோன்றியது. இயல்பாக விழிதிருப்பி நோக்கியபோது கர்ணனின் மைந்தன் விருஷசேனனை பார்த்தான். கர்ணன் தேர்த்தட்டில் விஜயத்தை ஏந்தி வலக்கையால் மீசையை சுழித்தபடி நின்றிருந்தான். தளர்ந்த தோள்களுடன் சற்றே சாய்ந்த வில்லுடன் தேர்த்தட்டில் விருஷசேனன் நின்றிருந்தான். இருவருமே ஒன்றின் வடிவங்களென தோன்றியது. விருஷசேனனிலிருந்து வளர்ந்து எழுந்தவன் போலிருந்தான் கர்ணன். அன்றி பின்னடைந்து விருஷசேனனை வந்தடைவன்போல்.

முரசுகள் முழங்க விருஷசேனனின் இறப்பு அறிவிக்கப்பட்டது. "அங்கநாட்டு பட்டத்து இளவரசன் விருஷசேனன் மறைந்தார்! அங்கநாட்டு இளவரசர் மறைந்தார்! இளைய அங்கர் வாழ்க! விண்புகுக, மாவீரர்!" ஒருகணம் அந்த முரசொலியை அஸ்வத்தாமன் செவிகொண்டான். பின்னர் "எழுக படை! எழுக!" என ஆணையிட்டு தன் வில்லவர் படையை தொகுத்து போர்முகம் நோக்கி எழுந்தான்.

இருட்கனி - 53

அஸ்வத்தாமனின் பாகன் திரும்பி நோக்கி "முன்னேறவா, அரசே?" என்றான். "ஆம்" என்று அவன் சொன்னான். "முன்னேறுக!" பாகனின் விழிகள் மங்கலடைந்திருந்தன. அவன் ஆழ்ந்த துயிலில் இருப்பதுபோல் குரலும் கம்மியிருந்தது. இவன் எப்படி தேர்நடத்த முடியும் என்று அஸ்வத்தாமன் ஒருகணம் எண்ணினான். ஆனால் புரவிகள் அவன் கையின் அசைவால் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டன.

சொல்லப்படுவதற்குள்ளேயே உடலசைவுகளிலிருந்தும் முகத்தின் மெய்ப்பாடுகளிடமிருந்துமேகூட அவன் ஆணைகளை பெற்றுக்கொண்டான். ஆடிவளைவில் தன்னை நோக்கிக்கொண்டிருக்கும் பாகன் எந்த வில்லவனுக்கும் தெய்வத்துணைபோல.

பாகனுடன் உடலால், விழியால், சொல்லால் உரையாடிக்கொண்டே இருக்கிறான் படைவீரன். அது தன்னுடன் தானே உரையாடுவதுபோல. அவன் காலையில் சொன்னது நினைவிலெழ "காலையில் ஒரு சொல் எஞ்சவிட்டாய்... என்ன அது?" என்றான். "என்ன?" என்றான் பாகன். "நீ காலையில் சொன்ன சொல்." பாகன் "நினைவில்லை, அரசே" என்றான். "நீ சொன்ன சொல்... அது உண்டு செரிக்காத உணவுபோல் நஞ்சு என்றாய்." பாகன் "நினைவில்லை..." என்றான். அஸ்வத்தாமன் சலிப்புடன் "செல்க!" என்றான். அப்பால் பாண்டவப் படையிலிருந்து அம்புகள் எழுந்து வந்து சூழ்ந்தன. "செல்க!" என அஸ்வத்தாமன் கைநீட்டி ஆணையிட்டான்.

அஸ்வத்தாமன் தன் படையை நோக்கி "விரைக! விரைக! எழுக!" என ஆணையிட்டபடி தேரில் படைமுகப்பு நோக்கி சென்றான். சிகண்டியை அவன் விழிகள் தேடின. படைகள் அதற்குள் சுழன்று திசைமாறிவிட்டிருந்தமையால் அவன் சென்றணைந்த முகப்பில் விராடநாட்டுப் படைகளே இருந்தன. அவற்றை தலைமை தாங்கி நடத்திய சாத்யகியை நாண்முழக்கியபடி அஸ்வத்தாமன் சந்தித்தான். இருவரும் கைபறக்க அம்புகளால் தாக்கிக்கொண்டனர்.

விராடப் படைகள் அக்களத்திற்கு வரும்போது போர்க்களப் பயிற்சியற்றவையாக இருந்தன. அவர்களில் சற்றேனும்

படைப்பயிற்சி பெற்றவர்கள் முதலிலேயே போருக்கு வந்து பீஷ்மராலும் பின்பு துரோணராலும் முற்றழிக்கப்பட்டனர். பாண்டவப் படையின் ஏவலர்களும் தொழும்பர்களும் பெரும்பகுதியினர் விராட நாட்டிலிருந்தே வந்திருந்தனர். போர் விசைமிகுந்தோறும் மேலும் மேலும் ஏவலரும் படைதொழும்பரும் தேவைப்படவே படைகளை அனுப்பி விராட நாட்டிலிருந்து நிஷாதரையும் கிராதரையும் திரட்டிக்கொண்டு வந்திருந்தனர். அவர்கள் முதலில் விறகு கொண்டுவருபவர்களாகவும் வண்டிகளை இழுப்பவர்களாகவும் உடல்களை கொண்டுசென்று தென்புலம் சேர்ப்பவர்களாகவும் பணியாற்றினர். பின்னர் படைகள் குறையக்குறைய அவர்கள் படைகளென மாற்றப்பட்டு போர்முகப்புக்கு அனுப்பப்பட்டனர்.

வெறும் வில்லுக்கு உணவென்றே அவர்கள் கருதப்பட்டனராயினும் அவர்கள் அங்கு வந்த அச்சிறு நாட்களிலேயே போரெனில் என்ன என்று கற்றிருந்தனர். விராடநாட்டிலிருந்து வந்த போர்க்கலை பயின்ற வீரர்கள் விரைந்திறங்கி ஊர்களைத் தாக்கி மீளும் மலைப்போரிலேயே பயிற்சி பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு விரிநிலத்தில் நிகழ்ந்த குருக்ஷேத்ரப் போரில் பொருதி நிற்க இயலவில்லை. கைசலிக்க கைசலிக்க பீஷ்மரும் துரோணரும் அவர்களைக் கொன்று களத்தில் பரப்பினர். ஆனால் எந்தப் பயிற்சியும் இன்றி அங்கு வந்து, ஒவ்வொரு நாளும் போரைப் பார்த்த நிஷாதருக்கும் கிராதருக்கும் அவர்கள் விழிகளால் பெற்றுக்கொண்ட பயிற்சியே களம்நிற்க போதுமானதாக இருந்தது.

பல்லாயிரம் பேர் திரண்டெழுந்து மோதிக்கொள்ளும் போர்க்களத்தில் தேர்ந்த வில்லவர்கள்கூட குறிவைத்து

இலக்கை தாக்குவது அரிதென்று இருந்தது. விற்களை நிரைவகுத்து விண்ணில் அம்புமழை எழுப்புவதே போரில் தேவைப்பட்டது. நிஷாதரும் கிராதரும் தங்கள் காடுகளில் வேட்டைக்கென பயின்றிருந்த விற்பயிற்சி அதற்கு போதுமானதாக அமைந்தது. களத்தில் உளம் பதறாது நிற்க அவர்கள் பயின்றிருந்தனர். பல நாட்கள் போர் முடிந்தபின் களமுகப்பிலிருந்து சிதைந்த உடல்களையும் எஞ்சும் உயிருடன் கூச்சலிடும் வீரர்களையும் அள்ளிக் கொண்டுசென்று தென்புலத்திற்கும் மருத்துவமனைக்கும் சேர்த்து பின்னர் உடலெங்கும் குருதியுடன் இரவைக் கடந்து எழும் போரின் பேரோசையைக் கேட்டு கனவுகளாக சமைத்தபடி அரைத்துயிலில் பகல் கடந்து மீண்டும் குருதியில் விழித்தெழுந்து அவர்கள் தங்கள் உள்ளத்திற்குள் பல நூறு போர்களை நிகழ்த்திவிட்டிருந்தனர். விழிகள் காணாதவற்றையே உள்ளம் கண்டது. மானுடர் உணராதவற்றை உள்ளுறையும் விலங்குணர்ந்தது. ஆகவே பாஞ்சாலப் படைகளைவிட களத்தில் தேர்ச்சி கொண்டவர்களாக இருந்தனர் விராடநாட்டு நிஷாதர்.

அவர்களின் அம்புகள் பட்டு உத்தரபாஞ்சாலத்தின் வீரர்கள் தேர்களிலிருந்து அலறி வீழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் அகன்ற இடத்தை ஈடுசெய்யும்பொருட்டு பின்னிருந்து படைகள் ஒழிவிலாது வரவேண்டுமென்று அஸ்வத்தாமன் கையசைவால் ஆணையிட்டான். அம்புகளை இடைமுறியாது அனுப்பியபடி சாத்யகியை அவன் எதிர்கொண்டான். சாத்யகி அஸ்வத்தாமனின் அம்புகளை நிகரம்பால் தடுத்தபடி கிராதரும் நிஷாதரும் அடங்கிய படைகளை பிறைவடிவில் விரியச்செய்து உத்தரபாஞ்சாலத்துப் படைகளை சூழ்ந்துகொள்ளும்படி அனுப்பினான். அப்பால் கிருதவர்மனும் கிருபரும் சேர்ந்து

சிகண்டியை எதிர்ப்பதை அஸ்வத்தாமன் கண்டான். சிகண்டியின் வில்லை, விழியிலாத முகத்தைக் கண்டு மீண்டும் எங்கோ ஓர் ஆற்றங்கரையில் அவனுடன் அமர்ந்து சொல்லாடி விழிப்புகொண்டான்.

சாத்யகி போரில் உளம்சலிக்காதவனாக இருந்தான். சினத்தையும் எதிர்பார்ப்பையும் கடந்துவிட்டிருந்தான். ஆற்றுவனவற்றை செம்மையுறச் செய்வது அறிவிற்குறைந்தவர்கள் சிலரின் இயல்பு. அவர்கள் புறத்தை ஒழுங்கமைப்பதனூடாக தங்களை திரட்டிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் சலிப்படைவதே இல்லை. இன்னும் பல்லாண்டுகாலம் அவ்வண்ணம் அம்புகளை தொடுத்துக்கொண்டிருந்தாலும் இவன் பின்னடையப் போவதில்லை. வெல்லும் அம்பு ஓர் எண்ணத்தால் மேலெழுந்தது. தோல்வி ஒரு கணச் சலிப்பால் விடப்படும் இடைவெளியில் நிகழ்வது. இவன் சலிக்காத கடல். வேறு வழியில்லை என உணர்ந்து அஸ்வத்தாமன் பிரம்மாண்டாஸ்திரத்தை எடுத்தான். அதைக் கண்டதுமே சாத்யகி தன் தேரைத் திருப்பி பின்னால் கொண்டு செல்லும்படி ஆணையிட்டான்.

அவன் தேர் வளைந்து பின்னகர்வதற்குள் அஸ்வத்தாமனின் பிரம்மாண்டாஸ்திரம் சென்று அவன் தேரை தாக்கியது. சற்றே இலக்கு பிழைத்து தேருக்கு மிக அருகே அது தரையை அறைந்தது. ஆயினும் மண்ணும் புழுதியுமாக வெடித்து மலர்ந்தது. தேர் சிதைந்து துண்டுகளாக சிதற புரவிகள் ஊன் கீற்றுகளாக பறந்து எழுந்து பின்னர் பொழிந்தன. அம்பின் விசையில் சாத்யகி தேரிலிருந்து தூக்கி காற்றில் வீசப்பட்டான். நாற்புறமும் உடல்களெனத் தெறித்து அகன்ற கிராதப்

படைகளின் நடுவே சிதைந்து கிடந்த யானையுடல் ஒன்றின்மீது சென்று விழுந்தான். அவன் உடலில் இருந்த கவசங்கள் அனல்கொண்டு பழுத்திருந்தன. யானை உடலின் நிணக்கூழில் விழுந்து புரண்டெழுந்தமையால் அவை உறுமலோசை எழுப்பியபடி வெப்பமழிந்தன. அவன் உடலிலிருந்து குருதிநீர் கொதித்த ஆவியெழுந்தது.

கொக்கிகளை வீசி அவனை கவர்ந்தெடுத்து பின்னால் கொண்டு சென்றனர் படைவீரர்கள். பிரம்மாண்ட அஸ்திரத்தால் கொன்று வீசப்பட்ட கிராதர்களின் உடல்கள் விண்ணிலிருந்து ஒவ்வொன்றாக நிலத்தை வந்தறைந்துகொண்டிருந்தன. சாத்யகி அப்பால் கொண்டுசெல்லப்படுவதை அஸ்வத்தாமன் கண்டான். அம்பின் வெடிப்புவிசையாலேயே அவன் அம்பின் அனலிலிருந்து அகற்றப்பட்டான். வெம்மையிலிருந்து அவனைக் காக்க ஊறித்திரண்டு காத்திருந்தது யானை. அறியா வல்லமை ஒன்றால் அவன் காக்கப்படுவதுபோல. அக்கணம் அஸ்வத்தாமன் உணர்ந்தான், அப்போரில் சாத்யகி கொல்லப்படப்போவதில்லை. அவனுக்கு வேறு களம் காத்திருக்கிறது. "செல்க! முன்செல்க!" என ஆணையிட்டு அந்தச் சிதைவுகளினூடாக தேர் செலுத்தி முன்னால் சென்றான் அஸ்வத்தாமன்.

அவனுக்குப் பின்னால் கூச்சலிட்டபடி உத்தரபாஞ்சாலத்தின் படைகள் முன்னெழுந்து வந்தன. சற்று முன்பு வரை கிராதர்களின் அம்புகளால் தங்கள் தோழர்கள் வீழ்ந்ததைக் கண்டு அவர்கள் அச்சம் கொண்டிருந்தனர். அவ்வாறு அஞ்சியதை எண்ணி அப்போது சீற்றம் கொண்டனர். விழுந்து கிடந்து துடித்த கிராதர்களின் கழுத்தை வெட்டி தலைகளைத் தூக்கி அப்பால் எறிந்தனர். வேல்களை ஓங்கி அவர்களின்

நெஞ்சுகளில் குத்தி உடல் பற்றிச் சுழன்று அப்பால் தாவினர். அஸ்வத்தாமன் தனக்கு சுற்றும் உத்தரபாஞ்சாலப் படைவீரர்கள் கொந்தளித்துக் கொண்டிருப்பதை பார்த்தான். போர் மூண்டு அத்தனை நாட்களாகியும்கூட வெறிகொண்டு அமலையாட அவர்களால் இயல்கிறது. உள்ளிருந்து குருதி கேட்கும் அத்தெய்வம் ஒருகணமும் விடாயடங்கவில்லை.

அங்கு வந்த படைகளில் எஞ்சும் சிலரே தாங்கள் என்ற உணர்வு அவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை. அக்களத்திலிருந்து உயிருடன் செல்லப்போவதில்லை என்றும் தெரியவில்லை. இருப்பு என்பது முடிவிலாச் சுருள் என அவர்களின் அகம் நம்பியது. இன்மையின் முந்தைய கணம் அது என தோன்றவில்லை. இப்புவியில் எவ்வுயிருக்கேனும் தாங்கள் யாரென்று தெரியுமா? இயற்றுவது என்ன என்று எவ்வுயிராவது அறிந்திருக்குமா? சொல் பெருக்கிக்கொண்டிருக்கும் மானுடரோ சொல்லின்மையில் நெளிந்து கொண்டிருக்கும் சிறுபுழுவோ? சித்தத்தில் சற்றேனும் வேறுபாடு அவற்றுக்குள் இருக்குமா? வீழ்ந்த தலைகளை உதைத்து விளையாடிக்கொண்டிருந்தவர்களின் முகங்களில் வெறிக்களிப்பு நிறைந்திருந்தது. அவர்களிலெழுந்த தெய்வங்கள் குருதிக்களியாட்டு கொண்டிருந்தன.

அஸ்வத்தாமனின் படை பாண்டவப் படையைப் பிளந்து முன்னெழுந்து சென்றது. மறுபுறம் சூரியனின் ஏழு கதிர்களில் கிருதவர்மனின் கதிரும் கிருபரின் கதிரும் தயங்கி நின்றுவிட துரியோதனனும் சுபாகுவும் நடத்திய கதிர்கள் பாண்டவப் படையை பிளந்து சென்றன. சகுனி நடத்திய படையை எதிர்கொள்ள திருஷ்டத்யும்னன் விரைந்தான். மேலும் மேலும் ஊடுருவி உள் சென்றுகொண்டிருந்த அஸ்வத்தாமன்

திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் இருபுறங்களிலாக விலகியபோது ஏற்பட்ட வெற்றிடத்தினூடாக சென்று யுதிஷ்டிரனை சந்தித்தான். எதிர்பாராது திரை விலக மேடையில் தோன்றிய பயிலா நடிகனென திகைத்து மறுகணம் தன்னை திரட்டிக்கொண்டு "எழுக! படை எழுக!" என்று ஆணையிட்டபடி அம்புகளைத் தொடுத்து அஸ்வத்தாமனை நோக்கி வந்தார் யுதிஷ்டிரன்.

அவருடைய இரு மைந்தர்களும் தயங்கிய அம்புகளுடன் அவரைத் தொடர்ந்து வந்தனர். அஸ்வத்தாமன் யுதிஷ்டிரனை வியப்புடன் பார்த்தான். அவர் சற்றும் அஞ்சவில்லை என்று தெரிந்தது. ஒவ்வொரு முறையும் அவர் அஞ்சுகிறார் என்றே போருக்குப் பின் களநோக்கர்களால் கூறப்பட்டது. அதை நம்ப அவர்கள் அனைவரும் விழைந்தனர். களத்தில் நிகழும் மறத்தை கணிப்புகள் வழியாக அரசர்கள் வெல்வதை உணர்ந்திருந்தமையால் ஒவ்வொருவரும் அதை அஞ்சினர், வெறுத்தனர். யுதிஷ்டிரனையும் சகுனியையும் வெறுக்காத எப்படைவீரரும் இரு தரப்பிலும் இருக்க வாய்ப்பில்லை. அவர்கள் இருவரையுமே கோழைகளென மீண்டும் மீண்டும் சொல்லி நிறுவிக்கொண்டனர். அஸ்வத்தாமனுக்கும் அவ்வெண்ணம் இருந்தது. ஆகவே அவருடைய தெளிந்த விழிகள் அவனை திகைப்படையச் செய்தன.

எவ்வகையிலும் அஸ்வத்தாமனுக்கு தான் இணையல்ல என்றும் ஐந்து அம்புகளுக்கு மேல் அவன் முன் வில்லுடன் நின்றிருக்க இயலாதென்றும் அறிந்திருந்தார் எனத் தெரிந்தது. அவருடைய முதல் தயக்கம் அச்சத்தினால் அல்ல என்று அவருடைய முகத்திலிருந்தும் உடலசைவிலிருந்தும் அஸ்வத்தாமன் உணர்ந்தான். அது பிறிதொன்று. போரெனும்

நிகழ்வையே ஒவ்வாமையுடன் விலக்கும் ஒன்று அவருள் உள்ளது. ஒவ்வொருமுறையும் அதை மிதித்துக்கடந்தே அவர் போருக்கு எழுகிறார். அஸ்வத்தாமன் அவருடைய எல்லையை அறிய விழைந்தான். எக்கணத்தில் அவர் பின்னடைவார்? எத்தருணம் உடைவிற்குரியது?

யுதிஷ்டிரனின் மெய்க்காவல் படை அரசகாவலுக்கென்று அர்ஜுனனால் உருவாக்கப்பட்டது. விராடநாட்டிலிருந்தும் இந்திரப்பிரஸ்தத்திலிருந்தும் தன் முதன்மை மாணவர்களை தெரிவு செய்து பயிற்றுவித்து அப்படையை அர்ஜுனன் அமைத்தான். யுதிஷ்டிரனை போர்க்களத்தில் காத்து நின்ற அப்படை முந்தைய நாள் கர்ணனால் பெரும்பகுதி அழிக்கப்பட்டது. அன்று காலை திருஷ்டத்யும்னன் எஞ்சிய பாண்டவப் படையின் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் சிறந்த வில்வீரர்களை தேர்வு செய்து மீண்டும் அக்காவல் படையை ஒருங்கிணைத்தான். ஆயிரத்தெட்டுபேர் கொண்ட அப்படை நூறு தேர்களும் ஒவ்வொரு தேருக்கும் பத்து புரவி வில்லவர்களும் கொண்டது.

மெய்க்காவல் படையினர் விந்தையான தனிக் குழுவினர். ஒரு படையின் ஆற்றல்மிக்கவர் அவர்கள். ஆனால் பெரும்பாலும் போரை வெறுமனே நோக்கி நின்றிருக்க ஆணையிடப்பட்டவர்கள். ஒவ்வொரு கணமும் உள்ளத்தால் போர்புரிந்தபடி களத்தில் நின்றிருப்பவர்கள். அஸ்வத்தாமன் அணுகிவருவதை அவர்கள் விரும்பினார்கள். துடிப்புடன் முன்னெழுந்து யுதிஷ்டிரனை சூழ்ந்துகொண்டு "அரசே, இப்போரை எங்களுக்கு அளியுங்கள்... இதை நாங்கள் நிகழ்த்துகிறோம்!" என்று கூவினர். அஸ்வத்தாமன் உரக்க நகைத்து "யுதிஷ்டிரரே, வேளக்காரப் படைக்குப் பின்

ஒளிந்துகொள்க! கோட்டைக்குள் அரண்மனையில் அமைந்து கொள்வது அதைவிடவும் நன்று" என்று கூவினான்.

அவனுடைய ஏளனத்தால் யுதிஷ்டிரன் சினமுறவில்லை "ஆசிரியர்மைந்தரே, நான் என்றும் இறப்புக்கு அஞ்சவில்லை. இனி சிறுமைக்கும் அஞ்சுபவன் அல்ல. என்னை சிறுமைசெய்பவனுக்கே அச்சிறுமைகளை அளித்து அப்பால் நின்றிருக்க நேற்று கற்றேன். எக்களத்திலும் நான் விரும்பிப் பின்னடைந்ததில்லை. என்னை பணயப்பொருளாக கைப்பற்றுவதை ஒழிதலின் பொருட்டே பின்னிற்கிறேன்" என்றார். "வில்தேராதவனே நான். ஆனால் ஒவ்வொரு உயிருக்கும் ஒரு சிறுபடைக்கலனையாவது தெய்வங்கள் அளித்துள்ளன" என்றபடி வில்குலைத்து அவனை நோக்கி வந்தார். அவருடைய அம்புகள் எழுந்து வந்து அஸ்வத்தாமனின் தேருக்குமேலும் தேரைச்சூழ்ந்தும் பறந்தமைந்தன.

இருபுறமும் சூழ்ந்திருந்த குதிரைப்படையினர் அஸ்வத்தாமனை தொடர்ந்து வந்த உத்தரபாஞ்சாலத்தின் படைவீரர்களை தங்கள் திறன்மிக்க அம்புகளால் தொலைவிலேயே தடுத்து நிறுத்திவிட அஸ்வத்தாமன் மட்டும் தன் தேரில் முன்னகர்ந்து பாஞ்சாலப் படைவீரர்களிடமிருந்து அகன்று பாண்டவப் படைகளால் முற்றிலும் சூழப்பட்டான். இலக்கு பிழைக்காத அவனுடைய அம்புகள் பட்டு பாண்டவர்களின் மெய்க்காவல் படையின் வில்லவர்கள் அலறிவிழுந்தனர். ஆக்னேயாஸ்திரத்தால் அறைந்து தேர்களை பற்றி எரிய வைத்தான். மாருதாஸ்திரத்தால் தேர்களை தூக்கி கவிழ்த்தான். வாரணாஸ்திரத்தால் அவற்றை அள்ளிச்சுழற்றி அப்பால் விசிறினான்.

அவனுடைய அம்புகளை தடுக்கவியலாதென்று அவர்கள் உணர்ந்திருந்தனர். அவர்களின் தலைவன் "அரசே, பின்னடைக! இப்போரை நாங்கள் நடத்துகிறோம்! பின்னடைக!" என்று கூவினான். "உயிர்கொடுங்கள்! அரசருக்கு உயிர்கொடுங்கள்!" என்று துணைப்படைத்தலைவன் கூவ இருபுறத்திலிருந்தும் மெய்க்காவலர்கள் வெறியுடன் கூவியபடி திரண்டு யுதிஷ்டிரனை மறைத்தனர். யுதிஷ்டிரன் "விலகுக! இது என் ஆணை. விலகுக!" என்றார். "அரசே, எங்கள் கடன் இது" என்று மெய்க்காவல் படைத்தலைவன் கூவ "இந்திரப்பிரஸ்தத்தின் அரசனின் ஆணை இது. என் பொருட்டு பிறர் முன்னின்று உயிர்துறக்க நான் ஒப்பேன். விலகுக!" என்று யுதிஷ்டிரன் ஆணையிட்டார்.

அவன் தலைவணங்கி விலகாமல் நிற்க அஸ்வத்தாமன் "அஞ்சவேண்டியதில்லை. அவர்களை நானே விலக்குகிறேன்" என மகராஸ்திரத்தை தொடுத்தான். அது ஒன்று நூறாயிரமெனப் பெருகி அவர்களை கொன்று வீழ்த்தியது. உடைந்த தேர்களாலும் சரிந்த புரவிகளாலும் யுதிஷ்டிரன் வரம்பு கட்டப்பட எஞ்சிய மெய்க்காவலர் படையினர் சுற்றிவர முயன்றனர். தேடித்தேடி அவர்களைக் கொன்றபின் "வருக, அரசே!" என்றான் அஸ்வத்தாமன். "உங்கள் விற்தொழில் காட்டுக!" தன் மெய்க்காவலர்கள் மடிந்ததை நோக்கி நீள்மூச்செறிந்த பின் "ஆம், இதோ" என அம்புகளைத் தொடுத்தபடி யுதிஷ்டிரன் முன்னெழுந்து வந்தார்.

யுதிஷ்டிரனின் ஒவ்வொரு அம்பையும் உலர்ந்த சுள்ளியை ஒடித்தெறிவதுபோல் அஸ்வத்தாமன் அறைந்து வீழ்த்தினான். பிரதிவிந்தியனும் யௌதேயனும் ஊர்ந்த தேர்களை அவன் அம்புகளால் அறைந்து அச்சுகளையும் சகடங்களையும் ஒடித்து

ஒருபக்கம் சாய்ந்து குடை நிலம்தொட விழச் செய்தான். அவர்கள் தேரிலிருந்து தாவி இறங்கி ஓட அம்புகளால் அடித்து புழுதி கிளப்பி அவர்கள் மேல் பொழியச் செய்தான். அவர்களின் தலைக்கவசங்களை உடைத்தான். மார்புக்கவசங்களும் தோள்கவசங்களும் உடைய வெற்றுடலுடன் அவர்கள் களத்தில் திகைத்து நின்றார்கள். யுதிஷ்டிரனிடம் "மைந்தர் உயிர்காப்பதென்றால் மணிமுடியைக் கழற்றி மண்ணில் வையுங்கள்" என்று அஸ்வத்தாமன் ஆணையிட்டான். "இக்கணமே... இல்லையேல் இருவரின் தலை உதிர்வதை காண்பீர்கள்."

யுதிஷ்டிரன் அவர்களை ஒருகணம் நோக்கிவிட்டு "என் இறந்த உடலிலிருந்து அதை நீர் எடுத்துக்கொள்ளலாம்" என்றார். படைப்பின்னணியில் "அரசரை காத்துக்கொள்க! அரசரின் உயிர் காக்க எழுக!" என்று பாண்டவப் படையின் முரசுகள் முழங்கின. ஆனால் அர்ஜுனன் கர்ணனால், பீமன் துரியோதனனால், சாத்யகி கிருதவர்மனால், திருஷ்டத்யும்னன் சகுனியால், சிகண்டி கிருபரால் முற்றாக தடுக்கப்பட்டுவிட்டிருந்தனர். யுதிஷ்டிரன் அம்புகளை தொடுத்த பின் "இதுவே போர்முடிவென்பது தெய்வங்களின் எண்ணமெனில் நாம் எதுவும் செய்வதற்கில்லை. போரிடுக!" என்று கூவினார். அவருடைய அம்புகள் அஸ்வத்தாமனின் கவசங்களில் பட்டு தெறித்தன. தேர்த்தூண்களை வந்தடைந்து உதிர்ந்தன.

அஸ்வத்தாமன் தன் முகத்தருகே வந்த அம்பை கையிலிருந்த அம்பால் தட்டி தெறிக்கவிட்டு யுதிஷ்டிரனின் தேரை அறைந்து உடைத்தான். அவருடைய தேர்ப்பாகன் தேருடன் அலறியபடி சரிய புரவிகள் கட்டவிழ்ந்து கனைத்தபடி தாவி அகன்றன. அம்புகளுடன் குறுக்கே விழுந்த ஏழு புரவி வில்லவர்களை

வீழ்த்தி ஏகாஸ்திரத்தால் யுதிஷ்டிரன் வில்லை அறுத்தான். தங்கள் தேர்களுடன் இருபுறத்திலிருந்தும் வந்து யுதிஷ்டிரனை காக்க முயன்ற வில்லவர்களை வீழ்த்தி அவர்களின் தேர்களை மண்ணிலிருந்து தூக்கி அறைந்தான். மேலும் முன்னகர்ந்து யுதிஷ்டிரனின் நெஞ்சக்கவசத்தையும் தோளிலைகளையும் உடைத்தான். "மணிமுடியை கழற்றி வையுங்கள், யுதிஷ்டிரரே. இனி போரில்லை... சிறுமைகொண்டு களம்நிற்பதை ஒழிக... மணிமுடியை கழற்றி வையுங்கள்."

அமைதியான குரலில் "என் துண்டான தலையில் இருந்து அதை எடுத்துக்கொள்க, பாஞ்சாலரே! அதில் அறப்பிழையும் இல்லை. ஷத்ரியர்களுக்குரிய நெறி அது. உம் தந்தை நெறி மீறி இக்களத்தில் கொல்லப்பட்டதற்கு ஈடு செய்யலுமாகும்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். வில்தாழ்த்தி சில கணங்கள் நோக்கியபின் அஸ்வத்தாமன் "அரசே, முடிசூடிய அரசன் நடந்து கொள்வதற்கு சில நெறிகள் உண்டு. இக்கணம் வரை களத்தில் நெறிமீறாதவன் நான் ஒருவனே. இனியும் நெறிகளைப் பேணவே விழைகிறேன். இக்களம் எங்களால் முற்றும் வெல்லப்பட்டபின் முறைப்படி அந்த மணிமுடியை உங்கள் தலையிலிருந்து பெற்றுக்கொள்வோம். செல்க!" என்றான்.

"பாஞ்சாலரே, இது உயிர்க்கொடை எனில் நான் இதை ஏற்க இயலாது" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "நான் பேரரசன். எவரிடமிருந்தும் கொடைபெறலாகாது." அஸ்வத்தாமன் வியப்புடன் நோக்கி பின் புன்னகைத்து "அளியால் அல்ல, நெறிநின்று மட்டுமே இதை சொல்கிறேன்" என்றான். "தாங்கள் இந்திரப்பிரஸ்தத்தின் பேரரசர். நான் உத்தரபாஞ்சாலத்தின் சிற்றரசன். நான் இப்போது மணிமுடியை பறித்தால் அது தனித்து வந்த அரசனிடம் கொள்ளையடித்ததாகவே ஆகும்.

அது கிராதரும் நிஷாதரும் கொள்ளும் வழிமுறை. உங்கள் படையை வென்று கொடிமுறித்த பின்னரே நான் அம்மணிமுடியை முறைப்படி கொள்ளவேண்டும்" என்றான்.

"எனில் சிற்றரசனென எனக்கு தலைவணங்கி பணிந்து பின்னகர்க!" என்று யுதிஷ்டிரன் சொன்னார். "அன்றி என் தலை கொய்து இம்மணிமுடியுடன் செல்க... நீர் என்னை களம்வென்றீர் என்றே என் குடி கருதுமென சொல்லளிக்கிறேன்" என்றார். அஸ்வத்தாமன் ஒருகணம் சொல்லிழந்தபின் மீண்டு "வணங்குகிறேன், பேரரசே!" என்று தலைகுனிந்தபின் தேர்ப்பாகனிடம் "தேரை பின்செலுத்துக!" என்று ஆணையிட்டான். தேர் பின்னூர்ந்து கௌரவப் படைகளுடன் இணைந்து கொண்டது.

தேர்த்தட்டில் தளர்ந்து அமர்ந்த அஸ்வத்தாமனை நோக்கி முதிய தேர்ப்பாகன் திரும்பி "தங்கள் ஆணைக்கு கட்டுப்பட்டவன் எனினும் இதை நான் சொல்லியாகவேண்டும், அரசே" என்றான். ஒருபோதும் அத்தகைய சொல்லையோ நோக்கையோ அவனிடம் கண்டிராத அஸ்வத்தாமன் திகைத்தபடி நோக்க "ஒன்றை அளிப்பவன் நிகரான ஒன்றை எதிர்பார்க்கிறான். அது அளிக்கப்படாவிடில் சினமடைகிறான். ஆறாப் பெருஞ்சினமொன்றின் விதை உங்கள் நெஞ்சில் ஊன்றப்பட்டுவிட்டது" என்றான் பாகன்.

"என்ன சொல்கிறாய்?" என்று கூவியபடி முன்னகர்ந்த அஸ்வத்தாமன் "யார் நீ?" என்றான். பாகன் "வஞ்சம் மீதூறலாம். அதன்பொருட்டே நீங்கள் நெறிமீறவும்கூடும்" என்றான். "யார்? யார் நீ?" என்று அஸ்வத்தாமன் கூச்சலிட்டான். பாகனின் கண்கள் இறந்த உடலில் விழித்திருப்பவை போலிருந்தன. "அறப்பெருஞ்செல்வன் முன்னால் நின்று தருக்கிவிட்டீர்கள்.

சொற்களைக் கேட்கும் தெய்வங்கள் சூழ்ந்திருக்கும் இப்பெருங்களத்தில் நின்று அதை சொல்லிவிட்டீர்கள்." அஸ்வத்தாமன் உடைந்த குரலில் "யார்? யார்?" என்றான். "எவருக்கும் விலக்கில்லை" என்றான் பாகன். "என்ன?" என்றான் அஸ்வத்தாமன்.

அதற்குள் வலப்பக்கமிருந்து பறந்து வந்த பிறைஅம்பொன்று பாகனின் தலையை கொய்து சென்றது. தலையறுந்த உடல் வெறியாட்டெழுந்த பூசகன் என நடுக்கு கொண்டு அவன்முன் அமர்ந்து பின் கால்கள் இழுத்துக்கொண்டு துடிக்க தலை அப்பால் விழுந்து கீழே பெருகிப் பரந்திருந்த தலையுடல்கால்நெஞ்சுதொடைகளின் பரப்பில் மறைந்தது. அறியாமல் தலைக்கென விழிதேடிய பின் தலைதிருப்பி நோக்கியபோது குருதி குமிழியிட்டெழ பாகனின் உடல் அமரத்திலிருந்து மறுபக்கமாக சரிந்தது.

இருட்கனி - 54

அஸ்தினபுரியின் வில்லவர் படையொன்றை தலைமை தாங்கி தேர்த்தட்டில் வில்லுடன் நின்று பாண்டவப் படையை நோக்கிக்கொண்டிருந்தபோது சுபாகு தன்னை அறியாமலேயே விந்தையான ஓர் உளமலர்வை அடைந்தான். சிற்றகவையிலேயே அவன் உள்ளத்தில் இருந்த ஆழ்கனவு அது. படைமுகப்பில் நின்று ஒருகையில் வில்லும் மறுகையில் அம்புமென போர்முகம் செல்வது. தன் ஆணைக்கு ஏற்ப பின்புறம் படையொன்று பெருகி வந்துகொண்டிருப்பது. அது உடல் பெருகி பேருருவம் கொள்வதே தான். ஆனால் ஒருபோதும் அந்த வாய்ப்பு அவனுக்கு அமையவில்லை.

கௌரவ நூற்றுவரில் அவனை ஒரு போர்வீரன் என எவரும் மதித்ததில்லை. எப்போதும் மூத்தவர்களுக்கு அணுக்கனாக இணையனாகவோ பின்துணையாகவோதான் அவன் களம் வர நேர்ந்தது.

அன்று எழுகதிர் சூழ்கையின் ஒரு கதிரை அவன் தலைமை தாங்கி நடத்த வேண்டுமென்று அஸ்வத்தாமன் வகுத்து அவனிடம் ஆணையிட்டபோது முதலில் அது எவ்வகையிலும் உள்ளத்தை வந்தடையவில்லை. அவன் விழி சுருக்கி "நம்மிடம் வில்லவர் படை எவ்வளவு எஞ்சியுள்ளது?" என்று கேட்டான். அஸ்வத்தாமன் கசப்பு கொண்ட புன்னகையுடன் "வில்லேந்தியவர்கள் அனைவரையும் வில்லவர்கள் என்று கொள்ளவேண்டியதுதான்" என்றான். பின்னர் புன்னகை விரிய "இப்பொழுது படைகள் மிகவும் குறுகிவிட்டன. அம்புகள் செல்லவேண்டிய தொலைவும் குறைவே" என்றான். சுபாகு அதன் பின் மறுமொழி எதுவும் கூறாமல் "நன்று" என்று தலைவணங்கினான். "கவலைவேண்டாம் கௌரவரே, இங்கே அம்பேற்க வருபவர்களுக்கும் நெஞ்சுகாட்டுவதன்றி ஒன்றும் தெரியாது" என்றபின் அஸ்வத்தாமன் வெடித்துச் சிரித்தான்.

படைமுகப்பிற்கு வந்து தன் பாகனை பார்த்தபோதுகூட அவன் தலைமை தாங்கச் செல்வதாகவே எண்ணவில்லை. வழக்கம்போல மூத்தவர்களுக்கு அணுக்கனாக உடன்செல்லும் உளநிலையிலேயே இருந்தான். பாகன் அருகணைந்து தலைவணங்கி "தாங்கள் இக்கதிர் வடிவின் முகப்பில் நின்றிருக்கவேண்டும் என்பது அஸ்வத்தாமனின் ஆணை" என்றான். அச்சொற்கள் புரியாமல் சுபாகு நோக்க "தங்களுக்கு முன்னால் ஏழு தேர்கள் முகப்புக்காவலுக்கென நிலைக்கேடயங்களுடன் செல்லும். தங்களுக்கு இருபுறமும்

இவ்வில்லவர்கள் அணிவகுப்பார்கள்" என்றான். அப்போதுதான் முழுக்க புரிந்துகொண்டு சுபாகு உளம் அதிர்ந்தான். பின்னர் அவ்வதிர்வு ஏன் அத்தனை விசைகொண்டிருக்கிறது என புரிந்துகொண்டான். கௌரவர்களில் அவன் மட்டுமே மூத்தவருக்கு இளையோனாக எஞ்சியிருக்கிறான்.

அவன் நடுங்கிக்கொண்டிருந்தான். பாகன் "நூறு தேர்வில்லவர்கள், முந்நூறு புரவிவில்லவர், வேலேந்திய காலாட்கள் ஐந்நூறு. ஆயிரமென தகைக்க முயன்றார்கள். படைவீரர்கள் இங்கே மிகக் குறைவு, அரசே" என்றான். தேரில் நின்ற வில்லவர்கள் அனைவருமே ஒவ்வாத கவசங்களை அணிந்திருந்தனர். பலர் பிழையாக அணிந்திருந்தனர். விற்களும் அவர்களுடையவை அல்ல என்று தெரிந்தது. எவருக்குமே ஆவக்காவலர்கள் இல்லை. தேர்ப்பாகன்கள் பலர் சிறுவர்களாகத் தெரிந்தனர். பலர் தலைக்கவசங்களை கையிலேயே வைத்திருந்தார்கள். தேர்களின் கொடிகள்கூட கீழே விழுந்தவற்றை எடுத்து உதறி கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆகவே அவை குருதியும் சேறும் படிந்து ஆட்டுக்காதுகள்போல் தொங்கிக்கொண்டிருந்தன.

அவர்கள் அனைவருமே அரைத்துயிலில் இருப்பதுபோல் தோன்ற சுபாகு "இவர்கள் அஸ்தினபுரியில் போர் பயின்றவர்களா என்ன?" என்றான். "இப்போது அந்த எல்லைகள் அனைத்தும் அழிந்துவிட்டன. மிகச் சில படைக்குழுக்களே நாட்டுக் கொடியுடனும் குலக் குறிகளுடனும் எஞ்சியுள்ளன. மற்றவர்கள் அனைவரும் பல வகையிலும் படைகளிலிருந்து உயிர் எஞ்சியவர்கள். எழுந்து நடக்க ஆற்றல் கொண்டவர்கள் அனைவரையுமே படைக்கு கொண்டுவந்தோம். புரவியூரத் தெரிந்தவர்கள் அனைவருமே வில்லேந்தினர். ஷத்ரியர்கள்

அனைவருமே தேர் ஏறினர். வில்லேந்தும் பயிற்சி கொண்டவர்கள் சிலர். அல்லாதவர்களும் இங்குள்ளனர். இவர்களிடையே எந்த பொதுத்தன்மையும் இன்றில்லை" என்றான் பாகன்.

மேலும் அதை பேச விரும்பாமல் கையசைத்துவிட்டு சுபாகு தேரில் ஏறிக்கொண்டான். தேர் அவனுக்காக காத்து நின்றது. அவன் ஏறிக்கொண்டதும் புரவிகள் பொறுமையிழந்தவைபோல் முன்னும் பின்னும் உடலசைத்து குளம்புகளால் நிலத்தை தட்டின. அதற்கேற்ப தேர் பொறுமையிழப்பை தானும் காட்டியது. தேர்த்தட்டில் நின்று வில்லை எடுத்து அருகே ஊன்றியபோது அவ்வில்லுக்கும் தனக்குமிடையே எத்தனை தொலைவு என்பதை சுபாகு உணர்ந்தான்.

வில்லவனாக வேண்டுமென்ற கனவு இளமையிலேயே அவனை விட்டு அகன்றுசென்றது. தன் உடன்பிறந்தாரைப்போல் பெருமல்லராக வேண்டுமென்று பின்னர் விழைந்தான். பல முறை பயிற்சிக்களத்தில் தூக்கி நிலத்தில் அடிக்கப்பட்ட பின்னர் மெல்ல பின்னகர்ந்து போர்க்கலைகளை தவிர்க்கலானான்.

அதன் பின்னர் புரவியூர்தலில் மட்டுமே ஆர்வம் எஞ்சியிருந்தது. புரவியில் உடல் உருகி காற்றென ஆகி மறையும்படி விசையும் விரைவுமாக பாய்வதை அவன் விழைந்தான். அப்போது அடுக்கப்பட்ட எண்ணங்கள் கலைந்து தேவையற்ற அனைத்தும் பின்சிதறி தெறிக்க எஞ்சியவை கூர்கொண்டு ஒளி கொண்டு நின்றிருக்கும். தன் சிறந்த சொல்லாட்சிகளை எல்லாம் அவன் புரவிப்பாய்ச்சலுக்குப் பின்னரே அறிந்தான். மூச்சிளைக்க உடல் வியர்த்துவழிய முகம்மலர்ந்து நின்றிருக்கையில் அச்சொற்றொடர் அந்த

விரைவில் எப்புள்ளியில் தன்னை வந்தடைந்தது என எண்ணி வியந்துகொள்வான். ஆயினும் வேட்டையை அவன் வெறுத்தான். அங்கே வேட்டையாடுபவனின் திசையை வேட்டை விலங்கு முடிவுசெய்கிறது. கொல்லப்பட்டு கிடக்கும் விலங்கு கொன்றவனை இறுதியாக வென்றுவிடுகிறது.

நூல்கற்றோன் எனும் அடையாளம் தனக்கு உகந்ததாக அமையக்கூடும் என்று எப்போது புரிந்துகொண்டோம் என்று அவனுக்கு தெரியவில்லை. என்றோ ஒருநாள் சூதரோ நிமித்திகரோ கூறிய எளிய கூற்றொன்றை உடன்பிறந்தார் சூழ்ந்த அவையில் அவன் கூறியபோது துரியோதனன் திகைத்து இரு கைகளையும் விரித்து அவனைப் பார்த்த பின்னர் எழுந்து வந்து அள்ளி நெஞ்சோடணைத்து, முதுகில் தன் பெருங்கையால் ஓங்கி அறைந்து நகைத்து "இவன் நம்மில் அறிஞன். நம்மில் ஓர் அறிஞன் எழுந்துளான்! நோக்குக, நம்மில் ஒரு அறிஞன்!" என்றான். உடன்பிறந்தவர்கள் அனைவரும் கைதூக்கி கூச்சலிட்டு நகைத்தனர். துச்சாதனன் பெருமிதம் ததும்பும் முகத்துடன் அவனை தோள் பற்றி இழுத்து தன் தசைதிரண்ட கைகளால் நெஞ்சோடு சேர்த்து இறுக அணைத்துக்கொண்டான்.

துரியோதனன் "சொல்க இளையோனே, இவர்கள் அறிய மீண்டும் சொல்க!" என்று கூவினான். "எளிய கருத்துதான்" என அவன் நாணி முகம்சிவக்க "எளிய கருத்தா? நீ அதை சொன்னபோது அது அரிதென்று மட்டுமே எனக்கு புரிந்தது. எங்களுக்குப் புரியும்படி மீளச் சொல் என்று கேட்கிறேன்" என்றான் துரியோதனன். கைகளைத் தட்டி "அனைவரும் செவிகொள்க... செவிகொள்க அனைவரும்... இளையோன் அரிய கருத்தை மீண்டும் சொல்லவிருக்கிறான்" என்றான். சுபாகு

மேலும் நாணி "ஒரு படை அதன் விலங்குகளை எப்படி நடத்துகிறது என்பதிலுள்ளது அதன் பயிற்சி. விலங்குகளை வன்மையாக நடத்தும் படை முழுக்கப் பயிலாதது. முதற்கட்ட எழுச்சிக்குப் பின் எளிதில் உளம் தழைந்து பின்னடைவது" என்றான்.

"ஏன்?" என்று துச்சாதனன் கேட்டான். "அதையும் அவனே சொல்வான். நீ முந்தாதே" என்றான் துரியோதனன். "அவ்வளவுதான் அக்கருத்து" என்றான் சுபாகு. "ஏன்? அதை சொல்" என்று துரியோதனன் கேட்டான். "விலங்குகள் பிழை செய்தால் என்ன செய்வது?" என்றான் துர்மதன். "விலங்குகள் போலவே ஏவலரும் பிழைகள் செய்கிறார்கள்" என்றான் துச்சகன். "அனைவரும் பிழை செய்தால் அதன்பொருள் நீ பிழையறச் சொல்லவில்லை என்பதே" என்றான் துர்முகன். "அனைவருமே பிழைகள்தான் செய்கிறார்கள். பிழைகள் இணைந்து பெரும்பிழையென படை ஒழுகிச்செல்கிறது" என்று சுஜாதன் சொன்னபோது அனைவரும் திரும்பிப் பார்த்தனர். அவன் சொன்னதும் புரியாமல் திரும்பி சுபாகுவிடம் "ஏன் விலங்குகளை அன்பாக நடத்தவேண்டும்?" என்று துச்சலன் கேட்டான். "இரு, அவனே சொல்வான். அதன்படி நாம் நடந்துகொள்வோம்..." என்றான் துச்சாதனன்.

அவர்களுக்கு தான் சொல்வது சற்றும் புரியவில்லை என்று உணர்ந்து சுபாகு சலிப்படைந்தான். ஆனால் அதை கடந்துசென்று "நான் இவ்வாறு நினைக்கிறேன். பிழையென்றும் இருக்கலாம். விலங்குகளிடமும் பொருட்களிடமும் வன்மையை காட்டுவதென்பது நம்முள் திகழும் வன்மை அறியாமல் வெளிப்படுவதே. பயிலா உள்ளம்தான் அவ்வாறு இலக்கில்லாமல் வன்மையை வெளிக்காட்டும். பயிற்சி என்பது

தேவையானபோது தேவையான இடத்தில் தேவையான அளவுக்கு மட்டுமே வன்மையை காட்டுவது. தேவையில்லாமல் வெளிப்படும் வன்மை வீணாகும் உள ஆற்றலே. அடக்காமல், மறைக்காமல், தவிர்க்காமல் உள்ளத்தில் வன்மையை எல்லைகட்டி நிறுத்துபவனையே வீரன் என்கிறோம்...” என்றான்.

“எனில் நம்மில் எவர் வீரன்?” என்று துச்சகன் கேட்டான். அவனால் ஒரு சொல்லையும் புரிந்துகொள்ள முடியவில்லை என எண்ணி சுபாகு பேசாமல் நின்றான். “இனி எவரும் விலங்குகள்மேல் வன்மையை செலுத்தலாகாது. இது என் ஆணை” என்றான் துச்சாதனன். “ஆம், அதை அவன் சொன்னபோதே நான் முடிவுசெய்துவிட்டேன். அந்த இழிவுயிர்கள் என்ன செய்தாலும் பக்கத்திலுள்ள சுவரில் தலையை முட்டிக்கொள்வேனே ஒழிய அடிக்கவோ துன்புறுத்தவோ மாட்டேன்” என்றான் துர்மதன். சுபாகு சலிப்பைக் கடந்து புன்னகையை சென்றடைந்தான். ஒருகணத்தில் அங்கிருந்த நூற்றுவரையும் உள்ளத்தால் அள்ளி ஆரத்தழுவிக்கொண்டான்.

துரியோதனன் “அடக்காமல், மறைக்காமல், தவிர்க்காமல் வன்மையை என்ன செய்ய இயலும், இளையோனே?” என்றான். அவன் முழுக்க உள்வாங்கிக்கொண்டதை உணர்ந்த சுபாகு திடுக்கிட்டான். மூத்தவர் நூற்றுவரில் ஒருவரல்ல என எப்போதுமே அவனுக்கு தோன்றிக்கொண்டிருந்தது. அவர் அவர்களில் ஒருவராக இயல்பாக தன்னை ஆக்கிக்கொள்கிறார். வேறு எங்கிருந்தோ அவர்களை கனிந்து நோக்கிக்கொண்டும் இருக்கிறார். சற்றுமுன் நானும் அவ்வாறே அவர்களை நோக்கினேன். அள்ளி நெஞ்சோடு அணைத்துக்கொண்டேன்.

“மூத்தவரே, நஞ்சை அமுதாக்கும் முறையையே கல்வி என்றும் ஊழ்கம் என்றும் சொல்கிறார்கள்” என்று சுபாகு சொன்னான். துரியோதனன் “ஆம்” என்றான். “படைக்கலப்பயிற்சி கலை என ஆவது அவ்வாறுதான். போர் காவியமாவது அதைப்போலவே” என்றான் சுபாகு. துரியோதனன் பெருமூச்சுடன் அசைந்து அமர்ந்து “அது அனைவருக்கும் இயல்வதா எனத் தெரியவில்லை. ஆனால் அதுவே கல்வியும் தவமும் என தெளிகிறது” என்றான்.

அன்று திரும்பிச்செல்கையில் அவன் உள்ளம் மலர்ந்து உடலில் அதை ஒரு மதர்ப்பாக உணர்ந்தான். எங்காவது புரவியில் விரையவேண்டும் என்று, பெண்ணுடன் உடல்கலக்கவேண்டும் என்று தினவெழுந்தது. இடைநாழியில் அவன் குண்டாசியை கண்டான். அவன் “நன்று மூத்தவரே, நூல்நவிலத் தொடங்கிவிட்டீர்கள்” என்றான். அவன் மது அருந்தியிருந்தான். “முதிரா அகவையிலேயே மது எல்லைமீறுகிறது உனக்கு” என்றான் சுபாகு. “ஆம், நீங்கள் கல்வியை நான் மதுவை தெரிவுசெய்துள்ளோம்” என்ற குண்டாசி. “நீங்கள் பேசுவதை கேட்டேன். நான் வெளியே நின்றிருந்தேன். அவைபுகுந்து பேச என்னால் இயலாது” என்றான். “நன்கு சொன்னீர்கள். துரோணர் கல்விச்சாலையில் சொன்னவை வேறு சொற்களில் எழுந்தது போலிருந்தது.”

சுபாகு சீற்றம் கொண்டான். “எங்களை சிறுமைசெய்வதற்கான உன் திறனை நெடுநாட்களாகவே பார்த்துக்கொண்டிருக்கிறோம்” என்றான். குண்டாசி “என்னை சிறுமைசெய்ய எனக்கு வேறென்ன வழி?” என்றான். “நீங்கள் சொன்னது உயரிய கருத்து. கூரியது. ஆனால் கூரிய கருத்துக்கள் கூரிய அவைகளில் மட்டுமே பயன்தருபவை. அவற்றைக்கொண்டு

படைநடத்த இயலாது. போர் வெல்ல இயலாது. ஏனென்றால்... ஏனென்றால்...” அவன் சொல் திக்கும்போது முதிராச் சிறுவனாக ஆவதை சுபாகு கண்டிருந்தான். அதைக் கண்டதுமே அவன் உள்ளம் சினமடங்கி நெகிழ்ந்தது. “ஏனென்றால் பொற்கொல்லனின் பணிக்கலங்களை போருக்கு கொண்டுசெல்ல இயலாது.”

முகம் மலர்ந்து குண்டாசி சொன்னான் “அரிய ஒப்புமை! நானும் இப்போது மெய்யறிந்தோரைப்போல் எண்ணம் ஓட்டுகிறேன். நான் சான்றோன் ஆகிவிட்டேன். இனி மெல்லமெல்ல வளர்ந்து சூதனாகவும் ஆகக்கூடும். நல்லூழ்தான்!” சுபாகு சிரித்து “நன்று, நான் செல்லவேண்டும். பணிகள் நிறைந்துள்ளன” என்றான். “மூத்தவரே, இதைமட்டும் கேட்டுவிட்டுச் செல்க! நுண்ணிய கருத்துக்களின் ஆற்றல் என்னவென்றால் அவை நுண்ணிய கருத்துக்களை திறமையாக எதிர்கொள்ளும் என்பதே. ஆனால் போர்க்களத்தில் வன்மையான கருத்துக்களே படைக்கலங்களாகி வருகின்றன. அவற்றை நுண்மையான கருத்துக்கள் எதிர்கொள்ள நேர்ந்தால் ஒற்றை அடியிலேயே முனைமடிந்து நசுங்கிவிடும்...” சுபாகு அவன் தோளில் தட்டிவிட்டு முன்னால் சென்றான்.

குண்டாசி “இத்தனை எண்ணங்கள் செறிந்த உங்கள் அரிய மண்டையை ஒரு எடைமிக்க கதை வந்து அறைந்தால் அக்கருத்துக்கள் என்ன ஆகும்? அவையும் எல்லா கருத்துக்களையும்போல உடைந்து வெண்கூழாக மண்ணில் சிதறிக்கிடக்கும்...” என்றான். சுபாகு அவனை திரும்பிப்பார்க்காமல் நடந்தான். குண்டாசி கூவியபடி பின்னால் வந்தான். “நோக்குக மூத்தவரே, கதை என்பது என்ன? அது ஒரு மண்டை. இரும்பு மண்டை. அதன் ஆற்றல் எங்கிருந்து

வருகிறது? அது உள்ளீடற்றது என்பதனால்தான். அதற்கு உள்ளேயும் இரும்புதான். மானுட மண்டைபோல் வெளியே முகம் ஒன்று வைத்து உள்ளே அகம் வேறொன்று வைத்து விளையாடுவது அல்ல கதை. மண்டையை உடைப்பதற்கென்றே இப்படி ஒரு படைக்கலனை கண்டடைந்தவர்கள் மானுடரை நன்கறிந்தவர்கள். அல்லது மண்டையை எங்கேனும் முட்டி உடைக்க விழைந்தவர்கள்."

அவன் மூச்சிரைக்க நின்றுவிட்டான். "நான் ஒரு படைக்கலம் கண்டுபிடிப்பேன். அது மண்டைகளை பின்னாலிருந்து உடைக்கும். முகம் உடைபடக்கூடாது. பின்பக்கத்தை மட்டும் திறந்துவிடும். உள்ளிருப்பவை பின்பக்க வாயிலினூடாக ஒழுகிச்செல்ல முன்பக்கம் முகம் என்னவாக இருக்கும்? தெரியுமா, என்னவாக இருக்கும்? சொல்கிறேன், நில்லுங்கள். அது ஆழ்ந்த ஊழ்கத்திலிருக்கும். ஆம், முனிவரின் முகம்போல் தெளிந்திருக்கும், மனிதர்களை விடுதலைசெய்ய சிறந்த வழி என்பது அதுவே. கபாலமோக்ஷம். ஆகவேதான் யோகியரை மண்டையை உடைத்து சமாதியில் அமரச்செய்கிறார்கள். மண்டை உடையாமல் எவருக்கும் விடுதலை இல்லை... ஆகவே" அவன் குரலை அவன் நெடுநேரம் கேட்டுக்கொண்டிருந்தான். தன் மஞ்சத்தறைக்கு வந்த பின்னரும்.

அன்று மஞ்சத்தில் படுத்துக்கொண்டபோது சொற்கள் குழம்பி ஒன்றோடொன்று முட்டிச் சலித்து புரண்டு படுத்தான். அக்கணம் ஒன்றை உணர்ந்தான், அவன் முகம் மலர்ந்திருந்தது. அவன் தன்னை கண்டுகொண்டிருந்தான். கருத்துக்கள் மிக எளியவை. பெரும்பாலும் ஓரிரு மையங்கள் கொண்டவை. அவற்றை எடுத்து பயன்படுத்துவதையே அறிவுச்செயல்பாடு

என்கிறார்கள். களஞ்சியத்திலிருந்து பொருட்களைப் பெற்று அவற்றை சமைத்து அன்னமாக்குதல். அமைச்சர்கள் அதை செய்கிறார்கள். ஆனால் அதை தானும் செய்யாத அரசன் அமைச்சர்களின் நூலாட்டுபாவை என்று ஆவான். கௌரவர்களில் மூத்தவர் அனைத்தையும் கடந்துசென்று அறிபவர். அதை அமைச்சர்கள் அறிவார்கள். அவருக்கு உரிய சொல்லெடுத்து அளிப்பதே தன் பணி.

அதன் பின் உடன்பிறந்தார் அவையில் நூல்குறிப்பை எடுத்துக் கூறுவதற்கென்றே அவன் பயிலத்தொடங்கினான். பயிலும்தோறும் நூல்களில் ஆர்வம் மிகுந்தது. படைசூழ்கை நூல்களை முதலில் விரும்பிக் கற்றான். ஆனால் படைசூழ்கைகளில் விரைவிலேயே அவன் சுவையிழந்தான். படைசூழ்கைகள் மெய்யாகவே வகுக்கப்படுகின்றனவா, எப்போர்க்களத்திலாவது அவை பயனளிக்கின்றனவா என்ற ஐயம் அவனுக்கு எழுந்தது. போர் ஒழிந்த நாள் பாரதவர்ஷத்தில் இல்லை, என்றாலும் ஒவ்வொரு அரசருக்கும் ஓரிரு ஆண்டுகளுக்கொருமுறை மட்டுமே களம்புகும் வாய்ப்பு அமைகிறது. அவையும் பெரும்பாலும் விரைந்து தாக்கி மீளும் கொள்ளைகளும் ஊடுருவல்களும் மட்டுமே. விரிநிலத்தில் படை நிரத்தி, சூழ்கை அமைத்து, நெறி சமைத்து நின்று பொருதி அந்தியில் மீளும் போர் என்பது பாரதவர்ஷத்தில் முன்பெங்கோ நிகழ்ந்ததுபோல், கதைகளில் எழுந்ததுபோல் அத்தனை அகன்றிருந்தது. ஆகவே எஞ்சிய நேரமெல்லாம் போரை எண்ணி எண்ணி கற்பனையில் சூழ்கைகளை வகுத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள் என்று தோன்றியது.

அச்சூழ்கைகளையே பின்னர் நாற்களச் சூழ்கைகளாக மாற்றிக்கொண்டனர். மேலும் மேலும் குறுக்கி சிறிய

களத்திற்குள் பொருத்தி அல்லும் பகலும் அமர்ந்தாடினர். எதனாலோ அவனுக்கு நாற்களம் சலிப்பை அளித்தது. அதில் எவ்வகையிலும் தன்னைக் கண்டடைதல் இல்லை. அதில் சொற்களே இல்லை. சொற்கள் குறுகி சில அடையாளங்களாகி பொருட்களாகி களத்தில் பரவியிருக்கின்றன. அவன் போரென முதலில் பார்த்தது சகுனியும் யுதிஷ்டிரனும் அமர்ந்து ஆடிய நாற்களமாடலைத்தான். அங்கு ஒவ்வொரு போர்ச்சூழ்கையும் ஆட்டவடிவு கொண்டெழுவதைக் கண்டான். போர்க்களத்தில் படைகளை நிரத்தி சூழ்கையை அமைத்து அமைத்து அறிந்து பின்னர் சூழ்கையை மட்டும் அவற்றிலிருந்து எடுத்து படைகளை தவிர்த்துவிட்டு கருக்களென அவற்றை நிரத்தி களம்பரப்பி விளையாடினர். வென்றனர் தோற்றனர். ஊழை ஒவ்வொருநாளும் தங்கள் முன் வந்து அமரச்செய்தனர். காடுகளை விதைகளாக்கி உள்ளங்கைக்குள் வைத்திருந்தனர்.

நாற்களத்திலன்றி சூழ்கைகளுக்கு பொருளில்லை என்று உணர்ந்த பின்னர் அவன் ஆட்சிநெறிகளை பயிலத் தொடங்கினான். அது அவனை முற்றாக இழுத்து உள்ளே கொண்டுசென்றது. மானுடர் கட்டற்ற விழைவுகளாலும், மூண்டெழும் சினத்தாலும், வெளியே புலப்படாத அச்சங்களாலும் ஆட்டுவிக்கப்படுபவர்கள். அம்மூன்றையும் சற்றும் கருத்தில் கொள்ளாது அவர்களை பெருந்திரளென மட்டுமே கண்டு வகுக்கப்பட்டவை அறநெறிகள். அவ்வாறன்றி வேறெவ்வகையிலும் நெறிகளை வகுக்க இயலாது. ஏனெனில் மானுடரை திரளென ஆக்கும் பொருட்டும் அத்திரளை ஆளும் பொருட்டும் மட்டுமே நெறிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆகவே நெறிகளுக்கும் அடிப்படை உணர்வுகளுக்கும் இடையே ஓயாத பூசலிருந்தது. விழைவுகளுக்கும் உச்சங்களுக்கும்

சினங்களுக்குமிடையே இருந்த பூசலுக்குமேல் அப்பெரும்பூசல் அமைந்திருந்தது. நெறியவை என்பது அப்பூசல்களுக்குள் பூசல்களுக்குள் பூசல் என நிகழும் இயக்கத்தின் நடுவே ஒரு நடைமுறைப்புள்ளியை கண்டடைவது. நெறிக்கான எந்தத் தீர்வும் அத்தருணத்திற்குரியது மட்டுமே. ஏனென்றால் நெறியென்பதே அத்தருணத்திற்காகத்தான். அதை உணர்ந்தபின் பதற்றம் கொள்ளாமல் அவையமர இயன்றது.

அஸ்தினபுரியில் பதினைந்து ஆண்டு காலம் அவை அமர்ந்து நெறி நடத்தியவன் அவனே. துரியோதனன் ஒவ்வொரு முறையும் அரியணையில் அமர்ந்து நெறியவையை தொடங்கி வைத்து குடிகளின் கூற்றுகளை செவிகொண்ட பின்னர் "இளையோனே, இதை நீ நடத்து. இனி உன் சொல் இங்கு திகழ்க!" என்று சொல்லி எழுந்து கைகூப்பி "என் இளையோன் என் வடிவாக இங்கிருந்து உங்களுக்கு முறை செய்வான். அவனைவிடச் சிறந்த சொல்லை அஸ்தினபுரியில் எந்தை மட்டுமே எடுக்க இயலும்" என்றபின் அவையை விட்டு நீங்கினான்.

அரியணைக்கு இணையாக போடப்பட்ட சிறிய பீடத்தில் அமர்ந்து சுபாகு நெறியவையை நடத்தினான். அங்கிருந்து அவன் ஒவ்வொருநாளும் கற்றுக்கொண்டான். ஒவ்வொருவரும் தங்கள் உளக்குறைகளை சொல்லும்போது தங்கள் உறவுகளால், சுற்றத்தால், புவியிலுள்ள மானுடரால், தெய்வங்களால் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாகவே கூறினார்கள். கைவிடப்பட்டவர்களின் கண்ணீர் எனவே எல்லா முறைப்பாடுகளும் இருந்தன. உலகனைத்தையும் எதிர்தரப்பில் நிறுத்தி தன்னந்தனியாக மறுதரப்பில் நின்று விழிநீர் உகுத்தனர். நெறிநின்று அறம் புரந்த தனக்கு மீறியவர்களால் தீங்கிழைக்கப்பட்டதாக

கூறியவர்கள் பெரும்பிழை செய்தவர்களாகவும் பழிகொண்டவர்களாகவும் தெளிந்து வந்தனர்.

முதல் சில ஆண்டுகளில் அவர்களின் நடிப்பு அது என்று எண்ணி அவன் சினம் கொண்டதுண்டு. பின்னர் உணர்ந்தான், நடிப்புகள் உச்சம் அடைவது நடிப்பவன் அதை நம்பும்போதுதான் என. ஒரு கூற்று முழுமையாக முன்வைக்கப்பட்டு இறுதிச் சொற்கள் மழை நின்றபின் சாரலென முன்பின் தொடர்பிலாது உதிர, முறைப்பாடு விடுத்தவன் உளம் பின்னடையத் தொடங்குகையில் அவன் உடல்மொழியை கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பான் சுபாகு. தன்னைத் தொகுத்து விசையுடன் முன்வைத்தவன் அனைத்தையும் சொல்லி முடித்ததுமே தன்னை அறியாமல் மறு எல்லைக்குச் சென்று தன் உணர்வுகளையும் சொற்களையும் ஐயம் கொள்வதை அவன் முகமே காட்டும். ஊசல் மறு எல்லைக்குச் சென்றுவிடும். அக்கணத்தில் அவன் சொன்னவற்றின் மெய்மையும் பெறுமதியும் துலங்கி எழும். அங்கிருந்து முடிவுகளுக்குச் செல்வது மிக மிக எளிது.

சுபாகு நெறியவையில் பகல் முழுக்க கழித்தான். பெரும்பாலான நாட்களின் அந்தியிலும் பின்னிரவிலும்கூட நெறியவைகளை நடத்தினான். 'அஸ்தினபுரியில் எட்டுமுறை சீர்த்தூக்கி சொல்லப்படும் அறச்சொல்லே அரசாள்கிறது' என்னும் கூற்று அவனால் அங்கு நிறுவப்பட்டது. நெறிசூழ் அவையில் அமரும்தோறும் அவன் பூசல்களில், போர்களில் ஆர்வமிழந்தான். படைக்கலங்களை வெறுத்தான். மற்போரிடும் உடல்களை காண்கையில் ஏதோ ஒரு தருணத்தில் உளம் ஒவ்வாது விழிதிருப்பி பின்னடைந்தான். தெய்வங்களுக்கு முன் இம்மானுடர் உடலை உந்தி உந்தி முன்வைக்கிறார்கள். உடலே

நான் என கூவுகிறார்கள். ஆம் என்கிறது பொறுமையிழந்த தெய்வம். பலிகொள்ளத் தொடங்குகிறது. போரென்றும் பிணியென்றும் வற்கடம் என்றும் வந்துசூழ்கிறது.

"சொற்களால் மானுடர் உயிர் வாழ்கிறார்கள். உடலென்பதும் ஒரு சொல்லே" என்று ஒருமுறை அவன் துரியோதனனிடம் சொன்னான். அவன் சொல்வதை புரிந்துகொள்ளாமல் வியப்பால் விரிந்த விழிகளுடன் நோக்கிய துரியோதனன் உரக்க நகைத்து "அரிய சொல்! இளையோரே கேளுங்கள்! இவன் மீண்டும் ஒரு அரிய கூற்றை முன் வைத்திருக்கிறான்! நாம் எண்ணவேண்டியது! சீர் தூக்கி தெளிய வேண்டியது!" என்றான். ஊன்தடியை கடித்து இழுத்து மென்றபடி "ஆம், மெய்மையின் கூற்று" என்று துர்மதன் சொன்னான். துச்சகன் உரக்க "ஆனால் நாம் போரிட்டதை எண்ணி சீர்தூக்கி முடிவெடுக்கும் பொறுப்பை அவனிடமே விட்டுவிடலாம். இங்கு மதுக்குடங்களும் ஊன்கலங்களும் நமக்காகக் காத்திருக்கின்றன" என்றான்.

தொடைகளில் அறைந்து வெடித்து நகைத்த துரியோதனன் "ஆம், அதுவே சிறந்த வழி. இளையோனே, உனது இக்கூற்றை நீயே மேற்கொண்டு எண்ணி இறுதியை சென்றடைக! அதுவே எங்கள் முடிவென்று ஆகுக!" என்றான். உரக்க நகைத்து கொந்தளித்தது உடன்பிறந்தார் நிறைந்த அஸ்தினபுரியின் அரண்மனை உள்ளவை. "நாம் இவனையே நமது நாவென அமைத்துக்கொள்ளலாம்" என்றான் துச்சகன். "ஆனால் இவனுக்கு சுவை தெரியாதே? சொற்சுவை அறிந்தவன் ஊன்சுவையை அறிவதில்லை" என்றான் துர்மதன். அவை சிரிப்பால் அதிர்ந்ததைக் கண்டு கர்ணன் உள்ளே வந்து "என்ன நிகழ்கிறது?" என்றான். "ஒன்றுமில்லை மூத்தவரே, யானையின்

மிக மென்மையான உறுப்பு எது என சொல்லாடினோம். நாவு என இவன் சொன்னான்... அதை சுட்டுத்தரச் சொன்னோம்" என்றான் துச்சலன். மீண்டும் நகைப்பு.

கர்ணன் "உங்கள் நகைப்பை புரிந்துகொண்டால் நான் பிரம்மத்தை புரிந்துகொண்டவன் ஆவேன்" என்றான். "கள்ளமற்றோர் புரிந்துகொள்ள இயல்வதே இரண்டும்" என்றான் துரியோதனன். "யானையின் நாக்கு!" என கள்மயக்கில் துச்சலன் கைதூக்கினான். "மிக மென்மையானது... ஆம்." அவன் கை காற்றில் அசைந்தது. "ஏன் என்றால் யானை பேசுவதில்லை..." அவனே குழப்பம் அடைந்து சிவந்த கண்களால் நோக்கி "ஆம், ஆனால் யானை தன் பெருவயிற்றால் நேரடியாக பேசுகிறது" என்றான். "அவன் மேலும் பெரிய கொள்கைகளை நோக்கி செல்கிறான். அவனுக்கு ஒரு குடம் கள்ளை ஊற்று" என்றான் துரியோதனன். "அதைவிட இது எளிது" என துச்சாதனன் ஓங்கி அவன் மண்டையை அறைந்தான். "ஆனால் நாக்கு..." என்னும் சொற்றொடர் அறுந்து துச்சலன் கீழே விழுந்தான். அவை சிரிப்பில் கொந்தளித்தது.

சுபாகு விழிகளிலிருந்து நீர் பெருக தேர்த்தட்டில் நின்றான். எங்கு சென்றுவந்தேன்? எவ்வுலகில் வாழ்ந்து மீண்டேன்? அவன் உள்ளம் விம்மிக்கொண்டிருந்தது. அன்று தான் களம் மீளப் போவதில்லை. நான் ஏற்கெனவே இறந்துவிட்டிருக்கிறேன். இன்று மாலை என் மூத்தவர் தன் குடிலில் தனித்திருப்பார். நினைவறிந்த நாள் முதல் தனித்திருக்காதவர். "எந்தையே, என் இறையே, இன்றிரவு என் உடன்பிறந்தாருடன் நுண்வடிவில் உங்களை வந்தடைவேன். உங்களை இருளென சூழ்ந்திருப்போம், தன்னந்தனியனாக நாளை இக்களத்தில்

எழுவீர்கள். ஒருவேளை இந்த மண்ணில் தனித்து உடல் உடைந்து இறந்துகிடப்பதுதான் உங்கள் ஊழ் போலும். அதன் பொருட்டுத்தான் நூறு தலைகொண்டவராக, இருநூறு கைகள் எழுந்தவராக உங்களை மூதாதையர் நிலத்தில் வாழவைத்தனர் போலும்." அவன் விழிநீர் பெருக களமுகப்பை நோக்கியபடி நின்றான்.

இருட்கனி - 55

போர் தொடங்குவதற்கான முரசு ஒலித்ததும் தன்னை அறியாமலேயே "எழுக! எழுக!" என கையசைத்து அம்புகளைத் தொடுத்தபடி சுபாகு பாண்டவப் படைகளுக்குள் ஊடுருவிச்சென்றான். அவனை எதிர்த்து வந்த பாஞ்சால இளவரசர்களை அம்புகளால் அடித்து பின்னடையச் செய்தான். தன்னியல்பாகவே அது நிகழ்ந்தது. தன் கைகளால் அவன் ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்துவந்த படைவீரகள் இயல்பாக அவன் உடலென ஆகிவிட்டிருந்தனர். அவனே படையென தன்னை எண்ணத் தொடங்கியிருந்தான். போர் மூண்ட சில கணங்களுக்குள் அங்கே அவ்வாறு என்றும் போரிட்டுக்கொண்டிருந்ததே தன் வாழ்வும் இருப்பும் என அவன் அகம் நம்பத் தலைப்பட்டது எனத் தோன்றியது.

பாஞ்சாலர்கள் களைத்திருந்தார்கள். துயிலில் என அவர்கள் போர்புரிந்தார்கள். எவராலோ இயக்கப்படும் நாற்களக் கருக்கள் என. கொல்பவர்களிடம் வெறி வெளிப்படவில்லை. இறந்தவர்களிடம் அச்சமோ வலியோ வெளிப்படவில்லை. கனவிலென நிகழ்ந்துகொண்டிருந்தன அனைத்தும்.

அக்குருதியும் அனலும்கூட மாயைகள்தானா? அவர்கள் மீண்டும் எழுந்து உடலை உதறிக்கொண்டு இன்னொரு கனவுக்குள் நுழையப்போகிறார்களா? பின்னணியில் போர்முரசு ஒலித்துக்கொண்டே இருந்தது. "எழுக... ஏழு கதிர்களும் எருதை ஊடுருவிச் செல்க! ஏழு துண்டுகளாக்குக!" சகுனி ஒரு கதிரை நடத்தி களமுகப்பில் இருந்தார். அவருடைய ஆணைகளை அவர் உடலில் இருந்து பெற்று பின்னணியில் இருந்த காவல்மாடம் கூவி அறிவித்துக்கொண்டிருந்தது. சகுனி ஈருடல் கொண்டு அங்கும் பின்னணியிலும் நின்றிருந்தார்.

"வெல்க! வெல்க! வென்று செல்க!" என முரசுகள் கூவிக்கொண்டிருந்தன. எத்தனை நம்பிக்கை! முரசுகள் மட்டும் நம்பிக்கையை இழப்பதே இல்லை போலும். அவன் முந்தையநாள் இரவு முழுக்க நிலையில்லாது அலைந்துகொண்டிருந்தான். படைகளினூடாகச் செல்கையில் அதைப் படையென ஏற்கவே உள்ளம் ஒருங்கவில்லை. ஆங்காங்கே சிறுகுழுக்களாக அமர்ந்தும் சரிந்தும் துயின்றுகொண்டிருந்தனர். அவன் தன் தலைக்குமேல் நோக்குணர்வை அடைந்து அண்ணாந்து நோக்கினான். காவல்மாடத்தின்மேல் பார்பாரிகன் அமர்ந்திருந்தான். அனைவராலும் முற்றாக மறக்கப்பட்டிருந்தான். அங்கிருக்கிறானா? அன்றி உயிரிழந்த உடலா?

விந்தையுணர்வுடன் அவன் மேலேறினான். பேருடலன் விழிகள் திறந்திருக்க அமர்ந்திருந்தான். அவன் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. அருகே எவருமிருக்கவில்லை. பெருமுரசு மட்டும் வானின் ஒளியைப் பெற்று தோல்வட்டம் மிளிர அமைந்திருந்தது. அவன் என்ன சொல்கிறான் என உற்றுகேட்டான். ஒலியெழவில்லை. உதடுகளைக் கூர்ந்து

நோக்கினான். அவன் வாயசைவைக் கொண்டும் எதையும் உணர இயலவில்லை. எதை காண்கிறான்? எதை சொல்லிக்கொண்டிருக்கிறான்? அவன் திகைப்புடன் நோக்கிக்கொண்டு நின்றான். விம் என்னும் ஓசை கேட்டது. அருகிலிருந்த முரசை திரும்பி நோக்கினான். அதன் தோற்பரப்பு காற்றில் அதிர்வுகொண்டிருந்தது. சுட்டுவிரலால் அதை தொட்டான். அதன் அதிர்வை தன் உடலெங்கும் உணர்ந்தான்.

பின்னர் திரும்பி பார்பாரிகனின் உடலை தொட்டான். அதுவும் தோல்பரப்பின் அதிர்வை கொண்டிருந்தது. மெல்லமெல்ல அவனுக்கு அந்நாவில் ஒலித்த சொற்கள் தெளிவாகத் தெரியலாயின. "சாரஸ்வதராகிய உலூகர், சௌவீரரான சத்ருஞ்சயர், பாண்டியன் மலையத்வஜன், விதேகராகிய நிமி." போர்க்களத்தில் வீழ்ந்த அரசர்களின் பெயர்கள். அவர்கள் கொல்லப்பட்ட சித்திரங்களை இறுகக் கட்டப்பட்ட அரக்கர்மொழிச் சொற்களால் அவன் சொல்லிக்கொண்டிருந்தான். "அவந்தியரான ஜயசேனர் தன் மைந்தர்கள் விந்தனும் அனுவிந்தனும் உடன் விழ களம்பட்டார். காம்போஜரான சுதக்ஷிணர் வேல்பாய்ந்து விழுந்தார். அதோ கோசல மன்னன் பிருஹத்பலனும் தட்சிண திரிகர்த்தத்தின் சுசர்மரும், அபிசார மன்னர் சுபத்ரரும், அரேவாக மன்னர் சிம்மவக்த்ரரும் வீழ்ந்தனர். அபிசாரர்களின் இளவரசர்கள் நிசந்திரன், மிருதபன், சுவிஷ்டன் ஆகியோர் விண்புகுந்தனர். கேகய மன்னர் திருஷ்டகேதுவும் மாளவ மன்னர் இந்திரசேனரும் கூர்ஜர சக்ரதனுஸும் சைப்ய நாட்டு கோவாசனரும் சால்வநாட்டு த்யுமந்தசேனரும் ஆ᳞பிரநாட்டின் உக்ரதர்சனரும் வீழ்ந்தனர். தட்சிண மல்லநட்டு சம்புகர் துரியோதனரால் தலையுடைத்து கொல்லப்பட்டார்"

“வங்கத்தின் சமுத்ரசேனரும் சந்திரசேனரும் வீழ்ந்தனர். மாகிஷ்மதியின் நீலரின் உடல் கிடக்கிறது. சௌராஷ்டிர நாட்டின் ருஷார்திகரும் காரூஷநாட்டு க்ஷேமதூர்த்தியும் வீழ்ந்தனர்.” அவன் நாவில் பெயர்கள் எழுந்துகொண்டே இருந்தன. காலதேவனின் திறந்த வாய் என மண்மறைந்தவர்களின் பெருக்கு முடிவிலாது சென்றது. “ஆந்திரர், ஆபிசாரர், அம்பஸ்தர், அஸ்வாடகர், அஜநேயர், ஆபிரர், அரட்டர், ஆரிவேகர், கர்ணப்பிரவர்ணர், கிதவர், குந்தலர், குலூதர், கசுத்ரகர், காசர், கோவாசனர், சிச்சிலர், சீனர், சுச்சுபர், துஷாரர், துண்டிகேரர், தார்விகர், தசமேயர், நாராயர், பஞ்சநதர், பல்லவர், பானிபத்ரகர், பாரதகர், புளிந்தர், பிரஸ்தலர், மாகிஷ்மதர், முண்டர், மேகலர், லலித்தர், வங்கர், வனாயர், வசாதியர், வடாதனர், விக்ரமர், விகுஞ்சர், வேனிகர், சூரர், சுரசேனர், சம்ஸ்தானர், சிங்களர், சுரஸ்திரர், ஹம்சமார்கர்...”

சுபாகு சலிப்புற்று திரும்பியபோது தன் பெயரை கேட்டான். விதிர்ப்புடன் அவ்வுதடுகளை நோக்கினான். அது செவிமயக்கா? “தனாயு நாட்டரசராகிய மணிமான் கர்ணனால் கொல்லப்பட்டார். மேற்கு நிஷாதஅரசின் ஹிரண்யநாபனையும் அவன் இளையோன் ஹிரண்யபாகுவையும் களத்தில் காண்கிறேன். கீழ்நிஷாதநிலத்து அரசர் தண்டதரனையும் அவர் மைந்தர் சார்ங்கதரனையும் மண் வாங்கிக்கொண்டது. உத்தரமல்லநாட்டு தீர்க்கபிரக்யர் வீழ்ந்தார். அசுரகுலத்து அரசர் ஹிரண்யகட்கர் அதோ கொல்லப்பட்டார். காரூஷ நிஷாதகுடித் தலைவர் அஷ்டஹஸ்தர் வீழ்ந்தார். அரக்கர் குலத்தலைவர் வக்ரசீர்ஷரும் அசுரர் குடித்தலைவர் காகரும் இக்களத்தில் கொல்லப்பட்டனர். பாணாசுரரின் மைந்தனான அக்னிசக்ரன் தலையுடைந்து வீழ்ந்தார். சம்பராசுரரின் மைந்தன்

கீர்த்திமானும் வீழ்ந்தான். நிஷாதர்குலத்து படைத்தலைவன் கூர்மரை கொன்றவன் கௌரவனாகிய சுபாகு.”

மீண்டும் சுபாகு நெஞ்சதிர்ந்தான். களத்தில் கிராதமன்னர் கூர்மரை அவன் எதிர்கொண்ட நினைவே இல்லை. அவன் தொடுத்த அம்புகளில் எவையேனும் சென்று தைத்திருக்கலாம். அவன் உள்ளம் மலைத்து சொல்லிழந்திருக்க கீழிறங்கினான். பார்பாரிகன் சொல்லிக்கொண்டிருப்பது வீழ்ந்தோர் பட்டியல். அதில் எத்தரப்பு என்றில்லை. வென்றதும் தோற்றதும் இல்லை. வீரம் வியக்கப்படவில்லை. மிக அப்பால் நின்றுநோக்கும் ஒருவனின் பார்வை அது. அதில் மானுடரின் வேறுபாடுகளுக்கு இடமில்லை. வீழ்ந்தவர் மட்டுமே கணக்கு. தேவர்களின் நோக்கா அது? அல்ல, அவன் மண் என பரந்திருக்கிறான். அவன் அரக்கன். மண்ணிலிருந்து எழுந்து மண்ணுக்குச் செல்பவர்கள் அரக்கர்கள். அவர்களின் தெய்வங்கள் மண்ணுக்குள் வேர்கள் என உறைபவை. அவர்களின் மூதாதையர் மண்ணில் உப்பென ஆகிறவர்கள். வெற்றிதோல்வியை எண்ணிக் கணக்கிடுபவர்கள் தேவர்கள். மண்ணுக்கு அதில் விழுபவர்கள் மட்டுமே கணக்கு.

சுபாகு பாண்டவப் படையை எதிர்த்து பிளந்து முன்னேறிக்கொண்டிருந்தான். களத்தில் அதுவரை எஞ்சிய அரசர் குடியினர் ஒவ்வொருவராக மண்பட்டுக்கொண்டிருந்தனர். கிராத அரசர்கள் பெரும்பாலும் அனைவருமே மறைந்துவிட்டிருந்தனர். ஷத்ரிய மன்னர்களில் எவர் எஞ்சியிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. ஒவ்வொருவரும் களம்படும் செய்தியை முரசறிவிக்கையில் படைகளிடம் ஆரவாரமும் வாழ்த்தொலியும் எழுவது வழக்கம். ஆனால் முன்பிருந்த செவிக்கூர்மை சில நாட்களாகவே முற்றாக

மறைந்துவிட்டிருந்தது. புளிந்த நாட்டு இளவரசன் அபூர்வவீர்யன் இறந்தான் என்னும் செய்தி எழுந்தபோது இன்னமுமா அவன் எஞ்சியிருக்கிறான் என்னும் வியப்பே எழுந்தது. நாராய நாட்டு அரசன் அஜபாலன் வீழ்ந்தான் என்னும் செய்தி முற்றிலும் பொருளற்றிருந்தது. தோல்வியும் இறப்பும் அழிவும் வெறும் சொற்கள். கேட்கப்படாமல் உதிர்பவை.

இன்னும் இப்போர் தொடர்வதைப்போல் விந்தை எதுவுமில்லை. ஒவ்வொரு எல்லையாக மீறி மீறி வந்து அனைத்து நெறிகளையும் கடந்து வெறும் வெறியாட்டு மட்டுமென அங்கு போர் எஞ்சியது. போரிட்ட அனைவருமே துயிலில் என தெரிந்தனர். அவர்கள் விழிகள் வெறித்திருந்தன. வாய்கள் உறைந்த சொற்களுடன் திறந்திருந்தன. சிலர் விழிமூடியே தெரிந்தனர். அவர்கள் துயிலில்தான் போரிட்டனர். அதை கண்டபோது சுபாகு திகைத்து மீளமீள நோக்கினான். பெரும்பாலான படைவீரர்கள் அவ்வப்போது முற்றிலும் விழிமூடி சற்று நேரம் ஆழ்ந்துறங்கி பின் மீண்டுகொண்டிருந்தனர். அந்த ஆழுறக்கத்திலும் அவர்கள் உடல்கள் போரிட்டன. நானும் அவ்வப்போது துயிலுக்குச் சென்று மீள்கிறேன். ஒற்றை அலை என நீண்ட காலப்பரப்பு ஒன்று என்னுள் நிகழ்ந்து மீள விழித்தெழுகிறேன். ஆனால் போர் ஒருகணமும் ஓயவில்லை. போரை நிகழ்த்தி நிகழ்த்தி பழகியவை அக்கைகளும் கால்களும். போரில் உழன்று கூர்கொண்டவை அங்கே ஆடிச்சுழன்ற படைக்கலங்கள்.

சுபாகு அப்படைக்கலங்களை பார்த்துக்கொண்டிருந்தான். அங்கு பயன்படுத்தப்பட்ட படைக்கலங்களில் எவையுமே புதியவை அல்ல. ஓரிரு நாட்களுக்கு முன்னரே படைக்கல நிலைகள்

முற்றொழிந்துவிட்டன. களத்திலிருந்து பொறுக்கி எடுத்து சேர்த்து பின்புறம் இயங்கிக்கொண்டிருந்த கொல்லரின் உலைகளுக்கு கொண்டு சென்று காய்ச்சி அடித்து கூராக்கி மீண்டும் கொண்டுவரப்பட்ட வேல்களையும் வில்களையும் அம்புகளையும் வாள்களையுமே போர் முன்னெழுந்தோறும் வீரர்கள் பயன்படுத்தினர். பின்னர் கொல்லரின் உலைக்களங்கள் மூடப்பட்டு அவர்களும் படைகளில் சேர்க்கப்பட்டனர். உலைக்களங்களுக்குரிய விறகுகள் அடுமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. இறுதி நாட்களில் உடைந்த வேல்களும் வளைந்த வாள்களும் கூரிழந்த அம்புகளுமாக வீரர்கள் களத்திற்கு சென்றனர். அங்கு கொந்தளித்துக்கொண்டிருந்த ஒவ்வொரு படைக்கலமும் களத்தில் வீழ்ந்து அந்தியில் மீண்டும் எழுந்தது.

படைக்கலங்களைப்பற்றி அவன் படித்தது உண்டு. பல நூறாண்டுகளாக மானுடர் போரிட்டுப் போரிட்டு உருவாக்கிக்கொண்டவை அவற்றின் வடிவங்கள். தாழைஇலைபோல காற்றில் வீசி வீசி அடைந்தது வாளின் வளைவு. பறந்து பறந்து காற்றை அறிந்து அம்பு நிகர்நிலை கொண்டது. ஊன்றியும் எழுந்தும் வேல் அந்நீளத்தை அடைந்தது. ஆனால் போர்க்களத்துக்கு வந்த உடனே ஒவ்வொன்றும் உருமாறத் தொடங்குகின்றன. அம்புகள் முனைமடிகின்றன. வாள்கள் வளைகின்றன. வேல்கள் உடைந்து உடல் குறுகுகின்றன. எனில் அவை கொண்ட வடிவம் மானுடர் உள்ளத்தில் நிகழும் போரில் இருந்து எழுந்தது. இங்கு நிகழும் இப்போரில் ஒவ்வொரு படைக்கலமும் தன் தனிவடிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது.

அன்றுபோல் ஒருநாளும் படைக்களத்தில் தான் இரண்டாகப் பிரிந்து நின்று போரிட்டதில்லை என அவன் உணர்ந்தான். “செல்க! செல்க!” என்று அவன் தன் படைகளை ஊக்கினான். அப்பால் அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் நிகழ்ந்துகொண்டிருந்த போரை இடியும் மின்னலும் சூழ்ந்த சமவெளியை மலை உச்சியிலிருந்து பார்ப்பதுபோல் அவன் பார்த்தான். அங்கு கரும்புகை அடுக்கடுக்காக பேருருவ தேவகாந்தார மரங்களைப்போல எழுந்து வானில் நின்றது. கரைந்து முகில் திரள்களாக மாறி வானில் பரவியது. அங்கிருந்து அனல் வெம்மை கொண்ட காற்று அலைகளாக வந்து அறைந்தது. காற்றே வாளென மாறியதுபோல். பேருருவ வீரனொருவன் சுழற்றும் நுண்வடிவ வாள். அரிந்து சீவிக் கடந்துசென்றது அது.

பீமனுக்கும் துரியோதனனுக்கும் போர் நடந்துகொண்டிருப்பதை தொலைவில் எழுந்த முரசுகளினூடாக அவன் அறிந்தான். பீமன் யுதிஷ்டிரனை காக்கும் பொருட்டு செல்ல துரியோதனன் அவனை தடுத்து போரிட்டான். துரியோதனனின் தாக்குதலிலிருந்து தன் மைந்தருடன் பின்னடைந்து மேலும் பின்னடைந்து மையப் படைக்குள் சென்று பீமன் மறைய துரியோதனன் மறுபக்கமிருந்து எழுந்து வந்த பாஞ்சாலப் படைகளை எதிர்கொண்டான். கிருபரும் திருஷ்டத்யும்னனும் போரிட்டார்கள். அஸ்வத்தாமனும் சிகண்டியும். சாத்யகியும் கிருதவர்மனும். அதைப்போல முழுப் போரையும் உள்ளத்தில் வாங்கி களம்திகழ்ந்ததுமில்லை. போர்வெளி மிகச் சிறிதாகிவிட்டிருந்தது. பாரதவர்ஷமே எழுந்தது போலிருந்த போர்க்களம் குறுகி குடிகளுக்குள் நிகழும் போரென்றாகி இப்போது குடிக்குள் நிகழும் போர் என சிறுத்துவிட்டது. இனி ஒரு குடும்பப் பூசலாக அது ஆகும் போலும். பாரதவர்ஷம் இதைப்போல் ஒரு குடும்பமென இதற்குமுன் ஆனதே இல்லை.

“தட்சிண மல்லநட்டு சம்புகர் துரியோதனரால் தலையுடைத்துக் கொல்லப்பட்டார்” என்றது முரசொலி. அதை மறுமுறை கேட்டபோது அவன் திடுக்கிட்டான். இப்போதா? காலையில் இச்சொற்களை கேட்டேன். அவன் சொல்லிக்கொண்டிருந்தான். “தட்சிண மல்லநட்டு சம்புகர் துரியோதனரால் தலையுடைத்துக் கொல்லப்பட்டார்” என. அரக்கன்மகன் நிகழ்ந்ததை சொல்லவில்லை. நிகழ்வில் அவன் அமர்ந்திருக்கவில்லை. அவன் என்றுமுள காலமிலியில் அமர்ந்திருக்கிறான். விண் கணம்தோறும் மாறுவது. மண் மாறிலி. அதில் பருவங்கள் என, நாட்கள் என, கணங்கள் என நிகழ்வது விண்ணே. அவன் வியர்வையில் நனைந்துவிட்டான். அரக்கனின் சொற்களில் நான் ஏற்கெனவே இறந்துவிட்டிருக்கிறேன். மண் என்னை வாங்கிக்கொண்டுவிட்டது. எனக்கான கதை என்னை தேடி வந்துகொண்டிருக்கிறது.

என் தலையுடன் மோதும் அந்த கதை. அது உள்ளீடற்றது என்று குண்டாசி சொன்னான். அது பிழை. அது உள்நிறை கொண்டது. உள்ளே செல்லுந்தோறும் இரும்பு மேலும் செறிகிறது. இரும்பின் வெளிக்கோளமே நசுங்குகிறது. உள்ளே அதன் மையம் நலுங்காமல் இருக்கிறது. வெளிவளைவு அறைகிறது. நசுங்குகிறது. குருதிபூசிக்கொள்கிறது. உலர்ந்து கருமையாகி ஆடைபட்டுத் தோலாகி உரிந்து அகல்கிறது. ஆழம் குளிர்ந்து உறைந்து சொல்லின்மையில் நிலைகொள்கிறது. மண்ணுக்கு அடியிலும் விண்ணுக்கு அப்பாலும் இருக்கும் தெய்வங்களைப்போல. அவன் தன் முன் புரவியில் எதிரே வந்த பெண்ணைப் பார்த்தான். அவள் கரிய ஆடை அணிந்திருந்தாள். முகம் கற்சிலை என இறுகியிருந்தது.

ஆனால் விழிகள் கனிந்து ஒளிகொண்டிருந்தன. “அன்னையே!” என அவன் அழைத்தான்.

அவன் வியர்வை குளிர மெல்ல மீண்டு வந்தான். தலை உடைந்து திறந்துவிட்டதுபோலவே தோன்றியது. கபாலமோக்ஷம். தலைதிறத்தல். நூற்றுவரும் தலைதிறந்து விண்புகுந்தனர். யோகியருடன் அவர்கள் அங்கே நின்றிருப்பார்கள். இக்காலகட்டத்தில் இப்புவியில் வாழ்ந்து எழுந்தவர்களில் அவர்களைப்போல வஞ்சம் அற்ற உள்ளம் கொண்டவர்கள் எவர்? அவர்களைப்போல் துளியும் பழியேற்காமல் இங்கு உலவிச்சென்றவர்கள் வேறு உண்டா? தெய்வங்கள் அவர்களை எதிர்கொண்டு வரவேற்றிருக்கும். யோகியர் அவர்களை தழுவி மகிழ்ந்திருப்பார்கள். கீழே நோக்கி அவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். மின்னும் பெரிய கண்கள். ஒளிரும் பற்கள் கொண்ட சிரிப்புகள். அவர்களின் முகத்தோற்றம் மாறியிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அவை தேவர்களின் முகங்கள். தேவர்கள் அனைவருக்கும் முலைமணம் மாறா குழந்தைகளின் முகங்கள் என்பார்கள். அவர்களுக்கும் அத்தகைய முகங்கள்தான்.

சுபாகு தன்னைத் தொடர்ந்து வந்த கௌரவப் படைச்சரடு மெலிந்துவிட்டிருப்பதை கண்டான். பாண்டவப் படை சிறுகுழுக்களாக சிதறியது. பின்னர் அதையே ஒரு போர்முறை என ஒருவன் கண்டுகொண்டான். பயிலாத ஏவலன். ஆனால் கல்வியின்மையாலேயே அவனால் வகுக்கப்பட்ட வழிகளை கடக்க முடிந்தது. சிறுகுழுவாக விரைந்து வந்து தாக்கி படைச்சரடு வளைந்து அவனை கவ்வ வருவதற்குள் பின்னடைந்தான். “விசைகொண்டு தாக்கி பின்னகர்ந்துவிடுக...” என அவன் தன் வழியை பிறருக்கு கூவி அறிவித்தான்.

அடுமனையாளன். சூதன். ஆனால் அவனிலிருந்து பெரும்படைத்தலைவன் ஒருவன் எழுந்துவிட்டிருந்தான்.

கைகளை வீசி அவன் ஆணைகளை இட்டான். அதை மற்ற படைக்குழுக்களிலிருந்த அடுமனைச்சூதர்கள் புரிந்துகொண்டார்கள். அது அடுமனை குழூஉக்குறி போலும். "குளவி எனச் சென்று கொட்டிவிட்டு பறந்தகல்க! குளவிக்கூட்டங்கள் எழுக!" அதற்குள் அவன் அதை சூழ்கை என ஆக்கிவிட்டிருந்தான். அதற்கு பெயர் அமைந்துவிட்டது. படைசூழ்கைகள் இப்படித்தான் அமைகின்றனவா? "நாகம் குளவியை கவ்வும் விசையற்றது... நீளுடல் நமக்கென கிடக்கிறது" அவன் ஆணையிட்டுக்கொண்டே இருந்தான். குளவிகள் வந்து நாகத்தை கொட்டின, நாகம் சீறி வளைந்தது. அதன் படம் ஒரு குளவியை கவ்விச் சிதறடித்தபோது உடலெங்கும் நூறு குளவிகள் கொட்டி அதை துடிக்கச்செய்தன.

நாகம் உடல் சிதறிக்கொண்டிருந்தது. தானும் நாகங்களென ஆகவேண்டும். ஆனால் அதற்கான இடம் அங்கே இருக்கவில்லை. பின்னகர்ந்து நாகத்தின் உடல்பகுதிகளை தொகுத்து ஒன்றுடன் ஒன்று தொடுத்துக்கொண்டு ஒற்றைச்சரடென மாற்றுவதே ஒரே வழி. "பின்னகர்க! மேலும் பின்னகர்க!" நாகம் பின்னகரும்தோறும் குளவிகள் கொட்டிக்கொண்டே இருந்தன. அவன் அந்தச் சூதனையே நோக்கிக்கொண்டிருந்தான். குளவியின் கொடுக்குபோல் நுண்ணியது பிறிதில்லை. நுண்மை பிறக்கும் கணம். நுண்மையில் நிகழ்வதே பேருருவாகிறது. அவர்களை எதிர்கொள்ள தேர்வில்லவர்களால் இயலவில்லை. அத்தனை அணுக்கத்தில் அம்புகள் எழுந்தமைய வெளி இல்லை. வேலர்களை முன்னிறுத்த அவன் ஆணையிட்டான். ஆனால்

அவர்களால் தேர்களின் இடைவெளிகளினூடாக முன்னகர முடியவில்லை. கண்ணெதிரே அவன் படை அழிந்துகொண்டிருந்தது. ஓர் அடுமனைச்சூதனால்.

அடுமனைச்சூதன் அல்ல. இவன் பெரும்படைத்தலைவன். இக்களத்திலிருந்து இவன் வெளியே செல்லவில்லை என்றாலும், இப்போதே இறந்துவிழுந்தாலும் இவன் இங்கே இருப்பான். எங்கோ சூதன் விழிகள் இவனை நோக்கிக்கொண்டிருக்கும். இவனில் எழுந்த நுண்விதை வளர்ந்து பேருருக்கொள்ளும். ஆலமரத்தின் விதையை அத்தனை சிறிதாக்கியது எந்த தெய்வம்? சிட்டுக்குருவி எச்சத்தில் அது மலைமுகடுக்கு செல்லக்கூடுக என வகுத்தது அது. அவனையே சுபாகு நோக்கிக்கொண்டிருந்தான். பேருருவன். வெல்லற்கரியவன். போரில் எழும் போருக்கு அப்பாற்பட்டவன். போர்சூழ்கைகளை அவர்களே வகுக்கிறார்கள். அவன் அச்சூதனை அஸ்வத்தாமன் எதிர்கொள்ளவேண்டுமென விழைந்தான்.

ஒருகணத்தில் அவன் திரும்பி சுபாகுவை நோக்கி வந்தான். மறுகணத்தில் இருவரும் அம்புகளால் சந்தித்துக்கொண்டார்கள். அவனுடைய அம்புகளின் விசையும் கூர்மையும் சுபாகுவை வியக்கச் செய்தன. நிஷாதகுலத்தவன். வேட்டைக்கு மட்டுமே அம்புகளை கையாண்டவன். ஆனால் போரில் அவன் ஒவ்வொன்றையும் அறிந்திருந்தான். அம்புகொண்டு அம்பை தடுத்தான். அம்புகளை ஒழிந்தான். இலக்கு மறைத்து தாக்கி எதிர்பாரா கணத்தில் நேர்நின்று அடித்தான். அவனுடன் போரிடப்போரிட தன்னை சுபாகு கண்டடைந்துகொண்டிருந்தான். தன் வில்திறனை. முதலில் அதன் எல்லையை. பின்னர் அதன் வாய்ப்பை.

நிஷாதன் சுபாகுவின் தேர்த்தூண்களை உடைத்தான். அவன் கவசங்களை சிதைத்தெறிந்தான். ஒருதருணத்தில் தன்னுள் அவனைப்பற்றி இருந்த குறைவுமதிப்பீட்டால்தான் தோற்றுக்கொண்டிருக்கிறோம் என சுபாகு அறிந்தான். எக்கணமும் தன் உயிர் பிரியக்கூடும். இவன் என் முன் எழுந்த பார்த்தன். இவன் வில் ஒரு காண்டீபம். ஆம், இவன் பாடப்படாத சவ்யசாசி. அவன் தன் முழு உளவிசையாலும் அம்புகளைத் தொடுத்தபடி முன்னெழுந்தான். பேரம்பு ஒன்றை அறைய அதை நிஷாதன் உடைத்தெறிந்தான். அவனிலிருந்து நிஷாதர்களுக்குரிய இயல்பான உவகை வெளிப்பட்டது. அது அவனுடைய விழிகளை சற்றே விலக்கிய கணத்தில் அடுத்த அம்பால் அவன் கழுத்து நரம்பை சுபாகு வெட்டினான். குருதி சீறி சரடென எழ அவன் தள்ளாடி பக்கவாட்டில் விழுந்தான்.

வில்லுடன் சுபாகு திரும்பிக்கொண்டான். அவள் உள்ளம் மலைப்பு கொண்டிருந்தது. அதை எவரேனும் கண்டார்களா? ஒரு முரசேனும் அவனுக்காக ஒலிக்குமா? அவன் சூழ நோக்கியபோது நிஷாதர்கள் சிதறிப்பரந்து அகன்றுகொண்டிருந்தனர். எவரும் திரும்பி நோக்கவில்லை. ஒருவன் மட்டும் ஓடிவந்து குனிந்து விழுந்துகிடந்த நிஷாதனை நோக்கிவிட்டு திரும்பி ஓடினான். சுபாகு தன் அம்பால் அவன் காலை அடித்து வீழ்த்தினான். தேரை முன்செலுத்தி அவனருகே சென்று "சொல், வீழ்ந்தவன் பெயர் என்ன?" என்றான். அவன் சொல்வதற்குள்ளாகவே அறிந்திருந்தான், அவன் கூர்மன்.

நீள்மூச்சுடன் அவன் திரும்பி நோக்கினான். முற்றழிந்திருந்தது அவன் படை . ஒருவர்கூட எஞ்சாமல். அவன் முழுமையாக பின்வாங்கும் பொருட்டு தன் தேரை பின்னிழுக்கத்

தொடங்கியபோது நேரெதிரில் பீமன் தோன்றினான். ஒருகணம் அவனுக்கு விடுதலை உணர்வே ஏற்பட்டது. அவன் பீமனையே விழிகூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான். உடன்பிறந்தார் அனைவரையும் கொன்ற கைகள். நூற்றுக்கணக்கான கௌரவ மைந்தரின் குருதி கண்ட கைகள். மூத்தவரே, உங்கள் கைகளில் இன்னமும் என் மைந்தர்களின் துடிப்பு எஞ்சியிருக்கிறதா? பீமன் அவனை பார்த்துவிட்டான். அவன் படையிழந்து தனித்து நிற்பதை உணர்ந்ததும் பிளிறலோசை எழுப்பியபடி அணுகி வந்தான்.

எப்போதும் பீமனின் உடல் சுபாகுவை உளம் மலரச்செய்து வந்தது. விரிந்த தோள்கள். பரந்து அகன்ற நெஞ்சு. பாறையில் கொடிகளென பச்சை நரம்புகள் அவற்றில் படர்ந்திருக்கும். நாகம் சுற்றிய அடிமரம் என கைகள். அவனை நோக்கும்போதே உள்ளம் செயலிழக்கும். பின்னர் ஒருமுறை அவன் உணர்ந்தான், அது துரியோதனனின் உடலும்கூட என. துரியோதனனின் உடல் மேலும் எடைகொண்டது. யானை உடல்போல் தசைபூசப்பட்டது. துலா நிகர்த்த அசைவுகள் கொண்டது. ஆயினும் அவன் துரியோதனனை நினைவுகூரவைத்தான். எதில்? பீமனின் முகம் அருகணைந்தது. வானிலிருந்து பொழிந்து இறங்கி அணுகிவருவதுபோல. மஞ்சள் முகம். மங்கலான சிறுவிழிகள். மூத்தவரின் நெஞ்சு பிழுது குருதி அருந்தியது அந்த வாய். அவ்வுடலுக்குள் அக்குருதி இன்னும் இருக்கக்கூடும்.

ஒருகணம் உடல் கூச, பற்கள் கிட்டித்துக்கொள்ள, விழிகளில் நீர் படிய, கூரிய எண்ணம் ஒன்று அவனுக்குள் வந்தது. பீமனின் உடலே தன்னுடல் என்று. தன் உடன்பிறந்தார் உறையும் இல்லம் அது. அவ்வுடலுக்குள் தானும் குருதியும் நிணமுமென

புகுந்துவிடவேண்டும். உண்ணுக என்னை! மூத்தவரே, உண்ணுக என்னை! மூத்தவரே, இதோ என் உடல். தன் உடலுக்குள் இருந்து நெஞ்சக்குலை எம்பித் துடிப்பதை அவன் உணர்ந்தான். என் உடல் திறந்து, உள்ளே எம்பித் துடிக்கும் இக்குலையை பிழுதெடுங்கள். இதைப் பிழிந்து கொதித்து வழியும் என் குருதியை அருந்துங்கள். மூத்தவரே, உங்கள் உடலென்றாகி உடன் இருக்கிறோம். நாங்கள் நூற்றுவரும் உங்கள் உடலென்றே என்றும் உணர்ந்திருக்கிறோம். நாம் ஒற்றை உடல். மூத்தவரே, நீங்கள் உங்களை உண்ணுகிறீர்கள்.

அவன் பீமனின் உடலை அத்தனை அணுக்கமாக முன்னொருபோதும் பார்த்ததில்லை. ஒவ்வொரு மயிர்க்காலையும் அவனால் பார்க்க முடிந்தது. விழிகளை மிக அருகிலென, பிற மானுடர் எவரையும் அத்தனை அணுக்கமாக பார்த்ததில்லை. உடல் இணைத்து காதல்கொண்ட பெண்டிரின் கண்களைக்கூட அப்படி ஒட்டிச்சென்று நோக்கியதில்லை. பீமன் தன் தேரிலிருந்து கதையுடன் காற்றில் தாவி எழுவதை, விழுந்துகிடந்த தேர் மகுடம் ஒன்றில் மிதித்து தாவி எழுந்து தன் புரவிக்கு மேல் காலூன்றி நின்று வலக்கையால் ஏந்திய கதையை தூக்கி பற்றிச் சுழற்றி அறைவதை, கணங்களாக கணங்களின் துளிகளாக அவன் பார்த்துக்கொண்டிருந்தான். தன் தலை பாறையொன்றில் சென்று அறைந்து திறந்துகொள்வதை உணர்ந்தான். உள்ளுக்குள் இறுகி இறுகிச் செறிந்து புறங்களை முட்டிக்கொண்டிருந்த விசைகள் அனைத்தும் பீறிட்டு வெளிக்கிளம்பி வெளியென்று வெடித்து வானில் கரைந்தழிந்து மறைய இறுதிக் கணத்தில் அவன் ஒரு மாபெரும் விடுதலையை உணர்ந்தான்.

இருட்கனி - 56

சிகண்டி தன்னை வெறிகொண்டு எதிர்த்த கிருதவர்மனை விழிதூக்கி நோக்கவில்லை. அப்போர்க்களத்தில் அவர் பீஷ்மரைத் தவிர எவரையுமே நோக்கவில்லை. பீஷ்மரை எதிர்த்துநின்றபோது முதற்கணம் அவருடைய விற்தொழிலும் உடலசைவும் உள்ளம் செல்லும் வழிகளும் முன்னரே நன்கறிந்திருந்தவை எனத் தோன்றின. முதல் நாள் முதல் அம்பில் அவர் பீஷ்மரின் கால்களை அடித்தார். அத்தனை ஆண்டுகாலம் அவர் தவம்செய்திருந்த வடிவம். அவர் அணுவணுவாக தன்னுள் நிகழ்த்திக்கொண்ட போர்.

ஆனால் ஒவ்வொருநாளும் பீஷ்மர் அவர் அறிந்தவற்றிலிருந்து எழுந்து வளர்ந்தபடியே சென்றார். அவர் அவருடன் சேர்ந்து வளர்ந்தார். எங்கு எவரிடம் போரிட்டாலும் அவர் பீஷ்மரிடமே போரிட்டார். எல்லா அம்புகளையும் அவர்மீதே ஏவினார். அவர் தன் முடிவில்லாச் சலிப்பில் திளைத்துக்கொண்டே எவ்வண்ணம் அவ்வாறு மீண்டும் மீண்டும் புதியவர் எனப் பிறந்தெழுகிறார் என்பதை எண்ணி எண்ணி வியந்தார். அச்சலிப்பிலிருந்து மீளும்பொருட்டு ஒவ்வொரு கணத்தையும் அள்ளிப்பற்றிக் கொள்கிறார் போலும். அக்கணம் அதே சலிப்பில் கரைந்தழிய பிறிதொன்று. அச்சலிப்பே அவரை அனைத்திலிருந்தும் விலக்கியது. அவ்விலக்கத்தால் அவர் முழுமைநோக்கு கொண்டவர் ஆனார். அதிலிருந்து எழுந்தது அவர் ஆற்றல். அந்தப் படைப்பெருக்கு ஓர் ஆலயமென விரிந்திருக்க அதன் கோபுரமுகடு என அவர் நிலைகொண்டிருந்தார்.

பீஷ்மர் களம்பட்ட பத்தாம்நாள் இரவில் சிகண்டி அச்சலிப்பை தானும் உணர்ந்தார். அவரிடமிருந்து எழுந்து வந்து சிகண்டியை பற்றிக்கொண்டது அது. அவரைப் பின்தொடர்ந்து சென்றபடியே இருந்த அவர் வாழ்க்கையில் ஒருகணமும் வீணாகவில்லை. ஒரு அம்பும் கற்பிக்காமல் சென்றதில்லை. அவருக்குப் பின் சிகண்டி முழுமையாக கைவிடப்பட்டவரானார். குருக்ஷேத்ரப் படைக்களத்திலிருந்து கிளம்பி எங்கேனும் சென்றுவிடவேண்டும் என விழைந்தார். பின்னிரவின் குளிரில் அவர் தன் வில்லை மட்டும் எடுத்துக்கொண்டு குறுங்காட்டுக்குள் நுழைந்தார். புதர்களை விலக்கி சென்றுகொண்டே இருந்தார். இருளில் ஓர் உறுமல் ஓசையைக் கேட்டு நின்றார்.

அவர் முன் அந்த அன்னைப்பன்றி நின்றிருந்தது. அவர் அதன் எரியும் விழித்துளிகளை நோக்கியபடி நின்றார். அது தலைதாழ்த்தி பிடரிமுட்கள் சிலிர்க்க முன்வலக்காலால் நிலத்தைச் சுரண்டியபடி மீண்டும் உறுமியது. அவர் "ஆம்" என்று சொன்னார். "ஆம்" என மீண்டும் ஒருமுறை சொன்னபின் வில்லுடன் திரும்பி நடந்தார். தன் குடிலுக்கு வந்து அதன் வாயிலில் அமர்ந்துகொண்டார். கருக்கிருளை நோக்கிக்கொண்டிருந்தார். அசைவிலாது சிலைபோல் இருளில் இரவெல்லாம் அமர்ந்திருப்பது அவர் வழக்கம். இருளை விழியிமைக்காமல் நோக்குவதையே அவர் ஊழ்கமெனக் கொண்டிருந்தார். அது தமோயோகம் என்று சொல்லப்பட்டது.

நாள்தொடங்கும் முரசுகள் எழுந்தன. அவர் எழுந்துகொண்டபோது புரவியில் திருஷ்டத்யும்னன் வந்திறங்கினான். அவரை அணுகி அப்பால் என நின்றான். சிகண்டி விழிதிருப்பாமல் "ம்" என உறுமினார். "தாங்கள் நேற்று

கிளம்பிச்சென்றீர்கள் என அறிந்தேன். ஒற்றர் செய்தி உடனே வந்தது. தடை செய்யவேண்டாம் என ஆணையிட்டேன்." சிகண்டி "ம்" என்றார். "நீங்கள் செல்லலாம், மூத்தவரே. உங்கள் பணி இப்போரில் முடிந்துவிட்டது. இங்கே நீங்கள் ஆற்றுவதற்கொன்றும் இல்லை" என்று திருஷ்டத்யும்னன் சொன்னான். "இந்த அரசியலில் உங்கள் உள்ளம் ஈடுபடவில்லை. இங்கே நீங்கள் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் ஏதுமில்லை."

சிகண்டி "ம்" என்றார். பின்னர் "அன்னையின் ஆணை" என்றார். திருஷ்டத்யும்னன் நோக்க "அவள் சொன்னாள். இங்கே ஒரு சொல் எஞ்சியிருக்கிறது" என்றார். திருஷ்டத்யும்னன் "ம்?" என்றான். "அவள் பழி. அவள் என் அன்னையின் பழிமுடிக்க அங்கே நுழைந்தவள்." சற்று நேரம் கழித்து திருஷ்டத்யும்னன் "நன்று" என்றபின் தலைவணங்கி திரும்பிச்சென்றான். அவன் செல்வதை சிகண்டி நோக்கி அமர்ந்திருந்தார். திருஷ்டத்யும்னன் மேலும் ஏதோ கேட்க விழைந்தான் என சிகண்டி அறிந்திருந்தார். அக்கேள்வியுடன் அவன் மண்மறைவான் என்றும். நீண்ட மூச்சுடன் எழுந்து தன் குடிலுக்குள் சென்று போர்முகப்பு செல்வதற்கான ஒருக்கங்களை தொடங்கினார்.

அக்களத்தில் அதன்பின் எதிர்கொண்ட அத்தனை பேரும் பீஷ்மரே என உளமயக்களித்தனர். அவர் அவர்களை சீற்றம்கொண்டு எதிர்த்தார். பின்னர் அவர்கள் எவரும் பீஷ்மர் அல்ல என்று தனக்கே தெளிவுசெய்துகொண்டார். அவர்கள் பீஷ்மரல்லாமல் ஆனதுமே அவர்களிடம் அவரால் போரிட இயலாமலாயிற்று. ஆகவே அவர்களை நோக்குவதை ஒழிந்தார். அவர்களென்றாகி நின்று தன்னுடன் தான்

போரிடலானார். ஒவ்வொரு முறையும் தன்னை தான் வென்றார். தன்னிடம் தானே தோற்று மீண்டார். ஒவ்வொருநாள் இரவிலும் இருளில் தனித்தமர்ந்து நெடுந்தொலைவில் தெரிந்த பீஷ்மர்படுகளத்தின் பந்த வெளிச்சத்தை நோக்கிக்கொண்டிருந்தார்.

கிருதவர்மன் "இழிவிலங்கே, உன் அம்புடன் அகல்க! இன்று உன்னைக் கொன்று என் அம்புக்கு இழிவு தேடிக்கொள்ள விழையவில்லை நான்!" என்று கூவியபடி அம்புகளால் சிகண்டியை அறைந்தான். சிகண்டியை அச்சொற்கள் சீண்டவில்லை என்று கண்டு "ஈருடலனே, பெண்ணென்று ஆகி உயிர்கோரி நில். உன்னை விடுவிக்கிறேன். அல்லது ஆணென்று நின்று என்னிடம் போரிடு" என்று கிருதவர்மன் மேலும் கூவினான். சிகண்டி தொடுத்த அம்புகளை ஒழிந்தபடி அவன் வில்லாடிக்கொண்டிருந்தபோது ஒரு கணத்தில் ஏதோ ஒன்றில் உளம் சென்று தொட திடுக்கிட்டான். எதிரில் நின்று போரிட்டுக்கொண்டிருப்பதும் தானே என உணர்ந்து கைகள் நடுங்க வில் தழைய தேரில் நின்றான். சிகண்டி தொடுத்த அம்பு வந்து அவன் நெஞ்சை அறைந்து உலுக்கி விடுவித்தது.

அவனாகி எழுந்த சிகண்டி "யாதவனே, வஞ்சத்தைச் சுமந்து நலிந்திருக்கிறது உன் உடல். நஞ்சுகொண்டிருக்கிறது உன் ஆழம். இக்களம் ஒரு தவநிலம். வஞ்சத்தை மும்முறை கையொழிந்து பின்னடைக! உன் விடுதலையை இங்கே ஈட்டிக்கொள்க!" என்றார். கிருதவர்மன் கசப்புடன் பல் தெரியச் சிரித்து "வஞ்சத்தை கைவிடுவதைப்பற்றி நீ எனக்கு சொல்கிறாயா? நன்று!" என்றான். "பெருவஞ்சத்தின் பின்னுள்ள வெறுமையை நானன்றி எவரும் உனக்கு சொல்ல இயலாது. அறிவிலி, விலகிச்செல்" என்று சிகண்டி சொன்னார்.

“வஞ்சத்துடன் வாழ்வது கணந்தோறும் எரிந்துகொண்டிருப்பது. அதை நான் அறிவேன்” என்றான் கிருதவர்மன். “ஆம், ஆனால் வஞ்சத்திற்குப் பிந்தைய வெறுமைக்கு அது மேல்... செல்க!” என்று சிகண்டி சொன்னார்.

“நான் உன்னை அஞ்சவில்லை, பேடியே!” என்று கிருதவர்மன் கூவினான். “உன் சொற்களிலிருக்கும் அந்த இரக்கத்தைக் கண்டு சீற்றம் கொள்கிறேன். இதன்பொருட்டே உன் தலைகொய்து இங்கிருந்து செல்லவேண்டும் என விழைகிறேன்.” அம்புகளைத் தொடுத்தபடி அவன் சிகண்டியின் எல்லைக்குள் நுழைந்தான். அவனுடன் வந்த யாதவப் படையினர் அவனைச் சூழ்ந்து அம்புகளால் காற்றை நிறைத்தனர். அவனுக்குப் பின்னால் அவன் மைந்தன் பாலி வில்லுடன் நின்று புறம் காத்தான். சிகண்டி அவன் அம்புகளை மிக எளிதில் தடுத்தார். அவர் வில்லில் இருந்து எழுந்த அம்புகள் கிருதவர்மனின் கவசங்களை பிளந்தன. அவன் தலைக்கவசம் கீழே விழுந்தது. அது தலை விழுந்ததுபோல் தோன்ற யாதவப் படையினர் கூச்சலிட்டனர். தன் தலை விழுந்ததை தானே கண்டவன்போல் கிருதவர்மன் திடுக்கிட்டான்.

அவன் செவியோர மயிரை அம்புகளால் சீவி எறிந்தார் சிகண்டி. “செல்க! செல்க!” என்று கூவினார். அம்புகளுடன் தந்தையைக் காக்க வந்த பாலியின் கவசங்களை அறைந்து உடைத்தார். அவன் திறந்த நெஞ்சுடன் தேரில் நின்றிருக்க அம்பைத் திருப்பி நாணிலேற்றி அவன் நெஞ்சை அறைந்தார். அம்புபட்டு தேரிலிருந்து பாலி தூக்கி வீசப்பட்டான். தரையில் விழுந்து அங்கிருந்த இறந்த உடல்களுடன் அவன் உடல் மறைய யாதவர்கள் அலறினர். கிருதவர்மன் தன் மைந்தனின்

சாவையும் மெய்யென உணர்ந்தான். யாதவப் படை கூச்சலிட்டுச் சிதற “ஒருங்குகொள்க! கூடுக!” என்று கூவியபடி அவன் பின்னடைந்தான். பாலி எழுந்து அப்பால் விலகிச்சென்று புரவியொன்றில் ஏறிக்கொள்வதை கண்டான். நெஞ்சிலிருந்த அச்சமும் விரல்களில் துடித்த பதற்றமும் ஓய பெருமூச்சுவிட்டு மெல்ல தளர்ந்தான். அதற்குள் நாணொலித்தபடி சிகண்டி அப்பால் விலகிச்சென்றுவிட்டிருந்தார்.

சிகண்டி திரும்பி அவந்தியின் படைப்பிரிவை நோக்கி சென்றார். தங்களை சிறிய குழுவென ஒருங்கிணைத்துக்கொண்டிருந்த அவர்கள் பாண்டவப் படைக்குள் ஊடுருவிச் சென்றுவிட்டிருந்தார்கள். ஒருகணம் எரிச்சல் எழ அவர் காறித் துப்பினார். அலுப்பிலிருந்து எழுவது அந்த எரிச்சல் என புரிந்துகொண்டார். ஏமாற்றம் கொண்டதுபோல ஆழம் பொருமிக்கொண்டே இருந்தது. ஏன் ஏன் என அவர் ஆழத்தின் இன்னொரு கூர்முனை துழாவியது. ஏன் சலிப்பு? ஏன் ஏமாற்றம்? அவர் ஒருகணம் பீஷ்மரென ஆகி போர்முகப்பில் நின்றிருந்தார். இன்னமும் குருக்ஷேத்ரம் தொடங்கப்படவே இல்லை. நிகழவிருக்கும் அனைத்தும் விழிநிலை வடிவென இரு படைகளாகி விரிந்திருந்தன. அவர் படைகளை நோக்கவில்லை. படைகளுக்குமேல் கவிந்திருந்த வெளியை, தொடுவான் வில்வளைவை நோக்கிக்கொண்டிருந்தார். அவர் சலிப்புற்றிருந்தார். ஏனென்றால் அவர் போரின் முடிவை நோக்கிவிட்டிருந்தார்.

தொலைவில் சிகண்டியை கௌரவப் படையிலிருந்த அவந்தியின் படைத்தலைவர்கள் கம்சனும் கௌமாரனும்

தங்கள் வில்லவர்திரளுடன் எதிர்த்தனர். அவந்தியின் படைசூழ சிகண்டி நின்றிருந்த இடம் சுழியெனத் தெரிந்தது. மிக விரைவிலேயே கம்சனும் கௌமாரனும் கொல்லப்பட்டதை முரசுகள் அறிவித்தன. செயலற்றவன்போல் சற்றுநேரம் நோக்கி நின்றிருந்த கிருதவர்மன் தன் நெஞ்சில் ஓங்கி அறைந்து வீறிட்டபடி தேர்ப்பாகனை நோக்கி கூச்சலிட்டான். "செல்க! செல்க, பாஞ்சாலனை நோக்கி!" தேர்ப்பாகன் "அரசே!" என்றான். "இன்று இத்தோல்வியுடன் மீளப்போவதில்லை. பாஞ்சாலனை நோக்கி செல்க... இக்கணமே செல்க!"

திரிகர்த்த நாட்டு இணையரசன் மித்ரவர்மன் அர்ஜுனனால் கொல்லப்பட்டதை அறிவித்தது முரசு. ஒவ்வொரு அரசராக இறப்புகள் அறிவிக்கப்பட்டுக்கொண்டே இருந்தன. படைகள் அழிந்துகொண்டே இருந்தமையால் அரசர்கள் காப்பற்றவர்களாக சென்று போர்முனையில் நின்று உயிர்துறந்துகொண்டிருந்தார்கள் என்று தோன்றியது. "செல்க! செல்க!" என்று கிருதவர்மன் பாகனை நோக்கி கூவினான். வில்லுடன் திரும்பிய சிகண்டி அவனை கண்டார். "கீழ்பிறப்பே, எடு உன் வில்லை" என்று கூவியபடி கிருதவர்மன் அவரை தாக்கினான். முற்றிலும் சினமற்றவராக சிகண்டி அவனை தாக்கினார். அவர் அம்புகள் வந்து கிருதவர்மனின் தேரை தாக்கின. அவனுக்குப் பின் அவன் மைந்தன் பாலி "தந்தையே, வலப்புறம் நோக்குக! வலம் பேணிக்கொள்க!" என்று கூவியபடி வந்துசேர்ந்துகொண்டான்.

களமெங்கும் அந்நாள்வரை நிகழாத பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. கர்ணனை விட்டு விலகிச்சென்றுவிட்ட அர்ஜுனன் திரிகர்த்தர்களை கொன்றழித்தான். உசிநாரர்களும் பால்ஹிகர்களும் அவன்

அம்புகளால் கொன்றுகுவிக்கப்பட்டனர். கர்ணனின் முன்னாலிருந்து வில்தாழ்த்தி ஒழியவேண்டியிருந்தமையின் சீற்றத்தை முழுக்க அவன் கௌரவப் படையை அழிப்பதில் செலவிட்டான். காந்தாரர்களும் கூர்ஜரர்களும் மாளவர்களும் அவனுக்கு பலியாயினர். அக்குருதியை சூடிக்கொண்டு தன்னை வெறியேற்றிக்கொண்டு மீண்டும் கர்ணனை எதிர்கொண்டான். கர்ணனை அதுவரை இணைநின்று தடுத்து நிறுத்தியிருந்த சாத்யகியும் திருஷ்டத்யும்னனும் விலகிக்கொள்ள அவர்களிடையே அந்த முடிவிலாப் போர் மீண்டும் தொடங்கியது.

சிகண்டியின் அம்புகள் கிருதவர்மனை அறைந்து அறைந்து பின்னால் செலுத்தின. சிகண்டியின் பேரம்பு ஒன்று தன்னை தாக்க வருகிறது என எண்ணி கிருதவர்மன் தேரிலிருந்து பாய்ந்து நிலம்படிந்தான். அவன் தேரைக் கடந்துசென்று பாலியின் தேரை அறைந்து மண்ணிலிருந்து தூக்கி வெடிக்கச்செய்தது அந்த வாளி. விழி மயங்கச்செய்யும் பொன்னிற ஒளி. மூச்சை நிறைத்த எரிமணம். அவன் பாலியின் தலை துண்டுபட்டு சுழன்று சென்று விழுவதை கனவுக்குள் கண்டான். திடுக்கிட்டு விழித்தபோது அக்கனவின் தொடர்ச்சியென அவன் தலை நிலம்தொடுவதை கண்டான். தன் தொடை நடுங்கி துள்ளிக்கொண்டிருப்பதை, தன் இரு கைகளும் வலிப்பெடுத்தவைபோல இழுபட்டு விறைத்து நின்றிருப்பதை உணர்ந்தான். “இழிமகனே! இழிமகனே!” என்று கூவியபடி பாய்ந்துசென்று தேரிலேறிக்கொண்டான். சிகண்டியை நோக்கி சென்று அம்புகளால் அவரை அறைந்தபடி கூச்சலிட்டான்.

பித்தன் போலிருந்தான் கிருதவர்மன். "இழிமகனே, உன்னுடன் போரிட்டு தலைகொடுக்கவே வந்துள்ளேன். என்னை கொன்று செல்க... இனி இக்களத்தில் என்னிடம் எஞ்சுவது ஒன்றுமில்லை. கொல்க!" என்று அவன் கூவினான். அவன் தேரை உடைத்தெறிந்தது சிகண்டியின் அம்பு. தன் ஆவநாழியிலிருந்து பேரம்பு ஒன்றை எடுத்து "இந்த அம்பால் உன் தலை கொய்வேன்!" என்று கூவியபடி அவன் நாணேற்றுகையில் சிகண்டியின் உடலில் சலிப்பு தெரியும் அசைவை கண்டான். அந்த அசைவு தன் மைந்தனைக் கொன்ற எரியம்புக்கு முன்னரும் அவ்வாறு அவர் உடலில் எழுந்தது என உணர்ந்து அவன் உள்ளம் செயலழிந்தது. அவனை நோக்கி வந்த சிகண்டியின் அம்பு காட்டெரிபோல் உறுமியது. எரிமலை வாய் திறந்து அனற்குழம்பு பீறிடுவதுபோல் அணுகியது. அவன் தேரின் தூண்களும் தட்டும் சகடங்களும் பற்றிக்கொண்டன.

அவன் தேரிலிருந்து பாய்ந்து இறங்கி நிலத்தில் விழுந்து ஓடினான். அவன் உடலில் தீ நின்றெரிந்தது. அவன் தன் தோலாடைகளை கழற்றி வீசினான். ஆடையற்ற உடலில் மயிரைப் பொசுக்கியபடி எரி நின்றது. மண்ணில் விழுந்து குருதிச்சேற்றில் அவன் புரண்டான். தன் தேர் தழலுருவாக எரிந்தோடுவதை, புரவிகள் உடலெங்கும் தீ எரிய கனைத்தபடி ஓடி கால்தளர்ந்து விழுந்து துள்ளிச்சுழன்று எழுந்தமைவதை அவன் கண்டான். அவனைச் சூழ்ந்து எரி வெள்ளமென அலையடித்தது. எரிநதிப்பெருக்கின் அடியில் மூழ்கிவிட்டவன்போல் உணர்ந்தான். இரு கைகளையும் தலைமேல் வைத்து குனிந்து உடல்குறுக்கி அமர்ந்தான். அவன்மேல் எரி உறுமியது, சீறியது, வெடிப்பொலியுடன் மேலெழுந்தது.

பின்னர் அவன் எழுந்தபோது அவனைச் சூழ்ந்து கருகிய களம் பரந்திருந்தது. கன்மதத்தின் குமட்டும் வாடை. வெந்த ஊனும் பொசுங்கிய தோலும் நெஞ்சடைக்கச் செய்தன. கரி படிந்த மண்ணில் புதுக்குருதியின் குமிழிகள் எழுந்துகொண்டிருந்தன. உலோகப்பரப்புகள் வெம்மைகொண்டு முனகிக்கொண்டிருந்தன. நெடுந்தொலைவில் சிகண்டியை கிருபர் எதிர்கொண்டதைக் கூறி முரசுகள் ஒலித்தன. கேகய இளையமன்னன் விசோகனுக்கும் பீமனுக்குமான போரை அறிவித்து விசோகனை துணைசெய்யும்படி முரசு வீணை மன்றாடிக்கொண்டிருந்தது. அவன் உள்ளம் வெறுமை கொண்டிருந்தது. அதுவரை உள்ளத்தின் பெரும்பகுதியை நிறைத்திருந்த இறந்தகாலமும் எதிர்காலமும் மறைந்தன. ஆகவே ஒளிகொண்ட பெருவெளியில் நிகழ்காலத்து எண்ணங்கள் விசையின்றி தனித்தனியாக தெளிந்தெழுந்தன. அத்தனை அமைதியை அவன் அறிந்ததே இல்லை.

பெருமூச்சுடன் எழுந்து நின்ற கிருதவர்மன் தன் ஆடையற்ற உடல் கருகி தோல் உருகி வழிந்துகொண்டிருப்பதை கண்டான். கைதூக்கி நோக்கியபோது நகங்கள் அனைத்தும் வெந்து உதிர்ந்துவிட்டிருந்தன. மலையருவி பெருகி விழ ஏந்திக்கொள்ளும் அடிப்பக்க மரம் என உடலின் அனைத்து உறுப்புகளும் அதிர்ந்துகொண்டிருந்தன. கால்களைத் தூக்கி வைத்து அவன் வெந்து கிழிந்து சிதைந்து பரவிய உடல்களினூடாக நடந்தான். கால்தடுக்கி அவன் விழுந்தான். மீண்டும் கையூன்றி எழுந்து நோக்கினான். விழிதொடும் தொலைவுவரை பொசுங்கிக்கொண்டிருக்கும் உடல்கள் மட்டுமே தெரிந்தன. அவ்விரிவில் பாலியின் உடலை தன் விழிகள் தேடுவதை உணர்ந்தான். மெல்ல மெல்ல உடலை உந்தி நடந்தான். கால்மடிந்து விழுந்து மீண்டும் எழுந்தான். அனலின்

ஓசை மிக அருகே எனக் கேட்டது. திரும்பி நோக்கியபோது விழிகளுக்குள் அனல்விழுந்ததுபோல் ஓர் அம்பு வெடித்ததை கண்டான். மண்மதத்தின் கெடுமணம் அணுகி வந்தது.

அது தன்னை கடந்துசெல்ல விட்டு அவன் மீண்டும் கண்விழித்தான். நான்கு புலன்கள் அத்தனை கூர்கொண்டுவிட்டிருந்தன. செவிகள், விழிகள், மூச்சு, நாக்கு. ஏனென்றால் தோல் முற்றாகவே உணர்வழிந்துவிட்டிருந்தது. புலனறிதல்களில் பெரும்பகுதியை அடைத்துக்கொண்டிருப்பது அதுவே என அப்போது தெரிந்தது. அவன் உடலில் வலியே இருக்கவில்லை. தொடைகளில் தோலுரிந்து வெண்தசை தெரிந்தது. கையூன்றி எழுந்தபோது வயிற்றுத் தோல் வழன்று அகல உள்ளே நரம்புகள் வேயப்பட்ட வெந்த தசை தெரிந்தது. ஆனால் உடலென ஒன்றிருப்பதையே உணரமுடியவில்லை.

அவன் அங்கே நின்றிருந்த புரவி ஒன்றின்மேல் தொற்றி ஏறினான். அதன் கருகிய உடலின் மீதிருந்து வெந்த தோல் கைபட உரிந்து வந்தது. அது வலியை உணரவில்லை. எதையுமே உணராததுபோல் தசைகள் விதிர்க்க நின்றிருந்தது. அதன் மேல் சேணங்களோ கடிவாளமோ இருக்கவில்லை. ஆடையற்ற உடலுடன் அணியற்ற புரவிமேல் அவன் அமர்ந்து சென்றான். வெவ்வேறு இடங்களில் புரவிகள் விதிர்த்துக்கொண்டிருக்கும் உடலுடன் நின்றிருந்தன. சில புரவிகள் தலைதாழ்த்திச் சீறின. சில முன்கால்களால் தரையை அறைந்தன. நின்றிருந்த புரவி ஒன்று அறுந்துவிழுவதுபோலச் சரிந்து பக்கவாட்டில் விழுந்து குளம்புகளை உதைத்துக்கொண்டு உயிர்விட்டது. அவன் ஊர்ந்த புரவி மெல்ல முனகியது. அவன் கடந்துசென்றபோது பின்புறம் இன்னொரு புரவி விழும் ஓசையை கேட்டான்.

செல்லும் தரையெங்கும் பொசுங்கியதும் கருகியதுமான தசைத்துண்டுகள் கிடந்தன. பின்னர் அவன் கண்டான், அவையெல்லாம் பறவைகள் என. காகங்கள், மைனாக்கள், நாரைகள், சிறுகுருவிகள். சிறகுபொசுங்கி விழுந்து உயிர்விட்டிருந்தன. சில பறவைகள் அப்போதும் அலகை தரையிலூன்றி வட்டமிட்டுச் சுழன்று இறகிலாச் சிறகை அடித்து துடித்தன. அனல் அத்தனை உயரத்திற்கா எழுந்தது? நிலமெங்கும் சிறுபூச்சிகள் கருகி விழுந்துகிடந்தன. பின்னர் அவன் தரை விழுந்துகிடந்த பூச்சிகளால் இடைவெளியில்லாமல் நிரம்பியிருப்பதை கண்டான்.

படைகளின் பின்பகுதியை அடைந்தான். அங்கே எவருமிருக்கவில்லை. அந்த வெறுமை அவனை திகைக்கச் செய்தது. திரும்பி படைமுகப்பை நோக்கினான். அது கடலலையின் நுரைவிளிம்பென கொப்பளித்துக்கொண்டிருந்தது. அங்கே அனல்குமிழிகள் எழுந்து எழுந்து அணைந்தன. கௌரவப் படை என எஞ்சுவது போர்முகத்தில் ஆங்காங்கே நின்றிருக்கும் சிறுகுழுக்கள் மட்டுமே என்று உணர்ந்தபோது அவன் அகம் நடுக்கு கொண்டது. அன்று காலை அவன் கண்ட திரள் அப்படியே சென்று ஆழ்ந்த பிலமொன்றில் புகுந்து மறைந்துவிட்டதுபோல. அவன் அங்கிருந்து நோக்கியபோது ஒரு கொடிகூட தென்படவில்லை. அனைத்தும் அனலில் பொசுங்கிவிட்டிருந்தன. அத்தனை தேர்களும் சிதைந்தும் எரிந்தும் மறைந்துவிட்டிருந்தன.

இன்னும் சற்றுநேரத்தில் இங்கே போரிட எவருமிருக்க மாட்டார்கள். முற்றழிவு. இத்தகைய முற்றழிவு இயல்வதுதானா? இது இத்தனை நாள் எங்கிருந்தது? மானுட உள்ளத்திற்குள். மெய்யறிந்தோர் அதை உணர்ந்திருப்பர்.

அவர்களின் சொல்லில் இருந்து திறனாளர் கற்றிருப்பர். சிற்பிகள் வனைந்திருப்பர். இத்தனை பெரிய அனல் சொல்லில் உறங்கியிருக்கிறது. சித்தவெளியில் நிலைகொண்டிருக்கிறது. வெட்டவெளியில் நிறைந்திருக்கிறது. தன்னை முற்றழித்துக்கொள்ளும் வாய்ப்புடன்தான் இங்கே என்றும் மானுடம் வாழ்ந்திருக்கிறது. தன் கனவுகளில் அதை விழைந்திருக்கிறது. அஞ்சியிருக்கிறது. தற்கொலையை பகற்கனவு காணாத மானுடர் இல்லை. காமமும் ஆணவமும்கூட அதைப்போல் இனியவை அல்ல. மானுடமும் அப்பகற்கனவை மீட்டிக்கொண்டுதான் இருந்திருக்கிறது.

பேரோசையுடன் வானில் விரிந்தது ஒரு மஞ்சள்நிற வெடிப்பு. செவிகள் அதிர்ந்து பற்கள் கூச சீழ்க்கை ஒலி கடந்துசென்றது. விம் என வயிறு அதிர்ந்தது. அதன்பின் அலையலையாக காற்றில் வெம்மை எழுந்து வந்து அறைந்து கடந்துசென்றது. அவன் ஊர்ந்த புரவி ஓசையே இல்லாமல் முகம் மண்ணில் ஊன்ற முன்பக்கம் சரிந்து விழுந்து ஒரு குளம்படியோசைகூட இல்லாமல் உயிர்விட்டது. அதற்கு அடியிலிருந்து தன் உடலை உருவி எடுத்துக்கொண்டு அவன் மெல்ல நடந்தான். மீண்டுமொரு மஞ்சள் வெடிப்பில் அவனுடைய நிழல் நீண்டு துடிதுடித்து வான்வரை சென்று நீலநிறமாகி அணைந்தது. விண்ணிலிருந்து வலையொன்று இறங்குவதுபோல கரிப் படலம் மெல்ல மண்ணை வந்தடைந்தது.

வளைந்து அதிர்ந்துகொண்டிருந்த உடலுடன் அவன் தன் கூடாரம் இருந்த இடத்தை அடைந்தான். அருகிலிருந்த கூடாரத்தின் யானைத்தோல்கூரை பொசுங்கி புகையெழுந்துகொண்டிருந்தது. அவன் கூடாரம் கரித்தடமாக மாறிவிட்டிருந்தது. அதற்குள் பிறிதொரு கரித்தடமாக

அவனுடைய மஞ்சம் தெரிந்தது. வெடித்துத் தெறித்த எரிதுளிகளால் அங்கிருந்த அனைத்துக் கூடாரங்களும் புகைவிட்டுப் பொசுங்கி சுருங்கிக்கொண்டிருந்தன. புரவிகள் செல்வதற்கான பாதைப்பலகைகள் பற்றி எரிந்தன. அவற்றில் பட்டு உலர்ந்திருந்த நிணநெய் அவற்றை நின்றெரியச் செய்தது. களஞ்சியங்கள் எரிந்து கரும்புகை எழுந்து வானில் ஊன்றி நின்றிருந்தது.

அவன் தன் கூடாரமிருந்த இடத்தில் தன் படுக்கையின் வடிவிலிருந்த கரிப் பரப்பில் அமர்ந்தான். அப்பால் கிடந்த தாலம் கனல்கொண்டிருந்தது. தன் தலையில் கைவைத்தபோது முற்றாகவே மயிர்பொசுங்கி தலை கலம்போல் தட்டுபட்டது. கால்களை மடித்து அதன்மேல் தலையை வைத்து அவன் அமர்ந்தான். உள்ளிருந்து ஒரு விம்மலென அழுகை எழுந்து வந்து நெஞ்சை உலுக்கியது. அவன் ஓசையில்லாமல் அழத் தொடங்கினான். அவனைச் சூழ்ந்து கனன்றுகொண்டிருந்தது காந்தள் வண்ணம்கொண்ட சிதையெரி.

இருட்கனி - 57

பதினொன்றாவது களத்தில் அமர்ந்திருந்த சூதரான கும்பகர் பெரிய மண் கலத்தின் வாயில் மெல்லிய ஆட்டுத்தோலை இழுத்துக் கட்டி உருவாக்கப்பட்டிருந்த உறுமியின்மீது மென்மையான மூங்கில் கழிகளை மெல்ல உரசி மயில் அகவும் ஒலியையும் நாகணவாய் புள்ளின் கூவலையும் எழுப்பி அதனுடன் இணைந்துகொண்ட தன் ஆழ்ந்த குரலில் கர்ணன் அர்ஜுனனை எதிர்கொண்ட போர்க்களத்தின் இறுதிக் காட்சியை சொல்லில் வடிக்கலானார்.

சூதர்கள் அவர்களுடன் இணைந்துகொள்ள ஒருவர் விட்ட சொல்லை பிறிதொருவர் எடுக்க ஒன்றுடன் ஒன்று இணைந்துகொள்ளும் தகைமைகொண்ட சொற்கள் காட்சிகளென மாறி எழுந்தன.

கும்பகர் விழியிழந்தவர். அவருடைய இரு கண்களும் செங்குழிகளாக அவர் சொற்களுக்கேற்ப அசைந்தன. அவை வெளித்தெரியா சிலவற்றை எங்கோ நோக்குபவைபோல. "இரு குருதிக்குழிகளால் நோக்குகிறேன் இக்களத்தை. குருதியின் செவ்வொளி கொண்ட கண்களால். சூதரே, மாகதரே, இக்குருக்ஷேத்ரப் பெருங்களத்தை வேறெங்ஙனம் நோக்க இயலும்?" என்று அவர் சொன்னார். "எந்தையும் விழியிழந்தவர். பரசுராமரின் ஐங்குருதிக் குளத்தை அழகுறச் சொன்னவர் அவர். அவர் சொல்லி அமர்ந்த அந்தப் பாறையை ஐங்குருதிச்சொல் என இன்றும் தெற்கே வழிபடுகிறார்கள். பரசுராமரின் குருதிக்குளத்தை பாதாளதெய்வங்கள் கடைந்தபோது எழுந்த வெண்ணெய் அது என்கிறார்கள்."

"குருதி கடைந்து நெய்யெடுக்கும் சூதர்களில் ஒருவன். குருதிநெய்யை வஹ்னிக்கு அளித்து தேவர்களை எழுப்புபவன். சொல்லில் எழும் தேவர்களை சொல்லனலில் அவியாக்கி வடவையை எழுப்புபவன். முக்கண்ணனின் முனிவெனத் திகழும் வடவை அமைந்த என் சொற்களை செவிகொள்க! இவை அத்தனை சொற்களையும் உரசி அனலெழச் செய்க! ஆம், அவ்வாறே ஆகுக!" கூடியிருந்த சூதர்கள் கைகளைத் தூக்கி சொல்பிரியா கார்வை என "ஆம், அவ்வாறே ஆகுக!" என ஏற்பொலி எழுப்பினர்.

சூதரே, மாகதரே, இங்குள்ள பருப்பொருட்கள் அனைத்தும், அவற்றை ஆளும் நெறிகள் அனைத்தும், அவற்றிலிருந்து எழும்

உணர்வுகள், எண்ணங்கள், மெய்மைகளும் வெறுமைகளும் கூட சொல்லிலிருந்து எழுந்தவை. அவையனைத்தும் தங்கள் ஆடல் முடித்து மீண்டும் சொல்லுக்கே திரும்புகின்றன. ஒவ்வொரு சொல்லும் ஒரு புடவி. ஒவ்வொரு சொல்லும் ஒரு தனி தெய்வம். ஒவ்வொரு சொல்லும் ஒரு கடுவெளி. சொற்களை இணைக்கின்றது இசைவு. இசைவில் தன்னை வெளிப்படுத்துகிறது பிரம்மம். இசைவென்று ஆன ஒன்றை இங்கு வழுத்துக!

இங்கிருந்து சொல்லெடுக்கும் நான் குருக்ஷேத்ரப் பெருங்களத்தை ஊன்விழிகளால் பார்த்ததே இல்லை. பிறர் உரைக்கும் சொற்களைக்கொண்டு அவற்றை நான் வரைகிறேன். பார்த்துச் சொல்வது எல்லை கொண்டது. பாராதது முடிவிலாது விரிவது. சூதரே, நாம் இக்களத்தினை அகன்று நின்று பார்க்கிறோம். அங்குள்ள ஒவ்வொருவரிலும் கூடு பாய்ந்து அங்கே நிகழ்கிறோம். கொல்பவனும் கொல்லப்படுபவனும் ஆகிறோம். அச்சமும் வஞ்சமும் துயரமும் ஐயமும் வெறுமையும் என அனைத்து உணர்வுகளையும் அடைகிறோம்.

இப்போர்க்களத்தில் இங்கு நிகழாத பல போர்களை நாம் நிகழ்த்துகிறோம். ஒன்றுக்கு மேல் ஒன்றென புடவிகளை அடுக்கி அடுக்கி மேல் செல்பவர்கள் நாமெல்லாம். நாம் சொன்னவை நம்முள் வளர்கின்றன. நம்மிலிருந்து எழுந்து பரந்து நம்மை சூழ்கின்றன. நம்மை அள்ளித்தூக்கி கொண்டுசென்று தங்கள் உலகை நமக்கு காட்டுகின்றன. எது நிகழ்ந்தது என நாம் அறிவதில்லை. எவரும் எது நிகழ்ந்ததென்று அறியப்போவதும் இல்லை. இங்கு நிகழ்ந்த போர் இங்கிருந்த முடிவிலா படைப்பெருக்கின் ஒவ்வொரு

வீரனின் விழிக்கும் ஒவ்வொன்று. சூதரே, அவன் விழி காணும் ஒவ்வொரு கணத்திலும் அது ஒவ்வொன்று.

ஒருவராலும் காணப்படாத ஒரு போர் அங்கு நிகழ்ந்து முடிந்திருக்குமா? இருவர் கண்ட ஒரே போர் ஒன்று என்று எங்கு நிகழ்ந்திருக்கும்? இங்கிருந்து நம் சொல்லில் முளைத்துச் செல்லும் இப்போர் இனியெத்தனை வடிவங்கள் எடுக்கும்! அவ்வடிவங்களினூடாக என்றேனும் எவரேனும் இப்போரை வந்தணைய இயலுமா என்ன? எனில் இங்கு அமர்ந்து எப்போரை நாம் பாடுகிறோம்? ஒவ்வொருவரும் நம் உள்ளத்தில் நிகழும் போரை அல்லவா சொல்லடுக்கி எழுப்புகிறோம்? இதை கேட்கும் ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் குருக்ஷேத்ரக் களம் அமைக்கிறார்கள் அல்லவா?

போர் ஒழியா குருநிலம் வாழ்க! அழியாது நிலைகொள்க இந்த அறநிலம்! என்றும் ஒழியாது நிகழ்க இங்கு இந்தப் போர்! இம்மண்ணில், இக்குருதியில், இவ்வனலில் இங்கு எழுந்தவை என்றுமென உள்ளங்களில் தெளிக! வாளுழுது குருதிபாய்ச்சி பதம்வந்த புது மண்ணில் வேர் விட்டெழுக பூத்து கனியாகி விதைகொண்டு பெருகும் புதிய வேதச்சொல்! ஆம், அவ்வாறே ஆகுக!

கும்பகர் சொன்னார்: குருக்ஷேத்ரக் களத்தில் கர்ணன் அர்ஜுனனை எதிர்த்து போர்புரிந்து கொண்டிருந்தான். அக்காட்சியை மெல்ல மெல்ல களத்திலிருந்த ஒவ்வொருவரும் காணத்தொடங்கினர். படைக்கலம் தாழ்த்தி தேர்களில் திகைத்து நின்று அவர்கள் அவ்விருவரையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவ்விருவரின் உடலிலும் அவர்கள் சொல்லில் அறிந்ததும் விழி நோக்கி தெரிந்ததுமாகிய அனைத்து மாவீரர்களும் எழுந்து வருவதை அவர்கள்

கண்டனர். ஒருகணம் அர்ஜுனன் சரத்வானாக மாறி மழைத்துளிகளென அம்பு பெருக செய்தான். பரசுராமரென உருக்கொண்டு நின்று அவனை எதிர்த்தான் கர்ணன். உருவழிந்து உருக்கொண்டு அக்னிவேசர் என நின்றான் அர்ஜுனன். அங்கே கர்ணன் வில் பெருகும் பரத்வாஜர் என மாறினான். அர்ஜுனன் துரோணராக எழுந்தபோது கர்ணன் பீஷ்மர் என நின்றான். பின்னர் இந்திரனென அர்ஜுனன் ஒளிகொள்ள சூரியனென கர்ணன் கதிர்விரிந்தான்.

மைந்தர்களின் போர் காண இருபுறமும் அவர்களின் தந்தையர் வந்து நின்றனர். மேற்கே சரிந்த வான் வளைவில் நீலஒளிவட்டமென அதிர்ந்தான் நாளவன். விளிம்புகள் வெண்ணிறக் கதிர்ச் சுடர்கள் பெருக சுழன்றான். கிழக்குச் சரிவில் முட்டி மோதி மேலெழுந்து வந்த கருமுகில்களுக்கு நடுவே எழுந்த ஏழு வண்ண வில்லென இந்திரன் தோன்றினான். வெயிலும் மழையும் அக்களத்தில் நிகழ்ந்தன. கிழக்கிலிருந்து இடியோசையும் மின்னலும் எழுந்தது. அருமணிகளை வீசியதுபோல் மழைக்கற்கள் வந்தறைந்து குருக்ஷேத்ரக் களத்தை துளிகொதிக்கச் செய்தன. மேற்கிலிருந்து நூறாயிரம் மடைகள் திறந்து ஒளியே வெள்ளமென பெருகிப் பாய்ந்ததுபோல் குருக்ஷேத்ரத்தை நிரப்பியது கதிரவனின் உருகுதல்.

அம்புப்படுக்கையில் பீஷ்மர் மெல்ல முனகினார். அருகணைந்த மருத்துவனிடம் "என்ன நிகழ்கிறது?" என்றார். "பிதாமகரே, உங்கள் உடலில் புண்கள் சீழ்கட்டாமல் மருந்துகொண்டு நிறுத்தியிருக்கிறோம். ஆயினும் உடலில் காய்ச்சல் கண்டிருக்கிறது. கைகால்களில் வீக்கமும் இணைவுகளில் நெறியும் கட்டியிருக்கிறது. தோல் சிவந்துள்ளது. உடலில் நீர்

மிகலாகாதென்பதனால் மிகக் குறைவாகவே உங்களுக்கு நீருணவு அளித்துக்கொண்டிருக்கிறோம்" என்று அவன் சொன்னான். "ஆனால் உங்கள் உடல் ஆற்றல் குன்றாமலேயே இருக்கிறது."

பீஷ்மர் சலிப்புடன் உதடுகளைச் சுளித்து "நான் கேட்பது களத்தில் என்ன நிகழ்கிறது என்று" என்றார். "அதை நாங்கள் அறியோம். களத்தை நோக்கவோ எண்ணவோ கூடாது என்பது எங்கள் நெறிகளில் தலையாயது" என்றான் அவன். பீஷ்மர் "களம் முனைப்புகொண்டிருக்கிறது" என முனகினார். "ஆனால் ஓசை அடங்கிவிட்டிருக்கிறது" என்றான் மருத்துவன். "ஓசையடங்குகையிலேயே போர் கூர் அடைகிறது" என்று பீஷ்மர் சொன்னார். "நீ அதை நோக்கி சொல்... என்ன நிகழ்கிறது? அங்கன் என்னவானான்?" மருத்துவன் உறுதியான குரலில் "என்னால் இயலாது, பிதாமகரே. எந்நிலையிலும் என் தொழிலின் நெறிகளை நான் கைவிடுவதில்லை" என்றான்.

பீஷ்மர் அவனை சலிப்புடன் நோக்கினார். பின்னர் "எனில் அவ்வோசைகள் எனக்கு நன்கு கேட்கும்படி செய். ஓசைகளே எனக்குப் போதுமானவை" என்றார். "அதை எவ்வண்ணம் செய்வது?" என்றான் மருத்துவன். பீஷ்மர் சுற்றும் நோக்கி "அந்த வேலை எடுத்து அருகே நாட்டு. அதன்மேல் அந்த விரிந்த யானத்தை கவிழ்த்து வை. அதன் உலோகப்பரப்பு ஒலிகளை வாங்கும். அதன்மேல் தொட்டுக்கொண்டிருக்கும்படி ஒரு உலோகக் குறுவேலை வைத்து அதன் மறுமுனையை என் வாயருகே கொண்டுவந்து காட்டு" என்றார். அவன் அவ்வண்ணமே செய்ததும் பீஷ்மர் அதனை தன் பற்களால் கவ்விக்கொண்டார். ஓசைகள் அவர் தலைக்குள் நிறைந்தன.

விழிகளை மூடிக்கொண்டதும் அவை காட்சிகளாயின. அவர் களத்தை அருகில் இருந்து என நோக்கத் தொடங்கினார்.

மலைச்சரிவில் நோக்குமாடத்தில் அமர்ந்திருந்த திருதராஷ்டிரர் சஞ்சயனிடம் "சஞ்சயா, என்ன நிகழ்கிறது களத்தில்? கர்ணனும் அர்ஜுனனும் போரிடுகையில் எவர் நிலை ஓங்கியிருக்கிறது?" என்றார். சஞ்சயன் தன் தொலையாடியை குவித்தும் அகற்றியும் நோக்கிவிட்டு "அரசே, அங்கே இணையிணையென நிகழ்ந்துகொண்டிருக்கிறது போர். எவர் கை ஓங்குகிறது எவர் கை தாழ்கிறது என அவர்கள் இருவர் மட்டுமே அறியமுடியும். அது கணந்தோறும் மாறிக்கொண்டும் இருக்கிறது. பிறர் தங்கள் விழைவுகளையே அக்காட்சிமேல் ஏற்றிச் சொல்லமுடியும்" என்றான்.

திருதராஷ்டிரர் உறுமினார். அவர் சுபாகுவின் இறப்பை ஒரு சொல் எனக்கூட பொருட்படுத்தவில்லை என்பதை சஞ்சயன் கண்டிருந்தான். மைந்தர்களின் இறப்புக்கு அவர் பழகியிருந்தார். மைந்தர் மறையும் செய்திகள் வருகையில் முதலில் கடுந்துயர் கொண்டார். பின்னர் சீற்றமும் வெறியும் அடைந்தார். பின்னர் ஆழ்ந்த அகத்துயர் அடைந்து சொல்லிழந்தவரானார். பின்னர் அதிலிருந்து வெளியேறும் வாயில் ஒன்றை திறந்தார். அந்தப் போரை வெறுமொரு ஆடலாகக் கண்டார். தன்னை காலம் கடந்து எங்கோ நின்று கதையிலென அதை காண்பவனாக ஆக்கிக்கொண்டார். ஆடலின் வெறி மட்டுமே அவரை இயக்கியது. வெற்றியும் தோல்வியும் மட்டுமே அவர் அறிய விழைவதாக இருந்தது.

"ஆனால் ஒன்றுண்டு, அரசே. ஊழ் இளைய பாண்டவரை ஆதரிக்கிறது. நிமித்திகர் அதைக் கண்டறிந்து கூறியிருக்கிறார்கள்" என்று சஞ்சயன் சொன்னான். "இத்தனை

தொலைவிலிருந்து நோக்குகையில் அங்கிருக்கும் ஒவ்வொருவரும் அங்கு நிகழ்வதென்ன என்று அறிந்திருக்கிறார்கள் என்றே உணர்கிறேன். இளைய பாண்டவர் வென்றுகொண்டிருக்கிறார். மைந்தன் தன் நெஞ்சிலேறி மிதிக்க அதில் மகிழ்ந்து கொண்டாடும் தந்தையைப்போல் கர்ணன் அந்த வெற்றியை வளர்த்துக்கொண்டிருக்கிறார். அந்த ஆடலை சொல்லின்றி, செயலின்றி நிகழ்த்திக்கொண்டு தேரின் அமரத்தில் அமர்ந்திருக்கிறார் இளைய யாதவர்." திருதராஷ்டிரர் மீண்டும் உறுமினார்.

ஏகாக்ஷரிடம் காந்தாரி கேட்டாள். "என்ன நிகழ்கிறது? உத்தமரே, என் மைந்தன் கர்ணன் வெல்லப்போகிறான் அல்லவா?" ஏகாக்ஷர் களம் மீது கவடி நிரத்தி கலைத்து அடுக்கி ஒற்றை விழிதூக்கி நோக்கினார். "அங்கே எழுந்துகொண்டிருப்பது நான்காம் அனல். வடவை. ருத்ரவிழி. அதை வெல்ல எவராலும் இயலாது" என்றார். காந்தாரி "என் மைந்தன் எங்கும் வெல்வான்" என்றாள். ஏகாக்ஷர் "ஆனால் கவடி காட்டுவது மேலும் ஒன்று. அங்கே ஆழியும் வெண்சங்கும் ஏந்திய விண்ணோன் எழுந்துள்ளான். பதினொரு உருத்திரர்களும் வணங்கும் பெரியோன். அனலை அணைப்பது அவனுடைய பாற்கடல்" என்றார். காந்தாரி நீள்மூச்செறிந்தாள்.

நாகர்குலத்தின் களத்தில் அமைந்த அரவானின் தலை சொன்னது. "கூட்டரே, குலத்தோரே, நான் காண்பது அரவுகள் செறிந்த பெருங்களத்தை. மண்ணுக்கு அடியில் பெருநாகங்கள் படம்தூக்கி எழுகின்றன. அவற்றின் மூச்சுக்கள் களமெங்கும் எழுந்துகொண்டிருக்கின்றன. நாகபாசன் தன் அம்புகளுடன் களத்தில் நின்றிருக்கிறான். அவனுக்கு எதிர்நின்றிருக்கிறது இடிமின்னல்களின் அரசனின் பெரும்படை."

குருக்ஷேத்ரப் பெருங்களத்தின் ஒவ்வொரு மூலையிலும் போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு படைவீரரும் தங்கள் உச்சத்தில் நின்று பொருதிக்கொண்டிருந்தனர். அத்தனை நாள் நிகழ்ந்த போரிலிருந்து அக்கணத்திற்கான விசையை அவர்கள் திரட்டிக்கொண்டிருப்பதுபோல. அங்கிருந்து முடிவிலாக் காலம் வரை ஒருவரிலிருந்து ஒருவரிடம் தொற்றிக்கொண்டு அந்தப் போர் சென்றுகொண்டே இருக்கும் என்பதுபோல. நிலமெனத் தாங்கி பிறவிக்களமென்றாகி உணவென்றும் இருந்த அன்னத்தின்மேல் நெளியும் புழுக்களைப்போல. அன்னம் ஒழிய ஒன்றையொன்று உண்டாலொழிய அவை உயிர்வாழ முடியாமலாகிவிட்டதுபோல.

போர்களில் பழகியவர்கள் அல்ல அவர்களில் பெரும்பாலானவர்கள். எளிய ஏவலரும் காவலருமென பணியாற்றியவர்கள். போர்களை அவர்கள் கற்பனை செய்து கொண்டதும் இல்லை. நேரில் கண்ட தருணத்திலேயே அஞ்சி உள்ளொதுங்கிக் கொண்டவர்கள். ஆனால் அவ்வாறு அச்சமும் விலக்கமும் கொள்கையிலேயே தங்கள் உள்ளிருந்து ஒன்று எழுந்து போரில் ஈடுபடுவதை, வஞ்சம் கொள்வதை, குருதிக் கூத்தாடுவதை கண்டுகொண்டிருந்தனர். ஒவ்வொருநாளும் பணி முடிந்த பின்னர் அமர்ந்து அவர்கள் போரைப்பற்றியே பேசினர். பேசிப்பேசி பெரிதாக்கிய போருடன் தாங்களும் வீங்கிப் பெருகினர். போரின் ஓசையில் துயின்றபோது கனவுகளில் உருமாறி நின்று போரிட்டனர்.

அவர்களும் போருக்கு எழவேண்டுமென்ற ஆணை அளிக்கப்பட்டபோது முதற்கணத் திகைப்புக்குப் பின் அச்சம்

எழுந்து உடலை நடுங்க வைக்கையில் அதன் ஆழத்திலிருந்து கிளர்ச்சி ஒன்றெழுந்து முகங்களை விரியச்செய்தது. அச்சத்தை பகிர்ந்துகொள்பவர்கள்போல அவர்கள் அக்கிளர்ச்சியை பகிர்ந்துகொண்டனர். சலித்துக்கொள்பவர்கள்போல் உவகையை வெளிப்படுத்தினர். போரில் எழுந்து முதல் அம்பை தொடுத்ததும் அது உளம்சூடிச் சென்று தங்கள் எதிரியை கொன்று மீண்டது கண்டு மெய்ப்பு கொண்டனர். வேலேந்தி எதிரியின் மெல்லுடலுக்குள் செலுத்தியவர்கள் அக்கணத்தில் முதல் காமத்தை அறிந்தவர்கள்போல் உடல் திளைத்தனர்.

கொன்று கொன்று மேலெழுகையில் பல மடங்கு மேலும் மேலும் கொன்று கொன்று மேலெழும் உளமொன்று தங்களுக்குள் எழுந்திருப்பதைக் கண்டு தாங்கள் தங்களை எண்ணியதைவிட பேருருவர்கள் என்று எண்ணி தருக்கினர். போர் தங்களை விராட உருவம் கொள்ளச்செய்கிறது. ஒருவரோடொருவர் தொடுத்துக்கொண்டு களமெங்கும் பரவச் செய்கிறது. களத்திலிருந்த படைவீரர் அனைவரும் தன் உடலென்று ஆகி விண்ணளாவ தலைநிமிர்ந்து கை சுழற்றிச் செல்ல இயல்கிறது. முதல்நாள் போர் முடிந்து திரும்புகையிலேயே அவ்வுடலுக்குள் அவர்கள் மீண்டும் பிறந்து எழுந்துவிட்டிருந்தனர். விழிகள் கூர்கொள்ள சொல்லடங்கி அவர்கள் அழுத்தம் மிக்கவர்களாக ஆயினர். நிலம்பதிந்த கால் அழுந்த எடைமிக்கவர்கள் ஆகிவிட்டதுபோல் மயங்கினர்.

போர்க்களத்தின் எல்லையில் கிருபரும் சாத்யகியும் பொருதிக்கொண்டிருந்தனர். அஸ்வத்தாமனும் திருஷ்டத்யும்னனும் அனல் கொண்டு போரிட்டனர். பீமனும் துரியோதனனும் எழுந்தும் பின்னடைந்தும் மீண்டெழுந்தும் போரிட்டுக்கொண்டிருந்தனர். கர்ணனும் அர்ஜுனனும்

பிறரில்லா வெளியொன்றில் ஒருவரையொருவர் அம்புகளால் தாக்கி ஒருவரையொருவர் வென்று மீண்டும் வென்று சென்றுகொண்டிருந்தனர். இருவரின் தேர்களும் காதல் கொண்ட இரு வண்டுகள்போல் ஒன்றையொன்று சுற்றி வந்தன. அர்ஜுனனின் வெள்ளித்தேர் கர்ணனின் பொற்தேருடன் ஒரு விழிதுலங்கா மென்சரடால் இணைக்கப்பட்டிருந்ததுபோல் தோன்றியது.

சல்யர் இறங்கிச்சென்ற பின் கர்ணனின் குடிமைந்தன் சபரன் பாகனென ஏறி நின்று தேரை செலுத்தினான். கர்ணனிடமிருந்து தேர்க்கலையை கற்றவன் அவன். குருதியில் அதிரதனின் சவுக்கு இருந்தது. சல்யருக்கு நிகராகவே அவனால் தேரை ஓட்ட இயன்றது. தந்தைக்கு மைந்தனே மிகச் சிறந்த பாகன் என்று அக்களத்தில் அவன் காட்டினான் . கர்ணன் பஞ்சராத்திர அஸ்திரத்தால் அர்ஜுனனை அறைந்தான். வைஸ்வாநர அஸ்திரத்தால் அதை அர்ஜுனன் தடுத்தான். அம்புகளால் கிழிபட்டு அவர்களைச் சூழ்ந்திருந்த வெளி அதிர்வதையே விழிகளால் பார்க்க முடிந்தது. கர்ணனின் அம்புகளுக்கு நிகரான அம்பு அர்ஜுனனின் அம்பறாத்தூணியிலிருந்து தானே உந்தி எழுந்தது. அர்ஜுனனின் அம்பை சந்தித்த கர்ணனின் அம்பு அதை முன்னரே அறிந்திருந்தது.

எங்கோ எழுந்த முரசு பீமனால் சுபாகு கொல்லப்பட்டதை அறிவித்தது. செய்தியறிந்த துரியோதனன் ஒருகணம் திகைத்தான். வெறிகொண்டு தேர்த்தட்டை ஓங்கி உதைத்தான். "செல்க! செல்க!" என ஏவியபடி சீற்றத்துடன் படைகளை ஊடுருவிச்சென்று பீமனை சந்தித்தான். சுபாகுவின் குருதியை உடலெங்கும் பூசிக்கொண்டு அமலையாடி வந்த பீமனைக் கண்டு பிளிறியபடி கதையுடன் பாய்ந்தான் துரியோதனன்.

பீமனும் தன் கதையை தூக்கிக்கொண்டு நிலத்தில் பாய்ந்து துரியோதனனை எதிர்த்தான். “உன் இளையோனின் குருதி இது. உன் குருதி அதில் கலக்கட்டும்... எழுக, இழிமகனே!” என பீமன் கூச்சலிட்டான். மத்தகம் முட்டும் வேழங்கள் என அவர்கள் கதை பொருதிக்கொண்டார்கள்.

கர்ணனின் அம்புகளின் ஆற்றல் மிகுந்து வருவதை இளைய யாதவர் கண்டார். கந்தர்வாஸ்திரங்கள் நூற்றுக்கணக்கான வெண்மலர்கள் என வெடித்தன. கின்னராஸ்திரங்கள் செவிநிறைக்கும் முழக்கத்தை எழுப்பின. அர்ஜுனன் தோள்தளர்ந்த கணத்தில் இளைய யாதவர் தேரை பின்னிழுத்து படைகளுக்குள் மறைத்தார். கவசப்படை எழுந்து வந்து அர்ஜுனனை மறைக்க கர்ணன் ஏளனத்துடன் “நில்... ஆணிலியே, நின்று பொருது... ஏன் ஒளிந்தோடுகிறாய்?” என்று கூவினான். கவசப்படையின் கதவு திறந்து மறுபக்கமிருந்து கோசலத்தின் இளையமன்னன் விசோகன் நாணொலி எழுப்பியபடி கர்ணனை நோக்கி வந்தான். “என்னுடன் பொருது! பொருது என்னுடன், சூதனே” என்று கூவியபடி அவன் கர்ணனை எதிர்கொண்டான்.

“விலகிச்செல், சிறியோனே. இது உனது போரல்ல” என்று கர்ணன் கூவினான். “ஆம், எனது போரல்ல இது என்று அறிவேன். இனி இக்களத்திலிருந்து புகழையன்றி பிறிதொன்றை ஈட்டி திரும்பிச்செல்ல இயலாதென்று அறிந்திருக்கிறேன். அங்கனே, இப்போரில் உன் அம்பினால் நான் களம்பட்டேன் எனில் நீயும் பார்த்தனும் பொருதும் கதையைப் பாடும் ஒவ்வொரு சூதர் நாவிலும் நின்றிருப்பேன். அதுவே என் வீடுபேறு” என்றான் விசோகன். அவன் கவசங்களை அறைந்து உடைத்து “உன்னை கொல்லும் எண்ணம் எனக்கில்லை...

விலகுக!” என்றபின் கர்ணன் திரும்பி அர்ஜுனனை மறைத்து அரணெழுப்பிய கவசப்படையை நோக்கி மதங்காஸ்திரத்தை ஏவினான்.

ஒன்று நூறென பெருகிச்சென்று உலோகப்பரப்புகளை அறைந்து சிதறடித்தது அந்த அம்பு. அதைத் தொடர்ந்து எழுந்த மாருதாஸ்திரம் புயல் காற்றுபோல் அப்பகுதியை அள்ளிச் சுழற்றியது. விசோகன் தன் பெரிய அம்புகளால் கர்ணனின் தேரை அறைந்தான். “என்னுடன் பொருது... கீழ்மகனே, பொருது என்னுடன்” என்று கண்ணீர் வழியக் கூவினான். கர்ணன் உதடுகளைச் சுழித்தபடி திரும்பி அவன் தேர்ப்புரவிகளில் ஒன்றின் கழுத்தை அறுத்தான். சலிக்காது அம்புகள் தொடுத்தபடி அவன் முன்னெழுந்து வர “விலகு, அறிவிலி” என்று கர்ணன் கூவினான். விசோகனின் அம்பு ஒன்று வந்து கர்ணனின் கவசத்தை அறைந்து ஓசை எழுப்பியது.

கணம் துடித்த சினத்தால் கர்ணன் திரும்பி கட்காஸ்திரத்தை எடுத்து ஒரே வீச்சில் விசோகனின் கழுத்தை அறுத்து அப்பாலிட்டான். கையில் எடுத்த அம்புடன் நின்று தடுமாறி தேர்த்தட்டில் விழுந்து விசோகன் துடித்து உயிர் துறந்தான். அவனை ஒருமுறைகூட திரும்பி நோக்காமல் உடைந்து அகன்ற கவசப்படையினூடாகக் கடந்து பாண்டவப் படைக்குள் நுழைந்து கர்ணன் அறைகூவினான். “எங்கே பார்த்தன்? எங்கே உங்கள் வில்விஜயன்? ஆண்மைகொண்டவன் எனில் இக்கணமே இங்கு எழுக... இன்றே இந்த ஆடல் முடிவடைக...”

இருட்கனி - 58

ஒவ்வொன்றும் ஒருங்கிணைந்துகொண்டிருந்தன. குளிர்ந்த சொல்லற்ற வஞ்சத்துடன், தெய்வ ஆணைகளுக்குரிய மாற்றமின்மையுடன், பருப்பொருட்கள் இலக்குகொள்கையில் அடையும் பிசிறின்மையுடன், காலம் முனைகொள்கையில் எழும் விசையுடன். பாண்டவப் படையினர் பின்னால் சென்று அர்ஜுனனையும் இரு மைந்தரையும் தனித்து விட்டனர். கௌரவப் படையினர் கர்ணனையும் மைந்தரையும் விட்டு பின்னகர்ந்தனர். இருவரும் தாங்களே பலவாகி பெருகி அம்புகளென ஆகி விண்ணிலெழுந்து மோதிக்கொண்டனர். வெடித்து அனலுமிழ்ந்தனர். சுழித்து குருதிச்சகதிப் புழுதிக்குப்பையை அள்ளி சுழற்றிவீசினர். உறுமியபடி சென்று ஒவ்வொன்றையும் பற்றி உலுக்கினர். ஆற்றாது திரும்பி வந்தனர். மீண்டும் சீறி எழுந்தனர்.

ஒவ்வொரு அம்பும் ஓர் அகச்சொல். ஒரு சொல்லா உணர்வு. மானஸாஸ்திரம் கர்ணனை இரவுதோறும் சூழ்ந்த சொற்களை தன்னிலேற்றிக்கொண்டிருந்தது. செல்லும் வழியெங்கும் வெடித்து அனல்பாதையொன்றை காற்றில் சமைத்தது. அவன் சொல்லிச் சொல்லி அகற்றியவை. கனவில் கண்டு அதிர்ந்தவை. நினைவுகூரக் கசந்தவை. தன்னியல்பாக எழுகையில் தலையிலறைந்து கண்ணீர்விட்டவை. மறந்துவிட்டவை. மறதியிலிருந்து புளித்து நஞ்சென்றானவை. நாவிலெழும் சொற்களில் ஒட்டிக்கொண்டு எழுந்தவை. அவைகளில் நின்று கனன்றவை. அவனை திகைப்பூட்டி திரும்பி நோக்கி நகைத்தவை. அஞ்சி ஓடச்செய்தவை. அவன் சென்றணைந்த இருளுக்குள் உடனிருந்தவை. செவிகளில் முணுமுணுத்தவை. "அகலோம்" என்றவை. "கொண்டே

செல்வோம்" என்றவை. "நீ நாங்களே" என்றவை. "நீயே நாங்கள்" என வீறிட்டவை.

அர்ஜுனனைச் சூழ்ந்து தீப்பறக்கச் செய்தது அது. பல்லாயிரம் விண்மீன்பெருக்கென அவனை வளைத்துக்கொண்டது. அர்ஜுனன் அவற்றை நோக்கி தன் அம்புகளால் அறைந்து கை சலித்து உளம் சோர்ந்தபோது இளைய யாதவர் "போரிட வேண்டாம். அவற்றை நோக்கவே வேண்டியதில்லை. அவை இல்லையென்றே எண்ணுக!" என்றார். அர்ஜுனன் வில் தாழ்த்தியதுமே அவை இலக்கழிந்து நிலம் பொழியலாயின. ஒவ்வொன்றும் ஒன்றை உரைத்து உதிர்வதாக அர்ஜுனன் எண்ணினான். அனைத்தும் ஒற்றைச்சொல்லே என பின்னர் கண்டான். ஒற்றைச்சொல்லின் ஒரு கோடி உச்சரிப்புகள். ஊழ்கநுண்சொல்லா அது? நாம் சென்று பற்றிக்கொள்வது ஊழ்கநுண்சொல். நம்மை வந்து பற்றிக்கொள்ளும் சொல் தெய்வங்களின் தீச்சொல் போலும்.

மானஸாஸ்திரம் ஒளியிருண்டது. நீலமாகியது. சாம்பலாகியது. இருளென்றாகியது. அவனை சுற்றிச்சுழன்று களத்தில் அலைந்தது. அத்தனை பருப்பொருட்கள் மீதும் விழியற்ற யானை எனச் சென்று மோதியது. அனைத்தையும் முட்டிமுட்டி உலுக்கியது. மறுமொழி ஒன்றை தேடுவதுபோல. பின்னர் சலித்து நிலத்திலமைந்தது. எடைமிக்க கருநாகம் என ஊர்ந்து நெளிந்தது. படம் விரித்து அறைந்தது. சீறி மீண்டும் எழுந்தது. வளைந்து கொந்தளித்தபடி கர்ணனையே சென்றடைந்தது. அவன் தேரை அறைந்து உலுக்கியது. அவன் தலையை சுற்றிக் கவ்வியது. உடலைப் பற்றி கைகளை செயலிழக்கச் செய்தது. அவன் ஒற்றைச் சொல்லால் அதை சிறிதாக்கினான். தன் தலையணியில் ஒரு கரிய அருமணி என அதை

அணிந்துகொண்டான். துயர்கொண்ட ஒற்றைவிழி என அது அங்கிருந்தது.

கைசுழற்றி அவன் எடுத்துத் தொடுத்த ஸ்வப்னாஸ்திரம் கர்ணன் கொண்ட விழைவுகளை சூடியிருந்தது. அது பொன்னென மின்னும் உடல்கொண்டிருந்தது. சுழன்று திரும்புகையில் அதன் பொன்னரிந்த மடிப்புகளின் ஒளி நூறுநூறு அம்புகளென ஆகி அதை சூழ்ந்தது. அவன் அதை எடுக்கையில் முதிர்ந்தவனாகத் தெரிந்தான். தொடுக்கையில் இளையவன் ஆனான். விடுகையில் அகவை குறைந்தான். எழுந்த அம்புக்கு அப்பால் நின்று விழிமலர்ந்து சிரித்து மகிழும் சிறுவனை அர்ஜுனன் கண்டான். அவனுடைய அம்புகள் எவையும் அதை தொடவில்லை. "அதை சிரித்தபடி எதிர்கொள்க... அஞ்சாதே" என்று இளைய யாதவர் சொன்னார். "அது முதன்முதலாக மானுடரைக் கண்டு விளையாடவரும் வேங்கைக்குருளை. அதற்கு துளிக்குருதியின் மணம் கிடைப்பதுவரை அது குழந்தை. அதை நோக்கி புன்னகை செய். அதை குழவியென்றே நினை. ஒருபோதும் அதன் ஒரு நகக்கீறலும் உன்மேல் விழ இடமளிக்காதே."

சித்தாஸ்திரம் இடித்தொடர்களை எழுப்பியது. வானம் இருண்டு கருமைகொண்டு வளைந்த தகடுபோலாகியது. அதில் மின்னல்கள் நெளிந்தன. நூறுநூறு முகங்கள் தெளிந்து தெளிந்து அணைந்தன. உறுமல்கள். ஓலங்கள். விந்தைமொழியிலமைந்த கூக்குரல்கள். இருண்ட சிறகுகளுடன் விழிகள் மின்ன பறந்தன கழுகுகள். நெளிந்து நெளிந்து நிறைந்தன நாகங்கள். விழிகளெரியும் பேயுருவங்கள் வெண்பற்களைக் காட்டி நகைத்தன. சிறகுகள் எழுந்த, கைகள் பெருகிய, நச்சுக்கொடுக்குகள் கொண்ட பாதாளமூர்த்திகள்

பறந்தணைந்தன. “அஞ்சாதே. ஒருகணமும் அஞ்சாதே. அதில் உன்னை பார். உன்னுருவை அங்கே கண்டால் அதில் உன்னை பொருத்திக்கொள்.”

அர்ஜுனன் விழிகளை ஓட்டி அந்தக் கொடிய வெளியை நோக்கினான். கோள்கள் சுழலும் கடுவெளி. உருகிமறைந்தன உலகுகள். தெளிந்தெழுந்தன புதிய உலகங்கள். இருண்ட நீர்கள். எல்லையற்ற இருளில் எழுந்து எழுந்து அமைந்தன எரிவிண்மீன்கள். எத்தனை முகங்கள்! எத்தனை முகங்கள்! எவரெவர் இவர்? என் மூதாதையரா? என் ஆசிரியர்களா? என் எதிரிகளா? என் குடிக்கு விந்து அளித்தவர்கள் போலும். என் குடிக்குரிய சொல்லளித்தவர்கள் போலும். என் முகம் எது? இதோ எந்தை முகம். அது என் மூத்தவரின் முகம். அதோ பீமன். அதோ நகுலனும் சகதேவனும். கனிந்து புன்னகைத்து வருபவன் துரியோதனன். உடனிருப்பவர்கள் அவன் இளையோர். பீஷ்மர் மணிமுடி சூடியிருக்கிறார். துரோணர் ஊழ்கத்தில் அமர்ந்திருக்கிறார். பள்ளிகொண்டிருக்கிறார் சல்யர். நான் யார்?

அவன் பதைப்புடன் விழியலைத்து தேடினான். பொழுது செல்கிறது. இது ஒருகணம். கனவுகள் எல்லாமே ஒரு கணங்கள். அவர் சொன்னதும் நான் கேட்டதும். நான் தேடுவதும் தேடத்தேட இவ்வெளி விரிந்தகல்வதும். யார் நான்? அதோ அக்கரிய உடல். ஆம், அது நான். அவன் அதை நோக்கி பாய்ந்து செல்வதற்குள் உணர்ந்தான் அது கர்ணன் என. ஆனால் அங்கு சென்று கர்ணனாக நின்று திரும்பி நோக்கினான். அங்கே காண்டீபம் ஏந்தி நின்றிருந்த கரிய உடல்கொண்ட அர்ஜுனனை கண்டான். “கீழ்மகனே!” என்று கூவியபடி தன் அம்புகளால் அவனை அறைந்தான்.

அர்ஜுனனின் தலையை கொய்துசென்றது சித்தாஸ்திரம். கூந்தல் வேர்களென நிலத்தில் பரவ தலை கிடந்தது. “ஆம், நீ அதை வென்றாய்!” என்றார் இளைய யாதவர்.

துரியாஸ்திரம் ஓசையற்றிருந்தது. உருவமும் இல்லாமலிருந்தது. ஒரு விழியதிர்வென மட்டுமே அதை உணரமுடிந்தது. “அதை நோக்காதே. அதை நாவோ செவியோ அறியலாகாது. அது நஞ்சு. ஒரு துளியால் மாமலைகளை கரைத்தழிக்கும் ஆற்றல்கொண்டது. அதை வெல்லும் வழி ஒன்றே. கருக்குழவி என சுருண்டுகொள். உன் கைவிரலை வாய்க்குள் விட்டு உன்னையே சுவைத்து உன்னை மட்டுமே அறிந்து பிறிதொன்றிலாது இரு!” அத்தேரே கருப்பை என்றாக அர்ஜுனன் சுருண்டு விழுந்தான். தன்னை அன்றி வேறெதையும் அறியாதவனானான். மீண்டெழுந்தபோது அனைத்தும் வெளுத்திருந்தது. புன்னகையுடன் இளைய யாதவர் சொன்னார் “நச்சுக்கொடியால் உணவூட்டப்படுவது கருக்குழவி. நஞ்சை வென்று உயிரெழும் வழி அறிந்தது அது மட்டுமே.”

சூதரே, மாகதரே, நான் கண்டேன். அங்கே வடவைப் பேரனல் எழுந்திருந்தது. அனைத்தையும் உண்டு உண்ண உண்ண பசிகொண்டு எழும் ருத்ரன். இங்குள்ள ஒவ்வொன்றும் தங்கள் ஆழத்தில் அவனுடைய ஒரு துளியை கொண்டுள்ளன. அதற்கு எதிராக அவை கொண்டுள்ள ஈரமே உயிர் என்க! ருத்ரனை வாழ்த்துக! மூவிழியன் நுதலென விளங்கும் அவனை வணங்குக!

கர்ணனும் அர்ஜுனனும் போரிட அவர்களின் மைந்தர்கள் இருபுறமும் நின்று ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர்.

விருஷகேதுவும் சுஷேணனும் சத்ருஞ்ஜயனும் திவிபதனும் பாணசேனனும் அரைவட்டமாக நின்று சுருதகீர்த்தியையும் சுருதசேனனையும் எதிர்த்தார்கள். சுருதசேனனின் உடலில் அபிமன்யு தோன்றினான். "செல்க! கொன்று வீழ்த்துக!" என அவன் ஆணையிட சுருதசேனனின் வில்திறன் பெருகிக்கொண்டே சென்றது. சுருதகீர்த்தி சினம்கொண்டிருந்தான். அது தன்மேல் அவன் கொண்ட சினம். தன்மீதான சினத்தை வெல்ல மானுடர் அதை பிறர்மேல் பெருக்கிக்கொள்கிறார்கள். சுருதகீர்த்தியின் விழிமுன் விருஷசேனனின் உருவாகவே கர்ணனின் மைந்தர் நின்றிருந்தனர். கொல்லும் வெறியுடன் அவன் அவர்களை அம்புகளால் அறைந்தான். விருஷகேது பின்னடைய மெல்ல தேர்மாறி அங்கே திவிபதன் வந்தமைந்தான். திவிபதனின் அம்புகள் சுருதகீர்த்தியை நிகர்செய்தன. சுருதசேனனை எதிர்த்துச்சென்ற சத்ருஞ்சயனும் பாணசேனனும் பின்னடைய அவர்களுக்கு சுஷேணன் சென்று துணையளித்தான்.

கர்ணனின் அம்புகள் விசையெழுந்தபடியே வந்தன. அர்ஜுனன் அணுவணுவென பின்னடைந்தான். அம்புகளால் ஒரு வேலியை எழுப்பியதுபோல் அவனை வளைத்துக்கொண்டிருந்தான் கர்ணன். அர்ஜுனன் வீழ்ந்துகிடந்த யானை ஒன்றை நோக்கியபோதுதான் அவன் எத்தனை பின்னடைந்திருந்தான் என்பதை உணர்ந்தான். எஞ்சிய வெறியை திரட்டிக்கொண்டு கர்ணனை கருடாஸ்திரத்தால் தாக்கினான். அதை அவன் கிரௌஞ்சாஸ்திரத்தால் உடைத்தான். சீற்றத்துடன் பற்களை நெரித்தபடி அர்ஜுனன் வருணபாஷாஸ்திரத்தை எடுத்தான். அது நகைப்பொலி எழுப்பியபடி அலையலையெனச் சென்று கர்ணனை தாக்கியது. அவன் தாபாஸ்திரத்தால் அதை பல துண்டுகளாக பிளந்தான்.

வெறியுடன் அஞ்சலிகாஸ்திரத்தை அர்ஜுனன் எடுக்க இளைய யாதவர் கைநீட்டி அவனை தடுத்தார். "அந்த அம்பை வீணாக்காதே. அது இப்போது அவனை கொல்லாது. ஆற்றல்மிக்க அவனுடைய அம்புகள் அனைத்தும் வெளிவரட்டும். அதிலுறையும் தெய்வத்தை வணங்கி மீண்டும் ஆவநாழியில் வை." அர்ஜுனன் "எழுந்த தெய்வமே அமைக! உங்கள் இலக்கு துலங்குவது வரை என் ஆவநாழியில் கோயில்கொண்டமர்க!" என்று சொல்லி அதை மீண்டும் வைத்தான். கர்ணனின் துவஷ்டாஸ்திரமும் பர்வதாஸ்திரமும் வந்து அவனை அறைந்தன. அவன் தேர் அலைகளிலென துள்ளி நிலைமறிந்தது. புரவிகளை ஆணையிட்டு தாவவும் அமையவும் வைத்து அந்தக் கொந்தளிப்பை இளைய யாதவர் தவிர்த்தார்.

"அவன் இறப்பை தேரவேண்டும்... விழையாது உயிர்துறப்பதில்லை சான்றோர்..." என்று இளைய யாதவர் கூறினார். "அவன் இனி இழக்க இருப்பது மைந்தர்செல்வத்தை மட்டுமே. அதை வெல்க!" அர்ஜுனன் "நமது மைந்தர்கள் களம் நின்றிருக்கிறார்கள்" என்றான். "அவன் நம் மைந்தரை கொல்லப்போவதில்லை" என்றார் இளைய யாதவர். "ஏன்?" என்று அர்ஜுனன் கேட்டான். "கொல்வதென்றால் முன்னரே அவனால் கொன்றிருக்க முடியும்" என்றார் இளைய யாதவர். "அவன் மைந்தர் சினந்தெழுந்து நம் மைந்தரை கொல்லக்கூடும்" என்று அர்ஜுனன் சொன்னான். "அவர்கள் அவன் உள்ளத்தின் ஆணையை கடக்கமாட்டார்கள்" என்றார் இளைய யாதவர். "மைந்தர் என அவன் பெருகியிருக்கிறான். ஒவ்வொரு மைந்தர் இறக்கையிலும் ஒருமுறை அவன் இறப்பான். இறந்து இறந்து இறப்பு நோக்கி வருவான்... கொல்க!"

அர்ஜுனன் கர்ணனை கௌமோதகம் என்னும் அம்பால் அறைந்தான். அதை வெல்ல கர்ணன் சூர்யாஸ்திரத்தை தொடுத்தான். நீலநிறமான சுடர்வெடித்து களம் ஒளியால் இருண்ட கணத்தில் முன்னரே இடம்குறித்து உளத்தில் பதித்துவைத்திருந்த அர்ஜுனன் சாம்பவி என்னும் அம்பால் திவிபதனை தாக்கினான். ஒளிக்குள் ஒளியென அவன் தேர் வெடித்து எழுந்து தெறித்தது. ஒளியிருண்டு உலகென மாறியபோது எரிந்துகொண்டிருந்த திவிபதனின் தேர் உடல்பற்றிக்கொண்ட புரவிகளுடன் பாய்ந்தோடிக்கொண்டிருந்தது. அள்ளி வீசப்பட்ட திவிபதனின் உடல் துண்டுகளென நிலத்தில் கிடந்தது. கால்கள் வலிப்புற வெட்டுண்ட இடைக்கீழ் உடல் துள்ளியது.

"அங்கனே, இக்களத்தில் இதோ நீ மீண்டும் இறந்தாய்" என்று கூவியபடி அர்ஜுனன் கர்ணனை அசனி என்னும் பெருமுழக்கமிடும் அம்பால் அறைந்தான். திவாகராஸ்திரத்தால் அதை உடைத்தெறிந்தான் கர்ணன். அவன் சினம்கொள்ளவில்லை என்பதை, சிறுநடுக்குகூட அவன் உடலில் எழவில்லை என்பதை அர்ஜுனன் கண்டான். "அதை கருதாதே... அவன் சினந்தால், அழுதால் அது வெளியேறுகிறது. இப்போது அது உள்நுழைந்து இறுகுகிறது. அவன் மைந்தர்களை வீழ்த்து" என்று இளைய யாதவர் கூறினார். திரண்டு எழுந்து தாக்க வந்த விருஷகேதுவையும் சுஷேணனையும் சுருதகீர்த்தி தன் முழு விசையாலும் அறைந்து தடுத்தான். சத்ருஞ்ஜயனும் பாணசேனனும் சுருதசேனனால் தடுக்கப்பட்டார்கள். அப்பால் வட்டமிட்டு நின்றிருந்த படைவீரர்கள் சொல்லடங்கி விழிகளென்று நின்றிருக்க அங்கே அவர்கள் சிறிய சுழல்காற்றென ஒருவரையொருவர் சுற்றிக்கொண்டு

போரிட்டனர். அவர்களின் வட்டத்திற்குமேல் அம்புகள் எழுந்து ஒன்றுடன் ஒன்று முட்டி அங்கேயே உதிர்ந்துகொண்டிருந்தன.

அர்ஜுனன் கர்ணனை நோக்கி வித்யுத் என்னும் அம்பை தொடுத்தான். விழியதிர அது மின்னி கர்ணனை தாக்க அவன் பானு என்னும் அம்பால் அதை தடுத்தான். ஒளியை ஒளி தடுக்க உருவான கணப்பொழுதில் அர்ஜுனன் துஜாஸ்திரத்தால் விருஷகேதுவை தாக்கினான். வெடித்தெழுந்த தேரிலிருந்து விருஷகேதுவின் உடல் தெறித்து விழுந்தது. கர்ணன் அரைக்கணம் விழிதிருப்ப அந்த இடைத்தருணத்தில் அர்ஜுனன் இருண்ட அலையெனச் சுருண்டெழுந்து உறுமிச்சென்று தாக்கிய வாரிதாஸ்திரத்தால் சுஷேணனை தாக்கி கொன்றான். இருளகன்றபோது கவிழ்ந்த தேரின் கீழ் சுஷேணன் மண்ணில் விழுந்து கிடந்தான். விழிமீண்டு திகைத்த புரவிகள் தேரை இழுத்தபடி அப்பால் செல்ல உயிரிழந்த பாகனின் உடல் இழுபட்டபடி பின்னால் சென்றது.

கர்ணன் மோகனாஸ்திரத்தை ஏவினான். அக்கணமே அங்கிருந்த அனைத்துக் காட்சிகளும் மறைந்தன. "அவன் அஞ்சிவிட்டான். எஞ்சிய மைந்தரை காக்க எண்ணுகிறான். அவ்வச்சமே நமக்கெனத் திறந்த வாயில். அதில் நுழைக!" என்று இளைய யாதவர் கூவினார். "சம்மோஹனாஸ்திரத்தை ஏவுக... அது நாம் விழைந்த காட்சியை இம்மாயையில் உருவாக்கி அளிக்கும்..." சம்மோஹனாஸ்திரத்தால் தெளிந்த காட்சியில் கர்ணன் ஒளிரும் அருமணிகள் கொண்ட மும்முடி சூடி பொற்தேரில் நின்றிருந்தான். அவனுக்கு இருபுறமும் சுருதகீர்த்தியும் சுருதசேனனும் படைத்துணைவர்களாக வந்தனர். கர்ணனின் அம்பு வந்து அர்ஜுனனின் தேரை அறைந்து அதிரச்செய்தது.

அந்த உலுக்கலில் அர்ஜுனன் அக்கனவிலிருந்து வேறெங்கோ விழித்தெழுந்தான். அங்கே சித்ரகூடத்தின் ஏரிக்கரையில் அவன் தன் நீர்ப்பாவையை நோக்கி அம்புகளை தொடுத்துக்கொண்டிருந்தான். அருகணைந்த முனிவர் ஒருவர் அவனிடம் "ஆம், அவ்வாறே. தன்னை வெல்பவனே அறுதியாக கடந்துசெல்கிறான்" என்றார். அது கனவென உணர்ந்து அவன் உலுக்கிக்கொண்டபோது கர்ணனின் அம்புகளால் உடைந்து அதிர்ந்துகொண்டிருந்த தேரில் குருக்ஷேத்ரத்தில் நின்றிருந்தான். மீண்டுமொரு உளப்புரளல் வழியாக அவன் மாயைக்குள் நுழைந்தான். வெறியுடன் கூச்சலிட்டபடி சுருதகீர்த்தியையும் சுருதசேனனையும் தாக்கினான்.

கூரிய அம்புகளால் அவர்களை அவன் அறைந்தான். "தந்தையே! தந்தையே!" என அவர்கள் கூச்சலிட்டார்கள். கவசங்கள் உடைந்து தெறித்தன. தோளிலைகளும் தொடைக்காப்புகளும் சிதறின. தலைக்கவசம் பிளந்தது. நெஞ்சில் பாய்ந்த அம்புடன் சுருதசேனன் தேரிலிருந்து பின்னால் விழுந்தான். அவன் தேர்ப்பாகன் தேரை இழுத்து நிறுத்த தேரின் தூணில் சிக்கிய வில்லுடன் அவன் உடல் இழுபட்டு வந்தது. சுருதகீர்த்தி "தந்தையே! வேண்டாம்!" என்றான். அவன் இளமைந்தனாக தெரிந்தான். அர்ஜுனன் நாணை செவிவரை இழுத்து அம்புதொடுத்து அவன் தலையை துண்டித்தான். மூளியுடல் ஆடி முன்விழ தலை பின்னால் விழுந்து தேரிலிருந்து உருண்டது.

அர்ஜுனன் தள்ளாடியபடி தேரில் பின்னடைந்து தூணை பற்றிக்கொண்டான். விழிகள் மீண்டபோது சத்ருஞ்சுருசயனும் பாணசேனனும் தேரிலிருந்து விழுந்துவிட்டிருப்பதை கண்டான். கர்ணனின் விழிகளை சந்தித்தபோது அவன் உள்ளம்

திகைப்படைந்தது. அவை கனிந்திருந்தன. நோயுற்ற குழவியை நோக்கும் அன்னைபோல. அவன் கைகள் காண்டீபத்திலிருந்து நழுவின. "கொல்க அவனை... எதிர்த்து நில். உளம் பின்னடைகிறது உனக்கு. எழுக... எதிர்த்து எழுக!" என்று இளைய யாதவர் சொன்னார். "அவன் விழிகளை நோக்காதொழிக... அவனை எந்நிலையிலும் நேர்விழிகொண்டு பார்க்காதே... அவன் கைகளை நோக்கு. நீ பிளக்கவேண்டிய அவன் நெஞ்சை மட்டும் நோக்கு." அர்ஜுனன் அப்போதும் உள்ளம் செயலற்றிருந்தான்.

அவன்மேல் தாக்கவந்த அம்புகளை தேர்சுழற்றி ஒழிந்தபடி இளைய யாதவர் சொன்னார் "மைந்தர் விலகிச் செல்லட்டும்... மைந்தருக்கு இனி இங்கு போரில்லை. இது உங்கள் இருவருக்குமான போர் மட்டுமே." சுருதகீர்த்தியும் சுருதசேனனும் அர்ஜுனனின் கையின் ஆணைக்கேற்ப பின்னடைந்தனர். சுருதகீர்த்தியின் முகம் கசப்புகொண்டு சுருங்கியிருந்ததை அர்ஜுனன் கண்டான். வில்லை தேர்த்தட்டில் ஓங்கி வீசிவிட்டு அவன் தேர்ப்பீடத்தில் அமர்ந்தான். சுருதசேனன் களைத்தவனாக தேரிலிருந்து இறங்கி தள்ளாடி நடந்து கீழே விழுந்தான். ஏவலர் அவனை நோக்கி ஓடிவந்து தூக்கிச் சென்றார்கள்.

அர்ஜுனன் கர்ணனை அம்புகளால் அறைந்தபடியே இருந்தான். ஒரு கட்டத்தில் மலையை நோக்கி அம்புகளைத் தொடுப்பதாக உளமயக்கு தோன்றியது. அல்லது நீரில் தெரியும் மலையின் பாவை நோக்கி. அவன் செலுத்திய அவனுடைய அனைத்து அம்புகளும் வீணாகிக்கொண்டிருந்தன. அவன் மீண்டும் அஞ்சலிகா அம்பை எடுக்க முயல அதை முன்னுணர்ந்து இளைய யாதவர் கூவினார் "வேண்டாம். வேழம்

உளைச்சேற்றில் சிக்கவேண்டும்... இப்போது உன்னிடமிருக்கும் எந்த அம்பும் வீணாகிவிடும்...” அர்ஜுனன் ஐராவதாஸ்திரத்தால் கர்ணனை அறைந்தான். மத்தகத்தால் முட்டப்பட்டதுபோல் கர்ணனின் தேர் அதிர்ந்து நிலைகொண்டது. தேரைச் செலுத்திக்கொண்டிருந்த கர்ணனின் குடிமைந்தன் சம்பரன் அர்ஜுனனின் அம்புகள் பட்டு விழுந்தான். அவனுடைய இளையோனாகிய விருஷநந்தனன் அக்கணமே பாய்ந்து தேரிலேறிக்கொண்டு கடிவாளத்தை இழுத்துப்பிடித்து மீண்டும் செலுத்தினான்.

அர்ஜுனன் ஒவ்வொரு அம்பாக செலுத்தியபடி மேலும் மேலுமென பின்னடைந்தான். கர்ணன் ஊழ்கத்தில் இருப்பதுபோலத் தோன்றினான். அவனுடைய கைகள் சுழன்று அம்புகளை தொடுத்தன. அவை வந்து அறைந்து அர்ஜுனனின் அம்புகளை சிதறடித்தன. கர்ணன் பார்கவாஸ்திரத்தை எடுத்தபோது இளைய யாதவர் “தேரில் தலைகுனிந்து அமர்க... தேரில் அமர்க!” என்று கூவினார். அந்த அம்பை எடுத்தபோது கர்ணன் வஞ்சினம் உரைக்கவில்லை. அவன் விழிகளிலும் சினம் தெரியவில்லை. ஆகவே அர்ஜுனன் அதை முற்றுணரவில்லை. “விரைந்து அகல்வதொன்றே வழி... அமைந்துகொள்க!” என்று கூவியபடி இளைய யாதவர் தேரை பின்னடையச் செய்து திருப்பி விரைந்தோட வைத்தார்.

பார்க்கவாஸ்திரம் அவர்களை துரத்தி வந்தது. புயல் அணுகுவதுபோல் அது எழுந்து வந்து அலையலையாக நிலத்தை அறைந்தது. துணிப்படலம்போல் நிலம் நெளிந்து வளைந்தது. அலைகடல்மேல் நின்றிருக்கும் கலங்கள்போல் அங்கிருந்த தேர்களெல்லாம் எழுந்தமைந்தன. “பிறிதொரு தேருக்கு பாய்ந்துவிடு... செல்” என இளைய யாதவர் கூவினார்.

அர்ஜுனன் காண்டீபத்தை ஊன்றி எழுந்து பாய்ந்து அப்பால் நின்ற போராளி இல்லாத பாகனில்லாது ஒழிந்த தேரில் தொற்றிக்கொண்ட கணத்தில் பார்க்கவாஸ்திரம் தேரை அறைந்தது. தேர் எழுந்து விண்ணுக்கென பாய்ந்து மேலேறி அதே விசையில் கீழே விழுந்தது. இளைய யாதவரின் உடல் எரிபடர்ந்து தழல்கொண்டது. செங்கனலென அவர் உருவம் தெரிந்தது.

"யாதவரே!" என அர்ஜுனன் கூவினான். விழுந்த தேரிலிருந்து புரவிகள் நான்கு பக்கமும் சிதறிப்பரந்தன. அமரத்தில் அமர்ந்திருந்த இளைய யாதவர் பொன்னுருக்கி வடிக்கப்பட்ட சிலைபோல் தோன்றினார். "யாதவரே" என்று கூவியபடி அர்ஜுனன் அவரை நோக்கி ஓடினான். பொன்வடிவமாக இளைய யாதவர் சிரித்தார். "இனி அவனிடம் அரிய அம்புகள் இல்லை" என்றார். "யாதவரே... நீங்கள்தானா இது?" என்றான் அர்ஜுனன். "ஏறிக்கொள்க!" என்றார் இளைய யாதவர். அவர் குளிர்ந்து மெய்வண்ணம் கொண்டபடியிருந்தார். புரவிகள் எழுந்து உடலை உதறிக்கொண்டு கனைத்தன. "இனி அவனை எதிர்கொள்க... இனி எஞ்சியிருப்பது அஞ்சலிகாஸ்திரம் ஒன்றே" என்று இளைய யாதவர் சொன்னார்.

அர்ஜுனன் தேரிலேறிக்கொண்டான். இளைய யாதவர் சவுக்கை காற்றில் சுழற்றி ஆணையிட புரவிகள் விசைகொண்டு முன்னேறின. விஜயத்தை நிலையூன்றி அம்புகளைத் தொடுத்தபடி அணுகிய கர்ணனை நோக்கி அர்ஜுனன் சென்றான். முதல்முறையாக அவன் உள்ளத்தில் கர்ணனை கொல்லமுடியும் என்னும் உறுதி எழுந்தது.

நான் அந்தப் போரை பார்த்துக்கொண்டிருந்தேன், தோழர்களே. விழியிழந்தோன் பார்க்கும் போருக்கு நிகரென ஏது இங்கு நிகழமுடியும்? பொருள்மயக்கு அளிக்கும் பொருட்களேதும் அங்கில்லை. பொருளென்று மட்டுமே பொருட்கள் அமைந்த அவ்வெளியில் பொருள்கொள்ளாத ஒன்றும் இல்லை. நான் அப்போரை கண்டேன். விண்ணில் திகழ்ந்த சூரியனும் இந்திரனும் தவிப்பதை நோக்கினேன். தேவர்களும் மூதாதையரும் நின்று பதைப்பதை கண்டேன். யயாதி முதலாய சந்திரகுலத்தவர் அனைவரையும் கண்டேன். பிரதீபனை சந்தனுவை விசித்திரவீரியனை கண்டேன். பாண்டுவை கண்டேன்.

தோழரே, அங்கே நான் சத்யவதியை கண்டேன். அம்பிகையை அம்பாலிகையை பார்த்தேன். தழலென குழல் எரிந்துகொண்டு நின்றிருந்த அம்பையையும் கண்டேன். சுனந்தையை, தபதியை கண்டேன். அவர்களுக்குப் பின்னால் நின்றிருப்பவர் எவர்? ஆம், அவர்கள் விண்ணுறை தேவியர். நான்முகி, எரிவிழியள், இளையோள், ஆழியள், பன்றியள், தேவதேவி, மண்டைமாலையள். தோழரே, தந்தையரும் தேவரும் தவிப்பு கொண்டிருக்க அன்னையரும் தேவியரும் மட்டும் வஞ்சம் எரியும் விழிகளுடன் நின்றிருப்பது ஏன்? அவர்களின் நாவுகளில் குருதிவிடாயை காண்கிறேன். அவர்கள் அனைவரையும் தன்னிலேந்தியவள்போல் நின்றிருக்கும் பேருருக்கொண்ட அவள் யார்?

எங்கு கண்டுள்ளேன் அவளை? ஆயிரம் தலைகொண்டவள். பல்லாயிரம் கைகொண்டவள். உடலெங்கும் முலைகள் கனிந்து செறிந்தவள். அவள் புவிமகள். அவளை இங்ஙனம்

கண்டதில்லை. அளிபெருகும் இன்விழிகொண்டவள் அல்லவா? குருதிவிடாய்கொண்ட நாவு அவளுக்கும் உண்டா? இங்கு அனைவருடனும் போரிட்டுக்கொண்டிருந்தவள் அவள்தானா? அனைவரும் போரிட்டது அவளுடன்தானா? அனைவரும் சென்றுவிழுந்தது அவள் மீதா? தோழரே, இக்குருதிப்பெருக்கை எல்லாம் குடித்துக்குடித்து களிகொண்டவள் அவளா என்ன?

உறுமி மீது மூங்கிலோட்டி கும்பகர் பாடினார். "கதிர் அணையும் போர். இடியெழுந்து மின்னல்சூடி வென்று நின்றிடும் போர். எஞ்சாது ஒளியழிய இருள்சூடி புவிமகள் நின்றிருக்கும் போர்... என்றுமுள்ள பெரும்போர். நான் காண்கிறேன். அதை இதோ நான் காண்கிறேன்!"

இருட்கனி - 59

அர்ஜுனன் அம்புகளால் கர்ணனை தாக்கியபடி களத்தில் முன்னெழுந்தான். "அவனை அல்ல, அவன் தேரை தாக்குக!" என்று இளைய யாதவர் சொன்னார். "அவன் தேர் இருக்கும் வரை அவனை வெல்லமுடியாதென்று உணர்க! தேரில் முதலில் கொடியை உடைக்கவேண்டும். கொடியில்லாத தேருக்கு எந்த விசையிழப்பும் இல்லை. ஆனால் தன் தேரின் கொடி வெட்டப்பட்டுவிட்டதை உணர்ந்த வீரன் நிலையழிகிறான். கொடியில்லாத தேரில் நின்றிருக்கிறோம் என்னும் உணர்வை அவன் கடக்கவே இயல்வதில்லை." இளைய யாதவர் அவனுடைய தேர்த்தூண் வளைவில் வந்து ஆணையிட்டார். அவர் முகத்தில் அதே மலர்வு. அது ஆலயச்சிலையின் உதட்டிலிருக்கும் கற்புன்னகை. அது எந்நிலையிலும் மாறுவதில்லை. தருணத்திற்கு ஏற்ப ஏளனம்

என்றும் சினம் என்றும் கனிவு என்றும் வஞ்சம் என்றும் விலக்கம் என்றும் தோற்றம் கொள்கிறது.

“தேர்த்தூண்களை தொடர்ந்து அறைக! தூண்கள் அறையப்படுகையில் வீரன் அதை தவிர்க்கும்பொருட்டு அசைகிறான். அது தேரை உலையச் செய்கிறது. தேர் தொடர்ந்து உலையுமென்றால் தேர்ப்பாகன் பதற்றம் கொள்கிறான். அவன் கைகள் வழியாக புரவிகள் பதற்றம் கொள்கின்றன. தேரை நிலைகுலையச் செய். அது வீரனின் வில்லை நிலையழியச் செய்யும்” என்று இளைய யாதவர் சொன்னார். “அவன் தன் இலக்கை நோக்கும் கணத்தில் வில்லை மறக்கிறான். தேர்ந்த வில்லவன் இலக்கு நோக்குவது அரைக்கணம்தான். அந்தப் பொழுதில் சென்றறைந்து உன் அம்பு அவன் வில்லின் நாணை உடைக்கட்டும். அவனுடைய தேரில் நாண் எடுத்து அளிக்க ஆவக்காவலன் இப்போதில்லை.”

“அதற்கும் அப்பால் அவனை செயலிழக்கச் செய்யவேண்டும். அவன் செயலிழந்த கணமே அது அவன் உடலில் வெளிப்படும். முகம் அதை தெரிவிக்கும். அப்போது எழவேண்டும் உன் அம்பு. அவனை கொல்வதற்குரிய அஞ்சலிகாஸ்திரம். அது உன் தந்தையால் முன்பு விருத்திரனைக் கொல்ல பயன்படுத்தப்பட்ட அம்பிலிருந்து உருவானது.” அர்ஜுனன் விழிகளால் “ஆம்” என்றான். அங்கே போருக்கு எழுவது வரை அவன் அந்த அம்பை நினைவுகூரவில்லை. உபப்பிலாவ்யத்தில் இருந்து கிளம்புகையில் இளைய யாதவர் அவனிடம் அந்த அம்புமுனையை கொடுத்தார். கல்லால் ஆன சிறுபேழைக்குள் செதுக்கப்பட்ட பள்ளத்தில் அது பதிந்திருந்தது. தெய்வவிழிபோல மின்னிக்கொண்டிருந்தது. “இது இக்களத்திற்காக காத்திருந்தது” என அவர் சொன்னார்.

அர்ஜுனன் அந்த அம்பை மாகேந்திர வேள்வியில் உருக்கியெடுத்ததை நினைவுகூர்ந்தான். இந்திரப்பிரஸ்தத்திற்குக் கிழக்கே இருந்த தேவவனத்தில் அந்த வேள்வி நடந்தது. தென்னாட்டிலிருந்து வந்த அதர்வ வைதிகர்களாலான அந்தணர் குழு ஒன்று அதை நிகழ்த்தியது. நாற்பத்தொரு நாள் நடந்த அந்த வேள்வியில் எரிமலைப் பிளவிலிருந்து எடுத்த கரிக்கல்லால் அம்புமுனை வடிவில் செதுக்கப்பட்ட சிற்பம் ஒன்று முதல்நாளே எரிகுளத்தில் இடப்பட்டது. அதை கருங்கல்லில் செதுக்கி எடுத்த சிற்பி தொடுவதற்குமுன் அது இரும்பாலானது என்று நம்பும் அளவுக்கு கூருடன் அமைத்திருந்தான். அதில் ஒரு பக்கம் அர்ஜுனனின் குரங்குக்கொடியும் மறுபக்கம் இந்திரப்பிரஸ்தத்தின் மின்படை முத்திரையும் இருந்தன.

நூற்றெட்டு அவிப்பொருட்கள் அனலில் இடப்பட்டன. அன்னமும் நெய்யும் விறகும் மங்கலங்களும் மட்டுமல்லாது நூற்றெட்டு வேதிப்பொருட்களும் அனலூட்டப்பட்டன. மஞ்சள், நீலம், செந்நீலம், பச்சை, சிவப்பு என பல வண்ணங்களில் எழுந்தது புகை. இந்திரப்பிரஸ்தத்தையே மூச்சடைத்து இருமித் திணறச்செய்தது. நாற்பத்தொன்றாம் நாள் எரிகுளம் அவிந்தபோது அந்த கல்லால் ஆன அம்புமுனையின் பின்பகுதி படிகமென்றாகி பளிங்குபோல் ஒளிகடக்கும் தெளிவுகொண்டிருந்தது. முனைப்பகுதி நீலநிற ஒளிகொண்டிருந்தது. அதை இரும்புக் கிடுக்கியால் எடுத்து வெளியே வைத்தார் வைதிகர். முதலில் அது நீராலானது என்னும் எண்ணம் ஏற்பட்டது. வேள்விச்சாலையின் கூரை அதன்மேல் பாவையாகியிருந்தது. அசைவில் அப்பாவை நலுங்கி பலநூறு பாவைகள் என பெருகியது.

“நீங்கள் விழைந்ததை இதைக் கொண்டு உருவாக்குக! இது இந்திரன் விருத்திரனைக் கொன்ற அம்பின் துளி” என்றார் தலைமை வைதிகர். அதை அவர் ஒரு கல்தாலத்தில் வைத்து அளிக்க இளைய யாதவர் அர்ஜுனனிடம் “பெற்றுக்கொள்” என்றார். அர்ஜுனன் அதை வாங்கிக்கொண்டான். “இது மாய வல்லமை கொண்ட அரக்கர்களை வெல்லுதற்குரியது. மானுடர் என்றேனும் தேவர்களுடன் போரிடுவார்கள் என்றால் அவர்களின் படைக்கலமாகத் தக்கது. வேள்வியால் உறுதிப்பட்டது” என்று வைதிகர்தலைவர் சொன்னார். “இந்த அம்பு அனைத்து உலோகங்களையும் மென்சேற்றுப்பரப்பையும் பட்டுத்துணியையும் என கிழித்துச்செல்லும். மலைப்பாறைகளை பிளக்கும். மண்ணைத் துளைத்து ஆழுலகு வரை செல்லும். அறிக! அனைத்து உலோகங்களும் உச்சத்தில் பொன்னென்று ஆகின்றன. அனைத்து கற்களும் வைரமென்றாகின்றன. கனிந்து ஒளிகொள்வது பொன். சினம்கொண்டு இறுகி ஒளிகொள்வது வைரம். இனியில்லை என செறிவுகொள்வது. கற்களுக்குள் வைரமே தெய்வம்.”

அர்ஜுனன் இளைய யாதவரிடம் “யாதவரே, இத்தகைய அம்பு எதற்காக? நான் ஏதேனும் பேருருவ அரக்கனுடன் பொருதவிருக்கிறேனா?” என்றான். இளைய யாதவர் “பேருருவர்கள் அரக்கர்களாகத்தான் இருக்கவேண்டுமா?” என்றார். “அன்றி தேவர்களா? மூன்று முதற்தெய்வங்களா?” என்றான் அர்ஜுனன். இளைய யாதவர் நகைத்து “பொருதற்கரிய எதிரி... நீ உன்னுடனேயே போரிடவிருக்கிறாய்” என்றார். “அதை உன் படைக்கலநிலையில் தெய்வமென நிறுவுக! ஒவ்வொருநாளும் மலரும் அரியுமிட்டு பூசை செய்க! அதில் வாழும் உபேந்திரன் ஒருகணமும் அகலக்கூடாது.

தெய்வம் குடிகொள்ளும் அந்த அம்பு ஒருமுறைதான் போருக்கு எழும். வென்றபின் மீண்டும் மண்ணுக்கே மீளும்...” என்றார்.

கர்ணனை தாக்கவேண்டிய அம்புகளின் நிரையை ஒரே கணத்தில் தன் உள்ளம் வகுத்துவிட்டிருப்பதை அர்ஜுனன் உணர்ந்தான். எரியை பற்றவைப்பதுபோலத்தான் அது. முதல் அம்பாக அவன் மாகேந்திரம் என்னும் அம்பை தொடுத்தான். அது சென்று அறைந்து கர்ணனின் தேரை நிலைகுலையச் செய்தது. அந்த நிலைகுலைவை தக்கவைப்பதற்கென்று இடைவிடாது கந்தர்வாஸ்திரங்களை தொடுத்தான். கர்ணனின் அம்புகளை ஒரு அம்பால் நிறுத்தி மறுஅம்பால் அவன் தேரை அறைந்துகொண்டே இருந்தான். இருகை வில்லவன் என தன்னை அழைப்பதன் மெய்ப்பொருளை அப்போதுதான் உணர்ந்தான். ஒரே கணத்தில் இரு அம்புகள் இரு வேறு இலக்குகளுடன் அவனிடமிருந்து எழுந்தன. கர்ணனின் தேர் அசைந்து நிலையழிந்தது.

கர்ணன் பிருத்விசக்ரம் என்னும் அம்பால் அர்ஜுனனை அறைந்தான். இளைய யாதவர் தேரைத் திருப்பி அதை ஒழிந்தார். அடுத்த அம்பை அவன் எடுக்கும் கணத்தில் அவன் தேரின் கொடியை அர்ஜுனன் அறுத்தான். கர்ணனின் முகத்தில் எவ்வுணர்வும் வெளிப்படவில்லை. எரிந்தபடி எக்கால ஒலியெழுப்பி வந்து அறைந்த காபாலிகம், காளாமுகம் என்னும் அம்புகளால் அவன் அர்ஜுனனை தாக்கினான். மீண்டுமொரு இமைக்கண இடைவெளியில் அர்ஜுனன் கர்ணனின் வில்லின் நாணை அறுத்தான். முதல்முறையாக கர்ணனின் முகத்தில் சினம் தெரிந்தது. அறைகூவுகையிலும் வஞ்சினம் உரைக்கையிலும்கூட குளிர்ந்திருக்கும் அவன் விழிகளில் வெம்மை எழுவதை அர்ஜுனன் கண்டான். அவன் தொடுத்த

காலகாலம் என்னும் அம்பு வந்து அர்ஜுனனின் தேரை நீரில் தக்கை என துள்ளச்செய்தது.

"தயங்காமல் தாக்கிக்கொண்டே இரு... அவனுடைய சினம் நற்குறியே" என்றார் இளைய யாதவர். கர்ணன் உதடுகளை மடித்துக் கடித்தபடி, கூர்கொண்ட விழிகள் அர்ஜுனன் மேல் ஊன்றியிருக்க அம்புகளால் அவன் கவசங்களை உடைத்தான். தோளிலைகளும் நெஞ்சக்கவசமும் உடைய அர்ஜுனன் தேர்த்தட்டில் அமர்ந்து பிறிதொன்றை அணிந்துகொண்டான். "அவன் சீற்றத்தை பொருட்படுத்தாதே. உன் கவசங்கள் உடைவதைப்பற்றி அச்சமும் கொள்ளாதே. எட்டுக்கு ஒன்றென்றேனும் உன் அம்புகள் அவனை அறைந்தாகவேண்டும் என்று மட்டும் கொள்" என்றார் இளைய யாதவர். அர்ஜுனன் கர்ணனின் நெஞ்சக்கவசத்தை அறைந்து விரிசலிடச் செய்தான். மீண்டுமொரு அம்பால் தோளிலைகளை உடைத்தான். கர்ணன் அர்ஜுனனை அம்புகளால் அடித்து அடித்து கவசங்களையும் அணிகளையும் அகற்றிக்கொண்டிருந்தான். கர்ணனின் நெஞ்சக்கவசம் உடைந்துவிழுந்தபோது அர்ஜுனன் இடைக்கச்சையும் தோலாடையும் மட்டும் அணிந்து தேரில் நின்றிருந்தான்.

கதிர் சிவந்து நிழல்கள் நீளத்தொடங்கிவிட்டிருந்தன. களம் முற்றமைதி கொண்டிருந்தது. "இனி அவனை நேருக்குநேர் நோக்காதே. அவன் தேரின் நிழலை மட்டும் நோக்கி அவனை அம்புகளால் தாக்கு. அந்நிழல் மேலும் தெளிவுற்று வருவதை காண்பாய்." அர்ஜுனன் கர்ணனின் தேரின் நிழலை நோக்கியபடி அம்புகளை தொடுத்தான். அதில் அமர்ந்திருந்தவன் அந்நிழலில் தெரியவில்லை. அந்நிழல் கருமை விலகி செம்மை கொண்டது. பின்னர் ஒரு நீண்ட குருதிக்கறைத்தடம் என்றே

தோன்றியது. சரிந்து சரிந்து தொடுவான்வரை செல்லும் ஒரு குருதிவிரல் என நீண்டது. அதன் வண்ணம் மாறிக்கொண்டே இருப்பதை அர்ஜுனன் கண்டான். ஏன் அவ்வண்ணம் நிழல்வண்ணம் மாறுகிறது என வியந்தான்.

பின்னர் ஒன்றை உணர்ந்தான். அந்திக்கதிரவன் கர்ணனின் தலைக்குப் பின்னால் இருந்தான். பிற அனைத்து நிழல்களும் கிழக்கு நோக்கி நீண்டு சென்றிருந்தன. கர்ணனின் தேரின் நிழல் மட்டும் மேற்குநோக்கி நீண்டிருந்தது. அவன் விழிவிலக்கி கர்ணனை நோக்கவேண்டும் என விழைவுகொண்ட கணமே இளைய யாதவரின் குரல் எழுந்தது. "நோக்காதே!" அவன் அத்தேரின் தூண்களை அறைந்து உடைத்தான். அதன் தட்டுமுழுக்க அம்புகளால் நிறைத்தான். பின்னர் ஹலாஸ்திரத்தால் அதன் மகுடத்தை உடைத்தான். கர்ணன் உறுமியதை அவன் கேட்டான். தன் தேரை வந்தறைந்த சந்திராஸ்திரம் பம்பரம்போல அதை சுழலச்செய்து அப்பால் வீசியதை உணர்ந்தான். மீண்டு நோக்கு நிலைத்ததும் கர்ணனின் தேர்ப்பாகனின் நெஞ்சத்தை கவசத்துடன் துளைத்தான். ஓசையின்றி விருஷநந்தனன் நுகமேடையிலிருந்து வலப்புறமாக சரிந்து விழுந்தான்.

கர்ணன் கால் நீட்டி கடிவாளத்தை வலக்கால் விரல்களால் பற்றிக்கொண்டான். கடிவாளக் கற்றையை தன் கணுக்காலில் சுழற்றி சுற்றிக்கொண்டு அதை இழுத்து தேரை தானே செலுத்தினான். அர்ஜுனனின் அம்புகள் வந்து அவன் புரவிகள்மேல் பதிய அவை கூச்சலிட்டன. "இழிமகனே, இன்றே உன் இறுதி நாள்!" வெறியுடன் கூவியபடி கர்ணன் மகாருத்ராஸ்திரத்தை எடுத்தான். அவ்வொளியை அவனை நோக்காமலேயே சூழ்ந்திருந்த அனைத்துப் பொருட்களிலும்

எழுந்த செவ்வலையால் அர்ஜுனன் அறிந்தான். இளைய யாதவர் தேரைத் திருப்பியபடி விரைந்து அகன்றார். கர்ணன் “நில்! நில், இழிமகனே” என கூவியபடி துரத்திச்சென்றான். குருக்ஷேத்ரக் களத்தை வகுந்தபடி புற்பரப்பில் நாகமென இளைய யாதவரின் தேர் விரைந்தது. அந்தத் தடத்தை ஒட்டி இன்னொரு தடமென பிளந்துகொண்டு கர்ணனின் தேர் துரத்திச்சென்றது.

கர்ணனின் உடல் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவன் சினம்கொள்ளக் கொள்ள ஒளி மிகுந்து வந்தது. கரிய வைரம் என. பின் ஒளி ஊடுருவும் படிகம் என. பின் கனல் என. அவன் அருணனின் தேரிலேறி களம் வந்த நாளவன் எனத் தோன்றினான். அவன் கடந்துசென்றபோது அணுக்கத்தில் நோக்கிய வீரர்கள் சற்றுநேரம் ஒளியிருளால் விழியிழந்தோர் ஆயினர். அவன் தேர் சென்ற வழியில் ஓடும் பந்தத்தைச் சுற்றி என அவர்களின் நீள்நிழல்கள் நடனமிட்டு சுழன்றுவந்தன. “செங்கதிரோன்!” என்று ஒரு வீரன் கூவினான். “அனல்கொண்டு எழுந்தவன்!” என்றான் இன்னொருவன். அந்தியொளியில் அங்கிருந்த ஒவ்வொன்றும் செஞ்சுடர் கொண்டிருந்தன. வேல்நுனிகளும் வாள்விளிம்புகளும் இளங்குருதியென கதிரொளியில் நனைந்திருந்தன.

இளைய யாதவர் குருக்ஷேத்ரத்தின் வடக்கு எல்லைவரை முழு விரைவில் தேரை ஓட்டிச்சென்றார். கர்ணன் அவரை தொடர்ந்து சென்றான். ஓர் எல்லையில் இளைய யாதவர் தேரை திருப்பிக்கொண்டு அர்ஜுனன் கர்ணனை எதிர்கொள்ளச் செய்தார். விரைந்தோடும் தேரில் நின்றபடியே கர்ணனை அம்புகளால் தாக்கிக்கொண்டிருந்த அர்ஜுனன் தேர் அவனை நோக்கி திரும்பியதும் மேலும் விசைகொண்டு கர்ணனின்

கவசங்களை உடைத்தான். நெஞ்சிலும் தோளிலும் கவசங்கள் உடைந்துவிழ கர்ணன் பிளிறலோசை எழுப்பியபடி ஏழு அம்புகளால் அர்ஜுனனை தாக்கினான். அவற்றை அர்ஜுனன் தன் அம்புகளால் காற்றுவெளியிலேயே தடுத்தாலும் அவை உடைந்த துண்டுகள் வந்து பாய்ந்து அவன் உடலில் எஞ்சியிருந்த ஆடைகளையும் அறுத்தன. இடைக்கச்சை அவிழ இறுதி ஆடையும் காலுக்கு நழுவியது.

அர்ஜுனன் உடல்குன்றி தத்தளித்தபோது "தயங்காதே... ஆடையின்றியே நில். அவனை மானுடர் வெல்லவியலாது என்பது அவன் ஆசிரியரின் நற்கூற்று. தேவனாகுக! மானுடர் அளித்த அனைத்தையும் உன் உடலில் இருந்து அகற்றுக!" என்றார் இளைய யாதவர். "உன் குண்டலங்களையும் வெட்டி வீசு. கங்கணங்களும் அகலட்டும். குலக்குறியோ தெய்வக்காப்போ ஒன்றும் எஞ்சலாகாது உன் உடலில்... பிறந்த தோற்றத்தில் நிலைகொள்க!" அர்ஜுனன் ஓர் அம்பை எடுத்து தன் குண்டலங்களை அறுத்தெறிந்தான். கங்கணங்களை, தோளில் அணிந்திருந்த காப்புத்தாலியை, இடையில் கட்டியிருந்த அரைக்காப்பை அறுத்தான். கர்ணன் வெறிக்கூச்சலிட்டபடி ஏவிய பாசாஸ்திரம் நெளிந்து வளைந்து நீரில் செல்லும் நாகமென வந்து அவன் தேரை தாக்கிச் சுழன்றது. அவனைத் தேடிக் கண்டடைய இயலாததுபோல் அப்பால் சென்றது.

கர்ணன் தன் தேரை அரைவட்டமாக திருப்பி உரக்க நகைத்தபடி திரிகாலாஸ்திரத்தை வில்லில் தொடுத்தபடி அர்ஜுனனை நோக்கி வந்தான். திகைத்தவனாக அர்ஜுனனையும் அவனுக்குத் தேரோட்டிய இளைய யாதவரையும் நோக்கினான். அந்த அம்புக்கான நுண்சொல்லை

அவன் உள்ளம் மறந்துவிட்டிருந்தது. மீளமீள அவன் அச்சொற்களுக்காகத் துழாவ மேலும் மேலும் உள்ளம் ஒழிந்து வெறுமைகொண்டது. அவன் வில்தாழ்த்தியபோது வில்லின் நிழல் நேர்முன்னால் நீண்டு விழுந்தது. அதை ஏந்திய கையும் விழிமுன் பெருக அவன் அந்த நுண்சொல்லை நினைவுகூர்ந்தான். ஆனால் தலைதாழ்த்தி "கொள்க, ஆசிரியரே!" என்றான். அவன் வில் தாழ்ந்தமையின் நிழலை தங்கள் முன்னால் பார்த்த புரவிகள் உடல் தளர்ந்து மூச்சுவிட்டபடி நிற்க அவன் தேர் வலப்பக்கமாக சாய்ந்தது. குருக்ஷேத்ரத்தின் பிலங்களில் ஒன்றின் வாய் திறந்து அவன் தேரின் சகடத்தைக் கவ்வி உள்ளிழுத்துக்கொண்டது.

தேர் அசைவிழந்து மேலும் மேலும் அழுந்த கர்ணன் விஜயத்தை தேர்த்தட்டில் விட்டுவிட்டு பாய்ந்து மண்ணில் இறங்கி தேரின் சகடத்தை நோக்கி சென்றான். "ஒருகணம்தான். ஏவுக அஞ்சலிகத்தை!" என்றார் இளைய யாதவர். "அவர் படைக்கலம் இல்லாமலிருக்கிறார்" என்று அர்ஜுனன் சொன்னான். "ஆம், இதுவே அவன் புதைவுக்கணம். அவன் இதோ மீண்டுவிடுவான். ஏவுக அம்பை!" என்றார் இளைய யாதவர். "படைக்கலம் இன்றி இருக்கையிலா?" என்றான் அர்ஜுனன். "படைக்கலம் இன்றி மட்டுமே அவனை கொல்ல இயலும் என்று உணர்க... ஏவுக!" என்றார் இளைய யாதவர். "யாதவரே!" என்று அர்ஜுனன் உளமுடைந்து கூவினான். "இது என் ஆணை! கொல் அவனை. இக்கணமே கொல்!" என்றார் இளைய யாதவர்.

அர்ஜுனன் மண்ணில் நீண்டுகிடந்த கர்ணனின் நிழலை நோக்கினான். அது இளநீல நிறமாக அதிர்ந்துகொண்டிருந்தது. காண்டீபம் சண்டிக்குதிரை என நின்று துள்ள அதன் நாண்

தழைந்து கிடந்தது. அதில் ஓர் அம்பை ஏவும் விசைகூடுமா என அவன் ஐயம் கொண்டான். “யாதவரே, என் வில்...” என்று கூவினான். “ஏவுக! இக்கணமே அம்பை ஏவுக!” என அவன் தேரின் அத்தனை ஒளிவளைவுகளிலும் தோன்றி இளைய யாதவர் ஆணையிட்டார். அவன் கை சென்று அம்பறாத்தூணியில் தொட்டதுமே அஞ்சலிகம் பாய்ந்து விரல்களில் ஏறிக்கொண்டது. அதுவே காண்டீபத்திலமர்ந்தது. நாணை இழுத்து தன்னை இறுக்கிக்கொண்டது. வீறிட்டலறும் ஒலியுடன் எழுந்து மின்னல் என ஒளிவீசியபடி கர்ணனை நோக்கி சென்று அவன் நெஞ்சை தாக்கியது.

கர்ணனின் கவசம் பிளந்து நெஞ்சுக்குள் ஆழ்ந்திறங்கியது அஞ்சலிகம். அவன் வலப்பக்கம் சரிந்து மண்ணில் கையூன்றி உடல் அதிர்ந்தான். இடக்கையையும் ஊன்றியபோது தலை முன்பக்கம் குனிந்து மூக்கிலிருந்து குருதி நெஞ்சில் கொட்டியது. நெஞ்சப் புண்ணில் இருந்து வழிந்த குருதி மடியில் விழுந்து ஆடையை நனைத்து நிலத்தில் ஊறிப்பரவியது. அர்ஜுனன் காண்டீபத்தை தேர்த்தட்டில் வைத்துவிட்டு தலையைப் பற்றியபடி தேரில் அமர்ந்தான். இளைய யாதவர் தேரை பின்திருப்பி பாண்டவப் படைகளுக்குள் கொண்டுசென்றார். படைகள் விலகிப்பிரிந்து அவருக்கு வழிவிட்டன. வாழ்த்தொலிகள் எழவில்லை. அங்கு படைகள் இருப்பதையே செவிகளால் உணரமுடியவில்லை.

மேற்கே சூரியனின் ஒளிவட்டம் எடைமிகுந்து தொடுவான்கோட்டில் அழுந்தியது. கிழித்து மூழ்கத் தொடங்கியது. விரிந்த கதிர்களை ஒவ்வொன்றாக இழுத்துக்கொண்டு நாளவன் மறைய நிழல்கள் கரைந்து மறைந்தன. தேர்மகுடங்களின் உலோகப் பரப்புகளில் மட்டும்

வான்வெளிச்சம் எஞ்சியிருந்தது. கதிரணைதலை நோக்கியபடி அனைவரும் அசைவிலாது நின்றிருந்தனர். கதிர்வட்டத்தின் மேல்விளிம்பு அறுதியாக மறைய அக்கணத்தைக் கொண்டாடும் பறவைகள் அப்பால் குருக்ஷேத்ரக் காட்டுக்குள் செங்குத்தாக வானிலெழுந்து சுழன்றமைந்து கூவின. காடெங்கும் பறவையோசைகள் கேட்கத் தொடங்கின. ஒரு பறவை கர்ணனின் தேருக்குமேல் கூவியபடி பறந்தது.

முதிய வீரன் ஒருவன் மெல்ல நடந்து அருகணைந்து குனிந்து கர்ணனை நோக்கினான். பின்னர் கைகூப்பி தொழுது "அங்கர் விண்புகுந்தார்" என்றான். மறு எல்லையிலிருந்து கௌரவ வீரர்கள் சிலர் ஓடிவந்தனர். "கதிர்மைந்தர் விண்புகுந்தார்" என்று முதிய வீரன் உரக்க அறிவித்தான். அவர்கள் கைகூப்பியபடி அருகணைந்து கர்ணனின் காலடியில் நின்றனர். பின்னர் கைவீசி தங்கள் படையினருக்கு கர்ணன் விண்புகுந்ததை அறிவித்தனர். கௌரவப் படையிலிருந்து ஆங்காங்கே சில வாழ்த்தொலிகள்தான் எழுந்தன. அவர்கள் மிகச் சிலரே எஞ்சியிருந்தனர். அவர்களும் ஆங்காங்கே சிதறிப்பரவியிருந்தனர். அவர்கள் வழியாக அச்செய்தி படர்ந்துசெல்வதை காணமுடிந்தது.

முரசுகள் கர்ணனின் விண்ணேற்றத்தை அறிவித்தபடி முழங்கத் தொடங்கின. "அங்கர் விண்புகுந்தார். கதிர்மைந்தர் நிறைவடைந்தார். கர்ண வசுஷேணர் வீழ்ந்தார். எழுக அவர் புகழ்! வெல்க அவர் பெயர்!" ஆனால் கௌரவப் படையில் அது ஒரு கலைவை மட்டுமே உருவாக்கியது. அந்தியை அறிவித்து முரசுகள் முழங்கின. போர் ஏற்கெனவே நின்றுவிட்டிருந்தமையால் இரு படைகளும் பின்னடைந்து விலக குருக்ஷேத்ரம் ஒழிந்து விரிந்து அகன்றது. பாண்டவப்

படையினர் ஒரு சொல்லும் இல்லாமல் படைக்கலங்களை ஊன்றியபடி தளர்ந்த நடையுடன் பின்னடைந்தனர். கர்ணனை கொண்டுசெல்வதற்காக பலகைமஞ்சத்துடன் எட்டு படைவீரர்கள் ஓடிவந்தனர். அஸ்வத்தாமனும் கிருபரும் புரவியில் வந்திறங்கி அவர்களுக்குப் பின்னால் வந்தனர்.

அஸ்வத்தாமன் வந்து கர்ணன் அருகே குனிந்து நோக்கினான். கர்ணனின் விழிகள் அரையிமை மூடியிருக்க உதடுகள் புன்னகையிலென திறந்திருந்தன. அஸ்வத்தாமன் அமர்ந்து கர்ணனின் உடலை தொட்டுப்பார்த்தான். இளவெம்மையை உணர்ந்ததும் அவன் இரு கைகளையும் பற்றி ஒன்றன்மேல் ஒன்றென வைத்து ஊழ்க அமைவை உருவாக்க முயன்றான். ஆனால் அவை நழுவி இருபுறமும் சரிந்து விரல்கள் விரிய திறந்து விழுந்தன. இல்லை என்பதுபோல. இருமுறை பற்றி வைத்தும் அவை சரிய கிருபர் "அவை அவ்வண்ணமே இருக்கட்டும்..." என்றார். அஸ்வத்தாமன் நிமிர்ந்து அவரை நோக்கிவிட்டு "ஆம்" என்றான்.

ஏவலர் மரவுரியை விரித்து அதன்மேல் கர்ணனின் உடலை சரித்து படுக்கவைத்தனர். அதை நாற்புறமும் பற்றித் தூக்கி பலகைமேல் வைத்தனர். அவன் இரு கைகளும் இருபுறமும் தொங்கின. அஸ்வத்தாமன் கிருபரை நோக்கிவிட்டு எழுந்துகொண்டான். அவர்கள் அவனை தூக்கிக்கொண்டு சென்றபோது ஆங்காங்கே அமர்ந்தும் விழுந்தும் கிடந்த கௌரவப் படைவீரர்கள் வெறுமனே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தனர்.

இருட்கனி - 60

பன்னிரண்டாவது களத்தில் அமர்ந்திருந்த சூதரான மச்சர் சுரைக்காய்க் குடுவையில் எருதின் குருதிக்குழாயை உலர்த்தி முறுக்கி நரம்பாக்கி இழுத்துக் கட்டி உருவாக்கிய ஒற்றைத்தந்தி யாழில் தன் சுட்டுவிரலை மெல்ல தட்டி விம்மலோசை எழுப்பி அதனுடன் இணைந்துகொண்ட ஆழ்ந்த குரலில் கர்ணன் களம்பட்ட செய்தியை பாடினார். அங்கிருந்த பதினொரு சூதர்களும் உதடுகளிலிருந்து எழாமல் நெஞ்சுக்குள் முழங்கிய ஒலியால் அதற்கு கார்வை அமைத்தனர். “சூதரே, மாகதரே, விண்ணின் முடிவிலா நீரப்பரப்பு ததும்பி கதிரவன் மீது பொழிந்தது. சுடரனைத்தும் அணைந்து வெம்மை மறைந்து, செந்நிறம் மங்கி, சாம்பல் வட்டமென்றாகி, விளிம்புகளில் எஞ்சும் அனல் அக்கருமையில் கசிந்து பரவ, எடை மிகுந்து மெல்ல மேற்கே தாழ்ந்து மறையும் கதிரவனை நான் கண்டேன்.”

தோழரே, எந்தையர் கண்ட கதிரெழுகைகள் அனைத்தையும் கண்டவன் நான். என் மைந்தர் காணப்போகும் அனைத்து கதிர்நிகழ்வுகளையும் காணும் வல்லமை கொண்டவன். பிறிதொரு முறையும் கதிரவன் இவ்வண்ணம் கருகி அணைந்ததில்லை. அந்தி ஒளிமங்கி மஞ்சள்பூத்து சிவந்து பின் நீலம்கொண்டு கருகி இருள்வதையே கண்டிருக்கிறேன். திரியிழுத்த அகல் என ஒளிர்வட்டம் குறுகி அணைவதை அன்று கண்டேன். கிழக்கிலிருந்து முகில்திரள்கள் பெருகி எழுந்தன. அங்கு விரிந்திருக்கும் பெருங்கடல்கள் அனைத்தும் தீப்பற்றிவிட்டனவோ, ஆழி நீரெல்லாம் நெய்யென்றாகி எரிந்து புகையாக மாறினவோ என்று ஐயுறும்படி கருங்குவைகளாக மலையடுக்குகளாக எழுந்து எழுந்து வந்தன.

அவற்றுக்குள் பல்லாயிரம் உபேந்திரர்கள் மின்படைக்கலம் கொண்டு களிப்போரிடுவதைப்போல் ஒளித்துடிப்புகளை கண்டேன். வானம் இடியென நகைப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மண்ணின் நடுக்கை கண்டிருப்பீர்கள். புற்றுக்குள் நாகங்கள் அதிர்ந்து உடல் சுருட்டுவதை அறிந்தும் இருப்பீர்கள். அன்று கண்டேன், விண்மீன்கள் நடுங்கும் இடியோசையை. ககனத்தில் விரையும் அனைத்து கோள்களும் திகைத்து நின்று சுழலும் தாளத்தை. கடுவெளியின் இருளுக்குள் அலைத்து அலைத்துச் சென்று கொண்டிருந்தது அவ்வோசை. திசைநாகங்கள் நடுங்கிச் சுருள, புவி அதிர்ந்தது. நாகஉலகங்கள் அனைத்திலும் அசைவுகள் உறைந்தன. ஓயா நெளிவுகள் நிலைக்க, இருப்பிலிருந்து இன்மையென்றாயிற்று இருண்ட நாகப்பெருவெளி.

முரசுகள் முழங்கத்தொடங்கின. "விண்ணெழுந்தார் அங்கர்! மூதாதையருடன் நின்றார் கதிர்மைந்தர்! தெய்வமென்றானார் கர்ணன்! கணம் ஓயா கொடை அளித்த கைகள் நிலம் படிந்தன. தாழா தலை மண் தொட்டது. அணி அகலா அழகுடல் வீழ்ந்தது. இன்று வானும் மண்ணும் இருள்கொள்க! இன்று கடுகி அழிக காலம்! விழுந்தான் விண்ணூர்வோன் புதல்வன். பேரழகன் விண்ணிலெழுந்தான்! தேவர்கள் மலர்த்தார்களுடன் சூழ நின்றனர். கந்தர்வர்கள் இன்னிசை முழக்கி வரவேற்கின்றனர். கின்னரரும் கிம்புருடரும் அவன் நடக்கும் பாதையை அணி செய்கின்றனர்! இதோ விண்ணகம் கொண்டாடுகிறது. இதோ முனிவர்கள் இறையுணர்வுகொண்டு மெய்ப்படைகிறார்கள்."

"முரசின் ஓசையைக் கேட்டபடி நான் காவல்மாடத்தில் அமர்ந்திருந்தேன். என் கைகளில் இருந்த பன்னிரு நரம்புகள்

கொண்ட மகரயாழைத் தூக்கி அப்பால் வைத்தேன். இனி ஒற்றைத் தந்தி நாதம் மட்டும் எழுக! எண்ணுகையில் எல்லாம் ஒரு விம்மலென இவன் நினைவு இங்கு திகழ்க! இங்கிருந்த ஒவ்வொன்றாலும் தோற்கடிக்கப்பட்டவன். அன்னையரால், தந்தையரால், உடன்பிறந்தாரால், பிதாமகர்களால், ஆசிரியர்களால், தெய்வங்களால். சூதரே, மாகதரே, அறுதியாக அறத்தால். இந்நாள் வரை அறத்தெய்வம் நெறிபிழைப்போரையே பலிகொண்டு இங்கு திகழ்ந்தது. அவர்களின் அஞ்சித் துயருற்ற உள்ளத்தை அவியெனக் கொண்டது. மாசுகலந்த குருதியை உண்டு சுவை மறந்தது. இன்று அது இன்கனி தேடியிருக்கக்கூடும்."

"கனிகளில் இனிய கனி இது. அறமன்றி பிறிதிலாது மண்ணில் வாழ்ந்து நிறைந்தவன். உடல்முழுமை கொண்ட அழகன். கனிந்து தன்னை அத்தெய்வத்தின் பலிபீடத்தில் வைத்தவன். கொள்க தெய்வம்! கொள்க பேருருவே! இத்தூய பலியை கொள்க! இனியொரு பலி யுகயுகங்களுக்கு உனக்கு தேவையில்லாமல் ஆகுக! இந்தப் பலியால் உன் நா இனிக்கட்டும். உன் நெஞ்சு குளிரட்டும். உன் விழிகள் ஒளி கொள்ளட்டும். இனி வரும் மைந்தர் அறிக, இந்தத் தூய பலியைக் கொடுத்து இங்கு நிறுத்தினோம் அறத்தேவனை என! இனியொன்றில்லை எனும்படி பெரும்பலி கொடுத்து எழுப்பியுள்ளோம் அவனை என! இங்கு கொலுவீற்றிருங்கள் எங்கள் இறையே. இங்கு கோல் கொண்டருளுங்கள் எங்கள் தலைவனே. இனி உங்கள் சொல் இங்கு மாற்றிலாது திகழ்க! இனி அறமென்பதில் அறிஞர்களுக்கு ஐயம் இல்லாதாகுக!" குரல் விம்மி அழுது யாழ் மேலேயே தலைவைத்து உடலதிர்ந்தார் சூதர். சூழ்ந்திருந்தோர் அவரை

நோக்கிக்கொண்டு அடிநாதத்தை மட்டும்
மீட்டிக்கொண்டிருந்தனர்.

அர்ஜுனன் தேர்த்தட்டில் தலைகுனிந்து அமர்ந்திருக்க இளைய யாதவர் தேரைத் திருப்பி பாண்டவப் படைகளுக்குள் கொண்டு சென்றார். தொலைவில் கர்ணனின் களவீழ்ச்சியை அறிவிக்கும் முரசொலிகள் எழுந்துகொண்டிருந்தன. பாண்டவப் படையினர் முற்றிலும் சொல்லடங்கி தனித்தனியான மானுட உடல்களாக மாறி பிரிந்து பின்னடைந்தனர். மறுபுறம் கௌரவப் படையினர் சிறுசிறு குழுக்களென்றாயினர். ஒவ்வொரு குழுவும் பிறிதொரு குழுவுடன் இணைந்தது. உடல்கள் உடல்களுடன் ஒட்ட அவர்கள் ஒற்றைத் திரளென்றாகி சுருங்கி பின்னடைந்துகொண்டிருந்தனர். இரு படைகளுக்கும் நடுவே வெந்தும் கரிந்தும் சிதைந்தும் கிடந்த மானுட உடல்களும் தேருடைவுகளும் புரவிச்சிதைவுகளும் யானைக்குவியல்களுமாக குருக்ஷேத்ரம் விரிந்து விரிந்து அகன்றது.

ஒருபோதும் அது அத்தனை அகலம் கொண்டிருக்கவில்லை. அத்தனை பெரிதா களமென்று இயல்பாக அதை திரும்பி நோக்கிய ஒவ்வொருவரும் திகைப்புற்றனர். பின்னர் திரும்பி தங்களைப் பார்த்து தாங்கள் அத்தனை குறைந்துவிட்டோம் என்பதைக் கண்டு திகிலுற்றனர். பாண்டவப் படையினரில் ஈராயிரம் பேருக்கும் குறைவானவரே எஞ்சியிருந்தனர். அவ்வளவே கௌரவப் படையிலும் உயிருடன் மிஞ்சினர். பின்னடைந்து இரு படைகளும் குருக்ஷேத்ரத்தின் இரு எல்லைக்கு சென்றபோது இரு தரப்பாலும் முற்றிலும் கைவிடப்பட்டு வேறெங்கிருந்தோ வந்து குவிந்தனபோல் கிடந்தன அவ்வுடல்கள். பெருவெள்ளம் பொங்கிப் பாய்ந்து

அணைந்தபின் வடிந்த சகதியின் மட்கிய குப்பைகளும் நெற்றுகளும் தடிகளும்போல.

படைவீரர்கள் ஒவ்வொருவரும் அதை நோக்க அஞ்சினர். ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே நோக்கினர். எடைமிக்க தலைகளால் நிலம் நோக்கினர். அரிதாக சிலர் விண்ணை நோக்கினர். முகில் எழுந்து மூடிக்கொண்டிருந்த வானிலிருந்து மழைத்துளிகள் தெறித்தன. நீராடி சாலையினூடாக கொட்டில் மீளும் யானைக்கூட்டங்களின் உடலிலிருந்து தெறிக்கும் துளிகளென. இருதரப்பிலும் எவரும் தங்குவதற்கு குடில்கள் எஞ்சவில்லை. எரியெழுந்து பாதைப் பலகைகள் அனைத்தும் எரிந்துவிட்டிருந்தமையால் கரிபடிந்த தடங்களே பாதையென்றாகி தெரிந்தன. களஞ்சியங்கள் எரிந்து அணைந்துவிட்டிருந்தன. அவற்றிலிருந்து கசிந்த கரும்புகை தயங்கி வானில் நின்றது. இரு தரப்பிலும் ஒற்றை வாழ்த்தொலி கூட எழவில்லை. முரசுகள் மட்டும் "விழுந்தார் மாவீரர்! அங்கநாட்டு அரசர் வீழ்ந்தார்! கதிர்மைந்தர் களம்பட்டார்! வெல்க கர்ணன் புகழ்! வாழ்க வசுஷேணன் எனும் பெயர்!" என்று முழங்கிக்கொண்டிருந்தன.

புரவியில் அர்ஜுனனை நோக்கி வந்த நகுலன் விரைவழிந்து சற்றே திரும்பி நின்று "யாதவரே, நமது படைகளிலிருந்தும் அங்கருக்கான வாழ்த்தொலிகள் எழவேண்டும். நான் ஆணையிடவா?" என்றான். இளைய யாதவர் சொல்லெடுப்பதற்குள் அர்ஜுனன் உரத்த குரலில் "வேண்டாம்!" என்றான். சீற்றத்துடன் திரும்பிய நகுலன் "போர் முடிந்துவிட்டது, மூத்தவரே. போர் முடிவை அறிவித்து களமுரசுகள் முழங்கிய கணமே வஞ்சங்களும் அகன்றுவிடவேண்டுமென்பது நெறி. நீங்கள் வென்றுவிட்டீர்கள்.

புகழ்சூடிவிட்டீர்கள். சூதர்கள் சொல் யாக்கத் தொடங்கிவிட்டார்கள். இனி எதற்கு இக்காழ்ப்பு?" என்றான். "வேண்டாம் என்று உன்னிடம் சொன்னேன்" என்று மேலும் சீற்றத்துடன் அர்ஜுனன் சொன்னான்.

நகுலன் சினத்தில் உடல் நடுங்க, வலிப்புகொண்ட முகத்தில் பற்கள் வெளித்தெரிய, மூச்சின் ஒலியில் "இது கீழ்மை. நீங்கள் அவரை வீழ்த்தியதைவிட பெரும் கீழ்மை இது. அதோ களம் வீழ்ந்து கிடப்பவர் பாரதவர்ஷம் கண்ட மாவீரர். ஒற்றை வாழ்த்தொலிகூட எழாது அவர் உடல் அங்கு கிடக்கிறது. அவரை எளிய வீரனின் உடலென அவர்கள் எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்கள்" என்றான். அவன் குரல் உடைந்தது. "இங்கு வீழ்ந்த அத்தனை மாவீரர்களையும் இருதரப்பும் சேர்ந்து வாழ்த்தியிருக்கிறது, மூத்தவரே. அவரை நாம் வாழ்த்துவதே முறை."

அர்ஜுனன் "வேண்டியதில்லை! வேண்டியதில்லை!" என்றான். அவன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. பின்னர் எழுந்து காண்டீபத்தைத் தூக்கி நகுலனை அறைவதுபோல் நீட்டி "விலகிச்செல்! அறிவிலி! விலகிச்செல் இங்கிருந்து. இனி ஒரு சொல்லும் பேசாதே" என்றான். நகுலன் அசையாது நின்று "இக்கீழ்மையை நான் உங்களிடம் எதிர்பார்க்கவில்லை, மூத்தவரே" என்றான். "சற்று முன் எழுந்த கீழ்மையை எதிர்பார்த்தாய் அல்லவா?" என்று அர்ஜுனன் கேட்டான். நகுலனின் முகம் மாறியது. "போரில் செய்த கீழ்மையை போருக்குப்பின் இயற்றும் இச்சிறுமைகளினூடாக நிகர் செய்து கடந்து செல்லலாம் என்று எண்ணுகிறாயா?" என்று அர்ஜுனன் கேட்டான். அதிர்ச்சியுடன் "மூத்தவரே!" என்றான் நகுலன்.

“இக்கீழ்மையை எவரும் வெல்ல இயலாது. இது நம் கொடிவழியினரின் நினைவில் நின்றிருக்கும். பல்லாயிரம் தலைமுறைகள் இங்கு சூதர் இதை பாடுவர். என் புகழ் பேசப்படுமிடத்தில் எல்லாம் இவ்வெற்றியின் கெடுமணமும் உடனிருக்கும். எதைச் செய்தும் நீ இதை மறைக்க இயலாது. மறைக்கவும் வேண்டாம். இது இங்ஙனமே இருக்கட்டும். குருக்ஷேத்ரத்தில் விழுந்த அவன் உடல் நமது கொடிவழியினரின் நினைவில் நீடிக்கட்டும். தீரா நோயென என்றும் நம் குருதியில் திகழட்டும் அந்நினைவு” என்றபின் மூச்சிரைக்க அவன் தளர்ந்தான். ஓசையுடன் தேர்த்தட்டை அறைந்தது காண்டீபம். தளர்ந்து பின்னகர்ந்து பீடத்தில் அமர்ந்து “உலகியலில் வெற்றியென ஒன்று இல்லை என உணரும்பொருட்டு இது நிகழ்ந்தது. இங்கே அடைவதொன்றில்லை என்று உணரும்பொருட்டு இப்போர் மூண்டது போலும்” என்றான். தலையை இரு கைகளால் தாங்கி முனகிக்கொண்டான்.

தவிப்புடன் “யாதவரே” என்று நகுலன் அழைத்தான். புன்னகையுடன் இளைய யாதவர் சொன்னார் “இங்கு படை எண்ணிக்கை மிகக் குறைவு. தன்னந்தனிக் குரல்கள் ஆங்காங்கே எழுந்து வாழ்த்திக்கொண்டிருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று தொடுத்துக்கொண்டு பெரும் குரலென்றாகி விண்முட்ட ஒலிக்க போதிய வாய்கள் இல்லை. ஆகவே வாழ்த்தொலி எழுந்தும் எப்பயனும் இல்லை. முரசுகள் ஒலிக்கட்டும். அது களமுறைமை.” நகுலன் சீற்றம்கொண்டவனாக ஏதோ சொல்ல நாவெடுத்தான். பின்னர் தன்னை அடக்கிக்கொண்டு தலைவணங்கி திரும்பிச் சென்றான். புரவியில் ஏறி அதை உதைத்துச் செலுத்தி விரைந்தான்.

தேரை முன்செலுத்தியபடி இளைய யாதவர் "உன் துயர் அறிகிறேன், பார்த்தா. ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் துயருறாத மெய்வீரன் எவனும் இங்கில்லை" என்றார். "இது வெற்றியல்ல, வெறும் வஞ்சம்! வெற்றுக்கீழ்மை!" என்று உரத்த குரலில் அர்ஜுனன் சொன்னான். "முதல் பிழையிலிருந்து தொடங்கி இங்கு வந்து நின்றிருக்கிறாய். விதைத்தது வளரும், தொடங்கியது நிறைவுறும்" என்றார் இளைய யாதவர். "ஒன்றில் நீ நிறைவுறலாம். இனி நீ இங்கே இயற்றுவதற்கு கீழ்மை எதுவுமில்லை. இக்களத்தில் இனி உன்னால் வெல்லப்படவும் எவருமில்லை." அர்ஜுனன் "ஆம், மெய்" என்றான். கசப்புடன் புன்னகைத்து "இதில் துயருற ஏதுமில்லைதான். பீஷ்மரையும் துரோணரையும் வீழ்த்திய எனக்கு இயைந்ததுதான் இச்செயல்" என்றான்.

தேரைச் செலுத்தியபடி "அவர்கள் ஒவ்வொருவரும் அனைத்துச் செயல்களினூடாகவும் இந்த முடிவை நோக்கியே வந்துகொண்டிருந்தார்கள், பார்த்தா. உனது அனைத்து எண்ணங்களூடாகவும் உணர்வுகளூடாகவும் நீயும் இங்கு வந்து சேர்ந்துகொண்டிருந்தாய். இது நீங்கள் அனைவரும் பிறப்பதற்கு முன்னரே முடிவு செய்யப்பட்ட தருணம். இங்கு நீங்கள் உங்களுக்கு ஆணையிடப்பட்டதையே முடித்தீர்கள் என்று கொள்க!" என்றார் இளைய யாதவர். "ஊழ்!" என்று ஏளனத்துடன் அர்ஜுனன் சொன்னான். "எத்தனை நாணமற்ற சொல்! எத்தனை கீழ்மை நிறைந்த சொல்! எத்தனை சிறுமைகளும் தீமைகளும் இச்சொல்லால் மறைக்கப்பட்டிருக்கும்!"

"ஆம்" என்று இளைய யாதவர் நகைத்தார். "உண்மை. ஆனால் அதற்கிணையாகவே அத்தனை மேன்மைகளும் வெற்றிகளும் மெய்மைகளும் உவகைகளும் மறைக்கப்பட்டிருக்குமெனில்

அது நிகர் செய்யப்படுகிறது. ஊழென்பது ஒவ்வொரு வண்ணமும் பிறிதொன்றுடன் கலந்து உருவாகும் வெண்மை. பருப்பொருட்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இயல்பு நிறைந்து உருவாகும் வெறுமை." அர்ஜுனன் தன் தலையை இரு கைகளிலும் தாங்கி அமர்ந்திருந்தான். குமட்டல் எடுப்பதுபோல் இருமுறை உலுக்கிக்கொண்டான். தேரின் உலுக்கலில் அவன் உடல் உயிரில்லாத சடலம் என அசைந்து அதிர்ந்தது.

அவர்களுக்குமேல் விண்ணகம் இடிக் கொந்தளிப்பால் நிறைந்திருந்தது. நூறு நூறு குருக்ஷேத்ரக் களங்களை எடுத்து எடுத்துக் காட்டி அமைவதுபோல் மின்னல்கள் துடித்தன. "இன்று பெருமழை பெய்யக்கூடும்" என்று இளைய யாதவர் சொன்னார். "இங்குளோர் அனைவரும் இரவில் மழைப்பொழிவில்தான் அமர்ந்திருக்க நேரும்." அர்ஜுனன் அவர் சொன்னதை கேட்கவில்லை. வானை நோக்கி "உன் தந்தை மகிழ்ந்திருக்கிறார். இன்றிரவை அவரே ஆள்வார்" என்று இளைய யாதவர் சொன்னார். அர்ஜுனன் அச்சொல்லால் தொடப்பட்டவனாக நிமிர்ந்து நோக்கினான். மின்னல் அவன் முகத்தை சுடரச்செய்து அணைய வானம் இடியோசையால் நிறைந்தது.

பாண்டவப் படைகள் மிகமிகக் குறைந்துவிட்டிருந்தமையால் அந்த விரிந்த வெளியில் அவர்கள் சிதறிப்பரந்திருந்தனர். அனைவர் உடல்களும் கரி படிந்திருந்தன. காட்டெரிக்குப் பின்னர் சருகுக் கரிதுகள் அலைவதுபோல அவர்கள் நிலமெங்கும் அசைந்தனர். அவர்கள் சென்றமைய இடம் இருக்கவில்லை. படைகளின் பின்புறத்தில் களஞ்சியங்கள் எரிந்து புகை எழுப்பிக்கொண்டிருந்தன. தலைமைதாங்கி

ஆணையிட எவரும் இருக்கவில்லை. ஆகவே அவர்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தால் கொண்டுசெல்லப்பட்டார்கள். அருகிருந்தவர்களின் அசைவுகளை தாங்களும் இயற்றினார்கள். ஒரு திசை நோக்கி குவிந்துசென்று அங்கே எரியும் புகையும் மண்டியிருக்கக் கண்டு பின்னடைந்தனர். பின்னிருந்தவர்கள் முன் உந்த தேங்கி வளைந்து பிறிதொரு வழி திறந்து அத்திசை நோக்கி சென்றனர்.

அவர்களுக்கு ஆணையிட்டபடி முரசுகள் முழங்கின. ஆனால் அவ்வாணைகளுக்குள் ஒருமை இருக்கவில்லை. ஆகவே அவை சொல்கலந்து வெற்று ஓசையென்றாயின. அவை வானிலிருந்து பொழிந்த விண்முரசுகளின் ஒலியில் கலந்து வீணாயின. கொம்புகளை முழக்கியபடி வந்த சிறிய படைத்தலைவர்கள் "ஒன்றாகத் திரள்க, அணிகொள்க!" என்று ஆணையிட்டனர். "ஒன்றாகத் திரண்டு உணவில்லாமல் துயில்க!" என ஒருவன் படைத்தலைவனை பகடி செய்தான். அவன் திரும்பி சீற்றத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு புரவியைத் திருப்பிக்கொண்டு சென்றான்.

"இன்று மழையே நமக்கு கூரையென்றாகும்" என்று ஒருவன் சொன்னான். "நன்று. பகலில் நெருப்பு. இரவெல்லாம் மழை" என்றான் ஒருவன். பலர் நின்று திரும்பி நோக்கி புன்னகைத்தனர். அந்தக் கையறுநிலையை அவர்கள் சிரித்துக் கடக்க முயன்றனர். "இன்று நாம் நன்கு வெந்த மானுட ஊனை உண்ணவிருக்கிறோம். நம் உடலில் மானுட பலி கோரும் தெய்வங்கள் எழும். நாளை இக்களத்தில் தெய்வங்கள் நின்று போரிடும்" என்று ஒருவன் சொன்னான். "மானுட உடல்களை புணரலாமென்றால் ஏன் உண்ணலாகாது?" என்றான் ஒருவன். அவன் என்ன சொன்னான் என எவருக்கும் புரியவில்லை.

தனித்து, சோர்ந்து, பிரிந்து, தள்ளாடி அமர்ந்து, பின் எழுந்து, எங்கு எத்திசை நோக்கி என்றறியாது நடந்துகொண்டிருந்த பாண்டவப் படைகளினூடாக கரித்தடப் பாதையில் இளைய யாதவர் தன் தேரை ஓட்டிச்சென்றார். படைவீரர்கள் பிளந்து அவருக்கு வழிவிட்டனர். புகையை ஊடுருவிச் செல்வதுபோல் தேர் அவர்களை ஓசையின்றி, தொடுகையின்றி விலக்கிச் சென்றது. தேரின் சகட ஓசை மட்டும் கேட்டது.
நடந்துகொண்டிருந்தவர்களின் காலடியோசைகள் புகைத்திரையால் மூடப்பட்டு நீருக்குள் என மழுங்கி ஒலித்தன. பகல் முழுக்க எழுந்த வெடிப்பொலிகளால் அடைத்துவிட்டிருந்த காதுகளில் கம்பி அறுந்த யாழ் என பிறழ்வொலி ஒன்று எஞ்சியிருந்தது.

ஒவ்வொரு நாளும் போர் முடிந்து அத்தேர் அவ்வாறு படைகளைக் கடந்து அப்பால் செல்கையில் இருபுறமும் வாழ்த்தொலிகள் எழுவது வழக்கம். துயருற்றுக் களைத்திருந்தாலும் குருதி வார்ந்து சோர்ந்திருந்தாலும்கூட படைவீரர்கள் படைக்கலங்களைத் தூக்கி "ஃபால்குனன் வாழ்க! பார்த்தன் வாழ்க! வில் விஜயன் வாழ்க! வெற்றிகொள் வேந்தன் வாழ்க!" என்று வாழ்த்தொலி எழுப்புவார்கள். பெருமிதமும் களிவெறியும் கொண்டு சிலர் கூத்தாடுவார்கள். புண்பட்டு தட்டுவண்டிகளில் அள்ளி அடுக்கப்பட்டு கொண்டு செல்லப்படுபவர்கள்கூட அவ்வாழ்த்தொலியைக் கேட்டு கையூன்றி எழுந்தும் ஒருக்களித்துத் திரும்பியும் தேர்த்தட்டில் வில்லுடன் நின்று செல்லும் அர்ஜுனனை நோக்கி முகம் மலர்வார்கள்.

ஒவ்வொரு நாளும் புலரியில் படைமுகம் எழுகையில் அனைவரும் திரும்பி நோக்குவது அர்ஜுனனைத்தான். அவன்

கையில் நாண் கொண்டுள்ள காண்டீபமே அவர்களை உளம் தூண்டியது. அவர்களின் கனவுகளில் வந்து ஒளியாடியது. எங்கெங்கோ ஏதேதோ தெய்வங்களின் கைகளில் அவ்வில்லை அவர்கள் பார்த்திருந்தார்கள். தொலைதூரச் சிற்றூர்களில் குலதெய்வமென அமர்ந்திருந்த காட்டிருப்புகள் அவ்வில்லை கையில் வைத்திருந்தன. "இது நான். என்றும் உடனிருப்பேன்" என்றன. அவர்கள் ஒருபோதும் குடித்தெய்வங்கள் உடனில்லாமல் வாழ்ந்தவர்கள் அல்ல.

அவர்கள் அந்த வில்லை நோக்குகையில் எல்லாம் மெய்ப்புகொண்டனர். இளைய யாதவர் ஓட்டிய அந்தத் தேரை போரிடுகையிலும் உளம் தொடர்ந்துகொண்டிருந்தனர். அமரத்தில் அங்கில்லையென அமர்ந்திருந்த கருவண்ண உடலனை நூறு முறை ஆயிரம் முறை விழிகளால் தொட்டு உழிந்தனர். அவருடைய குழல்கற்றையில் இமைப்பின்றி ஒளிகொண்ட பீலிவிழியை நோக்கி உளம் மடிந்து வணங்கினர். "எங்கு வெற்றிகொள் விஜயனும் சொல்திகழ் கரியனும் உளரோ அங்கு மெய்மையும் சிறப்பும் அழிவில்லாது நிலைகொள்ளும் என்று அறிக!" அச்சொல் ஒவ்வொரு இரவிலும் சூதர்களின் பாடல்களின் முடிவில் எழுந்து நின்றது. அச்சொல்லுடன் அவர்கள் துயிலச்சென்றனர். இளமழை பொழிந்த குளிரில் அது அனல்போல் வெம்மையளித்தது. காலையில் விழித்தெழுகையில் இளங்காற்றென வந்து உடல் மலர வைத்தது. அச்சொல்லை தங்கள் அகம் ஓயாது உரைத்துக்கொண்டிருப்பதை அவர்கள் எப்போதும் உணர்ந்தனர்.

ஆனால் அன்று அவர்கள் எவரும் அர்ஜுனனை திரும்பிப் பார்க்கவில்லை. அவன் அவர்களை கடந்து சென்றபோது இயல்பாக நோக்கியபின் விழிதிருப்பிக்கொண்டனர். அத்தேர்

கடந்து நெடுந்தொலைவிற்குச் சென்ற பின்னர் எவனோ ஒரு வீரன் ஓங்கி நிலத்தில் உமிழ்ந்தான். சிலர் அவனை திரும்பிப்பார்த்தனர். அவன் பித்தன்போல் நகைத்து "பழிகொள் வீணன்! இக்குருதியிலாடி அவன் அடைந்ததென்ன?" என்றான். "வாயை மூடு! நீ அரசப்பழி சூடுகிறாய்!" என்றான் ஒருவன். "இல்லை, தெய்வப்பழி சூட விரும்புகிறேன்! இதோ இக்களத்தில் நிகழ்ந்ததற்கு அப்பால் நாமும் நம் குடியும் அடையும் பெரும்பழியென பிறிதொன்றுண்டா? தெய்வப்பழி இது. எங்கள் குடிமீது எங்கள் கொடிவழியின்மீது தெய்வப்பழி விழுக! எங்கள் மூதாதையர் அடைக தெய்வப்பழி!" என்று அவ்வீரன் உரக்கக் கூவினான்.

சூழ்ந்திருந்த அனைவரும் அவனை பதைப்புடன் நோக்கினர். வெறிகொண்டு நகைத்து அவன் கைகளை விரித்தான். வெறியாட்டென நடுக்கு எழ சுழன்று ஆடி நின்றான். "பழி கொள்ளும் பொருட்டு தெய்வம் எழுந்திருக்கிறது, தோழரே! மானுடப்பழிகொண்டு மகிழ வந்துள்ளது இறுதி தெய்வம்! இதோ சென்றவனை நீங்கள் கண்டீர்கள் அல்லவா? அவன் தெய்வம். பலி கொள்ள வந்த கொடுந்தெய்வம். கலியுகத்தின் தெய்வம். குருதியாடி நிறைவுற்று களம் மீள்கிறான். அள்ளி அள்ளி உண்டான் நிணத்தையும் குருதியையும். இக்களத்தில் விழுந்த அத்தனை உயிர்களையும் உண்டான். மானுடரை, புரவிகளை, யானைகளை சுவைத்தான். பசி கொண்ட அந்த வாயை நான் கண்டேன்."

"ஈடில்லா கொலைஞன்! கோடி கோடி கொலைகளினூடாக தெய்வமென்றானவன்! அவனை நான் கண்டேன்! ஆம், அவன் என் பழியையும் கொள்க! கொள்க என் பழியையும்! அவன் கொள்க என் பழியையும்! என் குடித்தெய்வங்களே இவனிடம்

சென்றமைக என் பழி! இப்புவியில் ஒரு துளி எச்சமின்றி அழிக இவன் குடி!" இடையிலிருந்து வாளை எடுத்து அக்கணமே தன் கழுத்தில் வைத்து இழுத்து தலை துண்டாக்கி மடிந்து நிலத்தில் விழுந்தான். அவன் முகத்தில் எஞ்சிய அவ்வெறி தசைச்சிற்பமென நிலைத்து மண்ணில் கிடந்தது. சூழ்ந்திருந்தோர் அதை நோக்க அஞ்சினர். அனலை வட்டமிட்டுச் செல்பவர்கள்போல் அதை ஒழிந்து நடந்தனர். ஆனால் ஒவ்வொருவரும் அந்நோக்கை தங்கள் உள்ளத்தில் கொண்டு சென்றனர்.

இருட்கனி - 61

படைகளைக் கடந்து பின்பகுதிக்குச் சென்றதும் அர்ஜுனனின் தேர் விரைவழிந்து தயங்கியது. பெருமூச்சுவிடுவதுபோல் அதன் சகடங்கள் ஓலமிட்டன. அதன்பின் புரவிகள் ஒவ்வொன்றாக நீள்மூச்செறிந்து அமைந்தன. ஒரு புரவி மட்டும் தலையை அசைத்துக்கொண்டே இருக்க அந்த ஓசை தாளம்போல் ஒலித்தது. இளைய யாதவர் தேரை நிறுத்தியது ஏன் என அர்ஜுனனுக்கு புரியவில்லை. ஆனால் அவன் விழிதூக்கி நோக்கவில்லை. புரவிகளில் ஒன்று செருக்கடித்தது. அவர்களைச் சூழ்ந்து பாண்டவப் படையினர் ஆங்காங்கே அமரத்தொடங்கிவிட்டிருந்தனர். எரிசூழ்ந்த மண்ணில் அவர்கள் குந்தி அமர்ந்தனர். பின்னர் உடற்களைப்பு தாளாமல் படுத்துக்கொண்டனர்.

தேர் அணுகும் ஓசை கேட்டது. வலப்பக்கத்திலிருந்து யுதிஷ்டிரனின் தேர் தோன்றி அணுகி வந்தது. சற்று

தொலைவிலேயே தேர் நின்றுவிட அதிலிருந்து யுதிஷ்டிரன் பாய்ந்திறங்கி அர்ஜுனனை நோக்கி வந்தார். அவருக்குப் பின்னால் இரு புரவிகளில் பிரதிவிந்தியனும் யௌதேயனும் வந்தனர். அவர்கள் தேர் அருகிலேயே நின்றுவிட்டனர். அர்ஜுனன் ஓசையாலே வந்தவர் யுதிஷ்டிரன் என உணர்ந்தும் தேர்த்தட்டிலேயே தலையை கையில் தாங்கி அமர்ந்திருந்தான். இளைய யாதவர் அரசரை வணங்கியபடி "அவர் அறுதியாக வென்றுவிட்டார் என்பதை அவருடைய உள்ளம் அறிந்துகொண்டுவிட்டிருக்கிறது. அது அவருடைய நடையிலேயே வெளிப்படுகிறது" என்றார். அர்ஜுனன் "ம்" என தலைதூக்காமலேயே முனகினான்.

யுதிஷ்டிரன் அருகில் வந்து "இளையோனே, அங்கன் வீழ்ந்தான் என்று முரசுகள் அறைகின்றன. முதல் எண்ணமாக உனக்கு ஒன்றும் இல்லையே என்றுதான் தோன்றியது. உன்னைக் காண வேண்டுமென்றுதான் விழைந்தேன்" என்றார். "எனக்கு ஒன்றுமில்லை" என்றபடி அர்ஜுனன் எழுந்து படிகளில் கால் வைத்து கீழிறங்கி தேரின் சகடத்தை பற்றியபடி நின்றான். "களைத்திருக்கிறாய். இன்றைய போர் இங்கு நிகழ்ந்ததிலேயே ஈடற்றது. செல்க! இன்று ஓய்வெடு. இனி அவர்களிடம் பெருந்தேரர்கள் எவருமில்லை. அஸ்வத்தாமன் ஒருவனைத் தவிர நாம் அஞ்சவேண்டியவர்கள் ஒருவருமில்லை. கிருதவர்மன் களம்பட்டுவிட்டான் என்கிறார்கள். கிருபர் உளம்தளர்ந்துவிட்டார். அஸ்வத்தாமன் ஒருவனை மட்டும் நம்பி துரியோதனன் நாளை களமிறங்கமாட்டான்." முகம் மலர்ந்து "ஆம், இன்றுடன் போர் முடிந்துவிட்டது" என்றார்.

அதன் பின்னர் இளைய யாதவரை பார்த்து "என்ன சொல்கிறாய், யாதவனே? இவ்வழிவுகள் இன்றுடன் முடிகின்றன

அல்லவா? திரும்பி இப்படைகளை பார்க்கையில் நெஞ்சு பதைக்கிறது. இங்கு வந்தவர்களில் ஆயிரத்தில், பல்லாயிரத்தில் ஒருவர்கூட எஞ்சவில்லை. இதோ குருக்ஷேத்ரம் முற்றொழிந்து கிடக்கிறது. இனி ஒருநாள் போர் நிகழ்ந்தால் இக்களத்திலிருந்து ஒருவரும் வெளியேறப் போவதில்லை. அதை எண்ணுகையில் அங்கன் வீழ்ந்ததுபோல் நற்குறி ஏதுமில்லை என்று தோன்றுகிறது" என்றார். அவர் நீள்மூச்செறிந்து இயல்படைந்தார். "அவன் ஒருவனால்தான் துரியோதனன் ஊக்கம் கொண்டான். அவனை எண்ணியே பாரதவர்ஷத்தை முழுதாளும் மிகைவிழைவை அவர்கள் வளர்த்துக்கொண்டார்கள். பிதாமகரும் துரோணரும் களம்பட்ட பின்னரும்கூட வென்றுவிடலாம் என்னும் எண்ணத்தையே அவனுக்கு அளித்தவன் அங்கன். நல்லூழ், இனி அவன் எழப்போவதில்லை."

இளைய யாதவர் "ஆம், இன்றுடன் காண்டீபத்தின் பணி பெரும்பாலும் முடிந்தது" என்றார். யுதிஷ்டிரன் "ஆம்" என்றபின் தனக்குத்தானே தலையசைத்து "இன்று மாலை வேண்டுமெனில் ஒரு தூதனை அவனிடம் அனுப்பிப் பார்ப்போம். இனி போரிட அவன் ஒருங்கமாட்டான் என தோன்றுகிறது. உடன்பிறந்தார் அனைவரையும் இழந்து தனித்து நின்றிருக்கிறான். எஞ்சிய நம்பிக்கையான உயிர்த்தோழனும் இல்லை" என்றார். இளைய யாதவரின் புன்னகையைக் கண்டு "நீ செல்லவேண்டியதில்லை. உன் பொருட்டு சாத்யகி செல்லட்டும்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். இளைய யாதவர் "வேண்டியதில்லை" என்றார். "ஏன்?" என்றார் யுதிஷ்டிரன். இளைய யாதவர் "இப்போதும் தூதனுப்பும் தருணம் அமையவில்லை" என்றார்.

“இன்னமும் போர் நடந்தால்...” என யுதிஷ்டிரன் சொல்லெடுக்க “போர் இன்னமும் நிகழத்தான் செய்யும்” என்று இளைய யாதவர் சொன்னார். “எந்த விசை அவனை இக்களம் வரை கொண்டுவந்ததோ அது அவ்வண்ணமே துளிக்குறையாமல் எஞ்சும். ஏனெனில் இப்புவியில் இதுவரையும் அவ்வண்ணமே நிகழ்ந்துள்ளது. இனியும் அவ்வாறே நிகழும்.” யுதிஷ்டிரன் ஒவ்வாமையுடன் முகம் சுளித்து “என்ன சொல்கிறாய்? இதற்குப் பின்னரும்...” என்று மீண்டும் பேசத்தொடங்க இளைய யாதவர் “இதற்குப் பின்னரும் துரியோதனர்கள் இங்கு எழுவார்கள். மீண்டும் மீண்டும், வெவ்வேறு முகங்களில், வெவ்வேறு நிலங்களில்...” என்றார்.

“யுதிஷ்டிரரே, ஒற்றை உணர்வும் ஒரே விசையும் ஒன்றென ஒலிக்கும் சொற்களும் கொண்டு அவர்கள் வந்தபடியேதான் இருப்பார்கள். இப்புவியில் விழைவுகள் அனைத்துக்கும் அடியிலிருப்பது காமம். காமத்திற்கு அடியிலிருப்பவள் அன்னை. புவியே பேரன்னை” என்று இளைய யாதவர் சொன்னார். யுதிஷ்டிரன் “இப்பேரழிவு... இன்னும் ஒருமுறை இது நிகழ்ந்தால் இங்கே மானுடரே எஞ்சமாட்டார்கள்...” என்றார். “ஒட்டுமொத்தமாக எண்ணி நோக்கினால் இங்கே நிகழ்ந்தது என்ன? மானுடர் தங்களைத்தாங்களே கொன்றுகுவித்தனர். அவர்களில் சிலநூறுபேருக்கு ஒழிய பிறருக்கு இங்கே என்ன நிகழ்கிறது, ஏன் நிகழ்கிறது என்றே தெரியாது.”

“அது தெய்வங்களின் ஆணை. இயற்கையின் விசை. மானுடர் அதற்கு ஒரு பொருட்டல்ல” என்றார் இளைய யாதவர். யுதிஷ்டிரன் தளர்ந்து “இனிமேலும் ஒரு போரெனில்...” என்றபின் இரு கைகளையும் விரித்து “அம்பு தொடுக்கவும் அவற்றை

நெஞ்சிலேற்றி வீழவும் படைகள் வேண்டுமல்லவா? நோக்கினாய் அல்லவா, எண்ணினால் இரண்டாயிரம் பேர் எஞ்சமாட்டார்கள். இவர்கள் அனைவருமே ஏவலர்கள், புரவிச்சூதர்கள், அடுமனையாளர்கள், களஞ்சியக் காவலர்கள். மறுபக்கமும் அவ்வாறே. அணையா சிதைகளுக்கு அன்னமூட்டுவதற்குக் கூட ஏவலர்கள் இன்றில்லை என்று சொன்னார்கள். இங்கிருக்கும் படையினர் அனைவரும் சென்று அள்ளி சிதைகூட்ட வேண்டியிருக்கிறது" என்றார்.

"ஆம்" என்றபின் இளைய யாதவர் திரும்பிப் பார்த்தார். "இருதரப்புப் படையினரும் இணைந்து பிணங்களை அகற்றவில்லை எனில் நாளை குருக்ஷேத்ரம் ஒருங்காது. இவ்வுடல்களுக்கு எரியோ மண்ணோ அமையாது" என்றார். யுதிஷ்டிரன் தளர்ந்து தள்ளாடி பின்னடைந்து அருகே வந்து நின்ற தன் மைந்தர்களின் தோள்களை இரு கைகளாலும் பற்றிக்கொண்டார். "விடாய் கொண்டிருக்கிறேன், மைந்தா. எங்கேனும் சற்று படுத்தால் போதும் என்று எண்ணுகிறேன்" என்றார். "அவன் முகம் என் விழிகளிலிருந்து மாறவில்லை. பேரழகன்! தெய்வங்களே, இத்தனை பேரழகை எதற்கு மானுடர்க்கு அளிக்கிறீர்கள்?" என்றார். யௌதேயன் நீருக்கென சென்றான்.

யுதிஷ்டிரன் இளைய யாதவரைப் பார்த்து "யாதவனே, அவனை அஞ்சாத ஒரு நாள் என் வாழ்வில் இருந்ததில்லை. இன்றல்ல, துரோணரின் குருகுலத்திற்கு அவன் வந்த அன்றே அவனை அஞ்சத்தொடங்கினேன், என் இரு இளையோரின் பொருட்டு. அவன் அவர்களை கொல்லக்கூடும் என எண்ணினேன். ஆனால் அன்று ஏன் அவ்வண்ணம் அஞ்சினேன் என்றே எனக்குத் தெரிந்திருக்கவில்லை. இன்றும் அவ்வச்சத்தை என்னால்

புரிந்துகொள்ள முடியவில்லை" என்றார். இளைய யாதவர் "ஏனென்றால் அவன் அவர்களை கொல்வதே முறையென உங்கள் அகம் எண்ணியது" என்றார். யுதிஷ்டிரன் திகைப்புடன் அவரை நோக்கினார். அச்சொற்கள் அவர் உள்ளத்துள் நுழையவில்லை. யௌதேயன் அப்பால் செல்வதை நோக்கிவிட்டு "இன்றிரவு அவ்வச்சமின்றி நான் துயிலக்கூடும். அவ்வண்ணம் ஒரு இரவு எனக்கு அமையுமா என்றே ஏங்கியிருந்தேன். ஆனால் இத்தருணத்தில் உடலெங்கும் எரி பற்றிக்கொண்டதுபோல் ஒரு வலியை உணர்கிறேன்" என்றார்.

அப்பாலிருந்து சகதேவன் புரவியில் அணுகி வருவதை யுதிஷ்டிரன் கண்டார். சகதேவன் புரவியிலிருந்து இறங்கி அவர்களின் பார்வையை உணர்ந்து அவ்வுணர்வால் நடை சற்று மாற தலைகுனிந்து அணுகி வந்து "அரசருக்கு இரவு தங்க பாடிவீடொன்று அமைக்கச் சொல்லியிருக்கிறேன். இங்கிருந்த பலகைகளும் தட்டிகளும் தோல்களும் முற்றாக எரிந்து மறைந்துவிட்டிருக்கின்றன. காட்டுக்குள்ளிருந்து பச்சை ஈச்சை இலைகளை வெட்டி வரும்படி சொல்லி சிலரை அனுப்பியிருக்கிறேன். அவர்கள் வந்தபிறகு ஒரு இலைக்குடில் அமைக்க வேண்டும்" என்றான். யுதிஷ்டிரன் "ஆம், இன்றிரவேனும் நான் துயிலக்கூடும்" என்றார். பின்னர் "முரசுகள் ஒலிப்பதை கேட்டேன். நமது படையின் முரசுகளும் வாழ்த்து ஒலிப்பது முறையானதே" என்றார்.

"இக்களத்தில் நிகரற்ற வீரத்தை காட்டியவன் அங்கன். குலக்குறை உடையவனாயினும் ஷத்ரியர்களுக்கு படைத்தலைமைகொண்டு எழுந்திருக்கிறான். விண்ணூரும் தெய்வத்தின் மைந்தனென்று அவனை சொல்கிறார்கள். நமது மைந்தர்களை அவன் நினைத்தால் கொன்றிருக்கக்கூடும். தன்

பேரளியால் அவர்களை நமக்கு உயிருடன் அளித்திருக்கிறான். விண் நிறைக அங்கன்! அங்கே மூதாதையருடன் நிறைவுறுக!" என்று யுதிஷ்டிரன் தொடர்ந்து சொன்னார். சகதேவன் "மூத்தவரே, இந்த வீண்சொற்களை நாம் எதற்காக சொல்கிறோம்? இங்கு வரும்போது சூழ்ந்திருந்த நமது படைகளின் கண்களுக்கு நடுவே ஊர்ந்தேன். ஒவ்வொரு நோக்கும் நச்சுமுள்ளென என்னை குத்தியது. என் முதுகுக்குப் பின்னால் பலர் வசைச் சொற்களை கூவுவதையும் காறி உமிழ்வதையும் அறிந்தேன்" என்றான்.

யுதிஷ்டிரன் "என்னையா?" என்றார். "இல்லை, அதற்கும் நீங்கள் பொருட்டல்ல அவர்களுக்கு" என்ற சகதேவன் சீற்றத்துடன் திரும்பி இளைய யாதவரிடம் "யாதவரே, பலநூறு பேர் அங்கு தங்களை கீழ்மை நிறைந்த சொற்களால் வசைகூவுகிறார்கள். அறிவீர்களா?" என்றான். "ஒவ்வொரு சொல்லையும் கேட்கிறேன்" என்று இளைய யாதவர் புன்னகையுடன் சொன்னார். "உங்கள் குலம் அழியவேண்டுமென தீச்சொல்லிட்டு நவகண்டம் புகுந்தனர் எழுவர்" என்றான் சகதேவன். "அத்தீச்சொற்களும் என்னுடையவையே" என்றார் இளைய யாதவர். சகதேவன் உடைந்து "யாதவரே, முன்பு இங்கு களம்பட்ட பல்லாயிரவர் உங்களை வாழ்த்தியபடி உயிர்துறந்தனர். இன்று ஏன் இத்தனை பழிச்சொற்கள் எழுகின்றன?" என்றான். "உங்களுக்கே தெரியும், இன்றைய மீறலைப்பற்றி. இனி எழும் சொற்களின் காலத்தில் இப்பழி பெருகும். இப்பழியை எண்ணாமல் உங்கள் பெயரை இனி புவியில் ஒருவரும் கூறப்போவதில்லை."

"ஆம், இப்பழியும் எனக்கே" என புன்னகை மாறாமல் இளைய யாதவர் சொன்னார். "குருக்ஷேத்ரமே நான் கொண்ட

பெரும்பழிதான். அது எனக்கொரு மணிமுடி." அவருடைய புன்னகை விரிந்தது. "அதில் ஓர் அருமணி அங்கனைக் கொன்ற பழி." சகதேவன் "நீங்கள் விளையாடுகிறீர்கள். எங்கள் அனைவரையும் வெறும் புழுக்களென்றும் பூச்சிகளென்றும் எண்ணி தலைக்குமேல் காலெடுத்து நடந்து செல்கிறீர்கள்" என்றான். "ஆம்" என்று இளைய யாதவர் சொன்னார். சகதேவன் ஒருகணம் உடல் விதிர்த்தான். இரு கைகளையும் ஏதோ சொல்வதுபோல் விரித்து பின்னர் தளர்ந்தான். திரும்பிச்செல்வதுபோல் அவன் உடல் திரும்ப யுதிஷ்டிரன் சினத்துடன் அவன் தோளை பற்றினார்.

"என்ன சொல்கிறாய்? களத்தில் அங்கனை வீழ்த்தியதில் என்ன பழி உள்ளது? படைநின்று நம்மை எதிர்த்தவன் அவன். நம் இளமைந்தனை முற்றுகையிட்டுக் கொன்றவர்களில் ஒருவன். நம் குலக்கொடி அவைச்சிறுமை செய்யப்பட்டபோது அமர்ந்து நோக்கி மகிழ்ந்தவன். நம் நிலத்தைக் கவர்ந்து படை நடத்தியவன். நம்மை கானகத்திற்கு ஓட்ட அவனுக்கு ஊக்கமளித்தவன். அவனை நம்பியே இப்போரை எடுத்தான் துரியோதனன். இத்தனை அழிவுக்கும் அவனே பொறுப்பு. அவனைக் கொல்லாமல் இப்போர் முடியாது என எவருக்கும் தெரியும்" என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

சகதேவன் அவரை நேர்நோக்கி "களம்நின்று அவரை எதிர்த்து வென்றிருந்தால் அது வெற்றி. இங்கிருக்கும் அத்தனை படைவீரர்களும் மூத்தவரின் பெயர் சொல்லி வாழ்த்துரைகளை ஒலித்துக்கொண்டிருப்பார்கள். உங்கள் தேர்வலரிடம் கேளுங்கள் அங்கனை அவர் எவ்வாறு வென்றார் என்று" என்றான். யுதிஷ்டிரன் "எவ்வாறு?" என்றபின் இளைய யாதவரைப் பார்த்து "யார்? தாங்கள் படைக்கலம் எடுத்தீர்களா?" என்றார். சகதேவன்

“தன் படைக்கலம் என பார்த்தரை ஏந்தியவர் அவர்” என்று சொன்னான். “நான் சொல்கிறேன்” என்று அர்ஜுனன் முன்வந்தான். “மூத்தவரே, அங்கநாட்டரசர் கர்ணனை நான் போர்நெறிகள் அனைத்தையும் மீறியே கொன்றேன். மானுடப் பொதுநெறியையே மீறினேன்.”

“என்ன சொல்கிறாய்?” என்றார் யுதிஷ்டிரன். “அவரது தேர்ச்சகடம் பிலத்தில் இறங்கியது. தேரிலிருந்து இறங்கி சகடத்தை மீட்க அவர் முயல்வதற்குள் அவரை கொன்றேன்.” யுதிஷ்டிரன் அக்காட்சியை உள்ளத்தில் விரிக்கமுடியாமல் விழிகள் தத்தளிக்க “சகடத்தை மீட்க பொழுதளிக்கும் வழக்கம் உண்டு” என்று சொன்னார். “ஆம், உண்டு. அளித்தாகவேண்டும் என்பதே முறை. அப்போது அவரிடம் அம்புகளும் வில்லும் இருக்கவில்லை. வெறும்கையுடன் அவர் போர் அறைகூவவும் இல்லை” என்றான் அர்ஜுனன். “அப்பொழுதை அவன் உன்னிடம் கோரினானா?” அர்ஜுனன் “இல்லை, அவர் எதையும் எவரிடமும் கோருபவர் அல்ல” என்றான். “அவர் கோரியிருந்தாலும் நான் அதை அளிக்க விரும்பவில்லை.”

யுதிஷ்டிரன் “உன்னிடம் விசைமிக்க அம்புகள் இருந்தன. நீ வெல்வாய் என்று நிமித்திகரின் கூற்று இருந்தது. விண்ணில் உன் தந்தை உனக்கு துணைநின்றார். நீ பொறுத்திருக்கலாம். அப்பொழுதை அவனுக்கு அளித்திருக்கலாம். பழியிலாத வெற்றியை அடைந்திருக்கலாம்” என்றார். அர்ஜுனன் “ஆம், அளித்திருக்கலாம். அவ்வண்ணம் நான் செய்திருக்கக்கூடிய பலநூறு அறங்கள் இக்களத்தில் தவறிச்சென்றன. அதில் தலையாயது இது” என்றான். யுதிஷ்டிரன் வெறித்து நோக்கிக்கொண்டு மெல்லிய நடுக்குடன் நின்றார். இளைய யாதவர் “அரசே, அவர் கதிர்மைந்தர். அளிப்பதற்காகவே

எழுந்தவர்" என்றார். "இவ்வெற்றியும்கூட அவரால் அளிக்கப்பட்ட கொடைதான்."

"என்ன சொல்கிறாய்?" என்று யுதிஷ்டிரன் சொன்னார். அர்ஜுனனிடம் "அறுதிக்கணத்தில் ஓர் அறப்பிழையினூடாகவா வென்றாய்? இவ்வொரு வெற்றியையாவது நெஞ்சு நிமிர்த்து மூதாதையர் முன்பும் தெய்வங்கள் முன்பும் நிற்கும்படி ஈட்டவில்லையா நீ?" என்றார். அச்சொற்களால் அவரே சீற்றம்கொண்டார். "இளையோனே, இக்களத்தில் நேர்நின்று நீ வென்ற ஒருவரேனும் உண்டா?" என்றார். "இல்லை, இக்களத்தில் நீங்களோ நானோ பெருமை கொள்ளும்படி ஒன்றும் நிகழவில்லை" என்று அர்ஜுனன் சொன்னான். "பிதாமகரைக் கொன்ற பழியும் ஆசிரியரைக் கொன்ற பழியும் என் நெஞ்சிலும் தோள்களிலும் அமைந்துள்ளன. இப்பழியை நான் தலையில் சூடியிருக்கிறேன். ஏனெனில் அவர்கள் இருவரும் அறப்பிழை இயற்றியவர்கள். அங்கரோ பழுதற்றவர், முழுமை கொண்டவர்."

"இவ்வொரு வெற்றியையாவது நீ ஈட்டி எனக்களிப்பாய் என்று எண்ணினேன்" என்றார் யுதிஷ்டிரன். "இவ்வறப்பிழையின் பழி உன்னைச் சூழ்க! படைக்கலமின்றி நின்றவன் மீது அம்பு தொடுத்து அவனைக் கொன்ற உனக்கு வீரனென்ற தகுதியில்லை. எனக்கும், நீ ஈட்டி எனக்களிக்கும் இந்த மண்ணுக்கும் இப்பழியில் பங்குண்டு. இங்கிருந்து சென்று என் மூதாதையர் முன் நின்று பொறுத்தருளக் கோருகிறேன். இச்சிறுமை என்னை ஒரு நாளும் நீங்காதொழிக!" என்று யுதிஷ்டிரன் கூவினார். அத்தருணத்தில் விந்தையானதோர் இளநகை அர்ஜுனனின் முகத்தில் எழுந்தது. "இவையனைத்தும்

உங்கள் பொருட்டே, மூத்தவரே. நீங்கள் முடி சூடுவதற்காகவே இவையனைத்தையும் இயற்றினேன்" என்றான்.

பிரதிவிந்தியனின் தோளை உதறி பெருஞ்சினத்துடன் முன்னெழுந்து யுதிஷ்டிரன் "கீழ்மகனே, நிகர்ப்போரில் நின்று பொருத ஆற்றலின்றி வெறுங்கையுடன் நின்ற அவனை வஞ்சத்தில் வீழ்த்திய கோழை நீ. இதோ என் தீச்சொல். இனி ஒரு நாளும் ஒருமுறை படுத்த மஞ்சத்தில் பிறிதொரு முறை படுக்க இயலாது உன்னால். வாணாளெல்லாம் நீ முடிவிலாது அலைவாய். இறுதித் துயிலில் மட்டுமே உன்னை மறந்து ஓய்வு கொள்வாய்... செல்க! என் விழி முன்னிருந்து அகல்க!" என்றார். உடல்நடுங்க கால் தளர்ந்து அமர்ந்தார். பிரதிவிந்தியன் அவரைத் தொட்டு ஆறுதல்படுத்தினான்.

அர்ஜுனன் தலைவணங்கி "இங்கு இத்தனை பொழுது பொறுத்திருந்தது இதன் பொருட்டே. மூத்தவரே, இப்போது என் உளம் நிறைவு கொள்கிறது. எஞ்சும் வாழ்நாள் முழுக்க இப்பிழையீடை இயற்றுகிறேன். இதுவே ஒரு தவமென்றாகுக!" என்றபின் திரும்பி நடந்தான். அவன் செல்வதை நோக்கி அமர்ந்திருந்த பின் யுதிஷ்டிரன் திரும்பி "இதற்கப்பால் நாங்கள் இழப்பதற்கும் அடைவதற்கும் ஏதேனும் உண்டா, யாதவனே?" என்றார். இளைய யாதவர் புன்னகையுடன் தேரை ஏவலனிடம் ஒப்படைத்துவிட்டு தானும் நடந்து அகன்றார்.

முரசு கதி மாறி ஆணைகளை ஒலிக்கத்தொடங்கியது. திருஷ்டத்யும்னன் எஞ்சிய பாண்டவப் படைவீரர்கள் அனைவரும் பத்து பேர் கொண்ட சிறு குழுக்களென்று ஆகி ஒரு தலைமையை தாங்களே தெரிவு செய்து அணிவகுத்து மீண்டும் குருக்ஷேத்ரக் களத்திற்கு செல்லும்படி

ஆணையிட்டான். அங்கு குவிந்து பரந்துகிடந்த உடல்களை எரிகாட்டுக்கு அகற்றிய பின்னரே அவர்கள் உணவருந்த இயலும். அன்றைய நாளின் அனல் அனைத்தையும் எரித்தபின் தானும் மறைந்துவிட்டிருந்தது. களத்தில் விழுந்த உடல்கள் கருகி நிணமுருகி, வெந்த ஊன்சேறென்று மாறி, மிதிபட்டு சகதிக் குழம்பென்று பரந்து, மானுடரேது விலங்கு ஏதென்றறியாமல் ஆகிவிட்டிருந்தன. அங்கிருந்து கெடுமணம் ஒன்று காற்றிலெழுந்தது. ஒரே தருணத்தில் குமட்டும் ஊன்வாடையாகவும் கொதிக்கும் அடுகலத்திலெழும் உணவின் ஆவியென்றும் மாயம் காட்டியது அது.

களத்திலிருந்து புண்பட்ட புரவிகளை மட்டும் இழுத்து வரும்படி திருஷ்டத்யும்னன் ஆணையிட்டான். அவையே அன்று படைவீரர்கள் உணவென்று ஆகவேண்டும். அதன் பின்னரே குருக்ஷேத்ரம் உடல்களை அகற்றி தூய்மை செய்யப்படும். படைவீரர்கள் முதலில் அந்த ஆணையை புரிந்துகொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து "மீண்டும் போரா? போருக்கு எழுகிறார்களா அவர்கள்?" என்று வினவிக்கொண்டனர். மீண்டும் மீண்டும் அவ்வாணை ஒலிக்க முதியவர்கள் "நம்மை பிணங்களை அகற்றும்படி ஆணையிடுகிறார்கள்" என்று விளக்கினர்.

"இல்லை, உண்ணத் தகுந்த ஊன்விலங்குகளை மட்டும் அங்கிருந்து தெரிவு செய்து அடுநிலைகளுக்கு கொண்டு செல்லச் சொல்கிறார்கள். அதன் பின்னரே குருக்ஷேத்ரம் தூய்மை செய்யப்பட வேண்டும்" என்றார் இன்னொருவர். "இன்று களத்திற்கு மிகக் குறைவான புரவிகளே சென்றன. அத்திரிகளும் மாடுகளும் பெரும்பாலும் இல்லை. எண்ணிச் சொல்லதக்க யானைகளே இருந்தன" என்று இன்னொருவன்

சொன்னான். “எனில் மானுடரை உண்போம். இனி இக்களத்தில் நாம் இயற்றத்தகாத எதுவுமில்லை” என்றான் ஒற்றை கைகொண்ட ஒருவன். “கையிழந்தவர் கையை உண்ணலாம். நிகர்செய்யலாகும்” என்று ஒருவன் சொல்ல கையிழந்தவன் புன்னகைத்தான்.

“எழுக! நிரைகொள்க!” என்று மீண்டும் மீண்டும் முரசு ஆணையிட்டுக்கொண்டிருந்தது. படைவீரர்கள் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு சிறு சிறு குழுக்களாக கூடினார்கள். யுதிஷ்டிரன் அவர்கள் நடுவே செல்வதை ஒருவன் கண்டான். “இதோ அரசர் செல்கிறார்!” என்று ஒருவன் கூவினான். “மும்முடி வேந்தர். பாரதவர்ஷத்தின் சக்ரவர்த்தி!” பலர் நகைத்தனர். “களவெற்றியால் எடைமிகுந்திருக்கிறார். ஆகவே மைந்தர்கள் சுமந்து செல்கிறார்கள்” என்று ஒரு முதியவன் சொல்ல பலர் நகைத்தனர். பிரதிவிந்தியன் சீற்றத்துடன் அவர்களை நோக்கி திரும்ப “வேண்டாம், அவர்களின் அச்சொற்களுக்கு தகுதியானவர்களே நாம்” என்று யுதிஷ்டிரன் கூறினார்.

“இன்று அரசருக்கு நாம் கொழுப்புள்ள ஊனை அளிப்போம். அவரது படைவீரர்களின் நிணம்” என்றான் ஒருவன். “அவருக்கு அது புதியதல்ல. பல்லாண்டுகளாக அவர்கள் அதையே உண்டு வருகிறார்கள். ஊன் உண்ணாத அரசன் எவன்?” என்று ஒருவன் கூவினான். அவர்கள் இறுதியாக விடுபட்ட தளை அது என்பதனால் மிக விரைவிலேயே அதை கொண்டாடத் தொடங்கினர். யுதிஷ்டிரனை நோக்கி வசைச்சொற்களைக் கூவியும் கீழ்மை நிறைந்த கையசைவுகளைக் காட்டியும் ஏளனம் உரைத்தனர். “அவன் துணைவியை சமைத்து அவனுக்கு அளியுங்கள். அவளால்தான் எழுந்தது இக்களம்”

என்றார் ஒருவர். "நெறிப்படி அவர்கள் ஐவரும் பகிர்ந்து அதை உண்பார்கள். இவன் காமம் கொண்டவன், அவளுடைய நன்கு வெந்த கருவாயிலை அள்ளி உண்பான்" என்றான் ஒருவன். "இவன் பேரறத்தான். எனவே அவளுடைய நெஞ்சக்குலையே இவனுக்குரியது" என்று ஒருவன் சொல்ல பலர் கூச்சலிட்டு நகைத்தனர்.

சொற்கள் யுதிஷ்டிரரை நோயுறச் செய்தன. உடல் நடுங்க, தலைதாழ்ந்து கொதிக்கும் நீர் நிறைந்த கலம்போல் தொங்க அவர் தேரில் அமர்ந்திருந்தார். தேரை நிறுத்திவிட்டு பிரதிவிந்தியன் நோக்கினான். யௌதேயன் எங்கும் தென்படவில்லை. விழிதொடும் தொலைவில் எங்கும் மரங்களோ நிழலோ இல்லை. அமர்ந்திருக்க ஒரு தடம்கூட தென்படவில்லை. அடுகலம் ஒன்று புரண்டு கிடப்பதைக் கண்டு பிரதிவிந்தியன் ஓடிச்சென்று அதை கொண்டுவந்து புரட்டி பீடமென்று அமைத்து "அமர்க, தந்தையே" என்றான். யுதிஷ்டிரன் அதில் கால்தளர்ந்து அமர்ந்தார். "நீர்! குடிப்பதற்கு சற்று நீர்!" என்றார். பிரதிவிந்தியன் யௌதேயன் வருவதைக் கண்டான்.

யௌதேயன் அணுகி "எங்கும் எவரிடமும் ஒருதுளி நீர்கூட இல்லை. அனைவருமே குருதியைத்தான் குடிக்கிறார்கள்" என்றான். பிரதிவிந்தியன் "பொறுங்கள், தந்தையே" என்று சொல்லி ஓடிச்சென்று அங்கு நின்றிருந்த படைவீரனிடம் "பேரரசருக்கு குடிக்க நீர் வேண்டும். உடனே கொண்டுவா" என்றான்.

"குடிநீரா? இங்கு எங்கும் நீரில்லை. அவரை குருதி குடிக்கச் சொல்க!" என்று அவன் ஆணவத்துடன் சொன்னான். பிரதிவிந்தியன் அவனை சினத்துடன் பார்த்துவிட்டு திரும்பி வந்தான். யௌதேயன் "அனைத்து நீரும் அனலால்

வற்றிவிட்டிருக்கிறது” என்றான். “செல்க! எங்கேனும் சென்று நீர் கொண்டு வருக!” என்று பிரதிவிந்தியன் கூவினான். யுதிஷ்டிரன் பக்கவாட்டில் மயங்கி விழுந்தார். உலர்ந்த உதடுகளால் “நீர்! சற்றேனும் நீர்! சற்று நீர்!” என்று முனகினார்.

இருட்கனி - 62

கிருதவர்மன் கைகளை ஊன்றி தரையிலிருந்து எழுந்து நின்றபோது உடலுக்குள் நீர் நலுங்க கால்கள் தள்ளாடின. இரு கைகளையும் சிறகுபோல் விரித்து, கால்களை நன்கு அகற்றி, கண்களை மூடி அசையாமல் நின்று அகத்தை நிலைநிறுத்திக்கொண்டான். செவி ரீங்கரிக்கும் அமைதி எங்கும் சூழ்ந்திருந்தது. கண்களைத் திறந்தபோது அவனை மெல்லிய சாம்பல் நிறத் துணியால் எவரோ மூடி சுழற்றிக் கட்டியிருந்ததுபோல் தோன்றியது. அவன் கண்களை மூடி தன் உளச் சொற்களைக் குவித்து மீண்டும் திறந்து அப்பகுதியை நோக்கினான். சூழ்ந்திருந்த புகை மூச்சிரைக்க வைத்தது.

விண்ணிலிருந்து புகை இறங்கி படிவதுபோல் தோன்றியது. விண்பரப்பு பாறையென உறைந்த புகையால் ஆனது போலிருந்தது. அதில் அவ்வப்போது விரிசல்கள்போல் மின்னல்கள். அதன் பாறைகள் உருண்டு உருண்டு அப்பால் சென்று பேரொலியுடன் விழுந்தன. காற்று முற்றாக நின்றுவிட்டிருக்க மூச்சு ஓட்டமே கடினமானதாக ஆகிவிட்டிருந்தது. சூழ்ந்திருந்த புகை சுருள்வளையங்களாக அன்றி மெல்லிய தோல்படலம் போலவே தோன்றியது. கைகளால் சிலந்தி வலையை என அதை அள்ளி கிழிக்க

முடியும் என்பதுபோல. சரிந்து விழுந்தால் மெல்லிய சேற்றுப் பரப்பென அது தாங்கிக்கொள்ளும் என்பதுபோல.

எங்கிருக்கிறோம் என அவனால் உணர இயலவில்லை. நெடுநேரம் அது எந்தப் பொழுது என்றும் தெளிவு கூடவில்லை. அது குருக்ஷேத்ரம் என்னும் உணர்வு ஏற்பட்டதுமே சித்தம் சுருண்டு அதிர்ந்தது. போரின் முந்தைய கணம் நினைவிலெழுந்தது. அவன் தன் கைகளை நோக்கினான். அவை மட்கிய வாழைமட்டைபோல் வெண்ணிறமாகத் தெரிந்தன. வெண்சாம்பலா? கைவிரல்களை அசைக்கமுடியவில்லை. அவற்றை பிசினால் சேர்த்து ஒட்டியது போலிருந்தது. கையை உணர முடிந்தது. ஆனால் கையில் குளிரையோ வெம்மையையோ வலியையோ அறிய இயலவில்லை. போர் முடிந்துவிட்டிருக்கிறது. ஆனால் எரி அணையவில்லை. எஞ்சியவர்கள் எங்கே?

அவன் புகையினூடாக நடந்தான். தொலைவிலிருந்த களஞ்சியங்கள் மீண்டும் பற்றிக்கொண்டு அனலில் சிவந்து வண்டுகள்போல் ரீங்கரித்துக்கொண்டிருந்தன. கூரை எரிந்து விழுந்து அணைந்து கரி மூடி கூலம் நிறைத்த மூட்டைகளை எரி எழாமல் அணைத்தது. ஆனால் கூலம் உள்ளிருந்து புகைந்து அனல் கொண்டு கரிப்போர்வையைக் கிழித்து மேலெழுந்தது. கூலம் அவ்வாறானது. அதில் ஒரு பருவில் அனலிருந்தால் போதும் பிற அனைத்தையும் அதுவே பற்றவைக்கும். எழுந்து எரியாது, அணைந்து மறையவும் ஒப்பாது. களஞ்சியங்கள் இன்னும் நெடும்பொழுதுக்கு நின்றெரியும் என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அது படையின் எப்பகுதி? அங்கே எங்கும் மானுட நடமாட்டம் இருப்பதுபோல் தெரியவில்லை. அவன் இருமி நெஞ்சிலிருந்து

கோழையைத் துப்பியபடி நடந்தான். சிறு கரிக்குன்றுகள்போல் உடல் வெந்த யானைகள் ஆங்காங்கே கிடந்தன. அவற்றிலிருந்து உருகி வழிந்த கொழுப்பு எரியும் எதையேனும் தொட்டபோது பற்றிக்கொண்டு நீலச்சுடர் காற்றிலெழ புகைந்தது. அனல் நீரென ஓடிச்சென்று யானைக்குவையை அடைந்தது. யானையின் வயிற்றுக்குள் இருந்து எழுந்த வாயுவில் நீல இதழ்போல தொடாது நின்று எரிந்தது. புகை மண்டி அணைந்து காற்றில் சீறி மீண்டும் பற்றிக்கொண்டு கூடாரங்கள் எரிந்தன. நிலமெங்கும் கரி. அதன்மேல் காலடித் தடங்கள். எரிந்தணைந்த ஒரு பீடம் மென்கரிப்படலத்தால் ஏதோ பாதாள தெய்வங்கள் சமைத்ததுபோல காத்திருந்தது.

எங்கிருக்கிறார்கள்? போர் முடிந்து அனைவரும் விட்டுச்சென்றுவிட்டார்களா? அந்த ஐயம் எழுந்ததும் அதை நசுக்கி பெரும்பாறைபோல் அடுத்த ஐயம் எழுந்தது. உயிருடன்தான் இருக்கிறோமா? அவன் களத்திலிருந்து உடல் வெந்த குதிரைமேல் ஏறியதை நினைவுகூர்ந்தான். உடலை அங்கு உதிர்த்துவிட்டுத்தான் களத்திலிருந்து மீண்டேனா? இல்லையேல் செத்த குதிரைமேல் எப்படி ஊர்ந்தேன்? இப்பொழுது இங்கிருக்கிறேன். இந்தப் புகை மண்ணின் புகைதானா? விண்ணவரோ இருளரோ விழிக்கு தென்படவில்லை. மீண்டும் இருமி நெஞ்சடைக்க கால் மடித்து அவன் அமர்ந்தான். உடல் உலுக்கிக்கொண்டே இருந்தது. மூச்சிழுக்கும்தோறும் நெஞ்சு எடைகொள்ளும் விந்தையை உணர்ந்தான்.

உடலின்மேல் மெல்லிய ஈரமான பட்டுத்துணியை ஒட்டி வைத்ததுபோல் தோன்றியது. அமர்ந்தபோது முதுகும் தொடைகளும் விரிய உடலில் ஒட்டிய அப்பட்டுத்துணி

கிழிவதை உணர்ந்தான். அங்கே சற்று எரிந்தது. அவன் தன் இரு கைகளையும் மீண்டும் கண்ணெதிரே தூக்கிப் பார்த்தான். நெடும்பொழுது நீராடி எழுந்தவைபோல் இருந்தன அவை. வெந்து வெளுத்த கிழங்குகள் என கால்கள். உடலெங்கும் தோல் வெந்து உரிந்துவிட்டிருக்கிறது. சிதையில் பாதியெரிந்த சடலம்போல. நான் உயிருடன் இல்லை. உயிருடனிருந்தால் வலியை அறிந்திருப்பேன். இப்போது வலியில்லை. உடலின் எடை இருக்கிறது. உள்ளேன் எனும் உணர்விருக்கிறது. அவையிரண்டும் மட்டும்தான் நான். நினைவுகள் சிதைந்து வெறும் துண்டுகளென அப்பாலெங்கோ சிதறித் தெரிகின்றன. இடஉணர்வும் வந்து வந்து மறைகிறது.

அவன் மீண்டும் தன்னை உந்தி எழுப்பிக்கொண்டு தள்ளாடும் கால்களுடன் நடந்தான். மேலிருந்து காற்று ஒன்று மழையென இறங்கி பக்கவாட்டில் எழுந்து வளைந்து அகல சூழ்ந்திருந்த புகை சற்று குறைந்தது. ஆனால் விண்பரப்பு பெரிய முகில்செறிவால் முற்றாக மூடப்பட்டிருந்தது. மிகத் தொலைவில் பந்தங்கள் எரிந்தன. களஞ்சியப் புகையை ஒழியும் பொருட்டு கௌரவப் படையினர் மிக அகன்று சென்றுவிட்டிருக்கிறார்கள். அவன் புகையினூடாக, ஆங்காங்கே வெடித்து நின்றாடிய எரியினூடாக பொத்திப் பொத்தி கால்வைத்து நடந்து அவர்களை நோக்கி சென்றான். படைகள் எங்கே? அங்கிருப்போர் சில நூறு பேர் கூட இல்லை என்று தெரிந்தது. எஞ்சிய படைகள் என்ன ஆயின? களம் விட்டு ஓடிச்சென்றுவிட்டார்கள் போலும். ஆனால் பதினேழு நாட்களாக போரில் ஓடாதவர்கள் இன்றிறுதியில் ஓடிச்செல்ல வாய்ப்பில்லை. மறைந்துவிட்டிருக்கிறார்கள். இன்றைய போரில் எவரும் எஞ்சியிருக்கப்போவதில்லை.

அப்போதுதான் அவன் முரசொலியை கேட்டான். “அங்கர் களம்பட்டார்! கதிர்மைந்தர் விண்ணெழுந்தார்! கர்ணன் புகழ் கொண்டார்! வெல்க அங்கம்! வெல்க கர்ணன்! வெல்க அஸ்தினபுரி! வெல்க அமுதகலக்கொடி!” அவன் அம்முரசொலியை பலமுறை கேட்டான். பின்னரே அவை சொற்களாயின. அச்செய்தி அவனுக்கு நிறைவை அளித்தது. அவன் இன்னும் சாகவில்லை, அங்கே நிகழ்வனவற்றுடன் உள்ளம் தொடர்புகொள்ளமுடிகிறது. நான் இன்னமும் இருக்கிறேன் என்றபடி அவன் நின்றான். அது நிகழ்ந்துவிட்டிருக்கிறது. இன்று காலை அதன்பொருட்டே புலர்ந்தது. அந்தி சரிகையில் அங்கர் களம்பட்டிருப்பார். இதை எவ்வாறோ இன்று காலையிலேயே உணர்ந்திருந்தேன். ஒவ்வொரு வாள் சுழற்றலாக, ஒவ்வொரு அம்பாக, ஒவ்வொரு காலடியாக, ஒவ்வொரு சொல்சொல்லாக அதை நோக்கித்தான் வந்துகொண்டிருந்தேன்.

கிருதவர்மன் தண்ணீர் எனும் எண்ணத்தை முதலில் அடைந்தான். பின்னர் விடாய் எழுந்தது. பின் உடலெங்கும் பற்றிக்கொண்ட வெம்மையை உணர்ந்தான். ஒருகணமும் பொறுக்காதென்று உடல் துடிக்கத்தொடங்கியது. நாக்கு பழைய தோற்கிழிசல் என வாய்க்குள் உலர்ந்து ஒட்டியிருந்தது. தொண்டை மணலிறங்கியதுபோல் வறண்டிருக்க நெஞ்சுக்குள் எரிந்தெரிந்து விடாய் சுழித்தது. விழியோட்டி நோக்கிய எத்தொலைவிலும் நீர் இருப்பதுபோல் தெரியவில்லை. முகில்கணங்கள் உடைத்து பொழிந்தால் நீர் வரக்கூடும். இக்களத்தில் நீர்மை என எஞ்சியிருப்பது குருதி மட்டுமே. குருதியை அருந்துவது அவனுக்கு சில நாட்களாகவே பழகிவிட்டிருந்தது. களத்தில் விடாய் தீர்க்க யானை துதிக்கையைக்கூட வெட்டி குருதி அருந்தியிருக்கிறான்.

ஆனால் இங்கு அனைத்து உடல்களையும் அனல் உண்டுவிட்டிருக்கிறது. உடல்களிலிருந்து நீரையே உறிஞ்சி குடித்து நின்றிருக்கிறது அனல். அனல். அனல் என்பது அழியா விடாயின் ஒளிவடிவு மட்டுமே. இந்தக் களத்தில் எழுந்த அனல் எது? இப்புவியிலுள்ள அனைத்து நீர்மைகளையும் உறிஞ்சி அழிப்பது. வடவை. ஏழ்பெருங்கடல்களை அது ஒரே மூச்சில் உறிஞ்சி உண்ணும் என்பார்கள். நீர் மறைகையில் புவி கருகி மெல்லிய சாம்பல் உருண்டையாகி சுழலும். வெறுமையின் விரல்பட்டு உடைந்து புழுதி என்றாகி கடுவெளியில் மறையும். நின்று சுழன்று நோக்கியபோது வடவை எழுந்த களம் புகைக்குள் வெடித்து வெடித்து எரிந்துகொண்டிருக்கும் தீக்கொழுந்துகளாக கண்ணில் பட்டது. ருத்ர தாண்டவ நிலம்.

களமெங்கும் பலநூறு அனலெரிவுகள் இருந்தமையால் எங்கும் விளக்குகள் கொளுத்தப்படவில்லை. பந்தங்கள்கூட இல்லை. காவல்மாடங்கள்கூட இருண்டிருந்தன. எஞ்சியவர்கள் ஆங்காங்கே விழுந்துவிட்டிருப்பார்கள். எந்தப் பணிக்கும் இங்கு எவரும் இருக்கவில்லை போலும். விடாய் அவனை துரத்த மீண்டும் தன் முழு விசையையும் திரட்டி உந்தி அவன் கௌரவப் படைத்திரளை நோக்கி சென்றான். அங்கர் வீழ்ந்ததை மீளமீள முரசு அறிவித்துக்கொண்டிருந்தது. ஒருவேளை துரியோதனனும் இறந்திருக்கக்கூடும். இல்லை. அவ்வாறெனில் முரசு அதையே முதலில் கூறும். அவன் அப்போது துரியோதனனை பார்க்க விழைந்தான். பின்னர் அனைத்து விழைவுகளையும் இழந்து நீர் நீர் என உளம் தவிக்கலானான்.

கிருதவர்மன் தொலைவில் புரவியில் சென்றுகொண்டிருந்த ஒரு படைவீரனை கண்டான். அனலெழுகையில் சிவந்து அவன்

இருளுக்குள் எழுந்தணைந்தான். இரு கைகளையும் தூக்கி பெருங்குரலெடுத்து அவனை அழைத்தான். அவன் கடந்து சென்ற பின்னர்தான் தன் குரல் வெளியில் எழவில்லை என்று உணர்ந்தான். மீண்டும் தான் உயிருடன்தான் இருக்கிறோமா எனும் அச்சத்தை அடைந்தான். குனிந்து கீழே கிடந்த ஈட்டி ஒன்றை எடுத்து முழு விசையுடன் குதிரை வீரனை நோக்கி வீசினான். அது சென்று தைத்து நின்றதைக் கண்டபோது உள்ளம் உவகை கொண்டு எழுந்தது. உயிருடன் தான் இருக்கிறோம். அந்த ஈட்டி மண்ணிலிருந்து எழ இயல்கிறது. மண்ணில் மீண்டும் தைக்க இயல்கிறது.

அருகே ஈட்டி வந்து தைக்க புரவி திகைத்து திரும்பியது. வீரன் அவனைப் பார்த்து நடுங்குவது தெரிந்தது. "அருகே வா! யாரங்கே? அருகே வா!" என்று கிருதவர்மன் கூவினான். ஆனால் புரவிவீரன் குதிரையைத் தட்டி விரைந்து அகன்று சென்றான். கிருதவர்மன் காலடிகளை தூக்கி வைத்து கீழே கிடந்த பிறிதொரு வேலை எடுத்து ஊன்றுகோலாக்கி விரைந்து நடந்து தைத்து நின்ற தன் ஈட்டியை சென்று அடைந்தான். அதைப் பற்றியபடி நின்று மூச்சுவாங்கியபோது சென்று மறைந்த வீரன் திரும்பி வருவதைப் பார்த்தான். தொலைவில் எச்சரிக்கையுடன் நின்று அவன் புரவியிலிருந்து கீழிறங்கினான். உரத்த குரலில் "யார்?" என்றான்.

"அறிவிலி, நான் யாதவனாகிய கிருதவர்மன்" என்றான். அவன் குரலை அவன் அடையாளம் கண்டான். ஆனால் மேலும் குழம்பியபடி "யாதவரே, தாங்களா?" என்றான். "ஆம், நான் இங்கே விழுந்துவிட்டிருந்தேன்" என்றான் கிருதவர்மன். "ஆனால்..." என்றபடி அவன் மேலும் அருகே வந்தான். "இல்லை, தங்கள் குரல் அல்ல அது. உங்கள் உருவுமல்ல"

என்றான். "நான்தான். என்னை நன்கு பார்... நான்தான்" என்று கிருதவர்மன் சொன்னான். "அனல்பட்டுவிட்டேன். ஆகவே உருமாறிவிட்டிருக்கிறது." அவன் "தாங்கள் இறந்துவிட்டீர்கள் என்று முரசறிவிக்கப்பட்டது" என்றான். "அதை நான் கேட்கவில்லை. எரியில் சிக்கிக்கொண்டேன். உடல் வெந்திருக்கிறேன். உடனே எனக்கு நீர் வேண்டும்" என்று கிருதவர்மன் சொன்னான். வீரன் மேலும் ஐயத்துடன் அருகே வந்து "தாங்கள் முற்றாக மாறிவிட்டிருக்கிறீர்கள். கருகி தசையுருகி மானுடரா என ஐயமெழும்படி..." என்றான்.

கிருதவர்மன் "நீர் வேண்டும். குடிக்க நீர் வேண்டும்" என்றான். அவன் மீண்டும் "தாங்களேதானா?" என்றான். கிருதவர்மன் "ஏன், என் உருவில் இருள்தெய்வம் ஏதேனும் வந்துவிட்டதோ என்று ஐயம் கொள்கிறாயா?" என்று கேட்டான். அலைபோல் அச்சம் அப்படைவீரனின் விழிகளில் வந்து சென்றது. அவன் மீண்டும் அருகே வந்தான். சற்று அப்பால் எரிந்து எழுந்த கொழுப்பின் நீலச் சுவாலை நோக்கி தன் முகத்தை திருப்பிய கிருதவர்மன் "நோக்குக, நானேதான்!" என்றான். "அணுகி நோக்குகையில் முற்றிலும் வேறொருவராக இருக்கிறீர்கள், யாதவரே. உங்கள் உரு உருகி அழிந்துவிட்டது" என்றான் வீரன்.

"உன்னிடம் நீர் இருக்கிறதா?" என்று கிருதவர்மன் சீற்றத்துடன் உரக்க கேட்டான். "ஆம், உள்ளது" என்றான் வீரன். "கொடு" என்றான் கிருதவர்மன். அவன் புரவியிலிருந்து நீர்க்குடுவையைக் கொண்டுவந்து கொடுத்தான். "இது புளித்த நீர். நல்லுணவும் கூட..." என்றான். கிருதவர்மன் இரு கைகளாலும் அதைப்பற்றி அருந்த முற்பட்டபோது கைகள் நடுங்கின. தள்ளாடி தான் ஊன்றியிருந்த ஈட்டியிலேயே சாய்ந்தான். அவனைத் தொட்டு பிடிக்க வந்த வீரன் திகைத்து

கைகளை பின்னிழுத்துக்கொண்டான். "உங்கள் உடலெங்கும் தோல் வெந்து உரிந்திருக்கிறது" என்றான். "ஆம்" என்றபின் கிருதவர்மன் முழுக் குடுவையையும் கவிழ்த்து நீரை இறுதிச்சொட்டுவரை அருந்தி முடித்தான்.

குளிர்ந்து உள்ளிறங்கிய புளித்த நீர் அனல்களை அணைத்தபடி செல்வதை உணரமுடிந்தது. உடலின் உள்வழிகளில் எங்கும் குமிழிகள் வெடித்து வெம்மை தணியத்தொடங்கியது. அவன் குடுவையைத் திரும்ப நீட்டியபடி "என் உடலில் இருக்கும் கொழுப்பு இந்த அனலில் பற்றிக்கொள்ளுமோ என்று ஐயம் எழுகிறது" என்றான். அந்தப் பகடி புரியாமல் "யாதவரே!" என்று வீரன் அழைத்தான். "என்னை அஸ்வத்தாமனிடம் அழைத்துச் செல்" என்றான் கிருதவர்மன். "தாங்கள் புரவியில் ஏறிக்கொள்ளுங்கள்" என்றான். "புரவியில் என்னால் அமர முடியாது. என் உடல் வெந்திருக்கிறது. தொடைத்தசை கிழிந்து விடும்" என்ற கிருதவர்மன் "புரவியை பற்றிக்கொண்டு நடந்து வருகிறேன்" என்றான்.

"ஆம், வருக!" என்று அவனை அழைத்துச்சென்றான் வீரன். புரவி உடல் விதிர்த்தபடி அவனை தாங்கிக்கொண்டது. மறுபக்கம் புரவியின் கடிவாளத்தை பற்றியபடி நடந்த வீரன் "பேரழிவு, யாதவரே! இதுவரை இப்புவியில் எங்கும் காணாத பேரழிவு! இருபுறத்திலிருந்தும் தெய்வங்களும் அஞ்சும் அம்புகளை எடுத்தனர். விண்ணையும் மண்ணையும் அனலால் நிறைத்தனர். இக்களத்திலுள்ள அனைத்து நீர்களையும் பற்றி உறிஞ்சி அழித்துவிட்டது எழுந்த நெருப்பு" என்றான். புரவி தயங்கி நின்று செருக்கடித்தது. "என்ன? என்ன?" என அவன் அதன் கழுத்தை தட்டினான். கிருதவர்மன் "அது என்னை ஐயுறுகிறது. என் உடலில் மானுட மணம் எழவில்லை என

எண்ணுகிறது" என்றான். புன்னகைத்து "என்னை சடலமென கருதுகிறது... சடலத்தை ஏற்றிக்கொள்ள புரவிகள் விழைவதில்லை" என்றான்.

வீரன் "அதற்கு எப்படி தெரிய வைப்பது?" என்றான். "ஏன் தெரிய வைக்கவேண்டும்?" என்றான் கிருதவர்மன். "உனக்கே நான் சடலம் அல்ல என்று உறுதி இருக்கிறதா என்ன?" வீரன் திகைத்து நின்றுவிட்டான். கிருதவர்மன் மீண்டும் நகைத்து "அஞ்சாதே. சடலத்திற்குள் நான் உயிருடன் இருக்கிறேன்" என்றான். வீரன் நிலைமீண்டு "இங்கே அனைவருமே அரைச்சடலங்கள்தான். எல்லைக்கு அப்பாலிருந்தமையால் நான் உடலுடன் எஞ்சியிருக்கிறேன்" என்றான். "இன்று நிகழ்ந்தது போரே அல்ல. இருவருமே அனலம்புகளை எடுத்தனர். அனலுக்கு இருதரப்புமில்லை. ஒன்றையொன்று தழுவி ஒன்றையொன்று உண்டு மேலெழுந்தது பேரனல்... அனலை இனி என்னால் அடுப்பில்கூட அச்சமில்லாது நோக்கவியலாது" என்றான்.

"அரசர் என்ன செய்கிறார்?" என்றான் கிருதவர்மன். "அறியேன். நான் நெடுந்தொலைவில் இருந்தேன். கிருபரின் படையைச் சேர்ந்தவன்" என்று வீரன் சொன்னான். எதிரில் புரவியில் மூவர் வருவது தெரிந்தது. "உத்தரபாஞ்சாலர் வருகிறார்" என்று வீரன் சொன்னான். "என்னை அவருக்கு கூறுக!" என்று கிருதவர்மன் சொன்னான். "என்னை அவர் அடையாளம் கண்டுகொள்ள வாய்ப்பில்லை. என் குரலும் எழாது." அதற்குள் புரவி மேலிருந்த அஸ்வத்தாமன் கிருதவர்மனை பார்த்தான். ஒருகணம் திகைத்தபின் புரவியை காலால் தூண்டி விரைந்து அருகில் அணைந்து "யாதவரே, தாங்களா?" என்றான். "நானேதான்" என்று கிருதவர்மன் சொன்னான். "தாங்கள்

எரிபட்டீர்கள் என்று முரசுகள் அறைந்தன. உங்கள் உடலைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான். "நான் இதோ இருக்கிறேன். என்னை அவர்கள் கொண்டுசென்று சிதையேற்றிவிடப்போகிறார்கள்" என்றான் கிருதவர்மன்.

"என்ன ஆயிற்று?" என்றான் அஸ்வத்தாமன். "ஆணிலியால் வெல்லப்பட்டேன். அவனிடமும் இருந்தது அனலம்பு. எரிபட்டு வெந்து நான் களமுகப்பிலிருந்து பின்னடைந்தேன்" என்று கிருதவர்மன் சொன்னான். அஸ்வத்தாமன் அவன் உடலை நோக்கியபின் "வெந்து கருகியிருக்கிறீர்கள். தாங்கள் படைப் பின்னணிக்குச் சென்று ஓய்வெடுங்கள். இங்கு மருத்துவர்கள் எவரும் இல்லை. மருத்துவநிலைகளும் ஒழிந்துவிட்டன. சில நூறு வீரர்களே இருதரப்பிலும் எஞ்சியிருக்கிறார்கள்" என்றான். கிருதவர்மன் "போர் முடிந்துவிட்டதா?" என்று கேட்டான். அஸ்வத்தாமன் "போரை நிறுத்திக்கொள்வதே சிறந்தது என்று பேசத்தான் சென்று கொண்டிருக்கிறேன். அரசரிடம் சொல்லியாகவேண்டும். இங்கே இனி படைகளே இல்லை. போரிட நினைத்தாலும் வழியில்லை" என்றான்.

"அரசரிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். இங்கே நிகழ்ந்ததை நினைவுகூர்ந்து அஞ்சி அலறுவதற்கேனும் சிலர் எஞ்சியிருக்கவேண்டும்" என்றான் கிருதவர்மன். அஸ்வத்தாமன் அந்த நகையாட்டை புரிந்துகொள்ளாமல் "அரசர் அங்கர் களம்பட்டார் எனும் செய்தி சென்றடைந்தபோது அக்கணமே வில் தாழ்த்தி தேரில் அமர்ந்தார். ஒரு சொல்லும் உரைக்கவில்லை. ஒரு சொட்டு விழிநீராவது உதிருமென்று எதிர்பார்த்தார்கள். தேரில் கற்சிலையென அமர்ந்திருந்தார். நல்லூழாக உடனே அந்தி தெரிந்துவிட்டதென முரசுகள் எழுந்தன. படைகள் திரும்பத்தொடங்கின. தேரைத் திருப்பி

ஓட்டிக்கொண்டு படைக்குப் பின் சென்றார்கள். தேரில் வெறுமனே நோக்கியபடி அமர்ந்திருந்தார்" என்றான்.

"அங்கே படை மிகச் சிறிதே எஞ்சியிருக்கிறது. சில கூடாரங்கள் எரியாமலுள்ளன. களஞ்சியங்களிலும் இரண்டு மிஞ்சிவிட்டன. யானைகள், குதிரைகள், அத்திரிகள் எல்லாமே ஒருசிலதான் உள்ளன. ஆனால் தன்னைச் சூழ்ந்து வழக்கமான பெரும்படை இருப்பதுபோல் அரசர் அங்கே அமர்ந்திருக்கிறார்" என்றான் அஸ்வத்தாமன். "நான் சென்று அவரிடம் பேச வேண்டும். இதற்குப் பின் செய்யவேண்டியதென்ன என்பதை அவர்தான் முடிவெடுக்க வேண்டும்." கிருதவர்மன் "சல்யர் எங்கே?" என்றான். அஸ்வத்தாமன் அவனை கூர்ந்து நோக்கி ஒருகணம் நின்றபின் "ஏன்?" என்றான். "தோன்றியது" என்றான் கிருதவர்மன். "அவர் அங்கரை பாதியிலேயே கைவிட்டுவிட்டு களம்நீங்கினார். களத்திலிருந்து காட்டுக்குள் சென்றுவிட்டார். எல்லைக்காவலர் பார்த்திருக்கிறார்கள். இப்போது எங்குளார் என தெரியவில்லை."

கிருதவர்மன் "நன்று, நானும் உங்களுடன் வருகிறேன்" என்றான். "அதற்குள் இன்னொரு பெரும்பணி வந்து சேர்ந்தது. இங்கு இருதரப்பிலும் களம்வீழ்ந்த உடல்களை எரிக்கவும் புதைக்கவும் எவருமில்லை. சிதைக்காவலர்கள் அனைவருமே போரிட வந்துவிட்டார்கள். பெரும்பாலானவர்கள் இறந்தும்விட்டார்கள். அரசகுடியினருக்குரிய இடுகாடுகளும் சுடுகாடுகளும் மட்டுமே இன்று இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் என்றுமிலாதபடி குருக்ஷேத்ரக் களம் மானுட உடல்களால் நிரம்பிக்கிடக்கிறது. புரவிகளும் யானைகளும் உடன் கலந்து வெந்து குவிந்த ஊன் பரப்பாக தெரிகிறது. உடல்களைப் பிரித்து எடுத்துக்கொண்டு செல்வதற்கு இன்று எவ்வழியும் இல்லை. முதல் நாள் இங்கு

சுடலைக்காவல் என்று இருந்த பணியாளர்கள் அனைவரும் இருந்தால்கூட இப்பணியை செய்து முடிக்க இயலாது. என்னிடம் வந்து சொன்னார்கள்" என்றான்.

"என்ன செய்வது என்று தெரியவில்லை. மறுபுறமும் மொத்தப் படையினரையும் சுடலைப்பணிக்கு செல்லும்படி ஆணையிட்டிருக்கிறார்கள். பத்து பத்து பேராகத் திரண்டு அவர்களும் களம் சென்றுகொண்டிருக்கிறார்கள்." அஸ்வத்தாமன் மறுபக்கம் பார்த்து "அவர்கள் களம் வந்துவிட்டார்கள். நமது படைகளும் களம் சென்றுகொண்டிருக்கின்றன. அங்கு நின்று ஆணையிட்டு நடத்த வேண்டியிருக்கிறது. அதற்கும் இங்கு தலைவர்கள் எவருமில்லை" என்றான்.

"நான் சென்று நடத்துகிறேன்" என்று கிருதவர்மன் சொன்னான். "தங்களால் நிற்கக்கூட இயலவில்லை" என்றான் அஸ்வத்தாமன். "நீங்கள் சென்று அரசரை பாருங்கள். நான் இப்பணியை முடிக்கிறேன்" என்று கிருதவர்மன் கூறினான். ஒருகணம் தயங்கியபின் "நீங்கள்..." என அஸ்வத்தாமன் சொல்ல "இத்தருணத்தில்தான் அரசரிடம் பேசவேண்டும். நாளை அவர் உள்ளம் பிறிதொன்றாகிவிடக்கூடும். செல்க, இக்களத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்!" என்று கிருதவர்மன் கூறினான்.

இருட்கனி - 63

கிருதவர்மன் படைவீரனின் புரவியைப் பற்றியபடி மெல்ல நடந்து படைமுகப்பை அடைந்தான். முதலில் நின்று நின்று

மூச்சிளைப்பு ஆற்றி மீண்டும் நடந்தான். நடக்க நடக்க அந்த நடைக்கு உடல் பழகி அவ்வண்ணமே விரைவுகொள்ள முடிந்தது. ஒருடலிலிருந்து பிறிதொரு உடலுக்கு குடிபெயர்ந்துவிட்டதுபோல. அப்புதிய உடலின் எல்லைகளையும் வாய்ப்புகளையும் அகத்திலிருந்து அவன் ஒவ்வொன்றாக தொட்டுத் தொட்டு அறிந்துகொண்டிருந்தான். எந்நிலையிலும் அறிதல் அளிக்கும் உவகையை கிருதவர்மன் வியப்புடன் எண்ணிக்கொண்டான்.

படைமுகப்பில் கௌரவப் படைகளும் பாண்டவப் படைகளும் பத்து பத்து பேர் கொண்ட குழுக்களாக வந்து இரு எல்லைகளிலும் நீண்டு அணிவகுத்தன. இரு சாராருக்கும் நடுவே நீர் வற்றிய ஏரியின் சேற்றுப்படுகைபோல் கிடந்தது குருக்ஷேத்ரம். குருதிநிலம். இருமருங்கும் கூடியிருந்த வீரர்கள் ஒருவகையில் கிளர்ச்சி அடைந்திருந்தனர். அந்தக் காட்சியை அவர்கள் அப்போதுதான் முழுமையாக பார்த்தார்கள். அதற்கு முன் அதற்குள் இருந்தார்கள். விலகிய பின் நோக்கியபோது அந்தக் காட்சியின் அரிய இயல்பே அவர்களை உளமெழச் செய்தது. "உடல்கள் உருகிவிட்டன" என்று ஒருவன் சொன்னான். "யானையின் விலா எலும்புக்கூடு. தோணியின் சட்டக்கூடுபோல் தெரிகிறது அது" என்றது ஒரு குரல்.

"பாதி சிதையேற்றம் இங்கேயே நிகழ்ந்துவிட்டிருக்கிறது" என்றது இன்னொரு குரல். நாய்க்கூட்டங்கள்போல ஊளையிட்டு முட்டிமோதினர். முன்னால் சென்றவர்கள் அஞ்சியவர்களாக பின்னடைய பின்னிருந்தவர்கள் முண்டியடித்து முன்னால் சென்றனர். கூச்சல்களுக்கு நடுவே சிரிப்பொலிகளும் கேட்டன. "என்ன இது? அய்யோ!" ஒரு குரல் "மகாருத்ரனுக்கு ஊன் சமைத்து வைக்கப்பட்டுள்ளது... படையல்

முடிந்தபின் உனக்கும் இறையன்னம் கிடைக்கும்" என்றது. ஊளையிட்ட சிரிப்பொலிகள். "நான் ருத்ரனை இக்களத்தில் கண்டேன். மெய்யாகவே கண்டேன்." இன்னொருவன் "ஆம். நானும் கண்டேன். எரிவடிவில் ஒரு முகம் எழுந்தது" என்றான்.

"உலோகங்கள் அனைத்தும் வண்ணம் மாறிவிட்டிருக்கின்றன. பித்தளை பொன்னென மின்னுகிறது." ஒருவன் "பொன்னாகிவிட்டதோ என்னவோ?" என்றான். "உண்மையாகவா?" என்றான் இன்னொருவன். "வேறென்ன? இது ஒரு வேதிபுடம். இங்கே மானுடர் தேவர்களாக மாற்றப்படுகிறார்கள். எனில் உலோகம் பொன்னாகாதா?" அவன் மீண்டும் "மெய்யா?" என்றான். "மெய், சென்று எடுத்துக்கொள்." அவன் ஐயத்துடன் "இல்லை" என்றான். "இளிவரல் செய்கிறீர்கள்." ஒருவன் "அவன் யாரடா? அடேய், இங்கே நிகழ்வதனைத்தும் இளிவரல் மட்டுமே" என்றான். எதிர்பாராதபடி சிரிப்புகள் நின்று அனைவரும் அமைதியடைந்தனர்.

கிருதவர்மன் கௌரவப் படைமுகப்பில் வந்து நின்றதும் அவனுடன் வந்த படைத்தலைவன் கைதூக்கி உரத்த குரலில் "ஆணை! யாதவர் கிருதவர்மன் இங்கு செயல் பகுக்க வந்துளார்! ஆணை! அவர் ஆணைகளை தலைக்கொள்க!" என்றான். பலநூறு கண்கள் திரும்பி தன்னைப் பார்ப்பதை கிருதவர்மன் உணர்ந்தான். அவர்கள் அனைவருமே ஒருகணத்தில் திகைப்பதனால் ஏற்படும் மூச்சொலி எழுந்தது. ஒரு படையே பெருமூச்சுவிட முடியும் என்பதை அவன் உணர்ந்தான். இந்த உடலுக்குள் இருந்து அறிபவை அனைத்தும் விந்தையாக உள்ளன. இங்கிருந்து எழுந்து முற்றிலும் புதிய ஒரு உலகத்திற்கு செல்லவிருக்கிறேன் போலும். இதுவரை

அறிந்த அனைத்தையும் மீண்டும் அறிய வேண்டும். புதிய உறவுகளும் உணர்வுகளும் உருவாகி வரவேண்டும். நெருப்பு ஒரு பெரும் கருப்பை. அதிலிருந்து பிறந்து எழுந்திருக்கிறேன். இங்கு சிதை புகுந்து அப்பால் பிறிதொரு உலகுக்கு எழுபவரும் இவ்வண்ணமே உணர்வார்கள் போலும். ஒருடலில் இன்னொரு முறை பிறந்தெழுவதைப்போல் விந்தையான அறிதல் பிறிதில்லை.

படைத்தலைவன் ஒருவன் அவனை நோக்கி வந்து புரவியிலிருந்து இறங்கி தலைவணங்கி அவன் முகத்தை ஒருகணம் பார்த்தபின் விழிதாழ்த்தி "வணங்குகிறேன், யாதவரே. என் பெயர் மிருண்மயன். நான் உத்தரபாஞ்சாலத்தின் படைப்பிரிவுகளை நடத்துகிறேன். இங்கு எங்களிடம் இந்த உடல்களை பிரித்து கொண்டு சென்று சிதையேற்றும்படி எங்கள் அரசர் ஆணையிட்டார். இவ்வண்ணம் இருக்கும் என்று நாங்கள் சற்றும் எண்ணவில்லை" என்றான். "இந்த மையப் படைக்களத்திலிருந்து எவருமே உயிருடன் மீளவில்லை. ஒவ்வொரு போருக்குப் பின்னும் மீள இயலாத உடற்குறை அடைந்தவர்களை கொல்லும் பொறுப்பு சுடலைக்காவலருக்கு உண்டு. இப்போது அதுவும் தேவைப்படவில்லை. இருப்பவர்கள் எவருமில்லை. நோக்கிவிட்டேன், உயிருடன் எஞ்சுபவர்கள் அல்லது சற்றேனும் அசைவோ குரலோ உள்ள ஒருவரும் இல்லை."

கிருதவர்மன் "ஒருவரேனும் எஞ்சக்கூடும்..." என்றான். "ஆனால் இங்கிருந்து நோக்கும்போது அப்படி தெரியவில்லை" என்றான் மிருண்மயன். "இங்கிருப்போர் அனைவரும் இக்களத்தின் தெற்கோ வடக்கோ எல்லைகளில் நின்று போரிட்டவர்கள். இவர்களிலும் பெரும்பாலானவர்கள் எரியால்

புண்பட்டிருக்கிறார்கள். இன்றிரவு எவருக்குமே உணவில்லை, தங்க இடமும் இல்லை. மழை விழுமெனில் அனைவருமே வெற்றுவானுக்குக் கீழ் நின்று அதை ஏற்கவேண்டியிருக்கும்" என்றான். "ஆம், ஆனால் நாம் இக்களத்தை எவ்வண்ணமும் தூய்மை செய்தே ஆகவேண்டும்" என்று கிருதவர்மன் சொன்னான். "நாளை போர் நிகழுமா?" என்று மிருண்மயன் கேட்டான். "நிகழக்கூடும்" என்றான் கிருதவர்மன். "இன்னொரு இடத்தில் நடத்திக்கொள்ளலாமே. இங்கே இருபுறமும் சேர்த்து ஆயிரம்பேர்தான் தேறுவார்கள்." கிருதவர்மன் புன்னகையுடன் "அதெப்படி? குருக்ஷேத்ரம் அறநிலம். இங்குதான் பேரழிவு நடந்தாகவேண்டும்" என்றான்.

மிருண்மயன் அதை உள்வாங்காமல் "எப்படி தூய்மை செய்வது? வெந்த உடல்கள் மிதிபட்டும் தேர்களால் நசுக்கப்பட்டும் ஒன்று கலந்து ஊன்கூழாக மாறியிருக்கின்றன. மானுடரைப் பிரித்தறிவதே இயலாதபடி யானைகளும் புரவிகளும் கூட கலந்து கிடக்கின்றன. எவரை எரியூட்டுவது, எவரை நிலத்தில் அமிழ்த்துவது என்று எவ்வாறு முடிவு செய்ய இயலும்?" என்றான். கிருதவர்மன் "மறுபுறம் இருப்பவர்களை நடத்துபவர் எவர்?" என்றான். "அங்கு யாதவராகிய சாத்யகி முன்நின்றிருக்கிறார்" என்றான் மிருண்மயன். "அவரை இங்கு அழைத்து வருக!" என்று கிருதவர்மன் ஆணையிட்டான். மிருண்மயன் முகப்புக்குச் சென்று கொம்பொலி எழுப்பி மறுபுறம் தலைமைதாங்கிய சாத்யகியை முகப்புக்கு அழைத்தான்.

அங்கிருந்த பாண்டவப் படைத்திரளும் தயங்கி குழம்பிக்கொண்டுதான் இருந்தது. சற்று நேரத்தில் மறுபக்கம் முகப்பில் சாத்யகி வந்து நின்றான். கிருதவர்மன் உரத்த

குரலில் "யுயுதானரே, தாங்களா?" என்றான். அவன் குரலை அறிவிப்புப் பயிற்சி பெற்ற எழுவர் சேர்ந்து ஒற்றைக்குரலில் மீண்டும் ஒருமுறை உரக்க கூவினர். களத்திற்கு அப்பால் நின்ற சாத்யகியின் மறுமொழி அவ்வண்ணம் எழுவரின் தொகைக்குரலாக "ஆம், நானேதான்" என ஒலித்தது. "என்ன செய்வது இந்த ஊன்பரப்பை? இதை நாம் பிரித்து எடுத்து சிதையேற்றுவது இயலாது. சிதை எரிக்கும் விறகும் அங்கில்லை. இவற்றை கொண்டு செல்ல வண்டிகளும் இல்லை. ஒவ்வொருவராக தொட்டு எடுக்கும் அளவுக்கு நம்மிடம் ஆட்களுமில்லை" என்றான்.

"ஆம், அதைத்தான் எண்ணிக்கொண்டிருக்கிறோம்" என்று சாத்யகி சொன்னான் . கிருதவர்மன் உரக்க நகைத்து "இக்களத்தை ஒரு பெரும்பாயென அப்படியே இவர்களுடன் சுருட்டி எடுத்துவிட்டால் நன்று" என்றான். சாத்யகி அந்த எண்ணியிராப் பொழுதில் எழுந்த இளிவரலை எதிர்கொள்ள முடியாமல் நின்றான். கிருதவர்மன் மேலும் உரக்க நகைத்து "சென்று சொல்லுங்கள் உங்கள் இளைய யாதவரிடம். அவர் விண்ணிலிருந்து மண்ணிறங்கி வந்த ஆழியேந்திய இறைவன் அல்லவா? அவர் ஆடலில் இறுதியாக இதுவும் அமையட்டும்" என்றான். "இளிவரல் வேண்டாம். என்ன செய்வது என்று எண்ணுவோம்" என்று சாத்யகி சொன்னான். "இது இளிவரலல்ல, யுயுதானரே. விண்ணமைந்த பெருமாளின் துணைவியரில் ஒருத்தியல்லவா புவிமகள்? அவர் ஆணையிட்டால் அவள் பணியமாட்டாளா என்ன?" என்றான்.

சாத்யகி எரிச்சலுடன் தன் புரவியைத் திருப்ப "நில்லுங்கள். நன்று, இனி இளிவரல் இல்லை. நிகழ்வதை எண்ணுவோம்" என்று கிருதவர்மன் சொன்னான். "சொல்லுங்கள்" என்றான்

சாத்யகி. அதற்குள் அந்த எழுவர்குரலே தன் தொண்டையிலிருந்து எழுவதைப்போல ஆகிவிட்டிருந்த விந்தையை கிருதவர்மன் உணர்ந்தான். "இந்தக் களத்தை பார்க்கையில் என் உடல் போலிருக்கிறது. வெந்து வழிந்திருக்கிறது. இதைப் பார்த்து நிற்பது எனக்கு நிறைவளிக்கிறது" என்றான் கிருதவர்மன். "என்ன செய்யவேண்டும்? அதை சொல்க!" என்றான் சாத்யகி. "எரியூட்டல் சிகண்டியின் பணி அல்லவா? அவர் என்ன செய்கிறார்?" என்று கிருதவர்மன் கேட்டான். "அவர் சலிப்புற்று அகன்றுவிட்டார்" என்று சாத்யகி சொன்னான். "என்ன செய்வது என்று கேட்டீர்களா?" என்றான் கிருதவர்மன். "ஆம், கேட்டேன். செய்வதற்கொன்றே உள்ளது, இந்த மொத்த உடல்களையும் இவ்வண்ணமே எரியூட்டிவிடுக என்றார்."

"ஆம், அதையே நானும் எண்ணினேன்" என்று கிருதவர்மன் சொன்னான். "என்ன சொல்கிறீர்கள்?" என்றான் சாத்யகி. "அது இயல்வதா என்ன?" கிருதவர்மன் "குருக்ஷேத்ரமே மாபெரும் சிதையென்று ஆகட்டும். இந்த அறநிலத்திற்கு பற்பல பெயர்கள் உள்ளன. இனி பெருஞ்சிதையெனும் நற்பெயரும் இணைந்துகொள்ளட்டும்" என்றான். சாத்யகி ஒன்றும் சொல்லவில்லை. "என்ன சொல்கிறீர்கள்?" என்றான் கிருதவர்மன். "நீங்கள் சொன்னதைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறேன். உண்மையில் அது ஒன்றே இயற்றுவதற்குரியது என்று தோன்றுகிறது" என்றபின் "ஆனால் இவ்வளவு பெரிய பரப்பை எரிப்பதற்கான விறகு எங்குள்ளது?" என்றான்.

"இந்த உடல்கள் அனைத்திலும் எரி உறைகிறது. குருதி வடிவில், கொழுப்பு வடிவில். நீர்க்கனல், அன்னக்கனல். அதை

தழலெரியாக மாற்றுவதற்கு மட்டும் சற்றே விறகு தேவை. அங்குள்ள பலகைகளையும் விறகுகளையும் கொண்டு வாருங்கள். விட்டுவிட்டு அனலூட்டினால் குருக்ஷேத்ரமே பற்றிக்கொள்ளும். சிற்றெரிக்குதான் சில அன்னங்கள் இரையாவதில்லை. பேரெரிக்கு பாறைகளே பற்றிக்கொள்ளும் என்பார்கள்." சாத்யகி "ஆம், காட்டெரியில் அதை கண்டிருக்கிறேன். வேறு வழியில்லை" என்றான். "நான் சென்று ஆணைகளை பிறப்பிக்கிறேன். என் செயல்களை நோக்கி அதே ஆணைகளை நீங்களும் எழுப்புக!" என்று கிருதவர்மன் சொன்னான். "அவ்வாறே ஆகுக!" என்று சொல்லி சாத்யகி விலகிச்சென்றான்.

மிருண்மயன் "அங்கரின் மைந்தர்கள் களம்பட்டபோது அவர்களின் உடல்களை பின்னுக்கு இழுத்து எடுத்தனர். ஆனால் அந்த ஏவலர்களும் அனலில் வெந்தமைந்தனர். அவ்வுடல்கள் அங்கேயே உள்ளன" என்றான். "அவற்றை தனியாக நோக்கி எடுக்க இயலுமா?" என்றான் கிருதவர்மன். "கடினம்... அங்கரின் உடலை கொண்டுசென்றதே அரிதாக நிகழ்ந்த ஒன்று" என்றான் மிருண்மயன். "அவர்களும் பெருஞ்சிதையேறட்டும்" என்றான் கிருதவர்மன். "அங்கரின் தேர் அங்கே களத்தில் நின்றிருக்கிறது" என்று மிருண்மயன் சுட்டிக்காட்டினான். புகைக்கு அப்பால் ஒளியில் மின்னி மின்னி அணைந்துகொண்டிருந்தது கர்ணனின் பொற்தேர் என கிருதர்வர்மன் அப்போதுதான் உணர்ந்தான்.

"அதன் சகடம் பிலத்தில் ஆழ இறங்கியிருக்கிறது. ஏழு புரவிகள் முன்னிழுக்க ஏழு பின்னிருந்து உந்தினாலொழிய அதை எழுப்ப இயலாது. அங்கர் களம்பட்டதுமே அனைவரும் களத்தை உதறிவிட்டு பின்னடைந்தனர்." கிருதவர்மன் அந்தத்

தேரை நோக்கினான். பின்னர் "அதையும் சேர்த்தே எரிப்போம்... அதில் பொன் என இருப்பது அங்கேயே உருகி எஞ்சியிருக்கும்" என்றான். ஏதோ சொல்லவந்த பின் மிருண்மயன் "ஆம்" என்றான்.

கிருதவர்மன் திரும்பி படைவீரர்களிடம் "செல்க! இங்கு எங்கும் எஞ்சியிருக்கும் அனைத்து எரியும்பொருட்களையும் கொண்டுவருக!" என்றான். அவர்கள் நாற்புறமும் விலகினர். களத்திற்குள் இறங்கவேண்டியதில்லை என்பதே அவர்களை ஊக்கம் கொள்ளச் செய்தது. "எங்கிருந்து காற்று எழுகிறது?" என்றான் கிருதவர்மன். மிருண்மயன் "தென்கிழக்கிலிருந்து. ஆனால் ஈரத்துளிக்காற்று" என்றான். கிருதவர்மன் "எதுவானாலும் காற்று நன்று" என்றபின் "தென்கிழக்கு மூலையில் நான்கு இடங்களிலாக விறகுகளை குவித்து வையுங்கள். இடங்களை நான் சுட்டிக்காட்டுகிறேன். எரியெழுந்து ஒன்றுடன் ஒன்று கைகோத்துக்கொள்ளும்படி விறகுக்குவை அமையவேண்டும்" என்றான்.

"அங்கு கூலக்களஞ்சியங்கள் பற்றி எரிந்துகொண்டிருக்கின்றன. அங்கிருந்து கனலும் கூலங்களை அடுமனைக்கலங்களால் அள்ளி வருக. இந்த விறகுகளை நின்றெரிக்க கூலங்களால் மட்டுமே இயலும். அவை அணைவதில்லை. எரிக்காமல் அமைவதில்லை." அவன் ஆணைகள் கொம்பொலிகளாக எழத்தொடங்க சாத்யகி மறுபுறம் அதே ஆணைகளை பிறப்பித்தான். "என்னை சற்று பின்னணிக்கு கொண்டு செல்க! எழுவது பேரெரி என்பதை படைவீரர்களுக்கு கூறுங்கள். எரி எழத்தொடங்குகையில் முடிந்தவரை அகன்று நின்றிருக்க வேண்டும். எரிக்கு பசி மிகுதி. பசித்த பாம்புக்கு நிகரான ஈர்ப்பு வல்லமையும் உண்டு" என்று கிருதவர்மன் சொன்னான்.

அவன் புரவியைப் பற்றியபடி நடந்து பின்னடைந்து காற்று வீசும் திசைக்கு எதிர்த்திசையில் நின்றான். கௌரவப் படையினர் குருக்ஷேத்ரத்தின் பின்புறத்தில் கிடந்த தேர்களையும் பாதி எரிந்த பாதைப்பலகைகளையும் சுமந்து கொண்டு வந்து குருக்ஷேத்ரக் களத்தில் இட்டு எரிகளத்தில் குவித்தனர். "விரைவு! விரைவு!" என்று ஆணைகள் எழுந்துகொண்டிருந்தன. "நான்கு குவியல்கள் போதும். நான்கு அனல்கள்... ஐந்தாம் அனல் அந்நான்கின்மேல் எழவேண்டும்" என்றான் கிருதவர்மன். "ஐந்தெரி எழுந்தால் அதன் பின்னர் மழையோ காற்றோ அவற்றை அணைக்க இயலாதென்பார்கள்." மிருண்மயன் "அங்கர் ஐந்தெரி நடுவே தவம்செய்தவர் என்றார்கள்" என்றான். கிருதவர்மன் "ஆம், நான்கு எரிகளும் இக்களத்தில் எழுந்துவிட்டன. ஐந்தாம் எரியை நாம் வரவழைக்க இயலாது. நான்கு எரிகளும் வேண்டிக்கொண்டால் மட்டுமே அது விண்ணிலிருந்து இறங்கும்" என்றான்.

பாண்டவர் தரப்பிலிருந்தும் விறகுகள் வந்துகொண்டிருந்தன. இரு படையினரும் ஒருவரோடொருவர் கூவி அழைத்து ஆணைகளை இட்டனர். அச்செயலிலிருந்த புதுமை அவர்களை உவகை கொள்ள செய்தது. நகையாடியபடியும் வெறுமனே கூச்சலிட்டபடியும் அவர்கள் விறகுகளை சுமந்து வந்து குவித்தனர். அவை ஊன்களத்தின் நடுவே அமைந்தன. அங்கே விறகுகளை கொண்டுசெல்வதற்காக உடல்களை விலக்கி பாதை அமைத்தனர். விறகுகளை எறிந்து எறிந்து மேலே ஏற்றி குவைகளாக்கினர். இரண்டு ஆள் உயரமுள்ள நான்கு விறகுக்கோபுரங்கள் எழுந்ததை கிருதவர்மன் பார்த்துக்கொண்டிருந்தான். "எரியெழுக!" என அவன் ஆணையிட்டான். அடுமனைக்கலங்களில் அள்ளப்பட்ட கனலும் கூலம் கொண்டு வரப்பட்டது.

கிருதவர்மன் “இங்கே அந்தணர் எவரேனும் உள்ளனரா?” என்றான். “ஏன்?” என்றான் மிருண்மயன். “அவி குவிந்திருக்கிறது. வேதம் ஓதி அனலை எழுப்புதலே முறை” என்றான் கிருதவர்மன். மிருண்மயன் “என்ன சொல்கிறீர்கள்?” என்றான். “நான் சொல்வதை அவருக்கு கூறு” என்றான் கிருதவர்மன். அது உரக்க ஒலிக்க சாத்யகி “ஆம், நானும் அவ்வண்ணமே எண்ணினேன்” என்றான். “இங்கே அந்தணர் உள்ளனரா?” என்று அவன் கேட்க அந்த ஆணை கொம்பொலியாகப் பரவியது. “அந்தணர் இங்கே எப்படி இருக்கமுடியும்?” என்றான் மிருண்மயன். “அந்தணர் உளரா? வேதமறிந்த எவரேனும் உளரா?” என்று குரல்கள் எழுந்தன. “சுடலைப்பார்ப்பனர் இருக்கிறார்கள்” என்றான் ஒருவன். “அவர்கள் வேண்டியதில்லை. இது சிதையேற்றம் அல்ல, வேள்வி. வேள்வியறிந்த மங்கலப்பார்ப்பனரே வேண்டும்” என்று சாத்யகி சொன்னான். மிருண்மயன் “களத்திற்கு வருவது மங்கலவேதியர்க்கு விலக்கப்பட்டுள்ளது” என்றான்.

ஆனால் பாண்டவர் தரப்பிலிருந்து ஒருவன் “நான் வேளாப்பார்ப்பான். வேதம் அறிந்தவன்” என்றான். அவனை நோக்கி அத்தனை விழிகளும் சென்றன. அவன் பதினெட்டு அகவை கொண்ட இளைஞன். வெண்ணிற உடலில் முப்புரிநூல் இல்லாமல் வேலேந்தியிருந்தான். உடலின் வலப்பக்கம் அனல்பட்டு வெந்திருந்தது. ஒருவிழி பெரிய கொப்புளமாக மாறிவிட்டிருந்தது. அவனை கூர்ந்து நோக்கி “தாங்கள் என்ன வேதம், உத்தமரே?” என்றான் சாத்யகி. “அதர்வம்” என்று அவன் சொன்னான். “ஆனால் நால்வேதங்களும் எங்களுக்குரியவையே.” கிருதவர்மன் “உத்தமரே, தங்கள் பெயர் என்ன?” என்றான். “நான் கோசலன். என் பெயர் அமிர்தன்” என்று அவன் சொன்னான்.

“வேளாப்பார்ப்பனருக்கு வேதநெறிகள் இல்லை என அறிவேன். அவர்கள் போர்புரியலாமா?” என்றான் சாத்யகி. “மெய்யறிதலின் பொருட்டு எதையும் செய்யலாம் என்பதே வேளாப்பார்ப்பன நெறி” என்று அமிர்தன் சொன்னான்.

“என் ஆசிரியர் கௌதமகுடியைச் சேர்ந்தவரான சுமித்ரர். நான் என் குடியை உதறி அவருடன் சேர்ந்தேன். வேளாப்பார்ப்பன நெறியை ஏற்று மெய்மை நாடி ஒழுகினேன். கோசலன் எங்களுக்கு அமைத்த புறச்சேரியில் குடியிருந்தேன். போர் தொடங்கியபோது நான் ஆசிரியரிடம் ஒப்புகை பெற்று இங்கு வந்துசேர்ந்தேன்.” “ஏன்?” என்று சாத்யகி கேட்டான். “இதுவே இப்புவியில் நிகழும் மாபெரும் வேள்வி என என் ஆசிரியர் சொன்னார். நான் அதில் தேவர்கள் எழுவதை காணவிழைந்தேன்.” கிருதவர்மன் சிறிய ஏளனத்துடன் “கண்டீர்களா?” என்றான். “ஆம்” என்று அவன் சொன்னான். கிருதவர்மன் திகைத்து பின் அமைதியானான். அங்கிருந்த அனைவரும் அமைதியடைந்தார்கள்.

அமிர்தன் நான்கு விறகுக்குவைகளின் முன் அமர்ந்தான். “வேள்விக்குரிய நன்மங்கலங்கள் ஏதும் இங்கில்லை” என்றான் சாத்யகி. “தேவையில்லை” என்றபின் அவன் விறகுத்துண்டுகளை மட்டும் தன்முன் குவித்து வைத்தான். விழிமூடி ஒருகணம் அமர்ந்தபின் வேதம் ஓதத் தொடங்கினான்.

அனலோன் ஒளியின்மேல் முதல் கதிரென எழுந்தவன்.

ஜாதவேதனாக நம் நடுவே மீண்டும் பிறந்தான்.

மானுடர்களின் தோழன் பின்னர் நீரில் எழுந்தான்.

அழிவிலா அறிவில் பின்னர் எழுந்தான்.

ஒளிகொண்டிருக்கிறான், நம்மால் வாழ்த்தப்படுகிறான்.

அனலோனே நாங்கள் உன்னுடைய

மூன்று இடங்களையும் அறிகிறோம்.

மூன்று வடிவங்களையும் அறிகிறோம்.

நீ பரவியிருக்கும் பல இடங்களை அறிகிறோம்.

அறியவொண்ணாத உன் பெயரையும் அறிகிறோம்.

நீ பிறந்த முதலிடத்தையும் அறிகிறோம்

தென்கிழக்கிலிருந்து காற்று வீசும் திசைநோக்கி கூலக்கனல் விறகுக்குவைகளுக்கு அடியில் போடப்பட்டது. காற்றில் கனன்று அது விறகுகள் மேல் பாய்ந்தேறியது. சடசடத்து தழல் கொழுந்துகளாகி, செஞ்சிறகுகளாகி, வெங்குவைகளாகி, பொன்முகடு கொண்ட கோபுரங்களாக மாறி நின்றது.

மானுடர்களின் தோழன் சோமத்தை ஆள்பவன்

அனலோனே, வைஸ்வாநரனே

இதோ நீ முனிவர்களால் போற்றப்பட்டிருக்கிறாய்

நாங்கள் மாசற்ற விண்ணையும் மண்ணையும் அழைக்கிறோம்

தேவர்களே எங்களுக்கு செல்வங்களை அளியுங்கள்

எங்களுக்கு மைந்தர்களை அளியுங்கள்

முதல் அனற்குவையிலிருந்து ஒரு முகம் தெளிந்தெழுவதை கிருதவர்மன் கண்டான். "முகம்! முகம் தெளிந்தெழுகிறது!" என்று அவன் கூவினான். "முதலனல் அதோ எழுகிறது! முதலனல்!" அவன் அருகில் நின்றிருந்த மிருண்மயன் "யாதவரே!" என்றான். "கொன்றை மலர்வண்ணன்! ஜாதவேதன்!" பொன்னெரியும் ஒளியுடல்கொண்டிருந்தான். வலக்கையில் அமுதகலமும் இடக்கையில் வேள்விக்குரிய நெய்க்கரண்டியும் ஏந்தியிருந்தான். "ஒவ்வொரு அனலாக எழுகிறது! இதோ இரண்டாம் அனல்! செண்பக மலர்ச்செம்மையுடன் வஹ்னி! தர்ப்பையும் மின்படையும் கொண்ட தேவன்."

அவனைச் சூழ்ந்திருந்தவர்கள் திகைப்புடன் நோக்க அவன் உவகையுடன் கொந்தளித்தான். "காந்தள் வண்ணனாகிய கிரவ்யாதன்! சிதையிலெழும் நெருப்பு. மாளாப் பசிகொண்டவன். தூய்மை செய்பவன். விண்ணுக்கு ஊர்தியென்றாகும் செந்நிற பரி வடிவம் கொண்டவன்!" அவன் கைகூப்பி விழிநீர் வழிய நின்று நடுங்கினான். "வேங்கை மலர்வண்ணம் கொண்ட ருத்ரன். மான் மழுவேந்தியவன். புலித்தோலுடுத்து நடமாடுகிறான்." அவன் கைகளை விரித்து வெறியுடன் கூச்சலிட்டான் "எழுக ருத்ரன்! எழுக வடவை! எழுக ஊழிக்கனல்!" துள்ளித் தாவி ஆடத் தொடங்கினான்.

நான்கு அனல்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தன. எரி நீர்மை கொண்டதுபோல் நெளிந்தது. ஓடைகளென வழிந்தது. ஒவ்வொரு உடலாக தொட்டுத் தொட்டு பரவி சற்று நேரத்தில் குருக்ஷேத்ரம் முழுக்க விரிந்தது. எரியாலான ஏரி ஒன்றை அவர்கள் கண்டனர். அதன் மாபெரும் ஈர்ப்பில் விழி நட்டவர்களாக நோக்கி நின்றனர். "அகன்று செல்க! அதன் வெம்மையும் ஒளியும் ஈடற்றவை!" என்று மிருண்மயன்

ஆணையிட்டான். குருக்ஷேத்ரத்தில் அந்தி எழுந்ததுபோல் தோன்றியது. சூழ்ந்திருந்த அனைத்திலும் செவ்வொளி அலையடித்தது. வெம்மை அலையலையென்று வந்து தாக்க படைவீரர்கள் கூச்சலிட்டபடி அகன்று அகன்று சென்றனர்.

எரி எழுந்து வீச்சு கொள்ளும் தோறும் சடலங்கள் சருகுகளென பற்றிக்கொண்டன. எரி செந்நிறக் குஞ்சிமயிர் பறக்கும் புரவிகூட்டமென தாவிச்சென்றது. பின்னர் சிறகு கொண்டு செம்பருந்துத் திரள் என மாறி விண்வழியாகவே சென்றது. ஊழிப்பேரலையொன்று நுரை சிதற வளைந்தெழுந்து சென்று அறைவதுபோல் குருக்ஷேத்ரத்தின் வடமேற்கு எல்லை வரை சென்று அதற்கு அப்பால் விரிந்திருந்த பசுங்காட்டை நோக்கி நா நீட்டி உறுமியது. அதன் வெம்மையில் சூழ்ந்திருந்த காடுகளின் இலைகள் அனைத்தும் சடசடவென சுருங்கின. மரங்களிலிருந்து சிற்றுயிர்கள் வெந்து உதிர்ந்தன. இலைத்தழைப்புக்குள் தீயொளி பரவ விழிமின்ன நோக்கி நின்ற விலங்குகள் அலறித் திரும்பி ஓடின. பிலங்களுக்குள் நாகங்கள் வெம்மை கொண்டு நெளிந்து வெந்து சுருண்டு உடற்கொழுப்பு உருகி பற்றிக்கொண்டன.

பிலங்களினூடாகவே சென்ற தீ எதிர்பாராத இடங்களில் நிலம் வெடித்து ஊற்றென பீறிட்டு வெளிக்கிளம்பியது. கிருதவர்மன் வெறிகொண்டு நடனமிட அவனை அவனறியாமல் உந்தி மேலும் மேலும் அகற்றி அழைத்துச் சென்றுகொண்டிருந்தான் மிருண்மயன். அனைத்து முகங்களும் சொற்கள் அடங்கி, விழிகள் வெறித்து, வாய்திறந்து அனலை நோக்கிக்கொண்டிருந்தன. கொப்பளித்து நீலக் குமிழிகளென வெடித்து மேலே சென்றது எரி. உறுமி, பிளிறி, வெடித்து, கனைத்து கொந்தளித்தது. சுழிகளாகி, ஆழிச்சுழிப்பாகி

சுழன்றுவந்தது. காற்று வந்தறைந்தபோது துண்டுகளாகி பறந்து வானில் மறைந்தது. இருண்ட பசுவின் அகிடை நக்க பாய்ந்தெழும் கன்றின் செந்நிற நாக்குகள் என கொழுந்துகள் ஆடின. ஒற்றைப்பேரலையாக சுருண்டெழுந்து மறுஎல்லை வரை சென்று சுழித்து மீண்டு வந்தது. விசைகொண்ட காற்றில் நீருக்கடியில் பாசிப்பரப்பு என பதிந்து நிலத்தோடமைந்து அலைகொண்டது. காற்று நின்றதும் பல்லாயிரம் படங்களால் மண்ணை அறைந்து சீறிஎழும் செந்நிற நாகக்கூட்டம்போல எழுந்தது.

கர்ணனின் பொற்தேர் உருகி உருமாறிக்கொண்டிருந்தது. அதற்குள் இருந்த மரம் எரியத்தொடங்கியதும் அனல் வண்ணம் மாறி வெடித்தது. எரியமைந்ததும் அங்கே தேர் தெரியவில்லை. மிருண்மயன் கூர்ந்து நோக்கி "தேர் முற்றாக உருகி வழிந்துவிட்டிருக்கிறது" என்றான். பின்னர் "அங்கே தேரின் பொன் எஞ்ச வாய்ப்பில்லை. அது அந்தப் பிலத்தினுள் வழிந்து ஓடி மறைந்திருக்கும். இனி அதை மீட்க இயலாது" என்றான். கிருதவர்மன் அதை கேட்கவில்லை. அவன் வெறிகொண்டு ஆடிக்கொண்டிருந்தான். "அது மறைந்துவிட்டது" என்றான் மிருண்மயன். அருகே நின்ற முதிய வீரன் "அது மண்ணுகே மீள்க!" என்றான்.

கிருதவர்மன் மூச்சுவாங்க ஓய்ந்து கைகளை விரித்து நின்று அனலை நோக்கிக்கொண்டிருந்தான். அதில் ஒரு முகம் எழுந்தது. சொல்லின்றி அவன் சுட்டிக்காட்டினான். "யாதவரே!" என்று மிருண்மயன் அழைத்தான். "திரிகாலன்! ஐந்தாம் அனலாகிய திரிகாலன்!" என்று கிருதவர்மன் சொன்னான். ஆனால் அச்சொற்கள் அவன் நாவிலிருந்து எழவில்லை. குனிந்து அவன் முகத்தை பார்த்தபின் திரும்பி கொப்பளித்து

குமுறிக்கொண்டிருந்த பெருந்தழலையே
பார்த்துக்கொண்டிருந்தான்.

“நாவால் அவியை கவ்விக்கொள்பவன்

புவியை ஆளும்பொருட்டு அளிகொண்டவனாக

வாழ்த்துக்களை பெற்றுக்கொள்பவன்

மானுடரை ஒளிகொள்ளச் செய்பவன்

தூய்மையாக்குபவன்

முதன்மை அந்தணன்

அளிப்பவர்களில் முதலோன்

அனலனை இங்கு நிறுவினர் முன்னோர்!”

அமிர்தனின் முகம் உலைப்பொன் என சுடர்கொண்டிருந்தது.
அவன் உதடுகளில் இருந்து வேதம் எழுவதாக
தோன்றவில்லை. அனலில் இருந்து அது ஒலி
திரட்டிக்கொண்டது. அவன்மேல் மழையெனப்
பெய்துகொண்டிருந்தது.

மிருண்மயன் தொலைவில் ஒரு வீரன் இரு கைகளையும்
பிரித்து அலறியபடி அனலை நோக்கி ஓடுவதை பார்த்தான்.
“யாரது? அவனை நிறுத்துக!” என்று கூவுவதற்குள் அவன்
பாய்ந்து எழுந்து கைவிரித்துத் தாவி அனலுக்குள் விழுந்தான்.
அவன் உடலை அனல் குழிந்து பெற்றுக்கொண்டது. நீர் என
வந்து செந்தழல் மூடியது. வாய்மூடி மெல்வதுபோல அங்கே
ஓர் அசைவு. நீலக் கொப்புளம் ஒன்று எழுந்தமைந்தது.

கூடிநின்ற வீரர்கள் கூச்சலிட்டனர். அது ஒரு தொடக்கமாக அமைய அங்குமிங்குமாக பலர் எரி நோக்கி பாய்ந்து எரியில் விழுந்து சுடர்ந்து குமிழ்த்து மறைந்தார்கள். செய்வதறியாமல் மிருண்மயன் நோக்கி நின்றான்.

மறுபுறம் பாண்டவப் படைகளிலிருந்தும் அவ்வண்ணம் எரியிலெழுந்து விழுந்துகொண்டிருந்தனர். இருதரப்பிலும் களைத்து நின்றிருந்த படைவீரர்கள் கைகளை விரித்து வெறிக்குரல் எழுப்பி உடல் அசைய நடனமிட்டனர். சொல்லில்லாத குரல். வாழ்த்தா வெறுப்பா அச்சமா உவகையா என்றறியாத வெற்றுக்குரல். அமிர்தன் "ஓம்! ஓம்! ஓம்!" என வேதம் ஓதி நிறைய அந்த முழக்கம் அதன் பெருவிரிவாக மேலெழுந்து ஒலித்தது. குருக்ஷேத்ரம் ஒரு பெரும் எரிகுளமென்றாகி அவியை ஏற்றுக்கொண்டது. கிருதவர்மன் விண்ணில் முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் வந்து செறிந்திருப்பதாக எண்ணிக்கொண்டான். இனி இப்படி ஒரு வேள்வியை அவர்கள் பார்க்கப்போவதில்லை. இதற்கிணையான ஓர் அவியை ஏற்கப்போவதில்லை. தொல்வேதம் சொல்கரைந்து முழக்கமென்றாகி எழ நிகழ்ந்து கொண்டிருந்தது அவ்வேள்வி. எழும் வேதம் என எங்கோ ஒரு சொல் கனன்றுகொண்டிருந்தது.

இருட்கனி - 64

சுப்ரதரை அணுகிய சுடலைக்காவலன் சற்று அப்பால் நின்று தலைவணங்கி அவர் திரும்பிப்பார்த்ததும் "சூதர்கள் தங்கள் பாடலின் இறுதியை நெருங்கிக்கொண்டிருக்கிறார்கள், அமைச்சரே" என்றான். விழிசுருக்கி அவன் சொல்வது

புரியாததுபோல் சில கணங்கள் நோக்கிய பின் அவன் செல்லலாம் என்று கையசைத்துவிட்டு சற்று முன்னால் சென்று மரக்கிளைகளின் இடைவெளியினூடாகத் தெரிந்த வானை சுப்ரதர் நிமிர்ந்து பார்த்தார். முகில்கணங்கள் இடைவெளியில்லாது செறிந்து வான் இருண்டிருந்தது. இருள் அடர்ந்த முன்காலை என்றே தோன்றியது. கதிரெழுவதுவரை சூதர்கள் பாடியாக வேண்டும். அதற்கு முன் விருஷாலியும் பிரசேனனும் வந்தாகவேண்டும்.

அவர் நிலைகொள்ளாமையுடன் முன்னால் நடந்து சிதைக்கான மையப்பாதையை அடைந்து அங்கு நின்றிருந்த காவலர்தலைவனிடம் "பிறகு ஏதேனும் செய்தி வந்ததா?" என்றார். "அவர்கள் அணுகிக்கொண்டிருக்கிறார்கள், அமைச்சரே" என்றான். "எவ்வளவு பொழுதாக இப்படி அவர்கள் அணுகிக்கொண்டே இருக்கிறார்கள்... எப்போதும் ஒரே செய்தியே வந்துகொண்டிருக்கிறது" என்று சலித்துக்கொண்ட சுப்ரதர் "இன்னும் எத்தனை பொழுதாகும் என்று ஏதேனும் அறிதல் உண்டா?" என்றார். அவன் பேசாமல் நின்றான். கையசைத்து அவனை அகற்றிவிட்டு இடையில் கைவைத்து மீண்டும் வானை நோக்கியபடி நின்றார்.

சற்றுநேரம் கழித்து அப்பால் நின்ற ஏவலனை அருகழைத்து "பொழுது விடிய இன்னும் எத்தனை நேரமிருக்கிறது என்று பார். இங்கு கணியர் எவரும் உள்ளனரா?" என்றார். "ஆம், சிதைப்பொழுது குறிக்க வந்தனர். ஒருவர் எஞ்சியிருக்கிறார். அவரை அழைத்து வருகிறேன்" என்று அவன் சொன்னான். "சென்று அழைத்து வா... என் ஆணை என்று சொல்" என்றார். மீண்டும் திரும்பி நடந்து சிதை கூட்டப்பட்டிருப்பதற்கு அருகே வந்து நின்றார். சிதை முற்றொருங்கிவிட்டிருந்தது. ஆயினும்

உளம்நிறைவுறாத இரண்டு ஏவலர்கள் விறகுக்கட்டைகளை அடுக்குவது, அரக்குப்பலகை தேன்மெழுகுக்கட்டிகள் ஆகியவற்றை எடுத்து சீரமைப்பது என சிறுபணிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

"எப்போது முடியும்?" என்று சுப்ரதர் எரிச்சலுடன் கேட்டார். "முடிந்துவிட்டது, அமைச்சரே" என்று ஒருவன் சொன்னான். சுப்ரதர் நடந்து சூதர்கள் பாடிக்கொண்டிருந்த இடம் வரைக்கும் சென்றார். அங்கே பந்தங்களின் ஒளியில் இறுதி சூதர் உறுமியை மீட்டி பாட சூழ்ந்திருந்தவர்கள் மெல்ல அசைந்தபடி அதை கேட்டுக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவராக சொல்லடங்கி அவருடைய குரல் மட்டுமே ஒலித்தது. "விண்புகழ் வேந்தன்! வீரர்களில் முதல்வன்! மண்ணாளும் மும்முடி கொண்டோன்! மங்கையர் உளம் கவர்ந்தோன்! சொல்லில் புகழ் ஒளிர்பவன்! வில்லில் நிகரிலாதவன்!" என்று அவர் கர்ணனின் புகழை பாடிக்கொண்டிருந்தார்.

அது வழக்கமான புகழ்பாடல் வரிகள். அவர்கள் கதையை முடித்துவிட்டு பொழுதெழுவதற்காக பாடுகிறார்கள். அங்கிருந்த சூதர்கள் அனைவருமே சொற்களால் நெடுந்தூரம் கொண்டு செல்லப்பட்டு கனவிலென அமர்ந்திருந்தனர். உறுமியின் மேளத்திற்கேற்ப அவர்களின் உடல்கள் ஒத்திசைந்து ஆட, பந்தங்களின் ஒளியில் நிழல்கள் எழுந்து சுழன்றாடின. நடுவே புன்னகையுடன் கர்ணன் படுத்திருந்தான். எக்கணமும் எழுந்து வணங்கி அவர்களுக்கு பொன்னையும் மணியையும் அள்ளி வழங்கத்தொடங்குபவன்போல.

சுப்ரதர் அவனுடைய அணிநிரை அழகுருவை நோக்கிக்கொண்டு நின்றார். முதலில் அவர் உயிரிழந்த அவன் உடலை பார்த்த கணமே ஒரு ஒவ்வாமையை உணர்ந்தார்.

அவர் நன்கறிந்து இறைஉருவுக்கு நிகரென வழிபட்ட அங்கநாட்டரசன் கர்ணன் அல்ல அது என்று தோன்றியது. அங்கு கர்ணனாக இருந்த ஒன்று அகன்றுவிட்டது. எஞ்சியிருப்பது வெற்றுடல். அவ்வுடலில் முன்பு அவர் விரும்பியவை, மகிழ்ந்தவை அனைத்துமே உள்ளிருந்த ஒன்றால் நிகழ்த்தப்பட்டவை. இது வெறுந்தசை, வெற்றுடல் என்று அவருடைய ஆழத்திலிருந்து ஒன்று திமிறிக்கொண்டே இருந்தது. கர்ணன் அணிந்திருந்த அணிகளையும் ஆடைகளையும் அவ்வுடல் அணிந்திருப்பதை அவர் விழிகள் ஏற்க மறுத்தன. எனவே ஒரு சில கணங்கள் நோக்கிய பின் உடனே ஒவ்வாமையுடன் விழியை திருப்பிக்கொண்டார்.

ஆனால் அப்போது பார்த்தபோது அங்கு கர்ணனே படுத்திருப்பதுபோல் தோன்றியது. அவன் உடலில் இருந்து எழுந்து அகன்ற அது மீண்டும் வந்து சேர்ந்ததுபோல. அங்கு நிகழ்ந்த அனைத்தும், போரும் அழிவும் முழுக்க, கனவென்று மாறிவிட்டதுபோல. எழுந்து அருகணைந்து சுப்ரதரை நோக்கி "தேர் ஒருங்கியாயிற்றா? சம்பாபுரிக்கு கிளம்புவோம்" என்று கூறிவிடுவான் என்பதுபோல. அவர் தன் உள்ளத்தை இறுக்கிக்கொண்டு தலையசைத்து திரும்பி நின்றார். இனி அவன் உடலை ஒரு போதும் பார்க்கலாகாது. எனில் இக்காட்சியிலிருந்து எந்நிலையிலும் விடுபடப்போவதில்லை. இது உடல்தான். வெற்றுடல். இன்னும் சற்று நேரத்தில் சிதையேறி எரிந்து உருகி சாம்பலென, வெள்ளெலும்புகளென மாறி மண்படப்போகும் உடல். அங்கர் விண்புகுந்துவிட்டார். வானிலிருக்கிறார். வீரர்களின் மெய்யுலகில். ஒளிமிக்க மும்முடியும் பொற்கவசமும் மணிக்குண்டலங்களும் அணிந்து புன்னகைக்கும் கண்களும் இனிய நற்சொல்லுரைக்கும் உதடுகளும் நீண்ட அழகிய பெருங்கைகளுமாக.

அவர் உள்ளம் விம்மி உடல் சற்று உலுக்கிக்கொண்டது. ஆனால் விழிகளில் நீர் வரவில்லை. அது அழுகையா என அவருக்கு ஐயமெழுந்தது. அழுகையெனில் விழி நனைய வேண்டும். எவரேனும் பார்க்கிறார்களா என்பதுபோல் அவர் சுற்றும் பார்த்துவிட்டு தன் மேலாடையை சீரமைத்துக்கொண்டு மீண்டும் நடந்து சாலை முகப்புக்கு வந்தார். அழகுருவம் அழகுருவம் என்று அவருடைய உள்ளம் வெற்றுச்சொல்லாக அரற்றிக்கொண்டிருந்தது. ஆண் உடலில் கூடும் மானுட அழகு பெண்களிலோ குழந்தைகளிலோகூட எழுவதில்லை. குழந்தைகள் ஒவ்வொரு கணமுமென பிறிதொன்றாகிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களின் உடலோ தன்னளவில் முழுமை கொண்டதல்ல. அது பிறவற்றால் நிறைவு செய்யப்படவேண்டியது. ஆணால், குழந்தையால். ஆணுடலே முழுமை, தெய்வத்தின் உருவில் தான் அமைந்தது. ஆணுடலின் முழுமை அவன் உடல்.

அக்கணம் திரும்பி ஓடிச்சென்று மீண்டும் கர்ணனை பார்க்க வேண்டுமென்று அவர் உணர்ந்து உடல்எழுந்தார். இல்லை. அங்கிருப்பது உடல். அவனல்ல. அது வெற்றுச் சடலம். அவனல்ல அது. என் கண்களில் நிறைந்திருக்கும் அரியணை அமர்ந்த அங்கநாட்டு அரசனே என்றுமிருப்பவன். சொல்லில் வாழ்பவன். நினைவுகளில் படர்ந்து காலம் கடந்து செல்பவன். என்ன நிகழ்ந்ததென்றறியாத ஒருகணத்தில் அவர் திரும்பி மூச்சிரைக்க ஓடி, சிதையைக் கடந்து, சூதர்கள் பாடிக்கொண்டிருந்த இடத்தை அடைந்து திடுக்கிட்டவர்போல் நின்று கர்ணனை பார்த்தார். அவன் அங்கு அதேபோல சொற்களைக் கேட்டு உள்ளுவகை கொண்டு மலர்ந்த முகத்துடன் படுத்திருந்தான்.

அவர் உள்ளம் அலையென எழுந்து அறைந்தது. அழுகை வந்து உடல் உலுக்கிக்கொண்டது. தன் முழுச் சித்தத்தாலும் தன்னை இறுக்கிக்கொண்டார். "நான் அந்தணன். நான் அந்தணன்" என்று சொல்லிக்கொண்டார். அந்தணர் எந்நிலையிலும் மண்ணுலகின் எவ்விழப்புக்காகவும் அழலாகாது. எதன்பொருட்டும் உவகைகொள்வதும் கூடாது. அவர்கள் இங்கே அலைக்கொந்தளிப்புக்கும் அனல்பெருக்குக்கும் மீதாகக் கட்டப்பட்ட சரடில் நடப்பவர்கள். சவரக்கத்தியின் கூர்முனைமேல். அவர் மூச்சை இழுத்துவிட்டு மெல்லமெல்ல தன்னை ஆற்றிக்கொண்டார். தன் உள்ளத்தை சூழ்ந்திருந்த இருளில் கரைத்தழித்தார். அதன்பின் பந்தங்களின் உலையும் சுடரை மட்டும் நோக்கிக்கொண்டிருந்தார்.

கணியருடன் வந்த ஏவலன் சற்று அப்பால் நின்றான். காலடி ஓசை கேட்டு திரும்பிப் பார்த்த சுப்ரதர் அவரை எதற்கு அழைத்தோம் என்பதை மறந்து சிலகணங்கள் நோக்கி நின்று, பின்னர் நினைவுகூர்ந்து அருகே சென்று "கருக்கிருட்டு இன்னும் அகலவில்லையே" என்றார். "முகில்கணங்கள் மூடியிருக்கின்றன அல்லவா? இன்னும் அரை நாழிகைக்குள் பொழுது விடிந்துவிடும்" என்றார் கணியர். "இருள் அவ்வளவு கடுமையாக உள்ளதே" என்றார் சுப்ரதர். கணியர் "ஆம், ஆனால் இருள் மூடியிருந்தாலும் பொழுது விடியும் தருணம் அமைந்தால் விடிந்துவிட்டதென்றே பொருள். எங்கள் விடியலும் அந்தியும் கணிக்களத்தில்தான். வானம் எங்கள் ஆட்சியில் இல்லை" என்று சொன்னார்.

சுப்ரதர் "எதற்காக காத்திருக்கிறோம் என்று தெரிகிறது அல்லவா? நேற்று அந்தியில் அங்கர் களம்பட்டபோது கதிரவன் மறைந்தான். இன்று புலரியில் புதுக் கதிருடன் அவன்

எழுகையில் இங்கு சிதை மூட்டவேண்டுமென்பது முறை. தந்தை தன் மைந்தனின் எரியூட்டலை பார்க்கவேண்டும். இளங்கதிர் வந்து சிதையைத் தொட்ட பின்னரே எரியூட்டவேண்டும் என்கிறார்கள் நிமித்திகர்கள். இப்பொழுதைப் பார்த்தால் இன்று கதிரெழுகையே இருக்காது என்று தோன்றுகிறது" என்றார். கணியர் ஒன்றும் சொல்லாமல் நின்றார். "ஏதேனும் சொல்லுங்கள்" என்றார் சுப்ரதர். "விண்ணை ஆளும் தெய்வங்களிடம் வேண்டிக்கொள்வதைத் தவிர செய்வதற்கொன்றுமில்லை" என்றார் கணியர். சுப்ரதர் "ஒருவேளை இம்மைந்தன் மறைந்த துயரில் இன்று கதிரெழுகையே நிகழாமலும் போகலாம். எனில் இந்தச் சூதர்கள் மீண்டும் இக்கதையை பாடவேண்டியதுதான். கதிர் எழுவது வரை இங்கு அங்கர் காத்திருக்க வேண்டியதுதான்" என்றபின் அவன் செல்லலாம் என்று கையசைத்து மீண்டும் நடந்து சாலை முகப்பிற்கு வந்தார்.

மிகத் தொலைவில் எழுந்த அசைவே அங்கே தேர்கள் வருவதை காட்டியது. கூர்ந்தபோது அது மங்கலடைந்து தேர்கள்தானா என்னும் ஐயத்தை எழுப்பியது. தேர்கள்தான் என மெல்லமெல்ல தெளிந்தது. ஆனால் ஒலி காட்டிற்குள் வேறெங்கோ எதிரொலித்தது. அவர் அணுகிவரும் அஸ்தினபுரியின் அமுதலகக் கொடியை சொல்லின்றி வெறித்து நோக்கியபடி நின்றார். சிறுதேர் மேடு பள்ளங்களில் எழுந்து அசைந்து வந்து நின்றது. அதை இழுத்து வந்த ஒற்றைக்குதிரை பெருமூச்சுவிட்டு தலைதாழ்த்தி முன்காலால் தரையைத் தட்டியது. தேரிலிருந்து துரியோதனன் எடைமிக்க காலடியை தூக்கி படியில் வைத்து நிலத்தில் இறங்கினான். இருள் செறிந்துகிடந்த காட்டைப் பார்த்தபடி இடையில் கைவைத்து நின்றான்.

தேரை அணுகிய இரு ஏவலரைப் பார்த்து சகுனி கைநீட்ட அவர்கள் அக்கைகளை பற்றிக்கொண்டார்கள். புண்பட்ட காலை வலிமுனகலுடன் மெல்ல தூக்கி வைத்து ஒவ்வொரு படியிலாக நின்று மெல்ல சகுனி இறங்கிய பின் தேர்ப்பாகனிடம் தேரை பின்னால் கொண்டு செல்லும்படி ஆணையிட்டான். பாகன் புரவியை மெல்ல தட்ட அது பின்னடி எடுத்து வைத்து தேரைத் தள்ளியபடி பின்சென்று, வளைந்து அப்பால் நகர்ந்து, இருளுக்குள் மெல்லிய நிழல் படிவென மாறி நின்றது. சகுனி சுப்ரதரைப் பார்த்து தலைவணங்கினார். சுப்ரதர் கைதூக்கி வாழ்த்து அளித்தபின் அங்கேயே நின்றார். அவர்கள் இருவரும் சொற்கள் ஏதுமின்றி நடந்து சுப்ரதரை அணுகினர். துரியோதனன் வெற்று விழிகளால் சுப்ரதரை பார்த்துவிட்டு மீண்டும் காட்டை பார்த்தான்.

சகுனி "அவர்கள் குருக்ஷேத்ர எல்லைக்குள் வந்துவிட்டார்கள். இன்னும் சிறு பொழுதில் இங்கு அணைவார்கள்" என்றார். சுப்ரதர் தலைவணங்கினார். சகுனி விழிகளில் மெல்லிய மாற்றத்துடன் "சூதஅரசி உடன்கட்டை ஏற வேண்டுமென்று விரும்புகிறார் என செய்தி" என்றார். சுப்ரதர் "அது வழக்கமில்லை. ஷத்ரியர்களுக்குரிய நெறி அது" என்றார். "ஆம், ஆனால் அவர் உடன்கட்டை ஏற விரும்புகிறார் என்று சிவதரின் செய்தி வந்தது." சுப்ரதர் "உணர்வெழுச்சியில் கூறப்பட்ட சொற்களாக இருக்கலாம்" என்றார். "அவர் இங்கு வந்த பின்னர் விரிவாகவே அதைப்பற்றி அவரிடம் பேசுங்கள். அரசர் இங்கு மணிமுடி சூடி அரசகோலத்தில் சிதையேறவிருக்கிறார். அருகே அரசியென அமர இடங்கொண்டவரே உடன்கட்டை ஏற இயலும். சூதஅரசி அவருடைய அன்புக்குரியவர், அவருடைய குலத்தவர். ஆனால் பட்டத்தரசியாக அரியணை அமர்ந்ததில்லை" என்றார் சகுனி.

“நெறிகளை எவரும் பேணியாகவேண்டும்” என்றார் சுப்ரதர். “ஆம், அதைத்தான் நானும் சிவதரிடம் சொன்னேன். அவரிடமிருந்து மறுமொழி ஏதுமில்லை” என்று சகுனி சொன்னார். “அவர்கள் வரட்டும். இங்குள்ள நெறியென்ன என்பதை கூறுவோம். சிவதர் புரிந்துகொண்டால்கூட போதும் அவருடைய சொல்லை அரசி மீறப்போவதில்லை.” சகுனி என்ன எண்ணுகிறார் என்று சுப்ரதருக்கு புரியவில்லை. “உடன்கட்டை ஏறுவதனூடாக அவருடன் விண்ணுக்கு செல்ல இயலுமா என்ன?” என்றார் சகுனி. “அவர் களம் பொருதி வீழ்ந்தவர். வீரர்களுக்குரிய விண்ணுலகு எய்துவார். அரசி அவருடன் இருந்து மைந்தரை ஈன்றார் என்பதற்கப்பால்...” என்று சொல்லி நிறுத்தினார் சகுனி.

சுப்ரதர் “மைந்தர் அனைவரையும் இழந்திருக்கிறார். கணவரை இழந்திருக்கிறார். இத்தருணத்துப் பெருந்துயர் அவரை ஆட்கொண்டிருக்கிறது” என்றார். “பெண்களின் இயல்பு அது. துயரோ உவகையோ அவர்களை பேரலையென அடித்துக்கொண்டு செல்கிறது. ஆனால் மிக விரைவில் அவர்கள் அவற்றிடம் இருந்து விடுதலை பெற முடியும். சூழல் பலமடங்கு ஆற்றலுடன் அவர்கள் மேல் படிகிறது. ஒரு மைந்தன் அவருக்கு எஞ்சியிருக்கிறான். அம்மைந்தனின் முகம் பார்த்து அவரால் மீளமுடியும். அம்மைந்தனுக்கு ஒரு மகவு பிறக்குமென்றால் அதை மடியிலேந்தி கணவனையும் மண்மறைந்த குழந்தைகளையும் முற்றாக மறந்து உவகையிலாடவும் இயலும். கைம்பெண்களைப்போல் அத்தனை விரைவாக மீண்டு வருபவர்கள் இல்லை.”

சகுனி உதடுகள் கோணலாகி முகம் இழுபட, சிறிய கண்களில் ஒளி கூர்மைகொள்ள “ஆம், அதை நம்பிதான் அஸ்தினபுரி

இருக்கிறது. இப்போது அது கைம்பெண்களின் நகர்" என்றபின் நகைத்து "பாரதவர்ஷமே கைம்பெண்களால் நிறைந்திருக்கிறது. அவர்கள் அனைவரும் துயர்மீண்டு புதிய கணவர்களை அடைந்து மைந்தரை ஈன்று இந்நிலத்தை பொலியவைக்க வேண்டும்" என்றார். சுப்ரதர் "கோடையில் நிலத்தைப் பார்த்தால் ஆயிரம் ஆண்டுகளாக அங்கு பசுமை இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்றும், இனி ஒருபோதும் உயிர்த்துளி எழப்போவதில்லை என்றும் தோன்றும். ஒரு சிறு பருவமாற்றம், ஒரு மழை அனைத்தையும் முற்றாக மாற்றிவிடும். அதன் பின் அங்கு கோடை இருந்ததா என்று ஐயுறுவர்" என்றார்.

துரியோதனன் அச்சொற்கள் எதையும் கேட்டதாகத் தெரியவில்லை. காட்டின் இருளை பார்த்து நின்றபின் அவன் திரும்பி சுப்ரதரிடம் "இன்னும் விடியவில்லை அல்லவா?" என்றான். "இன்னும் ஒரு நாழிகையில் கணிக்களத்தில் கதிரவன் எழுந்திருப்பான். விண்ணிலெழுவானா என்று நம்மால் சொல்ல இயலாது. வானை முகில்கணங்கள் முற்றாக மூடியிருக்கின்றன" என்றார். "ஆம், நேற்று அந்தி முதல் வானம் கருமுகிலாக இருக்கிறது" என்றான் துரியோதனன். "இரவில் பெருமழை கொட்டி களத்தை மூடுமென்று எண்ணினேன். மழை பெய்திருந்தால் இருதரப்புப் படைவீரர்களும் முழுக்க நனைந்து இரவை கழித்திருக்க வேண்டும். மழை ஒழிந்தது நன்று. இடிமின்னல்களோடு நின்றுவிட்டது" என்று சகுனி சொன்னார்.

அந்த உரையாடலே அத்தருணத்தின் கணங்களை ஒவ்வொன்றாக கடந்து செல்வதற்காகதான் என்று சுப்ரதர் உணர்ந்திருந்தார். அவரும் அப்பேச்சை முன்னெடுத்தார்.

“நேற்றிரவு முழுக்க மின்னலால் காடு துடித்துக்கொண்டிருந்தது. இடியோசை ஒழிந்த ஒருகணமில்லை” என்றார். சகுனி திரும்பி அப்பால் கேட்டுக்கொண்டிருந்த சூதர்களின் பாடலை செவிகூர்ந்து “ஒருவேளை இவர்கள் கதிரவனை பாடிப்பாடி மழையை நிறுத்திவிட்டார்களோ?” என்றார். துரியோதனன் அமைதியின்மையுடன் “எப்போது விடியும்?” என்றான். சகுனி அவனை திரும்பி நோக்கிவிட்டு “பார்ப்போம்” என்றார்.

“முதற்கதிர் வந்து சிதையை தொடவேண்டுமென்று முறை வகுக்கப்பட்டுள்ளது. நிமித்திகர்கள் சடங்குக்குரிய அனைத்தையும் ஒருக்கிக்கொண்டிருக்கிறார்கள்” என்றார் சகுனி. சுப்ரதர் “ஆம், வேதியரும் காத்திருக்கிறார்கள். கதிர் எழுந்த பின்னர் அவர்கள் சிதைக்கு அருகே வரலாம் என்று சொல்லியிருக்கிறேன்” என்றார். சகுனி “அனைத்தும் ஒருங்கிவிட்டதா என்று சென்று பாருங்கள்” என்றார். சுப்ரதர் தலைவணங்கி திரும்பும்போது துரியோதனன் உரக்க “அது என்ன?” என்று கை நீட்டி கேட்டான். சுப்ரதர் திரும்பிப் பார்த்துவிட்டு அவன் எதை கேட்கிறான் என்று தெரியாமல் “அரசே” என்றார். “என்ன அது?” என்று உரக்க மீண்டும் கேட்டான் துரியோதனன். அவன் சுட்டுவதைப் பார்த்து “சிதை! அங்கருக்கானது” என்றார் சுப்ரதர்.

“இத்தனை பெரிய சிதையா!” என்று துரியோதனன் மீண்டும் கேட்டான். “அரசே, அரசர்களுக்குரிய சிதையை அவ்வாறு உயரமாக அமைப்பது வழக்கம். அவர்களுக்கு மட்டுமே தனிச்சிதை” என்று சுப்ரதர் சொன்னார். “அவ்வளவு பெரிய சிதையா?” என்றபின் துரியோதனன் புன்னகைத்து “அது எரியூட்டப்பட்டால் அவனுடைய பொற்தேரளவே இருக்கும்” என்றான். அச்சொல்லில் இருந்த முரணால் சுப்ரதர் உளம்

திடுக்கிட்டார். துரியோதனனின் முகத்தில் ஒரு வெறிப்பு இருந்தது. அவன் உளம் பிறழ்ந்திருக்கிறானோ என்ற ஐயமேற்பட்டது. சகுனி அதை உணர்ந்தவராக "செல்க!" என்றார்.

சுப்ரதர் சாலையைக் கடந்து அப்பால் சென்று அங்கே காத்திருந்த அந்தணர்களை அடைந்தார். அவரைக் கண்டதும் அவர்கள் எழுந்து நின்று தலைவணங்கினர். சிதைப்பணியாளன் கீர்த்திமான் "அனைத்தும் வந்து சேர்ந்துவிட்டன, அமைச்சரே. மங்கலப் பொருட்கள் அனைத்தும் உள்ளன" என்றார். வேதியர் ஒருவர் "கதிரெழுவது ஒன்றுதான் எஞ்சியுள்ளது" என்றார். சுப்ரதர் தலையசைத்தார். முதிய வேதியர் "கதிர் எழுவது நமது கையில் இல்லை. ஆனால் கதிரெழாமல் இருந்தால் செய்வதற்குரிய சில சடங்குகள் உள்ளன" என்றார். "ஓர் அருமணியை கதிரவனென உருவகித்து அகல்சுடரின் அருகே வைத்து அவ்வொளிக் கதிரை சிதையில் விழச்செய்து கதிர்த்தொடுகை நிகழ்ந்துவிட்டதென்றே ஆக்கலாம். கல்லில் கதிரவன் எழுதலே வைரங்கள். அவை கதிரவனின் குழவியர்" என்றார்.

இன்னொரு அந்தணர் "ஒவ்வொன்றுக்கும் மாற்று வழி உண்டென்பதே வேதச்சடங்குகளின் அழகு" என்றார். "ஏனெனில் இது நெடுங்காலமாக செய்யப்பட்டு வருகிறது. எல்லா வாய்ப்புகளும் ஒருமுறையேனும் வந்து சென்றிருக்கும்." சுப்ரதர் அங்கே வைக்கப்பட்டிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக மீண்டும் பார்த்தார். "விஷ்ணுகிராந்தி, அருகு, முயல்செவி, திருதாளி, செறுளை, நிலப்பனை, கைதோன்றி, பூவாம்குறுந்தல், மூக்குற்றி, உழிஞை. இரவு முழுக்க மீளமீள அவற்றையே எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்று தோன்றியது. "சிதை அருகே நீங்கள் சென்று நிலைகொள்ளலாம். இனி

பொழுதில்லை. எரியளிப்புச் சடங்குகள் தொடங்கட்டும். கதிர் எழாவிட்டால் என்ன முடிவெடுப்பது என்பதை நான் அரசரிடம் உசாவிவிட்டுச் சொல்கிறேன்" என்றார்.

அவர்கள் தலைவணங்கி தங்கள் பொருட்களுடன் சிதை அருகே சென்றனர். அவர் அவர்களுக்குப் பின்னால் நடந்தார். அந்தணர்கள் சிதையின் மேற்கே கிழக்கு நோக்கி அமர்ந்து தங்கள் பொருட்களை அங்கே பரப்பினார்கள். ருத்ரவிழிக்காய், சிதைச்சாம்பல், எருக்கமலர், புலித்தோல், மான்கொம்பு, மழு, உடுக்கை, திருவோட்டில் நன்னீர். கணியர் ஒருவர் அங்கே நின்றிருந்தார். "கதிரெழுகையின் பொழுது இன்னும் சற்று நேரத்தில்" என்று அவர் சொன்னார். சுப்ரதர் சிலகணங்கள் எண்ணி நோக்கிவிட்டு அந்தணரிடம் "சடங்குகளை தொடங்குக, எரியெழுக!" என்றார். தலைமை அந்தணர் "அங்கர் ஐந்தெரி யோகத்தை செய்தவர் என்று கூறுகிறார்கள். ஆகவே ஐந்தெரியும் இங்கு அனலில் எழுப்பப்பட வேண்டும். ஐந்தாம் எரியென திரிகாலன் சிதையில் எழவேண்டும்" என்றார்.

அவர்கள் செங்கற்களை அடுக்கி நான்கு எரிகுளங்களை உருவாக்கினர். அங்கு விறகுகளை அமைத்து நெய் நனைத்தனர். ஒருவர் ஒவ்வொரு அவிப்பொருளாக எடுத்து வைத்தார். எவரோ சொல்வதுபோல அப்பொருட்களை சுப்ரதர் விழிகளால் கேட்டார். அறுசுவை அன்னங்களும் ஏழுவகை நறுமணங்களும் எட்டுவகை மங்கலங்களும் ஒன்பது அருமணிகளும் பத்துவகை மலர்களும் பன்னிருவகை விறகுகளும். இருவர் அரணிக்கட்டைகளைக் கடைந்து எரியெழுப்ப அதை மென்பஞ்சில் தொட்டு முதல் எரிகுளத்தை பற்ற வைத்தார் வைதிகர். அதில் முதல் எரி எழுந்தது. நான்கு

எரிகுளங்களும் அனலெழுந்து ஆட அந்தணர் அதர்வ வேதச்சொல்லெடுத்து ஒலிக்கத் தொடங்கினர்.

சிதைக்கு அப்பால் துரியோதனனும் சகுனியும் நின்றிருந்தார்கள். சகுனி நிற்பதற்கு இயலாதவராக காலை நீட்டிக்கொண்டு ஒரு மரத்தை பிடித்திருந்தார். சுப்ரதர் அவர்கள் அருகே சென்று "எரியெழ ஆணையிட்டுவிட்டேன்" என்றார். "ஆம், பார்த்தேன். ஐந்தனல்" என்று சகுனி சொன்னார். பின்னர் "ஐந்தாவது அனலாகிய திரிகாலன் அங்கே குருக்ஷேத்ரத்தில் எழுந்ததைப் பற்றித்தான் அவர்கள் இங்கு பாடிக்கொண்டிருக்கிறார்கள்" என்றார். சுப்ரதர் திரும்பிப் பார்த்தபோது சூதர்கள் அனைவரும் ஒரே குரலில் ஐந்து அனல்களையும் போற்றிப் பாடிகொண்டிருந்தனர். அவர் அவர்களின் சொல்லில் இருந்த அனல் அங்கே எரிகுளங்களில் எழுந்தாடுவதை நோக்கிக்கொண்டு நின்றார்.

இருட்கனி - 65

சுப்ரதர் மீண்டும் சாலைக்கு வந்தபோது கொம்பொலியை கேட்டார். முதற்கணம் அது ஏதோ காட்டுப்பறவையின் குரலெனத் தோன்றியது. பின்னர் அது கொம்பொலி எனத் தெளிந்ததும் அவர் உள்ளம் துடிப்புகொண்டது. சம்பாபுரியின் கொம்பொலி. அதை ஊதுபவனையே அவர் அருகிலென உள்ளத்தால் கண்டார். மூச்சிரைக்க ஓடி பாதைமுகப்புக்குச் சென்று நின்றார். மிக அப்பால் அசைவுகள் தெரிந்தன. இருண்ட நீருக்குள் மீன்கள் என. கொம்போசை மீண்டும் எழுந்தது. "சம்பாபுரியின் அரசியும் இளவரசரும் வருகை!" என அறிவித்தது.

சம்பாபுரியின் கொம்பூதி முதலில் வந்தான். அவனைத் தொடர்ந்து மூன்று புரவிகள் அம்பு வடிவில் வந்தன. ஒருவன் சம்பாபுரியின் கொடியை ஏந்தியிருந்தான். கொம்பூதி கொம்பை முழக்கி அரசியின் வருகையை அறிவித்தான். சுப்ரதர் சாலைவிளிம்பில் நின்ற பலாமரத்தின் அடியில் கைகளைக் கட்டியபடி நின்றார். காற்றில் அவருடைய ஆடை படபடத்துக்கொண்டிருந்தது. புரவிக்காவலர்கள் பன்னிருவர் இரண்டு வரிசைகளாக வந்தனர். முகப்பில் வந்தவர்கள் வில்லேந்தியிருந்தனர். பின்னர் வந்தவர்கள் வேல் வைத்திருந்தனர். அவர்கள் அணுகி வந்து விரைவழிய அவர்கள் செல்லவேண்டிய வழியை சுப்ரதர் சுட்டிக்காட்டினார். அவர்கள் சென்று காட்டுக்குள் வளைந்து நின்றனர். நெடுந்தொலைவு ஓடிய புரவிகள் நுரை உமிழ்ந்து நீள்மூச்செறிந்தன. கால்களை தூக்கி வைத்து முன்னும் பின்னுமாக உடலை ஊசலாட்டின.

தேர் தெரியத்தொடங்கியது. காட்டின் சிறிய மேட்டில் ஏற புரவிகள் சற்று மூச்சிளைத்தன. தலைதாழ்த்தி உடலை உந்தி இழுத்தன. அவை நெடுந்தொலைவு நில்லாமல் வந்திருக்கவேண்டும். சுப்ரதர் "ஏன் இத்தனை பிந்தினீர்கள்?" என்றார். காவலர்தலைவன் "வரும் வழியிலேயே புரவிகளுக்கும் படைகளுக்கும் நீரும் உணவும் பெற்றுக்கொள்ளலாம் என எண்ணினோம். ஆனால் ஊர்களில் எங்குமே எவரும் இல்லை. கங்கையை கடந்த பின்னர் ஒரு ஊரில்கூட குடிகளை நாங்கள் பார்க்கவில்லை" என்றான். சுப்ரதர் திகைப்புடன் "ஏன்?" என்றார். "அத்தனைபேரும் ஊர்களை விட்டுச் சென்றுவிட்டிருக்கிறார்கள். நாங்கள் பார்த்தவை எல்லாம் ஒழிந்த இல்லங்களை மட்டுமே."

“எங்கு சென்றார்கள்?” என்று திகைப்புடன் சுப்ரதர் கேட்டார். “வழியில் ஒரு மலைவணிகனை பார்த்தோம். நிஷாத குலத்தவன். அவன் குடிகள் காடுகளில் வாழ்பவர்கள். அவர்களும் கிளம்பிச் சென்றுவிட்டிருக்கிறார்கள்” என்று காவலர்தலைவன் சொன்னான். “போர் தொடங்கிய பின்னர் இரு தரப்புப் படைவீரர்களும் ஊர்களுக்குள் சென்று உணவுப்பொருட்களையும் பிற பொருட்களையும் வாங்கியிருக்கிறார்கள். முதலில் பணம் கொடுத்தார்கள். பின்னர் அவர்களே எடுத்துக்கொண்டார்கள். விலங்குகளை பிடித்துக்கொண்டு சென்றனர். இளைஞர்களையும் பிடித்துக்கொண்டு செல்லத் தொடங்கியதும் மக்கள் இரவோடு இரவாக கிளம்பி கங்கையைக் கடந்து வேறு நாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். அவர்களை கங்கை எல்லைவரைக்கும் துரத்திச்சென்றிருக்கிறார்கள் படையினர். அவர்கள் வழியுணவுக்கெனக் கொண்டுபோன பொருட்களும், கூட்டிச்சென்ற கால்நடைகளும்கூட பறிக்கப்பட்டன.”

தேர் அணுகி நின்றது. படைத்தலைவன் புரவியில் அணுகி வந்து சுப்ரதரிடம் “உத்தமரே, அரசியும் இளவரசரும் சிற்றமைச்சரும் வந்துள்ளார்கள்...” என்றான். “இங்கே வாழ்த்துரைக்கு நெறி இல்லை” என்றார் சுப்ரதர். “தெரியும்” என அவன் சிறுசினத்துடன் சொன்னான். “நான் சொல்லவந்தது வேறு. எவரும் நெடும்பொழுதாக எதுவும் உண்ணவில்லை. வழியில் கனிகளும் கிழங்குகளும்கூட கிடைக்கவில்லை. காடு குரங்குகளாலும் கரடிகளாலும் சூறையாடப்பட்டதுபோல் முற்றாக ஒழிந்துகிடக்கிறது. காட்டுச்சுனைகளில் முழுக்க அம்புபட்ட பறவைகள் விழுந்து உடலழுகி நீரை நாற்றமடிக்கச் செய்துள்ளன. இளவரசருக்கு மட்டுமாவது சற்று உணவு அளிக்கப்பட்டால் நன்று.” சுப்ரதர் தானும் எரிச்சல்கொண்டு

“அதற்கு நீங்கள் நேரடியாக இங்கே வந்திருக்கக் கூடாது... இங்கே உணவு ஏதும் இல்லை” என்றார். பின்னர் கசப்புடன் “உண்மையை சொல்வதென்றால் இப்போது அங்கு களத்திலும் உணவு என ஏதுமில்லை” என்றார். அவன் “நேராக இங்கே வரும்படி அரசியின் ஆணை” என்றான்.

தேரிலிருந்து அணுக்கப்பெண்டு கையில் ஒரு ஆமாடப் பேழையுடன் இறங்கி நின்றாள். தொடர்ந்து வெண்ணிற நீளாடையை மட்டும் அணிந்திருந்த விருஷாலி இறங்கி தன் சரிந்த மேலாடையை எடுத்து தலைவழியாக சுற்றிமுகத்தை முற்றாக மறைத்துக்கொண்டாள். தலைகுனிந்து அவள் நிற்க அணுக்கப்பெண்டு ஏதோ சொன்னாள். இருவரும் சுப்ரதரை நோக்கி வந்தனர். அதற்குப் பின்னால் வந்து நின்ற தேரிலிருந்து சிவதர் இறங்கி சூழ நோக்கியபின் மேலாடையை வீசிச் சுழற்றி தோளில் அணிந்துகொண்டு தேரிலிருந்து பிரசேனன் இறங்குவதற்காக காத்து நின்றார். பிரசேனன் இறங்கி நின்று சுற்றும் நோக்கினான். அவன் துயருற்றிருந்ததாகத் தெரியவில்லை. துயரை ஓர் இரவு முழுக்க நீட்டிப்பது கடினம். அவன் துயில்கொண்டிருக்கக்கூடும். எண்ணங்கள் மழுங்கிவிட்டிருக்கும். புதிய காலையை எதிர்கொள்பவனைப்போல் தோன்றினான்.

சிவதர் சுப்ரதரை பார்த்துவிட்டிருந்தார். அவர்கள் அவரை நோக்கி வந்தனர். அவர்களுக்கு முன்னால் வந்த விருஷாலியும் அணுக்கப்பெண்டும் அவர் அருகே வந்து நின்றார்கள். சுப்ரதர் சொல்லின்றி தலைவணங்கினார். அணுக்கப்பெண்டு விழிகளால் சுட்டி “அங்கேதானா?” என்றாள். சுப்ரதர் “ஆம்” என்றார். சிவதரும் பிரசேனனும் அருகே வந்தனர். சுப்ரதர் அவர்களுக்கு தலைவணங்கி விருஷாலியிடம்

“வருக, அரசி!” என்றபின் நடக்க அவர்கள் தொடர்ந்து சென்றார்கள். விருஷாலி ஒரு வெண்நிழல் என வந்தாள். அவள் காலடியின் ஓசைகூட எழவில்லை. காடு முன்காலைக் குளிரில் விறைப்படைந்து நின்றிருந்தது. குருக்ஷேத்ரத்தில் எரிந்த பெருஞ்சிதை அணைந்து சூழ்ந்த புகையை புலரிக்காற்று அள்ளி காட்டுமரங்கள்மேல் பரப்பியது. காலையில் காட்டின் அத்தனை இலைகள்மீதும் கரிப்படலம் இருக்கும். மலர்கள்கூட கரியணிந்திருக்கும். பனித்துளிகள் கருங்குருதி என சொட்டும். அன்னங்களும் நாரைகளும்கூட கருமைகொண்டிருக்கும்.

அரசகுடியினருக்கான இடுகாட்டில் சுபாகுவும் பிற அரசகுருதியினரும் விண்ணடைய சிதையெரிகள் அணைந்து கனல்கொண்டுவிட்டிருந்தன. அங்கிருந்து சிதைக்காவலர்கள் கிளம்பிச்சென்று சாலைகளில் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். சுப்ரதர் ஓர் ஏவலனை அழைத்து “முதற்காவல்மாடத்தில் இருப்பவர்களிடம் சென்று சொல்க! இங்கே எரியம்பு எழுந்ததும் புகழ்முரசுகள் முழக்கப்படவேண்டும்” என்றார். அவன் தலைவணங்கினான். காவல்கோபுரங்கள் எரிந்து அணைய ஒன்றிரண்டே எஞ்சியிருந்தன. அவற்றிலிருந்து முரசுகள் ஒலித்தன. அவர் ஒரு காவல்மாடத்தில் அமர்ந்திருக்கும் பேருடலனான அரக்கர்மைந்தனை நினைவுகூர்ந்தார். அவன் அந்தப் போரை ஆயிரம்கோடி மயிர்க்கால்களால் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்றார்கள்.

கர்ணனின் சிதை ஒருக்கப்பட்டிருந்த இடத்தில் வைதிகர் சடங்குகளை தொடங்கிவிட்டிருந்தார்கள். தொலைவிலேயே அதைக் கண்ட சுப்ரதர் சுட்டிக்காட்டி “அங்கே” என்றார். “இன்னும் பொழுதில்லை. முதல் கதிர் எழுகையில் என நற்பொழுது குறித்திருக்கிறார்கள்.” சிவதர் “ஆனால் இன்னும்

கருக்கிருளே இருக்கிறது" என்றார். "ஆம், ஆனால் கணியர் இன்னும் அரைநாழிகையே உள்ளது என்கிறார்" என்றார் சுப்ரதர். "நாம் கதிரொளிக்காக காத்திருப்பதா அன்றி நூல்கணிப்பையே காலை என ஏற்பதா எனத் தெரியவில்லை. வைதிகர்கள் சில மாற்றுச்சடங்குகளையும் சொன்னார்கள்" என்றார். சிவதர் அதை போதிய அளவில் உளம்கொள்ளாமல் "தெய்வங்கள் முடிவெடுக்கட்டும்" என்றார். சிதையை நிமிர்ந்து நோக்கிக்கொண்டு நின்றார். அவர் முகம் கனிவான ஏதோ நினைவில் இருப்பதுபோல் இருந்தது. பின்னர் "இத்தனை உயரமாக இருக்குமா?" என்றார். சுப்ரதர் "இவற்றுக்கு ஓர் அமைப்பு உள்ளது. இது முடிசூடிய அரசரின் சிதை" என்றார்.

வைதிகர்தலைவர் வந்தார். சிவதர் தலைவணங்க விருஷாலி அப்பால் நின்றாள். வைதிகர் "அரசி இங்கு வருவதைப்பற்றி சொன்னார்கள்" என்றார். அரசியை நோக்கிவிட்டு "பெண்டிர் சுடலைக்காட்டுக்கு வரும் வழக்கம் இல்லை" என மேலும் தயங்கினார். சுப்ரதர் "தாங்கள் பணிகளை நோக்குக, வைதிகரே! நான் வந்து விளக்குகிறேன்" என்றபின் அணுக்கப்பெண்டிடம் "அரசியும் இளவரசரும் அங்கே மரநிழலில் காத்திருக்கட்டும்..." என்றார். அவள் தலையசைத்தாள். சுப்ரதர் சிவதரிடம் "தங்களிடம் பேசவேண்டும், சிவதரே" என்றார். சிவதர் "ஆம்" என்றபின் பிரசேனனிடம் "அன்னையுடன் சென்று அமர்ந்துகொள்க, இளவரசே!" என்றார். பிரசேனன் தலையசைத்தான். அவன் அங்கு உயர்ந்து நின்ற சிதை என்னவென்று புரிந்துகொள்ளவில்லை எனத் தெரிந்தது. அப்பால் சூதர்களின் பாடல் கேட்டுக்கொண்டிருப்பதும் அவனுக்கு பொருளாகவில்லை. அணுக்கப்பெண்டு அவனை அழைத்துக்கொண்டாள். விருஷாலியும் பிரசேனனும்

அவளுடன் செல்ல அவர்கள் ஓர் அத்திமரத்தடியில் சென்று அமர்ந்தனர்.

சுப்ரதர் சிவதரை அழைத்துக்கொண்டு அப்பால் சென்றார். சிவதர் அவர் பேசப்போவதைப்பற்றி ஆர்வம்கொண்டதாகத் தெரியவில்லை. அவர் திரும்பி சிதையை நோக்கியபடி வந்தார். இருமுறை வேரில் கால் தடுக்கினார். சுப்ரதர் நின்றபோது தானும் நின்றார். சுப்ரதர் "சிவதரே, சற்றுமுன் காந்தாரரிடம் பேசினேன். உடன்கட்டை ஏறவேண்டும் என அரசி முடிவெடுத்திருப்பதைப்பற்றி அவர் சொன்னார்" என்றார். சிவதர் "ஆம், அதுவே அவருடைய அறுதியான எண்ணம்" என்றார். "நீங்கள் மெய்யான சூழ்நிலையை அவருக்கு எடுத்துச்சொல்லுங்கள், சிவதரே. ஷத்ரியகுலத்தில் பிறந்த அரசியருக்கு மட்டுமே உடன்கட்டை ஏறும் உரிமை உண்டு. அந்தணரும் வைசியரும்கூட உடன்கட்டை ஏறலாகாது. சூதர்களுக்கோ அது பெரும்பழி சேர்ப்பது."

சிவதர் முகம்சிவந்து மூச்சிரைக்கத் தொடங்கினார். சுப்ரதர் அதை உணராமல் "ஷத்ரியர்களிலும்கூட முடியேந்தும் குடிக்கு மட்டும் உரியது உடன்கட்டை ஏறும் உரிமை" என்றார். சிவதர் அப்பேச்சை தவிர்க்க விழைபவர்போல வேறு பக்கம் திரும்பிக்கொள்வதுபோன்ற உடலசைவை வெளிப்படுத்தினார். சுப்ரதர் "சூதஅரசி அரசருடன் அரியணை அமர்ந்தவரும் அல்ல" என்றார். சீற்றத்துடன் திரும்பிய சிவதர் "வாழ்ந்தநாள் வரை அரசரை சூதர் என்றீர்கள். இப்போது அரசியை சூதப்பெண் என்று சிறுமை செய்கிறீர்களா?" என்றார். சுப்ரதர் திகைத்து "நான் அவ்வாறு சொல்லவில்லை... நான் சொன்னவற்றுக்கு அவ்வாறு பொருளில்லை" என்றார்.

சிவதர் உரத்த குரலில் "நீர் சொன்னது காந்தாரரின் கருத்து. அது இங்குள்ள ஷத்ரியர்களின் கருத்து. அவரிடம் சென்று சொல்லும், அரசி உடன்கட்டை ஏறுவார். அது அவர் உரிமை. அவர் எப்போது இவர்கள் நோக்கில் ஷத்ரியர் ஆனார்? இவர்களுக்காக களம்நின்று வீழ்ந்தபோது இல்லையா? அவர் அடைந்த மீட்பை இன்னமும் அரசிக்கு நீங்கள் அளிக்கவில்லை அல்லவா?" என்றார். சுப்ரதர் பேச்செடுக்க முயல கையசைத்து அவரைத் தடுத்து சிவதர் சொன்னார் "அவர்களிடம் சொல்லும். உடன்கட்டை ஏறுவதே இன்று அரசிக்கு வெற்றி எனக் கருதப்படும் என்று..."

சுப்ரதர் சீற்றத்துடன் "அதைத் தடுக்க ஆணையிடும் உரிமை அரசருக்கு உண்டு" என்றார். "அவர் ஆணையிடட்டும். அரசி அதனை ஏற்கவில்லை என்றால் என்ன செய்வார்? சிறைபிடிப்பாரா? சிறையில் அவர் எரிபுகுந்தால் என்ன செய்வார்? உயிரைப் போக்கிக்கொள்ளும் உரிமையை எவரும் எவரிடமிருந்தும் பறிக்க இயலாது" என்றார் சிவதர். சுப்ரதர் கசப்புடன் "விந்தைதான்... அவரை எரியூட்டுவதற்காக நீர் சொல்லாடுகிறீர்" என்றார். "அவர் அரசியா சூதப்பெண்ணா என்பது எரியினூடாகத்தான் முடிவாகிறது எனில் அதைத்தான் செய்யவேண்டியிருக்கிறது" என்றார் சிவதர். பின்னர் "இனி இதைப்பற்றி நாம் பேசவேண்டியதில்லை. சென்று சொல்க உமது அரசரிடம்!" என்றபடி நடந்தார். சுப்ரதர் குழப்பத்துடன் தொடர்ந்து சென்றார்.

அவர்கள் மீண்டும் சிதையருகே வந்தபோது அணுக்கப்பெண்டு எழுந்து அவர் அருகே வந்து தணிந்த குரலில் "மைந்தரின் சிதைகள் எங்கே என அரசி கேட்கிறார்" என்றாள். சுப்ரதர் ஒருகணம் தத்தளித்தபின் "அவர்கள் வீரர்களுக்குரிய

முறையில் எரியூட்டப்பட்டுவிட்டார்கள்" என்றார். "அந்தியிலேயே அரசகுடியினரை எரியூட்டுவது வழக்கம். அரசரே முதல் எரி அளிப்பதும் தொன்மையான போர்க்கள நடைமுறை." அவள் தயங்கி நிற்க "சென்று சொல்க, அவர்கள் விண்ணேகிவிட்டனர் என!" என்றார். அவள் திரும்பிச்சென்றாள். சுப்ரதர் பெருமூச்சுடன் "தெய்வங்களே" என முனகிக்கொண்டார்.

சிவதர் "அவர்களுக்கு தனிச்சிதைகள் இல்லையா?" என்றார். "இல்லை, கௌரவ மைந்தரைக்கூட தனிச்சிதையில் ஏற்றவில்லை. முடிசூடிய அரசர்களுக்கு மட்டுமே தனிச்சிதை" என்றார் சுப்ரதர். சிவதர் ஐயத்துடன் கூர்ந்துநோக்கி "அரசரை விடியும்வரை வைத்திருந்தீர்கள். மைந்தரையும் வைத்திருக்கலாமே" என்றார். "அவ்வண்ணம் வழக்கமில்லை" என்றார் சுப்ரதர். சிவதர் சினத்துடன் "எல்லா வழக்கங்களையும் மீறமுடியும். அரசர் எண்ணினால் இயற்றலாம். நீர் அரசரிடம் கோரினீரா?" என்றார். சுப்ரதர் தன்னை இயல்புநிலைக்கு கொண்டுசென்று நிறுத்தி தணிந்த குரலில் "நீர் வரும் வழியில் கௌரவப் படையை பார்த்தீரா?" என்றார். "இல்லை, இருளுக்குள் ஒன்றும் தெரியவில்லை" என்று சிவதர் சொன்னார்.

"ஒளி வந்தாலும் பார்த்திருக்க இயலாது. ஏனென்றால் அங்கே படைகள் இல்லை" என்றார் சுப்ரதர். "சிவதரே, நேற்றைய போரில் படைகளின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. எரியுண்ட உடல்கள் கூடிக்குழைந்து நிணச்சேறாக கிடந்தன. அவற்றை சேர்த்து ஒட்டுமொத்தமாக குருக்ஷேத்ரத்திலேயே எரியூட்டிவிட்டனர்." சிவதர் "ஏன்?" என்றார். அவருடைய தலை நடுக்கு கொண்டது. "களத்தையே எரியூட்டுவதா? என்ன அது?" சுப்ரதர் "நான் எத்தனை சொன்னாலும் போரை நேரில் காணாத உமக்கு அது புரியாது. அதை பெருங்காவிய ஆசிரியர் ஒருவர்

எழுதிக் காட்டலாகும்" என்றார். "வேறுவழியே இல்லை. தனித்தனி உடல்களென எவரையும் பிரித்து எடுக்கவே முடியாத நிலை." சிவதர் அதை கற்பனைசெய்ய முயன்றார், உள்ளம் சென்று சுவரில் முட்டிக்கொள்வதை அவர் உடலசைவு காட்டியது. தலையை அசைத்து திரும்பிக்கொண்டார்.

ஆனால் அவரால் ஏதேனும் கேட்காமல் இருக்க இயலவில்லை. "போரில் எரி பயன்படுத்தலாகாதென்று நெறியுள்ளதே" என்றார். "அந்நெறி நம் அரசராலும் மீறப்பட்டது" என்றார் சுப்ரதர். "எனில் அதுவும் நன்றே. அவர் முன்னரே தன் எல்லைகளை மீறியிருக்கவேண்டும்" என்றார் சிவதர். மீண்டும் முகம் சிவந்து மூச்சிரைத்தார். சுப்ரதர் "நான் சென்று அரசரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்" என்றார். சிவதர் ஒன்றும் சொல்லவில்லை. கைகளைக் கட்டியபடி சிதையை நோக்கியபடி நின்றார். சுப்ரதர் "அங்கே அரசர் கிடக்கிறார். அதோ, பந்த வளையம் தெரியும் இடத்தில்" என்றார். "நான் அவ்வாறு அவரை பார்க்க விழையவில்லை" என்றார் சிவதர். கடும் சினத்துடன் அதை சொல்வதுபோல் தோன்றியது. சுப்ரதர் அவர் முகத்தை ஒருமுறை நோக்கிவிட்டு விலகி நடந்தார். சிவதர் வேள்வி நிகழும் இடம் நோக்கி சென்றார்.

சுப்ரதர் துரியோதனன் நின்றிருந்த இடத்தை அடைந்தார். கர்ணனின் உடல்கிடந்த களத்தைவிட்டு விலகி முள்மரத்தின் அடியில் துரியோதனன் நின்றிருந்தான். அருகே ஒரு சிறிய பாறைமேல் சகுனி அமர்ந்திருந்தார். அந்தப் பாறைக்காகவே அந்த மரத்தடி தெரிவுசெய்யப்பட்டிருக்கவேண்டும். அவர் அணுகியதை சகுனிதான் பார்த்தார். துரியோதனன் தொலைவில் பந்தங்களின் ஒளியில் கிடந்த கர்ணனை

நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். அவன் முகம் மலர்ந்திருப்பது போலிருந்தது. இனிய நினைவு ஒன்றில் இருப்பவனைப் போல. இசை கேட்டுக்கொண்டிருப்பவனைப் போல.

சுப்ரதர் சகுனியை அணுகி "அரசி வந்துவிட்டார்" என்றார். சகுனி "ஆம், பார்த்தேன்" என்றார். சுப்ரதர் "சிவதரிடம் பேசினேன்" என்றார். சகுனி காத்திருந்தார். சுப்ரதர் "அது அரசியின் உரிமை என அவர் சொல்கிறார். சூதர் என அரசர் இழிவுசெய்யப்பட்டார். இன்று அரசியும் அவ்வாறு இழிவுசெய்யப்படுவதை ஏற்க முடியாது என்கிறார்" என்றார். மேலும் அழுத்தமான குரலில் "அரசி சூதப்பெண் என தடுக்கப்பட்டால் எரிபுகுவதே அவருடைய உரிமை என்று சொன்னார்" என்றார். சகுனி சினம்கொண்டு உரத்த குரலில் "அது இங்கே வழக்கமில்லை" என்றார். அவர் ஏற்கெனவே சினத்துடன் இருக்கிறார் என்று தோன்றியது. அதை அத்தருணத்தைக்கொண்டு வெளிப்படுத்துகிறார்.

"வழக்கங்கள் அனைவரையும் கட்டுப்படுத்தாது. அரியவர்கள் வழக்கங்களை மீறிச்செல்கிறார்கள்" என்று சுப்ரதர் சொன்னார். "அதற்கு நெறி இல்லை. அதை அரசு ஒப்பாது" என்றார் சகுனி. அவர் குரல் உடைந்து விந்தையாக ஒலித்தது. முகம் இழுபட்டிருக்க உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அந்த மிகையுணர்ச்சியை சுப்ரதரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் சீரான குரலில் "எந்நெறியையும் எந்த வழக்கத்தையும் மீறலாம், அதற்குரிய விளைவுகளைப் பற்றி எண்ணாமலிருந்தால்" என்றார். "அவ்விளைவுகளை பொருட்டென எண்ணாதவர்கள் நெறிகளையும் பொருட்டென எண்ண மாட்டார்கள். சிதையேற அரசி முடிவெடுத்துவிட்டால்

என்ன செய்வீர்கள்?" சகுனி "இங்கே பொறுப்பிலிருக்கும் சிற்றமைச்சர் நீர். நீர் ஆற்றவேண்டிய கடமை இது. அவரை நீர் தடுக்கவேண்டும்" என்றார்.

"நெறியை சொல்லவேண்டியது என் பொறுப்பு. அதை நான் சொன்னேன். அதை அவர் பொருட்டெனக் கொள்ளமாட்டார் எனத் தெளிந்தேன். இனி அவர் விழைவதை நிகழ்த்துவது என் கடமை." சகுனி ஒரே உந்தலில் எழுந்து தள்ளாடி நின்று "நீர் அதன் விளைவை சந்திப்பீர். இது அரசாணை!" என்றார். புன்னகைத்து "என் குலஅறம் இது, காந்தாரரே. நெறிகளைப் பேணுவது. மானுடநெறிகளை கூறுவது. அவற்றைக் கடந்தமையும் தெய்வநெறிகளை கண்டுகொள்வது. என் குலப்பணியை நிறைவேற்றுகையில் உங்களை அல்ல எந்த அரசரையேனும் ஒரு பொருட்டென நான் எண்ணுவேன் என நினைக்கிறீர்களா? நீங்கள் என்னை கழுவேற்றினாலும் அதன் மேல் தர்ப்பையில் என என்னால் அமர்ந்திருக்க இயலும்" என்றார்.

சகுனி தளர்ந்து "நீங்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்திருக்கிறீர்கள்... நான் இதை முடித்துவைக்கிறேன்" என்றார். "நான் இளவரசரிடம் பேசுகிறேன்... அவரே முடிவெடுக்கட்டும், அன்னையிடம் அவர் ஆணையிடட்டும். இன்று சம்பாபுரியின் முடியிலா அரசர் அவரே." சகுனி கைதட்டி ஏவலனை அழைத்து "அங்கநாட்டு இளவரசரை அழைத்து வா" என்றார். சுப்ரதர் துரியோதனனை பார்த்தார். அவன் அச்சொற்கள் எதையுமே அறிந்ததுபோல் தெரியவில்லை. அவன் அங்கே இல்லாததுபோலவே சகுனி நடந்துகொண்டார். அவருடைய அந்த பாவனை அப்படியே தன்னிலும் அமைய அவர் அங்கிருப்பதை தானும் மறந்துவிட்டிருந்தார்.

அவர் ஏவலனுடன் பிரசேனன் வருவதை கண்டார். அவன் அருகே வர ஏவலன் பின்னால் தங்கிவிட்டான். பிரசேனன் வெறுமனே தலைவணங்கினான். சகுனி "உங்கள் தந்தையை பார்த்தீர்கள் அல்லவா?" என்றார். அதை ஏன் கேட்கிறார் என ஒருகணம் வியந்ததுமே சுப்ரதர் அந்த நுட்பத்தை உணர்ந்தார். அவ்வினா பிரசேனனை நெகிழச்செய்வதை உணரமுடிந்தது. அவன் உள்ளம் நிலையழிகிறது. அகச்சொற்கள் சிதறுகின்றன. அவன் தொண்டை அசைந்தது. "ஆம்" என்று அவன் சொன்னான். "பேரழகர். மும்முடி சூடிய பேரரசரின் பொலிவுகொண்டவர். இங்கிருந்து அவரையே நோக்கிக்கொண்டிருக்கிறோம். அரசர் விழியகற்றாமல் நின்றிருக்கிறார்." பிரசேனனின் விழிகளிலிருந்து நீர் வழியத் தொடங்கியது. "வென்று சக்ரவர்த்தியானவர்கள் உண்டு. அங்கர் அள்ளி வழங்கி சக்ரவர்த்தி ஆனவர்" என்றார் சகுனி.

பிரசேனன் விசும்பியபடி முகம் குனித்தான். உதடுகளை அழுத்தி இறுக்கிக் கொண்டான். "அவர் இங்கே களத்தில் பெருவீரத்தை வெளிப்படுத்தினார். சூதர்கள் அவர் புகழை சொல்லிச்சொல்லி நிறையாமல் தவிக்கிறார்கள். இதோ அவர் பேரரசர்களைப்போல் சிதையேறுகிறார். இந்த எரி அவரை விண்ணுலகு கொண்டுசெல்லும் செவ்வண்ணக் குதிரை. மாவீரர்களின் உடலை தூய அவியென தேவர்கள் விண்ணிலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களின் சிதையில் எழுபவன் சாவின் எரியான கிரவ்யாதன் அல்ல, வேள்விநெருப்பான ஜாதவேதன் என்பார்கள். இங்கே நான்கு எரிகளும் மூட்டப்படுகின்றன. ஐந்தாம் எரியான திரிகாலன் தோன்றி அவரை விண்ணுக்குக் கொண்டுசெல்கிறான்."

கண்ணீர் உதிர பிரசேனன் குனிந்து நின்றான். சகுனி "எண்ணி நோக்குக! இந்தச் சிதை வெறும் எரி அல்ல. இது ஓர் அரியணை. தேவர்களுக்குரிய பொன்னால் உருவாக்கப்படுவது" என்றார். பின்னர் அவனை சிலகணங்கள் கூர்ந்துநோக்கிவிட்டு "இதை அரசியிடம் சொல்க! அவர் அங்கநாட்டு அரியணையிலேயே அமரத் துணியாதவர். தேவர்கள் வாழ்த்தும் இந்த விண்ணக அரியணையில் அவர் அமர விரும்பமாட்டார்" என்றார் சகுனி. பிரசேனன் "நான் வரும் வழியில் ஒருமுறை கேட்டேன், அவருடைய முடிவு அறுதியானதா என்று. ஆம் என ஒற்றைச் சொல்லில் உரைத்தார். ஒற்றைச் சொல் மறுமொழி என்பது எப்போதும் உறுதியானது. சற்றேனும் அசைவிருந்தால்தான் மேலும் சொற்கள் எழும்" என்று பிரசேனன் சொன்னான்.

"அது அவர் அடையும் உணர்வெழுச்சி. அவர் அங்கர்மேல் கொண்டிருந்த அன்பை உலகறியும்" என்று சகுனி சொன்னார். "இளவரசே, நீங்கள் சென்று அவரிடம் இதை சொல்க! இதற்கு அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவருக... இந்த அரியணையில் அரசருக்கு நிகராக அமர அவர் விழைகிறாரா, அவருடைய இடம் அது என கருதுகிறாரா? அதை மட்டும் உசாவுக!" பிரசேனன் சிலகணங்கள் அவரை நோக்கியபின் "ஆம், அதை கேட்கலாம். அதை கேட்க விட்டுவிட்டோம் என பின்னர் நமக்குத் தோன்றலாகாது" என்றான். அவன் திரும்பிச்செல்வதை சுப்ரதர் நோக்கி நின்றார். சகுனி "அவர் ஏற்கமாட்டார். ஒருகணத்தில் உணர்வெழுச்சிகொண்டு உடன்கட்டை ஏற முடிவெடுத்திருப்பார். ஷத்ரியநிலையையும் சதியன்னை என்னும் புகழையும் விரும்புபவர் அல்ல அவர்" என்றார். சுப்ரதர் ஒன்றும் சொல்லவில்லை. தொலைவில் வேதமும் அருகே சூதர்களின் புகழ்மொழிகளும் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தன.

பிரசேனன் திரும்பி வந்து "அன்னையிடம் கேட்டேன். அன்னை நீங்கள் சொன்னதுபோல் எண்ணியிருக்கவில்லை. அரசருக்கு நிகராக அமைய விழையவில்லை, அது பிழை என்று சொன்னார்" என்றான். சகுனி முகம் மலர்ந்து "ஆகவே அவர்கள் உடன்கட்டை ஏறப்போவதில்லை. அவரை திரும்ப அழைத்துச்செல்ல நான் ஆணையிடுகிறேன்" என்றார். "ஆனால் அவர் உயிர்வாழ விழையவில்லை. வெளியே சென்று தனியாக எரிபுக எண்ணுகிறார். அதில் அவருக்கு எண்ண மாற்றமில்லை. அரசர் இல்லாத ஒரு விடியலை விழிகளால் பார்க்கமாட்டேன் என்று சொன்னார்." சகுனி "அவ்வண்ணமென்றால்..." என்று சொல்லத் தொடங்க அவரை கையமைத்து நிறுத்தி பிரசேனன் "அவ்வண்ணமென்றால் அன்னை சிதையேறுவதே உகந்தது என நான் நினைக்கிறேன். அன்னை சிதையேறட்டும்" என்றான்.

"அந்த முடிவை அவரோ நீங்களோ எடுக்க இயலாது. ஏனென்றால் இங்கே உள்ள நெறிகளின்படி ஷத்ரியப் பெண்கள் மட்டுமே உடன்கட்டை ஏறமுடியும்..." பிரசேனன் கூர்ந்த விழிகளுடன் "எந்தை ஷத்ரியர் என்றால் அன்னையும் ஷத்ரியரே. அவருடைய உள்ளத்தமர்ந்த அரசி அவரே. உடன் சிதையிலும் அமரட்டும்" என்றான். "இங்கே அதற்கு ஒப்புதல் இல்லை..." என்றார் சகுனி. "ஏன்?" என்று பிரசேனன் கேட்டான். "ஏனென்றால் அங்கரும் ஷத்ரியர் அல்ல, அவர் துணைவியும் ஷத்ரியர் அல்ல" என்று சகுனி சொன்னார். "அவர் ஷத்ரியர் என நான் உரைக்கிறேன். அதை மறுக்கும் எவரும் அங்கநாட்டுடன் போரிடலாம். அன்றி தனிப்போரில் என்னை எதிர்க்கலாம். எதிர்ப்பவரை வென்று நிறுவுகிறோம், எந்தையும் எங்கள் குடியும் ஷத்ரியர்கள் என்று. நூல்கள் கூறும் நெறி அதுவே."

சிறுவன் எனத் தெரிந்தவனில் வந்த மாற்றம் சகுனியை பதறச்செய்தது. அவன் ஒருகணத்தில் கர்ணன் என ஆகிவிட்டதுபோல் தோன்றியது. சுப்ரதர் "போதும்" என்றார். "இதில் முடிவெடுக்கவேண்டியவர் அரசர். இதோ சொல்கேட்கும் அருகில்தான் அவர் இருக்கிறார். அவர் கூறட்டும்." சகுனி துரியோதனனை.நோக்கி திரும்ப சுப்ரதர் உரத்த குரலில் "அரசே, அரசே" என்றார். துரியோதனன் திடுக்கிட்டு திரும்பி நோக்கி "என்ன?" என்றான். அவன் புன்னகைகொண்டிருப்பதைக் கண்டு சுப்ரதர் திகைத்து சொல்லடங்கினார். "ஒன்றுமில்லை" என்றார் சகுனி. சுப்ரதர் "இல்லை அரசே, ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும்... தாங்கள்..." என தொடங்க "அந்தணராக நின்று நீங்கள் முடிவெடுங்கள், அமைச்சரே. அம்முடிவே என் முடிவு" என்றபின் அவன் திரும்பி கர்ணனின் உடலை நோக்கினான்.

சுப்ரதர் "அந்தணன் நீர்தொட்டு முடிவெடுக்கவேண்டும். நீருக்குமேல் எனில் குருதிதொட்டு முடிவெடுக்கவேண்டும். அதற்கும் அப்பால் விழிநீர் தொட்டு முடிவெடுக்கவேண்டும். என் முடிவு இது" என்றார். "அரசி சிதையேறட்டும். பேரரசியருக்குரிய முறையில். இங்குள்ளோர் அனைவரும் பாதம்தொட்டுப் பணிய, மலர்மாலைசூடி அனல்புகட்டும்." சகுனியின் உடலில் மெல்லிய தவிப்பு அசைந்தது. "அங்கநாட்டு அரசரை உள்ளாழத்தில் விரும்பாத எவரும் இங்கிருக்கலாகாது. இதுவும் என் ஆணை" என்றார் சுப்ரதர். அவர் பிரசேனனிடம் "வருக, இளவரசே!" என்று சொல்லிவிட்டு திரும்பிச்செல்ல சகுனி பெருமூச்சுவிட்டு தன் தேர்ப்பாகனை நோக்கி அருகில் வந்து தன்னை அழைத்துச்செல்லும்படி ஆணையிட்டார்.

இருட்கனி - 66

வேதியரின் நான்கு எரிகுளங்களிலும் அனல் எழுந்து கொழுந்தாடிக்கொண்டிருந்தது. அதர்வ வேதம் உடனொலித்தது. இடுகாட்டில் ஒலிக்கத்தக்க ஒரே வேதம். ஆனால் அதிலுள்ள சொற்களில் பெரும்பகுதி பிற மங்கல வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. அவை தங்கள் அணிகள் அனைத்தையும் கழற்றிவிட்டு எழுகின்றன. வாளின் உறையில்தான் பொற்செதுக்குகளும் அருமணிநிரைகளும். உருவப்பட்ட வாள் கூர் ஒன்றாலேயே ஒளிகொண்டது. வேதங்களில் அதர்வமே விசைகொண்டது. தெய்வங்களிடம் அது மன்றாடுவதில்லை, ஆணையிடுகிறது, அறைகூவுகிறது. மூன்று வேதங்களின்மேல் ஏறி நின்று அடையப்பட்டது அதர்வம்.

வேதியர் முன் நின்றிருந்த கணியர் சுப்ரதர் அருகே வந்து "எரிகுளங்கள் எழுந்துவிட்டன. பொழுதும் அணைகிறது" என்றார். "இன்னும் சற்றுநேரம்தான்." சுப்ரதர் "பார்ப்போம்" என்றபின் சென்று சற்று விலகி நின்று விருஷாலியின் அணுக்கப்பெண்டை அருகழைத்தார். அவள் வந்து தலைவணங்க "அரசி உடன்கட்டை ஏறுவதென்றால் அணியாடைகள் பூணவேண்டும்" என்றார். அவள் "எடுத்துவந்துள்ளேன்" என்றாள். சுப்ரதர் வெறுமனே நோக்க "அவர்களின் மணநாள் ஆடையும் அன்று அணிந்த அணிகளும்" என்றாள். "அணிவித்து ஒருக்குக!" என்றார். அவள் "இன்னும் சிறுபொழுதுக்குள்" என்றாள். அவர் அவளை கூர்ந்து நோக்கி "அரசி அதே உறுதியுடன்தான் இருக்கிறார்களா?" என்றார். "அவர் எப்போதுமே உறுதி மாறியவர் அல்ல" என்றாள். "நீ அவருடன்

நெடுங்காலமாக இருக்கிறாயா?" என்றார். "அவர் குழவியாக இருக்கையிலேயே அறிந்தவள்" என்றாள் அணுக்கப்பெண்டு.

சுப்ரதர் ஒவ்வொன்றாக நோக்கியபடி நடந்தார். பிரசேனன் சிவதரின் உதவியுடன் வெண்ணிற ஆடை அணிந்துகொண்டிருந்தான். ஏவலர் இருவர் அருகே வந்து நின்றனர். அவர் நோக்க "அனைத்தும் ஒருங்கிவிட்டன..." என்றார் முதிய ஏவலர். "ஆம், தொடங்கிவிடுவோம்" என்றார் சுப்ரதர். "காந்தாரர் கிளம்பிவிட்டார் அல்லவா?" என்று விழியை வேறுபக்கம் திருப்பியபடி கேட்டார். "ஆம், அரசர் மட்டும் இருக்கிறார்." சுப்ரதர் "என்ன செய்கிறார்?" என்றார். "அருகே அமர்ந்து அங்கநாட்டரசரை பார்த்துக்கொண்டிருக்கிறார். உள்ளம் இங்கிருப்பதுபோல் தெரியவில்லை. புன்னகையுடன் தென்படுகிறார்." சுப்ரதர் தலையசைத்தார். அவர்கள் வணங்கி பின்னடைந்தார்கள்.

சுப்ரதர் நிலைகொள்ளாமல் நடந்தார். முடிவெடுக்கவேண்டும். வானை நோக்கியபோது முற்றிருளே தெரிந்தது. காத்திருப்பதா, அன்றி அருமணியில் எழும் கதிரொளியே போதுமா? எல்லாமே சடங்குகள்தான். ஆனால் கதிரெழவில்லை என்றால் அது காலநினைவில் நின்றிருக்கும். அவர் அன்றும் போர் நிகழுமா என அறிய விழைந்தார். போர் நிகழாதென்றால் முழுப்பகலும்கூட கதிருக்காக காத்திருக்கலாம். ஆனால் அதை எவரிடம் கேட்கவியலும்? அவர் தொலைவில் நின்று துரியோதனனை பார்த்தார். பின்பக்கத் தோற்றத்திலேயே அவன் வேறு ஒருவன் என தோன்றினான்.

நீள்மூச்செறிந்தவராக அவர் திரும்பி சிதைநோக்கி சென்றார். தொலைவில் விருஷாலி அணியாடை அணிந்து நின்றிருப்பதை கண்டார். மணக்கோலம்தான், ஆனால் முழுமையான

அமங்கலத்தன்மை கூடியிருந்தது. ஓர் அணி குறைவில்லை. ஆயினும் அவளிடம் சாவு படிந்திருந்தது. ஏன்? அவள் முகம் கலங்கி வீங்கியதுபோல் தெரிந்தது. விழிகள் மங்கலடைந்து இரு கரிய கூழாங்கற்கள் என உயிரற்றிருந்தன. அக்கணமே அவர் முடிவெடுத்தார். நேராக வைதிகரிடம் சென்றார். வைதிகர்தலைவர் அவரை நோக்க "அருமணியில் கதிரவன் எழட்டும். நாம் அரசரை சிதையேற்றுவோம்" என்றார். அவர் "அதுவே உகந்தது... இன்றும் போர்நிகழும் என்றார்கள்" என்றார். சுப்ரதர் "எவர்?" என்றார். "காந்தாரர்" என்றார் வேதியர். "நான் அவரிடம் கேட்டேன். அரசர் முடிவை அறிவித்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறார்." சுப்ரதர் பெருமூச்சுவிட்டு "ஆம், அதை நான் எதிர்பார்த்திருக்கவேண்டும்" என்றார்.

சுப்ரதர் சூதர்கள் பாடிக்கொண்டிருந்த இடத்தை அடைந்தபோது நின்றிருந்த சூதர்களில் ஒருவர் வந்து அருகே நின்றார். "பொழுதணைந்துவிட்டது. அரசரை சிதையேற்றுவோம். கதிரொளியாக அருமணியின் சுடரே போதும் என அந்தணர் சொல்கிறார்கள்" என்றார். அவர் தலையசைத்தார். சுப்ரதர் துரியோதனனிடம் "அரசே, எழுக! சடங்குகள் தொடங்கவிருக்கின்றன" என்றார். "ஆம்" என அவன் எழுந்தான். "சுபாகு எங்கே?" என்று ஆடையை சீரமைத்தபடி இயல்பாக கேட்டான். சுப்ரதர் பேசாமல் நின்றார். அவன் உடனே புரிந்துகொண்டு "ஆம்" என்று தலையசைத்தான். "செல்க!" என்றான். சுப்ரதர் தலைவணங்கி பின்னடைந்தார்.

ஆனால் அங்கிருந்து விலக அவரால் இயலவில்லை. அப்பால் தயங்கி நின்று சூழ நோக்கினார். நிலைகொள்ளாமல் சிதைக்கும் கர்ணனின் உடலுக்குமாக விழிகளை ஓட்டிக்கொண்டிருந்தார். கர்ணனை விழிநிலைக்க நோக்க அவரால் இயலவில்லை.

ஆனால் வேறு எதை நோக்கினாலும் விழிகள் கர்ணனை நோக்கியே மீண்டன. ஒருமுறை தொட்டுவிட்டு எழுந்த நோக்கு அதிர்ந்து மீண்டும் சென்று தொட்டது. அவன் தொடைக்கவசத்தின் இடுக்கில் இருந்து குருதி கசிவதுபோல தோன்றியது. அது பந்தங்களின் செவ்வொளிதான் என முதலில் எண்ணினார். விழி திருப்பிய பின்னரும் அக்காட்சி அவ்வண்ணமே எஞ்சியது. மீண்டும் நோக்கியபோது அது மேலும் துலங்கியது.

அவர் மேலும் அருகே சென்று கூர்ந்து நோக்கினார். அது ஒளியின் தோற்றம் என பலமுறை சொல்லிக்கொண்டும் விழி உறுதியாகக் காட்டியது. குருதியேதான். கொழுத்த துளியாக திரண்டு, சொட்டாமல் வழிவை நடித்து நின்றது. அவர் திரும்பி ஏவலனை நோக்கி அருகே வரும்படி அழைத்தார். அவன் வந்ததும் கவசத்தை கழற்றும்படி சொன்னார். அவன் திகைத்தபின் ஒன்றும் சொல்லாமல் தொடைக்கவச அடுக்குகளை ஒவ்வொன்றாக அகற்றினான். கவசங்கள் குருதி நனைந்திருந்தன. உள்ளிருந்த ஆடை குருதியில் ஊறியிருந்தது.

ஏவலன் அச்சத்துடன் கைநடுங்க கவசத்தை நழுவவிட்டான். அது மணியோசையுடன் மண்ணில் விழுந்தது. அவர் சினத்துடன் திரும்பி நோக்க ஏவலன் "அணியர் முழுமையாக நோக்கினர், அமைச்சரே. நாங்களும் நோக்கினோம். இந்தப் புண் எங்கள் விழிகளுக்கு தென்படவே இல்லை" என்றான். அது புதுக்குருதி என்பது அவன் சித்தத்தை எட்டவில்லை. சுப்ரதர் சினத்துடன் ஆடையை அகற்றும்படி கையசைவால் சொன்னார். ஆடை அகற்றப்பட்டபோது அவன் தொடையில் இருந்த சிறு புண் தென்பட்டது. சுப்ரதர் கூர்ந்து நோக்கினார். அது அம்புப்புண்

என தோன்றவில்லை கூரிய ஊசி குத்தி துளைத்துச் சென்றதைப்போல தெரிந்தது.

அவர் குழப்பத்துடன் சூதர்களை நோக்கினார். அவர்கள் வேறு ஓர் உலகிலிருந்தனர். அவரைக்கூட அவர்கள் உணரவில்லை. அவர் நோக்குவதைக் கண்டு துரியோதனன் அருகே வந்தான். அவன் குனிந்து நோக்க சுப்ரதர் "புதுப் புண் என படுகிறது. குருதி தூயதாக உள்ளது. அரசர் களம்பட்டு நெடும்பொழுது ஆகிறது. அவர் உடலும் நன்கு குளிர்ந்துள்ளது" என்றார். துரியோதனன் சிலகணங்கள் நோக்கிக்கொண்டிருந்தான். "ஒருவேளை..." என்றபின் கர்ணனின் முகத்தை நோக்கிய சுப்ரதர் "விந்தை" என்றார்.

துரியோதனன் வியப்பற்ற குரலில் "அது அவ்வாறே இருக்கட்டும். நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை" என்றான். சுப்ரதர் அவனை ஒருகணம் நோக்கிவிட்டு எழுந்துகொண்டார். கவசத்தை மீண்டும் அணிவிக்கும்படி ஏவலனிடம் சொன்னார். அந்தப் புண்ணை அழுத்திக்கட்டி குருதியை நிறுத்திவிடமுடியாது என அவருக்கு தோன்றியது. ஏவலன் கவசங்களை அணிவிப்பதை நோக்காமல் விழிகளை திருப்பிக்கொண்டார். அது அம்புபட்ட புண் அல்ல. மிகச் சிறிய கூரிய துளை. ஊசியா? ஊசி எப்படி கவசம் கடந்து செல்லமுடியும்? ஆடையை அணிவிக்கையிலா? ஆனால் அத்தனை ஆழமாகவா? அவர் தன் தலையை உதறி அவ்வெண்ணங்களை தவிர்த்தார்.

தொலைவில் நின்றிருந்த காவலன் அவருடைய தலையசைவை அழைப்பு என எடுத்துக்கொண்டு அருகே வந்தான். அவர் அவனிடம் கையசைத்ததும் அவன் கையசைக்க காட்டின் ஓங்கிய மரத்தின் மேலிருந்த

முரசுமேடையிலிருந்து முரசொலி எழுந்தது. கொம்புகள் பிளிறியபடி இணைந்தன. தொலைவில் மேலும் மேலும் முரசுகள் ஒலித்தன. ஆனால் வழக்கமாக படைகளிலிருந்து எழும் முழக்கம் கேட்கவில்லை. அங்கே படைகளே இல்லை. சிவதர் பிரசேனனை அழைத்துக்கொண்டு வந்து சிதையருகே நின்றார். பிரசேனனின் விழிகள் சென்ற திசையை நோக்கி தன் விழிகள் திரும்பியபோதுதான் மீண்டும் கர்ணனை பார்த்தார். அவர் உள்ளம் முதல்முறை அவனை பார்க்கநேர்ந்ததுபோல் அதிர்ந்தது. பந்தங்களின் ஒளியில் அணிகள் மின்ன உள்ளத்துள் புன்னகை நிறைந்திருப்பது போன்ற முகத்துடன் அவன் படுத்திருந்தான்.

பேரழகு, பேரழகு, பேரழகு என அவர் உள்ளம் சொல்வடிவாகி பெருகியோடியது. இத்தனை பேரழகை ஏன் அளித்தன தெய்வங்கள்! அவனைப் பார்க்கும் எவரும் அதை கேட்டிருப்பார்கள். தெய்வமாகும்பொருட்டு. தெய்வங்கள் மானுடரை முழுமையாக வென்றே அந்தப் பீடத்தை அடைகின்றன. மானுடரை எச்சமில்லாது வெல்லும் வழி ஒன்றே. அவர்களின் தன்னிலைகளை சிறிதாக்குதல். ஆணவங்களை அணுவாக்குதல். அதனூடாக தான் பேருருவாதல். வாழ்நாளெல்லாம் அவன் இயற்றியது அதுதானா? எத்தனை பேரழகு! பிரசேனனின் விழிகள் கர்ணனின் உடலில் இருந்து அகலவில்லை. ஆனால் சிவதர் தலைகுனிந்து இரு கைகளையும் விரல்கோத்து வயிற்றுடன் சேர்த்து நின்றிருந்தார். அவருடைய தோள்தசைகள் இறுகியசைந்தன. கழுத்துநரம்பு புடைத்திருந்தது. உதடுகள் இறுகியிருந்தன. பேரெடை ஒன்றை தூக்கியிருப்பவர்போல. பெருவிசை ஒன்றை தடுத்துப் பற்றியிருப்பவர்போல.

துரியோதனனும் விழியசைக்காமல் கர்ணனை நோக்கிக்கொண்டிருந்தான். முகம் அதே மலர்வுடன் இருந்தது. விழிகளில் இளமைந்தர்களுக்குரிய ஒளி. அவர் விருஷாலியை பார்த்தார். அவள் முகம் அவரை மீண்டும் அதிரச்செய்தது. அது இறந்துவிட்டிருந்தது. அணுக்கப்பெண்டு கொண்டுவந்த மலர்மாலையை அவள் கழுத்தில் அணிந்தாள். வெண்ணிறப் பட்டால் உடலை முழுக்க மூடினாள். அவள் விழிதூக்கி கர்ணனை நோக்கவில்லை என்பதை சுப்ரதர் உணர்ந்தார். திரும்பி கர்ணனைப் பார்த்தார். இறந்தவன் உயிரொளியுடன் மின்ன இன்னும் இறக்காதவளின் உடல் பிணம்போல் தெரிகிறது.

எண்ணிக்கொண்டு உடல் திடுக்கிட சுப்ரதர் சிதைக்காவலனை நோக்கி சென்று "விஜயம்... அவருடைய வில் சிதையில் வைக்கப்படவேண்டும்" என்றார். "ஆம், அதை கொண்டுவந்துள்ளோம்" என்றான் சிதைக்காவலன். "நன்று" என்று அவர் பெருமூச்சுடன் சொன்னார். "அவருடைய அரசக்கணையாழி மட்டும் மைந்தனுக்குரியது" என்றார். ஏவலன் தலைவணங்கினான். "இங்கிருந்து அவருடன் செல்லப்போவது என்ன?" எவர் அதை கேட்டார்கள் என அவர் திரும்பி சூழ நோக்கினார். "இங்கிருந்து அவருடன் செல்லப்போவது என்ன?" அவர் அக்குரலை எங்கோ ஒலிப்பதுபோல மீண்டும் கேட்டார். எண்ணி எண்ணி நோக்கினார். ஒன்றுமில்லை. எதையேனும் மறந்துவிட்டிருப்போமோ? எனில் அதுவே இறையாணை.

எட்டு சிதைக்காவலர்கள் சென்று கர்ணனின் கால்தொட்டு வணங்கிவிட்டு அவன் படுத்திருந்த பச்சையோலை தட்டோடு சேர்த்து தூக்கினர். சூதர்கள் அனைவரும் இணைந்து குரவையோசை எழுப்பினர். தங்கள் இசைக்கலங்களை

முழக்கியபடி குரவையிட்டுக்கொண்டு கர்ணனின் உடலை சூழ்ந்து தொடர்ந்து வந்தனர். வேதத்தின் ஒலியும் இணைந்துகொண்டது. வழக்கமாக உடல்கள் தூக்கப்படும்போது அவை சற்று அசையும். புரண்டு எழமுயல்பவைபோல. கர்ணனின் உடல் அசைவில்லாது காற்றில் மிதப்பதுபோல் வந்தது. உடல்கள் அசைவது அவற்றிலிருக்கும் எடைநிகரின்மையால். தூக்குபவர்கள் அந்த எடையை தோள்களில் நிகர்செய்துகொள்வதுவரை உடல் அசைந்துகொண்டிருக்கும். கர்ணனின் உடல் துலாமுள் என நிகர்கொண்டது.

அக்கணம் அந்தக் குரவை ஒலி சுப்ரதரை பதற்றம் கொள்ளச் செய்தது. காட்டுவிலங்குக் குழு ஒன்றின் ஓசைபோல் அது ஒலித்தது. அத்தனை அணிச்சொற்களுக்குப் பின் அத்தகைய பொருளில்லா ஒலி எழுகிறது. அத்தனை சொற்களும் கலைந்து கலந்து அது உருவானது போலிருந்தது. அல்லது அந்தக் குரவையொலி உடைந்து பிரிந்து உருவானவை அச்சொற்கள். ஊளைகளின் கலவை. மிகமிகத் தொன்மையான ஓசை. நாய்களில் இருந்தும் குரங்குகளில் இருந்தும் எழும் ஓசை. அவற்றின் மொழியின் உச்சம். சொற்களனைத்தையுமே கையாளும் ஒரு பெருங்காவியம் அதன் இறுதியில் இவ்வண்ணம்தான் பொருளிலா உணர்வாக ஒலிக்கக்கூடுமா? அவ்வொலி அணுகும்தோறும் அவர் கைகால்கள் நடுங்க தன் உடலை ஒடுக்கிக்கொண்டார்.

சிதைக்காவலர்கள் சிதைமேல் சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஏணிகளினூடாக ஏறி கர்ணனின் உடலை சிதையின்மேல் பரப்பப்பட்டிருந்த தர்ப்பைப்படுக்கையில் வைத்தனர். ஏவலர் இருவர் கர்ணனின் வில்லை எடுத்துவந்தனர். அது அவர்களின்

கைகளில் கருநாகம்போல் நெளிந்து வளைந்திருந்தது. ஏணி வழியாக ஏறி அதை கர்ணனின் வலப்பக்கம் இணையாக வைத்தனர். சுப்ரதர் கர்ணனின் தொடைப்புண்ணில் இருந்து வழிந்த குருதியை ஒரு திடுக்கிடலுடன் நினைவுகூர்ந்தார். குருதி சிதையிலும் வழிந்துகொண்டிருக்கிறதா என்ன?

அனைத்து ஒலிகளும் அடங்கின. அவர்கள் இறங்கிக்கொண்டதும் சிதைக்காவலன் திரும்பி சிவதரை நோக்கி தொழுதான். சிவதர் திரும்பி கைகாட்ட அணுக்கப்பெண்டு விருஷாலியை அழைத்துக்கொண்டு வந்தாள். வெண்ணிற ஆடையால் முகத்தையும் உடலையும் மறைத்தபடி விருஷாலி மெல்ல காலடி எடுத்துவைத்து வந்தாள். அங்கிருந்த அமைதியில் அவளுடைய அருமணிகளின் ஓசை எழுந்தது.

அவள் நின்றதும் ஏவலர்கள் ஒரு மரத்தாலத்தை நிலத்தில் வைத்தனர். அவள் அதில் ஏறி நின்றாள். ஏவலர் அளித்த குடுவைநீரை பெற்றுக்கொண்ட பிரசேனன் சிவதர் தாழ்ந்த குரலில் அறிவுறுத்தியதன்படி அவள் கால்களை மும்முறை மஞ்சள்நீர் ஊற்றி கழுவினான். மலரிட்டு பூசை செய்தான். அந்த நீரை தன் தலையில் தெளித்துக்கொண்டு அவள் கால்களைத் தொட்டு தலைசூடி வணங்கினான். அவள் அவன் தலையை தன் வலக்கையால் தொட்டாள். வாழ்த்துரைத்தாளா என்று தெரியவில்லை. பின்னர் திரும்பி சிவதரை பார்த்தாள். சிவதர் சற்றே முன்னகர அவன் கையைப் பிடித்து சிவதரிடம் அளித்தாள். சிவதர் அழுகை விம்மிய உதடுகளை இறுக்கியபடி அவன் கையை பெற்றுக்கொண்டார். அவர் கழுத்தில் தசைகள் இழுபட்டு அதிர்ந்தபடியே இருந்தன.

ஏவலன் திரும்பி துரியோதனனை நோக்கி தலைவணங்கினான். துரியோதனன் முன்னால் சென்று குனிந்து அவள் கால்களைத் தொட்டு தலைசூடி வணங்கினான். அவள் அவன் தலையை தொட்டாள். பின்னர் ஏவலன் வழிகாட்ட, அணுக்கப்பெண்டு பின்தொடர அவள் நடந்து சிதையருகே வந்தாள். கிழக்கு நோக்கி வணங்கியபின் சிதையை மும்முறை சுற்றிவந்து ஏணியின் அருகே நின்றாள். தன் உடலை மூடியிருந்த வெண்ணிற ஆடையை விலக்கி அணுக்கப்பெண்டிடம் அளித்தாள். வைதிகர் இருவர் மரத்தாலத்தில் வேள்விக்களத்தில் இருந்து எடுத்துவந்த மலர்மாலைகளை அவளிடம் நீட்டினர். ஒரு மலர்மாலையை தன் குழலில் சூடினாள். இன்னொன்றை கழுத்தில் அணிந்தாள்.

சூதர்களின் குரவை மீண்டும் எழுந்தது. அனைத்து இசைக்கலங்களும் ஒற்றையொலியென மாறி உடன் ஒலித்தன. அவையும் வெவ்வேறு விலங்குகளும் பறவைகளும் எழுப்பும் ஒலிபோல் கேட்டன. கரடிகள் உறுமின. நாய்கள் குரைத்தன. கருமந்திகள் எக்காளமிட்டன. சிம்மங்கள் அறைகூவின. மரங்கொத்திகள் தாளமிட்டன. சுப்ரதர் தலைசுழல்வதுபோலவும் வயிறு அதிர்வுறுவதுபோலவும் உணர்ந்தார். அங்கிருந்து விலகிச்சென்றுவிடவேண்டும். அங்கே அவர் பணி முடிந்துவிட்டது. ஆனால் அசைவிலாது நின்றார். உள்ளம் தறியில் கட்டப்பட்ட பட்டம்போல் உடலில் நின்று படபடத்தது.

துரியோதனன் வணங்கியபடி சிதையின் காலடியில் நின்றான். சிவதர் இருமி தலைகுனிந்தார். பிரசேனன் திரும்பி அவர் உடலுடன் தன் முகத்தை பொருத்திக்கொண்டான். விருஷாலி படிகளில் ஏறி சிதையின் மேல் கிடந்த கர்ணனை அடைந்தாள். அவன் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு அவன் இடப்பக்கம்

இணையாக படுத்தாள். சூதர்களின் குரவையோசை வலுத்தது. அதர்வ வேதம் உடனொலித்தது. அதுவும் விலங்குகளின் ஓசை போலிருந்தது.

தலைமைவைதிகர் உடல்குலுங்க சுப்ரதரை அணுகி "அருமணி எங்களிடம் உள்ளது. மிகச் சிறிது. ஆனால் சடங்குகளுக்கு இதுவே போதும்..." என்றார். "ஆகுக!" என்றார் சுப்ரதர். அவர் திரும்பிச்சென்று பிற வைதிகரிடம் சொல்ல ஒருவர் அருமணிக் கல்பதித்த பொன்விரலாழி ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தார். "அகல்விளக்கு... நெய்யகல் இங்கே வருக!" என்று ஒருவர் கூவினார். ஒருவர் அகல்விளக்கை எடுக்கையில் முதிய அந்தணர் "பொறுங்கள்... கதிரெழுகிறது" என்றார்.

"எங்கே? எங்கே?" என குரல்கள் எழுந்தன. சுப்ரதர் மெய்ப்பு கொண்டு விழிநீர் நிறைந்தார். எதையும் நோக்கமுடியவில்லை. "அதோ காட்டுக்குள்..." என்றார் முதிய அந்தணர். "அது ஒளியா? எவரோ வருவது போலிருக்கிறது." மேலாடையால் விழிகளை துடைத்துவிட்டு சுப்ரதர் நோக்கியபோது வானிலிருந்து சாய்ந்த ஒளி காட்டுக்குள் விழுந்து நீண்டிருப்பதை கண்டார். மரங்களின் நிழல்கள் நீண்டு வந்து சிதைமேல் சரிந்தன. "ஒரு முகில்சாளரம் மட்டும் திறந்திருக்கிறது" என்றார் அந்தணர் ஒருவர். "கதிரவன் வருவது இங்குதான்... பொறுத்து நோக்குக!" என்றார் முதியவர். ஒளி விரிந்ததும் காட்டின் இலைகள் பசுஞ்சுடர்களாயின. வானிலிருந்து அருவியென ஒளி பெய்திறங்கியது.

தளிர்க்கொடிகள் கைநீட்டுவதுபோல் மெல்லமெல்ல அந்த ஒளி அணுகி வந்தது. அது சிதையைத் தொட்டதும் சூதர்கள் அனைத்து இசைக்கலங்களையும் முழக்கியபடி உரக்க

குரவையிட்டனர். நிழல்கள் நெளிந்துகொண்டிருந்ததை நோக்கிய சுப்ரதர் விழிமயக்கு என அதை கண்டார். கரிய உடல்கொண்ட அரசநாகம் ஒன்று நெளிந்தபடி சிதையை அணுகியது. அங்கு எழுந்த வியப்பொலி அனைவரும் அதை பார்த்திருந்தார்கள் என்பதைக் காட்டியது. அது சிதைமேல் நெளிந்தேறியது. பாறைமேல் ஆலமரவேர் படிந்திருப்பதுபோல் தோன்றியது. சிதையின் மேலேறி கர்ணனின் தலைமாட்டை அடைந்து விறகுக்குவைமேல் உடல் சுருட்டி படமெடுத்தது. ஒரு சிறிய மரம் அங்கே முளைத்திருப்பதுபோல் தோன்றியது. படம் தாழ்த்தாமல் மெல்லிய அசைவுடன் அங்கேயே நின்றது.

முதிய அந்தணர் கைகாட்ட நான்கு வேதியர் நான்கு எரிகுளங்களில் இருந்தும் அனல் அள்ளி மண்கலங்களில் இட்டு அவற்றை கொண்டுவந்தனர். சிவதர் மெல்லிய குரலில் ஆணையிட பிரசேனன் முன்னால் சென்று வேதியர் கையிலிருந்து முதல் அனற்கலத்தை பெற்றுக்கொண்டான். அதை சிதையின் கால்பக்கம் அரக்கும் நெய்யும் கலந்த மென்விறகின்மேல் வைக்கப்பட்டிருந்த குந்திரிக்கத்தில் வைத்தான். நாய்க்குட்டி இரையைக் கவ்வுவதுபோல் குந்திரிக்கம் அனலை எடுத்துக்கொண்டது. இரண்டாம் அனலை இடைக்கும் மூன்றாம் அனலை நெஞ்சுக்கும் நான்காம் அனலை தலைக்கும் வைத்தான்.

பற்றிக்கொண்ட அனல் நான்கு பக்கமும் இணைந்து ஒரே அனலாக மேலே செல்லும்படி சிதை அமைக்கப்பட்டிருந்தது. வேதமுழக்கமும் குரவையொலியும் இசைக்கலன் நாதமும் முரசொலிகளும் இணைந்து செவிநிறைக்க அனல் பெருகி பொங்கி எழுந்து மேலேறி ஒற்றைச்சுடராக ஆகி கார்கூந்தலை உதறிக்கொண்டது. அத்தனை ஓசைகளுக்கும் அப்பால்

தழலோசை தனித்துக் கேட்டது. வானத்திறப்பிலிருந்து பெய்த ஒளி பெருகி காட்டை முழுமையாக நிறைத்தது. அதுவரை இருளுக்குப் பழகியிருந்த கண்கள் கூசின. விழிநீர் வழிய சுப்ரதர் நோக்கை தாழ்த்திக்கொண்டார். கரிய நிலம் ஒளியில் தீட்டிய இரும்புப்பட்டைபோல் சுடர்ந்தது. சிதைச்சாம்பல் கலந்த நிலம்.

தீயின் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. வேறெந்த ஒலியும் எழவில்லை. வைதிகர்கள் வேதம் ஓதியபடியே நிரைவகுத்து வெளியேறினர். ஏவலர் அங்கிருந்த பொருட்களையும் எடுத்து அகற்றினர். அதன்பின் சூதர்கள் இசைக்கலங்களுடன் குரவையிட்டபடி அகன்றனர். சிவதர் பிரசேனனை தன் உடலுடன் அணைத்தபடி நடந்து அகன்றார். ஏவலன் அருகே வந்து "எரியூட்டிய பின் இங்கே எவரும் இருக்கலாகாது, அரசே" என்றான். சுப்ரதர் அப்போதுதான் துரியோதனனை பார்த்தார். அவன் முகம் தூக்கி சிதையை பார்த்துக்கொண்டிருந்தான். முகம் மலர்ந்திருப்பதுபோலத்தான் தோன்றியது. ஏவலன் மீண்டும் "அரசே" என்றான்.

சுப்ரதர் அவனை செல்லும்படி கைகாட்டிவிட்டு "அரசே, இங்கே இருக்க நெறியொப்புதல் இல்லை" என்றார். துரியோதனன் விழித்துக்கொண்டு "என்ன?" என்றான். "இங்கே இருக்க நெறிகள் ஒப்புவதில்லை" என்றார் சுப்ரதர். "ஆம்" என்று அவன் சொன்னான். அவன் சொற்களை உள்வாங்கிக்கொள்ளவில்லை என உணர்ந்தார். மீண்டும் "அரசே, இங்கே எவரும் இருக்கலாகாது. சிதை தனிமையிலேயே எரியவேண்டும். அது ஒரு தவம்" என்றார். "ஆம்" என்று அவன் மீண்டும் சொன்னான். "முழுத் தனிமையையே சிதையில் உயிர் அடைகிறது. எவரும் உடனிருக்கலாகாது. உடன்கட்டை ஏறுவோர் உடனிருக்கலாம்.

அவர்கள் அறத்துணை, உடற்துணை என்பதனால்" என்றார் சுப்ரதர் மீண்டும்.

துரியோதனன் கனைப்போசை எழுப்பினான். அவன் குரலை திரட்டுவது தெரிந்தது. "நான் இங்குதான் இருக்கப்போகிறேன். அவர் எரிந்தணைவதுவரை" என்றான். "ஆனால்..." என்று சுப்ரதர் சொல்ல அவன் உரக்க "அவர் தனியாக இருந்ததில்லை..." என்றான். மேலும் உரக்க "இங்குதான் இருப்பேன்... இதில் மாற்றுச்சொல் இல்லை" என்றான். சுப்ரதர் "ஆகுக!" என்றார். தலைவணங்கி விலகிச்செல்ல சிதைக்காவலன் அருகே வந்து "அமைச்சரே" என்றான். "அரசர் இங்கே இருக்கட்டும்" என்றார். "அதை தெய்வங்கள் விரும்புவதில்லை" என்றான் சிதைக்காவலன். "அங்கர் அதையே விரும்புவார்" என்றபின் அவன் செல்லலாம் என அவர் கையசைத்தார்.

சாலைக்கு வந்தபோது ஒரு கொடுங்கனவிலிருந்து விழித்துக்கொண்டதுபோல் உணர்ந்தார். புதுக்காற்று வந்து உடலை தழுவியது. மூச்சுக்குள் புகுந்து உள்ளிருந்து கரும்புகையை வெளியேற்றியது. எண்ணங்கள்கூட ஒளிகொண்டவைபோல் தோன்றின. அவர் அதன்பின்னர்தான் தன்னைச் சூழ்ந்திருந்த கருக்கிருளை கண்டார். காடு மையிருளுக்குள் இருட்தடங்களாக அடிமரங்கள் செறிந்து நின்றது. திரும்பி பின்னால் நோக்கியபோது சிதையைச் சூழ்ந்து மட்டுமே வெயிலொளி இருந்தது. நேராக வானிலிருந்து அது சிதைமேல் பொழிந்தது. சிதையில் எழுந்தாடிய அனலுடன் அச்செவ்வொளி இணைந்துவிட்டிருந்தது.

அவர் இருட்டை நோக்கினார். அங்கே அவர் சல்யரை எதிர்பார்த்தார். இறுதிக்கணத்தில் அவர் வந்துவிடக்கூடும் என தோன்றிக்கொண்டே இருந்தது. பின்னர் எண்ணிக்கொண்டார்,

அந்தக் காட்டில் எங்கோ சல்யர் இருக்கிறார் என. எரியூட்டுவதை அவர் அறிந்திருப்பார். காடு ஒன்றே. உடலெங்கும் மூடியிருக்கும் தோல் ஒற்றைப்புலனாக திகழ்வதுபோல.

பரசுராமர் தன் வில்லையும் அம்பையும் இளைய மாணவனிடம் அளித்துவிட்டு கோதையின் குளிர்ந்த நீரில் இறங்கி முழங்காலளவு நீரில் நின்று குனிந்து நீரள்ளி தலைமேல் விட்டுக்கொண்டு நீர்வாழ்த்தை சொன்னார். அள்ளி முகம் கழுவியபின் அவர் மேலும் ஆழத்திற்குச் சென்றபோது தலைக்குமேல் ஒரு கருங்குருவி வாள் உரசும் ஒலியெழுப்பி கடந்து சென்றது. அவர் நின்று அதை நோக்கினார். பின்னர் கரையில் நின்றிருந்த மாணவனிடம் "உன் தோழரிடம் சென்று சொல்க, நான் நீராடி மீண்டதும் எரிசெயல் இயற்றவேண்டும். கதிரவனுக்கான வேள்வி" என்றார்.

மாணவன் தலைவணங்கினான். வில்லையும் அம்பையும் அங்கிருந்த மரக்கிளையில் தொங்கவிட்டுவிட்டு காட்டுக்குள்சென்றான். பரசுராமர் நீரில் மும்முறை மூழ்கி எழுந்து முகத்தில் படிந்த கூந்தலிழைகளை அள்ளி மேலே வழித்து பிடரிக்குப் பின் நீட்டியபின் கைகூப்பியபடி வானை நோக்கிக்கொண்டிருந்தார். முகில்களின் விளிம்புகள் கசிந்து கதிரொளி எழுந்தபோது அவருடைய கூந்தலிலும் தாடியிலும் நீர்மணிகள் சுடர்ந்தன.

*[இருட்கனி நிறைவு**]***